
தியானமும் ஆன்மீக வாழ்வும்



சுவாமி யதீஷ்வரானந்தர்

தியானமும் ஆன்மீக வாழ்வும்

ஆங்கில மூலம்
சுவாமி யதீஷ்வரானந்தர்

தமிழ் மொழிபெயர்ப்பு
கல்யாணி வெங்கடராமன்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

வெளியிடுபவர்:
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

I-3M 3C-7-2008
ISBN 978-81-7823-484-7

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

சுவாமி யதீஷ்வரானந்தர்

துறவற வாழ்க்கைக்கு முன்பு, சுரேஷ் சந்திர பட்டாச் சாரியா என்று அறியப்பட்டிருந்த சுவாமி யதீஷ்வரானந்தர் அவர்கள், 1889-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ஆம் தேதி புதன் கிழமையன்று, தற்சமயம் பங்களாதேஷில் உள்ள பாப்னா (PABNA) என்னும் மாவட்டத்தில், நந்தன்பூர் என்னும் கிராமத்தில் அவருடைய தாய்மாமனின் வீட்டில் பிறந்தார். அவருடைய தந்தையான ஈசான் சந்திர பட்டாச்சாரியா, அரசினர் பள்ளியொன்றில் ஆசிரியராக இருந்தார். அவர் சமயப்பற்றுடைய ஒரு அந்தணர் ஆவார். மற்றும் அவருடைய தாயாரான பிந்து முக்தி தேவியும் ஆன்மீக நாட்டம் கொண்ட பெண்மணியாக இருந்தார். கடவுள்பற்றுள்ள ஒரு குடும்பத் தில் பிறப்பதற்கு அவர் பாக்கியம் பெற்றிருந்தார்.

அவர் தன்னுடைய தொடக்கக் கல்வியை ஜல்பாய்குரி, (JALPAIGURI) மற்றும் போக்ரா (BOGRA)விலும் பெற்றார். மற்றும் ரங்பூர் என்னும் ஊரிலுள்ள பள்ளியில் நுழைவுத் தேர்வில் தேர்ச்சியடைந்தார். அவர் ராஜ்ஸாஹி (RAJSAHI) மற்றும் கூச் பிஹார் (COOCH BEHAR) கல்லூரிகளில் பயின் றார். அதன்பிறகு கல்கத்தாவில் பங்கபாஷி (BANGABASI) கல்லூரியில் பயின்று இறுதியாகக் கல்கத்தாவிலுள்ள பிரசிடென்ஸி கல்லூரியில் சேர்ந்தார். அங்கிருந்து அவர் இளங்கலை (B.A) பரீட்சையில் தேர்ச்சியடைந்தார். கல்கத்தா பல்கலைக் கழகத்தில், வடமொழியில் முதலாவதாக வந்த தற்குத் தங்கப் பதக்கத்தையும் பெற்றார். அவர் இளங்கலை பட்டம் பெற்ற பிறகு, வேதியியலில் (Chemistry) முதுகலைப் பட்டப் படிப்பை ஆறு ஆண்டுகள் காலத்திற்குத் தொடர்ந்து படித்தார். அவர் படிப்பில் கவனம் செலுத்தாமல் இருந்ததால் அவரால் வெற்றி பெறுவதற்கு இயலவில்லை.

அந்த சமயத்தில் அவர், பேலூர் மடத்தில் ஸ்ரீராம கிருஷ்ணருடைய நேரடியான சீடர்களிடம் தொடர்பு கொண் டிருந்ததால் துறவு மனப்பான்மையால் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்தார். அவருடைய பெற்றோர்கள், இயல்பாக அவர் இல்லற வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பினர். அவர் 1911 ஆம் ஆண்டின் இறுதியில் ஒருநாள் அவருடைய தாயாரிடம், கடவுளை உணர்வதற்காக ஸ்ரீராமகிருஷ்ண அமைப்பில் சேரப் போவதாக வெளிப்படை யாகக் கூறினார். மற்றும் அவர், அவருடைய குறிக்கோளில் தோல்வி அடைந்தால் நிச்சயமாகத் திரும்பிவந்து அவர் களுடைய விருப்பத்திற்கு இணங்குவதாகவும் கூறினார்.

அவருடைய பெற்றோர் அவருக்கு அளித்த சிறிதளவு பணத்துடன் அவர் நேராக பேலூர் மடத்திற்குச் சென்று, அவ ருடைய 22-ஆம் வயதில், 1911-ஆம் ஆண்டில் அந்த அமைப் பில் சேர்ந்தார். அவர், ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடியான சீடர்களில் ஒருவரான ஸ்ரீமத் சுவாமி பிரம்மானந்தஜி மஹராஜ் அவர்களால் தீட்சையளிக்கப்பட்ட சீடராவார். 1917-ஆம் ஆண்டில் சென்னையில் அவருக்கு சன்னியாஸம் அளிக்கப் பட்டது.

1921-ஆம் ஆண்டில் அவர் பிரபுத்தபாரதம் என்னும் இதழின் ஆசிரியரானார். அந்தப் பொறுப்பில் அவர் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தார். அதன் பிறகு அவர் பம்பாயிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமத்தின் தலைவராக ஓராண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டார். 1926-ஆம் ஆண்டில் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் தலைவராக நியமிக்கப் பட்டார். 1933-ஆம் ஆண்டில் அவர் பேலூர் மடத்தின் பொறுப்பாண்மைக் குழு உறுப்பினராகவும் (Trustee) ஸ்ரீராம கிருஷ்ண மிஷனின் ஆளும் குழுவின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். மெய்யார்வம் நிறைந்த மனிதர்களைக் கொண்ட ஒரு குழுவின் அழைப்பிற்கு இணங்க அவர் ஜெர்மனியிலுள்ள ரைன் லேண்டு (Rhineland) மாகாணத் திலுள்ள வீஸ்பேடன் (Wiesbaden) என்னும் இடத்திற்குப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். 1933-ஆம் ஆண்டு நவம்பர்

மாதத்தில் சென்று அடைந்தார். 1935-ஆம் ஆண்டில் குளிர் காலத் தொடக்கத்திலிருந்து, 1938-ஆம் ஆண்டின் இறுதி வரையிலும், அவர் அவருடைய செயல்பாடுகளை சுவிட்ஜர்லாந்து வரையிலும் விரிவு படுத்தினார். செயின்ட் மோரிட்ஸ் (St.Moritz) என்னுமிடத்தில் வாசிப்பு வட்டத்தை உருவாக்கினார். அதன் பிறகு ஜெனிவா மற்றும் மற்ற இடங்களிலும் ஏற்படுத்தினார். அதன் பிறகு ஹாலந்து நாட்டிலுள்ள ஹேக் (Hague) என்னுமிடத்தில் பல மாதங்களுக்குப் பணி புரிந்தார். அதைப் போன்றே பாரீஸ் மற்றும் இலண்டனிலும் பணி புரிந்தார். 1940-ஆம் ஆண்டில், உலகப் போரின் தொடக்கத்தில் அவர் ஜெர்மனியை விட்டு அமெரிக்காவிற்குச் சென்றார். அங்கு 1942-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அவரால் பிலடெல்பியாவில் (Philadelphia) ஒரு வேதாந்த மையத்தை ஏற்படுத்த முடிந்தது. மற்றும் 1949-ஆம் ஆண்டு வரையிலும் அதன் தலைவராக இருந்தார். அவர் 1950-ஆம் ஆண்டில், ஐரோப்பா வழியாக அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பினார். 1951-ஆம் ஆண்டில் அவர் பெங்களூரிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமத்தின் தலைவரானார். மற்றும் ஆன்மீகத்தில் அவருடைய மாற்றுக் குறையாத அடைவுகளைப் பார்த்து 1952-ஆம் ஆண்டில் பேலூர் மடத்தின் காப்பாளர்கள் அவரை ஆன்மீகத்தை நாடுவோருக்கு தீட்சை கொடுக்கும் உரிமையைக் கொடுத்தனர். அவர் 1962-ஆம் ஆண்டில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுவாமி, கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய தத்துவங்களை நன்கு உணர்ந்தவாக இருந்தார். அவர் சிறந்த பேச்சாளர் மற்றும் எழுத்தாளர் ஆவார். அவர், 'The Adventures in Religious life, Universal Prayers, Divine Life, Way to the Divine' என்னும் புத்தகங்களை எழுதி உள்ளார். அவருடைய இனிமையான பழக்கவழக்க நடைமுறைகள், பரிவு நிறைந்த இதயம், அகல் விரிவான கருத்துக்கள் மற்றும் ஆன்மீக அடைவுகள் அவருக்கு, அவரால், வாழ்க்கைகள் மிகுந்த பயனுள்ளதாக ஆக்கப்பட்ட இந்தியாவிலும்,

வெளிநாடுகளிலும் உள்ள பெருந்திரளான நண்பர்கள், வியந்து பாராட்டுகிறவர்கள், பக்தர்கள், சீடர்களின் போற்று தலையும், பக்தியையும் அவருக்கு ஈட்டிக் கொடுத்தன. 1965-ஆம் ஆண்டின் மத்தியிலிருந்து அவர் பல வகையான உடல்நலக்கேடுகளால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் தட்பவெப்ப நிலையின் மாறுதலுக்காக மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக பேலூர் மடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் 1966-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் நாள் மகாசமாதி அடைந்தார்.

அவர் இவ்வுலகைவிட்டு மறைவதற்குச் சில தினங் களுக்கு முன்பு, அவருடைய முடிவு நெருங்கிக் கொண்டிருக் கிறது என்பதை உணர்ந்திருந்த அவர், ‘சுவாமி பிரம்மானந்தர் என்னிடமிருந்த எல்லா சக்தியையும் எடுத்துக் கொண்டு விட்டார். இந்த உடலால் இனி எந்தப் பயனும் இல்லை. இதைத் தூக்கி எறிந்து விடுவதே நல்லது’ என்று அவர் கூறியது அடிக்கடி பலரால் கேட்கப்பட்டது.

சுவாமி பிரம்மானந்தரைப்பற்றிய சுவாமி யதீஷ்வரானந்தரின் நினைவுகள்

1906-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் F.A. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது, எனக்கு முதலில் ஸ்ரீராம கிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை மற்றும் சிந்தனையைக் குறித்த அறிமுகம் ஏற்பட்டது. ஸ்ரீராம கிருஷ்ணருடைய அமுத மொழிகளும் மற்றும் சுவாமிஜியின் இராஜயோகமும் என் கைகளுக்குச் சற்றேறக்குறைய உடனிகழ்வாகக் கிடைத்தன. இந்தப் புத்தகங்கள் மற்றும் இதைப் போன்ற மற்ற புத்தகங்களையும் படித்ததால் நான் ஒரு எண்ணத் துறைக்குள் நுழைந்தேன். அந்த சமயத்தில் நான் சுவாமி பிரம்மானந்தரிடம் தீட்சை பெற்று சமய வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். ஆனால் அதைச் செயல்படுத்துவதற்குச் சிறிது காலமாயிற்று.

1907-ஆம் ஆண்டில் F.A. பரீட்சை எழுதிய பிறகு B.A. வகுப்பில் சேர்வதற்காக ராஜ்ஸாஹிக்குச் சென்றேன். அங்கு இரு ஆண்டுகள் இருந்த பிறகு, 1909-ஆம் ஆண்டில் கோடைக் கால இறுதியில் நான் மீண்டும் கல்கத்தாவிற்கு வந்தேன். சுவாமி பிரம்மானந்தர் சென்னையிலிருந்து திரும்பிய பிறகு, அந்த சமயத்தில் ஒரிஸ்ஸாவில் தங்கியிருந்தார். நான் 1910-ஆம் ஆண்டில் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பிறந்த நாள் விழாவின் பொழுது முதன்முதலில் அவரைப் பார்த்தேன். விழா முடிந்த பிறகு அவர் பூரிக்குச் சென்றுவிட்டார். அந்த சமயத்தில் நான் என்னுடைய நண்பர் சீதாபதியுடன் (பிறகு இராகவானந்தர் ஆனவர்) பேலூர் மடத்திற்குச் சென்று, அங்கிருந்த துறவிகளைச் சந்தித்தேன். அப்பொழுதிலிருந்து நான் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பேலூர்

மடத்தில் தங்கத் தொடங்கினேன். சுவாமி பிரேமானந்தர், சுவாமி சிவானந்தர் மற்றும் வேறு சுவாமிகளும் அவர்களுடைய அன்பாலும், பரிவாலும் என்னை அவர்களுடைய அன்பிற்குரியவனாக ஆக்கிக் கொண்டனர். 1910-ஆம் ஆண்டின் இறுதியில் ஸ்ரீமகராஜ் (சுவாமி பிரம்மானந்தர்) சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் விழாவிற்கு முன்பு கல்கத்தாவிற்கு வந்தார். சுவாமி சிவானந்தர் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஸ்ரீமஹராஜ் அவர்களுடன் எனக்குத் தனிப்பட்டதொரு தொடர்பு ஏற்பட்டதைப்போல உணர்ந்தேன். அவர்மீது உள்ள அன்பாலும், பக்தியாலும் நான் திக்குமுக்காடிப் போனேன். மற்ற சுவாமிகளின் விஷயத்தில் இது இல்லை. கல்கத்தாவிலும் மற்றும் பேலூர் மடத்திலும் நான் ஸ்ரீமஹராஜை அடிக்கடி சந்தித்தேன். மற்றும் சில நேரங்களில் அவருக்குச் சிறிய அளவில் தொண்டு செய்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஒருநாள் வினோத் பாபு அவர்களின் வீட்டில் ஏதோ விழா நடைபெற்றது. அங்கு பல துறவிகளும், பக்தர்களும் வந்திருந்தனர். நான் ஸ்ரீமஹராஜ் அவர்களுக்கு ஒரு பெரிய கைவிசிறியால் விசிறிக் கொண்டிருந்தேன். திடீரென்று அவர் என்னிடம், ‘இங்கு பார், உடலும் மனமும் இந்த உலகத்திற்கு அளிக்கப்பட்டால், இந்த உலகம் எல்லாவற்றையும் அழித்துவிடும். ஆனால் கடவுளுக்கு அளிக்கப்பட்டால், அவர் அனைத்தையும் உடல் மற்றும் மனத்தை நல்ல நிலையில் வைத்திருப்பார்’ என்று கூறினார். எனக்குத் துறவியாக வேண்டும் என்று மிகப் பெரிய விருப்பம் இருந்தது. மற்றும் ஸ்ரீமஹராஜ் இந்த இலட்சியத்தை என் முன்பு சுடர் விட்டு ஒளிரச் செய்தார். ஒருநாள், நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் ஸ்ரீமஹராஜ் அவர்களைப் பார்ப்பதற்காக பேலூர் மடத்திற்குச் சென்றோம். அவர் சுவாமி பிரேமானந்தருடன் பலராம் மந்திருக்கு (கல்கத்தாவிலுள்ள பலராம் போஸ் அவர்களின் வீட்டிற்கு) சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டோம். அதனால் நாங்கள் அவருடைய வீட்டிற்குச் சென்றோம். ஸ்ரீமஹராஜ் என் நண்பனை அவனுடைய உள்ளங்கையை அவரிடம்

காட்டுமாறு கூறினார். அதைப் பார்த்துவிட்டு அவர், 'காமம் உனக்குச் சில இடையூறுகளை ஏற்படுத்தும், ஆனால் ஸ்ரீராம கிருஷ்ணர் விரும்பினால் அது மறைந்துவிடும்' என்று கூறினார். சுவாமி பிரேமானந்தருக்கு என்னை மிகவும் பிடிக்கும். அவர் ஸ்ரீமஹராஜிடம் என்னுடைய உள்ளங்கையையும் பார்க்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இதனால் நான் மனத்தில் வருத்தமடைந்தேன். மற்றும் என் நண்பனுக்கு சன்னியாஸ வாழ்வு ஒரு வேளை அமையக் கூடும். ஆனால் எனக்கு அது கூட இல்லை என்று எண்ணினேன்.

இந்த நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்குப் பிறகு நான் பேலூர் மடத்திற்குள் நுழைந்து கொண்டிருந்த பொழுது ஸ்ரீமஹராஜ் அவர்களுடன் இருப்பவர் என்னைப் பார்த்து, 'நல்லது ஸ்ரீமஹராஜ் நீங்கள் ஒரு துறவியாக வருவீர்கள் என்று எங்களிடம் கூறினார்' என்று கூறினார். இது எனக்கு மிகுந்த அளவில் மன உறுதியை அளித்தது. உரிய நேரத்தில் நான் துறவியானேன். ஆனால் என் நண்பர் இல்லற வாழ்வை மேற்கொள்ள வேண்டி வந்தது. அவர் ஒரு பெரிய உயர்மட்ட அதிகாரியாக ஆனார். ஆனால் அவர் குருதேவரின் மிகச் சிறந்த பக்தராகவும், தூய அன்னையாரின் சீடராகவும் இருந்தார்.

ஒருநாள் ஸ்ரீமஹராஜ், இரண்டு படகுகளில் பெரிய கூட்டத்துடன் தட்சிணேஸ்வரத்திற்குச் சென்றார். நானும் அவருடன் சென்றிருந்தேன். அவர் அற்புதமானதொரு மனநிலையில் இருந்தார். அவர், 'தட்சிணேஸ்வரத்தில் ஒரு நாயாக இருந்தால்கூட அது ஒரு பெரிய பாக்கியம்' என்று கூறினார்.

நாங்கள் ஸ்ரீமஹராஜுடன் அமர்ந்து கொண்டபொழுது அவரைச் சுற்றி ஒரு ஆகர்ஷபூர்வமான வட்டம் இருப்பதைப் போன்றும், நாங்கள் அதற்குள் வந்து இருப்பதைப் போன்றும் உணர்ந்தோம். ஒருநாள் அவர் அவரை ஒரு புதுமையான முறையில் என்னிடம் வெளிப்படுத்திக் கொண்டார். அவர்

மடத்தின் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த பொழுது அவரை மனித ஆற்றலிற்கு மேம்பட்டவராக, ஒரு தெய்வீகத் தன்மை வாய்ந்தவராகக் கண்டேன்.

ஸ்ரீமஹராஜ் 1911 ஆம் ஆண்டில் எனக்கு தீட்சை அளித்து வாழ்த்தினார். அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு அவர் பூரிக்குச் சென்றார். அப்பொழுது அவருக்கு நான், துறவியாக விரும்புவதாக ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு அவர் சுவாமி சங்கரானந்தரைவிட்டு எனக்குக் கடிதம் எழுதும்படிக் கூறினார். எனக்குப் போதுமான அளவிற்கு மன உறுதி இருந்தால், நான் ஏன் அங்கு செல்லக் கூடாது என்று கேட்டிருந்தார். எனவே நான் அந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில், பூரியில் இருந்த ஸ்ரீமஹராஜ் அவர்களிடம் சென்றேன். மற்றும் புனிதமான அமைப்பில் சேர்ந்தேன். அந்த சமயத்தில் அடல்பாபு அவர்களின் வீட்டில் தேவி ஜகதாத்ரியின் பூஜையை என்னைச் செய்யும்படிக் கூறினார். சுவாமி துரியானந்தர் வழிபாட்டு முறையைச் செய்யும் அர்ச்சகராக இருந்தார். சுவாமி அம்பிகானந்தர் அவருடைய உதவியாளராக இருந்தார். குமாரி பூஜையும் செய்யப்பட்டது. இந்த வகையில் நான் துறவியான குறுகிய காலத்திலேயே ஒரு ஆழமான ஆன்மீக ஆர்வம் என் வாழ்க்கையில் ஏற்படுவதற்கு உதவி புரிந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு ஸ்ரீமஹராஜ் என்னை சுவாமி ஷரணானந்தருடன் சென்னைக்குச் செல்லுமாறு கூறினார். கிளம்புவதற்கு முன்பு சில ஆன்மீக போதனைகளை அளிக்கும்படிக் கேட்டுக் கொண்டேன். அவர் மேம்பட்ட சிறப்பமைதியுடனும் மற்றும் ஆர்வத்துடன் கூடிய பரிவுடனும், 'முயற்சி செய்', 'முயற்சி செய்', 'முயற்சி செய்' என்று கூறினார். இதுதான் என்னுடைய வாழ்க்கையின் வழிகாட்டியாக இருக்கிறது. அவருடைய சொற்கள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருப்பதைப் போல நான் உணர்கிறேன்.

நாங்கள் பூரியில் இருந்தபொழுது நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் என் நினைவிற்கு வருகின்றன. ஒருநாள் அதுல் பாபு, சுவாமி ஷரணானந்தரிடம், 'நீங்களெல்லாம் என்ன துறவிகள்? உங்களிடம் மறைவியலான சக்தி இல்லை' என்று

கூறினார். இதைக் கேட்டதும் ஸ்ரீமஹராஜ் 'மறைவியலான சக்திகளைப் பெறுவது சுலபமானதாகும். ஆனால் மனத் தூய்மையை அடைவது மிகவும் கஷ்டமானது. இந்தத் தூய்மையான மனம்தான் உண்மையிலேயே முக்கியமானது ஆகும்' என்று கூறினார். மற்றொரு நாள் ஸ்ரீமஹராஜ் அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அவருக்கு இடுப்பில் வலி இருந்தது. அன்று பூரி கோயிலில் ஒரு சிறப்பான விழா இருந்தது. நாங்கள் அனைவரும் ஸ்ரீமஹ ராஜின் உதவியாளர் மட்டும் அவரைப் பார்த்துக் கொள்வார் என்று நினைத்து கோயிலிற்குச் சென்றோம். அங்கு நீண்ட நேரத்தைப் போக்கிவிட்டு அந்திமாலையில் திரும்பி வந்த பொழுது ஸ்ரீமஹராஜ் எங்களை எங்களுடைய தன்னலத் திற்காக சுரீரென்று தைக்கும்படிக் கடிந்து கொண்டு இறுதியில் 'நான் உங்களிடமிருந்து எதையும் எதிர் பார்க்கவில்லை. உங்களுக்கு எல்லாம் நல்லது ஆக வேண்டும் என்று மட்டுமே விரும்புகிறேன். நான் உங்களுக்கு எதைக் கூறினாலும் அது உங்களுடைய நன்மைக்காக மட்டுமே' என்று கூறினார். அதன்பிறகு இரவு நேரத்தில் ஸ்ரீமஹராஜ் அவர்களைக் கவனித்துக் கொள்ளும் பணியை நானே மேற்கொண்டேன். ஒருநாள் இரவு அவர் மிகவும் வெப்பமாக இருக்கிறது என்று உணர்ந்து என்னை ஜன்னலைத் திறக்கச் சொன்னார். தனி மனிதருக்கு இவ்விதம் தொண்டு செய்வது எனக்குப் புதிது ஆகும். மற்றும் புரிந்து கொள்ளும் இயல்பும் குறைவானதாக இருந்தது. எனவே சிறிது நேரத்திற்குப் பிறகு ஜன்னலை மூடுவது அவசியமானது என்பதை என்னால் எண்ண இயல வில்லை. அடுத்த நாள் ஸ்ரீமஹராஜ் அவர்களுக்குக் காய்ச்சல் வருவதற்கான அறிகுறி இருந்தது. இதைக் கண்டு நான் மனத்தில் மிகவும் வருத்தமடைந்தேன். ஆனால் ஸ்ரீமஹராஜ் என்னைக் கடிந்து கொள்ளாமல் இருந்ததுடன் மட்டுமின்றி, மற்றவர்களிடம் நான் இளைஞன் மற்றும் விஷயங்களை நன்றாக அறியாதவன் என்றும் கூறினார். அதைக் குறித்து யாரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. ஆனால் எனக்குச் சரியான படிப்பினையாயிற்று.

1911-ஆம் ஆண்டின் இறுதியில் நான் சென்னைக்குச் சென்றேன். மற்றும் ஐந்து ஆண்டுகள் அங்கிருந்தேன். நான் *1916*-ஆம் ஆண்டில் ஸ்ரீமஹராஜ் அவர்களை மீண்டும் அங்கு பார்த்தேன். எனக்குச் சென்னை மடத்தின் மேலாளராக மிகவும் கடினமாகச் செயலாற்ற வேண்டியிருந்தது. மேலாள ரின் நாற்காலியில் நான்கு மணி நேரம் தொடர்ந்து அமர்ந் திருப்பதைப் பார்த்து அவர், ஒருநாள், இந்த குமாஸ்தா வேலையைச் செய்வதற்காகத்தான் நான் உன்னை இங்கே அனுப்பினேனா?' என்று கேட்டார். அவர் என்னை நன்றாகக் கடிந்து கொண்டார். மற்றும் சுவாமி ஷர்வானந்தரையும் கண்டித்து, 'இந்த இளைஞனுக்கு வாசிப்பு போன்றவற்றிற்கு எந்த வாய்ப்பையும் அளிக்காமல் நீங்கள் அவனை ஒரு குமாஸ்தாவின் வேலையைச் செய்யும்படிச் செய்திருக் கிறீர்கள்' என்று கூறினார்.

சுவாமி ஹரிஹரானந்தர், ஸ்ரீமஹராஜ் அவர்களின் தனிப்பட்ட உதவியாளராக இருந்தார். அவர் ஸ்ரீமஹராஜ் அவர்களுக்காகக் கடையிலிருந்து நல்ல தரமான நல்லெண் ணெய் வாங்கிக் கொண்டு வரும்படி என்னிடம் கூறுவார். நானும் நன்கு விசாரித்து, கிடைப்பதிலேயே நல்ல எண்ணெ யாகக் கொண்டு வருவேன். இதைக் குறிப்பிட்டு ஒருநாள் ஸ்ரீமஹராஜ், 'நான் உன்னை இங்கு நல்ல நல்லெண்ணெய் எங்கு கிடைக்கிறது என்று விசாரிப்பதற்காகவா அனுப்பி னேன்?' என்று கேட்டார். அவருடைய எல்லா கண்டித்தல் களையும் நான் அவருடைய அன்பு மற்றும் அருளின் வெளிப் பாடுகளாகவே எடுத்துக் கொண்டேன். மற்றும் இதயத் தினுள்ளே அவர் என்னுடையவர் மற்றும் நான் அவ ருடையவன் என்று உணர்ந்தேன். இதையெல்லாம் குறித்து நான் மகிழ்வடைவேன்.

இந்த சமயத்தில் ஸ்ரீமஹராஜ், நான் வாசிப்பதிலும் ஆழ்ந்து சிந்திப்பதிலும் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும் என்றும், தினமும் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தைக் கூற வேண்டும் என்றும் கட்டளையிட்டார். அவருடைய அருளால் மனமானது மிகவும் நல்ல முறையில் இருந்தது

மற்றும் இதயமானது ஒருவகையாக அவருடன் இணைந்ததை உணர்ந்தது மற்றும் பெரிய வெற்றிப் பெருமிதத்தால் நிறைந்தது.

ஸ்ரீமஹராஜ் என்னை அவருடைய குழுவினருடன் கன்னியாகுமாரிக்கு அன்புடன் அழைத்துச் சென்றார். நான் சண்டிபாராயணத்தை (துர்காஸப்தஸதி) அதற்கு முன்பு சடங்குகளில் பற்றுள்ள முறையில் படித்தது இல்லை. அதில் கூறப்பட்டுள்ள சண்டையிடுதல், கொல்லுதல் போன்றவை எனக்குப் பிடிக்கவில்லை. நான் பிரார்த்தனைக்கு உரிய பாடல்களை மட்டுமே பாடுவேன். இதைப்பற்றி எல்லாம் தெரிய வந்த ஸ்ரீமஹராஜ் என்னைக் கடிந்துகொண்டார். முழுமையான சண்டி பாராயணத்தைச் சடங்குகள் சார்ந்த முறையில் 15 நாட்களுக்கு ஒரு முறையாவது கூறவேண்டும் என்று கூறினார். அவர் என்னை விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை யும் மற்றும் சண்டி பாராயணத்தையும் மூன்று ஆண்டு களுக்குக் கூறும்படிக் கூறினார். அதை நான் அந்த கால அளவிற்கும் அதிகமாகவே செய்தேன்.

நான் இறுமாப்படையக் கூடாது என்று கருதி கட்டுரை களை எழுதவில்லை. அல்லது சொற்பொழிவுகளை ஆற்ற வில்லை. மற்றும் சமயத் தொடர்பான விவாதங்கள் போன்ற வற்றிலிருந்து விலகி இருந்தேன். ஒருநாள் திருவாங்கூரி லுள்ள ஹரிபாத ஆசிரமத்தில் ஸ்ரீமஹராஜ், ‘நீங்கள் எங்களிட மிருந்து எதைக் கேட்கிறீர்களோ மற்றும் கற்றுக் கொள்கிறீர் களோ அதை மற்றவர்களுக்குக் கூறுங்கள்’ என்று மனத்தில் பதியும் முறையில் கூறினார். மீண்டும் அவர் சென்னையில் ஒருநாள், ‘நீ என்றாவது வாசிப்பதைத் தவறவிட்டால் ஏதோ குறைவதைப் போன்று உணர வேண்டும் என்னும் அளவிற்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மனமானது உயர்ந்த ஆன்மீக மட்டத்தில் நிலைத்து நிற்க வில்லை என்றால், குறைந்த பட்சம் அது வாசிப்பிலாவது தோய்ந்து இருக்கும். கீழ் மட்டத்திற்கு அது இறங்காது’ என்று கூறினார். மற்றொரு சமயத்தில் அவர், ‘ஒவ்வொரு வாரமும் ஏன் ஒரு கட்டுரையை எழுதக் கூடாது?’ என்று கேட்டார்.

அதற்கு நான், 'நான் எதை எழுதுவது? கருத்துக்களே வருவதில்லை' என்று கூறினேன். அதற்கு அவர், 'ஆழமாகச் சிந்திப்பதற்குக் கற்றுக்கொள். அதன் பிறகு பாய்ந்து வரும் கருத்துக்களுக்கு ஈடு கொடுப்பதற்கு உனக்குக் கஷ்டமாக இருப்பதை நீ கண்டு கொள்வாய்' என்று கூறினார். அதன் பிறகு, என் குருவின் அருளால் எனக்குக் கருத்துக்களுக்குப் பஞ்சம் இல்லாமல் இருந்தது. ஒருநாள் காலையில் நாங்கள் பெங்களூர் ஆசிரமத்தில் இருந்தபொழுது, அவர் எனக்குச் சில உடற்பயிற்சிகளைக் காண்பித்து, என்னை அவற்றை நாள்தோறும் செய்யும்படிக் கூறினார். நான் ஏற்கனவே வீட்டிற்குள்ளேயே செய்யத்தக்க சில உடற்பயிற்சிகளை செய்து கொண்டிருந்தேன். அவற்றுடன் ஸ்ரீமஹராஜ் காண்பித்தவற்றையும் சேர்த்துக் கொண்டேன். அவர் பலமுறை என்னிடம், 'உடல் சார்ந்த அறிவு சார்ந்த, ஒழுக்க நெறிமுறை சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த வளர்ச்சியானது கைகோர்த்துக் கொண்டு இருக்க வேண்டும்' என்று கூறியுள்ளார். சென்னைக்கு வந்த பிறகு ஸ்ரீமஹராஜ் அவர்களே பல நேரங்களில் என்னை சன்னியாசத்தில் அமர்த்துகிறேன் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார். மற்ற துறவிகள் எப்படி இருப்பினும் முன்கூட்டியே அவரிடம் சென்று சன்னியாசம் அளிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளும்படி அறிவுறுத்தினர். நான் அவரிடம் சென்று ஒரு முட்டாளைப் போல, 'மஹராஜ் நான் தகுதியுடையவன் என்று நீங்கள் கருதினால் எனக்கு சன்னியாச தீட்சை அருள வேண்டும்' என்று கூறினேன். அதற்கு அவர் மிகவும் அன்புடன், 'சன்னியாசத்திற்குத் தகுதியுடையவர் என்று யாரையும் கூறவியலாது. ஆனால் நான் உனக்கு சன்னியாச தீட்சை அளிக்கிறேன்' என்று கூறினார்.

எனக்கு சன்னியாசம் வழங்கப்பட்ட அன்று ஸ்ரீமஹராஜ், அற்புதமான உடலைச் சிலிர்க்கச் செய்யும் ஒரு ஆன்மீகச் சுடரொளியுடன் இருப்பதை நான் உணர்ந்தேன். ஹோமம் போன்றவற்றிற்குப்பிறகு நான் அவரை நமஸ்கரித்தபொழுது அவர் அவருடைய கரத்தை என் தலைமீது வைத்தபொழுது

நான் உடனடியாக ஒரு பரந்தகன்ற இருப்பை உணர்ந்தேன். அவர், இந்த உலகம் மற்றும் நான், ஒருவரையறையற்ற இருப்பில் இரண்டறக் கலந்ததைப் போல இருந்தது. அவர் ஒரு குரு உண்மையிலேயே எப்படி இருக்க வேண்டும் என்ற கருத்தை எனக்கு அருளினார். அப்பொழுது நான் கீழ்க்கண்ட மந்திரத்தின் உண்மையை உணர்ந்தேன்.

'இந்த அசையும் மற்றும் அசையாப் பொருட்கள் உள்ள முழு பிரம்மாண்டமும் யாரால் நிரப்பப்பட்டுள்ளதோ, அவ்ரை உணர்வதற்குச் சாத்தியமாக்கிய குருவிற்கு என் நமஸ்காரங்கள்.'

அன்று இரவின் தொடக்கத்தில் நாங்கள் பலரும் ஸ்ரீமஹராஜ் அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தோம். சுவாமி ஷர்வானந்தரும் அங்கிருந்தார். ஸ்ரீமஹராஜ் அவர்களின் மனமானது, மிக உயர்ந்த ஆன்மீக நிலையுடன் சுருதி சேர்ந்து இருந்தது. அவர் ஆன்மீகப் பயிற்சிகள் குறித்தும் ஆழ்ந்து சிந்திப்பதைக் குறித்தும் பேசுவார் என்று நான் எண்ணினேன், ஆனால் அவர் அவ்விதம் செய்யாமல் என்னைச் சுட்டிக் காட்டி, 'நீ என்ன ஆன்மீகப் பயிற்சியை மேற் கொள்வாய்? ஒவ்வொரு வீட்டிற்கும் செல்வாய். மனிதர்கள் கடவுளின் புனிதமான திருநாமத்தைக் கேட்கட்டும், அது அதன் மட்டத் திலேயே ஒரு ஆன்மீகப் பயிற்சியாக விளங்குகிறது என்று கூறினார். மற்றும் சுவாமி ஷர்வானந்தரைப் பெயர் சொல்லி அழைத்து 'ஷர்வானந்தா, நான் இப்பொழுது ஸ்ரீராமானுஜா சாரியரின் அனைவரையும் கடவுளின் திருநாமத்தைக் கேட்க உதவும் மனப்பான்மையை மிகவும் போற்றுகிறேன்' என்று கூறினார். அன்று ஸ்ரீமஹராஜ் என்னுள் ஒரு புதிய அகத் தூண்டுதலை ஏற்படுத்தி, என்னுடைய எண்ணங்களை ஒரு புதிய வழியில் திருப்பினார். அந்த இலக்கு இன்னும் இருக்கிறது. சென்னையில் பெற்ற புதிய அகத்தூண்டுதலால் நான் வாசித்தல், தியானம் போன்றவற்றை வலியுறுத்தத் தொடங்கினேன். அதன் பிறகே நான் மெய்யார்வத்துடன் கட்டுரைகளை எழுதுவதை மேற்கொண்டேன்.

சென்னை மடத்தின் புதிய கட்டிடத்தை உருவமைத் ததும், ஸ்ரீமஹராஜ் அவர்களின் தெய்வீக சக்தியை வெளிப் படுத்துகிறது. பழைய மடத்தின் கட்டிடம் சிதிலமடைந்து இருந்தது. துறவிகளின் மடமானது, ஒரு வாடகை வீட்டிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. சுவாமி ஷர்வானந்தர் மற்றும் எங்களுக்கும், மடத்திற்கு எப்படிப் புதிய வீட்டைக் கட்டுவது என்பது புலப்படவில்லை. நிலமானது முன்னரே வாங்கப் பட்டிருந்தது. சென்னைக்கு வந்ததும் ஸ்ரீமஹராஜ் புதிய கட்டிடத்திற்கான அஸ்திவாரத்தை அவர் அமைப்பதாகவும் மற்றும் சுவாமி ஷர்வானந்தர் தேவையான பணத்தைச் சேகரிக்க வேண்டும் என்றும் அந்த நோக்கத்திற்காகக் கட னாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கூறினார். ஆனால் உதவியானது எதிர்பாராத விதமாக வந்தது. எட்டு மாதங் களுக்குள் முழு கட்டிடமும், முன்னால் உள்ள அறையைத் தவிர பயன்படுத்துவதற்கு ஆயத்தமான நிலையில் இருந்தது. ஸ்ரீமஹராஜ் பெங்களூரிலிருந்து திரும்பி வந்ததும் மற்றும் எம்முடைய சன்னியாச தீட்சை நடந்த சிறிது காலத்திற் குள்ளேயே மடத்தின் புதிய கட்டிடத்தை அர்ப்பித்தார்.

புதிய மடத்தை அர்ப்பித்த அன்று, ஸ்ரீராமகிருஷ்ணருக்கு மாலை நேரத்தில் ஆர்த்தியை நான் செய்து கொண்டிருந்தேன். ஸ்ரீமஹராஜ் எனக்குச் சற்றே பின்னால் நின்று கொண்டிருந் தார். ஆர்த்தி செய்து கொண்டிருந்த பொழுது அனைத்தும் ஒரு மேம்பட்ட இருப்பால் நிரப்பப்பட்டிருப்பதாக நான் உணர்ந் தேன். நான் அந்த மேம்பட்ட இருப்பை எல்லாப் படங் களிலிருந்தும் ஸ்ரீமஹராஜிடமும் மற்றும் அங்கிருந்த ஒவ் வொருவரிடமும் ஆரத்தியைச் செய்து கொண்டிருந்த பொழுது பெற்றேன். இப்பொழுதும் நான் ஆர்த்தியைச் செய்ய முயற்சிக்கும் பொழுது அந்த உணர்வைப் பெறு கிறேன். இதுதான் ஸ்ரீமஹராஜ் அவர்களின் தனிச்சிறப்பு வாய்ந்த ஆசிர்வாதம் ஆகும். அதே மாலை நேரத்தில் நாங்கள் வாடகை வீட்டுக் கட்டிடத்தின் மேல்தளத்தில் ஸ்ரீமஹராஜ் அவர்களின் முன்பு அமர்ந்திருந்தோம். ஸ்ரீமஹராஜ், 'நான் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் மிகவும் ஆர்வத்துடன் அவர்கள்

இன்னும் இளைஞர்கள்தான், அவர்களால் எப்படி ஒரு புதிய கட்டிடத்தைக் கட்ட இயலும்? நீங்கள்தான் அன்பு கூர்ந்து எல்லாம் இயலும்படிச் செய்ய வேண்டும்' என்று கூறினேன். எனவே அவருடைய அருளால் இந்தப் புதிய கட்டிடம் உருப் பெற்றுள்ளதைப் பாருங்கள்' என்று கூறினார்.

சென்னையில் நான் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தேன். எனக்கு வாசிப்பதற்கோ அல்லது தியானம் செய்வதற்கோ மிகக் குறைந்த நேரமே கிடைத்தது. ஸ்ரீமஹராஜ் சென்னைக்கு வந்தவுடன், அவர் எனக்கு ஒரு மாறுதல் தேவை என்பதை உணர்ந்துகொண்டார். நான் சென்னையை விட்டுப் பெங்களூருக்குச் செல்ல வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் எனக்குப் பெங்களூ ருக்குச் செல்வதில் விருப்பம் இருக்கவில்லை. எனவே அவர் ஒருநாள், 'முட்டாளே, உனக்கு உன்னுடைய சொந்த ஈடு பாடே புரியவில்லையே. இனிமேலும் நீ சென்னையில் இருக்கத் தேவையில்லை. பெங்களூருக்குப் புறப்படுவாய்' என்று கூறினார்.

அதற்கு முன்பு சுவாமி நிகிலானந்தர் ஸ்ரீமஹராஜ் அவர்களை என்னை பெங்களூருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டிருந்தார். ஸ்ரீமஹராஜ் அவர்கள் அதற்கு ஏறத்தாழ ஒத்துக் கொண்டதாக நான் கேள்விப்பட்டேன். 1917-ஆம் ஆண்டில் கோடைக்கால தொடக்கத்தில் ஸ்ரீமஹராஜ் பூரிக்குச் சென்றார். அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு ஸ்ரீமஹராஜ் அவர்களின் விருப்பத்திற்குக் கீழ்ப்பணிந்து நானும் பெங்களூருக்குச் சென்றேன். அங்கு இருந்த பொழுதுதான் ஆன்மீகப் பயிற்சிகளுக்கும் மற்றும் சமயம் சார்ந்த வாசிப்புக் களுக்கும் உள்ளானேன். பெங்களூர் ஆசிரமத்தில், ஞாயிற்றுக் கிழமை வகுப்புக்களையும் நான் நடத்திக் கொண்டிருந்தேன். அதே ஆண்டில் கோடைக்கால இறுதியில் எனக்குக் குடல் சார்ந்த காய்ச்சலும் மற்றும் உடல் முழுவதும் கடுமையாக எரிவதைப் போன்ற உணர்வும் ஏற்பட்டது. நான் ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அந்த நேரத்தில் ஒரு கடுமையான சளிக்காய்ச்சலும் பரவியிருந்தது. ஒருநாள்

காலையில் ஒரு முதிய மனிதர் அழைத்து வரப்பட்டு, என் படுக்கைக்கு அடுத்த படுக்கையில் இருத்தப்பட்டார். அவருக்கு இரட்டை நுரையீரல் காய்ச்சல் இருந்தது. மிகவும் கவலை அளிக்கக் கூடிய நிலையில் இருந்தார். மாலை நேரத்திற்குள் அவருக்கு எல்லாம் முடிந்துவிட்டது.

நான் மிகுந்த வேதனையை அனுபவித்துக் கொண்டிருந் தேன். ஆனால் அப்பொழுது என் மனம் மிகவும் தெளிவுடன் இருந்தது. மரணத்தைப் பற்றிய பயம் இருக்கவில்லை. ஆனால் வேதனை இன்னும் அதிகமானால் அதைத் தாங்கிக் கொள்வது கஷ்டம் என்று நான் உணர்ந்தேன். மரணமானது வேதனையைவிட வரவேற்கத் தக்கதாக இருந்தது. என் மனத்தில் அத்தகைய எண்ணம் எழுந்ததும் எனக்கு ஸ்ரீமஹ ராஜ் அவர்களின் தரிசனம் கிடைத்தது. அவர், 'உன்னால் எப்படி இறக்க இயலும்? நீ ஸ்ரீராமகிருஷ்ணரின் செயல்பாடு களை இன்னும் செய்ய வேண்டும்' என்று கூறியபடியே மறைந்துவிட்டார். என் மனம் ஒரு புதிய உற்சாகத்தால் நிறைந்தது. என் கண்களிலிருந்து கண்ணீர் தங்கு தடையின்றி சொரியத் தொடங்கியது. சாவைக் கண்ட பயம் என்னும் கேள்விக்கே இடமே இல்லை. அதற்கு மாறாக ஒரு அற்புத மான அமைதி மற்றும் ஒரு அமைவடக்கமான உணர்வு என்னுள் வந்தது. மற்றும் நோயும் சீரடையத் தொடங்கியது.

பெங்களூரில் ஓராண்டிற்கு மேல் இருந்துவிட்டு, சென்னை மாகாணத்தில் பல்வேறு இடங்களில் ஆன்மீகப் பயிற்சிகளை ஓராண்டு காலத்திற்கு மேற்கொண்டபிறகு, 1919-ஆம் ஆண்டு இறுதியில் டிசம்பர் மாதத்தில் ஸ்ரீமஹராஜ் அவர்களைப் பார்ப்பதற்காக புவனேஸ்வரத்திற்குச் சென் றேன். எனக்கு அங்கு அவருடைய புனிதமான ஸஹவாஸத் துடன் சில நாட்களைக் கழிக்கும் அரிய அவகாசமும் கிடைத்தது. அந்த சமயத்தில் புவனேஸ்வர மடத்தின் கட்டிடம் கட்டும் பணியானது முடிவடையும் நிலை யிலிருந்தது. அந்த சமயத்தில் ஒருநாள் மாலை நேரத்தில், பூரியைச் சேர்ந்த ஸ்ரீஅதுல் மைத்ரர் அவருடைய முதல் மனைவியுடன் வந்திருந்தார். அந்த முதியவர் மிகவும்

வாட்டமுற்று இருந்தார். மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந் தார். ஸ்ரீமஹராஜ் சுவாமி வரதானந்தரைப் பாடும்படிக் கூறினார். சுவாமி வரதானந்தர்,

'ஓ மனமே, அச்ச மனைத்தையும் அகற்றிடும்
தெய்வீக அன்னையின் திருவடிகளில் சரணடைவாய்'

என்று தொடங்கும் பாடலைப் பாடினார்.

பாட்டைக் கேட்டதினாலும் மற்றும் அதைவிட அதிக மாக ஸ்ரீமஹராஜின் தரிசனத்தைப் பெற்றதாலும் மற்றும் அவருடைய சொற்களைக் கேட்டதாலும் அந்த முதியவரின் முகம் ஒளி பெற்றது. மற்றும் அவர் மனமகிழ்ச்சியையும் அடைந்தார். இந்த மாற்றத்தைக் கண்டு நாங்கள் அனைவரும் மகிழ்ந்தோம்.

புவனேஸ்வரத்தில் சில நாட்கள் தங்கியபிறகு ஸ்ரீமஹராஜ் என்னை உடல் நலம் குன்றியிருந்த சுவாமி கோகுலானந்தருடன் கல்கத்தாவிற்கு அனுப்பினார். கல்கத்தா விலிருந்து நான் பேலூர் மடத்திற்குச் சென்றேன். அங்கு சில மாதங்கள் தங்கி இருந்தேன். 1920-ஆம் ஆண்டில் இந்த சமயத்தில் சுவாமிஜியின் பிறந்தநாள் விழாவிற்கு முன்பு ஸ்ரீமஹராஜ் பேலூருக்கு வந்தார். நாங்கள் அனைவரும் அவருடைய அறைக்குச் சென்று தியானத்தில் அமர்வோம். மற்றும் பலவகையான பாடல்களைப் பாடுவோம்.

1921-ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் விழாவின் சில நாட்களுக்கு முன்பு வாரணாசியில் ஸ்ரீமஹராஜ் அவர்களைக் கடைசியாகச் சந்தித்தேன். அப் பொழுது நான் சுவாமி துரீயானந்தருடன் தங்கியிருந்தேன். ஸ்ரீமஹராஜ் அவர்கள் வாரணாசியில் ஸேவாஸ்ரமத்திலும் மற்றும் அத்வைத ஆஸ்ரமத்திலும் ஒரு புதிய ஆன்மீக ஓட்டத்தை ஏற்படுத்தி இருந்தார். அந்தச் சமயத்தில் அவர் எனக்கும் அதிகமான அளவில் ஆன்மீக அகத்தூண்டுதலை அளித்தார். ஒருநாள் அவர் என்னுடைய ஆன்மீகப் பயிற்சி களைக் குறித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். நான், 'அக

எழுச்சி ஏற்படாததைப் போல உணர்கிறேன். அதனால் எனக்கு மன அமைதி ஏற்படவில்லை. நாம் சில தீய ஸம்ஸ்காரங்களுடன் பிறக்கிறோம். மற்றும் அவை ஆன்மீக வளர்ச்சிக்குத் தடையாக உள்ளதை மெய்ப்பிக்கின்றன' என்று கூறினேன். ஸ்ரீமஹராஜ் அவர்கள், 'அவ்விதம் நினைக்காதே. நடு இரவில் ஜபம் செய்வாய். புரஸ்கரணம் செய்வாய். (குறிப்பிட்ட எண்ணிக்கையையுடைய ஜபத்தை உட்கொண்ட ஒரு சடங்கு) அக எழுச்சியானது இயல்பாகத் தானாக வரும்' என்று கூறினார்.

மற்றொரு நாள் மனத்தில் அமைதியற்ற தன்மையுடன் அவரிடம் சென்றேன். நான் அணுகுவதைக் கண்டதும் அவர் எழுந்து என்னிடம் வந்து சிறிது நேரத்திற்குள்ளாகப் பல கட்டளைகளை அளித்தார். பிறகு, 'நான் உன்னை எதைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறேனோ அதை நீ செய்ய விரும்பாமல் இருப்பதால்தான் உன் மனம் அமைதியற்ற நிலையை அடைகிறது' என்று கூறினார். அவருடைய கையை என் தலையின்மீது வைத்து என்னை ஆசீர்வதித்தார். மற்றும் என் இதயத்தை அமைதியால் நிறைத்தார்.

நான் மாயாவதிக்குச் சென்று பிரபுத்த பாரதத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஸ்ரீமஹராஜ் விரும்பினார். ஆனால் அவராகவே எதையும் என்னிடம் கூறவில்லை. சுவாமி சுத்தானந்தரும், சுவாமி மாதவானந்த ரும் நான் மாயாவதிக்குச் செல்ல வேண்டும் என்று பல முறைகள் என்னிடம் கூறினர். ஆனால் அதற்கு நான் இணங்க வில்லை.

ஒரு காலை வேளையில் நான் சுவாமி துரியானந்தருடன், அவரைக் கவனித்துக் கொண்டிருந்த பொழுது, என்னுள்ளே ஏதோ உடைந்து கொண்டிருப்பதைப் போன்றும் மற்றும் என் மனத்தின் ஆழத்திலிருந்து துன்பம் நிறைந்த குரல் வெளி வந்ததையும் உணர்ந்தேன். கண்களிலிருந்து கண்ணீ ரும் சொரிந்தது. நான் கண்ணீரைத் துடைக்கத் துடைக்கக் கண்ணீர் வந்து கொண்டிருந்தது. அதனுடன் சரணாகத

மனப்பான்மையும் என்னிடம் ஏற்பட்டதை நான் கவனித்தேன். அது ஸ்ரீமஹராஜ் அவர்களின் லீலை என்பதைப் புரிந்து கொண்டேன். அவர் அருளோடு என் மனத்தின் தடைகளையும் பிடிவாதத்தையும் அகற்றிக் கொண்டிருந்தார். மாலைக்குள் என் மனம் அமைதி அடைந்தது.

இதன்பிறகு ஒரு காலை நேரத்தில் நான் அவரை நமஸ்கரிப்பதற்குச் சென்ற பொழுது அவர் 'இதோ பார், அவர்கள் அனைவரும் நீ மாயாவதிக்குச் சென்று, பிரபுத்த பாரதத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றனர்' என்று கூறினார். அவர் ஏற்கனவே என் பிடிவாதத்தைத் தகர்த்திருந்தார். எனவே நான் எத்தகைய தயக்கமுமின்றி, 'மஹராஜ் நீங்கள் கட்டளையிட்டால் நான் நிச்சயமாகச் செல்கிறேன்' என்று கூறினேன். ஸ்ரீமஹராஜ் அவர்கள் என்னுடைய பதிலால் மிகவும் மகிழ்ந்து என்னை ஆசீர்வதித்தார். இதற்குப் பிறகு நான் மாயாவதிக்குச் செல்வது முடிவு செய்யப்பட்டது. ஒரு காலை நேரத்தில் அவர் முன்பு நெடுஞ்சாண் கிடையாக நமஸ்கரித்த பிறகு நானும் சுவாமி சுத்தானந்தரும், சுவாமி மாதவானந்தரும் மற்றும் மற்ற துறவிகளும் அவர் அருகில் அமர்ந்தோம். ஸ்ரீமஹராஜ் எடுத்த எடுப்பிலேயே என்னை, 'உன் ஆன்மீகப் பயிற்சிகள் எப்படி நடைபெற்றுக் கொண்டுள்ளன?' என்று கேட்டார். அதற்கு நான், 'மிகுதியான பணி செய்ய வேண்டி இருப்பதால், எனக்குப் போதுமான அளவு நேரம் கிடைக்கவில்லை' என்று பதில் கூறினேன். அதற்கு அவர் 'பணி செய்வதால் நேரம் இல்லை என்று நினைப்பது தவறானது ஆகும். ஒருவருடைய மனத்தின் அமைதியற்ற தன்மையால்தான் ஒருவர் அப்படி எண்ணுகிறார்' என்று கூறினார். மற்றும் இது ஸ்ரீமஹராஜ் அவர்களின் பேச்சின் மதகைத் திறந்துவிட்டது. மிகச் சிறந்த உணர்வுடன் அவர், 'செயலையும், வழிபாட்டையும் ஒன்றாகச் செய்து மனத்தை ஒருவர் ஆயத்தப்படுத்த வேண்டும்' என்று கூறினார். இந்த போதனைகள் எல்லாம் அவருடைய, 'The Eternal Companion' என்னும் புத்தகத்தின் 'Work and worship' என்னும் அத்தியாயத்தில் உள்ளது. இவை

குறிப்பாக, எனக்காகக் கூறப்பட்டவையாகும். அன்று அவர் தனிப்பட்ட தன்மையுடன் கூடிய அன்புப் பிணைப்பை எனக்கும் சுவாமி மாதவானந்தருக்கும் மற்றும் மற்ற சகோதர துறவிகளுக்கிடையிலும் ஏற்படுத்தினார். அவர் 'சுவாமி மாதவானந்தர் என் அன்பிற்கு உரியவரைப் போன்றே, நீயும் மற்ற துறவிகளும் கூட என் அன்பிற்கு உரியவர்கள்தான்' என்று கூறினார். ஸ்ரீமஹராஜின் அன்பிற்கு அனைவரும் உரியவர்கள் என நான் நினைக்கும் பொழுது, எனக்கும் எல்லோரும் என் அன்பிற்குரியவர்கள் என்று நான் உணர் கிறேன். ஸ்ரீமஹராஜ் அவருடைய சீடர்களும் மற்றும் தூய அன்னையாரின் சீடர்களும் ஒரே போன்று அவர் அன்பிற்கு உரியவர்கள் ஆவார்கள். அவர் அனைவரும் ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் பணிகளை மேற்கொள்ள வந்திருப்பதாகக் கூறுவார். ஒருநாள் முக்கியமாக என்னைக் குறிப்பிட்டு அவர், 'அவர்களுடைய பணியை இந்த மன நிலையுடன் செய்வதால், பிணைப்பு ஒரு பொழுதும் ஏற் படாது. இன்னும் சரியாகக் கூறப் போனால், அதன்மூலம் ஆன்மீகம், ஒழுக்க நெறிமுறை அறிவுபூர்வமான மற்றும் உடல்சார்ந்த எல்லா வளர்ச்சிகளும் ஏற்படும். நீ உன்னை அவர்களுடைய திருவடிகளில் சமர்ப்பித்துக் கொள்ள வேண் டும். உன்னுடைய உடல் மற்றும் மனத்தை அவர்களுக்கு அர்ப்பிக்க வேண்டும். அவர்களுக்குத் தொண்டனாக இருப் பாய்' என்று கூறினார். இந்த அறிவுரையும் மற்றும் ஸ்ரீமஹ ராஜ் அவர்களின் மற்ற போதனைகளும் என் வாழ்க்கையின் ஆதாரமாக உள்ளன.

ஸ்ரீமஹராஜ் அவர்களிடம் என்றாவது ஒருநாள் மிக வும் மனம்விட்டுப் பேச வேண்டும் என்னும் விருப்பம் எனக்கு இருந்தது. அவரால் புண்படுத்தப்பட்ட உணர்வு எனக்கு இருந்தது. அவர் சென்னைக்குச் சென்ற பொழுது, அவர் அங்கிருந்து திரும்பி வந்தவுடன் என்னை அவருடன் வங்காளத்திற்கு அழைத்துச் செல்வதாக என்னிடம் கூறி யிருந்தார். ஆனால் அதற்குப் பதிலாக அவர் என்னை பெங்களூருக்கு அனுப்பினார். மீண்டும் 1919-ஆம் ஆண்டின்

இறுதியில் நான் புவனேஸ்வரத்திற்குச் சென்ற பொழுது, என்னை அவருடன் நீண்ட நாட்களுக்குத் தங்குவதற்கு அனுமதிக்காமல் வங்காளத்திற்கு அனுப்பினார். இந்த அனைத்தினாலும் வருத்தத்தை வெளிப்படுத்தும் மனநிலையுடன், உள்ளுக்குள் அமைதியற்று இருந்தேன். என் மனத்திலிருப்பதை அவருக்குத் தெரியப்படுத்தும் ஒரு வாய்ப்பைப் பெறுவதற்கு விரும்பினேன். அந்த வாய்ப்பு ஒருநாள் வந்தது. 1921-ஆம் ஆண்டில் ஸ்ரீமஹராஜ் அவர்களின் மங்கலமான பிறந்த நாளின் பொழுது காளிபூஜை செய்யப்பட்டது. அடுத்த நாள் மாலையில் மற்றவர்கள் காளியின் சிலையை நீரில் அமிழ்த்துவதற்கு கங்கைக் கரைக்குச் செல்லும் சமயத்தில் நான் அவரைக் காண்பதற்குத் திட்டமிட்டு இருந்தேன். நான் அதைக் குறித்து அவரிடம் தெரிவித்திருக்கவில்லை. அன்று மாலை நான் அவருடைய அறைக்குச் சென்றேன். சுவாமி விசுத்தானந்தர் அவர் அருகில் அமர்ந்து இருந்தார். பேடாபுரி அவர்களும் இருந்தார். என்னைப் பார்த்தவுடனேயே ஸ்ரீமஹராஜ் ஒரு குழந்தையைப் போல பேடா புரியிடம், ‘இதோ பார், எத்தகைய யோகி நான்!’ என்று கூறினார். சற்றுமுன்பு தான் அவர் பேடா புரியிடம் நான் வந்து விட்டேனா என்று பார்க்கச் சொன்னதாகத் தெரிந்துகொண்டேன் அவருக்கு நான் வருவேன் என்பது தெரியும்.

அன்று நாங்கள் நிறையப் பேசினோம். ஸ்ரீமஹராஜ் நான் புவனேஸ்வரத்திற்குச் சென்ற பொழுது எனக்குப் பல இடங்களுக்குச் செல்லும் ஒரு விருப்பம் இருந்தது அவருக்குத் தெரியும் என்று கூறினார். மற்றும் அதனால்தான் என்னை வங்காளத்திற்கு அனுப்பியதாகவும் கூறினார். மற்றும் என்னிடம் உள்ள இந்தப் போக்கானது விரைவில் அகன்றுவிடும் என்பதும் அவருக்குத் தெரியும். அதற்காக இதை முதலிலேயே செய்வதற்காக என்னை வேகமாக அனுப்பி விட்டதாகக் கூறினார். எனக்குச் செய்வது அனைத்திலும் அவருக்கு இருந்த ஆழ்ந்த அக்கறையைக் கண்டு நான் வெட்கமடைந்தேன். என்னுடைய மனத்திலிருந்த எல்லா வாட்டங்களையும் அகற்றி, என் மனத்தைத் தெளிவாக்கினார். இதன் விளைவாக

ஒரு புதிய அகத் தொடர்புடைய பிணைப்பு அவருக்கும் எனக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது. இது நடந்து சில நாட்களுக்குப் பிறகு ஸ்ரீமஹராஜ் என்னுடைய மனத்தில் அவருடைய தெய்வீக உருவை உறுதியாக நிலைநிறுத்தி விட்டு பேலூருக்குச் சென்றார். சென்னையிலும், வாரணாசி யிலும் இருந்தபொழுது அவர் எனக்குச் சிறிது சிறிதாகப் புகட்டிய ஆன்மீக ஆர்வமும், கடமையுணர்வைக் குறித்த கருத்துக்களும் மற்றும் தொண்டும், இன்னும் எனக்குத் தொடர்ந்து அகத் தூண்டுதலை அளித்துக் கொண்டுள்ளன. அவர் இப்பொழுதும் அவருடைய அருளால் ஒரு சூட்சும மான முறையில் ஒரு புத்தொளியையும், புதிய அகத் தூண்டு தலையும் எனக்கு அளித்துக் கொண்டு இருக்கிறார். நாட்கள் செல்லச் செல்ல கடவுளே குருவின் உருவிலே வருகிறார் என்னும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய சொற்களின் உட்பொருளை நான் புரிந்துகொண்டு இருக்கிறேன்.

பதிப்புரை

சுவாமி யதீஷ்வரானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் மூத்த துறவிகளில் ஒருவராக விளங்கியவர் ஆவார். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த சீடர்களுள் ஒருவராகிய சுவாமி பிரம்மானந்தரின் சீடராவார். அவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவ ராகவும், மும்பாய், சென்னை மற்றும் பெங்களூரிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடங்களின் தலைவராகவும் பணியாற்றி யவர். ஐரோப்பாவில் ஏழு ஆண்டுகளுக்கு வேதாந்தத்தைப் பரப்பும் பணியிலும், அமெரிக்காவில் பத்து ஆண்டுகளுக்கு வேதாந்தத்தைப் பயிற்றுவிக்கும் உயர்ந்த பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பிரபுத்தபாரதம் என்னும் மாத இதழின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். அவர் சிறந்த பேச்சாளர் மற்றும் எழுத்தாளர் ஆவார். அவர், Meditation and Spiritual Life என்னும் இந்த நூலைத்தவிர, The Adventures In Religious Life, Universal Prayers, Divine Life மற்றும் Way to the Divine என்னும் சிறந்த நூல்களையும் எழுதியுள்ளார்.

மனித வாழ்க்கையானது, சிக்கல்கள், குழப்பங்கள், துன்பங்கள் நிறைந்ததாக விளங்குகிறது. இவைகளிலிருந்து விடுபட வேண்டும் எனின், மனமானது அமைதி நிறைந்து தெளிவு பெற்றிருக்க வேண்டும். அத்தகைய மனத்தெளிவை ஒருவர் தியானத்தின்மூலம் பெற இயலும். தியானம் என்றால் என்ன? அதை எப்படிச் செய்ய வேண்டும்? அதை மேற் கொள்ள விரும்புபவர் எந்தெந்த விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்? பிரார்த்தனையும் ஜபமும் மனித வாழ்க்கைக்கு எவ்விதத்தில் உறுதுணையாக அமைந்துள்ளன? யோகநெறி மனித வாழ்க்கையை எப்படி உயர்த்துகிறது? கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் போன்றவற்றை எப்படி மேற் கொள்ள வேண்டும்? உண்மையான துறவு என்றால் என்ன?

பற்றற்ற வாழ்வினை எப்படி வாழ வேண்டும்? போன்ற கேள்விகளுக்கு உரிய விடைகளை இந்த நூல் மிகவும் தெளிவாகவும் எளிமையாகவும் பசுமரத்தாணிபோல மனத்திலே பதிய வைத்து, உண்மையான ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டுகிறது.

அமைதி, நிறைவு மற்றும் ஆனந்தத்தை அடைவது மனித வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதப்படுகிறது. அத்தகைய உயர்ந்த குறிக்கோளைப் படிப்படியாக அடைந்து, மனித வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு இந்நூல் உறுதுணை புரிகிறது.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்குப் பல நூல்களை மொழி பெயர்த்துள்ள திருமதி கல்யாணி வெங்கடராமன், ஆன்மீக வாழ்வு என்னும் இலக்கியத்திற்கு இலக்கணமாகத் திகழும் 'தியானமும் ஆன்மீக வாழ்வும்' என்னும் இந்த ஒப்புயர்வற்ற நூலையும் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். சுவாமி இராம கிருஷ்ணானந்தரின், 'For Thinkers On Education' என்னும் நூலையும், 'கல்விச் சிந்தனையாளர்களுக்கு' என்னும் பெயரில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அவர் கர்நாடக மாநிலத்திலுள்ள தென்கன்னட மாவட்டத்தில் 30 ஆண்டுகள் வாழ்ந்தார். அப்பொழுது கன்னடமொழியை நன்கு பயின்று மொழிபெயர்ப்புத் துறையில் ஈடுபட்டார். எமது மடத்தின் துறவியும், பொன்னம்பேட்டை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா ஆசிரமத்தின் தலைவருமான சுவாமி ஜகதாத்மானந்தர் எழுதியுள்ள, 'பதுகலு கலியிரி' என்னும் கன்னட நூலின் இரு பகுதிகளையும் 'வாழக் கற்றுக்கொள்' என்னும் பெயரில் நேரடியாகக் கன்னடத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து உள்ளார். கன்னட ராஷ்ட்ர கவியான குவெம்பு அவர்களின், 'ஸ்ரீராமகிருஷ்ண வசன வேதம்' என்னும் சிறு நூலையும் 'சொல் அஞ்சலி' என்னும் பெயரில் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் பதவுரை, விளக்கவுரையுடன் சிறு நூலாக எழுதியுள்ளார். மற்றும் கன்னட வசன இலக்கியத்தின் மிக முக்கியமான வசனகாரர்களாகத் திகழும் தாசிமய்யா,

மகாதேவியக்கா, பசவண்ணல் போன்றோரின் வசனங்களை மொழி பெயர்த்து, விளக்கவுரை எழுதி ஒப்பீட்டு ஆய்வையும் செய்துள்ளார். தமிழ் மொழியில் பேரழகு, பேரொளி என்னும் இரு கவிதைத் தொகுப்புக்களையும், கன்னட மொழியில் 'பிரவாஹம்' என்னும் கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டு உள்ளார். தமிழ், கன்னட மொழிகளில் கட்டுரைகளை எழுதி வருகிறார். யோகக் கலையைப் பலதரப்பட்டவர்களுக்குப் பயிற்றுவிக்கிறார். ஆங்கிலம், கன்னடம், தமிழ் மொழிகளில் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துகிறார். இசைச் சொற் பொழிவுகளையும் நிகழ்த்துகிறார். அவருக்கு எல்லா நலன் களையும் அருள்வதற்காக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரார்த்திக்கிறேன். இந்த நூலைப் படிப்பவர்களின் வாழ்வில் அமைதியும், நிறைவும், ஆனந்தமும் நிறைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை
30, ஜூலை 2008
சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஜெயந்தி

பொருளடக்கம்

பகுதி 1

ஆன்மீக இலட்சியம்

பகுதி 3

ஆன்மீக அனுபவம்

பகுதி 1

ஆன்மீக இலட்சியம்

1
ஆன்மீகத் தேடுதல்

ஆன்மீக மாற்றம்

தன்னுடைய அரண்மனைத் தோட்டத்திலுள்ள ஒரு மரத்தடியில் இளமை நலம் வாய்ந்த இளவரசனான சித்தார்த்தன் தன் எண்ணங்களில் மூழ்கியவாறு அமர்ந்திருந் தான். அது நள்ளிரவு நேரம். முழு உலகமும், இருளிலும் அமைதியிலும் சந்தடியின்றி இருந்தது. நடனமாடிக் கொண்டு இருந்த பெண்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தில் வெறுப்படைந்து அவன் அப்பொழுதுதான் பெரிய விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்த அறையிலிருந்து வெளியே வந்திருந்தான். அவனுள்ளே ஒரு தீவிரமான அதிருப்தியும், ஆழமான வெறுமையும் உருப்பெற்றுக் கொண்டிருந்தது. திடீரென்று அங்குப் பழக்கமற்ற குரல்கள் எழுந்தன. அவன் அதைக் கவனித்த பொழுது, விண்ணுலகைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடிப் பாடுவதைக் கேட்க முடிந்தது.

‘அமைதிபெறவே நாமெல்லாம்
ஆசைப்பட்டுத் தவிக்கின்றோம்!
அமைதி எங்கே இருக்கிறது?
யாரும் காண இயலாது!

எங்கேயிருந்து நாம் வந்தோம்!
எங்கே மிதந்து செல்கின்றோம்?
இங்கே மீண்டும் மீண்டும் நாம்
எந்த விதமோ வருகின்றோம்!

எத்தனை எத்தனை அழுகைகளோ?
எத்தனை எத்தனை சிரிப்புகளோ?
சித்தம் போகும் போக்கினிலே
செல்வோம் எங்கென்றறியாமல்!

இறைவா! விழிப்பை உண்டாக்கு!
எப்போ தெங்கள் கனவகலும்?
உறங்கி விழித்த பின் மீண்டும்
உறக்கம் கொள்ள வேண்டாமே!'[1]

சித்தார்த்தன் தன் இருக்கையிலிருந்து எழுந்து, உறங்கிக் கொண்டிருந்த தன் மனைவியையும், மகனையும் கடைசியாகப் பார்த்து விட்டு, அவர் புத்தர் (ஞான ஒளியைப் பெற்றவர்) ஆவதற்கு மூலகாரணமாக இருந்த அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற பயணத்தைத் தொடங்கினார்.

ஆன்மீகப் பாதையை ஏற்றுக்கொண்டதில் புத்தர் மட்டும் தனித்து இருக்கவில்லை. 'எழுங்கள்! விழியுங்கள்! தகுந்த, சிறந்த குருமார்களைப் பின்பற்றி, மேலான அனுபூதி பெறுங்கள்' என்று கட உபநிஷதம் கூறுகிறது.[2] உண்மையாகவே பழங்காலத்திலிருந்தே கடவுள், சிறந்த திருமறை நூல்களின்மூலம், சிலுவையைச் சுமந்துகொண்டு, அவரைப் பின்பற்ற வேண்டும் என்று மனிதனிடம் பேசிக் கொண்டு இருக்கிறார். இந்த அழைப்பிற்கு இணங்க, கிழக்கிலும், மேற்கிலும் ஆயிரக் கணக்கான மனிதர்கள் அவர்களுடைய உடைமைகள் அனைத்தையும் துறந்து, உயர்ந்த விழிப்பு உணர்வுகளின் நிலைகளினுள்ளே பயணத்தை மேற்கொண்டுள்ளனர். சாதாரண மனிதர்களுக்கு இவ்வுலகமும், அதன் இன்பங்களும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன. ஆனால் நிலைத்த, எல்லையற்ற பரம்பொருளுக்காக ஏங்கும் மற்றும் ஆர்வமும் உள்ள

---

1. கிரிஷ் சந்திர கோஷ் அவர்களுடைய, எட்வின் ஆர்னால்ட் எழுதிய 'ஆசிய ஜோதி'யின் பலரும் அறிந்த வரிகளின் ஒரு தழுவலாக உள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் என்னும் நூலின் மொழிபெயர்ப்பில் சுவாமி நிகிலானந்தர் அவர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

—ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், பகுதி 3 (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 10-வது பதிப்பு, 2008) பக்கம் 350-51.

2. உத்திஷ்ட்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத ।

—கட உபநிஷதம், 1.3.14.

மனிதர்கள் உள்ளனர். உண்மையை அறிவதற்காக சுவாமி விவேகானந்தரின் முயற்சிகளை மற்றும் இடைவிடாத தேடுதல்களையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அவர் வியக்கத்தக்க வகையில் தூய்மையானவராகவும், வலிமை உடையவராகவும், நேர்த்தியான உருவம் கொண்டவராகவும், அறிவு, திறமை உடையவராகவும் விளங்கினார். அவர் விரும்பி இருந்தால், உலக வாழ்க்கையில் அவரால் உச்ச அளவிற்கு உயர்ந்திருக்க இயலும். அவருடைய குடும்பத்தின் வறுமையும், உதவியற்ற நிலையும், உலக வாழ்க்கைக்கு அவரை இழுக்கவல்ல ஒரு கட்டாயப்படுத்தும் சக்தியாக இருந்தது. ஆனால் இத்தகைய கவர்ச்சிக் கூறுகளைப் பொருட் படுத்தாமல், அவர் துறவறம் மற்றும் தொண்டு நெறியை விரும்பித் தேர்ந்தெடுத்தார்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும், என்றாவது ஒருநாள் ஆன்மீகக் குறிக்கோளின் அழைப்பை அவனும் உணரும் நேரம் கண்டிப்பாக வரும். அத்தகைய அழைப்பு வரும்பொழுது அவனால் அதைக் கேட்காமல் இருக்க இயலாது. அப்பொழுது உலகத்தில் எதனாலும் அவனுக்கு நிறைவினைத் தர இயலாது. அந்த உயர்ந்த, தகுதிவாய்ந்த அழைப்பின் கட்டளையைப் பின்பற்றும் வரையிலும் அவனால் ஒருபொழுதும் அமைதியைக் காண இயலாது. இந்த உள்விழிப்புணர்வும், உயர்ந்த குறிக்கோளைப் பின்பற்றுவதற்கு வற்புறுத்தும் தூண்டுதலுமே ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தைக் குறிக்கிறது. அப்பொழுது ஆன்மீகக் குறிக்கோள், வாழ்நாள் முழுவதும் அவனை ஈர்க்கிறது. ஆக்கிரமித்துக் கொள்கிறது. உலகியல் தொடர் பான குறிக்கோள்களைப் பின்பற்றுவதிலிருந்து, ஆன்மீக குறிக்கோளைப் பின்பற்றும் இந்த மாற்றமே ஆன்மீக திசை மாற்றம் என்று அழைக்கப்படுகிறது. அதனுடன் ஆன்மீக வாழ்வு தொடங்குகிறது. ஒரு சிலருக்கு இந்த திசைமாற்றம் திடீரென்று நிகழ்கிறது. வேறு சிலருக்கு இது படிப்படியான வளர்ச்சியாக விளங்குகிறது.

இத்தகைய உண்மையான திசைமாற்றத்திற்கு ஆளாகும் மனிதர்களின் எண்ணிக்கை, எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் சரியாகச் சொல்ல வேண்டுமாயின் குறைவாகவே உள்ளது. ஒருவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உண்மையான ஆன்மீக வாழ்வானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே வாய்க்கிறது. உனக்கு இந்தக் குறிக்கோள் எவ்வகையிலாவது அழகாகத் தோன்றினாலும் மிகப் பெரிய எண்ணிக்கையில் ஆன்மீக இயல்பு இருக்க இயலாது. ஸ்ரீமத்பகவத் கீதை, 'மனிதர்களால் ஆயிரம் பேர்களில் ஒரு சிலரே ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கு முயற்சி செய்கிறார்கள். முயற்சி செய்யும் மனிதர்களின் ஒரு சிலரே, உண்மையாகவே மிக உயர்ந்த, மிகவும் நுட்பமான விழிப்புணர்வுடன் உணர்கிறார்கள்'[1] என்று கூறுகிறது. ஆனால் நாம் அனைவரும் நாம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசிலர் என்று எண்ணுவோம். இந்த மிக உயர்ந்த ஆன்மீகக் குறிக்கோளை நிறைவு செய்வதற்குத் தகுதியுடையவர்களாக நாம் இருப்பதற்கு முயற்சி செய்வோம்.

ஆன்மீக நாட்டம் ஒரு அரிய வரம்

சமயத் துறையிலும் ஒருவகையான மேல்மட்ட ஆட்சி உள்ளது. எல்லாச் சமயங்களிலும் உயிர்நாடியாக விளங்கும் மிகச் சிறந்த முனிவர்களும், அருளாளர்களும், தங்கள் மட்டில் ஒரு தனிப்பிரிவாக விளங்குகிறார்கள். ஆனால் உலகியலிலுள்ள மேல் மட்ட ஆட்சியாளர்களைப் போலன்றி, இந்த ஆன்மீக மேல்மட்ட ஆட்சியாளர்கள் எப்பொழுதும் தம்முடைய செல்வ வளத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு விருப்பமுடையவர்களாக உள்ளனர். அவர்கள் அனுபவிப்பதைப் பிறருக்கு அளிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் மிகச் சிறந்த செல்வ வளங்களைக் கொண்ட ஆன்மீக வாழ்வின் மீது ஒரு சிலரே அக்கறை கொள்வது வருந்தத்தக்கது ஆகும். மனிதர்களில்

1. பகவத் கீதை, 7.3

பெரும்பாலோர் ஆன்மீக மாளிகையின் இதமளிக்கும் அன்பை அனுபவிப்பதைவிட, உலகத்திலே பன்றித் தொட்டியில் சேற்றிலே புரளுவதைத்தான் ஐயத்திற்கிடமின்றி விரும்புகிறார்கள். நீ ஒரு குதிரையை நீரின் அருகில் கொண்டு செல்லலாம். ஆனால் அதற்கு நீரைக் குடிக்க விருப்பமில்லை எனின், உன்னால் அதைக் குடிக்க வைக்க இயலாது. ஆன்மீகப்பாதையை எத்தகைய மனிதர்கள் பின்பற்றுகிறார்கள் என்று உன்னைச் சுற்றி நீ காணத் தேவையில்லை. அந்த உயர்ந்த குறிக்கோளின் அழைப்பை நீ உணர்ந்தால், அதனுடைய விதிமுறைகளை நீ நிறைவேற்ற முயற்சித்து அதைப் பின்பற்ற வேண்டும். மற்றவர்கள் அந்த அழைப்பைப் பொருட்படுத்தவில்லை எனின் அவர்களைக் குறித்து பெரிய அளவில் நீ ஒன்றும் செய்ய இயலாது. ஆன்மீக வாழ்க்கையில் தனிவழியில் செல்வது என்பது தவிர்க்க இயலாததாகும்.

சங்கராச்சாரியர் மனிதப் பிறவி, முக்தியை அடையும் விருப்பம் மற்றும் புனிதமானவர்களின் தொடர்பு என்னும் இந்த மூன்றும் மிகவும் அரியவையாகும். கடவுளின் அருள் மூலமே இவைகளை அடைய இயலும்' என்று கூறியுள்ளார்.[1] ஆனால் இந்த மூன்று அனுகூலங்களும்கூட போதுமானது அல்ல. இவைகளினால் நாம் நன்மையை அடைய விரும்ப வேண்டும். ஆன்மீக வாழ்விற்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யவும் நாம் விரும்ப வேண்டும். வாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு, எத்தகைய விலையை அளிக்கவும் எத்தகைய துன்பத்தையும் அனுபவிக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

நாம் அதை மிகச் சிறந்த பாக்கியமாகக் கருத வேண்டும் உயர்ந்த, நிலைத்த பொருட்களுக்காக, ஏதாவது ஒரு காரணத்தினால் நம்முடைய மனம் ஒரு ஈர்ப்பைக்

---

1. துர்லபம் த்ரயமேவைதத் தேவானுக்ரஹ ஹேதுகம் ।
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷஸம்ச்ரய: ॥
—விவேக சூடாமணி, 3.

கைக்கொள்ளுகிறது. நாம் அந்த இலட்சியத்தை அடையும் வரையில் அந்த உயர்ந்த பாதையில் படிப்படியாக, நிலையாக ஊக்கத்தை ஒரு பொழுதும் கைவிடாமல் தொடர்ந்து செல்கிறோமா என்று பார்க்க வேண்டும். நம்முடைய ஆன்மீக ஆர்வமானது தொடர்ந்து காக்கப்பட வேண்டும். நாம் அடிக்கடி தளர்ந்து போகும் அபாயத்திற்கு ஆட்படுகிறோம். பெரும்பாலான மனிதர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்டதும், ஆன்மீகத்திற்காக முயற்சி செய்வது நின்றுவிடுகிறது. அவர்களுடைய மனங்கள் வெளிப்புறத்திலே செல்வதாலும், அமைதியற்று இருப்பதாலும் நீண்ட காலத்திற்கு ஆன்மீக ஆர்வத்தையும் தீவிரத்தையும் அவர்களால் நிலைநிறுத்துவதற்கு இயலுவதில்லை. மற்றும் அவர்களுடைய ஆன்மீகப் பயிற்சிகளிலும், படிப்பிலும், ஆராய்ச்சியிலும் ஒரே சீராக விடாப்பிடியாக இருப்பதற்கு இயலுவதில்லை. எனவே நாம் விழிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும். ஆன்மீக வாழ்விற்கு விடாப்பிடியான உறுதி என்பது தேவையாகும். எல்லா வளர்ச்சிகளும் ஆற்றலுடன் கூடிய நிலைமாறாத தன்மையாலும், தளராத உறுதியாலுமே பெறப்படுகின்றன. நாம் ஒருபொழுதும் நம்மை அக்கறையற்றவர்களாக ஊக்கம் குறைந்தவர்களாக ஆவதற்கு விடக்கூடாது. வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் தம்முடைய புகழ்பெற்ற ஒரு கவிதையில்

'நமது பிறப்பு ஒரு உறக்கமே மற்றும் ஒரு மறதியே'[1]

என்று கூறியுள்ளார். மற்றொரு கவிதையில்

'இவ்வுலகம் நமக்கு மிகையானது
தாமதித்தும் விரைந்தும் பெற்றும் செலவழித்தும்
நாம் நமது சக்திகளை வீணடிக்கிறோம்.'[2]

நாம் நம்முடைய எல்லா நேரத்தையும் இந்த நிலையில் செலவிடக் கூடாது.

---

1. William Wordsworth, Ode on the Intimations of Immortality
2. William Wordsworth, The World is Too Much with Us

இவ்வுலகத்தில் நிலைத்த நிறைவு இல்லை

நமக்கு அடிக்கடி ஒரு பொருள் கிடைத்தால், நாம் உண்மையாகவே அதை விரும்பவில்லை என்பதைக் கண்டு கொள்கிறோம். நாம் அதை விரும்பி இருக்கலாம். நமக்கு அது கிடைத்தவுடன், அந்த விருப்பம் உண்மையாக மறைந்து விட்டதையும் வேறு ஒரு விருப்பம் அந்த இடத்தில் இருப் பதையும் காண இயலுகிறது. பலரும் அவர்களுடைய ஏக்கங் களின் உண்மையான இயல்பை தவறாகப் புரிந்துகொண்டு, அவைகளுக்கு உலகியல் தொடர்பான போக்குகளை அளிக் கின்றனர். இவ்விதம் இருக்க உண்மையாக, நிலையற்ற தன்மையையும் மாறும் தன்மையையுமுடைய எந்த ஒரு பொருளிலும் எந்த ஒரு மனித ஏக்கமும் ஒரு பொழுதும் நிறைவினைக் காண இயலாது. எப்படி இருப்பினும் பல மனிதர்கள் இந்த ஒரு கருத்தில் தங்களை ஏமாற்றிக் கொள் வதற்கு முயற்சி செய்கிறார்கள். முன்பு இருந்ததைவிட மிகப் பெரும்பாலாக, மிகவும் அச்சம் தரும் வகையில் மற்றும் கடுமையான உருவிலே, முன்பு இருந்த பழைய வெறுமைகள், அவர்களிடம் மீண்டும் மீண்டும் வந்து தலையிடுகின்றன. புறப்பொருள் உலகைச் சார்ந்தவற்றில் வெளியே மனிதர்கள் இன்பத்தை நாடுகின்றனர். இவ்வெளிப் பொருட்கள், ஆண்-பெண் இயற்பண்புக் கூறுகளைச் சார்ந் தவை. ஆனால் உண்மையான இன்பம் நம்முள்ளேயே இருக் கிறது. அது நம்மை விட்டு அகல இயலாத மரபு உரிமை யாகும். வெளிப்புறப் பொருட்களால் நமக்கு ஒருபொழுதும் உண்மையான இன்பத்தைத் தர இயலாது. நமக்குக் கிடைக்கும் சிறிதளவு இன்பமும் கண் இமைக்கும் நேரத்தில் மறைந்துவிடுகிறது. நம்முடைய முழுமையான வாழ்க்கை யின் காலத்தைப் பார்க்காமல். ஒரு குறிப்பிட்ட குறுகிய கால அளவைப் பார்க்கும் தவறைச் செய்கிறோம். உலகியல் உறவுகளில், மனிதனின் அன்பில், மனிதனின் பாசத்தில், ஐயத்திற்கு இடமின்றி தற்காலிகமான இன்பம் உள்ளது. ஆனால் தற்காலிக இன்பத்தை ஒரு பொழுதும் உண்மையான இன்பம் என்று கருத இயலாது. உண்மையாகக் கூறினால்,

அது உண்மையான இன்பத்திற்கு எதிர்மாறானது ஆகும். உண்மையான இன்பமே உள்ளுறை ஆன்மாவின் உள்ளார்ந்த இயல்பாகும். நம்முடைய இயல்பை நாம் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுவோம். நம்முடைய உண்மை இயல்பை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டுவோம். ஆன்மஞானம் அடைவதில் மட்டுமே உண்மையான பேரின்பம் உள்ளது.

மனிதனுடைய (உயர்ந்த உள்ளுறைத் தன்மையானது) தன்மையானது மேம்பட்ட நிலையில் இறைவனின் ஒரு பகுதியாக உள்ளது. உண்மையாக அதிலிருந்து பிரிக்க இயலாததாக இருப்பினும் பக்தன், தன்னுடைய சொந்த ஆன்மாவிற்குக் கொடுப்பதை விட அதிகமான முக்கியத் துவத்தைக் கடவுளுக்குக் கொடுக்கிறான். அவனுக்குக் கடவுள் மட்டுமே முழுமையான அமைதி மற்றும் பேரின்பத்தின் களஞ்சியமாகத் திகழ்கிறார். நாம் உள்முக மாகப் பார்க்க முயற்சித்து நம்முடைய சொந்த இதயங்களில் வீற்றிருப்பதைக் காண வேண்டும். நம்முடைய இந்த உடல் தான் கடவுள் வாழும் கோயிலாகும். நம்முடைய எல்லா திருமறை நூல்களிலும் இந்த கருத்து மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுவதை நாம் காண்கிறோம். எப்படி இருப் பினும் தலைசிறந்த அருட்போதகர்களும் மற்றும் மெய்யுணர் வாளர்களும்தான் கடவுள் உறையும் மிகச் சிறந்த கோயில் களாகத் திகழ்கிறார்கள். எனவேதான் அவர்கள் மிகுந்த மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றல் உடையவர்களாக உள்ளனர். தங்களுக்குச் சொந்தமான ஆன்மாக்களில் உண்மையை உணர்ந்தவர்கள் மட்டுமே பிறருக்கு உண்மையைக் காணும் வழியை அறிவுறுத்த இயலும். கடவுள் எப்பொழுதும் நம் மனங்களில் மறைவாக இருக்கிறார். நம் ஆளுமையில் மறைந்து இருக்கிறார். ஆர்வம் மிகுந்த இதயத்துடன் பிரார்த்தித்தால் மட்டுமே, நம் பிரார்த்தனையானது கேட்கப் படும். அவ்விதம் இல்லையெனின் கேட்காது. நாம் பிரார்த் தனை செய்யும் பொழுது, உலகியல் இன்பங்கள் தொடர்பு உடையவை பற்றி ஒரு பொழுதும் நினைக்கக் கூடாது. பொதுவாக புரிந்துகொள்ளப் பட்டுள்ள இன்பம் என்பது

ஆன்மீக வாழ்வின் உண்மையான வழி காட்டும் கொள்கை யாகாது. எத்தகைய ஆன்மீக வளர்ச்சிக்கும் அல்லது உண்மையை உணர்வதற்கும் விளக்கச் சான்றாக அமையாது. ஆன்மீக இன்பம் என்பது வேறு வகைப்பட்டது ஆகும். 'அது எல்லா அறிவுகளையும் கடந்த இறை அமைதி ஆகும்.'[1]

நாம் கடவுளிடம் உலகியல் பொருட்களைக் கேட்கக் கூடாது. அவைகளைக் கடவுள் அளிப்பதாக வைத்துக் கொள்வோம். உலகியல் பொருட்கள் தொல்லைகளையும் கொண்டு வரலாம். நாம் இந்த மிகச் சிறந்த வரம் அளிப்ப வரை அணுகும்பொழுது, ஒரு பொழுதும் உலகியல் பொருட் களை, தனிப்பட்ட மனிதனுடன் தொடர்பு உடைய ஆசை களையும், விருப்பங்களையும் கேட்கக் கூடாது. உலகியல் பொருட்களுக்காக உலகப்பற்று மோகம், என்னும் கடலில் மூழ்காமல் நம்மைக் காப்பாற்றுவதற்காக நாம் கடவுளை அணுகலாம். பொதுவாக நாம் மகிழ்ச்சியற்று இருப்பதை உணர்ந்தால் நம்முடைய வழிகளை மாற்றிக்கொண்டு, உண்மையையும், இன்பத்தையும் அணுகுவதைவிட நாம் நம்மை நம்முடைய மகிழ்ச்சியற்ற நிலையுடன் பொருத்திக் கொண்டு, நம்முடைய விருப்பங்களையும், ஆசைகளையும் பற்றிக் கொள்கிறோம். நாம் நம் உடலுடன் மிகவும் கட்டுப்பட்டு இருக்கிறோம். மற்ற எல்லாவற்றையும் விட உடல் தொடர்பான இன்பத்தை வலியுறுத்துகிறோம். அதைத் துறப்பதற்கு ஆயத்தம் செய்வதில்லை. இன்னும் சொல்லப் போனால் நாம் நம்பிக்கையற்று அதனுடைய பல உருவங் களைப் பற்றிக் கொண்டே இருக்கிறோம். எனினும் மீண்டும் மீண்டும் அடிகளையும், உதைகளையும் தவிர வேறு எதையும் நாம் பெறுவதில்லை. மாயை அல்லது அறியாமையின் வல்லமை மிகுந்த சக்தி அத்தகையதாகும்.

வல்லமை வாய்ந்த தந்தையும், வல்லமை வாய்ந்த அன்னையும் குழந்தைகள் விளையாடுவதைக் காண் கிறார்கள். குழந்தை தன்னுடைய குழந்தைத்தனமான

---

1. *பைபிள்— பிலிப்பியன்ஸ், 4:7.*

பொழுதுபோக்கிலும் மற்றும் பொம்மைகளைக் கண்டு சோர்வடையும் பொழுதுதான், கடவுள் உண்மையாக அக் குழந்தையிடம் வந்து, மாயத்தோற்றம் என்னும் விளை யாட்டு மைதானத்திலிருந்து அக்குழந்தையை வெளியே அழைத்துச் செல்கிறார். குழந்தைகள், மனத்திற்கு மகிழ் வளிக்கக் கூடிய பொருட்கள், பொம்மைகள், பொம்மை வீரர்கள், பொம்மை வீடுகள், கார் பொம்மைகள் போன்ற வற்றை வைத்துக் கொண்டு விளையாடுகின்றன. குழந்தைகள் அவைகளைக் கண்டு சோர்வடைந்து, முழுமையான வெறுப் படைந்து, அவைகளைக் கண்டு விலகிச் செல்லும் வரை யிலும் கடவுளால் ஒன்றும் செய்ய இயலாது. கடவுள் இதை நல்ல விளையாட்டாகக் கருதுகிறார். அதன் பிறகு ஒருநாள், குழந்தை ஓரளவிற்கு வளர்ந்த பிறகு 'என் வாழ்க்கையில் நான் எதை முயன்று அடைந்துள்ளேன்?' என்று அழுகிறது. அதற்குக் கடவுள் 'ஆமாம். என் குழந்தையே, நீ எதை அடைந் துள்ளாய்? உன்னை யார் அதைச் செய்யச் சொன்னார்கள்? வரையறையின்றி, அத்தகைய முட்டாள்தனமான வகையில் உன்னை யார் விளையாடிக் கொண்டே இருக்குமாறு கூறினார்கள்? யார் உன்னை விளையாட்டுப் பொருட்களிடம் சிக்கிக் கொண்டு துன்புறுத்திக் கொள்ளச் சொன்னார்கள்? இந்த அனைத்தையும் செய்தது யார்?' என்று கேட்கிறார். அதன்பிறகு, பலதருணங்களில் அது ஏற்கனவே மிகத் தாமத மாகி விடுகிறது. மற்றும் குழந்தையானது தன்னுடைய சிதறுண்ட வாழ்க்கை மற்றும் புலம்பல்களின் நடுவில் அமர்ந்து கொண்டிருக்கிறது.

மிகவும் உயர்ந்ததை அடைய முயற்சி செய்வாய்

நம் அனைவருக்கும் நல்லறிவு நிலையுடைய மேம்பட்ட வழிகளைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பு இருந்தாலும், நாம் நம்முடைய குறிப்பிட்ட விளையாட்டுப் பொருட்களைப் பற்றிக் கொண்டு நம்முடைய பிடியை விடுவதில்லை. எனவே நாம் துன்பப்பட வேண்டும். பலவகையான வழி களில், மீண்டும், மீண்டும் வாழ்க்கை அறிவுறுத்தும் சிறந்த

பாடத்தைக் கற்று அறிவுபூர்வமாகச் செயல்படும்வரையிலும் நாம் துன்பப்படுகிறோம்.

பெரும்பாலான மனிதர்கள், அவர்களுடைய உலகியல் குறிக்கோள்களையும் இலட்சியங்களையும் அடைவதற்கு முயற்சி செய்வதைப் போல நாம் ஆன்மீக வாழ்விற்கும், ஞானத்தை அடைவதற்கும் முயற்சிக்க வேண்டும். ஆனால், பெரும்பாலான மனிதர்கள் இதைச் செய்வதில்லை. அது நம்முடைய சொந்த விருப்பத்தை மட்டுமே சார்ந்திருக் கிறது. நாம் உலகியல் வாழ்வை நாடுகிறோமா அல்லது ஆன்மீக வாழ்வை நாடுகிறோமா, பயத்துடன் கூடிய அடிமைத்தனமான வாழ்வை மேற்கொள்ளுகிறோமா அல்லது பயமற்ற சுதந்திரமான வாழ்வை மேற்கொள்ளு கிறோமா என்பதைச் சார்ந்துள்ளது.

அழிய இயலாத, மாறுபாடு அடையாத தன்மையுடைய மிக உயர்ந்த ஒன்றை அடைவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். ஆனால் நாம் மீண்டும் மீண்டும் வேண்டு மென்றே, தன்னிச்சையாக அறியாமை நிறைந்த வழியையே தேர்ந்தெடுக்கிறோம். ஏனெனில் நாம் உடல் மற்றும் மனம் சார்ந்த இன்பம் என்னும் பொய்த் தோற்றத்தையே பற்றிக் கொண்டிருக்கிறோம். அதை நாம் எப்பொழுதாவது விட்டு விட வேண்டும். நாம் அனைவரும் என்றாவது ஒருநாள் இந்தப் பிடியை விட்டுவிட வேண்டும். நாம், நாமாகவே விரும்பி இதைச் செய்யாவிட்டால், நம்மிடமிருந்து அந்த விளையாட்டுப் பொருள் பறிக்கப்பட்டு விடும். இதனால் நாம் துன்பமடைவோம், பலரும் துன்பத்தால் மனம் உடைந்து போகிறார்கள். பெரும்பாலான மனிதர்களுக்கு இதுதான் ஒரே வழியாக உள்ளது. அதன்மூலம் அவர்கள் அவர்களுடைய பாடங்களைக் கற்க வைக்கப்படுகிறார்கள். ஆனால் இது மிகவும் வேதனை தரத் தக்கது ஆகும். மற்றும் பொதுவாக பல உயிர்களை எடுத்துக் கொண்டுவிடுகிறது. நாம் அர்ப்பிக்கும் மனப்பாங்குடன் மற்றும் ஒரே நோக்கத் திற்காக, மனப்பூர்வமாக விழிப்புணர்வுடன் கருத்தூன்றி

ஆன்மீக வாழ்க்கையை வாழ முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இந்த விருப்பமானது வாழ்க்கையின் உயர்ந்த வழிகள் உள்ள திசையை நோக்கி வழிநடத்திச் செல்லலாம். அல்லது நாம் விரும்புவதைப்போல சிறப்பற்ற வழிகள் உள்ள திசையை நோக்கிச் செல்லலாம்.

நாம் நம்மிடம் நாம் அடையத்தக்க லட்சியத்திற்கு ஏற்ற ஆற்றல் வாய்ந்த ஆர்வத்தைத் தூண்ட இயலுமாயின், அதன் பிறகுதான் அதற்குத் தேவையான முயற்சியைச் செய்யும் சக்தியை மற்றும் உச்ச அளவான சக்தியைப் பெற இயலும். எழுச்சி மிகுந்த உலகத்தில், தாறுமாறாக மூளை இருக்கும் மனிதர்களை நாம் அடிக்கடி காண்கிறோம். வரையறுத்த ஒரு நெறியைப் பின்பற்றுவதில் அவர்கள் அக்கறை கொள்வ தில்லை. அவர்களுடைய உணர்ச்சிகள் மற்றும் தூண்டு தல்கள் என்னும் கரையற்ற கடலில் மிதக்க விரும்புவார்கள். உண்மையாக, அவர்கள் எதையும் அடைவதில்லை. உண்மை யைக் கூறப் போனால், முழுவதுமாக உலகப் பற்று உடைய வர்கள் செய்வதைப்போல மிகக் குறைந்த அளவில்தான் அடைகிறார்கள். குழப்பம் நிறைந்த மூளையை உடைய ஒரு மனிதனால், இவ்வுலகத்தில் அந்த வெற்றியையும் பெற இயலாது. ஆன்மீக உலகத்திலோ, கேட்கவே வேண்டாம். உண்மையாக உனக்கு எது வேண்டும் என்பதில் உறுதியான நிலையான ஒழுங்கு நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் மிகவும் அமைதியை அடைய விரும்புகிறோம். ஆனால் அமைதியற்ற துன்பத்தில் மட்டுமே முடியத்தக்க ஒரு வழியைத்தான் நாம் பின்பற்று கிறோம். வங்காள மொழியில் ஒரு பழமொழி உள்ளது. ‘சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிழக்குப் பக்கம் நோக்கிச் செல்ல வேண்டும் என்றால் மேற்குப் பக்கம் நோக்கி நடக்கத் தொடங்குவார்கள். அவர்களை ஏன் அவ் விதம் செய்கிறீர்கள் என்று கேட்டால், ஏனெனில் எனக்கு வடக்குப் பக்கம் நோக்கிச் செல்ல வேண்டும்’ என்று கூறுவார்கள்.’

உண்மையின் சோதனை

ஒரு காதலன், அவனுடைய காதலியைப் பற்றிக் கனவு காணும்பொழுது உண்மையற்ற பொருட்களைக் குறித்துக் கற்பனை செய்கிறான். பைத்தியக்காரனும் இல்லாத பொருள் களைக் குறித்துக் கற்பனை செய்கிறான். ஆன்மீக வாழ்வில் எல்லா மாயக்காட்சிகளும் தவிர்க்கப்பட வேண்டும். ஆன்மீகப் பயிற்சியில் முறைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறை யைப் பின்பற்றுவதன்மூலம் உண்மையின் கணநேரத் தோற்றத்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அத்தகைய ஒரு தோற்றம் எதிர்பாராத வகையில் வந்தால், நீண்ட கால, முறையான பயிற்சியின் மூலம், நாம் முறையாக, ஆயத்தமாக இல்லை எனின், அதனுடைய எதிர்விளை வானது அச்சம் தரத்தக்கதாக இருக்கலாம். வாழ்க்கைக்குத் தேவையான உறுதியைக் கூடக் குலைத்துவிடலாம். அத் தகைய தோற்றங்களுக்கு எவ்விதம் நாம் தகுதி உடையவர் களாக இருக்க வேண்டும் என்பதை முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். அதனால் அந்த விளைவுகளை எதிர்நோக்கி, நாம் அவற்றை நம்முடைய நன்மைக்காக நமக்கு உரியவையாகச் செய்து கொள்ளலாம். ஆன்மீக மலர்ச்சியானது அதனை நாடுபவருக்கு முதலில் மிகுந்த துன்பத்தையே அளிக்கிறது. இன்பத்தை அளிப்பதில்லை. இடைப்பட்ட நிலைகளில் அவனுடைய வாழ்க்கை மிகவும் தொல்லை நிறைந்ததாக ஆகிறது. அப்பொழுது அதன்பிறகு அவனுக்கு உலகத்தில் என்ன இருக்கிறதோ, அதன்மீது எத்தகைய ஈடுபாடும் இருப்பதில்லை. மற்றும் அவனுடைய ஆற்றல் எல்லைக்கு அப்பால் உள்ள ஆன்மஞானத்தை அவனால் அடைய இய லாது. அது மேலேயோ அல்லது கீழேயோ செல்ல இயலாத படி அந்தரத்தில் தொங்கும் நிலையைப் போன்றதாகும்.

இதுதான் உண்மையின் சோதனையாகும்: அவ்வித மிருக்க உலகியல் பொருட்களிலும், உலகியல் உறவுகளிலும் உன்னால் ஒருபொழுதும் இறுதியான நிறைவை அடைய இயலாது. ஆன்மீக இயல்பிலும் மற்றும் ஆன்மீக வாழ்விலும்

உன்னால் முழுமையான நிறைவை அடைய இயலும். அந்த நிறைவானது வெளியுலகைச் சார்ந்த எதையுமே சார்ந்திருக்கவில்லை. எனவே மிகச் சிறந்த முனிவரான நாரதர், 'அதை உணர்ந்து (தெய்வீக அன்பு) ஒரு மனிதன் முழுமையை, அழிவற்றதன்மையை, இறுதியான நிறைவை அடைகிறான்'[1] என்று கூறியுள்ளார்.

உண்மையாகவே தாகமுள்ள மனிதனுக்கு எப் பொழுதுமே நீர் தேவைப்படுகிறது. ஆனால் தாகம் இல்லாமல் இருப்பவர்களுக்கு நீர் இல்லாமல் நீண்ட நேரம் இருக்க இயலும். உண்மையிலேயே முழுமனத்துடன் நாடு பவன், அவனுக்குக் கூறப்பட்ட அனைத்தையும் செய்வான். ஆனால் மனிதர்கள், அரைமனத்துடன் இருப்பதால் மற்றும் சிறிதளவே நாட்டம் கொண்டிருப்பதால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுவதில் மிகுந்த விரைவைக் காட்டுவதில்லை.

பிறகு, நாம் மிகத் தூய்மையான நீரைக் கேட்கிறோம். கலப்படநீரையோ அல்லது மிகவும் அசுத்தமான நீரையோ கேட்பது இல்லை. இன்னும் மிக நுட்பமாகக் கூறப் போனால், உண்மையாக நாம் தாகத்தை உணர வேண்டும். ஆனால் தூய்மையற்ற, நன்மைபயக்காத ஏதாவது ஒன்றை அணுகுதல் கூடாது.

கடுமையான முயற்சி இன்றி உண்மையை உணர இயலாது. முழுமையான வாழ்க்கை என்பது ஐயத்திற்கு இடமின்றி ஒரு போராட்டம்தான் ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றை அடைய முயற்சி செய்கின்றனர். ஆனால் ஆன்மீக முயற்சி என்பது உயர்ந்த தரத்தைச் சார்ந்த ஒரு முயற்சியாகும். அது மனத்தின் விழிப்பு நிலைக்கான ஒரு முயற்சியாகும். முயற்சி, முயற்சி, முயற்சி! வேறு எந்த வழியும் இல்லை. நாம் முயற்சிகளைக் குறித்து அச்சப்படத் தேவையில்லை.

---

1. யல்லப்த்வா புமான் ஸித்தோ பவதி ।
அம்ருதோ பவதி, த்ருப்தோ பவதி ॥
—நாரத பக்தி சூத்திரங்கள், 1.4.

உண்மையின் ஆற்றல்

தொடக்கத்தில் மீண்டும் மீண்டும் கடவுளை எண்ணி ஏங்குவது என்பது கஷ்டமானதாக இருக்கிறது. நமக்குக் கடவுள் உண்மை என்று தோன்றாததுதான் இதன் காரண மாகும். நம்மில் பலருக்கு இந்த உடல்தான் நம் ஆன்மாவாக உள்ளது. மற்றும் பருப்பொருள் மட்டத்தில் இந்த உடலின் மகிழ்ச்சிக்காகத்தான் நாம் மிகவும் ஆர்வம் காட்டுகிறோம். இந்த மகிழ்ச்சி, கட்டாயமாக மிகப் பெரிய அளவில் இருக்கத் தேவையில்லை. நம்மில் பெரும்பாலோருக்குச் சமயம் என்பது ஏதோ பொழுது போக்கிற்கு உரிய ஒன்றாகவும் மற்றும் மற்றப்பல நடப்பு வழக்குகளைப்போல இதுவும் ஒருவகையான நடப்பு வழக்காகவே உள்ளது. ஆனால் என்றாவது ஒருநாள் நம்முடைய ஆன்மீக முயற்சியால் கடவுள் உண்மை என்று உணர்ந்தால், நாம் நம்முடைய முழுமையான இருப்பு, அந்த உண்மைக்கு தன் உள் உணர்ச்சி களை வெளிக்காட்டுவதை உணர்வோம். மற்றும் அதற்காக மட்டும் ஏங்குவோம். இந்த உலகம் நமக்கு உண்மை என்றால், அது நம்முடைய முழுமையான கவனத்தையும் ஈர்த்துவிடுகிறது. நமக்கு வேறு ஏதாவது உண்மை என்றால் அதுவும் அவ்விதமே ஈர்க்கிறது. தற்காலிகமாக எந்த ஒன்றை நாம் உண்மை என்று ஏற்றுக்கொள்கிறோமோ, அது நம்மைப் பாதிக்கிறது. நம் உணர்ச்சிகளைத் தூண்டுகிறது, நம் விருப் பத்தை இழுக்கிறது. அறிவு முழுவதையும் ஆட்கொள்கிறது. உண்மையாக நம்முடைய முழுமையான இருப்பு இந்த உண்மைக்குத் தன் உணர்வுகளை வெளிப்படுத்துகிறது.

நாம் கவனமாக நம்முடைய சொந்த வாழ்க்கையையும் பெரிய மஹான்களின் வாழ்க்கையையும் ஆராய்ந்தால், பெரிய வேறுபாட்டைக் காணலாம். அந்த, ‘உண்மை’தான் இருவரின் மனங்களையும் பாதிக்கிறது. ஆனால் சாதாரண மனிதர்களான நமக்கு அந்த உண்மை என்னவாக இருக் கிறதோ, அதிலிருந்து, மஹான்களின் உண்மையானது சிறிது வேறுபட்டு விளங்குகிறது. நமக்கு இந்த உலகம்

உண்மையானது; அவர்களுக்கு ஆன்மீக உலகம் மட்டுமே உண்மையானது. அவர்களுடைய முழு வாழ்க்கையும் இந்த ஒரு கருத்தால் மட்டுமே நிரம்பியுள்ளது. கடவுளை உணர்வது எப்படி, கடவுளை, அறிவுக்கு உகந்த, தெளிவற்ற பொதுவான கருத்து என்பதற்குப் பதிலாக உண்மை என்று அழைப்பதை, நம்மால் உணர்ந்து பாராட்ட முடிந்தால், கடவுளை உணர் வதற்காக அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை இழக்கவும் ஏன் ஆயத்தமாக இருந்தார்கள் என்பதையும் உணர்ந்து பாராட்ட இயலும்.

எப்படி இருப்பினும், கண்மூடித்தனமாக நாம் மஹான் களைப் பின்பற்றக் கூடாது. உண்மையைக் கூற வேண்டு மெனின் அவர்கள் அவர்களுடைய பழக்கவழக்கங்களில் இயற்கைக்கு மாறாக வழக்கத்திற்கு மாறாகத் தென்படலாம். ஆனால், நாம் கூறியுள்ளதைப் போல கடவுளுக்காக அவர் களுடைய எல்லா வேட்கையும் உண்மை என்னும் ஒரு தெளிந்த கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. புலன் உணர்விற்கு உட்பட்ட இந்த உலகம் மட்டுமே உண்மை யானது என்று நம்மிடையே கருதுபவர்கள், தம்முடைய ஆன்மீக முயற்சிகளில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நமக்கு வெற்றி என்பது பெரும்பாலும் நாம் நாள்தோறும் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயிற்சியின் ஒழுங்குமுறையை யும், தீவிரத்தையும் சார்ந்துள்ளது. பல சமயங்களில் நாம் இதில் கவனமற்று இருக்கிறோம். ஆன்மீக வாழ்வில் நிலை யான பயிற்சியில்லாமல் எதையுமே அடைய இயலாது. ஆன்மீக வாழ்வானது, கடவுளுக்கு அர்ப்பிக்கும் வாழ்வாக இருக்க வேண்டும். படையலாக, தியாகமாக, ஒருமுனைப் பாட்டுடன் கூடிய வாழ்வாக இருக்க வேண்டும். நாம் நம் முடைய நன்மைக்காகவும் மற்றவர்களின் நன்மைக்காகவும், நம்முடைய சொந்த எண்ணங்களில் மிகவும் எச்சரிக்கை யுடனும், முற்றிலும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும். ஏனெனில் மற்றவர்களுக்கு காமம், பேராசை அல்லது வன்முறை நிறைந்த நம் எண்ணங்கள் விஷவாயுவை விட மோசமானதாக இருக்கக் கூடும். உண்மையாக,

நம்முடைய தூய்மையற்ற எண்ணங்களால் நாம் உருவாக்கும் பேரழிவு, விஷவாயுவால் ஏற்படும் அழிவை விட மிகவும் மோசமானதாக இருக்கும். நம்முடைய தூய்மையற்ற எண்ணங்களால், தூய்மையற்ற தன்மை என்றால் என்ன என்பதையே அறியாத மனிதர்ளையும் நாம் பாதிக்கிறோம். ஆனால், நம்முடைய தூய்மையான எண்ணங்களால் மற்றவர் களைத் தூய்மைக்கான அவர்களுடைய முயற்சிகளில் நாம் உதவி செய்கிறோம்.

கடவுளுக்காக ஏங்குதல்

எல்லாக் காலங்களிலும் இறைஞானம் எய்தியவர்கள் கூறியுள்ள மனநிறைவற்ற நிலையை, ஆற்றல்வாய்ந்த புனிதமான மனநிறைவற்ற நிலையை, உலகியல் பொருட் களின் மீதும், ஆசைகளின் மீதும் நமது பிணைப்பை நீக்க வல்ல இந்த நிலையை நாம் எழுப்ப வில்லையாயின், ஆன்மீக ஞானம் எய்துவதற்குரிய உண்மையான ஏக்கத்தை அடைய இயலாது. இந்த உலகத்தில் நாம் நம்முடைய பாத்திரத்தை, நம்மால் எந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்குச் செய்தாலும் உண்மையான அமைதி என்பது ஒருபொழுதும் இருக்காது. நம்முடைய முயற்சியில் எவ்வகையான தளர்வோ அல்லது நாம் பிணைக்கப்பட்டுள்ள நிலையில் எந்த வகையான நிறைவோ ஒருபொழுதும் இருக்கக் கூடாது. ஆன்மீகத்தை நாடும் அனை வருக்கும் அத்தகைய தளர்வை அளிக்கவல்ல தோற்றங்கள் மிகவும் ஆபத்தானவை ஆகும். நாம் விழிப்புடன், மிகுதி யான விருப்பம் என்னும் உணர்ச்சியை எரித்துக் கொண்டு, மிக உயர்ந்த வாழ்க்கைக்காக ஏங்க வேண்டும். அதைவிடக் கீழ்நிலையில் உள்ள எதற்காகவும் நாம் நம் ஆற்றல்களை வீணடிக்கக் கூடாது.

நாம் இறுதியான இலட்சியத்தை நோக்கி ஏற்கனவே முன்னேறவில்லையெனின், பாதுகாப்பு இருக்காது. எந்த ஒரு பக்தனும் ஆன்மஞானத்தை அடைவதற்கு முன்பு, எந்தக்

கணத்திலும் விரும்பத்தகாத வீழ்ச்சியையோ அல்லது துயரத்தையோ அடையலாம். நாம் பெருமளவில் வளர்ச்சி அடைவதற்கு முன்பு, நம் ஆற்றலில் நம்பிக்கை வைத்து ஒருபொழுதும் அதிகமாகத் தீங்கிற்கு ஆட்படக் கூடாது.

ஆன்மீகப் பயிற்சியும், பிரார்த்தனையும் தீவிரமாக்கப் பட வேண்டும். இரவும், பகலும் தொடர்ந்து பிரார்த்திப்பதும் தியானம் செய்வதும் உயர்ந்த எண்ணங்களையே சிந்திப்பதும் நமக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்யும். தொடக்க நிலையில் இருப்பவரின் மனம் தொடர்ந்து தெய்வீக எண்ணங்களிலேயே, அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள் வதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். சரியான பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதும், ஆன்மீகத்தை நாடுபவரின் வாழ்வில் மிகக் குறைந்த சிரமமே இருக்கும். மற்றும் பாதையும் தங்குதடையற்றதாக இருக்கும்.

நாம் நம்முடைய மனம் முழுவதையும் கடவுளுக்கு அளிக்க வேண்டும். வெறும் ஒரு பகுதியை மட்டும் அளிக்கக் கூடாது. ஸ்ரீராமகிருஷ்ணர், 'ஒரு ரூபாய் பெறுமானமுள்ள ஒரு துண்டு துணியை நான் வாங்க வேண்டுமாயின், நான் ஒரு ரூபாயைக் கொடுக்க வேண்டும். ஒரு பைசாவைக் கூட குறைக்க இயலாது. இல்லையெனின் எனக்கு அது கிடைக் காது' என்று கூறுவார். அதைப்போன்றே ஆன்மீக வாழ்விலும் முழுமையாகக் கவனத்தைக் கொடுக்கவில்லை எனின், உன்னால் எதையும் பெற இயலாது. மேலோட்டமாக தியானத்தைச் சில மாதங்களுக்கோ, சில ஆண்டுகளுக்கோ பயிற்சி செய்துவிட்டு ஆன்மீகத்தில் எதையும் பெறவில்லை என்றால் நீ யாரையும் குறைகூற இயலாது.

நமக்கு விடாமுயற்சிதான் வேண்டும். ஒரே சீரான முறையான ஒழுங்கான பயிற்சி இருக்க வேண்டும். இன்னும் நுட்பமாகக் கூற வேண்டுமெனின், நம் மனத்தையும் உடலையும் தூய்மையாக வைத்துக் கொள்ளும் முயற்சியில் அதைக் கைவிடுவதைவிட இறப்பதே மேலானதாகும். நாம் இறந்தாலும் என்ன நிகழப் போகிறது? நாம் உண்மையை உணர்கிறோம். நாம் முழுமையாக உயர்வடைகிறோம், நாம்

உண்மையான இயல்பினை உணர்கிறோம் என்பதுதான் முக்கியமாகும். நம்மால் இயலும் உச்ச அளவிற்கு முயற்சித்தால், நம்மால் இயலும் உச்ச அளவிற்குச் செய்தால், நாம் நம் கடமையை நிறைவேற்றியவர்களாவோம். மற்ற அனைத்தையும் கடவுளிடம் விட்டுவிட வேண்டும். உண்மையான ஆன்ம சமர்ப்பணம், கடவுளிடம் ஒப்படைப்பதும் இங்கு தங்கள் இடத்தைப் பெறுகின்றன.

'யார் விழிப்புற்ற தேரோட்டியுடனும், கடிவாளமாகிய மனத்தைக் கைப்பற்றியவனாகவும் இருக்கிறானோ, அவனே பாதையின் முடிவை அடைகிறான். அது இறைவனின் மேலான இருப்பிடம்'[1] என்று கட உபநிஷதம் கூறுகிறது. நாம் ஒரு பொழுதும் நம்மேல் நிறைவடையவோ அல்லது திருப்தியடையவோ அல்லது நாம் மிகச் சிறந்ததைச் செய் திருக்கிறோம் என்று எண்ணவோ கூடாது. தற்காலிகமாக வேண்டுமாயின் அது நம்முடைய முழு முயற்சியாக இருக்க லாம். இன்னும் மிகுதியாகச் செல்வதற்கு மேலும் மேலும் ஆற்றலைக் கொடுக்க வேண்டும் என்று நாம் கடவுளிடம் வேண்டிக் கொள்ள வேண்டும். இன்று என்னால் பத்து பவுண்டுகளை மட்டுமே தூக்க இயலும். ஆனால், நூறு பவுண்டுகளைத் தூக்கக் கூடிய ஆற்றலை நான் கேட்கலாம். நான் ஏற்கனவே முழு முயற்சியைச் செய்து இருக்கிறேன், நான் மிகச் சிறந்ததைச் செய்து கொண்டிருக்கிறேன் என்று எண்ணினாலும் என்னுடைய செயல் ஆற்றல் அதிகரிக்கலாம். ஏனெனில் இந்த 'முயற்சி' அல்லது 'சிறந்தது' என்பது நிலைப்பட்ட அளவு இல்லை.

மஹான்களின் எடுத்துக்காட்டு
(அருளாளர்களின் எடுத்துக்காட்டு)

மஹான்கள் மற்றும் முனிவர்களின் வாழ்க்கையில் நாம் காணும் கடவுளுக்காக இடைவிடாத இணங்கிப் போகாத

---

1. விஜ்ஞானஸாரதிர் யஸ்து மன: ப்ரக்ரஹவான் நர: ।
ஸோத்வன: பாரமாப்னோதி தத் விஷ்ணோ: பரமம் பதம் ॥
—கட உபநிஷதம், 1.3.9.

விசாரணையை கடவுளுக்காக தீவிரமான ஏக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீசைதன்யர் அவருடைய இளமைப்பருவத்தில் மிகச் சிறந்த அறிஞராக இருந்தார். இளைஞனாக மாறியபொழுது, அதன் தொடக்க காலத்தில் திடீரென்று ஒரு மாற்றத்திற்கு ஆட்பட்டு ஆர்வம் மிகுந்த கடவுளின் அன்பராக ஆனார். கடவுளின்மீது அவருக்கு இருந்த அன்பு மிகவும் தீவிரமானதாக இருந்தது. ஒரு நொடிகூட அவரால் கடவுளை மறக்க இயலவில்லை. அவர் தன்னுடைய முழு வாழ்க்கையையும் தன்னை மறந்த ஆன்மீக நிலையிலேயே வாழ்ந்தார். அவருடைய ஆனந்த பரவசமான பக்தி ஒரு சிறிய கவிதையாக வெளிப்பட்டுள்ளது. அவர் கூறுகிறார்:

ஓ, அந்த நாளுக்காக நான் எப்படி ஏங்குகிறேன்
என்று உன்பெயரை ஓதும்பொழுது என்
கண்களிலிருந்து
கண்ணீர் சொரியும், மற்றும் என்தொண்டை
ஆனந்தபரவசத்தில் திணறி, திக்கி, அதன்
பிரார்த்தனையைக் கூற மறுக்கும், என் உடலின்
உரோமங்கள் பரவசத்தில் சிலிர்த்து நிற்கும்!
ஓ, அந்த நாளுக்காக நான் எப்படி ஏங்குகிறேன்.
ஓ கோவிந்தனே! ஒரு நொடி உன்னைப் பிரிவது
ஆயிரம் ஆண்டுகளைப் போன்றதாம்
எப்பொழுது என் இதயம் தன் ஆசைகளினால்
தேய்வுறுகிறதோ
மற்றும் நீ இல்லாத உலகம், இதயமற்ற வெற்றிடம்
உன் திருவடிகளில் என்னைச் சரணடையவிடு
தடுமாறாத பக்தியில் நான் இருக்க வேண்டும்
உன் கரங்களில் அணைப்பிற்குக் கெஞ்சாமலும்
உன் தோற்றத்தின் விலகலால் புலம்பாமலும்
அது என் மனத்தை அடியோடு கிழித்தாலும்
ஓ, உன் பக்தர்களின் இதயங்களைத் திருடும் நீ
நீ விரும்பும் படி என்னைச் செய்வாய்

நீதான் என் இதயத்தின் அன்பிற்கு உரியவன்
நீ, மற்றும் நீ மட்டுமே.[1]

புராணங்களில் புகழப்பட்டுள்ள அருளாளர்களில் பிரஹல்லாதன் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவருக்குக் கடவுள் விஷ்ணு விடம் தீவிரமான பக்தி இருந்தது. அரக்கத்தனமாக அவ ருடைய தந்தை, அவருடைய செல்வாக்கை முழுமையாகப் பயன்படுத்தி அச்சிறுவனை உலக வாழ்க்கைக்குத் திருப்ப முயற்சி செய்தார். ஆனால் சிறுவன் பிரஹல்லாதன் கடுமை யான சோதனைகள் அனைத்தையும் எதிர்த்து நின்று, மெய் மறந்த பரவசத்தில் கடவுள் விஷ்ணுவைப் போற்றிக் கொண்டே சென்றான். கடவுள் அச்சிறுவன் முன்தோன்றி அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அச்சிறுவன், 'அறியாமை நிறைந்தவன் உலகப் பொருட்களை மனமார விரும்புவதைப் போல, அத்தகைய நிலைத்த அன்புடன் நான் உன்னை நினைக்க வேண்டும். மற்றும் அந்த அன்பு ஒருபொழுதும் நில்லாமல் என் இதயத்தில் உறைய வேண்டும்.'[2]

'கடவுளே, ஆயிரக்கணக்கான பிறவிகளை அடையும் வாய்ப்பு எனக்கு ஏற்படினும், நான் எப்பொழுதும் அசைக்க இயலாத, பின்னடையாத பக்தியை உன்னிடம் கொள்ள வேண்டும்.'[3]

நவீன காலத்தில், கடவுள் மீது கொள்ளும் உச்ச அள வான ஆர்வ நாட்டத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ஈடு இணையற்ற எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். கடவுளை அனைத்துக் கோணங்களிலிருந்தும் காண வேண்டும் என்னும்

---

1. ஸ்ரீசைதன்யர், சிக்ஷாஷ்டகம், மொழிபெயர்ப்பு சுவாமி பிரபவானந்தர் மற்றும் கிறிஸ்டோபர் ஈஷர்வுட்.

Vedanta for the Western World (Hollywood: Marcel Rodd Co., 1943) பக்கம் 225.

2. சுவாமி யதீஷ்வரானந்தர், Universal Prayers (சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடம், 13-வது பதிப்பு, 2005) பாடல் எண் 212.

3. மேற்கண்ட நூல், பாடல் எண் 211.

அவருடைய ஏக்கம் பெரிய அளவில் இருந்ததால், அவர் ஆறு ஆண்டுகளுக்கு உறங்காமல் இருந்தார். அவர் இரவு, பகல் என்று தன்னுடைய நேரத்தை பல்வகையான ஆன்மீக மனநிலைகளில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். மனிதர்கள் அவர் பைத்தியமாகிவிட்டார் என்று நினைக்கும் அளவிற்கு அவை மிகவும் தீவிரமானவையாக இருந்தன. உண்மையாக அவருடையது தெய்வீகப் பைத்தியம்தான். ஸ்ரீராமகிருஷ்ண ரின் அமுதமொழிகள் என்னும் நூல் அவரது உண்மையான அறிவுரைகளையும் உரையாடல்களையும் உட்கொண்டிருக் கிறது. அதில் கடவுளுக்காக ஏங்கும் கருத்தானது மிகவும் வற்புத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். உண்மையாக, கடவுளை நாடுவோர்க்கு ஸ்ரீராமகிருஷ்ணர் இதைத்தான் முதன்மையான விதிமுறைப் பயிற்சியாக அறுதியிட்டுக் கூறி இருந்தார் என்று நாம் கூறலாம். பின்வருகின்ற பகுதி வகைமாதிரியான எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

குருதேவர் (பங்கிமிற்கும் மற்றவர்களுக்கும்) 'தாயைக் காணாத குழந்தை எப்படிக் கதறுகிறது? இனிப்போ, மிட்டாயோ கொடுத்துச் சமாதானப்படுத்த முயற்சி செய். அந்தக் குழந்தை எதையும் ஏற்றுக் கொள்ளாது. எதனாலும் அது தாயை மறக்கும் படிச் செய்ய இயலாது. ''எனக்கு எதுவும் வேண்டாம். நான் அம்மாவிடம்தான் போவேன்'' என்று பிடிவாதம் செய்யும். இப்படிப்பட்ட மன ஏக்கத்தை இறைவனிடம் கொள்ள வேண்டும். ஆகா! என்னவொரு நிலை அது! அம்மா, அம்மா என்று குழந்தை எப்படிப் பைத்தியம் போலாகிறது! எதனாலும் அது தாயை மறக்காது. யாருக்கு வாழ்க்கையின் இந்த சுக போகங்கள் எல்லாம் அலுத்துப் போய் விட்டனவோ, எதுவும் பிடிக்கவில்லையோ பணம், புகழ், உடலின்பம், புலனின்பம் எதுவும் ருசிப்ப தில்லையோ, அவர்களே இதயபூர்வமாக அம்மா, அம்மா என்று தவிக்கின்றனர். அவர்களுக்காக அன்னை எல்லா வேலைகளையும் உதறிவிட்டு ஓடிவந்தேயாக வேண்டும்.

இதுதான் மன ஏக்கம். எந்தப் பாதையில் வேண்டு மானாலும் போ. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன், சாக்தன்,

பிரம்மசமாஜன், வைஷ்ணவன் என்று எந்த வழியில் வேண்டு மானாலும் போ. இந்த மன ஏக்கம்தான் முக்கியம் இறைவன் நம்முள் இருந்து நம்மை வழிநடத்துபவர். மன ஏக்கம் இருக்கு மாயின், தவறான வழியில் போனாலும் பாதகமில்லை. அவரே நம்மைச் சரியான வழியில் கொண்டு செல்வார்.

எல்லாப் பாதைகளிலும் தவறுகள் இருக்கவே செய் கின்றன. தனது கடிகாரம் சரியாக ஓடுகிறது என்றுதான் எல்லோரும் நினைக்கின்றனர். ஆனால் எந்தக் கடிகாரமும் சரியாக ஓடுவதில்லை. ஆனால் அது யாருடைய வேலைக்கும் தடையாக இருப்பதில்லை. மன ஏக்கம் இருக்குமேயானால் சத்சங்கம் வாய்க்கும். சத் சங்கத்தின் காரணமாக சொந்தக் கடிகாரத்தைப் பேரளவிற்குச் சரியாக அமைத்துக் கொள்ள முடியும்.'

பங்கிம் (குருதேவரிடம்): 'சுவாமி, பக்தி எவ்வாறு உண்டாகும்?'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'மன ஏக்கத்தால், தாயைக் காணாத குழந்தை தாய்க்காக எப்படி ஏங்கிக் கதறுகிறதோ, அது போன்ற மனஏக்கத்துடன் இறைவனுக்காக அழுதால் இறை யனுபூதி கூடக் கிடைத்துவிடும். அருணோதய வேளையில் கீழ் வானம் சிவக்கும். இனி சூரிய உதயத்திற்குத் தாமத மில்லை என்று புரிந்து கொள்ளலாம். அதுபோல, இறைவனை அடைவதற்காக யாருடைய பிராணனாவது துடிக்குமானால், அவர் இறையனுபூதி பெற அவ்வளவு தாமதமாகாது என்று தெரிந்து கொள்ளலாம்'[1] ஸ்ரீராமகிருஷ்ணரின் நெருங்கிய சீடர்கள் அனைவருக்கும் கடவுளிடம் இத்தகைய தீவிரமான ஆர்வம் இருந்தது. பலராம் என்பவர் அவர்களின் ஒருவராவார். ஸ்ரீராம கிருஷ்ணருடன் அவருடைய முதல் சந்திப்பு திரைமறைவி லிருந்த பலவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

அவர் கல்கத்தாவிற்கு வந்த மறுநாள், தட்சிணேசுவரத் திற்குக் கிளம்பினார். கேசவசந்திர சென் மற்றும் அவருடைய

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.644-647.*

பிரம்மஸமாஜத்தைச் சேர்ந்தவர்களின் வருகையால் கோயி லின் தோட்டத்தில் மிக அதிகமான கூட்டம் இருந்தது. பலராம், ஸ்ரீராமகிருஷ்ணரின் அறையில் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார். அங்கிருந்த கூட்டம் உணவு அருந்தச் சென்ற பொழுது, ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை அழைத்து அவருக்கு ஏதாவது கேட்க வேண்டுமா என்று விசாரித்தார். பலராம், 'ஐயா, கடவுள் உண்மையாகவே இருக்கிறாரா?' என்று கேட்டார். 'கட்டாயமாக இருக்கிறார்' என்று குருதேவர் கூறினார். 'யாராவது கடவுளை உணர இயலுமா?' 'ஆமாம்' என்று குருதேவர் கூறினார். 'தனக்கு மிகவும் வேண்டப் பட்டவர் என்று கடவுளை நினைக்கும் பக்தனுக்குக் கடவுள் அவரை வெளிப்படுத்துகிறார். கடவுளை ஒருமுறை பிரார்த்தித்துக் கொள்ளும் பொழுது, உனக்கு எந்த மறு மொழியும் வராததால், நீ கடவுள் இல்லை என்னும் முடி விற்கு வரக் கூடாது.' 'ஆனால்' என்று மீண்டும் பலராம் குறுக்குக் கேள்வி கேட்டார். 'நான் கடவுளை அதிகமாகப் பிரார்த்திக்கும் பொழுது, என்னால் ஏன் அவரைக் காண இயலவில்லை?' ஸ்ரீராமகிருஷ்ணர் பலராமை 'உன்னுடைய சொந்தக் குழந்தைகளைப்போல உன் இதயத்திற்குக் கடவுள் மிகவும் நெருக்கமானவர் என்று நீ கருதுகிறாயா?' என்று புன்னகையுடன் கேட்டார். ஒரு நொடி தயக்கத்திற்குப்பிறகு பலராம், 'இல்லை ஐயா, அவ்வளவு உறுதியாக நான் ஒரு பொழுதும் கடவுளை உணரவில்லை' என்று கூறினார். குரு தேவர் ஆர்வம் மிக்க குரலில், 'உன்னைவிட உனக்குக் கடவுள் நெருக்கமானவர் என்று எண்ணிக் கடவுளைப் பிரார்த்தனை செய். உண்மையாகவே நான் உனக்குக் கூறுகிறேன். கடவுள் தன்னுடைய பக்தர்களுடன் மிகவும் பற்றுதலுடன் இருக் கிறார். அவரால் அவர்களுக்கு வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருக்க இயலாது. அவரை வேண்டிக் கொள்வதற்கு முன்பே அவர் மனிதனிடம் வருகிறார். கடவுளைவிட அதிகமாக அன்பாக இருப்பவரும், நெருக்கமாக இருப்பவரும் எவரு மில்லை' என்று கூறினார். இந்தச் சொற்களினால் பலரா மிற்குப் புதிய ஒளி கிடைத்தது. 'அவர் கூறிய ஒவ்வொரு

சொல்லும் உண்மையானது. கடவுளைப் பற்றி எவருமே எப்பொழுதுமே இத்தகைய ஏற்கத்தக்க ஆற்றலுடன் என்னிடம் பேசியது இல்லை' என்று பலராம் அவர் மனத்திலே நினைத்துக் கொண்டார்.[1]

வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே தொடங்குவாய்

வாழ்க்கையின் பயன்கள் அனைத்தையும் அனுபவித்த பிறகு, தங்களுடைய முதுமைப் பருவத்திற்கு சமயத்தை எஞ்ச வைத்துக் கொள்ளலாம் என்று பல மனிதர்கள் நினைக் கிறார்கள். ஆனால் அவர்களுடைய வாய்ப்புக்காலம் ஒரு பொழுதும் வராமல் இருக்கலாம். ஏனெனில், உடல் தொடர் பான இன்பத்தை அனுபவிப்பதிலேயே அவர்களுடைய ஆற்றலின் பெரும்பாலான பகுதியை வீணடித்த பிறகு, வலுவான ஆன்மீகப் பயிற்சிக்கு அந்த ஆற்றல் பெருமளவில் எஞ்சி இருக்காது. பல மனிதர்கள் ஆன்மீக வாழ்க்கையையும் மிகவும் தாமதமாக தொடங்குகின்றனர். அவ்வாழ்க்கையினால் எந்த மிகுந்த பயனையும் அடைவதில்லை. பல மனிதர் களும் அவர்களுடைய வாழ்க்கை வீணாகி விட்டது என்று மிகத் தாமதமாகத்தான் உணர்கின்றனர். ஆனால் அவர்கள் தன்னைக் காதல் உணர்வு உள்ள இளைஞன் என்று வீணாகக் கற்பனை செய்து கொண்டு, முதுமைப் பருவத்திலும் உடல் இன்பத்தின் பின்னால் ஓடும் வயதான முட்டாளைவிட மேலானவர்கள் ஆவார்கள், மேற்கு நாடுகளில் நீங்கள் இத்தகைய இரங்கத்தக்க பல மனிதர்களைச் சந்திக்கலாம்.

ஒருவர் ஒருவருடைய ஆன்மீக வாழ்க்கையை எவ்வளவு விரைவாகத் தொடங்க இயலுமோ, அவ்வளவு விரைவாகத் தொடங்க வேண்டும். வாழ்க்கையின் தொடக்கத்தில் ஆன்மீக விதையை நாம் நம் மனத்தில் விதைக்கவில்லை எனின், வாழ்க்கையின் பிற்பகுதியில் ஆன்மீக மனப்பாங்கை ஏற்படுத்த இயலாது. ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருநாள் அவருடைய அன்பிற்கு உகந்த இளைய சீடரான நரேந்திரனுக்கு, புகழ்

1. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 9-வது பதிப்பு, 2005) பக்கம் 411-412.

பெற்ற வங்காள நடிகர் நாடக ஆசிரியரான கிரீஷ் என்பவருடன் அவர் கொண்டிருக்கும் தொடர்பைக் குறித்து எச்சரித்தார். குருதேவர்: நீ அடிக்கடி கிரீஷைச் சந்திக்கிறாயா? பூண்டு கரைசல் இருந்த ஒரு குவளையை எவ்வளவு அதிகமாகக் கழுவினாலும், அதன் வாசனையின் அடையாளம் கண்டிப்பாக அதில் நீடித்திருக்கும். இங்கு வரும் இளைஞர்கள் தூய்மையானவர்கள், 'பெண்' மற்றும் 'பொன்'னால் தீண்டப் பெறாதவர்கள். நீண்ட காலத்திற்குப் 'பெண்' மற்றும் 'பொன்'னுடன் தொடர்பு கொண்ட மனிதர்களிடமிருந்து பூண்டின் வாசனை வருகிறது என்று சொல்லலாம். அவர்கள் காக்கைகளால் கொத்தப்பட்ட மாம்பழம் போன்றவர்கள், அத்தகைய பழத்தைக் கோயிலிலுள்ள தெய்வத்திற்கு அர்ப்பிக்க இயலாது. மற்றும் நீ அந்தப் பழத்தை உனக்காகச் சாப்பிடுவதற்கும் தயங்குவாய். மீண்டும் ஒரு புதிய பானையையும், தயிர் வைக்கப்பட்டிருந்த மற்றொரு பானையையும் எடுத்துக் கொள்வோம். இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள பானையில் பாலை வைப்பதற்கு ஒருவன் அஞ்சுவான். ஏனெனில் பாலானது பல சமயங்களில் திரிந்துவிடும்.[1]

அதன்பிறகு கிரீஷ், இந்த உரையாடலைக் குறித்துக் கேள்விப்பட்டு, ஸ்ரீராமகிருஷ்ணரிடம், 'பூண்டின் வாசனை' போகுமா என்று கேட்டார். அந்தக் குவளையானது, கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் சூடாக்கப்பட்டால் அந்த வாசனை போகும் என்று குருநாதர் பதிலளித்தார். ஒரு மனிதன் தன்னுடைய அகத் தூண்டுதல்களுக்கு அடிமையாகிவிட்டால் அவைகளின் பிடிகளிலிருந்து அவனை விடுவித்துக் கொள்வதற்கு அவன் கஷ்டப்படுகிறான். முதுமைப் பருவமானது அகத் தூண்டுதல்களிலிருந்து விடுதலையை அடைவதற்கு மிகக் குறுகிய பருவமாகும். உயர்ந்த விழிப்பு நிலை அனுபவத்தை அடைவதின்மூலம், பிணைப்பு மற்றும் துன்பத்திலிருந்து விடுதலை அடைவது உன்னுடைய இலட்சியமாக இருந்தால் நீ இப்பொழுதிலிருந்து தொடங்குவது நல்லதாகும்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.33.*

ஒருவன் தன்னுடைய இலட்சியத்தை அடைவதற்கு முன்பே இறந்துவிட்டால்? கீதையிலுள்ள இந்தப் பகுதியை நினைவில் கொள்வாய், 'இந்த தருமத்தின் சிறிய அளவும்கூட ஒருவனை மிகப் பெரிய பயத்திலிருந்து காப்பாற்றும்'[1] ஆன்மீக வாழ்வில் அக்கறையாக முயற்சி செய்தவர்களும், தங்களுடைய எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பித்தவர்களும் பயப்படத் தேவையில்லை. அவர்கள் உயிருடன் இருந்த பொழுது தீவிரமான ஆன்மீக வாழ்க்கையை வாழ்ந்திருந்தால், வேறு மட்டங்களில் வாழும் மற்ற வாழும் முறைகள் உள்ளன. அங்கு அவர்கள் அவர்களுடைய ஆன்மீக விசாரணையைத் தொடரலாம். அதன்பிறகு ஒருவர் அதே நடைமுறையை விட்ட இடத்திலிருந்து தொடங்கலாம். இறப்பு, ஒரு மாறுபட்ட சூழலைத்தான் கொண்டு வருகிறது. ஆனால், நம்முடைய விழிப்பு உணர்வின் மையம் என்பதில் பெயரைக் கூற வேண்டுமாயின், கடவுள், எப்பொழுதும் நம்முடனேயே இருக்கிறார். நாம் எங்கு இருப்பினும், பரம்பொருள் எப்பொழுதும் நம்முடனேயே இருக்கிறது. நாம் இந்தக் கருத்தை உணர்ந்தால், இறப்பைப்பற்றிய எல்லா பயமும் அகன்றுவிடும். நாம் பிறப்பையோ அல்லது இறப்பையோ நாடக் கூடாது. விதி அதனுடைய போக்கில் செல்லட்டும். ஆனால் நாம் நம்முடைய இதயத்தை எப்பொழுதும் கடவுளிடம் நிலை நிறுத்துவோம். நாம் இலட்சியத்தை நோக்கி அச்சமின்றி உறுதியுடன் முன்னேறுவோம்.

நீ உறங்கும் வரையிலும், இறக்கும் வரையிலும் எப்பொழுதும் வேதாந்த எண்ணங்களிலேயே உன்னை ஈடுபடுத்திக் கொள்வாய்.[2]

---

1. ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் ।

—பகவத் கீதை, 2.40.

2. ஆஸுப்தே ஆம்ருதே காலம் நயேத் வேதாந்த சிந்தயா ।

அப்பய்ய தீக்ஷிதரின் சித்தாந்த லேச சங்கரஹம் என்னும் நூலில் பரிசம்க்யா விதி விசாரம் என்னும் முதல் அத்தியாயத்தில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

2

உயர்ந்த விழிப்புணர்வு அனுபவத்தின் குறிக்கோள்

ஆன்மீக அனுபவம் நமக்கு எதற்காகத் தேவை?

நாம் ஆழமாக நம் மனத்தின் உட்புறமாக நோக்கினால் நாம் வாழும் இந்த உலகத்தின் மீதும் மற்றும் நம்முடன் தொடர்பு கொண்டுள்ள மனிதர்களிடத்திலும் நம்மீதும் பெரிய அளவில் அதிருப்தி கொண்டிருப்பதைக் கண்டு வியப் படைகிறோம். இந்த மனநிறைவற்ற தன்மை முரண்பாட்டை யும், மன அழுத்தத்தையும் ஏற்படுத்துகிறது. தற்காலத்தில் இது அதிகரித்துக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இயல்புகடந்த முரண்பாடும், மன அழுத்தமும் உடலையும், மனத்தையும் பாதிக்கிறது. அதன் காரணம் என்னவாக இருந் தாலும், மனநிறைவற்ற தன்மையானது ஒருவருடைய புறவாழ்வுப்பாங்கினைப் பொறுத்து மன அழுத்தத்தையும், அதன் விளைவாக மனத்தையும், உடலையும் பாதிக்கும் தன்மையைத் தோற்றுவிக்கிறது. அப்பொழுது நம் வாழ்க்கை யானது பயனற்றதாகவும், குறிக்கோளற்றதாகவும் தென்படு கிறது. மேலும், நாம் மனநிறைவு அற்றவர்களாக இருக் கிறோம் என்று உணரும்பொழுது மற்றவர்களுக்கு அமைதி ஏற்படுத்துவதைவிட அமைதியற்ற தன்மையை ஏற்படுத்தும் பாங்கு உடையவர்களாக இருக்கிறோம். உடல் நிலை கோளாறுகள் போல மனநிலைக் கோளாறுகளும் தொற்றிக் கொள்ளும் தன்மை உடையவை.

நமக்குச் சரியான வேலை கிடைத்திருக்கலாம். நாம் அதை மேற்கொள்வதில் ஒருவேளை தவறான போக்கினைக் கொண்டு வரலாம். அந்தச் சூழ்நிலையில் அந்த வேலையை நோக்கி நாம் ஒரு புதிய மனப்பாங்கை வளர்த்துக்கொள்ள

வேண்டும். அல்லது ஒருவேளை நம்முடைய குறிப்பிட்ட திறமைகளைப் பயன்படுத்துவதில், நாம் செய்யும் ஏதாவது ஒன்று தோல்வியை ஏற்படுத்தலாம். அதன்பிறகு நாம் செயல்குலைந்து போகிறோம். செயல்குறைந்த நிலை யானது விசித்திரமான மற்றும் அடுத்தடுத்த தீங்குதரக்கூடிய வாழ்க்கைப் போக்கையும் ஏற்படுத்துகிறது. ஒருவேளை நாம் மிக அதிகமாக மற்றவர்கள் மீது சாய்வோம். அல்லது நாம் நம்மைச் சுற்றிலும் பகைவர்களைக் கற்பனை செய்து கொண்டு, நம்முடைய ஆற்றல்கள் அனைத்தையும் கற்பனைப் பகைவர்களுடன் சண்டையிடுவதில் வீணடிக்க லாம். அல்லது நாம் நம்மை மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்திக்கொண்டு நமக்கென்று ஒரு உயர்ந்த தோற்றத்தை வளர்த்துக்கொண்டு ஒரு பொய்த் தோற்றத்தில் வாழலாம். நாம் நம்மை வெறுக்கத் தொடங்கும்பொழுது, மனநல பாதிப்பின் மிக மோசமான அறிகுறி தென்படுகிறது. அதன் பிறகு வாழ்க்கையானது இரட்டிப்புத் துயர் நிறைந்ததாக ஆகிறது.

இதற்கு என்ன தீர்வு? நாம் இவ்வனைத்தையும் குறித்து என்ன செய்யலாம்? நாம் பயன்தரத்தக்க வகையில் வாழ்வதற்கு ஒரு லட்சியத்தைத் தேடிக் கொள்வதற்கு முன்பு, நம்முடைய சொந்த இயல்பைக் குறித்த ஆழமான உணரும் திறமை நமக்கு வேண்டும் என்று அனுபவ அறிவு வாய்ந்த உளவியல் வல்லுனர்கள் கூறுகின்றனர். நம்மைத் குறித்த கருத்தை நாம் மாற்றிக் கொள்வதன்மூலம் நாம் நம்மை மாற்றிக்கொள்ளவியலும். மற்றும் இந்தப் புதிய மனப்பாங்கு நம்முடைய ஆற்றல்களுக்குத் தகுந்த வடிகாலை கண்டு கொள்வதற்குக் கண்டிப்பாக முற்படுகிறது. நம்மைக் குறித்த கருத்தை எப்படி மாற்றிக் கொள்வது? மனத்தைப்பகுத்து ஆராய்வதின்மூலம் இதைச் செய்யவியலும் என்று மனஇயல் வல்லுனர் கூறுகிறார். நாம் நம்மை ஒரு உளவியல் வல்லுனரால் ஆராயச் செய்வதற்கு விடவேண்டும். அவர் நம்முடைய ஆளுமையின் ஆழங்களை அறிவுபூர்வமான கேள்விகளால் ஆராய முயன்று, நம்மிடம் மறைந்துள்ள

சிக்கலான உணர்ச்சித் தொகுதிகளைக் கண்டு வெளிப்படுத்தி, நம்மிடம் உண்மையாக என்ன தவறு உள்ளது என்று கூறு கிறார். ஒரு கோட்பாட்டின்படி இந்த முறை சரியாக இருப் பதைப் போலத் தோன்றுகிறது. மற்றும் பல மனிதர்கள் மனத்தைப் பகுத்து ஆராயும் முறையினால் உண்மையாகவே சில நன்மைகளை அடைந்துள்ளனர். ஆனால் அதனுடைய குறைபாடு மனஇயல் வல்லுனரின் மற்றவர்களைக் குறித்த அறிவானது, அவருடைய சொந்த அறிவைப் பொறுத்து இருப்பதால் அது வழக்கமாக மேலோட்டமானதாக இருக் கிறது என்னும் உண்மையில் உள்ளது.

மேற்கத்திய மனஇயல் வல்லுனர்கள் அவர்களுடைய எல்லா ஆராய்ச்சிகளாலும், மனிதனை ஆழமாகப் புரிந்து கொள்வதில் வெற்றியை அடையவில்லை. மனிதனின் விழிப்பு உணர்வு நிலையிலுள்ள மனமானது, தன்னுணர்வற்ற ஒரு மிகப்பெரிய மனத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது மற்றும் விழிப்புணர்வு நிலையிலுள்ள மனமும் தன்னுணர்வு அற்ற மனமும் அவைகளின் சலனங்களில் இணக்கமற்று உள்ளன என்பதையும் ஐயத்திற்கு இடமின்றி கண்டுகொண்டுள்ளனர். விழிப்பு உணர்வு நிலையிலுள்ள மனத்திற்கு உயர்ந்த நாட் டங்கள் இருக்கலாம் ஆனால் தன்னுணர்வு நிலையற்ற ஒரு மனத்திற்கு கீழான உணர்வுகள் இருக்கலாம். தன்னுணர்வு நிலையற்ற நிலையின் செயல் நோக்கங்கள், விழிப்பு நிலை யிலுள்ள செயல்களுக்கும் எண்ணங்களுக்கும் எதிராகச் செயல் படுகின்றன. மனிதனின் விழிப்பு உணர்வுநிலையிலுள்ள மனம், மற்றும் தன்னுணர்வுநிலையற்ற மனத்தை ஒருங் கிணைப்பதற்கான, ஒரு நிறைவுதரத்தக்க வழியைக் கண்டு பிடித்து முயன்று அடைவதில் மேற்கத்திய மன இயல் ஆய்வுத் துறையானது வெற்றியடையவில்லை. தன்னுணர்வு அற்ற மனத்தின் விருப்பங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று பெரும்பாலான மனஇயல் வல்லுனர்கள் தங்கள் நோயாளி களைக் கேட்டுக் கொள்கிறார்கள். சில நிலைகளில் இது உள் அழுத்தத்தை நீக்கலாம். ஆனால் இது நிலைத்து நிற்காமல் இருக்கலாம் மற்றும் மிகக் கெடுதலையும் விளைவிக்கலாம்.

இங்குதான் இந்துக்களின் யோகநெறி கைகொடுக்கிறது. யோகநெறியானது தன்னுணர்வுநிலையற்ற மனத்தை தூய்மைப்படுத்தி, அதை விழிப்புணர்வு உள்ள மனத்துடன் இணைப்பதை முதற்கண் எடுத்துக்கொள்கிறது. இந்தத் தூய்மைப்பாடானது ஏதோ செயற்கையானது அல்ல. தூய்மை தான் நம்முடைய உண்மையான இயல்பு ஆகும். இதுதான் மனிதனின் ஆன்மாவின் உண்மையான இயல்பு ஆகும். ஹிந்துதர்மம் மிகப்பழங்காலத்திலேயே உயர்ந்த விழிப் புணர்வு நிலை என்னும் மேம்பட்ட அளவுக்கூறுகளின் தொகுதியை மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் கண்டு பிடித்தது. இந்த உயர்ந்த விழிப்புணர்வு நிலைதான் நம் முடைய உண்மையான மேம்பட்ட மாறாத அடிப்படைத் தன்மையைக் குறித்த அறிவினை நமக்கு அளிக்கிறது. அது ஆன்மாவின் ஒளியைப் பிரதிபலிக்கிறது. மனத்தின் இருண்ட விழிப்புணர்வு அற்ற உட்பிரிவுகளில் இந்த ஒளியானது கொண்டுவரப்பட வேண்டும். அப்பொழுது விழிப்புணர்வு அற்ற மனம் தூய்மைப்படுத்தப்படுகிறது (தூய்மை அடைகிறது). அது விழிப்புணர்வு உள்ள மனத்துடன் மற்றும் அதன் நாட்டங்களுடனும் ஒத்துழைக்கிறது. பிறகு உட்பிரிவுகள் முரண்பாடுகள், மன உளைச்சல்கள் எல்லாம் மறைந்துவிடும். எனவே உயர்ந்த விழிப்புணர்வு நிலை என்னும் கண்டுபிடிப்பு அக அமைதியையும் இணக்கமுடைய தன்மையையும் அடைவதற்கு மிக முக்கியமான எடுத்துக்காட்டாக விளங்குகிறது. உயர்ந்த விழிப்புணர்வு நிலை என்னும் கண்டுபிடிப்புதான் முதல் ஆன்மீக அனுபவமாகும். அதுதான் விழிப்புணர்வையும், விழிப்புணர்வு அற்ற நிலையையும் ஒருங்கிணைக்கிறது. நம்முடைய முழுமையான ஆளுமையை நம்முடைய முழுமையான இயல்பான மாறாத அடிப்படைத் தன்மையை நாம் மீண்டும் பெறுகிறோம்.

ஆன்மீக அனுபவம் நமக்கு உயர்ந்த விழிப்புணர்வு பற்றிய அறிவை அளிப்பதுடன், விழிப்புணர்வற்ற மனத்தின் சிக்கல்களையும் தீர்த்து வைக்கிறது. நம்முடைய சில சிக்கல்கள், விழிப்புணர்வு அற்ற மனத்தில் மறைந்துள்ள உள்

உணர்வு சிக்கல்களால் ஏற்படுகின்றன. பல மனிதர்களுக்கு, முக்கியமாக அவர்களின் இளமைப் பருவத்தின் தொடக்கத்தில் பாலுணர்வு அவர்களின் முரண்பாடுகளுக்குக் காரணமாகத் திகழ்கிறது. ஆனால் மனிதனுடைய வாழ்க்கையில் அதனுடைய பங்கினை பிராயிடு செய்திருப்பதைப்போல அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்துவது உறுதியாகத் தவறானது ஆகும். ஒரு மனிதனிடமுள்ள ஆக்கிரமிக்கும் இயல்பு மற்றவர்களை ஆதிக்கம் செய்வது, சில மனிதர்களின் முரண்பாடுகளுக்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் டாக்டர் அட்லர் அவருடைய மனோதத்துவப் பாணியில் செய்து இருப்பதைப்போல் மனிதனுடைய எல்லாக் குறைபாடுகளுக்கும் அதனுடைய பங்கையே பொறுப்பு என்று மிகைப் படுத்துவது உறுதியாகத் தவறானதாகும். உலகாயதவாத தன்மையை உடைய நாடு என்று அழைக்கப்படும் மேற்கு நாடுகளில் நான் நீண்ட நாள் வாழ்ந்த பொழுது, ஆன்மீக வேட்கை உடைய பலரைக் கண்டிருக்கிறேன். அவர்களுடைய சிக்கல்கள் பெரும்பாலும் ஆன்மீகத் தன்மையைப் பெற்றனவாகவே திகழ்ந்தன. சாமானியமான வாழ்க்கையின் இன்பங்களில், பலரும் நிறைவற்றவர்களாகவே விளங்கினர். மற்றும் வழக்கமான அமைப்பு வழியாகச் செயலாற்றும் சமயத்திலும் அவர்கள் ஒரு உயர்ந்த அனுபவத்தை, ஒரு உயர்ந்த வாழ்க்கைமுறையைப் பெற விரும்பினர்.

டாக்டர் கார்ல் யுங் (Dr. CARL JUNG) என்னும் மனோ தத்துவ நிபுணர், மனிதனுடைய ஆன்மீகத் தேவையைப் புரிந்து கொண்ட, தொடக்ககாலத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவராவார். நவீன மனிதன் தன் ஆன்மாவைத் தேடுகிறான் என்று அவர் குறிப்பிட்டு உள்ளார். ஆனால் அவருடைய எழுத்துக்களிலிருந்து அவரே அவருடைய உண்மையான தன்மையைக் கண்டுகொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நான் சுவிட்சர்லாந்தில் அவரைச் சந்தித்து என்னுடைய சில புத்தகங்களை அவருக்குப் பரிசளித்தேன். அவர் என்னிடம் விழிப்புணர்வற்ற நிலை குறித்துப் பேசினார். ஹிந்துக்களின் உயர்ந்த விழிப்புணர்வு நிலை

விழிப்புணர்வற்ற நிலையை உள்ளடங்கியது என்று கூறினார். அது ஒரு விசித்திரமான கோட்பாடு ஆகும். ஆனால் அது உண்மையாக எதிர்மாறானது ஆகும். நாம் பொதுவாக, உடல்தான் கடைநிலை எல்லை, மனம் அதற்கு உள்ளும், ஆன்மாவானது உள்ளார்ந்த அடுக்கு என்றும் நினைக்கிறோம். நாம் வரிசையை தலைகீழாக்க வேண்டும். ஆன்மாதான் எல்லையற்ற எங்கும் வியாபித்துள்ள உணர்வுநிலையாகும். மனம் அதனுள் அடங்கியுள்ளது. மேலும் உட்புறமாக ஜடப்பொருள் சார்ந்த உடல் உள்ளது. அது எல்லைக்கு உட்பட்டது மற்றும் மிகக் குறைந்த அளவு ஊடுருவும் ஆற்றல் உள்ளது.

தற்சமயம் உயர்ந்த விழிப்புணர்வு நிலை என்பது நமக்கு இன்னதென்று தெரியாமல் உள்ளது. ஆனால் மனோதத்துவ நிபுணர்களின் விழிப்புணர்வற்ற மனம் போன்றது அது என்பதுதான் பொருள் இல்லை. ஆன்மீக நெறிமுறைகளின் மூலம் அதனைப் பெறவியலும். அதுதான் பேரின்பம் மற்றும் மிக உயர்ந்த அமைதியின் மூலமாகும். எல்லாவற்றையும் விட மனிதனுக்கு அது முழுமை என்னும் உணர்வையும் மிக உயர்ந்த நிறைவு என்னும் உணர்வையும் அளிக்கிறது.

டாக்டர் யுங் அவர்கள் மனிதர்களை வெளியுலக ஈடு பாடு உடையவர்கள், உள்உலக ஈடுபாடு உடையவர்கள் என்று வகைப்படுத்தி இருப்பதற்குப் புகழ் பெற்றவர். உள்உலக ஈடுபாடு உடையவர் அதிகமாக அவருடைய மனத்திற்குள்ளேயே தன்உள்உணர்வுக்குரியவற்றிலேயே, அதையே நினைத்து ஏங்குவதற்கும் தன்னை தானே திறனாய்வு செய்து கொள்வதிலும் பழக்கப்பட்டவராக உள்ளார். வெளிஉலக ஈடுபாடு உடையவர் வெளியே செல்லும் நிலையுடன் தன்னை வெளிப்புற உலகத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்கிறார். செயல்கள் நிறைந்த வெளிப்புற உலகம்தான் அவருடைய மூலப் பண்புக் கூறாக உள்ளது. இத்தகைய வகைகள் பரஸ்பரம் தனிப்பட்டு விளங்கவில்லை. நாம் அந்த இரண்டையும் நம்மிடத்தில் காணலாம். வேதாந்தத்தில் நாம் கர்மயோகியைப்பற்றியும்,

பக்தனைப் பற்றியும், ஞானியைப் பற்றியும் பேசுகிறோம். ஆனால் இந்த வகைகள் எல்லாம் செயற்கைப் பிரிவுகள் அல்ல. நம் ஒவ்வொருவரிடத்திலும் இந்த எல்லா வகைகளின் கூறுகளும் உள்ளன. இந்த வேறுபட்ட மனப்பாங்குகளிடையில் நாம் சரியான இணக்கத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். பயிற்சியின் மூலம் வேறுவகைப்பட்ட மனப்பாங்குகளை நம் இயல்பிற்குள்ளேயே ஒருங்கிணைத்து முழுமையாக்க இயலும். இறுதியாக அவற்றின் எல்லையைக் கடந்து மேம்பட இயலும். இவ்விதம் நாம் ஆர்வத்துடன் செயலாற்றி, உயர்ந்த லட்சியத்திற்குத் தீவிரமான பக்தியுடனும் மற்றும் நம்முடைய செயலிலும் எண்ணத்திலும் பகுத்தறிவுடனும் இருக்க வேண்டும். ஆனால் இதற்கு ஒருங்கிணைக்கும் சக்தியாகத் தீவிரமான ஆன்மீக நாட்டம் இருக்க வேண்டும்.

Release from Nervous Tension என்னும் புத்தகத்தில் Dr. FINK என்னும் அதன் ஆசிரியர் தணிவு அடையும் தன்மையைப் பழக்கிக் கொள்வதற்கு ஒரு ஆக்கப்பூர்வமான யோசனையைத் தெரிவித்துள்ளார். முதலில் தலையையும், கழுத்தையும் பிறகு கால்களையும், முட்டிகளையும், மார்பு, புஜங்கள், கண்ணிமைகள், அதைப்போன்றே உடல் முழுவதையும் அமைதிப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.[1] மன அழுத்தத்திலிருந்து சிறிதுசிறிதாக விடுபடும் முறையை முறையாகப் பயிற்சி செய்வது கண்டிப்பாகப் பயன்தரத்தக்க விளைவை ஏற்படுத்துகிறது. ஆனால் நம்முடைய குருமார்கள், நம்மை நாமே பகுத்து ஆராய்வதன் மூலமும் தியானத்தின் மூலமும் நம்முடைய முழுமையான ஆளுமையின்மீது நம்மால் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள இயலும் என்று கூறுகிறார்கள். இது நம் உடலிலுள்ள உறுப்புக்களை ஒவ்வொன்றாக அமைதி படுத்தும் முயற்சியைவிட, மிகுந்த அளவில் ஆற்றல் வாய்ந்த, நீடித்து இருக்கவல்ல, மன

---

1. David Harold Fink, Release from Nervous Tension (New York: Simon and Schuster, 1943) பக்கம் 67-72.

அழுத்தத்தை அகற்றும் வழியாக உள்ளது. முறையான பயிற்சியினால் மனத்தைக் கட்டுப்படுத்தி ஆன்மீக அனுபவத்தை உணர்ந்தால், நம் அனைவரையும் அது உடனடியாக விடுவிக்கும்பொழுது நாம் நம்மை உறுப்பு உறுப்பாக வருத்திக் கொண்டு ஏன் விடுவித்துக் கொள்ள வேண்டும்? எனக்கு ஒரு கஞ்சனைப்பற்றிய கதை நினைவிற்கு வருகிறது. அவன் மரணப்படுக்கையில் இருக்கிறான். அவனைக் காப்பாற்றுவதற்கு மதகுரு வருகிறார். மிகவும் பேராசைக்காரராக இருந்ததால் மதகுருவானவர் அவனை ஒவ்வொரு உறுப்பாகக் காப்பாற்றி காப்பாற்றப்பட்ட ஒவ்வொரு உறுப்பிற்கும் ஒரு குறிப்பிட்ட ஊதியத்தைப் பெறத் தீர்மானித்தார். இறுதியாக, வலது காலிற்கு வந்தபொழுது 'இவன் நம்மை விட்டு நழுவிச் செல்வதால் நான் மிகுதியாக அவனிடம் கட்டணம் கேட்க வேண்டும் என்று நினைத்தார். எனவே அவர் அந்தக் கஞ்சனிடம் 'உன்னுடைய வலது காலிற்கு மிக அதிகமான தொகையைக் கேட்கப் போகிறேன்' என்று உரக்கக் கூறினார். தன்னலத்துடன் திட்டமிடும் இயல்புடைய மரணப்படுக்கையிலிருந்து அம்மனிதன், தன் சக்தியையெல்லாம் வரவழைத்துக்கொண்டு 'ஆனால் ஐயா, அது ஒரு மரத்தினால் செய்யப்பட்ட கால்' என்று கூறினார். இறைமைஇயல் வல்லுனர்கள் ஒரு மனிதனை உறுப்பு உறுப்பாகக் காப்பாற்றுவது குறித்து என்ன கூறினாலும் உண்மையான ஆன்மீகக் குருமார்களிடம் விடுதலை அடைவதற்கு அதிகமாகப் பயன் தரத்தக்க வழி உள்ளது. உயர்மட்ட ஆன்மாவை நேரடியாக உணர்வதால் ஆன்மா முக்தியடைவதே சீர்மையானது ஆகும். ஆன்மீக அனுபவம் முழுமையான ஆளுமையை மாற்றி விடுகிறது. உச்ச அளவில் அமைதியும், பேரின்பமும் மனிதனை நிறைத்து உடலிற்கும், மனத்திற்கும் முழுமையான தணிவினை அளிக்கிறது.

உணர்தல்—நேர்முகமாக மற்றும் மறைமுகமாக

சமயம் (மதம்) என்ற சொல்லிற்குச் சரியான, தக்க வடமொழிச் சொல் தர்சனம் என்பதாகும். இந்த தர்சனம்

என்னும் சொல்லிற்கு இருவகையான பொருட்கள் உள்ளன. பார்ப்பது அல்லது உணர்வது என்பது இதன் பொருளாகும். உணர்வதற்குத் தக்க வழியை அல்லது நெறியை வழி காட்டுவது என்பதையும் அது உணர்த்துகிறது. சமயம் (மதம்) என்னும் சொல்லிற்கு நாம் இந்த இரு பொருள்களையும் கருத்தில் கொள்கிறோம். தர்சனம் என்னும் சொல், தத்துவம் என்னும் பொருளையும் குறிக்கப் பயன்படுகிறது. ஹிந்து தர்மத்தில் ஆறுவகையான தத்துவங்கள் உள்ளன. இவை தர்சனங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஹிந்து தர்மத்தில் சமயமும், தத்துவமும் பிரிக்க இயலாதவையாக மற்றும் ஒரே பொருளை உடையன வாகவும் திகழ்கின்றன. இந்த இரண்டின் பொதுவான நோக்கம் உள்ளுணர்வைச் சார்ந்த உண்மையின் தோற்றமாக இருப்பதால் அவை ஒன்றையொன்று நிறைவு செய்து கொள்கின்றன. பேராசிரியர் மேக்ஸ் முல்லர் மிகச் சரியாக நுணுகிக் கண்டறிந்திருப்பதைப் போல இந்தியாவில் மட்டும்தான் இந்த இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணக்கமாக இணைந்து செயல்படுகின்றன. இங்கு சமயம் பரந்த மனப்பான்மையுடன் காணும் திறத்தைத் தத்துவத்திலிருந்து பெறுகிறது. மற்றும் தத்துவம் அதன் ஆன்மீக இயல்பைச் சமயத்திலிருந்து பெறுகிறது. சமயம் என்பது தத்துவத்தின் நடைமுறை வடிவமாகும். மற்றும் தத்துவம் என்பது சமயத் தின் பகுத்தறிவைச் சார்ந்த வடிவமாகும். ஹிந்து சமயத்தின் தத்துவஞானிகள் முதற்கண் ஆன்ம உணர்வு பெற்றவர்கள் ஆவார்கள். எனவே அவர்களுடைய வகைமுறைகள், அறிவு எல்லையைக் கடந்ததாக அதற்கு மூல ஆதாரமாக உள்ளதை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பக்தியுடனும், உண்மையுடனும் பின்பற்றினால் அதே இலக்கிற்கு வழி காட்டுகின்றன. வாழ்க்கை என்பது ஆளுமைக்கும் சுற்றுச் சூழலிற்குமிடையில், ஒன்றின்மீது ஒன்று செயலாற்றும் தொடர்ச்சியாக உள்ளது. ஆளுமைக்கு வேறுவகைப்பட்ட படிநிலைகள் உள்ளன. சுற்றுச்சூழலுக்கும் அவ்வாறே உள்ளன. நம்முடைய பௌதீக உடலானது, பௌதீக

உலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. மனத்தால் இயக்கப் படும் உடல், மன உலகுடன் தொடர்பு கொண்டுள்ளது. உயிரைச் சார்ந்த உடல் அல்லது ஆன்மாவனாது இயற்கை முழுதளாவிய மெய்ப்பொருள் அல்லது கடவுளுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஆளுமையானது இந்த வேறுபட்ட படிநிலைகளில் அனுபவத்தைப் பெறவியலும். நாம் எந்தப் படித்தரத்தில் இருக்கிறோமோ நாம் அந்தப் படித்தரத்தில் ஏற்படும் அனுபவங்களை உண்மை என்று எடுத்துக் கொள்கிறோம். நாம் நம்முடைய விழிப்பு நிலையில் பல வற்றைக் காண்கிறோம். அவை நம்முடைய முழு கவனத்தை யும் ஈர்த்து விடுகின்றன. நாம் நம்முடைய கனவுகளிலும், பலவற்றை உணர்கிறோம். நாம் கனவு கண்டு கொண்டிருக் கும் வரை அவை நமக்கு உண்மையாகத் திகழ்கின்றன. இவ்வனைத்தும் புலனுணர்வால் ஏற்படும் உள்ளத்தின் புறக்காட்சிகள்தான். ஆனால் கட்டாயமாக உண்மையாக இருக்க வேண்டும் என்பது இல்லை. சரியான உணர்வுக் காட்சியைத் தவறான உணர்வுக் காட்சியிலிருந்து வேறு படுத்திக் காண்பதுதான் சிக்கலாக உள்ளது. இந்திய தத்துவத் தில், ஒப்புக்கொள்ளத்தக்க புலனுணர்வுக் காட்சியின் மூலப் பிரமாணத்திற்கு விவாதத்தின் பங்கும் பெரிய அளவில் உள்ளது. விஞ்ஞானி, பௌதீகப் பொருட்களில் உண்மை யைக் கண்டறிய விரும்புகிறான். அவனும் அவனுடைய பரிசோதனைகளின் மூலம் கண்டுணர்ந்த உண்மைகளை மெய்ப்பிக்கும் ஆய்வு அறிக்கையைப் பெற்றுள்ளான். மனோதத்துவ நிபுணரும் அவருடைய தரிசனத்தைக் கொண் டுள்ளார். அவர் தன்னுடைய நுண் அறிவுத் திறத்தினால் எண்ணங்களின் விதிமுறைகளைக் கண்டுபிடிக்கிறார். ஆன்மீகத்தை நாடுபவன் கடவுளின் அல்லது மூலாதாரமான உண்மையுடன் நேரடியான அனுபவத்தைப் பெறவிழை கிறான். இதுதான் அபரோக்ஷ அனுபூதி—நேரடியான அனுபவம் என்று கூறப்படுகிறது.

நாம் நம்முடைய புலனுணர்வுக் காட்சிகளைக் குறித்து அளவுக்கு அதிகமாக நினைக்கிறோம். நாம் வெளியிலுள்ள

பொருட்களை நேரடியாக உணர்கிறோம் என நினைக்கின்றோம். ஒருபொழுதும் இல்லை. இந்தப் புறத்தூண்டுதல் வெளியுலகப் பொருள்களிலிருந்து கண்களுக்கு வருகின்றன. அங்கிருந்து அந்தச் செய்தி மனத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு, பிறகு அறியும் ஆன்மாவிற்கு எடுத்துச் செல்லப்படு கிறது. எத்தகைய சுற்று வழியான வழிமுறை! நாம் அதை நேரான வழிமுறை என்று அழைப்பதற்குப் பழக்கப்பட் டுள்ளோம். உண்மையான நேரான அபரோக்ஷ அனுபூதி நேரடியான அனுபவம் என்று கூறப்படுவதில் உண்மை யானது நேராக ஆன்ம ஒளியால் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த உள்ளொளியானது மனம் மற்றும் புலன்களின் இடை வழியாக ஒளிர்கிறது. அது தானாகவும் ஒளிர்கிறது. இதுதான் உயர்ந்த விழிப்பு உணர்வு நிலையாகும். (அது தன்னிலை யிலேயே ஒளிரக் கூடியதாகவும் உள்ளது) அது சில சமயங் களில் துரீயம் என்றும் அழைக்கப்படுகிறது. நம்முடைய அனுபவமானது பொதுவாக விழிப்பு உணர்வின் மூன்று நிலைகளை உள்ளடக்கி உள்ளது. ஜாக்ரத நிலை அல்லது விழிப்பு நிலை, ஸ்வப்பனநிலை அல்லது கனவு நிலை மற்றும் ஸுஷுப்தி நிலை அல்லது ஆழ்ந்த உறக்க நிலையாகும். இம்மூன்று நிலைகளிலிருந்தும் மாறுபட்ட துரீயம் என்றும் நான்காவது நிலை உள்ளது. மற்ற மூன்று நிலைகளைப் போல் இது துல்லியமாக ஒரு 'நிலை' அல்ல. இது அறிவு எல்லை யைக் கடந்த உணர்வுநிலையை உடைய ஒரு மூலப்பொருள் ஆகும். அதன் காரணமாக மற்ற மூன்று நிலைகளும் பகுதி அளவான வெளிப்பாடுகளாக உள்ளன. இந்த நிலையில் ஆன்மா பரம்பொருளின் ஒரு பகுதி என்று உணர்கிறது.

புத்தக அறிவின் குறைபாடு

எந்த ஒரு ஆன்மீகப் பயிற்சியும் அதைக் குறித்து அறிந்து கொள்வதற்குப் புத்தகங்களைப் படித்து அறிந்து கொள்ளும் முயற்சியைச் செய்யக் கூடாது. நாம் தகவல்களை அறிந்து கொள்ளும் தனித்ததொரு வழியாக புத்தகங்களைப் படிக்க லாம். ஆனால் எந்தக் கருத்துக்களை எடுத்துக்கொள்ள

வேண்டும் எந்தக் கருத்துக்களை அவைகளுக்கே விட்டுவிட வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நாம் பல வகையான ஆன்மீக அனுபவங்களைப் பற்றிப் படிக்கக்கூடும் நமக்கு எந்தப் பயிற்சிகள் நன்மையை அளிக்கும் என்பதை முதலில் அறிந்துகொள்ளாமல் நாம் அவற்றைப் பின்பற்ற முயற்சி செய்யக் கூடாது. நமக்குப் பல வகையான அணுகு முறைகள் தெரிந்திருக்கலாம். மற்றும் இது நம் மனநிலையை விரிவு படுத்தக் கூடும். ஆனால் நமக்கு எது சரியான அணுகுமுறை என்பதை நாம் அறிய வேண்டும். நம் ஆன்மீக வாழ்வின் தொடக்க நிலைகளில், அது பொதுவாகப் பரிசோதனைகள் செய்யும் காலமாக இருப்பதால், நாம் மெது வாகச் செயல்பட வேண்டும். நம் உடல் மற்றும் மனங்களில் ஏற்படும் மாறுபாடுகளைக் கண்டு கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் நம்மைச் சரிசெய்து கொள்ள வேண்டும்.

ஒரு தவறான மனிதனால் பின்பற்றப்படும் சரியான முறையானது கெட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது. எனவே ஆன்மீகத்தை நாடுபவர் முழுமையான தகுதியை உடையவராக இருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் இந்த நவீன காலத்தில், யாராவது ஒருவர் எந்த புத்தகத்தையாவது வாங்கி, ஏதாவது ஒரு பயிற்சியைப் பற்றிப் படித்துவிட்டு, அதைப் பின்பற்றி, துயரத்தையும் அடையலாம். ஒவ்வொருவருக்கும் போதனையானது எப் பொழுதும் மாறுபடுகிறது. ஒரு மனிதனின் உணவு மற்றொரு மனிதனுக்கு விஷமாக இருக்கலாம். ஒவ்வொருவரும் தன் இயல்பிற்கு ஏற்ற விதிமுறைகளைப் பின்பற்றிப் பாதுகாப் புடன் உடல் தொடர்பான மனத் தொடர்பான சூழ்நிலைக்கு ஏற்றாற்போல தன்னைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். சரியான அடித்தளத்தின்மீது மேல்கட்டுமானம் கட்டப்பட் டால் அது சரியாக நிற்கும். இல்லையெனில் அது நிலை குலைந்து விழுந்துவிடும்.

பொதுவாக நாம் உண்மையை விரும்புவதில்லை. ஆனால் வேறு ஏதோ ஒன்றிற்காக நாம் நம்மை விரும்பு கிறோம். ஒரு கருத்து உண்மையைக் குறிக்கிறது என்பதற்காக

அதை விரும்பாமல், அது நம்முடைய கருத்தாக இருப்பதால் அதை நாம் விரும்புகிறோம். அரைகுறை அறிவு எப்பொழுதுமே மிகவும் ஆபத்தானது ஆகும்.

'யாருக்குத் தெரியாதோ, அவனுக்குத் தெரியும், யாருக்குத் தெரியுமோ அவனுக்குத் தெரியாது. நன்றாக அறிந்தவர்கள் அறியவில்லை. நன்றாக அறியாதவர்கள் அறிகிறார்கள்.'[1]

ஒரு உண்மையான உறுதியுடைய பக்தனுக்குக் கடவுள் அவருடைய பெருஞ்சிறப்பை வெளிப்படுத்துகிறார். மற்றும் பக்தனின் கடமையானது கடவுளின் பாங்குடன், எல்லை யற்ற பரம்பொருளின் பாங்குடன் ஒத்து இருக்க வேண்டும். அதன்பிறகு கடவுள் அவருடைய பெருஞ்சிறப்பைத் தெளிவாக அவனுக்குக் காட்டுகிறார். மனிதன் கடவுளை அணுகுவதற்கு முயற்சிக்கும் பொழுது கடவுள் மனிதனை அணுக எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார்.

விஞ்ஞானிகளாலும், தத்துவஞானிகளாலும் இயற்கையின் புதிர்களைக் குறித்த அறிவு பூர்வமான ஆராய்ச்சியால் உண்மையை வெளிப்படுத்த இயலாது. உன்னுடைய அறிவாற்றலால் செயல்களின் மூலக்காரணத்தைக் கண்டுகொள்ள நீ முயற்சி செய்து கொண்டிருந்தால், அது செய்யவியலாத காரியம் என்பதை நீ உணர்வாய். ஒரு குறிப்பிடத்தக்க இயற்கை நிகழ்ச்சியை முழுவதுமாகப் பகுத்து உண்மையை அறிவதற்குக் கூர்மையான மற்றும் நுண்மையான கருவி தேவைப்படுகிறது. நம் உடல் எண்ணங்கள், மற்றவையெல்லாம் உள்ளடங்கிய இந்த இயலுலகம் உண்மையிலேயே மிக வேடிக்கையாக உள்ளது. நமக்குப் பொருளற்றது என்று தோன்றுகிறது. உருவமற்றது. உருவத்தை மேற்கொள்வதன் காரணம் என்ன? இவ்வகைத்தும் நயமோ காரணமோ இல்லாமல் இருக்கின்றன என்று தோன்றுகிறது. ஏனெனில் அது அறிவின் பிடிக்கு அப்பாற்பட்டது ஆகும். இவ்விதம்

---

1. யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ: ।
அவிஜ்ஞாதம் விஜானதாம் விஜ்ஞாதம் அவிஜானதாம் ॥
—கேன உபநிஷதம், 2-3.

பலவகைப்படுத்திய மற்றும் பல உருவங்களை உடைய மாயையின் விளையாட்டிற்கு விளக்கம் எதுவும் இல்லை. மற்றும் ஒருவராலும் ஒருபொழுதும் இதற்குச் சார்பியலை ஒட்டித் தகுந்த விளக்கம் அளிக்க இயலவில்லை. கிறிஸ்த வர்கள் கூறுவதுபோல அது கடவுளின் விருப்பம் என்றோ அல்லது ஹிந்துக்கள் கூறுவதுபோல கடவுளின் லீலை அல்லது விளையாட்டு என்றோ அல்லது நாடகம் என்றோ நீ கூறினாலும் சார்பியல் மட்டத்தில் எந்த விதமான விளக்கமும் இல்லை. இதற்கு ஒருபொழுதும் விளக்கம் அளிக்க இயலாது. ஆனால் அறிவின் எல்லைக்கு அப்பால் செல்ல இயலும்.

எல்லாவற்றிற்கும் உள்ள ஒரே இறுதியான விளக்கச் சான்று, நேராகக் கண்டு உணர்வதுதான் ஆகும். கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் காணப்பட வேண்டும்; உணரப்பட வேண்டும். வெறும் கோட்பாட்டால் எந்த விதப் பயனும் இல்லை. கடவுளை யார் கண்டு கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடைய சொற்களில் நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அவர்களுடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றி அதன்பிறகு அவர்களுடைய அனுபவங்களை நம்முடைய சொந்த வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். முதன்முதலில் நம்பிக்கையானது கட்டாயமாகத் தேவையான தாக இருப்பினும் வெறும் நம்பிக்கை மட்டும் போதாது. மற்றும் சுவாமி விவேகானந்தர் அவருடைய ராஜயோகத்தின் முன்னுரையில் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'குறிப்பிட்ட ஏதாவது ஒரு அறிவுத்துறையில் ஓர் அனு பவம் ஒரு தடவை ஏற்பட்டிருக்குமெனின், முன்பு இலட்சக் கணக்கான முறை அது ஏற்பட்டிருக்கும். வருங்காலத்தில் எத்தனையோ முறை ஏற்படவும் செய்யும். மதம் என்பது பண்டைய நாட்களின் அனுபவத்தை ஆதாரமாகக் கொண் டிருக்கிறது என்பது மட்டுமல்ல. அந்த அனுபவத்தை அடையும்வரை ஒருவன் மதவாதி ஆக முடியாது என்று யோக விஞ்ஞான ஆச்சாரியர்கள் கூறுகின்றனர்.[1]'

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* பகுதி 2 (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 2-வது பதிப்பு, 2006) பக்கம் 6-7.

உயர்ந்த உணர்வை உணரும் நிலைகள்

புலன் இன்பங்களின் மூலம் நமக்கு வரும் மகிழ்ச்சி யானது, அதன் தொடர்வரிசையில் முடிவற்ற துயரத்தையும் கொண்டு வருகிறது. முதலில் அது இனிமையாக இருந் தாலும், சிலகாலத்திற்குப் பிறகு செயல்குலைவிற்கும், ஏமாற்றத்திற்கும் வழிகாட்டுவதாக உள்ளது.[1] அறிவுபூர்வ மான இன்பங்கள் சந்தேகமின்றி இதைவிட மேம்பட்டதாக இருப்பினும் அவை நமக்கு இறுதியான நிறைவையோ அல்லது செயல்முடிவையோ அளிப்பதில்லை. நாம் தியானம் செய்யும் பொழுதோ அல்லது கடவுளின் சிறப்பைப் பாடும் பொழுதோ நாம் ஒரு அகமகிழ்வை உணர்கிறோம்.

இந்த மகிழ்ச்சியானது பயனுடையதாக இருப்பினும், அது நீடித்து இருக்காது. ஆனால் உண்மையை நாடுபவனுக்கு அறிவு எல்லையைக் கடந்த விழிப்பு நிலையில் ஏற்படும் இன்பமானது எப்பொழுதும் அவனிடம் நீடித்து நிற்கும், இதுதான் உண்மையான இன்பமாகும். மற்ற இன்பங்கள் எல்லாம் நிழல்கள் மட்டுமே ஆகும். அந்த உயர்ந்த ஆன்மீக அனுபவம் முழுமையாக இல்லாமல் இருப்பினும், உயர்ந்த விழிப்பு நிலையின் நுழைவாயிலை மட்டுமே ஒருவர் அடைந்திருப்பினும், ஒருமுறை உணர்ந்த அந்த இன்பத்தின் நினைவு நீடித்து நின்று உண்மையை நாடுபவனை, மிக உயர்ந்த நிலையை அடைந்து எப்பொழுதும் பேரின்பத்தைத் துய்ப்பதற்கு ஊக்கமளிக்கிறது.

இந்த உயர்ந்த விழிப்பு நிலையை உணர்ந்ததால்தான் எல்லாச் சமயங்களும் தோன்றியுள்ளன. உயர்ந்த விழிப்பு நிலையின் அனுபவமானது, மரவேலை செய்தவரின் மகனான ஏசுநாதரை, ஏசு கிறிஸ்துவாக லட்சக்கணக்கான மக்களால் போற்றி வழிபடச் செய்தது. ஒட்டகத்தை ஓட்டிய ஏழையான முகம்மதுவை இஸ்லாமிய சமயத்தின் நபிகளாகச் செய்தது. நிமாய் பண்டிதர் என்னும் மிகச் சிறந்த அறிஞரை, அறிவுபூர்வமான பயிற்சி முறைகளை மிகவும் விரும்பிய

1. பகவத் கீதை, 18.8.

வரைக் கிருஷ்ண சைதன்யராக தெய்வீக அன்பின் தூதராகச் செய்தது. சமீப காலத்தில் கல்கத்தாவிலிருந்து கதாதர் சட்டோ பாத்தியாயா என்னும் ஒரு ஏழை கோயில் பூஜாரி, உயர்ந்த விழிப்பு உணர்வு நிலையை உணர்ந்ததால் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் எல்லாச் சமயங்களையும் இணைக்கவல்ல தீர்க்க தரிசியாக மாறியதை நாம் காண்கிறோம். ஆனால் ஒன்று இவர்கள் எல்லாம் சாதாரணமான மனிதர்கள் அல்லர்.

நம்மில் பலரும் கடவுளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக் கிறோம். ஆனால் உண்மையாக, அந்தச் சொல் எந்தப் பொருளைக் குறிக்கிறது என்பதை அறியாமல் உள்ளோம். ஆன்மீகப் பயிற்சியின் பொழுது ஒரு சிலருக்குக் கடவுள் கணநேரம் தோற்றமளிக்கலாம். இத்தகைய கணநேரம் தோன்றி மறையும் தோற்றங்களால் நிறைவடையாத வேறு சிலரும் உள்ளனர். அவர்கள் அவர்களுக்குள்ளேயே ஆழமாக மூழ்கி, எல்லா உயிரினங்களின் உயிராகக் கடவுளைக் கண்டு கொள்கிறார்கள். உடலில் உயிர் இருப்பதைப் போல, கடவுள் எல்லா உயிரினங்களிலும், பற்று இல்லாமல் ஆனால் எல்லா வற்றையும் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிறார். கடவுள், நிலைபெற்ற தன்மையில் படைப்பு முழுவதிலும் பரவியும் உள்ளார். அறிவு எல்லையைக் கடந்த நிலையிலும் உள்ளார். பக்தனானவன் கடவுளுடன் பல்வேறு வகையான தொடர்பு களை ஏற்படுத்திக் கொள்கிறான். கடவுளுடன் இணைந்து மிக உயர்ந்த பேரின்பத்தை அனுபவிக்கிறான். பக்தன், கடவுளைத் தன்னுடைய குருவாக நண்பனாக தாயாக அல்லது நாயகியாகக் காண்கிறான் என்று நாம் கூறும் பொழுது அது பருப்பொருள் இயல்புடையது என்று புரிந்துகொள்ளக் கூடாது. சமயம் என்பது, சுவாமி விவேகானந்தர் கூறியுள்ள தைப்போல், 'அது அழியாத ஆன்மாவிற்கும், அழியாத கடவு ளுக்கும் உள்ள நிரந்தரத் தொடர்பு ஆகும்'[1] இந்தக் கருத்து மனித உறவுமுறைகளின் அடிப்படையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.316.

ஆனால், இந்த நிலையையும் கடந்து சென்ற வேறு சிலரும் உள்ளனர். அவர்கள் பிரம்மனில் வாழ்வின் எல்லா ஒருங்கிணைப்பையும் கண்டு கொள்கின்றனர். ஆன்மா வானது, கடவுளில் மறைந்துவிடுகிறது. மற்றொன்று இல்லாத ஒன்றே அங்கு இருப்பது ஆகும். மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் இதை ஒரு அழகான நீதிக்கதையின் மூலம் விளக்குகிறார். ஒருமுறை உப்பினால் செய்யப்பட்ட ஒரு பொம்மை, கடலின் ஆழத்தை அளக்கச் சென்றது. அளக்கும் வழிவகையில், அது அதுவாகவே கரைந்து தன்னுடைய மூலப்படிமத்தில் கடலிலே கலந்தது.[1]

உயர்ந்த விழிப்புணர்வு அனுபவத்தை நேரடி யாகப் பெற்றவர் ரிஷி அல்லது மெய்யுணர்வாளர் என்று அழைக்கப்படுகிறார். ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகை யில் மெய்யுணர்வாளராக உள்ளனர். தூரத்திலுள்ள நட்சத் திரங்களையும், கோள்களையும் காண்பவர் ஒரு மெய் யுணர்வாளர். மற்றவர்களின் எண்ணங்களை அறிய வல்லவர் ஒரு மெய்யுணர்வாளர். எண்ணங்களின் விதிமுறைகளை யும் மனித மனத்தின் செயல்பாடுகளையும் கண்டுபிடிப்ப வரும் ஒரு மெய்யுணர்வாளர். ஆனால் இவற்றினின்று வேறுபட்டு, 'ரிஷி' என்னும் சொல்லானது, உள்ளுணர்வால், அறிவு எல்லையைக் கடந்துள்ள உண்மையை உணர்ந்த நிலையை உடையவருக்குப் பயன்படுத்தப்படுகிறது. பகவத் கீதையில், இந்த உள்ளுணர்வின் ஆற்றலானது 'திவ்ய சக்ஷு' அல்லது 'தெய்வீகக் கண்' என்று அழைக்கப் படுகிறது.[2]

அறியாமை மற்றும் அதை வெற்றிகொள்வது

இந்த 'தெய்வீகக் கண்' வளர்ச்சி அடைவதிலிருந்து நம்மை உடனடியாகத் தடுப்பது எது? அறியாமை என்று வேதாந்த தத்துவ ஆசிரியர்கள் கூறுகின்றனர். பதஞ்சலியும்

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.59.
2. பகவத் கீதை, 11.8

புருஷனின், கடவுளின், தெய்வீகக் காட்சியை மறைப்பது எதுவோ அது அறியாமை என்று அறியாமையைப் பற்றிப் பேசுகிறார். யோக சூத்திரத்தில், 'நிலையற்றதை நிலையானதாகவும், தூய்மையற்றதைத் தூய்மையானதாகவும், துன்பத்தை இன்பமாகவும் ஆன்மா அல்லாததை ஆன்மாவாகவும் கொள்வதே அறியாமை'[1] என்று நாம் படிக்கிறோம். அறியாமையின் மயக்கத்தில் உண்மையானது, புனைவை விட மோசமானதாகி விடுகிறது.

எப்பொழுதும் கத்திக்கொண்டு, வெறியுடன் ஒரு விளக்குக் கம்பத்தின் மீது ஏறிக் கொண்டிருக்கும் ஒரு குடிகாரனைப் பற்றிய ஒரு கதை உள்ளது. காவல் துறையினர் இயல்பாக அவனைப் பிடித்து, குற்றவியல் நடுவரிடம் (Magistrate) இழுத்துக்கொண்டு சென்றனர். அவர் குடிகாரனை, 'உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?' என்று கேட்டார். அதற்கு அவன், 'ஐயா, நான் என்ன செய்வேன்? மூன்று முதலைகள் என்னைப் பின் தொடர்ந்து வந்தன. விளக்குக் கம்பத்தில் ஏறுவதின்மூலம் என்னை நான் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது' என்று கூறினான். நகரத்தில் உள்ள தெருவில் முதலை! குடித்ததின் பலனாக அவன் அதைத்தான் பார்த்தான். அறியாமையின் பலனாக நாமும் கடைமுடிவற்ற பலவற்றைப் பார்க்கிறோம்.

எப்படி அறியாமையை வென்று உயர்ந்த விழிப்பு உணர்வு நிலையை அடைவது என்பதுதான் அடுத்த கேள்வியாகும். அறியாமை என்ன என்பதை அப்படியே அறிந்து கொள்ள இயலாது. பலவகையான வழிகளில் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. எல்லாவற்றிற்கும் முதலில் 'தான்' என்னும் எண்ணம் வருகிறது. இது உண்மையான ஆன்மாவை மறைத்து விடுகிறது. அதன் பிறகு ஆசை அல்லது பிணைப்பு வருகிறது. இவை தடுக்கப்படாவிட்டால் அல்லது குலைக்கப்படாவிட்டால், அவை சினத்தையும், பயத்தையும்

1. பதஞ்சலி யோக சூத்திரங்கள் 2.5 (சுவாமி விவேகானந்தரின் ராஜயோகம், சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 14-வது பதிப்பு, 2007) பக்கம் 173.

தோற்றுவிக்கின்றன. மனிதன் அறியாமை, 'தான்' என்னும் எண்ணம் மற்றும் இயல்புணர்ச்சிகளால் இவ்வுலகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளான். நவீன மனோதத்துவ நிபுணர்கள் உள்உணர்ச்சி மனப்பான்மையைப் பற்றிக் கூறுகிறார்கள். ஒருவகைமுறைக்கு ஏற்ப, மூன்று வகையான மனப் பான்மைகள் உள்ளன. பால்வேறுபாட்டு உணர்வுச் சிக்கல், அகங்கார மனப்பான்மை மற்றும் மந்தை மனப்பான்மை என்பனவாகும். இந்த மூன்று உள் உணர்ச்சிச் சிக்கல்களின் பிடியிலிருந்து விடுபட்டுச் செல்வதற்கு ஒரு மனிதன் கற்றுக் கொள்ளாதவரை, ஆன்மீக வாழ்வு என்பது தொடங்காது. இதுதான் ஆன்மீகப் போராட்டம் என்பதின் பொருளாகும். ஒரே நாளில் இயல்பு உணர்ச்சிகளின் பிடியை வெற்றி கொள்வது இயலாததாகும். நாம்தான் நமக்குத் தடையாக இருக்கிறோம். நாம் நமக்குள்ளேயே ஏற்படுத்திக் கொள்ளும் தடைகளுடன் ஒப்பிட்டால் வெளியிலுள்ள தடைகள் ஒன்று மில்லை. நம்முடைய முழுமையான தனிமனித இயல்பு களும் பகுதி பகுதியாகப் பிரித்து ஆராயப்பட வேண்டும். இதை எப்படிச் செய்வது? உலகத்திலுள்ள பலசமயங் களின் உண்மையை உணர்ந்த ஞானிகள், நமக்காக பல வழிகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

உண்மையை உணர்ந்த மெய்ஞானிகளின் வழி

அது கடவுள் என்று அழைக்கப்பட்டாலும் அல்லது ஆன்மா என்று அழைக்கப்பட்டாலும் முடிந்த முடிவான உண்மையுடன் உள்ளுணர்வினால் நேரடியான அனுபவத் தைப் பெற்ற ஒருவர் ஞானியாவார். வடமொழியில் நாம் அவரை ரிஷி என்று அழைக்கிறோம். உலகத்திலுள்ள ஒவ் வொரு மேன்மையான சமயமும் கணக்கற்ற ஞானிகளைத் தோற்றுவித்துள்ளன. ஆனால் எல்லாச் சமயங்களும் அவர் களுடைய மேன்மையை அறிந்து கொள்ளவில்லை. ஏனென் றால் கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், யூதமதம் போன்ற சில சமயங்களில், ஒழுக்கமும், திடமான நம்பிக்கை யும் முக்தியை அடைவதற்கான வழிமுறைகள் என்று

வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்த சமயங்களைப் பின்பற்று பவர்கள் அவர்களுடைய சமயங்களைத் தோற்றுவித்த தீர்க்க தரிசிகளிடம் முழுமையான நம்பிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஒவ் வொரு சமயமும் அதைத் தோற்றுவித்தவரின் உயர்வை, உரிமை கொண்டாடுகிறார்கள். இதை ஏற்றுக் கொள்ளாத வர்களுக்கு முக்தி மறுக்கப்படும். அதாவது அவர்கள் நரகத் திற்குச் செல்வார்கள் என்று பொருள்படுகிறது. அத்தகைய கருத்துக்கள் இருந்தும், இந்த சமயங்கள் கடவுளுடன் நேரடியான அனுபவத்தைப் பெற்ற முதன்மையான அரு ளாளர்களைத் தோற்றுவித்துள்ளன. இறைநிலை இணைவுப் பான்மை (Mysticism) கிறிஸ்தவ, மற்றும் இஸ்லாமிய சமங்களில் ஏற்கத்தக்க, இன்றியமையாத பகுதியாக அங்கீ கரிக்கப்படவில்லை. கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த பல மெய்ஞ்ஞானிகளுக்கு, கிறிஸ்தவ திருச்சபையின் அடக்கு முறையைச் சந்திக்க நேர்ந்தது. பதினேழாம் நூற்றாண்டில் 'Quietism' என்று அழைக்கப்பட்ட சாத்வீக இயக்கமானது வலுவான இரும்புக்கரத்தால் அடக்கப்பட்டது. பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில், திருச்சபைக் குள்ளும், திருச்சபைக்கு வெளியிலும் அறிவுகடந்த மெய் யுணர்வினை எய்தினவர்களுக்கு எதிரான இயக்கங்கள் மிக வும் வலிமை உடையவனாக விளங்கின. இருபதாம் நூற் றாண்டின் தொடக்கத்தில் அதனுடைய சிறந்த அறிவு கடந்த மெய்யுணர்வினை எய்தும் மரபுகள் அனைத்தையும் மறக்க வேண்டி வந்தது. இஸ்லாமிய சமயத்தில் மெய்யுணர்வாளர் களின் இயக்கமானது Sufism என்று அழைக்கப்படுகிறது. மரபுவழுவாத, கொள்கைப்பிடிப்பு உடையவர்களின் வன்முறை மற்றும் எதிர்ப்பு போன்றவற்றைப் பொருட் படுத்தாமல், அத்தகைய மனப்பான்மை கடவுளை உண்மை யான ஆர்வத்துடன் நாடிய பலருக்கு மரணத்தை ஏற்படுத்தி னாலும் இஸ்லாமிய சமயமும் வியக்கத்தக்க வகையில் அதிகமான எண்ணிக்கையில் மெய்யுணர்வாளர்களைத் தோற்றுவித்துள்ளது. அவர்களில் சிலர் ஆன்மீக அனுபவத் தின் உச்ச நிலையை அடைந்தவர்களாக உள்ளனர்.

நாம் இந்தியாவை அணுகும் பொழுது மட்டுமே அதி லும் முக்கியமாக ஹிந்துதர்மத்தில் நாம் சமய சுதந்திரத்தை யும், அறிவு கடந்த மெய்யுணர்வு நிலையின் செழிப்பையும் காண்கிறோம். ஹிந்துதர்மத்திற்கு ஏற்ப, ஒருவருடைய முக்திக்கு பரம் பொருளுடன் உள்ளுணர்வால் அறியப்பட்ட அனுபவமானது மிகவும் அவசியமானதாகும். ஹிந்து தர்மத் தில் 'முக்தி' என்றால் துன்பத்திலிருந்தும், அறியாமை யிலிருந்தும் முற்றிலும் விடுபட்டநிலை என்பது பொரு ளாகும். முக்தி என்று அழைக்கப்படும் இந்த மிக உயர்ந்த விடுதலையை ஒரு மனிதன் அடையும் வரைக்கும், அவன் மீண்டும் மீண்டும் பிறந்து வாழ்க்கையின் இன்ப-துன்பங் களை அனுபவிக்க வேண்டும். ஹிந்து தர்மத்தில், ஆன்மீகத் தில் முழுமையை அடைவதற்கான வழிகள் மிக ஆழமாக ஆராயப்பட்டு, அதை ஒரு விஞ்ஞானமாக ஆக்கியுள்ளது. ஹிந்து தர்மம் உயர்ந்த நேரடியான உள்ளுணர்வால் அறியப் படும் அனுபவத்தை அடைய நான்கு முக்கியமான வழிகளை ஏற்படுத்தி உள்ளது. இவை யோகங்கள் என்று அழைக்கப் படுகின்றன. நாம் இவற்றைச் சுருக்கமாக, ஒவ்வொன்றாக வாதிட்டு ஆராயலாம்.

கர்மயோகம்

முதன்முதலில் கர்மயோகம் வருகிறது. செய்த செயலின் பயனின் மீது உள்ள விருப்பத்திலிருந்து விடுவித்துக் கொள் வது இங்கு முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. எத்தகைய செயல் நோக்கமும் இன்றிச் செயல்படுதல் என்று இது அழைக்கப்படுகிறது. பல மனிதர்கள் கற்பனை செய்துகொண் டிருப்பதைப்போல இது அவ்வளவு எளிமையானது அல்ல. இதற்கு மிகப்பெரிய துணிவாற்றல் வேண்டும். ஆனால் ஒருவர் செய்த செயல்களின் பயன்களிலிருந்து ஒருவரை விடுவித்துக் கொள்வதற்கு ஒரு எளிமையான வழி உள்ளது. அது பயன்களைக் கடவுளின் திருவடிகளில் சமர்ப்பிப்பது ஆகும். ஈசாவாஸ்ய உபநிஷத்தின் தொடக்கத்திலுள்ள மிகச் சிறப்புவாய்ந்த வரி உங்களுக்குத் தெரியும். மாறுகின்ற

இயல்பை உடைய இவ்வுலகில் உள்ள அனைத்தும் இறைவனால் நிறைக்கப்பட வேண்டும்.[1] இந்த முழு உலகமும் கடவுளுக்கு உரியதாகும். இதை உணர்ந்து ஒருவர் ஆசையின் எல்லா வடிவங்களையும் துறக்க வேண்டும். கடவுள் கொடுத்தார். அதை அவர் திருப்பி எடுத்துக்கொண்டுவிட்டார். கடவுளின் நாமம் போற்றப்படட்டும். ஒரு யூத முனிவர் பல சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டபொழுது இவ்விதம் கூறினார்.[2] பற்றற்று இருப்பதாலும், முழுமையாகச் சரணடைவதாலும் மனம் தூய்மையடைகிறது. உள்ளே உள்ள ஆன்மா மெதுவாக சுடர்விடத் தொடங்குகிறது.[3]

ராஜயோகம்

அடுத்து வருவது ராஜயோகம் அல்லது தியான வழியாகும். இங்கு புலனுணர்வுப் பொருட்களைப் பற்றிய எண்ணங்கள் மனத்தில் எழாமல் தடுத்து நிறுத்துவதே முக்கியமான முயற்சியாகும். மற்றும் மனத்தை உயர்ந்த வழிகளில் பாய்ந்து செல்லச் செய்வதாகும். மிகப் பெரும்பாலான மனிதர்களுக்கு இது சொல்லப் போனால் செய்யவியலாத அருஞ்செயலாகும். முதலிலேயே செய்த முன்னேற்பாடுகள் இன்றி இதை முயற்சிப்பது மிகப்பெரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். எனவே இந்த வழியின் முதன்மையான முன்மாதிரியாக விளங்கும் பதஞ்ஜலி, இதை ஒரு வளர்ச்சிப்படி உள்ள வரிசையாகச் செய்துள்ளார். முதலில் நீதிநெறி முறைமை எனப்படும் யமம், மற்றும் நியமம் வருகிறது. அதாவது பொதுவான மற்றும் தனிமனிதன் தொடர்பான ஒழுக்கமுடைமை. ஒருவர் எல்லாக் காலங்களிலும் அஹிம்ஸை, சத்தியம், தற்கட்டுப்பாடு, பிறர் பொருளை விரும்பாத தன்மை, மற்றவர்களைச் சார்ந்து இருக்காத தன்மை போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

---

1. ஈசா வாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் ।
—ஈசாவாஸ்ய உபநிஷதம், 1.

2. பைபிள்—ஜாப் (Job) 1:21.

3. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 6.185.

உங்களுடைய சொந்தக் கால்களில் நிற்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மனநிறைவுடனிருப்பதையும் தூய்மையாக இருப்பதையும் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். படித்து ஆழமாகச் சிந்தித்து, கருத்துக்களை ஒருங்கிணைக்க வேண்டும். எல்லா குருமார்களின் குருவான கடவுளுக்கு அனைத்தையும் அர்ப்பிக்க வேண்டும். இவ்வனைத்திலும் வெற்றியை அடைந்தபிறகு, ஒரு குறிப்பிட்ட நிலையில் அமர்ந்து, ஒருவருடைய மூச்சைக் கட்டுப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது நம் உடலிலும், மனத்திலும் இயலுலக அண்டத்திற்கு உரிய சக்தியின் பாய்ச்சலைக் கட்டுப்படுத்துவது ஆகும். அதுதான் பிராணாயாமம் என்று அழைக்கப்படுகிறது. சில மனிதர்கள் இதற்கு அளவிற்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றனர். ஆனால் அவர்களுக்குள் நடைபெறும் வேகம் மிகுந்த ஓட்டத்தைக் கையாளவியலாமல் இருக்கிறார்கள். இதன் விளைவு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவும் கூட மூளையில் அமைதிகுலைவை ஏற்படுத்தலாம். பதஞ்ஜலி ஆன்மீக வாழ்வுத் திட்டத்தில், பிராணாயாமத்திற்கு, சிறிய பங்கையே கொடுத்துள்ளார். இராஜயோகத்தின் அடுத்த இரண்டு படிகள், வெளிப் பொருட்களிலிருந்து புலன்களைப் பின்னுக்கு இழுத்துக்கொள்ளுதல் மற்றும் ஏதாவது ஆன்மீகக் கருத்தின் மீது மனத்தை நிலை நிறுத்துவதும் ஆகும். இந்த உள்முக ஒருமுனைப்பாடு, மிகுதியான ஆழம் உடையதாக இருக்கு மாயின் ஒருவர் தன்னை புருஷன் அல்லது கடவுள் என்று உணர்வார்.

பக்தியோகம்

மூன்றாவது வழி பக்தியோகமாகும். இங்கும் ஒழுங்கு முறைக்கான அவசியம் உள்ளது. ஆனால் ஒருவருடைய தூண்டுதல்கள் அனைத்தும் கடவுளை நோக்கித் திருப்பப்பட வேண்டும் என்பது முக்கியமான வலியுறுத்தலாக உள்ளது. உலகத்தின் மீது உள்ள பற்றுதலானது கடவுளுக்கு உரித்தான அன்பாக மாற வேண்டும். வெறுப்பு அல்லது பகைமை

என்பது தன்னலமறுப்பால் நிரப்பப்பட வேண்டும். பய மானது பரம் பொருளிடம் சரணடைவதாக மாற வேண்டும். அத்துடன் ஒருவர் எப்பொழுதும் இடைவிடாமல் கடவுளை நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். இதற்குப் பக்தன் மந்திரங்கள் என்று அழைக்கப்படும் ஒலி அடையாளத்தின் (Sound Symbol) உதவியை எடுத்துக்கொள்கிறான். மந்திரங்கள் எனப்படுபவை, சுருக்கமான, ஆழ்ந்த உட்பொருளை உடைய ஆன்மீக சார்பான கட்டளைச் சொல் ஆகும். பிறகு இறை வனைப் புகழ்ந்து பாடும் பாடல்களும், பக்திப்பாடல்களும் உள்ளன. அவை அளவில் பெரியவையாகும். இவ்வனைத் தின் உதவியுடன் பக்தன் இடைவிடாமல் கடவுளை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். பிறகு கடவுளின் அரு ளால், ஆன்மீக வாழ்க்கையில் உள்ள தடைகள் அனைத் தையும் வென்று கடவுளின் தரிசனத்தைப் பெறுகிறான்.

ஞானயோகம்

நாம் ஞானயோகத்திற்கு வரும்பொழுது, ஆன்மஞானம் அடைதல் என்று அழைக்கப்படும் ஆன்மீக வீரச் செயல் என்னும் இடத்தை நோக்கிப் புறப்படுவதற்கு, அதை நாடு பவனுக்கு மேம்பட்ட படித்தரத்திலுள்ள நன்னடத்தையும் உயர்ந்த தகுதியும் வற்புறுத்தப்படுவதை நாம் காண்கிறோம். அவன் தன்னடக்கம் உள்ளவனாக, அளவற்ற பொறுமை யும், நம்பிக்கையும் உடையவனாக, ஒருமுகப்படுத்தும் பயிற்சியை மேற்கொள்பவனாக இருக்கவேண்டும். அவன் உண்மையானது–உண்மையற்றது என்னும் இவ்விரண்டை யும் வேறுபடுத்திக் காண்பவனாக இருக்க வேண்டும். இங்கும் வருங்கால உலகத்திலும் அனுபவிக்கத்தக்க எல்லா ஆசைகளையும் துறக்க வல்லவனாக இருக்க வேண்டும். இறுதியாக முமுக்ஷுத்வம்— உடையவனாக இருக்க வேண்டும். அதாவது எல்லா வகையான குறைபாடு களிலிருந்து விடுபடுவதற்கு பெரிய அளவான விருப்பம் இருக்க வேண்டும். இவ்வனைத்தும் இருப்பது அவ்வளவு எளிதானது அல்ல.

ஞானம் என்பது புத்தகத்திலிருந்து பெறப்படுவது இல்லை. உபநிஷதங்கள் இரண்டுவகையான ஞானம் குறித்துப் பேசுகின்றன. ஒன்று அபரா அல்லது கீழானது. மற்றது பரா அல்லது உயர்ந்தது ஆகும். ஒருவன் புலன் உணர்வுகளாலும், ஊக்கத்தாலும் பெறுவது அபராவித்யா வாகும். படிப்பது என்பது இதன் கீழ் வருகிறது. பராவித்யா என்பது முடிந்த முடிவான உண்மையுடன் நேரடியாக உள்ளுணர்வால் பெறும் அனுபவமாகும். ஞான யோகத்தின் முழுமையான நோக்கமானது இந்த உயர்ந்த விழிப்பு நிலை உணர்வைப் பெறுவதாகும். தத்துவஞானத்தைச் சேர்ந்த நுணுக்கங்களில், நுண்ணிய கூர்மையான வேறுபாடுகளில் விவாதம் புரிவதில் ஈடுபடுவதில் அல்ல அடுத்தடுத்து இப்படித்தான் நிகழ்கிறது.

ஒருவர் சிரவணத்தில் இருந்து தொடங்க வேண்டும். அதாவது ஆன்மீக உண்மைகளைப்பற்றி படிப்பது அல்லது குருவிடமிருந்து கேட்டது ஆகும். இந்த உண்மைகள் சிறிய விளக்கங்களின் வடிவில், உபநிஷதங்களின் நான்கு மஹா வாக்கியங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால் கேட்ப துடன் மட்டும் ஒருவர் நிறுத்தி விடக்கூடாது; உண்மையின் இயல்பைப் பற்றி ஆழமான நம்பிக்கையும் மற்றும் அதை அடைய முடியும் என்னும் நம்பிக்கை வரும்வரையிலும் ஒருவர் தான் கேட்டதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இது மனனம் என்று அழைக்கப்படுகிறது. உண்மையாகவே மனிதர்கள் சாதாரண பொருட்களைப்பற்றி அவர்கள் படிப்பதில் கூட இதை ஒருபொழுதும் செய்வ தில்லை. எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஒரு இளம்பெண் ஒரு விருந்திற்கு அழைக்கப்பட்டு இருந்தாள். மற்றும் ஒரு சிறந்த வானநூல் அறிஞர் அருகில் அமர்ந்திருந் தாள்; அவருடைய கவர்ச்சி நிறைந்த தோற்றம் அப் பெண்ணைச் சிறிது ஈர்த்தது. எனவே அவள் அவரை 'நீங்கள் என்ன தொழிலை மேற்கொண்டு உள்ளீர்கள்' என்று கேட்டாள். அவர் மிகவும் பணிவாக 'நான் வான்கோள்களின் ஆய்வில் ஈடுபட்டுள்ளேன்' என்று கூறினார். அந்தப் பெண்

ஏமாற்றமடைந்தாள். இந்த நாகரீகம் மிக்க மதிக்கத்தகுந்த ஆடவர் இன்னும் மேம்பட்ட விடையை அளிப்பார் என்று அவள் நினைத்தாள். 'என்ன, இந்த வயதில் நீங்கள் இன்ன மும் வான்கோளங்களைப் பற்றிப் படிக்கிறீர்களா?' நான் வான் கோளங்களைப் பற்றிய என் படிப்பைச் சென்ற ஆண்டே முடித்துவிட்டேன்' என்று அவள் கூறினாள். வான்கோளங்களைப் பற்றிய அவளுடைய அறிவானது, சில புத்தகங்களைப் படிப்பதுடனே முடிந்து விட்டது. மனனத் திற்குப் பிறகு நிதித்யாஸனா வருகிறது. இது ஆன்மாவின் இயல்பைக் குறித்து நேரடியாக ஆராயும் ஒரு உயர்ந்த தியான முறையைக் குறிக்கிறது. உண்மையாக இது 'இதுவன்று, இதுவன்று' என்னும் வழிமுறையால் உண்மைக்கான ஆழமான உள்முகத்தேடல் ஆகும்.

யோகத்தின் குறிக்கோள்

ஒவ்வொரு மனிதனின் உயிரும் பரம்பொருளின் சாசுவத மான ஒரு அம்சமாகும் என்று ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் கூறுகிறார்.

ஜீவலோகத்தில் அனாதியான என்னுடைய அம்சமே ஜீவனாகத் தோன்றி, அதனதன் இயல்பில் நிற்கும் மனத்துடன் கூடிய ஆறு புலன்களையும் இழுக்கிறது.

எப்பொழுது இந்த சரீரத்தை ஆளும் ஜீவன் சரீரத்தை அடைகிறானோ மேலும் எப்பொழுது சரீரத்தை விட்டுக் கிளம்புகிறானோ, அப்பொழுதும் கூட காற்றானது உறை விடத்திலிருந்து (மலரிடமிருந்து) மணத்தைக் கவர்ந்து செல்வதுபோல இவற்றைக் கவர்ந்துகொண்டு செல்கிறான்.[1]

அறியாமை இருக்கும் வரையிலும், ஆசை இருக்கும் வரையிலும், ஒரு மனிதன் பிறப்புக்கள், மற்றும் இறப்புக் களை மீண்டும் மீண்டும் கடக்க வேண்டிவரும். இந்த சுழற்சி யானது தனிமனித உயிர், வான்பேர் உயிருடன் இணையும்

---

1. பகவத் கீதை, 15.7,8.

பொழுது ஜீவாத்மன் பரமாத்மனுடன் இணையும் பொழுது ஒரு முடிவிற்கு வருகிறது.

இந்த விழிப்பு உணர்வு நிலையின் முழுமையை, அறிவுபூர்வமாக அல்லாமல், மெய்யாக உணர்வதின்மூலம் ஒன்றுபட்ட நிலையை அடைவதுதான் எல்லா யோகங்களின் குறிக்கோள் ஆகும். அப்பொழுதுதான் பரம்பொருளின் மிக உயர்ந்த ஆன்மீக அனுபவமானது உண்மையாகும். எல்லா மனிதர்களின் வாழ்விலும் இயல்பாக உள்ள அறியாமை யானது ஆன்மாவைத் 'தான்' என்னும் தன்மையுடனும் மனத் துடனும், புலன்களுடன் அடையாளம் கண்டு கொள்கிறது. ஒரு தனி மனிதன், தன் உண்மையான இயல்பானது உட லிலிருந்து மனத்திலிருந்து வேறுபட்டது என்று உணர்ந் தாலும், தன் அகங்காரத்திலிருந்து வெளிவருவது அவனுக்குக் கஷ்டமாக உள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணர் இதை ஒரு அரசமரத் திற்கு ஒப்பிடுவார். அந்த மரமானது வெட்டப்பட்டாலும் அது மீண்டும் துளிர்க்கும்.[1]

தவறான அகங்காரமானது தூய்மைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் ஆன்மீகமயமாக்கப்பட வேண்டும். எல்லா யோக வழிகளிலும், இதுதான் தகைமைசான்ற குறிக்கோளாக உள்ளது. கர்மயோகம், செயலின் பயன்களைப் பரம்பொருளுக்கு அர்ப்பித்து, தொண்டின்மூலம் முயற்சித்து, தனிமனித விருப்பத்தை இயலுலக அண்டத்திற்குரிய விருப்பத்தின் சுருதியுடன் தொடர்புபடுத்த வேண்டும் என்று நமக்கு போதிக்கிறது. அதே கருத்தில் ராஜயோகமானது தன்னுடைய எல்லா விதிமுறைகளையும் அர்ப்பிக்கும் மற்றும் அறிவு நிலையைக் கடந்த உணர்வுடன், தியானத்தின் மூலமும், ஜபத்தின் மூலமும் விழுமிய அகவிழிப்புணர்வை வலிவுபடுத்த வற்புறுத்தி முதலீடு செய்துள்ளது. பக்தியோக மானது அன்புடன் கூடிய பக்தியையும், தொண்டு செய்யும் மனப்பான்மையையும் கடவுளை அடையும் சாதனமாக மனத்தில் ஆழமாகப் பதிய வைக்கிறது. இம்முறையில் 'நான்'

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.195.*

என்பது ஏதாவது ஒரு வகையில் ஆன்மீக மயமாக்கப்படு கிறது. முதலில் கடவுளைத் தந்தை என்றோ, நண்பன் என்றோ நினைப்பதில் எத்தகைய தீங்கும் இல்லை. தனித்த மனித இயல்பு என்னும் உணர்வு, பரம்பொருளை உணரும் பொழுது, அதில் மறையும் பொழுதுதான் நாம் முழுமையான மாறாத அடிப்படைத் தன்மையின் பேரின்பத்தை அறியத் தொடங்குகிறோம். ஞானயோகம், ஆன்மா மற்றும் பரம் பொருளின் வேறுபாடு அற்ற தன்மையை தன்னைப் பகுத்து ஆராய்வதன்மூலமும், உபநிஷத வாக்கியமான 'தத் த்வம் அஸி' போன்றவற்றின் பொருளின்மீது தியானம் செய் வதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இந்த எல்லா யோகங்களின் அடிப்படை என்ன என்றால் அது தவமாகும் (கடுமையான கட்டுப்பாட்டு முயற்சி). பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணர், மூன்று அடுக்கான தவங் களைக் குறித்துப் பேசுகிறார். உடல் தவம், மனத் தவம் மற்றும் வாக்குத் தவம் ஆகும்.[1] உடல் தவம் என்பது உடல் தூய்மை. செயல் தூய்மை, தூய்மையான பழக்க வழக்கங் களையும், நேர்மையையும், தற்கட்டுப்பாட்டையும் குறிக் கிறது. பயன்தரத்தக்க, உண்மையான, புண்படுத்தாத சொற் களைக் கூறுதல், மற்றும் திருமறை நூல்களை ஓதுதல் போன்றவை வாக்குத் தவத்தின் வகைவடிவமாகும். நாம் இந்த விதிமுறையைப் பின்பற்றினால், நாம் நம்முடைய பேச்சுப் பழக்க வழக்கங்களைக் கூர்ந்து ஆராய வேண்டும். மற்றும் பயனற்ற, தீங்கு விளைவிக்கும் சொற்களைக் கைவிட வேண்டும். சாந்தம், இரக்கம் (கருணை), மௌனம், புல னடக்கம், மற்றும் மனத்தூய்மை, மனத்தவத்தைக் குறிக் கின்றன. இந்த எல்லாக் கட்டுப்பாட்டு முயற்சிகளும் தீவிர மாகவும், உறுதியான நம்பிக்கையுடனும் பழக்கப்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். அதுமட்டுமின்றி தொலைநோக்குப் பரந்த மனப்பான்மையும் வேண்டும். ஆன்மீக வாழ்வில் நமக்கு ஸ்ரீகிருஷ்ணரின், ஒருவருடைய செயல்களின்

---

1. பகவத் கீதை, 17.14-16.

பயன்களைத் துறக்கும் முறையும் சங்கரரின் வழியான, நேரடியாக ஒருவரைப் பகுத்து ஆராயும்முறையும், மற்றும் சைதன்யரின் வழியான கடவுளிடம் கொள்ளும் பரவசமான அன்புமுறை என்பவை அவசியமானதாகின்றன. புத்தரின் எட்டு அடுக்கு வழியிலிருந்தும் ஏசுநாதரின் மலைமேல் விளக்கப் பேருரை மற்றும் முகம்மதுநபியின் கருத்தான உலகளாவிய சகோதரத்துவத்திலிருந்தும் நாம் பயனடையலாம். இவ்வனைத்தும், மனிதனை அவனுடைய உண்மையான தெய்வீகத் தன்மையை உணர்வதற்கு ஆயத்தம் செய்யும் படிகளாக உள்ளன. மற்றும் இவை எல்லா சமயங்களைச் சேர்ந்த மெய்ஞ்ஞானிகளாலும் அழுத்தமாக வலியுறுத்தப் பட்டுள்ளன.

தனிமனிதத் தன்மையும், உலகளாவிய தன்மையும் இணை பிரியாதவை. தூய்மைப்படுத்தப்பட்ட மனத்திலே ஏற்படும் மேலான உள்ளுணர்வால் இந்த உண்மை வெளிப் படுகிறது. எல்லா யோக வழிகளிலும் ஆன்மீகப் பயிற்சி யானது, அன்பையும் பரம்பொருளிடம் ஒருங்கிணைந்த நிலையையும் மூலமாகக் கொண்டு மேலெழுந்து மனிதகுலத் துடன் ஒருங்குபட்டுள்ள உணர்விற்கு உறுதியாக வழி நடத்திச் செல்கிறது. தெய்வீக நாமத்தை மீண்டும்மீண்டும் கூறுவதால் எல்லோர் இதயங்களிலும் வீற்றுள்ள பரம்பொருளை இடை விடாமல் நினைப்பதால் பக்தன் தன் வாழ்க்கையை இனிமை யாக்கிக் கொண்டு, தெய்வீக உணர்வில் 'தான்' என்னும் உணர்வை இரண்டறக் கலக்கக் கற்றுக்கொள்கிறான். கடல் அலை கடலில் கலப்பதைப்போல அவனுடைய தனிப்பட்ட தன்மை,உலகளாவிய தன்மையில் கலக்கிறது. அவன் 'என் னுடைய உள்ளியல்பில் நான் பிரம்மன் நான் பரம்பொருளைத் தவிர வேறு யாருமில்லை' என்று உணர்கிறான். உண்மை யான ஆன்மீக ஒளியைப் பெற்ற ஒவ்வொரு மனிதனிடத் திலும் இந்த உண்மையை உணர்வதுதான் இன்பத்தின் மூலம் என்று நாம் கண்டுகொள்கிறோம். நிலைத்த முழு முதற் பொருளுடன் தன்னுடைய ஒருங்குபட்ட நிலையை ஒரு மனிதன் உணர்வதைப்போல பேரின்பமயமான

பேருயிருடன், ஜீவாத்மா ஒருங்கிணைவதைப் போல அது மனிதகுலத்துடன் இத்தகைய ஒருங்குபட்ட நிலையை உணர்கிறது. அனைவரின் இதயங்களிலும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிற தெய்வீக அருளின் மற்றும் அன்பின் கண நேரத் தோற்றத்தையாவது ஒவ்வொருவரும் பெற வேண்டும். வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நிறைவற்ற தன்மை, அப் பொழுது அமைதியுணர்வால் மாற்றம் கொள்ளும். அது பூமியைச் சுவர்க்கமாக்கும். இந்த ஆன்மீகப் பாதையானது தொடங்கும் பொழுது துன்பமாக இருக்கலாம். பரம் பொருளுடன் ஒருங்கிணைந்த நிலை உண்மையாக உள்ள உண்மை என்று உணரப்படுவதால், இருளில் அமர்ந்து கொண்டுள்ளவர்களுக்கு நம்மால் விளக்கைக் கொண்டு வர இயலும். இவ்விதம் ஒருவருடைய சொந்த மகிழ்ச்சிக்காக மற்றும் அமைதிக்காக மட்டுமின்றி மற்றவர்களுக்காகவும் ஆன்மீக அனுபவம் தேவைப்படுகிறது.

3
ஆன்மாவும் அதன் அமைவு நோக்கமும்

புதிர்களின் புதிர்

ஆன்மா, பிறவிக்கு முற்பட்டது என்பது இந்து தர்மத்தின் பொதுப்படையான நம்பிக்கையாகும். அதேசமயத் தில் ஆன்மா, பிறவிக்குப் பின்னும் இருக்கிறது அல்லது அழிவற்றது என்பது பெரும்பாலும் உலகத்திலுள்ள எல்லாச் சிறந்த சமயங்களின் நம்பிக்கையாக உள்ளது. சுவாமி விவேகானந்தர் அவருடைய 'மறுபிறவி' என்னும் சொற் பொழிவில், 'எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் மனித மனத்தைக் குழப்பி வந்திருக்கும் புதிர்களில் மிகவும் சிக்கலானது மனிதனே ஆவான். புரியாத பல்லாயிரம் புதிர்களின் முடிவுகளைக் காணும்படி வரலாற்றின் ஆரம்பம் முதலே மனிதனின் ஆற்றல்கள் தூண்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் மிகவும் சிக்கலான புதிர் அவனது சொந்த இயல்பு பற்றியதே. இது முடிவு காண முடியாத புதிர். பிரச்சினை களுள் எல்லாம் கடினமான பிரச்சினை. நாம் அறிவது, உணர்வது செய்வது இவற்றிற்கெல்லாம் தொடக்கமாகவும், இவற்றின் களஞ்சியமாகவும் உள்ளது மனிதனுடைய இயல்பை அறியும் ஆவலே. ஆனால் இந்த ஆவல் மனிதனது முழுக்கவனத்தையும் கவராத காலம் ஒருபோதும் இருந்ததும் இல்லை. இனி இருக்கவும் இயலாது'.[1]

ஒவ்வொரு தலைமுறையும் அடுத்த தலைமுறைக்கு ஆன்மா, அதன் அமைவு நோக்கத்தின் இயல்பு என்ன, வாழ்க்கை மற்றும் மரணத்தின் பெரிய ரகசியங்கள் என்ன என்னும் புதிரை அனுப்புகிறது. ஆனால் அனுகூலமளிக்கும் வகையில் எப்பொழுதும் மெய்யார்வம் உள்ள துணிச்சல்

---

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.459.*

கொண்ட ஒரு சிலர் உண்மையை உணர்வதின் மூலம் புரியாத புதிரை அவிழ்த்து ஒரு தீர்வைக் கண்டு கொள்கின்றனர். இந்தச் சிறந்த மனிதர்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி நாமும் முயற்சி செய்வோம். நாம் போதுமான அளவில் கஷ்டப்பட்டு முயற்சி செய்தால், மற்றும் கடுமையாகவும் தொடர்ந்து முயற்சி செய்தால் நாம் நாமாகவே இந்த புதிரைத் தீர்த்துக்கொள்ளலாம்.

Harriet Beecher Stowe என்பவரால் எழுதப்பட்ட Uncle Tom's Cabin என்னும் குறிப்பிடத்தகுந்த புத்தகத்தில் Topsy என்னும் சிறுமி, 'யார் உன்னை உண்டாக்கினர் என்று உனக்குத் தெரியுமா?' என்று கேட்கப்பட்டாள். 'எனக்குத் தெரிந்து யாரும் இல்லை.' சிறுமி குறுநகையுடன் தொடர்ந்தாள், 'நான் அப் படியே வளர்ந்தேன் என்று நினைக்கிறேன். என்னை யாரும் ஒருபொழுதும் உண்டாக்கவில்லை என்று நினைக்கிறேன்.'

நாம் எப்பொழுதாவது அந்த மாதிரி நினைக்கிறோமா? நம்முடைய இந்த விசித்திரமான உலகத்தில் வயது வந்த வர்கள் பலர் உள்ளனர். ஆனால் இந்தப் புதிரில் எத்தகைய ஈடுபாடும் அற்றவர்களாக உள்ளனர். ஆனால் இந்தக் கேள்வி யைக் கேட்காமலிருக்க வியலாத ஒரு சிலரும் உள்ளனர். நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் நம்மைச் சுற்றி பார்க்கும் சில பொருட்களைப் போலப் படைக்கப்பட்டிருக்கிறோமா? நாம் இந்தப் பிறவியை அடைவதற்கு முன்பு இந்த உலகத் தில் இருந்தோமா? மரணத்திற்குப்பிறகும் தொடர்ந்து இருப் போமா? இத்தகைய கேள்விகள் பலகாலங்களாக மீண்டும் மீண்டும் கேட்கப்படுகின்றன. வால்ட் விட்மேன் அவர்கள்,

'எப்பொழுதும் ஒன்றுடனொன்று பின்னிய இரு எளிய பழைய கேள்விகள்
நம்மிடம் பிடிபடாமலுள்ள, புரியாத, போராடப்பட்ட
தொடரும் ஒவ்வொரு யுகத்தினாலும் விடைகாண வியலாது அனுப்பப்பட்டு
நம்மிடம் இன்று— மற்றும் அதையே நாம் அனுப்புகிறோம்'[1]

என்று கூறியுள்ளார்.

1. Walt Whitman, Leaves of Grass (New York, Aventine Press, 1931) p.530.

உயிர்நூல் சார்ந்த விளக்கம்

மேற்கத்திய உயிர்நூல் வல்லுனர்கள், தனித்த உயிர்மங்களால் ஆன உயிர்ப்பொருளின் வாழ்வை, ஈயாக இருப்பினும் பறவையோ, விலங்கோ அல்லது மனிதனாக இருப்பினும் தோற்ற வேறுபாடுகளை ஐந்து விதமாகப் பகுத்துள்ளனர். கருவுறுதல் என்னும் வழிமுறையின்மூலம் தனித்ததொரு உயிர் உருக்கொள்ளுதல், வளர்ச்சிக்காலம், வயதுவந்த நிலைக்காலம், முதுமையடைதல் மற்றும் மரணம், சுழற்சியின் இறுதி முடிவின் நிகழ்வு என்பவையாகும். உயிர்ப் பொருள் தன்னுடைய எல்லாச் சிறப்புப் பண்புகளுடன் மரபுவழிச் செல்லும் வழிமுறையினால் உருக்கொள்கிறது என்று பெரும்பாலான உயிர்நூல் வல்லுனர்கள் கருதுகின்றனர். உயிர்ப்பொருளானது தனித்த அல்லது தனிப்பட்ட நிலைத்த தன்மையை (மரணமற்ற தன்மை) அதனுடைய சந்ததி அல்லது மரபுவழியின் மூலம் அடைவதற்கு இடமில்லை. எந்த உயிர்ப்பொருட்கள் தங்களுடைய இனப் பிரிவை இனப்பெருக்கம் செய்வதில்லையோ அவை இறுதியாக அழிந்து விடுகின்றன.

மரணமற்றநிலை குறித்து இந்துவின் கருத்து

பழைமையான இந்து ஆன்மீக குருமார்களால் இந்தக் கருத்திற்கு முற்றிலும் மாறுபட்ட மற்றொரு கோட்பாடு நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உயிரின் உடல் சார்ந்த வாழ்வானது, பிறப்பு, இருப்பு, வளர்ச்சி, தோற்ற மாற்றம், தேய்வு, மற்றும் அழிவு என்னும் ஆறு மாற்றங்களைச் சுழற்சியின் மூலம் பெறுகிறது என்று அவர்கள் நமக்குக் கூறுகின்றனர்.[1] அழிவு என்பது, உடல் வடிவின் மரணத்தை மட்டுமே குறிக்கிறது. மரணம் என்பது இங்கு இயற்பொருள் சார்ந்த மட்டத்தில், உயிர் உரு வாழ்வை

---

1. சங்கரரின் பகவத்கீதை பாஷ்யம் (மஹாதேவசாஸ்த்ரி, சென்னை சமதா புத்தகங்கள், 1981) பக்கம் 42.

முடித்துக்கொள்வதாகும். ஆனால் அது அத்துடன் முடிந்து விடவில்லை. அதனுடைய வாழ்வு ஒரு நுட்பமான மட்டத்தில் எல்லாவற்றிற்கும் மூல ஆதாரத்திற்கு அருகிலே தொடர்கிறது. ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு அந்த உயிரானது ஒரு புதிய உடலில் மீண்டும் பிறக்கிறது. உயிர் ஒருபொழுதும் அழியாது. ஆனால் அதனுடைய உடற்சாதனம் ஒரு சுழற்சியின் மாறுபாடுகளுக்கு ஆட்படுகிறது. சுவாமி விவேகானந்தர், 'மனிதனைப்பற்றிய பல்வேறு கோட்பாடுகள் இருந்திருக்கின்றன. உடம்பிலிருந்து வேறுபட்ட, அழிவற்ற தனிப்பொருளான ஆன்மாவே மனிதன் என்ற கோட்பாடுதான் அவற்றுள் மிகப்பரவலாக உள்ள ஒன்று. இத்தகைய ஆன்மீகக் கோட்பாட்டை நம்பியவர்களுள், சிந்தனையாளர்களான பெரும்பாலானோரும் முற்பிறவியையும் நம்பி வந்திருக்கின்றனர்.'[1] என்று குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட நேரடியான அனுபவத்திலிருந்து வேதாந்த குருமார்கள், ஆன்மா அல்லது உயிரானது உடலுடன் கூடிய உருவங்களில் திரும்பத் திரும்பச் செல்கிறது. அது தன்னிலையிலேயே அழிவற்றதாக உள்ளது என்று நமக்குக் கூறுகின்றனர். அது அதனுடைய தோற்றத்திற்கு முன்பே இருந்தது. தொடர்நிலையில் பிறப்புக்களையும், இறப்புக்களையும் அது கடக்க வேண்டியிருந்தாலும், தொடர்ந்து நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும். நவீன ஒப்புமை ஒன்றை நாம் பயன்படுத்துவோம். கண்ணாடிப்பட்டை மூலமான ஒளி நிழல்பட்டையைப் போல (Spectrum) அது வெறும் காணக்கூடிய ஒளிப்பட்டையாக மட்டுமின்றி ஊதா மற்றும் சிகப்பு ஒளிக்கற்றைக்கு அப்பாலும் நீண்டு செல்கிறது. அதைப்போல ஆன்மாவிற்கு வரையற்ற கடந்த காலமும், மேலும் வரையற்ற எதிர்காலமும் உள்ளது. மனிதனின் ஆன்மாவானது வரம்புகடந்து உளதாம் தன்மையின் அம்சமாக விளங்கிக் கடந்தகாலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலத்தை இணைத்து அம்பரம், மற்றும் காலம் என்னும் இரண்டின் எல்லையைக்

---

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.460.*

கடந்ததாகவும் உள்ளது. ஆன்மாவின் கடந்த கால, மற்றும் எதிர்கால இருப்பானது நம்மால் அறிய இயலாததாக உள்ளது. ஆனால் உண்மையில் ஒரு தொடர்ந்த இருப்பு உள்ளது. ஒரு வராலும் அவருடைய சொந்த ஆன்மாவின் இருப்பை மறுக்க வியலாது எனினும், அதனுடைய உண்மையான இயல்பானது மேம்பட்ட உள்ளுணர்வின் ஆற்றலால் மட்டுமே புரிந்து கொள்ளவியலும். கட உபநிஷதம், 'இறைவனுடைய உருவம் புறத்திலே காணக்கூடியதாக இல்லை. யாரும் அவரைக் கண்களால் காண்பதில்லை. இதயக்குகையில் விழிப்புற்ற புத்தியில், மனத்தின் தொடர்ந்த முயற்சியால் உணரப்படு கிறார். அவரை அறிபவர்கள் மரணமற்றவர்கள் ஆகின்றனர்'[1] என்று கூறுகிறது.

கர்மத்தின் விதிகளையும் மற்றும் இடம்பெயர்வதின் கோட்பாட்டையும் தளைப்பட்டுள்ள மனிதர்களுக்கு மட்டுமே பொருத்திக் காட்டவியலும். அதாவது தங்களை அகங்காரம், மனம், புலன்கள் மற்றும் உடலுடன் அடை யாளம் காண்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அவர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கின்றனர். ஆனால் அவர்கள் ஒரு புதிய மேம்பட்ட விழிப்புணர்வு உதயமாகி தவறாக அடை யாளம் கண்டுகொள்வதிலிருந்து விடுபட்டு, தங்களுடைய உண்மையான இயல்பை பரம்பொருளின் இயல்பு என்று உணர்கிறார்களோ, அவர்கள் பிறப்பு, இறப்புச் சுழற்சி யிலிருந்து விடுபடுகிறார்கள். அமரத்தன்மை உடையவர்கள் ஆகிறார்கள்.

சூக்ஷ்ம உடல், புதிய, கண்ணுக்குப் புலனாகும் உடல் களில் மீண்டும் மீண்டும் பிறந்து, புதிய அனுபவங்களைப் பெறுகிறது. ஒவ்வொரு உடலைச் சார்ந்த இறப்பின் பிறகு சூக்ஷ்ம உடல், சூக்ஷ்ம உலகங்களில், மீண்டும் மறு பிறவி எடுப்பதற்கான காலம் நெருங்கி வரும்வரைத் தங்கியிருக்கும்.[2] இவ்வனைத்தும் ஆன்மீக உலகத்தின்

---

1. கட உபநிஷதம், 2.3.9.

2. பகவத் கீதை, 2.22, 8.16.

இன்னதென்று தெரியாத விதிமுறைகளுக்குத் தகுந்தாற் போல் நடை பெறுகின்றன.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உண்மையான இயல்பை, எல்லாவற்றையும் விடச் சிறந்த மாறுதலற்ற நிலைத்த, தன்னொளிர்வுடைய, விழிப்புணர்வையுடைய ஆன்மாவின் இயல்பு என்று உணரும் வரை இந்த பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சிகளுக்கு ஆட்பட வேண்டும். ஆன்மா என்பது பிறப்பதும் இல்லை; இறப்பதும் இல்லை. அது ஸ்ரீகிருஷ்ணன் பகவத் கீதையில் கூறுவதைப்போல, 'அஜோ நித்ய: சாஸ்வதோயம் புராணோ.... (ஆன்மா, பிறப்பற்றது, நித்தியமானது, அழியாதது, பழமையானது)[1] அஞ்ஞானம் அல்லது அடிமூலமான அறியாமையானது, உள்ளியல்பாக எப்பொழுதும் சுதந்திரமாக உள்ள ஆன்மா விற்குத் 'தளை' என்னும் கருத்தைத் தோற்றுவிக்கிறது என்று வேதாந்தம் கூறுகிறது. ஆன்மாவை, ஆன்மாவற்றதுடன் அடையாளம் கண்டுகொள்ளும் முறையானது மிகப்பழங் காலத்திலிருந்தே இருக்கிறது. அது இருக்கும் வரையிலும், ஆன்மா வரையறைக்கு உட்பட்டதாக, தனிப்பண்பு கொடுக்கப்பட்ட ஆன்மா அல்லது அகங்காரமாக, மீண்டும் மீண்டும் பிறக்கக் கூடியதாக இருக்கும். அறியாமையின் வசிய ஆற்றலால் மனிதன் தன்னுடைய தெய்வீகத் தன்மையை மறந்து விடுகிறான். ஆனால் ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும், முதலில் தெளிவற்றோ அல்லது மங்கலாகவோ அவனுடைய தெய்வீக இயல்பைப் பற்றி ஏதாவதுகொஞ்சம் உணரும் ஒரு காலம் வரும். ஒரு விதத்தில் மனிதனின் ஆன்மா அதனுடைய நிறைந்த ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித் தெழுந்து, அதற்குப் பிறகு தன்னுடைய உண்மையான தெய்வீக நிலையை உணர்வதற்கு முயற்சி செய்கிறது. இறுதியாக, உதயமான மேம்பட்ட விழிப்புணர்வுடன் உண்மையான தெய்வீக எழுச்சியுடன், தன்னுடைய தெய்வீக இயல்பையும் பரம்பொருளுடன் அதற்குள்ள பிரிக்கவியலாத

---

1. பகவத் கீதை, 2.20, கட உபநிஷதம், 1.2.18.

தொடர்பையும் உணரும்பொழுது எல்லாக் கர்மங்களும் அகல்கின்றன. பிறப்பு இறப்பு என்னும் சுழற்சி நின்றுவிடுகிறது. சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதைப்போல நாமும் கூறுவோம். 'என் ஆட்டம் முடிந்துவிட்டது'[1] (என் நாடகம் முடிந்தது).

இந்தியச் சிந்தனையில் கர்மவினைக் கோட்பாடு

மறுபிறப்புக் கோட்பாடு என்பது, கர்மாவின் நடைமுறை ஒழுங்கின் விரிவுறுத்தப்பட்ட நிலையாகும். கர்மா என்னும் சொல்லின் பொருள் உடல்சார்ந்த, மனம் சார்ந்த செயல் என்பது மட்டுமன்று, எதிர்ச் செயல், வெளிப்புறத் தூண்டுதல்களுக்கு மனத்தின் எதிர்ச் செயல் என்பதுமாகும். நல்ல அல்லது கெட்ட செயல்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆற்றல்கள், நல்ல அல்லது கெட்ட விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அது செய்பவரைப் பாதிக்கிறது. அதாவது, பயன்களைப் பெறும் நோக்கத்துடன் தன்னலமாக செயல்படும் ஒருவனைப் பாதிக்கிறது. எனவே கர்மாவின் நடைமுறை ஒழுங்கு என்பது காரணகாரியத் தொடர்பின் விதிமுறையாகும். இதுவே சிறந்த ஒழுக்கவிதிமுறையாகும். அது தன்னுடைய தனிப்பட்ட மற்றும் கூட்டான பார்வைகளில் குறிப்பிட்ட பயனை நோக்கித் தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் வழி காட்டுகிறது (தனிமனிதன் மற்றும் சமூகத்தின் விதிகளுக்கு).

ஒவ்வொரு செயலும் இருவகையான விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. முதலாவது இயலுலகத்தைச் சார்ந்த விளைவு ஆகும். அது நம்முடைய எதிர்கால அனுபவங்களை, இன்பம் அல்லது துன்பத்தைத் தீர்மானம் செய்கிறது. கர்மாவின் இரண்டாவது விளைவு தனிப்பட்டதாகும். ஒவ்வொரு செயலும் மனத்தில் ஸம்ஸ்காரம் எனப்படும் முத்திரையை விட்டுச் செல்கிறது. அத்தகைய ஆயிரக் கணக்கான ஸம்ஸ்காரங்கள் நம் மனத்தில் சேமித்து

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.9.

வைக்கப்பட்டுள்ளன. அவை சிலகாலத்திற்குப் பிறகு மீண்டும் வாசனைகளாகத் தூண்டப்படுகின்றன. இந்த சூட்சுமமான முத்திரைகள் நம்முடைய வருங்காலப் பிறவி களின் ஓட்டத்தைத் தீர்மானிக்கின்றன. இது நாம் நினைப் பதைப் போல் அவ்வளவு புதிரானது அல்ல. நாம் நம்முடைய சொந்த மனங்களைப் பகுத்து ஆராய்ந்தால், நமக்கு இப்பொழுது உள்ள பல எண்ணங்கள் நம்முடைய குழந்தைப் பருவத்திலேயே தோற்றம் கொண்டதை நாம் அறிகிறோம். குழந்தைப் பருவத்தில் நாம் பெற்றிருந்த சில எண்ணங்களும், அனுபவங்களும் நம்முடைய மனங்களில் ஆழமான அடை யாளங்களை விட்டுச் செல்கின்றன. நாம் வளரும்பொழுது, அதற்குச் சரியான, நம் மனங்களின் படங்களும் வளர்கின்றன. நம் உள்ளங்களில் எந்த அளவிற்குப் படங்களையும், கருத்துக்களையும் நாம் கொண்டிருக்கிறோம் என்று அறியும் பொழுது நாம் வியப்படைகிறோம். அது ஒலி நாடாவைத் திருப்பி இயக்குவதைப்போல் ஆகும். நாம் அடிக்கடி நம் சில இயல்புகளின் மூலத்தை மறந்துவிடுகிறோம். ஆனால் உள்முக நோக்கினால் குழந்தைப் பருவத்தையும், மற்றும் நம்முடைய முற்பிறவிகள் வரைக்கும் அவற்றைத் தடம் கண்டு கொள்ளவியலும். நாம் நம்முடைய கனவுகள் சில வற்றை ஆராய்ந்து காணும்பொழுது, நமக்கு நம்முடைய கடந்த காலத்தைப்பற்றிய மிகுதியான விவரங்களைக் கொடுக் கிறது; பல தடவைகளில் அவை நம்முடைய முற்பிறவிகளின் அனுபவங்களையும் குறிக்கின்றன.

கர்மவினைக் கோட்பாட்டிற்கு இரண்டு பண்புக் கூறுகள் உள்ளன. பிணைக்கும் தன்மை மற்றும் விடுவிக்கும் தன்மையாகும். அகங்காரத்துடன், பற்றுதலுடனும் கர்மா செய்யப்படும்பொழுது அது மனிதனை மேலும் மேலும் பிணைக்கிறது. திரும்பத் திரும்ப அனுபவிக்கும் புலன் உணர்வுகள், இதற்கு முன்பே உள்ள பதிவுகளை வலிமை யாக்கி, மனிதனைப் பிறப்பு-இறப்பு என்னும் மட்டத்திற்கு இழுக்கின்றன. கர்மாவானது பற்றற்று செய்யப்படும் பொழுது, கடவுளின் தொண்டாக அல்லது மற்றவர்களின்

நலனுக்காகவே செய்யப்படும்பொழுது அது மனிதனின் விடுதலைக்கு அழைத்துச் செல்கிறது. மனிதனின் பற்றற்ற தன்மையானது தொடர்ந்து நம்மைப் பகுத்து ஆராய்வதன் மூலமும் மற்றும் தொடர்ந்து விழிப்புடன் இருப்பதையும் அல்லது தொடர்ந்து நம்மைக் கடவுளுக்கு அர்ப்பிப்பதையும் பழக்கப்படுத்திக்கொள்வதன் மூலமும் செயற்படுத்தப்பட வேண்டும். இது செய்யப்படும் பொழுது புதிய பதிவுகள் ஏற்படுவதில்லை, மற்றும் பழைய பதிவுகள் வலுவடைவதில்லை. படிப்படியாக, மனத்தில் முன்பு இருந்த பதிவுகள் நம்மை அலைவுறுத்தும் தன்மையை இழக்கின்றன. இதுதான் மனத்தின் தூய்மைப்பாடு என்று அழைக்கப்படுகிறது. இது கர்மாவின் மூலமே அடையப்படுகிறது. கர்மாவானது தன்னிலையில் பாதகமானதாக இல்லை. நாம் அதைச் செய்யும் முறைதான், அது நம்மைப் பிணைக்கிறதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கிறது.

இந்தியாவிலுள்ள, தத்துவத்தின் எல்லாவகையான தனிமுறைக் கோட்பாடுப் பிரிவுகளும் அது இறைமைக் கோட்பாடாக இருப்பினும், அல்லதாக இருப்பினும் கர்மாவின் நடைமுறை ஒழுங்கை ஏற்றுக்கொண்டுள்ளன. கடவுளுக்கு இந்த விதிமுறை செயல்படுவதில் ஏதாவது தொடர்பு உள்ளதா என்பது கேள்வியாகும். அதனுடைய செயல்பாட்டின் பின்னால் தெய்வீக ஆற்றல் உள்ளதா? 'Spherical Harmonics' என்னும் கோட்பாட்டின் அடித்தளத்தை அமைத்த மிகச் சிறந்த பிரெஞ்சு வானநூல் அறிஞர் மற்றும் கணக்கியலாளரான லேப்லஸ் (Laplace) என்பவரைப்பற்றி ஒரு கதை கூறப்படுவது உண்டு 'The Celestial Mechanism' என்னும் புகழ்பெற்ற தன்னுடைய புத்தகத்தை நெப்போலியனுக்கு அளித்தபொழுது, பேரரசர் லேப்லஸ் அவர்களை, அவருடைய அமைப்பு முறையில் கடவுளின் இடம் என்ன என்று கேட்டார். அதற்கு லேப்லஸ் அவர்கள் அமைதியாக, 'ஐயா, நான் அத்தகைய ஊகமின்றி அதைச் செய்திருக்கிறேன்' என்று கூறினார். நல்லது. பல விஞ்ஞானிகளுக்குக் கடவுள் ஒரு தவிர்க்கக் கூடிய ஊகம்தான்.

விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஒருவகையான மேற்போக்கான சிந்தனையாளர்களுக்கு, நாத்திகமானது, கடவுளின் இருப்பை மறுப்பதோ அல்லது பொருட்படுத்தாமல் இருப்பதோ இக்காலத்தில் நவநாகரீகமானதாகிவிட்டது. இந்தக் கோட்பாடானது பலமுறை, நவீனமானது என்று பகட்டுடன் ஆரவாரிக்கப்பட்டு வருகிறது, மற்றும் இந்தியாவின் பல இளைஞர்கள் மேலும் மேலும் அதன்பால் ஈர்க்கப்பட்டு வருகிறார்கள்.

நாம் அத்தகைய மனிதர்களின் மனங்களைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யும்பொழுது அவர்கள் முதிர்ச்சி யற்று, ஆழமற்று இருப்பதைக் காண்கிறோம். அவர்கள் தங்கள் சொந்த மனங்களுக்குள் ஆழமாக உள்முகமாகச் செல்லும் உண்மையான ஆர்வம் அற்றவர்களாக அல்லது புரிந்து கொள்ளும் திறமையற்றவர்களாக உள்ளனர். மற்றும் எந்த ஆய்வுப்பொருளைக் குறித்தும் ஆழமாகச் சிந்திக்கும் திறமையற்றும் விளங்குகிறார்கள். உண்மையாக, ஆழமாகச் சிந்திப்பது என்பது அவ்வளவு எளிமையானது அல்ல. இதற்கு ஒரு கட்டுப்பாடு மிகுந்த மனம் வேண்டும். நவீன லோகாயத வாதிகள் என்று அழைக்கப்படுபவர்கள் வேறு சிலரின் கருத்துக்களை திரும்பக் கூறத்தான் விரும்புகிறார்கள், மற்றும் அவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிறார்கள். எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஒரு ஆசிரியை சிறுவர் களுக்கு கணக்குப் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தார். அவர் அவர்களுக்கு ஒரு கணக்கை விடைகாண்பதற்காக உருவாக்கிக் கொடுத்தார். 'என்னிடம் பன்னிரெண்டு ஆடுகள் உள்ளன. அவைகளில் ஆறு ஆடுகள் வேலியைத் தாண்டி ஓடி விட்டன. எத்தனை ஆடுகள் மீதி உள்ளன?' என்று கேட்டார். பெரும்பாலான சிறுவர்கள் ஆறு என்று பதில் கூறினார்கள். ஆனால் ஒரு விவசாயியின் மகன் அமைதியாக 'எதுவும் இருக்காது' என்று கூறினான். ஆசிரியை அதைப்பற்றி அவனிடம் கேட்டபொழுது அந்தச் சிறுவன் 'அம்மா, உங்களுக்குக் கணக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் எனக்கு

ஆடுகளின் போக்குகள் குறித்துத் தெரியும்' என்று கூறினான். இங்கு நமக்கு ஒரு பாடம் உள்ளது. ஆடுகளைப் போல மற்றவர்களை நாம் கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது. ஒரு விஞ்ஞானி கூறியிருப்பதைப்போல, 'பெரும்பாலான மனிதர்களுக்கு முதுகுத்தண்டு மட்டும் போதும். மூளை என்பது தேவைக்கு மேற்பட்ட ஏதோ ஒன்றாகும்' அதாவது பெரும்பாலான மனிதர்கள் இயல்புணர்ச்சி மற்றும், திடீர் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதை இது உணர்த்துகிறது. மிகச் சிலரே, உண்மையாகச் சிந்தித்து தங்களுடைய சொந்த வாழ்க்கையை விழிப்புணர் வுடன் வழிநடத்திச் செல்கிறார்கள்.

உலோகாயதத்தைக் குறித்துப் புதுமையானது எதுவும் இல்லை. பழங்கால இந்தியாவில், சார்வாகர்கள் எனப்படும் கொள்கைப் பிரிவைச் சேர்ந்த சிந்தனையாளர்கள் இருந்தனர். அவர்கள் கடவுளின் இருப்பையும் ஆன்மாவையும், அமரத் தன்மையையும் மறுத்தனர். வாழ்வின் நோக்கமானது முழு மொத்தமாக புலனுணர்வுகளைத் துய்ப்பதற்கே இருக்கிறது என்று கருதினார்கள். அவர்கள் ஒருபொழுதும் மக்களிடம், பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால், பழைய சார்வாகர்கள் மறைந்து விட்டார்களா? அவர்கள் நம்மில் பலரிடம் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் சமயத்தை மேற்கொள்வதாகக் காட்டிக் கொள் கிறார்கள். ஆனால், உண்மையான வாழ்வில், உலோகாயத கருத்துக்கள் சார்ந்த வாழ்க்கையைப் பின்பற்றுகிறார்கள்.

பண்டைய இந்தியாவில், இத்தகைய மேற்போக்கான உலோகாயத சிந்தனையாளர்களிடமிருந்து வேறுபட்ட ஆழமான, தீவிரமான, தத்துவஞானத்திற்கு உரிய மனங் களைப் பெற்றவர்கள் இருந்தனர். அவர்கள் அப்படி இருந்தும் கடவுளின் இருப்பை மறுத்தனர். குறைந்தபட்சம் நாம் பொதுவாகக் கடவுள் என்று கருதுபவரை. ஆனால் அவர்கள் அனைவரும் கர்மாவின் செயல்பாட்டை ஒப்புக்கொண் டனர். மற்றும் புத்தமதத்தைச் சேர்ந்தவர்களைத் தவிர ஆன்மாவின் இருப்பையும், அமரத்தன்மையையும் நம்பினர்.

ஆஸ்திகர், நாஸ்திகர் என்னும் சொற்கள் இறைநம்பிக்கை உள்ளவர்கள், மற்றும் இறைநம்பிக்கை அற்றவர்கள் என் பதைக் குறிப்பிடவில்லை. ஆனால் முறையே ஏற்றுக்கொள் பவர்கள், மற்றும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்பதைக் குறிக் கின்றன. ஆஸ்திகர்கள் என்பவர்கள், எல்லாவற்றிலும் சிறந்த வேதத்தின் ஆணை உரிமையை நம்புகிறவர்கள் ஆவார்கள். நாஸ்திகர்கள் என்பவர்கள் அதை நம்பாதவர்கள் ஆவார்கள். புத்தமதத்தைப் பின்பற்றுபவர்களும், சமண மதத்தைப் பின்பற்றுபவர்களும் (ஜைனர்கள்) இரண்டாம் வகையைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஆஸ்திகர்களுக்குள் சாங்கியர்களும், ஒரு சில மீமாம்சகர்களும் கடவுளின் இருப்பை ஏற்பதில்லை. கர்மாவின் விதிமுறையால், அதனுடைய செயல்பாடு வசப் படாததாக இருப்பதால், ஆன்மாக்கள் அவற்றால் பிணைக்கப் படுகின்றன என்று அவர்கள் கருதினர்.

மற்றொரு புறத்தில், புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆன்மாவின் இருப்பையே மறுத்தனர். அதே நேரத்தில் கர்மா வின் விதிமுறையை ஏற்றுக்கொண்டனர். அவர்களில் பலரை இது ஒரு ஆர்வமிக்க நிலைமைக்குக் கொண்டு சேர்த்தது. மனிதனின் சிறப்பு இயல்புகள் அவர்களால் ஒரு தேருக்கு ஒப்பிடப்பட்டது. தேரானது சக்கரங்கள் போன்ற கூட்டு பாகங்களால் அமைக்கப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர, 'தேருக்கு'த் தனிச்சையான இருப்பு இல்லை. அதைப் போன்ற மனித உடலானது பல தனிப் பொருட்களின் கூட்டாக அமைந்துள்ளது. அப்படியிருப்பினும் கர்மாவின் விதிமுறைக்கு ஏற்றவாறு தொடர்ந்து பிறப்பு எடுக்கிறது. ஒரு வயதான விறகு வெட்டியைக் குறித்த ஒரு கதை உள்ளது. அவன் தன்னிடமிருந்து ஒளிரும் கோடாரியைக் குறித்து கர்வம் கொண்டிருந்தான். யாராவது அந்தக் கோடரியைப் புகழ்ந்து பேசினால் அந்த வயதான மனிதன் மகிழ்ச்சியால் மலர்ந்து, 'சிறுவனே, வருவாய், நான் இருபது வயது இருக்கும்பொழுதிலிருந்தே இதைப் பயன்படுத்தி வரு கிறேன். இப்பொழுது பார் அது எவ்வளவு அழகுடன் விளங்குகிறது. ஆறுமுறைகள் தான் அதனுடைய அலகு

மாற்றப்பட்டுள்ளது. பிடியானது எட்டு முறைகள் மாற்றப் பட்டுள்ளது' என்று கூறுவான். அந்த வயதான மனிதன், அவன் இன்னும் அதே கோடரியைப் பயன்படுத்துவதாக மனத்தில் நினைத்துக் கொண்டிருக்கிறான்! தொடர்ந்து வரும் பிறவிகளில் ஆன்மாவின் தொடர்ச்சியானது இதைப் போன்ற ஒரு மாயத்தோற்றம் என்று புத்தசமயத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

மேற்கத்திய நாடுகளில் பல ஆண்டுகள் வாழ்ந்ததால் என்னால் சமயத் தொடர்புடைய சூழல்களை நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்தியா வேதாந்தத்தின் நாடாகத் திகழ்கிறது. எல்லா உயிர்களின் விதிகளை வழிநடத்திச் செல்லும் ஒரு தெய்வீக சக்தியின் இருப்பை அது நம்புகிறது. விழிப்புணர்வுள்ள உயிரினங்களின் விதிகளால், விழிப்புணர் வற்ற விதிமுறை திறமையாகச் செயலாற்றவியலும் என் பதை வேதாந்தம் நம்பவில்லை. இந்த பிரம்மாண்டத்தை இறுதியாகக் கட்டுப்படுத்தும், மற்றும் வழிநடத்தும் ஒரு விழிப்புணர்வுடைய மெய்ம்மை ஒரு அறிவாற்றலுடன் கூடிய சக்தி இருக்க வேண்டும். எனவே நியாய சூத்திரங்களில் நாம் இந்த சிறு விளக்கத்தைக் காண்கிறோம். 'கடவுள்தான் எல்லாவற்றையும் கடந்த மூலகாரணமாவார். ஏனெனில் மனிதனின் முயற்சி (கர்மா) எப்பொழுதும் பயனை ஏற் படுத்துவது இல்லை'[1] இந்தியாவிலுள்ள பல்வேறு வகை யான தத்துவமுறைகளில், வேதாந்தம் மட்டுமே கடவுளுக்குத் தலைமையான முக்கியத்துவம் அளித்து செழுமையடைந் துள்ளது. வெற்றிவாகை சூடியுள்ளது. கடவுளின் இருப்பை மறுக்கும் மற்ற தத்துவமுறைகள், ஒன்று அது தோன்றிய மண்ணிலிருந்து மறைந்து விட்டது அல்லது வேதாந்தத்தின் மூல வெள்ளத்தில் இரண்டறக் கலந்துவிட்டது.

நாம் மிகப் பெரிய இயந்திரங்கள் பற்றியும் மிகவும் சிக்கல் நிறைந்த Computer பற்றியும் கேள்விப்படுகிறோம்.

---

1. ஈச்வர: காரணம் புருஷ—கர்மாபல்ய தர்சனாத் ।

—கௌதமர், நியாயசூத்திரம், 4.1.19.

மற்றும் அவைகளின் திறமையான செயல்பாட்டால் நாம் மிகவும் ஈர்க்கப்படுகிறோம். ஆனால் மிகவும் அறிவுத்திறம் மிக்கவர்கள் இவற்றைக் கண்டுபிடித்து, மற்றும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம் அதைப்போன்றே இந்த எல்லையற்ற, புதிர்கள் நிறைந்த பிரம்மாண்டமானது, தன்னிலையிலேயே செயற்படுவது போலத் தோன்றினாலும் அது எல்லாவற்றையும் விடச் சிறந்த, அறிவுத் திறமுடைய, எல்லா உயிரினங்களிலும் உள்ளுறையும், இயலுலக அண்டத்திற்குரிய நிலை பேறுடைய மெய்மையால் வழிநடத்தப்படுகிறது. நீ நிலத்தில் ஒரு விதையை விதைத்து, அதற்குச் சிறிது நீர் ஊற்றுவாய். அந்த விதை முளைவிட்டு வளரும். ஒரு தனிப்பட்ட கடவுள் நாராயணன் அல்லது சிவன், என்று வைகுண்டத்திலோ அல்லது கைலாஸத்திலோ எங்கோ அமர்ந்துகொண்டு அதன் வளர்ச்சியை இயக்கிக் கொண்டிருக்கிறார் என்று நாம் நம்ப வேண்டுமா? எல்லா உயிரினங்களிலும் தெய்வமானது மறைந்துள்ளது. இந்த உள்ளுறையும் கடவுட் தத்துவம்தான் வாழ்க்கையின் எல்லாச் சலனங்களையும் கட்டுப்படுத்துகிறது. சில மேற்கத்திய தத்துவஞானிகளும், உள்ளுறையும், இயலுலகைச் சார்ந்த ஒரு பேராற்றலைப்பற்றிப் பேசுகின்றனர். கர்மா விதிமுறையானது தெய்வீகப் பேராற்றலின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால், கடவுளே அதன் பின்னணியில் அதைக் கட்டுப்படுத்துபவராக இருக்கிறார். அவர் எப்பொழுதும் தன்னிச்சையானவராகவும், எப்பொழுதும் பரிசுத்தமானவராகவும், பேரின்பமயமானவராகவும், மிக உயர்ந்த விழிப்பு உணர்வு நிலையைக் கொண்டவராகவும் விளங்குகிறார்.

அன்றியும் வேதாந்தம், மனிதன் எப்பொழுதுமே செயல்களைச் செய்துகொண்டிருக்க வேண்டியதில்லை என்று நம்புகிறது. ஆன்மா உள்ளே இருக்கும் உண்மையை உணராமல் இருக்கும் வரைதான் செயல்பட வேண்டும். அதன் பிறகு ஆன்மா அதுவும் கர்மா விதிமுறையின் செயல்பாட்டிற்கு அப்பால் செல்கிறது. அது சுதந்திரமாகிறது.

வேதாந்த தத்துவத்திற்கு ஏற்ப பிறப்பு-இறப்புக்களிலிருந்து இறுதியாக விடுதலை அடைவதுதான் வாழ்க்கையின் லட்சிய மாகும். முண்டக உபநிஷதத்தில் ஒரு அழகான கற்பனை இக்கருத்தை விளக்குகிறது.

இணைபிரியாத, ஒரே போன்ற இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன. ஒரு பறவை மரத்தின் பழங்களைத் தின்று கொண்டிருக்கிறது, சில பழங்கள் கசப்பாகவும், சில பழங்கள் இனிப்பாகவும் உள்ளன. மற்றொரு பறவை, மரத்தின் உச்சியில் அமர்ந்துகொண்டு, முற்றிலும் பற்று இல்லாமல் தின்னாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. சிறிது நேரத்திற்குப் பிறகு கீழே இருந்த பறவை மேலே நோக்குகிறது. மேலே அமர்ந்துள்ள பறவை யுடன், ஒத்த தன்மையை உணர்ந்து, உண்பதை நிறுத்தி விட்டு, மிக உயர்ந்த அமைதியை அடைகிறது. கீழே இருந்த பறவை ஜீவனைக் குறிக்கிறது. இது கர்மாவினால் பிணைக்கப்பட்டு, தொடர்ந்து இன்பமடைகிறது மற்றும் துன்பம் அடைகிறது. ஆனால் அது கடவுளுடன் தன்னுடைய ஒத்த தன்மையை உணரும் பொழுது குறியீடாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மேலே அமர்ந்திருந்த பறவையின் தன்மையுடன் தன்னுடைய ஒத்த தன்மையை உணரும் பொழுது அது எல்லாவகையான பிணைப்புக்களிலிருந்தும் மற்றும் வரையறைக்குட்பட்ட தன்மைகளிலிருந்து விடு பட்டு, தன்னுடைய சொந்தமான உச்ச நிலையில் நிலைத்து நிற்கிறது.[1]

கர்மாவின் விதிமுறையால் பிணைக்கப்பட்டு, அங்கேயே நீடித்து, அதன் சக்கரத்தால் அரைபட வேண்டும் என்னும் அவசியமில்லை. துன்பம் தரும் அதனுடைய சக்கரப் பல்லிலிருந்து ஒருவரை விடுவித்துக் கொள்வதற்கு ஒருவழி உள்ளது. பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அவன் கர்மாவின் பிணைப்பிலிருந்து விடுபடுவதற்கு ஒரு நேரடியான வழியைப் போதிக்கிறார்.

---

1. முண்டக உபநிஷதம், 3.1.1,2.

'எல்லா தருமங்களையும் பற்றற விட்டொழித்து, என் ஒருவனையே சரணடைவாய். நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன். வருந்தாதே'[1] அதுதான் மனிதகுலத்திற்குக் கடவுளின் உறுதிமொழியாகும். எல்லா மேம்பட்ட அவதாரங்களும் மனிதகுலத்திற்கு அத்தகைய உறுதிமொழியை அளித்துள்ளனர். அதில் முழு நம்பிக்கை வைத்து, முழுமையான மனத்துடன் ஒருவர் கடவுளைச் சரணடைவதுதான் கடினமானதாகும்.

மேற்கத்திய சிந்தனையில் ஆன்மா பிறப்பதற்கு முற்பட்ட வாழ்வும் மறு பிறப்பும்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிளேட்டோ, தனித்த ஆன்மாக்கள் சாசுவதமானவை. சிறைகளைப் போல் உள்ள இந்த உடல்களை வந்து அடைவதற்கு முன்பே அவை இருந்தன. தன்னுடைய இயல்பை அறிவதால் மட்டுமே அதை விடுவிக்க இயலும். இந்த அறிவானது புது அறிவு இல்லை. அது ஒரு மறு அழைப்பு. அது மறக்கப்பட்டதை நினைவுபடுத்திக் கொள்வது ஆகும்.[2]

ஆன்மாவின், உடல் உருவாவவதற்கு முற்பட்ட வாழ்வும் மற்றும் அதன் நிலைத்த தன்மையும் பிளேட்டோ அவர்களின் அடிப்படையான கோட்பாடாக மட்டுமின்றி, பண்டையக் காலத்திலிருந்த ORPHICS மற்றும் PYTHAGOREANS போன்ற மற்ற பல சிறந்த சிந்தனையாளர்களின் கோட்பாடாகவும் இருந்தது.

NEO-PLATONISM என்பதைத் தோற்றுவித்த ப்ளோட்டினிஸ் என்பவர் (A.D-205-270) மனித ஆன்மாவானது, உலக ஆன்மாவின் ஒரு பகுதியாகும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தார். அது பருப்பொருளின் பக்கம் திரும்பி, தெய்வீக நிலையிலிருந்து வீழ்கிறது. பருப்பொருளிடம்

---

1. பகவத் கீதை, 18.66.

2. S.E. Frost, The Basic Teachings of the Great Philosophers (New York, The New Home Library, 1942) *பக்கம் 174-175.*

உள்ள பிணைப்பிலிருந்து தன்னை விடுத்துக்கொள்ள அது போராட வேண்டும். அது தோல்வியடைந்தால், இறப்பிற்குப் பிறகு மற்ற உடல்களை அடைகிறது. பருப்பொருள் சார்ந்த தூய்மையற்ற தன்மைகளிலிருந்து அது தன்னை முழுமையாக விடுவித்துக்கொள்ளும் வரைக்கும் பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் என்னும் தொடர்ச்சியில் அது செல்ல வேண்டும். பல்வேறு வகையான கட்டுப்பாட்டு முறைகளால் தூய்மை யான நிலையை அடைந்த பிறகு தனித்த ஆன்மாவானது உலக ஆன்மாவுடன் இணைகிறது. மற்றும் இறுதியாக பரத்துவம் அடைகிறது.

எபிரேயர்கள் (KABBALISTS) யூதர் வினைமுறைக் கோட் பாடுகளில் (JUDAISM) இந்தக் கோட்பாட்டை அறிமுகம் செய்ய முயற்சித்தனர். 'புதிய ஏற்பாட்டிலும்' நாம் ஐயத்திற்கு இடமின்றி மறுபிறவிக் கோட்பாட்டினுடைய குறிப்புக் களைக் காண்கிறோம். மலையுச்சியின் மீது ஏசுநாதரின் திருவுருவ மாற்றக் காட்சியைக் கண்டபொழுது திருத் தொண்டர்கள் மோஸஸ் மற்றும் ஏலியாஸ்ஸின் உருவங் களை ஏசுநாதரின் இருபக்கங்களிலும் கண்டனர். ஏலியாஸ் (அல்லது ஏலிஜா) பண்டைக்காலத்தில் யூத தீர்க்கதரிசியாக விளங்கியவர். அவரைக் குறித்து ஏசுநாதர், 'அந்த ஏலியாஸ் ஏற்கனவே வந்திருக்கிறார்' என்று கூறினார். மற்றும் அவ ருடைய சீடர்கள் அவர் ஜான் (தீட்சை செய்விப்பவர்) அவர் களைக் குறிப்பிடுவதைப் புரிந்து கொண்டனர். ஏசுநாதர் தீட்சை செய்விப்பவரை ஏலியாஸின் மறு அவதாரம் என்று எண்ணினார்.[1]

தொடக்க காலத்திலிருந்த மனீச்சியன்ஸ் (Manicheans) க்னாஸ்ட்டிக் (gnostic) உடல் உருவாவதற்கு முற்பட்ட நிலை யில் ஆன்மாவின் இருப்பையும் மற்றும் மரணத்திற்குப் பிறகு அதன் இருப்பையும் நம்பினர். தொடக்க காலத்திலிருந்த மிகச் சிறந்த கிறிஸ்தவ அறிஞர்களில் ஒருவரான ORIGEN- ஆரிஜன் (A.D.185-251) 'மனித மனமானது நல்லவற்றாலும்

---

1. பைபிள்—செயின்ட் மேத்யூ, 17:12.

நிகழ்காலத்தில் மாற்றமடைகிறது. தீயவற்றாலும் நிகழ்காலத்தில் மாற்றமடைகிறது. இதற்கான காரணங்கள் இந்தப் பிறவி உருவாவதற்கு மிக முந்தையதாக இருக்க வேண்டும் என்னும் ஐயப்பாடு என்பது உள்ளது' என்று கூறுகிறார். ஆனால் இந்தக் கருத்தானது மரபு வழுவாத கிறிஸ்தவ சமயத்தின் கோட்பாட்டிற்குச் சந்தேகமின்றி எதிரானதாக உள்ளது. மற்றும் கிறிஸ்தவ குருமார்களின் குழுவினரால் உறுதியாக அடக்கப்பட்டது. A.D.543-ல் கான்ஸ்டான்டி நோபிலின் சட்ட மாற்றம் 'உடல் உருவாவதற்கு முன்பு ஆன்மாவின் இருப்பு என்னும் கட்டுக்கதையை மற்றும் அதிலிருந்து தொடரும் நேர்மையற்ற மீட்டளிப்பு என்னும் கருத்தை ஆதரித்தால் அவன் வெறுக்கத்தக்கவனாக இருக்கட்டும்' என்னும் ஒழுங்கமைதியை[1] உடைய கிறிஸ்தவ குருமார்களின் முயற்சிகள் இருந்தும்கூட, இந்தக் கோட்பாட்டை முற்றிலும் அடக்க இயலவில்லை. மற்ற நாடுகளிலும் மற்றும் கிறிஸ்தவ நாடுகளின் பல உட்பிரிவுகளைச் சார்ந்த மெய்யுணர்வாளர்களிடத்திலும் அது தொடர்ந்து செழித்தோங்கியது. மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலி நாட்டைச் சார்ந்த துறவியும், தத்துவஞானியுமான ஜியோர் டானோ-ப்ரூனோ என்பவரால் இந்தக் கோட்பாடு ஆதரிக்கப் பட்டது. (A.D.1548-1600) கடவுளின் உள்ளுறை இயல்பையும், மற்றும் ஆன்மாவின் அழிவற்ற தன்மையையும் அவர் நம்பினார். அவர் சிறையில் அடைக்கப்பட்டார், சித்திரவதை செய்யப்பட்டார். மற்றும் எரிப்புத்தண்ட கம்பத்தில் எரிக்கப் பட்டார். அவர் இறந்துவிட்டாலும் அவர் தத்துவத்தை இறைமை நூல் கோட்பாட்டின் பிணைப்பிலிருந்து விடுவிக்க உதவி செய்தார்.

அதனுடைய சக்தி அத்தகையதாக இருந்தது. எப்படி இருப்பினும், மறுபிறவிக் கோட்பாட்டை பள்ளத்திலே மட்டும்தான் தள்ள முடிந்தது. அது பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து பலருடைய எண்ணங்களில் மாறுதல்களை

---

1. James Hastings, Encyclopaedia of Religions and Ethics, Vol. IV, 1967, p.193.

ஏற்படுத்தினாலும் மனிதர்கள் வெளிப்படையாக அதைப் பற்றிப் பேசுவதற்கு அஞ்சினர். முடிவில் (Inquisition) முறைமன்றத் தேர்வு விசாரணையின் முடிவில், சிந்தனை யாளர்களும், கவிஞர்களும், தத்துவஞானிகளும் தங் களுடைய கருத்துக்களை மிகவும் சுதந்திரமாக வெளிப் படுத்தத் தொடங்கினர்.

தாமஸ் ஹக்ஸ்லி *(1825-1895)* டார்வினுடைய கொள்கை யைப் பெருமளவில் பின்பற்றியவராவார். அவர் மறுபிறப்புக் கோட்பாட்டில் நம்பிக்கைக் கொண்டிருந்தார். புலனறி வுடைய ஒவ்வொரு உயிரும் விதைக்கப்பட்டிருப்பதற்குத் தக்கவாறு பயனைப் பெறுகிறது. இந்தப் பிறவியில் இல்லாமலிருந்தாலும், தொடர்ச்சியாக வரும் வரையற்ற முற்பட்ட வாழ்வுகளின் தொடர்களில் எவைகளில் இது சமீபத்தியது என்று கூறும் அளவிற்குத் தைரியமானவராகத் திகழ்ந்தார். விஞ்ஞானியான அவர், ஏதாவது ஒரு காரண மின்றி எதுவும் நடைபெறாது என்னும் எண்ணமுடையவர் ஆவார். மேலும் அவர் கூறுகிறார். 'உயிரியல் கோட் பாட்டைப் போன்றே மறுபிறப்புக் கோட்பாடும் கற்பனை இல்லாத உலகத்தில் வேரூன்றி இருக்கிறது.'

எமர்ஸன் *(1803-1882)*, மற்றும் புதிய இங்கிலாந்தைச் சேர்ந்த அவருடைய சமகாலத்தைச் சேர்ந்த சிலரும் அவ்விதமே நினைத்தனர். பகவத்கீதையின் அறிவுரைகள் அவர்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. 'நமக்குக் கீழ்த்தளத்தில் படிக்கட்டுள் உள்ளன. நாம் அவற்றை ஏறி வந்திருக்கிறோம். நமக்கு மேலேயும் படிக்கட்டுகள் உள்ளன. பார்க்க வியலாத படி ஒன்றுக்கும் மேலே எவை தொடர் கின்றனவோ' என்று கூறும் அளவிற்கு அவர் தைரியமுடைய வராகத் திழ்ந்தார்.

கவிஞர்கள் உண்மைக்கு அருகில் வாழ்கிறார்கள் அவர்களுக்குரிய ஈடற்ற வழிகளில், அவர்கள் உண்மை என்று எதை நம்புகிறார்களோ, அதைக் கூறுகின்றனர். வோர்ட்ஸ் வொர்த் இவ்விதம் கூறுகிறார்.

'நம் பிறப்பு, ஒரு உறக்கம், மற்றும் ஒரு மறதியே;
ஆன்மா எது நம்முடன் எழுந்ததோ, நம் வாழ்வின் விண்மீன்,
வேறு எங்கோ அது அமைக்கப்பட்டது
மற்றும் தொலைவிலிருந்து வந்துள்ளது.'

டென்னிஸன்

'கீழான வாழ்வுகளின் வழியே நான் வந்திருப்பின்
நான் என் வலிமையற்ற தொகுதிகளை மறக்கக்கூடும்.
ஏனெனில் நம் முதலாண்டு மறக்கப்படவில்லையா?'

என்று கூறியுள்ளார்.

வால்ட் விட்மன், தன்னுடைய துணிவுமிக்க முறையில் அதே எண்ணத்தைக் கூறியுள்ளார். இருப்பினும் இந்தக் கருத்துக்கள் அவர் யாரிடமிருந்து பெற்றார் என்று நமக்குத் தெரியவில்லை.

'வாழ்வே, உன்னளவில் நீ பல இறப்புக்களின் நினைவுச்
சின்னங்கள் என நான் நினைக்கிறேன்,
நான், நானே இதற்கு முன் எண்ணற்றமுறைகள் ஐயமின்றி
இறந்துள்ளேன்.'

விசித்திரமான கருத்தாக இருப்பினும், ஒரு கருத்தானது பலரால் பங்கிடப்பட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மனிதர்கள் மிகுதியான எண்ணிக்கையில், மறுபிறவிக் கருத்தைச் சரியான வாதத்திற்கு இடமளிக்கும் கருத்து என்று எண்ணுகிறார்கள். ஜெர்மன் நாடக ஆசிரியரும் திறனாய்வாளருமான லெஸ்ஸிங் (Lessing 1729-1781) புதிய அறிவையும், புதிய அனுபவத்தையும் பெறும் தகுதியைப் பெற்றிருப்பதால் நான் ஏன் அடிக்கடி திரும்பி வரக்கூடாது? என்று கேட்கிறார். 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மன் தத்துவஞானியான Fichte 'உரிய காலத்தில் தோன்றியது. உரிய காலத்தில் அழிய வேண்டும் என்பது பலரால் நன்கு அறியப்பட்ட வாதமாகும். எனவே மரணமடைந்த பிறகும் ஆன்மா இருப்பது என்பது, உடல் உருவாவதற்கு முற்பட்ட அதனுடைய வாழ்வையும் கட்டாயமாகச் சுட்டுகிறது' என்று கூறுகிறார். பதினேழு ஆண்டுகள் நான் மேற்கத்திய நாடுகளில் தங்கியிருந்த பொழுது,

மனிதர்கள் அதிகமான எண்ணிக்கையில் மறுபிறவியை நம்புகிறார்கள் என்னும் கருத்து எனக்கு ஏற்பட்டது. கிறிஸ்தவ குருமார்களின் குழுவின் மீது இருந்த அச்சம்தான் பலரும் வெளிப்படையாக அதனை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணமாக இருந்தது. அமெரிக்காவைச் சேர்ந்த, பலராலும் நன்கு அறியப்பட்ட எழுத்தாளரும், சமய போதகருமான டாக்டர் ப்ராட் (Dr. PRATT) என்பவர், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவிற்கு வந்திருந்தார். மறுபிறவிக் கோட்பாட்டைக் குறித்து அவர், 'தனிப்பட்ட முறையில் மறுபிறவியில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் என்னை நம்பவைக்கும் முயற்சிகளை நான் ஏற்கிறேன்' என்று கூறியுள்ளார். மேலும் அவர், 'இந்தக் கோட்பாட்டின் அழகையும், மேன்மையையும் திடமாக உணர்கிறேன். இந்துக்களின் கருத்தான ஆன்மா என்பதில் மறுக்கவியலாத கம்பீரம் உள்ளது. இறக்கும் உடல்களிலிருந்தும், அழியும் உடல் களிலிருந்தும் அது அதனுடைய நீண்ட பயணத்தை இறுதி யாக அதனுடைய அடைவிடமான முடிவற்ற கடலைச் சென்று அடையும்வரை தொடர்கிறது. ஒரு இந்து அவன் அழிவற்ற வாழ்க்கையினுள் நுழைவதாக நம்புவதில்லை. அவன் ஏற்கனவே அழிவற்ற வாழ்க்கையை வாழ்ந்துகொண் டிருப்பதாக நம்புகிறான்.[1]

ஆச்சாரியர்கள் கடந்த கால வாழ்க்கைகளின் விவரத்தை உணர்ந்திருந்தனர்

மேற்கத்திய நாடுகளில் நான் நீண்ட காலம் வாழ்ந்த பொழுது பலமுறை 'நமக்கு முற்பிறவி என்று ஒன்று இருந்திருக்குமாயின் நமக்கு அது ஏன் நினைவில் இல்லை' என்னும் கேள்வி கேட்கப்படுவதைக் கேட்டிருக்கிறேன். நம்முடைய கடந்த கால அனுபவங்களில் பலவற்றை நாம் மறந்திருக்கிறோம் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றல்லவா? நாம் இப்பொழுது வாழ்ந்துகொண்டுள்ள வாழ்க்கையின்

---

1. James Bisset Pratt, India and Its Faiths (New York, Houghton Mifflin Co., 1915) pp.114-15.

எல்லா நினைவுகளும் திடீரென்று எல்லாம் சேர்ந்தோ அல்லது ஒவ்வொன்றாகவோ தொடர்ந்து வந்தால் நமக்கு என்ன ஆகும்? நம்மில் பலரும் பைத்தியமாகிவிடுவோம். நாம் எங்கு சென்று நோயாளிகளாகத் தங்குவோம் என்பதற்கான எந்த இடத்தையும் நம்மால் கண்டுபிடிக்க இயலாது. கணக்கற்ற மனநல மருத்துவமனைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏற்கனவே அவைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. மற்றும் இதற்கு மேல் நம்மால் அவைகளுக்கு வாய்ப்பு அளிக்க இயலாது. இயற்கைத்தாய் நம்முடைய கடந்த கால வாழ்க்கையில் பலவற்றை மறக்கச் செய்கிறாள். அதன்மூலம் நம் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை, புதிய கருத்துக்களுடன், புதிய ஆர்வங்களுடன் புதிய நம்பிக்கைகளுடன் தொடங்கலாம் என்னும் உண்மையை மட்டும் கூறுகிறேன்.

நம்முடைய கடந்த கால வாழ்க்கைகளின் நினைவுகளை நம்மால் புதுப்பிக்க இயலுமா? மனிதர்கள் அவர்களுடைய கடந்த காலத்தைப்பற்றியும் மற்றும் அவர்களுடைய எதிர் காலத்தையும் பற்றியும் அறிந்துகொள்ள மிகவும் ஆவலுடன் இருக்கிறார்கள். இந்தியாவிலும், மிக முக்கியமாக மேற்கு நாடுகளிலும் ஜோதிடர்களும், கைரேகை நிபுணர்களும், பளிங்கின்மூலம் மறைவெளிக் காட்சியைக் காண்பவர்களும் பிறர் எண்ணங்களை அறிந்துகொள்பவர்களும் இருக்கிறார்கள். மனிதர்களுக்குக் கடவுளிடம் இருப்பதைவிட மிகப் பெரிய நம்பிக்கை இத்தகையவற்றில் உள்ளது போலும். எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஒரு சிறுமி மனத்தின் எண்ணங்களை அறியவல்ல ஒருவரிடம் சென்றாள். அவள் தன்னுடைய கடந்த காலங்களில் எல்லாப் பதிவுகளையும் அறிய விரும்பினாள். அதற்கு அவன் 'முக்கியமான மனிதர்களுக்கு 100 டாலர்களும், மற்றவர்களுக்கு ஐம்பதிலிருந்து இருபத்தைந்து டாலர்களும் கட்டணம் வைத்திருக்கிறேன். ஆனால் உன்னுடைய மனத்திற்கு 5 டாலர்கள் போதும்' என்று கூறினான். அவளுக்கு எந்த வகையான மனம் இருந்தது?

நன்றாக வளர்ச்சியடைந்த பக்குவப்பட்ட மனம் உடைய வர்களுக்கு போலி மருத்துவர்களின் உதவி தேவையற்றது ஆகும். அவர்கள், அவர்களாகவே உண்மையைக் கண்டறிய விரும்புவார்கள். யோகப் பயிற்சியின் முறையான கட்டுப் பாட்டின்மூலம் நம்முடைய கடந்த கால வாழ்க்கைகளின் நினைவுகளைப் புதுப்பித்துக்கொள்ள இயலும். மிகச் சிறந்த யோகாச்சாரியரான பதஞ்சலி 'பேராசைகளிலிருந்து விடுபட்ட தன்மை உறுதியானால், ஒருவனுடைய முற்பிறவிகளைக் குறித்த எப்படி, எதற்காக என்னும் அறிவினை யோகி பெறு கிறான்' என்று கூறுகிறார்.[1] மற்றும் 'தன்னுடைய மனத் திலுள்ள பதிவுகளை உணர்வதால் (ஸம்ஸ்காரங்கள்) யோகி யானவன், தன் கடந்தகால வாழ்க்கையைக் குறித்த அறி வினை அடைகிறான்'[2] நம்முடைய கடந்த கால வாழ்க்கை யின் நினைவுகளைப் புதுப்பித்துக்கொள்ள இயலும். ஆனால் அதிக ஆர்வம் கொள்ளாமல் இருப்பது நல்லதாகும்.

நம்முடைய இயல்பான மனப்பாங்குகளைத் தூய்மை யான மனத்துடன் தியானித்தால், நம்முடைய கடந்த காலத்தைப்பற்றிய ஒரு சிறு தோற்றத்தையாவது நாம் பெறலாம். அது நம்முடைய நிகழ் காலத்தைப் புரிந்து கொள்ளவும், மற்றும் எதிர்காலத்திற்கு நம்மைப் பயிற்சியால் பழக்கப்படுத்திக்கொள்வதற்கும் உதவும். உலகத்திலுள்ள மிகச்சிறந்த சில குருமார்கள், தங்களுடைய சொந்த கடந்த கால வாழ்க்கைகளைப்பற்றி அறிந்திருந்தனர். மற்றும் அவர் களுடைய சீடர்களிடம் அவற்றைப்பற்றிப் பேசி உள்ளனர். ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனிடம் 'அர்ஜுனா, எனக்கும் உனக்கும் எத்தனையோ ஜன்மங்கள் சென்றுவிட்டன. நான் அவை எல்லாவற்றையும் அறிவேன். நீ அறிய மாட்டாய்' என்று கூறியுள்ளார்.[3] ஏசுநாதர் 'இதற்கு முன்புநான் ஏப்ரஹாமாக

---

1. அபரிக்ரஹஸ்தைர்யே ஜன்மகதந்தாஸம்போத:
—பதஞ்சலி யோக சூத்திரம், 2.39.

2. ஸம்ஸ்கார ஸாக்ஷாத்கரணாத் பூர்வஜாதி ஜ்ஞானம்
—பதஞ்சலியோக சூத்திரம், 3.18.

3. பகவத் கீதை, 4.5.

இருந்தேன்' என்று கூறியுள்ளார்.[1] தெய்வீக அவதாரங்கள் இம் முறையில் பேசியுள்ளனர். அவர்கள் வரையற்ற விழிப் புணர்வுடன் பிறந்து இருப்பதால் கடந்த காலங்களை நினைவு கூர்கிறார்கள். அதனால்தான் வாழ்க்கை என்னும் நாடகத்தில் அவர்களுடைய பாத்திரங்களை அவர்களால் அத்தனை நன்றாகச் செய்ய இயலுகிறது.

புத்தர் ஒருபொழுதும் தன்னைத் தெய்வீக அவதாரம் என்று உரிமை கொண்டாடவில்லை. ஆனால் பிற்காலத்தில் அவரைப் பின்பற்றியவர்கள் அவரை அவ்விதம் கருதினர். எப்படி இருப்பினும், அவர் தொடர்ச்சியாக வந்த பிறவி களில் நிர்வாணம் அல்லது ஞானத்தை அடையும் காலம் வரும்வரையிலும் பல வகையான தூய்மைப்பாடுகளைக் கடந்துவந்தார்.

அவர் ஒரு அரசரின் மகனாக இருந்தார். மற்றும் உண்மையை உணரும் நாட்டத்தால், உலக வாழ்க்கையைத் துறந்தார். ஞான ஒளியை அடைந்ததும், தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொருவரிடமும் தன்னுடைய அனுபவத்தைப் பங் கிட்டுக் கொள்ள எண்ணினார். அவர் கையில் கப்பரையுடன் ஒவ்வொரு வீடாகச் சென்றார். அரச பரம்பரையைச் சேர்ந்த அவருடைய தந்தை மனம் நொந்தார். மற்றும் 'நம்முடைய மிகச் சிறந்த குடும்பத்தின் ஒரு உறுப்பினர் தன்னுடைய உணவிற்காக வீடு வீடாகச் சென்று இரக்கக் கூடாது' என்று தன் மகனிடம் வாதிட்டார். ஆனால் புத்தரை அவர் போக்கி லிருந்து மாற்ற இயலவில்லை. 'அரசனே, நீ அரசர்களிட மிருந்து மரபுவழி உரிமையை உரிமை கொண்டாடுகிறாய். ஆனால், என்னுடைய மரபுவழி உரிமையானது முற்றிலும் வேறுபட்டது. நான் புத்தர்களின் (ஞான ஒளி பெற்றவர் களின்) வழிமரபில் பிறந்துள்ளேன். அவர்கள் செய்ததைப் போல அறம் செய்வோரிடமிருந்து அவர்கள் உணவை இரந்ததைப்போல நானும் செய்கிறேன். என்னால் வேறு வழியில் செய்ய இயலாது' என்று பதில் கூறினார்.

1. *பைபிள்—செயின்ட் ஜான், 8:58.*

சாதாரணமானவனை விட அவருடைய விழிப்புணர்வு நிலை வேறுபட்டிருந்தது. நாம் அடுத்தடுத்து நம் குடும்ப மரபுக் கிளைவழி விளக்கப்படத்தைக் (Family tree) குறித்து எத்தனை மிகைப்படுத்துகிறோம். எந்த ஒரு குடும்ப மரபுக்கிளை வழிவிளக்கப்படத்தை விட ஆன்மா பழைமையானது என் பதை மறந்து விடுகிறோம்.

இஸ்லாமிய மதம், மற்ற செமிட்டிக் மதங்களைப் போல மறுபிறவிக் கோட்பாட்டை நம்புவது இல்லை. ஆனால் அது பர்சியா (Persia)வில் பரவிய பொழுது மற்ற சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்புற்றது. அது சூபியிஸம் (Sufism) என்னும் மெய்ஞ்ஞானிகளின் இயக்கத்தைத் தோற்றம் கொள்ளச் செய்தது. மிகச் சிறந்த சூபி மெய்ஞ்ஞானி களில் ஒருவரான ஜலாலுதின் ரூமி தன்னுடைய ஒரு கவிதையில்,

'நான் கனிப்பொருளாக இறந்து ஒரு செடியானேன்,
நான் செடியாக இறந்து விலங்காக உயர்ந்தேன்,
நான் விலங்காக இறந்து, நான் மனிதனானேன்.
நான் ஏன் அஞ்ச வேண்டும்? இறப்பதால் நான்
எப்பொழுது தாழ்ந்தேன்?
தேவதைகளுடன் உயரத்தில் பறப்பதற்காக,
மேலும் ஒருமுறை நான் மனிதனாக இறப்பேன்
ஆனால் தேவதையின் இயல்பிலிருந்தும் நான்
கடந்து செல்ல வேண்டும். கடவுளைத் தவிர
அனைத்தும் அழியும்
தேவதை நிலையை நான் இழந்த பிறகு, நான் என்ன
ஆகிறேன் என்பதை எந்த மனமும் ஒருபொழுதும் உணராது.
ஓ! தோன்ற வேண்டாம். ஏனெனில் தோன்றாமையை
இசைக் கருவி ஒலித்து அறிவிக்கிறது.
'கடவுளிடம் நாம் திரும்புவோம்.'[1]

---

1. Jalalud-Din Rumi (Quoted by R.A. Nicholson, The Mystics of Islam, London, Routledge and Kegan Paul, 1963) p.*168*.

ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் விவேகானந்தரின் வாழ்க்கைகளிலிருந்து சான்று[1]

ஒருமுறை ஸ்ரீராமகிருஷ்ணர் 'தான் இந்த கவச உறையிலிருந்து (அவருடைய உடல் என்பது பொருள்) சத்-சித்-ஆனந்தம் வெளிப்படுவதைக் கண்டிருக்கிறேன்' என்று கூறினார். மேலும், 'ஒவ்வொரு யுகத்திலும் நான் அவதரிக்கிறேன்' என்றும் கூறியுள்ளார்.[2] அவர் இவ்வுலகை விட்டு மறைவதற்குச் சில நாட்கள் முன்பு அவருடைய மிகச் சிறந்த சீடரான விவேகானந்தர் அவருடன் இருந்தார். அவர் கடவுள் அவரிடம் வெளிப்படுவதாகக் குருதேவர் கூறக் கேட்டிருக்கிறார். எதையுமே முதலில் ஆராயாமல் ஏற்றுக் கொள்ளும் மனிதராக விவேகானந்தர் இருக்கவில்லை. 'அவருடைய உடல் அழியப்போகும் இருந்த நேரத்தில் கடவுள் அவரிடம் தோன்றியுள்ளது என்பதை நான் கேட்க நேரிட்டால் அவர் உண்மையான, மனித உருக் கொண்ட கடவுள் என்பதை நம்புவேன்' என்னும் ஆர்வமானது பெரிதளவில் கணநேரத்திற்கு அவர் மனத்தில் தோன்றியது. அவருக்கு இந்த எண்ணம் தோன்றிய அதே சமயத்தில், குருநாதர் அவர் பக்கம் திரும்பி மிகத் தெளிவாக 'இன்னும் நம்பவில்லையா? ராமராகவும் கிருஷ்ணராகவும் இருந்தவர், இந்த உடலில் இப்பொழுது ராமகிருஷ்ணராகத் தோன்றி யுள்ளார்' என்று கூறினார். குருநாதரின் சொற்களை இதற்கு முன்பு நம்பாததற்காக விவேகானந்தர் தன்மீது வெட்கப் பட்டார்.

விவேகானந்தர் முதன்முதலில் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்தபொழுது, அப்பொழுது அவர் நரேந்திரனாக, திறமை மிகுந்த பண்பட்ட கல்லூரி மாணவனாக இருந்தார். குருநாதர் அவரிடம், 'நீ பழங்காலத்தில் இருந்த ரிஷிகளுள் ஒருவ னாவாய். மனிதகுலத்தின் துன்பங்களை அகற்றுவதற்காக

1. *சுவாமி விவேகானந்தர்: விரிவான வாழ்க்கை வரலாறு, பகுதி1 & 2 (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 5-வது பதிப்பு, 2007)*

2. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 3.52.*

இந்த பூமியில் அவதரித்துள்ளாய்' என்று கூறினார். இளைஞ னான நரேந்திரன், 'என் தந்தை கல்கத்தாவில் வசிக்கிறார். நான் என்னை இன்னின்னார் என்று அறிவேன். இருப்பினும் இவர் என்னைப் பழங்காலத்தில் இருந்த ரிஷி என்று கூறு கிறாரே' என்று எண்ணினார். மற்றும் குருதேவர் பைத்திய மாக இருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வந்தார். எப்படி இருப்பினும் அடுத்தமுறை நரேந்திரன் அவரைச் சந்தித்த பொழுது குருதேவர் நரேந்திரனை ஒரு ஆன்மீக மெய்மறந்த நிலையில் ஆழ்த்தினார். அதில் புறவுலக உணர்வு அனைத்தும் அகன்று விட்டது. அந்த நிலையில் அவர் தன் சீடனைப் பற்றி என்ன செய்தியை அறிய விரும்பினாரோ, அதை அறிந்து கொண்டார். இதைக் குறித்து அவர் பிறகு பேசினார், 'நான் நரேந்திரனை அவனுடைய முன்வரலாறுகள் பற்றியும், இருப் பிடம் குறித்தும், உலகத்தில் அவனுடைய பணித்திட்டம் குறித்தும், மற்றும் அவனுடைய வாழ்க்கையின் காலவரை யறை குறித்தும் கேட்டேன். அவன் மிக ஆழமாகத் தன் னுள்ளே மூழ்கி, தகுந்த பதில்களைக் கொடுத்தான். நான் நரேந்திரனைக் குறித்து அவனிடம் கண்டதையும், உணர்ந் ததையும் அவை உறுதி செய்தன. இவைகள் ரகசியமாக வைத்திருக்கப்பட வேண்டியவை ஆகும். பரிபூரணத்தை அடைந்திருந்த ஒரு தவமுனிவர் தியானத்தில் கரைகண்டவர் மற்றும், என்று அவர் தன்னுடைய உண்மையான இயல்பை அறிந்து கொள்கிறாரோ, அப்பொழுது யோகத்தால் விருப்பப் படி உடலை விட்டுவிடுவார் என்பதையும் நான் அறிந்து கொண்டேன்.'

மனிதகுலத்தின் நலனை உயர்த்துவதற்காக விவே கானந்தர் தீவிரமான செயல்பாடுகளுடன் கூடிய வாழ்க் கையை வாழ்ந்தார். அவருடைய உடலால் தாங்கவியலாத அளவிற்கு அத்தனை தீவிரமான வாழ்க்கையாக இருந்தது. அவர் இவ்வுலகைவிட்டு மறைவதற்குச் சில நாட்கள் முன்பு (அவர் தன்னுடைய நாற்பதாம் வயதிற்கு முன்பே மறைந் தார்) அவருடைய சில சகோதரச் சீடர்கள் அவரை, இப் பொழுதாவது உனக்கு நீ யார் என்று தெரியுமா? என்று

கேட்டனர். அதற்கு அவர் 'ஆமாம், எனக்குத் தெரியும்' என்று எத்தகைய உணர்ச்சியுமின்றி பதிலளித்தார். அங்கு ஒரு அச்சம்தரும் அமைதி நிலவியது. அவருடைய சகோதர சீடர் களுக்கு அதைத் தகர்க்கப் பயமாக இருந்தது.

சில நாட்களுக்குப்பிறகு, அவர் இவ்வுலகை விட்டு மறைவதற்கு மூன்று நாட்கள் முன்பாக, துறவிகள் தங்கும் இடத்திற்கு அருகில், கங்கை நதிக்கரையில் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டிக்காட்டி, 'நான் என் உடலை விடும்பொழுது அதை அங்கு எரியூட்டுங்கள்' என்று சுவாமிஜி கூறினார். ஸ்ரீராமகிருஷ்ணரின் உடல் எங்கு தகனம் செய்யப்பட்டதோ அதற்கு எதிர்ப்புறத்தில் அது இருந்தது.

அவருடைய பல சகோதரச் சீடர்கள் சுவாமிஜியால் 'நான் மரணத்திற்கு ஆயத்தம் ஆகிக் கொண்டிருக்கிறேன்' என்று எச்சரிக்கப்பட்டிருந்தனர். அவர் மறைந்த அன்று, அவர் தனியாகப் பிரார்த்தனை செய்யும் இடத்தில், மூன்று மணி நேரத்திற்குத் தனியாக தியானம் செய்தார். அதன்பிறகு அவர் ஸம்ஸ்க்ருத மொழி வகுப்பு எடுத்தார். சில நேரங்களில் சீடர்களுடன் உரையாடிக் கொண்டு, அவருடைய போதனை களை நகைச் சுவையுடன் கூடிய கதைகளுடன் விவரித்தார். அதன் பிறகு, நீண்ட தொலைவு உலாவிவிட்டு வந்தபிறகு துறவிகளுடன் சிறிது நேரம் உரையாடினார். மாலை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது, அவருடைய மனம் மேலும் மேலும் உள்முகமாக இழுக்கப்பட்டது. அவர் தன் அறைக்குத் திரும்பச் சென்று, கங்கையை நோக்கியபடி தியானம் செய்ய அமர்ந்தார். அவர் யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்று கூறி இருந்தார். ஒரு மணிநேரம் கடந்த பிறகு துறவிகளில் ஒருவரை அழைத்து அவருக்கு விசிறுமாறு கேட்டுக்கொண்டார். பிறகு அவர் தன் படுக்கையில் கிடக்கை கொண்டார். அவர் கைகள் சிறிதளவு நடுங்கின. நன்கு ஆழமாக மூச்சுவிட்டார். அவர் கண்கள் அசையவில்லை. அவருடைய முகம் ஒரு தெய்வீகத் தோற்றத்தை அடைந்தது. மற்றும் எல்லாம் முடிந்துவிட்டது. ஆன்மா உடலை விட்டு அகன்று விட்டது. அது மரணமா?

வடமொழியில், இது மரணம் என்று அழைக்கப்படுவது இல்லை. ஆனால் மஹாசமாதியாகும். ஆனால் சாதாரண சமாதி நிலையில் ஆன்மாவானது புலன் உலக வாழ்விற்குத் திரும்புகிறது. ஆனால் மஹாசமாதி அல்லது மிக உயர்ந்த சமாதியில், இறுதியாக உயர்ந்த விழிப்புணர்வுடைய மட்டத்தை அடைந்தபிறகு, ஆன்மாவிற்கு மேற்கொண்டு உடலின் தேவை இருப்பதில்லை, உடல் அழிகிறது. உடல் தொடர்பான நோக்கு நிலையில் மரணத்திற்கு வெளித் தோற்றம் உள்ளது. ஆனால் உண்மையாக, ஆன்மாவானது உயர்ந்த விழிப்புணர்வு நிலையில் தங்கியிருப்பதற்காக விடு விக்கப்படுகிறது.

சுவாமிஜி மஹாசமாதி அடைந்த நேரத்தில் துறவறத் திற்கு முன்பு சஷி மஹராஜ் என்று அறியப்பட்ட அவருடைய சகோதர சீடர் ஸ்ரீராமகிருஷ்ணானந்தர், சென்னையில் அவ ருடைய சிறந்த குருவின் செயல்களைச் செயற்படுத்திக் கொண்டிருந்தார். சுவாமிஜி இவ்வுலகை விட்டு மறைந்த சிறிது நேரத்தில் இராமகிருஷ்ணானந்தர் தியானத்தில் அமர்ந் திருந்த பொழுது, 'சஷி, சஷி, நான் என் உடலை உதறி விட்டேன்' என்று அவரை அழைத்தது போல இருந்தது.[1] அது அவருக்கு நன்கு பழக்கப்பட்ட குரலாக இருந்தது. மற்றும் அவர் உடனடியாக அது சுவாமி விவேகானந்தரின் குரல் என்று அடையாளம் கண்டு கொண்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ராகாலைக் குறித்து (பின்னாளில் சுவாமி பிரம்மானந்தரானவர்) பிருந்தாவனத்திலிருந்த கோவலன் என்று பேசுவதுண்டு. அவர் ஒருமுறை தனிச்சிறப் புடன் கூடிய ஒரு தெய்வீகக் காட்சியைக்கண்டார். அதில் அவர், நூறு இதழ்களுடன் கூடி தாமரை மலர் மலர்வதைக் கண்டார். ஒவ்வொரு இதழும் நயத்துடனும், எழிலுடனும் ஒளிர்ந்துகொண்டிருந்தது. தாமரையின் மீது இரு சிறுவர்கள், பாதங்களில் சலங்கைகளுடன் நடனமாடிக் கொண்டிருந்தனர்.

---

1. The Story of a Dedicated Life *(சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 1958) பக்கம் 139.*

அவர்களில் ஒருவர் ஸ்ரீகிருஷ்ணரே ஆவார். மற்றொருவர் ராகால் ஆவார்.[1] சுவாமி விவேகானந்தரின் விஷயத்தில் நிகழ்ந்ததைப்போல! சுவாமி பிரம்மானந்தரின் விஷயத்திலும், குருதேவர் கண்ட தெய்வீகக் காட்சியின் உண்மையானது பிறகு மெய்ப்பிக்கப்பட்டது. சுவாமி பிரம்மானந்தர் மரணப்படுக்கையில் இருந்தபொழுது அவருக்கு ஒரு தனிச் சிறப்புடன் கூடிய தெய்வீகக் காட்சி தோன்றியது. அதில் அவர் சிறுவன் கிருஷ்ணனை ஒப்புவமை அற்ற அவனுடைய அழகுடன் அவரைத் தன்னுடன் நடனமாடும்படிக் கேட்டுக் கொண்டதைக் கண்டார். சுவாமிஜி தெய்வீகப் பரவசநிலையில், 'நான்தான் கோவலன். என் பாதங்களில் சலங்கைகளைக் கட்டுங்கள். நான் கிருஷ்ணனுடன் நடனமாட விரும்புகிறேன்' என்று கத்தினார். 'நீ கிருஷ்ணனைக் காணவில்லையா? உனக்குக் காண்பதற்குக் கண்கள் இல்லையா? என்னுடைய ஆட்டம் முடிந்துவிட்டது. குழந்தை கிருஷ்ணன் என்னைச் சீராட்டுவதைப்பார். அவனுடன் வந்துவிடும்படி அவன் என்னை அழைக்கிறான்! நான் வருகிறேன்.'[2]

நாம் அனைவரும் அழிவற்றவர்கள்—ஆனால் நாம் அதை அறியோம்

'இந்த உலகத்தில் உயர்ந்த ஞான ஒளி பெற்ற உயிர்களில் ஒரு சிலர் இந்த உலகத்தில் தோன்றுவதற்கு முன்பே வாழ்ந்திருக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொண்டால், சாதாரணமான மனிதர்களான நம் நிலை என்ன?' என்று ஒருவர் கேட்கலாம்.

நம் ஒவ்வொருவரின் ஆன்மாவும் பிறப்பு, இறப்பிற்கு அப்பாற்றபட்டதாகும். அறியாமையால், ஆன்மாவானது, விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உடலுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது என்று வேதாந்தம்

---

1. Swami Prabhavananda, The Eternal Companion (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம்,15-வது பதிப்பு, 2007) பக்கம் 15.

2. மேற்கண்ட நூல், பக்கம் 124-125.

கூறுகிறது. ஞான ஒளியை அடையாதவர்களின் விஷயத்தில், வாழ்வு சுருங்கும் பொழுது உடல் அழிகிறது. ஆன்மாவானது மற்ற உடல்களுக்கு மீண்டும் மீண்டும் கொண்டுவரப்படுகிறது. உணர்ச்சிகள் ஒடுங்கிய, அமைதியான விலைமதிக்க வியலாத அனுபவம், இந்த ஞான ஒளியைப் பெறுவதற்கு முன்னோடியாக உள்ள அனுபவம், ஒருவரை பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சிக்கு அப்பால் கொண்டு செல்கிறது.

நம் குருமார்கள், மனிதப் பிறவி என்பது அரிய சிறப்புரிமை வாய்ந்தது என்று நமக்குக் கூறுகின்றனர். இந்த வாழ்க்கையில், மிக உயர்ந்த பரிபூரண நிலையையும் உண்மையையும் அடையும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. தெய்வீகத் திரு அவதாரங்கள் மிக உயர்ந்த ஞானஒளியை அடைந்த குருமார்கள் மட்டுமன்றி சாதாரண மனிதர்களான நாமும் அதே பரம்பொருளின் வெளிப்பாடுகளாகவே விளங்குகிறோம். சந்தேகத்திற்கு இடமின்றி, வெளிப்பட்டுள்ள தன்மைகளில் வேறுபாடுகள் இருந்தாலும், பரம்பொருளின் உள்ளியல்பு அதே தன்மை உடையதாகவே உள்ளது. நமக்குக் கடலின் ஒப்புமை, கொடுக்கப்பட்டுள்ளது. அலைகள், மற்றும் நீர்க்குமிழிகள் எல்லாம் ஒரே பொருளைச் சார்ந்தவைதான், வெளிப்பட்டுள்ள தன்மையில் மட்டுமே வேறுபட்டு விளங்குகிறது. விவேகானந்தர் மீண்டும் மீண்டும் ‘ஒவ்வொரு ஆன்மாவும் இயல்திறமுறையில் தெய்வீகத் தன்மை உடையது. மற்றும் இந்த உள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துவதே இலட்சியம் ஆகும்’ என்று சாற்றியுள்ளார்.[1]

இந்த ஆன்மாவானது நம்பிக்கையின் மூலமும், பக்தியின் மூலமும் தியானத்தின்மூலமும் உணரப்பட வேண்டும். அதே ஆன்மாதான் நம்முடைய ஆன்மாக்களிலும் மற்ற எல்லா ஆன்மாக்களிலும் ஒளிர்கிறது. நாம் அனைவரும் அதே ஒளியைத்தான் பிரதிபலிக்கிறோம். இந்த வரையற்ற ஒரு ஆன்மா மற்ற தனிப்பட்ட ஆன்மாக்களின்மூலம் தன்னை

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 2.156.

வெளிப்படுத்திக் கொள்கிறது. தனிப்பட்ட ஆன்மா, எங்கும் வியாபித்துள்ள பரம் பொருளின் அம்சம் என்று உணர்வதே ஆன்மீக ஞானமாகும். ஆன்மாவை உணர்வதால் எல்லா அறியாமையும், மற்றும் ஆசைகளும் மிக சூக்ஷ்மமான உருவில் இருப்பதும் கூட அகன்று விடும். பிறகு நாம் ஞான ஒளி அடைந்தவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நம் உள்ளே உறையும் தெய்வீகத்தை உணர்ந்து வாழ்க்கை மற்றும் மரணத்தின் புதிரை, சிக்கலை அகற்றுவோம். ஞான ஒளியை அடைந்த பிறகும் கூட, தெய்வீக ஞானம் ஆன்மீக விழிப் புணர்வு கடவுளை உணர்தல் என்பவை குறித்து ஓரளவு அறிந்துகொள்ள மற்றவர்களுக்கு உதவுவதற்காக நாம் இவ் வுலகிற்குத் திரும்பி வரக்கூடும்.

4

கடவுளைக் குறித்த பலவகையான கருத்துக்கள்

பரம்பொருளைத் தேடி

மனிதநாகரீகம் தோன்றிய நாள் முதல், இந்தப் பிரம்மாண்டத்தின் புதிரைப்பற்றி அறிந்துகொள்வதற்கு மனிதன் முயற்சி செய்துகொண்டிருக்கிறான் என்பதை நாம் அறிகிறோம். ஒரு புறத்தில் இயற்கையை உள்ளபடியே அதனுடைய மிகச்சிக்கலான துறைகளிலும், எண்ணற்ற உயிரினங்களையும் அவன் ஆராய்ந்து அறிவதற்கு முயற்சி செய்துகொண்டு இருக்கிறான். மற்றொரு புறத்தில் இந்தப் பிரம்மாண்டத்தின் மூலாதாரத்தைக் கண்டு கொள்ளவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறான். ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், மனிதனின் மனத்தில் பல ஆண்டுகளாக உள்ள இக்கேள்விகளுடன் தொடங்குகிறது.

'வேதத்தை ஆராய்பவர்கள் (பின்வருமாறு) பேசு கிறார்கள். (ஆதி) காரணம் எது? பிரம்மமா? நாம் எங்கிருந்து தோன்றுகிறோம்? எதனால் உயிர் வாழ்கிறோம்? சேருமிடம் எது? வேதத்தை அறிந்த நாம் எதனால் ஏவப்பட்டு, இன்ப துன்பமாகிய கட்டுப்பாட்டில் இருக்கிறோம்?'[1]

அடுத்த பத்தியில், இக்கேள்விகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டிருந்த முனிவர்கள், இந்தப் பிரம்மாண்டத் தைக் குறித்து இருக்கக்கூடிய பொருத்தமான மூலகாரணத் தைப்பற்றி விவாதிப்பதைத் தொடர்கிறார்கள். அவர்கள் காலம், இயற்கை, விதிமுறை, நிகழ்ச்சிப் போக்கு,

---

1. ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 1.1.

பருப்பொருள், ஆற்றல், மனம், அகங்காரம் போன்றவற்றை ஆராய்வுக்குரிய விஷயங்களாக எடுத்துக் கொண்டனர் என்று உணர்ந்தனர். அவை தனித்தோ அல்லது சேர்ந்தோ இந்தப் பிரம்மாண்டத்திற்குக் காரணமாக இருக்கவியலாது. ஏனெனில் அவ்வனைத்தும் வேறு ஏதோ ஒன்றைச் சார்ந்துள்ளன என்று கண்டு கொண்டனர்.[1]

இத்தகைய மூலாதாரமான கேள்விகளுக்கு தர்க்கத்தின் மூலமாகவே தீர்வினைக் கண்டு கொள்வது இயலாத ஒன்று என்று உணர்ந்தபின் அவர்கள் அடுத்ததாக தியானப் பயிற்சியை மேற்கொண்டனர். மிக ஆழமாகச் சிந்தித்த பொழுது, பிரம்மன் என்று கூறப்படும் அந்த தன்னிகரற்ற மாறாத, நிலைத்த பரம்பொருளை எல்லா உயிரினங்களிலும் தன்னொளிர்வுடன் திகழும், காலம், அஹங்காரம் போன்ற அனைத்துச் செயல்பாடுகளையும் ஆட்சி புரியும் மேலாண்மை ஏற்று நடத்துபவராக உணர்ந்தனர்.[2]

இந்தப் பரம்பொருளின் இயல்பு என்ன? வேதகாலத் தொடக்கத்திலேயே, இந்திய முனிவர்கள் இந்த ஆய்வுப் பொருளில் ஆராய்ந்துகொண்டிருந்தனர். ரிக் வேதத்திலுள்ள பலராலும் அறியப்பட்டுள்ள நாஸதீய ஸூக்தத்தில்,

'படைப்பிற்கு முன்பு இல்லாமை இல்லை. இருப்பு இல்லை
பூமி இல்லை, மேலான ஆகாயம் இல்லை.
மூடி போன்று ஒன்றுள்ளதே அது என்ன? அது எங்குள்ளது?
இன்ப-துன்ப அனுபவம் யாருக்கு? ஆழமான அளக்க
முடியாத இந்த வெள்ளம் அப்பொழுது இருந்ததா?
அப்பொழுது மரணம் இல்லை, அமரத்துவமும் இல்லை
இரவுபகலின் அடையாளமே இல்லை, மூச்சற்ற
அந்த ஒரே இறைவன் தமது சக்தியால் சுவாசித்தார்
அவருக்கு அப்பால் அவரைத் தவிர வேறு எதுவும் இல்லை.
படைப்பிறகு முன்பு இருள் இருளால் மூடப்பட்டிருந்தது

---

1. *ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 1.2.*
2. *ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 1.3.*

இவ்வனைத்துமே அடையாளம் காண வியலாத
வெள்ளமாக இருந்தது.
எல்லாவற்றையும் தன்னுள்ளே கொண்டவராக
சூனியத்தால் மூடப்பட்டவராக, ஒரே ஒருவராக எந்த
இறைவன் இருந்தாரோ, அவர் தவத்தின்
மகிமையால் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்"[1]

என்று கூறப்பட்டுள்ளது.

மேலே மேற்கோள் காட்டப்பட்டுள்ள வரிகள் பிரம்மனின் இருமையற்ற தன்மையை விவரிக்கின்றன. படைப்பிற்கு முன்பே பிரம்மன் இருந்தது. பரிசுத்தமான, முழுமையான வரம்பற்ற பரம் பொருள் என்னும் கருத்துக்கூட இருமையற்ற உண்மையை வரையறைக்கு உட்படுத்தி விடுகிறது. அதனால்தான் அதன்பிறகு உபநிஷத்துக்களில் நாம், பரிபூரணமான உண்மையை விவரிக்கும் பொழுது 'இது அல்ல', 'இது அல்ல' என்னும் சொற்களைக் காண்கிறோம்.

சாங்கியம் என்று கூறப்படும் மற்றொரு கோட்பாட்டில் முழுமுதற் பொருளைக் குறித்து வேறுபட்ட கருத்து காணப்படுகிறது. இந்தியத் தத்துவங்களில், சாங்கியமானது மிகப் பழமையான முறையாக உள்ளது. ஒருவேளை மிகமிகப் பழமையான முறையாகவும் இருக்கக் கூடும். அது மற்ற எல்லா தரிசனங்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்து தர்மத்தில் உள்ள மற்ற எல்லா தரிசனங்களைச் சேர்ந்த, ஏறக்குறைய அனைவராலும் அதனுடைய ஆராயும் போக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புருஷன், மற்றும் பிரகிருதி என்பவை சாங்கியத்தின் இரண்டு அடிப்படையான வகையினங்கள் ஆகும். புருஷன் என்பது முழுமுதற் பொருளாகும். பிரக்ருதி என்பது பருப்பொருள் சார்ந்த, மனம், புலன்களையும் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் மூலமாகும். எத்தனை உயிரினங்கள் உள்ளனவோ, அத்தனை புருஷர்கள் உள்ளனர். புருஷனானது, வேதாந்தத்தின் தனிப்பட்ட

---

1. ரிக்வேதம், 10.129.1-3.

ஆன்மாவை (ஜீவனை) ஒத்துள்ளது. இந்த இரு தரிசனங்களின் படி 'ஆன்மா, தன்னுடைய உண்மையான இயல்பில் பரிசுத்த மான, விழிப்புணர்வுடையதாக, வரையற்றதாக, சாசுவதமான தாக உள்ளது. ஆனால் அறியாமையின் காரணமாகத் தன்னை மனத்துடனும், உடலுடனும் அடையாளம் கண்டுகொண்டு, வாழும் உயிராக மீண்டும் மீண்டும் பிறக்கிறது. வேதாந்தத் தின் இருமைத் தன்மையற்ற தரிசனத்தின் மாயை அல்லது இயலுலக அண்டத்திற்குரிய அறியாமை என்னும் கருத் தானது சாங்கியத்தின் பிரக்ருதியை தோராயமாக ஒத்துள்ளது. இந்த இரு தரிசனங்களிலும், ஆன்மா, மற்றும் ஆன்மா அல்லாதனவற்றை அடிப்படையில் வேறுபடுத்திக் கண்டறி யும் அறிவுதான் ஜீவனை அதனுடைய பிணைப்பிலிருந்து விடுவிக்கும் ஒரே வழியாக உள்ளது. இவைதான் சாங்கியத் திற்கும், வேதாந்தத்திற்கும் இடையிலுள்ள பொதுவான கருத்துக்களாக உள்ளன.

ஆனால் வேதாந்தம், பிரம்மன் என்று கூறப்படும் எல்லாவற்றையும் கடந்த உண்மை என்னும் ஒரு கருத்தையும் கொண்டுள்ளது. அது சத், சித், ஆனந்தமயமான முழுமுதற் பொருளாகும். அது ஆன்மாக்களாகவும், பருப்பொருள் சார்ந்ததாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அன்றியும், வேதாந்தத்திற்கு உரியதைப் போன்ற முழுமுதற் கடவுள் அல்லது ஈஸ்வரன் என்பதற்கு சாங்கியத்தில் எந்த இடமும் இல்லை. எல்லா ஆன்மாக்களும் ஒரே வகையிலே இடம் பெற்றுள்ளன. மற்றும் சாங்கியத்திலோ அல்லது யோகத்திலோ ஈஸ்வரனைக் குறித்து ஏதாவது கூறப்பட்டிருந் தால், அது எப்பொழுதும் தன்னிச்சையாக உள்ள எல்லா குருமார்களுக்கும் குருவாக விளங்கும் ஒரு சிறப்புத்தன்மை பெற்று விளங்கும் புருஷனையே குறிக்கும். ஆனால் அந்தப் புருஷன் கடவுள் ஆக மாட்டார். பக்தியினாலும், ஈசுவரனுக்கு முழுமையாகச் சரணடைவதாலும் ஒருவர் நேரடியாக சமாதி நிலையை அடையலாம் என்று பதஞ்சலி கூறுகிறார். பிரம்மாண்டத்தின் தோற்றமும், அழிவும் பிரக்ருதியில் சாசுவதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். வேதாந்தத்தில்

பிரம்மா அல்லது ஹிரண்யகர்ப்பன் என்று அழைக்கப் படும் இவ்வுலகைப் படைத்தவர், எல்லாவற்றையும் கட்டுப் படுத்தும் ஈஸ்வரனைவிடத் தாழ்ந்தவர் ஆவார். விவேகானந்த ரின் கருத்தின்படி ஈஸ்வரன், பரம் பொருளின் மிகவும் உயர்ந்த அளவு நிலை ஆவார்.

விஷ்ணு, சிவன், தேவி போன்ற கடவுள்களை ஈஸ்வரன் அல்லது ஒப்புயர்வற்ற பரத்துவத்துடன் அடையாளம் கண்டு கொள்வது வேதாந்தத்தின் மற்றொரு சிறப்பியல்பாகும். திரு அவதாரங்களும் மீண்டும் மீண்டும் ஈஸ்வரனுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றன. பாகவதம் ஸ்ரீகிருஷ்ணனை கடவுளின் பல அவதாரங்களில் ஒரு அவதாரம் என்று எண்ண மறுக்கிறது. அவர் பரம் பொருளைத் தவிர வேறு யாருமில்லை. 'கிருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்'[1] தேவர்களும், முனிவர்களும் ஸ்ரீகிருஷ்ணனுக்குச் செய்த பிரார்த்தனையில், தவறு இழைக்காத ஆற்றலை உடைய புருஷனே, உன்னிடமிருந்து ஆற்றலைப் பெறுகிறோம். முதிரா நிலையிலுள்ள இந்த பிரம்மாண்டத்தைப் போல, மாயையுடன் மஹத்தைத் தன்னுள்ளே வைத்துக் கொள்பவன் ஆவான். இந்த மஹத், அதே மாயையால் ஆதரிக்கப்பட்டு, தன்னுள்ளேயிருந்து, பலவகையான அடுக்குகளைக் கொண்ட தங்கமயமான பேரண்டத்தை வெளிப்படுத்தியது'[2] என்னும் விவரத்தைக் காண்கிறோம்.

திரு அவதாரத்தைப் பரம்பொருளுடன் இவ்விதம் அடையாளம் கண்டு கொள்வது பகவத்கீதையிலும் காணப் படுகிறது.

'இவ்வுலகத்தில் க்ஷரன் மற்றும் அக்ஷரன் என்னும் இவ்விருவரே புருஷர்கள் எனப்படுபவர்கள் ஆவார்கள். உருப்படைத்த அனைத்தும் க்ஷரபுருஷன். கூடஸ்தன் அக்ஷரபுருஷன் (ஆதி சங்கரரின் கருத்துப்படி, இது உலகத் தின் தொடக்கத்திலிருந்தே உள்ள அறியாமை அல்லது

1. *பாகவதம், 1.3.28.*
2. *மேற்கண்ட நூல், 11.6.16.*

மாயையாகும்). ஆனால் யார் மூவுலகத்திலும் புகுந்து நின்று தாங்குகிறானோ, மாறுதலற்றவனோ, இறைவனோ, பரமாத்மா என்று கூறப்பட்ட உத்தம புருஷனோ, அவன் வேறானவன் ஆவான். எந்தக் காரணத்தினால் நான் க்ஷரத்தைக் கடந்தவனோ, அக்ஷரத்திற்கும் கூட மேலானவனோ, அதனால் உலகத்திலும், வேதத்திலும் புருஷோத்தமன் என்று புகழ் பெற்றுள்ளேன்.'[1]

ஆன்மீக வாழ்வில் தனிப்பட்ட இஷ்ட தெய்வத்தின் இடம்

புனிதமான ஆளுமையில் பக்தனானவன் பரம்பொருளுக்கும், மனிதனுக்குமிடையில் ஒரு தொடர்பினை நாடுகிறான். முதலில் அவன் அந்த ஆளுமையின் அற்புதமான அழகால் இழுக்கப்படுகிறான். அதன்பிறகு அதன் மூலம் அவன் பரம்பொருளை உணர்கிறான்.

நம்முடைய எண்ணங்களை மையப்படுத்துவதற்கு நமக்கு ஏதாவது ஒன்று தேவைப்படுகிறது. ஏதாவது புனிதமான உருவத்தாலோ, புனிதமான ஆளுமையாலோ ஈர்க்கப்படவில்லை எனின், நாம் இயல்பாகவே ஏதாவது ஒரு மனித விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு அதைப் பற்றிக் கொள்கிறோம். இந்த உயர்ந்தவர்களில், முதலில் மனிதப் பண்புக் கூறுகளில் மயங்கினாலும், அதன்பிறகு நாம் அவர்களுடைய தெய்வத் தன்மையையும் காண்கிறோம். திருஅவதாரம் செய்துள்ளவரை வழிபடுவதின் அவசியம் இங்கு ஏற்புடையதாக உள்ளது. நாம் ஒரு கட்டத்தை உருவாக்க விரும்பினால் ஒரு உருப்படிவத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த அவதார புருஷர்களிடம் நாம் அவர்களுடைய உடல்களும், மனங்களும் கண்ணாடிப் பெட்டிகளைப் போல அமைந்துள்ளதையும் அதன் மூலம் பரம்பொருள் ஒளிர்வதைக் காண்கிறோம். அப்படியிருக்க, மிகைப்படுத்தினால்கூட நம்முடைய உடல்களும், மனங்களும் இரும்புப் பெட்டியாகத்தான் அமைந்துள்ளது. இந்த இரும்புப் பெட்டியைக்

---

1. பகவத் கீதை, 15.16-18.

கண்ணாடிப் பெட்டியாக மாற்றுவதுதான் நம்முடைய கடமையாகும். மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஆன்மீகப் பெரு முயற்சியால், அவதார புருஷர்கள் இரும்புப் பெட்டியைக் கண்ணாடிப் பெட்டியாக மாற்றும் வழியை நமக்குக் காட்டியுள்ளனர். அவதார புருஷர்களும் அவர்களுடைய மனங்களையும், உடல்களையும் முறையான ஆன்மீகப் பயிற்சியாலும், பண்படுத்திக் கொள்வதாலும் முழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களும் அதற்குக் காரணமாக உள்ள வழிகளைச் சரிசெய்து கொள்ள வேண்டும். புராணங்களில் இத்தகைய அவதார புருஷர்களைக் குறித்து விவரிக்கும் பொழுது, ஆளுமையும், தனிநடைமுறைக் கோட்பாடும் அற்புதமான முறையில் இணைந்து இருப்பதைக் காண்கிறோம். அவர்களுடைய விஷயத்தில் உயர்ந்த விழிப்புணர்வு நிலையானது, விழிப்பு உணர்வுள்ள நிலையின் மூலமாகவே வெளிப்படுகிறது. மற்றும் நாம் அவர்களுடைய மனிதப் பண்புக் கூறுகளால் ஈர்க்கப்பட்டால் உரிய நேரத்தில் தெய்வீகக் கூறுகளாலும் தொடப்படுவோம்.

முற்றிலும் அத்வைதக் கோட்பாடுகளைப் பின்பற்றும் ஒருவர்கூட, நம் முன் எண்ணங்களை வைக்க முற்பட்டால், நம்முடைய நிகழ்கால நிலையிலேயே நம்மால் அதைப் புரிந்துகொண்டு கிரகித்துக்கொள்ள இயலும். அவர் நம்முடைய கையைப்பிடித்துக் கொண்டு உயர்ந்த மற்றும் இன்னும் உயர்ந்த உண்மைகளிடம் நம்மை வழிநடத்திச் செல்ல ஆர்வமாக இருக்கிறார். உருவவழிபாடு என்பது அவசியமான ஒன்றுதான். ஆனால் அந்த நிலையைத் தாண்டி உயர வேண்டும். மற்றும் மனிதர்கள் தங்களுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மையப்படுத்துவதற்கு ஏதாவது புனிதமான விக்ரஹத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்கள் ஏதாவது மோசமான மனித விக்ரஹத்தை ஆண் பொம்மையையோ அல்லது பெண் பொம்மையையோ ஏற்றுக் கொண்டு வழிபட்டு, அதற்கு அடிமைகளாகி விடுவார்கள்.

எது சிறந்த உருவம்? இரத்தமும், சதையும் சேர்ந்த சாதாரண உருவமா அல்லது உயர்ந்த குறிக்கோளைச்

சுட்டிக்காட்டும் உருவமா? மனித உருவத்தில் உன்னால் உயர்ந்த குறிக்கோளைக் காணவியலாது. உருவமற்றதைக் குறித்து நீ நினைக்க முயற்சி செய்தால், உருவமற்றது உருவமற்றதாகவே ஆகி உருவமற்றதாகவே தொடர்ந்து நீடிக்கிறது. ஆனால் மனித உருவங்கள், ஆண் பொம்மைகளோ அல்லது பெண் பொம்மைகளோ நம்முடைய கவனத்தை எல்லாம் ஈர்த்து, நமக்கு இன்றியமையாத உண்மையாகி விடுகிறது. அதன்பிறகு அனைத்தும் இயல்பான முறையில் எதிர்பார்க்கக் கூடியதாக பின் தொடர்கின்றன.

நம்மிடம் உள்ள தெய்வாம்சம் நம் இயல்புகளிலிருந்து மாறுபட்டது. நம்மிடையே உள்ள ஆண் உருவம் அல்லது பெண் உருவத்தை விட மாறுபட்டது என்று எந்த அளவிற்கு நாம் நினைக்கிறோமோ, அதே அளவிற்கு, மற்றவர்களிடம் உள்ள தெய்வாம்சம் அவர்களுடைய உருவங்களைவிட அவர்களுடைய இயல்புகளைவிட ·மாறுபட்டது என்று எண்ண இயலும். அதன்பிறகு நாம் பாதுகாப்பாக இருப்போம். அதன்பிறகு எந்த ஒரு ஆண் பொம்மைக்கோ அல்லது ஒரு பெண் பொம்மைக்கோ ஒரு பொழுதும் அடிமையாக மாட்டோம்.

மனிதர்கள் நாடும் பரம்பொருளின் இயல்பைக் குறித்த கருத்துக்கள் அவர்கள் தங்களைப் பற்றி உணர்ந்து கொண்டுள்ள அறிவு வளர்ச்சிக்குத் தகுந்தாற் போன்று மாறுபடும். ஸ்ரீராமகிருஷ்ணர் 'பக்தர்களில் மூன்று வகையினர் உள்ளனர். கீழ் நிலையில் இருப்பவன் ''கடவுள் மேலே இருக்கிறார்'' என்று ஆகாயத்தைச் சுட்டிக்காட்டுகிறான். நடு நிலையில் இருக்கும் பக்தன், ''கடவுள் நம்மை வழிநடத்துபவராக இதயத்தில் வீற்றிருக்கிறார்'' என்று கூறுகிறான். மிக உயர்ந்த பக்தனானவன், ''கடவுளே இவ்வனைத்துமாக விளங்குகிறார். நாம் காணும் எல்லாப் பொருட்களும் கடவுளின் பல வடிவங்களாக உள்ளன'' என்று கூறுகிறான்'[1] என்று கூறியுள்ளார்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 2.95.*

அன்றியும் அவர், 'அது எப்படித் தெரியுமா? கங்குகரையற்ற சச்சிதானந்தப் பெருங்கடலில் பக்தி என்னும் குளிர்ச்சியால் தண்ணீர் அங்கங்கே உறைந்து பனிக்கட்டியாகிறது. திடமான பனிக்கட்டியாகி விடுகிறது. அதாவது பக்தர்களுக்காக இறைவன் தனி நபராக வருகிறார். அதாவது சில வேளைகளில் உருவம் தாங்கி வருகிறார். ஞான சூரியன் உதித்தால் அந்தப் பனிக்கட்டி உருகி விடுகிறது. அப்பொழுது இறைவன் உருவம் உடையவர் என்பதை உணர்வதில்லை. அவர் யார் என்பதை வாயினால் கூற இயலாது. யார் கூறுவது? யார் கூறுவானோ அவனே இல்லை. அவனது நான் உணர்வு தேடினாலும் கிடைப்பதில்லை' என்று உருவம் கொண்ட கடவுளுக்கும், உருவமற்ற கடவுளுக்கும் இடையிலுள்ள தன்மைகளின் தொடர்பைத் தெளிவுப்படுத்தியுள்ளார்.[1]

பண்டைய இந்தியாவின் கடவுளைக் குறித்த கருத்தில் மாற்றம்

நாம் ஹிந்து தர்மத்தின் திருமறை நூல்களை ஆராய்ந்தால், கடவுள் தன்மையக் குறித்த பல்வேறு வகையான கருத்துக்களைக் கண்டுகொள்ளலாம். சில பக்தர்கள், கடவுளைக் குறித்து தெய்வீக வடிவங்கள் மற்றும் இயற்பண்புகள் என்னும் இரண்டையும் கொண்டவர் என்று கூறுகின்றனர். அவர்கள் கடவுளுடன் ஒரு தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள். மற்றவர்கள், உருவமற்றவராக இருந்தாலும், கடவுளானவர் அளவற்ற ஆற்றலும், ஞானமும், மற்றும் மற்ற இயல்புகளையும் உடையவர் என்று கூறுகின்றனர். அவர் பல்வேறு வகையான உருவங்களை மேற்கொள்கிறார். அவர்கள் தனிப்பட்ட பண்புக் கூறுகளைக் கவனத்தில் கொண்டாலும், அதன் வெளிப்பாடான தனிப்பட்ட தன்மையை, பண்புக் கூறை முக்கியமாக வலியுறுத்துகின்றனர்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.148.

பெரும்பாலான பக்தர்கள், அவர்களுடைய ஆன்மீக வாழ்வின் தொடக்க நிலைகளில், மனித உருவங்களையும், உணர்ச்சிக் கனிவுகளையும், பரம்பொருளுடன் தொடர்பு படுத்துவதைத் தவிர்க்க வியலாமல், பரம்பொருளை அவர்கள் அவர்களுடைய புறத்தோற்றம் என்று நினைக் கிறார்கள். சில நேரங்களில் நாம் உண்மையான பக்தியினால் அடைந்த தன்னுடைய தூய்மைப்பாட்டின் விளைவால், பக்தனானவன் அவனுள்ளேயே, இத்தனை காலமாக ஒரு வெளிப்புறப் பொருளாக பூஜித்துக்கொண்டிருந்த அதே பரம்பொருளின் தரிசனத்தைக் காண்பதைக் காண்கிறோம். பிறகு அவன் கடவுளை, உள்ளே உறையும் ஆன்மாவாக, காதின் காதாக, மனத்தின் மனமாக, பிராணனின் பிராணனாக உணர்கிறான்.[1] அதன் பிறகு அவன் கடவுளை, தீயில் இருப்ப வராக, நீரில் இருப்பவராக, தாவரங்களில் இருப்பவராக, மரங்களில் இருப்பவராக, உலகம் முழுவதும் வியாபித்து இருப்பவராக, ஆணாக, பெண்ணாக, சிறுமியாக, இளைஞ னாக, தன்னுடைய ஊன்று கோலின் மீது சாய்ந்து கொண் டுள்ள முதியவராக பல்வேறு உருவங்களில் தோன்றியுள்ள ஒரே கடவுளாகக் காண்கிறான்.[2]

கடவுள் அவனுக்கு இப்பொழுது அடிப்படை மெய்ம்மை ஆவார். எல்லா உயிரினங்களிலும், மற்றும் பொருள்களிலும் உள்ளார்ந்த ஒன்றாக இருப்பவர், அவர் வெறும் கடவுள்களின் கடவுள் அல்ல. எல்லோருடைய உண்மையான ஆன்மாவும், பேரண்டத்தின் உயிரும் ஆவார். மேலும் முன்னேறுகையில் மெய்யுணர்வாளர் கடவுளை அறிய எல்லையைக் கடந்த உட்பொருளாக, 'வாக்கிற்கும், எண்ணங்களுக்கும் அப்பாற்பட்டவராகக் காண்கிறார்.'[3]

'அகமுக நிலை அல்ல, புறமுக நிலை அல்ல, இரண்டும் சேர்ந்த நிலை அல்ல, அது உணர்வு திரண்ட நிலை அல்ல, உணர்வு நிலை அல்ல, உணர்வற்ற நிலையும் அல்ல. அதைக்

---

1. கேன உபநிஷதம், 1.2.
2. ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 2.17; 4.3.
3. தைத்திரீய உபநிஷதம், 2.4.1; 2.9.1.

காண இயலாது. செயல்களற்ற, புரிந்து கொள்ள இயலாத, அடையாளங்கள் இல்லாத, சிந்தனைக்கு அப்பாற்பட்ட விளக்க முடியாத நிலை அது. அதனை ஆன்ம உணர்வால் மட்டுமே அறியவியலும். அங்கே பிரபஞ்ச உணர்வு இல்லை, அது அமைதியானது, மங்களமானது, இரண்டற்றது.''[1]

வேதகால ரிஷிகள் மழையை அளிக்கும் இந்திரன், சூரியன் செல்லும் வழியைச் சீர் செய்யும் கடவுளான மித்ரன், ஒளிமயமான ஆகாயத்தில் இருந்து கொண்டு, செய்த தவற்றிற்காக வருந்துபவனைப் பாவத்திலிருந்து விடுவிக்கும் கடவுளான வருணன், சில நேரங்களில் தந்தை என்றும், சகோதரன் என்றும், இரத்தத் தொடர்புடைய உறவினர் என்றும், நண்பன் என்றும் கூறப்படும் நெருப்புக் கடவுளான அக்னியையும் வழிபட்டனர்.[2] இவ்வுலகத்தில் வாழ்க்கையை யும், செயல்பாடுகளையும் தூண்டும் சூரிய மண்டலக் கடவுளான ஸவிதுர் பக்தர்களின் புரிந்துகொள்ளும் ஆற்றலை வழிநடத்திச் செல்வதற்காக வணங்கி வழிபடப்பட்டார்.[3] ஆன்மீக விழிப்புணர்வின் ஆரம்ப நிலையிலேயே, சில வேதகால தீர்க்கதரிசிகள், இயற்கையின் ஒவ்வொரு இயற் நிகழ்ச்சியின் பின்னும் உள்ளே உறையும் கடவுளின் இருப்பை அடையாளம் கண்டு கொண்டனர் என்பது கருத்தைக் கவரும் உண்மையாக உள்ளது. அவர்களுடைய வெளிப்படையான பலதெய்வ வழிபாட்டிற்குப் பின்னால், வேரோடி இருந்த ஒரு கடவுட் கோட்பாடும் இருந்தது என்பது தெளிவாக விளக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு கடவுளும் வரவழைத்து முறையே எல்லாம் வல்ல, எல்லாம் அறிகிற, எங்கும் உள்ள தன்மை யுடையவராக வணங்கப்பட்டனர். பலராலும் நன்கு அறியப் பட்ட இப்பாடல் இதனை அறிவிக்கிறது. 'ஒரே கடவுளுக்கு முனிவர்கள் பல பெயர்களைக் கொடுத்துள்ளனர். அவர்கள் கடவுளை அக்னி, யமன், மாதரிச்வான் என்று அழைக்கின்றனர்.[4]

---

1. மாண்டுக்ய உபநிஷதம், 7.
2. ரிக் வேதம், 1.1.9.
3. ரிக் வேதம், 3.62.10.
4. ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்த்யக்னிம் யமம் மாதரிச்வானமாஹு:
—ரிக் வேதம், 1.164.46.

ரிக்வேத காலத்திற்குப் பிறகு, ஹிந்து தர்மத்தில் வழி பாட்டுடனும், பிரார்த்தனையுடனும் தொடர்புடைய அடை யாளங்களிலும், பெயர்களிலும் ஒரு அடிப்படையான மாறுதல் ஏற்பட்டது. ஒரு சமயத்தில் சிறிதளவே முக்கியத்துவம் பெற்றிருந்த பெயர்கள் பிற்காலத்தில் மிகமுக்கியத்துவம் வாய்ந்தவையாக மற்றும் புதிய பெயர்களும் தெய்வங்களின் வரிசையில் சேர்க்கப்பட்டன. பிற்காலத்தில் சிவன், விஷ்ணு, தேவி வழிபாடும், மற்றும் இராமர், கிருஷ்ணர் போன்ற திரு அவதாரங்களும் பலராலும் அறியப்பட்டவையாக விளங்கின. ஆனால் கருத்தைக் கவரும் இந்த மாற்றங்களின் நடுவில் ஹிந்து தர்மத்தைப் பின்பற்றும் பக்தனின், பரம்பொருளைக் குறித்த கருத்தும், அவனுடைய மிக உயர்ந்த ஆன்மீக நம்பிக்கையும், நாட்டங்களும், பரம்பொருளின் உறுதுணையை யும் வழிகாட்டுதலையும் நாடும் விருப்பமும், ஆன்மீக ஒருங் கிணைவிற்கான ஏக்கமும் மாற்றமடையாமல் இருந்தன. கடவுளின் எல்லாத் தனிப்பட்ட இயல்பின் பின்னணி, தனிநபரற்ற கோட்பாடுதான் மற்றும் அதுவே வேறுபட்ட சின்னங்கள் மூலம் வழிபடப்படும் எல்லா அவதார புருஷர் களின் மூலம் என்பது காலம் செல்லச் செல்ல மிக மிகத் தெளிவுடன் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அத்வைத வேதாந்தத்தின் படி, உண்மையாக ஒருவர் எந்தச் சின்னத்தைத் தேர்ந்தெடுத்தாலும் அல்லது எந்த ஆளுமையைப் போற்றத் தொடங்கினாலும், தனிப்பட்ட சிறப்பு இல்லாத, இருமை யற்ற ஒருமையில் எதில் வழிபடுபவர் வரையற்ற கடவு ளுடன் கலந்து ஒன்றுபடுகிறாரோ, அதுதான் வாழ்வின் மிக உயர்ந்த இலட்சியமான இறுதியான அனுபவமாகும்.

அந்த மிக உயர்ந்த அனுபவத்தில், மனிதனுக்கும், கடவுளுக்கும் இடையிலுள்ள எல்லா வேறுபாடுகளும், மற்றும் கடவுளுக்கும் இந்த உலகத்திற்கும் இடையிலுள்ள எல்லா வேறுபாடுகளும் மறைந்து விடுகின்றன. இரண்டற்ற ஒருமை மட்டுமே மிஞ்சுகிறது.

மேலே கூறப்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் ஹிந்து தர்மத்தில் பல ஒரு பொருண்மை தியானங்கள்,

ஆன்மா அல்லாதவற்றை மறுத்து, ஆன்மாவை உறுதி செய்கின்றன. 'நிர்வாண சதகத்தின் ஆறு பாடல்களில் ஆதி சங்கராச்சாரியார் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'நான் மனமும் அல்ல புத்தியும் அல்ல, நினைவாற்றலுமல்ல அகங்காரமுமல்ல, நான் கேட்கும், சுவைக்கும், முகரும், பார்க்கும் புலனும் அல்ல, நான் ஆகாயமும் அல்ல பூமியும் அல்ல; நெருப்பும் அல்ல, காற்றும் அல்ல. நான் ஞானமயமான பேரின்பமயமான முழுமுதற் பொருள். நான் எங்கும் வியாபித்துள்ள முழுமுதற்கடவுள், நான் எங்கும் வியாபித்துள்ள முழுமுதற் கடவுள்'[1]

'நான் வரம்பற்ற, மாறுபாடு அற்ற, உருவமற்ற எங்கும் வியாபித்து உள்ள மற்றும் எல்லா இடங்களிலும் இருப்பவன். புலன்களின் பிணைப்புப் பிடிக்கு அப்பாற்பட்டவன். நான் சுதந்திரம் கூட இல்லை. எத்தகைய பிணைப்பும் இருந்ததில்லை. நான் எல்லாத் தொடர்புடைய அறிவிற்கு அப்பாற்பட்டவன். நான் எங்கும் வியாபித்துள்ள முழுமுதற் கடவுள், நான் எங்கும் வியாபித்துள்ள முழுமுதற் கடவுள்.'[2]

இத்தகைய தியானமானது, உண்மையை அணுகுவதன் வழிமுறையாக உள்ளது. துணிச்சல் கொண்ட உபநிஷத் தீர்க்க தரிசிகளால், நிலைத்த பரம்பொருளைக் குறித்து அவர்களுடைய தியானத்தில் பின்பற்றப்பட்டதாகவும் உள்ளது.

'அது பெரியதுமன்று, சிறியதுமன்று; நீளமுமன்று, குள்ளமுமன்று; கண்களோ, காதுகளோ இல்லாதது; தொண்டையோ அல்லது மனமுமன்று, அகமும் இல்லை, புறமும் இல்லை;[3] இந்த சாசுவதமான பரம்பொருள் கண்ணிற்குப் புலப்படாதது. ஆனால் அது சாட்சியாக உள்ளது. அது ஒருபொழுதும் எண்ணப்படாதது. ஆனால் அது சிந்திக்கும் தன்மை உடையது. அதை ஒருபொழுதும் அறியவியலாது. ஆனால் அது எல்லாம் அறிந்ததாக உள்ளது.''[4]

---

1. சங்கராச்சாரியார், நிர்வாண சதகம்- பாடல் 1.
2. மேற்கண்ட நூல், பாடல் 6.
3. பிரஹதாரண்யக உபநிஷதம், 3.8.8.
4. பிரஹதாரண்யக உபநிஷதம், 3.7.23.

இந்த மிக உயர்ந்த, முழுமையான, புலனுணர்வுக்கு அப்பாற்பட்ட, இரண்டற்ற தன்மையுடைய உண்மை என்னும் கருத்தைத் தவிர, பண்டைக் கால இந்தியாவில் சாசுவதமான, எங்கும் நிறைந்துள்ள, தனிநபர் சாராத தெய்வீக அடிப்படை உண்மை, வரம்பிற்கு உட்பட்ட வடிவங்களின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும், வரம்பற்ற தன்மை உடையதாகவும் வடிவமற்றும் இருக்கிறது போன்ற கருத்துக்களும் வளரத் தொடங்கின. இதுதான் பிற்காலத்தில் விசிஷ்டாத்வைத கோட்பாடு என்னும் பெயருடன் அழைக்கப்பட்டது. உண்மையை நாடும் பலரும் அத்தகைய ஒரு தெய்வீக தத்துவத்தை விரும்பித் தேர்ந்தெடுத்தனர், அவர்கள் பரம்பொருளின் தனிப்பட்ட பண்புக் கூறுகளில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. உபநிஷதங்கள் அவைகளே, படைப்பு முழுவதிலும், இறைவனின் உள்ளுறை தன்மையைப் பற்றிய தியானங்களை உட்கொண்டிருக்கின்றன.

'கடவுள் மேற்புறத்தில் இருக்கிறார்; கடவுள் கீழ்ப்புறத்தில் இருக்கிறார்; கடவுள் பின்னால் இருக்கிறார்; கடவுள் முன்னால் இருக்கிறார்; கடவுள் தெற்கில் இருக்கிறார்; கடவுள் வடக்கில் இருக்கிறார்; உண்மையாக அவர் எங்கும் இருக்கிறார் மற்றும் எல்லாவற்றிலும் இருக்கிறார்.[1]' 'உயிரினங்களின் இதயக் குகைகளில் வீற்றிருக்கும் ஆன்மாவானது அணுவை விட அணுவானது, பெரியதை விடப் பெரியது.'[2]

'அவர் உள்ளேயும் மற்றும் பூமி, காற்று, சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்களின் நெடுகிலும் இருக்கிறார்.'

'அவர் உள்ளிருந்த படியே அனைத்தையும் ஒவ்வொரு உயிரையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்கிறார். அவர் உள்ளிருந்த படியே அரசாட்சி செய்கிறார். வழிபடுபவரின் அழிவற்ற ஆன்மாவாகத் திகழ்கிறார்.'[3]

---

1. *சாந்தோக்ய உபநிஷதம், 7.25.1.*
2. *கட உபநிஷதம், 1.2.20.*
3. *பிரஹதாரண்யக உபநிஷதம், 3.7.7.*

பக்தன் அவனுக்கும், கடவுளுக்கும் இடையில் வேறு பாட்டைத் தொடர்ந்து கைக் கொள்கிறான். அவன் தன்னை ஒரு ஆன்மாவாகவும் மற்றும் கடவுளை, எல்லா ஆன்மாக் களின் ஆன்மா என்றும் கருதுகிறான்.

கடவுளின் உருவ–அருவ பண்புக்கூறுகள்

ஆனால் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையில் 'அவ்வியக்தப் பொருளில் (கண்ணிற்குப் புலப்படாதது) நாட்டம் கொண்ட வர்களுக்குச் சிரமம் அதிகமானது. உடல் பற்று உடையவர் களால் அவ்வியக்த நெறி கஷ்டத்தாலேயே அடையப்படு கிறது அல்லவா?'[1] என்று கூறியுள்ளார். எனவே தனிப்பட்ட முறைகள் மற்றும் சின்னங்கள் வழியாக உருவமற்றதை வழிபாடு செய்வதோ, அதன்மீது தியானிப்பதோ, ஹிந்து தர்மத்தில், ஆன்மீகப் பயிற்சிகளின் எல்லா வடிவங்களிலும் மிகவும் விரும்பத்தக்கதாக இருந்தது. பக்தன் பரம் பொருளை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட இயற்பண்புகள் உடைய ஒரு தனிப்பட்ட கடவுளாகக் காண்கிறான். அவர் அவ னுடைய வழிபாட்டிற்கும், பிரார்த்தனைகளுக்கும் பதில் அளிக்கிறார். மற்றும் பரிபூரண நிலையை அடைந்து, பேரின் பத்தைத் துய்ப்பதற்கும் உதவி செய்வதாகவும் காண்கிறான். பரம்பொருளைக் குறித்த இத்தகைய கருத்துப்பாங்கிற்கான குறிப்புக்கள் சில உபநிஷதங்களில் காணப்படுகின்றன.

'ஆதியில் பிரம்மாவைப்படைத்து, அவனுக்கு வேதங் களைக் கொடுத்தருளியவன் எவனோ (நமக்குள்ளிருந்து) நமது புத்தியைப் பிரகாசிக்கச் செய்பவன் எவனோ, அந்தக் கடவுளை, மோக்ஷத்தில் விருப்பமுடைய நான் சரணடை கிறேன். பின்னமற்றவனும் செயலற்றவனும், அமைதி நிறைந்தவனும், குற்றமற்றவனும், அழுக்கற்றவனும், அழி யாத நிலைக்குச் சிறந்த பாலம் போன்றவனும், விறகை எரித்து ஓய்ந்த தீ போன்றவனுமாகிய தேவனை மோக்ஷத்தில் விருப்பமுடைய நான் சரணடைகிறேன்.'[2]

---

1. பகவத் கீதை, 12.5.
2. ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 6.18,19.

தனிப்பட்ட கடவுளைக் குறித்த கருத்திலே கூட மனிதப் பண்புகள் ஏற்றப்பட்ட, மற்றும் மனிதப் பண்புகள் ஏற்றப் படாத பண்புக் கூறுகள் குறித்த வேறுபாடுகள் உள்ளன. இஸ்லாமியத்தில் கடவுளானவர் தனிப்பட்டவர். ஆனால் பண்புக் கூறுகள் ஏற்றப்படாதவராக உள்ளார். உதாரணத் திற்குக் கடவுளுக்கு மனித உருவம் இல்லை. இஸ்லாமியத் தின் மற்றும் யூத சமயத்தின் கடவுளானவர் ஒரு சிறந்த எழுத் தாளரால் மனித மன உணர்ச்சிகளை ஏற்றிக் கூறப்பட்டவராக விவரிக்கப்பட்டுள்ளார். அதாவது மனித உணர்வுகளைக் கொண்டவர், ஆனால் மனித உருவம் அற்றவராவார். ஹிந்து தர்மத்தில் மனிதப் பண்புகள் ஏற்றப்பட்ட கருத்தும் மற்றும் மனிதப் பண்புகள் ஏற்றப்படாத கருத்தும் காணப்படுகின்றன. ஹிந்து தர்மத்தில் பெரும்பாலானவர்கள், பலவகையான கடவுளர்களை வழிபடும் வழக்கத்தை விரும்புகின்றனர். எப்படி இருப்பினும் இது ஹிந்து தர்மம் பல தெய்வ வழி பாட்டு முறையைக் கொண்டுள்ளது என்பதைக் குறிக்க வில்லை. ஆத்திகக் கோட்பாட்டைப் பொறுத்த மட்டில் ஹிந்து தர்மமானது, மற்ற எந்த தர்மத்தைப் போன்றே ஒரு தெய்வக் கோட்பாட்டை உடையதாக இருக்கிறது. அதில் ஒரு சிறிய வேறுபாடு உள்ளது. மற்ற சமயங்களில் ஒப்புயர் வற்ற பரம்பொருள் என்னும் தகுதிக்கு ஒரே ஒரு கடவுள் தான் உயர்த்திக் கூறப்படுகிறார் (உதாரணம்-யூதமதத்தில் யஹோவா) ஹிந்து தர்மத்தில், பல கடவுளர்கள், இந்தப்படி வரிசைக்கு, அவர்களைப் பின்பற்றப்படுபவர்களால் உயர்த்தப் பட்டுள்ளனர். விஷ்ணுவை வழிபடுபவர், நாராயணன்தான் ஒப்புயர்வற்ற, கடவுள், மற்ற கடவுளர் அனைவரும் அவ ருக்கு கீழ்நிலையில் உள்ளவர்கள் என்று நினைக்கிறார். சிவனை வழிபடுபவர், சிவன்தான் ஒப்புயர்வற்ற கடவுள், மற்ற கடவுளர் அனைவரும் சிறுதிறமுடையவர்கள் என்று நினைக்கிறார். மேக்ஸ் முல்லர் அத்தகைய கருத்தை, 'பிற தெய்வங்களை விலக்காமல் ஒரு முழுமுதற் கடவுளை நம்பும் கோட்பாடு' (Henotheism) என்று அழைக்கிறார். இது ஹிந்து தர்மத்தைப் பல்வேறு வகைப்பட்ட சிந்தனைப்

போக்குகளை, மற்றும் சமயக் கருத்துக்களை அதனுடைய அணைப்பில் ஒருங்கிணைத்துக் கொள்வதற்கு இயலச் செய்தது.

சமய உணர்வு உடைய ஒரு ஹிந்துவிற்கு, ஒப்புயர்வற்ற ஒரு பரம்பொருள் என்னும் கருத்து, மற்ற எல்லாக் கடவுளர் களைவிட சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள கருத்து, பின்பற்றத் தக்க உண்மையாக உள்ளது. ஆனால் கடவுள்களின் பெயர் களைப் பொறுத்தவரையில் நாம் ஏற்கனவே குறிப்பிட் டுள்ளதைப்போன்று ஒரு பெரிய புரட்சியே ஏற்பட்டுள்ளது. வேதகாலத்தில் விஷ்ணு, சிவன் போன்ற சிறிய அளவு முக்கியத்துவம் பெற்றிருந்த பெயர்கள், பிற்காலத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்ந்தன. மற்றும் இந்திரன், மித்திரன், வருணன் போன்றவை பெரும்பாலும் மறக்கப்பட்டுவிட்டன. அத்துடன் மட்டுமின்றி இராமர், கிருஷ்ணர் போன்ற அவதார புருஷர்களை வழிபடுவது எல்லா இடங்களிலும் மேலோங்கி நின்றது. உருவமற்ற அல்லது தனிநபரைச் சுட்டாத தன்மை தான் எல்லா அவதார புருஷர்களின் பின்னணியாக உள்ளது. அவை, சாசுவதமான, வெளிப்படுத்தப்படாத தத்துவத்தின் வெளிப்பாடுகள் ஆகும். தங்களுடைய குறிப்பிட்ட கடவுளின் அவதார புருஷர்களின், சமய போதகர்களின் சிறப்பான தன்மையைக் குறித்துப் பேசும் உட்குழுவினர் உள்ளனர். ஆனால் முழுமையான தொலை நோக்குடைய தீர்க்கதரிசிகள் அனைவரும், கடவுள் களுடைய அல்லது கடவுள் தூதர்களுடைய தனிப்பட்ட தன்மையற்ற நிலையின் வெவ்வேறு தோற்றங்களே என்று கருதுகின்றனர். கடல், கணக்கற்ற அலைகளைத் தோற்று வித்து, எப்பொழுதும் எல்லையற்றதாகவும் ஆழங்காணவிய லாததாகவும் தொடர்ந்து இருப்பதைப்போல முழுமையான பரம்பொருள், பலவேறுபட்ட கடவுளர்களைத் தோற்றுவித் தாலும் சாசுவதமாக நிலைத்துள்ளது. உண்மையாகவே மிக உயர்ந்த ஆன்மீக ஞான ஒளியை அடைந்தவர்கள் புனிதமான ஆளுமை எதுவாக இருப்பினும் ஆன்மீக வாழ்வின் லட்சிய மானது, இருமையற்ற ஒருமையை உருவமற்றதை

உணர்வதில் இருக்கிறது என்று உணர்ந்துள்ளனர். அதில் வழிபடுபவர் வழிபடப்படுவது, கடவுள், உயிர்கள் மற்றும் பிரம்மாண்டம் அனைத்தும் இரண்டறக்கலந்து, ஒன்றாகி, பிரிக்க இயலாததாகிறது.

கடவுள்களிடமிருந்து கடவுள் தன்மைக்கு

உருவமற்ற கடவுள், பக்தனால் அடையவியலாத தொலைவிற்கப்பால் உள்ளது. உருவமுடைய கடவுள் அவனுடைய தத்துவம் சார்ந்த மனப்போக்கை நிறைவு செய்வதில்லை. எனவே ஆன்மீகப் பயிற்சிகளின் மேம்பட்ட வகைவடிவங்களில் உருவமுள்ள–உருவமற்ற கடவுளை வழிபடுவது மிகவும் பரவலாக உள்ளது. இது கிருஷ்ணர் அல்லது இராமர், சிவன் அல்லது விஷ்ணு, துர்கை அல்லது காளியை வழிபடுபவர்களைப் பொறுத்தவரை உண்மையாக உள்ளது.

தெய்வீக ஆளுமையையோ அல்லது திரு அவதார தத்துவத்தையோ வழிபடுவது ஆன்மீக வாழ்வில் கண்டிப்பாக மறுக்கவியலாத இடத்தைப் பெற்றுள்ளது. பெரும்பாலான பக்தர்களுக்கு அதுதவிர்க்க இயலாததாக உள்ளது. ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையில் கூறி இருப்பதைப் போல வரம்பற்ற உண்மையின் வழியையும், வெளிப்படாத தன்மையையும் பின்பற்றுவது மிகவும் கடினமானதாகும். எனவே பலவகையான சமய நம்பிக்கைகளில், பக்தன், கடவுளை அவதார புருஷனை வழிபட்டு தன்னுடைய எல்லாச் செயல்களையும் அவரிடம் ஒப்படைத்து, பக்தி யுடனும், ஒருமுனைப்பாட்டுடனும் கடவுளைத் தியானித்து கடவுளையே வாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சியமாகக் கருதுகிறான். ஆனால் உண்மையான பக்தன் கடவுளின், மனிதப் பண்புகள் கற்பிக்கப்பட்ட உருவத்தை வழிபடுவ துடன் நிற்க மாட்டான். அவன் படிப்படியாக, வழிபடும் தெய்வீக வடிவம், உடலுடன் கூடிய உருவத்தின் இயற் பண்புகள், ஏதாவது ஒருவகையில் மிக உயர்ந்த தத்துவத்தைக் காண்பித்து அருள் செய்யும் என்று காணக் கற்றுக்

கொள்கிறான். மேலும் அவன் அந்த தெய்வீக வடிவத்தை, தெய்வீகச் சின்னம் அல்லது தெய்வீகக் கருத்து என்றும், மற்றும் இந்தக் கருத்து மீண்டும் உண்மையின் ஒரு அடையாளமாகி, அதுவே எல்லாவற்றின் பின்னால் உள்ளது என்றும் காணக் கற்றுக் கொள்கிறான்.

ஹிந்து தர்மத்தில், அனைவராலும் நன்கு அறியப்பட்ட கடவுளரில் சிவன் ஒருவராவார். பருப்பொருள் இயல்பையுடைய பக்தன் சிவனை அழிக்கும் கடவுள் என்றும் தனிமையான மலைகளின் மீது வாழ்பவர் என்றும் அல்லது மயானத்தில் வாழ்பவர் என்றும் நினைக்கலாம். ஒரு முதிர்ச்சியடைந்த பக்தனுக்கு தீமைகளை அழிப்பவராகவும், துறவின் கண்கூடான உருவமாகவும் திகழ்கிறார். அன்றியும் அவர் சிந்தனை மற்றும் கடவுள் உணர்வு நிலையின் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறார். மேம்பட்ட பக்தன் சிவனுடைய புகழை இவ்விதம் பாடுவார். 'ஓ கடவுளே, நீ பிரம்மன்; இருமையற்றவன்; நீ எல்லாமாக விளங்குகிறாய்; நீதான் ஒரே மெய்ப்பொருள் மற்றும் உண்மையாக உன்னைத் தவிர வேறு எதுவும் இல்லை.'[1]

உலகப்பற்றுடைய விஷ்ணு பக்தன், விஷ்ணுவைக் காக்கும் தெய்வமாக, பாதுகாக்கும் தெய்வமாக காண்கிறான். விஷ்ணு தன்னுடைய எல்லையற்ற கருணையால் தன் பக்தர்களின் நன்மைக்காகத் திரு அவதாரம் செய்கிறார். மிக உயர்ந்த பக்தன், விஷ்ணுவைத் தெய்வீக தத்துவத்தின் கண்கூடான உருவமாகக் காண்கிறான். அது பிரம்மாண்டம் முழுவதிலும் ஊடுருவி நிற்கும். மற்றும் யாரால் உலகலீலை, அதன் படைப்பு, அதன் பாதுகாப்பு, மற்றும் அதன் அழிவுகள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கிறதோ அத்தன்மையைக் காண்கிறான். 'கடவுளே, நீ எல்லாவற்றிலும் உறைகிறாய். நீ எல்லாமாகவும் இருக்கிறாய். நீ எல்லா வடிவங்களையும் மேற்கொள்கிறாய். நீ எல்லாவற்றின் மூலாதாரமாக

1. Universal Prayers *பாடல் 120.*

விளங்குகிறாய். நீ அனைவரின் ஆன்மாவாக விளங்குகிறாய். உன்னை வணங்குகிறேன்' என்று அவன் பிரார்த்தனை செய்வான்.'[1]

கடவுளைத் தாயாக வழிபடுதல்

நாம் கடவுளைத் தாயாக வழிபடலாமா? இந்தியாவில் நாம் இந்தக் கேள்வியைக் கேட்பதில்லை. கடவுளைப் பல வழிகளில் வழிபடலாம் என்று நாம் முதலிலேயே ஏற்றுக் கொண்டுள்ளோம். இஸ்லாமிய கிறிஸ்தவ சமயங்களில் இடமளிக்கப்பட்டுள்ள ஒரே முறையான குருவாக மட்டு மின்றி, தாயாக, தெய்வீகக் குழந்தையாக, தெய்வீக நாயக னாகவும் வழிபடலாம். கடவுளைத் தாயாக வழிபடுவதில் இயல்பற்ற தன்மை எதுவும் இல்லை. ஒரு குழந்தை அதனுடைய தாயால் உணவூட்டி சீராட்டி வளர்க்கப்படு வதைப்போல, கடவுளும் எல்லா உயிரினங்களையும் படைத்து உறுதுணையாக இருந்து வளர்க்கிறார். கடவுளைத் தாயாகக் காண்பது மிகவும் இயல்பான முறையாகும். அது மிகவும் சிறப்பு வாய்ந்த, நீடித்திருக்கக் கூடிய வழக்கமாகும். பக்தன் கடவுளைத் தாயாக எண்ணி தொடர்பு கொள்வதில் மிகுந்த சுதந்திரமும், இயல்பாக இயங்கும் தன்மையும் உள்ளது. ஸ்ரீராமகிருஷ்ணர், ஒரு குழந்தை தன்னுடைய தாயிடம் தன்னுடைய கோரிக்கைகளை வற்புறுத்துவது போல, பக்த னும் தன்னுடைய கோரிக்கைகளைக் கடவுளிடம் வற்புறுத்து கிறான் என்று கூறுவார். அவர் மற்றொரு விளக்கத்தையும் கூறுகிறார். குழந்தை தன்னுடைய பொம்மைகளுடன் விளையாடிக் கொண்டு இருக்கும் வரையிலும், தாயானவள் தன்னை வீட்டு வேலைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுத்திக் கொள்கிறாள். ஆனால் அக்குழந்தை அந்த பொம்மைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதனுடைய தாய்க்காக அழும் பொழுது, தாய் சமையல் செய்யும் பாத்திரத்தை கீழே வைத்து விட்டுக் குழந்தையிடம் ஓடுகிறாள். இந்த அழகிய ஒப்புமை,

1. விஷ்ணு புராணம், 1.12.72.

அன்னையாக உருப்பெற்ற தெய்வத்திற்கும், மற்றும் பக்த னுக்கும் நடுவில் இருக்கும் உறுதியான பிணைப்பை விளக்குகிறது.

கடவுளைத் தாயாகக் கருதும் சிந்தனையானது ஹிந்துக் களால் ஏற்படுத்தப்படவில்லை. பண்டைக் காலத்தில் அது பல நாடுகளில் பழக்கத்தில் இருந்தது. கடவுளைத் தாயாகக் கருதும் இத்தகைய சில வழிபாட்டுமுறைகள் சீர்கேடு அடைந்திருந்தாலும், நாம் இந்த வழிபாட்டு முறையின் குறிக்கோளில் அக்கறைகொண்டுள்ளோம். எகிப்தில் அவள் ஐஸிஸ் (ISIS) என்றும், பாபிலோனியாவிலும் அஸ்ஸீரியா விலும் இஷ்டர் (ISHTAR) என்றும், கிரீஸ் நாட்டில் டிமெடெர் (DEMETER) என்றும் மற்றும் ப்ரிஜியாவில் (PHRYGIA) (CYBELE) சிபிலி என்றும் அழைக்கப்பட்டாள். அவர்கள் கார்த்தஜினியா சேனாதிபதி ஹானிபாலின் முற்றுகையால் மிகுதியான, இக்கட்டுகளுக்கு ஆட்படுத்தப்பட்ட பொழுது, உரோமானியர்கள் சிபிலை போரில் வெற்றியடைவதற்காக தொழுதனர். மற்றும் அவர்கள் அவளை கடவுளின் அன்னை என்று அறிவித்தனர். யூதமதமும் அதன்பிறகு இஸ்லாமிய மதமும் மத்தியக் கிழக்கில் கடவுளைத் தாயாக வழிபடும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தன. கிறிஸ்தவ மதமும் அதை ஒடுக்கியது. ஆனால் பிறகு அதைச் சிறிதளவு மாற்றி மீண்டும் புத்துயிர் அளித்தது.

கத்தோலிக்கர்களால் கன்னிமேரி (VIRGIN MARY) 'கடவுளின் தாய்' என்று போற்றப்படுகிறாள். சமயநூலைச் சார்ந்த சிலகட்டுப்பாடுகளால் போற்றதலுக்கு உரிய மேரி தேவாலயத்தில் சற்றுத் தாழ்ந்த இடத்தைப் பெற்றுள்ளார். ஆனால் மிகப் பெரிய அளவில் பொதுமக்கள் அத்தகைய வேறுபாடுகளைச் செய்வதில்லை. இலட்சக் கணக்கான கத்தோலிக்கர்கள் சிறப்பாக ஏழை எளியவர்கள் கன்னி மேரியை ஏறத்தாழ ஹிந்துக்கள் அன்னையை வழிபடுவது போன்றே வழிபடுகிறார்கள். வார்ஸாவில் (WARSAW) ஒரு பழமையான கோயில் (MADONNA) கன்னிமேரிக்கு அர்ப்பிக்கப் பட்டிருப்பதை நான் கண்டேன். சுவிட்ஜர்லாந்தில், ஆயிரம்

ஆண்டுகள் பழமைவாய்ந்த துறவிகள் வாழும் இடத்திற்குச் சென்றேன். அங்கு துறவிகள் BLACK MADONNA-வைத் தொழுது கொண்டிருப்பதைக் கண்டேன். அவளுடைய உருவத்திலும், வண்ணத்திலும் அவள் எனக்கு ஹிந்துக்களின் தெய்வமான காளியை நினைவூட்டினாள். க்ரிகோரியன் பாடல்களும், தீர்த்த யாத்திரை செல்பவர்களின் கூட்டங் களும் இந்தியாவில் தேவி கோயிலில் உள்ள வழக்கமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. கடவுளின் அன்னையைப் போற்றிப் புகழ்வது, ஐரோப்பிய, மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலைத்த அடித்தளத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

நான் ஐரோப்பாவில் இருந்தபொழுது, முதலில், மேற்கு நாட்டில் வாழும் மனிதர்களால், கடவுளைத் தாயாகக் கருத இயலாத தன்மையைக் கண்டு திகைப்படைந்தேன். ஒரு பெண்மணி 'சுவாமி, நல்லது. நானே ஒரு தாய். என் சொந்த அம்மாவும் இன்னும் உயிருடன் இருக்கிறார். எங்களிடம் உறுதியான அம்சங்களும் உள்ளன. பலவீனமான அம்சங் களும் உள்ளன. தாய்மையில் எத்தகைய சிறந்த புனிதத் தன்மையும் இருப்பதை நாங்கள் காணவில்லை. எங்களிடம் எந்த தெய்வீகத் தன்மையையும் காணவில்லை' என்று கூறி னார். சந்தேகத்திற்கு இடமின்றி அது அந்தப் பெண்மணியின் அவப்பேறு ஆகும். எனக்கு இது ஒரு கதையை நினைவு படுத்துகிறது. ஒரு நாள் சில குழந்தைகள் மிகவும் உரக்கப் பேசிக் கொண்டிருந்ததைக் காண நேர்ந்தது. அவர்கள், பொய்கள் சொல்வது குறித்து ஒரு புதிய ஆட்டத்தை ஆடிக் கொண்டிருந்தனர். மிகப்பெரிய பொய்யைச் சொன்ன சிறுவன் முதல் பரிசைப் பெறுவான். அப்பொழுது அந்தப் பக்கமாக வந்த ஒரு அர்ச்சகர் அந்தச் சிறுவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டார். அவருக்கு அதைப் பற்றி கூறப்பட்டவுடன், அவர் குழந்தைகளுக்கு 'என் குழந்தைகளே. நீங்கள் பொய் சொல்லக் கூடாது. நான் உங்களைப் போல சிறுவனாக இருந்தபொழுது ஒரு பொய் யைக் கூடச் சொன்னது இல்லை' என்று அறிவுரை கூறினார்.

சிறுவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, 'ஐயா, உங்களுக்குத் தான் முதல் பரிசு' என்று கத்தினர். குழந்தைகளுக்கு குழந்தை களின் வழிமுறைகள் தெரியும். பெண்களுக்குப் பெண்களின் வழிமுறைகள் தெரியும். ஆனால் அவர்கள் மேல்பரப்பை உடல், மற்றும் அதன் போக்குகளை மட்டுமே பார்க் கிறார்கள். அதற்குப் பின்னால் எத்தகைய தெய்வத் தன்மை யையும் அவர்களால் காண இயலவில்லை.

மேற்கு நாடுகளில் ஒரு பெண் காதலியாகவும் மனைவி யாகவும் மட்டுமே பார்க்கப்படுகிறாள். ஒரு ஹிந்துக் குடும்பத்தில் இருப்பதைப்போல, தாய் மரியாதையையும், அன்பையும் பெறுவதில்லை. இறைமை இயல் வல்லு னர்கள், ஈவ், ஆடத்தின் விலா எலும்பிலிருந்து தோற்று விக்கப்பட்டதாகக் கூறுவதால் பெண் எப்பொழுதும் ஆணிற்குக் கீழ்ப்பட்டவளாகவே கருதப்படுகிறாள். மேற் கத்திய சமூகத்தில், பெண்களின் பங்கை இந்த மனப்பான்மை தான் முடிவு செய்கிறது. மேற்கு நாட்டிலுள்ள ஆண்கள், கடவுளை தாயாக வழிபட்டால் அவர்கள் குறைந்த அளவு பாலுணர்வு உள்ளவர்களாகவும் கடுமையான தன்மை சற்றே குறைந்தவர்களாகவும், ஆன்மீகத் தன்மை மிகுந்தவர்களாக வும் ஆவார்கள். அப்பொழுது பெரிய அளவில் குடும்ப அமைதியும், உறுதியான குடும்பப்பிணைப்பும் ஏற்படும்.

இந்தியாவில் வேதகாலம் முதற்கொண்டே கடவுளைத் தாயாக வழிபடும் முறையானது பிளவுபடாத மரபாக இருந்து வருகிறது. வேதங்கள், தேவியைக் குறித்த பல பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. கேன உபநிஷதத்தில் தேவி ஆன்மஞானத்தின் உருவாகக் காணப்படுகிறாள். அதற்குப் பிறகு வந்த நூற்றாண்டுகளில், தந்திரங்கள் எனப்படும் முழுமையான சிறந்த இலக்கியமானது, தெய்வீக அன்னை யின் வழிபாட்டிற்காகவும் தத்துவத்திற்காகவும் அர்ப்பிக்கப் பட்டது. வங்காளத்தில் கடவுளைத் தாயாக வழிபடும் முறையானது அப்பொழுது பெரிய அளவில் மெருகேற்றப் பட்டதாகத் திகழ்ந்தது மற்றும் மனிதர்களின் அன்றாட வாழ்வின் ஒரு கடமையாக, ஒரு பகுதியாக ஆகிவிட்டது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் வருகையால், கடவுளைத் தாயாக வழிபடும் முறையானது, இளமையின் பொலிவையும் வலிமையையும் மீண்டும் அடையும் தன்மைக்கு ஆட் பட்டது. மாசுற்ற அனைத்தும் அடித்துச் செல்லப்பட்டு, இலட்சக்கணக்கான மனிதர்களின் இதயங்களிலும், வீடு களிலும், தாயானவள் ஒரு புத்தொளியுடன் ஒளிர்ந்தாள். 'அன்னை காளி' என்றால் என்னவென்று ஸ்ரீராமகிருஷ்ணர் கருதுகிறார்? அவர் காளியை இந்தப் பிரம்மாண்டத்தைப் படைக்கும் சக்தியாகக் கண்டார். மேலும் அவர், பிரம்ம னிலிருந்து பிரிக்க இயலாதவள் என்றும் கூறினார். பிரம்ம னானது எங்கும் நிறைந்துள்ள முழுமுதற் பொருள் ஆகும். அது உலகமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் பொழுது காளியாக உள்ளது. ஆகாயத்தின் நீலவண்ணம் எல்லையற்ற பரப்பைக் குறிப்பது போல காளியின் கருமை நிறமானது எல்லையற்ற தன்மையைக் குறிக்கிறது. இவ்விதம் ஸ்ரீராமகிருஷ்ணர், காளியின் உருவ வழிபாட்டைக் கடவுளைப் பூஜிக்கும் முறையாக உயர்த்தினார்.

அன்னையின் சக்தி அல்லது தெய்வீக ஆற்றலானது பல வடிவங்களையும், பல அடையாளங்களையும் கொண் டுள்ளது. அவள் ஞானக் கடவுளாகவும், செல்வக் கடவுளாக வும், அழிக்கும் கடவுளாகவும், ஊழித் தாண்டவம் ஆடுபவ ளாகவும் பல வகைகளில் குறிக்கப்படுகிறாள். காளியின் வடிவத்தில் அவள் படைக்கும், காக்கும், அழிக்கும் சக்தியாக வும், மற்றும் அழிவிற்குப் பிறகு எல்லா உயிரினங்களும் துயிலமைதி பெறும் சக்தியாகவும் குறிக்கப்படுகிறாள். அவள் அசைவற்றுக் கிடக்கும் சிவன்மீது நின்று, பரம்பொருளின் பிரதிநிதித்துவமாகவும் திகழ்கிறாள். இது, அறிவு எல்லை யைக் கடந்த மெய்ம்மையை மூலமாகக் கொண்ட இயலுலக அண்ட உருவாக்கத்தின் அடையாளமாக உள்ளது. நிலைத்த பரம்பொருளானது, வாழ்விற்கும், மரணத்திற்கும் அப்பாற் பட்டது. மற்றும் அந்த முறையில் பக்தனானவன், வாழ்வைப் பற்றிக் கொள்ளவோ அல்லது மரணத்தைக் குறித்து அஞ்சவோ கூடாது. பக்தன், மகிழ்ச்சி, அச்சம் என்னும்

இரண்டையும் மீறி, அறிவு எல்லையைக் கடந்த மட்டத்திற்கு உயர்ந்து, அங்கிருந்து அவன், 'மரணத்தின் நிழலும், மரண மற்ற பெருவாழ்வு என்னும் இவ்விரண்டும் ஓ அன்னையே, உன்னுடைய மிக உயர்ந்த அருள்'[1] என்று கூறலாம். மற்றும் அவளிடம் பக்தன் 'உனக்குப் பெயரோ அல்லது மரபு வழியோ, பிறப்போ அல்லது இறப்போ இல்லை, பிணைப்பும் இல்லை, சுதந்திரமும் இல்லை. நீ இருமையற்ற ஒருமையாக, உயர்ந்த பரம்பொருளாக அறியப்படுகிறாய்'[2] என்று கூறலாம். ஹிந்து தர்மத்தில், தெய்வத்தைத் தாயாக வழிபடுவது அத்தகைய உயர்ந்த கருத்துப்படிவமாக உள்ளது.

ஹிந்து தர்மத்தின் அவதாரம் குறித்து கருத்து

மற்ற தர்மங்களைப்போல அன்றி, ஹிந்து தர்மம் கடவுளின் பல அவதாரங்களை நம்புகிறது. ஒவ்வொரு அவ தாரமும் ஒரு சாதாரண மனிதனுக்குக் கடவுள் தன்மையின் புதிரைப்பற்றி அறிந்து கொள்வதற்கான, பின்பற்றத்தக்க குறிக்கோள் நிலையாகப் பார்க்கப்படுகிறது. ஒரு ஹிந்துவிற்கு அவனுடைய ஆன்மீகக் குறிக்கோளாக, இந்த அவதாரங்களில் ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கு உரிமை உள்ளது. அந்த அவதாரத்தின்மூலம் அவன் பரம்பொருளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்கிறான். பக்தன், மனித வரையறைகளைப் பார்ப்பது இல்லை. (அவதார புருஷர்களிடம்) மேற்கு நாடுகளைச் சேர்ந்த திறனாய்வு செய்யும் அறிஞர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட விரும்பு கின்றனர். பக்தன் அவாதர புருஷர்களிடம் தெய்வீகத்தையும் தெய்வீகப் பண்புகளையும் பார்க்கிறான். அவதார புருஷர் களின் மனிதப் பண்புகள், அவர்களிடம் நெருக்கமான, தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளப் பயன் படுகிறது. மனிதப் பண்புக் கூறு தெய்வீகத்தின் அடை யாளமே ஆகும்.

---

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.92.*
2. Universal Prayers, *பாடல் 205.*

இராம அவதாரம் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகும். உண்மையிலும், கடமை உணர்விலும் முழு ஈடுபாடு கொண்ட கண்கூடான உருவமாகத் திகழ்ந்தது. ஒரு சாதாரணமான பக்தன் இராமருடைய அழகிய உருவத்தையும், உன்னதமான இயல்புகளையும் வலியுறுத்துவான். ஆன்ம ஞானம் பெற்ற பக்தன் எல்லா இடங்களிலும் நிலைத்த தன்மையுடன் படைப்பு முழுவதிலும் நிறைந்திருப்பதாகக் கண்டு, 'நீங்கள் எல்லா மிகச் சிறந்த நல்லியல்புகளின் கண்கூடான உருவமாகத் திகழ்கிறீர்கள். நீங்கள் உள்ளே உறையும் பரம்பொருளாக விளங்குகிறீர்கள். நீங்கள்தான் மிகச்சிறந்த தஞ்சம் அளிப்பவராக மற்றும் மனித குலத்தைக் காப்பவராக விளங்குகிறீர்கள்'[1] என்று பிரார்த்தனை செய்வான். மற்றும் 'நீங்கள் களங்கமற்ற, மாறுபாடு அற்ற, அழிவற்ற, தூய்மையான நிலைபெற்ற ஞானமும், உண்மையும்'[2] என்றும் வேண்டுவான்.

கிருஷ்ண அவதாரத்தின் குறிக்கோள், அதனுடைய பல வகைப்பட்ட வடிவங்களில், மிகப் பரவலாக உள்ளது ஆகும். ஆனால் அது பலராலும் முழுமையாகத் தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டதாகவும் விளங்குகிறது. பண்பற்ற மனமுள்ள திறனாய்வாளர்கள், பிருந்தாவனத்தில் கிருஷ்ணர் கோபிகளுடன் செய்த லீலையைக் கொச்சைத்தன்மை மிக்கதாகவே உணர்ந்தனர். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்ற பக்தர்கள் கிருஷ்ணரிடம் மிக உயர்ந்த குறிக்கோளான தெய்வீக அன்பையே கண்டனர். புலனுணர்விற்கு ஆட்பட்ட நிலைகளில் மற்றும் கொச்சைத்தனங்களின் சுவடுகளிலிருந்து விடுபட்டவர்களால் மட்டுமே அதை உணர இயலும். அனைத்திலும் ஸ்ரீகிருஷ்ணரின் உலகளாவிய வடிவம் வெளிப்பட்டுள்ள தன்மையை உணர்ந்த அர்ஜுனன், 'அனைத்துமாக இருப்பவனே! உனக்கு முன்னும், பின்னும் நமஸ்காரம். உனக்கு எல்லாப் பக்கங்களிலும் நமஸ்காரம் உரித்தாகுக.

---

1. *வால்மீகி ராமாயணம், 6.117.14.17.*
2. *அத்யாத்ம ராமாயணம், 1.5.56.*

அளவற்ற சக்தியுடையவனும், அளவற்ற பராக்ரமம் உடைய வனுமான நீ எல்லாவற்றையும் வியாபித்து உள்ளாய். எனவே எல்லாமாக ஆகின்றாய்'[1]

எனவே தனித்தன்மை, தனித்தன்மையற்றதன்மை, பல வற்றுள் ஒருமை என்னும் கருத்து முற்றிலும் ஹிந்து சமய உணர்வில் பரவி நிற்கிறது. இந்து சமய திருமறை நூல்களின் உண்மையான மெய்க் கருத்தில் ஆழ்ந்து செல்பவர்களால் இந்த உண்மை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

சமரசமனப்பான்மைக்கும் மற்றும் நல்லிணக்கத்திற்கும் வேண்டுதல்

ஆனால் கூட்டிணைப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் என்னும் பெரிய இலட்சியத்தை அறிந்துகொள்வதற்கு அனை வருக்கும் இயலாது. உறுதியான பற்றுடைய சமயத் தனிக் குழுவினராக, ஒரு புறமாகச் சார்ந்து உள்ள பக்தர்கள், அவர் களுடைய குறிப்பிட்ட கடவுள் அல்லது அவதார புருஷரை வழிபடுவதால் மட்டுமே மோக்ஷமடையலாம் என்று மீண்டும் மீண்டும் கருதுகின்றனர். அல்லது மனித குலத்திற்கு அவருடைய அறிவுரைகளை குறிப்பிட்ட போதகர்களால் வழங்கும், அவர்களுடைய உருவமற்ற அல்லது தனிப்பட்ட கடவுளை வணங்குவதால் மோக்ஷமடையலாம் என்றும் கருதுகின்றனர். ஆனால் எல்லைக்கு உட்படுத்தப்பட்ட பார்வையுடன் உள்ள மனிதர்களுக்கு இணையாக பரந்த மனப்பான்மை உடையவர்களும் இருக்கிறார்கள். இவர்கள், தங்களுடைய தேர்ந்து எடுக்கப்பட்ட குறிக்கோளின் மீது, இவர்களுக்கு உள்ள அன்பும், நம்பிக்கையும் எவ ருக்கும் குறைந்ததல்லாமல் இருப்பினும், அவர்கள் அவதார புருஷர்களையும் அதே உண்மையின் வெளிப் படைகளாகக் காண்கிறார்கள். 'இந்த பிரம்மாண்டத்தின் முழுமுதற் கடவுளான சிவன், மற்றும் அதன் மூலாதார மான விஷ்ணுவிற்குமிடையில் நான் அடிப்படையில்

---

1. பகவத் கீதை, 11.40.

வேறுபடுத்துவதில்லை. ஆனாலும் என் பக்தியானது சிவனை நோக்கிச் செல்லட்டும்'[1]

ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நவீனகாலத்தைச் சேர்ந்த ஒரு பாடல் இன்னும் ஒரு படி மேலே சென்று, மிகவும் தெளிவான சொற்களில் இதற்குக் கீழுள்ள இணக்கத்தைக் குறித்துக் கூறுகிறது, 'ஒப்புயர்வற்ற கடவுள் விஷ்ணு என்று கூறப்பட்டாலும் அல்லது சிவன், பிரம்மா அல்லது இந்திரன், சூரியன் அல்லது சந்திரன், புத்தர் அல்லது பூரணர் மஹாவீரர் என்று கூறப்பட்டாலும் பிணைப்பு, வெறுப்பு, உலக இயல், அறியாமை போன்றவற்றிலிருந்து விடுபட்டு, தூய்மையை யும், அன்பையும் உடையவராக, எல்லாவிதமான உன்னத மான பண்புகளைப் பெற்றுள்ளவருக்கு மட்டுமே நான் எப்பொழுதும் என் வணக்கங்களை அர்ப்பிப்பேன்.'[2]

வேற்றுமையின் பின் ஒற்றுமை என்னும் கருத்தானது ஹிந்து சமய உணர்வின் அடிப்படை உண்மையாக, தொடக்கத்திலிருந்து அதன் இடையீடற்ற போக்கிலே காணப் படுகிறது. மனுவால் இக்கருத்து மிகவும் நேர்நிலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 'அனைத்தையும் ஆட்சி புரியும் மேலான பரம்பொருளை ஒருவர் கட்டாயமாக உணர வேண்டும். நுண்மையிலும் நுண்மையான, தானே ஒளிரும் பெருஞ்சிறப்பு உடைய தன்மை உடையவர். சிலர் அவரை அக்னி (போற்றுதற்கு உரியவர்) என்றும், வேறு சிலர் மனு (சிந்திப்பவர்) என்றும், மற்றும் சிலர் ப்ரஜாபதி (எல்லா வற்றையும் படைத்தவர்) என்றும், சிலர் இந்திரன் (மேன்மை பொருந்தியவர்) என்றும், வேறு சிலர் பிராணா என்றும் (வாழ்க்கையின் ஆதாரம்) மற்றும் வேறு சிலர் நிலைத்த பரம்பொருள் (மிகச் சிறந்த) என்றும் அழைக்கின்றனர்.[3]

எவர்களால் பலவகைத் தன்மை மற்றும் வரையறைகள் என்னும் கருத்துக்களை விட்டு உயர முடியாதோ, அவர்கள்

---

1. *பர்த்ருஹரி, வைராக்ய சதகம், 84.*
2. Universal Prayers, *பாடல் 305.*
3. *மனுஸ்ம்ருதி, 12.122-123.*

'அக்னி' முதலிய சொற்களை வேறுவேறான கடவுள்கள் என்று புரிந்துகொள்கின்றனர். அதே பரம்பொருளின் பல் வகையான கூறுகள் அல்லது இயல்புகள் என்னும் பொருளில் உயர்ந்த கருத்தைக் கொண்டவர்களும் உள்ளனர். உண்மை யைச் சொல்லப் போனால் ஒரு கடவுள் கோட்பாடு மற்றும் ஒரு பொருண்மைவாதத்தின் அடிப்படையில் பொருளை விளக்குபவர்கள் எப்பொழுதும் பலவகையான பெயர்களை, ஒரே கடவுளின், அதே கடவுளின் பலவகையான இயல்புகள் என்றே கருதுகின்றனர். மற்றும் இந்த வகையில், விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு உரை எழுதியவர், நவீன ஆரிய ஸமாஜத்தைச் சேர்ந்த ஒரு கடவுள் கோட்பாட்டு வாத முறை யில் பொருளை விளக்குபவர்களிடமிருந்து சிறிது வேறுபட்டு நிற்கிறார்.

உண்மையாக, இந்தத் தனித்தன்மை உடையது, அத னுடைய பெயரும், வடிவமும் எதுவாக இருப்பினும், கடவு ளாக இருந்தாலும், அவதாரமாக இருந்தாலும், தனித்தன்மை அற்றதனுடைய தோற்றம் என்று எண்ணப்பட்டால், பிறகு இந்த தனித்தன்மையுடைய-தனித்தன்மையற்ற அல்லது தனித்தன்மையற்ற-தனித்தன்மையுடைய என்னும் இந்தப் பொதுவான வழிபாட்டு முறையில், எல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களும், எல்லாத் திருமுறைக் கோட்பாடு களைப் பின்பற்றுபவர்களும் தங்களுடைய கைகளையும், மனங்களையும் இணைத்துக் கொள்ளலாம். தற்காலத்தில், பரம்பொருளின் இந்த உலகளாவிய தன்மையைக் குறித்த அம்சமானது, அனைவரும் உணரும் வகையில் சிறப்பான முறையில் வலியுறுத்தப்பட வேண்டும். அதனால், எல்லா நாடுகளிலும், எல்லா தேசங்களிலும் உண்மையான சமய மனப்பான்மையுடன் உள்ளவர்களை இணைக்கவல்ல தொரு சிறந்த பிணைப்பாகப் பயன்படும். அவர்களுடைய பொதுவான வாழ்வு வளத்திற்கு சகோதரத்துவம், மற்றும் தோழமை, கடமை, தொண்டு மற்றும் ஒத்துழைக்கும் மன இயல்புடன் அவர்கள் அனைவரையும் இணைந்து செயல்பட வைக்கும்.

'ஆதியில் எந்த ஒருவன், வர்ணமற்றவனாயினும், தனது சக்தியின் கூட்டுறவால் அநேக வர்ணங்களை, வெளிப்படையாகத் தெரியாத ஏதோ ஒரு காரணத்திற்காக வெகுவாய்த் தோற்றுவிக்கிறானோ, முடிவில் உலகம் அனைத்தையும் அழிக்கிறானோ, அந்தக் கடவுள் நல்ல அறிவுடன் நம்மைக் கூட்டி வைக்கட்டும்.'[1]

1. *ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 4.1.*

5
உலக வாழ்வுக்குரிய கடமைகளும் மற்றும் ஆன்மீக வாழ்வும்

கடமை என்றால் என்ன?

பலவிதமான நடவடிக்கைகளின் மூலம் நாம் நம்மைச் சுறுசுறுப்பாக்கிக் கொண்டு, அதை வழக்கமாகக் கடமை என்று கூறுகிறோம். அடுத்தடுத்து இத்தகைய நடவடிக்கைகள் அமைதியற்ற தன்மையையும், துன்பத்தையும் அளிப்பதைக் காண்கிறோம். இது உண்மையாக இருந்தால், நாம் கடமை என்று சாதாரணமாகக் நினைத்துக் கொண்டுள்ள கருத்தில் ஏதோ தவறு இருக்கிறது. நாம் செயல்களைச் செய்கிறோம். ஆனால் பொதுப்படையாக, அதை எவ்விதம் யோகமாக மாற்றுவது என்பது நமக்குத் தெரிவதில்லை. அது ஒரு ஆன்மீக யுக்தி ஆகும். தெய்வீகத்தை உணரும் வழிமுறையாகும். கர்மயோகத்தைக் குறித்து சுவாமி விவேகானந்தர் விளக்குவதைக் காண்போம்.

'கர்ம யோகம், சுயநலம் தலைதூக்குகின்ற போக்கையே முதலில் ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறது. அதைத் தடுப்ப தற்கான ஆற்றல் உங்களிடம் இருக்குமானால் அதை உடனே தடுத்து விடுங்கள். சுயநலப் பாதைகளில் மனம் செல்ல அதற்கு மேலும் அனுமதிக்காதீர்கள். அதன் பிறகு உலகத்தில் சென்று முடிந்த அளவு வேலை செய்யலாம். எல்லோருடனும் பழகலாம். விரும்பிய இடங்களுக்குப் போகலாம். உங்களை எந்தத் தீமையும் அணுகாது. தாமரையிலை தண்ணீரில் இருக்கிறது. ஆனால் தண்ணீரால் அதை நனைக்கவோ, அதன் மீது ஒட்டிக் கொள்ளவோ முடியாது. அதுபோலவே உலகில் நீங்களும் இருப்பீர்கள். இதுதான்

வைராக்கியம், ஆசையின்மை, பற்றின்மை என்று அழைக்கப் படுகிறது. பற்றின்மை இன்றி எந்த விதமான யோகமும் கிடையாது. எல்லா யோகங்களுக்கும் பற்றின்மையே அடிப்படை. இல்லறத்தையும் அழகிய ஆடை அணிகளை யும், நல்ல உணவு உண்பதையும் விட்டுவிட்டு, பாலைவனத் தில் வாழும் ஒருவன் தீவிரப் பற்று உடையவனாக இருக்க லாம். அவனது ஒரே உடைமையான உடம்பே அவனுக்கு இப்பொழுது எல்லாமாக ஆகிவிட்டிருக்கலாம். அவனுக்கு வாழ்க்கை என்பது இப்பொழுது அந்த உடம்பைக் காப் பாற்றுவதற்கான போராட்டமாகவே இருக்கும். பற்றின்மை என்றால் உடம்பிற்காக நாம் எதுவும் செய்யக் கூடாது என்பது அல்ல பொருள். அது மனத்தைப் பொறுத்தது. பிணைக்கின்ற சங்கிலியாகிய 'யான்', 'எனது' என்பவை மனத்திலேயே உள்ளன. நாம் எங்கிருந்தாலும், என்ன செய்தாலும், நமது உடலின் மீதோ, புலன்களின் மீதோ இந்தச் சங்கிலியால் நம்மைப் பிணைத்துக் கொள்ளாவிட்டால் நாம் பற்றற்ற வர்கள். ஒருவன் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கலாம். ஆனால் சிறிதுகூடப் பற்றில்லாதவனாக இருக்கலாம். மற்றொருவன் கந்தை உடுத்தி இருக்கலாம். ஆனால் தீவிரப் பற்றுடைய வனாக இருக்கலாம். முதலில் இந்தப் பற்றற்ற நிலையை அடைய வேண்டும். பின்னர் இடையீடின்றி செயல் புரிய வேண்டும். பற்றுக்களை விடுவது மிகவும் கடினம்தான் என்றாலும் நாம் அவற்றை நீக்குவதில் உதவுகின்ற வழியைக் கர்ம யோகம் கூறுகிறது.[1]

அப்படியாயின் கடமை என்று நாம் எதைக் கருது கிறோம்? கடமை உணர்ச்சியானது ஒரு உடனடியான வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ள மற்றும் திட்டவட்டமான தேவை நோக்கத்தைக் குறிப்பிடுகிறது. உதாரணமாக, ஒரு மனித னுக்கு வயதான விதவைத் தாயாருக்கு ஆதரவாக இருக்க வேண்டிய கடமை உணர்ச்சி உள்ளது. கடமையானது அவ் வாறு இல்லாமல் வழக்கமான, உடனடியான சூழ்நிலைகளில் குறைந்த அளவு நிர்ப்பந்தத்தையும் ஆனால் நீதிநெறி

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 1. 202-203.

முறைகள் தொடர்பான அடிப்படையில் உயர்ந்த தூண்டு தலையும் சுட்டிக்காட்டுகிறது. ஆங்கிலக் கவிஞரான வோர்ட்ஸ்வொர்த் கடமையை 'தெய்வக்குரலின் கண்டிப்பைக் கடைப்பிடிக்கும் மகள்' என்று கூறுகிறார். சில நேரங்களில் நாம் கடமைக்கும், தன்னலத்திற்கும் இடையில் எப்படி அலைக்கழிக்கப்படுகிறோம் என்பதை அனைவரும் அறி வோம். நாம் அதை எப்படி அழைத்தாலும் ஞானஒளியை அடையாத மனிதர்களாகிய நமக்கு, கடமையானது ஒரு சிறிதளவு கட்டுப்பட்ட தன்மையை அல்லது நிர்ப்பந்தத்தை மறைமுகமாகச் சுட்டுகிறது.

ஞானஒளியைப் பெற்ற மனிதர்களின் தன்மை வேறான தாக உள்ளது. தெய்வத் திரு அவதாரமான ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் நமக்கு, 'செய்ய வேண்டிய கர்மம் எனக்கு மூவுலகிலும் ஒரு சிறிதும் இல்லை. அடையப்படாததாக, இனி அடைவதற்கு உரியதாகவும் ஒன்றும் இல்லை. எனினும் கர்மத்தில் முயன்று கொண்டே இருக்கிறேன்'[1] என்று கூறு கிறார். ஞானஒளியை அடைந்த மனிதர்களாக விளங்கும் தெய்வீக அவதார புருஷர்கள், துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனித குலத்தின்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பால், சுதந்திரமான ஊக்கத்துடன் கடமை ஆற்றுகிறார்கள். அவதார புருஷர்களிடம் ஆசைகளின் முரண்பட்ட தன்மையில்லாத தால், அதன் ஒரே ஒரு வழியின் மூலமாகத்தான் ஒன்றைச் செய்கிறார்கள். அது கடவுளை நோக்கிய வழியாக உள்ளது. அறியாமையின் காரணத்தால், நாம் கடமையின் இயல்பு குறித்தும், அதைச் சந்திக்கும் அல்லது நிறைவுசெய்யும் வழியைக் குறித்தும் அடுத்தடுத்து குழப்பமடைகிறோம்.

கடமையும், தன்னலமும்

சுவாமி விவேகானந்தர், பல சமயங்களில் கடமை உணர்வு என்று கூறப்படுவது ஒரு பிணியாகிவிடுவதை எத்தனை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார்!

---

1. பகவத் கீதை, 3.22.

'கடமை என்பது நமக்கு நோயாகி விடுகிறது. நம்மை இழுத்துக்கொண்டே போகிறது. நம்மைப் பிடித்துக் கொண்டு நம் வாழ்க்கை முழுவதையும் துயரமாக மாற்றுகிறது. கடமையும் கடமையுணர்வும் கோடைக் காலத்தின் நண்பகல் சூரியனைப்போல மனித சமூதாயத்தின் அந்தராத்மாவையே தகிக்கிறது. கடமைகளுக்கு அடிமைகளாகிவிட்ட பரிதாபத்துக் குரிய அடிமைகளைப் பாருங்கள்! கடமை அவர்களைப் பிரார்த்தனை செய்யவோ, குளிக்கவோ கூட விடுவது இல்லை. அவர்களின் மீது எப்பொழுதும் அது அமர்ந் துள்ளது, வெளியில் சென்று வேலை செய்கிறார்கள். அங்கும் அவர்கள்மீது கடமைதான்! வீட்டிற்கு வருகிறார்கள். வீட் டிலும் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிய எண்ணத்தில் மூழ்குகிறார்கள். கடமை அவர்களின் மீது உள்ளது. அது அடிமை வாழ்க்கை. ஒரு குதிரை ஓடிஓடிக் களைத்து நடுவீதியில் வீழ்ந்து சாவதைப்போல இறுதியில் சாகிறார்கள். கடமையைப் பற்றி மக்கள் இவ்வாறு தான் புரிந்துகொண்டு இருக்கிறார்கள். உண்மையான ஒரே கடமை பற்றற்றிருப்பதும், சுதந்திரமாகச் செயல்புரிவதும், செயல்கள் அனைத்தையும் கடவுளிடம் அர்ப்பணித்து விடு வதும்தான்.'[1]

நாம் கடமையின் அடிமைகளாகி நம்முடைய முழு வாழ்வையும் துயரம் மிகுந்ததாக ஆக்கிக் கொள்கிறோம். நம்முடைய கடமை எங்கு நிலைகொண்டுள்ளது, மற்றும் அதை எப்படிச் செய்வது என்பது குறித்தும் மேலான புரிந்து கொள்ளும் தன்மையைப் பெற வேண்டும். நம்முடைய சொந்த சிக்கல்களைத் சரி செய்து கொள்வதை அறிந்துகொள் வதற்கு முன்பே மற்றவர்களுக்கு உதவி செய்யச் செயல்படு வதைப் பலசமயங்களில் காண்கிறோம். அன்பினால் அல்லாமல் நம்முடைய மனநிறைவிற்காகச் செய்கிறோம். உண்மையாகவே, மற்றவர்களுக்குத் தொண்டாற்ற விரும்பும் தன்னலமற்ற மனிதர்களும் உள்ளனர். ஆனால் இந்த

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 1.204-205.

விசித்திரமான உலகை நம்முடைய வயது முதிர்ந்த, அனுபவம் மிக்க ஸ்வாமிஜி ஒருவர் 'கடவுளின் மிகப் பெரிய, பித்தர்களின் புகலிடம்' என்று அதற்குப் பெயரிட்டார். அங்கு பிறர் விஷயங்களில் தலையிடுபவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் வாழ்க்கையில் ஏமாற்றம் மற்றும் வெறுப்பு அடைந்திருப்பதால் அல்லது சலிப்பூட்டும் கடமைப் பொறுப்புக்களை மேற்கொள்வதில் அக்கறை காட்டாமல், தங்களுடைய சொந்த தற்பெருமையை நிறைவு செய்து கொள் வதற்காக, மற்றவர்களுக்குச் சுமையாக உள்ளனர். 'அவர் களுக்கு என்னுடைய அன்பான சேவை தேவைப்படுகிறது' என்று 'நான்' என்னும் எண்ணம் மேலிட்டவர்கள் கூறு கின்றனர். மனிதர்களாகிய நாம் தன்னல நாட்டம் மிகுந்த வர்களாக இருக்கிறோம். நம்மால், நாம் மற்றவர்களை வெறுக்கும் அளவிற்கு மற்றவர்களும் நம்மை வெறுப்பார்கள் என்று கற்பனை செய்ய இயலாது. ஒரு மனோதத்துவ நிபுணர் இதைப் பெண்களின் வகுப்பில் கூறிய பொழுது, அவர்கள் தாங்கள் கேட்டதை எண்ணி மிகவும் வியப்படைந்தனர். தன்னலநாட்டமானது, ஒருவர் முழுமையாக வெறுக்கப்பட லாம் என்னும் எண்ணத்தைச் சுலபமாக ஏற்றுக்கொள்ளாது.

மற்றொரு வகையான தன்னலம் மிக்கவர்கள் இருக் கின்றனர். மற்றவர்களை மகிழ்ச்சி அடையச் செய்வதில் மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் பிரார்த் தனை செய்வதற்கோ அல்லது தியானம் செய்வதற்கோ நேரமில்லாமல் இருப்பார்கள். அவர்கள் பொதுநோக்குள்ள வர்களைக் கொண்டுள்ள குழுக்கள் (Clubs) அல்லது சீட்டாட்ட வகையைச் சேர்ந்து ஆடுபவர்களுடன் விருந்து, நாகரீகப் பாங்கினை உடைய உயர் வகுப்பினர்களுடன் சேர்ந்து இருத்தல், விருந்துகள், அரசியல் சார்ந்த குழுவினருடன் சேர்ந்துகொண்டு, உலகத்தைக் காப்பாற்றும் மனப்பான்மை யுடன், தங்களுக்கு முக்கியத்துவம் வேண்டுமென்பதற்காக ஆரவாரப் பகட்டுடன் சிறிது காலத்திற்கு இருந்துவிட்டு, புதுமை சலிப்படையத் தொடங்கும்பொழுது அல்லது நடவடிக்கைகளிலோ, பயனற்றப் பேச்சுக்களிலோ ஆர்வம்

ஓயும்பொழுது அவர்கள் அப்பொழுதே துன்பமுற்றவர்களாக வும், நிறைவற்றவர்களுமாக உணர்கிறார்கள். மழுப்பலற்ற சொற்களில் சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

'கடமை என்பதற்குப் புறச்சார்பான (objective) விளக்கம் தருவது என்பது இயலாத ஒன்று. ஆனால் அகச்சார்பான விளக்கம் (subjective) இருக்கிறது. எந்தச் செயல் நம்மைக் கடவுளை நோக்கிச் செலுத்துகிறதோ அது நற்செயல். எந்தக் கடமை நம்மைக் கீழ் நிலைக்கு இழுத்துச் செல்கிறதோ அது தீயது மற்றும் நமது கடமை அல்ல.'[1]

தன்னலத்தை மலர்களால் மறைத்துக்கொண்டு, நம்மால் பற்றற்ற மனப்பாங்குடன் உண்மையான தொண்டாற்ற இய லாது. மற்றும் அதை முழுமையான ஆன்மீக வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்க இயலாது. தன்னலத்தை மையமாகக் கொண்ட 'கடமை'யானது நமக்குப் பல தொந்தரவுகளைக் கொண்டு வரலாம் மற்றும் புதிய பிணைப்பை உருவாக்கலாம்.

அகங்காரத்தின் பன்முகங்கள்

மனிதர்கள் பலவகையான ஆக்கக் கூறுகளின் விசித்திரக் கலவையாவார்கள். பெரும்பாலான மனிதர்கள், எத்தனை தனிப்பட்ட மனிதர்கள் சேர்ந்த குழுக்களின் கருத்துக்களை மதிக்கிறார்களோ, அத்தனை பல்வகைப்பட்ட சமூகத்தன்மை களை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது வில்லியம் ஜேம்ஸ் என்பவரின் கருத்தாக உள்ளது. நம்மிடம் இரண்டு மற்றும் வெவ்வேறான முரண்பட்ட இயல்புகள் உள்ள நிலையும் உள்ளன. நாம் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஒரு தன்மை உடையவராகவும், தேவாலயத்தில் வேறுதன்மை உடையவராகவும், வீட்டில் இருக்கும்பொழுது இன்னும் வேறுபட்ட தன்மை உடையவராக இருக்கிறோம். நாம் நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் மகிழ்ச்சியுடன் செய்வதை, பொது இடங்களில் செய்யத் தயங்குகிறோம். சில

---

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 1.107.*

சமயங்களில் நம்முடைய பல்வேறுபட்ட தன்மைகள் முற்றிலும் ஒன்றுடன் ஒன்று முரண்பாடு உடையதாக இருப்பதால், முடிவற்ற குழப்பங்களை நமக்கு ஏற்படுத்துகின்றன. ஒரு மளிகைக் கடைக்காரரைக் குறித்த கதை ஒன்று உள்ளது. மளிகைக் கடைக்காரரும் அவர் குடும்பமும் மீட்டெழுச்சி வழிபாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு மதம் மாறும் வரையிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் எப்பொழுதும் தன் வாழ்க்கைத் தொழிலைச் செய்துவந்தார். அதற்குப் பிறகு வந்த ஞாயிற்றுக் கிழமையில், பக்கத்து வீட்டுச் சிறுமி, பால் வாங்குவதற்காகக் கதவைத் தட்டிய பொழுது, மளிகைக் கடைக்காரரின் இளஞ்சிறுமியான மகள், மேல் ஜன்னலிலிருந்து எட்டிப்பார்த்து 'நாங்கள் அனைவரும் சென்ற வாரத்தில் மதம் மாறிவிட்டோம் என்பது உனக்குத் தெரியாதா? இதன்பிறகு, ஞாயிற்றுக் கிழமைகளில் உனக்குப் பால் வாங்க வேண்டும் என்றால் நீ பின்பக்கக் கதவு வழியாகத்தான் வர வேண்டும்' என்று கூறினாள்.

இந்த வகையில் பாமரர்கள் மட்டும் அவர்களை ஏமாற்றிக் கொள்ளவில்லை. உயர்மட்டத்தில் இருப்பவர்கள் கூட பல சமயங்களில் இரட்டை வாழ்க்கையை வாழ்கின்றனர். ஜெர்மன் நாட்டிலுள்ள கொலொன் என்னும் ஊரில் (cologne) தேர்தலில் பங்கு கொள்ள உரிமை பெற்றிருந்த இளவரசர் தலைமைக் குருவாகவும் இருந்தார். ஒருநாள் அவர் ஒரு விவசாயியின் முன்பு ஆசாரமற்ற, தகாத சொற்களைப் பயன்படுத்தினார். அந்த விவசாயியால் வியப்பை அடக்க இயலவில்லை. தன்னை நியாயப்படுத்திக் கொள்வதற்காக அவர் 'நல்ல மனிதனே, நான் தலைமை குருவாக இல்லாமல், இளவரசனாக ஆணையிடுகிறேன்' என்று கூறினார். அதற்குப் புத்திசாலியான அந்த விவசாயி ஆனால், 'கனம்பொருந்தியவரே, இளவரசர் நரகத்திற்குச் சென்றால், தலைமை குரு என்ன ஆவார்?' என்று கேட்டார். நாம் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையையும் பொது வாழ்க்கையையும் வேறுபடுத்தி, எதிரெதிரான நடத்தை விதிமுறைகளைப் பின்பற்றினால், அமைதியற்ற தன்மை மற்றும் இரட்டைப்

பிணைப்பு என்னும் வடிவில் கடுமையான தண்டனை அடைவதை நம்மால் தடுக்க இயலாது. நாம் நம்முடைய சொந்த வாழ்க்கைகளில் நிச்சயமாக ஒரு நரகத்தை உருவாக்கி, தீய விளைவுகள் என்னும் தொடர்வரிசையை அடுக்குகிறோம்.

உண்மையான கடமைகள் இருப்பதைப் போன்றே போலியான கடமைகளும் உள்ளன. வாழ்க்கையில் எந்தச் செயல் சரியானது, மற்றும் எந்தச் செயல் தவறானது என்று முடிவு செய்வது எப்பொழுதும் அத்தனை சுலபமானது அன்று. அமைதியாக வாழ்வு நடந்து கொண்டிருக்கும் பொழுது, யாரையாவது கொல்லுவது சட்டப்படி தவறு ஆகும். ஆனால் போர்க்காலங்களில் அதிலும் முக்கியமாக ஒருவர் ராணுவத்தைச் சேர்ந்தவராக இருந்தால் எத்தனை பகைவர்களைக் கொல்ல முடியுமோ, அத்தனை பகைவர்களைக் கொல்வது ஒவ்வொரு மனிதனின் கடமையாகிறது. ஹிந்து தர்மத்தின் படி ஒரு பசுவைக் கொல்வது தவறானதாகும். ஏனெனில் பசு தாய்மையின் சின்னமாக விளங்குகிறது. ஆனால் இஸ்லாமிய தர்மத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு ஒரு பசுவைக் குறிப்பிட்ட பண்டிகையின்பொழுது கொல்லுவது பாராட்டும் தன்மையைப் பெறுகிறது. மீண்டும் ஒரு ஹிந்து அஹிம்சையை ஒரு கடமையாகப் பின்பற்றும் பொழுது, முற்காலத்தில் இருந்த இஸ்லாமியர்கள், தெய்வ நம்பிக்கை அற்றவர்களை கொன்றதற்காகப் பாராட்டப் பட்டனர். வரலாற்றின் இடைநிலைக் காலத்தில், கிறிஸ்தவ சமயத் துறையைச் சார்ந்த தண்ட உயர்நீதி மன்றப் பணியாளர்கள், திருச்சபைக்கு முரணான கோட்பாடு உடையவர்களை, மூலத்திருக்கோயிலைக் காப்பாற்றுவதற்காக மரமுளையில் எரிப்பதை தங்கள் கடமை என்று கருதினர். இவ்விதம் பலவகையான கடமைகள் உள்ளன. இது பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:

'அடிமைத் தனத்தைக் கடமை என்று சொல்வதும், மாமிசப் பிண்டத்திற்கு, மாமிசப் பிண்டத்தின்மீது இருக்கும் தீவிர பற்றிற்குக் கடமை என்று விளக்கம் தருவதும் எவ்வளவு எளிதானவை. பணம் முதலான பொருட்களில் பற்றுக் கொண்டு, அவற்றை அடைவதற்காக உலகக் களத்தில்

இறங்கிப் போராடுகின்றனர். ''இதை ஏன் செய்கிறீர்கள்?'' என்று கேட்டுப்பாருங்கள், ''இது எனது கடமை'' என்பார்கள். பணத்தின்மீதும் இலாபத்தின்மீதும் உள்ள முட்டாள்தனமான பேராசையைச் சில பூக்களால் மறைக்க முயற்சிக்கிறார்கள்.[1]

மனிதமனத்தை விரிவுப்படுத்துவதற்கு எது வழிகாட்டி யாக உள்ளதோ, அது நல்லது ஆகும். மனித மனத்தைச் சுருங்கச் செய்வதற்கு எது வழிகாட்டியாக உள்ளதோ அது கெட்டது ஆகும் என்பது தத்துவஞானி ஸ்ரீராமானுஜரின் கருத்து ஆகும்.

ஹிந்து தர்மத்தில் கடமையைக் குறித்த கருத்துப்படிவம்—வர்ணாஸ்ரம தர்மம்

ஹிந்து தர்மம், சமூகத்தில் நான்கு வரிசைமுறைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆன்மீக மனிதன், போர்வீரன், வணிகன் மற்றும் தொழிலாளர் என்னும் நான்கு பிரிவினர்களுக்கும் வரையறுக்கப்பட்ட கடமைகளை அமைத்துள்ளது. இந்த ஒவ்வொரு பிரிவில் இருப்பவர்களுக்கும் அவர்களுடைய வளர்ச்சியைப் பொறுத்துத் தனிவகையான கடமைப் பொறுப்புக்களும் உள்ளன. அதாவது மாணவன், இல்லறத் தான், சுறுசுறுப்பான வாழ்விலிருந்து ஓய்வுபெற்ற மனிதன் மற்றும் ஸன்னியாஸி என்பவர்கள் ஆவாரக்ள். பண்டைக்கால ஹிந்துப்பண்பாட்டில் இந்த எல்லா வழிமுறைகளும் திட்ட வட்டமாகத் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்காலத்தில் மேற்கத்திய சமூகம்-அரசியல் சார்ந்த கருத்துக் களும் மற்றும் தொழில் நுட்பமும் இவ்வனைத்தையும் மாற்றிவிட்டன. இப்பொழுது உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்த குழப்ப நிலை உள்ளது. மற்றும் தாங்கள் எதைச் சார்ந்தவர்கள் அல்லது எதைச் செய்ய வேண்டும் என்பதை அறியாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக் கிறது. ஹிந்து கோட்பாடானது, ஒவ்வொரு மனிதனுக்கும், அவனுடைய தர்மம் அல்லது நன்னெறியுடன் கூடிய

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.205.*

வாழ்வுமுறை உள்ளது. அது அவனைக் கடவுளின் வழியில் கொண்டு செல்லும் என்று கூறுகிறது. தர்மம் என்பது எல்லா வற்றையும் உட்கொண்ட வாழ்க்கையின் நடைமுறை ஒழுங்கு ஆகும். அது தன்னை, தனிநபர் மற்றும் சமுதாயம் வழியாக வெளிப்படுத்திக் கொண்டு, மனிதனின் முழு வாழ்வையும் ஆழ்ந்த இயலுலகு ஒழுங்கு நிலையுடன் ஒருங்கிணைத்து உதவுகிறது. ஒரு ஒருங்கிணைந்த மெய்க் கருத்து வரையற்ற வெளிப்பாடுகளுடன் உள்ளது.

சமூதாயத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தனிமனிதன் பகுக்க முடியாத, முழுமையான இயலுலகத்தின் ஒரு பகுதி யாகவும் விளங்குகிறான் என்பதுதான் பகவத்கீதையும் மற்றும் மற்ற திருமறை நூல்களும் புகட்டும் சிறந்த பாடமாக உள்ளது. பண்டைய ஹிந்து திருமறை நூல்களில், வல்லமை மிகுந்த ஒருவரின் உருவகம் உள்ளது. அவருடைய வாயி லிருந்து ஆன்மீக இயல்பைக் கொண்ட உணர்ச்சிகள் கட்டுப் படுத்தப்பட்ட ஞானம் நிறைந்த நேர்மையும், தூய்மை யுமுடைய அந்தணன் தோன்றினான். கைகளிலிருந்து க்ஷத்திரி யர்களும் தொடைகளிலிருந்து வைசியர்களும், விவசாயி களும் தோன்றினர். அவர்களுடைய கடமையாக உணவை ஏற்பாடு செய்து வழங்குவதும், மனித வாழ்க்கைக்குரிய வழிவகைகளை செய்து கொடுப்பதும் இருந்தது. அவருடைய பாதங்களிலிருந்து உழைப்பாளிகள் தோன்றினர். அவர்கள் உலகத்தில் கடினமான செயலை மேற்கொண்டனர்.'[1]

சமூதாயத்தின் எல்லா விதிமுறைகளும், ஒரு முழுமை யின் பிரிக்க இயலாத பகுதிகளாக உள்ளன. மனித உடலின் உறுப்புக்களைப் போல உள்ளன (பிரிக்க இயலாதபடி). மாணவப் பருவம், மற்றும் இல்லறம் என்னும் நிலைகள் முடிவடைந்த பிறகு, வாழ்க்கையை விட்டு ஒதுங்கி வாழ் வதற்கு நேரம் உள்ளது. ஒருவேளை எல்லா பிணைப்புக் களிலிருந்தும் விடுபட்டு, தனிமையில் தியானம் செய்யும் துறவற வாழ்க்கைக்கும் நேரம் உள்ளது.

---

1. புருஷஸூக்தம், ரிக்வேதம், 10.90.12.

ஒவ்வொரு தனிமனிதனும், அவனுடைய வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும், ஆதாரமாக உள்ள இயலுலக ஒழுங்கு இயல்புடன் ஒருங்கிணைந்து இருப்பின், அவன் தன்னுடைய நலத்தை உயர்வு அடையச் செய்து கொள்வதுடன், அவனைச் சுற்றி உள்ள அனைவரின் நலத்தையும் உயர்த்துவான். அதுதான் நம் ஒவ்வொருவருக்கும் உள்ள மிக உயர்ந்த கடமையாகும். பரம்பொருளானது பல கைகளையும், பல பாதங்களையும் உடையதாகப் பலமுறை சுட்டிக்காட்டப்படுகிறது. முழுமையான ஒருமையின் பலவித வெளிப்பாடுகளை நமக்கு நினைவுபடுத்துவதற்காக இவ்விதம் கூறப்பட்டுள்ளது. உலகம் என்னும் நாடக மேடையில் ஒவ்வொரு மனிதனும் ஒரு நடிகன் ஆவான். அவனுடைய பாத்திரத்தை எத்தனை நன்றாகச் செய்ய இயலுமோ, அத்தனை நன்றாகச் செய்வதற்கு அவன் கற்றுக் கொள்ள வேண்டும். நம்மிடையில் இருவருக்கு அதே பாத்திரத்தை ஏற்றுச் செய்ய இயலாது. ‘எல்லா மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர்’ என்று அமெரிக்காவின் சுதந்திர உறுதிமொழி கூறுகிறது. இரண்டு மனிதர்கள், அகவாழ்விலோ அல்லது புறவாழ்விலோ ஒரே போன்று இல்லை என்பதை நாம் அனைவரும் அறிவோம். பிறகு அவர்களால் எப்படிச் சமமாக இருக்க இயலும்? வேதாந்தம், அதே ஆன்மா அனைவரிடமும் குடிகொண்டுள்ளது. ஆனால், மனம் சார்ந்த, உடல் சார்ந்த திறமைகள் மற்றும் இயல்புகளைப் பொறுத்த மட்டில் மனிதர்கள் சமமாக இல்லை. ஒருவரிடமிருந்து மற்றொருவர் பெருமளவில் வேறுபடுகிறார். ஒரே வகையான தன்மையும், சமநிலையும் ஆன்மீக மட்டத்தில் உள்ளது. மற்ற எல்லா மட்டங்களிலும் பெரிய அளவில் வேறுபாட்டுத் தன்மை உள்ளது என்று கூறுகிறது.

சிறந்த அறிஞரும், பிறர் நலனுக்காக உழைத்தவருமாகிய ஈஸ்வர சந்திர வித்யாசாகர் ஒருமுறை ஸ்ரீராமகிருஷ்ணரை ‘கடவுள் சிலருக்கு அதிகமான ஆற்றலையும், சிலருக்குக் குறைந்த ஆற்றலையும் வழங்கியுள்ளாரா?’ என்று கேட்டார். அதற்குக் குருதேவர்,

'கடவுள் எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறார். எறும்புவரை எல்லா உயிரினங்களிலும் இருக்கிறார். ஆனால் சக்தி வெளிப்பாட்டில் வித்தியாசம் உண்டு. இல்லாவிட்டால் ஒருவன் பத்துப்பேரை அடித்து வீழ்த்துகிறான். மற்றொருவன் ஒருவனைக் கண்டே ஓடுகிறான். அது எப்படி? சக்தி வெளிப் பாட்டில் வித்தியாசம் இல்லை என்றால், உங்களை ஏன் எல்லோரும் மதிக்க வேண்டும்? உங்களுக்கு என்ன இரண்டு கொம்புகளா முளைத்திருக்கின்றன? உங்களிடம் பிறரைவிட அதிகப் படிப்பும், கருணையும் உள்ளன. அதனால்தான் மக்கள் உங்களை மதிக்கிறார்கள்.'[1]

அவனுடைய அறிவாற்றலைக் கண்டுகொண்டு, அவ னுடைய சொந்த இயல்பின் உண்மையைக் கண்டுபிடித்து அதன்பிறகு அவன் தன் ஸ்வதர்மத்தை, தன்னுடைய வளர்ச்சிக்குரிய வழிமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று ஹிந்து தர்மம் அறிவுறுத்துகிறது. அதன்பிறகு அவனால் அவனுக்கு உரிய கடமையைக் குறித்தும், சமூகத்திற்கு உரிய கடமையைக் குறித்தும் தெளிவாக இருக்க இயலும். ஒரு குறிப்பிட்ட இளைஞர், இல்லறத்தை மேற்கொண்டவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்து, இவ்வுலகத்தைத் துறந்து துறவறத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளதாகக் கூறினார். குருதேவர், அந்த இளைஞனை குடும்ப வாழ்விற்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார். 'என்னுடைய மாமனார் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வார்' என்று துறவறத்தை ஏற்க விரும்பிய இளைஞன் கூறினான். 'உனக்குச் சுய கௌரவ உணர்வு இல்லையா?' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் அந்த இளைஞனைக் கேட்டார். அந்த இளைஞனைத் திட்டிய பிறகு, ஒரு வேலையைத் தேடிக் கொண்டு, குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் படிக் கூறினார்.[2] பொது வான வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு தனி நபருக்கும் தர்மம் என்பது உள்ளது. மற்றும் மிகுந்த

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.62.
2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.6.

உழைப்பு மிக்க வாழ்க்கையும் இயலுலக ஒழுங்கியல்பில் பங்கு கொள்கிறது. வாழ்க்கையின் கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றினால், ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக வளர்ச்சியை அடையலாம். வேலையிலோ அல்லது வாழ்க்கை நிலையிலோ மேம்பட்டது அல்லது கீழ்ப்பட்டது என்னும் கேள்விக்கு இடமில்லை. ஒவ்வொருவரும் ஆன்மீகத்தில் முழுமை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். இதுதான் பகவத் கீதையின் மையமான அறிவுரையாக உள்ளது. இந்த சுலோகத்தில் அது தெளிவுடன் கூறப்பட் டிருக்கிறது.

'எவனிடமிருந்து பொருட்கள் எல்லாம் உற்பத்தி யாகின்றனவோ, யாரால் இவ்வனைத்தும் வியாபிக்கப்பட் டுள்ளதோ அவனைத் தனக்கு உரிய கர்மத்தால் அர்ச்சித்து, மனிதன் பக்குவநிலையை அடைகிறான்.'[1]

நம்முன்னால் இரண்டு வழிகள் உள்ளன. முதலாவது சரியான முறையில் உலகச் செயல்களை செய்து முடித்து இன்பத்தைத் துய்க்கும் வழியாகும். இது சரியான முறையில் சீராக்கப்பட்டால் இயல்பாகவே பரம்பொருளை உணர்வது மற்றும் எல்லா பிணைப்புக்களிலிருந்து விடுபடும் உச்ச நிலையான இரண்டாம் வழிக்குக் கொண்டு செல்கிறது. ஒருவருடைய திறமைக்குத் தகுந்தாற் போல் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். எக்காலத்திலும் தவிர்க்க வேண்டிய வழி அதர்ம வழி அல்லது நேர்மையற்ற வழியாகும். அது அதிகமான உணர்ச்சிகள் பொய்ம்மை மற்றும் பேராசையால் நிரப்பப்பட்ட வழி ஆகும். உலகத்தில் நாம் செய்யும் செயல்களின் விளைவால், ஆக்கப் பொருட் கூறுகளில் வளமையான நிலை ஏற்பட்டால், அது மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். ஒருவருடைய ஆன்மீக இன்னலத்தை மற்றும் மற்றவர்களின் ஆன்மீக இன்னலத்தை உயர்த்துவதற்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

---

1. பகவத் கீதை, 18.46.

இல்லறத்தாரின் கடமைகள்

ஹிந்துக்களின் சமூதாய வாழ்வு முறையில், இல்லற வாழ்வை மேற்கொண்டிருப்பவர், சமூதாயத்தின் ஆதாரமாக காணப்படுகிறார். சமூதாயத்தின் பொதுவான நன்மைக்கும், மற்றும் பாதுகாவலுக்கும் அவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பது அவசியமானதாகும். மனுஸ்ம்ருதியில் 'எல்லா உயிரினங் களும் அவர்கள் உயிர் வாழ்வதற்குக் காற்றைச் சார்ந்து இருப்பதைப்போல, வாழ்க்கையின் மற்ற நிலைகளில் இருக்கும் மனிதர்கள், அவர்களின் வாழ்க்கை ஆதாரத்திற்கு இல்லற வாழ்க்கையை மேற்கொண்டவர்களைச் சார்ந்து இருக்கிறார்கள்.'[1]

எப்படியிருப்பினும், இல்லறத்தை மேற்கொண்டிருப்ப வரின் வாழ்வானது, புலன் இன். ங்களைத் துய்ப்பதற்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கருதப்படக் கூடாது. ஸ்ரீகிருஷ்ணர் தன்னுடைய சீடரான உத்தவருக்கு அளித்த அறிவுரையில், இந்தக் கருத்தானது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இல்லற வாழ்வை மேற்கொண்டிருப்பவர், இல்லறத் தின் உயர்ந்த லட்சியம் இன்பத்தை அனுபவிப்பதில்லை. ஆனால் ஞானத்தை அடைவதில் உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில் இயலுலகத்தின் முழுமையில் தனிப்பட்ட வாழ்வானது ஒரு பகுதியாகி விடுகிறது. ஒரு பக்தன், இல்லறத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளின் மூலம் கடவுளை வழிபட்டபிறகு, காட்டிற்குச் சென்று, ஓய்வு எடுத்துக் கொண்டு, ஆன்மீக வழிமுறைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தன்னுடைய மனத்தைத் தூய்மை செய்து கொள்ள வேண்டும்.'[2]

---

1. *யதா வாயும் ஸமாச்ரித்ய ஸர்வே ஜீவந்தி ஜந்தவ: ।
ததா க்ருஹஸ்தமாச்ரித்ய வர்தந்தே ஸர்வ ஆச்ரமா: ॥*
—மனு ஸ்ம்ருதி, 3.77.

2. *பாகவதம், 11.17.52,55.*

ஹிந்து திருமுறை நூல்களின்படி, இல்லற வாழ்வை மேற்கொண்டிருப்பவர் ஐந்து வகையான கடமைகளை நிறைவேற்ற வேண்டும். 1. கடவுளை வழிபடுதல்; 2. திரு மறை நூல்களை ஆராய்ந்து படித்தல் (முனிவர்களுக்குப் பணிவிடை செய்தல்); 3. உடனொத்த மனிதர்களுக்கு உதவுதல்; 4. மூதாதையருக்குத் திருப்படையல் அர்ப்பித்தல்; 5. மற்றும் விலங்குகளைப் பேணுதல். இக்கடமைகள் அனைத்தும் பஞ்சமஹாயஜ்ஞம் என்று அழைக்கப்படு கின்றன.[1] இந்தக் கடமைகள் அனைத்தையும் தலைச் சுமைகள் என்னும் எண்ணத்துடன் செயல்படுத்துதல் கூடாது. தொண்டு செய்யும் மனப்பாங்குடன்; வழிபடும் மனப்பாங் குடன் செய்யப்பட வேண்டும். ஒருவர் ஒருவருடைய கடமை களை இத்தகைய மனப்பாங்குடன் நிறைவேற்றினால், அக்கடமைகள் பிணைப்பிற்கு வழிகாட்டாது. அதற்கு மாறாக, அவை ஒருவரை ஆன்மீக வாழ்வு வாழ உதவி செய் கின்றன. வேதாந்தமானது கடமை, தொண்டு, வழிபாடு என்பனவற்றை ஒருங்கிணைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஒரு செயல் நம்முடைய ஆன்மீக வாழ்வுடன் தொடர்புபடுத்தப்படாவிட்டால் அதைக் கடமை என்று கூற இயலாது. ஒரு குறிப்பிட்ட வேலை உன்னைக் கடவுளிட மிருந்து அப்பால் இழுத்துச் செல்கிறது என்று நீ கண்டுகொண் டால் அதைச் செய்யாமல் இருப்பாய். எல்லா வகையான செயல்களும் நம்மைக் கடவுளுக்கு அருகே அருகே அழைத்துச் செல்ல வேண்டும். ஸ்ரீகிருஷ்ணர் உத்தவருக்கு பாகவதத்தில் இதைக் கூறுகிறார்.

தொடர்ந்து, நிலைத்த உறுதியுடன், தன்னுடைய கடமை களைச் செய்வதன்மூலம் என்னை வழிபடுபவன், ஒப்புயர் வற்ற இலக்காக என்னை உணர்ந்துகொண்ட ஒருவன், ஞானத்தை அடையப் பெறுகிறான். உண்மையை உணர் கிறான். மற்றும் வெகு விரைவில் என்னை அடைவான். எல்லாக் கடமைகளுடன் என்மீது பக்தியும் இருந்தால், அது

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 1.4.16; சதபத ப்ராஹ்மணம், 1.7.2.6.

முக்திக்கு வழிகாட்டுகிறது. இதுதான் பேரின்பத்திற்குரிய வழியாகும்.[1]

மனிதனுக்குத் தன்பால் உள்ள கடமை

ஒவ்வொரு மனிதனுக்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வகைப்பட்ட கடமைகளையும் தாண்டி, அதற்கும் மேலாக, அவனுடைய மேம்பட்ட உள்ளுறைத் தன்மையை நோக்கிய ஒரு கடமை உள்ளது. ஒவ்வொரு ஜீவனும் பரம் பொருளின் ஒரு பகுதியாக இருப்பதால் அவன் அவனுடைய மேம்பட்ட உள்ளுறைத் தன்மையை நோக்கித் தன்னுடைய கடமைகளை செய்து முடிக்கும் பொழுது, அவன் மற்ற எல்லாக் கடமைப் பொறுப்புக்களையும் நிறைவேற்றுகிறான். அவனுடைய மேம்பட்ட உள்ளுறைத் தன்மையானது அது விரிவுறுவதற்காக, வெளிப்படுவதற்காகக் காத்துக் கொண் டிருக்கிறது. ஆனால் அது தொடர்ந்து அவனுடைய கீழான தன்மை அல்லது அகங்காரத்தால் மறைக்கப்பட்டுள்ளது. அன்றாட வாழ்வின் இரைச்சலிலும், ஆரவாரத்திலும் புலன் இன்பத்தை நோக்கி ஆராயாத அவசரத்தில் செல்லும் விரை விலும், அவன் தன்னுடைய ஆன்மாவின் அழைப்புக் குரலை, 'அகக் குரலை'ப் புறக்கணித்து விடுகிறான். அதன் விளைவாக அவன் எதைச் செய்தாலும், முடிவில் அவனுக்கு நிறைவற்ற தன்மையின், செயல் குலைவின் மூலகாரணமாக அது ஆகிவிடுகிறது. அவனுடன் இருப்பவர்களுக்கு அவன் செய்வதாகக் கூறப்படும் தொண்டு கூட சோர்வையும், அதிருப்தியையும் அளிக்கிறது. நாம் செய்யும் எல்லாக் கடமைகளும், மேம்பட்ட உள்ளுறைத் தன்மையை விரிவுறுத்துவதையே அவைகளின் ஒருங்கிணைந்த குறிக் கோளாகக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கை பொருளுடையதாகத் தோற்றமளிக்கும்.

மனிதர்கள், கண்டிப்பு மிகுந்த ஒரு நடைமுறையை அனுபவப்பட்டு அறியாமலே, கடவுளின் கைகளில்

---

1. பாகவதம், 11.18.44,47.

புனிதமான கருவிகளாக ஆகாமலே சாதனையைச் செய் யாமலே ஆசிரியராக விரும்புகிறார்கள் என்பதுதான் முதன்மை யான சிக்கலாக விளங்குகிறது. கடவுள், மனித உடல் என்னும் கோயிலில் வாழ்கிறார். நாம் முதலில் நம்மிடம் கடவுளை உணர்ந்து நம்முடைய சொந்தச் சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய வர்களாக இருந்து அதன்பிறகு மற்றவர்களுக்கு உதவலாம். நாம் நாமாக இருந்துகொணடு உண்மையின் ஒளிக்கதிர் களைப் பரப்பி, அவர்கள் அதை அறியாமலே அமைதியாகப் பிறருக்கு உதவலாம். ஆனால் நாம் எந்த விதமான ஆன்மீக அனுபவத்தையும் அடையாமல், ஆன்மீக முறையில் பிறருக்கு உதவ வேண்டும் என்று நினைப்பதோ அல்லது பேசுவதோ பொருளற்றது ஆகும். நீ உண்மையாகவே தூய்மையையும், பிணைப்பற்ற தன்மையையும் வளர்த்துக் கொண்டபிறகு, உலகியல் இயல்பு கொண்டவர்களுடன் கலக்காமல் இருக்கும்பொழுது, உலகமானது உன்னுடைய மனத்திலும், நரம்புகளிலும் விளைவுகளை ஏற்படுத்தாமல் இருக்கும் பொழுதுதான், நீ மற்றவர்களுக்கு உதவி செய் வதைக் குறித்துப் பேசலாம். கடவுளின் கரங்களில் நீ கருவி யாக மட்டும் இருக்கிறாய் என்பதை உணர்ந்து பிறருக்கு உதவலாம்.

நாம் நம்முடைய கடமையாகக் கருதத் தக்க மற்றொரு விஷயமும் உள்ளது. நாம் நம்முடைய பள்ளிப் பருவ நாட் களைக் கடந்த பிறகும் கூட, மாணவ வாழ்க்கையின் சிறிய அம்சம் தொடரப்பட வேண்டும். நம்முடைய படிப்பிலும், கருத்தூன்றிய கல்வியிலும் ஏதாவது தடை ஏற்பட்டால் அது நம்முடைய மன வளர்ச்சிக்கும், சிந்திக்கும் இயல்பிற்கும் அவ்வளவு நல்லதாக இருக்காது. பல மனிதர்கள், பள்ளியை விட்டுச் செல்லும் பொழுதோ அல்லது பெரியவர்களாக வளரும் பொழுதோ, தங்களுடைய சிந்திக்கும் பழக்கத்தை இழந்து விடுகிறார்கள். இந்த நிலை உண்மையாகவே கேடுற்றதாகும். தவறான, தெளிவற்ற சிந்தனையை விட ஆபத்தானது எதுவும் இல்லை. தங்களுடைய சிந்திக்கும் பழக்கத்தை இழந்து, அவர்கள் செயலாற்றும் மனிதர்களாக

இருப்பார்களே தவிர சிந்திக்கும் மனிதர்களாக இருக்க மாட்டார்கள். இரண்டும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இணக்கமுற்றிருக்க வேண்டும். இல்லையெனின் தீய விளைவுகள் ஏற்படும். பெரும்பாலான மனிதர்களுக்கு ஒரு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் படிப்பை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. அத்தகைய நோக்கம் ஈடேறப் பெறும் ஒரு சிலரும், மிகுந்த மன அழுத்தமும் போராட்ட மும் மிகுந்த ஒரு காலத்தைக் கடக்க வேண்டியுள்ளது. ஏனெனில் சிந்திக்கும் பழக்கத்தை இழந்துள்ளனர். அவர் களுடைய அறிவாழமற்ற மேலெழுந்தவாரியான படிப்பு, திட்பமற்ற பேச்சு, சிந்திக்காமல் செயல்படும் வெளிப்புறச் செயல்பாடுகள், அவர்களுடைய சிந்திக்கும் திறமையைப் பெரிய அளவில் கெடச் செய்துவிடுகிறது. நீ உன்னுடைய கண்களைத் திறந்தால், எத்தகைய உயர்ந்த நோக்கமுமன்றி, சிந்திக்காமல் பல செயல்களைச் செய்தல் அல்லது உண்மை யைக் குறித்து மற்றும் உயர்ந்த நடைமுறை ஒழுங்கை ஆழமாகப் புரிந்துகொள்ளாமல் இருப்பது போன்ற இதன் விளைவுகளை நம்முடைய தற்கால உலகத்தில் காணலாம். செயல்களைச் செய்ய வேண்டும் என்பதற்காகச் செயல்களைச் செய்வது, சோம்பேறித்தனத்திற்காகச் சோம்பலாக இருப் பதைவிட மேலானது அல்ல. எப்படியிருப்பினும் பலரும் அத்தகைய நடவடிக்கைகள் உள்ள சுறுசுறுப்பான வாழ்க்கை என்று தங்களைப் பற்றித் தாங்களே தற்பெருமை அடித்துக் கொள்வார்கள். நான் ஏதோ ஒன்றைச் செய்து கொண்டே இருக்கிறேன் என்றால் அது போதுமானதாகாது. நான் செய்வது ஓரளவு நன்மை தருவதாக ஆக்கப்பூர்வமானதாக இருக்க வேண்டும். அழியும் தன்மை உள்ளதாக அல்லது மனிதகுலத்தைக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்லத்தக்கதாக இருக்கக் கூடாது.

எனவே, நமக்கு அதிக அளவு படிப்பதற்கு நேரம் இல்லாமல் இருந்தாலும், தீவிரமாகச் சிந்திக்கும் முறை யானது தினமும் பின்பற்றும் ஒரு விஷயமாகச் செய்யப்பட வேண்டும். பயனற்ற, மற்றும் தீங்கினை விளைவிக்கும்

எண்ணங்களைப் பற்றிச் சிந்திப்பதிலேயே அதிகமான நேரம் தொடர்ந்து வீணடிக்கப்படுகிறது. உயர்ந்த, ஆக்கபூர்வமான திட்டங்களைக் குறித்துச் சிந்திப்பதற்கு அது பயன்படுத்தப் பட வேண்டும். ஒரு நாளின் நிகழ்வுகளில் பல சோர்வான கணங்கள் உள்ளன. மற்றும் இத்தகைய சோர்வான கணங் களை, உயர்ந்தவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்குப் பயன் படுத்திக் கொள்ளலாம். பயனற்ற எண்ணங்களைப் பற்றிச் சிந்திப்பதைவிட, ஏதோ மேம்பட்ட ஒன்றிற்காக நாம் அந்த நேரத்தைப் பயன்படுத்தலாம். ஏதோ ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு சோம்பேறித் தனமாக இருப்பதைவிட, நாம் அத்தகைய கணங்களை ஏதோ உயர்ந்ததைப்பற்றி அறிவுக்குப் பொருத்தமான ஒன்றைப்பற்றிச் சிந்திக்கப் பயன்படுத்தலாம். நாம் உண்மையாக இதைச் செய்தால், நாம் படிப்பதற்கு, அறிவுபூர்வமாகச் சிந்திப்பதற்கு நாம் பயிற்சி செய்வதற்கு அதிகமான நேரம் உள்ளது என்பதை உணரலாம். நம்முடைய எண்ணங்களை, எத்தகைய நோக்கமும் இன்றி மிதப்பதற்கு அனுமதிக்கக் கூடாது.

நாம் அடிக்கடி, ஏறக்குறைய எண்ணமற்ற நிலையில் ஒரு அரைமணி நேரத்திற்கு உட்கார்ந்து கொண்டு இருப்போம். அல்லது ஏதாவது செறிவற்ற செய்தியைப் படிப்போம். அல்லது ஏதோ ஒரு பயனற்ற, செறிவற்ற செய்தியைக் கேட்டுக்கொண்டு இருப்போம். ஏறக்குறைய முட்டாள்களைப் போல நாம் இந்த அனைத்தையும் செய்து கொண்டிருப் போம். அது மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது என்றும் நாம் காண்போம். இந்த அரை மணிநேரத்தைப் பக்தி தொடர்பான விஷயங்களைப் படிப்பதிலும் அல்லது கருத்தாழம் மிக்கதைப் படிப்பதிலும் பயன்படுத்தப்படும் கணத்தில் நமது மூளை எதிர்க்கிறது. மற்றும் அருவருப்பு அடைகிறது.

புத்தருடைய, நன்கு அறியப்பட்ட இந்த அறிவுரையை ஒருவர் பயன்தரத்தக்க வகையில் தீவிரமாகச் சிந்தித்துப் பார்க்கலாம், 'சகோதரர்களே, இப்பொழுதே வாருங்கள். நான் உங்களுக்கு இதை நினைவு படுத்துகிறேன். எல்லாக் கூட்டுப் பொருட்களும் அழிவிற்கு உட்பட்டவை. நீங்கள்

எச்சரிக்கையுடன் இருக்கிறீர்களா?' இந்த அறிவுரையானது இயல் நிகழ்ச்சியின் நிலையற்ற தன்மையை நம்மை உணர வைத்து, மிகப் பெருமளவில் பயனற்ற வேலைகளைத் தவிர்ப்பதற்கும் தொடர்பற்ற தன்மையில் சிந்திப்பதையும் தவிர்க்கப் பயன்படுகிறது.

நாம் வெற்றுப் பேச்சிலும், பயனற்ற வேலைகளைச் செய்வதிலும், பயனற்ற எண்ணங்களைச் சிந்திப்பதிலும் அகன்ற நேரத்தை விழிப்புணர்வுடன் பயன்படுத்தினால் நமக்குத் தேவையானதைவிட அதிக நேரமிருப்பதை நம்மால் காண இயலும். பயிற்சியின் மூலமாக நாம் அத்தகைய தீவிர மாகச் சிந்திக்கும் முறையை வளர்த்துக் கொள்ளலாம். பொது வாக இரண்டு மணிநேரம் சிந்திக்கத் தக்கதை, அரைமணி நேரத்தில் செய்யத் தக்கதாகச் செய்து கொள்ள இயலும். அளவு, தனியியல்பு என்னும் இரு விஷயங்கள் உள்ளன. அளவை உன்னால் அதிகப்படுத்திக் கொள்ள இயலவில்லை என்றால், தரத்தைச் செம்மைப்படுத்தி மேம்பாடு அடைய வேண்டும். உன்னுடைய படிப்பு, தியானம் போன்றவற்றின் தரத்தில் மேம்பாடு அடைய வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் அவருடைய பிரார்த்தனை, ஜபம், தியானம் போன்றவற்றிற்கு நேரம் ஒதுக்குவது மட்டுமின்றி, ஆன்மீகப் பயிற்சிக்குப் பிறகு, ஒரு பத்து நிமிடத்திற்கு, உபநிஷதங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை முறையாகப் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதும் உகந்ததாகும். ஆன்மீக வாழ்வின் எல்லாக் கட்டங்களிலும் சோம்பல் தன்மையும், ஊக்கமற்ற தன்மையும் இரு பகைவர் களாக விளங்குகின்றன. உடலிலும், மனத்திலும் சோம்பல் தன்மையை வளர்த்துக் கொள்பவர்கள் இருக்கின்றனர். அது மிக மிக ஆபத்தானது ஆகும். இந்த சோம்பல்தன்மை நம்மைப் பிடித்துக் கொள்வதற்கு நாம் இடமளித்தால், நமக்குப் படிப்பதற்கோ அல்லது பயிற்சிகள் செய்வதற்கோ நேரம் இருக்காது. அத்தகைய மனநிலையில் இருக்கும் பொழுது நாம் நேரத்தைக் கவனிக்க மாட்டோம். நேரம்

இருந்தாலும், அதை உணர இயலாதபடி சோர்வுடையவர்களாக இருப்போம்.

புலனடக்கம், தீவிரமாகச் சிந்திப்பதற்கும், ஊக்கத்துடன் வாழ்வதற்கும், பயனுடைய வாழ்வை வாழ்வதற்கும் நமக்கு உதவி புரிகிறது. எப்பொழுதும் நாம் ஏன் புலன் உலகத்திலேயே இருக்க வேண்டும்? புலன்கள் கட்டுப்பாட்டில் இருந்தால், சிந்திக்கும் மட்டத்திலேயே ஒருவரால் இருக்க இயலும். வெளிப்புற உலகத்திற்குச் சென்று உதைகளையும், அடிகளையும் ஏன் பெற வேண்டும்? உலைவுகள் அகன்றதும் நம்மால் மிகுந்த ஊக்கம் மற்றும் விழிப்புணர்வுடன் கூடிய வாழ்க்கையை மேற்கொள்ள இயலும். மற்றும் எல்லாச் சூழ்நிலைகளிலும் எத்தனை விழிப்புணர்வுடன் இருக்க இயலுமோ, அத்தனை விழிப்புணர்வுடன் இருக்க இயலும். ஆனால் வெளிப்புற உலைவுகளின் மற்றும் உலக நாட்டங்களின் துன்புறுத்தல் அகற்றப்பட்டவுடன், பல சமயங்களில் நாம் என்ன காண்கிறோம் என்றால் அவர்களின் படிப்பு மற்றும் ஆன்மீகப் பயிற்சிகளுக்கு நேரம் கிடைக்காமல், உயிரற்ற பொருட்களைப்போல மேலும் மேலும் சோம்பல் மிகுந்தும், ஊக்கமிழந்தவர்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

கடமையும், பற்றுதலும்

1. பொருட்கள், மற்றும் மனிதர்களின் மீதும் உள்ள பற்றுதலாலும்; 2. கடமை உணர்வுடனும் அல்லது; 3. எல்லா உயிரினங்களிலும் உறையும் கடவுளின் மீது உள்ள பக்தியாலும் நாம் நமது கடமைகளைச் செய்கிறோம். பல சமயங்களில் முதல் இரண்டு கருத்துக்களும் கலந்து விடுகின்றன. பெரும்பாலான மனிதர்களால், உண்மையான கடமை உணர்வைப் பற்றுதல்களிடமிருந்து பிரிக்க இயலுவதில்லை. அப்பொழுது கடமையானது நம்முடைய பற்றுதல்களுக்கு ஒரு அடிப்படை நியாயமாகிறது (அந்தக் கட்டத்தில் நமது பற்றுதல்களுக்காகக் கடமை சரி என்று படுகிறது) அதனால் தான் ஒரு சிந்தனையாளர் 'நாம் நம் பற்றுதல்களுக்குக் கொடுக்க வேண்டிய அபராதத் தொகை கடமையாகும்' என்று

கூறியுள்ளார். முதல் நோட்டத்தில் இது மிகுந்த அறிவார்வம் மிக்கதாக, நிறைவினை அளிக்காத விளக்கமாகத் தோன்றும், ஆனால் இதனை ஒரு குறிப்பிட்ட உயர்ந்த நோக்கு நிலையிலிருந்து அறிந்து கொள்ள வேண்டும். புத்தர், ஏசுநாதர், ராமகிருஷ்ணர் போன்றோருக்குக் கடமை என்றே இருக்கவில்லை. அவர்களுடைய விஷயத்தில் அன்பான தொண்டு மட்டுமே இருந்தது. கடமை இருக்கவில்லை. அவர்களுடைய செயல்பாடுகளில் வலுக்கட்டாய நிலை இருக்கவில்லை. எந்த ஒரு லாபத்திற்காகவோ அல்லது செயல்களின் பயன்களுக்காகவோ ஆசையும் இருக்கவில்லை. பரிபூரணமான மனிதனுக்குக் கடமையும் இல்லை, பற்றுதலும் இல்லை. அவன் கடமையாகச் செய்வதற்கு எதுவும் இல்லை[1] அவனுடையது, 'நான்', 'எனது' என்னும் எண்ணமின்றி, வலுக்கட்டாயமான உணர்வு இன்றி, முழுமையான சுதந்திரத்துடன் செய்யப்படும் அன்பான தொண்டு ஆகும்.

கடமையானது பற்றுதலையோ அல்லது 'நான்' என்னும் சிறிய உலகைப் பற்றிக் கொண்டிருப்பதையோ, உடல் மன உணர்வுகளைப் பற்றிக்கொண்டிருப்பதையோ, உள்ளடக்கிக் கொண்டிருக்கவில்லை. பற்றுதலால் செய்யப்படும் எந்தச் செயலையும் சில விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகச் செய்யப்படும் செயலையும் அதனுடைய இயல்பு எதுவாக இருப்பினும் நான் அதைக் கடமை என்று அழைப்பதற்கு ஆயத்தமாக இல்லை. அல்லது கடமைக்கு உரிய இடத்தை அளிக்கவும் தயாராக இல்லை. அத்தகைய செயலானது பிணைப்பு ஆகும். சிற்றியல்புகள் கொண்ட நம்மைப் பற்றிக் கொள்வதாகும். ஆனால் ஒரு பொழுதும், கடமை, மற்றும் சுந்திரம் என்னும் உயர்ந்த உணர்வின் பயனைத் தராது.

உண்மையான கடமையானது புலனடக்கத்தையும் தன்னலமற்ற தன்மையையும், அன்பான தொண்டையும்,

1. *தஸ்ய கார்யம் ந வித்யதே —பகவத் கீதை, 3.17.*

மனத்தைத் தூய்மைப்படுத்துவதையும், சரியான ஒரு முனைப் பாட்டையும், மற்றும் நம்முடைய இயல்பான எல்லா ஆற்றல்களுக்கும் ஒரு மேம்பட்ட திருப்பத்தை அளித்துக் கடவுளின் கருவிகளாக இருப்பதற்குத் தகுதி உடையவர் களாகச் செய்வதையும் உள்ளடக்கிக் கொண்டு இருக்கிறது. நாம் எந்த அளவு தூய்மையாக இருக்கிறோமோ அந்த அள விற்குச் சிறப்பாக அனைவரிடமும் உறையும் கடவுளுக்குச் செய்யும் அன்பான தொண்டு வடிவத்தில் நாம் செயலாற்ற லாம். அதில் பிணைப்பு இல்லாமல் இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டும். பிணைப்பிற்கு, அது எதுவாக இருப் பினும், கடமை என்னும் பெயரை ஒரு பொழுதும் அளிக்கக் கூடாது. பெரும்பாலான மனிதர்கள், அவர்கள் கடமை என்று கூறிக்கொள்வதைப் புலன் இன்பங்களைப் பற்றிக் கொள்ளும் பொருட்டு, வெளிப்படையாகவோ அல்லது சூட்சுமமான வடிவத்திலோ அல்லது பொருட்கள், மனிதர்களின் மீது உள்ள பற்றுதலாலோ செய்வார்கள். ஆனால் இது கடமை ஆகாது. நாம் இங்கு, ஏதாவது ஒரு வடிவத்தில் ஆழமாக வேர்ஊன்றியுள்ள 'நான்' என்னும் தன்மைக்கும் கடமை என்னும் சொல்லின் உண்மையான பொருளுக்கும் இடை யிலுள்ள வேறுபாட்டை மிகவும் தெளிவுடன் வேறுபடுத்திக் காண்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிற்றியல்புகள் நிறைந்த இந்த உடல், மற்றும் அத னுடைய கீழான விருப்பங்கள் மீதும் கொண்டுள்ள மிதமிஞ்சிய பற்றுதலைத் துறப்பதற்கு நாம் ஆயத்தம் ஆகாத வரையிலும், எல்லாவகையான புலனின்பங்களின் மீதும், உடைமைகளின் மீதும் உள்ள மட்டுமீறிய விருப்பங்களைத் துறப்பதற்கு ஆயத்தம் ஆகாத வரையிலும் நம்மால் ஒரு உயர்ந்த நோக்குநிலையை ஒருபொழுதும் ஏற்க இயலாது. அதனால் நம்மால் நாம் நம் பற்றுதல்களுக்குக் கொடுக்க வேண்டிய அபராதத் தொகை கடமையாகும் என்னும் விளக்கத்தின் பொருளைப் புரிந்துகொள்ள இயலாது. உண்மையைக் கூற வேண்டுமெனின், நம்முடைய ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதுதான் கடமையாகும்.

இது, ஒவ்வொருவருக்கும் உரிய பொதுவான நியதியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். நம்முடைய பலவகை யான கடமைகளை நிறைவேற்றுதல்; நம்முடைய உடல் தொடர்பான தேவைகளை நிறைவு செய்து கொள்ளுதல் அல்லது மற்றவர்களும் உதவி செய்தல் அல்லது கடவு ளுக்குத் தொண்டாற்றுதல் என்னும் இவ்வனைத்தும் நம்மை ஆன்மீக வளர்ச்சி அடையச் செய்யும் வகையில் இருக்க வேண்டும். நாம் ஆன்மீக வளர்ச்சி அடையவில்லை என்றால், செயல்பாடு குறித்த நம்முடைய மனப்பாங்கில் ஏதோ தவறு இருக்க வேண்டும் அல்லது கடமை உணர்வில் ஏதோ தவறு இருக்க வேண்டும்.

அக்கறையற்ற தன்மையை பேணி வளர்த்துக் கொள்ளும் மனநிலையை உடையவர்களும் இருக்கிறார்கள். அவர் களுடைய தனிப்பட்ட விஷயங்களைத் தவிர மற்ற அனைத் திலும் ஒருவேளை அவர்கள் அக்கறையற்ற தன்மையுடன் இருக்கிறார்கள் போலும். பல சமயங்களில் இந்த அக்கறை யற்ற தன்மையானது, தன்னலம் மற்றும் சோம்பேறித் தனத்தின் விளைவாக உள்ளது. அது தாமஸிக நிலையாகும். ஒரு ஆன்மீக மனிதனின் உண்மையான பற்றுதல் அற்ற தன்மையுடன், இந்த நிலையைக் குழப்பிக்கொள்ளக் கூடாது. அத்தகைய மந்தநிலை மற்றும் சோர்வுற்ற நிலையை உடைய மனிதர்கள் பல நேரங்களில் செயலற்றவர்களாகவே விளங்கு கின்றனர். உண்மையான பற்றற்ற தன்மை, உண்மையான உறுதிப்பாடு உடைய மனப்பான்மையானது உன்னை எச்சரிக்கையுடன் இருக்கச் செய்கிறது. மற்றும், வேலையோ அல்லது தியானமோ, நீ உன் மனத்தைச் செலுத்தும் அனைத் திலும் தீவிரமாக இருக்கச் செய்கிறது.

கடமைகளில் முரண்பாடுகள்

பலசமயங்களில் நாம், நாம் செய்ய வேண்டிய ஒரு குறிப்பிட்ட கடமை உள்ளது. ஆனால் அது நம்முடைய கிரகிப்புத் தன்மைக்கு அப்பாற்பட்டு உள்ளது என்று நினைக் கிறோம். அது நமக்கு எட்டாத உயரத்தில் உள்ளது. அத்தகைய

ஒரு நிலையில் நாம் என்ன செய்ய வேண்டும்? நடைமுறை யிலுள்ள ஒரு கடமையின் உதவியை எடுத்துக் கொண்டு, அதை குறிக்கோளை அடைவதற்கு வேண்டிய வழியின் படிக்கல்லாக வைத்துக் கொள்ள வேண்டும். கடமைக்கு அத்தகைய நிலைத்த படித்தரம் என்று எதுவும் இல்லை. நம் பரிணாம வளர்ச்சியின் ஓட்டத்தில் கடமையானது தொடர்ந்து மாறுதலை அடைகிறது. குழந்தையின் கடமையானது, இளைஞனுக்கு உள்ள கடமையைப் போல் இல்லை. இளைஞனின் கடமையானது, வயதான மனிதனுக்கு உள்ள கடமையைப் போல இல்லை. இல்லறத்தில் இருப்பவரின் கடமையானது, துறவிக்கு உள்ள கடமையைப் போல இல்லை. ஒவ்வொரு நிலையும், வேறுபட்ட முறையின் திறனாய்வு செய்யப்பட வேண்டும்.

பல சமயங்களில் நம் கடமை உணர்வானது, புலன் உணர்வுடன் முரண்பட்டு விளங்குவதைக் காணலாம். நாம் நம்முடைய கடமையுணர்வைப் புலனுணர்வுடன் ஒத்திருக்கு மாறு செய்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதனுடன் நம்முடைய எண்ணத்தை ஒத்திருக்குமாறு செய்ய வேண்டும். எனவே பெருமளவில் ஆற்றலின் விரையத்திற்குக் காரணமான தேவையற்ற முரண்பாட்டையும் மற்றும் கவலையையும் தவிர்க்க வேண்டும்.

சில நேரங்களில் நாம் நம்முடைய வாழ்க்கையின் கடமைகளுடன் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதால் ஆன்மீகப் பயிற்சிக்கு நமக்கு நேரம் கிடைப்பதில்லை என்று குறை கூறுகிறோம். பொதுவாக அத்தகைய குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றது ஆகும். மேம்பட்ட வாழ்க்கைக்கு ஆழ மாக வேர்ஊன்றியுள்ள, உண்மையான, மனமார்ந்த விருப்பம் இருந்தால் ஆன்மீகப் பயிற்சிக்கும், அதைக் குறித்துப் படிப்பதற்கும் தேவையான நேரத்தை உன்னால் ஏற்படுத்திக் கொள்ள இயலும். நீ உண்மையான ஆர்வ உணர்வு இருந்தும் அவ்விதம் செய்யவில்லை என்றால், நீ பூரணமாக நிலை குலைந்து போவதில் முடியும். மனம் சிறிதளவு விழிப்பு

நிலையை அடைந்திருந்தால், எல்லாச் சூழல்களிலும் அதற்கு உணவு அளிக்கப்பட வேண்டும். இல்லை என்றால், ஆளுமையில், கவலை கொள்ளத்தக்க அளவிற்குப் பிளவு ஏற்படும். பெருமளவில் குழப்பமும், அமைதியற்ற தன்மையும், மனநிறைவு அற்ற தன்மையும், நிதானம் இழந்த நிலையும் ஏற்படும். அத்தகைய ஒரு நிலையில் நீ ஆன்மாவைப் பட்டினி போட்டிருக்கும் வரையில் உன்னால் அமைதியாக இருக்க இயலாது.

நம் ஆன்மீகப் பயிற்சிகளை ஒருநாள் சிறிது விரைவாகவும், மற்றொரு நாள் நல்ல நிதானத்துடனும், மிகுந்த கவனத்துடனும் செய்யலாம். ஆனால் அவற்றைச் செய்யவே இல்லை எனறால், அந்த எண்ணமானது நாள் முழுவதும் தொடர்ந்து நம்மை உறுத்திக் கொண்டிருக்கும். நம்முடைய மனத்தில் பெரும் நீர்ச் சுழற்சியை ஏற்படுத்திவிடும். அவசரமாகவோ அல்லது நிதானமாகவோ ஆன்மீகப் பயிற்சியானது நாள்தோறும் ஒரே சீராகவும், ஒழுங்கு முறையுடனும் நோக்கத்தை அடையும் ஒருமுகப்பட்ட தன்மையுடனும் செய்யப்பட வேண்டும்.

ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்யவும், ஆன்மீகத்தைக் குறித்துப் படிப்பதற்கும் முற்றிலும் நேரமில்லை என்று கூறுவது உண்மை இல்லை. நான் தூங்குவதற்கு எனக்கு ஆறு மணி நேரத்தை ஏற்படுத்திக் கொண்டால், பத்து நிமிடங்கள் குறைவாகத் தூங்கி, சாப்பிட எடுத்துக்கொள்ளும் நேரத்திலிருந்து ஐந்து நிமிடங்களை எடுத்துக்கொண்டு வேறு சிலவற்றிலிருந்து ஐந்து நிமிடங்களையும் எடுத்துக்கொள்ளலாம். இவ்விதத்தில் குறைந்த அளவு நிமிடங்களையும் எடுத்துக் கொள்ளலாம். இவ்விதத்தில் குறைந்த அளவு அரைமணி நேரம் என் ஆன்மீகப் பயிற்சிக்கும், படிப்பதற்கும் எனக்குக் கிடைக்கிறது. மனம் குழப்பமான நிலையில் இருந்தாலும், என்னால் மிகவும் கவனத்துடன் செய்ய இயலவில்லை என்றாலும், ஒரு இயந்திரகதியில் நான் என் பயிற்சிகளைச் செய்தாலும், ஆழமாக சிந்திப்பது மற்றும் படிப்பது என்னும் வெறும் கருத்தை நினைக்கும்பொழுதே மூளை முற்றிலும்

அதை எதிர்த்தாலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் இப்படித் தான் செயல்பட வேண்டும். இதுவும் கடமைதான். மற்றவர் களுக்குத் தொண்டாற்றுவது என்னும் நோக்கத்துடன் முதலில் நான் எனக்கே தொண்டாற்றிக் கொண்டால் என்னால் மற்றவர்களுக்கு மிகுந்த திறமையுடன் மேம்பட்ட மனப்பான்மையுடன் தொண்டாற்ற இயலும். தன்னல நோக்கமின்றி, பிறருக்காக நம்மால் சரியான மனநிலை யுடன் செயல்பட முடியுமானால், நம்மால் நம்முடைய தியானத்தை இன்னும் சிறப்பான முறையில் செய்ய இயலும். அதனால் மீண்டும், பிறருக்குச் செயலாற்றுவதில் நேர்ந்து கொள்ளும் மனப்பாங்குடன், பரம்பொருளுக்குச் சரணடை யும் மனப்பாங்குடன் செயலாற்ற நமக்கு உறுதுணையாக இருக்கும்.

ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தாலும் ஜபத் தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் சில மனிதர்களும் இருக்கிறார்கள். நாம் நம் மனத்தை சரியான வழிகளில் எப்படிக் கட்டுப்படுத்துவது, தூய்மைப்படுத்துவது, விரி வுறுத்துவது என்பதை அறிந்து கொண்டால், மனத்திற்கு வியக்கத்தக்க ஆற்றல்கள் உள்ளன என்பதை உணரலாம். ஒருவர் தன்னை முழுமையாக, எத்தகைய நிபந்தனையுமின்றி பரம்பொருளிடம் ஒப்படைத்துத் தன்னுடைய வேலையை முழுமையாக, அமைதியான முறையில் திறம்படச் செய்ய லாம். அதன்பிறகு, எல்லாச் செயல்களுமே வழிபாடாக ஆகும் ஒரு காலம் வரும். நாம் நம்மை அர்ப்பிக்கும் தன்மை யுடன் கூடிய கடவுள் வழிபாட்டு ஒழுக்கமுடைய மனநிலை யில் இருந்தால் செயலானது வழிபாடு ஆகிறது. செயல் பாட்டையும் சரணாகதத் தன்மையையும் ஒருங்கிணைக்க இயலும் மற்றும் முழுமையாகத் தன்னை மறந்த நிலையில் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும்.

செயலிற்கு, உயர்ந்த நோக்கம் இருக்க வேண்டும்

பெரும்பாலான மனிதர்களின் வாழ்வுகளில் குறிக்கோள் அற்ற, உயர்ந்த நோக்கமற்ற, எதைக் குறித்தும் தெளிவான

கருத்தற்ற, இலக்கு அற்ற செயல்பாடுகளைத்தான் உன்னால் காண இயலும். அது தெளிவற்ற, மங்கலான கருத்துக்கள் மற்றும் ஆசைகள் என்னும் கடலில் மிதப்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை. அத்தகைய மனிதர்கள், உண்மையைக் கூறப்போனால், பற்றுதலையே பொதுவாகக் கடமை என்று அழைக்கின்றனர். பெரும்பாலான மனிதர்கள், பிணைப்பி னால் புலன் இன்பத்தை விரும்பி தங்களைச் சுறுசுறுப்பு உடையவர்களாக, செயலாற்றல் உடையவர்களாக வைத்துக் கொள்கிறார்கள். தவறான மதிப்பீடுகளைப் பற்றிக் கொண்டு, பிணைப்பெனும் வழியைப் பின்பற்றி நடக்கும்பொழுது, எப்பொழுதுமே சுறுசுறுப்பாக இருப்பது சுலபமான ஒன்றாக விளங்குகிறது. பல சமயங்களில் பிணைப்பினாலும், ஏதாவது ஒன்றை நம் கடமை என்று கூறுகிறோம். ஆனால் அது கடமை ஆகாது. ஆனால் இவ்வனைத்தும் பற்றுதல் மற்றும் புலன் இன்பத்தை மிகவும் விரும்புவதுமே ஆகும். அப்படியிருப் பினும் நாம் அதற்குப் பகட்டான ஒரு பெயரைக் கொடுத்து நிறைவு அடைகிறோம். கடமை என்னும் முறையில் அதில் பற்றுதலின் கூறோ அல்லது 'நான்' என்னும் தன்மையோ, அது தனித்து இருந்தாலும் மொத்தமாக இருந்தாலும் இல்லை. நாம் கடவுளுக்குக் கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்னும் உணர்வுடன், முற்றிலும் தியாக மனப்பான்மை யுடனும் தொண்டாற்ற வேண்டும். தனிப்பட்ட நம்முடைய நோக்கத்திற்காகத் தொண்டாற்றக் கூடாது.

பொதுவாக மனிதர்கள், அவர்களுடைய புலன்களுக்கும் தனிப்பட்ட விருப்பங்களுக்கும் வெளிப்படையாகவும், சூட்சுமமாகவும் அடிமைகளைப் போல வேலை செய் வார்கள். ஆனால் மேன்மையான மனிதர்கள் அவர் களுடைய சொந்தமான அளவற்ற சுதந்திரத்தினால் செயல் படுகிறார்கள். பற்றுதல் உணர்வுடனோ அல்லது பொது வாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள கடமை உணர்வுடனோ அல்ல. அவர்கள் தங்களுடைய எல்லாச் செயல்களையும் கடவுளுக்கு அன்பான தொண்டு வடிவத்தில் முழு மனத் துடன் செய்கிறார்கள். கடவுளின் கைகளில் தாங்கள்

கருவிகளாக இருக்கிறோம் என்பதை முற்றிலும் உணர்ந்து செயல்படுகிறார்கள்.

நம்முடைய செயல்கள் ஒரு இலக்கைக் கொண்டிருக்க வேண்டும். நம் கீழான ஆசைகளின் எல்லையைத் தாண்டியதாக இருக்க வேண்டும். மற்றும் இலக்கு என்ன என்பதையும் உணர வேண்டும். நம்முடைய செயல்கள், செய்ய வேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் செயல்களாக, எத்தகைய இலக்கும் அற்றவையாக இருக்கக் கூடாது. பெரும்பாலான மனிதர்கள், தாங்கள் சுறுசுறுப்புடன் இருக்கிறோம் என்பதில் பெருமிதம் அடைவார்கள். ஆனால் அவர்களால் அமைதியாக இருக்க இயலாது. அவர்கள் எப்பொழுதும் எதையாவது செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதையே அது உணர்த்துகிறது. தங்களுடைய எண்ணங்களுடன் தனித்து விடப்படுவோம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். அவர்களுடையது ஒரு குரங்கின் தொடர்பற்ற செயல்பாடு ஆகும். அது தீவிரமாகச் செயலில் ஈடுபடுகிறது. அதில் சந்தேகம் இல்லை. ஆனால் எதற்காக அது அவ்விதம் செயல்படுகிறது என்பது யாருக்கும் தெரிவதில்லை. இதைக் குறித்து பெருமிதப்படுவதற்கு எதுவும் இல்லை. அவர்கள் உடல் மட்டத்திலேயே எதையாவது எப்பொழுதும் செய்து கொண்டும், பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கின்றனர். இவ்விதம் செய்வதிலிருந்து தடுக்கப்பட்டால் அவர்கள் துன்பமடைகிறார்கள். அவர்களால் எண்ண மட்டத்தில் தொடர்ந்து வாழ்வதற்கு இயலுவதில்லை. பெரும்பாலான மனிதர்கள் பற்றுதலின் மூலமாகவே செயலாற்றித் தங்கள் உடலைப் பற்றிக் கொள்கிறார்கள். இதை ஸ்ரீராமகிருஷ்ணர் ‘காம-காஞ்சனம் (காமம்-பொன்) என்று அழைப்பார். ஒரு மனிதனிடம், உண்மையான கடமை உணர்வுடன் கூடிய ஒரு செயல் வந்தடைந்தால், அது ஏதோ சிறிதளவு மேம்பட்டதாகத் தென்பட்டாலும், அதுவும் ஒரு வலுக்கட்டாயமான தன்மையுடையதாகவே திகழ்கிறது. அதைவிட மேம்பட்ட, அதைவிடச் சிறந்த ஒன்று உள்ளது. அது கடவுளுக்கு அனைத்தையும் முழுமையான அர்ப்பிக்கும் தன்மையுடன் தொண்டு

ஆற்றவது ஆகும். உயர்ந்த இலக்கு. அது விழிப்படையும் பொழுது எப்பொழுதும் குறிப்பிட்ட அளவு வரையறையை யும் கொண்டு வருகிறது. உயர்ந்த இலக்கைப்பற்றிய கருத்து என்னுள்ளே ஏற்பட்டதும் என்னால் சுதந்திரமாக ஆராய்ந்து அறியாமல் எல்லாவகையான கடமைகள் என்று சொல்லப் படும் கடமைகளையும், எல்லாவகையான செயல்பாடுகளை யும் செய்ய இயலாது. என்னால் திருட முடியாது, என்னால் பொய் சொல்ல முடியாது. பால்வேறுபாட்டுடன் கூடிய தூய்மையற்ற வாழ்க்கையை மேற்கொள்ள இயலாது. என் னால் உயர்நிலைக்குப் பொருத்தமற்ற இழிவான முறையில் செயல்பட இயலாது. குறைந்த அளவில், உண்மையாக, மனமார்ந்து, பழிபாவத்திற்கு அஞ்சும் மனிதனால் செய்ய இயலாது. பழிபாவத்திற்கு அஞ்சாத மனிதன் அவ்வனைத் தையும் செய்வான். அதைவிட அதிகமாகவும் செய்வான். இவ்விடத்தில் மீண்டும் பழிபாவத்திற்கும் அஞ்சும் மனித னுக்குப் பழிபாவத்திற்கு அஞ்சாத மனிதனைக் காட்டிலும் வரம்புகள் உள்ளன. ஆனால் இந்த வகையைச் சேர்ந்த வரை யறைகள் ஒரு உயர்ந்த மரபொழுகைச் சேர்ந்தது ஆகும். நாம் உண்மையாக உயர்ந்த இலட்சியத்தை நம்முள் கொண்டு வந்தால், சில நடவடிக்கைகளும், கடமைகள் என்று கூறப் படும் ஒரு சிலவும் அதனுடன் ஒத்து வராது இருப்பதைக் காண இயலும். மற்றும் இவ்வனைத்தும் துறக்கப்பட்டு, எறியப்பட வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை.

நாம் சில விட்டுக் கொடுக்கும் தன்மையை மேற்கொண் டால், நாம் பலவீனமாக இருக்கிறோம் என்று அறிய வேண்டும், சொல்ல வேண்டும். ஆனால் நாம் நம்முடைய பலவீனத்திற்கு அதை ஒரு அடிப்படை நியாயமாகச் செய்யக் கூடாது அல்லது அதை ஒரு கடமை என்று கூறும் அளவிற்கும் செல்லக் கூடாது. விட்டுக் கொடுக்கும் தன்மை ஏதாவது ஒன்றை மேற்கொண்டாலும், என்றாவது ஒரு நாள், எல்லாவிதமான விட்டுக் கொடுக்கும் தன்மைகளை யும் மீறி உயர்வோம் என்னும் கருத்துடன் செய்யப்பட வேண்டும். அதை நியாயப்படுத்தும் முயற்சி இருக்கக்

கூடாது. இலட்சியமானது, ஒரு பொழுதும் தாழ்த்தப்படுதல் கூடாது.

கடமையைக் குறித்த ஐயப்பாடு மிகவும் கஷ்டமானதாக உள்ளது. எனவே பகவத்கீதையில், 'கர்மம் எது, அகர்மம் எது என்னும் இவ்விஷயத்தில் சிறந்த அறிவாளிகளும் மயங்கு கின்றனர்'[1] என்று கூறப்பட்டுள்ளது. முன்பே விளக்கப்பட் டதைப்போல, நம்முடைய வளர்ச்சியில் உதவுவது கடமை யாகும். நம்முடைய வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவது அல்லது தாமதப்படுத்துவது கடமையற்றது ஆகும். நம் முடைய பரிணாம வளர்ச்சிக்கு உதவுவது நல்லவை, நம் முடைய பரிணாம வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவது கெட் டவை என்று கூறுவதைப் போன்றதாகும். ஆனால் இவ் வனைத்துமே, மிகவும் சரியற்ற மற்றும் பொதுவான விளக் கங்கள் ஆகும். ஒவ்வொரு செயலும், அச்செயலில் தகுதியை வைத்து நியாயப்படுத்தப்பட வேண்டும். எப்பொழுதுமே உயர்ந்ததை அடைவதற்காக, தரத்தில் குறைந்த ஒன்று தியாகம் செய்யப்பட வேண்டும். ஆன்மாவை அடைவதற் காகத் தான் என்னும் தன்மை தியாகம் செய்யப்பட வேண்டும். நாம் இவ்விதம் செய்வதால், இலட்சியத்தை அடையும் வரையிலும் படிப்படியாக, சிறந்த, மேலும் சிறந்த கடமை வடிவங்களை நோக்கி உயர்கிறோம். அப்பொழுது நம் கடமைகள் அனைத்தும் அகன்றுவிடுகின்றன. நம்மை முற்றிலும் மறந்து முழுமையாக நம்மை அர்ப்பிக்கும் தன்மையுடன் கடவுளுக்குச் செய்யும் அன்பான தொண்டு மட்டுமே எஞ்சி இருக்கும். இந்த லட்சியத்தைத்தான் மஹான்கள் அனைவரும் மேற் கொண்டனர்.

மற்றவர்களுக்கு ஆன்மீக உதவி

ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி அடைந்த பிறகு மற்றவர் களுக்கு, ஆன்மீக வாழ்க்கைக்கு உத்வுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். ஆனால், ஏற்கனவே நீ அடைந்துள்ள

---

1. பகவத் கீதை, 4.16.

சக்தியின் அளவிற்கு ஏற்றவாறு இதைச் செய்ய வேண்டும். இல்லை என்றால், நீ உதவி செய்ய விரும்புபவர்களுக்காக நீ கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொள்ளலாம். நீ தீவிர மாகவும், மனமார்ந்து உண்மையாகவும் பிரார்த்தனை செய் தால், கடவுள் அவர்களுக்கு எது சிறந்ததோ, அதைச் செய் வார். உன்னுடைய இஷ்ட தெய்வத்தினுடன் அவர்கள் ஏற் படுத்திக் கொண்டுள்ள மனப்பாங்கு எந்த அளவில் உள்ளதோ, அந்த அளவிற்கு நீ மற்றவர்களுக்கு உதவலாம்.

நீ உனக்கு உதவி செய்துகொள்ளவில்லை என்றால், உன்னால் ஆற்றல் மிகுந்த நிலையில் மற்றவர்களுக்கு உதவ இயலாது. நீ பயணம் செய்து கொண்டிருக்கும் படகு கவிழ்ந்துவிட்டால், நீ ஆற்றலுடன் நீந்தும் தன்மை உடைய வனாக இருந்தால்தான் உன்னுடன் இருப்பவர்களில் ஒரு வனை உன்னால் காப்பாற்ற இயலும். ஆனால் அனைவரை யும் உன்னால் காப்பாற்ற இயலாது. நீ முயற்சி செய்யவும் கூடாது. அப்படிச் செய்தால், உன்னையும் உட்கொண்டு, அனைவரும் மூழ்கும் நிலை ஏற்படும். எனவே உன்னுடைய ஆற்றலை விருப்பு-வெறுப்பற்ற தன்மையுடன் வேறு படுத்திக் கண்டு கொண்டு, ஏதாவது வாய்ப்பு ஏற்பட்டால் மற்றவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

உலகம் முழுவதும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற் காக சிவன் மிகக் கொடிய தன்மையுடைய விஷத்தை அருந்தினார். அவர் தான் விஷத்தன்மையை அடையாமல், விஷத்தை ஜீரணித்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருந்தார். நீ இவ்வுலகத்தின் விஷத்தை அகற்ற விரும்பினால் முதலில் சிவனின் பேராற்றல் வாய்ந்த தூய்மையை அடைய வேண்டும். சிறிய அளவில் ஆரம்பிப்பது நல்லது. நீ தூய்மை உடையவனாக, ஆன்மீகத்தில் உறுதியுடையவனாக வளரும் பொழுது, உனக்கு எத்தகைய ஆபத்தும் ஏற்படாத வகையில் உன்னால் அதிக அளவை ஈர்த்துக் கொள்ள இயலும். நீ எந்த அளவிற்கு அதிகமாகப் பிறரைக் குறித்து எண்ணி, அவர்களுக்கு உதவ விரும்புகிறாயோ, அந்த அளவிற்கு நீ பற்றுதல் அற்றவனாக, உன்னுடைய இஷ்ட தெய்வத்தின்

அருகில் செல்வாய். உனக்காகவும், மற்றவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்வாய்.

என்ன ஆனாலும், கடவுளின் உண்மையான குழந்தையாக இருக்கக் கற்றுக் கொள்வாய். உன்னிடமும், கடவுளிடமும் தடுமாற்றமற்ற நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்வாய். நீ முழுவதும் ஈடுபட்டு ஆழ்ந்துள்ள அனைத்துமாகக் கடவுளை ஆக்கிக் கொள்வாய். அதன்பிறகு உன்னை எதுவும் பாதிக்காது. கடவுளைக் குறித்த விழிப்புணர்வு நிலையின் தொடர்பை உன்னுள் தொடர்ந்து பேணி வந்தால், நீ எங்கு இருந்தாலும் எப்பொழுதும் பாதுகாப்புடன் இருப்பாய். தூய்மையுடன் ஒருமுனைப்பட்ட மனத்துடன், உறுதியாக இருப்பாய். உன்னால் கண்டிப்பாக இலட்சியத்தை அடைய இயலும்.

6

ஆன்மீக வாழ்வின் உயர்நிலைகள்

இலட்சியத்தின் மீது நம்பிக்கை

மிக உயர்ந்த உண்மை உதயமாவதற்கு முன்பே, (உணர் வதற்கு முன்பே) பரம்பொருளின் மீது நாம் உறுதியான மற்றும் மிகவும் தெளிவான நம்பிக்கையையும் வைக்க வேண்டும். ஏனெனில் இந்தக் கருத்து நம்முள்ளேயே ஆழத் திலே இருக்கிறது. நம்முள் இந்த நம்பிக்கையை விழிப் படையச் செய்வதுதான் ஆன்மீக வாழ்வின் முதல் தேவையாக உள்ளது. நம்முடைய ஆன்மாவானது இந்தக் கடவுளின் பிரதிபலிப்பு ஆகும். மற்றும் இந்தப் பிரதிபலிப்பு, இந்த ஒளியை நம்மால் நேரடியாகக் காண இயலாமல் இருந் தாலும், இந்த ஒளி இருப்பதை மெய்ப்பிக்கின்றது. நம் முடைய உண்மையான இயல்பு நிலைபேறுடைய தன்மை உடையதாக இருப்பதால் நாம் நிலைத்து வாழ விரும்பு கிறோம். உடல், மனம் அல்லது புலன்கள் எப்பொழுதுமே மாறுபடும் தன்மை உடையதாக இருப்பதால் அவைகளால் நிலைத்த தன்மையைப் பெற இயலாது. இவ்வனைத் திலிருந்தும் வேறுபட்ட 'நான்' என்னும் உணர்வு நம்மிடம் உள்ளது. அது மாறுபடுவதில்லை. நாம் ஆன்மா அல்லது ஆன்மீக உணர்வு நிலையைக் குறித்து எண்ணுவதற்கு முயற்சி செய்தால் அது ஏதோ ஒரு வகையில் நம்முடைய எண்ணங் களுடனும் மற்றும் உடல் தொடர்பான உணர்வுகளுடனும் கலந்து விடுகிறது. நாம் உண்மையாக பரம் பொருளின் இயல்பைக் குறித்து ஆராய்கிறோம். நாம் முழுமையான இறுதி உண்மையை உணரும் வரை இறுதி உண்மையை ஏதோ கருத்து வடிவத்திலோ அல்லது உருவ வடிவத்திலோ வைத்துக் கொண்டு முன்னேற வேண்டும். ஆனால்

ஒவ்வொரு நிலையிலும் நம்முடைய உறுதியான நம்பிக்கையும் பக்தியும் மெய்ப்பிக்கப்பட வேண்டும். நம்பிக்கை, உண்மையை ஆதாரமாகக் கொண்டிருந்தால் அது வீரியமடையும். நம்பிக்கை அல்லது பக்தி, உண்மையை ஆதாரமாகக் கொள்ளவில்லை எனில், அது சில காலத்திற்கு நீடித்து விட்டுப் பிறகு மறைந்து விடும்.

வாழ்க்கையின் லட்சியமானது விடுதலையாகும். பயத்திலிருந்து விடுதலை, துன்பத்திலிருந்து விடுதலை, தொடர்ந்து வரும் பிறப்பு-இறப்புக்களில் உழலும் போராட்டத்திலிருந்து விடுதலையடைந்து ஒப்புயர்வற்ற பேரமைதியை அடைவதாகும். இவ்வனைத்தையும் அடைவதற்கு உரிய வழி ஆன்மஞானம் அடைவதாகும். ஆயிரக் கணக்கான முனிவர்கள் இந்தியாவில் நெடுங்காலமாக இதைக் கூறிக் கொண்டு இருக்கின்றனர். ஆன்மீக வாழ்விற்கு முதல்தேவை, ஆன்மீக இலட்சியத்தில், ஆன்மஞானம் அடையும் குறிக்கோளின்மீது சிரத்தை அல்லது நம்பிக்கை வைப்பதாகும். ஒருவர் தன்னுடைய சாதனையைத் தொடங்குவதற்கு முன்பே இந்த குறிக்கோள் தெளிவாக மற்றும் உறுதியாக நிலை நிறுத்தப்பட வேண்டும். நமக்கு நாம் செல்லவுள்ள வழியைக் குறித்த மிகத் தெளிவான கருத்தும், அடைய வேண்டிய குறிக் கோளைக் குறித்த உறுதியான கருத்தும் இருக்க வேண்டும். அதாவது வாழ்க்கையின் குறிக்கோளைக் குறித்த கருத்து ஆகும். நாம் நம்முடைய எண்ணங்களிலும், செயல் களிலும், உறுதியற்ற, மனக்கோட்டை கட்டும் பாங்கு நிறைந்த தெளிவற்ற தன்மைகளுக்கு இடமளித்தால், நம்மிடம் ஒரு முரண்பாடு தொடர்ந்து நீடிக்கும். அத்தன்மை நம்மிடையில் பெரும்பான்மையோரைக் குறிக்கோளை நோக்கி ஒரு அடியைக் கூட வைத்து முன்னேற இயலாமல் தடுத்துவிடும். உண்மையான தீவிரமான நாட்டமின்றி அல்லது திட்டவட்டமான நோக்கமின்றி அல்லது ஈடுபாட்டுடன் கூடிய விழிப்புணர்வின்றி மேற்போக்கான சிந்தனையும், சாரமற்ற எண்ணமும் வரம்பற்ற விருப்பமும், செயலும் காணப்படும்.

புத்த சமயத்தின் ஜப்பானிய தியான மார்க்கத்தின் கிளைநெறியைச் சார்ந்த இலக்கியத்தில் (Zen Buddhist literature), படிப்பினையை அளிக்கும் ஒரு சிறிய கதை உள்ளது. ஒரு துறவி, ஒரு ஜென் குருவைப் பார்த்து, 'ஒரு சிங்கம் தன் இரையை கைப்பற்றும் பொழுது, அது முயலாக இருப்பினும் அல்லது யானையாக இருப்பினும், அது தன்னுடைய ஆற்றல் அனைத்தையும் ஒரு ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியிலேயே செயல்படுத்துகிறது என்று நான் உணர்கிறேன். இந்த ஆற்றலின் இயல்பு எத்தன்மை உடையது?' என்று கேட்டார். 'முழுமையான மனமார்ந்த மனநிலையும், தன்னை ஏமாற்றிக் கொள்ளாத ஆற்றலும் ஆகும்' என்று ஜென் குரு கூறினார். மேலும் இந்த மறைபுதிரான பதில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது. ஏமாற்றிக் கொள்ளாத ஆற்றல் என்றால், முழுமையான முயற்சியுடன் செயல்படுத்துவது ஆகும். இது எல்லா ஒருங்கிணைந்த முழுமையான முயற்சியுடன் செயல்படுத்துதல் என்று அழைக்கப்படுகிறது. ஒரு மனிதன் இந்த விதத்தில் வாழ்ந்தால் அவன் வீரம், நேர்மை, பரந்த மனப்பான்மைகளின் அடையாளமான தங்கப் பிடரியுடன் கூடிய சிங்கம் என்று அழைக்கப்படுகிறான்.

ஆன்மீக வாழ்விற்குச் சிரத்தை தேவைப்படுகிறது. உண்மையான இயல்பை உணர்வதற்கு, ஒருவருடைய திறமையில் நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நம்பிக்கையானது அடக்கி வைக்கப்பட்டுள்ள ஆற்றலைச் சரியான திசையில் வெளிப்படுத்துகிறது என்பது புலனாகிறது.

சந்தேகம் என்பது மிகப்பெரிய தீங்கினை ஏற்படுத்தும். ஆன்மீக வாழ்வின் எல்லா முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்திவிடும். ஆரம்பநிலையில் இருக்கும் அனைவருக்கும் இந்தநிலை எப்பொழுதாவது ஏற்படும். சந்தேகம் என்பது தன்மீது உள்ள நம்பிக்கையற்ற தன்மையும், கடவுளிடமுள்ள நம்பிக்கை அற்ற நிலையுமாகும். கடவுளை உணரும் வரையிலும் அது முழுமையாக மறையாது. எப்படி இருப்பினும், சந்தேகம் நம்மை அடக்கி ஆட்கொள்வதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அல்லது

ஆன்மீக வாழ்வின் முன்னேற்றத்தில் நமக்கு உள்ள உறுதியை தடுமாற்றமடைவதற்கும் விடக்கூடாது. நமது இலட்சியம் உலக இன்பங்களோ அல்லது சுவர்க்க இன்பங்களோ அல்ல என்னும் நிலையான குறிக்கோளை நாம் நமது மனங்களில் வைத்திருக்க வேண்டும். நமது ஒரே குறிக்கோள் ஆன்மஞானமாகத்தான் இருக்க வேண்டும். சொர்க்கத்தில் இன்பத்தை அனுபவிப்பது என்பது, இவ்வுலகத்தில் இன்பத்தை அனுபவிப்பதைவிட மேம்பட்டது இல்லை. நம்மிடம் சொர்க்கத்தில் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆசை இருக்கும் வரையில், நம்மால் ஒருபொழுதும் இலட்சியத்தை அடைய இயலாது. எப்படியிருப்பினும் சொர்க்கம் ஒரு பொருட்படுத்தப்பட வேண்டாத பொருள் ஆகும்.

சொர்க்கத்திற்குச் செல்வதைக் குறித்த ஒரு கதை உள்ளது. குழிப்பந்தாட்டத்தில் (golf) ஈடுபாடு உடைய ஒரு மனிதர் இறந்தவுடன் சொர்க்கத்திற்குச் சென்றார். அவர் சொர்க்கத்தை அடைந்தவுடன், முதலில் இங்குக் குழிப்பந்து விளையாட்டு விளையாடும் இடம் உள்ளதா? என்று கேட்டார், 'சொர்க்கத்தில் குழிப்பந்து விளையாட்டு விளையாடும் இடமா!' என்று பதில் வந்தது. 'அது ஒரு பொழுதும் நிகழாதா! அப்படியாயின் எனக்குச் சொர்க்கம் வேண்டாம். நான் மற்ற இடத்திற்குச் செல்கிறேன்' எனவே அவர் மற்ற இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் அந்த இடத்தை அடைந்தவுடன் அவருக்கு வழிகாட்டியவர் வியக்கத்தக்க குழிப்பந்து விளையாட்டு விளையாடுமிடத்தைச் சுட்டிக் காட்டினார். அதற்கு அவர் 'அன்பிற்கு உரியவனே குழிப்பந்து விளையாடும் மட்டைகள் எங்குள்ளன' என்று கேட்டார். அதற்கு அவருக்கு வழிகாட்டியாக வந்தவர், 'நல்லது. எங்களிடம் குழிப்பந்து விளையாட்டு விளையாடும் இடம் மட்டும் உள்ளது. எங்களிடம் குழிப்பந்து விளையாடும் மட்டைகள் இல்லை. அதே 'நரகம்' என்று கூறினார்.

நாம் ஒரே சமயத்தில் முழுக்க முழுக்க உலக வாழ்க்கையையும் மற்றும் மேம்பட்ட வாழ்க்கையையும் மேற்கொள்ள

இயலாது. நாம் ஒரே சமயத்தில் உலக வாழ்க்கையைக் குறித்த விருப்பங்கள் ஆசைகளின் பின்னால் ஓடிக் கொண்டும், உயர்ந்த தெய்வீக அன்பின் மீதான நாட்டத் திலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயலாது. கடவுள் மற்றும் உலகத்தின்மீது ஈடுபாடும் கடவுள் மற்றும் உலக உணர்வுகளும், இன்பங்களும் சேர்ந்து இருக்க இயலாது, 'காமம் எங்கு உள்ளதோ, அங்கு இராமர் இருக்க இயலாது. இராமர் எங்கு இருக்கிறாரோ அங்கு காமம் இருக்க இயலாது' என்று மிகச் சிறந்த அருளாளரான ஸ்ரீதுளசிதாஸர் கூறி யுள்ளார். ஏசுநாதரும், 'உன்னால் கடவுள் மற்றும் செல்வம் (உலகியல்) என்னும் இரண்டிற்கும், தொண்டாற்ற இயலாது' என்று கூறியுள்ளார்.[1]

நாம் நம்மை உன்னிப்பாக ஆராய்ந்து, நமக்கு உண்மை யிலேயே கடவுள் வேண்டுமா என்று அறிய வேண்டும். மற்றவர்களின் அன்பையும், பரிவையும் நாம் விரும்பினால் அல்லது உலகப் பொருட்களை விரும்பினால், கடவுள் இல் லாமலேயே நம்மால் செயல்பட இயலும். இந்த அனைத்தும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கும்பொழுது, நாம் முற்றிலும் நிறைவு அடைந்தவர்களாக, மகிழ்ச்சி அடைந்தவர்களாக இருந்தால், ஐயத்திற்கு இடமற்றவகையில் கடவுள் நமக்கு வேண்டாம் என்பதன் அடையாளமாக அது விளங்குகிறது. அத்தகைய ஒரு நிலைமையில் கடவுள் நமக்குக் கிட்டா விட்டால் அதற்கு நாமே பொறுப்பு ஆவோம். எனவே ஒவ்வொருவரும், அவருக்கு உண்மையிலேயே கடவுள் வேண்டுமா அல்லது வேறு ஏதாவது வேண்டுமா என்று அவரை அவ்வப்பொழுது கேட்டுக் கொள்ள வேண்டும் உண்மையிலேயே அது கடவுளாக இருந்தால், கடவுள் அவனிடம் வருவார் என்று அவன் உறுதியுடன் இருக்கலாம். கடவுளை மட்டுமே எந்த பக்தன் உண்மையாக நாடு கிறானோ, அவனிடம் கடவுள் வருவார். 'பக்தன் கடவுளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால் கடவுள் அவனை

1. *பைபிள்—செயின்ட் மேத்யூ, 6:24.*

நோக்கிப் பத்து அடிகள் எடுத்து வைக்கிறார்' என்று ஸ்ரீராம கிருஷ்ணர் கூறுகிறார்.[1]

புலன்களால் உணரத்தக்க இந்த உலகத்தையும் அதில் நாம் காணும் மனிதர்களையும் உச்ச அளவான உண்மை என்று நாம் நம்புவதுதான் நம்முடைய மொத்தமான கோளாறு ஆகும். மற்றும் நம்மிடையே இரண்டு மெய்ம்மைகள் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஒவ்வொரு சாதகனின் மனத்திலும் ஒரு வெற்றிடம் முதலில் ஏற் படுத்தப்பட வேண்டும். ஒருமுறை இது ஏற்படுத்தப்பட்ட வுடன், இந்த வெற்றிடத்தை அவன் பரம்பொருளால் நிரப்ப வேண்டும்.

நாம் எதை உண்மை என்று ஏற்கிறோமோ, நாம் எதை உண்மையானது மற்றும் நிலைபெற்றது என்று எண்ணு கிறோமோ அது நம்மை முழுமையாக இழுக்கிறது; நம் மனத்தை முழுமையாக ஈர்க்கிறது. நம்முடைய எண்ணத்தை முழுமையாகக் கவர்கிறது. ஆன்மீக வாழ்க்கையில் இது ஒரு முக்கியமான விதியாகத் திகழ்கிறது. எல்லாச் சூழ்நிலை களிலும் மாற்றமில்லாமல் இருக்க இயலாத எதுவும் இறுதி யில் உண்மை அல்ல என்பது வேதாந்தக் கருத்து ஆகும். கடந்த காலத்தில் எத்தகைய மாறுதலையும் அடையாமல் எது இருந்ததோ, நிகழ்காலத்தில் எது இருக்கிறதோ, எதிர் காலத்தில் எது இருக்குமோ அது மட்டுமே உண்மையானது ஆகும். மாறுபாடு அடையும் அல்லது அழியும் தன்மை உடைய, பரிணாம வளர்ச்சிக்கு ஆட்படும் அல்லது சிக்கிக் கொள்ளும் அனைத்தும் 'உண்மையற்றது' என்னும் வகை யைச் சேர்ந்தது ஆகும். 'கனவு என்றால் என்ன?' என்று ஒரு சிறுவன் அவன் தாயால் கேட்கப்பட்டான். அதற்கு அந்தச் சிறுவன், 'கண்களை மூடிக் கொண்டு ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதைப் போன்றது ஆகும்' என்று பதில் கூறினான். அந்தச் சிறுவனைப் போன்ற தூய்மையையும், அகச்சார்பான

---

1. சுவாமி அபேதானந்தரால் 'Thoughts on Yoga, Upanishads and Gita' என்னும் நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. (கல்கத்தா ராமகிருஷ்ண வேதாந்த மடம், 1970) பக்கம் 74.

எளிமையையும் நாம் பெற்றிருந்தால் அதே போன்று விழிப்பு நிலையையும் நம்மால் அனுபவிக்க இயலும். நாம் நம்மைப் பகுத்து ஆராய்ந்து அறிந்தால், மனத்தின் விழிப்பு நிலை மட்டும் மாறாமல் இருப்பதை அறிந்து கொள்ளலாம். அதில் இந்த உலகில் நடக்கும் நிகழ்ச்சிகள் காட்டப்படும் ஒரு திரையைப்போல தூய்மையான விழிப்பு நிலை உள்ளது. சுவாமி விவேகானந்தர், 'கடவுள் மட்டுமே வாழ்கிறார். ஆன்மா மட்டுமே வாழ்கிறது. ஆன்மீகம் மட்டுமே வாழ் கிறது. அதைப் பற்றிக் கொள்' என்று கூறியுள்ளார்.[1] நாம் இந்தக் கூற்றில் காணப்படும் உண்மையின்மீது உறுதியான நம்பிக்கையை வைக்க வேண்டும். நாம் ஒருபொழுதும் ஒரு உயர்ந்த இலட்சியத்தை தாழ்த்துவதற்கு முயற்சிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக நாம் அந்த லட்சியத்தின் அளவிற்கு நம்மை உயர்த்திக்கொள்வதற்கு எப்பொழுதும் பாடுபட வேண்டும். லட்சியம் மிக உயர்ந்த லட்சியமாக இருந்தால், நமக்கு அந்த வளர்ச்சிக்கு உரிய படியாக ஒரு செயல்முறை இலட்சியம் இருக்க வேண்டும். அது அந்த மிக உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு உரியதாக இருக்கும். அதுதான் நம்முடைய வாழ்க்கையின் இலட்சியம் என்பதை நாம் அறிவோம். மிக உயர்ந்த இலட்சியத்தை அடையும் வரையில், அதாவது பரம் பொருளை உணரும் இலட்சியத்தை அடையும் வரையில் நாம் விட்டுக் கொடுக்கக் கூடாது. அந்த மிக உயர்ந்த இலட்சியத்தை அடையும் முயற்சியில் நாம் தோல்வியடைந் தால், நாம் தோல்வியை மட்டும் அடைந்துள்ளோம் என்று உணர வேண்டும். அந்த இலட்சியத்தை அடைவதற்கு இன் னும் மேலான வலிமையுடனும், உறுதியுடனும் தொடர வேண் டும். கீழான இலட்சியங்களின் பின்னால் ஓடுதல் கூடாது.

சமயத்தின் அவசியமான கூறுகளை அவசியமற்றவைகளிடமிருந்து பிரித்தல்

சமயத்தின் அவசியமான பகுதியை, அவசியமற்ற பகுதிகளிடமிருந்து பிரித்து எடுக்கும் திறமையானது,

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 5.53.

ஆன்மீகத்தை நாடும் ஒருவனுக்கு முற்றிலும் அவசியமான இரண்டாம் தகுதியாகத் திகழ்கிறது. சமயத்தின் அவசியமற்ற பகுதிகளை உண்மையான ஆன்மீக வாழ்விற்கு உரியவையாகத் தவறாகக் கருதும் மனிதர்கள் அதிலுள்ள தொடர்பற்ற தன்மையில் தங்களை இழந்து எத்தகைய ஆன்மீக முன்னேற்றத்தையும் அடையாமல் உள்ளனர். இதுதான் மரபு பிறழாத, கோட்பாட்டில் உறுதி உடையவர்கள் என்று கூறப்படுபவர்களின் விதியாக உள்ளது. அவர்கள் சமயத்தின் எல்லா வகையான கண்டிப்பு மிகுந்த ஒழுக்க விதிமுறைகளைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும், எத்தகைய முன்னேற்றத்தையும் அடையாமல் உள்ளனர் (இருந்த இடத்திலேயே உள்ளனர்). அவர்கள் தங்கள் இலக்கை அடைவதில் சற்றே குறைந்துள்ளனர்.

சமயம் என்பது புத்தக அறிவைவிட வேறுபட்ட ஒன்றாக விளங்குகிறது. அதைவிட மேம்பட்டதாகவும் விளங்குகிறது. தற்காலத்தில் புத்தகங்கள் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. எல்லாச் சமயங்களைக் குறித்த புத்தகங்களும், பலவகையான சமயங்களின் போதனைகளைப் பல்வகைப்பட்ட வடிவங்களில் அளிக்கின்றன. ஆனால் வெறும் புலமையின் மூலமாகவோ, வெறும் அறிவுக்கு உகந்ததைப் படிப்பதன் மூலமாகவோ உன்னால் உண்மையை ஒருபொழுதும் அறிய இயலாது. அறிவாற்றல் சார்ந்த வாழ்க்கையைக் குறித்து நாம் மிக உயர்வாக, அதை மிகவும் முக்கியத்துவம் உடையதாகக் கருதினால், 'அவன் ஒருவனே, முனிவர்கள் அவனைப் பல பெயரிட்டு அழைக்கின்றனர்'[1] என்னும், சமயத்தின் இன்றியமையாத உண்மையை நம்மால் ஒருபொழுதும் உணர இயலாது.

'சாதகன் தன்னால் எந்த அளவிற்குச் சிறப்பாகக் கற்க இயலுமோ, அந்த அளவிற்குச் சிறப்பாகக் கற்க வேண்டும், படிப்புத் துறைவகைகளில் நன்கு தேர்ச்சி அடைய வேண்டும்.

---

1. ரிக்வேதம், 1.164.46 (அத்தியாயம் 4, அடிக்குறிப்பு 16)

ஆனால் ஒரு மிகச் சிறந்த அறிஞன் ஆனபிறகு, ஆசைகளைத் துறந்து அறிவிலிருந்து பெறப்படும் ஆற்றலுடன் வாழ முயற்சி செய்ய வேண்டும்.[1]

நாம் எளிமையாக, இயல்பாக இருந்தாலன்றி, ஒரு பொழுதும் எத்தகைய ஆன்மீக வாழ்வும் இருக்காது. நாம் ஏதாவது வளர்ச்சி அடைய வேண்டுமானால், வஞ்சகத்தன்மை, போலித்தனம், எல்லாவகையான ஒளிக்கும் மனப்பான்மைகள், நேர்மையற்றதன்மை, மனத்தின் முறைகேடுகள் போன்ற வற்றிலிருந்து விடுபட வேண்டும். ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய ஒருவன், நேர்மையானவனாக முற்றிலும் நாணய மானவனாக ஒளிவுமறைவற்றவனாக தியானம் செய்பவனாக இருக்க வேண்டும். அவன் இறுமாப்பு அற்றவனாக, புலமை யால் ஏற்படும் தற்பெருமை அற்றவனாக இருக்க வேண்டும். ஆன்மீக வாழ்வின் அவசியங்களை அறிந்துகொண்டு, கடவுளைக் குறித்த தெளிவான கருத்தை வடிவமைத்துக் கொண்டு, அவன் கட்டுப்பாடான விதிமுறைகளைப் பின் பற்ற முயற்சி செய்ய வேண்டும். ஒருவர் மிக அதிகமாக வெற்றுச் சொற்களைப் படிக்கக் கூடாது. அது குழப்பத்தை யும், தொல்லையையும் மட்டுமே ஏற்படுத்தும்.

'சொற்களின் கூட்டம் ஒரு பெரிய காட்டைப் போன்றது ஆகும். அது மனத்தை மயக்குவதற்குக் காரணமாகிறது. எனவே உண்மையான அறிவை நாடுபவர்களால், ஆன்மா வைப் பற்றிய உண்மை ஒன்றுதான் நல்ல முயற்சியால் அறியப்படுவதற்கு உரியதாகும்.'

'தெளிவான பேச்சு, பிரவாஹம் போன்ற சொற்கள், சாஸ்திரங்களுக்கு விரிவுரை கூறும் திறமை, ஆழ்ந்த கல்வி ஆகிய இவை, கல்விமான்களுக்கு மேலுதாரணத்தில் கூறியது போல, மகிழ்ந்து அனுபவிப்பதற்கு ஆகுமேயன்றி, முக்திக்குப் பயன்படாது'.[2]

---

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 3.5.1. மற்றும் அதைக் குறித்த சங்கரரின் பாஷ்யம்.

2. விவேக சூடாமணி, 60, 58.

நீ கல்வி கற்கக் கூடாது என்பது இதன் பொருள் அல்ல. நீ உண்மையை உணர வேண்டும் என்னும் நோக்கத்துடன் கற்க வேண்டும் என்பதுதான் இதன் பொருளாகும். ஸ்ரீராமகிருஷ்ண ருடைய இந்தக் கதையை நீ அறிந்திருப்பாய், ஒரு மனித னுக்கு அவனுடைய வீட்டிலிருந்து, அவன் உறவுக்காரர் களுக்குச் சில பரிசுப் பொருட்களை அனுப்புமாறு தெரி விக்கப்பட்டிருந்த கடிதம் வந்தது. அதிலுள்ள பொருட்களின் விவரத்தைத் தெரிந்து கொண்ட பிறகு, அவன் அந்தக் கடிதத்தை எறிந்து விட்டு, அதன்பிறகு சென்று அப்பொருட் களை வாங்கி வந்தான்'[1] வேதாந்தம் எப்பொழுதும் வாசிப் பதை ஊக்குவிக்கிறது. ஆனால் உன்னுடைய வாசிப்புடன் சில உண்மையான ஆன்மீகப் பயிற்சியும் இருக்க வேண்டும். நீ வாழ்க்கையின் சிக்கல்கள் மற்றும், உண்மையைக் குறித்து, முறையான வாசிப்பு மற்றும் ஆழ்ந்து சிந்திப்பதன் மூலமும் எப்பொழுதும் உன்னுடைய அறிவிற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். திட்டமிட்டுச் செய்யப்படும் முறையில் புத்தகங் களைப் படிக்க வேண்டும். தெளிவாக, ஆழ்ந்து சிந்திக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதனால் நீ ஏதாவது ஒருநாள் ஏதாவது புத்தகத்தை ஆழமாகப் படிக்க வில்லை என்றால் மன அமைதியற்ற நிலையை உணர்வாய் (மகிழ்ச்சியற்ற நிலையை அடைவாய்). உன்னுடைய ஆன்மீகப் பயிற்சியில், இந்த வகையில் நாள்தோறும் படிப்பது என்பது ஒரு முக்கியமான ஒன்றாகச் செய்யப்பட வேண்டும்.

மனிதர்களை வழிபாட்டு முறைகளையும், சமயச் சடங்குகளையும் குறித்து அதிகமாகச் சிந்திக்காமல், தூய்மை யான வாழ்வு, தியானம், ஆன்மீக விதிமுறைகள் மற்றும் மனக்கட்டுப்பாட்டை அவர்களுடைய சொந்த வாழ்வில் கடைப்பிடித்து சமயத்தை அவர்களுடைய வாழ்வில் பிரதி பலிக்கச் செய்யுமாறு கேட்டுக் கொண்டது புத்தரின் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. ஒழுக்கத்துடன்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.70,71.*

கூடிய தூய்மையான வாழ்க்கையை வாழாமல் நம்மால் ஆன்மீக வாழ்வை வாழ இயலும் என்று ஒருபொழுதும் எதிர்பார்க்க இயலாது. அல்லது எந்த முன்னேற்றத்தை அடையலாம் என்றும் எதிர்பார்க்க இயலாது, அப்பொழுது இவ்வனைத்தும் ஆசை மிகுந்த கனவாக மட்டுமின்றி வேறு எதுவும் இல்லாமல் போய்விடும்.

புத்தர் கடவுளைப்பற்றி என்ன கூறி இருக்கிறார்? அவர் கடவுளைக் குறித்து எதையும் கூறவில்லை. கடவுளைக் குறித்து அவ்வளவு அதிகமாகப் பேசுவது அவசியமில்லாத தாகும். ஆனால் ஆன்மீக வாழ்வு வாழ்வதற்கு, கடவுளின் வழியைப் பின்பற்றுவது மிகவும் அவசியமானதாகும். 'கடவுளே, நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்! உங் களுடைய வான்முகடு எவ்வளவு அழகாக உள்ளது! உங் களுடைய நட்சத்திரங்களும் இந்த முழுமையான படைப்பும் எவ்வளவு அழகாக உள்ளன!' என்று மனிதர்கள் பல நேரங் களில் கூறுகிறார்கள். ஆனால் படைத்தவன், அவன் படைத் துள்ள படைப்பை விடச் சிறந்தவன் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள். கடவுள் அத்தகைய சிறிய விஷயத் தைக் குறித்துப் பெருமிதம் அடைவதில்லை. நம்முடைய மனிதக் கண்ணோட்டத்துடன் காணும்பொழுது நாம் அதை மிகப் பெரியதாக எண்ணுகிறோம். ஆனால் கடவுளுக்கு அது எப்படியிருந்தாலும் மிகச் சிறிய விஷயமாகும். எனவே கடவுளை அவருடைய வெளித் தோற்றத்தின் சிறப்புகளுக் காகப் புகழ்வதைவிட, அவருடைய வழியைப் பின்பற்றுவது மிகவும் முக்கியமானதாகும். இந்தப் புகழ்ச்சியானது பல நேரங்களில் போலி வழிபாடாக ஆகிவிடுகிறது.

'ஐயா, கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா?' என்று ஒருமுறை புத்தரிடம் கேட்கப்பட்டது. 'நான் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்று கூறினேனா?' கேள்வி யைக் கேட்டவர் 'எனவே, கடவுள் என்று ஒருவர் இல்லை' என்று முடித்தார். ஆனால் புத்தர் அதற்கு எதிராக 'நான் கடவுள் இல்லை என்று கூறினேனா?' என்று

கேட்டார்.[1] எல்லா வெறுமையான மற்றும் சிறியதைப் பெரியதாக்கும் ஊகங்களைக் கொண்ட விதண்டாவாதங் களை நிறுத்தி, மனிதர்கள் தங்களைத் துன்பம் மற்றும் வேதனைகளிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று புத்தர் விரும்பினார். எனவே அவர், 'ஒரு வீடு நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கும் பொழுது, நீ அங்கு சென்று, நெருப்புப் பிடித்ததின் மூலகாரணத்தைக் குறித்துத் துப்புத் துலக்குவாயா அல்லது நெருப்பை அணைக்க முயற்சி செய்வாயா?' என்று கேட்டார். ஆனால் நாம் நம்முடைய முட்டாள்தனத்தால் பல சமயங்களில், முதலில் நெருப்புப் பிடித்ததின் மூலகாரணம் குறித்த துப்பைத் துலக்குவோம். அந்த முயற்சியில் வெற்றி அடை வதற்கு முன்பு, முழுவீடும் எரிந்து விடும். சாம்பல் குவியலைத் தவிர வேறு எதுவும் இருக்காது. எனவே நாம் சமயத்தின் அவசியமான கூறுகளை, அவசியமற்றவைகளிட மிருந்து பிரிப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சுயமுயற்சி

பல ஆண்டுகளாக நாம் கட்டிக் கொண்டு இருக்கிற எண்ணங்களின் உலகத்தைத் தாண்டிச்செல்வதற்கான முயற்சி என்பது, 'தன் முயற்சி' என்பதன் பொருளாகும். பெரும் பாலான மனிதர்கள் அதைக் கைவிடுவதற்கு விரும்பு வதில்லை. அவர்கள் தங்கள் சொந்த மனங்களுக்கு எதிராகச் செயல்படுவதற்கு ஊக்கமற்றவர்களாக உள்ளனர். ஸ்ரீராம கிருஷ்ணர் ஒருமுறை தெய்வீக அன்னையிடம், அவர் உணவைச் சமைத்து மனிதர்களின் முன்னால் வைத்துள்ள தாகவும், அப்படியிருந்தும் அவர்கள் உண்ணும் முயற்சியைக் கூட மேற்கொள்ளவில்லை என்று முறையிட்டார்.[2] நாம் எப்பொழுதும் வேறு ஒருவரால் நமக்கு எல்லாம் செய்யப்பட

---

1. F.L. Woodward, Some Sayings of the Buddha (London, Oxford University Press, 1951, pa.223) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது.

2. Sayings of Sri Ramakrishna *(சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 1975) பக்கம் 206*

வேண்டும் என்று விரும்புகிறோம். சாதகனின் பங்கிற்கு சுயமுயற்சி இல்லாவிட்டால், முக்தி என்னும் பேச்சிற்கே இடமில்லாமல் போய்விடும். சமயப்பற்றுடையவர்கள் என்று அழைக்கப்படும் பெரும்பாலானவர்கள், ஆன்மீகம் மற்றும் சமய வாழ்வு என்னும் உலகத்தில் வெறும் அண்டி வாழ்பவர்களாகவே உள்ளனர். வேறு எதையாவது மேற் கொள்வது அவர்களுக்கு நன்மை தருவதாக இருக்கும்.

உண்மையான அக்கறையுடன், நாம் நடைமுறையில் நம் ஆன்மீக வாழ்வைத் தொடங்குவதற்கு முன்பு, அதற்கு உரிய மதிப்பை, உண்மையாக, முழுமையாக அளிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறோமா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும். பொதுவாக நம்மிடம் உலகப் போக்கு மற்றும் ஆன்மீகப்போக்கு என்னும் இரு மனப்பான்மைகள் உள்ளன. முதலில் இந்தஇரண்டும் ஏறத்தாழ சமமான பலத்துடன் இருந்தால், ஆன்மீகப் போக்கானது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இல்லை எனின் முன்னேற்றம் அடைய இயலாது. மற்றும் நம்முள்ளே நடந்து கொண்டிருக்கும் இழுபறி நிலையை வெல்ல இயலாது. அதனால்தான் நம்முடைய இலட்சியத்தை முடிவாக உறுதிப்படுத்திக் கொண்டு அதன் பிறகு என்ன ஆனாலும் அதனை விடாமல் பற்றிக் கொள்வது நமக்கு முற்றிலும் அவசியமானதாகிறது. நாம் உண்மை யாகவே பலவகைப்பட்ட இடறும் குழிகளும், ஆபத்துகளும் சூழ்ந்துள்ள கஷ்டமான வழியைப் பின்பற்ற விரும்பினால், எல்லா வகையான கஷ்டங்களையும் வெல்லுவதற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும். நாம் எல்லா போலித் தோற்றங்களைக் கடந்து மேம்பட விரும்பினால் நம்மிடம் எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட அளவு எதற்கும் அஞ்சாத வனிடம் உள்ள அச்சமற்றதன்மையும் பேராண்மையும் இருக்க வேண்டும். சாகதன் செல்லும் வழி மிகவும் ஆபத்து நிறைந்ததாக உள்ளது. எல்லாப் பக்கங்களிலும் எல்லா இடங்களிலும் ஆபத்துக்களும், இடறும் குழிகளும் பதுங்கி யுள்ளன. ஒருமுறை சிக்கிக் கொண்டால், பெரும்பாலான மனிதர்களுக்கு மீண்டும் வாய்ப்பு இல்லை. உன்னுடைய

உலகப்பற்றுக்கள் அனைத்தையும் துறந்தாலன்றி 'நான்' என்னும் உணர்வைத் துறந்தாலன்றி, மிக உயர்ந்த இலட்சியத்தை உன்னால் ஒருபொழுதும் உணர இயலாது.

நாம் ஒரு கம்பத்தில் மிக நீளமான கயிற்றால் கட்டப்பட்டுள்ள பசுக்களைப் போல இருக்கிறோம். பசுக்கள் தங்களுடைய அசைவுகளிலும், புல்லை மேய்வதிலும் ஒரு குறிப்பிட்ட அளவு சுதந்திரத்தைப் பெற்றுள்ளன. ஆனால் அந்த அறிவற்ற விலங்குகள், முழுக்கயிறும் சுற்றிக் கொள்ளும் வரையில் சுற்றிச் சுற்றி வருவதால், தங்களுடைய கால்களின் அடியிலுள்ள புல்லைச் சென்று அடைவதற்குக்கூட இயலாத நிலையை அடைகின்றன. கடவுள் மனிதனுக்கு மிக நீளமான கயிற்றைக் கொடுக்கிறார். ஆனால் மனிதன் மிகவும் அரிய சூழ்நிலைகளில்தான் அந்தக் கயிற்றைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்கிறான். பெரும்பாலும் அவன் ஒரு பக்கமும் சிறிதளவும் அசையாமல் பரிதாபமாக தன்னைச் சிக்க வைத்துக் கொள்கிறான். இவ்விதம் இருப்பினும் அது கடவுளின் தவறு அல்ல. உன்னுடைய சொந்தத் தோள்களில் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். உனக்கு என்ன நேர்ந்தாலும் அதற்குக் கடவுளைப் பொறுப்பாக்குவது மிகப் பெரிய தவறு ஆகும். ஒரு நொடி நேர இன்பத்திற்காக நீ மற்ற எல்லாவற்றையும் மறந்துவிடுகிறாய். காலங்காலமாகக் கடவுள் மனிதனுக்கு என்ன கூறிக் கொண்டிருக்கிறார் என்பதைக் கேட்பதற்கும் நீ அக்கறை கொள்வதில்லை.

ஆன்மீக வாழ்வு என்பது நம்முடைய எண்ணங்களைத் தூய்மைப்படுத்தி மேன்மைப்படுத்துகிறது என்றால், அதே சமயத்தில் நம்முடைய மனத்திட்பத்தை விரிவுறுத்தி, நம்முடைய மனத்தை உயர்ந்த வழியை மேற்கொள்ளச் செய்வதில் ஊக்கப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். இது உயர்ந்த வழியை நோக்கி முழுவதுமாக திருப்பப்படுவதாக இருக்க வேண்டும். நாம் இந்த உலகத்தில் மிகப்பெரிய அளவில் மனத்திட்பத்தையும் மன ஒருமைப்பாட்டையும்

காண்கிறோம். ஆனால் அந்த இரண்டிற்கும் ஒரு தவறான இலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அதனால் மனிதனை மேலும் மேலும் ஆழமாக இருட்டிலும் மற்றும் அறியாமையிலும் அழைத்துச் செல்கிறது. உலகத்தில் நீ காணும் மனத்திண்மை எல்லாம் சரியான வழிகளில் திருப்பப் பட்டால், நம்முடைய இந்த உலகமானது உடனே சொர்க்க மாகிவிடும்.

ஒரு இளஞ்சிறுமியைப் பேணி வளர்க்கும் தாதி, சிறுமியின் தாயாரிடம், சிறுமியைக் கட்டுப்படுத்துவது அவளுக்குக் கஷ்டமானதாக உள்ளது என்று முறையிட்டாள். தாயார் தாதியை அதிகமான மனத்திண்மையைப் பழக்கிக் கொள்ளுமாறு கூறினார். அதற்குத் தாதி, 'நான் முயற்சி செய்தேன். ஆனால் அவளுடைய 'மாட்டேன்' என்னும் சக்தி என்னுடைய மனத்திண்மையைவிட அதிகமாக உள்ளது' என்று கூறினாள். இதுதான் ஆன்மீகத்தை மேற்கொள்ளும் குழந்தையின் சிக்கலாக உள்ளது. அவன் பலவற்றைச் செய்ய விரும்புகிறான். அவன் எப்பொழுதும் தியானம் செய்ய விரும்புகிறான். ஆன்மீக எண்ணங்களின் மூழ்கி இருப்பதற்கு விரும்புகிறான். ஆனால் அவனுடைய மனம் எதிர்க்கிறது. கிறிஸ்தவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப மனித மனத்திட்ப மானது முரண்படும் தன்மையை இயல்பாகப் பெற்றுள்ளது என்பதாகும். ஹிந்துக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப, மனத்தின் முரண்பட்ட தன்மையானது ஸம்ஸ்காரங்களால் ஏற்படுத்தப் படுவது ஆகும். இவை மனத்தைச் சரியான பாதையில் செலுத்துவதற்குக் கடினமாக்குகின்றன. ஆனால் ஸம்ஸ்காரங் களை மாற்ற இயலும் அல்லது அழிக்கக் கூட இயலும், நல்ல செயல்களைச் செய்வதன்மூலம், நல்ல மனிதர்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் நாம் நல்ல ஸம்ஸ்காரங்களை அடைய இயலும். மேலும் நம்முடைய மனத்திட்பத்திற்குத் தொடர்ந்து பயிற்சியளிப்பதால் முதலில் அது எந்த அளவிற்கு வரம்பிற்கு உட்பட்டதாக இருப்பினும், நம்மால் அதைப் பலப்படுத்த இயலும். அதன்பிறகு ஆன்மீக வாழ்வு சுலப மானதாக ஆகிறது.

கடவுளின் அருளானது தன்முயற்சி என்னும் வடிவத்தில் வருகிறது. வழியிலுள்ள எல்லாத் தடைகளையும் அகற்றுவதற்கான உறுதியையும், சரியான திசைகளில் நம்முடைய மனத்திட்பத்திற்குப் பயிற்சி அளிப்பதற்கு மிகப்பெரிய உந்துதலையும் உணர்வதுதான் நாம் கடவுளின் அருளைப் பெற்றுள்ளோம் என்பதற்கான அடையாளமாகும். ஸ்ரீராமகிருஷ்ணர், 'ஒரு மனிதன் கடவுளை உணராத வரையில் அவன் சுதந்திரமாக இருப்பதாக நினைக்கிறான். கடவுளே இந்த மயக்கத்தை மனிதனிடம் ஏற்படுத்தியுள்ளார். இல்லையெனின் பாவங்கள் பெருகும், மனிதன் பாவத்தைக் குறித்து பயப்பட்டிருக்க மாட்டான். மற்றும் அதற்குத் தண்டனையே இல்லாமல் போயிருக்கும். கடவுளை உணர்ந்தவர்கள், தன் விருப்பப்படி இருப்பது வெறும் தோற்றம்தான் என்பதை அறிந்தவர்கள். உண்மையில் மனிதன் கருவியாவான். கடவுள் அதை இயக்குபவர் ஆவார். மனிதன் வண்டியாவான். கடவுள் அதை ஓட்டுபவர் ஆவார்'[1] என்று கூறியுள்ளர்.

ஒருநாள் ஸ்ரீசாரதா தேவியை ஒரு சீடர், 'உண்மையிலேயே கடவுள் நமக்கு உரியவராக இருந்தால், அவர் ஏன் தம்மை வெளிப்படுத்திக் கொள்வது இல்லை?' என்று கேட்டார். அதற்குத் தூய அன்னையார், சில மனிதர்களுக்கு மட்டுமே ஊடுருவிச் செல்லத்தக்க அறிவுத் திறமை உள்ளது. பெரும்பாலான மனிதர்கள் சமயத்தை ஒரு சம்பிரதாயமாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று கூறினார்.[2] கடவுள் மற்றும் நம் வாழ்வின் ஒற்றுமையை அறிந்துகொள்வதற்கு சுயமுயற்சி தேவைப்படுகிறது. நாம் நம்முடைய மனங்களைத் தூய்மை செய்து, நம்முடைய மனத்திட்பத்தைக் கடவுளின் மனத்திட்பத்துடன் ஒரே சுருதியில் வைக்கும்பொழுது கடவுளின் விருப்பத்தால் அனைத்தும் நடைபெறுகின்றன என்பதை அறிந்து கொள்ள இயலும். அதற்குப் பிறகு தன்முயற்சிக்கும், கடவுளின் அருளுக்கும் இடையிலுள்ள முரண்பாடு முடிவிற்கு வரும்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.280,281*
2. At Holy Mother's Feet (Calcutta Advaita Ashrama, 1963) p.89.

உலகத்தைப்பற்றிய மனப்பான்மையில் மாறுதல்

நம்மைக் குறித்தும், மற்றவர்களைக் குறித்தும் நாம் கொண்டுள்ள கருத்துக்களைத் திருத்தியமைத்துக் கொள்ளுதல் என்பது இதன் இயல்பான பொருளாகும். மற்றவர்களிடம் நமக்கு உள்ள உறவுகளைக் குறித்து நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஆன்மீக வாழ்வு, நாம் உலகத்தைக் காணும் பார்வையில் மாறுதலை ஏற்படுத்த வேண்டும். குடும்பப் பிணைப்புக்களில் கட்டுண்டவர்கள் இருக்கும் உறவுகளை மேன்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் உன்னுடைய மனநிலையைப் புரிந்துகொள்ள வில்லை என்றால் அல்லது அதை விரும்பவில்லை என்றால், அவர்கள் விருப்பப்படி எல்லாம் நீ ஆட வேண்டும் என் பதற்குக் காரணம் ஆகாது. ஆன்மீக வாழ்வைப்பற்றி நேரிணைத் தொடர்பான உடன்பாடு இல்லையெனின், இந்த விஷயத்தில் நீ ஒரு பக்கமான முடிவை எடுக்க வேண்டும். கடவுள்மூலம் மற்றவர்களிடம் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள நீ கற்றுக்கொள்ள வேண்டும். ஆன்மீக இலட்சியத்தை ஒருமுறை நீ மேற்கொண்டபிறகு, அதை உன்னுடைய எல்லா உறவு முறைகளிலும், உன்னுடைய எல்லா நடவடிக்கைகளிலும் ஒளிரச் செய்ய வேண்டும்.

ஆன்மீக வாழ்வில் இரண்டு ஆபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரு மனிதனை, மனிதனுக்குரிய அன்புடன் நேசித்து, அதை தவறுதலாகத் தெய்வீகமானது என்று கூறுவது முதலாவது ஆகும். நியாயமான உள்ளுணர்வுகளையும் விருப்பு வெறுப்பற்ற நிலையில் கண்டு, தீவிரமான தன்னலத்துடன் இருப்பது இரண்டாவது ஆகும். ஆன்மீக வாழ்வில் இரண்டுமே தீங்கு விளைவிப்பவை ஆகும். மற்றவர்களிடம் சரியான அன்பு செலுத்தவோ மற்றும் அவர்களுக்குச் சரியாகத் தொண் டாற்றவோ வேண்டும் என்றால், நாம் நமது வாழ்வில் கடவுளின் மேன்மையைப் பிரதிபலிக்க வேண்டும். மற்றும் பேசுவது அவசியமானதாக இருக்குமாயின், அதுவும் பயனுடையதாக வும், நல்ல விளைவை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். கடவுளின்மூலமே மற்றவர்களுடன் உறவுகள் ஏற்படுத்தப்பட

வேண்டும். மற்றவர்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக்கொள் ளாத முறையில் மற்றவர்கள் மீது அன்பு செலுத்தி,நேசித்து அக் கறை கொள்ள வேண்டும். எல்லாமே நம்மிடம் ஏற்பட்டுள்ள மாற்றமடைந்துள்ள மனப்பான்மையைப் பொறுத்துள்ளது.

ஆன்மீக வாழ்வு, கடவுள் மீதும், இந்த உலகத்தின்மீதும் நம்முடைய மனப்பான்மையில் ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும். ஆனால் நம்மீது நம்முடைய மனப்பான்மையில் ஒரு மாறுதலை அது ஏற்படுத்தினால்தான் இது நிகழ முடியும். ஆன்மீக வாழ்வில் கிரகித்துக்கொள்ள வேண்டிய மிக முக்கிய மான விஷயமாக உள்ளது. இந்த உடலைவிட மனத்தைவிட வேறுபட்டு விளங்கும் ஆன்மாவாக ஒரு மனிதன் தன்னை உணராத வரையிலும், அவன் ஆன்மீக வாழ்வைத் தொடங்க வில்லை என்றுதான் கொள்ள வேண்டும். நம்மைக் குறித்த நம்முடைய பழைய கணிப்புக்கள் ஒரு புதிய தோற்றத்தினால் மாற்றீடு செய்யப்பட வேண்டும். ஒருவருடைய மனப்பான்மை யில் ஏற்படும் இந்த மாறுதல்தான் ஒரு உண்மையான ஆன்மீக நாட்டம் உடைய ஒருவனை சராசரியாக சமயத்தில் நம்பிக்கை உடையவர்கள் என்று கூறப்படும் மனிதர்களிடமிருந்து வேறு படுத்திக் காட்டுகிறது. இந்த மாற்றம் ஏற்படும் பொழுது, முதலில் சாதகனுக்கு ஆன்மா என்றால் என்ன என்பதைக் குறித்த தெளிவான கருத்து இல்லாமல் இருக்கலாம். அவ னுடைய கருத்து எதுவாக இருந்தாலும், அவன் ஆன்மாவை உடல் மற்றும் மனத்திலிருந்து வேறுபட்டது என்று நினைத்து மற்றும் அவனை ஆன்மாவுடன் அடையாளம் கண்டு கொண்டால் அதுவே போதுமானது.

அறுபது ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட சீன நாட்டைச் சேர்ந்த ஒருவரைப்பற்றிய உண்மையான கதை ஒன்று உள்ளது. ஒரு பேரரசரின் முடிசூட்டு விழாவின் பொழுது அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அவர் வெளியே வந்தவுடன் 'என்னால் அந்த அளவு ஒளியைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. என்னால் அந்த அளவு சுதந்திரத்தை பொறுத்துக்கொள்ள இயலவில்லை' என்று மிகுந்த உணர்ச்சியுடன் கூறினார். எனவே அவருடைய

வேண்டுகோளுக்கு இணங்க அவர் சிறைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். நம்முடைய விஷயத்திலும் இதைப் போன்ற ஒன்றுதான் ஏற்படுகிறது. நம்முடைய அறியாமைக்கும், துன்பத்திற்கும் பழக்கப்பட்டுவிட்ட நமக்கு, புதிய வாழ்வு தேவைப்படுவதில்லை. நம்முடைய அகங்காரத்தின் இருள்படிந்த தோற்றத்திற்கு மிகவும் பழக்கமாகிவிட்ட நமக்கு, நம்முடைய உண்மையான தன்மையின் சுடர்விடும் ஒளியைப் பொறுத்துக் கொள்ள இயல்வதில்லை.

நம்மில் சிலர், பைத்தியக்காரர்களின் புகலிடத்திற்குச் செல்லுமளவிற்கு நோய்வாய்ப்படாமல் இருப்பினும், நாம் நரம்புக் கோளாறுகளால் துன்பமுற்று வேறுபட்ட வாழ்க்கையை வாழ்கிறோம். காலதாமதம் செய்யாமல், நம்மைக் குறித்து எப்படி அக்கறை எடுத்துக்கொள்வது, ஒரு மேம்பட்ட வாழ்க்கையின் குறிக்கோளை எப்படி உணர்வது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். புகழ்பெற்ற மனோதத்துவ நிபுணரான டாக்டர் யுங், ஒரு குறிப்பிடத்தக்க கருத்தைக் கூறியுள்ளார். 'என்னுடைய நோயாளிகளில் மூன்றில் ஒரு பகுதியினர், நோய்ப்படுக்கைத் தொடர்புடைய வரையறை செய்யப்பட்ட நரம்புச் சிக்கலால் ஏற்படும் கோளாறுகளால் வேதனைப்படவில்லை. ஆனால் அவர்களுடைய வெறுமை நிறைந்த அறிவற்ற வாழ்க்கையால்தான் வேதனைப்படுகிறார்கள்.'[1] ஒரு உயர்ந்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்னும் உத்வேகமே, வாழ்க்கைக்கு ஒரு விளக்கத்தைத் தேடிக் கொண்டுள்ள நவீன மனிதனின் தேடலுக்குப் பின்னணியாகும். ஐன்ஸ்டினின் சார்பியல் கோட்பாடு (Theory of Relativity), மேக்ஸ் ப்ளேங்க்ஸ் அவர்களின் கதிரியக்கத்தில் ஆற்றல் அலை வீச்சுக் கோட்பாடு (Max planck's Quantum Theory), கதிரியக்கக் கோட்பாட்டின் கண்டுபிடிப்பு (The discovery of Radioactivity) மற்றும் வானிலுள்ள பால் மண்டலங்களின் இருப்பைக் குறித்த கண்டுபிடிப்பு, டார்வினின்

---

1. கார்ல் ஜி. யுங் (Carl G. Jung), Modern Man in Search of a Soul (London, Routledge, Kegan Paul and Co., 1953) பக்கம் 70.

பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு (Darvin's Theory of Evolution), ப்ராயிட் அவர்களின் மனிதனின் உணர்விழந்த நிலைகள் குறித்த ஆராய்ச்சிகள் மற்றும் நவீன விஞ்ஞானத்தின் மற்ற வளர்ச்சிகளும் மனிதனுடைய மதிப்புத் தகுதிகளின் உறுதி மாறாத நிலையைத் தகர்த்துவிட்டன. முன்பு தெளிவாக, விளக்கமாக, நிலைத்த தன்மையுடையவை என்று கருதப்பட்டவை, மாறுபடும் தன்மை உடையனவாக, இன்னது என்று தெரியாத ஒன்றாக ஆகிவிட்டன. இரண்டு உலகப் போர்களும் மற்றும் சமூதாயத்தில் ஏற்பட்டுள்ள மற்ற மாற்றங்களும் ஒழுக்கப் பண்புகளை ஒப்புமை செய்கிற, முழுமையற்ற ஒரு கருத்தாகச் செய்து விட்டன. தகுதி மதிப்புக்களில் நிலையற்ற தன்மையுடைய மனப்பான்மையும் மற்றும் மனித வாழ்க்கையின் பயனற்ற தன்மையும் நவீன கலை இலக்கியம் மற்றும் தத்துவத்தில் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றன.

கடவுள் மற்றும் அருள் குறித்த சரியான மனப்பான்மை

நாம் ஏன் பிறந்திருக்கிறோம்? வாழ்க்கையின் பொருள் என்ன? மேற்கு நாடுகளில் பலரும் நாம் பருப்பொருளின் உயிர் இனங்கள், ஆற்றல் மிகுந்த சட்டதிட்டங்களுக்கிடையில் உதவியற்ற நிலையில் பிடிபட்டவர்கள் என்றுதான் நம்புகிறார்கள். தவறு செய்வதால் மனிதன் பிறக்கிறான் என்றும் சிலர் நம்புகிறார்கள். சில தலைசிறந்த விஞ்ஞானிகளால், மனத்தைப் பருப்பொருளின் பண்படுத்தப்பட்ட விளைவாகச் செய்து ஆன்மீக விதிமுறையினை அதற்கு அளிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குழப்பத்தை அளிக்கும் இத்தகைய எல்லாக் கருத்துக்களுக்கும் நடுவில், அமைப்புமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சமயங்கள் எப்படியோ தங்களுடைய பழைய கருத்துக்களான 'சூனியத்திலிருந்து படைக்கப்பட்டது' மற்றும் 'முதலாவதான பாவம்' (ஆதிபாவம்) என்னும் போக்குடன் செயல்பட்டு வருகின்றன.

புத்தசமயத்தைச் சார்ந்துள்ள பலரும் ஆன்மாவின் அழிவற்ற தன்மையை நம்புவதில்லை. மனிதன் மாறுபட்ட தன்மைகளை உடைய ஒரு கலவையாவான். ஆசைகளின்

காரணத்தால் பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியில் கடந்து சென்று கொண்டிருக்கிறான். ஆசைகள் அறியாமையை அடிப் படையாகக் கொண்டுள்ளன. அவர்கள் தனிமனிதப் பண்பு களை பாய்ந்து செல்லும் வெள்ளத்திற்கும் ஒரு சுடர் நடுக்கத் திற்கும் ஒப்பிடுகிறார்கள். அவர்கள் மாறுதல் அடையும் தன்மைக்கு அதிகமான அளவில் முதன்மையளித்து மனிதனிட முள்ள மாறுபாடு அடையாத மூலப்பொருளைக் காணத் தவறி விடுகின்றனர். ஈரல் பித்தநீரைச் சுரப்பதுபோல, எண்ணத்தைச் சுரக்கும் செம்மைப்படுத்தப்பட்ட மூளையின் ஒரு இடைவிளைப் பொருளான மனம் ஒரு துணை இயற்காட்சி என்னும் கருத் தைத் தற்காலத்திய பெரும்பாலான மனோ தத்துவ நிபுணர்கள் கைவிட்டு விட்டனர். அவர்களில் பெரும்பான்மையோருக்கு மனம், உடல் எத்தனை உண்மையானதோ, அந்த அளவிற்கு உண்மையானது ஆகும். தனி நபரானவர் மனம்-உடல் அல்ல அல்லது உடல்-மனம் அல்ல ஆனால் ஒருங்கிணைந்த உடல்-மனம் ஆவார் என்று அவர்கள் கூறுகின்றனர்.[1] இன்னும் ஒரு படி மேலே செல்லத் தயாராக உள்ள சிந்தனையாளர்களும் உள்ளனர். அவர்கள், மனம் என்பது மூலப்பொருள் அன்று. அதைக் காண இயலாது. தொட இயலாது, அளக்கவோ அல்லது நிறுக்கவோ இயலாது. அது ஏதோ ஒரு 'அகநிலை'யைச் சேர்ந்தது ஆகும் என்று கூறிகின்றனர். மேற்கு நாடுகளில் தன் னுடைய மனத்தையும், அதன் இயல்பான தேவைகளையும் உடலைவிட உயர்ந்தது என்று கருதுபவர் ஆன்மீக மனிதனா கிறார். சமயநம்பிக்கை உடைய மனிதன் மனம் அல்லது 'உயிர்' உடல் அழிந்தபிறகும் வாழ்கிறது என்று நினைக்கிறான். மனம் என்பது, ஒரு செயலைச் செய்வதற்கான, இயக்கத்தைத் தோற்றுவிக்கும் இயல்புடைய மூல அடிப்படையான சக்தி யாகும். ஒரு மனிதனின் ஆளுமை என்பது அவனுடைய நடத்தையுடன் இணைந்த மனம் சார்ந்த ஆக்கக் கூறுகளின் தொடர்புடைய ஒட்டுமொத்தமாகும். ஆனால் அவனுக்கு, மனத்தின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு உடல் தேவைப்படுகிறது. எப்படியிருப்பினும் மேற்கத்திய மனோதத்

1. R.A. Strecker & K.E. Appel, Discovering Ourselves *(New York, The Macmillan Company, 1954) பக்கம் 19.*

துவம், மனிதனை வெறும் அக உணர்வுச் சார்பான உயிர் வடிவம், மனம் மற்றும் உணர்ச்சிகளின் தொகுதி என்று நடத்துவதால் அது பாதியிலேயே நின்றுவிடுகிறது.

ஹிந்துவின் கருத்து இன்னும் ஆழமாகச் செல்கிறது. மனிதனின் ஆளுமை என்பது கூட்டுத் தொகுதியாக விளங்கு கிறது. மனிதன் அவனுடைய இன்றியமையாத இயல்பில் தன் னுணர்வுடைய உயிர்சார்ந்த உளதாம்தன்மை உடையவனாக இருக்கிறான். சூக்ஷ்மமான மனம் சார்ந்த உரு மற்றும் புலன் களால் அறியத்தக்க உடல் சார்ந்த உரு என்னும் இரண்டாலும் போர்த்தப்பட்டிருக்கிறான். ஆன்மா என்பது கண்ணுக்குப்புல னாகும் உடல் மற்றும் மனத்திலிருந்து வேறுபட்டது ஆகும். கண்ணுக்குப் புலனாகும் உடலைவிட சூக்ஷ்மமான உடல் அதிகமாக நீடித்து இருக்கவல்லது ஆகும். ஆனால் அது இறுதியாக விடுதலை அடையும் பொழுது ஆன்மாவால் தள்ளப்பட்டு விடுகிறது. சூக்ஷ்ம உடலுடன் அடையாளம் கண்டுகொள்ளப்படும் தனித்த உணர்வுநிலையானது, பிறக் கும்பொழுது, கண்ணுக்குப் புலனாகும் உடலுடன் இணைக்கப் படுகிறது. சூக்ஷ்ம உடலைக் கண்ணுக்குப் புலனாகும் உட லிலிருந்து பிரிப்பது மரணம் ஆகும். முக்தி என்பது சூக்ஷ்ம உடலிலிருந்தும் ஆன்மாவைப் பிரிப்பது ஆகும்.

இந்துவின் கருத்தானது ORPHEUS அவர்களால் பாடப் பட்டுள்ள வரிகளில் எதிரொலிக்கப்பட்டுள்ளது. 'மனிதன் பூமி மற்றும், விண்மீன்களால் அணி செய்யப்பட்ட வானுலகத் தின் குழந்தையாவான்.' ஜுடோ கிறிஸ்தவ பைபிளில் 'மனிதன் கடவுளின் உருவத்தில் படைக்கப்பட்டிருக்கிறான்.[1] உடல் என்னும் கோயிலில் சிறிதுகாலத்திற்கு குடிவைக்கப் பட்டிருக்கிறான்' என்று நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகவத்கீதை:

'உடலில் உறையும் ஆன்மாவிற்கு இவ்வுடலில் குழந்தைப் பருவம், இளமை, மூப்பு எப்படியோ, அப்படியே வேறு உடல் அடைதலுமாகும்.'

---

1. *பைபிள்—ஜெனஸிஸ், 1.26,27.*

'மனிதன் எவ்வாறு நைத்துபோன துணிகளை எறிந்து விட்டு வேறு புதியவற்றை எடுத்துக் கொள்கிறானோ, அவ்வாறே உடலில் உறைபவன் நைந்து போன உடல்களை விட்டுவிட்டு வேறு புதிய உடல்களை அடைகிறான்.'[1]

ஸ்ரீராமகிருஷ்ணர், தன்னுடைய உடன் பிறந்தவரின் மகனின் மரணத்தைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டு அந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் 'சூக்ஷ்ம உடல், பருஉடலிலிருந்து வாளின் உறையிலிருந்து வாள் உருவப்படுவதைப்போல உருவப்பட்டுள்ளது' என்று அறிவித்தார்.[2] ஸ்ரீராமகிருஷ்ணர் சில நேரங்களில் தன்னுடைய சொந்த ஆன்மாவே அவருடைய பரு உடலிலிருந்து வெளியேறுவதைக் கண்டிக்கிறார். பக்தர்கள் அவர் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்த பொழுதே, அவர் உடல் வேறு எங்கோ இருந்தபொழுது அடிக்கடி அவரைக் கண்டுள்ளனர். அவருடைய தெய்வீக மனைவி ஸ்ரீசாரதாதேவி ஒருமுறை அவருடைய ஆன்மா அவருடைய உடலை விட்டு வெளியேறி, உயர்ந்த ஆன்மீக நிலைகளுக்கு உயர்ந்து சென்றதையும் அது மீண்டும் கீழே வந்து பொழுது அது முதலில் உடலிற்குள் திரும்பவும் நுழைவதற்குத் தயங்கிய அனுபவத்தையும் பெற்றார்.[3]

ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகளில், காவல் துறை முகவர் (Sergeant) ஒருவர் இரவு நேரத்தின் இருளில் ஒரு கைவிளக்குடன் சுற்றுக்காவல் மேற்பார்வைக்குச் சென்றதைக் குறித்து நாம் படிக்கிறோம். அவருடைய முகத்தை யாராலும் பார்க்க இயலாது. ஆனால் அந்த விளக்கின் உதவியுடன் அவரால் மற்றவர்களின் முகத்தைப் பார்க்க இயலும். உனக்கு அவருடைய முகத்தைப் பார்க்க வேண்டுமெனின், நீ அவரை அந்த விளக்கை அவருடைய முகத்தை நோக்கித் திருப்புமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். அதைப் போன்றே

---

1. பகவத் கீதை, 2.13,22.

2. சுவாமி சாரதானந்தர், குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், பகுதி 2 (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 4-வது பதிப்பு, 2008) பக்கம் 34.

3. சுவாமி கம்பீரானந்தர், Holy Mother Sri Sarada Devi *(சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 10-வது பதிப்பு, 2008) பக்கம் 164.*

உனக்குக் கடவுளைக் காண வேண்டும் என்றால், நீ அவரைப் பிரார்த்திக்க வேண்டும். 'ஓ கடவுளே, உன்னுடைய காருண்ணியத்தில் நீ ஞான ஒளியை உன்னுடைய சொந்த முகத்தை நோக்கித் திருப்புகிறாய்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுகிறார். ஸ்ரீராமகிருஷ்ணர் மேலும், 'விளக்கு இல்லாத ஒரு வீடு வறுமையை உணர்த்துகிறது. எனவே ஒருவன் ஒருவனுடைய இதயத்தில் ஞானம் என்னும் விளக்கை ஏற்ற வேண்டும்' என்று கூறுகிறார்.[1]

தெய்வீக அருள், சுயமுயற்சி, ஆன்மீகத்தில் மிகுந்த விருப்பம் மற்றும் கடுமையான முயற்சியின் வடிவத்தில் வருகிறது என்று நம்முடைய ஆன்மீக ஆச்சாரியர்கள் நமக்குக் கூறுகின்றனர். இவை ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சாதகனை, ஜீவனுக்கும், கடவுளுக்கும் இணைப்பை ஏற்படுத்தும் அந்த தெய்வீக அருளின் நேரடியான வடிவத்தை உணரச் செய்கிறது. இந்து சமயத்தின் திருமறை நூல்கள்

'தன்னாலே தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். தன்னைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது. நிச்சயமாகத் தானே தனக்கு உறவினன், தானே தனக்குப் பகைவன். எவன் தன்னாலேயே தான் ஜயிக்கப்பட்டவனோ, அவனுக்குத் தானே தனக்கு உறவினன். ஆனால் தன்னை ஜயிக்காதவனுக்குத் தானே பகைவனைப்போல பகைமை நிலையில் உள்ளவனாவான்'[2]

'மனிதர்களுக்கு அவர்களுடைய மனங்களே பிணைப்பிற்கும், முக்திக்கும் காரணம் உள்ளது'[3]

இருப்பினும் ஹிந்துக்கள் பலரும் விதிவச நம்பிக்கைக்கு ஆளாகிறார்கள். மற்றும் தற்செயல் நிகழ்வின் (குருட்டிணைவின்) காலடியில் விழுகிறார்கள். ஏசுநாதர் பின்வருமாறு அறிவுறுத்தியும் கிறிஸ்தவ உலகத்திலும் இதுவே நிகழ்ந்திருக்கிறது. 'அதனால் உங்கள் விண்ணகத் தந்தை

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.199.
2. பகவத் கீதை, 6.5,6.
3. மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ: ।
—அம்ருதபிந்து உபநிஷதம், 2.

நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவு உள்ளவர்களாய் இருங்கள்.'[1] அவர் ஆன்மீக முயற்சியைக் குறிப்பிட்டுள்ளார். 'ஆண்டவரே, ஆண்டவரே என்று என்னை நோக்கி சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுபவரே செல்வர்.'[2]

ஏசுநாதர், ஆற்றல் மிகுந்த ஆன்மீக வாழ்வை, தீவிரமான ஊக்கத்துடன், முயற்சியுடன் கூடிய ஆன்மீக வாழ்வை அறிவுறுத்தினார். இத்தகைய வாழ்க்கைதான் மிகச்சிறந்த கிறிஸ்தவ ஞானிகளால் வாழ்ந்து காட்டப்பட்டது. இருப்பினும் பாவம், சமயகுருமார்களின் பிராயச்சித்தம் மற்றும் சுலபமாக முக்தியடைதல் போன்றவற்றை வலியுறுத்திக் கூறுவது கிறிஸ்தவ சமயத்தில் மெல்ல மெல்லப் புகுந்த காரணத்தால், உலக வாழ்க்கையில் வெற்றியுடன், செயல்திறத்துடன் செயலாற்றிக் கொண்டிருந்த பலரும் ஆன்மீக மட்டத்தில் தங்களால் எதுவும் செய்ய இயலாது என்னும் எண்ணத்தால் தங்களை அவர்கள் அறிதுயில் நிலையில் இருத்திக் கொண்டனர். இந்த அறிதுயில் நிலையின் விளைவு, தலைசிறந்த மெய்ஞ்ஞானிகளால் வலியுறுத்தப்பட்ட ஆன்மீக முயற்சியை அகற்றி, உலகாயத நோக்கங்களுக்காக மட்டுமே மிகப்பெரிய அளவான ஆற்றலானது திசை மாற்றம் செய்யப்பட்டது. உலக வாழ்க்கையில் வெற்றிபெறுவதும் சாதிப்பதும் மிகுதியாக வற்புறுத்தப்பட்டது. ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு, நவீன நாகரீக உலகம் அழிவை நோக்கிக் கண்மூடித்தனமாக விரைந்து கொண்டுள்ளது. அதிகதாமதமாவதற்கு முன்பு தேவையான வழிமுறைகளை கைக்கொண்டால் அதை தடுத்து நிறுத்தவும் இயலும்.

ஒரு குடிகாரன் குற்றவியல் நடுவர் (Magistrate) முன்பு அழைத்துச் செல்லப்பட்டான். குற்றவியல் நடுவர் அவனுடன் வந்த காவல் ஊழியரை 'எதன் பொருட்டு கைதி

1. *பைபிள்— செயின்ட் மேத்யூ 5:48.*
2. *மேற்கண்ட நூல், 7:21.*

குடியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறான் என்று உன் மனத்தில் கருத்து உருவாகியது?' என்று கேட்டார். அதற்குக் காவல் ஊழியர் 'அவன் ஒரு வாடகை வண்டி ஓட்டுனரிடம் வாதாடிக் கொண்டிருந்தான்' என்று பதில் கூறினார். அதற்கு நீதிபதி, 'அது எதையும் மெய்ப்பிக்கவில்லை' என்று கூறினார். காவல் ஊழியர், 'வாடகை வண்டி ஓட்டுனரே இல்லை' என்று தொடர்ந்து கூறினார். நம்மில் பலரும் இப்பொழுது இதையே தான் செய்து கொண்டு இருக்கிறோம். உணர்ச்சியின் வெறியில், நாம் எல்லா இடங்களிலும் பகைவர்களைக் கண்டு, நம்முடைய முழுமையான சக்தியுடன் அவர்களுடன் சண்டையிடுகிறோம். நமக்குள்ளேயே நம்முடைய ஒழுக்க நடத்தையையும் சமய ஒழுக்கத்தையும் அழிக்க தயாராக உள்ள மோசமான பகைவர்கள் உள்ளனர் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். நம்முடைய சண்டை போடும் மனப்பான்மையானது நம்முடைய சொந்த அகங்காரம், நம்முடைய சொந்த உணர்ச்சிகளுடன் சண்டையிடுவதற்குப் பயனளிக்கத் தக்கவகையில் பயன்படுத்தப்படலாம். அறியாமை மற்றும் அழிக்கக் கூடிய இயல்புகள் என்னும் மதுவை அருந்தியுள்ள வெறிபிடித்த நிலையில் இவைதான் நம்முடைய மிகப்பெரிய எதிரிகளாக விளங்குகின்றன. மனிதன் தன் அகங்காரம் என்னும் தவறான கருத்தினால் தன்னையே அறிதுயிலில் ஆழ்த்திக் கொள்கிறான் என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்து ஆகும்.[1]

நம்மைப் பற்றிய நம் மனப்பான்மையில் மாற்றம்

கிரேக்கப் புராண இலக்கியத்தில் ஒரு சிறு குளத்தில் இருந்த நீரின் மீது தெரிந்த தன்னுடைய சொந்த பிரதிபிம்பத்தின் மீது காதல் கொண்ட நர்ஸிஸஸ் என்னும் ஒரு அழகிய இளைஞனைக் குறித்த கதை ஒன்று உள்ளது. அவன் மிகவும் ஏங்கி, மெலிந்து இறந்துவிட்டான். ஏனெனில் தற்பற்று என்பது எண்ணக்குலைவு, செயல்குலைவில்தான் முடிவுறும். தற்பற்று என்பது ஒரு நோய் ஆகும். டாக்டர் கார்ல் யுங் அதைச் சரியான முறையில் ஆராய்ந்து அறுதியிட்டுக் கூறி

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.224-225.

உள்ளார், 'அகங்காரமானது முழுமையிடமிருந்து பிரிக்கப் பட்டு மனித இனத்திற்கும், பரம்பொருளுக்கும் இடை யிலுள்ள தொடர்பை இழந்திருக்கும் காரணத்தினால் நோய் வாய்ப்பட்டிருக்கிறது.'[1] பரம்பொருளே உண்மையான மெய்ப்பொருள் 'அறியாமை என்னும் மதுவைக் குடித்திருப்ப தால் முழு உலகமுமே தன்னிலை மறந்து உள்ளது' என்னும் ஹிந்துப் பழமொழி ஒன்று உள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ணர், 'அகங்காரம் மறையும் பொழுது எல்லாத் தொல்லைகளும் முடிவிற்கு வந்துவிடும்' என்று கூறுவார் மற்றும் 'ஒரு மனிதன், அவனுடைய அகங்காரம் இருக்கும் வரையில் ஞானத்தையோ அல்லது முக்தியையோ அடைவதில்லை'[2] என்றும் மேலும், 'பிணைப்புக்களால் கட்டப்பட்டிருக்கும் பொழுது ஒருவன் ஜீவனாவான். பிணைப்புக்களிலிருந்து விடுபடும் பொழுது ஒருவன் சிவனாவான்' என்று கூறியுள்ளார்.[3]

தலைசிறந்த யோகாச்சாரியரான பதஞ்சலி முனிவர் எப்படி ஆன்மா அறியாமையால் அசைந்தாடுகிறது என்று விவரிக்கிறார். அறியாமை ஒரு எதிர்மறை உட்பொருள் இல்லை. ஏனெனில் அது அகங்காரம் என்னும் ஒரு ஆபத்தான மாயையைத் தோற்றுவிக்கிறது. அகங்காரம் பிணைப்பைத் தோற்றுவிக்கிறது. பிணைப்பு வெறுப்பிற்கு வழிகாட்டுகிறது. மிகப்பெரிய அளவில் வாழ்க்கையைப் பற்றிக் கொள்வதும், துன்பப்படுவதும்தான் சங்கிலித் தொடரான எதிர்ச் செயல்களின் விளைவாக உள்ளது[4] 'நான்' என்னும் தன்மையுடன் இருப்பது, அகநிலையில் நோயுற்ற தன்மையாகும். 'நான்' என்னும் தன்மையின் நோயைக் குணப் படுத்தவே எல்லா ஆன்மீக வழிகளும் திட்டமிடப்பட் டுள்ளன. ஹிந்துக்களின் போதனைகளில் நாம் இந்த வழி களை யோகங்கள் என்று கூறுகிறோம். முதலில் கர்ம யோகம்

1. Modern Man in Search of a Soul, பக்கம் 141.
2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.556.
3. மேற்கண்ட நூல், 1.499.
4. பதஞ்சலி யோகசூத்திரம், 2.3-9.

அல்லது தன்னலமற்ற செயல் வருகிறது. கர்மயோகத்தில் செயல்களின் பயன்கள் அனைத்தும், சரணாகதி மனப்பான்மை யுடன் பரம்பொருளுக்கு அர்ப்பிக்கப்படுகின்றன. படிப்படி யாக, எல்லா விதமான செயலும் தன் அர்ப்பணிப்பு ஆகிறது. மற்றும் தன்னலம் மிகுந்த அகங்காரம் வெல்லப்படுகிறது.

நமக்கு ராஜயோக மார்கமும் உள்ளது. ராஜயோகம் தனிமனிதப் பண்பியல்புகளின் உயர்ந்த, மேலும் உயர்ந்த மட்டங்களில் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு வழி நடத்திச் செல்கிறது. அலசி ஆராய்ந்து அறியும் இந்தப் போக்கில் ஆன்மா அது அகங்காரமோ அல்லது மனமோ இல்லை தனித்த அகநிலைப் பொருள் என்பதை அறிந்துகொள்கிறது. சாதகன் ஆன்மாவின் உண்மையான இயல்பில் நிலைத்து தன்னுடைய அகங்காரத்தை ஒழிப்பதற்கு முயற்சி செய்கிறான்.

ஞானயோகத்தில் ஆன்மீகத்தை நாடுபவன் மேலும் முன்னேறுகிறான். தனித்த விழிப்புணர்வு நிலையிலிருந்து இயலுலக அண்டத்திற்குரிய விழிப்புணர்வு நிலைக்கு (Cosmic Consciousness) உயருகிறான். அகங்காரம், பிரம்மனுடன் இரண்டறக் கலந்து விடுகிறது. இந்த ஞான யோகத்தில் 'நான்' என்னும் தன்மையின் மிக சூக்ஷ்மமான உருவமும் அழிந்து விடுகிறது.

ஆனால் நாம் வாழ்ந்துகொண்டுள்ள இக்காலத்தில் கலியுகத்தில், மிகவும் எளிமையாகப் பின்பற்றக் கூடிய வழி பக்தியோகமாகும். ஆன்மீக நாட்டமுடைய சாதகன் கடவுளைத் தந்தையாகத், தாயாக, நண்பனாக அல்லது துணைவனாக, மிகத் தீவிரமான அன்புடனும், சரணாகத பாவனையுடனும் வழிபடுகிறான். நம்முடைய வாழ்க்கை யானது கடவுளுக்குத் தொடர்ந்து ஆற்றும் தொண்டாகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் 'சமாதியின் மூலம் ஓரிருவர் ''நான்'' என்னும் தன்மையிலிருந்து விடுபடலாம்' என்று கூறுவார். ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகள் மிகவும் அரியதாக உள்ளன.

எனவே, 'நான்' என்னும் தன்மை தொடர்ந்து நீடித் தால் அந்தப் பயனற்றவன், 'பணியாளாகவே தொடர்ந்து

நீடிக்கட்டும்.'[1] இத்தகைய அன்பான தொண்டினால், அகங்கார மானது படிப்படியாகத் தன்னுடைய தீய இயல்பை இழக் கிறது. உயர்ந்த ஜீவனாகப் பண்புநிலை மாற்றம் அடைந்து, கடவுளின் கரங்களில் ஒரு கருவியாகச் செயல்படுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் 'பக்குவமடையாத அகங்காரம், பக்குவ மடைந்த அகங்காரமாக மாறியுள்ளது. அது தீங்கற்றது'[2] என்று இதைக் குறித்துக் கூறி உள்ளார்.

நாம் உண்மையாக ஆன்மாவின் தனித்த தன்மையை உடலினால் மட்டுமின்றி, மனத்தின் மூலமும் உணர இயலும் யோகம் கூறும் ஒழுக்கப்பண்புகளையும், ஆன்மீக விதி முறைகளையும் கடைப்பிடித்தால், தனித்தன்மையுடைய மனித உடலிற்குள் உறையும் பகுக்க முடியாத மெய்ப் பொருளைத் தனித்தன்மை வாய்ந்த ஆன்மா என்னும் கூர்மை யான விழிப்பு உணர்வை ஒருவரால் பெற இயலும். வேறுபடும் தன்மையை உடையது ஜீவாத்மா அல்ல. ஆனால் தனிப்பட்ட மனமாகும். நாம் எதை வேறுபடுத்தப்பட்ட நிலை என்று நினைக்கிறோமோ, அதற்கு மனத்தில் உள்ள பிளவே காரணமாகும். ஒழுக்கத்தில் பண்பட்ட நிலையும் மற்றும் ஆன்மீகப் பயிற்சியும் இயல்பான ஆற்றலுடைய உள்ளுணர்வு என்னும் புதிய உணர்வை விழிப்படையச் செய்கிறது. அந்த புதிய விழிப்புணர்வு நமக்கு நாம் உடலோ அல்லது மனமோ இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. நாம் நம்முடைய சொந்த எண்ணங்களின், உணர்ச்சிகளின் சாட்சியாக இருக்கலாம். 'ஆன்மாவானது தன்னைப் புலன் களின்மூலம் வெளிப்படுத்திக் கொள்கிறது. புலன்கள் ஆன்மா வின் கருவிகளாக உள்ளன' என்று உபநிஷதம் கூறுகிறது.[3] ஆன்மாவை உடலிலிருந்து பிரிக்க இயலும். மனித வாழ்க்கை யின் வரையறைக்குட்பட்ட தன்மைகளால் உண்மையாக நாம் பிணைக்கப்படவில்லை என்று உணர்வதில் மிகப்பெரிய மகிழ்ச்சி இருக்கிறது.

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.192.
2. மேற்கண்ட நூல், 1.192.
3. கேன உபநிஷதம், 1.2.

நாம் நம்முடைய உண்மையான இயல்பைக் குறித்த உண்மையை மறந்து, நம்மை அகங்காரத்துடன் அடையாளம் கண்டு கொள்ளும் பொழுது நாம் இயற்கையின் விளை யாட்டுப் பொருளாக ஆகிறோம். 'நான்' என்னும் தன்மை நிறைந்த மனிதன், விளையாட்டுத்தனம் மிகுந்த குழந்தையின் கைகளிலுள்ள, விளையாட்டு பந்தைப் போன்றவன் ஆவான். அவனுக்குச் சுதந்திரம் இல்லை. அவன் இயற்கையின் இயக்கும் திறங்களின் தயவில் இருக்கிறான். மிகவும் அகங்காரம் நிறைந்து இருப்பவர்கள் ஆன்மீக வாழ்க்கையை மிகவும் கஷ்டமானது என்று காண்பார்கள். அவர்கள் தங் களுடைய சொந்த கீழான தூண்டுதல்களை மிகவும் மேம் பட்டது என்று தவறாகக் கருதி அவற்றைப் பின்பற்று கின்றனர். அவர்களுக்கு அவர்களுக்குள் உள்ள மன சாட்சிக்குக் கட்டுப்பட்ட நிலையின் 'சிறு அகக் குரலை' கேட்பதற்கு நேரம் இருப்பதில்லை. ஆன்மீகத்தில் துணிந்து இறங்கிப் புறப்பட விரும்பும் அனைவருக்கும், ஒரு குறிப் பிட்ட அளவு அகங்காரத்தைக் குறைத்துக் கொள்வது மிகவும் அவசியமான நிபந்தனையாக விளங்குகிறது. நம்முடைய தெய்வத் தன்மையுடன் கூடிய உள்ளார்ந்த ஆற்றலை அடிப் படையாகக் கொண்ட உயர்ந்த தன்னடக்கம்தான் வெளியிலே போலியாகக் காட்டப்படும் பணிவை விட தேவைப்படு கிறது. பரம்பொருளுக்கு முழுமையாகச் சரணடையும் மனப்பான்மையும், உணர்ச்சி வசப்படாத தன்மையும் ஒழுக்கமுறை சார்ந்த படிப்பினையைச் சீர்மை செய்து ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையில்லை எனின், ஆன்மீக வாழ்வு மிகவும் கஷ்டமானதாக ஆகிவிடுகிறது. வேறு விதமாகக் கூற வேண்டும் எனின், நம்மீதும் உலகத்தின்மீதும் கடவுளின் மீதும் நாம் கொண்டுள்ள மனப்பான்மையில் ஒரு முழுமையான மாற்றத்தைக் கொண்டுவர நாம் முயற்சி செய்ய வேண்டும்.

பகுதி 2

ஆன்மீகப் பயிற்சி

(i) முன்னேற்பாடுகள் (7-17)

(ii) உத்திகள் (8-26)

7
கூர்மையான கத்தியின் மீது நடந்து செல்லுதல்

உபநிஷதம் என்ன அறிவுறுத்துகிறது

உபநிஷதங்களில் ஒரு மெய்ஞ்ஞானி (ரிஷி), ஆன்மீக வழியைப் பின்பற்றிப் பரம்பொருளை உணர்ந்தபிறகு, இச்சொற்களைக் கூறியுள்ளார். 'கூரான கத்தியின் முனைமீது நடப்பது போன்று இறைநெறி கடினமானது என்று சான்றோர்கள் கூறுகின்றனர்'.[1] எப்படியிருப்பினும், சரியான, முறையான பயிற்சியால், மிகக் கடுமையான வழியை பின்பற்றி மிக உயர்ந்த இலட்சியத்தை அடையலாம். இதைத் தான் பழங்காலத்திலிருந்து ஹிந்துக்களின் தத்துவ, மற்றும் ஆன்மீக ஞானிகள் கண்டுபிடித்தனர். பரம்பொருளின் இடத்தை நோக்கிப் புறப்படும், கஷ்டமான ஆனால் மிகவும் முக்கியமான பயணத்தைத் தொடங்கும்முன், எந்த வகை யான பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நாம் எதிர் பார்க்கப்படுகிறோம்? மீண்டும் உபநிஷதத்தை மேற் கோளாகக் காட்டுவோம்.

'ஆன்மா தேரில் பயணம் செய்பவன், உடம்பு தேர், புத்தியானது தேரோட்டி, மனம் என்பது கடிவாளமாகும், புலன்கள் குதிரைகள் ஆகும். உலகப் பொருட்கள் அந்தக் குதிரைகள் செல்வதற்கான பாதைகள் ஆகும். உடல், புலன்கள், மனம் ஆகியவற்றுடன் கூடிய ஜீவன் (ஆன்மா) வாழ்க்கையை அனுபவிப்பவன் என்று மகான்கள் கூறு கின்றனர்.

1.க்ஷுரஸ்ய தாரா நிசிதா துரத்யயா துர்கம் பதஸ்தத்கவயோ வதந்தி ॥
—கட உபநிஷதம், 1.3.14.

யார் விழிப்பு அடையாமல் இருக்கிறானோ பிளவு பட்ட மனத்தை உடையவனோ, அவனுடைய புலன்கள் தேரோட்டிக்கு அடங்காத குதிரைகள்போல வசப்படாமல் போகின்றன. யார் விழிப்படைந்திருக்கிறானோ, பொருந்திய மனத்தை உடையவனோ, அவனுடைய புலன்கள் தேரோட்டிக்கு அடங்கிய குதிரைகளைப்போல வசப்படு கின்றன. யார் விழிப்படையாமல், அடங்காத மனத்தை உடையவனாகத் தூய்மை இல்லாதவனாக இருக்கிறானோ அவன் இறை நிலையை அடைய மாட்டான். உலகியலிலும் ஆழ்கிறான். பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியில் அகப்பட்டுக் கொள்கிறான். யார் விழிப்படைந்தவனாக, அடங்கிய மனத்தை உடையவனாக எப்பொழுதும் தூயவனாக இருக்கின்றானோ, அவன் எங்கே சென்றால் மீண்டும் பிறப்பு இல்லையோ, அந்த இறைநிலையை அடைகிறான். யார் விழிப்புற்ற தேராட்டியுடனும், கடிவாளமாகிய மனத்தைக் கைப்பற்றிய வனாகவும் இருக்கிறானோ, அவனே பாதையின் முடிவை அடைகிறான். அது இறைவனின் மேலான இருப்பிடமாகும்.

புலன்களைவிட உலகப் பொருட்கள் வலிமை வாய்ந் தவை. பொருட்களை விட மனம் வலிமை வாய்ந்தது. மனத்தைவிடப் புத்தி வலிமை வாய்ந்தது. மகிமை வாய்ந்த தான ஆன்மா புத்தியைவிட வலிமை வாய்ந்தது. மகிமை வாய்ந்த ஆன்மாவை விட அவ்யக்தம் வலிமை வாய்ந்தது. அவ்யக்தத்தைவிட இறைவன் வலிமை வாய்ந்தவர். இறை வனைவிட வலிமை வாய்ந்தது எதுவும் இல்லை. அவரே அறுதிப் பொருள். அவரே கடைசிப் புகலிடம். இந்த ஆன்மா எல்லா உயிர்களிலும் மறைவாக உள்ளது. வெளிப்பட்டுத் தெரிவதில்லை. ஆனால் ஒருமைப்படுத்தப்பட்ட, நுண்ணிய புத்தியால் ரிஷிகள் இந்த ஆன்மாவைக் காண்கிறார்கள். அக நாட்டம் உடையவன் பேச்சை மனத்தில் ஒடுக்க வேண்டும். மனத்தை, விழிப்புற்ற புத்தியில் ஒடுக்க வேண்டும். புத்தியை மகிமை வாய்ந்த ஆன்மாவில் ஒடுக்க வேண்டும். ஆன்மாவை அமைதியின் இருப்பிடமான இறைவனில் ஒடுக்க வேண்டும்.'[1]

---

1. கட உபநிஷதம், 1.3.3-13.

மற்றும் இங்கு குரு சீடனுக்கு அறிவுறுத்துகிறார். 'எழுங்கள், விழியுங்கள், தகுந்த குருவை அடைந்து அனுபூதி பெறுங்கள். ஆன்மாவை உணருங்கள். ஒலி, தொடு உணர்ச்சி, காட்சி, சுவை, மணம் என்று புலன்களால் உணரக் கூடிய அனைத்தையும் கடந்த, அழிவற்ற, என்றென்றும் உள்ள, தொடக்கமற்ற, முடிவற்ற, புத்தியைவிட மேலான, நிலைத்த இறைவனை அனுபூதியில் உணர்பவன், மரணத்தின் பிடியிலிருந்து விடுபடுகிறான்.[1]

நாம் இந்தப் பகுதிகளைப் படிக்கும்பொழுது, நம்முடைய ஆன்மீக ஆச்சாரியர்கள், இந்த மிக உயர்ந்த இலட்சியத்தையும் மற்றும் சரியான தகுதிகளை முயன்று பெற வேண்டிய அவசியத்தையும் ஏன் நம்முன் வைத்திருக் கிறார்கள். என்பதும் புரிகிறது. அது இல்லாமல் எந்த ஆன்மீக உண்மையையும் உணரவியலாது. அது இல்லாமல் ஆன்மீக வழியும்கூட ஆபத்து நிறைந்ததாகக் காணப்படும். ஆனால் தேவையான பயிற்சியுடன், ஒருவர் இறுதியாக இலட்சியத்தை அடையலாம்.

கத்திமுனையின்மீது நடப்பதற்குப் பயிற்சி தேவை

மனிதர்களில் பலரும் ஆன்மீக வழியைப் பின்பற்று வதற்குப் பயப்படுகிறார்கள். ஆனால் நமக்கு உண்மையான பயிற்சி இருந்தால், நாம் பயப்படவே வேண்டாம். ஒரு மோட்டார் வண்டியை ஓட்டுவது அத்தனை சுலபமான செயலாகுமா? பயிற்சியில்லாத ஒருவனால் ஆகாய விமானத்தை ஓட்ட இயலுமா? அல்லது பனிக்கட்டியின் மீது சறுக்கிச் செல்ல இயலுமா? இயலாது. இவையனைத்தும் ஆபத்தான விளையாட்டுக்கள் மற்றும் பொழுது போக்குகள் ஆகும். ஆனால் ஒருவர் சரியான பயிற்சியைப் பெற்றிருந் தால், இவ்வனைத்தையும் ஒருவரால் கட்டுப்பாட்டுடனும் நயத்துடனும் செய்யவியலும். நாம் இந்த உலகத்தில் சரியான முறையில் வாழ்வதற்கும், ஆன்மீகத்தில் முன்னேற்றம்

---

1. கட உபநிஷதம், 1.3.14,15.

அடையவும் ஆன்மீகப் பயிற்சி அதிகமாகத் தேவைப்படு கிறது. 1882-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், நவீன இந்தியாவின் மிகச் சிறந்த ஞானி, தீர்க்கதரிசியான ஸ்ரீராமகிருஷ்ணர் ராகாலுடனும் (பின்னர் பிரம்மானந்தரானவர்) வேறு சில சீடர்களுடனும் ஸர்க்கஸ் விளையாட்டைப் பார்க்கச் சென் றார். ஸர்க்கஸ் நிகழ்ச்சியில் பலவகையான வியக்கத்தக்க செயல்கள் இடம் பெற்றன. குருதேவரை, இவற்றில் ஒரு நிகழ்ச்சி மிகவும் கவர்ந்தது.

ஒரு வட்டத் தடத்தில் ஒரு குதிரை ஓடியது. அந்தத் தடத்தின்மீது இடைவெளிவிட்டு மேலிருந்து இரும்பு வளையங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. ஸர்க்கஸில் சவாரி செய்பவர் ஒரு ஆங்கிலப் பெண்மணியாவார். அவர் ஒரு காலில் குதிரையின் மீது நின்று கொண்டிருந்தார். குதிரை வளையங்களுக்கு அடியில் போகும்பொழுது, அவர் அந்த வளையங்களின் உள் வழியாகக் குதித்து ஒவ்வொரு முறை யும் குதிரையின் முதுகில் ஒரு கால் வைத்து இறங்கினார். அந்தக் குதிரை முழு வட்டத் தடத்யையும் பலமுறைகள் சுற்றி ஓடியது. ஆனால் அந்தப் பெண்மணி ஒருமுறை கூடக் குதிரையைத் தவறவிடவில்லை. மற்றும் அவருடைய சமநிலையை இழக்கவில்லை. கண்டிப்பாக இந்த சாதனை யைப் புரிவதற்குப் பல ஆண்டுகளாகச் செய்த பயிற்சியே காரணமாக உள்ளது. குருதேவர் அதை ரசித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கு இருந்து ஒரு பக்தரிடம் கூறினார்.

'அந்தக் குதிரை மின்னலைப் போல ஓடியபொழுது அந்த ஆங்கிலப் பெண்மணி, அந்தக் குதிரையின்மீது எப்படி ஒரு காலில் நின்று கொண்டிருந்தாள் என்பதை நீ பார்த்தாயா? அந்த வியப்பூட்டும் செயல் எத்தனை கஷ்டமானதாக இருந் திருக்க வேண்டும்! அவள் நீண்ட காலத்திற்குப் பயிற்சி பெற் றிருக்க வேண்டும். மிகச் சிறிய கவனக்குறைவு ஏற்பட் டிருப்பினும் அவள் தன்னுடைய தோள்களையும், கால்களை யும் உடைத்துக் கொண்டிருக்கக் கூடும். கொல்லவும்

பட்டிருக்கலாம். ஒருவர் இல்லற வாழ்வை மேற்கொள்ளும் பொழுதும் அத்தகைய இக்கட்டை எதிர் கொள்ள வேண்டி வரும். கடவுளின் அருளால் சிலர் அதில் வெற்றியடை கிறார்கள். மற்றும் அவர்களின் ஆன்மீகப் பயிற்சியின் பய னாலும் வெற்றியடைகிறார்கள். ஆனால் பெரும்பான்மை யோர் தோல்வியடைகின்றனர். உலக வாழ்வை மேற் கொண்டு அவர்கள் மேலும்மேலும் ஈடுபாடு உடையவர் களாக ஆகின்றனர். அவர்கள் உலகப் பற்றுக்களில் மூழ்கி, மரணவேதனையை அடைகின்றனர். ஜனகரைப் போன்ற ஒரு சிலரே, இல்லறத்தில் இருந்துகொண்டே ஒழுக்கம் மிகுந்த கண்டிப்புடன் கூடிய எளிய வாழ்வின் சக்தியால் ஆன்மீக வாழ்வை வாழ்ந்து வெற்றியடைந்தனர். எனவே ஆன்மீகப் பயிற்சி என்பது மிகவும் அவசியமானதாகும். இல்லை யெனில், இந்த உலகத்தில் ஒருவரால் சரியானமுறையில் வாழ இயலாது.[1]

அதுமட்டுமின்றி, ஆன்மீகப் பயிற்சியால் ஒருவருக்குக் கிடைக்கப் பெறும் அமைதியும், சமநிலையும் கிடைக்கப் பெறாமல் ஒருவர் பலவகையான வேதனைகளால் துன்ப மடைய நேரிடலாம்.

வாழ்க்கையின் பல துறைகளில் இருப்பது போன்றே ஆன்மீக வாழ்விலும் தவிர்க்கப்பட வேண்டிய ஆபத்துக் களும், வெல்லப்பட வேண்டிய தடைகளும் உள்ளன. ஆன்மீக வாழ்வில் மிகப் பெரிய தடை எது என்று உனக்குத் தெரியுமா? காலத்திற்கு ஏற்ற நாகரீகமான சமயவாழ்வை வாழும் மனப்பான்மைதான் மிகப் பெரிய தடையாகும். ஆன்மீகத்தில் ஒருவருக்குத் தீவிரமான நாட்டம் ஏற்படும் வரையிலும் அவ்விதம் இருக்கவியலும். ஆனால் இந்தத் தீவிரமான நாட்டம் மனத்தில் தோன்றியவுடன், மெய்ப் பொருளை உணர வேண்டும் என்று ஒருவர் ஏங்குவார். அப் பொழுது ஒருவரால் அமைதியாக இருக்கவியலாது. அப் பொழுது ஒருவர் ஆன்மீகப் பாதையைப் பின்பற்றுவதற்குத்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.160.*

தூண்டப்படுகிறார். அந்தத் தூண்டுதல் ஒருவரை இறுதியான இலட்சியத்திற்கு மிக அருகில் அழைத்துச் செல்கிறது. நம்முடைய ஆச்சாரியர்கள் மனிதப் பிறவி மிகப் பெரிய உரிமைப்பேறு என்று நமக்குக் கூறி உள்ளனர். இத்தகைய மனிதப் பிறவியை அடைந்துவிட்டு ஒருவன் விலங்கைப் போல வாழ்ந்தால் அது பரிதாபத்திற்கு உரியதாகும்.

ஒருவன் எண்ணற்ற புத்தகங்களைப் படிக்கலாம். ஒருவன் கணக்கற்ற உபன்னியாஸங்களைக் கேட்கலாம். ஆனால் ஒருவனுடைய மனம் ஆன்மீக இலட்சியத்தில் நாட்டம் கொள்ளவில்லை என்றால் எல்லாமே வீணாகி விடும். எனவே இந்தியாவில் ஆன்மீக ஆச்சாரியர்கள் ‘உன்னுடைய சொந்த மனத்தின் தயவை நீ வெற்றி கொள்ள வேண்டும்’ என்று நமக்குக் கூறுகின்றனர். கடவுளின் அருள் நமக்கு இருந்தால் மட்டும் போதாது. ஆனால் குருவின் அருளும் நமக்கு இருக்க வேண்டும். பலவகையான ஆன்மீக போதனைகளைப் பெறும் பாக்கியம் நமக்கு இருக்கலாம். ஆனால் நம்முடைய சொந்த மனத்தின் தயவு நமக்கு இல்லை எனின் எல்லாமே ஒன்று மற்றதாகிவிடும். இந்நிலையில் உண்மையின்பால் திறந்த மனப்பான்மை இருந்தாலும் ஆன்மீக இலட்சியத்திற்காக உண்மையான ஆர்வத்தை நாம் பெற்றிருந்தாலும், பயிற்சி என்பது அவசியமானதாகும். உலக வாழ்க்கைத் தொடர்பான குறிக்கோள்களிலும் நல்ல பயிற்சி அவசியமானதாகும். அவசியமான கல்வியும், பயிற்சியும் இன்றி நம்மால் எத்தகைய செயலையும் செய்ய இயலாது. ஆன்மீக வாழ்விற்கும் அதுவே உண்மையானதாகும்.

இந்த கருத்தை விளக்குவதற்கு இங்கு ஒரு சிறிய கதை உள்ளது. ஒரு இளைஞன் எத்தகைய முறையான பயிற்சி யுமின்றி செயலாட்சித் துறை சார்ந்த (executive) பணிபுரிய மிகவும் ஆவலுடன் இருந்தான். மற்றும் அவன் ஒரு வங்கிக்குச் சென்றான். அங்கிருந்த துணைத் தலைவர்களில் ஒருவரைப் பார்த்து அவரிடம், தான் ஒரு நல்ல வேலையைப் பெற விரும்புவதாகக் கூறினான். செயலாட்சித் துறையைச் சார்ந்த பணியை விரும்புவதாகக் கூறினான். அந்த

இளைஞனைப் பேட்டி கண்டு கொண்டிருந்த உயர் அதிகாரி, 'நான் வருந்துகிறேன், எங்களிடம் எதுவும் இல்லை. எங்களிடம் ஏற்கனவே 12 துணைத் தலைவர்கள் உள்ளனர்' என்று கூறினார். அந்த இளைஞன், உறுதி தளராமல், 'எனக்கு எண்களைக் குறித்த மூட நம்பிக்கை இல்லை. பதிமூன்றாவதாக வருவதை நான் ஆட்சேபிக்கவில்லை' என்று பதில் கூறினான்.

நல்லது. துணைத் தலைவர்கள் அத்தகைய முறையில் உருவாக்கப்படுவது இல்லை. அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதைப் போன்றே நீ மிக உயர்ந்த இலட்சியத்தை அடைய விரும்பினால், 'நீ கத்தி முனையின் மீது' நடக்க விரும்பினால் உனக்குத் தனிப்பட்ட பயிற்சி அவசியமாகிறது. பயிற்சியில்லாமல் நீ முயற்சி செய்தால், நீ துண்டு துண்டாக வெட்டப்பட்டுவிடுவாய். ஆனால் உனக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டிருந்தால் உனக்கு முற்றிலும் பயம் இருக்காது. மற்றும் கத்தி முனையின் மீது நடப்பதில் உன்னால் மகிழ்ச்சியையும் காண இயலும். வலிமையற்ற மின்சாரக் கம்பியில், மிகுதியான மின் வலியளவு மின் ஓட்டம் செலுத்தப்பட்டால் என்ன ஆகும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மின்சாரக் கம்பி எரிந்துவிடும். அதைப்போன்றே, எத்தகைய முன்னேற்பாடுகளும் இன்றி நாம் பரம்பொருளிடம் ஒரே சுருதியில் இருக்க விரும்பினால், நம் உடலால் நம் நரம்புகளால் நம் மனத்தால் தாங்கவியலாத அளவிற்கு மிகப் பெரிய அழுத்தம் இருக்கும். இது உண்மையாகும். எனவே ஆன்மீக வழியைப் பின்பற்ற வேண்டுமென்றால், நமக்கு ஒரு உறுதியான உடலும், உறுதியான மனமும், புத்தியும், மற்றும் உறுதியான புலன்களும் அவசியமாகிறது. இல்லையெனின் நம்முடைய எல்லா முயற்சிகளும், தோல்வியில் முடியும்.

நம்முள் உள்ள கன்னிமுகச் சிங்கச் சூரணங்கு

உயிர் நூலைச் சார்ந்த, 'வாழ்க்கைப் போராட்டம்' மற்றும் 'தகுதியுடையவை தப்பிப்பிழைத்தல்' என்னும் விதிமுறைகள் ஆன்மீக உலகத்திற்கும் பொருத்தமுறத்

நிகழ்கின்றன. விலங்குகளின் உலகத்தில், விலங்குகள் விலங்குகளுடன் சண்டையிடுகின்றன. தாழ்ந்த படியிலுள்ள மனிதர்களின் உலகத்தில், மனிதர்கள், மனிதர்களுடன் சண்டையிடுகின்றனர். மிகவும் வலிமையுடையவன் வாழ் கிறான். ஆன்மீக வாழ்வுத் துறையில், மனிதனுக்கும் மனித னுக்கும் இடையில் சண்டை நிகழ்வதில்லை. ஆனால் மனிதனின் உயர்ந்த இயல்புகளுக்கும் தாழ்ந்த இயல்பு களுக்கும் நடுவில் நிகழ்கிறது. அது என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம். நம்முடைய உயர்ந்த இயல்பும் தாழ்ந்த இயல்பும் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டே, நமக்கு முடிவற்ற துன்பத்தை அளிக்கின்றன.

கிரேக்கப் புராணத்தில் 'கன்னிமுக சிங்கச்சூரணங்கு' (பெண்முக சிங்க உருவச்சிலை) என்பது ஒரு கற்பனை விலங்காகும். அதற்குச் சிங்கத்தின் உடலும், ஒரு பெண்ணின் தலையும் இருக்கும். தீப்ஸ் பகுதியில் (Thebes) வாழ்பவர் களின் 'சிங்கச்சூரணங்கு' அப்பகுதியில் வாழ்பவர்களை, ஒரு விடுகதையின் புதிரை விடுவிக்கும்படிக் கேட்குமாம். சரியான பதிலைக் கொடுக்க முடியாதவர் இறக்க வேண்டும். ஆனால் சரியான பதிலை யாராவது கொடுத்தால் தீப்ஸின் அரியணையில் அமர வேண்டும் என்னும் கொடிய கட்டுப் பாட்டுவிதியை ஒப்பந்தம் செய்துகொள்ளும் என்று கூறப்படு கிறது. 'காலையில் எது நான்கு கால்களுடன் நடக்கிறது? பகலில் இரண்டு கால்களுடனும், மாலையில் மூன்று கால்களுடனும் எது நடக்கிறது' என்பதுதான் அவள் கேட்ட கேள்வியாகும். சரியான பதிலை கொடுக்காத பலரை அவள் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டாள். இடிபஸ் (Oedipus), மனிதன் குழந்தையாக இருக்கும்பொழுது நான்கு உறுப்புக் களால் தவழ்கிறான், அவனுடைய வாழ்க்கையின் தொடக்கத் தில் நிமிர்ந்து நடக்கிறான். மற்றும் வயோதிகப் பருவத்தில் ஒரு கோலைக் பயன்படுத்துகிறான்' என்னும் பதிலைக் கூறி விடுகதையின் புதிரை அவிழ்த்தான் என்று கூறப்படு கிறது. சரியான பதிலைக் கேட்டவுடன் சிங்கச்சூரணங்கு, கடலில் குதித்து தன் உயிரைப் போக்கிக்கொண்டாள்.

தீப்ஸ் நாட்டின் மன்னனாக இடிபஸ் ஆனான் என்று நாம் அறிகிறோம்.

எகிப்திய புராணத்தில் கன்னிமுகச்சிங்கச்சூரணங்கிற்கு சிங்கத்தின் உடலும் ஒரு ஆடவனின் தலையும் இருக்கும். பிற்காலத்திலிருந்த ரோமானியர்களின் சிங்கச்சூரணங் கிற்குச் சில சமயங்களில் ஆணின் தலையும், சில சமயங்களில் பெண்ணின் தலையும் இருக்கும். நல்லது கன்னிமுகச்சிங்கச் சூரணங்கு நம் அனைவரின், ஆண்களின், பெண்களின் பிரதி நிதியாக விளங்குகிறது. உண்மையாக ஆண்களும், பெண் களுமான நாம் அனைவரும் விசித்திரமான உயிரினங்கள் தான். நாம் விலங்கு மற்றும் மனிதக் கூறுகளை நம்முடைய இயல்புகளில் கலந்து பெற்றவர்களாக விளங்குகிறோம். மற்றும் இந்தக் கூறுகள் ஆன்மாவை மறைத்து விடுகின்றன. கன்னிமுகச்சிங்கச்சூரணங்கு நம்மிடம் நீ யார்? என்று கேட்கும்பொழுது, நம்மால் பதில் கூற இயலுமா? 'நான் தான் ஆன்மா' என்று நம்மால் பதில்கூற இயலுமாயின் நம்முள்ளே உள்ள கன்னிமுகச்சிங்கச்சூரணங்கு இறந்து விடும். அதன்பிறகு நம்மால் விழிப்படைந்து கொண்டிருக்கிற ஆன்மஞானத்தை உணர இயலும். ஆன்மாவைக் குறித்த உண்மையான மனிதனைக் குறித்த ஞானம் நம்மிடம் தோன்றுவதை உணர இயலும், மற்றும் இந்த விசித்திரமான இயல்புகள், எதிர்களும், புதிர்களும் உள்ள கலவையானது மறைந்து விடும்.

இயலுலக மையத்தைச் சார்ந்திருக்க முயற்சி செய்வாய்

கட உபநிஷதத்தில் நாம் படித்துள்ள ஒப்புமையின் பக்கம் இப்பொழுது திரும்புவோம்.

'ஆன்மா பயணம் செய்பவன் ஆவான். உடம்பு தேர். புத்தி தேரோட்டி. மனம் கடிவாளம் ஆகும். புலன்கள் குதிரைகள் ஆகும்.[1]

---

1. கட உபநிஷதம், 1.3.3,4.

ஆனால் தேரின் உட்புறத்திலே, கூட்டணியைச் சேர்ந்தவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் நாம் அதிர்ச்சியடைவோம். ஆன்மாவானது போதையில் இருக்கிறது என்று நாம் காண்கிறோம். தேரோட்டியான புத்தி உணர்வின்றி விழுந்துள்ளது. கடிவாளமான மனம் மந்த நிலையை அடைந்துள்ளது. புலன்கள் என்னும் குதிரைகள் தறிகெட்டு ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒரு புதிய வழிமுறையை உடனடியாகக் கொண்டு வராவிட்டால் தேருக்கும், குதிரைகளுக்கும், அவைகளின் தலைவனுக்கும் மிகப் பெரிய விபத்து காத்திருக்கிறது. நம்முடைய ஆச்சாரியர்கள், 'அறியாமையின் பொருட்டு தேரின் தலைவனான நம் ஆன்மாவானது தன்னை மிக அதிகமாக புத்தியுடனும், மனத்துடனும், புலன்களுடனும், உடலுடனும் அடையாளம் கண்டு கொண்டுள்ளது. ஆன்மா தன்னை அனுபவிப்பவனாகக் கருதுகிறது. ஆன்மா தன்னுடைய உண்மையான இயல்பை மறந்துவிட்டது' என்று கூறுகின்றனர்.

பழங்காலத்திய யோகாச்சாரியரான பதஞ்சலி முனிவர் அறியாமையானது ஆன்மாவை, அதனுடைய உண்மையான ஆன்மீக இயல்பை மறக்கும்படிச் செய்கிறது என்று நமக்குக் கூறுகிறார்.[1] அதன்பிறகு ஆன்மாவானது, தவறான கனவுகளைக் காணத் தொடங்குகிறது. கடந்தகால நினைவுகளில் நிலைகொண்டும் தன்னுடைய நேரத்தைப் போக்குகிறது. ஒவ்வொரு கணமும் ஆன்மா தன்னைவிட்டு வெளியே ஓட விரும்புகிறது. அறியாமை அதைத்தான் செய்கிறது. அறியாமை அகங்காரத்தையும் பற்றுதலையும் வெறுப்பையும் தோற்றுவித்து, மனிதனிடம் மிகப் பெரிய அளவில் வாழ்க்கையைப் பற்றிக் கொள்வதையும் ஏற்படுத்துகிறது. வாழ்க்கையை இவ்விதம் பற்றிக் கொண்டு இருப்பதால், அவன் விசித்திரமான முறைகளில் நடந்துகொள்கிறான்.

நம்முடைய கீழான பற்றுக்களை இன்னும் மிகுதியாக ஆக்கிக் கொள்வதற்கு, நாம் மற்றவர்களுக்குத் தீங்கு

1. பதஞ்சலி யோக சூத்திரங்கள், 2.5,24.

இழைப்பதைப் பொருட்படுத்துவது இல்லை. நாம் பொய் பேசுகிறோம். நாம் சில நேரங்களில் மற்றவர்களுக்கு உரியதை திருடவும் விரும்புகிறோம். நாம் கட்டுப்பாடற்ற, தான்தோன்றியான புலனுணர்வை அடிப்படையாகக் கொண்ட வாழ்வை வாழ்கிறோம். மற்றும் பல சமயங்களில், புல்லுருவியைப் போல மற்றவர்களை மிகவும் அதிகமாகச் சார்ந்தும் வாழ்கிறோம். ஆனால் நாம் ஆன்மீக வாழ்வைத் தொடங்கும்பொழுது, மாறுதலை ஏற்படுத்திக் கொள்ளத் தொடங்க வேண்டும். நாம் தீமை செய்யாமல் இருத்தல், பரிவு, நம்பும் தன்மை, பேராசையற்ற தன்மை, தூய்மை, தற்கட்டுப்பாடு மற்றும் தற்சார்பு போன்றவற்றை எப்படிக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் உடலளவிலும் மனத்தளவிலும் தூய்மையாக இருப்பதற்கு மிகவும் சோம்பேறித் தன்மை உடையவர்களாக இருக்கிறோம். நாம் எப்பொழுதும் நிறைவற்றதன்மை நிறைந்தவர்களாக இருக்கிறோம். நாம் அனைவருக்கும் எதிராகக் குற்றம் கண்டுபிடித்து குறை கூறுபவர்களாக இருக்கிறோம். மற்றும் சொகுசான வாழ்க்கையை வாழ விரும்புகிறோம். தற்காலத்தில் நாம் அதிகமான அளவில் புத்தகங்களைப் படிக்கிறோம். ஆனால் நம்முடைய வாசிப்பு மேலோட்டமானதாக உள்ளது. நாம் நம்முடைய மூளையை, மற்றவர்களைக் குறித்த எண்ணங்களால் முடிவற்று நிரப்பு கிறோம். மற்றும் இத்தகைய எண்ணங்கள், அன்னிய விஷய மாக நிலைத்து மனத்தில் செரிக்காத தன்மையை ஏற்படுத்து கிறது. மற்றும் நம்முடைய முழுவாழ்வும் அகங்காரம் நிறைந்ததாக, 'தான்' என்னும் தன்மை மேலோங்கியதாகக் காணப்படுகிறது.

நாம் என்ன செய்ய வேண்டும்?

நம்முடைய ஆச்சாரியர்கள் கூறுகிறார்கள்.

'மனத்தையும், உடலையும் தூய்மையாக வைத்துக் கொள்ள முயற்சி செய்வாய். எப்பொழுதும் மகிழ்ச்சியுட னிருக்க முயற்சி செய்வாய். நோன்பு, தவம் போன்றவற்றைச்

சிறிதளவு கடைப்பிடிக்க முயற்சி செய்வாய். மிகவும் மென்மையாக இருக்க வேண்டாம். மேலோட்டமாகப் படித்து, மனத்தை ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருளுக்கு அலைவதற்கு இடம் அளிக்காமல் ஆழமாகப் படிக்கவும், சிந்திக்கவும் வேண்டும். அகங்காரமாக இருப்பதை விட உன்னுடைய செயல்களின் உழைப்பின் எல்லாப் பயன்களையும் பரம்பொருளுக்கு அர்ப்பிப்பாய். பரம்பொருள் எல்லோரையும் எப்பொழுதும் வழிநடத்திச் செல்பவராவார். மற்றும் அவர் அனைவரிடமும் குடிகொண்டுள்ளார்' ஆனால் நாம் இந்த அறிவுரையைக் கேட்பது இல்லை. ஆனால் நாம் பொருத்தமற்ற, முரண்பாடான எண்ணங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் மனத்தில் இடமளிக்கிறோம். நாம் பெரும்பாலும் பண்பற்ற செயல்களையே செய்கிறோம். நாம் ஆன்மீக வாழ்வு வாழத் தொடங்கியிருந்தாலும், கெட்ட உணர்ச்சிகளால் ஏற்படுத்தப் படும் பலவகைப்பட்ட நோய்களுக்கு இரையாகிறோம். நாம் சில நேரங்களில் உதவியற்ற நிலையில் இருப்பதை உணர்கிறோம். நம்மிடம் எந்த ஆற்றலும் எஞ்சி இருப்பது இல்லை. நாம் உறுதியில்லாமல் ஊசலாடுகிறோம். நம்மால் முடிவுகளை எடுக்க முடிவதில்லை. நம்முடைய உடலிலும் மனத்திலும் சோர்வு நிறைந்துள்ளது. இப்பொழுது இந்த அனைத்தும் மாற வேண்டும். நாம் திருந்தி புது வாழ்வு வாழ முயற்சிக்க வேண்டும். பதஞ்சலி, 'இத்தகைய தடைகள் ஏற்படும் பொழுதெல்லாம் கடவுளைப் பற்றி நினைக்க முயற்சிப்பாய்' என்று கூறுகிறார்.[1] ஒரு உயர்ந்த மனநிலையை உன்னிடம் ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். அதனால் நீ சோம்பேறித்தனம், உறுதியற்ற ஊசலாடும் தன்மை போன்றவற்றிலிருந்து மேம்பாடு அடைந்தால் அது உன்னுடைய தற்பொழுதுள்ள வாழ்க்கையைச் சிறப்பிக்கச் செய்யும். ஆனால் நாம் இங்கும் உறுதி அற்றவர்களாக, நம்ப முடியாதவர்களாக இருக்கிறோம். நாம் அனைவரும் அந்த ஒரு மிகப் பெரிய தொல்லையால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் நம்மை முழுமையாக நம்ப

---

1. பதஞ்சலி யோக சூத்திரங்கள், 1.32.

இயலாதவர்களாக இருக்கிறோம். அதுதான் மிகப் பெரிய இடர்ப்பாடாக உள்ளது.

பதஞ்ஜலி இந்தத் தடைகள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக வெல்ல வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறார். 'யோகத்திற்கு எதிரான எண்ணங்களைத் தடுக்க, அவற்றிற்கு நேர்மாறான எண்ணங்களைக் கொண்டு வர வேண்டும். கெட்ட எண்ணங்களுக்கு எதிரான நல்ல எண்ணங்களை யும் வெறுப்பிற்கு எதிராக அன்பையும் கொண்டுவர வேண்டும்.'[1] ஆனால் நாம் அத்துடன் நின்றுவிடக் கூடாது. மனத்தைத் தூய்மைப்படுத்துவதில் ஒரு குறிப்பிட்ட மட்டத்தை அடைந்ததும் இயலுலக அளவில் நோட்டத்தை வளர்த்துக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். மேன்மேலும் உன் இதயத்தில் குடிகொண்டுள்ள பரம்பொருளைக் குறித்து நினைப்பதற்கு முயற்சி செய்வாய். கடவுளின் பெயரைப் பாராயணம் செய்வாய். ஆச்சாரியர்களுக்கெல்லாம் ஆச்சாரிய ரான கடவுளின் மீது தியானம் செய்வாய். உன்னுடைய தற்பொழுதைய நிலையற்ற தன்மையிலிருந்து உன்னால் மேம்பட்டு உயர இயலும் என்பதை நீ காண்பாய்.[2] கடவுளைப் பற்றி நினைப்பதால், ஒருவருக்கு கடவுளின் இயல்பில் ஏதாவது ஒன்றைப் பெறவியலும். கடவுளின் நாமத்தைப் பாராயணம் செய்வதில் முழுமையடைவதன் மூலமும், தியானத்தின் மூலமும் பரம்பொருள் வெளிப்படத் தொடங்குகிறது. அதன்பிறகு ஒருவர் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இரண்டறக் கலப்பதில் வெற்றியடைகிறார்.

குறைந்தபட்ச ஒழுக்கப் பண்புகள் தேவை

உபநிஷதங்களின் ஆச்சாரியர்கள் நம்மிடம் இதே போன்ற முறையில் பேசுகின்றனர். இந்த முனிவர்கள் தங் களைக் குறைபாடுகளிலிருந்தும், மாசுகளிலிருந்தும் விடு வித்துக் கொண்டு, இதயத்தில் குடிகொண்டுள்ள, ஒளியுடன்

---

1. பதஞ்ஜலி யோக சூத்திரங்கள், 2.33.
2. மேற்கண்ட நூல், 1.28,29.

கூடிய பரம்பொருளை உணர்ந்துள்ளனர். வேதாந்ததைப் போதித்த ஆச்சாரியர்கள் யோகாச்சாரியர்களைப் போல வெகு நுணுக்கமாக ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்கள் நாம் நல்ல உடல்களையும் உறுதிமிக்க ஆரோக்கியமான புலன் களையும், மற்றும் தூய்மையான, ஒருமுகப்பட்ட மனத்தை யும் பெற்றிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவையில்லாமல் ஒருவனால் ஆன்மீக வழியைப் பின்பற்று வதில் ஒருபொழுதும் வெற்றி அடைய இயலாது. ஆன்மீக உலகத்தில் அனுபவபூர்வமாக எதையாவது சாதிக்க இயலாது.

ஆச்சாரியர்கள் அடிக்கடி மனத்தின், மற்றும் புலன்களின் குறைபாடுகளைப் பற்றிப் பேசுகின்றனர். உடலானது இசை வுடைமை அற்று விளங்குகிறது. உடலிலுள்ள பல்வேறு உறுப்புக்கள் சரியான முறையில் செயல் ஆற்றுவது இல்லை. அவை ஒரு பொருத்தமுடைய தன்மையில் செயல்படுவது இல்லை. புலன்கள் தங்களுடைய பொருட்களை நோக்கி ஓடும் தன்மையைப் பெற்று அவைகளுடன் தொடர்பு கொள் வதைப்போன்ற மற்ற குறைபாடுகளும் உள்ளன. மேலும் ஆசை, சந்தேகம், தயக்கம், சோர்வு, ஒருமுனைப்பாடு அற்ற நிலை போன்ற மனப்பிணிகளும் உள்ளன. இவை மனத்தைக் கறைப்படுத்துகின்றன. தவறாகப் புரிந்து கொள்ளுதல், அதிக மான தற்பெருமை, பொருட்களைத் தவறான பார்வையில் கண்டு தவறாகப் புரிந்துகொள்ளுதல் போன்ற வேறு குறை பாடுகளும் மனத்திற்கு உள்ளது. இப்பொழுது இந்த எல்லாக் குறைபாடுகளும் நீக்கப்பட வேண்டும். எனவே இங்கும் யோகாச்சாரியர்களைப் போல வேதாந்தத்தைப் போதிக்கும் ஆச்சாரியர்களும், குறைந்த அளவில் சில குறிப்பிட்ட ஒழுக்கம் மற்றும் ஆன்மீகத் தகுதிகளைப் பெற்றிருக்க முயற்சி செய்ய வேண்டும். பாகுபடுத்திக் கண்டறியும் தன்மையைக் கற்றுக் கொள்ள வேண்டும். தெளிவாகச் சிந்திக்க வேண்டும். எது உண்மையானது, எது உண்மையற்றது, எது மாறுபடும் தன்மை உடையது, எது நிலைத்து இருப்பது, எது சில நாட்களுக்கு மட்டுமே இருப்பது, எது எப்பொழுதும்

இருப்பது போன்றவற்றை கண்டு கொள்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். உன்னால் எந்த அளவிற்கு இயலுமோ, அந்த அளவிற்கு மனம், மற்றும் புலன்களின் கட்டுப் பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். நீ எவற்றுடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று விரும்புகிறாயோ, அவற்றிடமிருந்து உன்னை உள்வாங்குவதற்கு நீ கற்றுக் கொள்ள வேண்டும். மேம்பட்ட விடாமுயற்சியையும், ஆழ்ந்த நம்பிக்கையையும் கைக்கொள்ள வேண்டும். உன் னுடைய உண்மையான இயல்பின்மீதும், கடவுள்மீதும், நீ பின்பற்றும் அறிவுரைகளின் மீதும் உண்மையை உணர்வதில் உனக்கு உள்ள திறமையின் மீதும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் மனத்தை ஒருமைப்படுத்த வல்ல எளிமையான வழிமுறைகளைப் பயிற்சி செய்வதற்கு முயற்சிக்க வேண்டும்' என்று நமக்கு அறிவுறுத்துகின்றனர். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப்போல எல்லாக் காலங் களிலும், எல்லாச் சமயங்களிலும் எல்லா ஆன்மீக ஆச்சாரியர் களும் தூய்மையாக இருப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நமக்குக் கூறுகின்றனர். கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த தீர்க்கதரிசிகள் இதைத் தூய்மை செய்தல் என்று அழைக்கின்றனர். இதுதான் முதல் அடியாகும். ஆன்மீக வழியை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கு அடிப் படையான குறைந்த அளவு ஒழுக்கப்பண்புகள்தான் நமக்கு அவசியமானதாகும்.

தேவை—புற அழகல்ல—அகஅழகு

ஆன்மீக வாழ்வில் மிக முக்கியமாகக் கருதப்படுவது எது? நம்முடைய ஆச்சாரியர்கள், நம்முடைய புற உடலின் அழகிய வடிவமில்லை. ஆனால் மனத்தின் அழகும், மனத்தின் அமைதியுமே என்று நமக்குக் கூறுகின்றனர். வாழ்க்கையின் மிகவும் ஆழமான புதிரை, ஊடுருவிச் செல்லும் மனத் திறமையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நமக்கு அக அழகு வேண்டும். நீதி நெறி முறைகள், ஒழுக்கத்தைப் பின்பற்றும் அழகு வேண்டும்.

ஜனாதிபதி லிங்கனைக்குறித்த ஒரு சிறு கதை உள்ளது. அவர் நேர்த்தியான உருவமற்றவராக இருந்தார். ஒருமுறை பிலடெல்பியாவைச் சேர்ந்த கட்டளைப் பேராளர்குழு (delegation) அவரைச் சந்திக்கச் சென்றனர். அவர்களில் ஒரு உறுப்பினரை அவர்கள், 'உங்களுடைய மிக அழகிய உருவப் படத்தை வரைந்து நம்முடைய சங்கத்தின் அறைக்குப் பரிசாகக் கொடுக்கும் அளவிற்கு நம்நல விரும்பியாக இருக் கிறார்' என்று அறிமுகப்படுத்தினர். ஜனாதிபதி லிங்கன் அதைப்பற்றிச் சிந்தித்து விட்டு, ஓவியம் வரைந்தவரை நோக்கித் திரும்பி, 'ஐயா, என்னுடைய அந்த உருவப்படத்தை வரைவதற்கு, என்னுடைய கொள்கைகளிலிருந்து நீங்கள் உங்களுடைய கருத்தை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். என்னுடைய உருவத்திலிருந்து அல்ல என்று ஊகிக்கிறேன்' என்று கூறினார். அதுதான் தேவைப்படுகிறது. இதயம் மற்றும் மனத்தின் தூய்மையானது உடல் மூலம் ஒளிர்கிறது. மிக எளிமையான தோற்றமுடையவர்கள் குறிப்பிடத்தக்க அழகுநயத்தைப் பெற்றிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். மிக அழகிய உருவங்களைப் பெற்றிருப்பவர்கள், அத்தகைய அழகு நயத்தைப் பெற்றிருப்பதில்லை. அதுமட்டுமின்றி, தூய்மையான ஞானத்தைப் பெற்றவர்கள், புனிதமான, பொருத்தமான அதிர்வலைகளைப் பரப்புகிறார்கள்! அது மனத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பதுடன் மட்டுமின்றி, அவர் களுடைய தொடர்பு உடையவர்களை எழுச்சி அடையச் செய் யும் பயனையும் அளிக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்டு இருப்பதைப் போல, நம்முடைய ஆன்மீக ஆச்சாரியர்கள் உயர்ந்த ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்றுவதற்கு, நாம் சரியான தகுதி உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் உள்ளனர். அது இல்லாமல் நம்மால், 'கத்திமுனை மீது நடக்க இயலாது.'

நம்முடைய குறைபாடுகள்

உடலின் குறைபாடுகளும், உடலின் இசைவுடைமை அற்ற செயல்களும் அகற்றப்பட வேண்டும். உபநிஷதங்களில்,

பண்டைக் காலத்திலிருந்த ஆச்சாரியர், தன்னுடைய சீடர்களுடன், 'என்னுடைய எல்லா உறுப்புக்களும், வாக்கும், மூச்சும், கண்ணும், காதும், ஆற்றலும், மற்றும் என்னுடைய எல்லாப் புலன்களும் முழு நிறைவு அடையட்டும்' என்று பிரார்த்தனை செய்தார்.[1] இந்த இசைவுடைமை ஏற்பட்டவுடன், இந்த உடலில் வாழ்வது மகிழ்ச்சிகரமானது என்று உணர்வோம். உடலிலுள்ள உறுப்பினர்களுடன் இசைவுடைமையை எவ்விதம் எய்தப் பெறுவது? உடல் நலத்திற்கு உகந்ததாக இல்லாத உணவைத் தவிர்க்க வேண்டும். முறைப்படுத்தப்பட்ட, மிதமான வாழ்க்கையை வாழ வேண்டும். தன்னலமற்ற செயல்களைச் செய்ய வேண்டும். ஒழுக்கமுடைய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். இசைவுடைய எண்ணங்களும், செயல்களும் உடலை இசைவுடைமை உடையதாகச் செய்கின்றன.

புலன்களின் குறைபாடுகள், அவற்றைத் தீய பொருட்களிலிருந்து விலக்குவதின் மூலம் அகற்றப்பட வேண்டும். மற்றும் அவற்றைச் சரியான வழியில் திசைமாற்றம் செய்ய வேண்டும். இது அடக்குமுறையோ, அல்லது அமுக்கும் முறையோ இல்லை. எது நன்மை பயக்குமோ, எது தூய்மையானதோ, எது ஆன்மீகமோ அதைக் கேட்பாய்; பார்ப்பாய். உன்னுடைய புலன்களை உன் வலிமையைக் குறைக்கச் செய்வதற்குப் பதிலாக, உன்னுடைய மனத்திற்கு ஏற்ற உணவை அளித்து, உன் வளத்தைப் பெருக்கும் முறையில் பயன்படுத்துவாய்.

தூண்டுதல்களால் வழிநடத்தப்படும் வாழ்க்கையை வாழாமல், உயர்ந்த பகுத்தறிவு, மற்றும் ஆழ்ந்து சிந்திக்கும் தன்மைகளால் வழிநடத்தப்படும் வாழ்க்கையை வாழ்வதன் மூலம் மனத்தின் குறைபாடுகள் அகற்றப்பட வேண்டும். தீமை ஏற்படுத்தக் கூடியதை நாம் தவிர்க்க வேண்டும்.

---

1. ஆப்யாயந்து மமாங்கானி வாக்ப்ராணச்சக்ஷுः ச்ரோத்ரம் அதோ பலமிந்த்ரியாணி ச ஸர்வாணி ।

—சாந்தோக்ய உபநிஷதம், சாந்தி பாடம்.

ஆன்மீக வாழ்விற்கு நன்மை பயப்பதை நாம் முயன்று பெற வேண்டும். நமக்கு நன்மையைத் தருவது, மகிழ்ச்சியைத் தராமல் இருக்கலாம். இருப்பினும் நாம் அதைக் கைக் கொள்ள வேண்டும். மற்றும் அதை நாம் பின்பற்றுவதன் மூலம் மனத்தின் குறைபாடுகளைப் பெருமளவில் அகற்று வதில் வெற்றி பெறலாம்.

நாம் முக்கியமாக நம் மனத்தைக் கட்டுப்படுத்த விரும்பும் பொழுது, நம் மனம் நமக்குப் பலவகையான தொல்லைகளைத் தருகிறது. அது சில சமயங்களில் மிகவும் சோர்வுற்று இருப்பதை நாம் காண்கிறோம். அது அசைவதற்கு கூட விரும்புவது இல்லை. சில நேரங்களில் அது எழுச்சி கொண்ட நிலையில் இருக்கிறது. ஒரு பொருளிலிருந்து மற் றொரு பொருளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது. ஆழ் மனம் சில நேரங்களில் சிறிதளவு அமைதியாக இருந்தாலும், அது மீண்டும் தன்னுடைய எழுச்சி மிகுந்த ஓட்டத்தைத் தொடங்குகிறது. ஆனால் பயிற்சியின்மூலம், இந்த எழுச்சி கொண்ட நிலையிலுள்ள மனத்தை ஒருமுகப்படுத்திவிட வியலும். நம்முடைய ஆச்சாரியர்கள் நம்முடைய உணவு தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று நமக்குக் கூறு கின்றனர். நாம் வாயினால் உண்ணும் உணவு தூய்மையான தாக இருக்க வேண்டும். அது நம்முடைய உடலில் இசை வுடைமையைத் தோற்றுவிக்க வேண்டும். அதைப் போன்றே நாம் நம்முடைய எல்லாப் புலன்களின் மூலமும் எடுத்துக் கொள்ளும் உணவு தூய்மையானதாக இருக்க வேண்டும். நம் மனத்தின் மூலம் எடுத்துக்கொள்ளும் உணவு, அதாவது நம்முடைய எல்லா எண்ணங்களும், உணர்வுகளும் கூடத் தூய்மையானதாக இருக்க வேண்டும். சூக்ஷ்மமான உடலில் இசைவுடைமையை ஏற்படுத்த உதவி செய்ய வேண்டும். வடமொழியில் ஒரு பழமொழி உள்ளது. அது 'பாம்பிற்குத் தூய்மையான பாலை அருந்தக் கொடுத்தாலும் அது பொறுத்துக் கொள்ளவியலாத விஷத்தைத்தான் உற்பத்தி செய்கிறது.'[1]

---

1. பணீ பீத்வா க்ஷீரம், வமதி கரலம் து:ஸஹதரம் ।

என்று அது கூறுகிறது. அது அதனுடைய இயல்பு ஆகும். அதைப் போன்றே தூய்மையான மரக்கறி உணவை உட்கொள் வது மட்டும் போதாது. நம்முடைய இயல்பு மாற வேண்டும். நாம் தூய்மையானவர்களாக, அன்பு நிறைந்தவர்களாக, இனிமையான தன்மை உடையவர்களாக ஆக வேண்டும்.

நாம் பலவகையான குறைபாடுகளால் துன்பப்படு கிறோம். இப்பொழுது நாம் இந்தக் குறைபாடுகளை ஒவ்வொன்றாக அகற்றப் போகிறோமா? சில மனோ தத்துவ நிபுணர்கள், தலையைத் தளர்வாக வைத்து அமைதிப்படுத்த வேண்டும். அதன்பிறகு அதேபோல் காதுகளையும், மூக்கை யும், கைகளையும், உடல் பகுதியையும், கால்களையும் இம் முறையில் தளர்த்தி அமைதிப்படுத்த வேண்டும் என்று நமக்குக் கூறுகின்றனர். வேறு சிலர் நம்முடைய ஆசைகளை அடக்க வேண்டாம் என்றும் அவற்றை வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும் என்றும் நமக்கு அறிவுறுத்து கின்றனர். ஆனால் நடைமுறை வாழ்வில், ஒருசில மனிதர்கள் தான், ஒருவரைத் திருத்திக் கொள்ளும் சிறிய அளவான முயற்சிகளில் நீடித்து நன்மையைப் பெற்றுள்ளனர். வேதாந்தம், விஷயத்தின் அடித்தளத்திற்கேச் செல்கிறது. அது உன்னுடைய முழுமையான அகநிலைப் பண்புடன் செயல் தொடர்பு கொண்டு உள்ளது. பொதுவான அகங்காரத்தின் பின்னால் தூய்மை, வலிமை, பேரின்பத்தின் மூலமான ஆன்மா உள்ளது. நீ எந்த அளவு அதை விரும்பி அதனை உன்னுடைய செயல்களிலும், எண்ணங்களிலும் வெளிப்படுத்த இடம் அளிக்கிறாயோ, அந்த அளவிற்கு முழுமையானவனாகவும் அமைதியாகவும் நீ விளங்குவாய். ஸ்ரீராமகிருஷ்ணரின் தலை சிறந்த சீடரான சுவாமி விவேகானந்தர், ‘உனக்கும், ஒவ்வொரு வருக்கும் அவருடைய உண்மையான இயல்பைக் கற்பிப்பாய். உறங்கிக் கொண்டிருக்கும் ஆன்மாவை அழைப்பாய். அது எப்படி விழித்தெழுகிறது என்று காண்பாய். இந்த உறங்கிக் கொண்டிருக்கும் ஆன்மாவை முனைப்பான தன்னுணர்வு உடைய நடவடிக்கைகளுக்காக எழுச்சி அடையச் செய்தால் ஆற்றல் வரும், புகழ் வரும், நன்மை வரும் தூய்மை வரும்,

மிகச் சிறந்த அனைத்தும் வரும்'[1] என்று நமக்கு அறிவுறுத்தி உள்ளார். ஒருவரை உறுப்பு உறுப்பாகத் தூய்மைப்படுத்துவதற்கு முயற்சிக்கக் கூடாது. ஆனால் பகுக்கவியலாத ஆன்மாவைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று வேதாந்தம் அறிவுறுத்துகிறது.

நவீன உளநூல்நியதியும் நன்னடத்தையும்

இக்காலத்தில் ஒழுக்கக் கட்டுப்பாடுகள், அடக்கு முறை, அமுக்கு முறை என்னும் நவீன மன இயல் தொடர்பான சொற்களுடன் மிக அதிகமாகத் தொடர்பு படுத்தப்பட்டு வருகிறது. பழங்காலத்திலிருந்து ஹிந்து முனிவர்கள், புலன்களுக்கு ஒரு உயர்ந்த இலக்கைக் காட்டுவதில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். 'நாம் நம்முடைய காதுகளால் பரிசுத்தமானதைப்பற்றிக் கேட்போம். நாம் நம்முடைய கண்களால் புனிதமானதைக் காண்போம். நாம் கடவுளைப் போற்றி, வணங்கி, நமக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாழ்க்கையை உறுதியான, தளராத உறுப்புக்களாலும், உடலாலும் துய்ப்போம்.'[2]

ஒருவர் தன்னுடைய சொந்தப் புலன்களின் எஜமானனாக இருந்தால், தன்னுடைய சொந்த மனத்தின் எஜமானனாக இருந்தால், ஆன்மீக வாழ்வை எத்தகைய முரண்பாடுகளும் இன்றி, இயல்பான அகத் தூண்டுதலுடன் பின்பற்றினால் ஒருவர் உண்மையாகவே இசைவுடைய தன்மையையும், அமைதியையும் உணர்கிறார். மெய்ஞ்ஞானிகளின் மொழியில் மனத்தைத் தூய்மைப்படுத்தும் வழிமுறையானது 'துப்புரவு செய்தல்' என்று அழைக்கப்படுகிறது. உளநூலைச் சார்ந்த மொழியில் 'மேன்மைப்படுத்தப்படுதல்' என்று அழைக்கப்படுகிறது. அது முதல்நிலை இயல்பு

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! *5.101,102.*
2. பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:
   பத்ரம் பச்யேமாக்ஷபிர்யஜத்ரா: ।
   ஸ்திரைரங்கைஸ் துஷ்ட்டு வாக்ம் ஸஸ்தனூபி: வ்யசேம
   தேவஹிதம் யதாயு: ॥
   —ரிக்வேதம், *1.89.8.*

உணர்ச்சிகளை அல்லது விருப்பங்களுக்கு ஒரு உயர்ந்த திருப்பத்தை ஏற்படுத்தும் வழிமுறை ஆகும்.

நவீன மனோதத்துவ இயல் கண்டுபிடித்துள்ள ஒரு உத்தி, இந்தியாவில் பழங்காலத்திலிருந்த ஆன்மீக ஆச்சாரியர்களால் மிகவும் முழுமையான முறையில் அறியப்பட்டிருந்தது. உளவியல் மருத்துவ பகுப்பு ஆராய்ச்சி முறையைச் சார்ந்த உத்தியில் நோயாளியின் மனக்கோளாறுகளுக்கான அடிப்படையான உள்ளார்ந்த காரணங்களை விழிப்படையச் செய்வதும், உணர்த்துவதும் முக்கியமான செயலாக உள்ளது. சில கொள்கையற்ற மனோதத்துவ நிபுணர்கள் நோயாளிகளைத் தங்கள் மனநிலையற்ற போக்குகளிலேயே விட்டுவிட வேண்டும் என்று வாதிடலாம். தலைசிறந்த மனோதத்துவ நிபுணரான டாக்டர் ஹேட்பீல்டு, குணப்படுத்தும் நோக்கத்திலிருந்து பார்த்தால் 'உன்னுடைய இயல்புணர்ச்சியை வெளிப்படுத்து என்னும் அறிவுரை என்பது முட்டாள்தனம். நடைமுறை அனுபவத்தில் நான் ஒரு உண்மையான மூளைக் கோளாறு, தன்னிச்சையான பாலியல் ஈடுபாட்டினால் குணமானதை ஒருபொழுதும் கண்டதில்லை' என்னும் கருத்தைக் கொண்டுள்ளார். பரவலாகத் தற்காலத்தில் நடைமுறையில் உள்ள இந்த உளவியல் மருத்துவ முறையில் நோயாளி கேட்கப்படுகிறான். 1. தொல்லை கொடுக்கும் விருப்பத்தை ஒரு புதிய கண்ணோட்டத்தில் நோக்குவாய். மற்றும் பயமோ அருவறுப்போ இல்லாமல் அதை முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ ஏற்றுக்கொள். அல்லது 2. சிக்கலைத் திட்டமிட்டு எதிர்கொள்வாய். மற்றும் அதிகமான குற்ற உணர்வின்றி அதைத் தள்ளி விடுவாய். அல்லது 3. ஒரு உயர்ந்த பாதையில், ஒரு உயர்ந்த இலட்சியத்தை நோக்கி இயக்குவாய்....

டாக்டர் அட்லர் (Adler) தனிமனித மனோதத்துவ இயலைத் தோற்றுவித்தவர், எப்பொழுதும் சமுதாயத்திற்குப் பயன்படத்தக்க ஒரு ஆரோக்கியமான வாழ்வைப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். ஹிந்து ஆன்மீக ஆச்சாரியர்களும் நம்முடைய எல்லா உணர்வுகளுக்கும் ஒரு

உயர்ந்த திருப்பத்தை அளிக்க விரும்புகின்றனர். 'அந்த ஆறு பகைவர்களின் போக்கையும் இறைவனிடம் திருப்பிவிடு. ஆன்மாவுடன் கலந்து ஆனந்தம் அடை. இதுதான் கர்மம். இறைவனை அடையும் வழியில் நம்மைத் தடுப்பவர்களுடன் கோபம் கொள். அவரை அடைய வேண்டும் என்று பேராசை கொள். 'எனது', 'எனது' என்று கூற வேண்டுமாயின், கடவுளையே அதற்கு அடிப்படையாக்கிக்கொள். அகங்காரம் கொள்ள வேண்டும் எனின், 'நீ கடவுளின் தொண்டன் அல்லது கடவுளின் குழந்தை என்று நினைப்பதில் கர்வம் கொள்வாய்'[1] என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

டாக்டர் அட்லர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது எத்தனை உண்மையாக உள்ளது, 'நம்மைப்பற்றிய கருத்தை நாம் மாற்றிக் கொள்வதன்மூலம் நாம் நம்மையும் மாற்றிக் கொள்ள இயலும்.' சுவாமி விவேகானந்தர், 'உனக்கும் ஒவ் வொருவருக்கும் அவருடைய உண்மையான இயல்பைக் கற்பிப்பாய். ஆற்றல் வரும், புகழ் வரும், நன்மை வரும், தூய்மை வரும், மிகச்சிறந்தவை எல்லாம் வரும்' என்று கூறியுள்ளார். ஹிந்து ஆச்சாரியர் இந்தக் கருத்தின் மெய்ம்மூல மான வாதப்பொருத்தமுடைய முடிவிற்குச் செல்கிறார். இந்த நிலை ஒரு பொதுவான மனநல மருத்துவரின் நோக்கு எல்லைக்கு அப்பால் உள்ளதாகும்.

இடைநிலை வழி

நம்முடைய தற்போதைய விழிப்புணர்வு நிலையில் நம் உடலும் மனமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன மற்றும் ஒன்றை ஒன்று பாதிக்கின்றன. எனவே நாம் இரண்டைக் குறித்தும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். புத்தரின் கதையை நினைவுபடுத்திக் கொள்வாய். அவர் அரண்மனையின் இன்பங்களில் அயர்வுற்று, அவருடைய வீட்டைவிட்டு வெளியேறி, கடுமையான தவத்தை மேற் கொண்டார். ஒருநாள் அவர் எழுந்து கொண்டிருந்த பொழுது,

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1. 298.

தன் உணர்வற்று கீழே விழுந்தார். மீண்டும் தன்னுணர்வு பெற்ற பொழுது அவர் ஒரு இனிமையான பாடலைக் கேட்டார்.

'கம்பியின் அளவுமீறிய வல்லிழுப்பு தகர்ந்து
இசை தெரித்தோடுகிறது.
கம்பியின் மிகுதியான தளர்வு ஒலியற்றது.
இசை தேய்வுறுகிறது.
எங்களுக்கு இசைக் கருவியை உச்சமுமின்றி
தாழ்வுமின்றி சுருதிகூட்டுவாய்.'[1]

அப்பொழுது சுஜாதா என்னும் பெயரைக் கொண்ட ஒரு கிராமப் பெண்மணி அந்த வழியாக வந்தாள். அவள் அவருக்கு அர்ப்பித்த பாலை நன்றியுடன் ஏற்றுக்கொண்டார். பலத்தைத் திருப்பிப் பெற்றதும் ஆழமான சிந்தனையில் தோய்ந்து ஞானம் பெற்றார். தங்குதடையற்ற இன்பவிழைவு, மற்றும் உடலை வருத்திக் கொள்ளும் கடுமையான நோன்பு என்னும் இவ்விரண்டும் தவிர்க்கப்பட வேண்டும். புத்தர் உடலை வருத்திக் கொண்டு கடுமையான நோன்பு இருப்பது, மற்றும் தங்கு தடையற்ற இன்பவிழைவு என்னும் இரு கோடிகளையும் தவிர்த்து, சரியாகப் புரிந்துகொள்ளும் திறமை, முறையான வாழ்க்கை, முறையான தியானம் என்னும் இடைப்பட்ட வழியைக் கண்டு பிடித்தார். புத்தருக்குப் பல நூற்றாண்டுகள் முன்பே கிருஷ்ணர் அதே அறிவுரையை அறிவுறுத்தி உள்ளார். 'யார் ஒருவன் மிதமான உணவும், மிதமான ஒய்வும், செயல்களில் மிதமான உழைப்பும், மிதமான உறக்கமும், மிதமான விழிப்பும் உடையவனாக இருக்கிறானோ, அவனுக்கு யோகமானது துன்பத்தைத் துடைப்பதாக உள்ளது'[2] இதற்கு முற்பட்ட காலத்தில் வேதகால முனிவர்கள், 'ஒருவருக்கு எந்த உணவு ஏற்றதாக உள்ளதோ, அந்த உணவு பாதுகாப்பினை

---

1. Sir Edwin Arnold, The Light of Asia (London, Kegan Paul, Trench, Trubner & Co., 1943) p.94.

2. பகவத் கீதை, 6.17.

அளிக்கிறது. தீங்கு விளைவிப்பது இல்லை. மிக அதிகமான உணவு தீங்கிழைக்கிறது. மிகக் குறைந்த அளவு உணவு காப்பதும் இல்லை'[1] நாம் நம்முடைய வாயால் உண்ணப் படும் உணவானது, மிதமானதாகவும், தூய்மையானதாகவும் இருக்க வேண்டும். மற்ற புலன்களின்மூலம் நாம் எடுத்துக் கொள்ளும் உணவும் தூய்மையானதாக இருக்க வேண்டும். ஒழுக்கப்பண்புகளைப் பின்பற்றும் பண்பட்ட நிலையும் இருக்க வேண்டும். இதுதான் இடைநிலையான வழியாகும்.

தூய்மையற்ற ஒருமுனைப்பாடு ஆற்றல் ஆபத்தாக முடியலாம்

ஆசைகள் திடீரென்று நம்மை விட்டு விடுவது இல்லை. நாம் பெரிய அளவில் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க லாம். நாம் ஆசைப்படும் பொருள்களிலிருந்து நம்மைப் பிரித்துக் கொள்ளலாம். ஆனால் அந்த ஆசையானது சூக்ஷ்ம மான வடிவத்தில் தொடர்ந்து நீடித்திருக்கும். ஆன்மீக விழிப் புணர்வு உதயமாகும் பொழுதுதான் இந்த ஆசை மறையும்.[2] எனவே நம்மிடம் இந்த ஆன்மீக விழிப்புணர்வைச் சிறிதளவு விழிப்படையச் செய்வதற்கு நம் முயற்சி மிகச் சிறந்ததாக இருக்க வேண்டும்.

இங்குள்ள இந்த அறிவுரையை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண் டும். குறைந்த பட்ச பரிசுத்தத் தன்மையை அடைவதற்கு முன்பு ஒருமுகப்பட்ட தன்மையைப் பயிற்சி செய்வது ஆபத்தானது ஆகும். நாம் ஒருமுகப்பட்ட தன்மையைப் பயிற்சி செய்வதற்கு முன்பு அல்லது நம்முடைய சக்தியைத் திரட்டுவதற்கு முன்பு நாம் இந்த சக்தியை, மேம்பட்ட வழிகளில் எப்படி இயக்க வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இல்லையெனில் நாம் துன்பம் அடைவோம்.

---

1. ஶதபத-ப்ராஹ்மணம் 9.2.1.1; ஆதிசங்கரரால் அவருடைய பகவத் கீதை (6.16) விளக்கவுரையில் மேற்கோள் காட்டப்பட்டப்பட்டுள்ளது.
2. பகவத் கீதை, 2.59.

இந்தியாவில் ஒரு நீதிக்கதை சொல்லப்படுவது உண்டு. ஒரு மனிதன் ஒரு பேய் உருவத்தை எப்படி வரவழைப்பது என்பதை அறிந்து வைத்திருந்தான். அவன் சில மந்திரங் களைக் கூறினான். அந்த பேயுருவம் வெளிப்பட்டு, ‘எனக்கு வேலை கொடு’ என்று கூறினான். அந்த மனிதன், அந்தப் பேய் உருவத்தைச் சில செயல்களைச் செய்யச் சொன்னான். மிக விரைவில் அவை செய்யப்பட்டு விட்டன. அந்தப் பேய் உருவம் மீண்டும் வெளிப்பட்டு, ‘எனக்கு வேலை கொடு, இல்லையெனில் உன் கழுத்தை உடைத்து விடுவேன்’ என்று அதிகாரம் செய்தான். அந்த மனிதனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவன் அந்த பேய் உருவத்தை அழைத்திருக்கிறான். அவன் செய்வதற்கு ஏதாவது வேலை யைக் கொடுக்க வேண்டும். அதன்பிறகு அவனுக்கு ஒரு யோசனை புலப்பட்டது. அவன் அந்தப் பேய் உருவத்திற்கு ஒரு நாயைக் காட்டி, ‘நல்லது, வளைந்துள்ள இந்த நாயின் வாலை நிமிர்த்துவாய்’ என்று கூறினான்.

நாம் நம்முடைய சக்தியைத் திரட்டுகிறோம். ஆனால் அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதை நாம் அறியாமல் இருக்கிறோம். பயனற்ற செயல்களைச் செய்வதில் இந்த சக்தி சிதறி விடுகிறது. ஆன்மீக வாழ்வில் இது மிகப் பெரிய விபத்து ஆகும். இந்த சக்திக்கு உயர்ந்த திருப்பத்தை எப்படிக் கொடுப்பது என்பதை நாம் அறிய வேண்டும். இல்லை யெனில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இந்த சக்தி நம்முடைய ஆசைகளைத் தூண்டலாம்; நம்முடைய புலன்களைத் தூண்ட லாம் மற்றும் இந்த ஆசைகளுக்கு ஒரு உயர்ந்த திருப்பத்தைக் கொடுப்பதில் நாம் வெற்றி பெறவில்லை என்றால் அவை வெடிகுண்டைப் போல ஆகி, நம்முடைய உடலையும், மனத் தையும் சிதைத்துவிடும். ஒருமுகப்படுத்துவதிலும், தியானம் செய்வதிலும் விளையாட முயற்சி செய்வது மிகவும் ஆபத் தானது ஆகும். ஆனால் நமக்கு முறையான பயிற்சி அளிக்கப் பட்டு இருந்தால் நம்மிடம் தேவையான தகுதிகள் இருந் தால், ஒருமுகப்படுத்தப்பட்ட, மற்றும் தியானத்தை மேற் கொள்ளும் வாழ்வானது இன்பமானதாக இருக்கும்.

சக்தியானது முறையாக இயக்கப்படாவிட்டால் சில நேரங்களில் அது தன்னை உடலியல்பு கடந்த சக்தியாக வெளிப்படுத்திக் கொள்ளும். ஒருவேளை நாம் மற்ற மனிதர்களின் எண்ணங்களை அறிந்துகொள்ள கற்றுக்கொண்டிருப்போம். எதிர் காலத்தில் என்ன நிகழப்போகிறது என்பதை ஓரளவிற்கு அறிந்து கொள்ள இயலும். ஆனால் நாம் நம்முடைய சொந்த மனத்தைப் பற்றி நம் சொந்த ஆன்மீக இயல்பைப்பற்றி அறியாமலுள்ளோம். நாம் யார் என்பதை அறிந்துகொள்வதுதான் ஆன்மீக வாழ்வின் இலட்சியமாகும். ஒருவர், முதலில் விவரிக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றித் தேவையான தூய்மையான நிலையை அடைந்திருந்தால், அதன்பிறகு சேமித்து வைக்கப்பட்டுள்ள இந்த சக்தி தன்னலமற்ற தொண்டு செய்வதற்கும், ஜபம் செய்வதற்கும், மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கும், தியானம் செய்வதற்கும் பயன்படுத்தப்படலாம். மற்றும் அதன்பிறகு இவ்வனைத்தும் உண்மையை நோக்கிச் செல்வதற்கு நமக்கு உதவி புரியும்.

பரம்பொருளுக்குச் சரணடைவாய்

ஆன்மீகப் பாதையை வெற்றியுடன் பின்பற்றுவதற்கு புத்தி, மற்றும் அகங்காரத்தின் குறைபாடுகளும் அகற்றப்பட வேண்டும். விடாது தொடர்ந்து சரியான வழியைப் பின்பற்றுவதாலும், மற்றும் மனத்தைப் பலப்படுத்திக் கொள்வதாலும் நம்முடைய துணிவாற்றல் வலிமையடைகிறது. ஆன்மீக வாழ்வில் வெற்றியை அடைவதற்கு நமக்குக் கட்டாயமாக வலிமையான துணிவாற்றல் தேவையானதாகிறது. கவர்ச்சிக் கூறுகள் நம்மை எதிர்க்கும்பொழுது, நம்முடைய ஆழ் மனத்தில் இருக்கும் எல்லா ஆசைகளும் நம்முன் தோன்றி மருட்சிக்கு ஆட்படுத்தும்பொழுது, நமக்கு வலிமையான மனஉறுதி தேவைப்படுகிறது. நம் ஒவ்வொருவருக்கும் கட்டாயமாக வரவிருக்கும் பலவகையான மருட்சிகள் ஆட்படுத்தும் கூறுகளுக்கு அப்பாற்பட்டு முன்னேறி நாம் ஆன்மீக வழியைப் பின்பற்ற வேண்டும்.

ஆன்மீக வாழ்வில் நாம் இந்த ஒரு விஷயத்தை கட்டாய மாக நினைவில் கொள்ள வேண்டும். தன் முனைப்பான ஒழுக்கமுறைமைக்கும், ஆன்மீகத்திற்கும் முயற்சி செய்வது மட்டும் போதாது. எனவே யோகாச்சாரியர்களும், வேதாந்த ஆச்சாரியர்களும் நமக்குக் கட்டுப்பாடுகளைப் பின்பற்று வதுடன் ஒருவர் தன்னுடைய செயல்களின் பயன்களைக் கடவுளுக்கு, அர்ப்பிக்க முயற்சி செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர்.[1] யோகிக்கு அவர் ஆச்சாரியர்களின் ஆச்சாரியர் ஆவார். இந்த ஆச்சாரியர்களின் ஆச்சாரியர் நம்மிடமிருந்து வெகு தூரத்தில் இல்லை. அவர் நம்முடைய இதயத்தில் குடிகொண்டுள்ளார். மேற்கு நாடுகளில் ஒருவர் கடவுளை ஆச்சாரியர்களின் ஆச்சாரியர் என்று உணர்வதில்லை. ஆனால் இந்தியாவில் நாம் உணர்கிறோம். நம்முடைய பெற்றோர் நம்மை இந்த உலகத்திற்குள் கொண்டு வருகிறார்கள். ஆனால் நம்முடைய ஆன்மீக ஆச்சாரியர்கள், நம்மைக் கடவுளின் அதிகார எல்லையில் தோன்றுவதற்கு உதவி செய்து, துன்பங் களுக்கும், வேதனைகளுக்கும், பிறப்பிற்கும், இறப்பிற்கும் அப்பாற்பட்டு செல்வதற்கும் உதவி புரிகிறார்கள். வேதாந்தத் தில் கடவுள், ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள், ஆச்சாரியர் களின் ஆச்சாரியராக மட்டுமின்றி, எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவாகவும் விளங்குகிறார்.

நாம் ஒவ்வொருவரும் வரம்பற்ற மெய்ப்பொருளின் ஒரு பகுதியாவோம். நம்முடைய மனமும் இதயமும் தூய்மை யடைந்து கொண்டிருக்கும் பொழுது ஆரம்பக்கட்டத்தில் நாம் கடவுள் என்ற ஒருவரை நம்புகிறோமோ, இல்லையோ, நம்முடைய தனித்த சிறப்புத் தன்மையுடைய உள்ளுறை ஆன்மாவைப் பற்றிக் கொள்கிறோம். நாம் மேன்மேலும் தூண்டப்படும் பொழுது, நாம் அனைவரும், உண்மையாக ஆற்றல் வாய்ந்த முழுமையின் பகுதிகள் என்பதை உணர் கிறோம். மற்றும் இதுதான் நமக்குத் தேவையான மிகப் பெரிய உண்மையாகும். நாம் ஒப்புயர்வற்ற பரம்பொருளின்

1. பதஞ்ஜலி யோக சூத்திரங்கள், *1.23.*
பகவத் கீதை, *9.27; 12.10,11.*

உயிர்களை உள்ளடக்கி, உலகம் அனைத்தையும் இயக்கு விக்கும் இறைநிலையின் பிரிக்க முடியாத பகுதிகளாக ஆன்மாக்களாக இருக்கிறோம்.

உபநிஷதங்கள் ஆன்மாவைக்குறித்து, 'இந்த ஆன்மா, எல்லா உயிர்களிலும் மறைவாக உள்ளது. வெளிப்பட்டுத் தெரிவதில்லை. ஆனால், ஒருமைப்படுத்தப்பட்ட நுண்ணிய தூய்மையான அறிவால் ரிஷிகள் இந்த ஆன்மாவைக் காண்கின்றனர்'[1] என்று விவரிக்கின்றன. நம் ஒவ்வொருவரிட மும் ஒரு தனிப்பட்ட தன்மையுடைய இயல்பான வலிமை மறைந்துள்ளது. இந்த தனிப்பட்ட தன்மையுடைய இயல் பான வலிமையால் ஆன்மா தன்னை உணர்கிறது. அதன் மூலம் அது நேரடியாக பரம்பொருளையும் உணர்கிறது. ஒழுக்கப்பண்புகளைக் கடைப்பிடிப்பதன்மூலமும் பிரார்த் தனை மற்றும் தியானத்தைக் கடைப்பிடிப்பதன்மூலமும் இந்த இயக்கமற்ற, தனிப்பட்ட தன்மையுடைய இயல்பான வலிமை எழுப்பப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஆன்மீக வாழ்வு உண்மையிலேயே ஆரம்பமாகும். அப்பொழுதுதான் ஆன்மீக சாதனையை மேற்கொண்டு இருப்பவன், கத்தியின் முனைமீது அவன் நடந்து கொண்டிருப்பதாக கூற இயலும். அவனிடத்தில் உண்மைக்கும், உண்மையற்றதற்கும் இடை யிலுள்ள வேறுபாட்டை உணரும் மிகப்பெரிய ஆற்றல் விழிப்பு அடைகிறது. மற்றும் இந்த வேறுபாட்டை உணரும் தன்மை என்னும் கத்தியால் அவன் அவனிடமிருந்து ஆன்மா அல்லாத அனைத்தையும் அகற்றுகிறான். மற்றும் அவன் தன்னை உடல் உணர்விலிருந்தும் மன உணர்விலிருந்தும் அறிவு உணர்விலிருந்தும் பிரித்துக் கொள்கிறான். அவன்தான் ஆன்மா என்பதை உணர்கிறான். மற்றும் ஆன்மாவாக, எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவான பரம்பொருளின் பிரிக்க விய லாத பகுதி என்பதையும் உணர்கிறான். இங்கு, மிகச் சிறந்த தூய்மை நிலையை அடைந்து, தன்னை உலகியல் தொடர் புடைய மனத்தொடர்புடைய, உணர்வு தொடர்புடைய

1. கட உபநிஷதம், 1.3.12.

எல்லாவற்றிலிருந்தும் பிரித்துக்கொண்டபிறகு, அவன் கத்தியின் முனைமீது நடந்து பரம்பொருளுடன் இணையலாம். ஞானமடைந்த முனிவர்களால் அதுதான் அனுபவபூர்வமாக உணரப்பட்டுள்ளது.

நாம் இக்கட்டடத்தில் நம் கதி என்ன என்னும் கேள்வியைக் கேட்கலாம். நாம் முயற்சி எதுவும் இன்றி ரிஷிகளாக வேண்டும் என்று விரும்புவதால் ரிஷிகளாக ஆகவியலாது. பரம்பொருளை உணர்ந்தவர்களின், ஆன்மா அல்லாத அனைத்தையும்அவர்களிடமிருந்து களைந்து கொண்டவர்களின் கடவுளை உணர்ந்தவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால் நம்மால் ஞானமடைய இயலும். நாம் ஞானிகள் ஆவோம். அவர்களுடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றி, நாம் நம் ஆன்மீக வாழ்க்கையில் ஒரு எளிமையான தொடக்கத்தை மேற்கொள்ளலாம்.

நாம் நம்மிடம் நாம்தான் ஆன்மா என்னும் விழிப் புணர்வை விழிப்படையச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். நாம் அனைவரும் பரம்பொருளின் பகுதிகள் என்பதை உணர்வதற்கு முயற்சிக்க வேண்டும். நாம், நம்முடைய உடல்தான் தேர், புலன்கள்தான் குதிரைகள், மனம்தான் கடிவாளம், புத்திதான் தேரோட்டி என்று அறிவோம். இந்தத் தேரை முழுமையாக நம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள அறிந்து கொள்வோம். ஞானமடைந்தவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் நாம் முறையான அறிவாற்றலைப் பெற்று இருப்போம். நாம் மனத்தை அடக்குவோம். நாம் புலன்களைக் கட்டுப்படுத்துவோம். ஆன்மஞானம் அடையும் வழியை தடுமாற்றம் இல்லாமல் பின்பற்றுவோம். நாம் உயர்வடைவோம். நாம் ஒவ்வொரு அடியாக ஆன்மீக வாழ்வைப் பின்பற்றுவோம். நாம் உண்மையான கடவுளை, அனைவரின் ஆன்மாவாக இருக்கும் கடவுளை உணர்வதற்கு முயற்சி செய்வோம். நாம் இலட்சியம் ஈடேறும் வரையில் நிறுத்தாமல் இருப்போம்.

கத்தியின் முனையின் மீது நடந்து, ஆன்மீக வழியைக் கண்டிப்புடன் பின்பற்றி, நாம் ஆன்மஞானத்தையும் மற்றும் பேரின்பத்தையும் அடைவோம். மற்றும் மற்றவர்களுக்கும் கத்தியின் முனையின் மீது நடப்பதற்கும், ஆன்மீக வழியில் நடந்து அதே ஞானத்தையும், பேரின்பத்தையும் அடைவதற்கு உதவி செய்வோம்.

8
குருவும் மற்றும் ஆன்மீக வழிகாட்டுதலும்

ஆன்மீக வாழ்வில் பயிற்சியின் தேவை

மிகச்சிறந்த சீன தத்துவஞானியான (Lao Tsu) லாவோட்சு அவர்களின் சீடர் பின்வரும் கதையை விவரித்து உள்ளார். ஒரு இளைஞன் 'சி' என்னும் பெயரை உடைய கொள்ளைக்காரத் தலைவனின் கும்பலில் சேர்ந்தான். ஒருநாள் புதிதாகச் சேர்ந்த இளைஞன் தலைவனிடம், 'களவு செய்வதில் 'தாவோ' என் னும் சரியான வழியைக் கண்டு கொள்ள இயலுமா?' என்று கேட்டான். அதற்குக் கொள்ளைக்காரத் தலைவனான, 'சி, 'வேண்டுகிறேன். தாவோ இல்லாத (சரியான வழி இல்லாத), ஒரு விதிமுறை இல்லாத அல்லது முறையான வழியில்லாத எதைப் பற்றியாவது எனக்குக் கூறுவீர். களவாடுவதில் மதிநுட்பம் இருக்கிறது. எதனால்? கொள்ளை அடிக்கப்படும் செல்வம் எங்குள்ளது என்று அறியப்படுகிறது. முதலில் செல்லும் துணிவு, கடைசியில் வெளிவரும் பேராண்மை, வெற்றியின் வாய்ப்புக்களைக் கணிக்கும் நுண்ணறிவுத் திறம், கொள்ளைக்காரர்களுக்குள் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களைப் பங்கு பிரித்துக் கொள்ளும் நியாயம் என்னும் இந்த ஐந்து இயல்புகளும் இல்லாமல் வெற்றியைப் பெற்ற திருடன் ஒருபொழுதும் இருந்ததில்லை' என்று பதில் கூறினான்.

வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் கற்றுக் கொள்ளப் பட வேண்டிய விதிமுறைகள் உள்ளன. களவாடுவதிலும் உள்ளது. எந்த ஒரு தொழிலிலும் புதிதாகச் சேர்ந்துள்ள வனுக்குப் பயிற்சி தேவைப்படுகிறது. ஆன்மீக வாழ்விலும் இது இன்னும் உண்மையாக விளங்குகிறது. லாவோட்சுவின்

சீடர் தொடர்கிறார். 'அனுபவ அறிவின் போதனையானது சம மான அளவில் நல்ல மனிதனுக்கும், கொள்ளைக்காரனுக்கும் இன்றியமையாததாக விளங்குகிறது. நல்ல மனிதர்கள் குறை வாகவும், தீய மனிதர்கள் பெரும்பான்மையானவர்களாகவும் விளங்குவதால் மஹான்கள் இந்த உலகத்திற்குச் செய்யும் நன்மை சிறியதாகவும், மற்றவர்களால் செய்யப்படும் தீமை அதிகமாகவும் விளங்குகிறது.' நான் மேற்கத்திய நாடுகளில் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, அழிவினை ஏற் படுத்தும் செயல்களில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்ட ஆற்றலின் அளவைக் கண்டு வியப்படைந்திருக்கிறேன். எத்தனை போர் வீரர்களுக்கும், விமான ஓட்டிகளுக்கும், தொழில் நுட்ப வல்லுனர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் கூட போருக்காகப் பயிற்சி அளிக்கப்பட்டது? இதற்காகச் செல விடும் நேரம் மற்றும் சக்தியின் ஒரு சிறிய அளவையாவது நாம் தெய்வீக ஞானம், பேரின்பம் மற்றும் அமைதியடைய ஆன்மீகப் பயிற்சிக்காக ஏன் பயன்படுத்தக் கூடாது? உபநிஷத காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த முனிவர்கள், நம்முன் ஆன்ம ஞானம் அடைவதை வாழ்க்கையின் இலட்சியமாக வைத் துள்ளனர். ஆனால் ஆன்மீக விழிப்புணர்வு இன்றி இந்த இலட்சியத்தை உணர இயலாது. எப்படி இருப்பினும் நாம் சமயத்துறையில் மிகவும் அதிகமான புற ஆசாரங்களையும், சடங்குகளையும், மிகக் குறைவாக உண்மையான ஆன்மீக விழிப்புணர்வையும் காண்கிறோம். ஆன்மஞானம் அடைவது தான் உண்மையான சமயமாக இருப்பினும், இந்த ஒரு காரணத்தினால் மிகுதியான அளவில் சமய உணர்வில் தோய்ந்துள்ள போலி உரிமையாளர்கள், தங்களுக்கு இயற்கை யைக் கடந்த சக்தி இருப்பதாக உரிமை கொண்டாடி, சொர்க்கத் திற்குச் சுலபமாக பயண இசைவுச்சீட்டு தருவதாக வாக்களிக் கிறார்கள். ஒழுக்க நெறிமுறையுடன், கூடிய தூய்மைத் தன்மைக்கு முயற்சி செய்ய விருப்பமற்ற புல்லுருவிகள் சுலபமான முறையில் முக்தி அடைய விரும்புகின்றனர்.

மிக உயர்ந்த இலட்சியத்தை அதை அடைந்த ஒருவரால் மட்டுமே காட்ட இயலும் அல்லது குறைந்த பட்சம் அதன்

மிக அருகில் சென்ற ஒருவரால் மட்டுமே காட்ட இயலும். ஆன்மீக வாழ்விற்குச் சரியாக, முறையான வழிகாட்டுதலின் முக்கியத்துவத்தைக் குறித்து உபநிஷதங்கள் இவ்விதம் சாற்றுகின்றன.

'எதைப்பற்றிப் பலரால் கேட்க இயலவில்லையோ, கேட்கும் பலரால் எதனை அறிய இயலவில்லையோ, அத்தகைய ஆன்மாவைப் பற்றி உபதேசிப்பவரும் அபூர்வமானது. கேட்பவரும் அபூர்வம். அத்தகைய அபூர்வமான ஒருவரைப் பின்பற்றி அதனை அறிபவரும் அபூர்வம்.'[1]

'உலகியல் மனிதர்கள் கூறும் வழிகளால் இந்த ஆன்மாவை அறியவியலாது. ஏனெனில் அவர்கள் பலவித மாகக் கூறுகின்றனர். அனுபூதி பெற்றவனின் உபதேசங் களைப் பின்பற்றினால் குழப்பம் இல்லை. இந்த ஆன்மா அணுவை விட நுண்ணியது. எனவே வாதங்களுக்கு அப்பாற் பட்டது.'[2]

சான்றோன் ஒருவன் தான் செயல்களின் பலனாகப் பெற்ற உலக அனுபவங்களை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதன் விளைவாக, 'கர்மங்களால் இறைவனை அடையவியலாது. பற்றின்மையால்தான் முடியும்' என்பதை உணர்ந்து பற்றின்மையைப் பெற வேண்டும். பிறகு, இறைவனை அறிவதற்காக, வேதங்களை உணர்ந்த இறை வனில் நிலைபெற்ற குருவையே நாட வேண்டும்.

---

1. ச்ரவணாயாபி பஹுபிர்யோ ந லப்ய:
ச்ருண்வந்தோऽபி பஹவோயம் நவித்யு: ।
ஆச்சர்யோ வக்தா குசலோऽஸ்ய லப்தா
ஆச்சர்யோ ஜ்ஞாதா குசலானுசிஷ்ட்ட: ॥
—கட உபநிஷதம், 1.2.7.

2. ந நரேணாவரேண ப்ரோக்த ஏஷ
ஸுவிஜ்ஞேயோ பஹுதா சிந்த்யமான: ।
அனன்ய ப்ரோக்தே கதிரத்ர நாஸ்தி
அணீயான் ஹ்யதர்க்யம் அணுப்ரமாணாத் ॥
—கட உபநிஷதம், 1.2.8.

நன்றாக அமைதியுற்ற மனமும், புலக்கட்டுப்பாடும் உடைய மாணவன் குருவை அணுகும்பொழுது அழிவற்ற, உண்மை வடிவான இறைவனை அறிவதற்கான இறை நெறியை அவன் புரிந்துகொள்ளும் வகையில் குரு உபதேசிக்க வேண்டும்.'[1]

குருவின் கடமை

ஆன்ம ஞானம் அடைவது என்பதன் பொருள் என்ன? ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இணைவதுதான் ஆன்மஞானம் அடைவது என்பதன் பொருளாகும். வாழ்க்கையில் பலவித மான அனுபவங்களையும், துன்பங்களையும் கடந்தபிறகு, ஜீவாத்மா உயிர்களை உள்ளடக்கியுள்ள இறைவனுக்கு அருகில் வருகிறது. மற்றும் இறுதியாக அதுவும், தானும் வேறில்லை என்று உணர்கிறது. உபநிஷதங்கள் இந்தச் செயற்பாங்கை, ஓவியமாக வரையத்தக்க வகையில் நயமாக விவரிக்கின்றன.

'இணைபிரியாத ஒரே போன்ற இரண்டு பறவைகள் ஒரே மரத்தில் அமர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று பழத்தை ருசித்துத் தின்கிறது. மற்றொன்று உண்ணாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஜீவனும், ஆன்மாவும் ஒரே உடம்பினுள் உள்ளனர். ஜீவன், அதாவது மனிதன் அறியாமையில் மூழ்கி, மோகவசப்பட்டு வருந்துகிறான். வழிபாட்டிற்கு உரிய தன் ஆன்மாவையும் அதன் மகிமையையும் அவன் எப்பொழுது காண்கிறானோ, அப்பொழுது கவலைகளிலிருந்து விடுபடுவான்.'[2]

நாம் நம்முடைய உண்மையான தெய்வீக இயல்பை மறந்து விட்டோம். கடவுளுக்கு அருகில் செல்வதற்குப் பதிலாக, நாம் மேலும் மேலும் உலக வாழ்க்கையில் மூழ்கி இருக்கிறோம். யாராவது நமக்கு நம்முடைய உண்மை யான இயல்பைப் பற்றி நினைவூட்ட வேண்டும். ஆன்மீக

---

1. *முண்டக உபநிஷதம், 1.2.12,13.*
2. *முண்டக உபநிஷதம், 3.1.1,2.*

ஆச்சாரியர் அல்லது குருவானவர் இதைச் செய்பவராவார். பல்லாண்டுகளாக உறங்கிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து சீடனை எழுப்பி, அவனுக்குக் கடவுளை அடையும் வழியைக் காட்டுவதுதான் குருவின் கடமையாகும். குருவானவர், கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையில் நின்று கொண்டுள்ள கிறிஸ்தவ திருச்சபை சமயகுருவைப் போன்றவர் அல்ல. சொல்லிலக்கண விளக்கத்தின் படி, 'குரு' என்னும் சொல் லிற்கு ஆன்மீக வழிகாட்டி, அறியாமையை அகற்றி ஒளி யினை அளிப்பவர் என்பது பொருளாகும்.[1] அவர் நம்மை, நாம் நம்மீது கொண்டிருக்கும் தவறான கருத்துக்களின் வசியமயக்கத்திலிருந்து விடுவிக்க உதவி செய்கிறார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அவருடைய ஒரு நீதிக் கதையில் ஒரு புலி-ஆடு குறித்து பேசுகிறார். 'ஒரு பெண் புலி ஆட்டு மந்தை ஒன்றைத் தாக்கியது. தூரத்திலிருந்து அதைக்கண்ட ஆட்டிடையன் அதை எதிர்த்துத் தாக்கினான். பெண் புலி கர்ப்பமாக இருந்தது. குட்டியை ஈன்றுவிட்டு இறந்துவிட்டது. இந்தப் புலிக் குட்டி ஆடுகளுடன் வளர்ந்தது. முதலில் ஆட்டுப் பாலையே குடித்தது. கொஞ்சம் வளர்ந்ததும் புல்லைத் தின்னத் தொடங்கியது. ஆடுகளைப் போலவே மே மே என்று கத்தியது. ஏதேனும் விலங்குகள் தாக்க வந்தால் ஆடுகளைப் போலவே பயந்து ஓடியது. நாளடைவில் பெரிய புலியானது. அப்பொழுதும் புல்லையே தின்றது. மே மே என்று கத்தியது. சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு காட்டுப் புலி இந்த ஆட்டு மந்தையைத் தாக்கியது. அங்கே ஒரு புலி புல் தின்கிறது. ஆடுகளுடன் கூடவே பயந்து ஓடுகிறது. இதைக் கண்ட காட்டுப் புலிக்கு வியப்புத் தாங்கவில்லை. அது மற்ற ஆடுகளை எதுவும் செய்யாமல், நேராகச் சென்று புல் தின்னும் இந்தப் புலியைப் பிடித்துக்கொண்டது. காட்டுப் புலி அதை ஒரு நீரோடைக்கு இழுத்துச் சென்றது. பிறகு அதனிடம், 'இதோ, இந்தத் தண்ணீரில் தெரியும் உன் முகத்தைப் பார். என் முகத்தையும் பார்' என்று கூறியது. பிறகு

---

1. *குகாரோऽந்தகாரஸ்து ருகாரஸ்தந்நிவர்தக: ।*
அந்தகாரநிவர்த்யா து குருரித்யபிதீயதே ॥

அதன் வாயில் ஒரு மாமிசத் துண்டைத் திணித்தது. பிறகு அது ஆடு அன்று உண்மையான புலி என்று கூறியது. அதன்பின் அந்தப் புலி-ஆடு தன்னுடைய ஆட்டு உணர்வைத் துறந்து, உண்மையான புலி உணர்வை மீண்டும் பெற்றது.'[1]

சுவாமி பிரம்மானந்தர் ஒரு குருவை, ஒரு அரசனின் மந்திரிக்கு ஒப்பிடுவார். ஒரு ஏழை மனிதன் மந்திரியிடம் ஏழு வாயில்களுடன் கூடிய அரண்மனையில் வாழும் அரசனைச் சந்திப்பதற்கு அனுமதி கோரினான். மந்திரியும் அவனுடைய வேண்டுதலை ஏற்றுக்கொண்டு இசைவு அளித்தார். ஒவ்வொரு வாயிலின் வழியாகவும் அவனை அழைத்துச் சென்றார். ஒவ்வொரு வாயிலிலும் ஆடம்பரமாக உடையணிந்த அதிகாரி நின்றுகொண்டு இருந்தார். மற்றும் ஒவ்வொருமுறையும் அந்த ஏழை மனிதன் அதுதான் அரசனா என்று மந்திரியிடம் கேட்டான். அந்த மந்திரி ஒவ்வொரு முறையும் அவர்கள் ஏழு வாயில்களைக் கடந்து, அரசருக்குத் தகுதியான சிறப்பு மிகுந்த நிலையில் அரசர் அமர்ந்திருக்கும் இடத்திற்கு வரும்வரையிலும் 'இல்லை' என்று பதில் கூறினார். அதற்குப் பிறகு அந்த ஏழை மனிதன் எந்தக் கேள்வியையும் கேட்கவில்லை. அரண்மனைக்கு ஏழு வாயில்களின் வழியாகவும், இடைநிலைக் கூடத்தின் வழியாகவும் வழிகாட்டுவதற்கு அவனுக்கு ஒருவர் தேவைப்பட்டார். 'குருவை அணுகுவதும் அம்முறையில்தான்' என்று பிரம்மானந்தர் கூறுகிறார். 'ஒரு அரசனின் மந்திரியைப்போல, அவர் சீடனை, ஆன்மீக வாழ்வின் பலவகையான நிலைகளின் படிப்படியான வளர்ச்சிகளின்மூலம் கடவுளிடம் அவனை விடும்வரையிலும் அவர் வழிநடத்திச் செல்கிறார்.'[2]

பல இயல்புகளைக் கொண்ட மனிதன் கட்டிடங்களையும், இடைநிலைக் கூடங்களையும் ஒன்றுக்குள் ஒன்றை உடைய ஒரு பெரிய அரண்மனையைப் போன்றவனாவான்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.325-326.
2. The Eternal Companion, பக்கம் 250.

பரம்பொருள் நம்மிடம் குருவின் உருவத்தில் வந்து, நம்மை நாம் இந்தப் பருஉடல் அல்ல, மனம் அல்ல, தொட்டறி உணர்வுகள் அல்ல, கருத்துக்கள் அல்ல, உணர்ச்சிகள் அல்ல ஆனால் அழிவற்ற பரம்பொருள் என்று உணரச் செய்கிறார். நாம் நமக்குப் பழக்கமற்ற ஒரு நாட்டில் பயணம் செய்யும் பொழுது, வழிகளை நன்கு அறிந்த ஒரு வழிகாட்டியை வைத்துக்கொள்வது அறிவுக்கு உகந்ததாகும். குருவானவர். நாம் அடைய வேண்டிய இடத்திற்கு நம்மை அழைத்துச் சென்று அங்கே சேர்ப்பிக்கும் வழிகாட்டியாக விளங்குகிறார்.

ஒரு குரு வேண்டும்

இந்தியாவில், ஆன்மீக வாழ்வில், குருவின் இன்றியமை யாமையை நாம் உண்மை என ஒத்துக் கொண்டு இருக் கிறோம். முதன்முதலாக ஐரோப்பாவிற்கு சென்ற பொழுது, சமய ஆர்வம் உடைய சில குழுக்கள், அவர்களால் எத்தகைய முறையான பயிற்சியுமின்றி கடவுளுடன் பேசவியலும், கடவுளின் குரலைக் கேட்க இயலும், ஆன்மீக வாழ்விற்கான வழிகாட்டுதல்களையும் பெற இயலும் என்று கூறியதைக் கேட்டு நான் வியப்படைந்தேன். நான் சில நிகழ்ச்சிகளை ஆராய்ந்தேன். மற்றும் நான் எதிர்பார்த்தபடியே இந்த மனிதர்கள் அனைவரும் தங்களுடைய சொந்தக் குரல் களையே கேட்டுக்கொண்டிருந்தனர் என்பதைக் கண்டு கொண்டேன். அது சில நேரங்களில் பயனுடையதாகவும் இருக்கலாம். ஒரு தூய்மையற்ற மனிதனிடமிருந்து கட வுளும், தெய்வீகக் குரலும் தொலைவிலேயே இருக்கின்றன. நல்ல பயிற்சி பெற்றுள்ள, தூய்மையான மனமுடைய ஒரு வனால் கண்டிப்பாகக் கடவுளுடன் உள்ளே குடிகொண்டுள்ள ஆன்மாவுடன் பேசவியலும். ஆனால் தூய்மையற்ற, பயிற்சி யற்ற தனிமனிதர்கள் அதையே உரிமை கொண்டாடுவதால் அவர்கள் தங்களை ஏமாற்றித்தான் கொள்கிறார்கள். இருந்தும் அவர்கள், அவர்களுக்கு வெளிப்புறத்திலிருந்து உதவி தேவை யில்லை என்று கூறுகிறார்கள். என்னுடைய ஆச்சாரியர் சுவாமி பிரம்மானந்தர், 'ஒருவன் திருடுவதைக் கற்றுக்

கொள்ள விரும்பினாலும் அதற்கு அவனுக்கு குருவானவர் தேவைப்படுகிறார். மற்றும் பரம்பொருளைக் குறித்த இந்த ஞானத்தை, இந்த மிகச் சிறப்புடைய பிரம்மவித்யையை அடைவதற்கு, அதற்கு ஒரு ஆச்சாரியர் தேவைப்படுவதில்லையா?' என்று கூறுவார்.[1]

இதில் எத்தகைய புதிரும் இல்லை. மனிதர்கள் க்யூரி அம்மையாரிடம் கதிரியக்கத்தின் (Radium) குணஇயல்புகளைப் பற்றி அறிந்துகொள்ள செல்வார்கள். அவர்கள் ருதர்போர்டிடம் (Rutherford) அணுவின் (Atom) குண இயல்புகளைப்பற்றி அறிந்துகொள்ளச் செல்வார்கள். இயற்கை விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் தகுதிவாய்ந்த ஆசிரியரின் வழிகாட்டுதல் தேவையாக இருப்பதைப் போன்ற ஆன்மீக விஞ்ஞானத்திலும் ஆன்மாவை அறியும் உத்தியை அறிந்துகொள்வதற்கு ஒரு குருவின் வழிகாட்டுதல் முற்றிலும் தேவையானதாகும். நாம் இங்கு நமக்குத் தெரியாத இடத்தில் பயணம் செல்கிறோம். எந்த ஒரு குருவும் வேண்டாம் என்று யார் நினைக்கிறார்களோ, மற்றவர்களுக்குக் குரு ஆக வேண்டும் என்று யார் மிகவும் ஆர்வத்துடன் இருக்கிறார்களோ, அவர்கள் குருடன் குருடனுக்கு வழிகாட்ட முயற்சிக்கக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஹிந்துக்களின் திருமறை நூல்கள் திரும்பத் திரும்ப குருவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. பகவத் கீதையை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அதில் ஸ்ரீகிருஷ்ணர் முதலில் அர்ஜுனனை, எத்தகைய ஆன்மீக அறிவுரையையும் கொடுக்காமல் நேராக போர்க்களத்திற்கு அழைத்துச் செல்கிறார். பிறகு அர்ஜுனன் சரியான வழியைப் பற்றி, துயரத்தால் சூழப்பட்டிருக்கும் என்னுடைய மனம் குழப்பத்தில் இருக்கிறது. எனக்கு எது சிறந்த நன்மையை அளிக்கக் கூடியதாக இருக்குமோ அதை நிச்சயித்துக் கூறுவாய். நான் உன்னுடைய சிஷ்யன். உன்னைச் சரண் புகுந்துள்ள எனக்குக் கட்டளை இடுவாய்.'[2] அர்ஜுனன்

---

1. Spiritual Talks (Calcutta, Advaita Ashrama, 1944) பக்கம் 42-43.
2. பகவத் கீதை, 2.7.

கிருஷ்ணரைக் குருவாக ஏற்றுக்கொண்ட பிறகுதான், தெய்வீக ஆச்சாரியர் அவருடைய அறிவுரையைத் தொடங்குகிறார். சங்கரரின் விவேக சூடாமணியில் நாம் சீடன், 'ஓ குருவே, நான் பிறப்பு இறப்பு என்னும் கடலிலே விழுந்துள்ளேன். என்னை இந்தக் துன்பத்திலிருந்து காப்பாற்றுவாய்' என்று குருவிடம் வேண்டிக் கொள்வதைக் காண்கிறோம்.[1]

ஆன்மீக தீக்ஷையின் ஆற்றல்

ஸ்ரீராமகிருஷ்ணர், ஒருவர் ஒன்றேயான, மாறுபாடு அற்ற, அழிவற்ற மெய்ப் பொருளைக் காண்பதற்கு ஒருவருள் ஆன்மஞான எழுச்சி இருக்க வேண்டும். ஆன்மீக உண்மை களைப்பற்றி வறிதாகப் படித்துக் கொண்டிருப்பதும், அல்லது பேசிக் கொண்டு இருப்பது மட்டும் போதாது. ஒருவர் தன் னுள்ளே இருக்கும் ஒளியை நேரடியாகக் காண வேண்டும், உணர வேண்டும்' என்று கூறுகிறார்.

இந்த முதல் விழிப்புணர்வை எப்படி ஏற்படுத்துவது? ஞான ஒளியைப் பெற்ற ஒரு குரு, சீடனுக்கு ஆன்மீக தீக்ஷை என்னும் முறையால் இதைச் செய்கிறார். எல்லாச் சமயங் களிலுமே தீக்ஷை செய்வதற்கான சடங்குகள் உள்ளன. நீராடுதல், ஞானஸ்நானம், புனிதமான நீர் அல்லது எண் ணெயைத் தெளித்தல், திருமறை நூல்களின் வாசகங்களை ஓதுவது, மற்றும் வழிபாட்டுச் சடங்குகள் என்பன போன்ற வற்றை அது உள்ளடக்கியது ஆகும். இத்தகைய செயல்கள், தீக்ஷை பெற்றவர்களை அதன்மூலம் சமயக் கூட்டுக் குழுவில் உறுப்பினர்களாக நுழையச் செய்யும் சிறப்பியல்பினை உடைய சிறப்பு உரிமைகளுக்குத் தகுதி உடையவர்களாகச் செய்கிறது. முறையான விதிமுறைக்கு உரிய இந்த தீக்ஷை யானது நாம் இங்குப் பேசிக் கொண்டிருக்கும் ஆன்மீக தீக்ஷையைவிட மிகவும் வேறுபட்டதாகும்.

ஏசுநாதர், 'மறுபடியும் பிறந்தாலன்றி, எவரும் இறை யாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச்

---

1. விவேக சூடாமணி, 139.

சொல்லுகிறேன்' என்று இதைத்தான் குறிப்பிடுகிறார்.[1] மீண்டும் பிறப்பது என்றால் ஆன்மீக எழுச்சியை உணர்வது என்பதாகும். ஒருவர் ஒருவரை உடலுடன் அடையாளம் கண்டு கொள்வதை விட்டுவிட்டுத் தான் ஆன்மா என்பதை உணர்வதாகும்.

'மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர்,

தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர்.'[2]

அதன்பிறகு செயின்ட் பீட்டர், ஏசுநாதரின் சீடர், இந்த ஏட்டுரைப் பகுதியின் பொருளை விவரித்துள்ளார்.

'நீங்கள் அழியக் கூடிய வித்தினால் அல்ல, மாறாக உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான அழியாத வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்.'[3]

குரு என்பவர் இறைமொழியை இடைநின்று தொடர்பு படுத்துபவர் ஆவார். கடவுளின் ஆற்றலானது மந்திரத்தினால் (சொல்லால்) வெளிப்படுகிறது. மற்றும் மந்திரத்தின் மூலம் ஆன்மா விழிப்பு அடைகிறது.

இந்தியாவில் நம்மிடையே 'த்விஜன்'- இருபிறப்பாளன் என்னும் கருத்தும் உள்ளது. 'த்விஜன்' என்னும் சொல் பறவையையும் குறிக்கிறது. முதலில் முட்டை வருகிறது. பிறகு முட்டையிலிருந்து பறவைக் குஞ்சு வருகிறது. அது என்றாவது ஒருநாள் முழுமையான வளர்ச்சியடைந்த பறவை யாக முதிர்ச்சியடைகிறது. எல்லா முட்டைகளுமே குஞ்சு பொரிப்பதில்லை. எல்லாக் குஞ்சுகளும் முழுமையாக வளர்ச்சி அடைவதில்லை. அதைப்போல் எல்லா மனிதர் களும் ஆன்மீக விழப்புணர்வை அடைவதில்லை. மனிதர்கள் ஆன்மீக முன்னேற்றத்தின் பல நிலைகளில் உள்ளனர். பலராலும் நன்கு அறியப்பட்ட ஒரு வடமொழி சுலோகம்

1. பைபிள்—செயின்ட் ஜான், 3:3.
2. மேற்கண்ட நூல், 3:6.
3. பைபிள்—1 பீட்டர், 1:23.

'இயற்கையாகப் பிறக்கும் பொழுது ஒரு மனிதன் சூத்திரனாகப் பிறக்கிறான். அறியாமையில் இருப்பவன், தூய்மைப்பாடு சமயச் சடங்குகளால் இருபிறப்பாளன் ஆகிறான். திருமறை நூல்களை ஆராய்ந்து அறிந்து ஞானமடைவதன் மூலம் அறிஞன் அல்லது கவிஞன் ஆகிறான். பரம்பொருளை உணர்வதன்மூலம் அவர் பிரம்மனை (கடவுளை) அறிந்த பிராம்மணன் ஆகிறார்'[1] என்று கூறுகிறது. ஒரு மனிதனை உண்மையான ப்ராம்மணனாக, கடவுளை அறிந்தவனாக ஆகச் செய்வதுதான் ஆன்மீக தீக்ஷையின் நோக்கமாகும். 'அழிவற்ற பரம்பொருளை உணர்ந்துகொண்டு, இந்த உலகை விட்டு யார் பிரிந்து செல்கிறானோ அவன் பிராம்மணனாவான்'[2] என்று உபநிஷதம் கூறுகிறது. மஹாபுருஷ் மஹராஜ் சுவாமி சிவானந்தர் ஒருமுறை என்னிடம் 'ஸ்ரீராம கிருஷ்ணரிடம் யார் வந்தாலும் அவர் உண்மையான பிராம்மணனாவார்' என்று கூறினார்.

ஆன்மீக தீக்ஷயானது தனிப்பட்ட ஆன்மாவிற்கும், பரம்பொருளுக்கும் இசைவுடைமையை ஏற்படுத்துகிறது. ஒரு சீன முனிவர், இயல்பான இசைவுடைமையின் அடிப்படைக் கோட்பாட்டை இந்த முறையில் மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். அவர் யாழ் போன்ற இரு இசைக் கருவிகளை எடுத்துக் கொண்டு அவற்றை ஒரே போன்று மீட்டினார். அவற்றுள் ஒன்றை அடுத்துள்ள அறையில் வைத்தார். பிறகு தான் வைத்துக் கொண்டிருந்த கருவியில் (Kung) 'குங்' சுரத்தை மீட்டினார். உடனடியாக இரண்டாவது கருவியில் குங் சுரம் பதிலாக வந்தது. அவர் 'சியோ' (chio) சுரத்தை ஒரு கருவியில் மீட்டிய பொழுது, இரண்டாம் கருவியில், அதற்கு ஒத்திசைந்த தந்தியானது அதிர்ந்தது. ஏனெனில் அவையிரண்டும் ஒரே

---

1. ஜன்மனா ஜாயதே சூத்ர: ஸம்ஸ்காராத் த்விஜ உச்யதே ।
வேதபாடீ பவேத்விப்ர: ப்ரஹ்ம ஜானாதி ப்ராஹ்மண: ॥
—அத்ரி ஸ்ம்ருதி, 141-142.

2. அத ய ஏததக்ஷரம் கார்கி விதித்வாஸ்மால்லோகாத் ப்ரைதி
ஸ ப்ராஹ்மண: ॥
—பிரஹதாரண்யக உபநிஷதம், 3.8.10.

படிநிலையில் சுருதி கூட்டப்பெற்றிருந்தன. அவர் ஒரு இசைக்கருவியில் இடைநிறுத்தம் செய்தால் (இரண்டு ஒலி களுக்கு இடையிலுள்ள குரலெடுப்பு வேற்றுமை) இரண் டாம் கருவியின் நாதம் தன்னுடைய சுருதியிலிருந்து வேறு பட்டு உயர்ந்த ஒலியை எழுப்பியது. அங்கு நாதம் இருந்தது. ஆனால் உயிர்ப்பண் திறத்தின் (Key-note) இயக்க விளைவு அகன்று விட்டது. அதைப்போன்று நாம் படிக்கலாம், சிந்திக்கலாம் மற்றும் பேசலாம். ஆனால் வான்பேருயிரான பரம்பொருள் மற்றும் நம்முடைய ஆன்மாக்களினிடையில் இசைவுடைமையை ஏற்படுத்தக் கற்றுக்கொள்ளவில்லை எனின் இவ்வனைத்தாலும் எந்தப் பயனும் இல்லை.

கடவுளுக்காகத் தீவிரமாக ஏங்கும் ஒரு தூய்மையான மனிதனிடம் மட்டுமே தீக்ஷையின் ஆற்றலானது வெளிப் படும். பதஞ்சலி மூன்று வேறுபட்ட சாதனைமுறைகளைக் கூறுகிறார். ‘மெதுவாக இருப்பவர்களுக்குக் கடுமையான ஆன்மீகக் கட்டுப்பாடுகளை அதிகமாகத் தாங்க இயலாது. இடைநிலையில் இருப்பவர்கள் முதலில் கூறப்பட்டவர் களை விடக் கடுமையாக முயற்சிக்கிறார்கள். மிகவும் தீவிர மாக இருப்பவர்கள், உண்மையை உணர வேண்டும் என்று மிகத் தீவிரமாக முயற்சி செய்பவர்களை உள்ளடக்கியவர்கள் ஆவார்கள். அவர்கள் தங்களுடைய மனங்களை வெளி யுலகின் கவனமாற்றங்களிலிருந்து மீட்டுப் பெற்று எப் பொழுதும் அவர்களிடம் தெய்வீக உணர்வு இருக்கப் பெற்ற வர்களாக மற்றும் கடவுளுக்காக மிகத் தீவிரமாக ஏங்கு பவர்கள் ஆவார்கள்’.[1] கடவுளுக்காக ஏங்குவது எப்பொழுதும் கடவுளுடைய அருளின் அடையாளம் என்று கருதப்பட வேண்டும்.

என்னுடைய சொந்த ஆன்மீக வாழ்க்கையின் தொடக்க காலத்தில் பாதையானது மிகவும் கஷ்டமானதாகத் தென் பட்டது. நான் சுவாமி பிரம்மானந்தரை நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட பொழுது, ‘முயற்சி செய்வாய்,

---

1. பதஞ்ஜலி யோக சூத்திரங்கள், 1.22.

முயற்சி செய்வாய்' என்று கூறினார். குருவிடமிருந்து வழி முறைகளை, அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டால் போதாது. ஒருவன் இடைவிடாமல் முயற்சி செய்ய வேண்டும். சீடன் முதலில் உண்மையை (பரம்பொருளை) உணர்வதற்கு முழுமையான மனத்துடன் விரும்ப வேண்டும். அதற்கு ஆயத்தமாக இருப்பவர்களுக்கு விழிப்புணர்வு திடீரென்று ஏற்படும். அதற்காக முயற்சி செய்து கொண்டிருப்பவர் களுக்குப் படிபடியாக வரும்.

நாம் மகிழ்ச்சியாக இருக்கும்பொழுது, அந்த மகிழ்ச்சியை மற்றவர்களுக்குக் கொடுக்க இயலுகிறது. அதைப் போன்றே, ஒரு நல்ல ஆன்மீக குருவால் அவருடைய சீடனுக்கு ஆன்மீக அதிர்வலைகளைப் பகிர்ந்து அளிக்க இயலுகிறது. நாங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் மிகச் சிறந்த சீடர்கள். இந்த ஆற்றலைச் செயல்படுத்துவதைப் பல சமயங்களில் கண்டு உள்ளோம். அவர்கள் ஆன்மீக சக்தியின் மிகப் பெரிய களஞ்சியங்களாகத் திகழ்ந்தனர். ஆனால் அவர்கள் அதை மிகவும் எச்சரிக்கை யுடன் பயன்படுத்தினர். பொதுவாக ஒரு குருவானவர் அவ ருடைய சக்தியை ஒரு மந்திரத்தின் மூலம் செலுத்துகிறார்.

மந்திரத்தின் ஆற்றல்

ஒருமுறை மஹாபுருஷ் மஹராஜ் சிவானந்தர் அவர்களை ஒரு துறவிச் சீடர் 'எல்லா மனிதர்களும் அவர்களுக்கு தீக்ஷை அளிக்கப்பட்டவுடன் ஆன்மீக விழிப்புணர்வை அடைவ தில்லை. அப்படியிருந்த போதிலும் அவர்கள் பயனடைய வது இல்லையா?' என்று கேட்டார். அதற்கு மஹாபுருஷ் மஹ ராஜ் அவர்கள் 'அவர்களுக்கு தீக்ஷை அளிக்கும் சமயத்தில் அவர்கள் எதையும் உணர்வது இல்லை என்றாலும், ஞான மடைந்த ஒரு குருவால் அளிக்கப்படும் புனிதமான நாமத்தின் சக்தி என்றுமே கைவிடாது. சீடனுக்குள் செலுத்தப்படும் ஆன்மீக சக்தியானது, காலக்கிரமத்தில் அவனிடம் நிலை மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆன்மீக விழிப்புணர்வு பின்னால் ஏற்படும்.'

முழுமையாக ஞானமடையாத, மேம்பட்ட ஒருவரால் அளிக்கப்பட்ட தீக்ஷையின் நிலை என்னவாக இருக்கும்? சாமான்னியமான மேம்பட்ட ஒருவர், உயர்நிலைப் பள்ளி யில் தன்னுடைய மேல் வகுப்புக்களில் கிட்டத்தட்ட சம நிலையில் இருக்கும் பொழுது, அவர் கல்லூரிக்குச் செல்ல ஆயத்தமாகும் முன்பு அவரே தன்னுடைய கீழ் வகுப்பு களில் இருப்பவர்களுக்கு அடிப்படையான செயல்முறைப் போதனையைச் செய்யலாம். அதைப்போல் அவரே உண்மையை நோக்கி முன்னேறிக் கொண்டு இருப்பதால், மற்றவர்களிடம் அவர் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்கிறார். ஆன்மீக வாழ்வில் போதுமான அளவு முன்னேறியுள்ளவரும் உரிய காலத்தில் ஆன்மீக விழிப் புணர்வை ஏற்படுத்துகிறார். ஆனால் தீக்ஷை பெற்றவன் ஆன்மீகப் பாதையை உண்மையாகப் பின்பற்ற வேண்டும். மந்திரம் அல்லது புனிதமான நாமமே மிகப் பெரிய சக்தியைத் தன்னிடம் கொண்டிருக்கிறது. ஸ்ரீசைதன்யர் நமக்கு இந்த உண்மையை அறிவுறுத்துகிறார். 'உன்னுடைய பலவகைப் பட்ட நாமங்கள் உன்னால் வெளிப்படுத்தப்பட்டு அதில் நீ உன்னுடைய சொந்த தெய்வீக சக்திகளைப் புகட்டி, உள்ளாய். மற்றும் அந்த நாமங்களை நினைவில் கொள்வதற்குக் கால வரையறை உன்னால் விதிக்கப்படவில்லை'.[1]

பதஞ்ஜலி, 'ஓம்' என்னும் மந்திரம் மற்றும் மற்ற புனித மான நாமங்களைத் திரும்பத்திரும்பக் கூறுவதின் (ஜபம் செய்தல்) பயன் குறித்துப் பேசுகிறார். 'அது வழியிலுள்ள பல வகையான தடைகளை அகற்றி, உள்ளுறையும் ஆன்மாவைப் பற்றிய விழிப்புணர்வை அடைய அழைத்துச் செல்கிறது'[2] என்று கூறுகிறார். எவை இந்தத் தடைகள்? நோய், சந்தேகம் மனச் சோர்வு போன்றவையாகும். மந்திர ஜபம் செய்வது ஒரு புதிய லயத்தை, இசைவுடைமையை நம் ஆளுமையில்

---

1. நாம்னாமகாரி பஹுதா நிஜஸர்வசக்திஸ்தத்ரார்பிதா நியமித ।
ஸ்மரணே ந கால: । —சிக்ஷாஷ்டகம், 2
2. தத: ப்ரத்யக் சேதனாதிகமோப்யந்தராயாபாவச்ச ।
—பதஞ்ஜலி யோக சூத்திரம், 1.29.

அறிமுகப்படுத்துகிறது. அது நரம்புகளை அமைதியடையச் செய்து மனத்தின் ஆற்றல்களை ஒருங்கிணைக்கிறது. உரிய காலத்தில் இது உள்ளுறையும் ஆன்மாவை விழிப்பு அடையச் செய்வதற்கு வழிநடத்திச் செல்கிறது. சாதனையைத் தொடங்கியிருப்பவன், தியானம் செய்யும் அனுபவத்தில் மந்திரத்தின் ஆற்றலைக் குறித்து அறிந்து கொள்ள இயலாமல் இருக்கக்கூடும். ஆனால் அவன் மனமார்ந்து மந்திர ஜபம் செய்தால் அவன் படிப்படியாக அதன் சக்தியை உணர்வான். சுவாமி பிரம்மானந்தர் 'ஜபம், ஜபம், ஜபம். நீ வேலை செய்து கொண்டிருக்கும் சமயத்திலும் ஜபம் செய்வாய். உன்னுடைய எல்லாச் செயல்களுக்கும் நடுவில் கடவுளின் நாமத்தை நூற்றுக் கொண்டிருப்பாய். உன்னால் இதைச் செய்ய இயலு மாயின், மனத்தின் எல்லா குமைச்சல்களும் அடங்கிவிடும். கடவுளின் பெயரில் அடைக்கலம் அடைந்த பல பாவிகள், தூய்மையானவர்களாகவும் விடுபட்டவர்களாகவும் மற்றும் தெய்வீகமானவர்களாகவும் ஆயினர். கடவுளிடமும், கடவுளின் பெயரின்மீதும் தீவிரமான பக்தியை மேற்கொள் வாய். அவ்விரண்டும் வேறுபட்டவை அல்ல என்பதை அறிந்துகொள்வாய்'[1] என்று கூறியுள்ளார்.

பண்டைக்காலத்தில் தீர்க்கதரிசிகள் காட்டியுள்ளதைப் போல, தற்காலத்திலும் திரும்பத் திரும்ப கடவுளின் சக்தி யானது அவருடைய தெய்வீக நாமத்தின் மூலம் வெளிப்படு கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. குருவால் உபதேசம் செய்யப்பட்ட மந்திரம் உள்ளே சேமித்து வைக்கப்பட்டு, தொடர்ந்து தியானிக்கப்படுவதால், சாதகனிடத்தில் சக்தி யானது மேலும் மேலும் பெருகுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த முறையை முத்து உற்பத்தியாகுவதற்கு ஒப்பிடுவார். முத்துச்சிப்பியானது சுவாதி நட்சத்திரம் உதயம் ஆகும் வரை காத்திருக்கும். அந்த நேரத்தில் மழை பொழிந்தால் சிப்பி அதனுடைய ஓட்டைத் திறந்து அந்த நீரின் ஒரு துளியைத் திரட்டிக் கொண்டுவிடும். அதன்பிறகு அது கடலின்

---

1. The Eternal Companion, *பக்கம் 297.*

அடிப்பரப்பிற்கு மூழ்கிச் சென்று, அங்கேயே பல மாதங்கள் தங்கியிருக்கும். அது மழைத்துளியானது ஒரு அழகிய முத்தாக மாறும்வரையில் அங்கேயே இருக்கும்.[1] அதைப் போன்றே பக்தனின் மனமும் உண்மைக்காகத் திறக்கப்பட்டு, மற்றும் குருவிடமிருந்து ஆன்மீக அறிவுரையைப் பெற்றபிறகு ஆன்மீக ஞானம் என்னும் முத்து உதயமாகும் வரையில் ஒரு முகப்படுத்தப்பட்ட சுறுசுறுப்பான ஆர்வத்துடன் அதிலேயே தன் சிந்தனையை நிலைநிறுத்த வேண்டும்.

தூய்மையான மனமே குரு

சுவாமி பிரம்மானந்தர், 'உன்னுடைய மனத்தை விடச் சிறந்த குரு வேறு எதுவும் இல்லை' என்று கூறுவார். மனித குருவானவர் எல்லா நேரங்களிலும் கிடைப்பது இல்லை. மிகச் சிறந்த குருவின் வாழ்த்துக்களையும், அறிவுரைகளை யும் பெறும் பாக்கியம் நமக்கு இருப்பினும், நமக்குத் தேவை யான பொழுது அவர் எளிதில் கிடைக்கப் பெறாமல் இருக்க லாம். ஆனால் உள்முகமாக ஒரு குரு இருக்கிறார். அது நம் முடைய தூய்மையான மனமாகும். அது எப்பொழுதும் நம் முடனேயே இருக்கிறது. சுவாமி பிரம்மானந்தர், 'மனமானது பிரார்த்தனையாலும், ஜபத்தாலும் தூய்மை பெற்ற பிறகு, அது உள்ளிருந்து கொண்டே உன்னை வழி நடத்துகிறது. உன்னுடைய அன்றாடக் கடமைகளிலும் உள்ளே உள்ள குரு உன்னை வழிநடத்துவார் மற்றும் இலட்சியத்தை அடையும் வரையில் தொடர்ந்து உனக்கு உதவி செய்வார்'[2] என்று கூறுவார்.

இதன் பொருள் என்ன? மனமானது எப்படி உள்ளே வீற்றிருக்கும் குருவாகச் செயல்படுகிறது? ஒவ்வொருவரின் இதயத்திலும் எல்லா ஞானத்தின் ஆதாரமான, ஆச்சாரியர் களுக்கெல்லாம் ஆச்சாரியரான பரம்பொருள் எப்பொழுதும்

---

1. Teachings of Sri Ramakrishna (Calcutta, Advaita Ashrama, *1975*), பக்கம், *180-181*.

2. The Eternal Companion, பக்கம் *251*.

வீற்றுள்ளது. ஒழுக்கமான, முறையான வாழ்க்கை, பிரார்த்தனை, மற்றும் தியானத்தின் மூலம் மனம் தூய்மைப்படுத்தப்பட்டவுடன் அது உள்ளே வீற்றுள்ள பரம்பொருளின் ஒளியுடன் தொடர்பு கொள்கிறது. தூய்மையடைந்த மனமானது. தெய்வீக ஞானம் என்னும் ஒழுக்கு செல்வதற்கான வழியாக உள்ளது. அது ஆன்மீக வழிகாட்டுதலை நேரடியாக ஆச்சாரியர்களுக்கெல்லாம் ஆச்சார்யரான பரம்பொருளிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. இவ்விதம் மனம் எப்பொழுது உள்ளே வீற்றிருக்கும் மெய்ப் பொருளுக்காகத் தன்னை திறந்து வைத்துக் கொள்ள கற்றுக் கொள்கிறதோ, அப்பொழுது அதனால் பல வகையான ஆதாரங்களிலிருந்து போதனைகளைப் பெற இயலும். பாகவதம், பல இடங்களுக்குச் சென்ற ஒரு அவதூதரைப் பற்றிக் (துறவியைப் பற்றி) கூறுகிறது. அவர் பல இயற்கைப் பொருட்களைத் தன்னுடைய துணை ஆச்சாரியர்களாக பெற்றிருந்ததைப்பற்றிக் கூறுகிறது. பூமித்தாயிடமிருந்து பொறுமையையும், காற்றிலிருந்து பற்றற்ற தன்மையையும் (காற்றானது நறுமணம் அல்லது கெட்ட வாசனைகளில் பாதிக்கப்படுவது இல்லை), ஆகாயத்திடமிருந்து எல்லாவகையான வரையறைக்குட்பட்ட தன்மைகளிலிருந்து சுதந்தரத்தையும் இன்னும் இதைப் போன்ற பலவற்றைப் பற்றியும் குறிப்பிடுகிறது.[1]

சமய வாழ்வை மேற்கொண்ட சகோதரர் லாரென்ஸ் எவ்வாறு ஞானத்தைப் பெற்றார் என்பதைப் பலரும் அறிந்து இருப்பீர்கள். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஞானியான லாரென்ஸ் ஒரு துறவி மடத்தின் சமையலறையில் தன்னுடைய வாழ் நாள்களைக் கழித்தார். குளிர்காலத்தின் நடுப்பகுதியில் இலைகள் ஏதுமற்ற ஒருமரம் அவரிடம், மரத்தின் வெற்றுக்கிளைகளில் இலைகள் புதுப்பிக்கப்பட்டு, மலர்களும், பழங்களும் தோன்றும் என்னும் கருத்தையும், உணர்ச்சிகளையும் தோற்றுவித்தது. எல்லாப் படைப்புக்களின் பின்னணியில் கடவுளும்,

---

1. பாகவதம், 11.7.9.

கடவுளின் ஆற்றலும் மறைந்துள்ளன என்பதை அவருக்கு இது வெளிப்படுத்துகிறது. அப்பொழுது அவர் உணர்ந்த ஆன்மீக விழிப்பு உணர்வானது அவருடைய வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நீடித்தது. நம் அனைவரிடமும் கடவுளின் ஆற்றல் மறைந்து உள்ளது. எழுச்சி அடைவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. நாம் நம்மிடம் உள்ள இந்த தெய்வீக விழிப்புணர்வு மையத்தைக் கண்டு பிடிக்க வேண்டும், மற்றும் உறங்கிக் கொண்டுள்ள இந்த ஆற்றலை வெளிவரச் செய்ய வேண்டும். புத்தர் அவர் மறைந்த பிறகு அவருடைய சீடர்களை உள்ளே வீற்றிருக்கும் இந்த குருவைத்தான் பின்பற்றும்படிக் கேட்டுக் கொண்டார். 'ஆத்மதீபோபவ' 'உனக்கு நீயே விளக்காக இரு'.

ஆனால் நாம் நம்மை ஏமாற்றிக் கொள்ளாமல் இருப்பதற்குத் தகுந்த கவனத்தை மேற்கொள்ள வேண்டும். நம் மனமானது ஒரு நல்ல குருவாக இருக்கிறது. எல்லா இடத்திலும் நமக்கு அறிவுரைகள் கிடைக்கின்றன என்று நாம் நினைக்கலாம். ஆனால் நம்முடைய சொந்த விருப்பங்களையும், எண்ணங்களையும், தெய்வீக அகத்தூண்டுதல் என்றோ, தெய்வீகக் குரல் என்றோ நாம் தவறாகக் கருதும் அபாயம் இருக்கிறது. ஆன்மீகத்தில் நல்ல வளர்ச்சி அடைந்த வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு குருவால் நாம் வழி நடத்தப்பட்டு, அறிவுரைகளைப் பெறும்பொழுது நமக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. மனித வடிவத்தில் உள்ள குருவானவர் அவருடைய சீடனின் மனத்தை ஒழுக்க முறைகளைப் பின்பற்றுவதன்மூலமும், தன்னலமற்ற தொண்டு செய்வதன் மூலமும் தூய்மைப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துகிறார். சீடன் தவறு செய்யும் பொழுது, குரு அதைக் கவனித்து அவனை மீண்டும் சரியான வழிக்குக் கொண்டு வருகிறார். ஒரு உண்மையான மனித உருவில் உள்ள குருவின் வழிகாட்டுதலைப் பெற்றுள்ள பாக்கியசாலிகள் வழிதவற மாட்டார்கள். படிப்படியாக குருவின் வாழ்த்துக்களால் மறைந்துள்ள உள்ளுணர்வின் இயல்பான ஆற்றலானது சீடனிடம் எழுச்சி அடையும். அது முதற்கொண்டு சீடனின் தூய்மைப்படுத்தப்பட்ட அகத்

தூண்டுதல் அவனுடைய குருவாகச் செயலாற்றும். அவ்வாறு தான் ஒருவருடைய சொந்த மனமானது ஒருவரின் குரு வாகிறது.

அவதார புருஷர் மிகச் சிறந்த ஆச்சாரியர்

தெய்வீக அவதார புருஷர் தலை சிறந்த ஆச்சாரிய ராக உள்ளார். ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு அவரால் ஞானத்தை அளிக்க இயலுகிறது. சுவாமி விவேகானந்தர் அவதார புருஷரை 'கபால மோசனர்' என்று அழைக் கிறார். அவரால் மனிதர்களின் விதியை மாற்றி அமைக்க இயலும். ஒருவருடைய தலை எழுத்தைத் துடைக்க இயலும். அதாவது அவர்களுடைய கர்மவினைப்பயனைத் துடைக்க இயலும்.[1] சாதாரணமான ஒரு ஆச்சாரியருக்கு நிலைமாற்றத் தைச் செய்யும் அத்தகைய ஆற்றல் இருப்பதில்லை. எளிமை யான மீனவர்கள் ஏசுநாதரின் ஸ்பரிசம் பட்டவுடன் ஞானத்தை அடைந்தனர். ஏசுநாதருக்கு தெய்வீக ஞானத்தை அளிக்கும் ஆற்றல் இருந்தது. மனிதர்களால் பாவிகள் என்று அழைக்கப்பட்ட நிலைகெட்ட, தூய்மையற்றவர்களை மாற்றம் செய்யும் ஆற்றல் அவரிடமிருந்தது. ஏசுநாதர் அவர் களிடம், 'உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன. உங் களுடைய நம்பிக்கைதான் உங்களை முழுமையாக ஆக்கி யுள்ளது. அமைதி அடைந்து செல்லுங்கள்' என்று கூறிய பொழுது அவர்கள் அப்பொழுதே எல்லா தூய்மையற்ற நிலைகளிலிருந்தும் விடுபட்டதை உணர்ந்தனர்.

ஆனால் ஏசுநாதரே தீக்ஷையை அனுபவித்தார். ஜோர்ட னில் நடந்த ஞானஸ்நானம் வேறு என்னவாக இருக்க வியலும்? அப்பொழுது சொர்க்கங்கள் திறக்கப்பட்டன. மற்றும் அவர் கடவுளின் ஆவி ஒரு புறாவைப் போல இறங்கி அவர்மீது அமர்வதைக் கண்டார். மற்றும் அவர் ஒரு அசரீரியைக்கேட்டார். 'இவன் என்னுடைய அன்பிற்குரிய மகன், அவனால் நான் மகிழ்ச்சி அடைகிறேன்' என்று

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 6.398.

நமக்குக் கூறப்படுகிறது. தற்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரை அவதாரம் என்று கருதுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டுள்ளது. அவரும் மனித வடிவில் இருந்த குருவிட மிருந்துதான் தீக்ஷை பெற்றார். அவர் காளி கோயிலில் அர்ச்சக ராகப் பணியை ஏற்றுக் கொள்ளும் முன், கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு தாந்திரீக ஆச்சாரியரால் (கேனராம் பட்டாச் சாரியா என்பது அவருடைய பெயராகும்) அவருக்கு தீக்ஷை அளிக்கப்பட்டது என்று நாம் அறிகிறோம்.[1] ஆச்சாரியர் அவருடைய காதுகளில் மத்திரத்தைக் கூறியபொழுது ஸ்ரீராம கிருஷ்ணர் உரத்த குரலில் ஒலி எழுப்பி, ஆனந்த பரவச நிலை யில் ஆழ்ந்தார். ஆச்சாரியர், பல சீடர்களுக்குப் போதித்து இருப்பதாகவும் ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரைப்போல யாரை யும் சந்தித்ததில்லை என்று கூறினார்.

குருதேவர் அவர்முறை வந்தபொழுது அவருடைய தலைசிறந்த சீடரான நரேந்திரநாதனுக்கு ராமன் என்னும் பெயரிட்டு தீக்ஷை அளித்தார். மற்றும் அந்த இளைஞனின் ஆன்மீக உணர்வுகள் மிகவும் உச்ச நிலைக்குத் தூண்டப் பட்டது. பலமணி நேரங்களுக்கு அவர் ஆனந்த பரவச நிலை யில் ஆழ்ந்திருந்தார். அதன்பிறகு அந்தச் சீடர் அவர்முறையில் சுவாமி விவேகானந்தராக, ஆன்மீகத்தின் மின் ஆக்கப் பொறி யாக (Dynamo) ஆனார். 1892 ஆம் ஆண்டில் விவேகானந்தர் அமெரிக்கா செல்வதற்கு ஒரு ஆண்டு முன்பு, சென்னையில் ஒரு கல்லூரியில் பேராசிரியராக இருந்த ஒரு உலோகாயத வாதி சுவாமி விவேகானந்தருடன் சமய உண்மைகள் குறித்து வாதிட்டார். சுவாமி விவேகானந்தர் அவரைச் சற்றே தொட் டார். அந்த ஐயப்பாடு உற்றவர் உடனடியாக மாற்றம் அடைந்தார். அதற்குப் பிறகு அந்த மனிதர் உலகைத் துறந்து வாழ்ந்தார். மற்றும் ஒரு மஹானாக மறைந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு, மற்றவர்களை மிக உயர்ந்த விழிப்புணர்வு நிலைக்கு உயர்த்தும் ஆற்றல் இருந்தது. ஒரு

1. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர் 1.210.

வெறும் பார்வை அல்லது ஒரு வெறும் விருப்பத்தின் மூலமே ஆன்மீக சக்தியை அவரால் செலுத்த முடிந்தது. மஹாபுருஷ் மஹராஜ் சுவாமி சிவானந்தர் அவருடைய சொந்த அனுபவத்தைப் பின்வருமாறு விவரிக்கிறார். 'ஒருநாள் குருதேவர் என் அருகில் வந்தபொழுது நான் தியானத்தில் ஈடுபட்டிருந்தேன். அவர் என்னைப் பார்த்தவுடன் நான் கண்ணீர் விட்டு அழுதேன். அவர் ஒரு சொல் கூடச் சொல்லாமல் அமைதியாக இருந்தார். புல்லரிப்பதைப் போன்ற ஒரு உணர்வு எனக்கு ஏற்பட்டது. முழுவதுமாக நடுங்கத் தொடங்கினேன். அந்த நிலையை அடைந்ததற்குக் குருதேவர் என்னைப் பாராட்டினார்.'

அதற்குப்பிறகு சுவாமி சிவானந்தரின் வாழ்வில் அவரே அவருடைய மற்ற சகோதரச் சீடர்களைப்போல மிகப் பெரிய சக்தியுடன் கூடிய ஆன்மீக ஆச்சாரியரானார். நாங்கள் அவரைச் சந்தித்த பொழுது அவர் அவ்விதம் இருந்தார். அவர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் தலைவரானபொழுது இந்த ஆற்றலானது அதுவே மிக அதிகமான அளவில் வெளிப்பட்டது. 1923-ஆம் ஆண்டு வாக்கில் ஆன்மீகத்தில் ஈடுபாடுடைய ஒருவர் சிந்த் பகுதியிலிருந்து சுவாமியிடம் தீக்ஷை பெறுவதற்காக வந்திருந்தார். அந்த பக்தர் கனவில் ஒரு மந்திரத்தைப் பெற்றார். அதனுடைய உட்பொருளை அவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. எனவே அவருடைய மனம் அமைதியற்ற நிலையை அடைந்தது. மஹாபுருஷ் மஹராஜ் அவரை கோயிலிற்குள் அழைத்துச் சென்றார். தீக்ஷை அளித்தார். பிறகு அவரைச் சிறிது நேரத்திற்குத் தியானம் செய்யுமாறு கூறினார். அதன் பிறகு சுவாமி தன்னுடைய அறைக்கு மகிழ்ச்சியுடன் கூடிய ஒளி பொருந்திய முகத்துடன் திரும்பிச் சென்றார். அவருடைய மனம் தெய்வீக உணர்வால் மேம்பட்டிருந்தது. கோயிலில் குறிப்பிடத்தக்க ஏதோ ஒன்று நடந்து கொண்டிருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். அந்தப் புனிதமான நாமம் கொடுக்கப்பட்டதும், அவரிடம் ஒரு புதிய ஆன்மீக உணர்வு எழுச்சியடைந்தது. அவருடைய கன்னங்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது. அவர் மிகவும் ஆழமாகத் தியானம் செய்யத் தொடங்கினார். அவர் அவருடைய

குருவிடம் திரும்பிச் சென்ற பொழுது, எப்படி சுவாமியின் அருளால் அவர் இதயம் தெய்வீகமான அமைதியால் நிறைந்தது என்று விவரித்தார். அவருக்குத் தீக்ஷை அளிக்கப் பட்ட பொழுது கொடுக்கப்பட்ட அதே மந்திரம்தான் கன விலும் அவருக்கு அளிக்கப்பட்டது. ஆனால் அதனுடைய உட்பொருளை அதன்பிறகுதான் புரிந்துகொண்டதாகக் கூறி னார். அதன்பிறகு மஹாபுருஷ் மஹராஜ், குழந்தாய், உன்னை இன்று கடவுளே வாழ்த்தியுள்ளார். அவரால் மட்டுமே மற்றவர்களுக்கு கருணை காட்ட இயலும். நாம் கடவுளின் கைகளில் கருவிகளாக மட்டுமே இருக்கிறோம். குருவின் இதயத்தில் கடவுளே அவரை வெளிப்படுத்திக் கொண்டு, சீடரின் இதயத்தில் ஆன்மீக சக்தியைச் செலுத்துகிறார். நான் உன்னை கடவுளுக்கு அர்ப்பித்து உள்ளேன். உன்னுடைய வாழ் விற்கும் விதிக்கும் அவர் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.[1]

சாசுவதமான குரு

மனித வடிவில் உள்ள குரு, சீடனின் காதுகளில் ஒரு மந்திரத்தைக் கூறுகிறார். ஆனால் உலகின் குரு, சீடனின் இதயத்தில் பேசுகிறார் என்னும் பழமொழி உள்ளது. சாதக னிடம் ஆன்மீக விழிப்புணர்வை கடவுள் ஏற்படுத்தும் பொழுது தான் உண்மையான தீக்ஷை நிகழ்கிறது. உள்ளே குடிகொண் டுள்ள ஒப்புயர்வற்ற, நிலைத்தன்மையுடன் படைப்பு முழு வதிலும் பரவியுள்ள பரம்பொருள்தான் உண்மையான குரு ஆவார். அவர், ‘செல்இடமும், போஷித்துக் காப்பவரும், ஆள்பவரும், பார்த்துக் கொண்டிருப்பவரும், வாழுமிடமும், துன்பம் துடைப்பவரும், நண்பனும், பிறப்பிடமும், புகலிட மும், இருப்பிடமும், பொக்கிஷமும், அழியாத வித்தும் ஆவார்’.[2]

---

1. மேலும் விவரங்களுக்கு For Seekers of God, translated by Swami Vividishananda and Swami Gambhirananda (Calcutta, Advaita Ashrama, 1975), p.164-165.

2. கதிர்-பர்த்தா ப்ரபு ஸாக்ஷீ நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் ।
ப்ரபவ: ப்ரளய: ஸ்தானம் நிதானம் பீஜமவ்யயம் ॥
—பகவத் கீதை, 9.18.

சாதாரணமான குருவும், மாணவனும் சந்திக்கும் பொழுது ஒருவர் மற்றவரிடம் கடவுளைக் காண முயற்சிக்கிறார்கள். சீடன் குருவை பரம்பொருளின் கண்ணுக்குப் புலனாகும் வெளிப்பாடு என்றும், எல்லா ஆச்சாரியர்களின் ஆச்சாரியர் என்றும், தெய்வீக அருள் பாயும் வழி என்றும் காண்கிறான். இந்த மனநிலையில்தான் அவன் அவருக்குத் தொண்டு செய்கிறான். கீழ்ப்படிகிறான். மற்றும் வணங்குகிறான். இந்தியாவில், பல்லாயிரக்கணக்கான மனிதர்களால் பாராயணம் செய்யப்படும், பலராலும் நன்கு அறியப்பட்ட சுலோகங்கள் இந்தக் கருத்தை வெளிப்படுத்துகின்றன.

'ஞானம் என்னும் அஞ்சனத்தைப் பூசி, அறியாமை என்னும் பிணியால் குருடாகியுள்ளவர்களின் கண்களைத் திறக்கும் தெய்வீக குருவை நான் வணங்குகிறேன். பல பிறவிகளில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள கர்மங்கள் என்னும் பிணைப்புக்களை எரிக்கும் ஆன்மஞானம் என்னும் தீயைச் சீடனுக்கு வழங்கும் தெய்வீக குருவை நான் வணங்குகிறேன்.'[1]

'இந்தப் பிரபஞ்சம் பரம்பொருளாகிய உண்மையை அடிப்படையாகக் கொண்டது. அதேவேளையில் உண்மையற்ற பலவாகத் தோற்றமளிப்பது. தன்னைத் தஞ்சமடைந்த மக்களுக்கு 'அந்தப் பரம்பொருள் நீயே' என்னும் வேத வாக்கியத்தால் யார் அனுபூதியை அளிக்கிறாரோ, யாரை அனுபூதியில் உணர்வதால் மீண்டும் இந்த சம்சார சாகரத்தில் பிறக்க வேண்டாமோ, அந்த குருவடிவான ஸ்ரீதக்ஷிணா மூர்த்தியை வணங்குகிறேன்.'[2]

---

1. அஜ்ஞானதிமிரான்தஸ்ய ஞானாஞ்சனசலாகயா ।
சக்ஷுருன்மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீகுரவே நம: ॥
அனேகஜன்மஸம்ப்ராப்தகர்மபந்தவிதாஹினே ।
ஆத்மஞானப்ரதானேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥

2. யஸ்யைவ ஸ்ஃபுரணம் ஸதாத்மகம் அஸத்கல்பார்த்தகம் பாஸதே
ஸாக்ஷாத் தத்வமஸீதி வேதவசஸா யோ போதயத்யாச்ரிதான் ।
யத் ஸாக்ஷாத்கரணாத் பவேன்ன புனராவ்ருத்திர் பவாம்போநிதௌ
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நம: இதம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே ॥
—ஸ்ரீசங்கராசார்யரின், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்.

'ஜீவாத்மாவானது, பரமாத்மாவால் முழுமையாக ஊடுருவப்பட்டுச் சூழப்பட்டுள்ளது. ஆனால் அறியாமை யால், ஆன்மாவானது இந்த உண்மையை உணராமல் உள்ளது. அறியாமையின் முகத்திரையை அகற்றுவதே தீக்ஷை யின் நோக்கமாகும். இந்த முகத்திரை ஒருமுறை அகற்றப் பட்டுவிட்டால், தொடர்ந்து செய்யப்படும் ஆன்மீகப் பயிற்சி யின்மூலம் தொடர்பானது தொடர்ந்து செயலாற்றும்.

ஆன்மீக வாழ்விலும் கிடைப்பும், தேவையும், என்னும் முறை செயலாற்றிக் கொண்டுள்ளது. சாதகன் மிகப்பெரிய அளவில் மெய்ப் பொருளின் பேரொளிக்காக ஏங்கினால், அந்த ஒளியானது ஏதாவது ஒரு மூல காரணத்திலிருந்து அல்லது வேறு ஏதாவது ஒன்றிலிருந்து அவனுக்கு வர வேண்டும். அவனுக்கு ஏதோ ஒன்று நிகழ்கிறது. தெய்வீக அருளுக்காக அவன் இதயம் திறக்கிறது. தெய்வீக ஒளி அவன் மீது பாய்கிறது. பரம்பொருளின் அருகில் அவன் நெருங்கு கிறான். எல்லா உயிரினங்களிலும் பரம்பொருளின் பேரொளி ஒளிர்வதைக் காண்கின்றான். ஆச்சாரியர்களுக்கெல்லாம் ஆச்சாரியரான, பரம்பொருளுடன் அவன் இரண்டறக் கலக் கும் பொழுது அவனும் மற்றவர்களுக்கு தெய்வீக ஞானம் செல்லும் ஒரு வழியாகிறான். யுகயுகமாகப் போதித்துக் கொண்டிருக்கும், விழிப்புணர்வை அளித்துக் கொண்டிருக் கும், ஒளிரச் செய்து கொண்டிருக்கும் வழிகாட்டிக் கொண் டிருக்கும் பரம்பொருளுக்கு மட்டுமே அவன் தொண்டாற்று வதாக நன்கு அறிந்து கொண்டு அவன் எல்லா உயிரினங் களுக்கும் உதவுகிறான்.

9
ஞானிகளுடன் தொடர்பு

புனிதமானவர்களின் தொடர்பு தேவை

அறிவாளிகள் மற்றும் புனிதமான மஹான்களின் தொடர்பு எல்லாச் சமயங்களிலும், எல்லா ஆன்மீக வழிகளிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. உண்மையாக சாதகனின் ஆன்மீக வளர்ச்சிக்கு அது மிகவும் அவசியமானதாகும். வாழ்க்கையின் தொடக்க நிலையில் இருப்பவனுக்கு இது மிகவும் அவசியமான ஆக்கக் கூறுகளில் ஒன்றாக உள்ளது. இந்தியாவில் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைய விரும்பும் அனைவரும் புனிதமான மஹான்களுடன் தொடர்பு கொள்வதை எப்பொழுதும் ஆவலுடன் நாடுகிறார்கள். புனிதமான மஹான்களுடன் தொடர்பு கொள்வதால் ஏற்படும் நன்மைகள் யாவை? ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகளில் இதைக் குறித்து ஒருமுக்கியமான விவாதம் உள்ளது.

ஒரு பக்தர்: அப்படியாயின் அதற்குரிய வழி என்ன ஐயா?

குருதேவர்: பிரார்த்தனையும் புனிதமான மஹான்களின் தொடர்பும் ஆகும். ஒரு மருத்துவரின் உதவியின்றி உன்னால் ஒரு நோயிலிருந்து விடுபட இயலாது. ஆனால் ஒருநாள் மட்டும், சமயத்தில் ஈடுபாடு உடையவர்களுடன் சேர்ந்து இருப்பது போதுமானதாகாது. நீ அதைத் தொடர்ந்து நாட வேண்டும். ஏன் என்றால் இந்த நோய் நீடித்த ஒன்றாகும். மற்றும் நீ மருத்துவருடன் தங்கி இருக்கவில்லை எனின் உன்னால் நாடித் துடிப்பைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது. அவருடன் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதால் கபத்தின் நாடிக்கும் பித்த நீரின் நாடிக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள இயலும்.

பக்தர்: புனிதமான மஹான்களின் தொடர்பால் ஏற்படும் பயன் என்ன?

குருதேவர்: அது கடவுளிடம் நீடித்த ஆர்வத்தை ஏற்படுத்துகிறது. அது கடவுளிடம் அன்பை ஏற்படுத்துகிறது. ஆன்மீக வாழ்வில் கடவுளுக்காக ஏங்காமல் எதனையும் சாதிக்க இயலாது. புனிதமான மஹான்களுடன் எப்பொழுதும் சேர்ந்து இருப்பதால், மனமானது கடவுளுக்காக அமைதியற்று, துடி துடித்துக் கொண்டிருக்கிறது. புனிதமான மஹான்களுடன் தொடர்பு கொள்வதில் மற்றொரு பயனும் உள்ளது. அது ஒருவருக்கு எது உண்மையானது, எது உண்மையற்றது என்று வேறுபடுத்தி அறியும் தன்மையை மேம்படுத்துகிறது. பரம் பொருள் ஒன்றே உண்மையானது. சொல்லப்போனால் நிலைத்த உண்மைப் பொருள் ஆகும். உலகமானது உண்மையற்றது. சொல்லப் போனால் நிலையற்ற தன்மை உடையது ஆகும்.[1]

வேறு விதமாகச் சொல்வது என்றால், புனிதமான மஹான்களின் தொடர்பு நம்மிடம் துறக்கும் மனநிலையை ஏற்படுத்திக் கொள்ள சாதகமாக உதவுகிறது. புனிதமான மஹான்களுடன் சேர்ந்து இருப்பதால் அவர்கள் அனைத்தையும் துறந்தவர்களாக இருப்பதால், மற்றவர்கள் துறவின் மேன்மையையும், மதிப்பையும், அதைப் பின்பற்றுவதற்கான மன உறுதியையும் பெற இயலும். ஒரு இஸ்லாமிய தீர்க்கதரிசியைப்பற்றிய ஒரு கதை உள்ளது. ஒரு நாள் ஒரு சுல்தான் அவரைக் காண வருகை தந்தார். சுல்தான் துறவியின் துறவு மனப்பான்மையைப் பாராட்டினார். அதற்குத் துறவி, ‘என் துறவா? ஏன், உங்களுடையது இன்னும் சிறந்ததாகும். நான் இந்த உலகம் மற்றும் அதன் இன்பங்களை மட்டுமே துறந்திருக்கிறேன். ஆனால் நீங்கள் கடவுளையும் மற்றும் வானுலகத்திற்கு உரிய எல்லா இன்பங்களையும் துறந்திருக்கிறீர்கள்!’ என்று பதிலளித்தார்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.40.*

முறையான தொடர்பு என்னும் கேள்வியானது மிகவும் முக்கியமான ஒன்றாகும். மற்றும் புத்தர், 'முறையாகச் சிந்திப்பது' என்று கூறியுள்ளதுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்குகிறது. ஆனால் நடைமுறை வேதாந்தத்தில் ஒரு காரணத்திற்காகவும் இம்முறையை விட்டுவிடக் கூடாது. செருக்குடன் ஒட்டு இல்லாமல் இருத்தல், சொரணையற்று இருத்தல், இரக்கமற்ற தன்மையுடனிருத்தல் என்னும் கேள்வி இது அல்ல. அதற்கு மாறாக, முழுமையான பரிவுடன் கூடிய ஒரு செயலாக இருக்கலாம். வெளிப்படையாக ஒருவர் குறிப்பிட்ட சிலருடன் கலந்து பழகாமல் இருக்கலாம். சிறிது ஒதுங்கி உள்ளனர். துறவு மற்றும் துறவி மடத்தில் வாழும் முறையைப் புத்த சமயம் உயர்த்தி வைத்தாலும், அது எல்லா உயிரினங்களிடத்திலும் கருணை காட்டும் ஒரு சமயமாகும்.

உடன் பயணம் செய்பவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளலாம். அதனால்தான் புனிதமான மஹான் களுடன் தொடர்பு கொள்ளுவது என்பது அத்தனை முக்கியத் துவம் உடையதாகத் திகழ்கிறது. பரஸ்பரமான உதவி, பரஸ்பரமான பரிவு இருக்க வேண்டும். ஏனெனில் இவை நம்முடைய சக்தியையும், விடாமுயற்சியையும் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்வதற்கு உதவி செய்கின்றன. நாம் எப் பொழும் ஆசிரியர்களாக ஆவதற்கு ஒருபொழுதும் முயற்சி செய்யக் கூடாது. ஆனால் உடன்பயிலும் மாணவர்களாக, நம்மால் இயலுமாயின் மற்றவர்களுக்கு உதவி செய்யலாம். சமநிலையான மட்டத்தில் தொடர்ந்து நீடித்திருப்பது எப்படி என்பதை நாம் அறிந்து கொண்டால், இது எப்பொழுதும் பாதுகாப்பானது ஆகும். பிறகு நாம் நமக்கு, மற்றவர்களுக் கும் ஆபத்தானவர்களாக இருக்க மாட்டோம். பிறகு அகங் காரமும், உயர்வு மனப்பான்மையும் நம்மிடம் துளிர்த்து, நமக்கும், பிறர்க்கும் தீங்கு செய்யாது.

'ஓ அன்னையே, நீ இயக்குபவள், நான் கருவி' என்னும் இந்த மனப்பான்மையைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டும்.

உயர்வு மனப்பான்மையை மேற்கொள்ளுதல் கூடாது. மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்கு முன்பு அவர்களுக்கு அர்ப்பிக்கும் தன்மையுடன் தொண்டாற்றுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கடவுளுக்குச் சரணடையும் மனப்பான்மையையும் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் சில நேரங்களில் சரியான முறையான பயிற்சி இன்றி மற்றவர்களுக்கு வழிகாட்ட விரும்புகிறோம். நாம் பழத்திற்கு உரிய சரியான விலையைக் கொடுக்காமல் பழத்தை விரும்புகிறோம்.

பக்தர்கள் ஒரு சிறு குழுவாக இருந்தால், அதில் நன்மை உள்ளது. ஏனெனில் சிறிய குழுவில் ஒரே மாதிரியான இயல்பான மனப்பாங்கு மிகுந்து இருக்கும். மற்றும் நேரடியான இந்த அறிவுரைகள் எல்லாம் பயன்படத்தக்கதாக இருக்கும். அவர்கள் தொடக்க நிலையில் இருப்பவர்களாக இருந்தாலும், ஒரு சிறிய குழுவில், புறங்கூறாமல் உண்மையான பரிவு மனப்பான்மையுடன் இருப்பது சுலபமாகும். எப்பொழுதும் முதலில் தீவிரமாகவும் அதன் பிறகு விரிவாகவும் செயலாற்றுவது நல்லதாகும். ஒவ்வொரு நாட்டிற்கும், முழுமையான தூய்மையுடன் பக்தி மற்றும் தொண்டு செய்வது என்னும் உயர்ந்த லட்சியத்தை அடைய முயற்சி செய்யும் மற்றும் இந்த இலட்சியத்திற்காக அவர்களுடைய அனைத்தையும் அளிக்க ஆயத்தமாக இருக்கும். மற்றும் அந்த இலட்சியத்தை உணர்வதற்காக எதையும் இழக்க ஆயத்தமாக இருக்கும் உண்மையான, நேர்மையான தனிப்பட்ட மனிதர்களின் ஒரு குழு நமக்குத் தேவைப்படுகிறது. எந்த அளவிற்கு நாம் விரும்பினாலும், ஆன்மீக வாழ்விற்கு மிகப் பெரிய எண்ணிக்கையில் மனிதர்களை மாற்ற இயலாது. ஆனால், நம்மால் எந்த ஒரு சில நேர்மையான மனிதர்களுக்கு மாற்றத்திற்கான காலமோ, சமயமோ வந்துவிட்டதோ, அவர்களின் வாழ்க்கையை மாற்ற இயலும்.

முட்டாள்களின் சேர்க்கையை நாடாதீர்கள்

வடமொழியில் பலராலும் நன்கு அறியப்பட்ட ஒரு முதுமொழி உள்ளது. 'முட்டாள்களுடன் சொர்க்கத்தில்

வாழ்வதைவிட, காடுகளில் மலைவாழ் குலமரபுக்குழுவைச் சார்ந்தவர்களுடன் அலைவது எவ்வளவோ மேலானது.'[1]

நாம் சாதனை செய்யும் காலத்தில் நமக்குத் தூய்மை யான, ஆழமாக ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள அறிவுடைய நல்லவர்களின் தொடர்பு கிடைக்காமல் இருந்தால், உலகியல் மனப் பான்மை கொண்டவர்களின், முட்டாள்களின் தொடர்பை நாடுதல் கூடாது. மற்றும் அவர்களுடன் இருக்க வும் கூடாது. நாம் தற்பொழுது உள்ள நிலையில் அவர் களுடைய தூய்மையற்ற, நெறியற்ற தன்மையின் அதிர் வலைகள் நம்மைப் பாதிக்கும். நாம் அதை அறிந்துகொள் ளாமல் இருப்போம். மற்றும் எதுவும் நடக்கவில்லை என்று நினைத்துக்கொண்டிருப்போம்.

மடத்தில், ஸ்ரீராமகிருஷ்ணரின் இளவயதுடைய சீடர்கள் சுவாமி விவேகானந்தரிடம், கடவுளை உணர்வதில் அவர்கள் இன்னும் வெற்றி பெறவில்லையாதலால், அவர்கள் தங்களுடைய குடும்பங்களுக்குத் திரும்பிச் சென்று, இல்லறத்தை மேற்கொண்டவர்களைப்போல வாழலாமா என்று முறையிட்டனர். அதற்கு சுவாமிஜி, 'நான் இராமனைக் கண்டுகொள்ளவில்லை எனின் அதற்காக சியாமாவிடம் (பெண்) செல்லலாமா? என்னால் கடவுளை உணரமுடிய வில்லை என்றால், அதற்காக உலகியலிற்குத் திரும்ப வேண்டும் என்பது பொருளாகுமா?' இல்லை. ஒருபொழு தும் இல்லை. இந்த மனப்பான்மையைத்தான் ஒவ்வொரு வரும் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் பொதுவாக, மனிதர்கள் யாராவது ஒருவரின் தோழமையை விரும்பு கிறார்கள். அது நல்லதாக இல்லாமல் இருந்தாலும் விரும்பு கிறார்கள். அவர்கள் தனியாக இருக்க விரும்புவதில்லை. இதுதான் முற்றிலும் சிக்கலானது ஆகும்.

---

1. வரம் பர்வததுர்கேஷு ப்ராந்தம் வனசரை: ஸஹ ।
ந மூர்கஜன ஸம்பர்க: ஸுரேந்த்ரபுவனேஷ்வபி ॥
—பர்த்ருஹரி, நீதிசதகம், 14.

பக்தன், கடவுளைக் குறித்தும், ஆன்மீக விஷயங்களை மட்டுமே கேட்கவும், பேசவும் விரும்புவதும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளான் என்பதற்கான அடையாள மாகும். ஒரு பக்தன் உலகியலில் தொடர்பு உடையவர்களின் கூட்டுறவை விரும்பினால் மற்றும் உலகியல் விஷயங்களைக் குறித்துப் பேசுவதை நாம் கண்டால், அவனுடைய பக்தியில் ஏதோ தவறு இருக்கிறது என்பது பொருளாகும். அவனுடைய நேர்மையும், உண்மையும் கேள்விக்குரியதாகி விடும். வெளி யிலுள்ள ஒரு பொருளானது, அப்பொருளுக்கு என்னிடம் அகத்தில் ஒரு இணக்கம் அல்லது விருப்பம் இருந்தால்தான் அது என்னை ஈர்க்கும். சிறகுகள் ஒரே போன்று இருக்கும் பறவைகள் ஒருங்கிணைந்து பறப்பதற்குக் காரணம், அவைகளுக்குள் ஒரே மனப்பான்மை இருப்பதுதான் ஆகும். உண்மையாகவே ஆன்மீகத்தில் ஈடுபாடு உடையவர்களால், உலகியலை விரும்பும் மனமுடையவர்களின் பேச்சிலோ, அவர்களுடன் சேர்ந்து இருப்பதிலோ ஆர்வம் காட்ட இய லாது. உலகியலை விரும்பும் மனமுடையவர்கள், அவர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும், அறிவாற்றல் நிரம்பப் பெற்ற வர்களாக இருப்பினும் விவேகமற்றவர்கள் ஆவார்கள். மற்றும் ஆன்மீகத்தில் ஈடுபாடு உடையவன், அத்தகைய விவேகமற்றவர்ளுடன் காலத்தைக் கடத்தக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். இது மிகமிக அவசியமான தாகும். உங்களில் சிலருக்கு நான் இதை ஏன் மீண்டும் மீண்டும் கூறுகிறேன் என்பது எனக்குத் தெரியும்.

முதலில் உன்னைக் காப்பாற்றிக் கொள்

சில மனிதர்கள் சுறுசுறுப்புடன் மற்றவர்களைக் 'காப் பாற்ற'ச் செல்வதற்குப் போவதை நீங்கள் பார்த்து இருக்கிறீர் களா? மேற்கத்திய நாடுகளில் மட்டும் அவர்கள் பொதுவாகக் காணப்படுகிறார்கள். எப்பொழுதும் மற்றவர்களின் ஆன்மாக் களை நரகவேதனைகளிலிருந்து காப்பாற்றுவதில் சுறுசுறுப் புடன் இருக்கும் சில மனிதர்கள் உள்ளனர். நீங்கள் மஹான் களாக ஆகியுள்ளீர்கள். மற்றும் நீங்கள் விரும்பும் யாருடன்

வேண்டுமானாலும் நல்ல தொடர்பு கொள்ளலாம் என்று நினைக்காதீர்கள். ஒரு புத்தரோ, ஒரு ஏசுநாதரோ, ஒரு இராம கிருஷ்ணரோ ஒரு பாவியிடம் செல்லலாம். அவனுடன் தொடர்பு கொள்ளலாம். அவனை மீட்கலாம். உன்னுடைய நிலை வேறானது. உன்னை மீட்டுக் கொள்வதற்குக் கூட தேவையான அளவு உறுதியை நீ வளர்த்துக் கொள்ளவில்லை. நான் என்ன கூறுகிறேன் என்பது உனக்குப் புரியவில்லை எனின் நீ சென்று பாவிகளைச் சீர்த்திருத்த முயற்சி செய்வாய். உன் நிலை என்ன ஆகிறது என்று காண்பாய். நீ இப்பொழுது உன்னுடைய சாதனையில் சுறுசுறுப்புடன் உன்னை ஈடு படுத்திக் கொள்வாய். ஆன்மீக வாழ்வின் ஆரம்பக் கட்டங் களில், உன்னுடைய ஆன்மாவை மற்றும் கடவுளையும் தவிர, நீ வேறு எதைக் குறித்தும் கவலை அடையக் கூடாது. ஒரு உறுதி செய்யப்பட்ட நோக்கத்துடன், தீவிரமாகவும், மாறாத தன்மையுடனும் உன் சாதனையை மேற்கொள்வாய். உன் னுடைய ஜபத்திற்காகவும், தியானத்திற்காகவும் திருமறை நூல்களைப் படிப்பதற்காகவும் மேலும் மேலும் நேரத்தை ஒதுக்குவாய். நீ ஆன்மீக வாழ்வில் போதுமான அளவிற்கு முன்னேற்றமடைந்திருந்தால், ஆன்மீகத்தில் மற்றவர்களுக்கு உன்னாலும் உதவி செய்ய இயலும்.

சிலர் மற்றவர்களைவிட பால்வேறுபாட்டு உணர்வில் அதிகமாக வசியத்திற்கு உட்படத் தக்கவர்களாக இருப் பார்கள். சில மனிதர்கள் மற்றவர்களைவிட உடலின் மருட்சிக்கு மிகவும் விரைவாக உள்ளுணர்ச்சியை வெளிப் படுத்துவார்கள். சில மனிதர்கள், மற்றவர்களுடன் நெருங்கிப் பழகுவதில், மருட்சியூட்டும் பொருட்களுடன் இயங்கும் பொழுது கூடுதலான எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு லாட்டு என்னும் பெயரைக் கொண்ட ஒரு சீடர் இருந்தார். அவர் குருதேவரைச் சந்திக்கும் முன்பு, ஒரு ஏழை இடையனாக சமூகத்தின் கீழான படிநிலையில் தன்னுடைய இளமைப் பருவத்தைக் கழித்தார். அவர் மனிதர்கள் குடிப்பதைக் காண்பதில் பழக்கப்பட் டிருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணருடன் தொடர்பு ஏற்பட்டபிறகு

இளைஞனான லாட்டுவிற்கு ஒரு அருந்தகத்தைக் (குடி வழங்கும் விடுதி) கடந்து செல்ல நேர்ந்தது. மற்றும் இது அவருடைய சில இளமைப் பருவத்தின் சில பழைய நிகழ்ச்சிகளைக் கிளறி, மனத்தின் அமைதியைக் குலைத்தது. மற்றவர்களின் எண்ணங்களை அறிந்துகொள்ளக் கூடியவராக இருந்த ஸ்ரீராமகிருஷ்ணர், உடனடியாக அந்தக் காரணத்தைத் துப்பறிந்து, சாராயக்கடையின் அருகில் செல்வதற்கு எதிராக எச்சரித்தார். அதிலிருந்து அந்த இளைஞன், சாராயக்கடை உள்ள தெருவின் பக்கம் நடந்து செல்வதைத் தவிர்த்ததுடன் மட்டுமின்றி, அதன் பக்கத்தில் உள்ள தெருக்களுக்குச் செல்வதையும் தவிர்த்தான். அதற்குப் பதிலாக அவன் சுற்று வழியை எடுத்துக் கொண்டான். இதில் அவனுக்கு அதிகமாக நடக்க வேண்டியிருந்தாலும், கஷ்டமானதாக இருந்தாலும் அவன் அந்த வழியிலேயே நடந்து சென்றான். அதன்பிறகு அவர் ஞானஒளியை அடைந்தவர்களில் மிகச் சிறந்தவராக விளங்கினார் என்பதில் ஏதாவது வியப்பு இருக்க இயலுமா? மகான்கள் எப்பொழுதுமே அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் தளர்வற்ற ஊக்கமுடையவர்களாக விளங்கினர்.

சில நேரங்களில் நான் தெருக்களில் நடந்துசெல்லும் பொழுது, சில மனிதர்களைக் காணும்பொழுது அதிர்ச்சி அடைகிறேன். அவர்களுடைய முகங்களில் தூய்மையற்ற தன்மையும், பேராசையும் அதிகமாக உள்ளன. நான் அவர்களைக் கடந்து செல்லும் பொழுது அவர்களுடைய அதிர்வலைகள் என்னைத் தாக்குகின்றன. அத்தகைய மனிதர்களுடன் நாம் தொடர்பு கொள்ளும் பொழுது எத்தனை எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!

ஒரு நாடோடியைக் குறித்த ஒரு வேடிக்கையான கதை உள்ளது. பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்த ஒரு நதியில் ஒரு போர்வையைப் போன்ற ஏதோ ஒன்று மிதந்து வந்ததைக் கண்டான். அவன் உடனடியாக நதியில் குதித்து, அந்தப் பொருளிடம் நீந்திச் சென்று அதைப் பிடித்துக் கொண்டான். ஆனால் அவன் உதவிக்காக அலறத் தொடங்கினான்.

கரையில் இருந்த மனிதர்கள், அந்தப் போர்வையைப் பிடித்துக் கொண்டு இருப்பதை விட்டுவிட்டு திரும்ப நீந்தி வருமாறு கத்தினர். அந்த நாடோடி, 'நான் அதை விட்டுவிட்டேன். ஆனால் அது என்னை விடவில்லை' என்று பதிலளித்தான். அவன் ஒரு கரடியைத் தவறுதலாகப் போர்வை என்று எண்ணி விட்டான்! அதுதான் நமக்கும் ஏற்படுகிறது. நாம் சில பொருட்களின் அல்லது சில மனிதர்களின் பின்னால் செல்கிறோம். மற்றும் நம்மை அவர்களிடமிருந்து விடுவித்துக் கொள்ள இயலாமல் இருப்பதைக் காண்கிறோம்.

மற்றவர்களைக் கண்டனம் செய்தல் கூடாது

சாதகன் அனைவரிடமும் பாகுபாடற்ற முறையில் கலந்து பழக முடியாது. ஆனால் கண்டனம் செய்வது என்பது ஒரு பொழுதும் இருக்கக் கூடாது. தூய்மையற்ற மனிதர்களைக் கண்டனம் செய்து, உயர்ந்த மனப்பான்மையை நீ வளர்த்துக் கொள்ளக் கூடாது. 'நான் உன்னைவிடத் தூய்மையானவன்' என்னும் மனப்பான்மை உண்மையாகவே தவறானது ஆகும். மற்றும் அது நம்மை மட்டுமீறிய தன்னம்பிக்கை உடையவர்களாகவும் கவனமற்றவர்களாகவும் செய்து விடுகிறது. ஆனால் ஆன்மீகத்தில் நாட்டமுடையவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதன் பொருட்டு, தன்னைத் தூய்மையற்ற மனிதர்களிடமிருந்து மற்றும் அவர்களின் தூய்மையற்ற அதிர்வலைகளிடமிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும். நாம் அதிகமாக முன்னேறி, மற்றவர்களை மாற்றுமளவிற்குப் போதுமான அளவு ஆன்மீக ஆற்றலை வளர்த்துக் கொள்ளவில்லை என்றால், தீய மனிதர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது நமக்குப் பாதுகாவலாக இருக்காது. கடவுள் எல்லா உயிரினங்களிலும் இருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் கடவுளுடைய சில வெளிப்பாடுகளில், நம்முடைய இந்த தற்போதைய நிலையில் நமக்குப் பாதுகாவலாக இருக்காது. கடவுளின் அத்தகைய வெளிப்பாடுகள், ஒரு பாதுகாப்பான தூரத்திலிருந்தே வணங்கப்பட வேண்டும்.

சில வேளைகளில் தீயமனிதர்களுடன் சேர்ந்து இருப்பதை நம்மால் தவிர்க்க இயலாது. இப்பொழுது என்ன செய்யப்பட வேண்டும்? நீ வெறுப்பையோ அல்லது அக்கறை இன்மையையோ காட்டிக் கொள்ளக்கூடாது. நீ முற்றிலும் விழிப்புணர்வு உள்ளவனாக உன்னுள் (மனத்தில்) ஒரு உறுதியான தடுப்பு வேலியையும் எழுப்பிக் கொள்ள வேண்டும். உன்னை ஒரு அகக்கவசத்தால் காத்துக் கொள்ள வேண்டும். விறுவிறுப்பான முறையில் உன்னையே ஆராய்ந்து கொள். நிலையான இடம் பெறும் முன் அவற்றைத் தகர்த்து விடு. ஆன்மீகத்தில் உண்மையான ஈடுபாடு உடையவன் எப்பொழுதும் பாகுபடுத்திக் காண்பான். அது அவனிடம் ஒரு பழக்கமாக இருக்கும். நீ எப்பொழுதும் கடவுளை நோக்கி விரைந்து செல்லும் மனநிலையில் இருக்க வேண்டும். கங்காருக் குட்டி ஏதாவது ஆபத்தை உணர்ந்தால் அது அதனுடைய தாயின் பையில் குதித்து விடும். அதைப்போன்றே நாமும் ஆபத்து வரும்பொழுது, கடவுளின் கைகளில் ஓடி அடைக்கலாம் அடைவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அகங்காரம் என்னும் தடை

நாம் மனிதர்களை அவர்களுடைய சின்னத்தனம், பேராசை, அவர்களுடைய நேர்மையற்ற தன்மை, காமம், போன்ற எல்லாவற்றையும் மேலும் மேலும் தெரிந்து கொள்ளக் கொள்ள எல்லோரும் நல்லவரே என்னும் நம்முடைய மேலோட்டமான நம்பிக்கைக் குறைகிறது. அச்சமயத்தில் நாம் எதிலுமே தீங்கைக் காண்பவர்களாகவோ அல்லது நன்மையில் நம்பிக்கை அற்றவர்களாகவோ ஆகும் ஆபாயத்திற்கு ஆளாக நேரிடலாம்.

இது மிக பெரிய ஆபத்து ஆகும். ஆனால் நல்லகாலமாக, நமக்கு இவ்வுலகத்தில் மிகவும் நல்ல சமயப்பணி ஆர்வம் உடைய ஆன்மீக நாட்டமுடைய மனிதர்களும் இருக்கிறார்கள். நாம் அவர்களுடைய தொடர்பை நாட வேண்டும். ஆன்மீகத்தில் நாட்டம் உடையவர்கள், முக்கியமாக ஆரம்ப நாட்களில் ஒருவர் மற்றவருடைய தொடர்பை நாட

வேண்டும். ஆன்மீக வாழ்வில் நம்முடன் பயணிப்பவர்களுடன் நம் கருத்தை ஒத்துப் பார்ப்பது அவசியமாகும். அது மட்டுமல்ல. தூய்மையான, புனிமான மனிதர்களால் நாம் திருத்தப்படுவதற்கு அனுமதிக்க வேண்டும். நாம் மற்றவர்களால் திருத்தப்பட்டால் கோபம் கொள்கிறோம். ஆனால் நம்மிடம் உள்ள எல்லா பலவீனங்களையும் நாமாகவே கூர்ந்து கண்டு அறிய இயலாது. மற்றவர்கள் நம்முடைய தவறுகளைச் சுட்டிக் காட்டும் பொழுது நாம் அதைச் சரியான போக்கில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆன்மீக வாழ்வில், அகங்காரமானது மிகப் பெரிய தடையாக உள்ளது. தூய்மையான மனிதர்களுடன் சேர்ந்திருக்கும் பொழுதுதான் நாம் எவ்வளவு அகங்காரம் உடையவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்கிறோம். தூய்மையானவர்களின் தொடர்பானது அகங்காரத்திற்கு மாற்று மருந்தாகும். அதனால்தான் இந்தியாவில் புனிமான மனிதர்கள் பயபக்தியுடன் போற்றப்படுகிறார்கள். ஹிந்துப்புராணங்களில் புனிதமானவர்களுடன் தொடர்பு கொள்வது பற்றிய புகழ் உரைகள் நிரம்பியுள்ளன. ஒரு தீர்க்கதரிசிக்குத் தொண்டாற்றும் தனிச் சலுகை பெற்றவரால் மட்டுமே, அத்தகைய தொண்டின் மதிப்பை உணர இயலும்.

சில நேரங்களில் நம்முடைய ஆன்மீக வளர்ச்சியின் போக்கில், ஒரு வகையான ஆரோக்கியமற்ற அகமுக நோக்கை நாம் வளர்த்துக்கொள்ள நேரிடலாம். நாம் புனிதமானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள விழைந்தால் இது தவிர்க்கப்பட வேண்டும். நாம் மனச் சோர்வுள்ள மனநிலையில் இருக்கும் பொழுது, கடவுளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள கஷ்டமாக இருக்கும் பொழுது ஆன்மீகத்தில் முன்னேறியுள்ள மஹான்களின் தொடர்பும் மற்றும் அவர்ளுடன் உரையாடுவதும் மிகவும் உதவத்தக்க வகையில் இருக்கும். மனநிலை திரிந்த அகமுகநோக்கானது ஆன்மீகத்தில் நாட்டமுடைய மனிதர்களின் தொடர்பைத் தவிர்க்கவும் செய்துவிடுகிறது. புறமுகநோக்காளர், மஹான்களின் தொடர்பை அவர்களுடன் தேவையற்ற பேச்சுக்களைப்

பேசி நேரத்தை வீணடிக்கவே நாடுகிறார்கள். சமநிலையுடன் கூடிய இயல்பைக் கொண்டவர்கள் தூய்மையான மனம் உடைய ஆன்மீகத்தில் நாட்டமுடையவர்களுடன் சேர்ந்து இருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றனர். அவர்களுடன் ஆன்மீக விஷயங்கள் குறித்து விவாதிக்கிறார்கள். அவர்களுடைய சொந்த நம்பிக்கையையும் ஆன்மீகத்தில் தணியாத ஆர்வத்தையும் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். ஸ்ரீராமகிருஷ்ணர் எப்பொழும் தன் சீடர்களை ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு ஊக்கமளித்தார்.

நாம் நம்மை மஹான்களுடன் தொடர்புபடுத்திக் கொண்டாலும், மனிதத் தொடர்பிற்குப் பின்னால், ஒரு தெய்வீகத் தொடர்பு, ஒரு தெய்வீக உறவு உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அனைவரிடமும் கடவுள் குடிகொண்டுள்ளார் என்பதையும், அவர் ஒன்றுபடுத்தி இணைப்பவர் என்பதையும் உணர வேண்டும். நாம் எப்பொழுதுமே மற்றவர்களுடன் நம் தொடர்பைக் கடவுளின் மூலமே ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அவர்களுடைய சீடர்களிடம் அளவற்ற அன்பு இருந்தது. ஆனால் அந்த அன்பானது கடவுளிடம் மனித குலத்தின் ஒற்றுமை உணர்வை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஒருநாள் அவர் அவருடைய பாசத்திற்கு உரிய சீடரான நரேந்திரனிடம், 'நான் நாராயணனை உன்னிடம் காண்பதால் உன்னை விரும்புகிறேன்' என்று கூறினார். இயற்பொருள் சார்ந்த எந்த ஒரு பற்றுதலுமின்றி அவருடைய அன்பானது தெய்வீகப் பண்பு வாய்ந்ததாக இருந்தது.

ஒருவரின் குருவைக் குறித்த மனப்பான்மை

ஒரு ஞானமடைந்த மஹானின் வழிகாட்டுதலைப் பெற்றவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள் ஆவார்கள், எப்படி இருப்பினும், ஒரு குருவிடம் தொடர்பு கொண்டு அவரிடமிருந்து சில அறிவுரைகளைப் பெறுவது மட்டும் போதாது. அவருடைய அறிவுரைகளை நீ மிகுந்த நம்பிக்கையுடன் பின்பற்ற வேண்டும். ஆனால் அவரிடம் நீ மிக

அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு ஒட்டிக் கொள்ளக் கூடாது. மற்றும் அவருடைய வெளிப்புறத் தோற்றத்தைப் பற்றிக் கொள்ளக் கூடாது. ஒரு உண்மையான குரு அவருடைய சீடர்களைத் தன்னை விடக் கடவுள் மீது அதிகம் அன்பு கொள்வதைத்தான் விரும்புவார். மற்றும் அவர் தன்னுடைய சீடனைக் கடவுளின் ஒரு கருவியாக மட்டுமே காண்பார்.

நமக்கு உண்மையை வெளிப்படுத்தும் உண்மையான குருவானவர் நம்முடைய சொந்த இதயத்திலேயே இருக்கிறார். மற்றும் அவர் கடவுளைத் தவிர வேறு யாரும் இல்லை. அவருடைய அறிவுரையானது அடுத்தடுத்த ஒரு மனிதரின் மூலம் வருகிறது. அவர் குரு என்றும் அழைக்கப் படுகிறார். எனவே கடவுளானவர் சில நேரங்களில் குருக் களின் குரு என்று அழைக்கப்படுகிறார். வெளியுலகில் உள்ள குருவிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கக் கூடாது. நம்மிடம் உள்ள கடவுளிடம் உள்ளே வீற்றிருக்கும் குருவுடன், நம் முடைய ஆன்மாக்களின் ஆன்மாவாக இருப்பவரிடம் ஒரே சுருதியில் இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். மற்றும் அவரிடமிருந்து அறிவையும், அகத் தூண்டுதலையும் பெற வேண்டும். நீ உன்னுடைய இஷ்ட தெய்வத்தை, எல்லா குருக்களின் குருவாகக் காணலாம்.

குரு மற்றும் சீடன் என்னும் இருவரும் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்குப் பொதுவாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். குருவானவர் சீடனிடத்தில் கடவுளைக் காண முயற்சி செய்ய வேண்டும். சீடனும் குரு விடத்தில் கடவுளை உணர முயற்சித்தால்தான் இது சாத்திய மாகும். ஒருவர் மற்றொருவரை ஒரு மனிதராக எண்ணாமல் அடிப்படையான மூல உண்மையின் வெளிப்பாடு என்று எண்ணுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மற்றும் தன்னையும் அதே போன்று கருத வேண்டும். இதுதான் நடைமுறை வேதாந்தத்தின் தொடக்கமாகும். அதன் பிறகு உரிய நேரத்தில் இந்தக் கருத்தானது எல்லாவற்றையும் எல்லா உயிரினத்தையும் சூழ்ந்துகொண்டுவிடும்.

குருவானவர், சீடர்களின் (பக்தர்களின்) உருவத்தில் கடவுள் என்னிடம் வந்திருக்கிறார். நான் அவர்களிடம் அவர்களுடைய இயல்புகளைவிட கடவுளைக் காண முயற்சி செய்ய வேண்டும் என்று கருத வேண்டும். சீடனும் அதேபோன்று யார் அவனுக்கு அறிவுறுத்துகிறாரோ (குரு) அவரிடம் தெய்வீக இயல்புகளைக் காண வேண்டும். மற்றும் அது தன்னிடமும் இருப்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகுதான் ஆன்மீக போதனையானது பயனளிக்கும். மற்றும் ஒருவரால் அதே தெய்வீகம் அனைத்திலும் இருப்பதை உணர இயலும்.

இந்தியாவில் குருவழிபாட்டு மரபு (இந்தியாவில் குரு பரம்பரை)

இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே குரு அல்லது ஆன்மீக குருவிற்கு மிகஉயர்ந்த மதிப்பு அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஹிந்து திருமறை நூல்கள் குருவை பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன்; இல்லை பரப்பிரம்மம் என்று கூறுமளவிற்குச் செல்கின்றன.[1] பெரும்பாலான மனிதர்கள், எப்படியிருப்பினும் இது உலகியல் தொடர்பான கண்ணோட்டத்துடன் கூறப்படவில்லை. ஆனால் ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் கூறப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடுகின்றனர்.

ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள பெரும்பான்மையோர் அவர்களை அவர்களுடைய உடல்களுடனும் இயல்புகளுடனும் அடையாளம் கண்டு கொள்கிறார்கள். மற்றும் ஒரு ஆண் அல்லது பெண் கடவுளிடம் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, அங்கேயே ஒட்டிக் கொண்டு விடுகிறார்கள். அவர்களுக்கு ஒரு ஆன்மீகக் குரு இருப்பார் எனின், அந்த குருவின் உருவத்தின்மீதும் பண்புகளின் மீதும் பற்றுக் கொண்டு பற்றிக் கொண்டும் விடுகிறார்கள். இது உலகியலைத் தவிர வேறு எதுவும் இல்லை. இருப்பினும் அதற்கு

1. குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு குருர்தேவோ மஹேச்வர: ।
குருரேவ பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுருவே நம: ॥
—ஸ்கந்த புராணம், குருகீதை, 1.46.

ஆன்மீக வண்ணம் பூசப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் அது எத்தனைப் பயன் உடையதாக இருப்பினும் இந்த ஆன்மீக உலகியலானது தாண்டப்பட வேண்டும். ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதுதான் கேள்வியாகும்.

ஒருவர் ஆன்மீகப் பாதையில் முன்னேறிக் கொண்டு இருக்கும்பொழுது, வழிபட்டுக் கொண்டிருப்பவர் ஆன்மா, வழிபாட்டிற்கு உரிய கடவுள், பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை உணர வேண்டும். ஆன்மா வானது ஒரு விதத்தில், பரம்பொருளின் பகுதியாகும். மற்றும் குருவும் அவருடைய உண்மையான இயல்பில் தெய்வீகத்தின் வெளிப்பாடாகத் திகழ்கிறார். அவரிடமிருந்து தெய்வீக அருளும், ஞானமும், அன்பும் பேரின்பமும் பாய்கின்றன. பக்தன், இஷ்டதெய்வம் மற்றும் குரு என்னும் இவர்கள் உண்மையிலேயே அறிவு எல்லையைக் கடந்துள்ள பரம் பொருளின் வெளிப்பாடுகள் என்னும் உண்மையை எப்படி உணர்வது என்பதுதான் நம்முன் இப்பொழுது உள்ள கடமைப் பொறுப்பாக உள்ளது.

தியானம் செய்யத் தொடங்கும் முன்பு, முதலில் உடலை ஒரு கோயிலாகக் கருதுவோம். நாம் இப்பொழுது இதயக் கதவின் வழியாக இந்தக் கோயிலிற்குள் நுழைவோம். மற்றும் நம்முடைய இதயமானது, வரம்பற்ற ஒளி மற்றும் வரம்பற்ற விழிப்புணர்வின் ஒரு பகுதியாகிய ஜீவாத்மாவின் விழிப் புணர்வாலும், ஒளியாலும் நிறைந்துள்ளது. நாம் நம்முடைய உடலையும், மனத்தையும், உலகம் முழுவதையும் அந்த வரம்பற்ற மெய்ப்பொருளில் இரண்டறக் கலக்குமாறு செய்வோம். மற்றும் வரம்பற்ற ஒளியாலும், வரம்பற்ற விழிப்புணர்வாலும் முழுமையாக ஊடுருவிப் பரவியுள்ளது. ஒளி மற்றும் விழிப்புணர்வின் சிறிய கோளமாக இருக்கிறோம் என்று கற்பனை செய்வோம். இந்த வகையான தியான மானது, சாதாரணமான மனிதர்களின் ஆற்றலை விஞ்சியிருக் கிறது. அதனால் நாம், நம்முடைய ஆன்மா ஒரு தூய்மையான மனம் சார்ந்தஉடல் மற்றும் ஒரு தூய்மையான இயற்கையான உடலை அணிந்துகொண்டுள்ளது என்று நாம் எண்ணுவோம்.

மற்றும் ஒரு பக்கத்தில் பரம்பொருள் குரு வடிவத்திலும், மற்றொரு பக்கத்தில் இஷ்ட தெய்வத்தின் வடிவத்திலும் வந்துள்ளது. குருவை வணங்கிய பிறகு, அவருடைய வடிவத்தை இஷ்ட தெய்வத்துடன் ஒருங்கிணைக்க வேண்டும். பிறகு அவன் மீதோ, அவள் மீதோ, இஷ்ட மந்திரத்தை இடையறாது கூறிக்கொண்டு தியானிக்க வேண்டும்.

முதல்படிநிலையானது ரூபதியானமாகும். அதாவது ஒளியுடனும், பேரின்பத்துடனும் கூடிய கடவுளின் முழுமையான வடிவத்தைத் தியானம் செய்வது ஆகும். அடுத்தது குணதியானமாகும். அதாவது கடவுளின் வரையற்ற நல்ல இயல்புகளான அளவற்ற தூய்மை, ஞானம், அன்பு, பேரின்பம் என்ற இவற்றின் மீது தியானிப்பது ஆகும். ஸ்வரூபதியானம் என்பது மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமாகும், அதாவது, எல்லா இடங்களிலும் ஊடுருவிப் பரவியுள்ள விழிப்புணர்வு நிலையைத் தியானிப்பது ஆகும். அதில் பரம்பொருளும், குருவும், சீடனும் வேறு வகையான வெளிப்பாடுகளாக உள்ளனர். தியானத்தின் முதலில் கூறப்பட்ட கட்டங்களிலும், வரம்பற்ற பின்னணியானது ஒரு பொழுதும் மறக்கப்படக்கூடாது.

ஆன்மீக சாதனையில் ஈடுபடுபவன் ஒரு மனித வடிவத்தைப் போற்றி வழிபடுவதும் மற்றும் கண்மூடித்தனமான ஒரு தனிப்பட்ட சிறந்த மனிதரை வணங்கி வழிபடுவதும் ஆன்மீக முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் தடைகள் என்று எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். மற்றும் சீடன், குரு என்னும் இருவருக்குமே தீங்கு விளைவிப்பது ஆகும். ஒரு உண்மையான குருவானவர் சுதந்திரமாக இருப்பவர் ஆவார். மற்றும் அவருடைய எல்லாச் சீடர்களும் சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்பதையும், அவர்களுடைய தெய்வீகத் தன்மையை உணர வேண்டும் என்றும், அவர்களுடைய தனிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், சீரான மனப்பாங்கை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மிகவும் விரும்புவார். சீடர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் குருவின் உதவியையும், வழிகாட்டுதலையும்

எதிர்பார்த்து குருவையே பற்றிக் கொண்டால், அவர் மந்த நிலையை உணர்ந்து, அவர் தானே அனுபவிக்கும் ஆன்மீக பலத்தையும் சுதந்திரத்தையும் அவர்களை அடைய இய லாமல் செய்துள்ள தன்னுடைய இயலாமையை எண்ணி வருத்தமடைவார். அவர் அவரைப் பல சீடர்கள் கண்மூடித் தனமாகப் பின்பற்றுவதைவிட தற்சார்புடைய ஒருவரைத் தன் சீடராகக் கொள்வார்.

இதனால்தான் விவேகமுள்ள ஆன்மீக குரு இந்தியாவில் வழக்கமாகக் காணப்படும் கண்மூடித்தனமாகச் செய்யப் படும் தனியொருவருக்குத் தொண்டு செய்யப்படும் முறையை வேண்டாம் என விவாதிக்கின்றனர். பெரும்பாலான சீடர்கள் இலட்சியத்தைப் பின்பற்றி, அதன்படி வாழ்வது என்பது குருவிற்குத் தனிப்பட்ட முறையில் தொண்டு செய்வதைவிட மிகவும் முக்கியமானது என்பதை மறந்து விடுகின்றனர்.

வெளியுலகில் உள்ள குருவை அதிகமாகச் சார்ந்திருப் பதைவிட மேலும் மேலும் உள்ளே குடிகொண்டுள்ள குருவைச் சார்ந்திருக்க நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். குரு இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அல்லது மறைந்து விட்டிருந்தாலும், நாம் ஆன்மீக விழிப்பு உணர்வு நிலையில் ஒரு நிலையினை அடைந்து இருக்க வேண்டும். மற்றும் அதைத் தக்க வைத்துக் கொள்ளவும் வேண்டும். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுகிறார்: ‘இந்த அறையிலிருந்து அந்த அறைக்கு’ அதாவது உடல் சார்ந்த விழிப்புணர்வு மட்டத்திலிருந்து, சூக்ஷ்மமான விழிப்புணர்வு மட்டத்திற்குச் செல்ல வேண்டும். வரையற்ற ஞானமாகவும் வரையற்ற அன்பாகவும் வரையற்ற பேரின்பமாகவும் திகழும் வரையற்ற உருவமற்ற பரம்பொருளைத் தியானிப்பதன் மூலம்தான் (மேலே கூறப்பட்டுள்ள வகையில்) குருவழி பாட்டுமுறை என்னும் வழிவழிப்பட்ட முறையில் விழும் விபத்தைத் தடுத்துக் கொள்ள இயலும். மீண்டும் நாம் ஒரு தனிச் சிறந்த மனிதரின் மட்டத்திற்குத் திரும்பும் கட்டத்தில் நுண்ணுருவை (ஆன்மாவை) வலியுறுத்த வேண்டும். மற்றும் பருஉடலை அல்ல. தன்னைத்தானே ஏமாற்றிக்

கொள்வதைத் தவிர்ப்பதற்கு, பரம்பொருளை, எல்லா வித வடிவங்களையும் அதில் கலக்குமாறு செய்து தியானிப்பது நல்லது ஆகும். மற்றும் விடாத பயிற்சியின் மூலம் மிக உயர்ந்த விழிப்புணர்வு நிலையை ஏற்படுத்திக் கொள் வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது முழுமையான சுதந்திரத்தையும், அமைதியையும் உணரும் திசையை நோக்கி மாணவனுக்கு மட்டுமின்றி குருவிற்கும் உறுதுணையாக விளங்குகிறது.

ஞானமடைந்தவர்களின் வாழ்த்துக்கள்

புனிதமான மஹான்களின் தொடர்பால் ஒருவருடைய மறைந்துள்ள நல்ல ஸம்ஸ்காரங்கள் எழுப்பப்படுகின்றன. மற்றும் கெட்ட ஸம்ஸ்காரங்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பாகவதத்தில் பலராலும் நன்கு அறியப்பட்டுள்ள இந்த செய்தி உள்ளது.

'புனிதமான முனிவர்கள்தான் மிகச் சிறந்த தூய்மைப் படுத்துபவர்களாக உள்ளனர். புனித நீர் போன்றவை ஒரு வனைத் தூய்மைப்படுத்த நீண்ட காலம் எடுத்துக் கொள்ளும். ஆனால் ஒரு புனித மஹானின் தொடர்பானது ஒருவரைத் தூய்மையற்ற நிலையிலிருந்து வெகுவிரைவில் விடுவித்து விடுகிறது. மற்றும் இந்த புனிமான மஹான்கள், புனிதமான இடங்களைப் புனிதப்படுத்துகின்றனர். அவர்கள் அவர் களுடைய இதயங்களில் கடவுளைச் சுமந்து கொண்டு செல்கின்றனர்.'[1]

பாகவதத்தில் பிருந்தாவனத்திலிருந்த கோபிகைகள் முதலில் ஸ்ரீகிருஷ்ணரின் தெய்வீக இயல்பைக் குறித்து அறியாமல் இருந்தனர். அவர்கள் அவருடைய உடல் அழகால் ஈர்க்கப்பட்டு, அவரை அவர்களுடைய காதலனாகப் பெற ஏங்கினர். ஆனால் தெய்வீக இடையனுடன் ஏற்பட்ட தொடர் பானது அவர்களிடம் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் அவர்கள் உலகப் பொருட்களின்மீதுள்ள நாட்டத்தை

1. *பாகவதம், 10.48.31; 1.13.10.*

விடுத்து ஸ்ரீகிருஷ்ணரின் புனிதமான அன்பை நேசிக்கத் தொடங்கினர். மற்றும் உரிய காலத்தில், கிருஷ்ணரின் அருளால் ஆன்மீக ஞானத்தை அடைந்தனர்[1] என்று கூறப்பட்டுள்ளது.

ஆன்மஞானமடைந்தவருடன் உனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டால், கடவுளின் அருள் உன்மீது பொழியப் பட்டிருக்கிறது என்பதை நீ உணர வேண்டும். என்றைக்கு வேண்டுமானாலும் மற்றும் ஒருவேளை என்றென்றுமே அந்த அருள் உன்னிடமிருந்து அகற்றப்பட்டு விடலாம். மற்றும் உனக்கு இரண்டாவது வாய்ப்பு வராமலும் இருக்க லாம். விவேக சூடாமணியில் மனிதப்பிறவியும் முக்தியில் ஆசையும், மஹாபுருஷர்களை நாடி அடைதல் ஆகிய இம் மூன்றும் அடைதற்கு அரியது. தெய்வத்தின் அருள் மூலமாகத் தான் பெற இயலும்' என்று கூறப்பட்டுள்ளது.[2]

ஆன்மஞானமடைந்தவர்களின் தொடர்பானது மதிப்பிட இயலாததாகும். ஆனால் கிடைப்பது மிகவும் அரியதாகும். அந்த மிகச் சிறந்தவர்களின் வரம்பற்ற அன்பைப் பற்றி உனக்குத் தெரியாது. ஸ்ரீராமகிருஷ்ணரின் சில குழந்தைகள், நம்முடைய சிக்கல்களில், நமக்கு எப்படி உதவி செய்வது, சரியான வழியில் எப்படி இடுவது போன்றவற்றில் ஓயாமல் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதை நாமே பார்த்திருக்கிறோம். அத்தகைய அன்பைத் திருப்பித் தர இயலாது. அது அற்புத மானதாகும் அவைகளுக்கு யாராலும் கைம்மாறு செய்ய இயலாது. அது எப்பொழுதும் தீர்க்கப்படாமலே இருக்கும்'. இது மட்டுமே அன்பு ஆகும். அந்த அன்பிற்குப் பேரம் பேசத் தெரியாது. அந்த அன்பு தனக்கென்று எதையும் கேட்காது. அந்த அன்பு எப்பொழுதும் மேலும் மேலும் கொடுத்துக் கொண்டிருக்கும். ஒரு பொழுதும் எடுத்துக் கொள்வதில்லை.

ஒருநாள் ஸ்ரீராமகிருஷ்ணர், ஒரு செல்வந்தரை நரேனுக்கு (விவேகானந்தருக்கு) உதவி செய்யுமாறு கேட்டுக்

---

1. பாகவதம், 11.12.13.

2. சங்கராச்சாரியாரின் விவேக சூடாமணி, 3 (அத்தியாயம் 1, அடிக் குறிப்பு 3).

கொண்டார். நரேந்திரன் அப்பொழுது மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தார். அவருடைய குடும்பத்தினர் உண்பதற்கு எதுவுமற்ற நிலையில் இருந்தனர். நரேந்திரன் குறுக்கிட்டு குருதேவரை நோக்கி, 'மற்றவர்களிடம் என் தனிப்பட்ட விஷயங்களைக் குறித்து ஏன் பேசுகிறீர்கள்' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர், 'அன்பானவனே, உனக்காக, வீடு வீடாகச் சென்று பிச்சையும் எடுப்பேன் என்பதை நீ அறிய மாட்டாயா?' என்று கூறினார். இதுதான் உண்மையான அன் பாகும். நாம் சாதனை செய்து கொண்டிருந்த பொழுது, குரு தேவரின் எல்லாக் குழந்தைகளிடமும் இதை நாமே பல முறை கண்டு இருக்கிறோம். அத்தகைய அன்பு புனிதமான தாகும்! அத்தகைய அன்பிற்கும் சாதாரணமான உலகியல் உறவுகளில் நாம் அன்பு என்று அழைப்பதற்கும் அளவற்ற வேறுபாடு உள்ளது. ஆனால் அது உண்மையிலேயே ஏதாவது ஒரு உருவிலோ அல்லது மற்றொன்றிலோ தன்னல நாட்டமே யாகும். உண்மையான அன்பானது முற்றிலும் வேறுபட்ட தாகும். ஆன்மஞானம் அடைந்தவர்களின் தொடர்பை நீ பெற்றிருந்தாலன்றி உன்னால் அதைப் புரிந்துகொள்ள இயலாது.

கடவுள் அனைவரிடமும் உள்ளே குடிகொண்டுள்ள மெய்பொருள் ஆவார். ஆனால் நாம் இதை விழிப்புணர் வுடன் உணர்ந்து கடவுளுடன் நேரடியான தொடர்பு கொள்ள வேண்டும். அதன்பிறகு அவருடைய ஆற்றலானது நம் மூலம் செயலாற்றும். ஆன்மஞானமடைந்தவர்களின் நிலை அத்தகையது ஆகும். மற்றவர்களை அவர்களால் மிகப் பெரிய அளவில் ஊக்குவிக்க இயலும். இது சாதாரண மனிதர்களால் செய்ய இயலாத ஒன்று ஆகும். ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திர ரைத் தொட்டவுடன் அந்த இளைஞன் மிக மேம்பட்ட விழிப் புணர்வு நிலையின் அனுபவத்தை உடனடியாகப் பெற்றார். அதற்குப் பிறகு நரேந்திரரும், சுவாமி விவேகானந்தராக மற்றவர்களிடம் மாற்றங்களை ஏற்படுத்தினார். அவர் சென்னையில் கணக்குப் பேராசிரியாக இருந்த 'கிடி' என்னும் இளைஞனைத் தொட்டபொழுது உடனடியாக அவர் பண்பு

மாற்ற நிலையை அடைந்தார். அவருடைய நாத்திகக் கருத்துக்கள் மறைந்து அவர் சுவாமி விவேகானந்தரிடமும், வேதாந்தத்திலும் முற்றிலும் நம்பிக்கை கொண்டவராக மாறினார். இத்தகைய புனிதமான மகான்கள் ஒரு மின்சார நிலையத்திற்கு இணைக்கப்பட்டுள்ள மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் மின்சாரக் கம்பிகளைப் போன்றவர்கள் ஆவார்கள். அவர்கள் எப்பொழுதும் கடவுளுடன் விழிப் புணர்வுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அவர்களின் வரையறைக்கு உட்பட்ட இயல்புகள் எப்பொழுதும் வரை யறைக்கு உட்படாத பரப்பொருளுடன் தொடர்பு கொண் டுள்ளன. நீ ஒரு மின்சாரம் பாய்ந்து கொண்டுள்ள ஒரு கம்பியைத் தொட்டால், உனக்கு மிகப் பெரிய அளவில் திடீர் அதிர்ச்சி .ஏற்படுகிறது. நீ இத்தகைய புனிதமஹான்களைத் தொடும்பொழுது, அவர்களிடம் எப்பொழுதும் தங்கியுள்ள இறைவனைத் தொடுகிறாய். அதுதான் ஏசுநாதர் கூறியுள்ள இந்த அறிவுரையின் பொருளாகும்.

'என்னைக் காண்பவரும் என்னை அனுப்பியவரையே காண்கிறார்'[1]

பரம்பொருள், தன்னுடைய வெளிப்பாடுகளுக்காக ஒரு விதத்தில், புனிதமான மஹான்களின் உடல் மற்றும் மனங் களின் மூலமாக ஒரு வழியை ஏற்படுத்திக் கொண்டு உள்ளது. புனிதமான மஹானை யார் ஒருவர் தொடர்பு கொள் கிறானோ மற்றும் அவர் அளிப்பதை அவனால் பெற்றுக் கொள்ள இயன்றால், அவன் பரம்பொருளுடனும் தொடர்பு கொள்கிறான். ஒருவரால் அதைப் பெற இயல அந்தத் தொடர்பை உணரும் திறமையும் இருக்க வேண்டும் என்பது தான் மிகவும் முக்கியமான விஷயம் ஆகும். இல்லையெனில் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதைப்போல 'சன்யாஸியின் கமண்டலம் (ஒரு வகையான பாகற்காயினால் செய்யப் பட்டது), சன்யாஸியுடன் புனிதப் பயணத்தின் எல்லா இடங்களுக்கும் செல்கின்றது. ஆனால் அதனுடைய கசப்புத்

---

1. பைபிள்—செயின்ட் ஜான் 12: 45 , 14:9.

தன்மையை இழப்பது இல்லை'[1] என்பதைப் போல ஆகி விடும். நாம் புனிதமான மஹான்களை அணுகும் பொழுது சரியான மனநிலையில் இருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெறுவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். கடவுள் நமக்குப் புனிதமான மஹான்களின் தொடர்பை ஏற்படுத்தலாம். நாம் ஆயத்தமாக இல்லை யெனின் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை எனின், ஏதுவும் நிகழாது. புனிதமான மஹான்களின் தொடர்பைப் பயன்படுத்திக் கொள்ள நீ கற்றுக் கொள்ள வேண்டும். அத்தகைய தொடர்பால் எப்படிப் பயன் அடைவது என்பது உனக்குத் தெரிய வேண்டும். நீ புனிதமான மஹானிடத்தில் முழுமையான நம்பிக்கை வைத்து, உன்னுடைய எல்லாச் சிக்கல்களையும் அவரிடம் விட்டுவிட்டால், உனக்கு எது தேவையோ அதை அவர் செய்வார். அவர் உன்னைச் சரி யான பாதையில் வழிநடத்திச் செல்வார். அத்தகைய ஒரு நிலைமையில் உன்னுடைய நம்பிக்கையானது முழுமை யானதாக இருக்க வேண்டும். நீ சந்தேகப்படுபவனாக இருக்கக் கூடாது.

நீ தேர்ந்தெடுத்துள்ள கடவுளுடன் தொடர்பு

நீ எப்பொழுதும் இறைவனுடன் ஒரே சுருதியில் ஒத்திசைந்து இருந்தாய் எனின், எந்த புனிதமஹானின் தொடர்பும் உனக்குத் தேவை இல்லாமல் இருக்கலாம். இல்லையெனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு புனிதமான வர்களின் தொடர்பு மிகமிக அவசியமானதாகும்.

ஆனால் உனக்குப் புனிதமான மஹான்களின் தொடர்பைப் பெறும் வாய்ப்பு இல்லையெனின் என்ன செய்யப்பட வேண்டும்? நீ தியானிக்கும் புனிதத் தன்மை யுடைய உன்னுடைய இஷ்ட தெய்வத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். உன்னுடைய இஷ்ட தெய்வத்துடன் பேசுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். புனிதமான

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.163.

மஹான்களின் தொடர்பு உனக்குத் தேவை என்று நீ உணரும் பொழுதெல்லாம், கடவுளைப் பற்றி நினைத்து, அவருடைய நாமத்தை இடையறாது கூறுவாய். நம் பின்னால் உள்ள ஆற்றல் அவரே ஆவார். அவர் இல்லாவிட்டால், நாம் ஒன்று மற்றவர்கள் ஆவோம். அவர் நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மா ஆவார். உள்ளே குடிகொண்டுள்ள இந்தப் பரம் பொருளிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்வாய். நீ பயணம் செல்லும் பொழுது, உன்னுடைய இஷ்ட தெய்வம், உன் இதயத்தில் அமர்ந்து கொண்டு உன்னுடன் வரட்டும். உன் பயணத்தில் உன் இஷ்ட தெய்வம் உன்னுடன் அருகில் இருந்து கொண்டு, எல்லா தீங்குகளிலிருந்தும் உன்னைக் காப்பாற்றி, நீ எங்கு இருந்தாலும் உன் இதயத்தை அமைதியால் நிறைக்கட்டும். எந்தச் சூழ்நிலையிலும் நீ அவரை மறக்கக் கூடாது.

பலரிடம் தனியாக இருப்பதற்கு இயல்பான ஒரு பயம் இருப்பதைப் போலத் தோன்றுகிறது. அவர்களுக்கு எப்பொழுதும் ஏதோ ஒருவகையான தொடர்போ அல்லது மற்றொன்றோ தேவைப்படுகிறது. மனிதர்கள் மற்றவர்களிடம் பேசுவதற்கு ஆவலாக உள்ளனர். மற்றும் மற்றவர்களையும் அவர்களுடன் பேச வைக்கிறார்கள். ஒருவர் அவருடைய குறுகிய தன்னலத்தைப் பற்றிக் கொண்டிருப்பதுதான் இந்தப் போக்கிற்குக் காரணமாக உள்ளது. அகங்காரம் என்பது சிக்கலான கருத்துக்களின் நினைவுகளின், தூண்டுதல்களின் முடிச்சு ஆகும். எனவே ஒரு வகையான பின்பலம் தேவைப்படுகிறது. பொதுவாக மனிதர்கள், மற்றவர்களின் உதவியுடன் அகங்காரத்தை ஒருங்கே பற்றிக் கொள்ள முயற்சி செய்வார்கள். ஆனால் உள்ளுக்குள்ளிருந்தே, தங்கள் இயல்புகளை ஒருங்கு இணைப்பதில் வெற்றி கண்டவர்களுக்கு அத்தகைய வெளிப் புற உதவி தேவையில்லை. அவர்களுடைய விஷயத்தில் அவர்களுடைய இயல்புகளின் ஈர்ப்பு மையமானது முற்றிலுமாக உள்ளேயே உள்ளது. மனிதனின் அறிவளவில் ஆன்மாதான் மிகச் சிறந்த ஒருங்கிணைக்கும் ஆற்றலாக உள்ளது. ஒருவர் அமைதியாக வாழ்வதற்காக

இந்த மனிதனின் பின்னாலோ, அந்த மனிதனின் பின்னாலோ ஓடத் தேவையில்லை.

தனிமையிலே அமைதியாக இருப்பாய். நீ தனியாக இருக்கும்பொழுதுதான் நீ மிகத் தெளிவாக கடவுள் உடனிருப்பதை நீ உணர்வாய். கடவுளுடன் அமைதியாக தனிமையில் இருப்பாய். நம் அனைவருக்குமே நம்முள்ளே உள்ள கடவுளின் தொடர்பு போதுமானது. பலராலும் அறியப்பட்டுள்ள ஒரு வடமொழிப் பாடல் உள்ளது.

'ஓ இறைவா, நீயே என் தாய், நீயே என் தந்தை,
நீயே என் உறவு மற்றும் நண்பன்,
நீயே என் கல்வி மற்றும் என் செல்வம்,
நீயே உண்மையாக எனக்கு எல்லாமும்'[1]

புத்தரின் அறிவுரையை நினைவுபடுத்திக் கொள்வாய். 'காண்டா மிருகத்தைப் போலச் சுதந்திரமாகவும், தனியாகவும் சுற்றித் திரிவாய்'. பாகவதத்தின் ஒரு பகுதியான 'உத்தவ கீதை'யில் இந்தக் கருத்தானது ஒரு எளிய கதையின் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. ஒரு பெண்மணிக்கு அவள் வீட்டில் சில ஆண் விருந்தினர்களை எதிர்கொள்ள வேண்டி வந்தது. சமைப்பதற்கு அரிசியானது ஆயத்தமாக இருக்கவில்லை. எனவே அவள் நெல்லின் உமியை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தாள். அவள் முன்கையில் மணிக்கட்டிலிருந்த வளையங்கள் பெரும் ஒலியை எழுப்பியது. அவள் அது அவளுடைய குடும்பத்தின் வறுமையைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று வளையல்களை ஒவ்வொன்றாகக் கழற்றினாள். ஒவ்வொரு கையிலும் ஒருவளை மட்டும் இருந்தது. பரதேசியாக அலைந்துகொண்டிருந்த ஒரு துறவி இவ்வனைத்தையும் உற்றுநோக்கி, பின்கொடுக்கப்பட்டுள்ள நீதியை அறிந்து கொண்டான்.

'எங்கு பலர் உள்ளனரோ, அங்குச் சண்டை இருக்கும். மற்றும் இருவர் இருந்தாலும் பேசிக் கொள்ளும் வாய்ப்பு

1. Universal Prayers, பாடல் 210.

ஏற்படும். எனவே ஒருவர் அப்பெண்மணியின் வளையலைப் போலத் தனித்து இருக்க வேண்டும்.'[1]

நீ தனிமையில் இருக்கும்பொழுது, ஸ்ரீராமகிருஷ்ணர் மிகவும் விரும்பிய இந்த அழகிய வங்கமொழிப்பாடலை உனக்குப் பாடிக் கொள்வாய்.

'என் இறைவா! எனக்கெல்லா செல்வமும் நீ!
இன்னுயிர்க்கும் உயிராவாய் உள்ளுக்குள்ளே
மன்னுலக மூன்றினிலும் உன்னை யல்லால்
மனமார எனக்குரியார் யாருமில்லை;
மாறாத அமைதியும் நீ, இன்பம் ஆசை
பலவும் நீ எனக்காவாய், செல்வம் சீரும்
மாறாத நல்லாதரவும் நீயே அன்றோ?
வேதத்தின் ஞானமும் நீ, சக்தி நீயே

எந்தனது ஓய்விடமும் இல்லமும் நீயே
நேசமிகும் நண்பனும் நீ, உற்றார் நீயே
இந்த நிகழ்காலம் சேரும் எதிர்காலம்
சொர்க்கம் உயர்நிலை முக்தி நீயே

தூயவேதம் போன்ற நூல் யாவும் நீயே
தளைகளை நீக்கும் விதிகளும் எனக்கு நீயே.
தூய்மை தரும் அருள்முகிலாம் ஆசான் நீயே
வாழ்வின் இன்ப இளவேனில் நீயே

எந்தன் பாதையும் லட்சியமும் நீயே ஆவாய்,
நான் வணங்கற்குரிய பரதெய்வம் நீயே
எந்தன் அன்பு கனிவுற்ற அன்னை நீயே,
வேண்டும்போது கண்டிக்கும் தந்தையும் நீ

மன்னுலகம் படைப்பானும் காப்பானும் நீ
வாழ்க்கையெனும் பெருங்கடலைத் தாண்டி அப்பால்
என்னுடைய படகினை நீ காக்க வல்லாய்
எல்லாமும் எனக்காவாய் எந்தன் தேவா![2]

---

1. வாஸே பஹூனாம் கலஹோ பவேத்வார்தா த்வயோரபி ।
ஏக ஏவ சரேத் தஸ்மாத் குமார்யா இவ கங்கண: ॥
—பாகவதம், 11.9.10.

2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.271.

10

துறவும் பற்றறுத்தலும்

துறவின் தேவை

மனிதர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். இருப்பினும், அவர்கள் அதை உணராமல், எல்லாவகையான தவறான அடையாளங்களையும் பற்றிக் கொள்வது உண்மையிலேயே மிகவும் விசித்திரமாக உள்ளது. இந்த உலகம் முழுவதும் செல்வம் மற்றும் பால்வேறுபாட்டுத் தன்மையின் மீது உள்ள ஆசையால் தளைப்படுத்தப்பட்டுள்ளது (பிணைக்கப்பட்டுள்ளது). மனிதர்கள் இவற்றைத் தங்களுடைய வாழ்க்கையின் இலட்சியமாக மேற்கொண்டு இறுதியில் துன்பப்படுகிறார்கள். நாம் நம்மை நம் உடலுடனும், மற்றவர்களுடனும் அடையாளம் கண்டுகொண்டு, எல்லாவகையான உணர்ச்சிச் சிக்கல்களையும் நாடிப்பெற்று, முடிவற்ற துன்பத்தை ஏற்படுத்திக் கொள்கிறோம். இயல்பாகவே இந்த அனைத்திலும் வளமுற்று முன்னேறிக் கொண்டிருக்கும் பல மனிதர்களும் உள்ளனர் என்று மேலீடாகத் தோன்றுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக்கதையில் ஒட்டகமானது முட்களுடன் கூடிய இலைகளை உண்கிறது. அதன் வாயில் இரத்தம் வருகிறது. இருப்பினும் அது முட்செடியைத் தான் உண்ணும்[1] ஆனால் ஆன்மீக சாதனையில் ஈடுபட்டுள்ள ஒருவனால் அவ்விதம் வாழ இயலாது. அவன் அவனுக்காக ஒரு உயர்ந்த இலட்சியத்தை வைத்திருக்கிறான். அவனால் உலகியல் சிக்கல்களில் தன்னை இழப்பதற்கு வாய்ப்பளிக்க இயலாது. எனவே அவன் துறவு மற்றும் பற்றற்றநிலை குறித்து ஆழமாகச் சிந்திக்கத் தொடங்குகிறான்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.181.*

எல்லா சமயங்களிலுமே, துறவே ஆன்மீக வாழ்வின் மையக் கருத்தாக உள்ளது. செல்வம் மற்றும் பேராசையைத் துறப்பது, பாலியல் மற்றும் காமம், மற்றும் அகங்காரத்தைத் துறப்பது என்னும் முப்படியான துறவானது, எல்லாத் திருமறை நூல்களிலும், உண்மையாக ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்ட மனிதர்களாலும் ஒரேமாதிரியாக வலியுறுத்திக் கூறப்பட்டு உள்ளன. துறவு இல்லாமல் ஆன்மீக வாழ்வு இல்லை. துறவு என்றால் புறத் தோற்றத் துறவு என்பதை மட்டுமின்றி மனம் சார்ந்த துறவையும் குறிக்கிறது. நாம் நம்முடைய சொந்த உடல் மற்றும் மனத்தின் மீதுள்ள எல்லா விதமான பற்றுக்களையும் மற்றவர்களின் மீது கொண்டுள்ள பற்றுக்களையும் துறக்க வேண்டும். மற்றும் ஒவ்வொரு நிலையிலும் வழியிலும் உண்மையாக உணர்ச்சி வசப்படாத வர்களாக, பற்றற்றவர்களாக இருக்க வேண்டும். நாம் இதை குறிப்பிட்ட ஒரு சில பொருட்கள் அல்லது மனிதர்களைக் குறித்துச் செய்து மற்றவர்களை அதிகமாகப் பற்றிக் கொள்ள முயற்சி செய்யவும் கூடாது. குறிப்பிட்ட பொருட்களையும், நமக்குப் பிடிக்காத சில மனிதர்களையும் தவிர்த்துவிட்டு, அதைத் துறவு என்று கூறுவது சுலபமானதாகும், உண்மை யான துறவு என்பது அனைவரிடமும் ஒரு மாறுபட்ட மனப் பான்மையை மேற்கொள்ளுவது ஆகும்.

துறவு என்பது ஏன் அவசியம்? நாம் எதற்காக மிகுதியான பற்றற்ற தன்மையையும், உணர்ச்சி வசப்படாத தன்மை யையும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்? பொருட்கள் மீதும், மனிதர்கள் மீதும் உள்ள பழைய தொடர்புகளைத் துறக் காமல், ஆன்மீகப் பயிற்சியை ஒரு பொழுதும் வெற்றிகர மாகச் செய்ய இயலாது. சாதனை செய்பவனுக்கு அது உறு துணையாகவும் இருக்காது. நாம் நம்முடைய ஆசைகளை யும், உணர்ச்சிகளையும் மற்றும் நாம் மற்றவர்களைப் பற்றிக் கொள்வதையும் துறப்பதற்கு ஆயத்தமாக உள்ள அளவிற்கு, பாசத்தினாலோ அல்லது வெறுப்பினாலோ, நாம் பயனடை யும் முறையில் உண்மையான சமய வாழ்வை மேற்கொள்ள லாம். மற்றும் சிறிது முன்னேற்றமும் அடையலாம். இந்த

விஷயத்தில் உன்னுடைய மனம் உன்னை ஏமாற்றுவதற்கு ஒரு பொழுதும் விட்டுவிடக் கூடாது. நம்மால் இந்தப் பொருளையோ அல்லது அந்தப் பொருளையோ துறந்து விட்டு இருக்க வியலாது. நாம் சில மனிதர்களுடன் சேர்ந்து இருக்க வேண்டும். அவனுடன் அல்லது அவளுடன் பேசுவது நம் கடமையாகும் போன்ற சில நம்பத் தகுந்த காரணத் தையோ அல்லது மற்றதையோ முன்னுக்குக் கொண்டு வரு வதற்கு எப்பொழுதும் முயற்சி செய்யும். அத்தகைய நிலை களில் உன் மனத்தை ஒரு பொழுதும் நம்ப வேண்டாம். அது உன்னை எப்பொழுதும் ஏமாற்றக் காத்துக் கொண்டுள்ளது. மற்றும் அது உன் அடி மனத்தில் அல்லது தன்னுணர்வு அற்ற நிலையிலுள்ள விருப்பங்களுக்கு உன் சார்பாக வெளிப்பட விரும்புகிறது. எனவே நமக்கு ஜபம், பிரார்த்தனை, தியானம் மற்றும் மற்ற ஆன்மீகப் பயிற்சிகளுடன் துறவு மனப் பான்மையும் தேவையாகிறது. நாம் எந்த அளவிற்கு மேலும் மேலும் துறவு மனப்பான்மை மற்றும் பற்றற்ற தன்மை களைப் பெற்றிருப்பதில் வெற்றியடைந்திருக்கிறோமோ, அந்த அளவிற்குத்தான் ஜபமும், தியானமும் உறுதுணையாக அமையும். இந்த இரண்டும், ஆன்மீகப் பயிற்சிகளும் துறவு மனப்பான்மையும் ஒருங்கிணைந்தால் நமக்கு நம் மனத்தைக் கட்டுப்படுத்த இயலும், மற்றும் கணக்கற்ற பிறவிகளில், யுகயுகமாக நம் மனத்தின் மூலைகளிலும், பிளவுகளிலும் நாம் சேர்த்து வைத்துக் கொண்டுள்ள எல்லா வகையான மாசு களையும் தூய்மைப்படுத்த தொடங்குவோம்.

மிகுதியான உலகியல் என்பது நெருப்பைப் போன்ற தாகும். அது இதயத்தை எரித்து விடுகிறது. அது ஒருவரை ஆன்மீகத் தகுதிகளுக்கான உணர்வற்றவராகவும், நுண் ணுணர்வுத் திறமற்றவராகவும் செய்து விடுகிறது. உலகியலை நாடும் ஒரு மனிதனால் ஆன்மீக வாழ்வின் இன்பங்களை உணர்ந்து நுகர இயலாது. உலகியலை நாடும் மனிதனின் உள்ளுணர்வின் இயல்பான வலிமையானது மிகவும் மந்த நிலையை அடைகிறது. உயர்ந்த அதிர்வலைகளை அவனால் உணர இயலாமல் போய்விடுகிறது. அவனுக்கு ஆன்மீக

உண்மைகளைக் குறித்த எந்த விதமான கருத்துப் போக்கும் இல்லை. அவன் தன்னுடைய விருப்பங்கள் மற்றும் உணர்ச்சிகள் என்னும் சேற்றில் அமிழ்ந்து புரண்டு கொண்டே இருக்கிறான்.

அன்பும், பிணைப்பும்

நாம் விரும்பும் பொருட்களும், மனிதர்களும் நம்முடைய மனங்களை ஈர்த்து, பிணைப்பையும், பகைமையையும் வெறுப்பையும் தோற்றுவிக்கின்றனர். அன்பும், வெறுப்பும் ஒரே நாணயத்தின் முன் புறமும், பின் புறமும் ஆகும். இதில் உனக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். எனவே அவை ஒரே வகையினத்தின் கீழ்தான் வருகின்றன. பகைமை அல்லது வெறுப்பானது, தலைகீழாக மாற்றப்பட்டுள்ள அன்பு அல்லது பிணைப்பு ஆகும். அது உள் அளவில் வேறுபட்ட ஒன்றல்ல. நாம் உணர்ச்சி வசப்படாத நிலையில் இருந்துகொண்டு, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களிலிருந்து வெளிவந்து, எல்லா வகையான பிணைப்புக்களிலிருந்தும், எல்லா வகையான பயங்களிலிருந்தும் விடுபட வேண்டும். நாம் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளாமல் அன்பாக இருக்க வேண்டும். யாராவது ஒருவர் மீதோ, அல்லது யாராவது ஒருவரின் அன்பின் மீதோ தனிப்பட்ட உரிமை ஒரு பொழுதும் இருக்கக் கூடாது. மற்றும் நம் அன்பின் மீதோ அல்லது நம்மீதோ தனிப்பட்ட உரிமையை எடுத்துக் கொள்வதற்கு நாம் யாரையும் அனுமதிக்கக் கூடாது.

நாம் கடவுளை மட்டுமே விரும்ப வேண்டும் மற்றும் மற்றவர்களையும் அதையே செய்ய இடமளிக்க வேண்டும்.

ஏசுநாதர், 'என்னை விடத் தம் தந்தையிடமோ, தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர், என்னுடையோர் என கருதப்படத் தகுதியற்றோர். என்னை விடத் தன் மகனிடமோ, மகளிடமோ மிகுதியாக அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்'[1] என்று

---

1. *பைபிள்—செயின்ட் மேத்யூ, 10:37.*

கூறியுள்ளார். மற்றும் அதைவிட உண்மையானது வேறு எதுவும் இல்லை. ஒருவன், மற்றொருவனைக் கடவுளைவிட அவனை அதிகமாக விரும்புவதற்கு அனுமதித்தால் அவன் கடவுளுக்கு ஏற்றவனாக இருக்க மாட்டான். அவன் எத்தனை கஷ்டப்பட்டு முயன்றாலும் அவனால் கடவுளை அடைய வியலாது என்பதும் உண்மையாக உள்ளது. நாம் விதைப் பதையே அறுவடை செய்கிறோம். நாம் இந்த விருப்பு வெறுப்புக்களால் நம்மையும் தடுத்துக்கொண்டு இருப்பதற்கு அனுமதிக்கும் வரையிலும், நமக்கும் மற்றவர்களுக்கும் துன்பங்களை ஏற்படுத்திக் கொண்டு அடிமைகளாகவே இருப்போம். நாம் நம்முடைய பிணைப்புக்களுக்காக துன்பம் என்னும் தண்டத் தொகையை அளிக்க வேண்டும். சில சூழ் நிலைகளில் விரைவாக வருகிறது. சிலருக்குத் தாமதமாக வரு கிறது. ஆனால் அனைவரும் அவர்களுடைய மடமைக்காக தண்டனை பெறவே வேண்டும்.

மனிதர்கள் நம்மை விரும்பும்பொழுது நாம் பெருமைப் படுகிறோம். நாம் மற்றவர்களைக் கவரும் விதத்தில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் மற்றவர்களால் மகிழ்ந்து அனுபவிக்கும் பொருட்களாக இருப்பதை விரும்புகிறோம். அதனால் நாம் நமக்கும், மற்றவர்களுக்கும் துன்பங்களையே ஏற்படுத்திக் கொண்டு, நம்முடைய ஆன்மீக முன்னேற்றத்தை தடுத்துக் கொள் கிறோம் என்பதை அறிந்து கொள்வதற்கு, ஆராய்ந்து பார்க்கும் இயல்பற்றவர்களாகவும் திடீர் உணர்ச்சிகளுக்கு ஆட்படும் தன்மை உடையவர்களாகவும் நாம் பொதுவாக இருக்கிறோம். நாம் பொறுப்பானவர்களாக எச்சரிக்கை உடையவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்கள் முனைந்து முயற்சி செய்து தவறான வழிகளில் நம்மை அணுகாமல் இருக்கும் போக்கை மேற்கொள்ள வேண்டும். நான் முக்கியமாக இதைப் பெண்மணிகளுக்குக் கூறுகிறேன். ஆன்மீக வாழ்வில் மேற்கத்திய கருத்தான (Chivalry) பெண்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்னும் கருத்திற்கு இடமில்லை.

பக்தர்களும், ஆன்மீகத்தில் ஈடுபாடு உடையவர்களும், நம்மவர்களே. ஏனெனில் நாம் அனைவரும் எப்பொழுதும் நிலைத்திருக்கும் தெய்வீக அன்பு என்னும் பொதுவான நாணால் கட்டப்பட்டிருக்கிறோம். ஒருவருடைய ஆன்மீக சகோதரர்களுக்காகக் காட்டப்படும் அன்பானது உலகியல் அன்பைவிட மிகவும் உச்ச அளவானது மற்றும் பயன் தரத் தக்கதும் ஆகும். ஏசுநாதரின் சீடர்களுக்கிடையிலும், ஸ்ரீராம கிருஷ்ணரின் சீடர்களுக்கு இடையிலுமிருந்த தொடர்பைக் காணுங்கள். அவர்களுக்குள் எத்தகைய மென்மையான அன்பும், பரஸ்பர மரியாதையும், பிறர் நலத்தை எண்ணிப் பார்க்கும் தன்மையும் இருந்தது. இளைஞர்களாகிய நாங்கள், ஸ்ரீராம கிருஷ்ணரின் சிறந்த சீடர்களுடன் தொடர்பு கொண்டபொழுது, நாங்களும் எங்கள்மீது பொழியப்பட்ட தீவிரமான ஆனால் தூய்மையான தன்னலமற்ற அன்பால் ஆழமாக ஈர்க்கப்பட்டோம். ஆன்மீகத்தில் நாட்டமுடைய ஒரு மனிதனுக்கு மட்டுமே மற்றவர்களின் மீது உண்மையான அன்பு இருக்கும். உலகியல் மனிதர்களின் அன்பு என்று அழைக்கப்படுவது பல நேரங்களில் மெருகிடப்பட்ட தன்னலமாகத்தான் உள்ளது.

மெய்ஞ்ஞானிகள் எல்லா மனிதர்களையும் ஒரே தன்மையில்தான் விரும்புகிறார்கள். அவர்களிடம் பிணைப்பு இன்றி அன்பு செலுத்துகின்றனர். ஏனெனில் அவர்கள் இந்தப் பலராலும் அறியப்பட்ட உபநிஷதத்தின் வாசகத்திலுள்ள உண்மையை உணர்ந்தவர்கள் ஆவார்கள்.

'கணவனின் பொருட்டு கணவன் விரும்பப்படுவதில்லை.
ஆனால் தன்நலம் பொருட்டு கணவன் விரும்பப்படுகிறான்.
மனைவியின் பொருட்டு மனைவி விரும்பப்படுவதில்லை.
ஆனால் தன்நலம் பொருட்டு மனைவி விரும்பப்படுகிறாள்
மகன்களின் பொருட்டு மகன்கள் விரும்பப்படுவதில்லை.
ஆனால் தன்நலம் பொருட்டு மகன்கள் விரும்பப்படுகிறார்கள்.
அனைத்தின் பொருட்டு அனைத்தும் விரும்பப்படுவதில்லை
ஆனால் தன்நலம் பொருட்டு அனைத்தும் விரும்பப்படுகின்றன.'[1]

---

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 2.4.5, 4.5.6.

மெய்ஞ்ஞானிகளின் வாழ்க்கை, நமக்கு துறவு மற்றும் பற்றற்ற தன்மைக்கு உள்ளத்தின் உணர்ச்சியற்ற தன்மை அல்லது அக்கறையின்மை பொருள் இல்லை என்று அறிவுறுத்துகிறது. உள்ளத்தின் உணர்ச்சியற்ற தன்மை என்பது பற்றற்ற தன்மை அல்ல. அது தன்னலமே ஆகும். ஒரு வருடைய அகங்காரத்தைப் பற்றிக் கொண்டிருப்பது ஆகும். உன்னுடைய சக்திக்கு உட்பட்ட உதவியை நீ மற்றவர் களுக்குச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். அவர்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு உன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். உன்னால் இதைச் செய்ய இயலவில்லை என்றால் மற்றவர்களின் நன்மைக்காகக் கடவுளிடம் பிரார்த்தனை செய்வாய். நீ உண்மையாகவும், தீவிரமாகவும் பிரார்த்தனை செய்தால், உதவி செய்ய நினைத்தவர்களுக்கு உதவி சென்று அடைவதை நீ காண்பாய். ஆனால் நீ மற்றவர்களுக்காக பிரார்த்தனை செய்ய நினைத்தால், நீ உன்னைக் கடவுளுக்கு நெருக்கமானவன் என்று உணர வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மற்றவர்களுடன் பிணைப்பு ஏற்படுத்திக் கொள்வதை உன்னால் தவிர்க்க இயலவில்லை என்றால் நீ அவர்களுக்கு உதவி செய்யாமல் இருப்பது நல்லது. நீ பிரார்த்தனை செய்வதை ஆதாரமாகக் கொள்வது நல்லது ஆகும். உண்மையாக, ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய ஒவ்வொரு உண்மையான சாதகனும், அவன் நாள்தோறும் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயிற்சியில் மற்றவர்களுக்காக இத்தகைய பிரார்த்தனையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உலகியல் வாழ்விலிருந்து ஆன்மீக வாழ்விற்கு மாறும் நேரத்தில் அந்த நேரத்திற்கு, மற்றவர்களிடம் சிறிதளவு அக்கறையின்றி, நாம் இருப்பதாக உணரலாம். நாம் நம்மைக் காத்துக் கொள்வதற்காக சிறிது காலத்திற்கு மட்டும், அக்கறை யற்ற மனப்பான்மையை மேற்கொள்ள நேரிடலாம். நீ கடவுளை உணரும் இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு, தூய்மையான வாழ்க்கையை மேற்கொண்டால், சிறிது காலத்திற்குப் பிறகு, மற்றவர்களிடம் நீ கொண்ட பழைய

அன்பானது, தூய்மைப்படுத்தப்பட்ட, மேன்மைப்படுத்தப் பட்ட வடிவத்தில் உன்னிடம் திரும்பி வந்திருப்பதை நீ உணர்வாய். அந்த அன்பில் பிணைப்பு மட்டும் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக, கடவுளுக்கான தீவிரமான அன்பு இடம் பெற்றிருக்கும். அதன்பிறகு நீ தன்னல நோக்கத்திற்காக மற்ற வர்களை விரும்பமாட்டாய். ஆனால் கடவுளின் பொருட்டு மற்றவர்களை விரும்புவாய். இது மட்டுமே உண்மையான அன்பு ஆகும். நாம் இரண்டு ஆபத்துக்களிலிருந்து தெளிவாக வழிநடத்தப்பட வேண்டும். மனித இயல்புடன் மற்றவர் களின் மீது அன்பு செலுத்தி, அதைத் தவறுதலாக, 'தெய்வீக மானது' என்று அழைப்பது முதலாவது ஆகும். சரியான உணர்ச்சிகளிடமும் மிகுந்த அக்கறையற்ற தன்மையுடன் இருப்பதும் மற்றும் ஒருவருடைய கடமைகளைப் புறக் கணிப்பதும் இரண்டாவதாகும். இந்த இரண்டுமே ஆன்மீக வளர்ச்சிக்குத் தீங்களிப்பவை ஆகும்.

உண்மையான உறவினர்கள்

நம்முடைய உண்மையான உற்றார் உறவினர் யார்? 'பாந்தவா சிவபக்தாச்ச' (சிவனுடைய பக்தர்கள்தான் என் னுடைய உறவினர்கள்) என்று சங்கரர் அவருடைய ஒரு சுலோகத்தில் கூறியுள்ளார்.[1] பல சமயங்களில், நாம் நமக்கு வேண்டப்பட்டவர்கள் என்று கருதுபவர்கள் முற்றிலும் புதியவர்களாக ஆகிவிடுவார்கள். அவர்கள் ஒரு எண்ண மட்டத்தில் வாழ்கிறார்கள். நாம் மற்றொரு எண்ண மட்டத் தில் வாழ்கிறோம். உண்மையாக ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகர்கள், மற்றும் ஆன்மீகத்தில் விரைவாக முன் னேற்றம் அடைய ஆவலாக இருப்பவர்கள். அவர்களுடைய சொந்த வீடுகளிலேயே புதியவர்களைப் போல வாழ்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய நண்பர்களும், உறவினர்களும் நல்லவர்களாகவும், ஆன்மீக நாட்டம் உடையவர்களாகவும் இருப்பின் நீங்கள் அவர்களுடன்

---

1. அன்னபூர்ணா ஸ்தோத்திரம், சுலோகம் 12.

உங்களைத் தொடர்பு படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் உலகியலில் ஈடுபாடு உடையவர்களாக, ஆன்மீகத்தில் நாட்டம் அற்றவர்களாக, மற்றும் உங்களையும் அவர்களிடத்தில் இழுப்பதற்கு முயற்சி செய்தால், நீங்கள் அவர்களின் தொடர்பை விட்டுவிடுவதுதான் உங்களுக்குரிய வழியாக உள்ளது. நீ முன்னேற விரும்பி மற்றவர்கள் கிடக்க விரும்பினால் உன்னால் வேறு என்ன செய்ய இயலும்?

உலகியலில் நாட்டம் கொண்ட, ஆன்மீகத்தில் நாட்டமற்ற உறவினருடன் வாழ்பவர்கள், விருந்தினர் மாளிகையில் விருந்தினர் இருப்பதைப் போல வாழ வேண்டும். அவர்கள் சொந்த உரிமை (ownership) என்னும் கருத்தைத் துறந்து பொறுப்பாண்மை உரிமை என்னும் கருத்தை (trusteeship) ஏற்க வேண்டும். நீ மற்றவர்களின் மீது எத்தகைய உணர்ச்சி உரிமைக்காகக் கோரிக்கை எழுப்பக் கூடாது. அவர்கள் உன்னுடைய சொத்து அல்லர். நீ எதையாவது உடைமையாகப் பெற்றிருந்தால் நீ ஒரு 'பொறுப்பாண்மை உரிமை'யாக மட்டும் பெற்றிருக்க வேண்டும். சொந்தக்காரனாகவும் அல்ல. கடவுளின் சார்பாக மட்டும் நீ அதை நிர்வகிக்க வேண்டும்.

உன்னுடைய குடும்பத்தைக் குறித்த உண்மையான இயலுருவத் தோற்றத்தை விரிவுபடுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். உன்னுடைய மனத்தை நேரடியான மனிதப்பண்புகளுடன் கூடிய அன்பு மற்றும் வெறுப்புக்களுடன் தொடர்பு கொண்ட, பற்றுதல் மற்றும் பாலியலுடன் நெருங்கிய உறவுடைய பழைய எல்லாத் தொடர்புகளிலிருந்தும் நீ விடுவித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான ஆன்மீக சாதனை சாத்தியமாகும். இதற்கு முன்பு இருந்தது எல்லாம் ஆன்மீக வாழ்க்கையில் ஒரு சிறிய முயற்சியே தவிர வேறு எதுவுமில்லை. நான் சிறுவனாக இருந்த பொழுது மிகவும் உணர்ச்சி வசப்படுபவனாக இருந்தேன். ஓரிரு நாட்களின் பழக்கத்திலேயே நான் மனிதர்களிடம் மிகவும் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்பவனாக இருந்தேன். மற்றும் என்னுடைய பெற்றோராலும், உறவினர்களாலும், நண்பர்களாலும் காட்டப்பட்ட அன்பிலும்

பரிவிலும் நான் திணறிப் போவதைக் கண்டேன். மற்றும் அவர்களைக் குறித்து பெருமளவில் நினைத்துக்கொண் டிருந்தேன். இறுதியாக என்னால் இந்த எண்ணங்களை மேற்கொண்டு தாங்கிக் கொள்ள இயலவில்லை. மற்றும் உறுதியுடன் எனக்கே கூறிக்கொண்டேன். இது மாற்றப்பட வேண்டும். அதற்குப் பிறகு நான் மேலும் மேலும் தனிமனித ரைச் சார்ந்து இருக்காத நிலைக்குத் திரும்பினேன். எல்லா உயிரினங்களிலும் உறையும் பரம்பொருளைக் குறித்த எண்ணம் மட்டுமே மனிதர்களை நாம் பற்றிக் கொள் வதிலிருந்து விடுவிக்க இயலும். நீ இந்த எண்ணத்தைக் குறித்து மிகவும் தீவிரமாக எண்ண வேண்டும். அது உன் னிடம் மெய்ம்மையானதாக ஒளி பொருந்திய, நிலைத்த ஒன்றாக இருக்க வேண்டும்.

வெறுப்பும் பிணைப்பைப் போல தீயதே

வெறுப்பும் பிணைப்பைப்போல தீயதே ஆகும். உண்மையிலேயே அது அதுவே ஆகும். ஒன்று மற்றொன்றை விட மேலானது என்று எண்ணி உன்னை ஒரு பொழுதும் ஏமாற்றிக் கொள்ளாமல் இருப்பாய். இரண்டுமே தளை களாக, மனிதனை அவனுடைய உண்மையான மேம்பட்ட நிலைக்கு உயர விடாமல் தடுத்து கீழ்நிலைக்குக் கொண்டு செல்கின்றன.

நாம் கோபம் என்னும் ஆய்வுக்குரிய தன்மையை எடுத்துக்கொள்வோம். நாம் ஏன் கோபம் கொள்கிறோம்? ஏனெனில், ஏதாவது ஒன்றோ அல்லது யாராவது ஒருவரோ, நாம் துய்த்து மகிழத்தக்க பொருள் என்று எதை நினைத்துக் கொண்டு இருக்கிறோமோ, அந்த வழியில் தடையாக நிற் கிறார்கள். நம்முடைய எல்லாக் கோபத்திற்கும் இது மட் டுமே காரணமாக உள்ளது. எப்பொழுதும் கோபமானது மிகவும் அழுத்தமான நிலையில் உள்ள அகங்காரத்துடனோ, அல்லது நம் இயல்புகளைக் குறித்த ஒரு திடமான உணர் வுடனோ மிக நெருங்கிய நிலையில் தொடர்பு கொண்டுள்ளது என்பதை நாம் கண்டு கொள்கிறோம். அகங்காரத்தின் இந்த

வலிமையான உணர்வு இல்லாமல், மற்றும் துய்த்து மகிழ் வதற்கு உரிய அளவற்ற, உடல்தொடர்பான, மனத்தொடர் பான ஆசை இல்லாமலோ கோபமானது நம் மனத்தில் தோன்றாது. எனவே இந்த அகங்காரம், துய்த்து மகிழத்தக்க ஆசைதான் நாம் கோபம் கொள்வதற்கு உரிய ஒரே காரணமாக உள்ளது. நாம் எத்தகைய மகிழ்ச்சியையும் விரும்பவில்லை எனின், நாம் எதையும் எவரிடமிருந்தும் எதிர் பார்க்கவில்லை எனின், மற்றும் எந்த வரவையும் எப்பொழுதும் எதிர்பார்க் காமல் அனைவருக்கும் கொடுத்துச் செயலாற்றினால், எப் பொழுதும் எந்தக் கோபமும் தோன்றாது. எனவே நாம் நம் முடைய கோபத்தின் மீதுதான் கோபம் கொள்ள வேண்டும். மற்றவர்களிடம் கோபம் கொள்ளக் கூடாது. நாம் புலன் இன்பங்களைத் துய்ப்பதற்கான ஆசைகளின் மீது மிகவும் கோபம் கொள்ள வேண்டும். மற்றும் அந்தப் புலனின்பப் பொருட்களின் மீது இல்லை. இந்த கோபத்தை நிலையற்ற தாகச் செய்து, முடிவில் அதைவிட்டு ஒழிப்பதுதான் நடை முறைச் செயல் ஆகும். கோபத்தையும், அதனுடன் தொடர் புடைய மற்ற கேடுகளையும் பெருமளவிற்கு விட்டொழிக் காமல் ஆன்மீக வாழ்வில் நம்மால் எந்த முன்னேற்றத்தையும் பெற இயலாது. ஆன்மீக வழியில், காமமும் கோபமும் இரு மிகப் பெரிய பகைவர்களாக உள்ளன. எனவே எல்லா சாதகர்களாலும் அவை மிகக் கவனத்துடன் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு, கோபம் எங்கு இருக்கிறதோ அங்கு சில பிணைப்புக்களோ அல்லது வேறு ஏதாவதோ, வேறு மட்டுமீறிய விருப்பமோ அல்லது அன்போ இருக்கும். உண்மையைக் கூற வேண்டுமாயின், ஒருவரிடமோ அல்லது ஒரு பொருளிடமோ பற்று இல்லாமல் எந்த வகையான கோப மும் ஒரு பொழுதும் ஏற்படாது. நாம் மகிழ்ச்சியடைவதற்குக் குறுக்காக உள்ள ஆசையே கோபத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் இது பெரிதளவில் இல்லாமல் சூட்சுமமாகப் புரிந்து கொள்ள வேண்டியது ஆகும். பெரிதளவில் மகிழ்ச்சியை அளிக்கும் எத்தகைய அடக்கவியலாத ஆசையானது,

கோபத்தின் அடிப்படைக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்னும் கட்டாயத்திற்கு அவசியம் ஏதுமில்லை.

சில மனிதர்கள், துறவிற்கான பயிற்சிகளை மேற்கொள்ளும் பொழுது, வலிந்து சண்டைக்குச் செல்லும் தன்மை உடையவர்களாக இருப்பார்கள். பற்றுதலின் இழுப்பு குறையும் பொழுது, வெறுப்பின் இழுப்பு வலிமையடைகிறது. சாதனையின் ஆரம்பக் கட்டங்களில் பல சாதகர்கள் வெடுவெடுப்புடன் எளிதில் கோபம் கொள்பவர்களாக இருப்பார்கள். துறப்பதற்கு அரை மனத்துடன் அவர்கள் செய்யும் முயற்சியின் எதிர் விளைவாக இது உள்ளது. புறஉடல் சார்ந்த துறவானது எப்பொழுதும் உட்புறத்துறவால் பின்தொடரப் படாது. அகப்பண்பு சார்ந்த துறவானது, புற உடல் சார்ந்த துறவுடன் முரண்பட்டு மன அழுத்தத்திற்கு வழிகோலுகிறது. பற்றுதலையும், வெறுப்பையும் துறப்பதுதான் உண்மையான துறவு ஆகும்.

நாம் உண்மையான துறவறத்தைச் செயற்படுத்தத் தொடங்கும்பொழுதுதான், நாம் அது வரைக்கும் எத்தகைய இழிந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தோம் என்பதை உணர்வோம். கடந்த காலத்தின் பிணைப்புதான் இப்பொழுது நமக்கு உள்ள மிகப்பெரிய தடை என்பதையும் உணர்வோம். இது மன உறுத்தலையும் கழிவிரக்கம் கொள்ளும் மனநிலைக்கும் வழிநடத்திச் செல்கிறது. ஓரளவிற்கு ஆரோக்கியமான மற்றும் மனிதத் தகுதியுடன் கூடிய தன் குணம் குறைகளை ஆராயும் உணர்வு இருக்கக் கூடும். ஆனால் அது ஒரு பொழுதும் அழிவை ஏற்படுத்தக் கூடியதாகவோ அல்லது எதிர்மறையான உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் போக்கிலோ முடியக் கூடாது. 'எத்தகைய பாவி நான், எத்தகைய பயனற்ற உயிர் நான்' என்று கூறாதே. ஆனால், 'நான் கடந்த காலத்தில் தவறு செய்திருந்தால், அது இத்துடன் முடிந்துவிட்டது. நான் தவறு செய்திருக்கிறேன் என்பதை உணர வேண்டும். ஆனால் அதைக் குறித்தே நான் நினைத்து நினைத்து ஏங்கக் கூடாது. நான் புதிய வாழ்க்கையைத் தொடங்கி, எதிர்காலத்தில் நான் மிகவும் விழிப்புணர்வுடன் இருந்து, ஒரு மிருகமாக

இல்லாமல், ஒரு மனிதனாக இருக்க வேண்டும்' என்று கூறக் கற்றுக்கொள்ள வேண்டும் இதுதான் சரியான வழியாகும். நாம் இளைஞர்களோ, அல்லது முதியவர்களோ, நாம் அனைவரும் ஆன்மீக உலகத்தில் மறுபிறவி எடுக்க வேண்டும். மற்றும் உண்மையை நோக்கி நம் பயணத்தைத் தொடங்க வேண்டும்.

தொடக்கத்தில் கவனமாக இருக்க வேண்டும்

தொடக்கத்தில் ஆன்மீகப் பயிற்சியானது, நல்ல விளைவுகளையும், கெட்ட விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. நீ தோட்டத்திற்குச் சென்று நன்றாக நீர் ஊற்றினால் நல்ல மணத்துடன் கூடிய அழகிய ரோஜாமலர்களைப் பெறுவாய். ஆனால் அதே நேரத்தில் களைச்செடிகளும் மிகுதியாக வளரும். எனவே நீ மிகுதியான அளவில் களை எடுத்தல். வெட்டிவிடுதல், வேருடன் பிடுங்குதல் போன்றவற்றைச் செய்ய வேண்டும். துறவு என்பது நம் உள்ளே உள்ள காட்டைத் தொடர்ந்து செப்பனிடும் முறையாகும்.

சில நேரங்களில் நம் மனங்களில் துறவைக் குறித்த சிறு சுடர் தோன்றும். ஆனால் நாம் மீண்டும் சொட்டு சொட்டாக வடிந்து கொண்டுள்ள உலகியல் என்னும் கழிவுப் கப்பிகளை, அந்தச் சுடர் அணையும் வரை அதன் மீது குமிக்கிறோம். உலகியலின் மீது உள்ள விருப்பமானது கடவுளின் மீது நமக்குள்ள சிறிய உணர்வு அல்லது விருப்பத்தை அணைத்து விடுகிறது. இந்தத் துறவு மற்றும் ஆசையற்ற தன்மை என்னும் சுடருக்குத் தொடர்ந்து எரிபொருள் ஊட்டப்பட வேண்டும். ஏனெனில் அது தீய, உடல் சார்ந்த, மனம் சார்ந்த தொடர்புகளால், மற்றும் தூய்மையற்ற மனத்திலிருந்து வெளிப்படும் போக்குகளால் அவ்வப்பொழுது எதிர்பாராத வகையில் அணைந்துவிடவும் கூடும். தொடக்கத்தில் பற்றற்ற தன்மை என்பது ஒரு இளஞ்செடியைப் போன்றதாகும். அதைச் சுற்றிலும் வேலி அமைக்கப்பட்டு, வன்மையான காற்று வீச்சு, மற்றும் உறைபனியிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். இல்லை எனின் அது உறுதிவாய்ந்த மரமாக

ஒருபொழுதும் வளரவியலாது. அத்தகைய மரத்தை எந்தப் புயலாலும் அசைக்க வியலாது. நாம் நம்முடைய எல்லா தனிப்பட்ட உறவுமுறைகள், எதிர்ச் செயல்கள், மற்றும் பிணைப்புக்களிலிருந்து விடுபடும் பொழுது, துறவு என்னும் மிகப்பெரிய தீயை நம்முள் ஏற்படுத்துவதில் நாம் வெற்றி யடைவோம். அதனால் உலகியலிலிருந்து விடுபடுவோம். நாம் நம்முடைய மனங்களைத் தூய்மைப்படுத்தித் தெளிவு படுத்துவதற்குப் பதிலாக, நம் மனங்களை எல்லாவகையான பயனற்ற மற்றும் தூய்மையற்ற எண்ணங்களால் நிறைத்துக் கொண்டிருப்பதால், நாம் பற்றற்ற முறையிலும் மற்றும் தொடர்ந்து ஒரே மாதிரி சிந்திக்கும் திறனையும் இழந்துவிடு வோம். நம் மனங்கள் குழப்பமடைந்த நிலையில் இருப்ப தால் நாம் எப்பொழுதும் ஒரு வதைக்கும் நிறைவற்ற தன்மையை உணர்கிறோம். மனநிறைவற்ற தன்மையை உணர்கிறோம். நம்மிடம் பெரிதளவில் பல கருத்துக்கள் உள்ளன. நல்ல கருத்துக்களும் உள்ளன. ஆனால் ஒரு பற்றற்ற வழியில், தனிநிலையில் ஒரு வரையறுக்கப்பட்ட முறையில் அவற்றைப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றல் நம்மிடம் இல்லை நாம் பல நேரங்களில் அதே எண்ணத்தைக் குறித்து மீண்டும் மீண்டும் சிந்தித்துக் கொண்டிருப்போம். ஆனால் இவ் வனைத்தும் பயனற்றது ஆகும். நீ உன் மனம் கட்டுப்பட வேண்டும் என்று நினைத்தால், தொகுதியாக உள்ள ஒழுங்கு முறைகளை நுணுக்கமாக ஆராய்ந்து அறிய வேண்டும். தொடக்கத்தில் உன்னுடைய ஆன்மீகப் பயிற்சிக்காகக் குறிப் பிட்ட நேரத்தை வைத்துக்கொள்ள வேண்டும். மற்றும் உன் னால் எந்த அளவிற்கு இயலுமோ அந்த அளவிற்கு ஒதுங்கி வாழ வேண்டும். மற்றவர்களுடன் பாகுபாடற்ற முறையில் கலந்து பழக வேண்டாம். எந்த ஓட்டங்கள் உன் மனத்தில் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொண்டு இருக்கின்றனவோ, அந்தப் பலவகையான எண்ண ஓட்டங்களிலிருந்தும் நீ உன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். உன்னால் ஒரு பொழுதும் சமநிலையான மற்றும் பற்றற்ற தன்மை நிலை உடைய மனத்தை நிலை நிறுத்தவியலாது. பற்றற்ற தன்மை,

உண்மையான பற்றற்ற தன்மை, ஆன்மீக முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். நாம் செயல்களை, அவைகள் உள்ள படியே காண வேண்டும். அவைகளை நாம் விரும்பும் வகையில் காணக் கூடாது.

கடவுள் மீது செலுத்தும் அன்பே உண்மையான துறவு

ஆன்மீக வாழ்வில், துறவும், பற்றற்ற தன்மையும் கடவுள் மீதுள்ள அன்பால் கைகோர்த்துக் கொண்டு செல்ல வேண்டும். துறவையும், பற்றற்ற தன்மையையும் விடுத்து ஆன்மீக வாழ்வைத் தீவிரத்துடன் வாழ்வதுதான் பலருக்கும் ஆன்மீக வாழ்க்கையைக் கஷ்டமானதொன்றாகச் செய் துள்ளது. துறவானது, கடவுளிடம் உள்ள தீவிரமான அன் புடன் இணைக்கப் பட்டால், அது ஆன்மீக வாழ்க்கையை மிகவும் மிகழ்ச்சியான பயணமாகச் செய்கிறது. தெய்வீக அன்பு எல்லாவற்றையும் நிறைவு செய்கிறது. எனவே உண்மையாகவே கடவுளை நேசிக்கும் ஒருவருக்கு, உண்மை யைக் கூறப் போனால், கைவிடும் தன்மை ஏற்படாது. நிறைவான செயல்முடிவே ஏற்படும். கடவுளிடம் ஏற்படும் உண்மையான அன்பானது குறிப்பிட்ட தனிமனிதர் களை நேசிப்பதை உணர்த்தாமல், பொதுவாக மனிதனை நேசிப்பதை உணர்த்துகிறது. இந்தப் புதிய மனப்பாங்கை நாம் வளர்த்துக் கொண்டால், நம் வாழ்க்கையானது முற்றிலும் மாறிவிடும். ஏனெனில் இந்தப் புதிய மனப் பாங்கு எல்லாத் தடைகளையும் உடைத்துத் தள்ளுகிறது. எல்லா பந்தங்களையும் அறுத்து விடுகிறது. ஒவ்வொரு வழியிலும் ஆன்மாவைப் பிணைத்துத் தடுப்பது (நாம் செய்யும்) செயலின் போக்காக உள்ளது. ஆனால் நாம் செய்யும் செயல்களின் எல்லாப் பலன்களையும் கடவுளுக்கு அர்ப்பித்தால், இந்த உண்மையான செயலானது எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து, எல்லாப் பிணைப்புக்களை யும் அழித்துவிடும். அதன்பிறகு கடவுளின் கைகளில் கருவிகள் ஆகிவிடுவோம். மற்றும் நம்மை நம்முடைய செயல்களின் இயக்கிகள் அல்ல என்று உணர்வோம். நாம்

மெய்ப் பொருளுக்காகத் துறவி மடத்தில், உலகத்தில் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக நமது மனங்களில் இடம் கண்டு கொள்ள வேண்டும்.

எனவே உண்மையான துறவு என்பது, எப்பொழுதும் நம் இதயத்தில் தெய்வீகத்தன்மையை நிறைத்துக் கொள்வது என்று பொருள்படுகிறது. பொதுவாக நம் மனமானது ஆசைகளாலும், உணர்ச்சிகளாலும் சுமையாக இருப்பதை நாம் காண்கிறோம். இந்த பாரத்திலிருந்து எந்த அளவிற்கு நம்மை விடுவித்துக் கொள்ள முடிகிறதோ, அந்த அளவிற்கு உள்ளே வீற்றிருக்கும் தெய்வீக ஒளியை அதிகமாக உணர்வோம். நாம் நம்மிடமிருந்து உணர்வு நிலையின் மையத்தைக் கடவுளிடம் மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன்பிறகு நமக்கும், மற்ற ஒவ்வொருவருக்கும் கடவுளிடம் ஒரு இடம் உள்ளது என்பதை அறிந்து கொள்வோம்.

தவறான நம்பிக்கைகள்—பிங்களாவின் கதை

பாகவதத்தில் அரசசபையின் நடனமாடும் பிங்களா என்னும் ஒரு பெண்மணியைப் பற்றிய கதை உள்ளது. அவள் செல்வத்திற்காகப் பேராசைப்படும் பெண்மணியாக இருந்தாள். ஒருநாள் எப்படி இருப்பினும் அவளைப் பார்ப்பதற்கு யாரும் வராமல் இருந்ததால் அவள் ஏமாற்றமடைந்தாள்.

'எப்பொழுது இந்த ஏமாற்றத்தால் அவள் முகம் வாட்டமுற்றதோ, மற்றும் அவள் மிகவும் உற்சாகம் இன்றி இருந்தாளோ, அப்பொழுது இந்த ஏக்கத்தின் விளைவாக ஒரு அருவருப்பு அவளிடம் ஏற்பட்டு, அது அவளை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்தது'.[1]

அவள் உண்மையிலேயே பாக்கியம் செய்த பெண்ணாக இருந்தாள். ஒருசிலர் மட்டுமே அவளைப் போலத் தங்கள் தெளிவுநிலைகளை அடைகிறார்கள். அவர்கள் அதே தவறுகளை திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே

---

1. பாகவதம், 11.8.27.

பழைய பதிவுகளால் இயக்கப்பட்டு, அதே மோசமான அனுபவங்களை மீண்டும் மீண்டும் பெற்றுக்கொண்டிருக் கிறார்கள். என்னுடைய குருவான சுவாமி பிரம்மானந்தர் ஒருமுறை:

'மனிதர்களில் மூன்று வகையினர் உள்ளனர். முதல் வகையினர், மற்றவர்களின் தவறுகளையும், அனுபவங்களை யும் காண்பதன் மூலமாகவே, தொல்லைகளில் மாட்டிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்கிறார்கள். அவர்களே ஒரு தவறைச் செய்து அதன்பிறகு படிப்பினையைப் பெற்றவர்கள் அல்லது ஒரு அனுபவத்தைப் பெற்றவர்கள் இடைப்பட்ட வகையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். தவறுகளைச் செய்து மீண்டும்மீண்டும் அனுபவங்களைப் பெற்றும் ஒருபொழுதும் ஒரு படிப்பினையையும் கற்றுக் கொள்ளாதவர்கள் மிக மோசமானவர்கள் ஆவார்கள்' என்று கூறினார்.

உலகியல் தொடர்பான எதைக் குறித்தும், எத்தகைய நம்பிக்கைகளையும் வைத்துக்கொள்ளாமல் இருப்பாய். கடவுளைக் குறித்த நம்பிக்கைகளை மட்டும் வைத்துக்கொள் வாய். மனிதனுக்குக் கடவுள் மட்டுமே மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறார். புலனுணர்வு சார்ந்த எல்லாவற்றின் மீதும் நாம் ஒரு வகையான அருவருப்பை உணர வேண்டும். உலக விஷயங்களில் நம்முடைய உண்மையான பற்றற்ற தன்மை யின் முதல் அடையாளமாக, அது உள்ளது. புலன்களால் அனுபவிக்கும் பொருட்களிடமும், அவைகளின் இன்பங் களிலும், கண்ணுக்குத் தென்படுபவைகளிடமும், சூட்சும மாக இருப்பவைகளிடமும் இந்த பற்றற்ற தன்மையை ஏற் படுத்திக் கொள்ளாமல் ஆன்மீக வாழ்வோ, அல்லது பெரு முயற்சியோ சாத்தியமாகாது.

உண்மையைச் சொன்னால் நாம் ஆசைகளையும் நம்பிக்கைகளையும் நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இது துன்பத்தையும் பிணைப்பையும் புலன்களுக்கு அடிமைப் பட்டுள்ள நிலையையும் மட்டுமே அளிக்கிறது. நம்பிக்கை ஆர்வத்தைக் கைவிடுவதால் நாம் மகிழ்ச்சியை

உணர்கிறோம். நம்முடைய ஒரே நம்பிக்கையானது கடவுளுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணர வேண்டும். நம்முடைய தூண்டுதல்களுடனும், ஆசைகளுடனும் இணைக்கப்பட்டுள்ள மற்ற எல்லா நம்பிக்கைகளும் கைவிடப்பட வேண்டும். பொதுவாக நம்முடைய நம்பிக்கைகள் நம்முடைய ஆசைகளையும், மற்றவர்களையும் சார்ந்து இருக்கும். நாம் நம்முடைய நம்பிக்கைகளைக் கடவுளிடம் மையப்படுத்துதல் கூடாது.

கடவுள் நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மாவாக நம்மிடம் நிலைபெற்றுள்ளார். ஆனால் நாம் கடவுளிடம் அக்கறை கொள்ளாமல், மற்றவர்களைச் சார்ந்திருப்பதற்கு முயற்சி செய்கிறோம். கடவுள்தான் எல்லாப் பேரின்பங்களின் ஆதாரம் ஆவார். வெளியிலுள்ள பொருட்கள், அளவிட முடியாத இந்த தெய்வீகப் பேரின்பத்தின் சிறிய அளவை மட்டும் பிரதிபலிக்கின்றன. புறஉலகத்தில் பொருட்களின் பின்னால் ஓடுவது என்பது நிழல்களில் பின்னாலும், பிரதிபிம்பங்களின் பின்னாலும் ஓடுவது என்று பொருள்படும்.

மஹாபாரத்தில் யயாதி என்னும் பெயரை உடைய ஒரு அரசனின் கதை உள்ளது. அவன் அவனுடைய இளமையின் முழுநிறைவு நிலையில் இருந்தபொழுது, ஒரு சாபத்தின் பயனாக அவன் திடீரென்று முதுமையை அடைந்து விட்டான். ஆனால் அவன் அவனுடைய மகனின் இளமையைக் கடன் வாங்கிக் கொண்டு பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் புலன் இன்பங்களை அனுபவித்தான். அத்தகைய நீண்ட கால இறுதிக்குப் பின்னும் புலன் இன்பங்களுக்கான அவனுடைய மிகையான விருப்பமானது குறையவில்லை என்று அவன் உணர்ந்தான் அதன்பிறகு அவன் கீழ்க்காணும் முடிவிற்கு வந்தான்.

'உண்மையாகவே இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆசையானது, இன்பங்களை அனுபவிப்பதன் மூலம் ஒருபொழுதும் நிறைவு அடைவது இல்லை. ஆசைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எரிந்து கொண்டிருக்கும்

தீயில் நெய்யை ஊற்றுவது போல, ஆசைகள் மேலும்மேலும் தீவிரமடைந்துகொண்டுள்ளன.[1]

துறவு மனப்பான்மையானது என்றாவது ஒருநாள் நமக்கு ஏற்படும். அனைவருக்கும், பிங்களாவிடம் மாற்றத்தை ஏற்படுத்திய தனிச்சிறப்பைப் போல திடீரென்று ஏற்படாது. ஆனால் நாம் யயாதியைப் போல முட்டாளாகவும் இருக்கக் கூடாது. நம்முடைய எல்லா ஆசைகளும் நிறைவேறும் வரை காத்துக்கொண்டும் இருக்கக் கூடாது. நாம் ஆன்மீக வாழ்விலிருந்து எதையாவது பெற நினைத்தால் பற்றற்ற தன்மையானது நம்முடைய முதன்மையான தனிக்கூறாக இருக்க வேண்டும். நம்மிடம், நம்முடைய முந்தைய அனுபவங்களின் காரணத்தினால் பல தூண்டுதல்கள் எழக்கூடும். ஆனால், உதவியற்ற நிலையில் நாம் அவைகளுக்கு எதற்காக இடமளிக்கிறோம் என்பதற்கு இது காரணமாகாது. நம்மால் அவற்றை அடக்க இயலும். அடக்க வேண்டும் என்ற போதிலும், சில காலத்திற்கு மிகவும் சிரமத்துடன் கூடிய, அகமுரண்பாடுகள் உடைய வாழ்க்கை என்று பொருள் கொள்ளப்படலாம். திடீர்த்தூண்டுதல்கள் நிறைந்த நம் வாழ்க்கைக்கு நாம் என்றாவது ஒருநாள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏன் இப்பொழுதே வைக்கக் கூடாது?

நாம் உண்மையாக என்ன செய்துகொண்டு இருக்கிறோம் என்பதைக் குறித்து மிகவும் தெளிவுடன் இருக்க வேண்டும். நம்மைச் செயல்களைச் செய்வதற்கு விரட்டும் சூட்சுமமாக உள்ள தூண்டுதல்களையும் ஆசைகளையும், நாம் கட்டாயமாகத் தவிர்த்து, அவற்றைப் பின்பற்றாமல் இருக்கிறோமா என்பதையும் எப்பொழுதும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் மனிதர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினால், அவர்கள் ஏன் நம்மை

---

1. ந ஜாது காம: காமானாமுபபோகேன சாம்யதி ।
ஹவிஷாக்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்ததே ॥

—யயாதியின் கதை, மஹாபாரதத்திலும், பாகவதத்திலும் உள்ளது. மேலே கூறப்பட்டுள்ள பகுதி பாகவதத்தில் உள்ளது (9.19.4); மனுஸ்ம்ருதியிலும் உள்ளது (2.94).

ஈர்க்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நாம் எதையாவது செய்ய நினைத்தால் நாம் ஏன் அதைச் செய்ய விரும்பு கிறோம் என்பதை அறிய வேண்டும். நம்முடைய ஆசைக்குப் பின்னாலுள்ள உண்மையான உட்கருத்தை அறிந்துகொள்ள வேண்டும். நாம் நம்முடைய ஆசைகளின் மூலகாரணத்தைக் கண்டறிந்து அதை அங்கேயே ஒழித்துக்கட்ட வேண்டும். நம் முடைய ஆன்மீக வளர்ச்சிக்கு உகந்ததல்லாத, தீமையை ஏற் படுத்தும் எல்லா கருத்துக்களும், தொடர்புகளும் நீக்கப்பட வேண்டும். எல்லா வகையான ஆன்மீக விதிமுறைப் பயிற்சி களிலும், உண்மையான பற்றற்ற தன்மையும், துறவும் பொது வான காரணக் கூறாக உள்ளது. இது இல்லாமல், நம்முடைய ஆன்மீக முயற்சியில் பெரிதாக எதையும் செய்ய இயலாது.

துறவுமனப்பான்மை ஏற்படுவதற்கு நேரம் எடுத்துக் கொண்டாலும் ஆன்மீக வாழ்வு தொடங்கப்படுவதற்கு முன்பே, அந்த துறவு மனப்பான்மை இருக்க வேண்டும். தூய்மைப்பாட்டிற்காக உண்மையான விருப்பமும் ஏக்கமும் இருக்க வேண்டும். இதுதான் ஆன்மீக வாழ்வைத் தொடங்கு வதற்கான மிகக்குறைந்த முன்நிபந்தனை ஆகும். இது மிகவும் கடுமையானது ஆகும். ஒருவருடைய புலன்களை யும், உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்துவதற்கு ஒருவர் மிகக் கடினமாக முயற்சிக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு சாதக னாலும் அவன் இலட்சியத்தை அடையும் வழியில், இந்தத் தொடக்ககட்டமானது கடக்கப்பட வேண்டும். எல்லா உண்மையான ஆன்மீக முயற்சிகளிலும் இந்த துறவு மனப் பான்மையானது மிகவும் அடிப்படையாக விளங்குகிறது. இத்தகைய ஆசையற்ற மனநிலை இன்றி, நாம் ஆன்மீக வாழ்வைப்பற்றி நினைக்காமல் இருப்பதும் நல்லதுதான். நாம் நமது பொழுது போக்கிற்காக வேறு எதையாவது மேற்கொள்வது அறிவிற்கு உகந்ததாக இருக்கும்.

அருவருக்கும் உணர்வு

ஒருவர் வாழ்க்கையில் ஒருவருடைய தவறை உணரும் பொழுது, உலகியல் இன்பங்களின் அருவருப்புத்தான் முதல்

எதிர் விளைவாக உள்ளது. பிங்களாவால் அவள் உடல்மீது உணரப்பட்ட அருவருப்புத்தான், ஒவ்வொருவருடைய உலகியல் வாழ்வின் விளைவாக ஒருவருக்கு ஏற்படும் முதல் எதிர் விளைவாக உள்ளது. பாவம் செய்த உணர்வு ஏற்படுத்து வதைவிட, இது ஒரு மிக முழுமையான நிலைமாற்றத்தைக் குறிப்பிடுகிறது. ஒரு மனிதன் தான் செய்த பாவங்களை நினைத்து ஏங்கிக்கொண்டு இருந்தாலும், அவற்றை, இன்னும் பற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் அருவருப்பு உணர்வானது ஒருவரை அப்பொழுதே உலகியல் வாழ்க்கை யிலிருந்து ஆன்மீக வாழ்க்கைக்கு மாற்றிவிடுகிறது. ஆன்மீக வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளவனுக்குப் பிங்களாவைப் போல அவனுக்குச் சொல்லிக் கொள்ள இயல வேண்டும்.

'என்னை விடவேறு யார் இந்த உடலைப் பற்றி அவ்வளவு பெரிதாக எண்ணியிருப்பார்கள்? இந்த உடலானது எலும்பைச் சார்ந்த வடிவமாக உள்ளது. முதுகுத்தண்டு, விலா எலும்பு, மற்றும் உறுப்புக்களால் ஆனது (ஒரு வீட்டின் கூரை முகட்டு உத்தரம், உத்தரங்கள் மற்றும் கம்பங்களைப் போல). மற்றும் அந்த உடல் தோல், முடி, நகங்கள் அதன் ஒன்பது சுரப்புக் கதவுகள் மற்றும் முற்றிலும் அழுக்கால் மூடப்பட்டிருக்கிறது.[1]

நாம் நம்முடைய உடலைக் குறித்து அருவருப்பு அடைகிறோமா என்று உணர்வதைப் பொறுத்து நாம் ஆன்மீக வாழ்விற்குத் திரும்பியுள்ளோமா என்பதை அறிந்து கொள்ள லாம். அவ்விதமான உணர்வை நாம் கொண்டால், மற்ற உடல்கள், ஆண் உடலோ, பெண் உடலோ நம்மை இனி மேல் கவராது. நம்முடைய ஆன்மீகப் பாதையில் அவை இனிமேல் இடறுகுழிகளாக இருக்காது. தன்னுடைய யோக சூத்திரத்தில் பதஞ்ஜலி,

'அகம் மற்றும் புறத் தூய்மையில் நிலைபெற்றவனுக்குத் தன் உடல்மீது வெறுப்பும், மற்றும் பிறருடன் உடல் தொடர்பு இன்மையும் உண்டாகும்.[2] என்று கூறியுள்ளார்.

---

1. பாகவதம், 11.8.33.
2. சௌசாத் ஸ்வாங்க ஜுகுப்ஸா பரைரஸம்ஸர்க: ॥
—பதஞ்ஜலி யோக சூத்திரம், 2.40.

நாம் மேலும் மேலும் நம்மை உள் ஆய்வு செய்து கொள்ளும் பொழுது, நம் மனமானது ஒரு X-ray கதிர்போல ஆகிறது. மற்றும் நாம் நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை முறையைக் குறித்த ஒரு ஆழ்ந்த நுண் அறிவுத் திறனைப் பெறுகிறோம்.

முதலில் அருவருப்பு உணர்வு ஏற்படுகிறது. அதன்பிறகு கழிவுப் பொருட்கள், அழுக்குகளால் உருப்பெற்றுள்ள மனித உடலின் பின்னணியில் உள்ள ஆன்மாவின் பெருமையை உணரும் விழிப்புணர்வு ஏற்படுகிறது. உண்மையான ஆன்ம அனுபவமானது மிகவும் தாமதமாக ஏற்படும். ஆனால் ஒருவர் ஆரம்பக் கட்டத்திலேயே அடிப்படைக் கோட் பாட்டைக் கிரகித்துக் கொண்டு விடலாம்.

அறிவுபூர்வமான கருத்துக்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. நாம் உணர்வுபூர்வமாகச் செயல் ஆற்று பவர்களாகவும் இருக்க வேண்டும். உலகியல் இன்பங்களில் நமக்கு உண்மையாக, முழுமையான அருவருப்பு ஏற்பட வேண்டும். பர்த்ரு ஹரியைப் போல நாமும் உணரத் தக்கவர் களாக இருக்க வேண்டும்.

‘இன்பங்கள் அனுபவிக்கப்படவில்லை. ஆனால் நாம் உண்ணப்பட்டுவிட்டோம். சமயச்சார்புடைய கடுமையான பழக்கவழக்கங்கள் செயற்படுத்தப்படவில்லை. ஆனால் நாம் பொசுக்கப்பட்டுவிட்டோம். காலம் மறையவில்லை. ஆனால் நாம் மறைந்துகொண்டிருக்கிறோம். ஆசைகள் தேயவில்லை. ஆனால் நாம் தேய்ந்துகொண்டிருக்கிறோம்.’[1]

அருளாளர்களின் எடுத்துக்காட்டுகள்

அருளாளர்களின் வாழ்க்கைகள் நாம் பற்றின்மையை எப்படிப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நமக்கு

1. போகா ந புக்தா வயமேவ புக்தாஸ்தபோ ந தப்தம் வயமேவ தப்தா: ।
காலோ ந யாதோ வயமேவ யாதாஸ்த்ருஷ்ணா ந ஜீர்ணா வயமேவ ஜீர்ணா: ॥
—பர்த்ருஹரி, வைராக்ய சதகம், 7.

அறிவுறுத்துகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில், வங்காளத்தில் வாழ்ந்த அனைவராலும் அறியப்பட்டிருந்த வைஷ்ணவ அருளாளரான லாலா பாபா என்பவரை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அவர் நடுவயதைக் கடக்கும் வரையிலும் நல்ல திடமான வாழ்க்கையை மேற்கொண்டார். அவர் ஒரு நாள் வீடு திரும்பிக்கொண்டிருந்தபொழுது, ஒரு வண்ணானின் மகளான இளஞ்சிறுமி, தன் தந்தையிடம், 'அப்பா, நேரமாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் எப்பொழுது வாசனையை எரிப்பீர்கள்?' என்று தந்தையிடம் கூறிக் கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்க நேர்ந்தது. வங்காள மொழியில் வாசனை என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன. வாசனை என்பது வாழை மரத்தின் பட்டைகளை குறிக்கிறது. அது முற்காலத்தில் வண்ணான்களால் சோப்புக் கட்டிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. வாழை மரத்தின் பட்டைகளைக் காய வைத்து, அதன் பிறகு அதை எரித்து அதன் சாம்பலைச் சோப்புக் கட்டிக்குப் பதிலாகப் பயன் படுத்தினர். வாசனை என்னும் சொல்லிற்கு ஸம்ஸ்காரங்கள் என்னும் பொருளும் உள்ளது. லாலா பாபா, அந்தச் சொல்லை இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள பொருளில் புரிந்துகொண் டார். திடீரென்று தனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது என் பதையும், தன்னுடைய தூய்மையற்ற ஸம்ஸ்காரங்களை இன்னும் தான் அழிக்கவில்லை என்பதையும் உணர்ந்தார். அவர் அப்பொழுதே, அங்கேயே உலகத்தைத் துறந்தார்.

வட இந்தியாவைச் சேர்ந்த மிகச் சிறந்த கவிஞரும் அருளாளருமான துளசிதாஸ், அவர் ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்வதற்கு முன்பு தன் மனைவியின் மீது மிகவும் அன்பு வைத்திருந்தார். அவருடைய மோகமானது மிகவும் வலிமை உடையதாக இருந்தது. ஒருமுறை அவருடைய மனைவி அவருடைய பெற்றோரைக் காண்பதற்காகச் சென் றிருந்தாள். அவரால் ஒருநாள் கூட அந்தப் பிரிவைத் தாங்க இயலவில்லை. அதே இரவு அவர் அவருடைய மனைவி யைத் தேடிச் சென்றார். அதன்பிறகு அவருடைய மனைவி அவரை மெல்லக் கண்டித்து, 'என்னுடைய உடல்மீது

உங்களுக்கு உள்ள மோகத்துடன் கூடிய ஆசையைப் போல நீங்கள் கடவுளை விரும்பியிருந்தால், நீங்கள் உண்மையாகவே கடவுளை உணர்ந்திருப்பீர்கள்' என்று கூறினாள். இந்தச் சொற்கள் அவருடைய மனத்தை மறைந்திருந்த அறியாமை என்னும் திரையை அகற்றியது. அதன்பிறகு துளசிதாஸ் உடனடியாக, தன் மனைவி உட்பட எல்லாவற்றையும் துறந்து, ஆன்மீக வழியை மேற்கொண்டார்.

துறவின் வகைகள்

அருளாளர்களின் வாழ்க்கையில் நாம் காணும் பற்றற்ற தன்மை மற்றும் இரக்கத்தின் தீவிரத் தன்மையில் சிறிதளவையாவது நாம் நம்முடைய வாழ்க்கைகளில் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். நாம் மேலே குறிப்பிட்டுள்ளபடி திடீரென்று முழுமையாக ஏற்படும் துறவு நிகழ்வுகள் மிகவும் அரியவையாகும். வாழ்க்கையில் பலமான அடிகளைப் பெற்றபிறகும், பெரும்பாலான மனிதர்கள் தற்காலிகமான துறவையே மேற்கொள்கிறார்கள். அவர்களின் பலரும் 'பெண் மற்றும் பொன்' என்னும் இவற்றின் பின்னால் சிக்கிக் கொள்கிறார்கள். மேலும் மேலும் மனித அன்பு என்னும் பொம்மலாட்டத்தில் மனித பொம்மைகளாக ஆகிக் கொண்டிருக்கின்றனர். அதன் பிறகு அவர்கள் 'ஓ எங்களுக்கு ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியும், நாங்களே அதைச் சில காலத்திற்குப் பின்பற்றி இருக்கிறோம். ஆனால் நீங்கள் மேற்கொள்ளும் சிரமங்களுக்கெல்லாம் இது ஏற்றதல்ல. இந்த எல்லா மனித உறவுகளுடன் கூடிய உலக வாழ்க்கையே இன்னும் மேலானது. நாம், ஒருவர், மற்றொருவருக்காக இருந்து கொண்டிருக்கிறோம்' என்று கூறுவார்கள். இத்தகைய எல்லாப் பேச்சும் பலவீனமான மற்றும் குழம்பி இருக்கும் மூளையின் அடையாளமாகத்தான் உள்ளது.

மூன்று வகையான துறவுகள் உள்ளன.

1. ஒரு மனிதனின் உண்மையற்ற துறவறம் — எவன் வெளிப்புறமாகச் செயல்பாடுகளைக் கை விடுகிறானோ,

ஆனால் உள்ளுக்குள் உலகப் பொருட்கள் மற்றும் இன்பங்களுக்காக மிக அதிகமாக ஏக்கம் கொண்டிருக்கிறானோ—

2. ஒரு உண்மையான ஆன்மீக சாதகனின் உண்மையான துறவறம் — எவன் தன் துறவறத்தை உறுதியான முயற்சியுடன் நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறானோ, ஆனால், எவன் உண்மையின் காட்சியால் இதுவரை வாழ்த்தப்படவில்லையோ—

3. உண்மையை உணர்ந்தவனின் உண்மையான துறவறம் — எவனுள் எல்லா முரண்பாடுகளும், மன உலைவுகளும் எக்காலத்திற்கும் அமைதிப்படுத்தப்பட்டு விட்டனவோ.

பலராலும் அறியப்பட்ட ஒருவாசகம்.

'இன்பத்தை அனுபவிப்பதில் உடல் நலக்கோளாறு ஏற்படும் பயம் உள்ளது. சமூகத்தில் பெரிய பதவி போன்றவற்றில் அவதூறு ஏற்படும் பயம் உள்ளது. செல்வத்தில் அதை இழக்கும் பயம் உள்ளது. புகழில் கீழ்மைப்படுத்தப்படும் பயம் உள்ளது. வலிமையில், பகைவர்களின் பயன் உள்ளது. அழகில் முதுமைப் பருவத்தின் பயம் உள்ளது. புலமையில், வாக்குவாதம் செய்பவர்களின் பயம் உள்ளது. ஒழுக்கத்தில், பழித்து இகழ்பவர்களின் பயம் உள்ளது. வாழ்க்கையில், மரணத்தின் பயம் உள்ளது. உண்மையாகவே இவ்வுலகத்தில் உள்ள அனைத்தும் பயத்தால் பின்தொடரப்படுகிறது. துறவு மட்டுமே அச்சமற்ற தன்மைக்கு வழிகாட்டுகிறது' என்று கூறுகிறது.[1]

அகத்தில் பற்றற்ற தன்மை

உடலளவில் நாம் வெளிப்புறத்தில் இந்த உலகைத் துறப்பதால், நம் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும்

---

1. போகே ரோகபயம் குலே ச்யுதிபயம் வித்தே ந்ருபாலாத் பயம்
மானே தைன்யபயம் பலே ரிபுபயம் ரூபே ஜராயா பயம் ।
சாஸ்த்ரே வாதிபயம் குணே கலபயம் காயே க்ருதாந்தாத் பயம்
ஸர்வம் வஸ்து பயான்விதம் புவி ந்ருணாம் வைராக்யமேவாபயம் ॥
—பர்த்ரு ஹரி, வைராக்ய சதகம், 31.

திடீரென்று நம்மால் தூய்மைத் தன்மையைப் பெறவியலாது. முதலில் கெட்ட செயல்களைத் தவிர்க்க வேண்டும். பிறகு கெட்ட எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும். இரண்டாவ தாகக் கூறப்பட்டுள்ளது முதலில் கூறப்பட்டதை விடக் கஷ்டமானது ஆகும். ஒரு கெட்ட எண்ணத்தை விடுவதை விட, ஒரு கெட்ட வழக்கத்தை விடுவது சுலபமானதாகும். தூய்மையான எண்ணத்தைப் பெறுவதுதான் மிகப் பெரிய கஷ்டமாக உள்ளது. நல்லது மற்றும் கெட்டது இரண்டுமே உண்மைகளாக உள்ள ஒப்பீட்டு முறை ஒழுக்கமட்டத்தில் நாம் இருக்கும்வரை இதுதான் நிலை ஆகும். ஆனால் நாம் கெட்டதை தவிர்த்து மற்றும் நல்லதை ஏற்க முயற்சி செய் கிறோம். பழைய மனப்போக்குகள் மற்றும் பதிவுகளின் காரணத்தால் கேடு உள்ளே நழுவிச் செல்ல விரும்புகிறது. மற்றும் சில சமயங்களில் உள்ளே வருவதில் வெற்றியும் அடைகிறது. திடமான உறுதியின் முயற்சியால் நாம் அதை நல்ல எண்ணங்களால் இடம்மாற்றி அமைக்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும் இந்த பலப்போட்டியானது தவிர்க்க இயலாததாக உள்ளது. நாம் வளர்ச்சியடைந்து கொண்டிருக் கும் பொழுது தான் இந்தப் போராட்டம் மிகமிகச் சூட்சும மாகிறது. மற்றும் மெருகற்ற, மாசு நிறைந்த இயல்புகளின் நல்ல, கெட்ட மட்டங்களை மீறி எழுச்சி பெற்றுள்ள நாம் அவைகளின் சூட்சுமமான இயல்புகளுடன் போராட வேண்டும்.

கெட்டவர்களின் தொடர்பை மிகவும் சுலபமாக விட்டு விடலாம். நம்மால் சுலபமாக உலகியல் தொடர்புகளையும், உலகியல் பேச்சுக்களையும் தவிர்க்க இயலும். ஆனால் நம் மனத்துடன் தொடர்பு கொண்டுள்ள உலகியல் தொடர் புடைய முன்னாள் நண்பர்களையும் அவர்களுடன் தொடர் புடைய தூய்மையற்ற எண்ணங்களையும் உதறுவது மிகவும் கடினமான ஒன்றாகும். மற்றும் மிகவும் தொல்லை தருகிற ஒன்றாகும். அப்பொழுது என்ன செய்யப்பட வேண்டும்? விலக்கப்பட்ட நண்பர்களின் மனத்தளவான தொடர்பானது, வெளியிலுள்ள உண்மையான தொடர்பைவிட மிகவும்

ஆபத்தானது ஆகும். முதலில் உன்னை உறுதியான மனத்துடன் எல்லா பழைய தொடர்புகளிலிருந்தும் விடுவித்துக் கொள்ள வேண்டும். மற்றும் வெளியுலகத்துடன் புதிய புறத் தூண்டுதல்கள் ஏற்படுவதையும் தவிர்க்க வேண்டும். அதன் பிறகு உன்னை நீயே கூர்ந்து ஆராய்வு செய்து கொள்ள வேண்டும். பழைய நினைவுகள் உன் மனத்தில் எந்த வழிகளில் ஏற்படுகின்றன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். மிகவும் கடுமையான பாகுபடுத்திக் கண்டறியும் தன்மையுடன் உன்னைப் பழைய கருத்து உருவங்களிலிருந்து பிரித்துக் கொள்ள வேண்டும். பிணைப்பும் வெறுப்பும் நிறைந்த வாழ்க்கையின் இரங்கத்தக்க நிலையைக் குறித்து உன் மனத்திற்குத் தொடர்ந்து பயன் விளைவிக்கக் கூடிய யோசனைகளை அளித்து அதனை நம்பவைப்பாய். பழைய அழுக்குகள் அனைத்தையும் அப்புறப்படுத்திக் கொண்டே இருப்பாய். மற்றும் புதிய அழுக்குகள் சேராத வண்ணம் எச்சரிக்கையுடன் இருப்பாய். படிப்படியாக உன் மனம் தெளிவாகவும், உறுதியாகவும் ஆவதை நீ காண்பாய்.

கண்ணுக்குப் புலப்படும் மற்றும் சூட்சுமமான மட்டங்களில் போராட்டங்கள் நடைபெறும் பொழுது நாம் புனிதமான எண்ணங்களில் நிலைத்து இருப்பதற்கு (இஷ்ட தெய்வத்தின் நாமம், மற்றும் வடிவம் குறித்தவை) முடிந்த அளவிற்கு முயற்சி செய்து இவ்விதத்தில் புனிதமற்ற எண்ணங்களை அகற்ற வேண்டும். ஆனால் சில சமயங்களில் நம்மையும் 'மீறி, போலி எண்ணங்களின் கோளாறினால், தூய்மையற்ற காட்சிகள் மிகவும் ஒள்ளியதாகி விடுகின்றன. அத்தகைய நிலையில் , புனித மந்திரத்தை நாம் மீண்டும் மீண்டும் கூறும் பொழுது, நாம் ஒரு சாட்சியின் நிலையில் இருந்து கொண்டு அல்லது தீய எண்ணங்களை நோக்கி ஒரு பார்வையாளராக இருந்துகொண்டு, நம்மை அந்த சிக்கல் வாய்ந்த களத்திலிருந்து பிரித்துக் கொள்ள வேண்டும். நாம் கவனமற்று இருக்கும் கணங்களில், எந்த கெட்ட செயலையும் செய்யாமலே நாம் நம்மைக் கெட்ட எண்ணங்களுடன் அடையாளம் கண்டு கொண்டு, உடளவிலும், மனத்தளவிலும்

பாதிப்பை உணரலாம். எப்படி இருப்பினும் நாம் மேலும் மேலும் விழிப்புணர்வுடன், நாம் அவற்றுடன் அடையாளம் கண்டு உணராமல் இருப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டால், அவை நம்முன்பு அவற்றை வெளிப்படுத்திக் கொள்வதற்கு முன்பே நாம் அவற்றை தூரத்தில் இருத்தி வைக்கலாம். மனத்தின் உள்முகமான தொடர்பற்ற தன்மையானது, ஆன்மீக சாதகர்களுக்கு ஒரு மிகப் பெரிய உதவியாக உள்ளது. அவர்கள் நடைமுறையில் உண்மையான ஆன்மீக அனுபவத்தைப் பெறும்பொழுது இந்த தொடர்பற்ற தன்மையானது இயல்பான அகத்தூண்டுதலால் ஏற்படுகிறது.

சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், ஒரு கெட்ட எண்ணம் எழுவதைத் தடுக்க இயலாது. ஆனால் பயிற்சியின் மூலம், கானல்நீரை ஒருவர் எப்படிக் காண்பாரோ, அதனுடைய உண்மையற்ற தன்மையை அவர் ஏற்கனவே கண்டு கொண்டு உள்ளதைப்போலக் காண வேண்டும். இந்த இயற்காட்சியை முற்றிலுமாக நிறுத்த இயலாது. ஆனால் உண்மையின் புறத்தோற்ற ஒற்றுமையை உடைய, ஆனால், அதனுடைய உண்மையான தன்மையில் போலியாக உள்ள ஒரு இயற்காட்சியைப் போலக் காணப்பட வேண்டும்.

இயற்காட்சியின் நாமங்கள், வடிவங்கள் குறித்த உண்மையற்ற தன்மையை உணர்வதற்கும், மற்றும் அதனுடன் நமக்கு உள்ள செயற்கையான உறவைப் பற்றி உணர்வதற்கும், அதன் பின்னணியில் பரம்பொருள் இருப்பதைக் காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இயற்பொருள் சார்ந்த எல்லா வடிவங்களின் பின்னணியிலும் கடவுட் தத்துவத்தை அறிந்து கொள்வதில் நாம் வெற்றிபெற்றால், நாம் அவற்றால் உண்மையாகவே பாதிக்கப்படாமல் இருப்போம். போராடும் போக்கில், நாம் ஏறத்தாழ அவைகளால் பாதிக்கப்படுவதை உணர்வதைத் தடுத்து நிறுத்த இயலாமல் இருந்தாலும், நாம் அந்தப் பிறழ்வைக் குறித்து எண்ணாமல் எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்குக் கடவுளைக் குறித்து எண்ண முயற்சி செய்ய வேண்டும்.

சம்சாரம் என்னும் மரம் (வாழ்க்கை என்னும் மரம்)

இந்துக்களின் திருமறை நூல்கள், இந்த உலகத்தை ஒரு மரத்திற்கு ஒப்பிட்டுள்ளன. புலன்களால் உணரத்தக்க இவ்வுலகத்தை வாழ்க்கை என்னும் ஒரு மரத்திற்கு ஒப்பிடுவது ஒரு தொன்மையான கற்பனையாகும். பாகவதம் இதைக் கீழ்க் கண்ட முறையில் விவரித்துள்ளது.

'அதற்கு இரு விதைகள் உள்ளன. நூறு வேர்கள் உள்ளன. மூன்று உடல் பகுதிகள் (மையப்பெரும் பகுதிகள்) உள்ளன. ஐந்து முக்கியமான கிளைகள் உள்ளன. மற்றும் பதினொன்று துணைக் கிளைகள் உள்ளன. அது ஐந்து வகையான மரப் பால்களை கசிய விடுகிறது. அந்த மரத்தில் இரு பறவைகளின் கூடுகள் உள்ளன. அந்த மரம் மேலே சூரியனை எட்டும் அளவிற்கு உள்ளது. மூன்று அடுக்குகளால் ஆன மரப்பட்டை உள்ளது. மற்றும் இருவகையான பழங்களை உற்பத்தி செய்கிறது.[1]

இங்குக் குறிப்பிடப் பட்டுள்ள மரம் அண்டத்தின் நுண் மாதிரிப் படிவான (Microcosm) பிண்டத்தையும் மனித உயிரையும் பேரளவினதாகிய முழுமையையும் (Macrocosm) சுட்டிக் காட்டலாம். அந்த மரம் என்பது என்ன என்பதை ஒருவரால் சரியாகப் புரிந்துகொள்ள இயலுமாயின் அதிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம். நம்மைக் குறித்த சரியான கருத்து

---

1. பாகவதம், 11.12.22

இந்தப் பாடலில் குறிக்கப்பட்டுள்ள இரு விதைகள் என்பது நல்லியல்பு, மற்றும் தீயியல்பு ஆகும். வேர்கள் கணக்கற்ற ஆசைகள் ஆகும். மூன்று உடல் பகுதிகள் சத்துவகுணம், ரஜோகுணம், தமோ குணங்கள் ஆகும். ஐந்து முக்கியமான கிளைகள் பஞ்ச பூதங்கள் ஆகும். (நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்) உறுப்புக்களும், மனமும் பதினொன்று துணைக் கிளைகள் ஆகும். மரத்திலிருந்து வெளிவரும் மரப்பால்கள் ஐம்புலன்கள் ஆகும். இரு பறவைகளும் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஆகும். மூன்று அடுக்குகளால் ஆன மரப்பட்டை நரம்பிற் குரிய, பித்தத்திற்கு உரிய, நிணநீருக்கு உரிய மெய்நிலைக் கூறுகளைக் குறிக்கின்றன. இன்பமும், துன்பமும் இரு பழங்கள் ஆகும்.

நோட்டமும், மற்றும் இந்த உலகைக் குறித்த சரியான கருத்து நோட்டமும் இருக்க வேண்டும். அந்த மரமானது தெய்வீக சக்தியின் பரந்த அடித்தளத்திலிருந்து வளருகிறது.

தனிமனிதனுக்கும், இயலுலக அண்டத்திற்கும் உரிய தொடர்பைக் கண்டுகொள்ளும் வகையில் மனமானது உயர்ந்த மையங்களை நோக்கி உயர வேண்டும்.

மரத்தின் வேர்கள், கணக்கற்ற ஆசைகளையும், மற்றும் உணர்ச்சிகளையும் குறிக்கின்றன. நம்முடைய எல்லாக் கஷ்டங்களுக்கான மூலகாரணமானது இந்த ஆசைகளில் உள்ளது; நம் தனித்தன்மையைப் பற்றிக் கொள்வதில் உள்ளது; புலன் இன்பங்களை அனுபவிக்கும் வேட்கையில் உள்ளது. பக்தியும், தன்னலமற்ற தொண்டும் நம்மை இந்த அடிப்படைக் கூறுகள் என்னும் சிக்கலிலிருந்து விடுபட வைக்கின்றன.

எல்லா வேர்களும் வெட்டப்பட்டால் அந்த மரமே விழுந்துவிடும். ஆனால் இது மிக அபூர்வமாகத்தான் நடைபெறும். நம்மால் அதிகபட்சம் நம் விருப்பங்களில் ஒரு பகுதியைத்தான் அழிக்க இயலுகிறது. மரமானது, மீந்துள்ள மற்ற வேர்களின் துணையுடன் தொடர்ந்து வாழும். ஆசையின் எல்லா வேர்களையும் வெட்டுவது அத்தனை சுலபமானது அல்ல.

ஆனால் நாம் சோர்வடையக் கூடாது. நம்முடைய ஆன்மீகப் பயிற்சியானது, நம்முடைய கீழான இயல்பைக் குறித்து மேலும்மேலும் வெளிப்படுத்துமாயின், ஆசைகளின் மூல காரணத்தை மேலும் மேலும் வெளிப்படுத்தினால் நாம் நம் தன்னம்பிக்கையை இழக்க வேண்டாம். ஆழ்மனத்தின் அடியில் மிக அதிகமான தீய நினைவுகளும், இயல்பான தூண்டுதல்களும் ஆழமாகப் புதையுண்டிருக்கும். நமக்குத் தெரியாமலே அவை நெடுங்காலமாக அங்கிருந்து கொண்டுள்ளன. அவை சிலசமயங்களில் மேலே வரத் தொடங்கினால், நாம் அவைகளைக் கண்டு பிடித்துள்ளோம் என்று மகிழ்ச்சி அடைய வேண்டும். நம் உள்ளே உள்ள

உண்மையான நிலைமையை உணர்ந்துகொண்டு, நம்முடைய எல்லாத் தொல்லைகளுக்கும், அமைதியாகவும், நிதானமான அறிவுத் திறத்துடனும் ஒரு தீர்வைக் கண்டுகொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக நாம் அந்த எண்ணங்களை மறைக்க நினைத்து, அந்த எண்ணங்கள் அங்கு இல்லை என்று பாசாங்கு செய்தால், நாம் நம்மை ஏமாற்றித்தான் கொள் கிறோம். மற்றும் நம்முடைய ஆன்மீக வளர்ச்சியைத் தடை செய்து கொள்கிறோம். ஒருவர் தம்முடன் முற்றிலும் வெளிப் படையாக இருப்பது கஷ்டமானதாகும். உண்மையாக, நேர்மையாக இருப்பது எப்பொழுதும் நம்முடைய வளர்ச்சி யைக் குறிப்பதாக உள்ளது. நாம் நம்மிடமே நம்முடைய தவறுகளை உண்மை என்று ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை எனின், வாழ்க்கையின் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற மனத் துணிவை நாம் எப்படிப் பெற இயலும்? ஆழ் மனத்தின் அடியில் விஷயங்களை புதைத்து வைத்துக் கொண்டிருப்பது சிக்கலுக்கான தீர்வு இல்லை. ஆனால் நாம் அப்படி நினைத்துக் கொண்டிருப்பதால் நாம் நம்மை முட்டாள்களாக ஆக்கிக் கொள்கிறோம்.

கிறிஸ்தவ சமயத்தில் பின்பற்றப்படும் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் முறையானது, ஆழ்மனத்தின் அடியில் உள்ள விஷயங்களை வெளியேற்றுவதில் பாதி அளவிற்குச் சிக் கலைத் தீர்க்கிறது. ஆனால், இது எப்பொழுதும் வெற்றிகர மாக இருக்காது. ஏனெனில் தன் மனத்தைத் தானே நுணுகி ஆராயும் ஆற்றலானது, பெரும்பான்மையான மனிதர்களிடம் மிகக் குறைந்த அளவில்தான் வளர்ச்சி அடைந்து இருக்கும். ஆன்மீக விதிமுறைப் பயிற்சியும், கட்டுப்பாடுகளும் இல் லாமல் இருப்பதுதான் இதற்குக் காரணமாக உள்ளது. மேலும் மரபுடன் இணைக்கப்பட்டுள்ள இறைமை நூல் சார்ந்த மேற்பூச்சுகள் பெரும்பாலும் எதிர்மறை செயல்விளை வையே கொண்டிருக்கும்.

ஆழ்மனத்தின் அடியிலுள்ள விஷயங்கள் அவை மேலே எழும்பி வரும்பொழுது, அவற்றைக் கடவுளின் முன் வைப்பது மற்றொரு முறையாகும். உன்னுடைய பழைய

பதிவுகளிலிருந்து உன்னை விடுவிக்கச் செய்ய வேண்டும் என்று நீ கடவுளிடம் தீவிரமாகப் பிரார்த்தனை செய்யலாம். ஆழ் மனத்தில் புதையுண்டவற்றை விடுவிப்பதற்குப் பிரார்த் தனை ஒரு ஆற்றல் மிகுந்த சாதனமாகச் செயலாற்றவியலும். உன்னிடம் கீழ்மையான எண்ணங்கள் மேலெழும்பி வரு வதைக் குறித்து நீ பயப்படத் தேவையில்லை. நீ மற்ற அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பிப்பது போல அவற்றை யும் அர்ப்பித்து விட வேண்டும். இயல்பாக, கடவுளிடம் மிகப் பெரிய அளவில் நம்பிக்கைக் கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமே இதைச் செய்ய இயலும்.

மற்றொரு முறையும் உள்ளது. ஒருவேளை இது மிகச் சிறந்த வழியாக இருக்கக் கூடும். அதாவது மேலெழும்பி வரும் அனைத்தையும், எந்த அளவிற்கு மோசமானதான இருப்பினும், அதை ஒரு சாட்சியாக நின்றுகண்டு கொண் டிருப்பது. நம்மால் ஒரு கெட்ட தூண்டுதல் அல்லது கெட்ட உணர்விலிருந்து முதலில் அதைப் பற்றி அறிந்துகொள்ளாமல் அதிலிருந்து விடுபட இயலாது. மற்றும் அது இருப்பதை ஏற்றுக் கொள்ளாமல் அதிலிருந்து விடுபட இயலாது. நூற்றுக் கணக்கான தூய்மையற்ற எண்ணங்கள் நம் மனத்தில் மூழ்கிக் கிடந்தால் என்ன? நாம் அதைப் பொருட்படுத்தத் தேவை யில்லை. அவைகளுடன் தொடர்பு கொள்ளாமல் உன்னை நீ வைத்துக் கொள்வதுதான் மிகவும் முக்கியமானதாகும். விழிப் புணர்வு உள்ள மனம் அவற்றுடன் தொடர்பு கொண்டால் தான், உண்மையாகவே அவை நம்மைச் சார்ந்ததாக இருக்க வியலும், மற்றும் நமக்குத் தொல்லை அளிக்கவியலும். ஆனால் ஆன்மா தூய்மையானது, பிணைப்பற்றது என்பதை உணர்ந்து நாம் ஒரு சாட்சியாக இருந்து, தூய்மையற்ற எண்ணங்களால் பாதிக்கப்படாமல் இருக்கலாம். இது சாதகனுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். உன்னுடைய உண்மையான இயல்பைக் குறித்து அதிகமாக எண்ணுவாய். உன்னை உன் எண்ணங்களுடன் அடையாளம் கண்டு கொள் வதை அது நல்ல எண்ணமோ அல்லது கெட்ட எண்ணமோ, அதைவிட்டு விடுவாய். படிப்படியாக உன்னால் உன்

எண்ணங்களைக் கடக்க முடியும். மற்றும் ஆன்மாவாக இருக்க வியலும்.

அறிவு என்னும் கோடரி

பாகவதத்தில் உள்ள 'வாழ்க்கை என்னும் மரத்தை'ப் பற்றி நாம் குறிப்பிட்டிருந்தோம். நாம் அதை எப்படி வெட்டி வீழ்த்துவது? இதை எப்படிச் செய்வது என்று ஸ்ரீகிருஷ்ணர் உத்தவருக்குக் கூறுகிறார்.

'இவ்விதம் உறுதியுடனும் விழிப்புணர்வுடனும் இருந்து அறிவு என்னும் கோடரியை, குருவிற்குத் தொண்டு ஆற்று வதன் மூலம் கூர்மையாக்கி, ஒருமுகப்படுத்தப்பட்ட பக்தி யுடன், உயிர் நிலையில் வேர் ஊன்றியுள்ள இந்த வாழ்க்கை என்னும் மரத்தை வேறாக ஒதுக்கி, அதன் பிறகு ஆன்மா வுடன் உன்னை அடையாளம் கண்டுகொண்டு உன் ஆயுதத் தைக் கீழே வைத்துவிட வேண்டும்.[1]

அறிவு என்னும் கோடரியானது, மனத்தின் பாகுபடுத்திக் காணும் ஆற்றல் ஆகும். மழுங்கிய ஆயுதத்தால் மந்தமாக உள்ள மனத்தால் எதையும் பெற வியலாது. சோர்ந்துள்ள ஊக்கமற்ற மனத்தால் உன்னால் இந்த வாழ்க்கை என்னும் மரத்தை ஒரு பொழுதும் வெட்ட இயலாது. மனத்தை கூர்மை யான மதித்திறத்துடனும் எச்சரிக்கை உணர்வுடனும் தொடர்ந்து செய்துவிடும் முயற்சியுடனும் வைத்துக்கொண் டிருந்தால்தான் உன்னால் வெட்டிச் சாய்க்கும் செயலையே தொடங்க இயலும். இதற்கு நேரம் ஆகும். ஒரு நீண்ட நேரம். ஒருவர் தன்னுடைய உண்மையான இயல்பை உணரும் வரை யிலும், ஒருவர் தன்னுடைய மனத்துடன் தன்னை அடை யாளம் கண்டு கொள்வதை விடும் வரையிலும் ஆயுதத்தைக் கீழே வைக்க இயலாது.

மனிதர்களில் பலரும் ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். ஆனால் மிகச்சிலரே

---

1. பாகவதம், 11.12.24.

அதனுடைய சோதனைகளைத் தாங்கிக் கொள்ள ஆயத்தமாக உள்ளனர். அதுதான் மிகப் பெரிய சிக்கலாகும். உலக சமயங்கள் குறித்த பழங்கால முனிவர்களின் அழைப்பானது சுவாமி விவேகானந்தரின் குரலில் எதிரொலிப்பதைக் கேட்பாய்.

'யாழ் கிடைத்த பின்னும் மீட்டாமல் காத்திருக்காதே. இப்போதே வாசித்து மகிழாமல் ஏன் சொர்க்கத்திற்காகக் காத்திருக்கிறாய்? இங்கேயே அதைச் செய். திருமணம் செய்வதோ, செய்து கொடுப்பதோ சொர்க்கத்தில் இல்லை. இங்கேயே தொடங்கி யாருமற்ற நிலையை இங்கேயே அடையாதது ஏன்? துறவியின் காவி உடை சுதந்திரத்தின் அடையாளம். இந்த உலகத்திற்கு உரியதான பிச்சைக்கார உடையைப் புறக்கணித்து விடு. சுதந்திரத்தின் கொடியாகிய காவி உடையை அணிந்துகொள்.'

உலகின் மிகச் சிறந்ததை மிகத் தூயதை இறைவனின் பீடத்தில் பலிகொடு. முயற்சி செய்யாதவனை விடப் போராடுபவன் சிறந்தவன். துறந்த ஒருவனைக் காண்பதுகூட இதயத்தைத் தூய்மையாக்குகிறது. இறைவனுக்காக உறுதி யாக நில். உலகம் போகட்டும். விட்டுக் கொடுக்காதே. உலகத்தைத் துறந்து விடு. அப்போதுதான் உடலுடனான பிணைப்பு தளரும். அது முற்றிலுமாக விலகும்போது நீ முக்தன் ஆவாய். சுதந்திரனாக இரு. மரணம் நமக்குச் சுதந்திரம் தருவதில்லை. வாழும்போது சொந்த முயற்சி யால்தான் முக்தி பெற வேண்டும். அதன் பின்னர் உடல் இறந்தால் மீண்டும் பிறவி இல்லை.

'இதயத் தூய்மை பெற்றவர்கள் பேறு பெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள்.' எல்லா தீர்க்க தரிசிகளையும் புத்தகங்களையும் இழக்க நேர்ந்தாலும், இந்த வாக்கியம் ஒன்றே மனித குலத்தை உய்விக்கப் போது மானது. இதயத் தூய்மை கடவுள் காட்சியை அளிக்கிறது. பிரபஞ்ச இசையின் கருத்தே இதுதான். தூய்மையில் பந்தம் இல்லை. தூய்மையின் மூலம் அறியாமைத் திரைகளை

அகற்றுங்கள். நாம் யார் என்பதை உள்ளது உள்ளபடி அறிவோம். ஒருபோதும் நாம் பந்தத்தில் இருந்ததில்லை என்பது நமக்குப் புரியும். இந்த உலகில் மிகப் பெரிய பாவம் பன்மையைக் காண்பதே. அனைவரையும் ஆன்மாவாகப் பார்த்து அனைவரையும் நேசி. வேறுபாட்டு எண்ணத்தை விட்டுவிடு.[1]

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.486-487.

11

ஆன்மீக வாழ்வின் அடிப்படைத் தேவை —தூய்மையான மனம்

முற்றிலும் விழிப்புணர்வுடன் இருப்பாய்

எப்பொழுதும் ஒழுக்கத்துடன் கூடிய பாதையை, ஆன்மீகப் பாதையைப் பின்பற்ற முயற்சி செய்வாய். தூய்மைக் கேட்டைக் குறித்த உணர்வு அற்ற மனிதர்களும் இருக்கின்றனர். அவர்கள் எந்த அளவிற்கு தவறுகளைச் செய்கிறார்களோ, அந்த அளவிற்கு சொரணையற்றவர்களாக உள்ளனர். அவர்களுடைய ஒழுக்க, நீதிநெறி முறைகளின் உணர்வு நுட்பமானது அழிந்துவிட்டது. அவர்களுக்கு வெட்க உணர்வும் இருப்பதில்லை. ஆனால் ஒரு உண்மையான சாதகன் ஒழுக்க உணர்வுகள் குறித்து மிகவும் நுட்பமான உணர்வுடன் இருப்பான். பதஞ்சலியின் யோகசூத்திரத்திற்கு வியாசர் எழுதியுள்ள விளக்கவுரையில் யோகியின் மனத்தைக் கண்விழிக்கு ஒப்பிட்டு உள்ளார். விழி வெண்படலத்தில் சிறு தூசு விழுந்தாலும் அது எப்படி உடனடியாக எதிர்ச் செய லாற்றுகிறதோ, அதைப்போல யோகியின் மனமும் துன் பத்தை ஏற்படுத்தும் மிகச் சிறிய செயலிற்கும் மிகவும் பலம் வாய்ந்த எதிர்ச் செயலைச் செய்கிறது.[1] அத்தகைய நுட்ப உணர்வற்ற, எச்சரிக்கையுணர்வு அற்ற மனம் இருக்குமாயின், ஆன்மீக வாழ்வானது அவலமான தோல்வியில் பெரும் பாலும் முடியலாம். தூய்மையான மனத்தை ஆன்மீக வாழ் விலிருந்து பிரிக்க இயலாது. மனிதர்கள் சமய ஒழுக்கத்தைச் சார்ந்து இருப்பதாக போலியாக பாசாங்கு செய்து கொண்டு, தூய்மையற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருந்தால்

1. பதஞ்சலியின் யோக சூத்திரத்திற்கு வியாசரின் விளக்கவுரை, 2.16.

அவர்களிடமிருந்து தள்ளி இருக்க வேண்டும். தூய்மையற்ற மனிதர்களின் ஆன்மீக அனுபவங்கள் குறித்து உரிமைகள் கொண்டாடுவதை நம்பாமல் இருக்க வேண்டும். 'தூய்மை யான உணவிலிருந்து தூய்மையான மனம் உண்டாகிறது. தூய்மையான மனத்திலிருந்து மெய்ப்பொருளைக் குறித்த நிலைத்த நினைவு தோன்றுகிறது. ஒருவருக்கு இத்தகைய நினைவு ஏற்பட்டவுடன், மனத்தின் எல்லா சிக்கல் களிலிருந்தும் ஒருவர் விடுபடுகிறார்.'[1]

தூய்மையான மனம் மட்டுமே, இடையீடற்ற ஒழுக் குடன் பரம்பொருளைக் குறித்து சிந்திக்கும். மேற்கண்ட பகுதியில் 'உணவு' என்பது, புலன்களுடன் தொடர்பு கொள் ளும் அனைத்தையும் குறிக்கிறது. நாம் கண், காது, தொடு உணர்வுடன் கூடிய உறுப்புக்கள், முகர் உணர்வு போன்ற வற்றிற்கு தூய்மையான உணவை அளிக்க வேண்டும்.[2] புலன்கள் உட்கொள்ளும் பொருட்கள் தூய்மையாக இல் லாமல், வயிற்றிற்காக தூய்மையான இயற்கை உணவை உட்கொண்டால் அது பயன் அளிக்காது. 'ஒருவன் பன்றி இறைச்சியை உண்டு, இறைவனை விரும்பி ஏங்கினால் அவன் போற்றத்தக்கவன் ஆவான். ஆனால் ஒருவன் மிகவும் தூய்மையான உணவை உட்கொண்டு, அவன் மனமானது, ''பெண் மற்றும் பொன்'' மீது நிலைக்குமாயின், அவன் வெட்கப்பட வேண்டியவன் ஆவான்' என்று ஸ்ரீராம கிருஷ்ணர் கூறுவார்.[3] நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்தாலும் நாளின் ஓட்டத்தில் நாம் குறைந்த பட்ச அழுக்கையாவது சேர்த்துக் கொள்வதைக் காண்கிறோம். உன்னுடைய மனத்தின் எல்லா மூலைமுடுக்குகளிலும் எந்த அளவுக்கு அழுக்கு சேகரிக்கப்பட்டுள்ளது, மற்றும் ஆன்மீகப் பாதையில் நீ வெற்றியுடன் தொடர்ந்து செல்வதற்கு எந்த

---

1. ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: ஸத்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: ।
ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீனாம் விப்ரமோக்ஷ: ॥
—சாந்தோக்ய உபநிஷதம், 7.26.2.
2. சாந்தோக்ய உபநிஷதத்திற்கு சங்கரரின் விளக்கவுரை (7.26.2).
3. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.421.

அளவிற்குத் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நீ அறிந்தால் மிகவும் வியப்படைவாய். ஆன்மீக வாழ்க்கைக்குத் தீங்கிழைக்கும் சில ஆழமான பதிவுகள் போல இது ஒரு சூட்சுமமான உருவத்தில் இருக்கலாம். நீ யாருடன் தொடர்பு கொண்டிருக்கிறாயோ, அதைக் குறித்தும் நீ எதைப்பற்றிப் பேசுகிறாயோ அதைக் குறித்தும் விளையாட்டுத்தனமாக இருத்தல் கூடாது. எல்லாப் பயனற்ற பேச்சுக்களையும் முயற்சியற்ற சோம்பேறித் தன்மையையும், தொடர்பற்ற முறையில் சிந்திப்பதையும், தொடர்பற்ற நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சாதகனுக்கு இவ்வனைத்தும் மிகவும் தீங்கினை விளைவிக்க வல்லவையாகும். அதனால் இதில் மிகவும் கூர்மையான வேறுபடுத்திக் காணும் பார்வையைப் பயன்படுத்த வேண்டும். புதிய உலகியல் தொடர்புகளினால், புதிய அழுக்குகளைச் சேகரிப்பதற்குச் செல்ல வேண்டாம். ஒரு நாளின் ஓட்டத்தில் செய்யப்பட்டுள்ள தீமைகளை அழிப்பதற்கு ஏற்ற வகையில் நீ செயல்பட வேண்டும். நீ அடைந்துள்ள குறைகளை எதிர்த்து போதுமான அளவிற்குத் தேவையான தகுதிகளை தூய்மையான செயல்கள் மற்றும் எண்ணங்களின்மூலம் நீ சேகரித்துக் கொள்ள வேண்டும். காலப்போக்கில் தகுதி மற்றும் குறைகளின் முழுக்கணக்கும் சூனியமாக்கப்பட வேண்டும்.

உன்னுடைய பழைய கணக்கை நீ மூடிவிட வேண்டும். நீ உன்னுடைய பழைய வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். புதிய உலகியல் தொடர்பிற்காகவும் மற்றும் உலகியல் குறித்த பேச்சிற்காகவும், மற்றும் பொழுது போக்குகளுக்காகவும் எந்த ஏக்கமும் இருத்தல் கூடாது. முழு ஆன்மீக வாழ்வும் இந்த அச்சமற்ற சரிப்படுத்திக் கொள்ளும் தன்மையில்தான் உள்ளது. இன்றைக்கு உங்கள் அனைவருக்கும் எல்லாமே ஒரு குறைப்பட்ட இருப்பீடு ஆகும். மற்றும் நீங்கள் இப்பொழுது இந்தக் குறையீட்டை ஈடுகட்டுவதற்கு போதுமான அளவு ஆன்மீக தகுதியைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அதன்பிறகுதான் ஒரு புதிய கணக்கு

ஆரம்பிக்கப்படும். ஆன்மீக வாழ்வு என்றால் புதிய கணக்கைத் தொடங்குவது ஆகும்.

மீண்டும் நம் மனத்தை ஒரு நிழற்படக் கருவியுடன் கூடிய (camera) ஒளி எறிவுக் கருவி அமைவிற்கு (Projector) ஒப்பிடலாம். மனத்தில் மறைந்துள்ளவற்றை ஒவ்வொரு படமாக நம்மால் புறநிலைப்படுத்த முடியுமானால் அது எத்தகைய நல்ல திரைப்படக் காட்சியாக அமையும். அனைத்தும் இரக்கமற்றதன்மையில் பதிவு செய்யப்படு கின்றன. பல நேரங்களில் அரை உணர்வு நிலையிலோ அல்லது அரைஉணர்வுத் தளத்திலோ உள்ள முற்றிலும் நமக்குப் பழக்கமற்ற எல்லாப் பதிவுகளையும், மனத்தின் ஆழத்தில் மறைந்துள்ள எல்லாவற்றையும் நம்மால் காண இயலுமாயின் நாம் அதிர்ச்சி அடைவோம். சாதனை செய்யும் சமயத்தில் இவை கட்டாயமாக ஏதாவது ஒரு சமயத்தில் மேலே எழும்பும். தூய்மையற்ற மற்றும் கேடுகள் நிறைந்த போக்குகளில் அரை உணர்வு நிலையில் சிந்திப்பது மிகவும் ஆபத்தானதாகும். அது பதிவுகளை மிக ஆழத்திலே நிலைத்து நிற்கச் செய்வதால் அது மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்த லாம். நாம் எப்பொழுதும் முற்றிலும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இவ்வனைத்தும் எவ்வளவு உண்மை யானது என்பதை ஒருநாள் நீ உணர்வாய். நீ எந்தப் பதிவுகளை உன்னுள்ளே செல்வதற்கு அனுமதிக்கிறாய், நீ எத்தகைய பேச்சை ஊக்குவிக்கிறாய் மற்றும் கேட்கிறாய் போன்ற வற்றில் நீ மிகமிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். எத்தகைய பதிவும் செய்யப்படவில்லை என்று நீ உணர்வ தால் அவைகளால் எத்தகைய ஆபத்தும் இல்லை என்று ஒரு பொழுதும் நினைக்கக்கூடாது. அரை உணர்வு நிலையிலோ, அரைஉணர்வுத் தளத்திலோகூட பழைய பதிவுகள், பழைய தொடர்புகள், உலகியல் தொடர்பான பழைய தொடர்புகள் மற்றும் எண்ணங்களை ஒருபொழுதும் நினைக்க வேண்டாம். முதலில் நம்முடைய பழக்க வழக்கங்களிலும், மனப்பாங் கிலும் ஒரு மாறுதல் இருக்க வேண்டும். அதன் பிறகு புதிய வழிமுறைகளைப்பற்றியும், புதிய நல்ல தொடர்புகள்

புதிய நல்ல மற்றும் தூய்மையான எண்ணங்கள் மற்றும் கருத்துக்கள் குறித்தும் தீவிரமாகச் சிந்திப்பது பின் தொடரப் பட வேண்டும். எந்த அளவிற்கு உன்னால் முழுமையான விழிப்பு உணர்வு நிலையுடன் முற்றிலும் இருக்கவியலுமோ அந்த அளவிற்கு எப்பொழுதும், எல்லாச் சூழ்நிலைகளிலும், கண்மூலமாகவோ அல்லது காதுமூலமாகவோ கெட்ட பதிவுகளை உள்ளே செல்ல விடாமல் இருப்பதில் விழிப்பு உணர்வுடன் இருக்க வேண்டும். மற்றும் அவைகளை உள்ளே நுழைய விட்டால், அப்பொழுதே அவற்றை வேருடன் அழித்து விட வேண்டும். நீ உன்னை யாருடைய தொடர்பில் இருப்பதற்கு அனுமதிக்கிறாய், நீ எவற்றைப் படிக்க மற்றும் கேட்பதற்கு அனுமதிக்கிறாய் என்பதைக் குறித்தவற்றில் உன்னுடைய உச்ச அளவான வேறுபடுத்திக் கண்டறியும் இயல்பைப் பயன்படுத்த வேண்டும்.

எல்லா ஆன்மீக வழிகளிலும் தூய்மை வலியுறுத்தப்பட்டுள்ளது

மற்ற மூன்று யோகங்களுக்கும் கண்டிப்புடன் கூடிய ஒழுக்க நெறிமுறை பற்றிய நியதிகளை நிறைவேற்றுவது எந்த அளவிற்கு அவசியமோ, அந்த அளவிற்குக் கர்மயோகத் திற்கும் முற்றிலும் அவசியமானதாகும். ஞானயோகம், பக்தியோகம் மற்றும் ராஜயோகங்களில் மட்டுமே ஒழுக்க நெறிமுறை பற்றிய நியதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்னும் பரவலான கருத்து உள்ளது. நீ எந்த வகையில் வாழ விரும்புகிறாயோ, அவ்வகையில் வாழ்வதற்குக் கர்ம யோகம் இடமளிப்பதால் அது மிகவும் சுலபமானது என்று கருதப்படு கிறது. இது பொருளற்றதாகும். கர்ம யோகத்திலும் தற்கட்டுப் பாடு, அகிம்சை, உண்மையுடைமை, திருடாமலிருத்தல், பகைமையற்று இருத்தல் போன்றவற்றைக் கைக்கொள் ளாமல் உண்மையாக எதையும் அடைய வியலாது. உலகம் உணர்ந்துள்ளபடி தூய்மைப்பாடுதான் ஒவ்வொரு ஆன்மீக வழியின் இன்றியமையாத தகுதிக் கூறு ஆக உள்ளது. தூய்மைப்பாடு என்றால் அது பலவற்றை உள் அடக்கியது

ஆகும். உடல் தூய்மை, புலன்களின் தூய்மை, மனத்தூய்மை, இதயத் தூய்மை என்பவற்றை உள்ளடக்கியதாகும். பிரம்மச் சரியம் என்றால் உடல் தொடர்புடைய தூய்மைப்பாடு மட்டுமல்ல. அகிம்சை என்றால் உடல் தொடர்பான அகிம்சை மட்டுமல்ல. திருடாமல் இருப்பது என்றால் புலன் களால் அறியத்தக்க களவைத் தவிர்ப்பது மட்டுமல்ல. இவை முழுமையான அகத்தூய்மையையும் குறிப்பிடுகின்றன. மிக வும் ஒருமுகப்பட்ட நோக்கத்துடன், உன்னை உன் வழி யிலிருந்து மாறுபடச் செய்யும் எதனையும் ஒருவகையிலும் அனுமதிக்காமல் இருந்தால், உன்னுடைய இலட்சியத்திற் காக எல்லாவற்றையும் நிபந்தனை ஏதுமின்றி தியாகம் செய்துகொண்டு இந்த பூர்வாங்கமான விதிமுறைகளை முழுமையாகச் செய்யாவிடின், நீ கர்மத்தைச் செய்கிறாய். அது உண்மை. ஆனால் அது யோகமாகாது. இது ஒரு மிகப் பெரிய வேறுபாடு ஆகும். ஒவ்வொருவரும் கர்மத்தைச் செய்துகொண்டு இருக்கின்றனர். ஆனால் ஒரு சிலரே கர்ம யோகத்தைச் செய்கின்றனர். எந்த வகையான யோகமாக இருப்பினும், ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுவது என்பது அவசியமானதாகும். இந்த விஷயத்தில் நீ உன்னை ஏமாற்றிக் கொள்ளுதல் கூடாது. இதைச் செயற்படுத்துவது என்றால் இந்த நிபந்தனைகளை அவற்றின் வெளிப்படை யான கண்ணிற்குப் புலனாகும் வடிவங்களில் மட்டுமின்றி அவற்றின் மிக சூட்சுமமான பண்புக் கூறுகளிலும் செயற் படுத்த வேண்டும் என்பது பொருளாகும்.

ஞானயோகம், ‘தூய்மைப்படுத்தும் விதிமுறைகளைக் கண்டிப்புடன் பின்பற்றிச் செயற்படுத்தியவுடன் உன்னுடைய முழு மனத்தையும் கடவுளிடம் ஒருமுகப்படுத்துவாய். உன் னுடைய மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக எப்பொழுதும் வேறுபடுத்தி ஆராயும் தன்மையைச் செயற் படுத்த வேண்டும்’ என்று கூறுகிறது.

கர்மயோகம், ஒழுக்கநெறிமுறைப் பண்பாட்டை மிகவும் கட்டுப்பாட்டுடன் பின்பற்றி, மற்றும் தன்னலமற்ற தொண்டுகளின் மூலம், அவைகளின் எல்லாப் பயன்களையும்

கடவுளுக்கு அர்ப்பித்து மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

பக்தி யோகம், 'உன்னுடைய அன்பின் தனி அனுபவ நிலைகளையும், உணர்ச்சிகள் அனைத்தையும் பரம்பொருளிடமே செலுத்த வேண்டும். உன்னுடைய அன்பின் மற்ற எல்லா உணர்வுகளும் கடவுளிடம் கொண்டுள்ள சுடர்வீசும் அன்பில் மூழ்கி இருக்க வேண்டும். அவ்வனைத்தையும் கடவுளிடம் கொண்டுள்ள தீவிரமான பக்தியின் மூலம் துடைத்து அழித்து விட வேண்டும். அதன்மூலம் கடவுளிடம் செலுத்தும் அன்பு மட்டுமே எஞ்சி இருக்கும்' என்று கூறுகிறது.

இவ்விதமாக நாம், எல்லா யோகங்களுக்கும் உள்ள அடிப்படையான, பொதுவான ஆய்வுப் பொருள், மனத்தைத் தூய்மைப்படுத்துவது மற்றும் பற்றுதல்களின் பிணைப்பை அகற்றுவது என்று கண்டு கொண்டுள்ளோம்.

செயலாற்றுவதில், நாம் பயன்களைக் குறித்து அதிகமாக நினைக்கிறோம் என்னும் பெரிய அபாயம் உள்ளது. மற்றும் இது நம்மை அமைதியற்றவர்களாகச் செய்துவிடும். ஆனால் இலட்சியமானது, முழுமையான பற்றற்ற தன்மையும் மற்றும் தூய்மைப்பாடும் என்பதை நாம் உணர்ந்தால், நாம் பயன்களைக் குறித்துக் கவலைப்பட மாட்டோம். மற்றும் மனத்தின் அமைதியற்ற தன்மையானது நம்மை அடக்கி ஆட்கொள்ளாது. சாதகன், செயலின் நோக்கமானது மனத்தைத் தூய்மைப்படுத்துவது மற்றும் அது அவனுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது என்று உணர்ந்துகொண்டால் அவன் தன்னுடைய செயல்களை மிகவும் நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் செய்வான். அப்பொழுதுதான் செய்யும் செயல், கர்மயோகம் ஆகும். உன்னுடைய முயற்சிகளின் பயன்கள் உன்னை சிறிது கூட பாதிக்கக் கூடாது. ஒரு கர்மயோகியாக, நீ உன்னுடைய மனம் தூய்மை அடைவதற்காகச் செயல்களைச் செய்ய வேண்டும். அங்கேயே அந்த விஷயம் முடிந்து விடுகிறது. பயன்கள் கடவுளுக்கு மட்டுமே

உரியவையாகும். அவற்றைப்பற்றி நீ கவலை கொள்ள வேண்டாம்.

தூய்மைப்பாடு — பதஞ்சலியின் கருத்து

பதஞ்சலி தன்னுடைய யோக சூத்திரத்தில், தூய்மைப் பாடு குறித்த மிகவும் விரிவான திட்டத்தை அளித்துள்ளார். பதஞ்சலி அவர்களின் கருத்துப்படி இரண்டு வகையான நெறிமுறை சார்ந்த நியதிகள் உள்ளன. யமம் என்பது பொதுப்படையான நியதிகள் ஆகும். மற்றும் நியமம் என்பது திட்டவட்டமான நியதிகள் ஆகும். யமம் என்பது ஐந்து கட்டுப்பாடுகளை (ஒழுக்கமுறைகளை), உள்ளடக்கியது ஆகும். அவை எல்லாக் காலங்களிலும், எல்லா இடங் களிலும், எல்லா மனிதர்களாலும் பின்பற்றப்பட வேண்டும் என்பது அவருடைய கருத்தாகும்.[1] முதலில் அஹிம்சை வருகிறது. அதாவது மனிதர்கள் நல்லவர்களாக இருப்பினும், கெட்டவர்களாக இருப்பினும் அவர்களைக் குறித்து எத் தகைய தவறான உணர்வுகளுக்கும் இடமளிக்காமல் இருப்ப தாகும். மனத்தில் அத்தகைய தவறான உணர்வுகள் எழுந்த உடனேயே அவற்றை அகற்றிவிட வேண்டும். குழப்பம் நிறைந்துள்ள மனத்தில் எந்த வகையான தியானத்தையும் செய்ய இயலாது. நம்மால் ஒருமுகப்படுத்தப்பட்ட மனத்தை யும் மற்றும் யாருக்கு எதிராகவும் ஒரு கெட்ட எண்ணத்தை ஊக்குவிப்பதையும் ஒரே நேரத்தில் செய்ய இயலாது. நான் உயர்ந்த நிலை மன ஒருமைப்பாட்டைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

பிரம்மச்சரியம் இரண்டாவதாக உள்ள மிக முக்கியமான விஷயமாகும். பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்காமல் உண்மையான ஆன்மீக வாழ்வு இருக்க இயலாது. வாழ்க்கை யின் நீரை உடலிலுள்ள துளைகள் வழியாகப் பாய்ந்து செல்ல அனுமதித்து, பாலியல் மற்றும் புலனின்பத் தொடர்பான

1. ஏதே ஜாதி தேச கால ஸமயானவச்சின்னா:
ஸார்வபௌம மஹாவ்ரதம் ॥
—பதஞ்சலி யோக சூத்திரம், 2.31.

ஆசைகளில் வீணடித்தால், உயர்மட்ட ஆன்மீகப் பயிற்சிகளுக்கு என்று எத்தகைய சக்தியும் எஞ்சியிருக்காது. படகானது, கரையின் அருகில், உறுதியாக நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்பட்டு இருக்கும் பொழுது படகைச் செலுத்தினால் எந்தப் பயனும் இல்லை. கடவுளுடன் கூட்டுறவு கொள்வது மட்டுமே நமக்குத் தேவையானதாகும். பாலியல் விருப்பம் என்னும் வடிவத்தில் ஏதாவது தடை இருக்குமாயின் கடவுளுடன் கூட்டுறவு கொள்வது என்பது இயலாததாகிவிடும். அது முறிந்துள்ள தந்திக் கம்பியின் நிலையைப் போன்றதாகும். அங்கு மின்சாரம் இருக்கலாம். பணியாற்றுபவர் இருக்கலாம். அந்த முறிந்துள்ள தந்திக் கம்பி செப்பனிடப் படாத வரைக்கும் செய்தியானது அடைய வேண்டிய இடத்தை ஒருபொழுதும் அடையாது. அல்லது மின்சாரம் செல்வதைத் தடுத்துக்கொண்டுள்ள தடைப்பொருள் அகற்றப் படாத வரைக்கும் செய்தியானது அடைய வேண்டிய இடத்தை ஒருபொழுதும் அடையாது.

அதற்குப்பிறகு சத்தியம் (உண்மை பேசுவது) வருகிறது. ஒருவர் சத்தியத்தைச் சொல்லிலும், எண்ணத்திலும், செயலிலும் பின்பற்ற வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணர், அவரால் உண்மையைத் தவிர மற்ற அனைத்தையும் துறக்க இயலும் என்று கூறியுள்ளார். பொய்யான நடிப்பிற்கும், தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதற்கும் ஆன்மீக வாழ்வில் இடம் இல்லை.

அடுத்தது திருடாமல் இருக்க வேண்டும் என்பது வருகிறது. இது கண்ணுக்குத் தெரியும் உணர்வின் அடிப்படையில் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. வேறு ஒருவரின் செலவின் மூலம் நாம் அடைய விரும்பும் எதுவாக இருப்பினும் அதுவும், மற்றும் நியாயமற்ற வழிகளில் பெறும் எதுவாக இருப்பினும் அதுவும் திருடுவது ஆகும்.

ஐந்தாவதாக அபரிக்ரஹம் வருகிறது. ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டவர்கள், அவர்கள்மீது பல விஷயங்களால் சுமைகளை ஏற்றிக் கொள்ளக்கூடாது. அவர்கள்

பொருள்களைச் சேமித்து வைக்கும் போக்கைக் கைவிட வேண்டும். உனக்குத் தேவையில்லாமல் இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். மற்றவர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்றுக் கொள்வது தவிர்க்க இயலாததாக இருந்தால் அவர்களுக்கு ஏதாவது மற்றொன்றை திரும்ப அளிக்க வேண்டும். உன்னிடம் கொடுப்பதற்குப் பணம் இல்லை எனின் அன்பையும் அறிவையும் ஊழியத்தையும் அளிக்கலாம்.

நியமமும் ஐந்து நியதிகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. முதலில் தூய்மைப்பாடு வருகிறது. அதாவது தூய்மையான உடலும், தூய்மையான மனமும் இருக்க வேண்டும். இவ்வுடலானது கடவுளின் கோயிலாகும். எனவே அது தூய்மையாக வைக்கப்பட வேண்டும். இரண்டாவதாக வரும் நியதி திருப்தி ஆகும் (மன நிறைவு). ஒருவர் ஒருவருடைய இயற்பொருள் சார்ந்த சூழல்களில் மனநிறைவு உடையவராக இருக்க வேண்டும். உன்னுடைய ஆன்மீக முன்னேற்றத்தில் நீ மனநிறைவு அடையாமல் இருக்கலாம். ஆனால் உன்னுடைய எல்லாச் சிக்கல்களுக்கும் சூழ்நிலைகளை நீ குறை கூறுதல் கூடாது. எப்பொழுதும் முணுமுணுத்துக்கொண்டும், குறை கூறிக்கொண்டும் இருப்பவர்கள், தங்களுடைய நேரத்தையும் ஆற்றலையும் வீணடித்துக் கொண்டிருக்கிறனர். தேவையற்ற மனநிறைவின்மையை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது. அடுத்ததாக தவம் வருகிறது. ஏதாவது ஒருவகையான புலன் இன்பத்தில் தன்னை இழப்பவனுக்கு அமைதி நிறைந்த மனம் இருக்காது. 'தற்கட்டுப்பாடு சிறிதும் இல்லாதவர்களுக்கு யோக நிலையை அடைய இயலாது' என்று வியாசர் கூறியுள்ளார்.[1] அடுத்ததாக ஸ்வாத்யாயம் வருகிறது. இது புத்தகங்களை ஆராய்ந்து படிப்பதைக் கூறுவதனுடனல்லாமல், ஒருவருடைய மனத்தைக் கூர்ந்து ஆராய்ந்து அறிவதையும் குறிக்கிறது. இறுதியாக ஈஸ்வரப்ரணிதானம் வருகிறது. அதாவது கடவுளுக்கு முழுவதுமாகச் சரணடைந்துவிட வேண்டும். அது அகங்காரம் போன்ற மிக சூட்சுமமான

---

1. நாதபஸ்வினோ யோக: ஸித்யதி ।
—பதஞ்சலியின் யோக சூத்திரங்களுக்கு வியாசரின் விளக்கவுரை, 2.1.

வடிவிலுள்ள அழுக்கையும் அகற்றி விடுகிறது. இங்கு முக்கியமாக கவனிக்கத்தக்க இந்த விஷயம் உள்ளது. ஆன்மீகக் கட்டுப்பாடுகளில் சாதகன் அடுத்த கட்டத்திற்குச் செல்லும் முன்பு, அதாவது ஆசனப் பயிற்சியை மேற்கொள் ளும் முன்பு, அவன் ஏற்கனவே இந்த ஒழுங்கு-நன்னெறி சார்ந்த பண்பாட்டை முற்றிலும் கடைபிடிப்பவனாக இருக்க வேண்டும். ஆன்மீக வாழ்க்கையை அறிவுறுத்தும் ஆச்சாரி யர்கள் தூய்மைப்பாடையும் பற்றற்ற தன்மையையும் மிகவும் மேம்பட்டதாக மதிக்கிறார்கள்.

தூய்மைப்பாட்டிற்காக பிரார்த்தனை செய்வாய்

மனத்தை உண்மையிலேயே அமைதிப்படுத்துவதற்கு தூய்மைப்பாடு மிகவும் அவசியமானதாகும். நன்மை பயக்கும் மற்றும் முற்றிலும் தூய்மையான எண்ணங்களால் மற்றும் உடலாலும், உலகத்தாலும் கட்டுப்படுத்த வியலாத எண்ணங்களாலும் மட்டுமே மனத்தை அமைதிப்படுத்த இயலும். உபநிஷதம், 'நாம் அமைதியான மனத்துடன் கடவுளைத் தியானிக்க வேண்டும்' என்று கூறுகிறது.[1] எல்லா சாதகர்களுக்கும், இந்த மனத்தை அமைதிப்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது. ஆன்மீக வாழ்வில் உண்மையான தியானத்திற்கு இது பீடிகையாக விளங்குகிறது.

நாம் மனத்தூய்மைக்காக முயற்சித்துக் கொண்டு இருக்கும்பொழுது, கடவுளின் துணையை நாட வேண்டும். நம்முடைய மனங்கள் முழுமையாகத் தூய்மை அடைவதற்கு நாம் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். நாம் நம்முடைய ஆன்மீக நன்மைக்காக மட்டுமின்றி, மற்றவர்களின் நன்மைக்காகவும் பிரார்த்தனை செய்வது உறுதுணையாக உள்ளது என்பதைப் பொதுவாக உணர்ந்துள்ளோம்.

---

1. ப்ரஹ்ம தஜ்ஜலானிதி சாந்த உபாஸீத ।

—சாந்தோக்ய உபநிஷதம், 3.14.1.

—கட உபநிஷதம், 1.2.24.

மனத்தூய்மைக்காக, ஒருமுனைப்பாட்டிற்காக, அமைதிக்காக, ஒரே நோக்கத்திற்காக மற்றும் உன்னுடைய ஆன்மீக நன்மைக்காகத் தீவிரமாகப் பிரார்த்திக்க வேண்டும். மற்றும், மற்ற அனைவரின் ஆன்மீக நன்மைக்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும். அதனால் அவர்களும் தூய்மையடைந்து, மற்றும் அமைதியடைந்து, ஒருமுகப்பட்ட தன்மையுடன் தங்களை உயர்ந்த வாழ்விற்கு அர்ப்பித்துக் கொள்வார்கள். மற்றவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வது நம்முடைய நரம்புகளுக்கு அமைதியை ஏற்படுத்துகிறது. அது நம் மனங்களை விரிவு செய்கிறது. அதனால்தான் சுவாமி விவேகானந்தர், தியானம் செய்வதற்கு அமர்ந்தவுடனேயே, ஒருவர் அன்பான எண்ணங்களை எல்லா உயிரினங்களுக்கும், தெற்கு கிழக்கு வடக்கு மேற்கு என்னும் எல்லா திசைகளுக்கும் அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.[1] இது மிகப் பெரிய அளவில் உதவிசெய்யும் என்பதை நீ உணர்வாய்.

ஒவ்வொரு நாளும் மற்றவர்களின் நன்மைக்காகப் பிரார்த்தனை செய்வதை ஒரு வழக்கமாகக் கொள்ள வேண்டும். இந்த வகையான பிரார்த்தனையானது ஒரு குறிப்பிட்ட அளவு ஒருமுகப்பாட்டுடன் செய்யப்பட்டால் மற்றவர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும். அதுமட்டுமின்றி, அது நம்மிடம், நம்முடன் இருப்பவர்களின் மீது அன்பு உணர்வை மேன்மைப்படுத்தும். அவர்கள் உயர்ந்த வாழ்க்கைக்காக முயற்சி செய்துகொண்டு வேதனையையும் கஷ்டங்களையும் கடந்து கொண்டிருக்கின்றனர்.

உண்மையான மனத் தூய்மை, மன அமைதி மற்றும் கடவுளிடம் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு மனம் விரிவடைவது மிக அவசியமான ஒன்றாகும். எனவே நாம் மற்றவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும் பொழுது நாமே கடவுளுக்கு அருகில், மிக அருகில் செல்கிறோம்.

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.29.

கடந்த காலத்தைக் குறித்து ஏங்காதே

ஒருவர் ஒருவருடைய கடந்த காலத்தைக் குறித்து ஏக்க மடைவதை அது எத்தகைய தன்மை உடையதாக இருப் பினும் நிறுத்த வேண்டும். எது செய்யப்பட்டு விட்டதோ, அது எல்லாக் காலங்களுக்கும் மற்றும் அதை ஒருபொழுதும் மாற்றி அமைக்க இயலாது. தூய்மையைப்பற்றி நினைப்பாய். எதிர்காலத்தில் நீ என்ன செய்யப் போகிறாய் என்பதைக் குறித்து நினைப்பாய். கடந்த காலத்தில் என்ன செய்தாய் என்பதைப்பற்றி நினைக்காமல் இருப்பாய். யார் ஒருவன் தான் தூய்மையாக இருப்பதாக நினைக்கிறானோ அவன் தூய்மையை அடைகிறான். கடந்த காலத்தை, எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு அகற்றிவிட வேண்டும். பழைய எல்லாத் தொடர்புகளையும் பதிவுகளையும் அழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவைகளுக்குப் பதிலாக மேம் பட்ட மற்றும் மேலும் தூய்மையான தொடர்புகளையும், பதிவுகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சுவாமி விவேகானந்தர், 'நீ அழுக்கை அழுக்கால் தூய்மைப்படுத்த முயற்சி செய்வாயா? பாவம், பாவத்தைக் குணப்படுத்துமா? பலஹீனம், பலவீனத்தைக் குணப்படுத்துமா?' என்று கூறுவார்.[1] அழுக்கைப்பற்றி நினைப்பதால் உன்னால் தூய்மையானவனாக ஆகவியலாது. நீ பாவி என்று நினைத்துக் கொள்வதால் உன்னால் ஒருபொழுதும் பாவத்திலிருந்து விடு பட இயலாது. இது தவறான மனப்போக்கு ஆகும். மற்றும் எப்பொழுதும் அதற்கு எதிரான விளைவையே ஏற்படுத்தும். நாம் அதிகமாக பாவம் மற்றும் தூய்மைக்கேடு குறித்த எண்ணங்களையே சிந்தித்துக் கொண்டிருந்தால், நம்முடைய ஆன்மீக முயற்சியினால் நம்மால் எதையாவது சாதிக்க இயலும் என்னும் உண்மையைக் காணாமல் இருப்போம். எப்பொழுதும் தன்னம்பிக்கை நிறைந்த வழிமுறைகளைப் பின்பற்ற முயற்சி செய்வாய்' 'ஓ! நான் எத்தகைய பாவி யாக இருக்கிறேன், ஓ, நான் எப்படி தூய்மையற்றவனாக

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 5.203.

இருக்கிறேன்' என்று நினைப்பதற்குப் பதிலாகத் 'தூய்மைப் பாடு என்பது என் பிறப்பு உரிமை. மற்றும் என்னுடைய உண்மையான இயல்பு ஆகும். இயல்பாக நான் சுதந்திர மானவன். என்னுடைய உண்மையான இயல்பு தூய்மைப் பாடும், புனிதத்தன்மையும் ஆகும்' என்று நினைக்க வேண்டும்.

எல்லா தூய்மைக் கேடுகளின் அடிப்படையான காரணம் அகற்றப்பட வேண்டும். அவைகளின் வெளிப்புற வெளிப் பாடுகளை அகற்றினால் மட்டும் போதாது. இதைச் செய் யும் பொழுது, நாம் பல அகமுரண்பாடுகளைச் சந்திக்க நேரிடும். ஆனால் பயப்பட வேண்டாம். இயற்கைத் தூண்டு தல்களை அடக்குதலும், உள்ளுணர்ச்சி சிக்கல் நிலைகள் உருப்பெறுவதும் அவைகளின் நிலையில் கெட்டவை அல்ல. வெகு காலத்திற்குப் பிறகு வரும் முழுமையான உயர்வு நிலையை அடைவதற்கான படிகளாக சிறிது காலத்திற்கு அவை தேவைப்படுகின்றன. உள்ளுணர்ச்சி சிக்கல் நிலை களைக் குறித்து எதற்காக கூப்பாடும் ஆரவாரமும் செய்யப் பட வேண்டும்? நாம் என்ன செய்தாலும் உள்ளுணர்ச்சி சிக்கல் நிலைகள் உருவாகும். தனிச் சிறப்பு உரிமையானது ஒரு வடிவத்தில் உள்ளுணர்ச்சி சிக்கல் நிலையை ஏற்படுத்து கிறது. தவிர்ப்பது, மற்றொரு வடிவத்தில் உள்ளுணர்ச்சிச் சிக்கலை ஏற்படுத்துகிறது. எனவே நாம் இன்னும் மேம் பட்ட, தன்னம்பிக்கை அளிக்கக்கூடிய ஒன்றன் பால் அழைத்துச் செல்லக் கூடிய ஒரு வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அது நம்மை மேலும் மேலும் அதிலிருந்து விடு வித்து வாழ்க்கையின் இறுதியான இலட்சியத்தை அடை வதற்கு உதவி செய்யும். என்ன செய்தாலும் நாம் தொடர்ந்து உள்ளுணர்ச்சி சிக்கல் நிலைகளை ஒப்பீட்டு மட்டத்தில் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இயற்பொருள் சார்ந்த விதிமுறைகள் மட்டுமே பின்பற்றத்தக்க விதிமுறைகள் அல்ல. ஆன்மீக உலகத்தில் விதிமுறைகள் உள்ளன. இந்த விஷயங்களில் ஒருவர் ஒருவருடைய சொந்த வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தொடக்க நிலையில் உள்ள சாதகர் ஒவ்வொருவரும் அவனிடம் வரத்தக்க ஆபத்தான தூண்டுதல்களை, அவை எந்த வடிவத்தில் அவனிடம் வந்தாலும் அவைகளைத் தவிர்ப்பதை முக்கியமானதாகக் கொள்ள வேண்டும். ஒரு இளஞ்செடியானது ஒரு வேலியால் பாதுகாக்கப்பட வேண்டும். ஆன்மீக வாழ்வு எது எப்படி ஆனாலும் (என்ன விலை ஆனாலும்), வாழப்பட வேண்டும். மற்றும் அதற்கு அதிக மான உறுதியும் ஒருமுகப்பாடும் தேவைப்படுகிறது. சோம் பேறிகளுக்கும், ஊக்கம் குறைந்த பலவீனமானவர்களுக்கும் ஆன்மீக வாழ்வு இல்லை. அதனால்தான் சுவாமி விவே கானந்தர், 'நீங்கள் உங்களுடைய முந்நூற்று முப்பது கோடி புராணத் தொடர்புடைய தேவர்களிடம் நம்பிக்கை கொண்டு உங்களிடம் நம்பிக்கை இல்லாமல் இருந்தீர்கள் என்றால் உங்களுக்கு விடுதலை இல்லை' என்று கூறி யுள்ளார்.[1] சில நிலைகளில், சில மனப்போக்குகளில் பாவ உணர்வானது நன்மையைச் செய்யலாம். ஆனால் அது உயர்ந்த முயற்சிகளுக்கு தூண்டுதல் அளித்து, பயன்தரக் கூடியதாக இருக்க வேண்டும். அது ஆன்மீகத்தில் ஏதாவது ஒன்றை நமக்குத் தூண்டுவதாக இருக்க வேண்டும். தூய்மைக் கேடுகளின் கட்டிதட்டிப்போன தன்மையிலிருந்து விடு வித்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த வழியானது, நம்முடைய நிலைபெற்ற, நம்முடைய உண்மைத்தன்மையாக உள்ள உள்ளார்ந்த தூய்மைப்பாட்டைப்பற்றி நினைப்பது ஆகும். பழக்கம் என்பது நம்முடைய 'இரண்டாவது' இயல்பாக இருக்குமாயின் தூய்மையான ஆன்மா நம்முடைய 'முதல்' இயல்பாகும். ஆன்மீக நோக்கு நிலையிலிருந்து நோக்கும் பொழுது நாம் அனைவரும் நம்முடைய மூதாதையர் ஆவோம். ஆனால் நாமே எதை விதைத்து இருக்கிறோமோ, அதைத்தான் நாம் அறுவடை செய்வோம். ஆனால் மறுபிறவி என்பது மிக முக்கியமான குறிக்கோள் இல்லை. நாம் இந்தப் பிறவியிலேயே (வாழ்க்கையிலேயே) முழு ஞானத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். எனவே ஆன்மீக

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 5.98-99.

வாழ்வில் மறுபிறவியைக் குறித்து ஒருபொழுதும் அதிகமாக வலியுறுத்திக் கூறக் கூடாது. நாம் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையானது நம்முடைய கடந்தகால வாழ்வின் விளைவாக ஏற்பட்டு இருக்குமாயின் நம்முடைய தற்போதைய முயற்சிகளின்மூலம் நம்முடைய எதிர்காலத்தை மாற்றிக் கொள்ள இயலும் என்பது உணரப்படுகிறது. கர்மாவை ஒருபொழுதும் விதியுடன் ஒப்பிடக்கூடாது. கர்ம வினைக் கோட்பாடு என்பது தன்முயற்சி அறிவாற்றலின் விழிப்புணர்வுடன் கூடிய தன்முயற்சி ஆகும். விதிவசமானது என்ற நம்பிக்கையின் சோம்பேறித்தன்மையின் கோட்பாடு அல்ல. இன்னும் நுட்பமாகக் கூற வேண்டுமாயின் நம் முடைய மனப்பான்மைகளுக்கு விதிவசமானது என்று கூறு வதைவிட நாம் தீவிரமான சாதனையைத்தான் வலியுறுத்த வேண்டும்.

தூய்மையான இதயமானது உண்மையைப் பிரதிபலிக் கிறது. தூய்மைப்படுத்தப்பட்ட, சிந்திக்கும் தன்மை உடைய மனமும் அதையே செய்கிறது. தூய்மையான மனமானது மேன்மையான வாழ்க்கைக்கு உரிய எண்ணங்களுக்காக உயிர்த்துடிப்புடன் முன்னேறுகிறது. மனத்தின் தூய்மை அதிகரிக்க அதிகரிக்க அது மேலும் மேலும் எழுச்சியடை கிறது. மற்றும் உண்மையை மேம்பட்ட முறையில் பிரதி பலிக்கிறது. மிக உயர்ந்த முறையில் மெய்ப்பொருளை உணரும்பொழுது மனமும் இதயமும் எல்லாவற்றையும் கடந்த உண்மையில் இரண்டறக் கலக்கின்றன. நம் கருத்துக்கள் எப்படியிருந்தாலும் நாம் நம் மனங்களில் விருப்பத்துடன் போற்றும் போலியான கூத்தாட்டு பொம்மை களையும், மற்றும் உருவங்களையும் பற்றிக் கொண்டிருக்கும் வரையில், நம்மால் அதே சமயத்தில் கடவுளின்பால் ஒரு உண்மையான, ஆழமான ஏக்கத்தைக் கொள்ள வியலாது. அது அப்பொழுது ஒரு வெறுமையான பாசாங்கு ஆகிறது. ஆனால் அனைவருக்கும் ஒரு கட்டம் வரலாம். எப்பொழுது இந்தப் பொம்மைகள் தங்களின் கவர்ச்சியை இழக்கின் றனவோ, அப்பொழுதுதான் ஆன்மீக வாழ்க்கையின் மீது ஒரு

உண்மையான, ஆழமான ஏக்கம் வரும். அந்தக் கட்டத்தில் எல்லா உலகியல் சார்ந்த பொருட்களும் 'உப்புச்சப்பு' இல்லாமல் ஆகிவிடும்.

தீவிரமான முயற்சி தேவை

ஆன்மீகத் துறையில் வேதாந்தம் என்றால் 'எதிர்முறை' மருத்துவம் ஆகும். 'இனமுறை' மருத்துவம் அல்ல, உலகப் பற்று என்னும் நோய் மிகவும் கடுமையாகி விட்ட தால், வீரியம் மிகுந்த மருந்துகள் தேவைப்படுகின்றன. வேதாந்தமானது இந்த நோய்க்கு தீவிரமான நிவாரணம் அளிக்கிறது. எதிர்முறை மருந்துகள், வீரியமான ஊசி மருத்து களாலோ மற்றும் அதிகமான மருந்து அளவுகளிலோ தேவைப்படுகின்றன. வேதாந்தியின் நிலைமையில் இன முறை மருத்துவம் பயனளிக்காது. அது முழுமையான முறை யில் பயன் அளிக்க வேண்டுமாயின் அதன் வலிமையைக் குறைக்கக் கூடாது. ஏசு நாதரின் அறிவுரைகளின் வலிமையை முடிவில்லாமல் குறைத்துக்கொண்டிருப்பதால் அது என்ன நிலையிலுள்ளது என்பதை உன்னால் காண முடிய வில்லையா!

ஆசைகளும், புலன்களுமே நம்முடைய தொடர்ந்த எதிரிகளாக இருப்பதால், நியமத்துடனும், கட்டுப்பாட்டு டனும் கூடிய வாழ்க்கையை நடத்துவது முற்றிலும் அவசிய மானதாக உள்ளது. ஆசையின், எல்லாவற்றையும் வீணாக்கி விடும் ஆற்றலுக்கு எந்த வரையறையும் இல்லை. மற்றும் இது நம்மை ஆட்டுவிக்க அனுமதிக்கப்படும்வரை நம்மால் பெரியவர்களால் நமக்கு அளிக்கப்பட்டுள்ள எந்த ஆன்மீக அறிவுரையையும் பின்பற்ற இயலாமல் போய்விடும். தெரிந்தோ அல்லது தெரியாமலோ இந்த உண்மையை மூடி மறைப்பது கூடாது.

நம்மால் ஒவ்வொரு தனிப்பட்ட ஆசையாக எடுத்துக் கொண்டு, அதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள இய லாது. பொதுவான, இரக்கமற்ற முறையில் அழிக்கும்

முறைதான் தேவைப்படுகிறது. நாம் கடவுள் பக்கம் திரும்பி நம்மிடம் அவரை தெய்வீக ஒளியை ஏற்ற அனுமதித்தால், அப்பொழுதே எல்லா இருளும் மறைந்துவிடும். அதன்பிறகு அவரே போர்க்களத்தில் தோன்றி நமக்காகப் போரிடுவார். கடவுள் அவருடைய செயலைச் செய்கிறார். நாம் நம்முடைய தனித்தன்மை இருக்கும்வரையிலும், நம்முடைய செயல்களின் இயக்கிகளாக இருக்கிறோம் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் வரையிலும், நாமும் நம்முடைய பங்கைச் செய்ய வேண்டும். புலன்களால் உணரத்தக்க இந்த உலக வாழ்க்கையைப்பற்றிக் கொண்டிருப்பதை நாம் கைவிட வேண்டும். நாம் உடல் தொடர்பான, உலகத் தொடர்பான எல்லா ஆசைகளையும் துறக்க வேண்டும். நாம் எல்லா பிணைப்புகளையும் துறக்க வேண்டும். மற்றும் இந்தப் பிணைப்புக்களைச் சார்ந்துள்ள எல்லா கடமைகளையும் துறக்க வேண்டும். வாழ்க்கையின் துன்பங்களிலிருந்தும், சிக்கல்களிலிருந்தும் மற்றும் நம்மை ஒளியைக் காண விடாமல் மறைத்துக் கொண்டிருக்கும் இருளிலிருந்தும் அந்த ஒரு வழியின் மூலமாகத்தான் நாம் நம்மை விடுவித்துக் கொள்ள இயலும். நம்மிடம் உருநிலை மாற்றத்தை ஏற்படுத்தக் கடவுளுக்கு இசைவளிப்போம். மற்றும் மேன்மையான வாழ்க்கையைப் பின்பற்றுவதற்கான ஆற்றலையும் அளிக்க வேண்டும் என்று இசைவளிப்போம். முக்கியமாக, தேவைக்கு மேல் நாம் இவ்வுலகத்தின் மீது கவனம் செலுத்துதல் கூடாது. நாம் துறவி மடத்தில் இருந்தாலும், அல்லது துறவி மடத்திற்கு வெளியில் இருந்தாலும் நாம் எப்பொழுதும் இந்த உலகத்தில்தான் இருக்கிறோம். நம்மால் இந்த உலகத்திலிருந்து ஓட இயலாது. ஆனால் நாம் ஒரு பொழுதும், இந்த உலகம் நம் கவனத்தை ஈர்ப்பதற்கு இடமளிக்கக் கூடாது. 'படகு தண்ணீரில் இருக்கலாம் ஆனால் தண்ணீர் படகில் இருக்கக் கூடாது' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார்.[1]

---

1. Sayings of Sri Ramakrishna, பக்கம் 99.

ஆன்மாவைக் குறித்து நினைப்பாய்

இயல்பாகவே நாம் தூய்மையானவர்கள் என்று நினைப்பதுதான் உண்மையாக தூய்மையை அடைவதற்கான மிகச் சிறந்த வழியாகும். மற்றும் பாவம், தூய்மைக்கேடு, பலஹீனம், முழுமையற்ற தன்மை என்னும் இவை குறித்து ஒருபொழுதும் நினைக்காமல் இருப்பதும் ஆகும். நாம் அனைவரும் நம் இயல்பில் பரிபூரணமானவர்கள். ஆனால் நாம் நம்முடைய நிலைத்த பரிபூரணத்தன்மையை மறந்து விட்டோம். எனவே முடிவற்ற தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறோம். ஆனால், நாம் நம்முடைய உண்மையான சாரத்தின் நினைவை மீண்டும் பெற்றவுடன், தூய்மைக்கேடு, பாவம் மற்றும் முழுமையற்ற தன்மை போன்றவை பல கனவுகளைப்போல ஒன்றுமற்றதாகிவிடும்.

இந்த தூய்மைப்பாடு, நம் அகத்திலிருந்து பொங்கு கிறது. ஏனெனில் அது நமக்குச் சொந்தமானது. மற்றும் பண்டைக் காலத்திலிருந்தே அது நம்முடையதாக உள்ளது. அது வெளியிலிருந்து ஒரு பொழுதும் வருவதில்லை. அது மிகைப்படியாகச் சேர்க்கப்பட்டதல்ல. அல்லது புதியதாகத் தோற்றுவிக்கவும் தேவையில்லை. ஆன்மீக வாழ்வு என்பது, உள்ளிருக்கும் இந்த வளர்ச்சியையே குறிக்கிறது. உண்மை யைக் கூற வேண்டும் எனின் அது வளர்ச்சி அல்ல. ஆனால் திறக்கப்பட வேண்டியது ஆகும். பரிபூரணத்தன்மையும், தூய்மைப்பாடும், நம்முடைய சொந்த சாரத்தைச் சார்ந்தது இல்லை எனின், நம்மால் ஒருபொழுதும் தூய்மைப்பாடு, மற்றும் பரிபூரணத்தன்மை உடையவர்களாக ஆக இயலாது. நம்மைக் காப்பாற்றவும் இயலாது.

நம் உள்ளே ஒரு உருநிலை மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். அதன்பிறகு இந்த உருநிலை மாற்றமானது தன்னியக்கத்தினால் வெளிப்புற உலகத்தில் வெளிப்படுத்திக் கொள்கிறது. நம்முடைய முழுமையான இயல்பும் தூய்மைப் படுத்தப்பட வேண்டும். நீ அதற்கு மேற்பூச்சு பூசாமல் இருக்கிறாயா என்று கவனிக்க வேண்டும். முதலில் பழைய

வளர்ச்சி துடைக்கப்பட வேண்டும். மற்றும் அடித்தளமானது சரியான முறையில் மீண்டும் உருவாக்கப்பட வேண்டும். தீவிரமாக ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். அது உன்னுடைய தூய்மைக்கேடு நிறைந்த போலியான இயல்புகளிலிருந்தும் உன்னை உயர்த்துவதற்கு உதவி செய்யும். உன்னுடைய போலியான அகங்காரத்தால் உன்னுடைய எண்ணங்கள் அழுக்கு நிறைந்தவையாகவும் கறைபடிந்தவையாகவும் உள்ளன. உன்னுடைய உண்மையான இயல்பு தூய்மைக்கேடு உடையதாக இருந்திருப்பின், உன்னைத் தூய்மைப்படுத்தவே இயலாமல் போயிருக்கும். மற்றும் உங்களில் யாருக்குமே விடுதலை அடையும் நம்பிக்கையும் இருந்திருக்காது. ஆனால் நம்முடைய உண்மையான இயல்பானது முற்றிலும் தூய்மையானது; தன்னொளிர்வு உடையது. நாம் அதை மீண்டும் பெற வேண்டும். நல்ல எண்ணங்களும், செயல்களும், சொற்களும், பெருமளவில் துணை புரியும். ஆனால் தொடர்ந்து செய்யப்படும் ஆன்மீகப் பயிற்சியில்லாமல் அவைகள் மட்டுமே போதாது. மற்றும் அவை நீ இப்பொழுது எப்படி இல்லையோ, அந்த நிலைக்கு உன்னை அவைகளால் மாற்ற இயலாது.

நம்மைக் குறித்தும், உலகத்தைக் குறித்தும் மற்றும் மனத்தில் எழும் எல்லா உருவங்கள், நினைவுகள் குறித்தும் ஒரு முழுமையான புதிய மனப்போக்கு இருக்க வேண்டும்.

ஒரு தூய்மையற்ற எண்ணம் உன் மனத்தில் ஊறினால் நீ வருத்தப்பட வேண்டும். இது நாம் இன்னும் கூடுதலாக முன்னேற்றமடையத் தூண்டுகோலாக இருக்கும். மற்றும் எப்பொழுதும் இருப்பதைவிட மேலும் விடாப்பிடியாக இருக்கச் செய்யும். அத்தகைய தூய்மையற்ற எண்ணங்கள் நம் மனத்தில் உள்ளன என்று நாம் அறிந்துகொண்டு இருப்பதற்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். நமக்கு அவைகளைத் தெரிந்திருக்கவில்லை எனின், நம்மால் அவற்றிற்கு எதிராக ஒருபொழுதும் வெற்றிகரமாக சண்டை செய்ய இயலாது. சிக்கல்கள் மேலோங்க மேலாங்க எதிர்ப்பும் இன்னும் வீரமுடன் இருக்க வேண்டும். அவைகளை

அகற்ற நம் உறுதியும் மேம்பட்டதாக இருக்க வேண்டும். மற்றும் நம்முடைய விடாப்பிடித்தனமும் மிகுதியாக இருக்க வேண்டும்.

நம் மனத்தில் உண்மையாகவே அழுக்கும், குப்பையும், இருந்தால் இந்த உண்மையை அறிந்து கொள்வோம். அது எத்தகைய தீங்கு நிறைந்தது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு தீமையை தீமை என்று உணர்ந்துகொண்டாலே, அது பாதிப் போரை வெற்றிகொண்டது போன்றது தான். நம்முடைய மனம் பெரிய அளவில் ஏற்படுத்தவல்ல தொல்லைகளின் சாத்தியங்களைப்பற்றி நாம் அறிந்து கொள்வது எப்பொழுதும் நன்மையை அளிக்கும். அதன் மூலம் நாம் எச்சரிக்கையுடன் இருந்துகொண்டு மற்றும் அதனுடைய சூழ்ச்சிகளுடன் கூடிய தந்திரமான முயற்சிகளைக் குறித்து முழுவதுமாக விழிப்புணர்வுடன் இருப்போம். காமம், கோபம், பேராசை, வன்முறை போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் அளிப்பதால் மனிதன் அவனுக்கும், மற்றவர்களுக்கும் எத்தகைய மட்டுமீறிய அளவிற்குத் துன்பங்களைத் தோற்றுவிக்கிறான். நாம் அவற்றைப்பற்றி அறிந்துகொள்ளாமல், அவற்றை ஒழித்துக் கட்டாமல் இருந்தால், இந்த எல்லா உணர்ச்சிகளும் நம் மனத்திலும் ஆழமாக மறைந்திருக்கக் கூடும். நாம் உயர்ந்த வாழ்க்கையை நோக்கி நம் மனத்தை விழிப்பு உணர்வுடன் திருப்பாவிட்டால், அது எப்பொழுதுமே இவைகளால் நிரப்பப்பட்டு இருக்கும்.

சாதகனுக்கு எண்ணத்தொகுதியின் மையத்தை விழிப்புணர்வுடன் மாற்றுவது ஆன்மீக வாழ்வில் மிகவும் முக்கியமான கட்டமாக விளங்குகிறது. பொதுவாக நம் இயல்பானது, உடல், மனம் அல்லது ஆன்மீக மையங்களில், ஏதாவது மையத்தைச் சுற்றிச் செயலாற்றிக் கொண்டு இருக்கும். சில மனிதர்களுக்கு உணர்வின் மையமாக வயிறு இருக்கும். பெருந்தீனி உண்பவர்களும், மற்றும் குடிகாரர்களும் இதற்கு உதாரணம் ஆவார்கள். வேறு சிலருக்கு இதயத்தின் கீழ்ப் பகுதி மையமாக இருக்கும். அது உலகியல் உணர்வுகள் உள்ள இடமாகும். சாதகன் அவனுடைய உணர்வு மையத்தை

இதயத்தின் கீழ்ப் பகுதியிலிருந்து மேற் பகுதிக்கு மாற்றிக் கொள்ள வேண்டும். முதலில் அவன் தன்னுடைய உண்மை யான ஆன்மீக மையத்தைக் கண்டுகொண்டு, அதன் பிறகு பயிற்சியின் மூலமாக, இந்த மையத்திற்குத் தொடர்ந்து இருக்குமாறு அவனுடைய விழிப்புணர்வை உயர்த்திக் கொள்ள வேண்டும். அவன் எப்பொழுதும் அவனுடைய விழிப்புணர்வு, அந்த உயர்ந்த ஆன்மீக மையத்திலிருந்து கீழே இறங்கிவிட்டதா என்று கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். ஒருவருடைய உயர்ந்த ஆன்மீக விழிப்பு உணர்வு மையத்தை விடாமல் பற்றிக் கொண்டிருப்பது ஒரு முக்கிய மான ஆன்மீக நியமம் ஆகும்.

சூட்சுமமான ஆசைகள்

சில நேரங்களில் நாம் நம்முடைய மனத்தின் மிக ஆழமான இடங்களுக்குள் நுழைந்து நுட்பமாக ஆராய்ந்தால் விதை வடிவத்தில் சில சூட்சுமமான ஆசைகள் மனத்தின் நிழலில் பதுங்கி இருப்பதைக் காணலாம். நாம் நம்முடைய நடைமுறையில் எச்சரிக்கையாக இருக்கவில்லை எனின். இவை ஒருநாள் வெளிப்பட்டு, நன்றாகத் துளிர்த்து பல தொல்லைகளை ஏற்படுத்தும். கடவுளை உணரும் முன்பு, பெரிய அளவில் கட்டுப்பாடுகள் இருக்கலாம். ஆனால் அத்தகைய ஆசைகளும், போக்குகளும் இன்னும் ஒழிக்கப் படாமல் உள்ளன. அவைகள் கண்காணிக்க மட்டும் படு கின்றன. எனவே மெய்ப்பொருளை உணர்வதற்கு முன்பு நாம் ஒருபொழுதும் பாதுகாவலுடன் இருப்பதில்லை. நம்முடைய முழுமையான நடத்தையில், நம்முடைய தொடர்புகளில், மற்றும் மனிதர்களுடன் கொள்ளும் செயல் தொடர்புகளிலும் நாம் சிறந்த முறையில் பாகுபடுத்தி ஆராய்வதைப் பயன் படுத்தவில்லை எனின் என்றாவது ஒருநாள் நாம் தவற நேரிட லாம். பக்தன் மிகப் பெரிய அளவில் கட்டுப்பாட்டுடன் இருப்பவனாக இருந்தாலும், மிகவும் துணிச்சலுடன் இருக்கக் கூடாது. அத்தகைய மனிதனுக்கும் நடத்தையைக் குறித்த நிலையான வழி இருக்க வேண்டும். மற்றும்

வரையறுக்கப்பட்ட விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். எனவே அவன் ஒருபொழுதும் எச்சரிக்கையற்ற வழிகளாலும், கெட்ட தொடர்புகளாலும் ஏதாவது ஒன்றில் பிறழாமல் இருப்பான். பகவத்கீதை, 'சுவையை அவ்வளவு சுலபமாக நம்மால் விட இயலாது' என்று கூறுகிறது.[1]

உண்மையைச் சொல்லப் போனால், மிகப் பெரிய அளவில் கட்டுப்பாடு உள்ளவனுக்கும் புலனால் அனுபவிக்கப்படும் பொருட்களில் ஏதோ ஒரு விருப்பம் விதையின் உருவத்தில் இருக்கும். நேரடியான உயர்ந்த விழிப்பு உணர்வு நிலை என்னும் நெருப்பில் எரியும் வரையிலும் அது இருக்கும். அதற்குப் பிறகு ஆசையின் போலித் தோற்றமானது இருக்கக்கூடும். ஆனால் அது எரிக்கப்பட்ட கயிற்றைப் போல அதன் பிறகு பிணைக்காது. அத்தகைய மனிதனின் விழிப்புணர்வு நிலையின் உட்பொருட்கள், முற்றிலும் வேறுபட்டவையாக இருப்பதால் அதன்பிறகு அவைகளால் அவன் பாதிக்கப்பட மாட்டான்.

விதையானது மீண்டும் துளிர்க்கும் என்று நாம் உணர்ந்தாலும், நாம் நம்பிக்கை அற்றவர்களாக ஆகிவிடக் கூடாது. நம்முடைய கடமைப் பொறுப்பின் எல்லையற்ற பேரளவை அது நம்மை உணரச் செய்வதாக இருக்க வேண்டும். நாம் நம்மிடம் 'இந்தப் பொறுப்பு மிகவும் கடினமானது. எனக்கு மிகுதியான, வல்லமை வாய்ந்த உறுதியும், மன ஒருமைப்பாடும், எச்சரிக்கை உணர்வும் வேண்டும்' என்று கூறிக் கொள்ள வேண்டும். நாம் பாதுகாப்பற்ற தன்மையை மிகைப்படுத்தவோ அல்லது கீழ்ப்படிக்கு இறக்குவதோ கூடாது. உன்னுடன் நடைமுறைத் தொடர்பு கொள்வதில் உறுதியாகவும், புறவாய்மை வழுவாமலும் இருக்க வேண்டும்.

சில நேரங்களில் நாம் நம்முடைய கனவில் திடீரென்று இத்தனை காலமும் நம் மனத்தின் உள்மறைவிடத்தில் மறைந்து இருந்த, அச்சத்தை ஏற்படுத்தும் ஒரு உருவத்தைக் காணக்கூடும். சில நேரங்களில் தியானம் செய்யும் பொழுது,

---

1. *பகவத் கீதை, 2.59.*

பயத்தை ஏற்படுத்த வல்ல உருவங்கள் மேலே எழுந்து மனத்தில் தோன்றி நம்மை நடுக்கமுறச் செய்யக்கூடும். நம்முடைய மனத்தின் மிக ஆழமான பகுதிகளில் அத்தகைய மிகுதியான குப்பையும், அழுக்கும் உள்ளன. மற்றும் இவ்வனைத்தும் என்றாவது ஒரு நாள் மேலே எழுந்து, மேற்பரப்பிற்கு வந்து நம்மை கீழே இழுப்பதற்கு முயற்சி செய்யும். நாம் இதனால் ஒருபொழுதும் வலுவிழந்து போகாமல், அதை அமைதியாக எடுத்துக் கொண்டு நம் ஆன்மீகப் பயிற்சியைச் செய்து கொண்டிருக்க வேண்டும். மிகப் பெரிய அளவில் கட்டுப் பாடு உடைய ஒரு மனிதன், ஆனால் உயர்ந்த விழிப்பு உணர்வு நிலையை அடையாமல் இருப்பவன் எப்பொழுதும் எச்சரிக்கையுணர்வுடன் இருக்க வேண்டும். ஏனெனில் எச்சரிக்கை உணர்வின்றி மற்றவர்களுடன் கொள்ளும் தொடர்புகளாலும், ஏதாவது ஒரு சொல்மூலமோ, ஏதோ ஒன்றைப் பார்ப்பதன்மூலமோ, மிகவும் சூட்சுமமான வடிவத்தில் சிக்கலானது எந்தக் கணத்தில் வேண்டுமானாலும் எழலாம். எப்பொழுதும் பாதுகாவலுடன் இருக்க வேண்டும். எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாம் பெரும்பாலும், முதலில் ஒரு சூட்சுமமான வழியில் பாதிக்கப்படுகிறோம். அதன்பிறகு அது வளர்ந்துகொண்டே இருக்கிறது. பிறகு மிகப்பெரிய பரிமாணத்தை உடையதாக பேரளவாகிவிடு கிறது. இறுதியாக நாம் அடித்துச் செல்லப்படுகிறோம். நாம் சரியான முறையில் பாதுகாவலுடன், எச்சரிக்கை உணர்வுடன் இல்லை என்றால் இது எந்தக் கணத்தில் வேண்டுமானாலும் நடக்கக்கூடும்.

உண்மையான பாதுகாவலுடன் இருப்பவன் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் இருப்பான். மிகச் சிறிய அளவில் சூட்சுமமான ஆசைகள் தோன்றுவதையும் கவனித்து, மன மட்டத்திற்கு முற்றிலும் அவைகளை அணுக விடாதபடி அவைகளின் தற்செயலான தோற்ற நிலையிலேயே அவற்றை அழித்து விடுவான். நாம் அனைவரும் ஆசைகள் தற்செயலாக உருவாகும் நிலையிலேயே அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் உண்மையான எச்சரிக்கை

உணர்வுடனும், பாகுபடுத்தி ஆராயும் இயல்புடனும் இல்லா விட்டால் நம்மால் இதைச் செய்ய இயலாது. நாம் உண்மை யான எச்சரிக்கை உணர்வுடன் இருந்தால், சிக்கலை, அது தற்செயலாக உருவாகும் முறையிலேயே கண்டுபிடித்து அதை அங்கேயே அழித்துவிடலாம். நாம் கடவுளிடம் தீவிரமான பக்தியுடன் கடவுளைப் பற்றி இடைவிடாமல் நினைத்துக் கொண்டிருந்தால்தான் இதைச் செய்ய இயலும். நாம் இதைச் செய்யும் பொழுது நம் மனம் முழுமையான விழிப்புணர் வைப் பெறுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணரின் தெய்வீக வாழ்க்கைத் துணையான ஸ்ரீசாரதா தேவி, முழுமையான தூய்மைப் பாட்டின் திருவுருவமாகத் திகழ்ந்தவர் ஆவார். அவர் 'ஒரு மனிதன் கடவுளைப்பற்றி இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டிருந்தால், அவனுக்கு எந்த வழியில் தீமை வரும்?' என்று கூறுவார்.

ஆன்மீக மலர்ச்சி அடைந்த மனிதனின் பளுவான பொறுப்பு

முதிர்ச்சி (பக்குவம்) அடையாத ஒரு மனிதன் ஏதாவது தவறு செய்தால், அது முதிர்ச்சி அடைந்த ஒரு மனிதன் செய்யும் தவறைப்போல அத்தனை மோசமானது இல்லை. பண்பாடு இல்லாத ஒரு மனிதன் நயமற்று நடந்துகொண் டால், அது பண்பாடு உடைய ஒரு மனிதன் நயமற்று நடந்து கொள்வதைப் போல அத்தனை மோசமானது இல்லை. மனிதன் எந்த அளவிற்கு முதிர்ச்சி அடைந்திருக்கிறானோ அவனுடைய பொறுப்பானது அந்த அளவிற்கு அதிக மாகிறது. மனிதன் எந்த அளவிற்குப் படி வளர்ச்சி அடைந் திருக்கிறானோ, அந்த அளவிற்கு, நீதி நெறிமுறைகளின்படி வளர்ச்சி அடையாத மனிதனைவிடச் சிறந்த முறையில் செயல்பட வேண்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறான். அவர்களின் பொறுப்புக்கள் ஒரே தன்மை உடையவை அல்ல.

நாம் வளரும் பொழுது ஒழுக்க நெறிமுறைப் பண் பாட்டிலும் வளர்ச்சி அடைய வேண்டும். ஒரு சராசரி மனிதன் தீங்கிழைக்கும் பொய்களைக் கூறுவதை அவ்வளவாகப்

பொருட்படுத்த மாட்டான். பெரும்பாலான மனிதர்கள் நல்ல நோக்கத்திற்காகப் ஒரு பொய் சொல்வதை பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் சாதகனின் வாழ்க்கையில் அவன் வேடிக்கையான ஒரு நல்ல நோக்கத்துடன் கூடிய ஒரு பொய்யைச் சொன்னாலும் மிகவும் கூச்சமடைந்து வலியை உணரும் காலம் வரும். எப்படி இருப்பினும், நீ உடன்பட்டே ஆக வேண்டும் என்றால், உன்னை ஒருபொழுதும் நியாயப் படுத்திக் கொள்ள முயற்சி செய்யாமல் இருக்க வேண்டும். ஆனால், உடன்படுதல் அது உடன்படுதலே மற்றும் அது சரி அல்ல என்று உணர வேண்டும். உன்னுடைய தவறை தவறு என்று உணர வேண்டும். அதை நியாயப்படுத்துவதற்கு முயற்சி செய்தல் கூடாது.

ஒரு மனிதனின் மனம் பருப்பொருள் இயல்புடன் இருக்கும் பொழுது, அவன் செயலை மட்டுமே தவிர்க் கிறான். அது சூட்சுமமாக முதிர்ச்சி அடையும் பொழுது அவன் எண்ணத்தைத் தவிர்க்கிறான். இந்த இரண்டில், எண்ணமே எப்பொழுதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஒழுக்கத்துடன் கூடிய நீதி நெறிமுறைகளுடன் கூடிய ஆன்மீக வாழ்வில் எண்ணமானது செயலை விட அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டும். பருப்பொருளைச் சார்ந்துள்ள மனம் இதை கவனிக்காமல் இருக்கும். முதிர்ச்சி அடையாத மனத்தை உடையவன் அவன் உண்மையாகப் பாதிக்கப் பட்டிருக்கும் பொழுது தான் பாதிக்கப்படவில்லை என்று நினைக்கிறான். அதே வேடிக்கையாகும். ஒரு கெட்ட எண்ணம், ஒரு கெட்ட செயலைப் போலவே கெட்டதான தாகும். மிகவும் ஒழுக்கமான முறைகளுடன் வாழ்பவர்கள் இந்த நிலையைத்தான் செயற்படுத்த வேண்டும். எண்ணம் தூய்மையானதாக இருக்க வேண்டும். சொல் தூய்மை யானதாக இருக்க வேண்டும். மற்றும் செயலும் தூய்மை யுடையதாக இருக்க வேண்டும். மற்றும் எண்ணத் தூய்மை இல்லாமல் சொல் தூய்மை இருக்கவியலாது. மற்றும் செயல் தூய்மையோ (கேட்கவே வேண்டாம்) இருக்கவே இயலாது.

மிக உயர்ந்த ஒழுக்க நெறிமுறையுடன் கூடிய பண்பாட்டில், ஒரு மனிதனால் கெட்டது எதுவும் செய்யப்படுவது இல்லை, அல்லது அவனால் ஊக்குவிக்கப்படுவது இல்லை. அல்லது அவனால் ஏற்றுக்கொள்ளவும் படுவது இல்லை. அவனுடையது மும்மடங்கான பொறுப்பு உணர்வு ஆகும். அவன் கெட்டது எதையும் செய்யக்கூடாது. கெட்டது எதையும் செய்வதற்கு ஊக்குவிக்கக் கூடாது. மற்றும் கெட்ட முறையில் செய்யப்பட்ட எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது[1] (செய்வது, செய்விப்பது, ஆமோதிப்பது கூடாது).

மருட்சிகளைத் தவிர்க்க வேண்டும்

நாம் ஆன்மீகப் பயிற்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில் எத்தகைய மருட்சியையும் முடிந்த அளவிற்குத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். புலன்களால் அறியப் படத்தக்கதையும், மற்றும் சூட்சுமமான வடிவங்களில் உள்ளவற்றையும் தவிர்க்க வேண்டும். நமக்கு மருட்சியை ஏற்படுத்தவல்ல எந்த ஒரு பொருளையும், பாதுகாப்பான தொலைவில் நின்று கொண்டே வணங்க வேண்டும், அதன் அருகில் நாம் செல்லக் கூடாது. வரவுள்ள ஒரு நீண்ட காலத்திற்கு நாம் நமது சொந்த வலிமையின் மீது மிகுதியாக நம்பிக்கை வைக்கக் கூடாது. நமக்கு மாசுகளுடன் கூடிய பதிவுகள் நிறைந்த அத்தகைய அழுக்கான மனம் உள்ளது. ஒருமுறை அது செயல்முறையில் கிளறிவிடப்பட்டால் அது முடிவற்ற தொல்லைகளை ஏற்படுத்தும். காமம், வெறுப்பு, பேராசை, கீழ்மை போன்ற இவ்வனைத்தும் நம்மிடம் மறைந்து உள்ளன. நம்மை அவைகளுடைய இரையாக்கிக் கொள்ள வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே நாம் பாதுகாப்புடன் இருக்க வேண்டும்.

நம் மனத்தில் மேலீடாகத் தோன்றும் அற்பமான சிறிய அலையின் உருவத்தில் ஏற்படும் ஆபத்தை நாம் உணராமல்

1. பதஞ்சலி யோக சூத்திரங்கள், 2.34.

இருக்கும் பொழுதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. வெளிப் புறத் தூண்டுதல்கள், மிகவும் சூட்சுமமாக, அரியதாக உணரத் தக்க ஒன்றாக இருப்பினும், படிப்படியாக மனத்தைப் பாதிக்கத் தொடங்குகிறது. சில நேரங்களில் சில பழைய தூய்மையற்ற பதிவுகளின் நினைவுகள் கூட நம் நிலையைக் குலைப்பதற்குப் போதுமானதாக இருக்கும். ஏனெனில் எப் பொழுதும் உள்ளேயே உள்ளது. வெளியில் இல்லை. விதை உள்ளே இல்லையெனின் அதனால் முளைக்க இயலாது.

பிணைப்பு எந்த வகையிலாவது மூளையைக் குழப்பி சாதகனின் மனத்தில் ஆன்மீகச் சீர்குலைவை ஏற்படுத்து வதற்குப் போதுமானதாக உள்ளது. ஆனால் பிணைப்பும், கோபமும் ஒன்று சேரும் பொழுது மனம் முழுமையாக தாறு மாறாக ஆகி, எல்லா வளர்ச்சியும் தடுக்கப்பட்டு விடுகிறது. உணர்ச்சியானது ஒரு மனிதனை ஆட்டிப்படைக்கும் பொழுது, மேம்பட்ட வாழ்க்கைக்கான எல்லா முயற்சியும் ஒரு முடிவிற்கு வந்துவிடுகிறது. அதனால்தான் நாம் மிகவும் தீங்கு விளைவிக்கும் புறத்தூண்டுதல்களை அது மிகவும் சூட்சுமமாக இருப்பினும் எச்சரிக்கையுடன் தவிர்க்க வேண்டும். மற்றும் மனத்தை மேன்மையான எண்ணங்களில் ஈடுபடுத்த வேண்டும். நாம் கீழான போக்குகளும், தூண்டு தல்களும் தோன்றுவதற்கு எத்தகைய வாய்ப்பையும் அளிக்கக் கூடாது. நாம் முடிந்தவரையில் மற்ற பாலாரின் (Sex) தொடர்பையும், அத்துடன் கட்டுப்பாடான நெறிமுறையுடன் வாழாத ஒரே பாலாருக்கு உரியவர்களையும் தவிர்க்க வேண்டும். நாம் ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளும் சமயத்திலாவது தவிர்க்க வேண்டும்.

உணர்ச்சிகள் நம்மை ஆட்டிப்படைப்பதற்கு நாம் வாய்ப் பளிக்கக் கூடாது. மனத்தின் இயல்பு நினைப்பது ஆகும். நாம் நம்முடைய மனத்திற்கு பழைய எல்லா தூய்மைக்கேடான தொடர்புகளைத் தவிர்த்து நல்ல தூய்மையான எண்ணங்களை அளிக்கவில்லை எனின் அது தீமை நல்கும் மற்றும் தூய்மை யற்றவற்றைப் பற்றியே நினைக்க கட்டுப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருந்து கொண்டு,

அறிவுபூர்வமாகவும், சோம்பல் இல்லாமலும் வழியைப் பின்பற்ற வேண்டும்.

'உறக்கம் உன் கண்களைத் தழுவும் வரையிலும், உன் உடல் விழும் வரையிலும் உன் மனத்தை வேதாந்த எண்ணங்களால் நிரப்பிக் கொள்வாய்'[1]

ஒழுக்கமான வாழ்வு ஆன்மீக வாழ்விற்கு வழிகாட்ட வேண்டும்

ஒவ்வொரு மனிதனின் மன உடல்இயல் தனித்தன்மையும் மற்றும் வாழ்வும் குணங்கள் என்று அழைக்கப்படும் மூன்று காரணக் கூறுகளால் ஆளப்படுகின்றன என்பது ஹிந்து தர்மத்தின் கருத்து ஆகும். அவை எப்பொழுதும் சேர்ந்தே காணப்படுகின்றன. இவைகளில் தமோகுணம் என்பது ஜடத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது. ரஜோகுணம் இயங்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. சத்துவ குணமானது அறிவை அடிப்படையாகக் கொண்டது ஆகும். ஒரு மனிதனின் இயல்பான மனப்பான்மை இந்த குணங்களில் ஒன்றையோ அல்லது மற்றொன்றையோ மிகப் பெரும்பான்மையாகச் சார்ந்திருக்கும். நம்மிடம் இந்த குணங்களைச் சீரமைத்துக் கொள்வதுதான் வாழ்க்கையின் தலைமையான சிக்கலாக உள்ளது. குணங்கள் ஏணிகளைப் போல நம்மை மேல் தளத்திற்கு வழி நடத்திச் செல்கின்றன. சோம்பல் நிறைந்த மனிதன் மேலே சென்று சுறுசுறுப்பாக வேண்டும். சுறுசுறுப்புடன் இயங்கும் மனிதன் தூய்மையான மனிதனாக வேண்டும். சத்துவகுணம் மேம்பட்டு இருக்கும்பொழுது ஒருவருடைய மனம் தூய்மையாகவும் தெளிவாகவும் ஆகிறது. சத்துவகுணமானது ஏணியின் முகட்டின் உச்சியிலுள்ள படியாக விளங்கி, உண்மையிடம் அழைத்துச் செல்கிறது. ஆனால் அந்த சத்துவகுணமே மெய்ப்பொருள் ஆகாது.

நம்முடைய தூய்மைப்பாடு நம்மைக் கடவுளை உணர்வதற்கு வழிநடத்திச் செல்ல வேண்டும். கடவுளை

1. முதல் அத்தியாயத்தில் 27-ஆம் பக்கத்தில் 2-ஆம் அடிக்குறிப்பைக் காணவும்.

அடைவது என்றால் இந்த எல்லாக் குணங்களையும் கடந்து செல்வது என்பது பொருளாகும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஒரு நீதிக்கதையில் இந்த குணங்கள் மூன்று திருடர்களுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன.

பணக்காரன் ஒருவன் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். திடீரென்று மூன்று திருடர்கள் வந்து அவனைச் சுற்றி வளைத்து, அவனிடம் இருந்தவற்றை எல்லாம் பறித்துக் கொண்டனர். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்ட பிறகு அவர்களுள் ஒருவன், 'இவனை விட்டு வைத்தால் என்ன லாபம்? கொன்று விடுவோம்' என்று கூறி அவனை வெட்டுவதற்காக அருகில் சென்றான். இரண்டாவது திருடன், 'இவனை வெட்டுவதனால் எந்தப் பயனும் இல்லை. நன்றாகக் கட்டி இங்கேயே விட்டுவிடலாம். அப்பொழுது இவனால் காவல்துறைக்குத் தகவல் கொடுக்க இயலாது' என்றான். அப்படியே அந்தத் திருடர்கள் அவனை நன்றாகக் கட்டிப்போட்டுவிட்டு அந்த இடத்திலிருந்து அகன்றனர். சிறிது நேரத்திற்குப் பிறகு மூன்றாவது திருடன் தனியாக அந்த இடத்திற்குத் திரும்பி வந்தான். அவன் பணக்காரனின் அருகில் சென்று, 'ஐயோ பாவம்! உனக்கு மிகவும் துன்பம் ஏற்பட்டு விட்டது அல்லவா? நான் கட்டை அவிழ்த்து விடுகிறேன்' என்று கூறி கட்டை அவிழ்த்துவிட்டான். பிறகு பணக்காரனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, அவனுக்கு வழிகாட்டியவாறே சென்றான். நெடுஞ்சாலை வந்ததும் அந்தத் திருடன் அதனைப் பணக்காரனுக்குக் காட்டி, 'இந்த வழியாக நீ சென்றால் சுலபமாக உன் வீட்டை அடைந்து விடலாம்' என்றான். உடனே பணக்காரன் மிகுந்த அன்புடன், 'அது எப்படி ஐயா, நீங்களும் என்னுடன் வாருங்கள். எனக்கு எவ்வளவு பெரிய உதவி செய்து இருக்கிறீர்கள்? எங்கள் வீட்டிற்கு வந்தால் நாங்கள் மிகவும் ஆனந்தம் அடைவோம்' என்றான். அதற்கு அந்தத் திருடன் 'நான் அங்கே வர இயலாது. வந்தால் காவல்துறையினர் பிடித்துக் கொள்வார்கள்' என்றான். இவ்விதம் கூறி, வழியைக் காட்டிவிட்டுச் சென்று விட்டான்.

'இவனை விட்டு வைப்பதால் என்ன லாபம்? இவனைக் கொன்றுவிடு' என்ற முதல் திருடன்தான் தமோ குணம். தமோ குணத்தால் அழிவு ஏற்படுகிறது. இரண்டாவது திருடன் ரஜோ குணம். ரஜோ குணம் மனிதனை உலக வாழ்க்கையில் கட்டி வைக்கிறது. பலவிதமான செயல்களில் அவனைப் பிணைக்கிறது. இறைவனை மறக்கச் செய்கிறது. சத்துவ குணம் மட்டுமே இறை நெறியைக் காட்டுகிறது. கருணை, தர்மம், பக்தி போன்றவை சத்துவகுணத்திலிருந்து தான் தோன்றுகின்றன. படிக்கட்டில் கடைசிப்படி போன்றது சத்துவ குணம். அதற்குப் பிறகு மாடி' மனிதனின் உண்மை யான இருப்பிடம் பரப்பிரம்மம். முக்குணங்களைக் கடக்காவிட்டால் பிரம்ம ஞானம் கிடைக்காது.[1]

கடவுள்தான் நம்முடைய இலட்சியமாக இருக்க வேண்டும். மற்றும் கடவுளை உணர்வதுதான் நம்முடைய இலட்சியமாகும். அதாவது கடவுளை நம்மிடமே உணர்வது ஆகும். அதன்பிறகு அனைவரிடமும் கடவுளை உணர்வது ஆகும். குணங்களால் கட்டுப்படுத்தப்படாத, கடவுளை உணர்ந்த மற்றும் குணங்களின் செயல்களுக்கு நடுநிலையாக இருக்கும் மனிதர்தான் நம்முடைய குறிக்கோள் ஆகும். கெட்ட இயல்புகளிலிருந்து விடுபட்டு, தூய்மையான எண்ணங்களின் உதவியுடன் அவன் சத்துவ குணத்தையும் கடந்து அறிவு எல்லையைக் கடந்த மட்டத்தை அடைந்திருக் கிறன். அதிகமாகக் கூறப் போனால், அவனுடைய மன மானது சத்துவம் என்னும் ஏணியின் மேல்படிவரையில்தான் கீழே வர இயலும். ஆனால் அவனுடைய மனத்தால் அதற்குக் கீழே ஒரு பொழுதும் போக இயலாது.

வெறும் ஒழுக்க நெறிமுறைகள் மட்டுமே ஒரு மனிதனை ஆன்மீகத்தில் நாட்டமுடையவனாகச் செய்ய இயலாது. ஒரு மனிதனின் ஆன்மீக இயல்பு என்னவாக இருப் பினும் வெறும் ஒழுக்க நெறிமுறைகள் அதற்கு விளக்கச் சான்றாக இருக்கவியலாது. கிறிஸ்தவ சீர்திருத்தச்சமயமான

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.294-295.*

Protestantism என்று பொதுவாக அழைக்கப்படும் சமயத்தின் பெரிய தவறு இதுதான். ஒழுக்க நெறிமுறையே வாழ்விலும் மற்றும் வாழ்வின் முடிவிலும் எல்லாமே என்று அமைந் திருப்பது ஆகும். ஒழுக்க நெறி முறைகள் மிகவும் அவசிய மானவையாகும். மற்றும் ஒழுக்க நெறிமுறைகளுடன் கூடிய முழுமையான வாழ்வை ஒருவன் அதற்கு முன்பு மேற் கொள்ளாமல் ஆன்மீக இயல்பு என்பது இருக்கவியலாது. ஆனால் ஒழுக்க நெறிமுறைத் தத்துவம் அதுவே ஒழுக்க மட்டத்தை வெகுவாக மீறும் ஆன்மீக இயல்பிற்கு வழிநிலை யாக உரிமை கொண்டாட இயலாது.

நீ தன்னலமற்ற செயல்களைச் செய்து கொண்டு ஒழுக்க மான வாழ்வை மேற்கொண்டால் அது போதாது. நீ ஒரு சிறிதளவும் தவறாமல் உன் கடமைகளைச் செய்தால் அது போதாது. அதற்கும்மேல் தேவைப்படுகிறது. நீ மிக உயர்ந்த ஆன்ம ஞானத்தை அடைய வேண்டும். அதன்மூலம் மிக உயர்ந்த இலட்சியத்தை நீயாகவே உணர வேண்டும் என்று வேதாந்தி கூறுகிறான்.

தன்னலமற்ற செயல்களும் ஒழுக்க நெறி முறைகளைப் பின்பற்றுவதும்தான் மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொள் வதற்குத் தேவையான ஒரே வழியாகவும், படி வளர்ச்சிக்கு உரிய வழியாகவும் விளங்குகிறது. மற்றும் அதைப் புரிந்து கொள்ளாமல் ஒருவராலும் மிக உயர்ந்த ஞானத்தை அடைய வியலாது. ஆனால் அந்த மிக உயர்ந்த விழிப்பு உணர்வு நிலையையும் பேரின்பத்தையும் அடைவதே இலட்சிய மாகும். இந்த விழிப்பு உணர்வு நிலையும், பேரின்பமும் எப்பொழுதும் நம் உள்ளேயே உள்ளன. அவையே நம் முடைய உண்மையான இயல்பாக விளங்குகிறது. அவை மனத்தின் அழுக்குகளால் மூடப்பட்டு உள்ளன. அழுக்குகள் அகற்றப்பட்டவுடன் உண்மையான ஆன்மா ஒளி வீசுகிறது.

அழுக்குகள் என்று தவறான உணர்ச்சிகளையும் மற்றும் கெட்ட எண்ணங்களையும் மட்டுமே நாம் குறிப்பிட வில்லை. நல்ல உணர்வுகள், நல்ல எண்ணங்கள் என்று

அழைக்கப்படுபவை கூட தியானத்திற்கும் ஆன்மஞானத்தை அடைவதற்கும் தடைகளாக இருப்பதால், அவைகளும் அழுக்குகள் என்றே கருதப்படுகின்றன. ஒழுக்க நெறிமுறை யுடன் கூடிய வாழ்வானது, கெட்ட எண்ணங்களையும், கெட்ட பதிவுகளையும் அழிப்பதற்கும் அல்லது உயர்ந்த குறிக்கோள்களை மேற்கொள்வதற்கும் வற்புறுத்துகின்றன. ஆனால் ஆன்மீக வாழ்வானது, நல்ல எண்ணங்களையும் நல்ல பதிவுகளையும்கூட அழிப்பதற்கும், அல்லது அதைக் கடந்த நிலையை அடைவதற்கும் வற்புறுத்துகிறது. உணர்ச்சிகள் ஒருவரை, உடல் மற்றும் மன மட்டங்களில் பிணைத்து விடுகிறது. ஆன்மீக வாழ்வு என்பது இந்த இரு மட்டங்களையும் கடந்த நிலையைக் குறிப்பிடுகிறது. அதனால்தான் ஒரு சாதகன், வழக்கமாக உள்ள நல்ல நடத்தை என்று அழைக்கப்படுவதை மிஞ்சி மேம்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறான்.

உணர்ச்சிகளின் மட்டத்தில் எத்தகைய பாதுகாப்பும் இருக்க இயலாது. ஒருவர் தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும். மற்றும் அவற்றைத் தீவிரமான ஆன்மீக நாட்டமாக மேம்படுத்த வேண்டும். ஒருவர் எப்பொழுதும், நல்ல உணர்ச்சிக்கும், கெட்ட உணர்ச்சிக்கும் இடையே சிறிது தூரம்தான் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

உண்மையான இலட்சியம்

உன்னுடைய மனத்தை ஒருபொழுதும் தன்னிரக்கம் அல்லது பயனற்ற வருத்தம் போன்றவற்றின் மூலம் பலவீனப் படுத்திக் கொள்ளக்கூடாது. நம்மால் நம்முடைய மோசமான உணர்ச்சிகளையும் ஆசைகளையும் எதிர்கொள்ள இயலு மாயின், அதன்பிறகும் சமநிலையில் அமைதியுடன் இருக்க இயலுமாயின், நம்மால் புதிய தொடக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள இயலும். ஆக்கப்பூர்வமான ஆற்றலுடன் எதை யாவது செய்ய வேண்டும். மற்றும் ஆற்றலுடன் தொடர்ந்து செயல்பட வேண்டும். கடந்த காலத்தைக் குறித்து ஏங்கிக்

கொண்டிருப்பது ஒரு நோய் ஆகும். ஒவ்வொரு சாதகனும், அதற்கான அறிகுறிகள் தோன்றியவுடனேயே அதை தனக் குள்ளேயே குணப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் நம்மை உண்மையற்ற மற்றும் தூய்மையற்ற எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளிலிருந்து தியானத்தில் நம் மனங்களைக் கருத்து ஊன்றச் செய்வதற்கு முன்பே விடுவித்துக் கொள்ள வேண்டும்.

அதன்பிறகு நாம் பிரார்த்தனை செய்யலாம். மற்றும் தியானத்திற்கு வழிகாட்டும் வகையில் ஜபமும் செய்யலாம். இது கடவுளின் நாமத்தைக் கிளிப்பிள்ளை கூறுவதைப் போல மனம் போன போக்கில் திரும்பத் திரும்பக் கூறுவது இல்லை. ஆனால் புனிதமான சொற்களின் பொருளைத் தொடர்ந்த விழிப்புணர்வு நிலையுடன் மனத்தை நிறைப்பது ஆகும். பிரார்த்தனையும், ஜபமும் முறையாகப் பின்பற்றப் பட்டால் அது ஒரு புதிய இசைவுடைமையை ஏற்படுத்து கிறது. அது நம்முடைய உணர்ச்சிகளையும், சிந்தனைகளை யும், விருப்பங்களையும் தூய்மைப்படுத்துகிறது. உண்மை யான தியானத்தை நோக்கிய ஒரு சிறந்த படிக்கல்லாக அமையும்.

நம்முடைய குருவான சுவாமி பிரம்மானந்தரின் சொற்களைக் கேட்பாய்.

‘ஒரு தனிமையான இடத்தில் அமைதியுடன் அமர்ந்து, ஆசைகளைக் கட்டுப்படுத்தி, ஆழ்ந்த சிந்தனையிலும் தியானத்திலும் உன்னை ஈடுபடுத்திக் கொள்வதுதான் மனத் தைத் தூய்மைப்படுத்துவதற்கும் மற்றும் ஒருநிலைப்படுத்து வதற்குமான சுலபமான வழியாகும். நீ எந்த அளவிற்கு அதிகமாக உன் மனத்தில் புனிதமான எண்ணங்களுக்கு இடமளிக்கிறாயோ, அந்த அளவிற்கு உன்னுடைய ஆன்மீக மலர்ச்சியானது சிறப்பு உடையதாக இருக்கும். ஒரு பசுவிற்கு நன்றாக உணவு அளிக்கப்பட்டால் அது மிகுதியாகப் பாலைக் கொடுப்பது போல மனத்திற்கு ஆன்மீக உணவு அளிக்கப்பட் டால் அது மிகச் சிறந்த அமைதியை அளிக்கிறது. ஆன்மீக

உணவு என்பது தியானம், பிரார்த்தனை, ஆழ்ந்து சிந்தித்தல், மற்றும் ஜபம் என்னும் இவற்றை உள்ளடக்கியது ஆகும்.

மனத்தை ஒருநிலைப்படுத்துவதற்கான மற்றொரு வழி. அதனை அதன் போக்கில் விட்டுவிடுவதாகும். ஆனால் மனம் எங்கெல்லாம் அலைகிறது என்பதை ஒருமித்த உணர்வுடன் கண்காணிக்க வேண்டும். சிறிது நேரத்திற்குப்பிறகு மனமே அயர்வடைந்து, கடவுளிடம் அமைதியைக் கண்டு கொள் வதற்குத் திரும்பி வருகிறது. நீ உன் மனத்தைக் கண்காணித் தால், உன் மனமானது பதிலுக்கு உன்னைக் கண்காணித்துக் கொண்டிருக்கும்.'[1]

ஆனால் இந்த வகையிலான தன்முனைப்புடன் கூடிய தியானம் போதுமானது அல்ல. நாம் பரம்பொருளின் மீது தியானம் செய்து கொண்டிருக்கும்பொழுதே, நாம் நம்மை யும் முழு மனத்துடன் கடவுளுக்கு அர்ப்பித்துக் கொள்ளவும் வேண்டும். தியானத்தைத் தொடர்ந்து செய்வது உன் ஒளியை வெளிப்படுத்தி உள்ளுணர்வால் உணரப்படும் ஆற்றலையும் அளிக்கிறது. அதனால் ஆன்மாவானது பரம்பொருளிடம் தனக்கு உள்ள தொடர்பை அறிந்துகொண்டு, அது அந்நிலை யிலேயே தொடர்ந்து மூழ்கியிருக்கிறது. அதன் விளைவாக வரும் தெய்வீகமான தன்னை மறந்து நிலையானது, ஆன்மாவை முழுமையாக உருமாற்றம் செய்து விடுகிறது.

மெய்ப்பொருளை உணர்ந்த உயர்ந்த நிலையிலிருந்து அதை உணர்ந்தவன் கீழே வரும்பொழுது, அவனுடன் ஒரு புதிய தொலைநோக்கைக் கொண்டு வருகிறான். மற்றும் தன்னுள்ளேயும் மற்ற எல்லாவற்றிலும் கடவுளைக் காண் கிறான். அவன் மனம் அமைதியாக இருக்கிறது. வெற்றி யினாலோ அல்லது துன்பத்தினாலோ அலுங்காமல் இருக்கிறது. அவனுடைய மனமானது எல்லா உயிரினங் களுக்கும், அன்பையும், பரிவையும் நிறைத்துக் கொண் டுள்ளது. அவனுடைய மனமானது பயம், பிணைப்பு மற்றும்

---

1. The Eternal Companion, *பக்கம் 251-252.*

கோபத்திலிருந்து விடுபட்டு உள்ள தெய்வீக உணர்வு நிலை என்னும் உதவுகிற ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட, புதியதொரு அமைதியை உணர்ந்துள்ளது. மற்றும் அவன் இவ்வுலகத்தில் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் இந்த அமைதியையும் இன்பத்தையும் மற்றவர்களுடன் பங்கு கொள்வதற்கு விரும்புகிறான்.

12

ஆன்மீக வாழ்வில் பாலியலின் சிக்கல்

வாழ்க்கையில் பாலியலின் தாக்கம்

ஆன்மீக வாழ்வில் பாலியல் ஒரு முக்கியமான சிக்கலாக விளங்குகிறது. ஒவ்வொரு சாதகனும் அவனுடைய வாழ்வில் என்றாவது ஒருநாள் அதனுடைய பிடிக்குள் வந்தே ஆக வேண்டும். நவீன மனஇயல் வல்லுனர்களுள் சிலர் குறிப்பிட்டு இருப்பதைப்போல பாலியலானது, ஒரு சராசரி மனிதனின் வாழ்வில் ஒரு முக்கியமான பங்கைப்பெற்று செயலாற்றுகிறது. மற்றும் அவனுடைய எண்ணத்தையும், உணர்வையும் விருப்பத்தையும் பெருமளவிற்கு ஆட்கொள்கிறது. மிகத் தீவிரமாக ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகிறவர்கள், முதலில் அவர்களுடைய வாழ்வில் இந்தப் பாலியலின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டும். தொடக்கக் காலத்திலிருந்தே தூய்மையான வாழ்வை மேற்கொண்டு இருப்பவர்களுக்கு இந்தச் சிக்கல் சுலபமானதாக இருக்கும். ஆனால் அதிகமான அளவில் தூய்மையற்ற எண்ணங்களைச் சேகரித்துக் கொண்டபிறகு தற்காலத்திய இளைஞன் ஆன்மீக வாழ்விற்குத் திரும்புகிறான். அவன் ஆன்மீக வாழ்வை வெற்றிகரமாக எடுத்துக்கொள்ளும் முன்பு, அவன் பொதுவாக ஒரு பெரிய காட்டையே அகற்ற வேண்டியுள்ளது.

தனிமனித இயல்புகளின் வெவ்வேறான மட்டங்களில் அது காணப்படுகிறது என்பதுதான் பாலியலின் முதன்மையான சிக்கலாக விளங்குகிறது. பாலியல் என்பது உடலைச் சார்ந்தது அல்ல. உடல் தொடர்பான உந்துதல்கள் நீங்கலாக

பாலியலானது மனத்தின் மட்டங்களிலும் சூட்சுமமான ஈர்ப்புக்களாக காணப்படுகிறது. அது ஒரு மிதக்கும் பனிப் பாறையைப் போன்றதாகும். அதனுடைய முனைப்பகுதி மட்டும்தான் வெளியில் தென்படும். சாதகன் அதிகமாகத் தன்னைத்தானே உள்ளாய்வு செய்து கொள்ளும் பொழுது, அவன் தன்னுள்ளே உள்ள பாலியலின் சூட்சுமமான கிளைக்கும் தன்மையை அதிகமான அளவில் புரிந்து கொள் கிறான். பல நேரங்களில் இது மனிதர்களை அச்சுறுத்துகிறது. பாலியல் கட்டுப்பாடு ஏற்படுத்தும் மிகப் பெரிய சவாலை வெகு சிலரால் மட்டுமே எதிர்கொள்ள இயலும். ஒருவருக்கு மிகப்பெரிய அளவில் மனத்திட்பமும், இரும்பைப் போன்ற உறுதியும் இதற்குத் தேவைப்படுகிறது. ஒரு சாதாரண மனிதன் உண்மையான சாதகனின் மனத்தை உற்று நோக்கி னால் அவன் பயந்து விடுவான். அது ஒரு சூளையின் (வெப்பக் காற்று ஊட்டப்பட்ட உலை) உட்பகுதியைப்போல இருக் கும். அங்கு தூய்மையான உலோகமானது உலோகக் தாதுவி லிருந்து தொடர்ந்து வேறுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்.

பிரம்மச்சரியமும் மற்றும் திருமணமும்

ஒரு சாதகன் முதலில், திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதா அல்லது திருமணம் செய்து கொள்வதா என்பதைக் குறித்து தீர்மானம் செய்ய வேண்டும். ஹிந்து தர்மம் இல்லற வாழ்க்கையை பாதகமான ஒன்றாகக் கருதவில்லை. ஆனால் உறுதியாக, சில கட்டுப்பாடுகளை அதன் மீது வலியுறுத்து கிறது. ஆனால் திருமணம் ஆகாதவர்களுக்கு அதனுடைய நியதிகள் மிகவும் கண்டிப்பு வாய்ந்தவையாக உள்ளன. ஆனால் தனிப்பட்ட ஆன்மீக வாழ்வை மேற்கொள்ள விரும்புகிறவர்கள், வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதை முற்றிலும் அவசியமானதாக உணர்கிறார்கள். ஏசுநாதர்,

‘சிலர் பிறவியிலேயே மண உறவு கொள்ள முடியாதவர் களாக இருக்கின்றனர். வேறு சிலர் மனிதர்களால் அந் நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். மற்றும் சிலர் விண்ணரசின்

பொருட்டு அந்நிலைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்கின்றனர். இதை ஏற்றுக்கொள்ள கூடியவர் ஏற்றுக்கொள்ளட்டும்' என்று கூறியுள்ளார்.[1]

இந்தப் பகுதியைத்தான் ஸ்ரீராமகிருஷ்ணர், சரத் மற்றும் சசி என்னும் இரு இளைஞர்கள் (பிறகு அவர்கள் சுவாமி சாரதானந்தர் என்றும் சுவாமி இராமகிருஷ்ணானந்தர் என்றும் அழைக்கப்பட்டனர்) முதன்முதலில் அவரைப் பார்க்கச் சென்றபொழுது படிக்கும்படிச் சொன்னார். திருமணம்தான் எல்லா பிணைப்புக்களுக்கும் மூலகாரணமாக விளங்குகிறது என்னும் கருத்தைத் தெரிவித்தார். எல்லா அருள் போதகர்களும் இந்த உண்மையைக் குறித்து ஒருமித்த கருத்தைக் கொண்டு உள்ளனர். ஆனால் உலகியல் மனிதர்கள் எப்பொழுதும் ஏதோ அவர்களின் உதவி கடவுளுக்குத் தேவை என்று கருதி கடவுளின் படைப்பிற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று அக்கறை கொண்டுள்ளனர். இவ்வனைத்தும் பாசாங்கு ஆகும். வெற்றுரை ஆகும். கடவுளுக்கு அவருடைய படைப்பில் யாருடைய உதவியுமே தேவையில்லை. இந்த மனிதர்களும் உண்மையில் அக்கறை காட்டுவதில்லை. அவர்களுக்கு அவர்களுடைய இன்பம்தான் தேவை. கடவுளின் படைப்பு அல்ல. செயின்ட் பால், அவருடைய புகழ்பெற்ற ஒரு கடிதத்தில்,

'இப்பொழுது மணமாகாதவர்களுக்கும் கைம்பெண்களுக்கும் நான் சொல்வது இதுவே. அவர்களும் என்னைப் போல இருந்து விட்டால் மிகவும் நல்லது. எனினும் அவர்கள் தன்னடக்கம் இல்லாதவர்கள் என்றால் திருமணம் செய்து கொள்ளட்டும் ஏனெனில் காமத்தீயில் உருகுவதை விடத் திருமணம் செய்துகொள்வதே நல்லது' என்று எழுதியுள்ளார்.[2]

இது ஒரு பயன் அளித்தக்தக்க அறிவுரையாகும். அனைவரும் துறவிகளாக வேண்டும் என்று நாங்கள்

---

1. பைபிள்—மேத்யூ, 19:12.

2. பைபிள்—1 Corinthians *7:8,9*

கூறவில்லை. அது ஒருவருடைய பரிணாம வளர்ச்சியைப் பொறுத்துள்ளது. சங்கற்பத்தின் கட்டுப்பாட்டு உறுதியைத் தகர்த்து துறவியாக இருப்பதைவிட இல்லறத்தை மேற்கொள்வது மேலானதாகும். புறத்துறவு நிலையானது எப்பொழுதும் அகத்துறவு நிலையை நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும். இல்லை எனில் அதற்கு எத்தகைய மதிப்பும் இல்லை. ஒரு துறவிக்கு இந்த இரண்டுமே இருக்க வேண்டும். புறத்துறவு துறவு நிலையால் பயன் இல்லை. உலகியல் கருத்துக்களில், நம்பிக்கைகளில் எண்ணங்களில் தங்களைச் சுறுசுறுப்புடன் ஈடுபடுத்திக் கொண்டு தங்களுடைய பலவீனங்களால் உள்முகமாக துறவை மேற்கொள்ள இயலாதவர்கள் இல்லற வாழ்க்கையை மேற்கொள்வது நன்மையைப் பயக்கும். அவர்கள் வேடதாரிகளாக இருக்கக் கூடாது. உண்மையாகவே அகத்துறவை மேற்கொண்டவனால் முற்றிலும் பிரம்மச்சரியத்தின் முறைமைகளை நிறைவு செய்து கொண்டு இவ்வுலகிலும் வாழ இயலும். ஒழுக்க நெறிகளின் முறைமைகளையும் நிறைவு செய்து கொண்டு, பால்தன்மை சார்பாக தூய்மையான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு, அகிம்சையை மேற்கொண்டு, வெறுப்பு, பிணைப்பு இன்றி, தனிப்பட்ட தொடர்பின்மூலம் வேறு எந்த மனிதனிடமும், தன்னைத் தளைப்படுத்திக் கொள்ளாமலும் இருக்க இயலும். ஆனால் ஆன்மீகத்தில் பூர்வாங்கப் பயிற்சியின்றி, பல ஆண்டுகள் ஆன்மீகத்தை நடைமுறையில் மேற்கொள்ளாதவர்களுக்கு இது மிகவும் கடினமானது மற்றும் முற்றிலும் இயலாத ஒன்றாகும். அத்தகைய வாழ்க்கை அரியதொன்றாக இருப்பினும், அத்தகைய வாழ்க்கையை மேற்கொள்ள இயலும் என்பதையாவது அவர்கள் உணர வேண்டும். ஆனால் பெரும்பான்மையான மனிதர்களுக்கு இது முற்றிலும் கஷ்டமானதாகும்.

துறவிகளாக ஆக விரும்புவோரும் அல்லது வாழ்நாள் முழுவதும் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்க விரும்புபவர்களும் கூடுதலான கவனத்துடன் இருக்க வேண்டும். ஒரு எலியால் சீர்குலைந்த ஒரு துறவியின் கதை உனக்குத்

தெரியுமா? ஒரு துறவி தியானம் செய்துகொண்டிருந்த பொழுது தொடர்ந்து ஒரு எலியால் தொல்லைக்கு ஆட்பட நேர்ந்தது. எனவே அன்பு நிறைந்த சிலர் ஒரு எலியைப் பிடிப்பதற்காக அவரிடம் ஒரு பூனையைக் கொடுத்தனர். எனவே இயல்பாக அந்த துறவிக்கு பூனைக்கு பால் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தத் துறவிக்கு எப் பொழுதும் பாலை வாங்குவது மிகவும் கஷ்டமானதாக இருந்ததால் அவன் ஒரு பசுவை வாங்குவதற்கு முடிவு செய்தான். பசுவிற்கு உணவு அளிக்கப்பட வேண்டும். எனவே சுற்றிலுமிருந்த மனிதர்கள், 'ஏன் ஒரு வயலை வாங்கக் கூடாது' என்று யோசனை கூறினர். அந்த அறிவுரை பொருத்தமாக இருந்ததால் அவன் ஒரு வயலை வாங்கினான். ஆனால் சிறிது காலத்திற்குப்பிறகு அந்த வயலைப் பண் படுத்த வேண்டும் என்று உணர்ந்தான். பண்படுத்துவதற்கு மிகவும் அதிகமாக உழைக்க வேண்டும் மற்றும் அவனால் தனியாக அதைச் செய்ய இயலாது. எனவே அவன் திருமணம் செய்து கொண்டான். அதுதான் அவனுடைய துறவறத்தின் முடிவாக இருந்தது. பொதுவாக மனித வாழ்க்கையில் என்ன நடைபெறுகிறது என்பதை இது உருவகமாகக் குறிப்பிடு கிறது. ஒரு ஆசை மற்றொரு ஆசையைப் பிறப்பிக்கிறது. இறுதியில் அவை கணக்கற்றவையாகப் பெருகி அதன்பிறகு கட்டுப்படுத்த இயலாதபடி ஆகிவிடுகின்றன.

இல்லறத்தாரின் கடமை

எல்லா உயர்ந்த ஆன்மீக வழிகளும் தற்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதை பெரிதும் வலியுறுத்துகின்றன. ஹிந்து சமய அமைப்புமுறையில், மாணவன் தற்கட்டுப் பாட்டைக் கண்டிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் மற்றும் நெஞ்சறிந்து அதிலிருந்து பிறழக் கூடாது என்றும் மாணவனுக்குக் கூறப்பட்டுள்ளது. அவன் இல்லற வாழ்வை மேற்கொள்ளும் பொழுது, தன்னுடைய எல்லாத் தற்கட்டுப் பாடுகளையும் காற்றில் பறக்க விடுவதில்லை. அவன் குறிப் பிடத்தக்க கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கை என்னும்

கருத்தையே தன்முன் வைத்துக்கொண்டிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணர் பாகவதத்தில் தன்னுடைய இறுதி அறிவுரையில், 'இனப்பெருக்கம் செய்யும் நோக்கத்தைத் தவிர மற்றவற்றில் தற்கட்டுப்பாட்டை மேற்கொள்வதும், வாழ்க்கையில் வழக்கமாகச் செய்யத்தக்க கடமைகளைத் தூய்மையுடனும் மனநிறைவுடன் செய்வதும், விலங்குகளிடம் அன்பு காட்டுவதும் இல்லறத்தாருக்கு உரிய கடமைகளாகும்' என்று கூறியுள்ளார்.[1]

ஒரு இலட்சிய இல்லறத்தான் மிகப் பெரிய வீரனாவான். ஏனெனில் மருட்சிகள் நிறைந்த இவ்வுலகில் அவன் ஆன்மீகக் குறிக்கோளுடன் வாழ வேண்டும். குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டு, குழந்தைகளை வளர்த்து, அதன் மூலம் சமூகத்தில் தொண்டு ஆற்றுபவர்களின் விஷயத்தில் விதிவிலக்குச் செய்யப்பட்டுள்ளது. மற்ற ஆன்மீக சாதகர்கள் அனைவரும், பால் தொடர்புள்ள ஆற்றலாக மற்றும் எண்ணமாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் ஆன்மீக ஆற்றலாக நிலைமாற்றம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது மறைந்துள்ள ஆன்மீக உணர்வை விழிப்படையச் செய்வதற்கும் மற்றும் உயர்ந்த விழிப்பு உணர்வு மையங்களில் அது பாய்வதற்கும் மற்றும் சாதகனுக்குப் புத்தொளியையும் இன்பத்தையும் அளிப்பதற்குப் பெரும் துணைபுரிகிறது. இல்லறத்தாரின் விஷயத்தில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் திருமண வாழ்க்கையில், முழுமையான தற்கட்டுப்பாட்டுடன் வாழ்வது நடைமுறைக்கு உகந்தது அல்ல. அதே நேரத்தில் இல்லறவாழ்வை மேற்கொண்டிருப்பவர் படிப்படியாக முழுமையான தற்கட்டுப்பாட்டை கற்றுக்கொள்ள வேண்டும் என்று அழுத்தமாக வற்புறுத்தப் பட்டுள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஓரிரு குழந்தைகள் பிறந்தபிறகு கணவனும், மனைவியும் அண்ணன்-தங்கையைப்போல

---

1. ப்ரஹ்மசர்யம் தப: சௌசம் ஸந்தோஷோ பூதஸௌஹ்ருதம் ।
க்ருஹஸ்தஸ்யாப்யுருதௌ கந்து: ஸர்வேஷாம் மதுபாஸனம் ॥
—பாகவதம், 11.18.43.

வாழ வேண்டும் (உடன் பிறந்தவர்களைப் போல) என்று கூறுவார்.[1] ஆனால் இவ்விதமான தற்கட்டுப்பாட்டை அடைவதற்குக் கணவன்-மனைவி என்னும் இருவரும் அதற்காகத் தொடக்கத்திலிருந்தே முயற்சி செய்ய வேண்டும். நெறியற்ற தன்மை என்பது இயல்பிற்கு மீறிய திருமண உறவினால் பெறப்பட்ட தூய்மைக் கேடுகளை மட்டும் குறிக்கவில்லை. வெளியில் இருப்பவருடன் இருப்பதைப் போன்றே ஒருவர் ஒருவருடைய மனைவியிடமும் நெறியற்ற முறையில் நடந்து கொள்ளலாம். ஒருவர் தன் சொந்த மனைவியிடமே பால் தன்மை சார்பாக மிதமற்ற வாழ்க்கையை மேற்கொண்டால், உண்மையான ஆன்மீக முயற்சிக்கு முற்றிலும் தேவையான சக்தியையும், தீவிரத்தையும் அவர் எங்கிருந்து பெற இயலும்? நாம் இந்த உண்மையை மிகத் தெளிவாகவும் உணர்ச்சிக்கு இடமளிக்காமலும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். நாம் மேம்பட்ட வாழ்க்கையை மேற்கொள்வதற்கு நமக்கு மிகப்பெரிய அளவில் சக்தி தேவைப்படுகிறது. மற்றும் உண்மையிலேயே ஒன்றேயான நம்முடைய இந்த சக்தியானது, நாம் முன்னேறி, உண்மையாகவே முழுமையை அடைய வேண்டும் எனின், பால்ஈடுபாடு உள்ள வழிகளின் மூலம் வீணடிக்கப்படக் கூடாது. பொதுவான நல்ல வாழ்க்கை என்று மனிதர்கள் எதைக் கூறுவார்களோ, அத்தகைய சமுதாய ஒழுக்கவியலுடன் கூடிய வாழ்க்கையை விட ஆன்மீக வாழ்வானது மேம்பட்ட ஒன்றாகும். அதற்கு மிகப்பெரிய அளவில் தற்கட்டுப்பாடும், தூய்மைப்பாடும் தேவைப்படுகிறது. அந்த உயர்ந்த வாழ்க்கையை வாழ்வதற்கு யார் விரும்பினாலும் அதற்கான விலையை முழுவதுமாக அளிக்க வேண்டும். இதில் எத்தகைய பேரம் பேசும் தன்மையும் இருத்தல் கூடாது. திருமணம் செய்து கொண்ட மனிதர்களும், அவர்கள் ஆன்மீக வாழ்வு குறித்து உள்ளார்ந்த அக்கறையுடன் இருந்தால் அவர்களும் சிறந்த தற்கட்டுப்பாட்டிற்குப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.638.*

புதிய ஏற்பாட்டில் ஏசுநாதர், மரணத்திற்குப் பிறகு ஆன்மாவின் வாழ்வு குறித்த ஒரு குறிப்பிடத்தக்க விவரத்தைக் கூறியுள்ளார். 'ஏனெனில் உயிர்த்து எழுந்தவர்களுள் யாருமே திருமணம் செய்து கொள்வது இல்லை. அவர்கள் விண்ணகத் தூதர்களைப் போல இருப்பார்கள்.'[1] நாம் மிகவும் அபூர்வ மாகத்தான் இறப்பிற்குப் பிறகு நம்முடைய வாழ்க்கையைக் குறித்து சிந்திக்கிறோம். மரணத்திற்குப் பிறகு உள்ள வாழ்வில் மனிதர்கள் திருமணம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெறுகிறார்களா? மரணத்திற்குப் பிறகு ஆன்மாவிற்கு என்ன ஆகிறது? எதிர்காலமானது, நிகழ்காலத்தைப் போன்றே அத்தனை உண்மையானது ஆகும். ஆனால் வெகுசிலரே அதைப் பற்றி கவலைப்படுகிறார்கள். நிகழ்கால வாழ்க்கையில் உள்ள ஈர்ப்புக்களால் மகிழ்ச்சியடைந்து, நாம் நம்முடைய வருங் கால வாழ்வைக் குறித்து மிகவும் அபூர்வமாகத்தான் எண்ணுகிறோம்.

இளைஞர்களும், யுவதிகளும் மனப்பூர்வமாக திருமண மாகாத வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பினால் துறவற வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பினால், அவர்களை ஊக்கப்படுத்தி உதவி செய்வது இல்லறத்தை மேற்கொண்டு இருப்பவர்களின் மற்றொரு கடமையாக உள்ளது. தூய அன்னையார் ஸ்ரீசாரதாதேவியார், ஒரு திருமணமாகாத மனிதன் பாதி விடுவிக்கப்பட்டவனாவான் என்று கூறுவார்.[2] பெரும்பாலான சமயங்களில் பெற்றோர் அவர்களுடைய எல்லாக் குழந்தைகளையும் திருமண வாழ்விற்கு இழுப்பதில் மிகவும் அக்கறையுடன் உள்ளனர். குழந்தைகளின விருப்பத்திற்கு மாறாகவும் செய்கின்றனர். ஸ்ரீராமகிருஷ்ணரின் முதன்மையான சீடர்களுள் ஒருவரான சுவாமி யோகானந்தருக்கு என்ன ஆயிற்று என்று உனக்குத் தெரியுமா? அவர் இளைஞனாக இருந்தபொழுது அவருக்குத் திருமணம் செய்து கொள்வதில் விருப்பமே இருக்கவில்லை. ஆனால்

1. பைபிள்—மேத்யூ, 22:30.
2. At Holy Mother's Feet, பக்கம், 367.

அவருடைய தாயாரின் ஓயாத தொந்தரவையும், கண்ணீரையும் தாங்க இயலாமல், அவர் இறுதியில் திருமணம் செய்து கொண்டார். எப்படியிருப்பினும் திருமணத்திற்குப் பிறகும் அவர் தூய்மையான வாழ்வையே மேற்கொண்டார். தன்னுடைய நேரம் அனைத்தையும் ஆன்மீகப் பயிற்சி செய்வதற்காகவே ஒதுக்கிக் கொண்டார். அதைப் பார்த்த அவருடைய தாயார் அவரிடம், 'இல்லற வாழ்வை உனக்கு மேற்கொள்வதில் விருப்பம் இல்லையெனின், ஏன் திருமணம் செய்து கொண்டாய்?' என்று கேட்டார். அதற்குக் கள்ளங்கபடமற்ற அந்த இளைஞன், தன்னுடைய தாயாரின் பொருட்டு தான் அதைச் செய்ததாகக் கூறினான். அதற்கு அவனுடைய தாயார், 'என் மகனே, யாராவது, திருமணம் செய்துகொள் என்று கூறுவதற்காகத் திருமணம் செய்து கொள்வார்களா? ஒவ்வொருவரும் அவரவருடைய சொந்த விருப்பப்படித் தான் திருமணம் செய்து கொள்கின்றனர்' என்று கூறினார். யோகின் இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். பல வீடுகளில் அப்படித்தான் நடக்கிறது. பெற்றோர் அவர்களுடைய குழந்தைகளை அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாகத் திருமணத்தில் இழுத்து விடுகின்றனர். அதன் பிறகு அவர்களை அவர்களுடைய சொந்த விதிப்படி விட்டு விடுகிறார்கள். பெரும்பாலான சமயங்களில் பெற்றோர், தங்களுடைய குழந்தைகளின் வாழ்வில் திருமணத்திற்குப் பிறகும்கூட தொடர்ந்து குறுக்கிடுகிறார்கள். மற்றும் அது வீடுகளில் சண்டை, சச்சரவு ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது. இயல்பாக எல்லா இளைஞர்களும், யுவதிகளும் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதற்கு விரும்புவதில்லை என்பது உண்மையாகும். பெரும்பாலோர் திருமணமாகாத நிலை குறித்தும், துறவறம் குறித்தும், தங்களுடைய மனங்களைக் குறித்து எதுவும் அறிந்து கொள்ளாமலே பேசுகிறார்கள் என்பதும் உண்மையாகும். ஆனால் எப்பொழுதுமே உள்ளார்ந்த விருப்பத்துடன் ஒரு சிறிய பகுதியினரான இளைஞர்களும், யுவதிகளும் தூய்மையான இதயத்துடனும் மனமார்ந்த விருப்பத்துடனும் தங்களுடைய

இதயத்தையும் மனத்தையும் கடவுளுக்கு மட்டுமே அர்ப்பிக்க விரும்புகின்றனர். அவர்களில் சிலரை, முற்றிலும் தூய்மை யான வாழ்வை ஒரு துறவி மடத்திலோ அல்லது அதைப் போன்ற வேறு இடத்திலோ மேற்கொள்வதற்கு ஏன் அனு மதிக்கக் கூடாது? ஏன் ஒரு சிலரை புனிதத்தன்மையின் தூய்மைப்பாடின் நறுமணத்தைத் துய்க்க அனுமதிக்கக் கூடாது?

இங்கு தூய அன்னையார் ஒருமுறை அவருடைய உடன் பிறந்தவரின் மகளிடம் கூறியதை எடுத்துக்காட்டாகக் கூறு வது தகைமை உடையது ஆகும். ஒருநாள் மானஸா என்னும் பெயரையுடைய இளைஞன் தூய அன்னையாரிடம் தீட்சை மற்றும் காவி உடுப்பையும் பெறும் விருப்பத்துடன் வந்தான். தூய அன்னையார் மகிழ்ச்சியுடன் அவனுடைய கோரிக்கையை நிறைவேற்றினார். அது அவனை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்தது. மாலை நேரத்தில் அவன் அவ ருடைய வீட்டில் அமர்ந்து கொண்டு தெய்வீக அன்னையைப் போற்றும் பாடல்களைப் பாடிக் கொண்டு இருந்தான். தூய அன்னையாருக்கும் அந்தப் பாடல்கள் மிகவும் பிடித்தது. அவருடைய உடன் பிறந்தவரின் மகள்களான ராது, மாகு, நளினி, அவருடைய உடன் பிறந்தவரின் மனைவி மற்றும் வேறு சிலர் பக்தர்களும் அவருடன் இருந்தனர். அப்பொழுது அவருடைய உடன் பிறந்தவரின் மனைவி, ‘இந்த இளை ஞனை அன்னையார் சாதுவாக்கி விட்டார்’ என்று கூறினார். அதற்கு மாகு, ‘அது உண்மைதான். நம் அத்தை என்ன செய் திருக்கிறார் என்று பார். இந்த இளைஞர்களை அத்தை துறவறத்தை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்கிறார். அவர் களுடைய பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டு இவர்களை வளர்த்துள்ளனர். அவர்களுடைய எல்லா எதிர்பார்ப்புக்களும் அவர்களுடைய குழந்தைகளையே மையமாகக் கொண் டுள்ளது. அவர்கள், அவர்களுடைய குழந்தைகளைக் குறித்த எத்தனை நம்பிக்கைகளை மனத்தில் கொண்டிருப்பார்கள்? இப்பொழுது அவ்வனைத்தும் தகர்ந்துவிட்டன. இப்பொழுது இந்த இளைஞன் என்ன செய்வான்? ரிஷிகேஷிற்குச் சென்று

தன்னுடைய உணவிற்காகப் பிச்சை எடுப்பான் அல்லது மருத்துவமனையில் நோயாளியின் அழுக்கையும், கழிவுப் பொருளையும் தூய்மை செய்வான். ஏன்? திருமணம் செய்து கொண்டு நிலையான வாழ்க்கையை மேற்கொள்வதும் சமயத்தின் ஒரு வடிவமல்லவா. நல்லது, அத்தை இவ்விதம் நீங்கள் இந்த இளைஞர்களை சாதுக்களாகச் செய்து கொண் டிருந்தால், மஹாமாயை உங்கள் மீது கோபம் கொள்வாள். அவர்களுக்குச் சாதுக்கள் ஆக வேண்டும் என்றால், அவர்கள் அவர்களுடைய சொந்த இசைவிற்கு ஏற்ப அவ்விதம் ஆகட்டும். அவர்கள் துறவறத்தை மேற்கொள்வதற்கு நீங்கள் ஏன் கருவியாக இருக்க வேணடும்?' என்று தன் கருத்தைக் கூறினாள். அதற்குத் தூய அன்னையார் பதிலிற்கு, 'மாகு இங்கு பார். இவர்கள் அனைவரும் தெய்வீகக் குழந்தைகள். அவர்கள் இவ்வுலகத்தில் முகரப்படாத மலர்களைப்போல, தூய்மையான வாழ்க்கையை வாழ்வார்கள். அதைவிடச் சிறந்தது எது இருக்க இயலும்? இந்த உலக வாழ்க்கை எந்த வகையான மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதை நீயே பார்த்திருக்கிறாய். இத்தனை நாட்களாக நீ என்னிடமிருந்து எதைக் கற்றுக் கொண்டு இருக்கிறாய்! உலக வாழ்க்கையில் எதற்காக அத்தனை அதிகமான ஈர்ப்பு? எதற்காக அத்தனை அதிகமான விலங்கின் போக்கு? அதிலிருந்து எந்த வகையான இன்பத்தை நீ பெறுகிறாய்? தூய்மையான வாழ்க்கையின் லட்சியத்தை உன்னால் கனவிலாவது எண்ணிப் பார்க்க இயலுமா? உன்னால் உன் கணவருடன் இப்பொழுதாவது அண்ணன்-தங்கையைப் போல வாழ இயலுமா? பன்றியைப் போன்ற வாழ்வு வாழ்வதற்கு ஏன் விரும்புகிறாய்? இந்த உலகத்தின் வேதனையானது என்னுடைய எலும்பு களில் சித்திரவதை செய்துகொண்டு இருக்கிறது' என்று கூறினார்.[1]

பாலியல் உந்துதல்களைப் பல ஆண்டுகளுக்கு முழுமை யாகக் கட்டுப்படுத்த முடிந்தவர்களும் மற்றும் கண்டிப்புடன்

1. சுவாமி தபஸ்யானந்தர், Sri Sarada Devi the Holy Mother (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 1969) பக்கம் 417-418.

கூடிய தற்கட்டுப்பாட்டை நடைமுறையில் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் பின்பற்றுபவர்களும் வியக்கத்தக்க வகையில் ஆக்க பூர்வமான சக்தியை உயர்ந்த மட்டங்களில் பெறுகிறார்கள். உடலளவில் கூட அவர்கள் மட்டுமே உண்மையாகவே வாழ்க்கையைத் துய்க்கிறார்கள். ஏனெனில் அவர்கள் மட்டுமே அவர்களுடைய உடல் மற்றும் மனங்களின் எஜமானர்களாகத் திகழ்கிறார்கள். அவர்களால் அவர்கள் விரும்பும் வகையில் அவற்றை இயக்க இயலும். ஒரு நல்ல குதிரை வீரனுக்கு அவனுடைய கட்டளைகளை அக்குதிரையைப் பின்பற்றச் செய்வதிலும் மிகப் பெரிய மகிழ்ச்சி உள்ளது. உலகியல் நாட்டம் உடைய மனிதர்களால் முற்றிலும் தூய்மையான ஒரு மனிதன், அவன் உடலிலிருந்து பெறும் மகிழ்ச்சியின் அளவைக்கூட அறிந்து கொள்ள இயலாது. மனத்தைக் குறித்து கூறவே வேண்டாம்.

திருமணமாகாதவர்களுக்கு எச்சரிக்கை

ஸ்ரீராமகிருஷ்ணர் எப்பொழுதும் அவருடைய சீடர்களை, பெரும்பாலும் இளைஞர்களை, ‘பெண் மற்றும் பொன்னின் கண்ணிகளுக்கு எதிராக எப்பொழுதும் எச்சரிக்கை செய்வார். ஆனால் அவரிடம் அறிவுரை பெறுவதற்காக வரும் பெண்மணிகளிடம் அவர், உங்களுக்கு மிகவும் நெருங்கிய உறவினராக இருந்தாலும், ஒரு ஆணின் சூழ்ச்சிகள் குறித்து எச்சரிக்கையுடன் இருங்கள்’ என்று கூறுவார். எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் முழுமையான தூய்மையின்றி ஒருவரால் ஆன்மீக வாழ்வில் எதனையும் பெற இயலாது. சாதகனுடைய முழுமையான முன்னேற்றத்தை அவன் அடைந்துள்ள தூய்மைப்பாடின் அளவு முடிவு செய்கிறது. ஒவ்வொருவரும் மறு பாலாரைச் சேர்ந்த ஒவ்வொருவரிடமும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். உண்மையான தூய்மைப்பாடு என்பது பால்வேறுபாடு சார்ந்த புணர்ச்சியைத் தவிர்ப்பதை விட அளவுகடந்த நிலையில் மேம்பட்டதாகும்..

திருமணமாகாமல் இருக்கும் அனைவரும் யாராக இருப் பினும், ஆணாக இருப்பின் பெண்ணின் தொடர்பையும், பெண்ணாக இருப்பின் ஆணின் தொடர்பையும் தவிர்க்க வேண்டும் மற்றும் எப்பொழுதும் விழிப்புணர்வுடன் பாலியல் என்னும் கருத்திற்கு எதிராக உள்ள எண்ணங் களையே எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். முக்கியமாக, ஆன்மீக வாழ்வின் தொடக்க காலத்தில், பலரிடம் பால்இயல் லூக்கம் வலிமையாக வளரும். நாம் நிலத்திற்கு நன்கு நீர் பாய்ச்சி, உரம் இடும் பொழுது, முதலில் நாம் வளர்க்க விரும்பிய செடிகளுடன் கிளைச் செடிகளும் நன்றாக வள ரும். நாம் இந்தக் கிளைச் செடிகளை அவை தலை தூக்கும் பொழுதே வேருடன் பிடுங்கி எறிய வேண்டும். இல்லை எனின் அவை நல்ல செடிகளை அழித்துவிடும். நாம் முதல் சில ஆண்டுகள் முயற்சி செய்யும் பொழுது, நாம் நம்மை யாருடன் தொடர்புபடுத்திக் கொள்ள அனுமதிக்கிறோம் என்பதைக் குறித்து மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். அத்தகைய அறி வுரையைக் கேட்பதற்கு மேம்பட்ட நிலையில் இருக்கிறாய் என்று ஒரு பொழுதும் உன்னை மிகவும் உறுதியாய் இருக் கிறாய் என்று நம்ப வேண்டாம். மற்ற பாலாருடன் நேரம் செலவிடுவதை அவர்கள் மிகவும் தூய்மையுடையவர்களாக இருப்பினும் தவிர்க்க வேண்டும். நீ உண்மையான உயர் வடைந்து அதனால் உன்னுடைய முழுமையான இருப்பும் மாறுபடுவதற்கு முன்னால், உன் ஒருமுகப்பட்டதன்மை, உன் பாலியல் சார்பான கற்பனைகளையும் பாதிக்கிறது. மற்றும் மேலோட்டமாக தீங்கற்ற படங்களையும் மேலும் ஒளிமய மாகவும் உயிருள்ளதாகவும் செய்கிறது. மற்றும் வெளிப் படையாக தீங்கற்றதாக இருக்கும் உணர்ச்சிகளை மிகவும் வலிவு உடைய பேரார்வமாகச் செய்து விடுகிறது. பாலியல் எழுச்சி ஏதோ பெரிய அளவில் இருக்க வேண்டும் என்னும் அவசியம் இல்லை. சூட்சுமமான உருவங்களின் தூண்டு தல்கள், பெரிய அளவில் உள்ளதைவிட மோசமானவை. ஏனெனில் தொடக்க கட்டத்தில் இருப்பவனுக்கு

சூட்சுமமானதைப் பெரிய அளவில் இருப்பதைப் போல தெரிந்துகொள்ள இயலாது. பல நேரங்களில் நான் சாதகர்களிடம், இந்தக் குறிப்புக்களைப் பற்றிய கவனமின்மையைக் கண்டு இருக்கிறேன். மற்றும் பலர் இதனால் வீழ்ச்சி அடைந்துள்ளனர்.

நாம் தொடர்பு கொள்ள விரும்புபவர்களைத் தேர்ந்து எடுப்பதில் கவனமின்மையால் ஏற்படும் விளைவுகளைக் குறித்து விளங்கும், ஒரு பொருத்தமான வேடிக்கையான கதை உள்ளது. ஒருமுறை ஒரு ஒட்டகம் ஒரு அரேபியரின் கூடாரத்திலிருந்து கதவு வழியாக தன்னுடைய மூக்கை மட்டும் நுழைத்தது. முதலில் அந்த அரேபியர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். ஆனால் அந்த ஒட்டகம், 'நான் ஒரு கணத்திற்கு மட்டுமே என்னுடைய மூக்கை உம்முடைய அறையில் நுழைக்கிறேன். வேறு ஒன்றுமில்லை' என்று கூறியது. ஆனால் உண்மையாக அந்த ஒட்டகம் மெதுவாக அதன் அழகற்ற தலையையும் மற்றும் அதன் முழு உடலையும் அந்தக் கதவின் வழியாக நுழைத்தது. ஆனால் அதன் உரிமையாளர், அவருடைய அறையில் அது இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொழுது, 'உன்னுடைய வீட்டில் நான் இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையெனின் நீ வெளியேறுவது நல்லது. ஆனால் நான் செல்ல மாட்டேன்' என்று கூறியது. காமமானது சில நேரங்களில் அந்த முறையில் 'கடமையின்' உருவில், 'அன்பின்' உருவில், 'தொண்டின்' முறையில் உள்ளே வந்து விடுகிறது. நம்முடைய மனமானது எப்பொழுதும் அதனுடைய உண்மையான உள் எண்ணத்தைப்பற்றி நாம் அறிந்து கொள்ள முடியாதபடி நம்மை ஏமாற்றுகிறது. எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் தூய்மையில்லாமல், ஆன்மீக வாழ்வில் எதையும் சாதிக்க இயலாது. மனத்தின் அடி உணர்வுத்தளம் அல்லது தன்உணர்வு அற்ற மனம் எப்பொழுதும் நமக்குத் தீங்கு செய்ய விரும்புகிறது. மற்றும் அது அதைத் திறமையுடன் செய்வதற்கு ஏற்ற ஒரு சந்தர்ப்பத்திற்காகப் பொறுமையுடன் காத்துக் கொண்டு இருக்கிறது. நீ அவ்வப்பொழுது அதை நன்றாகத் திட்டிக் கொண்டிருக்க

வேண்டும். மனத்தினுள் சக்தி வாய்ந்த யோசனைகளை செலுத்திக் கொண்டு, அதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். மொத்தத்தில் நீதான் எஜமானனே தவிர மனம் இல்லை. ஒட்டகம் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்காமல் இருக்க வேண்டும். அப்படிச் செய்தாய் எனின் அதை மீண்டும் வெளியேற்றுவதில் உனக்குப் பெரிய கஷ்டம் ஏற்படும்.

ஆண்—பெண் தத்துவத்தைக் கடந்தநிலை (இயற்கை அமைதியைக் கடந்தநிலை)

உன்னுடைய மனத்தில் எந்தப் பெண்ணையாவது குறித்த எண்ணம் ஏற்பட்டால், அதை உடனடியாக தூய அன்னையாருடைய அல்லது உன்னுடைய தாயாரின் வடிவத்துடன் தொடர்புபடுத்த வேண்டும். பாலியல் குறித்த எண்ணத்தை உடனேயே அழித்துவிட வேண்டும். மனத்தளவில் உன்னைப் பெண்களுடன் தொடர்பு படுத்திக் கொள்வதற்கும் அனுமதி அளிக்காமல் இருக்க வேண்டும். தந்திர சாத்திரங்களில் எல்லாப் பெண் வடிவங்களும் உமாவுடனும் எல்லா ஆண் வடிவங்களும் சிவனுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும் என்னும் அறிவுரை உள்ளது. ஆன்மீக வாழ்வில் இந்த மனப்பான்மையானது பயன்தரக்கூடிய தகுதியைப் பெற்று விளங்குகிறது. சங்கராச்சாரியரால் எழுதப்பட்ட ஒரு புகழ்பெற்ற வடமொழி சுலோகம் உள்ளது.

'பார்வதி என்னுடைய அன்னை. சிவன் என்னுடைய தந்தை. சிவ பக்தர்கள் என்னுடைய நண்பர்கள். இந்த மூவுலகமும் என் சொந்த நாடு ஆகும்.'[1]

கடவுளைச் சாதகன் தன்னுடைய தந்தையாகவும், தாயாகவும் காண்பது, உலகத்தில் எந்த இடத்திலும் பாதுகாப்பானது ஆகும். ஆனால் தொடக்க கட்டத்திலிருப்பவன் இதைப் பயன்தரத்தக்க வகையில் செய்ய இயலாது. எனவே அவன்

---

1. மாதா மே பார்வதீ தேவீ பிதா தேவோமஹேச்வர: ।
பாந்தவா: சிவபக்தாச்ச ஸ்வதேசோ புவனத்ரயம் ॥
—சங்கராச்சாரியர், அன்னபூர்ணா ஸ்தோத்திரம், பாடல் 12

மற்ற பாலாருடன் தொடர்பு கொண்டு பழகும் பொழுதும் அவர்களுடன் பேசும் பொழுதும் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பாலியல் குறித்த எண்ணங்களின் ஆற்றலை மட்டுப் படுத்திப் பயனை ஏற்படுத்தும் வழி வேறொன்றும் உள்ளது. பாலியல் வாழ்வு என்றால் என்ன என்றே தெரியாத சில பெண்களைப்பற்றியும் மற்றும் சில ஆண்களைப்பற்றியும் எண்ண வேண்டும். இத்தகைய கற்பனையானது அதிகமான அளவில் பயனை ஏற்படுத்தும். உனக்கு அத்தகைய தூய்மை யான மனிதர்கள் யாரையும் தெரியவில்லை என்றால் ஸ்ரீராம கிருஷ்ணரைப்பற்றியோ அல்லது தூய அன்னையாரைக் குறித்தோ நினைக்க வேண்டும். அவர்கள் பிறந்ததலிருந்தே, பாலியலின் தூய்மையின், அதன் எல்லாக் கூறுகளின் இயல் புருவாக இருந்தவர்கள் ஆவார்கள். நாள் தோறும் அத்தகைய எண்ணத்திலேயே கருத்து ஊன்றி இருக்க வேண்டும். மற்றும் அதை உன்னுடைய ஆன்மீகப் பயிற்சியின் ஒரு பகுதியாகவும் கொள்ள வேண்டும். அத்தகைய தூய்மையான உருவின் மேன்மையான இயற்பண்புகளில் உன் அகங்காரம் மெல்ல மூழ்கியிருக்கும் மற்றும் உரிய காலத்தில் முழுமையான மாற்றத்தையும் அடையும்.

ஆண் இயல்பமைதியையும், பெண் இயல்பமைதியை யும் கடந்து, எங்கு முற்றிலும் பாலியல் என்பது இல்லையோ, அந்த மட்டத்தை அடைவதுதான் வாழ்க்கையில் நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். வாழ்க்கையின் கீழான மட்டங்களில் நாம் ஆண் என்றும், பெண் என்றும் காண் கிறோம். ஆனால் மேல்மட்டங்களில் பாலியலைக் குறித்த எல்லாக் கருத்துக்களும் மறைந்துவிடும். மற்றொரு சுலோகத் தில் சங்கராசாரியார்,

'ஓ சிவனே, நீயே என் ஆன்மா. தெய்வீக அன்னையே என் மனம். என்னுடைய பிராணன்கள் உங்களுக்குப் பணி புரிபவர்கள். என் உடல் நீங்கள் வாழுமிடம். இந்தப் புலன் களுடன் கூடிய தொடர்புகள் உன்னைப் பூஜிப்பதன் ஒரு பகுதியாகும். என்னுடைய உறக்கம் என்பது உன்னிடம்

சமாதி நிலையில் இருப்பது ஆகும். நான் கூறும் எல்லாச் சொற்களும் உனக்குச் சுலோகங்கள் ஆகும். நான் எந்த வகையான நடவடிக்கைகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டாலும் ஓ இறைவனே, அது உன்னைத் தொழுவது ஆகும்.'[1]

ஒரு வீரனால் மட்டுமே உண்மையை ஏற்க இயலும்

ஒரு சாதகனின் வாழ்வில் பாலியல் உணர்வு என்பது ஒரு முக்கியமான பங்கினை வகிக்கிறது. அதனால் அது ஒரு பொழுதும் விழிப்பு அடைதல் கூடாது. அவன் ஒரு படத்தைப் பார்த்தாலும் கூட விழிப்பு அடைதல் கூடாது. 'நான் ஒரு ஆண்', 'நான் ஒரு பெண்' என்று ஒரு பொழுதும் எண்ணாமல் முதலில் உன் உடல் உணர்வையும், பாலியல் உணர்வையும் குறைத்துக்கொள்ள வேண்டும். மற்றும் 'நான் ஒரு ஆண்', 'நான் ஒரு பெண்' என்று எண்ணாமலிருப்பதில் எந்த அளவிற்கு வெற்றி அடைகிறாயோ, அந்த அளவிற்கு நீ ஒரு புதிய மனநிலைப் போக்கையும், எதிர் விளைவுகளையும் பெறுவாய். இந்த மாறுதல் முதலில், தங்களை ஆண் என்றும், பெண் என்றும் உணர்பவர்களுக்கும், அவர்களுடைய உணர்வுகளை உடலை மையப்படுத்தியே கொண்டிருக்கும் ஒரு சிலருக்கும் மோசமான அமைதி குலைந்த நிலையை ஏற்படுத்தும். இத்தகைய மனிதர்களுக்கு இந்த உண்மையைச் சொல்லக் கூட முடியாது. நாம் அந்த உண்மையின் முனைப்பை, அது சிறிய அளவிலே இருக்கும்படியாகக் குறைக்க வேண்டும். மற்றும் எது எஞ்சியுள்ளதோ, அதையே செயலளவில் குறிக்கோளாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த விஷயங்கள் பற்றிய முழுமையான உண்மையானது உண்மையாக ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள சாதகர்களுக்கு மட்டுமே சொல்லப்பட வேண்டும்.

---

1. ஆத்மா த்வம் கிரிஜா மதி: ஸஹசரா: ப்ராணா: சரீரம் க்ருஹம்
பூஜா தே விஷயோபபோகரசனா நித்ரா ஸமாதிஸ்திதி: ।
ஸஞ்சார: பதயோ: ப்ரதக்ஷிணவிதி: ஸ்தோத்ராணி ஸர்வா கிரோ
யத்யத்கர்ம கரோமி தத்ததகிலம் சம்போ தவ ஆராதனம் ॥
—சங்கராச்சாரியர், சிவமானஸ பூஜா, சுலோகம் 4.

சுவாமி விவேகானந்தர் அவருடைய 'துறவியின் பாடல்' என்னும் கவிதையில் ஊக்க எழுச்சியுடன்,

'உளமே காமம், புகழ்ப்போதை
ஓங்கிக் கிடக்கும் பொருளாசைக்

களமாய் இருக்கும் காலத்தில்
காணுவதெப்படி உண்மையினை

மாதினைத் தனது மனைவியென
கருதி நடக்கும் மனிதனெந்தப்

போதிலும் பூரணமானவனாய்ப்
போற்றிடத் தக்கவன் ஆவதிலை.

தனதெனச் சிறுபொருள் ஆனாலும்
தன்மனத் தெண்ணி இருப்பவனும்

சினமதை அடக்கத் தெரியாமல்
சிக்கிக் கொண்டு தவிப்பவனும்

மாயை என்னும் பொல்லாத
வாசல் கடக்க மாட்டார்கள்

ஆகையினாலே அவற்றையெல்லாம்
அறவே அகற்றி எறிந்திடுவாய்

உறுதியை உடைய நற்றுறவீ
ஓம் தத் ஸத் ஓமெனச் சொல்லிடுவாய்''[1]

என்று கூறியுள்ளார்.

இந்த உண்மைகள் எல்லாம் பெரும்பாலான மனிதர்களுக்கு ஏற்க இயலாதவைகளாக உள்ளன. அவர்களால் அவற்றைத் தாங்க இயலாமல் அமைதி அற்றவர்களாகின்றனர். எனவே குறிப்பிட்ட காலத்திற்கு உண்மையைக் குறித்து வீரியம் குறைந்த அளவுகளிலும், வீரியம் குறைந்த ஊசி மருந்துகளையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். ஆனால் ஒருநாள் அனைவரும் அவற்றை எதிர்கொள்ள வேண்டும்.

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.20

மற்றும் இவை அவர்களுடைய இதயங்களை உடைத்தாலும் பொருட்படுத்தாமல் அவரவர்களுடைய அழைப்பைப் பின் பற்ற வேண்டும். ஒரு வீரனால் மட்டுமே உண்மையை ஏற்க இயலும்.

உண்மையான ஆன்மீக வாழ்க்கையில், பலவீனமானவர்களுக்கு இடமில்லை. உண்மையான சமயம், உண்மையான வேதாந்தம் ஒரு வேடிக்கை அல்ல.

உன் மனத்தின் சூழ்ச்சியைக் குறித்து எச்சரிக்கையுடன் இருப்பாய்

எல்லா மருட்சிகளுமே மனச்சார்புடையனவாய் விளங்குகின்றன. பொதுவாக நீ என்ன நினைக்கிறாய் என்பதுதான் நீ என்ன செய்கிறாய் என்பதைவிட தொல்லை அளிப்பதாக உள்ளது. எனவே உன்னுடைய கற்பனைகளைக் குறித்து நீ எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மற்றவர்களின் அதிர்வலைகள் உன்னை எப்படிப் பாதிக்கின்றது என்பதைக் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலும் மேலும் உயர்ந்த மெய்யுணர்வு நயத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். நான் தூய்மையற்ற எதையும் செய்யவில்லை என்று கூறினால் போதாது. மற்றவர்கள் உன்னைக் கவர்ந்தாலும், கவரா விட்டாலும், மற்றவர்களுடன் சேர்ந்து இருக்கும் பொழுது நீ என்ன உணர்கிறாய், நீ என்ன நினைக்கிறாய் என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். ஏதாவது ஈர்ப்போ அல்லது வெறுப்போ ஏற்பட்ட கணத்திலேயே எச்சரிக்கையுடன் இருப்பாய். உன்னை மருட்சி அடையச் செய்யும் அனைவரையும் ஒரு பாதுகாவலான தொலைவில் இருந்து கொண்டே வணங்குவாய். நுட்பமாக நோக்கினால் எந்த ஈர்ப்பும் தீமையற்றது அல்ல. இந்த விஷயத்தில் ஒரு பொழுதும் உன்னை ஏமாற்றிக்கொள்ளாமல் இருக்க வேண்டும். பழைய தூய்மையற்ற தொடர்புகளை, அவற்றைக் கவனிக்கும்படிச் செய்பவர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றை மீண்டும் உன் மனத்தில் துளிர்ப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. நீ இந்த அறிவுரையைப் பின்பற்றி, அதற்கு எதிரான வலிமையான

எண்ண ஓட்டத்தை எழுப்பும் செயலை மேற்கொண்டால், நீ உன்னுடைய கவனமற்ற தன்மையால் உன் மனத்தில் புதை வதற்கு அனுமதித்திருந்த தூய்மையற்ற பதிவுகளை உன்னால் படிப்படியாகத் துடைத்து அழிக்க இயலும். அப்பொழுது மட்டுமே உன்னுடைய ஆன்மீக வாழ்வானது ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பாதுகாப்பைப் பெற இயலும். தொடர்ந்து மாறுபட்ட எண்ண ஓட்டங்களை எழுப்புவதன் மூலம் மருட்சிகள் பலகீனம் அடைந்து மற்றும் இறுதியில் புதிய ஆன்மீக எண்ணங்கள் முழுவதுமாக பழைய தொடர்புகளை யும், நினைவுகளையும் அகற்றிப் பதிலாக அவை இடம் பெறுகின்றன. நீ அறிவுரையைக் கண்டிப்புடன் பின்பற்றி னால் மட்டுமே இவ்விதம் ஆக இயலும். நீ உன் மனத்தில் திடீரென்று ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவிக்க இயலாது. தொடக்க காலத்தில் இருக்கும் சாதகனுக்கு அதை முயற்சிப் பதும்கூட ஆபத்தானது ஆகும். எனவே அவன் முதலில் நல்ல எண்ணங்களைப் பேணி உருவாக்கிக் கொள்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். எண்ண மட்டத்தைக் கடந்து மேம்பட வேண்டும் என்னும் கேள்வியானது வெகு காலத்திற்குப் பிறகுதான் எழுகிறது.

மனத்தைக் கட்டுப்படுத்துவது என்பது பழக்கத்தின் மூலம் படிப்படியாகத்தான் வரும். நீ உன்னுடைய வழி முறைகளில் கவனமின்றி இருந்தால், உன்னால் அதை அடைய இயலும் என்று நீ நம்ப இயலாது. நீ வேறு எந்த மனிதரின் ஈர்ப்பையாவது உன் மீது தாக்கத்தை ஏற்படுத்த அனுமதித்தால், நீ என்ன செய்தாலும் உன்னால் ஒரு பொழுதும் மனக்கட்டுப்பாட்டை அடையவே இயலாது. சிலகாலத்திற்குப் பிறகு தீங்களிக்கும் வகையில் வீழ்ச்சியை அடைய நேரிடும். நீ எந்தப் பெண்ணையாவது உன்னை ஆண் என்ற முறையில் சந்திக்க அனுமதித்தால் நீ எந்தப் பெண்ணையாவது உன்னை ஈர்ப்பதற்கு அனுமதித்தால் மனத்தைக் கட்டுப்படுத்துவது என்பது ஐயத்திற்கு இட மளிப்பது ஆகும். நீ எப்பொழுதும், ஒவ்வொரு பெண்ணும் உன்னை பாலியல் மட்டத்தில் அணுக இயலாது மற்றும்

அவளிடம் உள்ள பெண்ணை நீ காணவில்லை என்றும் அந்தப் பெண்ணிடம் உனக்கு ஈடுபாடு இல்லை என்று உணரும்படியும் நடந்துகொள்ள வேண்டும், ஆனால் தொடக்க நிலையில் உள்ள சாதகனுக்கு, மற்ற பாலாரைச் சார்ந்தோரை எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குத் தவிர்ப்பதும் மற்றும் மற்ற பாலாரைச் சேர்ந்தவரிடம் நெருங்கிப் பழகாமல் இருப்பதும்தான் ஒரே வழியாகும். மற்றவர்கள் நம் வழியில் குறுக்கிட்டால் அவர்களுடைய இதயங்கள் பிளவுபட்டாலும் நாம் அவர்களைப் புறக் கணித்துவிட வேண்டும். நாம் இதற்கு முன்பு எந்த அளவிற்கு நெருக்கமாக இருந்திருந்தாலும் நம் பாதைகள் பிரியத்தான் வேண்டும். ஆபத்தை ஏற்படுத்தும் எந்த அன்பும், எந்த விலை கொடுத்தாவது தவிர்க்கப்பட வேண்டும். இதைக் குறித்துப் பெரிய அளவில் உணர்ச்சி வசப்படத் தேவை யில்லை. இல்லையெனின் நீ உன்னுடைய மடமைக்காகவும் அகங்காரத்திற்காகவும் தகுந்த விலையை கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

திருமணம் ஆகாத இளைஞர்களும், யுவதிகளும் அவர் களுடைய நட்பைப் பற்றி மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவர்கள் பொதுவாக, தங்களுடைய உண்மை யான செயல் நோக்கங்களை அடையாளம் கண்டு கொள் வதற்கு, மிகவும் உணர்ச்சி வசப்பட்டவர்களாகவும், இள வயது உடையவர்களாகவும் திகழ்கிறார்கள். பெரும்பாலும் பாலியல், கடமை என்னும் போர்வையில் மறைந்துகொண்டு விடுகிறது. ‘அவனிடம் அல்லது, அவளிடம் அன்பாக நடந்து கொள்வது என் கடமையாகும்’ என்னும் எண்ணம் உன் னுள்ளே எழும்பொழுது நீ அதை ஆராய்ந்து பார்க்க வேண் டும். மாறுபடாமல் அது பாலியலைத்தவிர வேறு ஒன்றும் இல்லை. ஏதாவது ஒரு நுட்பமான கைப்பற்றும் தன்மை யுடன், நுட்பமான சாக்குபோக்குகளைக் கண்டுகொண்டு உன்னை ஒரு குறிப்பிட்ட மனிதனாகப் பற்றிக்கொள்ள வரு வதைக் காண்பாய். முதலில் நீ ஒட்டகத்தின் மூக்கை மட்டும் காண்பாய். உன்னை நீ ஒருபொழுதும் உன் மனத்தின்

கண்ணியில் மாட்டிக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. 'ஓ நீ என்னை விட்டுப்பிரிந்தால் என் இதயம் பிளந்துவிடும்' என்பதை நீ கேட்கக் கூடும். சில நிலைகளில் இதயம் பிளவுபடுவதை நீ அனுமதிக்க வேண்டி வரக்கூடும். மற்றொரு மனிதர், ஆன்மீக வாழ்விற்குத் திரும்புவதற்கு விரும்பவில்லை எனின் மற்றும் உன்னை அவ்வாறு செய்வதிலிருந்து தடுக்கவும் விரும்பினால் அத்தகைய மனப்பான்மை அவசியமானதாகும். அத்தகைய மனிதர்களுக்காக நீ பரிவு காட்டலாம் மற்றும் பிரார்த்தனை செய்யலாம். ஆனால் உங்கள் பாதைகள் பிரியத்தான் வேண்டும். இல்லையெனில், நீங்கள் இருவருமே உலக வாழ்க்கையில் மூழ்கி விடுவீர்கள். உனக்கு மிகப்பெரிய அளவில் மன உறுதி இருக்க வேண்டும். நீண்ட காலத்திற்குப் பிறகுதான் உன்னால் வெற்றி அடைய இயலும். ஆனால் முயற்சியானது விடாப்பிடியாகவும், தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட வேண்டும். மருந்தை அதன் சுவையானது வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. ஆனால் நோயாளி குணமடைய வேண்டும் என்று விரும்பினால் அதை எடுத்துக் கொள்ளவே வேண்டும்.

திருமணமாகாதவர்களுக்கான அறிவுரை (தொடர்ச்சி)

பால்தன்மை சார்ந்த தீவிரமான இத்தகைய மனிதர்களை நீ தினமும் சந்திப்பதால் உன்னுடைய ஆன்மீக வாழ்வை நீ தீவிரமாக்கிக் கொள்வது உனக்கு மிகவும் கஷ்டமானதாக இருக்கும். எல்லா ஆபத்தான மண்டலங்களையும் தவிர். மற்றும் அத்தகைய 'சுதந்திரமான' மனிதர்களையும் தவிர்க்க வேண்டும். அவர்கள் சுதந்திரம் என்று கூறுவது மோசமான அடிமைத்தனமே, வேறு ஒன்றும் இல்லை. உன்னுடைய பாலாரில் உனக்குத் தூய்மையான மனிதர்கள் கிடைக்கவில்லை எனின், எல்லாத் தொடர்புகளையும் தவிர்த்து கடவுளுடன் தொடர்பு கொண்டு தனியாக இருக்க வேண்டும். இதுதான் திருமணமாகாமல் உள்ள ஆணிற்கும் பெண்ணிற்கும் விடுதலைக்கு உரிய ஒரே வழியாகும். மற்ற

பாலாரைக் குறித்துப் பேசுவது எல்லாவற்றையும் மற்றும் பாலியல் குறித்த தலைப்புக்களில் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். பாலியல் சார்ந்த ஈர்க்கும் எத்தகைய படங்களைப் பார்ப்பதையும் தவிர்க்க வேண்டும். அத்தகைய தலைப்புக் களைக் கொண்ட புதினங்களையும் (Novels) அல்லது புத்தங் களையும் படிக்க வேண்டாம். பாலியல் தொடர்பாக வரும் நாடகங்களையும் பார்க்க வேண்டாம். உன் உள்ளே பலப் போட்டி நடந்துகொண்டிருக்கும்வரை, வெளிப்புற பாலியல் தூண்டுதல்களைத் தவிர்க்க வேண்டும். சாதனை செய்து கொண்டிருக்கும் காலத்தில் பாலியல் தூண்டுதல்களை எந்த வகையிலாவது ஏற்படுத்தும் பணி முறைகளையோ அல்லது அத்தகைய வாசிப்பையோ எச்சரிக்கையுடன் தவிர்க்க வேண்டும். நாம் இதைச் செய்யவில்லை எனின், மேம்பட்ட வகையைச் சார்ந்த பயிற்சிக்கு நம்மால் ஒருபொழுதும் அதற்குத் தேவையான தூய்மைப்பாடை அடைய இயலாது. மற்றும் கட்டாயமாக எப்பொழுதாவது ஒரு சமயத்தில் நாம் துயரத்திற்கு ஆட்படுவோம். அதற்குப் பிறகு நமக்கு விடுதலையோ அல்லது அச்சமற்ற தன்மையோ இருக்காது. அக்கட்டத்தில் நம்மால் ஒரு மனிதனின் முழுமை யான உயரத்திற்கு உயர இயலாது. நாம் எப்பொழுதும் ஏறத் தாழ வளர்ச்சியடைந்த மனங்களையுடைய விலங்குகளாகவே இருப்போம்.

திருமணமாகாத ஆண்களும் பெண்களும் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியத்தை விடாமல் நிலை நிறுத்திக் கொள்ள விரும்புபவர்கள், இங்குக் கொடுக்கப்பட்டுள்ள, ஒரு கிறிஸ்தவத் துறவியின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை அறிந்துகொண்டால், இது மிகவும் படிப்பினையை அளிக்கும் வகையில் உள்ளது. ஒருநாள் அந்த துறவியின் சகோதரர் களால் ஒருவர் ஒரு பெண்ணுடன் கைக்குலுக்கியதற்காகக் குற்றம் சாற்றப்பட்டு, கட்டளைக் குருக்கள் கூடும் இடத் திற்குக் கொண்டுவரப்பட்டார். அவர் மிகவும் மதிப்பு வாய்ந்தவர், மிகவும் தூய்மையானவர், பக்தி உடையவர் என்று மன்றாடினார். கட்டளைக் குருக்கள் கூடும் இடத்தில்

தலைமை தாங்கிக் கொண்டிருந்த அந்த உயர்ந்த துறவி, 'மழை சந்தேகத்திற்கு இடமின்றி நல்லது. பூமியும் நல்லதுதான். இருப்பினும் அவை கலந்துவிட்டால் அவை சேறை உருவாக்கு கின்றன. அது நல்லது இல்லை. அதைப்போல, ஆண் களுடைய மற்றும் பெண்களுடைய கைகள் நல்லவையாக இருப்பினும், அவை கவனமற்ற முறையில் சேர்க்கப்பட்டு இருந்தால், எண்ணத்திலும், அன்பிலும் பெரிய தீங்கு ஏற் படலாம்' என்று மூடி மழுப்பாமல் கூறினார். திருமணமாகாத வர்களுக்கு இந்தக் கதை ஒரு நல்ல படிப்பினையாக இருக் கும். எப்பொழுதுமே ஒரு விஷயத்தின் மெய்ம்மூலமான அடிப்படை ஆதாரத்தை நாட வேண்டும். ஒரு எண்ணமோ அல்லது செயலோ முதலில் ஏற்படுத்தும் மேலோட்டமான கருத்து உணர்வுடன் நிறுத்தி விடக்கூடாது. இதைப்பொறுத்த மட்டில் கிழக்கு, மேற்கு என்று எதுவும் இல்லை. நீ கிழக்கத்திய நாட்டைச் சேர்ந்தவனோ அல்லது மேற்கத்திய நாட்டை சேர்ந்தவனோ, மற்ற பாலாருடன் கலந்து பழகு வதில் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் திருமணம் ஆனவர்களும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஹிந்து திருமறை நூல்கள், ஒரு இல்லறத் தான், தன்னுடைய மனைவியைத் தவிர வேறு எல்லாப் பெண்களையும் தாயாகக் காண வேண்டும் என்னும் விதி முறையை ஏற்படுத்தியிருக்கிறது. துளசிதாசரின் பலராலும் அறியப்பட்ட ஒரு கருத்து.

'உண்மையைப் பேசுவது, கடவுளுக்குக் கீழ்ப்பணிவது மற்றும் மற்றவர்களின் மனைவிகளை ஒருவரின் தாயாரைப் போலக் கருதுவது என்னும் இவை மிகச் சிறந்த பண்பு களாகும். இவைகளை நடைமுறையில் பின்பற்றி ஒருவன் கடவுளை உணரவில்லை எனின் துளசியின் வார்த்தைகளைப் பொய் என்று கொள்' என்று துளசிதாசர் கூறுகிறார்.[1]

உண்மை என்றால் மரணமாகவே இருப்பினும் உண்மையைக் கண்டு பயப்படக் கூடாது. உண்மை உன்

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.114.*

இதயத்தைப் பிளந்தால் அது நன்றாக இருக்கிறது. உண்மை, மற்றவர்களின் இதயங்களைப் பிளந்தால் அது நன்றாக இருக் கிறது. பொய்யான தோற்றங்களை விட உண்மையானது ஆற்றல் மிக்கது மற்றும் பயன்தரத் தக்கது ஆகும். உண்மைக் காக உன் இதயத்தைப் பிளவுபடுவதற்கு அனுமதிக்க வேண்டும். முதலில் உண்மையானது நாம் விரும்பிப்பற்றிக் கொண்டிருக்கும் அனைத்தையும் அழித்துவிடும். ஆன்மீக வாழ்விற்கு ஒரு புதிய அடித்தளம் தேவைப்படுகிறது. மற்றும் இந்தப் புதிய அடித்தளத்தில் மேல்கட்டுமானம் மிகவும் மெதுவாகவும், எச்சரிக்கையுடனும் கட்டப்பட வேண்டும். புதியதாக அடித்தளம் அமைப்பது என்றால், பழைய அடித் தளத்தை அழிப்பது என்பது இயல்பான பொருளாகும். ஆனால் இறுதியில் இது அமைதியையும், சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் நமக்கும் மற்றவர்களுக்கும் அளிக்கிறது. நாம் ஆராயாது செய்த செயல்களாலும், ஆசைகளாலும் பயிரிடப்பட்ட விஷமரமானது இரக்கமற்ற முறையில் வெட்டப்பட வேண்டும். விஷமரத்தைப் பயிரிட்டுப் பேணி வளர்த்தபிறகு, நமக்கு அதை வெட்டுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இருப்பினும் அதைச் செய்யவே வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வும் அறிவுரையும்

இதுதான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அறிவுரையாகும். ஆன்மீகத் தைச் சார்ந்து நீயாகவே உண்மையை உணர வேண்டும். ஆன்மீக வாழ்வை மேற்கொண்டு நாம் நம்முடைய சொந்த வாழ்க்கையிலேயே தெய்வீகத்தை ஒரு வாழும் அனுபவமாக நம்மால் செய்ய இயலும். மனிதனிடன் பொதுவாக காமம், பேராசை போன்ற உணர்ச்சிகள் அல்லது அவர் கூறுவதைப் போல பெண் மற்றும் பொன் போன்றவை மிகப் பெரிய பங்கை வகிக்கின்றன. ஆன்மீக வளர்ச்சியில் பெருந்தடை களாக உள்ள பாலியல் மற்றும் பேராசைகளை எப்படி விஞ்சி மேம்பட வேண்டும் என்பதை ஸ்ரீராமகிருஷ்ணர் நமக்கு அருளியுள்ளார். அவர் நம்மை, நம்மீதும் மற்றவர்கள்மீதும்

ஒரு புதிய மனநிலைப்பாங்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். அவர்கள் அவர்களையும், மற்றவர்களையும் இறைவனின் வெளிப்பாடுகளாகக் காண வேண்டும். அவர்கள் அவர்களை உடல்களில் குடிகொண்டுள்ள ஆன்மாக்களாகக் கருத வேண்டும்.

அவர்கள் உடல் என்னும் கருத்துடன் சிந்திக்கக் கூடாது. ஆனால் ஆன்மா என்னும் மட்டத்திற்கு உயர்வடைய வேண்டும். இது ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள சாதகன் கவனிக்கத்தக்க மூல ஆதாரமான கருத்து ஆகும். நவீன காலத்திற்கு மற்ற எல்லாவற்றையும் விட இந்த அறிவுரை தேவையான ஒன்றாக இருக்கிறது. குருதேவர் நமக்கு அருளியுள்ள இந்த அறிவுரையானது, முதலில் அவருடைய வாழ்க்கையிலும் மற்றும் தூய அன்னையாரின் வாழ்விலும் உணரப்பட்டது. தூய்மைப்பாடு இல்லாமல் ஆன்மீக வாழ்வு இல்லை. தன்னிடமும் மற்ற எல்லா ஆண்கள், பெண்களிடமும் கடவுளைக் காண்பதுதான் தற்காலத்தில் உலகளாவிய விதத்தில் உள்ள பாலியல் சிக்கல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள வேறு பல சிக்கல்களுக்கும் உள்ள ஒரே இறுதியான தீர்வாக உள்ளது. அனைவரிடமும் இறைவனைக் காண்பது என்பது நடைமுறைத் தீர்வு ஆகும். மற்றும் வேறு எந்த யுகத்திற்கும் தேவைப்பட்ட அளவிற்கும் மேலாக நிகழும் யுகத்திற்கு இது தேவைப்படுகிறது. காமமும் பொன்னும்தான் தற்காலத்தின் அடையாளமாக விளங்குகிறது. ஏனெனில் இது பாலியல் மற்றும் செல்வத்தைக் கடவுளாக வழிபடுவதில் மேம்பட்ட காலமாக விளங்குகிறது. அதனால்தான் குருதேவருக்குப் பாலியல் மற்றும் பேராசையை மறுப்பதில் அதன்மூலம் அத்தகைய கீழான உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதின் அவசியத்தை மனிதர்களுக்கு அறிவுறுத்துவதில் அவர் மிகவும் கண்டிப்புடன் இருக்க வேண்டியிருந்தது. ஒருவர் எந்த அளவிற்கு மேற்கத்திய வாழ்வுமுறையைக் காண்கிறாரோ, அந்த அளவிற்கு ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்வின் தனிச்சிறப்பை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலும்.

ஆன்மீக மட்டத்தில் தீர்வு

ஆணையோ அல்லது பெண்ணையோ வெறுப்பதாலோ அல்லது உலகைவிட்டு ஓடுவதாலோ உன்னால் ஒரு பொழுதும் பாலியல் என்னும் எண்ணத்திலிருந்து உயர இயலாது. தொடக்க காலத்தில் கிறிஸ்தவ துறவிகள் அவ் விதம் செய்யமுயன்று கொண்டிருந்தனர். அதற்கும் மேல் ஏதோ தேவைப்படுகிறது. வெறுப்புக்கூட ஒருவகையான எதிர்மறையான ஈர்ப்பாகவே உள்ளது. பாலியல் எல்லை யைக் கடந்து மேம்படுவதற்கு எல்லா ஆண்கள் மற்றும் பெண்களிடமும் கடவுளைக் காண்பதுதான் ஒரே வழியாக உள்ளது. உபநிஷதத்தில் அனைவராலும் அறியப்பட்ட ஒரு பகுதி உள்ளது.

'நீயே பெண்ணாகவும், ஆணாகவும் இருக்கிறாய். சிறுவ னாகவும், சிறுமியாகவும் இருக்கிறாய். மற்றும் கோலுடன் தடுமாறிக் கொண்டிருக்கும் முதியவனாகவும் இருக்கிறாய். இந்தப் பல வகையான வடிவங்களை நீ மட்டுமே மேற் கொண்டு இருக்கிறாய்.'[1]

ஆனால் இந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள் வதற்கு ஒருவர் அவரிடமே தொடங்க வேண்டும். வெளியில் இருக்கும் பெண் ஆபத்தானவள் இல்லை. உள்ளே இருக்கும் மனிதன்தான் ஆபத்தானவன் ஆவான். நீ ஆண் என்னும் எண்ணத்தைக் கைவிட்டால், பெண் என்னும் எண்ணமும் மறைந்துவிடும். அனைவரின் உடல்களிலும் ஒளிர்ந்துகொண் டுள்ள விழிப்பு நிலையின் தூய ஒளியான ஆன்மாவே நீ என்று உன்னைக் கருத வேண்டும். எப்பொழுதும் நிலைபெற்றுள்ள தூய ஆன்மா என்னும் கருத்தை உன்னுடைய மனத்தின் ஆழங்களில் பாய்ச்ச வேண்டும். காலையிலே ஆன்மாவைக் குறித்து நினைப்பாய். இரவில் உறங்குவதற்குச் செல்லும்

---

1. த்வம் ஸ்த்ரீ த்வம் புமானஸி த்வம் குமார உத வா குமாரீ।
த்வம் ஜீர்ணோ தண்டேன வஞ்சஸி த்வம் ஜாதோ பவஸி
விச்வதோமுக: ॥
—ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 4.3.

முன்பு இந்த ஆன்மாவைக் குறித்து ஆழமாகச் சிந்திப்பாய். எப்பொழுதும் உன் மனத்தை ஆன்மாவால் நிறைத்துக் கொண்டிருப்பாய். ஆன்மீகத்தில் நாட்டமுடைய சாதகன் எப்பொழுதும் தொடர்ந்து இந்த ஆன்மா என்னும் கருத்தைக் குறித்து, மனம் தூய்மை அடைவதன் பொருட்டாவது எண்ண வேண்டும்.

நான் பலமுறை கூறியுள்ளது போல, உண்மையைக் குறித்த நம்முடைய கருத்தானது, நம்மைக் குறித்த நம் கருத்தையே சார்ந்துள்ளது. நீ உன்னை ஒரு ஆடவனாகவே கண்டுகொண்டால் உன்னால் ஒரு பெண்ணைப் பெண்ணாகக் காணாமல் இருக்க இயலாது. ஆனால் நீ உன்னை விண்மீனின் ஒளியாகக் கண்டால் அதன்பிறகு கடவுளின் இந்த அற்புத மான வானமண்டலத்தில் அனைவரும் மற்ற விண்மீன் களாகத் தென்படுவார்கள். ஒருவரை ஆன்மாவாகக் காண வேண்டும் என்னும் கருத்தானது ஹிந்துக்களின் மய நம்பிக்கையில் மிகவும் முக்கியமான கோட்பாடாக விளங்கு கிறது. ஆனால் சில மனிதர்களே அதை முழுமையாகப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். நீ உண்மையாகவே ஞானத்தை அல வதற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஞானமடைதல் என்னும் கருத்தே மிகவும் உதவியாக உள்ளது. நீ உன் மனத்தை இந்தக் கருத்தால் நிறைத்துக் கொண்டால் உன் னுடைய முழுமையான சிறப்பு இயல்புகளும் அதனால் பொலிவடையும் மற்றும் உன்னுடைய மனப்பான்மையும், பழக்கவழக்கங்களும் மாறுதலடையும். அத்தகைய ஒரு மாற்றமதான் ஆன்மீக வாழ்விற்கு அடிப்படையான தேவையாகும்.

நம்முடைய விழிப்புணர்வில் ஒரு உறுதியான மாற்றம் இருக்க வேண்டும். நாம் ஆழ்ந்து ஆராய்ந்து நம்முடைய விழிப்புணர்வின் மையத்தை, கீழான மையங்களிலிருந்து உயர்ந்த மையங்களுக்கு மாற்ற வேண்டும். கீழான மையங் களில் குண்டலினி என்று அழைக்கப்படும் இயல் இயக்கத்தை மீறிய ஆற்றல் இடம் பெற்றுள்ளது. பாலியல் மையமானது சுறுசுறுப்புடன் செயல்படும் பொழுது

குண்டலினி சக்தியானது இயக்கமற்று ஒடுங்கியிருக்கும். அதை எழுப்புவதற்காக, பாலியல் மையத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். பிராணாயாமம் போன்றவற்றின் மூலமாக, அந்த மையம் தன் செயல்பாடுகளை நிறுத்துவதற்கு முன்பு எழுப்பப்பட்டால் மையங்களின் செயல்பாடுகள் திடீரென்று அதிகரித்து, பெரும்பாலும் சாதகனை அழிவின் பக்கம் இழுத்துவிடும். எனவே, குண்டலினி சக்தி எழுப்பப்படுவதற்கு முன்பு பாலியல் மையம் மூடப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, உயர்ந்த மையங்கள் வாசிப்பு, பிரார்த்தனை, தியானம் போன்றவற்றால் திறக்கப்பட வேண்டும். குண்டலினி சக்தி எழுப்பப்படும் பொழுது மேல்முகமாக, உயர்ந்த மையங்களை நோக்கிப் பாய்ச்சப்பட வேண்டும்.

உயர்ந்த மையங்கள் தூண்டப்பட வேண்டும். விழிப்புணர்வு அற்று இருக்கும் மனம் மெதுவாக மாற்றப்பட வேண்டும். அது ஒரு செழிப்பான வயலைப் போன்றது ஆகும். அங்கு நீ என்ன கருத்தை விதைக்கிறாயோ, அது உடனடியாக வேர்விட்டு வளரத் தொடங்கும். அங்கு நீ நல்ல எண்ணங்களைப் பயிரிட்டால் அவை வளரும் மற்றும் படிப்படியாக ஆன்மீக வாழ்க்கைக்கு உன்னுடைய அக எதிர்ப்பு மேலும் மேலும் குறைந்துகொண்டு வரும். ஒருசமயம் உனக்கு எதிராக இருந்த உன்னுடைய மனம் இப்பொழுது உனக்குப் பயன் விளைவிக்கத் தக்கதாக ஆகியுள்ளது. வங்காளத்தைச் சேர்ந்த மிகச் சிறந்த கவிஞர், அருளாளரான இராம்பிரசாத் என்பவரின் புகழ்பெற்ற பாடல் ஒன்று உள்ளது.

'ஓ மனமே, உனக்கு எப்படி வேளாண்மை செய்வது என்று தெரியாது
உன்னுடைய வாழ்க்கை என்னும் வயல் தரிசாக உள்ளது.
நீ மட்டும் சரியாகச் செய்திருந்தால்
எத்தனை வளமான அறுவடையை நீ அரிந்திருப்பாய்!'[1]

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.165.

பாலியலின் சிக்கலானது ஆன்மீக மட்டத்தில்தான் வெற்றிகரமாக சமாளிக்கப்படும். ஆன்மாவிற்கு பாலியல் இல்லை. ஆன்ம ஒளிக்கும் பாலியலிற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. ஒருவன் இந்த உள் ஒளியை உணராதவரையிலும், ஒருவரால் பாலியல் என்னும் கருத்தை முழுமையாக விஞ்சி மேம்பட இயலாது. நாம் அதை அடையும் பொழுது, நாம் உணரும் அமைதியும் இன்பமும், சுதந்திரமும் நம்முடைய எல்லா முயற்சிகளுக்கும் துன்பத் திற்கும், வேதனைக்கும் நாம் பெறும் பரிசை விட மேலாக உள்ளன.

13
பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தல் அல்லது தற்கட்டுப்பாடு

(திருமணம் செய்துகொள்ளாதவர்களுக்கு திட்டவட்டமான போதனைகள்)

பிரம்மச்சரியத்தின் அவசியம்

சுவாமி விவேகானந்தர் தற்கட்டுப்பாட்டை வெகுவாக வலியுறுத்தி இருக்கிறார். அவர் அவருடைய சீடர்களிடம், 'பிரம்மச்சரியமானது நெருப்பைப்போல உங்கள் நரம்புகளில் உள்அதிர்வுகளை ஏற்படுத்த வேண்டும்' என்று கூறுவார். அவருடைய ராஜயோகத்தில் அவர், தற்கட்டுப்பாட்டின் மூலம் பாலியல் ஆற்றலானது, ஓஜஸ் என்று கூறப்படும் மேம்பட்ட ஆன்மீக ஆற்றலாக மாற்றப்படுகிறது என்று கூறியுள்ளார்.

'யோகிகள், மனித சக்தியின் அந்தக் கூறு, எது பாலியல் பற்றிய எண்ணங்களில் பாலியல் சக்தியாக வெளிப்படுத்தப் படுகிறதோ அது தடுத்து நிறுத்தப்படுகிறது என்று கூறு கின்றனர். மற்றும் மூலாதாரம் இவற்றை வழி நடத்துவதால், யோகியானவன் அந்த மையத்திற்குத் தனிப்பட்ட கவனத் தைச் செலுத்த வேண்டும். அவன் தன்னுடைய எல்லா பாலியல் ஆற்றலையும் உள்வாங்கிக் கொள்ள முயற்சித்து அதை ஓஜஸ்ஸாக மாற்றுகிறான். பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிக்கும் ஆண் அல்லது பெண்களால் மட்டுமே ஓஜஸ்ஸைத் தோற்றுவித்து அதை மூளையில் சேமித்து வைக்க இயலும். அதனால்தான் பிரம்மச்சரியமானது எப்பொழுதுமே மிக உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டு வருகிறது. ஒரு மனிதன் அவன் பிரம்மச்சரியத்திலிருந்து வழுவியதாக உணர்ந்தால்

ஆன்மீகம் அகன்றுவிடும். மன ஆற்றலையும் பால்வகை ஒழுக்கம் சார்ந்த உரத்தையும் இழந்து விடுகிறான். அதனால் தான் உலகத்திலுள்ள எல்லா சமய அமைப்புக்களிலும், அவை தோற்றுவித்துள்ள பேராற்றல் வாய்ந்த ஆன்மீகப் பெரு மக்களால், முழுமையான பிரம்மச்சரியம் வலியுறுத்தப் பட்டுள்ளதை நீ எப்பொழுதும் காணலாம். அதனால்தான் திருமண வாழ்க்கையைத் துறந்த துறவிகள் தோன்றினர். பிரம்மச்சரியமானது முழுமையாக எண்ணத்திலும், சொல்லி லும், செயலிலும் இருக்க வேண்டும். பிரம்மச்சரியம் இல் லாமல் இராஜயோகத்தை மேற்கொள்ளுவது ஆபத்தான தாகும். மற்றும் மூளை குழம்புவதற்கும் வழிவகுக்கும். மனிதர்கள் இராஜயோகத்தையும் மேற்கொண்டு, தூய்மை யற்ற வாழ்க்கை வாழ்ந்தால் அவர்கள் யோகிகள் ஆவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க இயலும்?''[1]

சுவாமி பிரம்மானந்தரின் ஆன்மீக அறிவுரைகளில் நாம், 'உடலும், மூளையும், மனமும் முழுமையான வளர்ச்சி அடையவும் மற்றும் உரன் அடைவதற்கும் பிரம்மச்சரியம் மிகவும் அவசியமானதாகும். கட்டுப்பாட்டுடன் பிரம்மச் சரியத்தைக் கடைப்பிடிப்பவர்கள், ஆற்றல்வாய்ந்த நினை வாற்றலையும், குறிப்பிடத்தக்க முறையில் புரிந்துகொள்ளும் திறமையையும் விரிவு செய்து கொள்வார்கள். பிரம்மச்சரியத் தைக் கடைப்பிடிப்பதால் தனிவகையான நரம்பு வளர்ச்சி யடைந்து, அது இத்தகைய வியக்கத்தக்க ஆற்றல்களை ஏற் படுத்துகிறது. நம்முடைய சிறந்த ஆச்சாரியர்கள், ஏன் பிரம்மச் சரியத்தை இவ்வளவு வலியுறுத்தி இருக்கின்றனர்? ஏனெனில் இது தொடர்பாக மனிதன் தோல்வியடைந்தால் அனைத்தை யும் இழந்ததாகும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். கட்டுப்பாட்டுடன் கூடிய பிரம்மச்சாரியானவன் தன்னுடைய வலிமையை இழப்பதில்லை. அவன் ஒரு பயில்வானைப் போன்று தோற்றமளிக்காமல் இருக்கலாம். ஆனால் அவன் மூளை வளர்ச்சி மிகவும் நுட்பமானதாக இருக்கும்.

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.57,58.

புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளும் திறமையானது தனிச்சிறப்பு உடையதாக இருக்கும்.'[1] என்று படிக்கிறோம்.

ஒருமுறை சுவாமி பிரம்மானந்தர் என்னிடம், 'அன்பிற்கு உரியவனே, உன் உடலையும், மனத்தையும் உலகியல் இன்பங்களில் ஈடுபடுத்தினால் இவ்வுலகமானது அவ் விரண்டையும் அழித்துவிடும். அவற்றைக் கடவுளுக்கும், அவருடைய தொண்டிலும் ஈடுபடுத்தினால், நீ உடல் நலத்தையும் மன அமைதியையும் ஆன்மீக இன்பத்தையும் அனுபவிப்பாய்' என்று கூறினார்.[2]

உன்னிடம் இருக்கும் அனைத்தையும், உன் உடல் நலம், செல்வம், இளமை, திறமைகள் என்னும் இவ்வனைத்தையும் கடவுளுக்கு அளிப்பாய். நீ அவற்றை இந்த உலகிற்கு அளித் தால் அவற்றை உலகம் கெடுத்து விடும். மற்றும் முடிவில் உன்னை ஒன்றுமற்றவனாகச் செய்துவிடும். அறியாமையும் மற்றும் அழிவும் எங்கும் நிறைந்துள்ளன. எல்லா இடங் களிலும் உள்ளன. இதை மறந்து விட்டு நாம் உலகியல் வாழ்வில் சிந்திக்காமல் ஈடுபட்டால் நாம் அதன் விளைவு களை அனுபவிக்கத்தான் வேண்டும்.

உலக வாழ்விலும் இது உண்மையாக இருக்கவியலும். பிரம்மச்சரியம் உன்னை வியத்தற்குரிய அறிவுத் திறன் உடையவனாகவோ, மற்போர் செய்பவனாகவோ செய் யாமல் இருக்கலாம். ஆனால் அது உடலையும், மனத்தையும் கண்டிப்பாகச் செம்மைப்படுத்துகிறது. ஆனால் பிரம்மச் சரியத்தின் முக்கியமான நோக்கமானது ஆன்மீகத்தின் இயல் பான வலிமையை வளரச் செய்வது ஆகும். சுவாமி பிரம் மானந்தர் மேதாநாடி என்று குறிக்கும் ஆன்மீக நாடியை வளரச் செய்வது ஆகும். ஒரு மனிதன் பத்து அல்லது பன்னி ரெண்டு ஆண்டுகள் பிரம்மச்சரியத்தை மேற்கொள்ளும்

---

1. The Eternal Companion, *பக்கம் 238.*

2. *மேற்கண்ட நூல், 1971-ஆம் ஆண்டுப் பதிப்பு, பக்கம் 84.*

பொழுது அவன் இந்த நரம்பு எழுச்சியடைந்துள்ளதை உணர்கிறான். இது எல்லா மனிதர்களிடமும் மறைந்துள்ள அகத்திற உணர்வாற்றல் ஆகும். ஸ்ரீராமகிருஷ்ணரும்[1] மற்றும் சுவாமி விவேகானந்தரும் இதைக் குறித்துப் பேசியுள்ளனர். அது வெறும் கோட்பாடு அல்ல.

மேலும் பிரம்மச்சரியம் மூளையின் ஊட்டத்திற்கும் விசைவூக்கத்திற்கும் அவசியமானதாகும். பிரம்மச்சரியத்தை மேற்கொள்ளாதவர்கள், அவர்கள் தியானம் செய்ய முயற்சி செய்யும் பொழுது அவர்களுடைய மூளை விரைவாகச் சூடு அடைவதை உணர்கின்றனர். மூளை உறுதியானதாகவும் குளிர்ச்சியானதாகவும் இல்லையெனின் தொடர்ந்து ஆழ்ந்து சிந்திப்பது என்பது இயலாததாகிவிடும். தற்கட்டுப்பாடு இல்லை எனின், நீண்ட நேரத்திற்குத் தியானம் செய்வதால் மிகப் பெரிய அளவில் ஏற்படும் உலைவைத் தாங்கிக் கொள்ள இயலாமல் ஆகிவிடும்.

உண்மையைக் கூறப்போனால், மேல்மட்ட ஆன்மீக வாழ்க்கைக்கு பிரம்மச்சரியம் முற்றிலும் அவசியமானதாகும். எனினும், ஆன்மீக வாழ்வின் தொடக்க நிலையிலேயே அவர்களைத் தன்னம்பிக்கையை இழக்கச் செய்வதிலிருந்து தடுப்பதற்காக இதைப்பற்றி நேரடியாக மனிதர்களுக்குக் கூறப்படுவதில்லை. எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் இடையீடற்ற பிரம்மச்சரியம் இல்லையெனின், உண்மையான தியானமோ அல்லது உயர்ந்தவகையான உணர்வோ ஒரு பொழுதும் இருக்கவியலாது என்பதுதான் உண்மையாகும். முழுமையான தற்கட்டுப்பாடும் தூய்மைப் பாடும் இல்லாமல் உயர்ந்தஆன்மீக வாழ்வு இயல்பானதாக ஆவதில்லை. ஆனால் பொதுவாக நாம் அதைக் குறித்து, மனிதர்களிடம் நிலைகுலைவை ஏற்படுத்தாமல் இருக்க மிதமாகவும் அவ்வளவாக நேரிடையற்ற முறையிலும் பேசுகிறோம்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.124.*

ஆன்மீக வாழ்வில் மேல்மட்ட விழிப்புணர்வு மையங்களைத் திறப்பதுதான் முதற்கடமையாக உள்ளது. இந்த மேல்மட்ட மையங்களில் ஏதாவது ஒரு மையத்தில் தியானப் பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக விழிப்புணர்வு மையங்கள் முதலில் திறக்கப்பட வேண்டும். கீழ் நிலையில் உள்ள மையங்கள் மிகவும் தீவிரமாகக் செயல் படும் பொழுது இது எப்படிச் செய்யப்படும்? மேல்மட்ட செயல்களுக்காக எஞ்சியுள்ள நியதிக்கு அப்பாற்பட்ட ஆற்றலின் கூட்டு மொத்தமானது அவ்வளவு அதிகமானது இல்லை. இந்த அனைத்தும் கீழ்நிலையில் உள்ள மையங்களுக்குத் திசை திருப்பப்பட்டால், மேல் நிலையில் மையங்கள் வளர்ச்சி அடையாது.

கீழ்நிலையில் உள்ள மையங்களின் செயல்பாடுகள் நிறுத்தப்படாவிட்டால், ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகனுக்கு மனிதர்கள் என்ன கூறினாலும், அல்லது நினைத் தாலும் உயர்ந்த மட்டத்தில் அவனை வைத்துக்கொள்வதற்கு ஒருபொழுதும் இயலாமல் போய் விடும். உண்மையைக் கூறப்போனால், கீழ்நிலையில் உள்ள மையங்கள் செயல் படுவதற்கு அனுமதிக்கப்பட்டால் ஆன்மீக வாழ்வே இல் லாமல் போய் விடும். அவைகளின் செயல்பாடுகள் நிறுத்தப் பட வேண்டும். நீ இதைச் செய்யவில்லை எனின், மேல் நிலையில் உள்ள மையங்களால் ஒருபொழுதும் சரியாகச் செயலாற்ற இயலாது. ஒரு கட்டிடத்தில் உள்ள அடித் தளத்தில், எல்லா தண்ணீர்க் குழாய்களும் திறந்து விடப் பட்டிருந்தால், மேல்தளங்களில் சிறிதளவு நீரோ அல்லது தண்ணீர் இல்லாத நிலையோ ஏற்படுவதை நீ அறியலாம்.

சில மனிதர்கள், மிகவும் கண்டிப்புடன் பிரம்மச் சரியத்தை மேற்கொள்ளாமல் ஆன்மீகச் சார்பான சில கண நேரக் காட்சிகளைக் கண்டு கொள்ளக்கூடும். ஆனால் அவர் களால் தொடர்ந்து அந்த மேல் மட்டத்திலேயே இருக்க வியலாது. மற்றும் அவர்களால் மேம்பட்ட வகையான உணர்வுகளை ஒருபொழுதும் அடையவியலாது. சாதகன், எந்த ஒரு மேம்பட்ட வாழ்க்கையை அடைய நினைத்தாலும்,

மற்றும் எந்த ஒரு உயர்ந்த வகையான உணர்வு நிலையை அடைய நினைத்தாலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் பிரம்மச் சரியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும். வேறு எந்த வழியும் இல்லை. ஆன்மீக வாழ்க்கையைக் குறித்த நேரடியான உண்மை இதுதான் ஆகும்.

மேற்கத்திய நாடுகளில் தற்கட்டுப்பாட்டைக் குறித்த தவறான கருத்துக்கள்

ஆன்மீகக் குறிக்கோளானது மிகவும் தாழ்த்தப்பட்டு, வெறும் ஒழுக்க நெறிமுறையுடன் உள்ள மட்டத்திற்கு கீழே இழுக்கப்பட்டிருப்பதுதான் மேற்கத்திய நாடுகளின் சிக்கலாகும். நேரடியான மேல்மட்ட உணர்வை உணர்வது குறித்து யாருமே கவலைப்படுவதில்லை. அவர்கள் மிகக் குறைந்த அளவிலேயே நிறைவடையும் அற்பர்களாக இருக்கின்றனர். அவர்களுக்குச் சிறிதளவு நல்லமனப்பாங்கு போதுமானது. அதன்பிறகு அவர்கள் அதைப் பெரிதுபடுத்துகின்றனர். ஒழுக்க நெறியுடன் கூடிய வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கை ஆகாது. இருப்பினும், உண்மையிலேயே ஆன்மீக நாட்டம் உடைய மனிதன் எப்பொழுதும் நீதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுவான். மற்றும் அது அவனுக்குப் பழக்கமானதாகவும், இயல்பானதொன்றாகவும் உள்ளது. மிக உயர்ந்த ஆன்மீக அனுபவத்தில் மரபு ஒழுங்கு சார்ந்த நன்னடத்தை மட்டுமே போதாது. ஒரு நிறைமுழுமை வாய்ந்த பகுதி பகுதிகளாகப் பிரித்து ஆராயப்பட்ட தனித்தன்மையானது தேவைப் படுகிறது. ஏசுநாதரின், 'மலைப்பொழிவு' என்பதின் (Sermon on the Mount) சுருக்கம் இதுதான். 'ஆதலால் உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவு உள்ளவராக இருங்கள்'[1] ஏசுநாதர் கற்பித்த சமயமானது முக்கியமாக துறவிக்கான ஒரு சமயமே ஆகும். ஆன்மீக நாட்டம் கொண்ட ஒவ்வொரு சாதகனுக்கும் தன்னலமறுப்பு சிறிதளவும், மற்றும் துறவிகளுக்குரிய ஒழுங்கு முறையுடன் கூடிய வாழ்வு முறையும் அவசியமானதாகும். அவன் இல்லறத்தை

1. பைபிள்—செயின்ட் மேத்யூ, *5:48.*

மேற்கொள்பவனாக இருப்பினும், அவன் உண்மையாக ஆன்மீக அனுபவத்தைப் பெற விரும்பினாலும் அது அவசிய மானதாகும். மேற்கத்திய நாடுகளில் கத்தோலிக்கர் கொள்கையை ஏற்காத கிறிஸ்தவ சமயத்தினர் (Protestantism) துறவறத்தையும், மணமாகாத நிலையையும் கைவிட்டதால் ஆன்மீக மரபிற்குப் பெரிய தீங்கினை ஏற்படுத்தி உள்ளனர்.

தற்காலத்திய மனோதத்துவ வல்லுனர்கள், உணர்வற்ற நிலை, கனவுகள், செயல் தூண்டுதல், உணர்ச்சிகள், சிக்கல்கள் இயற்கையான தூண்டுதல்களை அடக்குதல் என் பன போன்றவற்றின் இயல்புகளை ஆராய்ந்து அறிந்திருப் பதன்மூலம் மனித குலத்திற்கு மிகப்பெரிய தொண்டைச் செய்துள்ளனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள், தன்னிச்சைக் கோட்பாட்டைப் பரப்பி, அதே அளவில் தீங்கிழைத்துள்ளனர்.

புகழ்பெற்ற பல உளவியல் பகுப்பு ஆய்வாளர்கள், இந்த உன்னதமான விஞ்ஞானத்தைத் தவறான வகையில் பயன்படுத்துவதை எதிர்த்தாலும், பாலுணர்வை அடக்குவது தீங்கானதாகும் என்னும் கருத்தானது மேற்கத்திய நாடுகளில் மிக வேகமாக பொது மக்களிடையே மதிப்பைப் பெற் றுள்ளது. அதற்கு மாறாக யோகமனோதத்துவம், ஒரு ஆன்மீக நோக்கத்திற்காகப் பாலுணர்வை, உணர்வு நிலையுடன் அடக்கப்படும் முறையானது அது தீங்கை ஏற்படுத்துவ தில்லை என்று கூறுவதுடன் அது முற்றிலும் அவசியமானது என்றும் கூறுகிறது. இயற்கையான தூண்டுதல்களை அடக்கு வது ஆபத்தானதாக இருக்கலாம். தியானத்தின் மூலமும் கடவுளின் மீது உள்ள அன்பினாலும் இயல்பான பாலு ணர்வை யோகமுறைகளின் மூலம் மேம்பட்ட நிலையை அடையச் செய்யும் முறைகளைப் பின்பற்றுவது ஆபத்தானது இல்லை. முதலில் இது முரண்பாட்டையும், மன உலைவை யும் ஏற்படுத்தக் கூடும். ஆனால் மனஉலைவையோ, போராட்டத்தையோ ஏற்படுத்தாத உயர்ந்த துணிகரமான முயற்சி ஏதாவது உள்ளதா? உண்மையான உறுதிப்பாடு உடைய, ஆன்மீகத்தில் நாட்டமுடைய சாதகன், அகநிலை,

சார்ந்த எல்லாச் சிக்கல்களையும் விரைவிலேயே விஞ்சி மேம்படுவான். மற்றும் தெய்வீக அருளாலும், அவன் ஒரு உயர்ந்த மட்டத்தை அடைகிறான். அவன் அங்கு கீழ்நிலை மட்டங்களில் ஏற்படும் முரண்பாடுகள் அற்றவனாக இருக்கிறான்.

தற்சமயத்தில் மேற்கத்திய நாடுகளில், மனத்தூய்மையை வலியுறுத்தாமல் வேதாந்தத்தைப் பொது மக்களிடையில் பரப்பும் முயற்சி உள்ளது. மேற்கத்திய நாடுகளில் பலரும் அத்வைதத்தின் கம்பீரத்தினாலும், தருக்கமுறையுடன் கூடிய அழகினாலும் அதன்பால் ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால் அறிவுபூர்வமான பாராட்டு மட்டுமே போதாது. பலரும் அத்வைதத்திற்குப் பிரம்மசரியத்தைப் கடைப்பிடிப்பதும் மற்ற ஒழுக்கமுறைகளும் தேவையில்லை என்று கருதுகின்றனர். இது உண்மையல்ல. அதற்கு மாறாக அது, மிகக் கட்டுப்பாட்டுடன் கூடிய மனக்கட்டுப்பாட்டையும், புலன்களின் கட்டுப்பாட்டையும் வற்புறுத்துகிறது. ஒரு ஜீவன் முக்தன், சமூக வழக்கு முறைகளை அவ்வளவாகக் கருத்தில் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அவன் தூய்மைப்பாடு போன்ற அடிப்படையான ஒழுக்கப்பண்புகளின் புனிதத் தன்மையை ஒருபொழுதும் கெடுக்கமாட்டான், கெடுக்கவும் கூடாது. இவை அவனிடம் ஆழமாகப் பதிந்துள்ள விஷயமாக உள்ளது. வேதாந்த சாரத்தின் ஒரு பத்தியில் 'ஒருங்கிணைப்பின் உண்மையை அறிந்த ஒரு மனிதன் தன் விருப்பப்படிச் செயல்பட்டால் ஒரு உண்மையை அறிந்தவனுக்கும் மற்றும் ஒரு நாய்க்கும் கழிவைத் தின்பதில் என்ன வேறுபாடு இருக்க இயலும்?''[1] என்று நாம் படிக்கிறோம்.

சிறந்த அருளாளர்களின் எடுத்துக்காட்டுகள்

கிறிஸ்தவ சமயம், புத்த சமயம் மற்றும் ஹிந்து சமயங்களின் உயர்ந்த வடிவங்களிலும், எண்ணத்திலும்,

---

1. சதானந்த யோகீந்திரரின் வேதாந்த சாரம், சுவாமி நிகிலானந்தர், (கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1974) பக்கம் 121. சுரேஸ்வரரின் நைஷ்கார்ம்ய சித்தியிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது (4-62).

சொல்லிலும் செயலிலும் முழுமையான பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று பெரிய அளவில் வலியுறுத்தப் பட்டுள்ளது. நீ அதை 'ஏசுநாதரின் மலைப் பொழிவிலும் (Sermon on the Mount), புத்த சமயத்தின் வினய பீடகத்திலும், உபநிஷதங்களிலும், பகவக் கீதையிலும், பாகவதத்திலும் காணலாம். ஆன்மீகத்தில் நாட்டமுடைய ஒரு சாதகனுக்கு, சமூகத்தால் ஏற்கப்படத்தக்க ஒழுக்க முறையுடன் கூடிய வாழ்வு மட்டுமே போதாது. அவன் ஒழுக்கப்பண்புகளில் முழுமையை அடைந்திருக்க வேண்டும். முக்கியமாகத் தூய்மைப்பாடில் அடைந்திருக்க வேண்டும். அவன் தன் னுடைய பாலுணர்வை முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

உலகத்திலுள்ள சிறந்த ஞானிகள் எப்பொழுதுமே தூய்மைப்பாட்டிற்கு மிக உயர்ந்த முக்கியத்துவத்தைக் கொடுத்து இருக்கின்றனர். முதலில் படிப்பறிவற்ற விவசாயி யாக இருந்து அதன் பிறகு செயின்ட் பிரான்ஸிஸ் அவர்களின் (St. Francis of Assisi) தலைசிறந்த சீடர்களில் ஒருவராகிய சகோதரர் GILES அவர்களின் இந்தச் சொற்கள் ஆன்மீகத்தில் உண்மையான நாட்டம் உடைய ஒவ்வொருவராலும் நினை வில் கொள்ளப்பட வேண்டும்.

'மற்ற எல்லா ஒழுக்கப் பண்புகளைவிட தூய்மைப்பாடு என்னும் ஒழுக்கப்பண்பைத்தான் நான் முதலில் நடை முறைப்படுத்துவேன். ஏனெனில் நிறைநலம் வாய்ந்த தூய்மைப்பாடு அதிலேயே எல்லா முழுமையையும் பெற்று உள்ளது. ஆனால் தூய்மைப்பாடு இல்லாமல், வேறு எந்த ஒழுக்கப்பண்பும் ஒருபொழுதும் முழுமையாக இயலாது.'

விதிவிலக்கற்ற உண்மை என்ன எனின் தற்கட்டு பாட்டை (பிரம்மச்சரியம்) நாம் நம்முடைய உடல் சார்ந்த மற்றும் ஆன்மீக உணர்வுகளைத் தொடர்ந்து விழிப்புடன் கண்காணிக்க வேண்டும். அவற்றைக் கடவுளுக்காக மட்டும் தூய்மையாக, களங்கமற்றதாகப் பாதுகாப்பதற்காக அவ்விதம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு தீயொழுக்கமும் புனிதமான பிரம்மச்சரியத்தின் மகத்துவத்தைத் தொல்லைப்படுத்துகிறது மற்றும் மறைக்கிறது. அழுக்கான மற்றும் கறைபடியவைக்கும் பொருட்களின் தொடர்பால் மட்டும் இல்லாமல் மனிதனின் வெறும் மூச்சினாலும் மங்கலாகும் மற்றும் இருளாகும் ஒரு நிலைக் கண்ணாடியைப் போல இது உள்ளது. ஒரு மனிதன் மட்டற்ற சிற்றின்பத்தை நாடிக் கொண்டிருக்கும் வரையில், அவனால் எந்த விதமான ஆன்மீக அருளையும் பெற இயலாது. அதனால் எங்கு சென்றாலும் உடல் சார்ந்த தீய பழக்கங்களை அடக்க முடியாதவரையிலும் உன்னால் ஒருபொழுதும் ஆன்மீக அருளைப் பெற வியலாது. அதனால், நிலையற்ற தசை இன்பத்திற்கு எதிராக வீரத்துடன் போராடு வாய். உன்னுடைய தசை இன்பமே உன்னுடைய சொந்தமான மிக மோசமான எதிரியாக உனக்கு எதிராக இரவும், பகலும் போரிட்டுக் கொண்டு இருக்கிறது. மற்றும் தெரிந்து கொள்வாய்— யார் ஒருவன் நம்முடைய கொடிய எதிரியை வெற்றி கொள்கிறானோ, அவன் நிச்சயமாக அவனுடைய எல்லா எதிரிகளையும் தோற்கடித்து விட்டான் மற்றும் அவன் ஆன்மீக அருளையும் ஒழுக்கத்தையும் முழுமையையும் எல்லா அளவிலும் கட்டாயம் பெறுவான்.[1]

சந்தேகத்திற்கு இடமின்றி, ஆன்மீக வாழ்வில் முதலில் தேவைப்படுவது பிரம்மச்சரியமே ஆகும். எண்ணத்திலும் சொல்லிலும், செயலிலும் முழுமையான தற்கட்டுப்பாட்டை மேற்கொள்ள ஆயத்தமாக இல்லாதவர்களால், உயர்ந்த உண்மைகளை ஒரு கணநேரத்திற்கு அவர்கள் பெற்றிருந் தாலும், உயர்ந்த மட்டத்திலேயே அவர்களால் ஒருபொழுதும் இருக்கவியலாது. மீண்டும் மீண்டும் அவர்கள் வீழ்ச்சியடை வார்கள். மற்றும் ஆன்மீக வாழ்வின் உயர்ந்த வகைகளையும் மெய்ப்பொருளை உணர்வதையும் அவர்களால் ஒரு பொழுதும் அடைய இயலாது.

---

1. Teachings of Brother Giles (London, Burns, Oats, Washerbourne & Co. 1935).

பிரம்மச்சரியத்தை மேற்கொள்ளுதல் —உடல்சார்ந்த உறுதுணைகள்

கண்டிப்புடன் தற்கட்டுப்பாட்டை எப்படிப் பின்பற்றுவது என்பதுதான் கேள்வியாகும். முதலில் பகைவனுக்கு, நேரடியான முன்னணித்தாக்குதலை ஒருபொழுதும் செய்யக் கூடாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். புலன்களை எதிர்ப்பதற்கான ஒரு கலை உள்ளது. அதை முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருபொழுதும் மிகவும் வலிந்து செயல் படுதல் கூடாது. சில நேரங்களில், நாம் சரியான மனப் பாங்கை ஏற்படுத்திக் கொள்ளாமல் அளவிற்கு அதிகமான வன்முறையால் புலன்களை விஞ்சிமேம்பட விரும்புகிறோம். இது மிகவும் ஆபத்தானது ஆகும். மற்றும் ஒரு பொழுதும் முயற்சிக்கக் கூடாததும் ஆகும். சிலநேரங்களில், கீழான மனப்பாங்கில் இருந்துகொண்டு, உயர்ந்த மட்டத் திற்கு உயராமலே, மிகவும் வலிந்து நம்மைக் கட்டுப்படுத்து வதற்கு முயற்சி செய்வோம். அதனால் இயல்பாகவே (எதிர்ப் பார்த்தபடியே) உடலளவிலும் மனத்தளவிலும் மிகவும் வலிய எதிர்ச் செயல்கள் ஏற்படுகின்றன. மற்றும் நம்முடைய முழுமையான வளர்ச்சியானது தடுக்கப்படுகிறது. அல்லது முற்றிலுமாக நிறுத்தப்பட்டும் விடுகிறது. எனவே விருப்பத் துடன் கூடிய முயற்சியால், முதலில் மனத்தை மேம்படுத்தி உயர்ந்த மனப்பாங்கை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதன்பிறகு சிறிது உந்துவலியுடன் அனைத்தும் நிறை வேற்றப்படுகின்றன. நாம் எப்பொழுதும் வலிமையான எதிர்விளைவுகளின் ஆபத்தை தேடிப் பெறுதல் கூடாது. இந்தக் கருத்தைக் குறித்து சகோதரர் Giles ஒரு நுட்பமான அறிவுரையைக் கூறுகிறார்.

'யாராவது ஒருவன் ஒரு பெரிய கல்லையோ அல்லது மிகப்பெரிய பளுவையோ நகர்த்தவோ அல்லது வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லவோ விரும்பினால், அதைப் பலத்தைப்பயன்படுத்தி நகர்த்துவதைவிட கூர்மதியைப் பயன்படுத்த வேண்டும். அதைப்போல தூய்மைக்கேட்டின் குற்றத்தை அகற்றி மேம்பட்டு தூய்மைப்பாடு என்னும்

ஒழுக்கப்பண்பைப் பெற விரும்பினால், தகாத துணிவுடன் ஆராயாமல் செயல்பட்டு, நோன்பு முறைகளுடன் கூடிய கடுமையான பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதைவிட அமரிக்கையுடன் வேறு தனியான ஆன்மீக கட்டுப்பாட்டுடன் கூடிய முறையில் செயல்பட வேண்டும்.

எத்தகைய அற்புதமான அறிவுரை! உதாரணமாக நெம்பு கோலின் செயற்பாட்டையும் கடப்பாரையின் செயற்பாட்டையும் நினைத்துப்பார். இந்த எளிமையான கருவியானது, உன்னால் ஒருபொழுதும் உன்னுடைய வெறும் கைகளால் நகர்த்த இயலாத மிகப்பெரிய பளுவை உன்னை மேலே எழுப்பும்படிச் செய்கிறது. உலகப் பொருட்களைக் குறித்த மட்டில், நாம் மிகவும் எச்சரிக்கையுடனும், மதிநுட்பத்துடனும், யூகமுடையவர்களாகவும், நடைமுறையைச் சார்ந்தவர்களாகவும் இருக்கிறோம். ஆனால் ஆன்மீக வாழ்வைப் பொறுத்த மட்டிலும் மற்றும் பின்பற்றுவதிலும் நாம் மிகவும் முட்டாள்தனமுள்ளவர்களாகவும், அக்கறையற்றும் இருக்கிறோம். ஆனால் மிகச்சிறந்த ஞானிகளின் விஷயத்தில், இதற்கு எதிர்மாறானது உண்மையாக உள்ளது. அவர்கள் ஆன்மீகத் தரப்பில் தீவிரமான நடைமுறையை மேற்கொண்டு இருந்தனர். அவர்கள் உலகியல் தொடர்பான வளமைக்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருந்தனர். ஆனால் ஆன்மீக விஷயங்களில் எச்சரிக்கையுடனும், முறையான தன்மையுடனும் இருந்தனர்.

மனிதர்கள் பாலுணர்வை விரட்டி மேம்பட பல வகையான உடல் தொடர்பான வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர். அவர்களில் ஒருசிலர் குறைந்த அளவில் பயனைப் பெறலாம். ஆனால் ஒருவர் அவைகளை அதிகமாகச் சார்ந்து இருத்தல் கூடாது. சுவாமி பிரம்மானந்தர்,

'ஒரு பிரம்மச்சாரி கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகள் உள்ளன. அவன் உணர்வுகளைத் தூண்டக் கூடிய உணவையும், அதிகமாக உறங்குவதையும், அதிகமாக உடற்பயிற்சி செய்வதையும், சோம்பேறித்தனத்தையும், கெட்ட

தொடர்புகளையும், கெட்ட உரையாடல்களையும் தவிர்க்க வேண்டும்.'[1] என்று கூறியுள்ளார்.

சில மனிதர்கள் வலியமுறையில் உடல் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். இது அதிகப்படியான சக்தியை எடுத்து விடினும் இது ஒருபொழுதும் சரியான முறை ஆவதில்லை. பிரம்மச்சரியத்தைப் பின்பற்ற விருமபுவர்கள் அவர்கள் உடலில் அவர்களால் கையாளப்படுவதைவிட அதிகப்படி யான சக்தியைச் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். அவர்கள் அவர்களிடம் அதிகப்படியான உயிர் நிலையான சக்தி அதிகரிப்பதை உணர்ந்தால், அவர்களுடைய உணவைச் சில நாட்களுக்குக் குறைக்க வேண்டும்.

நாம் அனைவரிடமும் ஒரு அடிப்படையான படைக்கும் திறனுள்ள உந்துதல் உள்ளது. இது மேம்படுத்தப்பட்டு, உயர்வான வழிகளை நோக்கி திசை திருப்பப்படாவிட்டால், அது கீழான மையங்களில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள முயற்சி செய்யும். எப்பொழுதும் கடவுளை நினைப்பதற்கு இயலாமல் இருக்கும் தொடக்க நிலையில் இருக்கும் சாதகர்கள் அவர்களுடைய ஆற்றலையெல்லாம் தியானம் செய்தல், பிரார்த்தனை செய்தல் மற்றும் கடவுளை வழி படுதல் போன்றவற்றில் படிமாற்றம் செய்ய இயலாதவர்கள், தங்களை ஏதாவது படைப்பாற்றல் மிக்க செயலில் ஈடு படுத்திக் கொள்ள வேண்டும். இத்துடன், வாசிப்பதும், ஆழ்ந்து சிந்தனை செய்வதும் உறுதுணையாக இருக்கும். எப்பொழுதுமே உயர்ந்த மையங்களைச் சுறுசுறுப்புடன் வைத்திருக்க வேண்டும்.

மனத்தை அமைதியாக வைத்துக்கொள்வதற்கு ஒழுங்கு படுத்தப்பட்ட மூச்சுமுறையானது பெரிதளவில் உதவுகிறது. மனம் அமைதியற்று இருக்கும்பொழுது, எல்லாவகை யான உணர்ச்சிகளும், தூண்டுதல்களும் எழுகின்றன. எப் பொழுதும் ஒழுங்கான லயத்துடன் மூச்சுவிட வேண்டும்.

---

1. The Eternal Companion, 1978-ஆம் ஆண்டு பதிப்பு, பக்கம் 238.

இது உன் உடல் முழுவதையும் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரும் ஒரு உணர்வை உனக்கு ஏற்படுத்தும் மற்றும் உன் மனத்தை விழிப்புடன் இருக்கச் செய்யும். ஆனால் இது பிராணாயாமத்தைக் குறிப்பது அல்ல. அது பெரும்பாலான சாதகர்களுக்குப் பயிற்சி செய்வதால் ஆபத்தை விளை விக்கும். அதற்குப் பதிலாக ஒழுங்கான லயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

அனைவராலும் கவனம் செலுத்திப் பேணப்பட வேண்டிய மிகவும் முக்கியமான ஒரு பழக்கமானது உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்வது ஆகும். உன்னுடைய உடல் மற்றும் உடைகளைத் தூய்மையாகவும், துப்புரவானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். நீராடுவதும், ஆடைத் துவைப்பும், இந்தியாவில் பெரும்பாலும் செய்யப்படு வதைப்போல ஒரு சடங்காக எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. உடல் தூய்மையானது, மனத்தூய்மையுடன் இணைக்கப்பட வேண்டும். மனத்தூய்மை அடைவதுதான் மிக முக்கியமான கருத்து ஆகும். பதஞ்சலி,

'அக மற்றும் புறத் தூய்மையில் நிலைபெற்றவனுக்குத் தன் உடல்மீது வெறுப்பும், பிறருடன் உடல் தொடர்பு பின்மையும் உண்டாகும்'[1] என்று கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் இது சீர்கெட்டு மனோதத்துவ நிபுணர்கள் சொல்லும் ஒருவிதமான மனநோயான 'துப்புரவு செய்யும் வெறி' ஆகக் கூடாது. மேற்கண்ட பதஞ்சலியின் யோக சூத்திரத்திற்கு விளக்கம் அளிக்கும் பொழுது சுவாமி விவேகானந்தர்,

'உடலானது உண்மையாகப் புறத்திலும் அகத்திலும் தூய்மையடைந்தால், உடலை வெறுக்கும் தன்மை ஏற்பட்டு அதை நன்றாக வைத்திருக்க வேண்டும் என்னும் கருத்து மறைந்துவிடுகிறது. மற்றவர்களால் மிகவும் அழகானது என்று கூறப்படும் முகமானது, ஒரு யோகிக்கு அந்த முகத்தின்

---

1. ஸௌசாத் ஸ்வாங்க ஜுகுப்ஸா பரைரஸம்ஸர்க: ॥

—பதஞ்சலி யோக சூத்திரம், 2.40.

பின் அறிவுத் திறம் இல்லையெனின் வெறும் விலங்கைப் போலத் தென்படும்.

உலகம் எதைச் சாதாரணமான முகம் என்று கூறுகிறதோ, அதன் பின் ஒரு ஒளி வீசிக் கொண்டிருந்தால் யோகியானவன் அதை தெய்வீகத்தன்மை உடையது என்று கருதுகிறான். மனித வாழ்க்கையில், உடல் மீது உள்ள வேட்கையானது மிகப் பெரிய கேடு ஆகும். நீ ஒரு உடல் என்று நினைப்பதில் கருத்தூன்றாமல் இருப்பது தூய்மைப்பாடை நிலைநாட்டு வதற்கு உரிய முதல் அடையாளமாகும். தூய்மையடைந்த பிறகுதான் நாம் உடல் என்னும் கருத்தை விடுகிறோம்'[1]

தூய்மைப்பாடைக் கடைப்பிடிப்பதில் புனிதமானவர் களுடன் தொடர்பு கொள்வது ஒரு மிகப் பெரிய உதவியாக இருக்கும். கண்டிப்புடன் தற்கட்டுப்பாட்டை அவர்களே கைக்கொண்ட தூய்மையான மனமுடைய மனிதர்களின் தொடர்பானது, முயற்சித்துக் கொண்டிருக்கும் சாதகர்களுக்கு மிகவும் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் இந்தத் தொடர்பினால் நன்மையை அடைவதற்குச் சாதகன் நல்லியல்பு அற்றவர்களின் தொடர்பைத் தவிர்க்க வேண்டும். பிரம்மச்சரியத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்வதற்கு கெட்டவர்களின் தொடர்பை விட அதிகமாக தீங்கு செய்வது ஒருவேளை வேறு எதுவும் இல்லை.

மனத்தின் மட்டத்தில் பாலுணர்வைக் கட்டுப்படுத்துதல்

எப்படி இருப்பினும், உடல் சார்ந்த வகைகளின் மூலம் மட்டுமே ஒருவர் ஒருபொழுதும் பாலுணர்வைக் கட்டுப் படுத்த இயலாது. தனிமனித நிலையின் அமைப்பு முறைக் குள்ளே அதனுடைய வேர்கள் ஆழமாக ஊன்றப்பட்டுள்ளன. இந்தச் சிக்கலை மனமட்டத்தில் சமாளிப்பதுதான் மிக முக்கியமான விஷயம் ஆகும். நம்முடைய வாழ்க்கையில் கற்பனையானது ஆதிக்கத்தை வகிக்கிற பங்காற்றுகிறது என்று நாம் அறிகிறோம். நம்முடைய பொதுவான

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.163,164.

சிந்தனையுடன் பாலியல் பகற்கனவுகள் தவிர பாலியலின் சூட்சுமமான நிழல் உருவங்களும் கலந்துவிடுகின்றன. பிராயிட், ஒரு சராசரி மனிதனின் வாழ்வில் பாலியலின் பங்கைச் சந்தேகத்திற்கு இடமின்றி மிகைப்படுத்தி இருப் பினும் பாலியல் மற்றும் மனிதனின் கற்பனைத் திறமைக்கும் இடையில் ஏதோ தொடர்பு உண்மையிலேயே இருக்கிறது. இந்தத் தொடர்பானது பெரும்பாலும் தவறான தொடர்பு களால் இன்னும் வலியதாகிறது. அதன் விளைவாகப் பல மனிதர்கள் அவர்களைத் தவறானவற்றைப் பற்றியே கற்பனை செய்வதாகக் கண்டு கொண்டுள்ளனர். ஒருவர் தன்னை மருட்சியை ஏற்படுத்தும் எல்லாப் பொருட்களிலிருந்தும் உடல் சார்ந்து விலகி இருந்தால், இவ்வனைத்தையும் குறித்து மனம் நிலைகுலைவதற்கு எதுவும் இல்லை. இருந்தும் தவறான கற்பனைகளும், குற்ற உணர்வுகளும் பல சாதகர் களுக்கு வேதனையை அளிக்கும் பெரிய மூலகாரணங்களாக உள்ளன. ஆனால் அதைப்பற்றியே நினைத்து ஏங்குவது சிக்கலை இன்னும் மோசமானதாகச் செய்துவிடும். கற்பனை என்னும் சிக்கலானது ஒரு முறையான வழியில் சமாளிக்கப் பட வேண்டும்.

மனமானது ஒருபொழுதும் தவறான காட்சிகளை உருவமைத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படக் கூடாது என்பது இங்குக் கவனிக்கதக்க விஷயமாகும். மற்றும் அவற்றைக் குறித்தே ஏங்கிக் கொண்டிருக்கவும் கூடாது. இது அவற்றிற்கு நேர்மாறான எண்ணங்களை ஏற்படுத்திக் கொண் டால் மட்டுமே சாத்தியமாகும். பதஞ்சலி அவருடைய யோக சூத்திரத்தில் நமக்கு அதைத்தான் அறிவுறுத்துகிறார்.

'யோகத்திற்கு எதிரான எண்ணங்களைத் தடை செய்ய அவற்றிற்கு நேர்மாறான எண்ணங்களைக் கொண்டுவர வேண்டும்'[1] இது ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள சாதகர்களுக்கு அவர்களுக்கு உதவத்தக்க முக்கியமான தனிசெய்முறைத்

---

1. விதர்க்கபாதனே ப்ரதிபக்ஷபாவனம் ॥

—பதஞ்சலி யோக சூத்திரம், 2.33.

திறமாக விளங்குகிறது. தொடர்ந்து நல்ல எண்ணங்களை நினைத்துக் கொண்டிருப்பதால் பழைய கெட்ட எண்ணங் களின் வடிவமைப்பு மாற்றப்படுகிறது. நாம் ஏதாவது ஒரு கெட்ட அல்லது தூய்மையற்ற பொருளின் அருகில் உடலளவில் இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் மனத் தளவிலும் உடலளவிலும் அதிலிருந்து வெகு தொலைவிலும் இருக்கலாம். நாம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, நம்மை எண்ண மட்டத்திலேயே தனிப்படுத்திக்கொள்வதற்கு, நாம் ஒரு வலிமையான தடைவேலியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனால் இது போதாது. மற்றும் இது எதிர்மறை யான முறையாகும். நாம் ஒரு எதிர்மறை அல்லாத காரணக் கூறைக் கொண்டுவர வேண்டும். உதாரணமாக நாம் கடவுளைப் பற்றி நினைக்கலாம் அல்லது ஒரு புனிதமான வரைப் பற்றி மிகவும் தீவிரமாக நினைத்து, அந்த எண்ணத் தாலேயே மனம் முழுவதையும் நிறைத்துக் கொள்ள வேண்டும். உடலளவிலும், மனத்தளவிலும் உன்னை இழுத்துக்கொண்டு, அதன்பிறகு உன் முழு மனத்தையும் கவனத்தையும் கடவுளுக்கே அளிக்க வேண்டும். மற்றும் அதை, உன்னை மருளடையச் செய்யும் பொருளை நோக்கி செல்வதற்கு அனுமதிக்கக் கூடாது. நீ உன்னையும் உடலள விலும், மனத்தளவிலும் அதன் அருகில் செல்வதற்கு அனு மதிக்கக் கூடாது. அதன் பிறகு மிகவும் சுலபமான மற்றும் இயல்பான வழியில் நம்மை மருள் அடையச் செய்யும் பொருட்களிலிருந்தும், மனிதர்களிடமிருந்தும் இழுத்துக் கொள்வதற்கும் நமக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு வலிமையான தடைவேலியை ஏற்படுத்திக் கொள் வதற்கும் மற்றும் பாதிக்காமல் இருப்பதற்கும் நாம் கற்றுக் கொள்கிறோம்.

உடலளவில் அருகில் இருப்பதுதான் ஒரே ஆபத்து என்று கூறவியலாது. நம்மை மருளடையச் செய்யும் மனிதர் உடலளவில் நம்மை விட்டு வெகு தொலைவில் இருக்கக் கூடும். ஆனால் அவனுக்கோ அல்லது அவளுக்கோ நம் முடைய எண்ணமட்டத்தில் நாம் மிகப் பெரிய ஈர்ப்பை

உணர்கிறோம். எனவே நம்மை ஈர்க்கும் மனிதரோ அல்லது நம்மை மருளடையச் செய்யும் பொருளோ நம் எண்ண மட்டத்தில் மட்டும் இருந்து, உடலளவில் நம் அருகில் இல்லாமல் இருந்தால், உடல் மட்டத்தில் என்ன செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதோ, அதை அப்படியே சோர்வடையாமல் செய்ய வேண்டும். உதாரணமாக நாம் எந்த வகையிலும் அந்த மனிதரிடம் தொடர்பு கொள்ளுதல் கூடாது. ஆனால் மனத்தளவில் நம்மை அவனிடமிருந்தோ அல்லது அவளிடமிருந்தோ பிரித்துக்கொள்ள வேண்டும். நம்மை மருளச் செய்யும் பொருளிலிருந்து, அதனுடன் தொடர்புடைய எல்லா எண்ணங்களிலிருந்தும் நம்மை, மனத்தை அதிலிருந்து இழுத்துக்கொள்ள வேண்டும். அந்த மனிதனைக் குறித்த வெறுப்பு மற்றும் அருவருப்பு போன்ற உணர்விற்கும் கூட நாம் ஒரு வலிமையான தடை வேலியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மற்றும் அதைச் செய்த பிறகு, நாம் நம்முடைய எண்ணங்களையும், உணர்வுகளை யும் கடவுளுக்கு மட்டுமே அளிக்கிறோமா என்பதையும் கண்காணிக்க வேண்டும். நம்மை மருளடையச் செய்யும் பொருளின்மீது விருப்பமற்ற தன்மையையோ அல்லது அருவருப்பையோ ஏற்படுத்திக் கொள்வது என்பது இறுதி யான தீர்வு இல்லை. ஆனால் பலருடைய விஷயங்களில் விருப்பங்களையும், உணர்வுகளையும் மேன்மைப்படுத்திக் கொள்வதற்கு அது ஒரு படிக்கல்லாக உதவுகிறது என்பதை அது மெய்ப்பிக்கிறது. எனவே அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதை விழிப்புணர்வுடன், திட்ட நோக்கத்துடன் ஒழுங் கான முறையான வழியில் செய்ய வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாத கருத்து ஆகும். அதே நேரத்தில் ஒருவர் அதிகமான அளவில் ஜபம் செய்யலாம், தியானம் செய்ய லாம், பிரார்த்தனை செய்யலாம். மனம் முரண்பட்ட நிலை யில் இருப்பினும், அல்லது அமைதி அற்ற நிலையிலிருப் பினும், மனத்தில் மிகப் பெரிய அளவில் இழுபறி நிலை இருப்பினும் இவற்றை மேற்கொள்ள வேண்டும்.

எப்படியாவது எல்லா சாதகர்களிடமும் ஒரு வலிமையான ஆன்மீக எண்ணத்தின் எதிர்ப்பாய்ச்சல் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

உண்மையைச் சொன்னால் நம்முடைய எல்லாச் சிக்கல்களும் உடலைச் சார்ந்திருப்பதைவிட அதிகமாக மனத்தைச் சார்ந்தவையாக உள்ளன. மனச் சிக்கல்கள் இல்லையெனின், உடல் தொடர்பான சிக்கல்களும் ஒரு பொழுதும் இருப்பதில்லை. வெளிப்புறத் தூண்டுதல்களுக்கு நம்மிடம் உள்ள ஏதாவது உள்ளுணர்ச்சியை வெளிப்படுத்தவில்லை எனின், அது எதுவாக இருப்பினும் நம்மை மருளடையச் செய்யும் எந்தப் பொருளுமே இருக்காது. எனவே தவறு, மற்றவர்களிடம் இருப்பதைவிட, நம்மிடம்தான் அதிகமாக இருக்கிறது.

சிக்கல் தோன்றியவுடன், நம்மால் உயர்ந்த மனப்போக்கை ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை எனின், நாம் உடனடியாக நம்மை அந்த மனிதரிடமிருந்தோ அல்லது நம்மை மருளச் செய்யும் பொருளிடமிருந்தோ இழுத்துக் கொண்டு, அதன் பிறகு அந்த மனப்போக்கை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அத்தகைய எல்லா நிலைகளிலும், வேண்டுமென்றே விழிப்பு உணர்வுடன் நம்மைப் பிரித்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதுமே உயர்ந்த மனப்போக்குடன் இருப்பவர்கள் குறைந்த அளவில்தான் மருட்சியை அனுபவிப்பார்கள். மனிதன் கடவுளை அல்லது தன்னுடைய உயர்ந்த அகநிலைப் பண்பை மறந்து, உலகியல் மட்டத்தில் இருக்கும் பொழுதுதான் அவனுக்குத் தொடர்ச்சியாக மருட்சிகள் ஏற்படுகின்றன. எப்பொழுதுமே புனிதமான கற்பனைகளையும், கருத்துக்களையும் மிகுதியான அளவில் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஏதாவது தேவையற்ற எண்ணமோ அல்லது உணர்வோ தோன்றி, உடல் அல்லது மனமட்டத்தில் சில உணர்வுகளை வெளிப்படுத்த முயற்சி செய்தால், நீ அவற்றை ஆயுதங்களாகப் பயன்படுத்தலாம். ஒரு மனிதன் உன்னை ஈர்க்கிறான் என்று வைத்துக் கொள்வோம். உடனடியாக ஒரு தீவிரமான நேர்மாறான

படத்தைத் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும். அந்த மனிதன் உன்னை கீழ்முகமாக இழுப்பதாகக் கற்பனை செய்துகொண்டு, அதே நேரத்தில் உன் இஷ்ட தெய்வத்தை யும் தீவிரத்துடன் நினைத்துக்கொண்டு, அந்த மனிதனுக்கு எதிராக உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் படத்தைப் பொருத்த வேண்டும். இவ்வாறு உன்னை மருளடையச் செய்யும் பொருளின் சூட்சுமமான ஈர்ப்பை சுலபமான முறை யில் நீக்கி, அதைக் குறித்த எண்ணத்தையும் உணர்வையும் மாற்றுவதற்கு இயலுகிறது. ஆனால் ஒருவர் ஒருவருடைய இஷ்ட தெய்வத்தை மிகத் தீவிரமாக விரும்ப வேண்டும். கடவுளை மிகவும் தீவிரமாக விரும்புகிறவர்கள், உடல் அழகாலோ அல்லது பாலுணர்வாலோ அவ்வளவு சுலப மாகப் பாதிக்கப்படுவது இல்லை.

உனக்குள்ளே எழும் எல்லா வகையான உருவங்களை யும் உன் ஆன்ம ஒளியுடன் இரண்டற இணைப்பது மற்றொரு பயன்தரத் தக்க வழியாகும். அது உன்னுள்ளே எப்பொழுதும் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. மற்றும் அது உன்னுடைய உண்மையான இயல்பை வடிவமைக்கிறது. உணர்வுநிலை யற்ற மனத்தில்தான் மருட்சிகள் தோன்றுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆன்மாவின் பாவொளியை (Search Light) நிழல் படிந்துள்ள எல்லாப் பகுதிகளுக்கும் பாய்ச்ச வேண்டும். ஆன்ம ஒளியில் அங்குப் பதுங்கி உள்ள எல்லா அருவருப் பான உருவங்களும் மறைந்துவிடும் அமிழ்ந்துள்ள எல்லா உருவங்களையும் மேம்பட்ட விழிப்புணர்வின் குவிமையத் திற்குக் கொண்டுவர வேண்டும். மற்றும் அவைகள் உடனடி யாக மறைந்துவிடுவதை நீ அறிந்துகொள்வாய். உயர்ந்த விழிப்புணர்வு நிலைக்கு அத்தகைய பேராற்றல் உள்ளது. ஆனால் வெகு சிலரே இதில் நாட்டம் கொள்கிறார்கள். நம்முடைய உருவங்கள் மெய்யியல்பைப் பெற்றுள்ளன. முழுமையான சிக்கல் இதுவாக உள்ளது. நாம் உருவங்கள் உருவங்கள்தான் என்பதை மறந்துவிடுகிறோம். ஒவ்வொரு உருவமும் தன் இருக்கையிலேயே ஒரு உண்மையான மனிதனாகி ஓயாமல் நம் நினைவில் ஊடாடுகிறது. இந்த

உருவங்களை நாம் வெளியேற்றக் கற்றுக்கொண்டு, மற்றும் நம் வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட வேண்டும். தொடக்கத் தில் இது கஷ்டமானதாக இருக்கலாம். அதன் பிறகு நாம் மற்றொரு நல்ல உருவத்தை கெட்ட உருவங்களை எதிர்த்துத் தடை செய்வதற்கு உள்ளே அழைத்து வர வேண்டும். ஆனால் உருவங்களைத் தடைசெய்து வெளியேற்றும் உத்தியை அனைவரும் என்றாவது ஒருநாள் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீ ஒரு மனிதரிடம் ஈர்க்கப்பட்டுள்ளாய் என்பதை உணரும் பொழுது, நீ அவனையோ அல்லது அவளையோ வெறும் நிழல் என்று கருதினால், திடமற்றது என்று கருதினால், அவனுக்கோ அல்லது அவளுக்கோ உன் மீதுள்ள ஈர்ப்பும், தாக்க விளைவும் மறைந்துவிடும். மற்றும் அந்த சச்சரவு மிகவும் எளிமையானதாகிவிடும். ஆனால் பொது வாக நாம் விழிப்பு உணர்வு குழப்பமடைந்தும் தவறான கருத்துக்களும் நிறைந்து இருப்பின், இதைக்கூட நாம் பல சமயங்களில் செய்ய விரும்புவதில்லை.

பாலுணர்வைக் கட்டுப்படுத்த மேலும் நடைமுறை யோசனைகள்

உன்னுடைய உயர்ந்த மையங்களில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். உன்னுடைய உயர்ந்த விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக்கொள்வாய் (இதயத்தில் அல்லது தலையில்). அதன்பிறகு உன்னை மருட்சி அடையச் செய்யும் பொருளை அல்லது மனிதரை விட நீ உயர்ந்த மட்டத்தில் இருப்பதை உணர்வாய். நீ கீழே வந்தால்தான் பிடிபடுவாய். நீ எப்பொழுதும் உயர்ந்த மட்டத்திலேயே இருக்க வேண்டும். உன்னுடைய விழிப்புணர்வு நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டால் ஏதாவது ஒருவகையான வலிமை மிகுந்த மருட்சியானது மேம்படும். முதலில் நீயே, மற்றவர் களின் கைகளில் விழுவதற்கு முன்பு உயர்மட்டத் திலிருந்து கீழே விழுந்து விடுகிறாய். எனவே எப்பொழுதுமே உயர்ந்த விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

உன்னுடைய மனம் கீழே செல்வதை நீ உணர்ந்தால் நீ உன் மனத்திற்கு 'எதற்காக கீழ் மையங்களில் இருக்க வேண்டும்? மேலே வா' என்று கூற வேண்டும். 'என் மனமே, பாலுணர்வு மற்றும் இன்பங்களில் பின்னால் ஓடும் முட்டாளாக நீ ஏன் இருக்கிறாய்? உனக்கு அதைச் செய்வதற்கு வெட்கமாக இல்லையா? நீ இதைவிட நன்கு அறிந்திருக்க வேண்டும்' என்று அதைப் புகழ்ந்து பேசி, வசப்படுத்த வேண்டும். உன் மனத்தை ஒரு நண்பனைப் போல நடத்த வேண்டும். உள்ளுக்குள் ஒருபொழுதும் பகைவனை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. ஆன்மீக வாழ்வில் நீ உன்னுடைய மனத்தை உன் நண்பனாகவும், உன் உடன் இருப்பவனாகவும் செய்துகொள்ள வேண்டும்.

சில நேரங்களில், முக்கியமாக, உயர்ந்த வகையான கற்பனைகளைச் செய்ய இயலாதவர்களின் விஷயத்தில் மனிதர்களைப் பகுத்து ஆராய்வதில் சில கற்பனைகளை மேற்கொள்வது சிறந்ததாகும். நீ பொருட்களின் அருங்காட்சியகத்திலோ அல்லது ஆய்வுக் கூடத்திலோ மனித எலும்புக் கூட்டைப் பார்த்தது இல்லையா? உன்னை இழுக்கும் அந்த அழகிய உருவத்திற்குப் பதிலாக நீ எலும்புக்கூட்டை எலும்புகளின் வடிவமைப்பை அதன் மந்தமான அசட்டுச் சிரிப்பையும் பார்க்க வேண்டும். நீ விரும்பினால் இரத்தம், குடல்கள், நரம்புகள் மற்றும் மனத்திற்கு ஒவ்வாதவற்றை எலும்புக் கூட்டினுள் சேர்க்கலாம். மொத்தத்தில் இது ஒரு போலியான கற்பனை அல்ல. இது மனித உடலைக் குறித்த உண்மையாகும். நாம்தான் உண்மையை மறந்து விட்டோம். நாம் மேல்தோலைப் பார்ப்பதற்கு மட்டுமே பழக்கப்பட்டு இருக்கிறோம். உடல் உறுப்புக்களின் அமைப்பியலைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்த மருத்துவர்களும் கூட இந்த உண்மையை மறந்துவிடுகிறார்கள்.

பாலுணர்வின் ஈர்ப்பையும், தாக்குதலையும் விஞ்சி மேம்படுவதற்கு உள்ள, மிகவும் பயன் அளிக்கக் கூடிய வழியானது, ஒருவரை ஆன்மா என்று காண்பதுதான் ஆகும். நாம் நம்மிடமும் மற்றும் மற்றவர்களிடமும் நம்

மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் நம்மை ஒரு வேறுபட்ட மற்றும் உண்மையான வழியில் காண முயற்சி செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் நீ உனக்குக் கூறிக் கொள்வாய். 'நான் ஒரு ஆண் அல்ல. நான் ஒரு பெண் அல்ல. நான் உடல் அல்ல. நான் ஆன்மா. நான் வரையற்ற விழிப்புணர்வு மற்றும் எந்த இயல்புகளாலும் கட்டுப்படுத்தப்படாமல் இருப்பவன். நான் சில காலத்திற்குத் தொடர்பு கொள்ள நேர்ந்த இந்த உடல் உருவம் இல்லை, பால் வேறுபாடு அற்றவன் போன்றவற்றைக் கூறிக் கொள்ள வேண்டும். நம்மால் இந்த மாறுதலை நம்முடைய மனப் பாங்கில் கொண்டுவர இயலுமாயின், மற்றும் உண்மை யாகவே அதை உணரவும் தொடங்கினால் அதன்பிறகு நம்முடைய நிலை பாதுகாப்பான தன்மையை அடைகிறது. நீ தியானம் செய்யும் பொழுதும், அதிகாலை நேரத்திலும் உறங்கச் செல்வதற்கு முன்பும் இந்தக் கருத்தை உன்னுடைய மனத்தின் அடி ஆழங்களுக்குள் செலுத்துவாய். முதலில் இவை வெறும் யோசனைகளாக மட்டுமே தோன்றும் ஆனால் இடைவிடாத பயிற்சியானது இந்தக் கருத்தை உன் மனப்பான்மையின் ஒரு பகுதியாகவும் மற்றும் செயல் களிலும், எண்ணங்களிலும் தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

ஒரு குறிப்பிட்ட வகையில் தொடர்ந்து சிந்திப்பது ஒரு வழக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. மற்றும் இது ஒரு முறை செய்யப்பட்டால் மற்ற அனைத்தும் எளிமையாகி விடு கின்றன. ஒருவர் உயர்ந்த மட்டத்தைச் சார்ந்த விழிப்புணர்வு நிலைக்கு உயர்வதற்கு முயற்சித்தால் இத்தகைய சிந்திக்கும் முறையானது மிகவும் பயனுள்ளதாகவும், எத்தகைய பெரிய சிரமமுமின்றியும் செய்யப்படலாம். கங்காருக் குட்டியை எடுத்துக் காட்டாக எடுத்துக்கொள்வாய். எப்பொழுதாவது ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அது அதனுடைய அன்னையின் பையினுள் குதித்துவிடும். உன்னுடைய விழிப்புணர்வு மைய மானது உனக்கு, கங்காருக் குட்டிக்கு அதனுடைய அன்னை யின் பை இருப்பதைப் போல இருக்க வேண்டும். உயர்ந்த விழிப்புணர்வு மையத்தில் ஏதாவது சிக்கல் தோன்றும்

பொழுது உன்னுடைய இஷ்ட தெய்வத்துடன் இருப்பதற்கு முயற்சி செய்வாய். அதன்பிறகு நீ பாதுகாப்புடன் இருப்பாய். மிகவும் வன்மையான முறையில் செயல்பட்டு ஏதாவது தேவையற்ற எதிர்விளைவைத் தேடிக் கொள்ளாமல் இருக்க வேண்டும். நீ இஷ்ட தெய்வத்தைப் பற்றிக் கொண்டு இருப்பதை விடும் கணத்தில், நீ உன் மனத்தைக் கீழே வருவதற்கு அனுமதித்து, உலகத்தின் ஈர்ப்பை உணர்கிறாய். அதன் பிறகு நீ எந்த நிலையில் இருக்கிறாய் என்பதை அறிய இயலாது.

உன்னுடைய எல்லா எண்ணங்களையும் உன் இஷ்ட தெய்வத்திடம் தொடர்புபடுத்திக் கொள்ள நீ கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய இஷ்ட தெய்வத்தைத் தீவிரமாக விரும்புபவர்கள், காமத்தால் தொல்லைப்பட மாட்டார்கள். இலட்சியத்தை விரும்ப இயலாத தன்மைதான், அது அருவமாக இருப்பதால்தான் மனிதர்களுக்குக் கண்டிப்புடன் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பதற்குக் கஷ்டமாக இருப்பதன் முக்கியமான காரணங்களில் ஒன்றாக விளங்குகிறது.

நாம் நம்முடைய புலன்களுடனும் மற்றும் சில வெளிப்புற ஈர்ப்புக்களுடனும் போராடிக் கொண்டு இருக்கும் பொழுது, நம் கையில் பயன்படுத்துவதற்கு பல ஆயுதங்கள் இருக்க வேண்டும். ஒரு ஆயுதத்தை மட்டுமே நம்பியிருத்தல் கூடாது. ஜபம், சில புனிதமான பகுதிகளைத் திரும்பத் திரும்பக் கூறுவது அல்லது பிரார்த்தனை அல்லது தீவிரமான ஒருமுனைப்பாட்டுடன் புனிதமான ஒரு மனிதரைக் கற்பனை செய்துகொள்ளுதல், ஒழுங்கான லயத்துடன் மூச்சு விடுதல், புனிதமானவர்களுடன் தொடர்பு கொள்ளுதல், எதிரான இயல்புடைய எண்ணங்களை தோற்றுவித்துக் கொள்ளுதல், போன்ற இவைகளில், சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல ஏதாவது ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

விழிப்புணர்வில் மாற்றம் — இறுதித் தீர்வு

நாம் தற்கட்டுப்பாட்டைப்பற்றி மேலே விவாதித்து இருப்பது ஆன்மீக வாழ்வில் தொடக்க நிலையில்

இருப்பவருக்குச் சுட்டப்பட்டு இருப்பது ஆகும். சாதகன் சிக்கலின் ஆழத்திற்குச் செல்லுவதற்கு முன்பு இத்தகைய ஆரம்பநிலைப் பயிற்சிகள் மிகவும் அவசியமானதாகும். எப்படியிருப்பினும், இறுதியான தீர்வு என்பது விழிப்புணர்வின் மாற்றத்திலேதான் இருக்கிறது. பாலுணர்வு என்பது உடல் உணர்வின் ஒரு பகுதியாக மட்டும் உள்ளது. மற்றும் இந்த உடல் உணர்வை விஞ்சி மேம்படாவிட்டால், எண்ணத்திலும், செயலிலும் முழுமையான தற்கட்டுப்பாடு என்பது மிகவும் கஷ்டமானதாகும். சாதகன், ஆன்மீக விழிப்புணர்வை அனுபவிக்கவில்லை எனின் மற்றும் அவனுடைய உடல்தொடர்பான உணர்வு, மேல்மட்ட விழிப்புணர்வாக மாற்றப்படவில்லை எனின், பாலுணர்வு என்னும் கருத்தானது ஏதாவது ஒரு வகையில் நீடித்திருக்கும்.

அனாஹத சக்கரம் அல்லது இதயமையம் விழிப்படைய வேண்டும். புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒளியின் இன்பத்தை ஒருவர் அனுபவிக்க வேண்டும். சாதகனால் ஆன்மீக அனுபவத்தின் இன்பமானது துய்க்கப்பட்ட பிறகு பாலுணர்வுச் சிக்கலுக்கு மூலகாரணமாக உள்ள இன்பங்களுக்கான ஆசையானது மறந்துவிடுகிறது. பிரம்மச்சாரியைப் பொறுத்தமட்டில், மற்ற எல்லா ஆசைகளும் ஒரு விதமான நிறைவு நிலையை அடைகின்றன. ஆனால் பாலுணர்விற்கான ஆசை நிறைவடைவதில்லை. அவன் இதயத்தாமரையின் இன்பத்தை அனுபவித்தால்தான் இந்தச் சிக்கலுக்கான தீர்வு ஏற்படும். இதயமையம் விழிப்படையும் பொழுது, ஒருவர் ஆன்ம ஒளியைக் காணலாம். அந்த ஒளியின் பேரெழிலிலும், சீர்மையிலும் உடலழகும், புலனின்பங்களின் விருப்பமும் மறைந்துவிடுகின்றன. பல ஆண்கள் பெண்கள்பால் உணரும் கவர்ச்சியைச் செயலற்றுப் போகச் செய்ய இதுவே ஒரே வழியாகும்.

சாதகன் அத்தகைய உயர்ந்த அனுபவத்திலிருந்து கீழே வரும்பொழுது, அந்த உயர்ந்த நிலையின் நினைவு அவன் மனத்தில் நீடித்திருக்கும் மற்றும் அவனை உலகியல் மருட்சிகளிலிருந்து பாதுகாக்கும். அதன்பிறகு அவனுக்கு

அது சாரமற்றதாக, அற்பமானதாகத் தோன்றும். அதன் பிறகு அவன் புலனின்பங்களுக்குப் பதிலாக ஆன்மீக இன்பத்தைத் தான் விரும்புவான்.

எனவே தற்கட்டுப்பாட்டுச் சிக்கலானது நேரடியான ஆன்மீக அனுபவமான பெரிய சிக்கலுடன் தொடர்புடையது. ஆன்மீக அனுபவத்தை எப்படிப் பெறுவது, அவனுடைய உடல் தொடர்பான உணர்வை எப்படி மாற்றுவது, உயர்ந்த மையத்தை எப்படித் திறப்பது மற்றும் உயர்ந்த மட்டத் திலேயே மனத்தை எப்படி நிலைநிறுத்திக் கொள்வது என்பதுதான் சாதகனின் முதன்மையான அக்கறையாக இருக்க வேண்டும். இந்த ஒப்புயர்வற்ற முக்கியமான வேட்கை அவன் மனம் முழுவதிலும் இடம் பெறும் பொழுது மற்றும் அவனுடைய கற்பனையை பற்றிக் கொள்ளும் பொழுது பாலியல் குறித்த சிக்கலானது நலிவுற்றுப் படிப்படியாகத் தேய்ந்துவிடும்.

14

வலிமை

ஆன்மீகத்தில் நாட்டமுடைய சாதகனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத தகுதிகளில் வலிமையும் ஒன்றாகும். உடல் வலிமை மற்றும் மன வலிமையாகும். ஆன்மீக வாழ்க்கையில் பலவீனமானவர்களுக்கு இடமில்லை. 'இந்த ஆன்மா, வலிமையற்றவனால் அடையப்படுவதில்லை' என்று உபநிஷதம் கூறுகிறது.[1]

உடல் வலிமை:

முதலில் உடல் வலிமையானதாக இருக்க வேண்டும். நீ மற்போர் வீரனாக இருக்க வேண்டாம். ஆனால் ஆன்மீகப் பயிற்சியில் உள்ளடங்கியுள்ள பெரிய அளவில் ஏற்படும் மனசிரமத்தையும், முயற்சிகளையும் தாங்கக் கூடிய அளவிற்கு உடலானது ஆரோக்கியமாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும். உன் உடலைத் பொறுத்தமட்டில், எதிர்மறை மனப்பான்மையைக் கொள்ளக் கூடாது. உன்னுடைய இந்த உடலானது மிகவும் உன்னதமானதாகும். கடவுள் உறையும் கோயிலாகும். நீ உன்னை உன் உடலுடன் அடையாளம் கண்டுகொள்ளத் தேவையில்லை. நீ குடிகொண்டுள்ள ஒரு வீடாக அதைப் பாவிக்கலாம். அல்லது நீ இயக்கும் ஒரு கருவியாகவும் பாவிக்கலாம். அதைத் தூய்மையாகவும், சீராகவும் வைத்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து பயிற்சிகளைச் செய்ய வேண்டும். ஆசனங்கள் (யோகப்பயிற்சிகள்) சந்தேகத்திற்கு இடமின்றி நன்மையைச் செய்கிறது. ஆனால் உன்னால் எல்லா ஆசனங்களையும் செய்ய இயலவில்லை

1. நாயமாத்மா பலஹீனேன லப்ய: ॥

—முண்டக உபநிஷதம், 3.2.4.

எனின், சில எளிமையான ஆசனங்களைத் தூய்மையான காற்றோட்டமுள்ள இடத்தில் செய்யலாம். ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ள சாதகர்களுக்கு அவர்களுடைய உடல்நலத்தைப் புறக்கணிக்கும் இயல்பு உள்ளதால் நான் உனக்கு இதையெல் லாம் கூறுகிறேன். உன்னுடைய ஆன்மீக முயற்சியின் தொடக்க நாட்களில் பலவிதமான முரண்பாடுகளுக்கிடை யில் நீ இருக்கும்பொழுது, வலிமையான உடலமைப்பின் தன்மையை நீ உணராமல் இருப்பாய். அதன்பிறகு உன் ஆன்மீக வாழ்வானது இணக்கமானதாகவும், மற்றும் நீண்ட நேரத்திற்குத் தியானப் பயிற்சி செய்யும் திறனையும் நீ பெற்ற பிறகு, ஒரு ஆரோக்கியமான உடல் எத்தகைய சொத்து என்பதை உணர்வாய்.

நம்முடைய உடலானது ஒரு படகைப் போன்றது ஆகும். அது உலகியல் வாழ்வு என்னும் கடலைக் கடப்பதற்கு உறு துணையாக உள்ளது. அதில் ஓட்டை விழாமல் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். வயிற்றை அதிகச் சுமை யால் நிறைப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஊட்டம் மிகுந்த ஆனால் இலேசான உணவை உட்கொள்ள வேண்டும். எல்லா வகையான சலுகைகளையும் தவிர்க்க வேண்டும். மூளையை வலிமையாக்கவும், குளிர்ச்சியாக்கவும் கண்டிப்புடன் கூடிய பிரம்மச்சரியம் அவசியமானதாகும். பிரம்மச்சரியத்தை மேற்கொள்ளாதவர்கள், அவர்களுடைய மூளை விரைவாகச் சூடாவதை உணர்வார்கள். பிரம்மச்சரியம் இல்லாமல், தொடர்ந்து செய்யப்படும் தியானத்திற்குத் தக்க ஆற்றலை மூளையால் பெற இயலாது.

நன்றாகப் பயிற்சியளிக்கப்பட்ட குதிரையின் மீது சவாரி செய்வது மகிழ்ச்சியளிப்பதைப்போல ஆரோக்கியமான நல்ல கட்டுப்பாட்டுடன் கூடிய உடலுடன் வாழ்வதும் மேம்பட்ட மகிழ்ச்சியின் ஆதாரமாக உள்ளது. புலனின்பங்களையே விரும்புபவர்களுக்கு தற்கட்டுப்பாட்டுடன் கூடிய தூய்மை யான உடல் எந்த அளவிற்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதைக் குறித்த எண்ணம் இருப்பதில்லை. தொடக்கத்தில் தற்கட்டுப்பாடும், தூய்மைப்பாடும் மனஉலைவிற்கும்,

துன்பத்திற்கும் காரணமாக இருக்கக்கூடும். ஆனால் சில காலத்திற்குப்பிறகு அவை மேம்பட்ட மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் நிறைவிற்கும் ஆதாரமான விளங்குகின்றன.

ஐயத்திற்கு இடமின்றி ஒரு ஆரோக்கியமான மற்றும் உறுதியான மனமும் மிகவும் முக்கியமானதாகும். பலவீன மான மனம் உடையவர்களால் ஒரு உயர்ந்த இலட்சியத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கு உயர்ந்த விலையை அளிக்க இயலாது. ஆன்மீக வாழ்வில் அடங்கியுள்ள முயற்சிகளாலும் தியாகங்களினாலும் அவர்கள் அச்சப்படுகிறார்கள். உன் மனத்தை உறுதிப்படுத்திக் கொள்வாய். உன்னுடைய தன்னடக்க ஆற்றலை உறுதி செய்து கொள்வாய்.

மன உறுதிக்கான சோதனைகள்
—நம்பிக்கையும் விடா முயற்சியும்

நம்பிக்கையும், விடாமுயற்சியும் மன உறுதிக்கான சோதனைகளில் ஒன்றாகும். ஒரு வலிமையான மனத்தால் மட்டுமே உறுதியான நம்பிக்கையைப் பெற்றிருக்க வியலும். 'கடவுளின் உலகத்தில் ஏதோ ஒன்றைச் சாதிக்கக் கூடிய ஒரு மனிதனாவேன்' என்று நீ உறுதியுடன் நம்ப வேண்டும். ஆன்மீக வாழ்வில் வெற்றி என்பது ஆன்மீக இலட்சியத்தை உறுதியாகவும், தொடர்ந்தும் நாம் பற்றிக் கொண்டிருப்பதைச் சார்ந்து உள்ளது. ஒப்பீட்டு மட்டத்தில் எல்லாக் குழப்பங் களுக்கும் அறியாமைக்கும் நடுவில், வரையறுக்கப்பட்ட போக்குடன் கூடிய செயல்பாடு சிந்தனை உணர்வு மற்றும் விருப்பங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இல்லை யெனில், ஆன்மீக வாழ்வு இல்லாமல் போய்விடும். ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகர்கள், பெரும் விருப்பத் துடன் தொடங்குகிறார்கள். ஆனால் அவர்கள் பலவகையான தடைகளைச் சந்திக்கும் பொழுது அவர்களுடைய ஆர்வத்தின் வேகம் மறைந்துவிடுகிறது. பெரும்பாலும் அவர்களே ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அடுத்து அடுத்து இவ்விதம் நடைபெறுவதைக் காண்கிறோம். மிகப் பெரிய அளவில் உறுதியுடன் கூடிய நோக்கம் தேவைப்படுகிறது. சுவாமி

விவேகானந்தர் எப்பொழுதும் அவரைப் பின்பற்றுபவர் களின் வாழ்வில் இதை வலியுறுத்தியுள்ளார்.

மிகச் சிறந்த அருள் போதகர்களின், புனிதர்களின் வாழ்க் கையைப் பாருங்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையைப் பாருங்கள். எத்தனை வியப்பிற்குரிய மனவலிமையையும், இயற்கையை மீறிய உறுதியையும் அவர்கள் பெற்றிருந்தனர்! ஆன்மீக வாழ்வில் வெற்றியடைவதற்கு நமக்கு அவர்களைப் போன்ற மனஉறுதி யும் மனத்திட்பமும் தேவையாகும். நாம் தோல்வி அடைந் தாலும் நாம் தோல்வியை ஒத்துக்கொள்ளக் கூடாது. மற்றும் ஒருபொழுதும் போராட்டத்தைக் கைவிடுதல் கூடாது. நாம் கீழே விழுவோம். ஆனால் மீண்டும் எழுந்துவிடுவோம். ஆன்மீக வாழ்வானது மிகவும் அபூர்வமாகத்தான் தடங்க லின்றிக் கடந்து செல்லத் தக்கதாக உள்ளது. அது எப்பொழு தாவதுதான் நேர்ப்பாதையில் செல்கிறது. ஆனால் நீ தொடர்ந்து வீழ்ச்சியடைவதற்கு இதை ஒரு சாக்குப்போக்காக வைத்துக்கொள்ளக் கூடாது. உன்னுடைய முயற்சிகளில் நீ விடாப்பிடியுடன் இருந்தால் மற்றும் ஒவ்வொரு முறை வீழ்ச்சியடையும் பொழுதும் எழுந்திருக்கக் கற்றுக்கொண் டால் நீ மிகச்சிறந்த மன வலிமையையும் மற்றும் பகுத்து ஆராயும் ஆற்றலையும் பெறுவாய்.

முடிவுகளை எடுக்கும் திறமை

உறுதியான முடிவுகளை எடுக்கும் திறமை மனவலிமை யின் இரண்டாவது சோதனையாகும். உறுதியற்ற தன்மை, எப்பொழுதும் பலவீனமான மனத்தின் அடையாளமாகும். அது உன்னிடம் உறுதியற்ற முரண்பாடுகள் உள்ளன என் பதைக் காட்டுகிறது. மற்றும் முரண்பாடுகள் ஆளுமையின் ஒருங்கிணைப்பைப் பாதிக்கின்றன. நாம் நீண்ட காலத்திற்கு முடிவு எடுக்கத் தெரியாத நிலையில் இருந்தால் உறுதியை அடைவதற்குப் பதிலாக பலவீனமாகி விடுவோம். முடிவு எடுக்கத் தெரியாத நிலையில் இருந்துகொண்டு, அதற்குப் பிறகு உன் மனத்தை உறுதிப்படுத்த முயற்சிப்பது

முட்டாள்தனமாகும். நாம் சிறிய விஷயங்களில் தீர்மானிக்கும் ஆற்றல் உள்ளவராக இருக்க வேண்டும். அதன்பிறகு பெரிய விஷயங்களைப் பற்றி முடிவு எடுப்பது நமக்கு சுலபமாக இருப்பதை நாம் உணர்வோம். வாழ்க்கையிலே மிகச் சிறிய விஷயமும் விழிப்புணர்வுடனும் அறிவுபூர்வமாகவும், ஐயமின்றி உறுதியுடனும் மற்றும் சிந்தித்தல், உணர்தல், விரும்புதல் போன்ற இயல்பான வலிமைகளை ஒன்றுபடுத்தியும் செய்யப்பட வேண்டும். வாழ்க்கையின் தொடக்க காலத்திலேயே நல்ல பழக்கவழக்கங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். நன்றாக ஒழுங்குபடுத்தப் பட்ட வாழ்வானது மிகவும் உறுதுணையாக இருக்கும். நாம் ஒவ்வொரு நாளும் கண்டிப்புடன் கூடிய நடைமுறையைப் பின்பற்றினால், வாழ்க்கையின் பல சிறிய சிக்கல்கள் முடிவு எடுக்கத் தெரியாத நிலையையும், கவலைகளையும் ஏற் படுத்தாது. அதன்பிறகு நமக்குப் பெரிய விஷயங்களுக்கு அதிகமான ஆற்றலும், நேரமும் கிடைக்கிறது. என்ன சாப்பிடுவது, எதை உடுப்பது, எப்படிப் பேசுவது, எப்படி உட்கார்ந்து கொள்வது போன்றவற்றைப் பற்றி முடிவு எடுக்கவே கஷ்டப்படுபவர்கள். அத்தகைய மனிதர்களால் தொடர்ந்து எப்படிக் கடவுளைப் பற்றிச் சிந்திக்க இயலும்? நாம் படுக்கையில் படுத்துக்கொண்டு, அரைமணி நேரத்திற்கு 'நான் எழுந்திருக்க வேண்டுமா, அல்லது வேண்டாமா' என்று சிந்தித்துக் கொண்டு இருக்கக் கூடாது. ஒன்று உடனடியாக எழுந்திருக்க வேண்டும். அல்லது இன்னும் அரைமணி நேரத்திற்குத் தூங்க வேண்டும். ஆனால் முடிவு எடுக்கத் தெரியாத நிலையில் இருக்கக் கூடாது. 'தியானம் செய்வதற்கு உட்கார வேண்டுமா அல்லது உட்கார வேண்டாமா?' என்று எண்ணாமல் உடனடியாக முடிவு எடுக்க வேண்டும். முடிவு எடுக்காமல் இருப்பது மிகவும் தீங்கினை ஏற்படுத்தும்.

வாசிப்பது, தியானம் செய்வது, வேலை செய்வது போன்றவற்றை ஒழுங்கான நேரங்களில் செய்ய நீ நாட்டம் கொண்டாலும், நாட்டம் கொள்ளாமல் இருந்தாலும் செய்ய வேண்டும். வாழ்க்கையின் சிறிய விஷயங்கள் உன்னைத்

தொடர்ந்து தொல்லைப்படுத்தி, உன்னுடைய ஆற்றல்களை எல்லாம் வீணாக்காமல் இருக்க வேண்டும்.

நல்ல எண்ணங்களையும் கட்டுப்படுத்தும் திறமை

கெட்ட எண்ணங்களையும், தூண்டுதல்களையும் கட்டுப் படுத்துவதற்கு மட்டுமின்றி, நல்ல எண்ணங்களைக் கட்டுப் படுத்துவதற்கும் வலிமை வேண்டும். நாம் அடுத்தடுத்துத் தங்களுடைய நல்ல உணர்வுகளையும், தூண்டுதல்களையும் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாதவர்களால் தங்களுடைய கெட்ட உணர்வுகளையும் தூண்டுதல்களையும் கட்டுப் படுத்த இயலாதவர்களாக இருப்பதையும் காண்கிறோம். உணர்வுகள், நல்லவையாக இருப்பினும் அல்லது கெட்டவை யாக இருப்பினும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவை களைக் கட்டுப்படுத்துவதற்கு நம் ஆற்றல் அதிகரிக்கப்பட வேண்டும் மற்றும் அதுதான் மிக முக்கியமான விஷயமும் கூட. நாம் முழுமையான விழிப்புணர்வுடனும், உறுதி யுடனும் நம்முடைய உணர்வுகளின் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும்.

நம்மால் ஒரு நல்ல உணர்ச்சிக் கனிவை நம்முடைய மனத்தின் ஆழத்தில் செலுத்த முடிந்தால், அது நம்முடைய வாழ்வையே வண்ணமுறச் செய்துவிடும். நல்ல உணர்ச்சிக் கனிவுகள் நல்ல அனுபவங்களாவதால் அவற்றை உள்ளேயே நிறுத்தி வைக்க வேண்டும். நாம் அவைகளை அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டால் நாம் அவற்றின் இயங்கும் ஆற்றலை இழந்து விடுவோம். ஒரு நீராவி இயந்திரத்தின் இயங்கும் சக்தியானது, அதனுடைய ஆற்றல் வாய்ந்த அழுத்தத்திலிருந்து வருகிறது. நீராவியானது விரைவாக வெளியேற்றப்பட்டுவிட்டால் அதில் எத்தகைய இயங்கும் ஆற்றலும் இருக்காது மற்றும் அந்த இயந்திரம் நகர்வதற்கும் மறுக்கும். நாம் புத்தகங்களிலிருந்தும், புனிதமான மனிதர் களின் தொடர்பாலும், மற்றும் நம்முடைய ஆன்மீகப் பயிற்சிகளிலிருந்தும் பெறும் புனிதமான உணர்வுகளையும், கருத்துக்களையும் நம்முடைய இயல்புகளில் தேவைப்படும்

பயன்தரத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் வரையில் நம்முள்ளே நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். அதனால்தான் ஒருவர் அவருடைய கனவு அனுபவத்தையும் அல்லது ஆன்மீக அனுபவத்தையும் மற்றவர்களிடம் கூறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுவாக மனிதர்கள் அவர்களுடைய அனுபவங்கள் என்று கூறப்படுவனவற்றை மற்றவர்களிடம் பரிமாறிக் கொள்கின்றனர். இது ஒரு வகையான மகிழ்ச்சியாகும். இந்த மகிழ்ச்சியால் ஆன்மீக வாழ்விற்குப் பெருமளவில் எத்தகைய பயனும் இல்லை. ஆன்மீகத்தில் உண்மையான ஈடுபாடு கொண்ட சாதகர்கள் அவர்களுடைய ஆன்மீக உணர்வுகளைக் குறித்து உறுதியாகவும், தற்கட்டுப்பாட்டுடனும் இருப்பார்கள். அவர்கள் வெளிப்புறத்தில் தன்னடக்கத்துடன் இருப்பினும், உள்ளுக்குள் தீவிரமாக அதை உணர்வார்கள்.

உன் மனத்தில் திடீரென்று எழும் உன்னதமான உணர்ச்சியை உன்னால் கையாள்வதற்கு இயலவில்லை எனின், நீ ஒரு கெட்ட உணர்ச்சிக்கோ அல்லது தூண்டுதலுக்கோ உன் மனத்தில் அது தோன்றியவுடனேயே அதற்கு அடி பணிந்து விடுவாய். முதலில் மேம்பட்ட, நீ விடாப்பிடியுடன் மூலதன தளத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்பிறகு வட்டியைச் செலவழிக்க வேண்டும். முதலில் உன்னிடம் மிகப் பெரிய அளவில் சேகரிக்கப்பட்டுள்ள மூலதனம் இருக்க வேண்டும். இல்லையெனின், நீ மூலதனத்தையே செயவு செய்தால் ஓட்டாண்டி ஆகிவிடுவாய். உணர்வுகளைப் பெரிய அளவில் வைத்திருப்பாய். ஆனால் உன்னுடைய உணர்வுகளின் எஜமானனாக நீ இருக்க வேண்டும்.

அச்சமற்ற தன்மை

அச்சமற்றதன்மையானது மனஉறுதியின் மற்றொரு அடையாளமாகும். சில நேரங்களில் பயத்தின் மூலமே நம்முடைய சக்தியானது அதிக அளவில் இழக்கப்படுகிறது. நாம் மிகவும் தைரியத்துடன், நாம் மிகவும் பாதுகாப்புடன் இருக்கிறோம் என்று நினைக்கக் கூடாது. ஆனால் எந்த

மனிதன் வீழ்ந்து விடுவோம் என்று எப்பொழுதும் அஞ்சுகிறானோ அதிகமான தன்னம்பிக்கை உடையவன் நிச்சயமாகத் தவறுவதைப்போல அவன் நிச்சயமாக விழுந்து விடுவான். நாம் மேலும் மேலும் உயரும்பொழுது, நாம் தவறி விழும் ஆபத்து எப்பொழுதும் உள்ளது. ஆனால் தொடர்ந்து வீழ்ந்து விடுவோம் என்னும் அச்சத்தால் விரட்டப்படுவதற்கு அது காரணம் இல்லை. ஒப்பீட்டு மட்டத்தில் ஒருவிதமான பாதுகாப்பும் இல்லை. எத்தகைய பாதுகாவலும் இல்லை. கடவுள் தரிசனம் மட்டுமே நமக்கு முழுமையான அச்சமற்ற தன்மையை ஏற்படுத்தும். பிரஹதாரண்யக உபநிஷதத்தில் ஒரு பகுதி உள்ளது, 'ஜனகரே, நீர் இப்பொழுது அச்சமற்ற தன்மையை அடைந்துவிட்டீர்'.[1] ஒருவர் ஆன்மஞானத்தை அடைந்தபிறகு, இத்தகைய முழுமையான அச்சமற்ற தன்மையை அடைகிறார். உபநிஷதங்கள் அச்சமற்ற தன்மையைப் பரம்பொருளுடன் அடையாளம் கண்டு கொள்கின்றன. 'உண்மையிலேயே அச்சமற்றதன்மையே கடவுள்.'[2] மற்றொரு உபநிஷதம், 'ஒரு மனிதன் இருமையை உணரும் பொழுது அச்சம் ஏற்படுகிறது' என்று கூறுகிறது.[3]

நாம் எந்த அளவிற்கு நம் உண்மையான இயல்பை உணர்கிறோமோ, அந்த அளவிற்கு நாம் கடவுளை எல்லா இடங்களிலும் காண்போம். மற்றும் அந்த அளவிற்கு அச்சமற்றவர்களாகவும் ஆகிறோம்.

மற்றொரு வகையான அச்சமும் உள்ளது. மற்றவர்களைக் குறித்த அச்சம் உள்ளது. 'மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?' மற்றவர்கள் அவர்கள் விரும்பும் எதையாவது நினைத்துக் கொள்ளட்டும். நீ தேர்ந்தெடுத்துள்ள பாதை சரியானது என்று நீ முழுமையாக நம்பினாய் எனின்,

---

1. அபயம் வை ஜனக ப்ராப்தோஸி
—பிரஹதாரண்யக உபநிஷதம், 4.2.4, 4.4.22.
2. அபயம் வை ப்ரஹ்ம; —பிரஹதாரண்யக உபநிஷதம், 4.4.25.
3. யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி ॥
—தைத்திரீய உபநிஷதம், 2.7.1.

உன்னைப்பற்றி மற்றவர்கள் எதையாவது கூறினாலும், நினைத்துக் கொண்டாலும் நீ ஏன் அதைப் பொருட்படுத்த வேண்டும்? நீ மற்றவர்களுக்கு உன்னுடைய முழுமையான வாழ்க்கையைப் பாதிக்கத்தக்க கொள்கைகளில் ஒரு பொழுதும் விட்டுக் கொடுக்கக் கூடாது. குறுகிய மனப் பான்மையுடைய மனிதர்களிடம் உள்ள பயத்திற்காக ஆன்மீக வாழ்வின் செல்வங்களை இழந்துவிடக்கூடாது. ஸ்ரீராம கிருஷ்ணருடைய அமுத மொழிகளில் குருதேவர் நரேந்திர னுக்கு, ஒரு யானையானது, நாய்க்குட்டிகளின் குரைப்பைக் கண்டு எந்த அளவிற்குப் புறக்கணிக்குமோ அதைப்போல மற்றவர் அவன்பால் காணும் குறைபாடுகளை அதே போன்று புறக்கணிக்க வேண்டும்[1] என்று கூறியுள்ளதைக் காணலாம். மேலும் குருதேவர், சாதகனுக்கு வெட்கம், வெறுப்பு, பயம் போன்றவை இருக்கும்வரையில் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைய முடியாது என்றும் கூறியுள்ளார்.[2]

எல்லா மனிதர்களையும் நிறைவு செய்வது என்பது இயலாததொன்றாகும். சிலர் நம்முடன் ஒத்துப் போகாவிட் டால் பலர் நம்முடன் ஒத்துப்போவார்கள். எப்படியிருப் பினும், எல்லாக் கருத்தக்களையும் ஆராய்ந்து நாம் நினைப் பதுதான் சரி என்பதை நாம்தான் செய்ய வேண்டும். ஒரு மனிதன், அனைவரின் மனங்களுக்கும் உகந்ததாக இருப்ப தற்கு முயற்சி செய்தால் அவனிடம் நிச்சயமாக ஏதோ தவறு உள்ளது என்று அந்த அளவிற்குச் சில சமயங்களில் கூறிவிடு வேன். பரம்பொருளின் பெருஞ்சிறப்பை நம்மிடம் நாம் பிரதிபலிப்பதற்கு முயற்சி செய்தால், மற்றவர்கள் தன்னிச்சை யாகத் தங்களின் மனப்பாங்கை நம்மை நோக்கி மாற்றிக் கொள்வதை நாம் காணலாம்.

மற்றவர்களுடன் நடைமுறைத் தொடர்பு கொள்வதில் நம்முடைய சமநிலையை நிலைநிறுத்திக் கொள்வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்கு நன்மை

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.15,16.*
2. *மேற்கண்ட நூல், 2.121.*

செய்யவோ அல்லது உதவுவதற்கோ முயற்சி செய்ய வேண்டும். நாம தன்னலமற்றவர்களாக இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய வலிமையைப் பற்றி மற்றவர்களை நம்பவைப்பதிலும் உறுதியாக இருக்க வேண்டும். மற்ற வர்கள் நம்மிடம் தகாதமுறையில் நம்மால் பயனடையத் துணிவு கொள்ளாமல் இருக்குமாறு நம்முடைய மனப் பான்மையும், வலிமையும் இருக்க வேண்டும்.

மற்றவர்கள் நமக்கு ஒரு அநியாயத்தைச் செய்யும் பொழுது அல்லது அவர்கள் ஏதாவது தவறு செய்யும் பொழுது நாம் அமைதியாக இருக்க விரும்பினால் நாம் வலிமையுடையவர்களாக இருக்க வேண்டும். நாம் எதிர்ச் செயலைச் செய்ய வேண்டுமாயின், நாம் வலிமையுடன் இருக்க வேண்டும். இந்த இரு நிலைகளிலும் வலிமையுட னிருப்பது அவசியமானதாகிறது. நாம் திருப்பித் தாக்காமல் இருப்பினும், மற்றவர்கள் இந்த வலிமையை உணரும் அளவிற்கு நாம் அத்தனை வலிமையுடன் இருக்க வேண்டும். அமைதியாக இருப்பதற்கு ஒரு வழி உள்ளது. அது மற்ற வனை உன் வலிமையை உணருமாறு செய்வதுடன், அவ னுடைய தவறையும் உணருமாறு செய்ய வேண்டும். அவன் மீண்டும் உன்னைத் தகாத வழியில் பயன்படுத்திக் கொள்ளத் துணிய மாட்டான். நாம் நம்முடைய வலிமையை மற்றவர் களை நம்முடைய உறுதிப்பாடாலும், பெருந்தன்மையாலும் உணரச் செய்ய வேண்டுமே தவிர, முன்னாராய்வு செய்யாமல் இருப்பதாலோ அல்லது வலிய செயல்களாலோ உணரச் செய்யக் கூடாது. நாம் வாழும் இவ்வுலகமானது மிகவும் கேடு நிறைந்ததாகவும், தூய்மையற்றதாகவும் உள்ளது. நாம் பலவீனமானவர்களாக இருந்தால் அது எப்பொழும் நம்மைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்யும். எனவே சாதகன் முதலில் வலிமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உண்மையான உள்வலிமையை வளர்த்துக் கொள்ள வேண் டும். தோல்வியை ஏற்றுக்கொள்ளாத வலிமை வேண்டும். உன்னிடம் ஒரு அரக்கனிடம் உள்ள வலிமை இருக்கலாம். ஆனால் நீ அந்த அரக்கனைப் போல அதைச் துணிச்சலுடன்

பயன்படுத்தக் கூடாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அகிம்சை

இத்தருணத்தில் நாம், வலிமையின் மற்றொரு அடையாளமான அகிம்சையின்பால் வருகிறோம். நீ கோழைத் தனத்தால் அகிம்சையைப் பின்பற்றினால், அது தகுதியுடையது ஆகாது. உண்மையான அகிம்சை என்பது மிகப் பெரிய வலிமை மற்றும், மனிதனால் அடையத்தக்க பொறுமையின் ஆற்றலுமாகும். அது மிகச் சிறந்த வீரமும், மிகச் சிறந்த அன்பும் இணைந்துள்ள நிலையாகும். அது முற்றிலும் வெறுப்பற்ற தன்மையைக் குறிப்பதாகும். பகவக் கீதையில் இதைத்தான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு அறிவுறுத்த முயற்சி செய்தார். அவர் அவனை, அவனுடைய கடமையைச் செய்யுமாறு வற்புறுத்தினார். அது அவனுடைய விஷயத்தில், மற்றவர்களை வெறுக்காமல் போர்புரிவதாக அமைந்தது.

வெறுப்பும், பிணைப்பைப் போல அத்தனை மோசமானதுதான். கோபமானது காமத்தைப் போல அத்தனை மோசமானதுதான். இதைக் குறித்து ஒருபொழுதும் தவறு செய்தல் கூடாது. நீ ஆன்மீக வாழ்வை மேற்கொண்டு இருக்கும் பொழுது, ஒருவருடைய வழியிலும் குறுக்கிடாமல் இருக்க வேண்டும். அவன் யாராக இருந்தாலும் யார் ஒருவருக்கு எதிராகவும் பகைமையை அல்லது வெறுப்பைத் தூண்டிவிடாதே. மற்றவர்களை முன்னேற வியலாமல் தடுத்து நிறுத்தாமல் இருப்பாய். உன்னுடைய ஆதாயங்களுக்காக, விருப்பங்களுக்காக மற்றவர்களைப் பலி கொடுக்காமல் இருப்பாய். அல்லது உனக்கு வேண்டப்பட்டவர்களின் ஆதாயங்களுக்காக மற்றவர்களைப் பலி கொடுக்காமலிருப்பாய். விலங்கினப் பரப்பில் வாழ்க்கைப் போராட்டம் என்பது தேவையானதாக இருக்கலாம். ஏனெனில் அங்கு 'தகுதியுடையவை தப்பிப் பிழைத்தல்' என்னும் கோட்பாடு நடைமுறையிலுள்ளது. ஆனால் மனிதன் ஒரு விலங்கு அல்ல

மற்றும் ஒரு விலங்கைப் போல நடந்துகொள்ளக் கூடாது. அவன் விலங்கினப்பரப்பின் கோட்பாடுகளைக் கடந்து மேம் பட்டு, கடவுளின் ராஜ்ஜியத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். கடவுளுடைய ராஜ்ஜியத்தில் அன்பும், தியாக முமே கோட்பாடுகளாக விளங்குகின்றன.

பிணைப்பு மற்றும் வெறுப்பால் பாதிக்கப்படாமல் இருப்பதுதான் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சாத கனின் குறிக்கோளாக இருக்க வேண்டும். அவனுக்கு மற்றவர் களிடம் இரக்கமும், அன்பும் இருக்க வேண்டும். ஆன்மீகத் தில் ஈடுபாடு கொண்டுள்ள மனிதன், மற்றவர்கள் அவர் களுடைய துன்பங்களை உணர்வதைவிட அதிகமான அள வில் உணர்கிறான். இறுமாப்புடனும் வன்மையுடனும் நடந்துகொள்பவர்களிடமும் அவனுக்கு பரிவைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவன் எப்பொழுதும் பெருமளவில் தன்னை விட்டுக் கொடுத்துப் பிறருக்கு உதவி செய்ய முயற்சி செய்கிறான். ஆனால் பரிவு என்னும் பெயரில் உலகிய லிற்குள் இழுக்கப்படுவதை அவன் மறுக்கிறான். அவன் மற்றவர்களால் அவர்களுடைய தன்னல நாட்டங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதை மறுக்கிறான்.

இவ்வுலகத்தில் அறிவின் ஆற்றல், மற்றும் அறியாமை யின் ஆற்றல் என்னும் இவ்விரு ஆற்றல்களும் செயலாற்றிக் கொண்டுள்ளன. ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகன் அவனை முதலில் கூறப்பட்டுள்ள ஆற்றலிற்கு (அறிவின் ஆற்றல்) தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். பின்னால் கூறப்பட்டுள்ள ஆற்றலிற்கு அல்ல (அறியாமை யின் ஆற்றல்). இது ஒரு குறிப்பிட்ட அளவு 'சீறுதலைக் குறிக்கலாம். ஆனால் அவன் கடிக்கக் கூடாது.'[1] அவன் வெறுப்பு மற்றும் பழிவாங்குதல் போன்ற உணர்வுகளையும்

---

1. இந்தக் குறிப்புரை ஸ்ரீராமகிருஷ்ணரின், பலராலும் அறியப்பட் டுள்ள ஒரு நீதிக்கதையாகும். இதில் ஒரு பாம்பானது, ஒரு புனிதமான மனிதனால் அதனுடைய செயல் வழிகளைச் செம்மைப்படுத்திக் கொள் வதற்கு அறிவுறுத்தப்படுகிறது.

—ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், *1.18.*

மேற்கொள்ளுதல் கூடாது. அவன் அவனைச் சுற்றிச் சூழ்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் சக்திகளின் பால் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும்.

உண்மையான அகிம்சை ஒரு மிகச் சிறந்த இலட்சிய மாகும். நாம் அந்த இலட்சியத்தை நோக்கிப் படிப்படியாக முன்னேற வேண்டும். மனமானது எல்லா தூய்மையற்ற எண்ணங்களிலிருந்தும், தூண்டுதல்களிலிருந்தும் தூய்மைப் படுத்தப்பட வேண்டும். நமக்கு உண்மையான ஆன்மீக அனுபவம் ஏற்படும் பொழுதுதான் நம்மால் உண்மையான அகிம்சையைக் கைகொள்ள இயலும். அகிம்சையைக் கோட்பாடாகக் காண்பது ஒன்று. மற்றும் ஒருவருடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படுவது என்பது வேறொன்று ஆகும் (அகிம்சையைக் கோட்பாடாகக் காண் பதற்கும், மற்றும் ஒருவருடைய வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தப்படுவதற்கும் வெகு தொலைவு உள்ளது). ஈசாவாஸ்ய உபநிஷதத்தில், ஒரு மனிதன் எல்லா மனிதர்களிடமும் ஆன்மாவைக் கண்டு, மற்றும் எல்லா மனிதர்களையும் ஆன்மாவில் கண்டால், அதன்பிறகு அவனால் யாரையும் வெறுக்க இயலாது (யார் எல்லா உயிரினங்களையும் ஆன்மா விலும், ஆன்மாவை எல்லா உயிரினங்களிலும் காண் கிறானோ, அவன் யாரையும் வெறுப்பது இல்லை).[1] இதுதான் உபநிஷதங்களில் தொடர்ந்து வரும் கருத்தாக உள்ளது. ஆன்ம ஞானம் அடைவதுதான் உண்மையான அகிம்சையின் அடிப் படையாக உள்ளது. ஒருவன் ஆன்மாவை உணரும்பொழுது, அவன் ஒருவரையும் வெறுப்பதில்லை.

ஆனால் ஆன்மீக வாழ்வின் தொடக்க கால கட்டத்தில் சாதகன் மற்றவர்களுடன் நடைமுறைத் தொடர்பு கொள்ளும் பொழுது மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அகிம்சையின் பெயரால் அவன் மிகவும் மென்மையான வனாகவும், விட்டுக் கொடுப்பவனாகவும் இருத்தல் கூடாது.

1. யஸ்து ஸர்வாணி பூதான்யாத்மன்யேவானுபச்யதி ।
ஸர்வ பூதேஷு சாத்மானம் ததோ ந விஜுகுப்ஸதே ॥
—ஈசாவாஸ்ய உபநிஷதம், 6.

மன உறுதியில்லாமல் மென்மையாக இருப்பவர்கள் ஆன்மீக வாழ்வைச் சிக்கல் நிறைந்த ஒன்றாகக் காண்பார்கள். உலகத்தின் தீங்குகளை எதிர்கொள்வதற்கு மிகப்பெரிய வலிமை தேவையானதாகும். உன்னுடைய ஆன்மீக வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் மென்மையாகவும் உணர்ச்சிவசப்படுகிறவனாகவும் இருத்தல் கூடாது.

ஆனால் நாம் நம்மிடமும் கண்டிப்புடன் இருக்க வேண்டும். நாம் நம்முடைய மனங்களிலிருந்து வன்முறை, கோபம் மற்றும் வெறுப்பு போன்ற கருத்துக்கள் அனைத்தையும் அகற்றி விட வேண்டும். சில நேரங்களில் வெளிப்புறத்தில் மற்றவர்களுடன் வெளிப்படையாக சுமுகமாக இருப்பினும் உள்ளுக்குள் சீற்றத்தால் எரிந்துகொண்டிருப்போம். இது மிகவும் கேடு விளைவிப்பது ஆகும். முதலில் அகத்தில் அகிம்சையைப் பின்பற்ற வேண்டும். அது மன வலிமையை அதிகரிக்கும். வலிமை மிக்கவனால்தான் வன்முறையற்றவனாக இருக்கவியலும்.

உண்மையின் அழிக்கும் தன்மைகள்

நம்முடைய இதயமானது விழிப்புணர்வுடன் ஒரு சுடுகாடு ஆக்கப்பட வேண்டும். நம்முடைய எல்லா பிணைப்புக்களையும், நம்முடைய அழுக்குகளையும் நம்முடைய அகங்காரத்தையும் எரிக்கும் சுடுகாடாக ஆக்கப்பட வேண்டும். முடிவற்ற இந்த எரியூட்டும் நிகழ்வுதான் கடவுளை வழிபடுவது ஆகும். உண்மையாக இருக்கும் ஒரே வழிபாடு ஆகும். மற்றும் இது ஒருபொழுதும் நம் உறுதியைக் குலைப்பதாக இருத்தல் கூடாது. நாம் நமக்கு இன்பம் மற்றும் புலன்களுக்கு நிறைவு அளிக்கும் ஒரு கடவுளை மட்டுமே வழிபடுவது நம்முடைய குழப்பமாக உள்ளது. ஆனால் வேதனையும் கடவுளது அல்லவோ! எல்லா இடங்களிலும் நாம் நமக்கு வரங்களை அளிக்கும் கடவுளைத்தான் வழிபடுகிறோம். ஆனால் நாம் கடவுளை அழிப்பவராக எண்ணும் அந்த நேரத்திலேயே பயப்படுகிறோம். சிவனை வரம் தருபவராக நம்மால் ஏற்றுக்கொள்ள இயலுகிறது. ஆனால் அழிவுடன்

தொடர்புடைய அவருடைய ஊழிக்கூத்து அச்சமூட்டுவதாக உள்ளது. ஏன்? நம்முடைய மனப்பான்மையில் ஒரு நயமோ அல்லது ஒரு காரணமோ இல்லை. படைப்பும், காப்பும் இருக்கும் பொழுதுதான் கடவுள் கடவுளாகிறார். ஆனால் எப்பொழுது அழிவு இருக்கிறதோ, கடவுளுக்கு அதில் ஒரு பங்கும் இல்லை! அவ்விதம் இருக்கவியலாது. எல்லாக் கூறுகளிலும் கடவுளாக இருந்தால்தான் கடவுள் கடவுளாவார். அவர் படைக்கும் கடவுளாக, காக்கும் கடவுளாக, அழிக்கும் கடவுளாக மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக இவைகளில் எதிலுமே இல்லாத கடவுளாக இருக்கிறார். ஒரு 'வெறும் நல்ல கடவுள்' என்று சமயத்திற்கு எதிராகத் தற்காலத்தில் உள்ள கருத்து பாராட்டப்பட வேண்டும். நவீன மனத்திற்கு ஒரு அன்பான நல்ல கடவுளைக் கொடுத்தால் அது கடவுளைத் தூக்கி எறிந்துவிடும். மற்றும் நவீன மனத்திற்கு உண்மையான கடவுளைக் கொடுத்தால், பெரும்பாலான நிலைகளில் அது ஏற்றுக்கொள்ளும்.

கடவுள், படைப்பவராக, காப்பவராக, அழிப்பவராக, ஒரு அன்னையாக விளங்குகிறார். அன்னையே மீண்டும் அவளுடைய முழுமையான இயல்பில், இவ்வனைத்தையும் கடந்த சிவனாக விளங்குகிறாள். இவ்விதம் கூறப்போனால் ஒப்பீட்டு நோக்கில், கடவுள் அன்னையே ஆவார். கடவுளின் முழுமையான இயல்பில், அதே அன்னையே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் இவைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் சிவனாக விளங்குகிறாள். அன்னை ஊழிக்கூத்து ஆடுகிறாள். அவள் பாதங்களில் அடியில் கிடக்கும் அசைவற்ற, கவலையற்ற, இறந்தவர் போல் காணும் சிவன் மீது அவளுடைய படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்னும் எல்லாம் அடங்கிய அவளுடைய வெறியாட்டம் நடைபெறுகிறது. இவ்வனைத்தும், எத்தகைய அற்புதமான உண்மையைக் குறித்த, வரம்பற்ற ஆழமான சின்னங்களாக உள்ளன!

மரணத்திற்காக ஏன் அஞ்ச வேண்டும்? மரணம் பெருமையளிப்பதாக இருக்கக் கூடும். அன்னையின் மிகச் சிறந்த லீலையை நாம் எங்கு காண இயலும்? சுடுகாட்டில்

மட்டுமே காணவியலும், மற்றும் குழந்தைகளின் காப்பகம் போல அத்தனை உண்மையானது, சரியானது. சாதகன் வாழ்க்கையிலும், மரணத்திலும் அன்னையைப் பற்றிக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் பிணைப்பு மற்றும் மரணபயம் இவ்விரண்டையும் துறந்துவிட்டு அன்னையை மட்டுமே பற்றிக் கொள்ள வேண்டும்.

மகிழ்வளிக்கும் இனிமையான பொருட்களின் பால் பெருமளவில் ஈர்ப்புக் கொண்டவன் மட்டுமே துன்பமடை வதை நாம் எப்பொழுதும் காண்கிறோம். உடல் தொடர்பான வேதனையானது மனத்தொடர்பான வேதனையுடன் ஒப் பிடப்பட்டால் ஒன்றுமற்றதாகி விடுகிறது. மற்றும் துன்பத்தை, நாம் அனைவரும் வாழ்க்கையில் கடந்து செல்லத்தான் வேண்டும். இன்பம் மற்றும் துன்பங்களுக்கு அப்பால் உண்மை இருக்கிறது என்பதை எப்பொழுதும் நாம் உணர வேண்டும். மற்றும் இவ்விரண்டையும் கடந்து மேம்பட்டால்தான் அதனை அடைய இயலும்.

இராம்பிரசாத் பாடுகிறார். 'ஓ என்னுடைய அலைபாயும் மனமே, எது வந்தாலும், எல்லா நேரங்களிலும் அன்னையின் நாமத்தைத் கூறுவதை ஒரு பொழுதும் நிறுத்தி விடாதே. நீ துன்பத்தைக் கடந்து செல்கிறாய். உனக்கு இன்னும் அதிக மான துன்பங்களும் வரலாம். அதை ஏன் பொருட்படுத்த வேண்டும்?'

எத்தகைய உடல் தொடர்பான வேதனையையும் மனித மனத்தில் குமுறிக் கொண்டுள்ள அச்சத்தை ஏற்படுத்தவல்ல புயல்களுக்கு ஒரு பொழுதும் ஒப்பிடவியலாது. மற்றும் இத் தகைய புயல்களை நாம் வாழ்க்கையின் அதனுடைய மகிழ்ச்சியைத்தரும் இனிமையான கூறுகளைப் பற்றிக் கொண்டிருக்கும் வரையிலும் மற்றும் அதனுடைய அச்சம் தரத்தக்க கூறுகளை மறுக்கும் வரையிலும் அல்லது மறுப்ப தற்கு முயற்சி செய்யும் வரையிலும் ஒருபொழுதும் கடந்து செல்ல இயலாது. நமக்கு உண்மையிலேயே கடவுளை அடைய வேண்டுமாயின், நாம் கடவுளின் நல்ல மற்றும்

அச்சம் தரும் பண்புக்கூறுகளை முழுமையாகக் கடந்து செல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும்.

உண்மையின், அழிக்கும் இயல்புக்கூறைத் தாங்கிக் கொள்ளும் தன்மை மிகவும் முக்கியமானதாகும். அது முதலில் நம்முடைய தவறான நம்பிக்கைகளையும், தவறான தனித்துவங்களையும், தனிப்பட்ட அன்பிற்குரிய எண்ணங் களையும், உலகியலைச் சார்ந்த தவறான நாட்டங்களையும் மற்றும் நம்முடைய எல்லா சிறிய, அற்பமான, பேராசை யுடன் கூடிய பற்றுக்களையும் எரித்துவிட வேண்டும். அதற்குப் பிறகுதான் உண்மை அதை வெளிப்படுத்திக் கொள்ளும். அதற்கு முன்பு வெளிப்படுத்திக் கொள்ளாது. ஆனால் அவற்றை உண்மையாக எரிக்க வேண்டும் என்று யார் விரும்புகின்றனர்? யார் விலையைக் கொடுத்துவிட்டு இலட்சியத்தை அடைய விரும்புகின்றனர்? நம்மிடம் வழி முறைகள் உள்ளன. மிகச் சிறந்த அருளாளர்களால் அறிவுறுத்தப் பட்ட ஒழுங்கு முறைகள் உள்ளன. ஆனால் நாம் விடாது தவறு செய்பவர்களாக இருக்கிறோம். நாம் எப்பொழுதும் நம்முடைய சொந்த முயற்சிகளைத் தள்ளிப் போடுகிறோம். மற்றும் இத்தகைய கருத்துக்களிலிருந்து அறிவுபூர்வமாக இன்பங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அவை களின் உண்மையை நாமாகவே உணராமலே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் நாம் உண்மையிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறோம்.

பலசமயங்களில் நாம் துயரம் மிகுந்த, வெறுக்கத்தக்க அற்பமான, காதல், பதவி, தற்பெருமை போன்ற சிறிய கனவுகளைக் குறித்து கனவு காண விரும்புகிறோம். நாம் அவற்றை நம் மனம் நிறையும்வரை அணைத்துக்கொள்ள விரும்புகிறோம். மற்றும் அவைகள் நம்மிடமிருந்து பறிக்கப் படும்வரை அவைகளை எத்தனை நேரம் இயலுமோ பற்றிக் கொள்கிறோம்.

நான் கூறியதைப்போல நீ உண்மையாகவே ஆன்மீக வாழ்வைப் பின்பற்றுவதற்கு ஆயத்தமாக இருந்தால்,

புலன்களால் உணரத்தக்க வெளிப்படையான மற்றும் சூட்சுமமான எல்லா கனவுகளிலிருந்தும் விடுபட வேண்டும். அவை மேலீடாக நல்லவையாகத் தோற்றமளித்தாலும் விடுபட வேண்டும். நம்முள்ளே இரக்கமற்றமுறையில் சுரண்டித் தேய்ப்பதும், தூய்மைப்படுத்திக் கொள்ளும் செயலும், மீண்டும் சீர்அமைத்துக்கொள்ளும் செயலும் நடைபெற வேண்டும். பழைய கருத்துக்களையும், தனிப்பட்ட அன்பிற்கு உரிய கருத்துக்களையும், தீங்கிழைக்கும் தன்மை போன்றவற்றையும் அழித்துவிட வேண்டும். மிகப் பெரிய அளவில் இணங்கிப் போகாத துணிவு அவசியமானதாகும். மனிதத் தகுதி, துணிச்சல், உறுதி, நோக்கத்தைக் கைக்கொண்டவர்கள் மற்றும் நம்பத்தகுந்தவர்கள் மட்டுமே உண்மையை அடைய இயலும். மற்றவர்கள் அடைய மாட்டார்கள். அது ஒரு அற்புதமான வீரச் செயல் ஆகும். வேதாந்தத்தில் பலவீனமானவர்களுக்கு, தூசியில் ஊர்ந்து செல்லும் புழுக்களுக்கு, 'ஓ நான் ஒரு பாவி, நான் ஒரு பாவி, நான் என்ன செய்வேன், நான் ஒரு பாவி' என்று அழுது கொண்டே இருக்கும் மற்றும் எச்சரிக்கையும் பொறுப்பும் அற்று, தொடர்ந்து களிப்புடன் பாவங்களைச் செய்து கொண்டுள்ள சேற்றில் புரண்டு கொண்டுள்ள, ஓலமிட்டுக் கொண்டுள்ள பாவிகளுக்கும் இடமில்லை.

பலவீனமாக இருப்பவர்களால் உண்மையை அறியவியலாது. பிறப்பு உரிமையால் தூய்மைப்பாடு நம்முடையது. தூய்மைப்பாடை ஏன் வெளிப்படுத்தக் கூடாது? பிறப்பு உரிமையால் அன்பு நம்முடையது எனின், அன்பை ஏன் வெளிப்படுத்தக் கூடாது? பேரின்பம் பிறப்பு உரிமையால் நம்முடையது எனின், பேரின்பத்தை ஏன் வெளிப்படுத்தக் கூடாது? சுதந்திரமானது பிறப்பு உரிமையால் நம்முடையது எனின், ஏன் நம்முடைய புலன்களுக்கும், உடலிற்கும், மனத்திற்கும், அகங்காரத்திற்கும் அடிமைகள் ஆகிக் கொண்டே இருக்க வேண்டும்? இரக்கமற்ற முறையில் கனவைத் தகர்க்க வேண்டும். உன்னுடைய சொந்தக்கால்களில், ஒரு மனிதனின் கால்களில் நிற்கக் கற்றுக்கொள்ள

வேண்டும். சுவாமி விவேகானந்தர் அவருடைய ஒரு கவிதையில்

உண்மையை எதிர்கொள் கவனமுடன்
ஒன்றாய் இரு நீ அதனோடு
கண்டிடும் கனவுகள் கலையட்டும்
கனவை ஒழிக்க இயலாயேல்
அழியா உண்மை அன்புயரும்
அந்தக் கனவும் தடையின்றி
உழைக்கும் கனவும் காண்கவென
உலகம் உணர உரைத்திடுவாய்.
என்று கூறியுள்ளார்.[1]

ஆன்மாவைப் பற்றி நினைப்பாய்

உன்னுடைய உடலிற்கும், மனத்திற்கும் பின்னால் நின்று கொண்டு ஆன்மாவைக் குறித்து நினைக்க வேண்டும். அதுதான் நம்முடைய உண்மையான இயல்பாகும். தவறான இயல்புகளிலிருந்து நாம் நம்மை எந்த அளவிற்கு விடுவித்துக் கொண்டு, ஆன்மாவுடன் நம்மை அடையாளம் கண்டுகொள் கிறோமோ அந்த அளவிற்கு அச்சமற்ற தன்மையையும், வலிமையையும், தூய்மைப்பாடையும், அமைதியையும் நாம் பெறுகிறோம். நாம் புனிதர்கள் ஆகிறோம். ஒரு மனிதன் வெளிப்புறமாகச் சென்றால் அவன் பாவியாகிறான். அவனுடைய ஆன்மாவிற்குள் அவனை உள்வாங்கிக் கொண்டால் அவன் புனிதன் ஆகிறான்.

ஒருவர் தன்னை ஆன்ம இயல்புடையவர், இயல்பாகத் தூய்மைப்பாடு உடையவர் மற்றும் அதன் சாரத்தில் தானே ஒளிரும் இயல்புடையவர் என்று காண்பதில்தான் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் ஆன்மீக வாழ்வின் வெற்றியின் இரகசியம் உள்ளது. நாம் தியானம் செய்யும்பொழுது இந்தக் கருத்தை நம்முடைய விழிப்புணர்வின் ஆழத்தில் செலுத்த

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.34.

வேண்டும். அதன்பிறகு ஆன்மாவின் தூய்மையான தானே ஒளிரும் இயல்பானது உடலிலும், மனத்திலும்கூட வெளிப்படும்.

தங்களுடைய பாவங்களை நினைத்து அழ விரும்பு பவர்கள் எல்லா விதங்களிலும் அவ்விதம் செய்து கொள் ளட்டும். ஆனால் நாம் அவ்வாறு இல்லாமல், நமக்குள்ளே உள்ள கடவுளை, நிலைத்த தூய்மையுள்ள நிலைபெற்ற ஆன்மாவை நினைப்போம். மற்றும் ஆன்மாவின் பெரும் சிறப்பை நம்மிடம் நிலைநிறுத்திக் கொள்வோம். நம்முடைய மனம் தீமையின் பக்கம் சார்ந்து, தெளிவற்று இருண்டிருந் தாலும் நாம் எப்பொழுதும் சுவாமி விவேகானந்தரின் இந்த அற்புதமான சொற்களை நினைவில் வைத்துக் கொள்வதற்கு முயற்சிப்போம்.

‘எழுந்திரு, விழித்திரு. பலவீனம் என்னும் அறிதுயிலி லிருந்து விழித்தெழுவாய். உண்மையாக யாருமே பலவீன மாவர் இல்லை. ஆன்மாவானது எல்லையற்றது, எல்லாம் வல்லது, எல்லாம் அறிந்தது எழுவாய். உன்னை உறுதியுடன் செயலாற்றும் இயல்பில் நிலைநிறுத்திக் கொள்வாய். உன் னுள்ளே கடவுளை பறைசாற்றிக் கொள்வாய். உனக்கு உன் னுடைய உண்மையான இயல்பை அறிவுறுத்திக் கொள்வாய். மற்றவர்கள் அனைவருக்கும் அவரவருடைய இயல்பை அறிவுறுத்துவாய். உறங்கிக் கொண்டிருக்கும் ஆன்மாவை அழைப்பாய். அது எப்படி எழுச்சி அடைகிறது என்று காண்பாய். உறங்கிக் கொண்டுள்ள இந்த ஆன்மாவானது தன்னுணர்வுடன் கூடிய செயல்பாடுகளுக்காக எழுப்பப்படும் பொழுது ஆற்றல் வரும். பெருமை வரும். நன்மை வரும். தூய்மைப்பாடு வரும். மேம்பட்ட அனைத்தும் வரும்.’[1]

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 5.102.

15

ஆளுமையின் ஒருங்கிணைப்பும் மற்றும் அகச்சமநிலையும்

நம் ஆதார ஈர்ப்பு மையம்

நாம் குழந்தைகளாக இருந்தபொழுது, நாடோடிகள் விற்றுக்கொண்டிருந்த, உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு சிறிய மைக்கூடைக் கண்டு பெரிதும் வியந்திருக்கிறோம். அதன் அடிப்புறத்தில் ஒரு கனமாக பளு இருக்கும். அதனால் அது ஒருபொழுதும் குடைசாய்ந்து மை வெளியே சிந்தாமல் இருக்கும். நாளடைவில் அதன் ஆதார ஈர்ப்பு மையமானது அதனுள்ளேயே எப்பொழுதும் பாதுகாப்புடன் உள்ளது என்பதையும் மற்றும் அது கவிழ்ந்து மையானது சிந்தாமலிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளும்வரைக்கும் அது நம்மால் புரிந்துகொள்ள இயலாத அற்புதமாக இருந்தது. அது இயல்பான ஈர்ப்பு ஆற்றல் போன்ற வெளிப்புற உந்துவிசைகளுடன் தொடர்புடைய முழுமையான நடுநிலை அமைதியின் எடுத்துக்காட்டாக உள்ளது.

உணர்ச்சிகளை எடுத்துக்கொண்டால் (பொறுத்தமட்டில்) இது வாழ்க்கையின் குழப்பங்கள் நிறைந்த நிகழ்வுகளின் நடுவில் அக அமைதியை நிலைநிறுத்திக் கொள்வதைப் போன்றதாகும். இதுதான் சமநிலையாகும். ஒரு மனிதனால் எப்படி அமைதியையும், சமநிலையையும் பெற இயலும்?

நாங்கள் இளைஞர்களாக இருந்த பொழுது, குடும்பப் பெரியவர்களிடமும் மற்றும் பல்கலைக் கழகப் பேராசிரியர்களிடமும் சமநிலையை எதிர்நோக்கினோம். ஆனால், அவர்களிடம் அதைக் காணாது, கடைசியாக ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்களிடத்தில் மட்டுமே அதைக் கண்டோம். அவர்களில்

மிகச் சிறந்தவரான சுவாமி பிரம்மானந்தரின் திருவடிகளின் அருகில் அமரும் சிறப்பு உரிமை எங்களுக்கு இருந்தது. சுவாமி பிரம்மானந்தரிடம் மற்றவர்களுக்கு அதைப் பகிர்ந்து அளிக்கும் அளவிற்கு அமைதி இருந்தது.

ஒரு சமயம் துறவிகள் மடத்தில், இரு துறவிகள் சண்டையிட்டுக் கொண்டு மற்றவர்களுக்குத் தொல்லையை ஏற்படுத்தினர். அப்பொழுது பொறுப்பிலிருந்த சுவாமி பிரேமானந்தர், இராமகிருஷ்ண மிஷனின் தலைவராக இருந்த சுவாமி பிரம்மானந்தரிடம் சென்று அவரிடம், 'நாம் நம் சகோதர சீடர்களுடன் பல ஆண்டுகளுக்கு அமைதி யுடனும் இணக்கமுடைமையுடனும் வாழ்ந்திருக்கிறோம். நாம் இவர்களை என்ன செய்ய வேண்டும்? நாம் அவர்களை நீக்க வேண்டாமா?' என்று கேட்டார்.

சுவாமி பிரம்மானந்தர் அமைதியுடன், 'சகோதரனே, அவர்கள் தொல்லையளித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மைதான். அவர்கள் இங்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் புனித மான, போற்றுதலுக்குரிய திருப்பாதங்களில் அடைக்கலத்தை நாடி வந்தவர்கள் என்பதை நினைவு கொள்ள வேண்டும். அவர்கள் உன்னுடைய அறிவுரையையும், வழிகாட்டு தலையும் எதிர்நோக்குகின்றனர். நாம் கண்டிப்பாக அவர் களின் வாழ்க்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களின் இதயங்களில், அன்பையும் ஏற்படுத்துவதற்கு ஏதாவது செய் வோம்' என்று கூறினார்.

சுவாமி பிரேமானந்தர், 'சகோதரரே, நீங்கள்தான் அவர் களை வாழ்த்தி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்' என்று பதில் கூறினார்.

பிறகு சுவாமி பிரேமானந்தர் துறவிகள், மூத்தவர்கள், தொடக்க நிலையில் இருப்பவர்கள் போன்ற அனைவரையும் ஒன்று கூட்டி, தலைசிறந்த சுவாமியான பிரம்மானந்தரைக் காண ஊர்வலமாக அழைத்துச் சென்றார். சுவாமி பிரம்மானந்தர் இத்தருணத்தில் ஒரு உயர்ந்த மனநிலையை அடைந்திருந்தார். ஒவ்வொரு துறவியும் அவர் முன் வந்து,

அவர் திருவடிகளை வணங்க, சுவாமி அவருடைய தலையைத் தொட்டு ஆசீர்வாதம் செய்தார். அவ்விதம் ஆசீர்வதிக்கப் பட்டவர்களில் ஒருவர், 'காய்ச்சல் அடித்துக் கொண்டிருக்கும் உடலிற்கு அது ஒரு குளிர்விக்கும் ஊற்றைப் போல இருந்தது' என்று கூறினார். அமைதியானது மீண்டும் அந்தத் துறவிகளின் இதயங்களிலும், துறவிகளின் மடத்திலும் பரவியது.[1]

உணர்ச்சிகளின் சமநிலை மீட்சி ஆற்றலைப் பெற்று இருப்பது ஒரு அற்புதமான விஷயமாகும். ஆனால் இக்காலத்தில் நாம் அதைக் காண்பது அரிதாக உள்ளது. ஆனால் வெளியுலகத்தில் காணப்படும் முரண்பாடுகள், நம்முடைய மனங்களில் உள்ள முரண்பாடுகளின் வெளிப்பாடுகளாக உள்ளன என்பதை மறந்து விடக்கூடாது. நம்முடைய மனத்தின் மீது மேலான அக்கறை செலுத்தி, அதைத் திறமையான அறிவுடன் பயன்படுத்தினால்தான் இத்தகைய சிக்கல்கள் குறையக் கூடும். நம்முடைய உடல் விஷங்களாலும் நோய்க்கிருமிகளாலும் பாதிக்கப்படுவதைப்போல, நம்முடைய மனமும் தீங்கினை ஏற்படுத்தும் உணர்ச்சிகளின் விளைவால் துன்பம் அடைகிறது. நாம் எப்பொழுதும் நம்மைச் சுற்றி இருப்பவர்களுடன் முரண்பாடுகளுடன் இருக்கிறோம். ஆனால் நம் உள்ளுக்குள்ளேயே ஒரு பெரிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டுள்ளது. நாம்தான் நம்முடைய மிகப் பெரிய சிக்கலாக இருக்கிறோம்.

உள்ளுணர்ச்சி சிக்கல்கள் —முரண்பாடுகளின் காரணம்

நம்முடைய அக முரண்பாடுகள், 'முதிராத இயல்புடைய தன்முனைப்புடன் கூடிய தூண்டுதல்கள்' மற்றும் 'தடுத்து நிறுத்தும் நேர்மையுணர்வுகளுடன்' சேர்ந்திருக்கும் காரணங்களால் ஏற்படுகின்றன என்பது தற்காலத்திய மேற்கத்திய மனோதத்துவ வல்லுனர்களின் கருத்து ஆகும்.

---

1. The Eternal Companion, பக்கம் 76,77.

இதைப்பற்றிய அவர்களின் நேர்மையுணர்வுகள் அகற்றப்பட்டால், அது ஒரு சிறிய அறுவைச் சிகிச்சை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிருஷ்டவசமாகவோ அல்லது துரதிருஷ்டவசமாகவோ, எப்படியிருப்பினும் நம்மிடையே பலரும் அவ்விதத்தில் இல்லை. நாம் எப்பொழுதுமே நம்முடன் தொடர்ந்து முரண்பட்டுக் கொண்டே இருக்கிறோம். தன்னை நிலைநிறுத்திக் கொள்ளுதல், புணர்தல், ஈட்டுதல், பயம் போன்றவை நிகழும் சமயத்தில் அவை நம்மிடம் அகங்காரம் செருக்கு, காமம், பொறாமை, கோபம், பயம் போன்றவற்றை எழுச்சியடையச் செய்கின்றன.

நாம் இப்பொழுதெல்லாம் சிக்கல்கள், இயல்பான தூண்டுதல்கள் மற்றும் உணர்ச்சிகள் குறித்துப் பெருமளவில் கேள்விப்படுகிறோம். அவை என்ன? அவை எந்த விதத்தில் தொடர்புடையவை? சில மனோதத்துவ வல்லுனர்கள் இயல்பான தூண்டுதல்களும், உணர்ச்சிகளும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன என்று கூறுகின்றனர். வேறு சிலர் அந்தச் சொல்லை, மிகவும் பொதுப்படையான கருத்தில் பயன்படுத்துகின்றனர். ஒரு பொதுவான உணர்ச்சியின் பிணைப்பால், கருத்துக்களின் தொகுதிகள் கவனமாக ஒருங்கிணைக்கப்படுவதுதான் சிக்கலாகும் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர். இன்னும் வேறு சிலர் நம்முடைய இயல்பான தூண்டுதல்களும் உணர்ச்சிகளும் அகங்காரச் சிக்கல் நிலை, பாலியல் சிக்கல் நிலை மற்றும் கும்பல் சிக்கல் நிலை என்னும் மூன்று முக்கியமான சிக்கல்களுக்குக் கீழ் வகைப்படுத்தப்படலாம் என்று கருதுகின்றனர். அகங்காரச் சிக்கல் நிலையானது இயல்பான தன்னுயிர்க்காப் புணர்வு, கைப்பற்றும் தன்மை, போர்புரியும் தினவு, அறிந்து கொள்ளும் ஆர்வம், வெறுப்பு, எண்ணவேகம் போன்ற இயல்பான தூண்டுதல்களை உள்ளடக்கியது ஆகும். உயர்வு மனப்பான்மை, தற்பெருமை, உடைமையாக்கிக் கொள்ளும் உணர்வு, கோபம், அருவருப்பு, பயம் போன்றவை இச்சிக்கலுடன் தொடர்புடைய உணர்ச்சிகள் ஆகும். பாலியல் சிக்கல் நிலையானது பாலியல் மற்றும் பெற்றோர் சார்ந்த இயல்பான

தூண்டுதல்களையும் உள்ளடக்கியது ஆகும். காதல், காமம், பொறாமை, கூச்சம், இரக்கம் போன்றவை இச்சிக்கலுடன் தொடர்புடைய உணர்ச்சிகள் ஆகும். கும்பல் சிக்கலானது கூடிவாழும் இயல்பான தூண்டுதல்கள், யோசனைகள், மேல்முறையீடுகள் போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும். தனிமை, பரிவு, துன்பம், பற்றுதல், உதவி செய்யும் தன்மை, நம்பிக்கை போன்றவை இச்சிக்கலுடன் தொடர்புடைய உணர்ச்சிகள் ஆகும்.[1] சிக்கல்கள் பெரும்பாலும், நம்முடைய முழு உணர்ச்சி வசப்பட்ட வாழ்க்கையின் முழு ஆற்றல் எல்லையையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

எல்லா மனிதர்களுக்கும், சிக்கல்கள் என்பது பொது வானதாகும். அவை நல்ல நோக்கத்திற்காக அல்லது கெட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதைப் பொறுத்து மற்றும் அவை நம்முடைய ஆளுமையை வளர்த்து விரிவு செய்வதற்கு வழிகாட்டுகிறதா என்பதைப் பொறுத்து அல்லது நம்முடைய ஆளுமையை நிலைகுலையச் செய்து தடைபடச் செய்கிறதா என்பதைப் பொறுத்து அவை நல்லவையாகவோ அல்லது தீயவையாகவோ உள்ளன. எடுத்துக்காட்டாக, தன் கருத்தை வலியுறுத்தும் இயல்பான தூண்டுதல்கள் ஒரு உயர்ந்த திருப்பத்தை ஏற்படுத்தக் கூடும். அவை ஒருவருடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்தப் பயன் படுத்தப்பட்டு, அவ்விதம் சேமிக்கப்பட்ட ஆற்றல் மேம் பட்ட பரிணாம வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்பட்டு, இவ் விதம் ஒருவருடன் வாழும் உடனொத்த மனிதர்களின் நன்மைக்காகப் பயன்படுவதாக இருக்கும். எனவே சிக்கல் களைக் குறித்து, தவறான கருத்துக்களைக் கொண்டுள்ள ஒருசிலர் கூக்குரல் எழுப்புவதைப்போல எழுப்பத் தேவை யில்லை. சில சிக்கல்களின் இயல்பு மற்றும் அவை எவ்விதம் சமாளிக்கப்படுகின்றன என்பதுதான் சிக்கல்களின் தொல்லை யாகும். உள்ளுணர்ச்சிச் சிக்கல்களைத் தவிர்ப்பதோ,

---

1. Strecker and Appel, Discovering Ourselves (New York, The MacMillan Co., 1954) *பக்கம் 87,97,108.*

மறப்பதோ பலவந்தமாக அடக்குவதோ நமக்கு அதிகமாகப் பயனை அளிப்பதில்லை. அல்லது உணர்ச்சிகளின் கடிவாளம் இடப்பெறாத வெளிப்பாடுகள் அவை நல்லவையோ, அல்லவையோ பயனை அளிப்பதில்லை. சமநிலையிலுள்ள சரியான அமைதிநிலைதான் தேவையானதாகும். சுவாமி விவேகானந்தரைப்போன்ற ஆன்மீக மனிதர்களில், ஒரு குழந்தையின் இயல்பாக இருக்கும் தன்மை மற்றும் தற்சார்பும் மற்றும் ஒரு துறவியின் கட்டுப்பாடும், புனிதத் தன்மையும் இணைந்துள்ள நிலையைக் காண்கிறோம். இந்த இணைவின் விளைவாக, ஆற்றல் மற்றும் அமைதியின் ஆதாரமான பல்துறைப் பயிற்சித் திறன் உடைய பணிவு இணக்கப்பண்புடைய படைக்கும் ஆற்றலுடைய ஆளுமை விளங்குகிறது.

உணர்ச்சிகள் நம்மை எப்படி ஏமாற்றிப் பலவகையான உடல் சார்ந்த, மனம் சார்ந்த பிணிகளை ஏற்படுத்துகிறது என்பதை மனோதத்துவ வல்லுனர்கள் நமக்குத் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டு இருக்கின்றனர். அதற்கு மாறாக சரியான இலக்குகளில் செலுத்தப்படும் கட்டுப்படுத்தப்பட்டுள்ள உணர்ச்சிகள் ஆரோக்கியத்தையும், உறுதிப்பாட்டையும் அளிக்கின்றன. டாக்டர் ப்ளேன்டர்ஸ் டன்பார் (Dr. Flanders Dunbar) அவருடைய 'மனமும் மற்றும் உடலும்' என்னும் புத்தகத்தில் ஒரு மனோதத்துவ வல்லுனரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவரிடம் 'குடல்முளை அழற்சி' (appendicitis) இருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப் பட்டிருந்த, அதனால் வலியுடன் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் நோயாளி இருந்தாள். அந்த சீர்குலைவு மனத்தொடர்பு உடையதாகவும் இருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மனநிலைப் பகுப்பு ஆய்வின் (psychoanalysis) மூலம் காரணத்தைக் கண்டு பிடிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்த பொழுது அவருடன் பணி புரிந்துகொண்டிருந்த ஒரு நண்பரின் நோயாளியானவர் குடல் முளை தகர்வால் இறந்தது அவருக்கு நினைவிற்கு வந்தது. எனவே அவர் தன்னுடைய நோயாளியை விரைவாக

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவளுக்கு அறுவைச் சிகிச்சையை சரியான சமயத்தில் செய்ய வைத்தார்.

இப்பொழுது அந்த மருத்துவரே குழப்பம் அடைந்தார். இந்த நிகழ்ச்சி, கிறிஸ்மஸ் வரும் சமயத்தில் நடந்ததால் அவருடைய மனத்தில் அது மங்காமலிருந்தது. அவர் அவருடைய குடும்பத்தில் ஒரு விருந்துக்காக அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அதற்குப் போவதற்கு அவர் விரும்பவில்லை. அவருக்கு வயிற்றில் மிகக் கடுமையான வலி ஏற்பட்டது. அவருடைய மருத்துவர் நண்பர் ஒருவர் அவரைச் சோதித்து உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். ஆனால் இப்பொழுது அந்த மன தத்துவ வல்லுனர் தயங்கினார். ஒரு மன இயல் வல்லுனராக அவர் அவருடைய வலியின் காரணத்தைத் தடம் கண்டு கொள்ளத் தொடங்கினார். விரைவில் முடிவிற்கு வந்தார். என்ன முடிவு? நோயாளி, மயிரிழையில் தப்பியது பற்றிய கவலை அவருக்குக் குடல்முளை அழற்சி என்னும் பிரமையைக் கொடுத்தது. மேலும் அண்மையில் அவர் அவருடைய அன்னையிடம் பேசிக் கொண்டிருந்தபொழுது அவருடைய தந்தை எப்படி குடல்முளை அழற்சியால் இறந்தார் என்பதை விவரித்திருந்தார். இவ்வனைத்தும், அவருடைய வலியானது மனத்துடன் தொடர்புடையது என்னும் அவருடைய உணர்வுக் காட்சியை வலுப்படுத்துவதாக இருந்தது. ஒரு வேளை அவர் விருந்திற்குச் செல்வதற்கு விருப்பமற்ற தன்மை அவருள் கிறிஸ்துமஸ் நாளை மருத்துவ மனையில் கழிக்க, ஒரு விருப்பத்தை அவரை அறியாமல் ஏற்படச் செய்தது. அவர் அதனுடைய காரணத்தைக் கண்டுபிடித்த உடனேயே வலி அவரை விட்டகன்றது. அவர் விருந்திற்குச் சென்று மகிழ்ந்தார்.[1]

நன்கு பயிற்சி பெற்ற மனநிலை மருத்துவ ஆய்வாளருக்கு அத்தகைய ஒருநிலை ஏற்படும் பொழுது, நம்மில்

---

1. Flanders Dunbar, Mind and Body: Psychosomatic Medicine (New York, Random House, 1947) *பக்கம் 41.*

பலரும் சௌகர்யமான பிணிகளைத் தேர்ந்தெடுத்து துன்ப மடைவதிலோ, அல்லது சில நேரங்களில் அவற்றால் மகிழ்ச்சி யும் அடைவதிலோ எத்தகைய வியப்பும் இல்லை. சில மனிதர்கள் அவர்களுக்குக் கவலைகள் இல்லாவிட்டாலும், அதை ஏற்படுத்திக் கொண்டு, அதைப் பெரிதுபடுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். எனக்கு அவர்களைத் தெரியும். அவர்கள் மீண்டும் மீண்டும் மற்றவர்களின் விஷயங்களில் உணர்ச்சிவசப்பட்டு தொடர்புகொண்டு, அவர்களுக்கும் தொல்லைகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர்களுக்கும் தொல்லைகளை ஏற் படுத்துவார்கள். அவர்கள் மன உலைவால் செழித்தோங்கு கிறார்கள் போலும்! நாம் நம் மனத்தின் அலைவு திரிவுகளைத் தொடர்ந்து கண்காணித்து வந்தால், நாம் பல சூழ்நிலைகளில் நம் உணர்ச்சிகளின் சிக்கலைக் கண்டறிந்து, நாமே ஏற் படுத்திக் கொள்ளும் பிணிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து உடல்நலத்தையும், அமைதியையும் பெற்று மகிழலாம்.

'ஆளுமை' என்னும் சொல்லின் பொருள்

ஆளுமை என்றால் என்ன? நம்முடைய தன்னுணர்வற்ற மற்றும் தன்னுணர்வுள்ள பகுதியும் இணைந்து ஆளுமை என்பதை உருவாக்குகின்றன. அது தன்னுடைய சுற்றுச் சூழலை சென்றடைந்து மற்றும் தானும் தன்முறையில் சுற்றுச் சூழலினால் பாதிக்கவும்படுகிறது. மனோதத்துவ நிபுணர்கள், 'ஒரு மனிதனின் ஆளுமை என்பது ஒரு மனிதனிலிருந்து மற்றொரு மனிதனை வேறுபடுத்திக் காட்டும் திறமைகள் பழக்கவழக்கங்கள் மற்றும் மனப்பான்மைகள்' என்று சாற்றுகின்றனர். நினைப்பதும், உணர்வதும், விரும்புவதும் செயல்படுவதும் யார் என்னும் கேள்வி இயல்பாக எழு கிறது. மாறுபாடுகளுக்கிடையில், அதாவது உடல், மனம், அகங்காரம், சுற்றுச்சூழல் போன்ற மாறுபாடுகளிலிருந்து, மனிதனை எந்தக் காரணக்கூறு தொடர்ந்து, அவனை அதே மனிதன் என்று கருதுவதற்கு விடாது வற்புறுத்துகிறது? தத்துவமும், சமயமும் மனஇயல்புத் தொடர்பான கருத்துடன்

நிறுத்திவிடுவதில்லை. அவைகள் இன்னும் ஆழமாகச் செல்ல விரும்புகின்றன.

மனிதனிடத்தில், நம்மிடத்தில் நாம் அகங்காரம், மனம், புலன்கள் மற்றும் உடல் என்னும் அனைத்தும் ஒரு 'சிக்கலை' வடிவமைப்பதற்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதை காண்கிறோம். இப்பொழுது மனிதனிடத்தில் உள்ள மிக முக்கியமான ஆக்கக்கூறு என்ன? அது அவனுடைய மனத்தின் விழிப்பு நிலை ஆகும். முதலில் நான் இருக்கிறேன். அதன்பிறகு நான் நினைக்கிறேன், நான் உணர்கிறேன், நான் விரும்புகிறேன. நான் மனத்தால் உணர்கிறேன், நான் செயல் படுகிறேன் என்பதாகும். நாம் நம்முடைய மனத்தின் விழிப்பு நிலையை நேரடியாக உணர்கிறோம். மற்றும் மற்றவர் களுடையதை எதிர்மறையாகவும் உணர்கிறோம். அது எது வாயினும், நம்முடைய தனிப்பட்ட விழிப்பு நிலையானது அதே மூலப்பொருளால் உருவாக்கப்பட்டுள்ளதைப் போலத் தோன்றுகிறது. இருப்பினும் அந்த மூலப்பொருள் இயல் பாகவே மற்றவற்றுடன் தொடர்பு படுத்தப்படுகிறது அல்லது அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது. அது மனிதருக்கு மனிதர் வேறுபடுகிறது.

வெளியுலகிலே தொடர்ந்து நடைபெறும் போராட்டத் துடன், உள்உலகத்திலும் முடிவற்ற முரண்பாடுகள் உள்ளன. எனவே வாழ்க்கையானது, நம்மிடமும், வெளியுலகத்திலும் ஒரு இடைவிடாத சீரமைவாக ஆகிக் கொண்டிருக்கிறது. இந்தச் சீரமைவில் தோல்வி ஏற்படுவதுதான் சமநிலை இல்லாமல் இருப்பதன் காரணமாக விளங்குகிறது. மிகச் சிறந்த மனோதத்துவ ஞானியான மென்னிங்கெர் (Menninger) அவருடைய ஒரு நூலில், 'நம்முடைய தோல்விகள் ஓடிவிடு அல்லது தாக்கு என்னும் இருவகையான எதிர்விளைவுகளால் வெளிப்படுகின்றன' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த இரு எதிர் விளைவுகளும் உறுதியற்ற தன்மையைச் சுட்டுகின்றன. சில நேரங்களில், நாம் நம்மைத் தொல்லைப்படுத்தும் எல்லா வற்றினின்றும் ஓடிவிட விரும்புவோம். தானே ஏற்படுத்திக் கொள்ளும் பிணியும், குடிபோதையும் ஓடிவிட விரும்பும்

வெளிப்பாடுகளாக உள்ளன. அவை குணமடையாவிட்டால், ஆளுமையானது சீர்கேடு அடைகிறது. தாக்கும் எதிர்விளைவு, சரியான முறையில் திருப்பப்பட்டால், அது மறுசீரமைவைக் கொண்டு வரலாம். அது ஏறத்தாழ முழுமையான சம நிலையை ஏற்படுத்தலாம். சரியான முறையில் சண்டையிடும் மனநிலையாலும், உள்ளே உள்ள பகைவர்களுடன் சண்டை யிடக் கற்றுக்கொள்வதாலும் நாம் ஓரளவிற்கு சமநிலை யையும், அமைதியையும் அடையலாம்.[1]

ஆன்மீக நோக்கு நிலையில் எப்படியிருப்பினும் மன இயல்புத் தொடர்பான உறுதிநிலை போதாது. மன இயல்புத் தொடர்பான மட்டத்தில் தன்முனைப்பான சமநிலையானது, கடுமையான சோதனைக்கு ஆட்படுத்தப்பட்டால் உடைந்து விடக் கூடும். பெரும்பாலான மனோதத்துவ வல்லுனர்கள், நம்முள்ளே அடிப்படையான முரண்பாடுகள் முழுமையாகச் சிக்கலிலிருந்து விடுபடும் என்று நம்ப இயலாது என்று கூறுகின்றனர். நாம் வாழ்க்கையில் கடந்து செல்லும் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் ஆன்மீக முரண்பாடுகளைப் பொறுத்தமட்டில் இது உண்மை என்று உணரப்படுகிறது. இயல்பு நிலையைக் கடந்து, ஆன்ம ஞானத்தை உணர்ந்துள்ள ஞானிகள் அடைந்துள்ள வெற்றியும், சமநிலையும் எப்படி யிருப்பினும், மன இயல் மருத்துவமுறையால் உணர்ந்து செயல்பட இயலாத அளவிற்கு மிகவும் முழுமை யானதாகும்.

தனிமனிதனும், பேரண்டமும்

எண்ணங்களைக் குறித்து விதித்தமைக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப்பற்றி நீ எப்பொழுதாவது எண்ணிப் பார்த்திருக்கிறாயா? எல்லையற்ற விழிப்புணர்வு நிலையைக் குறித்த, துல்லியமற்ற குறைந்த அளவு கருத்தையாவது அறிந்துகொள்ளாமல் தனிப்பட்ட மனிதனின் விழிப்பு

---

1. William C. Menninger & Munro Leaf, You and Psychiatry (New York, Charles Scribner's Sons, 1948).

உணர்வுநிலையால் நிலைநாட்டப்பட வேண்டிய இன்றியமையாத தன்மையானது, ஸ்ரீராமகிருஷ்ணரின் சிறந்த சீடர்களிடம் அனுபவமாக நன்கு நிலைநிறுத்தப்பட்டிருந்ததை நாம் அறிகிறோம். அவர்களுக்குத் தனிமனிதனின் விழிப்புணர்வு நிலையானது, எல்லையற்ற விழிப்புணர்வு நிலையின் ஒரு பகுதியாக அல்லது வெளிப்பாடாக விளங்கியது. இதுதான் அவர்களை தன்முனைப்பு மையம் சார்ந்தவர்களாக இருப்பதற்குப் பதிலாக இயலுலக அண்டத்தின் மையம் சார்ந்தவர்களாக இருக்கச் செய்தது. இயலுலக அண்டத்தின் விழிப்புணர்வு நிலையானது எல்லா வகையான தனிமனிதர்களின் விழிப்புணர்வு நிலையை உள்ளடக்கிய தன்மையானது, வேற்றுமையில் ஒற்றுமையென்பதை அவர்கள் நம்மை உணரச் செய்தனர்.

விழிப்புணர்வு நிலைதான் ஆளுமையின் சாரம் என்னும் கருத்தானது, அறிவின் மற்றும் செயல்பாடுகளின் கருவிகளாக உள்ள மனம், புலன்கள் உடல் போன்றவற்றை மறுப்பதாக சுட்டப்படவில்லை. நம்முடைய மனமானது அதைப்போல உள்ள பல மனங்களில் ஒன்றாகும். நம் உடலானது, அதைப் போல உள்ள பல உடல்களில் ஒன்றாகும். எனவே இங்கும், பருப்பொருள் மற்றும் மனம் என்னும் மட்டங்களில் தனி நிலை, உலகளாவிய நிலை, பிண்டம், அண்டம் என்னும் கேள்வியானது வருகிறது.

ஹிந்து சமய ஆச்சாரியர்கள் மஹாகாசம், சித்தாகாசம் மற்றும் சிதாகாசம் என்னும் மூன்று வகையான ஆகாசங்களைக் குறித்துப் பேசுகின்றனர். தனி உடலானது, இயலுலக அண்ட உடலின் ஒரு பகுதியாகும். அது பருப்பொருளின் கடலைப் போல விளங்குகிறது. தனிமனமானது, இயலுலகக் கடல் என்னும் மனத்தின் ஒரு பகுதியாக உள்ளது. தனித்து உள்ள அகங்காரம் அல்லது விழிப்புணர்வு நிலையானது இயலுலக அண்டத்தின் விழிப்புணர்வு நிலையின் ஒரு பகுதியாக விளங்குகிறது. அண்டமானது ஒரு கடலைப் போன்றது. பிண்டமானது ஒரு அலையைப் போன்றது ஆகும். இப்பொழுது கடல் மற்றும் அலை என்னும் இரண்டின் எது

மேம்பட்ட உண்மையானது? கடலானது கண்டிப்பாக அலையைவிட மேம்பட்ட உண்மையாக உள்ளது. அலைக்கும் அதனுடைய உண்மை நிலை உள்ளது. ஆனால் அது கடலைச் சார்ந்துள்ள உண்மையாகும். நம்முடைய ஆளுமையைப் பொறுத்த மட்டில் இதுவும் உண்மையானதாகும். நம்முடைய தனித்த விழிப்புணர்வு நிலை, நம் தனித்த மனம் மற்றும் நம் தனித்த உடல் என்னுமிவை முறையே உலகளாவிய விழிப்புணர்வுநிலை, உலகளாவிய மனம் மற்றும் உலகளாவிய உடல் என்னும் இவைகளின் பகுதிகளாக வடிவம் கொண்டுள்ளன.

இங்கு நாம் பண்டைய இயலுலக உயிர்உரு (Cosmic Being) என்னும் கருத்திற்கு வருகிறோம். அந்த உயிர் உருவிலிருந்து எல்லா உயிரினங்களும், பொருட்களும் தோன்றி, அதிலேயே அவை அனைத்தும் வாழ்கின்றன. இயங்குகின்றன என்பது அந்தக் கருத்தாகும். 'இறைவன் ஆயிரக் கணக்கான தலைகளை உடையவர். ஆயிரக் கணக்கான கண்களை உடையவர். ஆயிரக் கணக்கான பாதங்களை உடையவர். அவர் பூமியை எங்கும் வியாபித்து நிற்கிறார். அவரே அதைக் கடந்தவராகவும் விளங்குகிறார். முன்பு எது இருந்ததோ, எது இனி வரப்போகிறதோ, இப்பொழுது எது காணப்படுகிறதோ எல்லாம் இறைவனே, மரணமற்ற பெருநிலைக்குத் தலைவராக இருப்பவரும் அவரே. இங்குக் காணப்படுவது எல்லாம் இறைவனின் மகிமையே ஆகும். ஆனால் அந்த இறைவன் இவற்றை விடச் சிறப்பு மிக்கவர். தோன்றியவை எல்லாம் அவருடைய கால் பகுதியே ஆகும். அவருடைய முக்கால் பகுதி அழிவற்ற விண்ணில் உள்ளது. அவர் வெளிப்படுத்தப்படாமலும், நிலையாகவும் உள்ளார்.'[1]

தனிநிலையைப் பற்றி அறிந்துகொள்வதற்கு நாம் அண்டத்தைக் குறித்து சிறிதளவு உணர வேண்டும். உனக்கு சாக்ரடீஸ் மற்றும் ஒரு அந்தண முனிவரைக் குறித்த பண்டைய கதையைப் பற்றித் தெரியுமா? இந்தியாவிலிருந்து

---

1. புருஷ ஸூக்தம், ரிக்வேதம், 10. 90.1-3.

ஒரு அந்தணமுனிவர் கிரீஸ் நாட்டிற்குச் சென்று சாக்ரடீஸைச் சந்தித்த பொழுது சாக்ரடீஸ் அவரிடம், 'மிகப் பெரிய ஆராய்ச்சியானது மனிதனைப்பற்றி ஆராய்வதுதான்' என்று கூறினார். ஆனால் அதற்கு அந்த அந்தண முனிவர், 'உங் களுக்குக் கடவுளைத் தெரிந்திருக்காவிட்டால், மனிதனை எப்படி தெரிந்துகொள்ள முடியும்?' என்று கேட்டார். தனி மனிதனைக் குறித்த சரியான கருத்தை, உலகளாவிய தன்மை யின் பின்னணியில்தான் நம்மால் பெற இயலும். தனிமனிதத் தன்மையை நம்மால், இயலுலக அண்டத் தன்மையின் பின்னணியில் தான் புரிந்துகொள்ள இயலும்.

மனிதன் ஆன்மீக உரு ஆவான் என்பது சமயத் தொடர் பான கருத்து ஆகும். அவனுடைய தன்மையானது உடல் மற்றும் மனத்தால் மட்டுமின்றி ஆன்மாவாலும் ஆக்கப்பட் டுள்ளது. உடல், புலன்கள், மனம் என்னும் அனைத்தும் சேர்த்துப் பிடித்துக் கொண்டுள்ள தனித்த ஆன்மாவின் பின்னணியில், புத்த சமயத்தில் 'நிர்வாணம்' என்று கூறப் படும், வேதாந்தம், 'பிரம்மன்' என்று அழைக்கும், மற்ற சமயங்கள் கடவுள் என்று அழைக்கும் பரம்பொருள் உள்ளது. இத்தகைய மிக உயர்ந்த ஆன்மீக விழிப்புணர்வு நிலையில் நிலைபெற்றிருந்த ஒரு புத்தரோ, ஒரு ஏசுநாதரோ அல்லது ஒரு ஸ்ரீராமகிருஷ்ணரோ மருட்சிகளைக் கண்டு நகைப் பார்கள். மற்றும் அவர்களுக்கு மரணம்கூட மரணமற்ற பெரு நிலைக்கு ஒரு வழியாகத்தான் இருந்தது. அகநிலை உணர் வுடன் கூடிய சூழ்நிலைக்கு உட்பட்ட தனிமனிதனால் அல்லது சமயச்சார்புடைய சாதாரணமான மனிதர்களாலோ இத்தகைய மனப்பாங்கைப் பெற இயலாது. பாதியளவு ஞானமடைந்தவர்கள் பெறும் உறுதித்தன்மையானது, மன இயல் உறுதியளிக்கும் உறுதிநிலையைவிட மேம்பட்ட தாகும். எப்படியிருப்பினும் மன இயலானது, மிகவும் தகுதி யுடன் கூடிய தொண்டு புரியலாம். பூர்வாங்க உத்தியாக அதற்கு அதனுடைய சிறப்பு உள்ளது. ஆனால் சமயமானது, நீண்ட தொலைவு சென்று மன இயல் மருத்துவத்தின் குறியிலக்கிற்கு அப்பால் சென்று நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது.

நவீன மனஇயல் மருத்துவம், மனித நல்வாழ்விற்கு அளித்துள்ள மிக முக்கியமான பங்கீடு 'ஆளுமையின் ஒருங்கிணைந்த' நிலை என்னும் கருத்து ஆகும். உணர்வற்றநிலை என்பதைக் கண்டுபிடித்து இருப்பதன்மூலம், மனோதத்துவ வல்லுனர்கள், சாதாரண மனிதர்களுக்கு அவர்களுடைய மனங்களின் ஆழங்களைக் குறித்துப் பொதுவாக மிகச் சிறிய அளவுதான் தெரிந்து இருக்கும் என்று காட்டியுள்ளார். உணர்வு நிலையில் உள்ள மனம் பொதுவாக, உணர்வு நிலையற்ற மனத்திலிருந்து தன்னைப் பிரித்துக்கொண்டு இருப்பினும் அதன்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இது ஆளுமையினுள் பிரிவுகளையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கிறது. டாக்டர் யுங் போன்ற மனோதத்துவ நிபுணர்கள், ஆளுமையின் உணர்வற்ற மற்றும் உணர்வுள்ள பகுதிகளை ஒருங்கு இணைக்கும் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

ஆளுமையை ஒருங்கிணைப்பது என்றால் என்ன?

நாம் இப்பொழுது ஒருங்கிணைத்தல் என்னும் சொல்லின் பொருளை கவனமாக ஆராய்வோம். ஒரு முழு எண் என்பது முழுமையான கூட்டொருமை ஆகும். பின்னத்தின் இயல்பு வாய்ந்த, பல கூறுகள் கலந்துள்ள எண் அல்ல. ஒருங்கிணைப்பு என்பது முழுமையாக வடிவமைப்பது, ஒன்று சேர்ப்பது ஆகும். அல்லது சேர்ந்து கொள்வது ஆகும். ஒரு முழுமையான அல்லது குறைவற்ற முழுமையை உருவாக்குவது ஆகும்.

பலவகையான ஒருங்கிணைப்புகள் உள்ளன. தற்காலத்தில் இயற்பியல் சார்ந்த விஞ்ஞானங்கள் பருப்பொருளானது அணுத்திரண்மத்தால் (Molecules) ஆக்கப்பட்டுள்ளது. அணுத்திரண்மங்கள் அணுக்களால் ஆக்கப்பட்டுள்ளன. மற்றும் அணுக்களானது இன்னும் மிகச் சிறிய துகள்களால் ஆக்கப்பட்டுள்ளன என்னும் கருத்தைக் கொண்டுள்ளன. நவீன இயற்பியல் வல்லுனர்கள் அணுக்கள் ப்ரோட்டான்களால் அல்லது நேர்மின் ஆற்றலின் அலகுகளால் மற்றும் அதே அளவுள்ள எலக்ட்ரான்களால் அல்லது

எதிர்மின் ஆற்றலின் அலகுகளால் ஆக்கப்பட்டுள்ளன. ப்ரோட்டான்கள் மையக்கருவில் (nucleus) ஒருமுகப்படுத்தப் பட்டுள்ளன. அவை ந்யூட்ரான்கள் எனப்படும் மின் இயக்க மற்ற சிற்றணுத்துகள்களையும் தன்னகத்தில் கொண்டுள்ளன. எலக்ட்ரான்கள் மையக் கருவிற்கு வெளியிலுள்ளன. மற்றும் அவை மையக் கருவை தொடர்ந்து சுற்றிக் கொண்டு உள்ளன என்று கருதப்படுகிறது.

ஒவ்வொரு அணுவும், கதிரவனின் மண்டலத்தைப் போன்று, அது தன்னுடைய ஆக்கக் கூறுகளால் ஒரு முழுமையை வடிவமைக்கிறது என்பது இதன் பொருள் என்பதை நீ உணர்கிறாயா? அணுக்கள் அவைகளின் முறை யில் இன்னும் பெரிய முழுமையின் பகுதிகளை வடிவமைக் கின்றன. அதைப் போல் நம் உடலிலுள்ள ஒவ்வொரு உயிரணுவும் (cell) ஒரு சிறிய சூரிய மண்டலம் போன்ற தாகும். அது அதுவாகவே ஒரு முழுமொத்த உயிராக உள்ளது. அத்தகைய எல்லா அலகுகளும், உயிர் ஆக்க மூலப்பொருள் (tissue) என்று நாம் கூறும் ஒரு பெரிய அலகின் பகுதிகளை வடிவமைக்கின்றன. உடலின் ஆக்கமூலப்பொருட்கள் அவைகளின் முறையில் நாம் உடல் என்று கூறும் மிகப்பெரிய அலகை வடிவமைக்கின்றன. ஒரு ஒருங்கிணைந்த உடலில், எல்லா உறுப்புக்களுக்கும் தனித்தனியாக இயக்கங்கள் இருக்கும்பொழுது, அவை பொதுவான இயங்கும் சக்தியுடன் ஒரு நிலைப்பட்டு இருக்க வேண்டும். நிலைமை இவ்வாறு இல்லை எனின் இணக்கமற்றதன்மை அல்லது நோய் ஏற் படுகிறது. எனவே நம்முடைய உடலானது சரியான முறை யில் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறதா அல்லது இணக்க முடைமையுடன் இருக்கிறதா என்று கவனிப்பது அவசிய மாகிறது. நம்முடைய உடலில் உள்ள எல்லா உறுப்புக்களும் ஆரோக்கியமாகவும், உறுதியுடனும் இருக்க வேண்டும். மற்றும் இணக்கமுடைமையுடன் செயல்பட வேண்டும்.

நாம் இப்பொழுது மனத்தைக் குறித்து ஆராய்வோம். நம்முடைய மனமானது, கூட்டிணைப்புமுறை சார்ந்த முழுமை யாகும். அறிவுக்கூறு, உணர்வு மற்றும் விருப்பங்கள்

என்னும் இயல்பான வலிமைகளை உள்ளடக்கியது ஆகும். நம்முடைய சீர்தூக்கிப்பார்க்கும் தன்மையும், உணர்ச்சிகளும், விருப்பங்களும், செயல்களும் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு, நம்முள்ளே எத்தகைய பெரிய குழப்பத்தை ஏற்படுத்துகின்றன! கடமைகள் சார்ந்த முரண்பாடுகளும், ஒழுக்கமுடைமையின் மட்டம் சார்ந்த முரண்பாடுகளும், ஆன்மீகக் கருத்துக்களைச் சார்ந்த முரண்பாடுகளும் இருக்கலாம். நாம் உணர்ச்சிகளின் பெரிய நீர்ச்சுழியாக ஆகலாம். எனவே, இங்கும் ஒருங்கிணைப்பிற்கான அவசியமுள்ளது. அது தூய்மைப்பாடு வலிமை மற்றும் இணக்கமுடைமையையின் நிலைகோளாகக் திகழ்கிறது.

இப்பொழுது அகங்காரத்தைக் குறித்து ஆழ்ந்து ஆராய்வோம். அகங்காரமானது ஏறுமாறான போக்குடையது என்பதை நாம் அறிவோம். அது தொடர்ந்து தன்னுடைய ஈர்ப்பு மையத்தை மாற்றிக் கொண்டேயிருக்கிறது. அது இப்பொழுது வெளிப்புறப் பொருட்களுடன் அடையாளம் கண்டு கொள்கிறது. அடுத்த கணத்தில் உடலுடன், அதன்பிறகு புலன்களுடன் அல்லது மனத்துடன் அடையாளம் கண்டு கொள்கிறது. அது சமமனநிலையற்றது. அது எந்தக் கணத்திலும் குப்புற விழுந்து விடும் அபாயத்தில் இருக்கிறது.

அது எப்படி அவ்வப்பொழுது மிகவும் ஒருமுனைப்பாட்டுடன் அதனையே மையமாகக் கொண்டு உள்ளது! நாம் நம்முடைய தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையானது வரம்பு கடந்த விழிப்புணர்வு நிலையின் ஒரு பகுதி என்பதை மறந்துவிடுகிறோம். நம்முடன் இருப்பவர்களின் இன்னலமானது நம்முடைய இன்னலத்திலிருந்து பிரிக்க இயலாதது என்பதை மறந்துவிடுகிறோம். நாம் தன்முனைப்பு உள்ளவர்களாக, தன்னலம் உள்ளவர்களாக, கஞ்சத்தனம் உள்ளவர்களாக ஆகிவிடுகிறோம். இது நமக்கும், நம் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் ஆபத்தானது ஆகும். எனவே இங்கும் நமக்கு மற்றொரு வகையான ஒருங்கிணைந்த நிலை தேவைப்படுகிறது.

இவ்விதம் ஒருங்கிணைந்த நிலையில் அதன் உடல் தன்மையும், அதன் மனத்தன்மையும் மற்றும் அதன் ஆன்மீக தன்மையும் உள்ளது. முறையாக ஒருங்கிணைந்த நிலையில் உள்ள ஆளுமையில், அகங்காரம் அல்லது தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையானது, உலகளாவிய விழிப்புணர்வு நிலையுடன் சரியான சுருதியில் உள்ளது. மற்றும் ஒருங் கிணைந்த தனிப்பட்ட விழிப்புணர்வானது, உடலையும் மனத்தையும் இணக்கமுடைய, அறிவுபூர்வமான, தானே இயங்கும் வழிக்குத் தூண்டி வழிநடத்துகிறது. சரியான ஒருங்கிணைந்த நிலை என்றால் நாம் இப்படித்தான் புரிந்து கொள்கிறோம்.

ஒருங்கிணைந்த நிலையை நோக்கிய படிகள்

இது பலருக்கும், மிகவும் மேம்பட்ட கருத்தாகத் தென் படலாம். ஆனால் ஒரு கீழான கருத்திற்குப் பதிலாக மேம் பட்ட கருத்தைக் கொண்டிருப்பது நல்லதாகும். எப்படி யிருப்பினும், மேம்பட்ட கருத்தைச் சார்ந்திருக்கும்பொழுது, நாம் அளவுகடந்த பொறுமையுடனும், விடாமுயற்சி யுடனும், படிப்படியாக வழியைப் பின்பற்ற வேண்டும். நாம் நம்முடைய பயணத்தைத் தொடங்குவதற்காக, எங்கு நின்று கொண்டு இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நாம் மலைகளின் மீது ஏறவிரும்பினால் நாம் இப்படித்தான் செய்வோம். நாம் நம்முடைய வாழ்க்கையின் மிகப் பெரிய இலட்சியத்தை அடைய விரும்பினால், செய்ய வேண்டியது இதுவேதான் ஆகும். நாம் செயலாற்றும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். நம்முடைய உடல், மனம் மற்றும் அகங்காரம் போன்றவற்றின் உண்மையான நிலைகளைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். நான் என்னுடைய ஆச்சாரியரின் பாதங்களின் அருகில் அமர்ந்தும் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்ற சீடர்களிடமிருந்தும் உடல் மற்றும் அறிவுபூர்வமான, ஒழுக்கம் மற்றும் ஆன்மீகபூர்வ மான இசைவுடைமையுடன் கூடிய முன்னேற்றத்தின் நோக்கம் என்னும் மிகச் சிறந்த பாடத்தைக் கற்றேன்.

உடல், நம்முடைய இயற்பொருள் சார்ந்த கருவியாக விளங்குவது நல்ல தகுதியுடனும், பயன் விளைவிக்கக் கூடிய தாகவும் வைக்கப்பட வேண்டும். நமக்கு நம் உடலைக் குறித்த புதுமனப்போக்கு இருப்பது அவசியமானதாகும். அது புலன் களின் தடையற்ற நுகர்விற்கான கருவியும் அல்ல. அல்லது வெறுப்பதற்கும் புறக்கணிப்பதற்கும் தக்க அழுக்குக் குவிய லும் அல்ல. உடலானது அடிப்படையில் தெய்வீக நிலையின் ஒரு கோயிலே ஆகும். மற்றும் அது தூய்மையாகவும், உறுதியுடனும் வைக்கப்பட வேண்டும். பாகவதத்தில்,

'உடல் என்பது ஒரு தோணியைப் போன்றதாகும். குருவை மாலுமியாகவும், கடவுளின் அருள் என்னும் தகுந்த காற்றின் உதவியால் தனிச்சிறப்புமிக்க வாழ்க்கை என்னும் கடலைக் கடப்பதற்கு மனிதன் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை எனின் அவன் தற்கொலைஞன் என்று கூறப்பட வேண்டும். தன்னுடைய சொந்தமான ஆன்மாவின் கொலையாளி ஆவான்.[1]

உடலானது உரம், வலிமை, ஆரோக்கியம் மற்றும் மன மகிழ்வை அளிக்கவல்ல தூய்மையான உணவினால் ஊட்ட மளிக்கப்பட வேண்டும். சரியான முறையான உணவுடன், நாம் தூய்மையான காற்றை சுவாசிக்க வேண்டும். உடல் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டும். போதைப் பொருட் களையும் கிளர்ச்சியூட்டும் மருந்துகளையும், வெறியூட்டும் குடிவகைகளையும் தவிர்க்க வேண்டும்.

ஒருங்கிணைவற்ற நிலையிலிருந்து ஒருங்கிணைந்த நிலைக்கு

உணர்ச்சிகளுக்கு அடிமையாவதால், மேம்பட்ட ஒழுக்க நெறிமுறைகள் விழிப்படைந்துள்ள மனிதனுக்கு,

---

1. ந்ருதேஹமாத்யம் ஸுலபம் ஸுதுர்லபம்
ப்லவம் ஸுகல்பம் குருகர்ணதாரம் ।
மயானுகூலேன நபஸ்வதேரிதம்
புமான்பவாப்திம் ந தரேத்ஸ ஆத்மஹா ॥

—பாகவதம், *11.20.17.*

அவனுடைய மனம் உறுதியடைந்து, உடல் பலவீனமாக இருந்தால், அது அவனிடமே ஒரு முரண்பாட்டையும், இணக்கமற்ற தன்மையையும் ஏற்படுத்துகிறது. அவனுடைய ஆளுமையானது ஒருங்கிணைவற்ற நிலையை அடைகிறது. அவ்வாறின்றி, அவனுடைய உணர்ச்சிகளுக்கு, அவற்றை மேம்படுத்தித் தூய்மைப்படுத்தி ஒரு ஆன்மீகத் திருப்பத்தை அளிப்பதால் சாதகனுக்கு அவனிடமே மிகப் பெரிய அளவில் இணக்கமுடைமையும், ஒருங்கிணைந்த நிலையும் ஏற்படும்.

நாம் இப்பொழுது அதைவிட மேம்பட்ட ஒருங் கிணைந்த நிலையை நோக்கமாகக் கொள்ள வேண்டும். மற்றும் நம் எண்ணம், உணர்வு, விருப்பம் என்னும் மூன்றை யும் நேரினப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம் விழிப்புணர்வு நிலையானது பொதுவாக இந்த மூன்றனுள் ஏதாவது ஒரு செயல் உரிமையுடன் தொடர்பு கொண் டிருக்கும். அது மற்றவற்றைத் தன் ஆதிக்கத்தில் வைத் திருக்கும். நாம் மிகுந்த அறிவு ஜீவியாகவோ அல்லது மிகுந்த அளவில் உணர்ச்சி வசப்படுபவர்களாகவோ இருக்கலாம். அல்லது மிகவும் வலிமையான உறுதியுடன் காரணத்தைப் பற்றியோ மேம்பட்ட உணர்வுகளைப் பற்றியோ அக்கறை யின்றி சுறுசுறுப்புடன் இருக்க விரும்பலாம். இது நமக் குள்ளேயே ஒரு பிளவை ஏற்படுத்துகிறது. நாம் நம்முடைய இயல்பான வலிமையை ஒருங்கிணைக்க வேண்டும். ஆனால் எப்படிச் செய்வது? நாம் நம்மை எல்லா இயல்பான வலிமைகளிலிருந்தும் பிரித்துக் கொண்டு, நம்முடைய தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையிடம் வருவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் அதை நம் தியானத்திற் குரிய பொருளாகச் செய்து அதை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். இத்தகைய பற்றற்ற நிலையில் நம்முடைய இயல்பான வலிமைகளிடம் திரும்ப வரும்பொழுது நம்மால் அவற்றை ஒருங்கிணைத்து மற்றும் அவற்றை இணக்க முடைய போக்குடன் பொதுப்படையான நன்மைக்காகச் செயல்படுத்தச் செய்ய வேண்டும். இது மிகப் பெரிய சாதனையாகும்.

ஒரு பெயர்பெற்ற மனோதத்துவ வல்லுனர் அவருடைய நோயாளியின் அகமுரண்பாடுகள், பகுப்பாய்வின் மூலம் மாற்றப்பட்டது என்று குறிப்பிட்டு உள்ளார். மற்றும் அவர் மனச்சமனிலையை ஓரளவிற்குப் பெற்றதாகவும் கூறியுள் ளார். 'மற்றவைகளில் மையம் கொண்டிருந்த அவருடைய ஆதார ஈர்ப்பு மையமானது அவரிடமே நிலை கொள்ளத் தொடங்கியது.' சரியான முறையான மனோதத்துவ சிகிச்சை யினால் ஆதார ஈர்ப்பு மையத்தை ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட ஆளுமையில் ஆழமாக நிலை கொள்ளுமாறு செய்ய இயலும் என்பது உண்மையாக இருப்பினும், ஒரு சராசரியான மனித னானவன் வரையறுக்கப்பட்ட ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் ஆன்மீகப் பயிற்சியை ஒவ்வொரு நிலையாகக் கடந்து செல்வதின்மூலமாகவே மிக உயர்ந்த மட்டும் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் சமநிலையைப் பெற இயலும்.

கோபம், வெறுப்பு, வாய்மையற்ற தன்மை, பொறாமை, தூய்மைக்கேடு மற்றும் உதவியற்ற நிலையில் மற்றவர்களைச் சார்ந்து இருப்பது என்னும் இவை ஆதார ஈர்ப்பு மையத்தை அவசியமான ஒருங்கிணைந்த நிலையிலிருந்து மாற்றிவிடுவ தால் அது முரண்பாட்டையும் உடன்பாடற்ற தன்மையையும் ஏற்படுத்துகிறது. அதற்கு மாறாக தூய்மைப்பாடும், தற்கட்டுப் பாடும் நம்மை நம்முடைய எஜமானர்களாகச் செய்து இணக்க முடைமையையும், அமைதியையும் தோற்றுவிக்கிறது. அதா வது அவை நம் ஆளுமையின் ஒருங்கிணைந்த தன்மைக்கு வழிகாட்டுகின்றன. நம்முடைய ஆளுமையின் ஒருங்கிணைந்த நிலையின் இரகசியமானது ஆதார ஈர்ப்பு மையம் எங்குள் ளதோ, அங்கு இருக்கிறது. 'ஆதார ஈர்ப்பு மையம் என்றால் நம்முடைய விழிப்புணர்வு நிலையின் மையத்தை, 'நான்' என்னும் உணர்வுநிலையை நாம் இங்கு குறிப்பிடுகிறோம். ஒருங்கிணைந்த தன்மையை நோக்கிய முதலடியாக, சரியான இடத்தில் மையத்தின் எல்லையைக் குறிப்பது இருக்க வேண் டும். நம்முடைய விழிப்பு உணர்வின் மையமாக மற்றவர்கள் இருக்கும் பொழுது, நம்முடைய ஆதார ஈர்ப்பு மையம் முழுவதுமாக நம் வெளிப்புறத்தில் இருக்கும் பொழுது, நாம்

மற்றவர்களின் இத்தகைய போக்குகளால் நிலைகுலை கிறோம். நம் உடல் அல்லது நம்முடைய உணர்ச்சிகள் நம் முடைய விழிப்பு உணர்வு நிலையின் மையமாக இருக்கக் கூடும். இவ்வனைத்தும் நம் ஆளுமையைச் சாய்த்து, அதன் ஒருங்கிணைந்த தன்மையற்ற நிலைக்கு வழிவகுக்கின்றன. நாம் முதலில் நம்முடைய 'நான்' என்னும் உணர்வைப் பிரித்து அதை உள்ளார்ந்த ஆன்மாவில் நிறுவ வேண்டும்.

நான் காண்பவரையும், காணப்படுவதையும் வேறு படுத்தி அறிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் நம்முடைய உணர்ச்சிகள் காண்பவரிலிருந்து வேறுபட்டவை அதாவது உண்மையான 'நான்' என்பதிலிருந்து வேறுபட்ட வையாகும். நாம் நம்மை நம்முடைய உணர்ச்சிச் சிக்கல்களி லிருந்து விடுவித்துக் கொள்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அவற்றை நம் உண்மைத் தன்மைகளிலிருந்து வேறு பட்ட ஒன்றாகக் காணக் கற்றுக் கொள்ளும்பொழுது நாம் அவற்றிற்குத் தலைமை வகிப்போம். இது பதிலிற்கு நமக்கு, வாழ்க்கையின் உண்மைகளை தைரியமாக எதிர்கொள் வதற்கும் மற்றும் மனத்தையும் அதன் செயல்பாடுகளை யும் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற திறமையை அளிக்கிறது.

ஆளுமையைக் கடவுளுள் ஒருங்கிணைப்பது

நம்முடைய ஆதார ஈர்ப்பு மையத்தை, நம் விழிப் புணர்வு நிலையின் மையத்தைச் சரியான இடத்தில் குறித்து நிலைநிறுத்துவதுதான் ஆளுமையின் ஒருங்கிணைந்த தன்மையை நோக்கிய முதலாவது அடியாகும் என்பதை நாம் கண்டுள்ளோம். இந்த மையத்தை, தனிப்பட்ட ஆன்மா அல்லது அகங்காரத்தைப் பரம்பொருளுடன் இணைப்பதுதான் இரண்டாவது அடியாகும். நம்முடைய மிக உயர்ந்த இலட்சிய நோக்கு நிலையிலிருந்து, நவீன மனோதத்துவ வல்லுனர் களால் ஆதரிக்கப்படும் தன்முனைப்புடன் கூடிய ஒருங் கிணைந்த நிலையானது நம்முடைய அகங்காரத்திற்கு மனம், புலன்கள் மற்றும் உடலின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய அளவிற்குப் பயனளிப்பதாக இருப்பினும், எப்படியிருப்பினும்

அது போதாது. நாம் மிக உயர்ந்த ஒருங்கிணைந்த நிலைக்கு இன்னும் முயற்சி செய்யவில்லை. அடுத்ததாக நாம் இதைச் செய்ய வேண்டும். டாக்டர் யுங், Modern Man in Search of a Soul என்னும் புத்தகத்தில் 'அகங்காரமானது முழுமையிலிருந்து பிரிந்துள்ளதால் நோய்வாய்ப்பட்டிருக்கிறது. மனிதகுலம் மற்றும் கடவுளிடம் அதனுடைய தொடர்பை இழந்தும் உள்ளது,[1] என்று எழுதியுள்ளார். மற்றொரு புத்தகத்தில் அவர் மேலும் குறிப்பிடத்தக்க கருத்தை வெளியிட்டுள்ளார். 'தாவோவில் இருப்பது எனின் நிறைவான செயல் தீர்வு ஆகும். முழுமையாகும். பொருட்களில் உள்ளடங்கிய இருப் பின் அர்த்தத்தை முழுமையாக உணர்தல் ஆகும். ஆளுமை தாவோவே ஆகும்.'[2] தாவோ என்றால் காண இயலாத, கிரகித்துக் கொள்ள இயலாத, வரம்பற்ற, வாழ்க்கையின் ஆதாரமாக இருப்பது ஆகும். உண்மையின் இருப்பிடமாகும். எல்லாவற்றின் மூலகாரணம் ஆகும். தாவோ இந்திய முனிவர் கள் கூறும் இயலுலக அண்டத்தின் மெய்ப் பொருள், உலக ளாவிய நிலைபேறுடைய பரம்பொருளை ஒத்தது ஆகும்.

நாம் உலகளாவிய தன்மையுடன் இந்த அகங்காரத்தை எப்படித் தொடர்புபடுத்துவது? பிரார்த்தனை அல்லது சுலோகங்களைக் கூறுதல், மந்திரங்களைக் கூறுதல், மந்திரங் களின் பொருட்களில் மூழ்கியிருத்தல், பரம்பொருளைத் தியானிப்பது போன்ற இவற்றின் உதவியுடன் நாம் நம் ஆன்மாவுடன் அத்தகைய இசைவுடைமையை ஏற்படுத்திக் கொண்டு, நம்முள்ளே அத்தகைய இணக்கமுடைமையை ஏற்படுத்திக் கொண்டு நாம் நம்முடைய அற்பமான ஆளுமை யிலிருந்து, அற்பமான அகங்காரத்திலிருந்து, நம் தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையிலிருந்து உயர்ந்து மேம்படலாம். அதன்பிறகு நாம் உண்மையான, ஒப்புயர்வற்ற நான் என்னும் முனைப்பின், இயலுலக அண்டத்திற்குரிய விழிப்புஉணர்வு

---

1. Carl G.Jung, Modern Man in Search of a Soul (London, Routledge and Kegan Paul Ltd., 1953) *பக்கம் 141.*

2. Carl G.Jung, The Integration of Personality (London, Routledge and Kegan Paul Ltd., 1952) *பக்கம் 305.*

நிலையின் நம் அனைவரிடமும் உள்ள தொடுநிலையை, உணரலாம். இந்த நிலையில், இயலுலக அண்டத்தின் மெய்ப் பொருளானது, தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையைவிட அதிக உண்மையானது என்பது உணரப்படுகிறது. இங்கு மிகவும் முனைப்பான ஒருங்கிணைந்த நிலை ஏற்படுகிறது. ஆன்மாவானது, சாதாரணமான விழிப்புணர்வு நிலைக்குத் திரும்பிவரும்பொழுது, அகங்கார மட்டத்திற்கு வரும் பொழுது, உடலும், மனமும் குறிப்பிடத்தக்க ஒருங்கிணைந்த நிலையை உணர்கின்றன. அதன்பிறகு தனிப்பட்ட விழிப் புணர்வு நிலை, உலகளாவிய விழிப்புஉணர்வு நிலையில் வேர்ஊன்றி, ஆன்மீக மயமாக்கப்பட்ட அகங்காரமானது, உடலுடனும், மனத்துடனும் ஒரே சுருதியில் இணைந்து, அதனுடைய மிகவும் கீழ்ப்படிந்த தொண்டர்களாகச் செய லாற்றுகின்றன. அப்பொழுது தனிப்பட்ட உணர்வுகள் உலக ளாவியதில் வேரூன்றியிருக்கும். மற்றும் ஆன்மீக மயமாக்கப் பட்ட அகங்காரம் அதனுடைய நம்பிக்கையுள்ள வேலைக் காரர்களாகச் செயல்புரியும், மனம் மற்றும் உடலுடன் சுருதி சேர்ந்து இருக்கும்.

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவின் மேற்குப்பகுதியிலிருந்த கால்நடைகள் வளர்க்கும் ஒரு ஊருக்குச் சென்றிருந்தார். அவர் தத்துவம் பேசுகிறார் என் பதைக் கேள்விப்பட்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கால் நடைகளின் பாதுகாவலர்களாக இருந்த சிலர், அவரைச் சொற்களினாலேயே மதிப்பிட்டனர். ஆன்மஞானத்தை உணர்ந்தவர்களால் எல்லா நிலைகளிலும் அவர்களின் மனச்சமநிலையை நிலைநிறுத்திக் கொள்ள இயலும் என்று அவர் கூறியதைக் கேட்ட அவர்கள் அவரைப் பரீட்சை செய்து பார்க்க விரும்பினர். அவர்கள் சுவாமிஜியை அவர்களுக்குச் சொற்பொழிவு ஆற்றுவதற்கு அழைத்திருந்தனர். மற்றும் ஒரு கட்டையினால் செய்த தொட்டியைப் பேச்சு மேடையாகப் பயன்படுத்த தொட்டியை நிலத்தின்மீது நிறுத்தி இருந்தனர். சுவாமி விவேகானந்தர் தன்னுடைய பேருரையைத் தொடங் கினார். மற்றும் விரைவாக அவர் சொற்பொழிவாற்றிய

தலைப்பில் மூழ்கினார். தன்னை மறந்தார். திடீரென்று துப்பாக்கிகள் சுடுவதால் பெரிய சத்தம் எழுந்தது. மற்றும் அவருடைய தலைப்பக்கத்தில் தோட்டாக்கள் பறந்தன. கலக்கமடையாமல் சுவாமிஜி, இயல்பிற்கு மாறாக எதுவுமே நடக்காததைப்போல் சொற்பொழிவாற்றுவதைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.[1] இது ஆன்மீக ஞானஒளியால் தோன்றிய ஆன்மீகச் சமநிலையாகும். அதன்மூலம், ஆதார ஈர்ப்பு மையமானது ஓய்வு எடுத்துக்கொண்டு உள்ளது. உடல்சார்ந்த தன்மையில் அல்ல. தெய்வீக விழிப்பு உணர்வு நிலையில் ஒருவருடைய ஆன்மாவில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக் கிறது. அத்தகைய ஞானஒளியானது ஒரு ஆணிற்கோ அல்லது பெண்ணிற்கோ ஒரு புதிய கண்ணோட்டத்தை அளிக்கிறது.

சூபியிஸம் என்பது இஸ்லாமிய சமயத்தின் ஆன்மீக சார்பான நோக்கு ஆகும். ராபியா என்பவர், வரலாற்றின் இடைக்காலத்தில் இருந்த பெண் அருளாளர் ஆவார். அவர் தெய்வீக உணர்வுநிலையில் மூழ்கியவாறு இருப்பார். ஒரு நாள் அவரை ஒருவர், 'நீ கடவுளை விரும்புகிறாயா?' என்று கேட்டார். அதற்கு ராபியா, 'உண்மையாக நான் கடவுளை விரும்புகிறேன்' என்று கூறினார். 'ஒரு தீயவனை நீ பகை வனாகக் கருதுகிறாயா?' அதற்கு அந்தப் பெண் அருளாளர் புன்முறுவலுடன், 'நான் கடவுளை மிகவும் விரும்புகிறேன். அதனால் நான் தீயவனைப் பற்றிக் கவலைப்படுவதில்லை' என்று கூறினார்.

அவருடைய ஆன்மாவானது கடவுளுடன் கலந்து இருந்தது. இது அவரைச் சுற்றியுள்ள கொந்தளிப்பு, வன் முறை மற்றும் கடுமை நிறைந்த உலகத்தின் நடுவில் அவரைக் கலங்காமல் இருக்கச் செய்தது. நாம் புனித மகான்களிடமிருந்தும், முனிவர்களிடமிருந்தும் இந்தப் படிப் பினையைத்தான் கற்றுக்கொள்கிறோம். அவர்கள் மேம்பட்ட அகச்சமநிலையை இயல்பாகப் பெற்றிருந்தனர். அவர்களிடம் ஒருங்கிணைந்த ஆளுமை இருக்கிறது. மற்றும் எதிர்பாராத

---

1. Eastern and Western Disciples, Life of Swami Vivekananda (Calcutta, Advaita Ashrama, 1974) பக்கம் *328.*

நிகழ்ச்சியில் வலுவான குண்டாந்தடியால் அடிபட்டாலும் உடைந்து போகாமலிருப்பார்கள்.

அத்தகைய அரிய, பேரின்பம் நிறைந்த தன்மையை உடையவர், பரம்பொருளைத் தன்னுள்ளும் மற்றும் எல்லா உயிரினங்களிலும் காண்கின்றார். அவர் மனமானது துன்பத்தால் அசைவதில்லை. அல்லது மகிழ்ச்சியால் அடக்கப்படுவது இல்லை. அவர் பிணைப்பு, அச்சம், கோபம் என்பவற்றிலிருந்து வெளிவந்தவர் ஆவார். அவருடைய உடலானது உண்மையான தெய்வீகக் கோயிலாகிறது. அவர் தூய்மைப் பாடு மற்றும் அன்பின் ஒளிக்கதிர்களைப் பரப்பி, அனைவருக்கும் நிலைத்த அகத்தூண்டுதலை அளித்து அருள்பாலிக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறார். நாம் நம்முடைய ஆன்மீக ஆச்சாரியர்களிடமிருந்து, உண்மையான ஆன்மீக வாழ்வானது, உயர்ந்த மட்ட விழிப்புணர்வு நிலையை அடைந்த பிறகுதான் தொடங்குகிறது என்று அறிகிறோம்.[1] ஆனால் அது நமக்கு இப்பொழுது குறிக்கோளாக மட்டுமுள்ளது. மற்றும் நாம் அந்தக் குறிக்கோளிலேயே அதிக அளவிற்கு மூழ்கியிருக்க வேண்டாம். நாம் குறிக்கோளைக் கண்டு கொண்டுள்ளோம். மற்றும் வழியைப் பின்பற்றி, கீழ்நிலையிலுள்ள ஒருங்கிணைந்த நிலையிலிருந்து மேல் நிலையிலுள்ள ஒருங்கிணைந்த நிலைக்குச் செல்வோம். நாம் ஒழுக்க நெறிமுறைமை மற்றும் ஒருங்கிணைந்த தன்மையின் அளவில் மேலும் மேலும் முன்னேற மேலும் மேலும் அதிகமான சமநிலை, இணக்கமுடைமை, அமைதி மற்றும் பேரின்பநிலையை உறுதியாகத் துய்ப்போம். எனவே 'நாம் விழிப்படைவோம், எழுவோம், குறிசாரும்வரை நில்லாது செல்வோம்.'

---

1. சுவாமி பிரம்மானந்தர், 'நீ நிர்விகல்ப சமாதி நிலையை அடைய வேண்டும். அங்கு இருமை உணர்வு, தடமில்லாமல் இருக்கிறது. சிலர் அந்நிலைதான் ஆன்மீக அனுபவத்தின் இறுதி என்று கூறுகின்றனர். ஆனால் அது தொடக்கம் என்று நான் நம்புகிறேன்' என்று கூறுகிறார். சுவாமி பிரபவானந்தரின் 'The Eternal Companion' என்னும் நூலைப் பார்க்கவும். (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம் 1971) பக்.366.

16

கடவுள் மீது அன்பு

கடவுள் மீது உண்மையான அன்பு

அன்பு இல்லாமல் எந்த மனிதனும் வாழ்வது இல்லை. பலவிதமான மனிதர்களிடம் அவர்கள் அன்பு செலுத்தும் பொருட்கள்தான் வேறுபடுகின்றன. நாம் மனிதர்களின் பின்னாலோ மற்றும் புலனின்பங்களின் பின்னாலோ அல்லது கடவுள் மற்றும் தெய்வீகமான பேரின்பத்தின் பின்னாலோ ஓடுகிறோம். கடவுளின் பின்னால் ஓடும் இத்தன்மையானது ஆன்மீக வாழ்வின் எல்லாபடி நிலைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கடவுள் நம்மிடம் இருக்கிறார். மற்றும் நம்மூலம் செயலாற்றுகிறார். நாம் இதை உணர்ந்த உடனேயே, நம்முடைய முழுமையான மனப்பான்மையானது மாறிவிடுகிறது. ஆனால் நாம் முதலில், ஒரு சிறு அளவிற் காவது நம்முடைய உண்மையான இயல்பைக் குறித்து விழிப் புணர்வைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய உண்மையான இயல்பானது தெய்வத் தன்மை யில் பங்குகொள்கிறது. மேம்பட்ட ஆன்மாவானது, பரம் பொருளின் இன்றியமையாத கூறாக விளங்குகிறது. சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளதைப் போல, 'சமயமானது, அழி யாத ஆன்மாவிற்கும், அழியாத கடவுளுக்கும் உள்ள நிரந்தர மான தொடர்பு ஆகும்.'[1] அதனால்தான் ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகனுக்கு, அவன் பக்தனாக இருப்பினும், ஞானி யாக இருப்பினும் அல்லது யோகியாக இருப்பினும், கட வுளைக் குறித்த மற்றும் உண்மையைக் குறித்த ஒரு தெளி வான கருத்து இருப்பது இன்றியமையாததாக உள்ளது.

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.316

கடவுள் மீது கொள்ளும் அன்பானது, ஆண்கள் மற்றும் பெண்கள் மீது கொள்ளும் அன்பைப்போல கண்மூடித்தனமானது அல்ல. அது எப்பொழுதுமே ஒரு மேம்பட்ட உள்ளுணர்வு முறையை அடிப்படையாகக் கொண்டது ஆகும். அது உலக நடைமுறையில் நாம் அன்பு என்றால் புரிந்து கொள்ளும் அன்பு அல்ல. பொதுவாக நம் அன்பானது ஒரு ஊற்றைப் போலக் கீழ்முகமாகப் பாய்கிறது. கடவுள் மீது கொள்ளும் அன்பானது ஒரு நதியை அதனுடைய மூல ஆதாரத்திற்கு, மனிதனுடைய அன்பு ஊற்றுக்கள் அனைத்தும் தோற்றம்கொள்ளும் வற்றாத நீர்த் தேக்கத்திற்குத் திருப்பி விடப்பட்டதைப் போன்றதாகும்.

நாம் மனத்தூய்மையைப் பெறும் அளவிற்கு, நம் உண்மையான இயல்பினை உணர்கிறோம். மற்றும் நம் உள்ளே குடி கொண்டுள்ள கடவுளிடம் தொடர்பு கொள்கிறோம். நாம் இதை அடைவதற்காக, நம் கீழான தன்மையைக் கடந்துசெல்ல வேண்டும். ஞானத்தை அடைய விரும்புபவன், தன் உறுதியான முயற்சியால் தன் மனத்தைக் கட்டுப்படுத்த விரும்புகிறான். பக்தனானவன், தன் உணர்வுகள் அனைத்தையும் கடவுளிடம் மையப்படுத்திக் கொள்கிறான். ஒருமுகப்பட்ட பக்தியால், நம்முடைய ஆசைகள் அனைத்தும் எரிக்கப்படுகின்றன. ஒரு பக்தனின் வாழ்க்கையில் கடவுள் மீது கொள்ளும் பக்தியானது மிகப் பெரிய தூய்மைப் படுத்தும் ஆற்றலாகச் செயல்படுகிறது.

கடவுள் மீது கொள்ளும் இந்த பக்திதான் இறுதியாக பக்தனையும், கடவுளையும் இணைக்கிறது. ஆனால் அது உணர்ச்சிவசப்படுபவர்களின் பக்தியன்று. உணர்ச்சிவசப்பட்டு பொங்கும் தன்மை உடையது அன்று. அது பரமாத்மாவிடம், ஒப்புயர்வற்ற கடவுளிடம் மனம் கொள்ளும் தீவிரமான வேட்கையாகும். பொதுவாக நம் பக்தியானது ஒரு கலவையாக இருக்கிறது. அதில் நிலைத்து நிற்கக் கூடிய ஏதோ ஒன்றும், அழியத்தக்க ஏதோ ஒன்றும் உள்ளது. அது தூய்மையான பக்தி அன்று. பக்தன் கடவுளுக்குத் தன்னை அர்ப்பிப்பதன்மூலம் தன் தூய்மையற்ற தன்மையிலிருந்து

விடுபடுவதற்கு விரும்புகிறான். அதன் மூலம் அவன் தூய்மையான பக்தியைப் பெறவியலும்.

நம் உள்ளார்ந்த தன்மையானது எப்பொழுதும் உண்மையாக இருப்பது இல்லை. நாம் கடவுள் மீது கொண்டுள்ள அன்பில் சிறிதளவு உள்ளார்ந்த தன்மை இருக்கிறது என்பதில் ஐயம் ஏதுமில்லை. ஆனால் இந்த உள்ளார்ந்த தன்மையானது ஆசைகளுடன் கலந்து உள்ளது. மற்றும் முழுமையற்றதாகவும் உள்ளது. ஆன்மீகப் பயிற்சியில் உள்ளார்ந்த தன்மை என்பது ஒரு முக்கியமான காரணக் கூறாக உள்ளது. சில சமயங்களில் நாம் மிகவும் உள்ளார்ந்த தன்மையுடன் இருக்கிறோம் என்று நம்மை ஏமாற்றிக் கொள்வோம். ஒரு சமயம், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி என்னிடமிருந்து போதனைகளைப் பெற விரும்பினார். அவர் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார். அவர் ஒரு நோயின் தாக்குதலிலிருந்து அப்பொழுதுதான் இயல்பான நிலைக்குத் திரும்பியிருந்தார். மற்றும் ஒரு மாறுதலிற்காக மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கு இருந்தார். அவர் அந்த நேரத்தைத் தியானம் செய்வதில் செலவழிக்க விரும்பினார். அவர் கடவுளை உணர வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் இருந்தார். நான் போதனைகளைப் பெறுவதற்கு முன்பு, அவருடைய உடல் நலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன். அதற்கு அந்தப் பெண்மணி, ‘சுவாமி, நீங்கள் என்னுடைய உள்ளார்ந்த தன்மையைச் சந்தேகிக்கிறீர்களா?’ என்று கேட்டார். அதற்கு நான், ‘இல்லை. நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் உங்களுடைய உள்ளார்ந்த தன்மையானது மற்றவற்றுடன் கலந்துள்ளது’ என்று கூறினேன்.

திடீரென்று வரும் உள்ளார்ந்த தன்மையானது குறுகிய காலத்திற்கு மட்டுமே நிற்க வல்லதாகும். நாம் பலவற்றை விரும்புகிறோம். அவற்றுள் ஒன்றாக கடவுள் உள்ளார். முதலில் கடவுளின் மீது நாம் கொள்ளும் அன்பானது இயல்புணர்ச்சி உடையதாக இருக்க வேண்டும். ஆனால் படிப்படியாக நாம் கடவுளின் இருப்பை உணர வேண்டும். அவர் தந்தையைவிட தாயைவிட, உலகத்தில் உள்ள

எல்லாவற்றையும்விட மிகவும் நேசிக்கத் தக்கவர் ஆவார். நாம் சாதனையின் மூலம் நம் மனத்தைத் தூய்மையாக்கிக் கொள்ள வேண்டும். மற்றும் கடவுள் மீது கொண்டுள்ள அன்பின் தகவுப் பொருத்தத்தின் அளவை அதிகரிக்க வேண் டும். அது எப்படியோ பலவகையான உலகியல் விருப்பங் களுடன் கலந்து உள்ளது. நம்மிடம் ஒருமுகப்படுத்தப்பட்ட அன்பு முழுமையாக இருக்க வேண்டும். நம்முடைய ஒவ்வொரு உணர்வும் கடவுளிடமே மையப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். மற்றும் வேறு எதுவும் நம்மை ஈர்த்து, நம் மனத்தைக் கடவுளிடமிருந்து இழுத்துச் செல் வதற்கு அனுமதிக்கக் கூடாது. இம்முறையில் விழிப்புணர் வுடன் தொடர்ந்து, நம்முடைய எல்லா விருப்பங்களும், உணர்ச்சிகளும் கடவுளிடம் செலுத்தப்படும்பொழுது நம் உணர்வுகளும், கருத்துப் போக்குகளும் தூய்மைப்படுத்தப் படுகின்றன மற்றும் மேம்பாடு அடைகின்றன. அதன்பிறகு நாம் உண்மையான பக்தி என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்கிறோம். இந்த முறையால் நாம் யோகத்திலுள்ள பெரிய அபாயத்தைத் தவிர்க்கிறோம். நம்மால் ஒருமுகப் படுத்தப்பட்ட நம் மன உணர்ச்சிகளும் கிளர்ச்சிகளும் உயர்வு படுத்தப்படாமல் இருப்பதுதான் இந்த அபாயமாகும்.

நாம் உணவு, நண்பர்கள், செல்வம் மற்றும் சொத்து போன்றவற்றை விரும்புகிறோம். ஆனால் இந்த அன்பானது நம்முடைய அற்பமான 'நான்' என்பதிலேயே மையம் கொண்டுள்ளது. இந்த அகங்காரம் தொல்லை அளிக்கிறது. இதுதான் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமாக உள்ளது. ஒரு எளிய உள்ளம் கொண்ட கிராமவாசி தன்னுடைய மனைவியைக் கைவிட்ட குற்றத்திற்காக குற்றவியல் நடு வரின் முன்பு அழைத்து வரப்பட்டான். அவன் 'ஐயா, நான் கைவிடுபவன் அல்ல. நான் ஒரு அகதி' என்று மறுத்தான். மனித அன்பானது பெரும்பாலும் மிகத் தீவிரமான தன்னலமுடையதாக மாறிவிடுகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணருக்கும், அவருடைய சீடர்களுக்கும் இடையிலிருந்த தொடர்பை இத்துடன் ஒப்பிட்டுக்

காண்போம். அந்த அன்பின் தூய்மையையும் ஆழத்தையும் சொற்களால் விவரிக்க இயலாது. நரேந்திரநாதன் (பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் என்று உலகப்புகழ் பெற்றவர்) குருதேவரின் சீடர்களில் மிகவும் தலைசிறந்தவர் ஆவார். குருதேவர் நரேந்திரனை மிகவும் நேசித்தார். மற்றும் பல வழி களில் அவருடைய அன்பை வெளிப்படுத்தினார். நரேந்தி ரனைப் பார்த்தவுடனேயே அவர் ஆனந்த பரவசநிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார். ஒருமுறை குருதேவர் தன்னுடைய சீடரைக் கடுமையான சோதனைக்கு உட்படுத்தினார். நரேந்திரன் அங்கு வந்து குருதேவரை வணங்கும் பொழுது குருதேவர் அமைதியாக இருப்பார். நரேந்திரன் அந்த அறையை விட்டு அகன்றவுடன் மற்றவர்களுடன் பேசத் தொடங்குவார். இத்தகைய புறக்கணிக்கும் தன்மையைக் குருதேவர் பல வாரங்களுக்குக் கைக்கொண்டார். ஆனால் நரேந்திரன் அச் சமயத்தில் எப்பொழுதும் போல தொடர்ந்து வந்துகொண்டிருந் தார். ஒரு மாதம் சென்ற பிறகு ஸ்ரீராமகிருஷ்ணர் தன் இளம் சீடனிடம், 'நான் உன்னிடம் ஒரு சொல்லைக் கூட பரிமாறிக் கொள்ளவில்லை. இருப்பினும் நீ வந்தாய். அது எப்படி?' என்று கேட்டார். அதற்கு நரேந்திரன் 'நீங்கள் பேசுவதைக் கேட்பதற்கு மட்டும் நான் இங்கு வருகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் உங்களை நேசிக்கிறேன். உங்களைப் பார்க்க விரும்புகிறேன். அதனால்தான் வந்தேன்'[1] என்று கூறினார். அதுதான் தன்னலமற்ற அன்பாகும்.

ஒருமுறை நரேந்திரனே ஸ்ரீராமகிருஷ்ணரிடம் தன்னிடம் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று கூறினார். இதைக் கேட்டதும் குழந்தையைப்போல குரு தேவர் உடனடியாகக் காளிகோயிலிற்கு தெய்வீக அன்னை யின் அறிவுரையைக் கேட்கச் சென்றார். தெய்வீக அன்னை, ஸ்ரீராமகிருஷ்ணர் கடவுளை நரேந்திரனிடம் கண்டதால் அவனை நேசித்தார் மற்றும் என்றைக்கு அவரால் இளைய சீடனிடம் கடவுளைக் காணவியலாதோ அன்று அவரால்

1. Eastern and Western Disciples, The Life of Swami Vivekananda (Calcutta, Advaita Ashrama, 1974) பக்கம் 67-68.

இளைய சீடனின் தோற்றத்தைக் கூடப் பொறுத்துக்கொள்ள வியலாது என்று வெளிப்படுத்தினாள்.[1] குருதேவர் அவருடைய சீடர்களிடம் கொண்டிருந்த அன்பு சாதாரணமானது அல்ல. அது எல்லா உயிரினங்களிடமும் எங்கும் பரவியுள்ள இறைவனின் தன்மையை நேரடியாக உணர்ந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீக பண்புத் தொடர்பு ஆகும். இத்தகைய வகையான அன்பில், பரம்பொருள்நான் ஈர்ப்பு மையமாக விளங்குகிறது. அற்பமான 'நான்' என்னும் உணர்வு ஈர்ப்பு மையமாக இருப்பதில்லை.

ஸ்ரீசைதன்யரின் வாழ்க்கையிலும் இதைப்போன்ற ஒரு நிகழ்ச்சி விவரிக்கப்பட்டுள்ளது. அவர் பூரியில் இருந்த பொழுது, கீழ்க்குலத்தைச் சார்ந்த ஒரு பக்தனை அணைத்துக் கொள்ள விரும்பினார். அந்த பக்தன் பயத்தினால் பின்னடைந்து 'ஐயா, நான் கீழ்க்குலத்தைச் சேர்ந்தவன். நீங்கள் என்னைத் தொடக்கூடாது' என்று கூறினான். அதற்கு ஸ்ரீசைதன்யர், 'நீ என்ன கருதுகிறாய்? உன்னைத் தொடுவதால் நானே தூய்மை அடைகிறேன்' என்று பதில் கூறினார். அவதார புருஷரானவர் எல்லா இடங்களிலும், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளின் இருப்பை உணர்கிறார். அவருக்கு, உயர்ந்த குலம், கீழான குலம், வறுமை மற்றும் செல்வம் என்னும் வேறுபாடுகள் இருப்பதில்லை.

பக்தர்களின் வகைகள்

பகவத் கீதை நான்கு வகையான மனிதர்கள் கடவுளை வழிபடுவதாகக் கூறுகிறது. துன்பத்திலிருப்பவர்கள், செல்வத்தை நாடுபவர்கள், ஞானம் அடைவதில் துடிப்பும் ஆர்வமும் மிக்கவர்கள் மற்றும் ஞானிகள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் உன்னதமானவர்கள்தான், ஆனால் இறுதியாக உள்ள ஞானியே கடவுளால் மிகவும் நேசிக்கப்படுபவர் ஆவார் என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார்.[2] இந்த முக்கியமான

---

1. மேற்கண்ட புத்தகத்தில் பக்கங்கள் 59-60.
2. பகவத்கீதை, 7.16-18.

கூற்றின் பொருள் என்ன? ஆன்ம ஞானம் பெற்றவன் எல்லா உயிரினங்களிலும் கடவுளைக் காண்கிறான். மற்றும் கடவுளுடன் தொடர்ந்து கலந்திருக்கிறான். தன்னிடமோ அல்லது மற்றவர்களிடமோ உள்ள தீவினைகளால் அவன் பாதிக்கப் படமாட்டான்.

உபநிஷத காலத்தில் இருந்த தீர்க்கதரிசிகள் இந்த வகையான ஞானத்தைப் பெற்றிருந்தனர். அவர்களில் ஒருவர்,

'நீ பெண், நீ ஆண், நீ இளைஞன், நீ யுவதி, கோலுடன் தள்ளாடிக் கொண்டிருக்கும் முதியவனும் நீ, நீ உண்மையாக பல்வேறு வடிவங்களில் தோன்றுகிறாய்' என்று கூறியுள்ளார்.[1]

சுவாமி விவேகானந்தர் இளம் சாதகராக இருந்த பொழுது எப்பொழுதும் சமாதியில் மூழ்கி இருப்பதற்கு விரும்பினார். ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்கு அதைவிட உயர்ந்த நிலை இருப்பதாகக் கூறினார். அதாவது எல்லா உயிரினங்களிலும், எல்லா இடங்களிலும் கடவுளைக் காண்பது ஆகும்.[2] ஆனால் இது இயல்பாக, மிகவும் மேன்மையான நோக்கு நிலையாகும்.

மனிதர்களில் பலவகையினர் உள்ளனர். கடவுள் மற்றும் வாழ்க்கையைக் குறித்த அவர்களுடைய மனப்பான்மைகளும் பரவலாக வேறுபடுகின்றன.

1. பொதுவாக, முழுக்க முழுக்க உலகியலிலேயே நாட்டம் கொண்ட மனிதர்கள் கடவுளைக் குறித்து அக்கறை கொள்வது இல்லை. மற்றும் அவர்கள் வாழ்க்கையின் இன்பங்கள், புலனின்பங்களுக்காக மட்டுமீறிய அளவில் எண்ணி எண்ணி ஏங்கி துன்பங்களைக் கண்டு பெருமளவில் அஞ்சுகிறார்கள்.

---

1. *த்வம் ஸ்த்ரீ த்வம் புமானஸி த்வம் குமார உத வா குமாரீ ।*
த்வம் ஜீர்ணோ தண்டேன வஞ்சஸி த்வம் ஜாதோ பவஸி
விச்வதோமுக: ॥
—ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 4.3

2. The Life of Swami Vivekananda, *பக்கம் 131.*

2. உலகியலில் நாட்டம் கொண்ட மற்றொரு வகையான மனிதர்கள், கடவுளைப் பற்றி நினைக்கிறார்கள். ஆனால் கடவுளைப் பெரும்பாலும் வரங்களை அளிப்பவராக, பருப்பொருள் சார்ந்த வளமையையும், பருப்பொருள் சார்ந்த மகிழ்ச்சியை அளிப்பவராகக் காண்கின்றனர். அவர்களும் இன்பங்களைப் பெருமளவில் விரும்புகின்றனர். மற்றும் வாழ்க்கையின் துயரங்களைக் கண்டு அஞ்சுகின்றனர்.

3. ஓரளவிற்கு உலகியல் நாட்டமும் ஓரளவிற்கு ஆன்மீக நாட்டமும் உடையவர்கள், அவர்கள் கடவுளை வழிபட்டுக் கொண்டே, உலகியல் இன்பங்களையே பெருமளவில் பற்றிக் கொள்கின்றனர். அவர்கள் இனிமையற்றதையும் இனிமை உடையதாகக் கருதுவதற்கு முயற்சி செய்தாலும், அதே சமயத்தில் துன்பத்தையும் உணர்கிறர்கள்.

4. சில நடைமுறைமெய்ம்மையான மனிதர்கள், கடவுளைக் குறித்து அக்கறை கொள்ளாமல், வாழ்க்கையில் இன்பங்களையும், துன்பங்களையும், தவிர்க்க இயலாதவை என்று ஏற்றுக்கொண்டு மற்றும் நடப்பவைகளை அவைகள் உள்ளபடியே எடுத்துக்கொள்ள முயற்சி செய்வர்.

5. ஆன்மீக நாட்டம் உடைய சில மனிதர்கள் வாழ்க்கையின் இன்பங்களையும், துன்பங்களையும், அவர்கள் செய்த நல்ல செயல்கள், மற்றும் கெட்ட செயல்களின் விளைவுகளாக அமைதியாக ஏற்றுக்கொண்டு, அவர்களின் வாழ்க்கையை உடனொத்ததாகவே வாழ்வதற்கு முயற்சி செய்வார்கள்.

6. வேறுசிலர், எல்லாவற்றையும் கடவுளின் பரிசாக ஏற்றுக்கொண்டு, இயன்ற அளவிற்கு நிறைவடைந்தவர்களாகவும், பாதிக்கப்படாமல் இருப்பதற்கு முயற்சியும் செய்வார்கள். அதே சமயத்தில், அவர்கள் ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் கடமையின் பாதையில் இருப்பதற்காகத் தங்களுடைய முழுமையான திறமையுடன் முயற்சி செய்வார்கள்.

7. மற்றவர்கள், உலக வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் பிரிக்கவியலாத, எதிரெதிரானவை என்றும்

மற்றும் எப்பொழுதும் தங்களுடைய செயல்களுக்கான பரிசு களோ அல்லது தண்டனைகளோ அல்ல என்று கருதுவார்கள். அவர்கள் பற்றுதலற்றவர்களாகவும், தூய்மைப்பாடு நிறைந்த வர்களாகவும், ஆன்மீகப் பயிற்சியை மேற்கொண்டு, கடமை களை ஆற்றிக் கொண்டு, தன்னலமற்ற தொண்டு செய்து கொண்டு இருப்பவர்களாகவும் மற்றும் எல்லா ஒப்பிடப் படும் நன்மை மற்றும் தீமைக்கு அப்பாலுள்ள பரம் பொருளை அடைய முயற்சி செய்யும் ஒரு வாழ்வை வாழ் வதற்கு முயலுகின்றனர். உலகியல் இன்பம் உலகியல் துன்பங்களில் அவர்கள் சமநிலையுடன் இருப்பார்கள். மற்றும் முரண்பாடுகளால் குழப்பமடைந்து திசைமாறு வதற்கு மறுத்து உயர்ந்த வாழ்வு வாழ்வதற்கு முழுமையாக முயற்சிப்பார்கள்.

ஒரு வகையான அன்பில், அன்பு செலுத்துபவர், அவ னுடைய அல்லது அவளுடைய இன்பத்தை மட்டுமே நினைக்கின்றனர். மற்றொரு வகையில், கொடுக்கும் மற்றும் பெற்றுக் கொள்ளும் மனப்பான்மை உள்ளது. காதலர்கள் பரஸ்பர இன்பத்தை நினைக்கிறார்கள். மூன்றாவது வகை ஒன்று உள்ளது. அதில் காதலன் தன்னுடைய இன்பத்தைப் பற்றி ஒரு சிறிதும் நினைப்பதில்லை. அவனுடைய முழு மனமும் அவன் அன்பு செலுத்துபவரின் மகிழ்ச்சியில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

நாம் கடவுள்மீது கொள்ளும் அன்பில், மகிழ்ச்சியையும், அமைதியையும் அடையவில்லை எனின், நம் அன்பில் ஏதோ தவறு இருக்கிறது. உலக ஆசைகள் கலக்காத தூய்மையான அன்பானது, பெரிய அளவில் மகிழ்ச்சியையும், நிறைவையும் கண்டிப்பாக அளிக்க வல்லது ஆகும். கடவுள் பெரும்பாலும் நாம் பற்றிக் கொண்டுள்ள பொருட்களைப் பறித்துக்கொள் கிறார். எனவே நாம் கடவுளுக்காக, தூய்மையான, தன்னல மற்ற அன்பை முயன்று பெற இயலும். ஆன்மீக வாழ்வானது, இயற்பொருள் சார்ந்த, உடல் சார்ந்த அளவில் அடுத்தடுத்து துன்பத்திற்கும் குறைபாடுகளுக்கும் வழிவகுப்பதாக இருப் பினும், சிலசமயங்களில் தூய்மையான அன்பையும்,

அதன்மூலம் ஒப்புயர்வற்ற பேரின்பத்தையும் நாம் அடைவதற்குத் தேவையானதாகவும் உள்ளது. கடவுள்தான் நம்முடைய மிகப்பெரிய மேலான செல்வம் ஆவார். மற்றும் அதைத் திரட்டுவதற்காக நாம் கண்ணாடி மணிகளையும், அற்பமான மினுக்கும் பொருட்களையும் வீசி எறிய வேண்டும்.

தெய்வீக அன்பின் ஆற்றல்

தெய்வீக சக்தியைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் சொற்களின் பொருளில் மட்டுமே எண்ணுதல் கூடாது. தெய்வீக ஞானத்திலிருந்து, தெய்வீக அன்பிலிருந்து வரும் சக்தியாக எண்ண வேண்டும். அது உடல் சார்ந்த ஒழுக்க நெறிமுறை சார்ந்த அல்லது ஆன்மீக சக்தியாக இருக்கலாம். எல்லா வகையான சக்திகளின் மூல ஆதாரத்தை நோக்கி, தெய்வீக அன்னையை நோக்கித் திரும்ப வேண்டும். தெய்வீக அன்னையின்மீது கொள்ளும் அன்பானது உனக்கு வரையற்ற சக்தியை அளிக்கிறது. அவளுடைய கைகளில் நீ ஒரு கருவியாக மட்டும் இருக்கிறாய். ஆனால் அந்த கருவியும் செயல்படுகிறது. ஒரு கருவியாக உன்னுடைய சக்தி அளவற்றதாக உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அன்னை உன்னிடம் குடிகொண்டுள்ளதைப்போல அனைவரிடமும் குடிகொண்டுள்ளாள் என்று நினைக்க வேண்டும். இல்லையெனின் இன்றைய அன்பு, நாளைய வெறுப்பாக மாறக்கூடும். நம் அன்பானது, வெறுப்புடன் இணைத்தொடர்பு உடையது ஆகும். அது அன்பிற்காகவே அன்பு செலுத்தப்படுவதாக இருக்க வேண்டும். இந்த மனப்பான்மையை நம்மால் நிலைநிறுத்திக் கொள்ள இயலவில்லை எனின் முதலில் பரிமாற்றம் செய்துகொள்ளும் மனப்பான்மையையாவது பெற்றிருக்க வேண்டும். அதன்பிறகு உனக்குக் கிடைப்பதைவிட அதிகமாகக் கொடுக்க விரும்பும் ஒரு நிலை ஏற்படுகிறது. ஒருவர் அவரைப்பற்றி நினைக்காமல் இருப்பதுதான் மிக உயர்ந்த நிலையாகும். ஒருவர் எதையும் பதிலுக்கு எதிர்பார்க்காமல் கொடுத்துக்கொண்டே இருப்பார்.

தற்சமயம், நம்முடைய அன்பு, தன்னலம் கலந்ததாக உள்ளது. உனக்குச் சரிசம இருபாதிநிலை (Fifty-Fifty) குறித்து கதை தெரியுமா? முயல் இறைச்சி மசாலாவிற்குப் பெயர் பெற்ற ஒரு உணவகம் இருந்தது. ஒருமுறை ஒரு வாடிக்கை யாளர், அதன் சுவை மாறுபட்டு இருப்பதைக் கண்டார். காவல் துறையினர் அழைக்கப்பட்டனர். அந்த உணவகத்தை நடத்தும் பெண்மணி 'ஐயா, நான் என்ன செய்வது? முயல் இறைச்சி கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே நான் சிறிது குதிரை இறைச்சியைக் கலந்தேன்' என்று கூறினார். காவல் துறையினர், 'எந்த விகிதத்தில் கலந்தீர்கள்?' என்று கேட்டனர். அப்பெண்மணி அதற்கு, 'சரிசம இருபாதி அள வில்' என்று கூறினார். அதாவது ஒரு முயலுக்கு ஒரு குதிரை என்ற விகிதத்தில்! மற்றவர்களிடம் நாம் கொண்டுள்ள அன்பானது முயலுடைய எடையின் அளவாகவும், நம்மீது நாம் கொண்டுள்ள அன்பானது குதிரையின் எடையளவிலு மாக உள்ளது. உண்மையிலேயே சரிசம இருபாதி அளவுதான்! நம்மையும் உட்கொண்ட மனிதர்கள் அனைவரும் நம்ப முடியாதவர்களாக இருக்கிறோம். அன்பின் எல்லையற்ற மூல ஆதாரத்தை நோக்கித் திரும்ப வேண்டும். நாம் அந்த உண்மையான அன்பின் ஒரு துளியைப் பெறுகிறோம். அது பெருமளவில் தன்னலம் கலந்ததாக ஆகிவிடுகிறது. அதைத் தூய்மைப்படுத்த வேண்டும். ஒவ்வொருவரிடமும் குறுகிய தன்னலம் உள்ளது. அதை எப்படி மேம்படுத்துவது என்பது தான் சிக்கலானதாகும். விஞ்ஞானத்தில் மேம்படுத்துவது என்றால் தூய்மைப்படுத்தும் முறையாகும். கிறிஸ்தவர்கள் அதனை தூய்மைப்பாடு என அழைக்கின்றனர். நம் அன்பைத் தூய்மைப்படுத்துவதுதான் நம் வாழ்க்கையின் கடமைப் பொறுப்பாகும்.

கடவுளின் மீது நீ கொண்டுள்ள அன்பை அதிகப்படுத்த வேண்டும். அதன்பிறகு மற்றவர்களிடம் கொள்ளும் அன்பு அதிகரிக்கும். அன்னை நம் அனைவரையும் இணைக்கிறாள். முதலில் தனிமனிதருக்குரிய அன்பு வருகிறது. அதன்பிறகு நாம் படிப்படியாக, நாம் ஆன்மாக்கள் வரம்பற்ற கடவுளின்

கூறுகள் என்று உணர்கிறோம். அதன்பிறகு, மற்றவர்களைக் குறித்த நம்முடைய மனப்பான்மை மாறுகிறது. அதன்பிறகு மனித அன்பானது ஆன்மீகப் பண்புத் தொடர்புடையதாக மாற்றீடு செய்யப்படுகிறது. பற்றுதல், விடுதலைக்கு வழி வகுக்கிறது. தன்னலமானது தொண்டாக மாற்றீடு செய்யப் படுகிறது. இந்த அன்பை மிகுதிப்படுத்த வேண்டும். மற்றவர் களுக்கு அதை அளிக்க வேண்டும். மற்றவர்களை கௌரவத் துடன் நடத்த வேண்டும். ஒவ்வொருவரிடமும் உள்ள தெய்வீக உணர்வுகளைப்பற்றி எண்ணுவாய். குடும்ப அன்போ அல்லது நண்பனிடம் உள்ள அன்போ எல்லாமே தன்னலம் நிறைந்ததுதான். இந்த அன்பானது, கடவுளிடம் தொடர்பு படுத்தப்பட்டுள்ள வரையற்ற அன்பின் ஒரு துளி என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அதை தெய்வீக அன்புடன் தொடர்புபடுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உன் னுடைய ஆன்மீகப் பயிற்சிக்குப்பிறகு உன் தந்தை, தாய், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் கடவுளைக் கண்டு வணங்க வேண்டும். உன்னை வெறுப்பவர்களிடமும் இவ் விதத்தில் நடந்துகொள்ள வேண்டும். தன்னலமற்று அனை வரிடமும் அன்பு செலுத்த முயற்சி செய்ய வேண்டும்.

எல்லா ஆசைகளுக்கும், எல்லாத் தூண்டுதல்களுக்கும், நன்மை-தீமை போன்ற அனைத்திற்கும் அப்பாற்பட்டுள்ள ஒரு விழிப்புணர்வு மட்டத்திற்கு நாம் உயர வேண்டும். நல்ல உணர்ச்சிகளுக்கும் கெட்ட உணர்ச்சிகளுக்கும் உள்ள தொலைவு சிறிதளவே என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். மற்றும் அவற்றை ஆன்மீக வழிகளின் திசைகளில் செலுத்துவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். உடல் மட்டத்தில் உன் அன்பை, மற்றொருவருக்கு வெளிப்படுத்த முயற்சிக்கும் பொழுது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நீ உண்மையாகவே ஒரு மனிதரை விரும்பினால் பற்றற்ற முறையில் அவருக்குத் தொண்டு செய்ய முயற்சிக்க வேண்டும். உன்னால் இயல வில்லை எனின், பின்னடைந்து அவருக்காக மௌனமாகப்

பிரார்த்தனை செய்ய வேண்டும். ஏற்கனவே ஓரளவிற்கு மனத் தூய்மை அடைந்துள்ள சாதகர்கள், அவர்களுடைய விருப்பங் களுக்கும் ஆசைகளுக்கும் புறஉருவம் கற்பிப்பதில் கூடுதல் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும். அவர்கள் குறிப் பாக மென்மையான உணர்ச்சிக் கனிவுகள் மற்றும் உணர்வுகள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

நம்முடைய மனமானது, தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். நாள்தோறும் செய்யும் சிறிய விஷயங்களில் அது கவனமற்று இருந்தால், அது தியானத்தைப் பொறுத்த மட்டில் கூட கவனமற்று இருக்கத்தான் செய்யும். நாம் தியானம் செய் வதற்கு அமரும் பொழுது புதிய மனத்தைப் பெறுவது இல்லை. அது அதே பழைய மனம்தான். அது மற்ற நேரங் களில் அங்குமிங்கும் அலைவதற்குப் பழக்கப்பட்டிருந்தால், தியானம் செய்யும் பொழுது அது அமைதியாக இருக்கும் என்று நீ எப்படி எதிர்பார்க்கவியலும்? நாம் எந்த அளவிற்குக் கடவுளை விரும்பி, அவருக்குத் தொண்டாற்றுவதில் ஒரு ஈடுபாட்டை உணர்கிறோமோ, அந்த அளவிற்கு ஆன்மீகப் பயிற்சியானது மேலும் மேலும் நிலைத்துநிற்கக் கூடிய தாகவும், பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

நீ செயலாற்றிக் கொண்டிருக்கும் பொழுதும் உலகியல் சார்ந்த பொருட்களில் பின்னால் உன் மனம் ஓடுவதற்கு நாட்டம் கொள்ளும் பொழுதும் நீ ஏதாவது ஒரு வழியில் கடவுளை புகுத்திக் கொள்ள வேண்டும். தெய்வீக அன்பு மட்டுமே கவனம் செலுத்திப் பேணப்பட வேண்டும். இடை விடாத பயிற்சியின்மூலம் அதைச் செய்ய இயலும். மனத்தின் பெரும்பகுதியானது எழுச்சியூட்டப்பட வேண்டும். உணர் வுடையதாகச் செய்யப்பட வேண்டும். இப்பொழுது செய்யப் பட்டிருப்பதற்கு மேலாகச் செய்ய வேண்டும். கடவுளை, உன் வாழ்க்கையின் வழிகாட்டியாகச் செய்து கொள்ள வேண்டும்.

கடவுளை நேசிக்காத ஒருவன், உண்மையாக ஆன்மீக வாழ்வை வாழ இயலாது. நம் மனித அன்பை கடவுளுக்குரிய அன்பாக படிமாற்றுவதுதான் ஆன்மீக வாழ்வின் மிகப்பெரிய

விஷயமாகும். மிக மோசமான வகையைச் சார்ந்த பிணைப்பிலும் உண்மையான அன்பின் நடுப்பகுதி உள்ளது. மாசு எரிக்கப்பட்டதும், தூய்மையான அன்புதான் எஞ்சியிருக்கும்.

ஏதாவது ஒரு காரணத்திற்காக ஒரு மனிதன் உன்னைக் கைவிட்டாலும் கடவுள் ஒருபொழுதும் அப்படிச் செய்ய மாட்டார் என்பதை நீ உறுதியாக உணர வேண்டும். ஏனெனில் நாம் கடவுளின் நிலைத்த அம்சம் என்று ஸ்ரீகிருஷ்ணர் கூறியுள்ளார்.[1] உன்னுடைய எல்லா அன்பையும் கடவுளை நோக்கித் திருப்ப வேண்டும். மற்றும் கடவுளுடைய அன்பின் மூலம் அனைவரையும் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது தனிப்பட்ட முறையில் மற்றவர்களை நேசிக்காமல், கடவுளின்மூலம், கடவுளுக்காக மற்றவர்களை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களின் மீது நாம் செலுத்தும் அன்பில், மனிதனுக்குக் கடவுளின் தூய்மையான அன்பின் சிறுசாயல் இருக்க வேண்டும்.

கடவுளை நோக்கிய திருப்பம்

அகங்காரம் மீண்டும் மீண்டும் தன்னை தன்முனைப்புடன் நிலைநிறுத்திக் கொள்ளும். எனவே ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதைப்போல, அதைக் கடவுளின் தொண்டனாக ஆக்கி விட வேண்டும்.[2] ஆசைகளும், உணர்ச்சிகளும் கட்டுப்படுவதற்கு மறுக்கும். அவைகளின் தீவிரத் தன்மையை நிலைநிறுத்திக் கொண்டு, அவைகளை கடவுளை நோக்கித் திருப்பி விட வேண்டும். ஆண்கள், மற்றும் பெண்களுடன் சேர்ந்து இருப்பதற்கு விரும்புவதற்குப் பதிலாகக் கடவுளுடன் சேர்ந்து இருப்பதற்கு விரும்ப வேண்டும். மனத்தின் வேட்கையை அவனைக் காண்பது மட்டுமே நிறைவு செய்ய இயலும். அதனுடைய வெற்றிடத்தை அவன் ஒருவனால் மட்டுமே நிரப்ப இயலும். மற்றும் நிலைத்த இன்பத்தையும், அமைதியையும் அதற்கு அளிக்க இயலும். கண்ணுக்குத் தெரியும், மற்றும் சூட்சுமமான உன்னுடைய புலன் இன்பங்களை

1. *பகவத்கீதை, 15.7*
2. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.193.*

அனுபவிப்பதற்குக் குறுக்கே நின்றுகொண்டிருப்பவர்களின் மீது கோபம் கொள்வதற்குப் பதிலாக, கடவுளின் வழியில் தடைகளாக இருப்பனவற்றின்மீது கோபம் கொள்ள வேண்டும். உன்னுடைய கீழான விருப்பங்கள் உன்னுடைய கொந்தளிக்கும் உணர்ச்சிகள், உன்னுடைய உண்மையான கோபம் போன்றவற்றின் மீது கோபம் கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் அவற்றை உன்னுடைய மிகப் பெரிய இரக்கமற்ற பகைவர்களாகத் தவிர்க்க வேண்டும். மற்றொரு மனிதபொம்மையை அடைய விரும்புவதற்குப் பதிலாக அல்லது நிலையற்ற உலகியல் தொடர்பான செல்வத்தை விரும்புவதற்குப் பதிலாக, கடவுளையும், அவருடைய அள்ள அள்ள வற்றாத ஆன்மீகச் செல்வத்தையும் விரும்ப வேண்டும். ஏனெனில் அதை ஒரு பொழுதும் இழக்க இயலாது மற்றும் அதால் மட்டுமே நமக்கு நிலைத்த அமைதியைத் தரவியலும். பாகவதம், 'காமம், கோபம், பயம், விருப்பங்கள், நட்பு, கூட்டுறவு போன்றவற்றைக் கடவுளிடம் திசை திருப்பினால், அவை கடவுளுடன் கலப்பதற்கு வழி வகுக்கின்றன' என்று கூறுகிறது.[1]

பரிசவேதி (சித்துமணிக்கல்) தொடுவதால், ஆசைகள், உணர்ச்சிகள், பொறாமை, கோபம் என்னும் தாழ்ந்த உலோகங்கள் அவற்றின் தீய இயல்புகளை இழந்து, ஜீவாத்மாவிற்குப் பேரின்பத்தையும், நிலைத்த தன்மையையும் அளிக்கவல்ல தூய்மையான பக்தி நிறைந்தவையாகப் படிமாற்றம் அடைகின்றன. ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் 'தீயொழுக்கம் நிறைந்தவன் கூட என்னை வேறு ஒரு நாட்டம் இன்றி போற்றுவான் எனின், அவன் நன்னடத்தையுள்ளவன் என்றே கருதுவதற்கு உரியவன் ஆவான். அவன் விரைவில் தருமசிந்தனை உடையவனாக ஆகிறான். சாசுவதமான சாந்தநிலையை அடைகிறான். அர்ஜுனனே, என் பக்தன் நாசமடைய மாட்டான் என்று உண்மையில் உணர்ந்து உலகிற்கு உரைப்பாய்' என்று கூறியுள்ளார்.[2]

1. பாகவதம், 10.29.15.
2. பகவத் கீதை, 9.30,31.

ஒரு மனிதன், ஆசைகளின் கெட்ட விளைவுகளை முழுவதும் கண்கூடாக உணர்ந்திருந்தாலும், அவனை அவைகளிடமிருந்து முழுமையாக விடுவித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால், அத்தகைய மனிதன் என்ன செய்ய வேண்டும்? அவைகளை மீறி அவன் எப்படி மேம்பட இயலும்? மனஉறுதியின் ஆற்றலைப் பயன்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்துவது ஒரு வழியாகும். அவற்றைப் பார்வையாளராகக் காணும் மனப்பான்மையை உருவாக்கிக் கொள்வது மற்றொரு வழியாகும். இந்த இரு வழிகளில் எதுவுமே அவ்வளவு சுலபமானது அல்ல. மற்றும் ஒருவரின் ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தில் அருகில் செல்வதற்குக் கூட இயலாது. ஆன்மீக நாட்டம் கொண்டுள்ள சாதகனுக்கு வேறு என்ன வழி உள்ளது? அவன் அவ்வனைத்தையும் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ கடவுளுடன் தொடர்பு படுத்த வேண்டும். உறுதியான முயற்சியுடன் ஒவ்வொரு ஆசையும் ஒவ்வொரு புலனின்பத் தூண்டுதலும், ஒவ்வொரு உணர்ச்சியும் விழிப்புணர்வுடன், மனப்பூர்வமாக கடவுளை நோக்கித் திருப்பப்பட வேண்டும். அவனுடைய கலைநய உணர்வும், அவன் விருப்பமும் கலையை அனுபவிப்பதில் மிகவும் உறுதிப்பாட்டுடன் இருந்தால், அவன் ஒரு புனிதமான கலை வடிவத்தை எடுத்துக்கொண்டு அதைக் கடவுளின் மட்டத்திற்கு உயர்வதற்கான அடிக்கல்லாக அமைத்துக் கொள்ள வேண்டும். உலகியல் தொடர்பான இசையைக் கேட்பதற்குப் பதிலாகப் பக்திப் பாடல்களைக் கேட்க வேண்டும். மற்றவர்களுக்காகப் பாடுவதற்குப் பதிலாகக் கடவுளுக்காகப் பாட வேண்டும். மற்றும் இது போன்றவற்றைச் செய்ய வேண்டும். அவன் மலர்களின் அழகையும், அவற்றின் நறுமணத்தையும் விரும்பினால், அவற்றை அனுபவிக்க விரும்பினால், அவன் மலர்களைப் பறித்து அவற்றைக் கடவுளுக்கு அர்ப்பித்து, வழிபடும் புனிதமான இடத்தை கலைநயத்துடன் அலங்கரிக்கலாம். அவன் யாரையாவது நேசிக்க விரும்பினால், அல்லது யாரை நோக்கியாவது மிகவும் ஈர்க்கப்படுவதாக உணர்ந்தால், அந்த

நபரிடம் உள்ள கடவுளை அவன் விரும்ப வேண்டும். அதன்மூலமாக நேரடியாகக் கடவுளை நோக்கி இழுக்கப்பட வேண்டும்.

மனப்பூர்வமாக, விழிப்புணர்வுடன் செய்யப்பட்டால் இவ்வனைத்தும் மிகச் சிறந்த கட்டுப்படுத்தும் காரணக் கூறுகளாகச் செயல்படும். மிகப்பெரும் ஒழுங்குபடுத்தும் சாதனமாக, நம் விருப்பங்களை மேம்படுத்துவதற்கு உதவி செய்து, அவற்றிற்கு உயர்ந்த திருப்பத்தை அளித்து சிறந்த தூய்மைப்பாடை அடைவதற்கு உதவுகின்றன. ஆனால் இங்கும் இறுதி இலட்சியமானது, முழுமையாகக் கட்டுப் படுத்தப்பட்ட மனத்தாலும் மற்றும் கடவுளை உணர்வ தாலும் சாதகனால் அடையப்பட வேண்டும். மற்ற அனைத் தும் அதற்குப் படிக்கற்களாகத்தான் பயன்படுகின்றன. படி நிலைகளின் வழியைப் பின்பற்றி எப்பொழுதாவது தூய்மை யான ஆன்மீக அன்பின் உயர்ந்த நிலைக்கு முன்னோ, பின்னோ நம்மால் உயர்வதற்கு இயலும்.

வெளிப்புறத்தில் உள்ள எல்லாப் பொருட்களுடனும் நமக்கு உள்ள தொடர்புகளுக்குக் கடவுளை நோக்கிய திருப்பம் கொடுக்கப்பட வேண்டும். கடவுள் எல்லா இடங் களிலும் இருக்கிறார். மற்றும் எல்லாவற்றிலும் இருக்கிறார். ஆனால் அதைப்பற்றி அறிந்துகொள்வதற்காக, பரந்துபட்ட விழிப்புணர்வு உள்ளவர்களாக, அதைப்பற்றிய உணர்வு உள்ள வர்களாக இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் நம் முடைய இயல்புணர்ச்சிகள் மற்றும் புலன்களின் தூண்டுதல் களை, அவை நல்லவையாக இருப்பினும், தீயவையாக இருப்பினும், குறைவாகச் செயல்படச் செய்ய வேண்டும். மற்றும் நாம் ஆராய்வதை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வனைத்திலும் கவனமற்றவர்களாகவும் அசட்டையாக வும் இருந்துகொண்டு, எதிரான போக்கைப் பின்பற்றி, நமக்கு முடிவற்ற தொல்லைகளை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

நாம் கடவுளிடம், எல்லா ஆன்மாக்களின் கூட் டொருமை என்னும் கருத்தைச் சரியான முறையில் முற்றிலும்

கண்டு உணர வேண்டும். நாம் தற்பொழுது அதை அரை மனத்துடன்தான் உணர்ந்துள்ளோம். மற்றும் சரியாகக் கூறப் போனால், உண்மையான உணர்ச்சிவசப்படாத நிலையை யும், பற்றற்ற தன்மையையும் அடையாமல் நம்மால் அதை இதயபூர்வமாக அடையாளம் கண்டு கொண்டு, அதற்கு ஏற்பச் செயல்பட இயலாது. பகுக்க இயலாத ஒரு அடிப் படையான மெய்ப் பொருள் எல்லாவற்றிலும் இருக்கிறது என்று நாம் உறுதியாக நம்பினால், ஒரு குறிப்பிட்ட நபரிடம் நமக்கு எத்தகைய வலிய வெறுப்போ அல்லது வலிமை வாய்ந்த விலங்குத்தன்மையுடன் கூடிய அன்போ இருக்க வியலாது. அவன் அல்லது அவள் பின்னணியில் உள்ள அடிப் படையான மெய்ப்பொருளை நோக்கியே நாம் நம் கண் களைத் திருப்புவோம். நாம் அறிவற்றவர்களைப் போல நடந்துகொள்ள வேண்டும் என்பதோ மற்றும் நாம் தொடர்பு கொள்பவர்களைக் குறித்து வேறுபடுத்திக் கண்டறியாமல் இருக்க வேண்டும் என்பதோ இதன் பொருள் அல்ல. இருப்பினும் நாம் ஒரு புலி, புலி என்பதை உணர வேண்டும். பகுக்க வியலாத ஒரு அடிப்படையான மெய்ப் பொருளின் வெளிப்பாடாக அது இருந்த பொழுதிலும், நாம் அதை ஆர்வ மாகத் தழுவிக் கொள்வதற்கு முயற்சி செய்யக் கூடாது. எல்லா ஆண்களிடத்திலும், பெண்களிடத்திலும் இந்த தெய்வீக மெய்ப்பொருள் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். ஆனால் நாம் புலன்களால் உணரும் மட்டத்தில் இருக்கும்வரையிலும் வேறுபடுத்திக் கண்டு அறிவதிலிருந் தும், கவனத்துடன் இருப்பதிலிருந்தும் இந்த அறிவு நம்மைத் தடுத்து நிறுத்துதல் கூடாது. தூய்மையற்ற, நெறிமுறையற்ற வாழ்க்கையை மேற்கொண்டுள்ள உலகியலில் நாட்ட முடைய மனிதனின் பின்னணியில் நாம் இந்த அடிப்படை யான மெய்ப்பொருளைக் காண வேண்டும். ஆனால் நாம் அவனுடன் நெருங்கிப் பழகிப் பேசுதல் கூடாது. இது மிக மிக முக்கியமானதாகும். நாம் இந்த விதிமுறைக்குத் தகுந்தாற் போல் செயல்படவில்லை எனின், ஒரு நாள் நம் கால்கள் சறுக்கி, நாம் நிச்சயமாகத் துன்பமடைவோம். சாதகன் இதில்

ஒருபொழுதும் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவியலாது. நாம் பகுக்கவியலாத அடிப்படையான மெய்ப்பொருளை கண்டுகொள்ளும் அளவிற்கு, நம்முடைய எல்லா வெறுப்பும், நாம் மனித அன்பு என்று கூறுவதும், நம் பிணைப்பும், குறையும் மற்றும் அவற்றின் வலிமையையும், தாக்கத்தையும் இழக்கும். நாம் எங்காவது ஒரு சாதகனிடத்தில் உலகியல் நாட்டம் கொண்ட மனிதர்களிடமும் பெண் பாலாரிடமும் வேறுபாடற்ற தன்மையுடன் கலந்து பழகும் விருப்பத்தையும் காணும்பொழுது அவனிடம் நேர்மைக்கேடு இருக்கிறது என்று உணர வேண்டும். உலகியல் பொருட்களின்மீதும் உலகியல் இன்பங்களின்மீதும் அவனுக்கு உள்ள ஆசைகள், அவைகளின் விடாப்பபடியான தன்மையை இன்னும் இழக்க வில்லை. மனம் இன்னும் தூய்மைப்பாட்டை அடைய வில்லை. ஆன்மீக முன்னேற்றமும் ஆன்மஞானமும் அவ னுக்கு முற்றிலும், சந்தேகத்திற்கு இடம் அளிப்பவையாகும்.

பொதுவாக நம் பிணைப்பானது, நம் முழுமையான புரிந்துகொள்ளும் தன்மையை மறைத்துவிடுகிறது. நம்மால் மெய்ப்பொருளை, வடிவத்தைவிட அதிகமாக, பண்புக் கூறுகளை விட அதிகமாக, புலன் உணர்வுப் பொருட் களைவிட அதிகமாக வலியுறுத்தப்பட இயல வேண்டும். புலன் இன்பங்களைத் துய்க்கும் ஆர்வமும், நம் அற்பமான தனிமனித இயல்புகளைப் பற்றிக் கொள்வதும், நம்முடைய புரிந்து கொள்ளும் தன்மையைத் தொடர்ந்து மறைக்கும் வரையிலும் நம்மால் ஒரு பொழுதும் பகுக்கவியலாத அடிப்படையான மெய்ப்பொருளைக் குறித்து உண்மையாக நினைக்கவியலாது. அதனால் நாம் மீண்டும் மீண்டும் அதே பழைய தவறுகளையே செய்துகொண்டு இருப்போம். எனவே எல்லா சாதகர்களாலும் முடிந்த அளவிற்கு உணர்ச்சி வசப்படாமல் இருக்கும் தன்மையானது வளர்த்துக் கொள்ளப் பட வேண்டும். அது இல்லாமல் ஆக்கப்பூர்வமான எதையும் சாதிக்க இயலாது.

உணர்ச்சிவசப்படாத தன்மைக்கு அதன் நேரானதும் மற்றும் எதிர்மறையானதுமான இரண்டு கூறுகளும் உள்ளன.

நாம் மற்றவர்களிடமிருந்து முடிந்த அளவிற்கு நம் தொடர்பைப் பிரித்துக் கொண்டு, கடவுளுடன் தொடர்பு படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதனால், அதன்பிறகு மற்றவர்களுடன் எல்லாத் தொடர்புகளும் கடவுள் மூலமே செய்யப்படும். ஒருபொழுதும் மீண்டும் நேரான வழியில் நடைபெறாது. கடவுளுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ள மனித அன்பானது படிப்படியாக படி மாற்றம் அடையும். ஆனால் அவ்விதம் தொடர்பு படுத்தப் படவில்லை எனின் அது சீர்கேடு அடைந்து, துன்பத்தில் முடிந்துவிடும். நம்முடைய எல்லாத் தொடர்புகளும், அவை நேரடியானதாக இருந்தால், உடலை கருவியாகக் கொண்டே தோன்றுகின்றன. மற்றும் மற்றவர்களிடம் உடல் தொடர்பின் மூலமே தொடர்புபடுத்தப்படுகிறது. அவைகளில் நம் மிடையே யாருக்காவது உண்மையான அமைதியையோ அல்லது பேரின்பத்தையோ அளிக்கவல்ல நீடித்து நிற்கவல்ல எதுவும் இல்லை.

பொதுவாக நம்மிடையே, நம் உடலுடனும், நம் புலன் களுடனும், நம் உணர்ச்சிகளுடனும் நம்மை மோசமாக அடையாளம் கண்டுகொண்டு, கடவுளைப் புறக்கணிக்கும் தன்மை உள்ளது. எங்காவது கடவுளைக் குறித்து ஐயுறவுக் கோட்பாடு இருந்தால், அங்கு மட்டுமீறிய அளவில் அகங் காரத்தையும், புலன்களையும், புலன்களுக்குரிய பொருள் களையும் பற்றிக் கொள்ளும் தன்மை காணப்படும். அது இருப்பதால்தான் கடவுள் வெளியே தள்ளப்படுகிறார். தனி மனிதன் புலனின்பங்களுக்கான ஆசைகள் நிறைந்தவனாக வும், உடைமைகளைப் பெற்றிருக்கும் வரையிலும் அகங் காரத்தையும், தற்பெருமையையும் பெற்றிருக்கும் வரையில் அவனுடைய வாழ்க்கையில் கடவுளுக்கு இடமில்லை. மன மானது ஆசைகள் மற்றும் உணர்ச்சிகளிடமிருந்து முழுமை யாக விடுபட்டால் அவ்விடத்திலேயே, அப்பொழுதே அவன் கடவுளைக் காண்பான். எனவே நாம் கடவுளை உணர வில்லை எனின், உண்மையைக் கணநேரத் தோற்றமாகக் கூட காணவில்லை எனின், அது ஏன் அப்படி உள்ளது என்று

கேட்கத் தேவையில்லை. நம்முடைய மனத்தின் உணர்வற்ற மற்றும் ஆழமான அடித்தளப் பகுதிகளில் இன்னும் வலிமை யான ஆசைகள் உள்ளன என்பதை நாம் உணர வேண்டும். நாம் முதலில் நம்மை இந்தத் தடைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். நாம் அவற்றை அங்கு இருப்பதற்கு அனுமதிக்கும்வரையில் கடவுளை உணர வேண்டும் என்னும் கேள்வி எழுவதற்கே இடம் இல்லை.

தூண்டுதல்கள் நம்மீது ஆதிக்கம் செலுத்துவதை நாம் தகர்க்க வேண்டும். நம்மிடம் தூண்டுதல்கள் எழும் கணத்தில், நாம் நம்முடைய விழிப்புணர்வை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது இந்தத் தூண்டுதல்கள் உடனடி யாகக் கடலில் அலைகள் மறைவதைப்போல மறைந்து விடும். தன்னுடைய விழிப்புணர்வை எப்படி விரிவு படுத்திக் கொள்வது என்று தெரிந்த மனிதன், மேம்பட்ட முறையில் விழிப்புணர்வை எப்படி அடைவது என்று தெரிந்த மனிதன், அவனுடைய மனத்தில் எழும் இத்தகைய தூண்டுதல்களால் பாதிக்கப்படுவது இல்லை. தெய்வீக விழிப்புணர்வுடன் தொடர்பு கொண்டு, நம்மிடம் எப்பொழுதும் நிலைத்துள்ள வரம்பற்ற உளதாம் தன்மையுடன் தொடர்பு கொண்டு, நம் முடைய எல்லா எண்ணங்களையும் அதனுடன் மட்டுமே தொடர்புபடுத்திக் கொள்வது ஒருவருடைய தூண்டுதல்களை மீறி உயர்வதற்கு உள்ள பயனுள்ள வழிமுறையாகும்.

மெய்யற்ற இஷ்ட தெய்வங்களை உண்மையான இஷ்ட தெய்வத்துடன் இணைப்பாய்

நாம் ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வாழ்க்கையில் எத்தனை அதிகமான நேரத்தை வீணடிக்கிறோம்! மற்றவர் களைப்பற்றி நினைப்பதில் எத்தனை அதிகமான நேரத்தைச் செலவிடுகிறோம். அது தியானத்தைப் போன்று மிகவும் தீவிர மானதுதான். ஆனால் போலியான உருவங்களையும், போலி யான உணர்வுகளையும் அழைப்பது ஆகும். ஆன்மீக வாழ் வில் முன்னேற்றமடைவதற்கு உரிய வழி இது இல்லை. நாம் சிறிய பொம்மைகளையும், கூத்தாட்டு பொம்மைகளையும்

விட மேம்பட்டு உயர்ந்து, அவைகளின் கயிறுகளை இழுத்து, அவைகளை அவைகளின் தாறுமாறான நடனத்தை ஆட வைக்கும் கடவுளிடம் செல்லுமளவிற்கு உயர வேண்டும். நாம் உணர்ச்சி வசப்படாத நிலையில் அமைதியாக நம்மை நோக்கினால், நம்முள்ளே எத்தகைய வேடிக்கையான நிகழ்வுகள் நிகழ்கின்றன என்பதைக் காணவியலும். நாம் மற்றவர்களுடன் சுறுசுறுப்பாக, ஆரவாரத்துடன் இயங்குவதற்குப் பதிலாக, நம்முடைய இஷ்டதெய்வத்திற்காக நம் எல்லா நேரத்தையும் ஒதுக்கினால் நம்மால் எத்தகைய வியக்கத்தக்க முன்னேற்றத்தைப் பெற இயலும்! சூத்திரப் பாவையின் கயிறுகளைப் பிடித்துக் கொண்டு அதை அசைக்கும் சூத்ரதாரி இல்லாமல் இருப்பின் அதன் நிலை என்ன? சூத்திரப்பாவையின் முக்கியத்துவம் எங்கு உள்ளது? நம்முடைய இஷ்ட தெய்வத்தின்மீது நம் உணர்வுகளை மையப் படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, எதற்காக ஈர்ப்பு, வெறுப்பு மற்றும் விருப்பமானவை விருப்பமற்றவை போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்? இஷ்ட தெய்வமானது எப்பொழுதும் உன்னுள்ளேயே இருக்கிறது. கடவுள் உன்னை ஒரு பொழுதும் கைவிடுவது இல்லை. உன்னை ஒருபொழுதும் ஏமாற்றுவது இல்லை. ஒருபொழுதும் துன்பத்தையும் மற்றும் எண்ணக்குலைவு, செயல் குலைவை ஏற்படுத்துவது இல்லை. ஆனால் அவனை எப்படி பெரிதளவில் உனக்கு உரியவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றும், அவனுடன் எப்படிக் கூடியிருப்பது என்பதையும், அவனுக்கு மட்டுமே உன்னை எப்படி நேர்ந்து கொள்வது என்பதையும் நீ அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக சில நேரங்களில், நம்முடைய இஷ்ட தெய்வத்திற்குப் போதுமான அளவு அன்பு நம்மிடம் இல்லாமல் போய்விடுகிறது. நாம் பெரும்பாலும் மனிதர்களைப் பற்றியே நினைக்கிறோம். மற்றும் மனித பொம்மைகளால் அடிமைப்படுத்தப்படுவதை விரும்புகிறோம். நாம் உயர்ந்த இயல்பை நம் இஷ்ட தெய்வமாக மேற்கொண்டால், நம்மை இந்த உலகியலில் பிணைத்து, ஆன்மீக வளர்ச்சியைத் தடுக்கும் நூற்றுக்கணக்கான மனித

இஷ்ட தெய்வங்களைப்பற்றி நினைப்பதிலிருந்து காப் பாற்றப்படுவோம். நாம் அவைகளைக் கடந்து மேம்பட்டு உயரவில்லை எனின் நம்மால் உண்மையான அன்பு மற்றும் விடுதலை என்றால் என்ன என்பதை ஒரு பொழுதும் அறிய இயலாது.

முதலில், நம்மைக் குறித்த நம் மனப்பான்மை தவ றானது ஆகும். அதன்பிறகு இயல்பாகவே மற்றவர்களைக் குறித்த நம் மனப்பான்மையும் தவறாகி விடுகிறது. உன்னை எப்பொழுதும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். இரக்கமற்ற முறையில் உன் எண்ணங்களை ஆராய்ந்து காண வேண்டும். பொம்மைகளைக் கண்களுக்குப் புலனாகாத விலங்குகளை உருவாக்கி அவைகளுடன் உன்னைப் பிணைத்துக் கொள்வதற்கு அனுமதித்தல் கூடாது. நாம் பகல் நேரத்தில் நம் எண்ணங்களைக் உன்னிப்புடன் கவனித்தால், நம்முடைய இஷ்ட தெய்வத்திற்குப் பதிலாக நூற்றுக்கணக் கான உலகியல் இஷ்டங்கள் நம்முடைய எண்ண வாழ் விலும், உணர்வு வாழ்விலும் இடம் பெற்றிருப்பதை நம்மால் அறியவியலும். நாம் நம்முடைய உண்மையான இஷ்ட தெய்வத்தைப் பற்றிக் கொண்டு போலியான எல்லா இஷ்டங் களையெல்லாம் உண்மையான இஷ்ட தெய்வத்திடம் கரைத்துவிட வேண்டும். தொடக்க நிலையில் இருக்கும் சாதகனுக்கு இது எத்தகைய வலியை ஏற்படுத்துவதாக இருப் பினும் வேறு தீர்வு இல்லை. உன் மனத்தின் உள்உணர்ச்சி களை எப்பொழுதும் உன் இஷ்டதெய்வத்திடம் இணைத்துக் கொள்ள வேண்டும். உன்னை ஈர்க்கும் அல்லது புறக்கணிக் கும் எல்லாவிதமான உருவங்களையும் தெய்வீக உருவத்தால் மாற்றீடு செய்ய முயற்சி செய்ய வேண்டும். அதன்பிறகு உன் வாழ்வானது, எல்லாப் பிணைப்புக்களிலிருந்தும் விடுபட்டு, மகிழ்ச்சி நிறைந்ததாக உண்மையிலேயே பயன் உள்ளதாக இருக்கும். எண்ணக்குலைவு செயல் குலைவு இருக்காது.

சில நேரங்களில் நீ சில மனிதர்களைப் பற்றி நினைக்கும் பொழுது உனக்கு வெறுப்பதிர்ச்சி ஏற்படும். சிலநேரங்களில் வெறுப்புணர்வு தோன்றும். சில நேரங்களில் காதல் என்று

கூறப்படும் பாலுணர்வு ஈர்ப்பு ஏற்படும். நீ உடனடியாக இந்த எல்லா உணர்வுகளையும் உன் இஷ்ட தெய்வத்துடன் தொடர்பு படுத்தினால், நீ ஆற்றலைச் சேமித்துக்கொள்ளலாம். மற்றும் இத்தகைய எல்லாத் தொல்லைகளையும் தவிர்க்கலாம். மற்றவர்களைக் குறித்த எண்ணங்கள் ஏற்படும் பொழுது, அவற்றை உன்னுடைய இஷ்ட தெய்வத்தைக் குறித்த எண்ணத்தினால் மாற்ற வேண்டும். எப்பொழுதும் அவைகளின் உருவங்களை உன் இஷ்ட தெய்வத்தின் ஒளி பொருந்திய வடிவத்தால் மாற்றி அமைக்க வேண்டும். இவ் விதத்தில் உன்னுடைய ஆற்றல் வீணாவதை நீ குறைத்துக் கொள்ளலாம். அது மட்டுமல்ல இந்தப் பயிற்சிக்கு மிகப் பெரிய அளவில் ஆன்மீகத் தகுதியும் மதிப்பும் உள்ளது.

நம்மிடம் இன்னும் உடலைக் குறித்த உணர்வு அதிகமாக இருப்பதால், நாம் இன்னமும் உடல்கள் குறித்த படி நிலையிலேயே எண்ணிக் கொண்டு இருக்கிறோம். உன்னிடம் யாராவது ஒருவரைக் குறித்த பயனற்ற, ஆபத்தையும் ஏற்படுத்தவல்ல, ஈர்க்கும் தன்மையுடைய, வெறுப்பு நிறைந்த எண்ணம் எழுவதை உணர்ந்தால், உன்னுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு எத்தகைய பங்கையும் அளிக்காமல் இருப்பின், உடனடியாக அதை உன் இஷ்ட தெய்வத்தைக் குறித்த எண்ணத்தால் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த எண்ணத்தையே தீவிரமாக நினைத்து ஜபம் செய்ய வேண்டும். உன் கவனம் முழுவதிலும் கடவுளே இடம் பெற்றிருக்க வேண்டும். சுவாமி விவேகானந்தர் அவருடைய (Inspired Talks) என்னும் புத்தகத்தில் கூறியுள்ளதைப்போல, 'அன்றாடத் தேவைகளுக்கு உரிய எண்ணங்களை இறைவனின் மூலமாகவே எண்ணலாம்.'[1]

மனிதமனம் படைப்பாற்றல் திறமையை உடையது ஆகும். மற்றும் ஏதாவது ஒன்றைப் படைத்தே தீரும். நீ விழிப்புணர்வுடன் இப்படைப்பாற்றலைச் சரியான வழிகளில் செலுத்தி, படைப்பாற்றலின் மேன்மையான

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.373.

வடிவங்களுக்கு வழிப்படுத்தவில்லை எனின், அது கீழான மட்டத்தில் மட்டும் படைப்பாற்றலைப் பெற்றிருக்கும். ஒரு சாதாரண மனிதனின் தீங்கு விளைவிக்கும் செயலையும், படைப்பாற்றலையும் கட்டுப்படுத்துவதற்கு, அவனுடைய ஆற்றலிற்கு மேம்பட்ட திருப்பத்தை அளிப்பதுதான் மிகச் சிறந்த வழியாகும். உடல் சார்ந்த, மனம்சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த படைப்பாற்றல் உள்ளது. உயர்ந்த, மேலும் உயர்ந்த முறைகளுக்கு ஏன் செல்லக் கூடாது? உடல் மட்டத்தில், நாம் ஊக்கமுடையவர்களாக இருக்க விரும்புகிறோம். ஆன்மீக மட்டத்திலும் நாம் ஏன் ஊக்கம் உடையவர்களாகத் திகழக் கூடாது?

பதினெட்டாம் நூற்றாண்டில் வங்காளத்தில் இருந்த புனிதமகானும் கவிஞருமாகிய இராம்பிரசாத் அவருடைய ஒரு கவிதையில்,

'ஓ மனமே, உனக்கு நான் இதைக் கூறுகிறேன்
நீ விரும்பும் முறையில் காளியை வணங்குவாய்
உன் குரு உனக்கு அளித்துள்ள மந்திரத்தை
இரவும் பகலும் தொடர்ந்து கூறுவாய்

படுத்துக்கொள்வதைச் சரணடைவதாகக் கருதுவாய்
உறங்குவதை அன்னையின் மீது தியானிப்பதாகக் கருதுவாய்
உண்ணும்பொழுது அவளுக்கு நீ பானம்
அர்ப்பிப்பதாக எண்ணுவாய்

உன் காதுகளால் கேட்கப்படும் அனைத்தும்
அன்னையின் மந்திரங்கள் ஆகும்

ஐம்பது எழுத்துக்களின் வடிவில் காளி இருக்கிறாள்
எழுத்துக்களின் வடிவில் பெயர்களைப் பெற்றுள்ளாள்

அன்னை எல்லா உயிரினங்களிலும் ஊடுருவி உள்ளாள்
என்று சாற்றுவதில் இராம்பிரசாத் மகிழ்வடைகிறான்.

நீ நகரத்தைச் சுற்றி வரும்பொழுது
நீ அன்னையைச் சுற்றி வருகிறாய் என எண்ணுவாய்.

பரம்பொருளை ஒவ்வொரு செயலுடனும் விழிப்புணர்வுடன் தொடர்புபடுத்த வேண்டும் என்பது இந்த அழகிய பாடலின் கருத்தாக உள்ளது.

சமயவெறியர்களாக இருக்க வேண்டாம்

முழுமுதற்பொருளின் மீது தியானம் செய்ய விரும்பும் பல மனிதர்களை மேற்கத்திய நாடுகளில் கண்டு இருக்கிறோம். உருவமற்ற பரம்பொருளைத் தியானிப்பதற்கு தெய்வீக உருவங்களைப் படிக்கற்களாகக் கொள்ள வேண்டியுள்ள இன்றியமையாமையைக் குறித்து அவர்களை நம்ப வைப்பது மிகவும் கஷ்டமானதாக உள்ளது. அவர்களுடைய விஷயத்தில் உண்மையாக இதுதான் நடந்துள்ளது. தனித்தன்மையற்று வலிந்து புகுத்தப்படும் தெய்வீக உருவத்தில் அவர்கள் ஈர்ப்புத்தன்மையை உணர்வது இல்லை. அவர்களின் மனத்தைக் கவரும் வகையில் உள்ள வேறு ஏதாவது தெய்வீக உருவின் மீது அவர்களை தியானம் செய்யும்படிக் கூறினால், அந்த மெய்ப்பொருளைத் தியானிக்க அவர்கள் விரும்புகின்றனர். மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்குக் கண்டிப்பாக உதவி செய்யும். ஆனால் ஒரு தெய்வ உருவைக் குறித்துச் செய்யும் இந்த தியானம் நம்மை வெறியர்களாக ஆக்குதல்தான் கூடாது. எல்லாப் புனிதமான அவதார புருஷர்களும் கடவுளின் சிறப்பான வெளிப்பாடுகள் என்பதைப் புரிந்து கொள்ளும் தொலை நோக்கு ஆற்றல் நம்மிடம் இருக்க வேண்டும்.

பெரும்பாலான சமயத் தொடர்பான அல்லது விடாப்பிடியான கொள்கைத் தொடர்பான சச்சரவுகள், நாம் உண்மையைக் குறித்துக் கொண்டுள்ள அரைகுறையான தொலை நோக்கு ஆற்றலாலேயே ஏற்படுகின்றன. நாம் ஒரு குறிப்பிட்ட மட்டத்திற்கு மட்டும் உயர்ந்து உண்மையை அந்த மட்டத்திலிருந்து கண்டு நம்மை விட வேறுபட்ட முறையில் அறைகுறையான தொலைநோக்கு ஆற்றல் உடையவர்களுடன் சண்டை செய்யத் தொடங்குகிறோம். நாம் உண்மையின் பல தன்மைகளில் ஒரு தன்மையை மட்டும்

உணர்ந்திருக்கிறோம் என்பதை நாம் மறந்து விடுகிறோம். குறிப்பிட்ட விழிப்புணர்வு சார்ந்த மட்டங்களில் அரைகுறையான தொலைநோக்கு ஆற்றல்கள் உண்மையாக இருக்கலாம். மற்றும் அவை முழுமையான உண்மை அல்ல. முழுமையாக நாம் உயர்ந்தால்தான் நம்மால் உண்மையை உள்ளவாறு உணரவியலும் மற்றும் அதற்கு மேல் ஒவ்வொரு முழுமையில்லாத தோற்றத்திற்கும் அதன் தகுந்த இடத்தை ஒதுக்க இயலும்.

இந்தியாவில் இந்த அடிப்படைக் கோட்பாடு தொடக்க காலத்திலேயே அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. மற்றும் இந்நாட்டில், சமயம் சார்ந்த அடக்குமுறையும், சமய வெறியுடன் கூடிய குறுகிய மனப்பான்மையுள்ள தனிப்பட்ட பிரிவினர்களும் பெருமளவில் இல்லை. இந்தியாவில் ஆன்மீக வாழ்வை வரையறைப்படுத்தி, ஒரே ஒரு அவதாரத்தை உண்மை என்று சாற்றும் தவறு செய்யப்படவில்லை. சமயம்சார்ந்த குறுகிய மனப்பான்மைதான் மேற்கத்திய நாடுகளில் ஆன்மீக அழிவிற்குக் காரணமாக உள்ளது.

நாம் ஏசுநாதரை வழிபடும் பொழுது நமக்கு ஏசுநாதரின் உணர்வு ஏற்படுகிறது. நாம் கிருஷ்ணரை வழிபடும் பொழுது நமக்கு கிருஷ்ணரின் உணர்வு ஏற்படுகிறது. நாம் ஸ்ரீராமகிருஷ்ணரை வழிபடும் பொழுது நமக்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் உணர்வு ஏற்படுகிறது. ஒவ்வொன்றும் நம்மை முழுமையான மெய்ப்பொருளின் உணர்விற்கு அழைத்துச் செல்கின்றன. ஏனெனில் இந்த சிறந்த அவதார புருஷர்கள் அனைவரும் அவர்களுடைய அடையாளத்தைப் பரம்பொருளுடன் கண்டு உணர்ந்தவர்கள் ஆவார்கள். ஒவ்வொரு அவதாரமும் ஒரு விதத்தில் பரம்பொருளுக்கு ஒரு வாயிலாகச் செயல்படுகிறது. ஏசுநாதரின் தன்மை என்னை ஈர்க்கவில்லை எனின், ஏசுநாதரை வழிபடுவதால் என்னால் நன்மையை அடைய வியலாது. என்னுடைய இயல்பான மனப்பாங்கிற்குப் பொருத்தமான என்னுடைய இலட்சியத்தை நிறைவேற்றவல்ல மேன்மையானவரை நான் பின்பற்ற வேண்டும். ஏசுநாதரைப் பின்பற்றும் ஒருவனைப் புத்தரையோ அல்லது

கிருஷ்ணரையோ வழிபடுமாறு கூறக்கூடாது. பிறகு அவன் ஆன்மீக வாழ்வு தோல்வியடைந்து விடும். குறுகியமனப் பான்மை உடைய சமயவெறி மிகுந்தவர்கள், பொதுவாக இந்த முக்கியமான உண்மையை உணர்வது இல்லை. அவர் களே குருடர்களாக இருந்துகொண்டு, மற்றவர்களையும் அவர்கள் குருடர்களாக வைத்துக் கொள்வதற்கு விரும்பு கிறார்கள். உலகிலுள்ள சமயங்களைச் சார்ந்த எல்லா சிறந்த அவதார புருஷர்களும், தீர்க்கதரிசிகளும் ஒரே தெய்வீக தத்துவக் கோட்பாட்டின் வெளிப்பாடுகள் ஆவார்கள். அனை வருக்கும் ஒரே ஒரு ரட்சகர் என்பது இல்லை. அனைவருக்கும் ஒரு ரட்சகரை வலுக்கட்டாயப்படுத்துவது என்பது பெரும் கேட்டை ஏற்படுத்தவல்ல கருத்து ஆகும்.

அவதார புருஷர்களை வழிபடுபவர்களுக்கு மட்டுமே சமயம் சார்ந்த வெறி என்பது எல்லைக் கோட்பாடு இல்லை. அத்வைதிகளும் வெறி கொண்டவர்களாக இருக்கவியலும். தெய்வங்கள், பெண்தெய்வங்கள், மற்றும் அவதார புருஷர்கள் போன்ற அனைத்துமே தோற்றங்கள், மாயையின் வெளிப்பாடுகள் (விளைவுகள்) என்று அனைவருக்கும் சாற்று வது முட்டாள்தனத்தின் உச்சநிலையாகும். அத்வைதிகளும், எல்லா படைப்பு முழுவதிலும் பரம்பொருள் எங்கும் பரவி ஊடுருவி உள்ளதை உணர வேண்டும். பலமனிதர்களுக்கு நிர்குண பிரம்மத்தைப் போல சகுண பிரம்மமும் முக்கியத் துவம் வாய்ந்தது ஆகும். அறிவு எல்லையைக் கடந்த முழுமைக்கான பாதை, எங்கும் வியாபித்துள்ள கடவுளின் வழியாகவே உள்ளது. முதலில் நாம் நமக்குள்ளேயே பரம் பொருளை உணர வேண்டும். பிறகு மற்றவர்களிடம் உணர வேண்டும். இறுதியாக எல்லாவகையான நாமங்கள் மற்றும் வடிவங்களையும் கடந்து இருமையற்ற ஒருமையை நாம் உணர வேண்டும். பெயர்களும் வடிவங்களும், தன்மைகளும் பரம்பொருளை உணர்ந்த ஒருவனுக்கு மட்டுமே உண்மை யற்றவையாக இருக்கும். மற்றவர்களுக்கு அல்ல என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். ஸ்ரீராம கிருஷ்ணரின் எல்லா அகல் விரிவான பரந்துபட்ட கருத்தில்,

நாமங்கள் மற்றும் வடிவங்கள் அனைத்தையும் கடந்த, வரம்பற்ற பரம்பொருளானது, தன்னை எல்லா ஆன்மாக் களாக, ஈஸ்வரனாக, எல்லா ஆன்மாக்களையும் ஆள்பவராக, அண்டத்தை ஆள்பவராக வெளிப்படுத்திக் கொள்கிறது. அவரே மீண்டும் தன்னை தெய்வங்களாக பெண் தெய்வங் களாக வெளிப்படுத்திக் கொள்கிறார். அவரே தன்னை தெய்வீக அவதார புருஷராகவும் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

பரம்பொருளானது, மனத்தின் கிரகித்துக் கொள்ளும் தன்மைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அதை உணர்வதற்குச் சாதகன், வெளிப்பாடுகளின் சூழமைவிலிருந்து தொடங்க வேண்டும். புனிதமான நாமங்கள் மற்றும் புனிமான வடிவங் களை எடுத்துக்கொள்ள வேண்டும். புனிதமான வடிவம் என்பது பரம்பொருளின் சிறப்பான வெளிப்பாடு ஆகும். அது படிப்படியாக நம்மை அதனிடம் அழைத்துச் செல்கிறது. புனிதமான நாமமும் பரம்பொருளின் சிறப்பான வெளிப் பாடாக விளங்குகிறது. வடிவங்கள் நம்மை வடிவற்றதன்பால் அழைத்துச் செல்வதைப் போன்று, நாமங்கள் நம்மை நாமமற்றதன்பால் அழைத்துச் செல்கின்றன.

பொதுவாக ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட நம்மைப் போன்றவர்கள், நம்முடைய சொந்த தனிப்பட்ட வடிவத்தை அது ஆண் வடிவமோ அல்லது பெண் வடிவமோ அதைப் பற்றிக்கொண்டு, அந்த புனிதமான வடிவத்துடன் அது ஆண் தெய்வமோ அல்லது பெண் தெய்வமோ, அதனுடன் நம்மைப் பிணைத்துக் கொண்டு விடுகிறோம். அதுதான் சிக்கலாக உள்ளது. மற்றும் இந்த அமைதியான நிலை யிலிருந்து அகல்வதற்கு நாம் ஆயத்தமாக இருப்பதில்லை. நாம் முதலில் நம்மையும், கடவுளையும் உலோகாயதக் கருத் திலிருந்து விடுவித்துக் கொள்ளவில்லை எனின், அதன் உண்மையான பொருளில் நம்மால் எத்தகைய முன்னேற்றத் தையும் அடைய இயலாது. நீ ஒரு பக்தன், நீ ஒரு ஆண் கட வுளையோ அல்லது ஒரு பெண் கடவுளையோ வழிபடுகிறாய் என்று நினைப்பது நாகரீகமற்றது என்று நான் கூற வில்லை. உண்மையாகவே அது மிகவும் சிறந்தது மற்றும்

அவசியமானதுமாகும். ஆனால் அதுதான் மிகவும் உயர்ந்த நிலை என்று நினைக்கக் கூடாது.

நாம் தற்பொழுது உள்ள நிலைமையில் வரையற்ற பரம்பொருளின்மீது தியானம் செய்ய இயலாமல் இருப்பினும் நாம் பாவனையையாவது மேற்கொள்ள வேண்டும். நாம் பொதுவாக நம் வடிவம் முற்றிலும் உண்மையானது மற்றும் நம் இயல்பான தன்மை முற்றிலும் உண்மையானது என்று நினைக்கிறோம். நாம் அனைவரும் முதலில், உடல் மற்றும் மனத்திலிருந்து வேறுபட்ட ஆன்மாக்கள் என்று நினைக்க வேண்டும். நாம் நம்முடைய ஆன்மாவை, கடவுளின் வரையற்ற ஒளியின் ஒளிக்கூறாகக் கற்பனை செய்து காண வேண்டும். உனக்குப் பின்னால் உனக்கு ஆதாரமாக நின்று கொண்டுள்ள அகன்ற ஒளிப்பரப்பை உறுதியுடன் கற்பனை செய்து காண வேண்டும். அதில் உன் உடலையும் மனத்தையும் இரண்டறக் கலக்குமாறு செய்ய வேண்டும். நாம் பொதுவாகப் பின்பற்றும் உலோகாயத முறையைச் சார்ந்த வழிபாட்டைச் சரி செய்வதற்கு இந்த பாவனையையாவது மேற்கொள்ள வேண்டும்.

நம்முடைய ஆன்மீகப் பயிற்சியின் தொடக்கத்தில் நாம் அனைவரும் ஆன்மாக்கள் என்பதை நினைவில் கொள்வது எப்பொழுதும் மேலானது ஆகும். வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஒரு பாத்திரத்தை ஏற்று நடிப்பதற்கு ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு மனத்திரையையும் ஒரு உடல் திரையையும் போட்டுக் கொண்டுள்ளது. வாழ்க்கை என்னும் நாடகமானது நன்றாக நடிக்கப்பட வேண்டும். வாழ்க்கை நாடகம் என்பது உலோகாயத வாழ்க்கை மட்டுமே என்று பொருள்படுகிறது என நாம் நினைக்க வேண்டாம். எண்ண உலகத்திலும், மெய்ப் பொருளின் உலகத்திலும்கூட அந்த நாடகமானது நடத்தப்பட வேண்டும்.

அருவ உருவ நிலைகளில் அன்பு

நாம் ஒவ்வொருவரும் அவரவரைச் சுற்றி ஒரு எண்ண உலகத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். மற்றும் இது நம்முடைய தொலைநோக்கை வரையறைப்படுத்தி

விடுகிறது. என்னுடைய வடிவம் எப்படி உருப்பெற்றது? என்னுடைய தனித்தன்மை எப்படித் தோன்றியது? இந்த முறையில் நாம் நினைத்தால், நம்முடைய 'நான்' என்பது உருவமற்ற மெய்ப்பொருளை நோக்கிச் சாய்வதை நம்மால் உணர்ந்துகொள்ள இயலும். மிகச் சிறந்த அவதார புருஷர்களின் வாழ்க்கைகளை நாம் கூர்ந்து ஆராய்ந்தால் அவர்கள் அனைவரும் பரம்பொருளுடன் அவர்களுடைய அதுவே ஆகும் தன்மையைக் கண்டுணர்ந்து உள்ளனர் என்பதை அறிந்துகொள்ள இயலும்.

நாம் அவர்களுடைய விழிப்பு நிலையுடன் தொடர்பு கொள்ளும் பொழுது, நாமும் நம்முடைய வரையறைக்கு உட்பட்ட தன்மைகளிலிருந்து விடுபடுகிறோம். நம்முடைய வரையறைக்கு உட்பட்ட வாழ்வு தகர்ந்து, நாமும் இயலுலக அண்ட விழிப்புணர்வு நிலையை அனுபவிக்கிறோம். நாம் நீர்க் குமிழிகளைப் போன்றவர்கள் ஆவோம். ஆனால் மிகச் சிறந்த அவதார புருஷர்கள் அனைவரும் மலையுயர அலைகளைப் போன்றவர்கள். எப்பொழுதும் அவர்களுடைய உண்மையான இயல்பை முழுவதுமாக உணர்ந்து கொண்டும் மற்றும் எப்பொழுதும் கடலுடன் ஊக்கம் மிகுந்த தொடர்பு உடையவர்களாகவும் இருப்பவர்கள் ஆவார்கள். நம்முடையது, தூய்மையற்ற, வரையறைக்கு உட்பட்ட விழிப்புணர்வு ஆகும். அவர்களுடையது, தூய்மையான, வரையறையற்ற விழிப்புணர்வு ஆகும். தனியியல்பு, மெய்ப்பொருள் தத்துவத்துடன் இரண்டறக் கலக்கலாம். ஆனால், முழுமையான மெய்ப் பொருள் தத்துவமானது ஒரு பொழுதும் தனியியல்புடன் அடையாளம் கண்டுகொள்ளாது. தெய்வீக இயல்பின் பின்னால் மற்றும் நம்முடைய வரையறைக்கு உட்பட்ட அகங்காரத்தின் பின்னால் பகுக்கவியலாத சத்சித் ஆனந்தம் நின்று கொண்டுள்ளது. நம்முடைய தீவிரமான உணர்வின்மூலம், இயலுலக அண்டத்தைச் சார்ந்த மனத்திற்கு, ஒளிபொருந்திய தெய்வீக வடிவம் அதிலிருந்து தோற்றம் கொள்கிறது என்னும் அத்தகைய புறத்தூண்டுதலை நாம் அளிக்கலாம். அல்லது வடிவம் தோற்றம் கொள்ளவில்லை எனின், நாம் அதனுடைய இருப்பை உணர இயலும்.

நீ ஒரு ஏரியில் கல்லை வீசி எறிந்தால் சிற்றலைகளின் வடிவத்தில் நீ அதன் எதிர் விளைவைக் காணலாம். ஆனால் நீ அதற்காக ஏரியை ஏற்படுத்தவில்லை. அங்கு தண்ணீர் எப் பொழுதும் இருக்கிறது. கல்லானது ஒரு அலையை எழுப்பு வதற்கு மட்டும் தூண்டுதலை அளிக்கிறது. அதைப் போன்றே இயலுலக அண்ட விழிப்புணர்வானது எப்பொழுதும் இருக் கிறது. நீ தீவிரமாகப் பிரார்த்தனை செய்தால், அது தூண்டு தலாகச் செயலாற்றி உருவமற்ற நிலையிலிருந்து தெய்வீக உருவம் தோற்றம் கொள்கிறது. ஆனால், தீவிரமான அன்பு இருக்க வேண்டும். ஒரு சாதகனின் வாழ்வில் தீவிர முடைமையானது முதன்மையான காரணக் கூறாக விளங்கு கிறது. ஆன்மதரிசனம் பெற வேண்டும் என்னும் தீவிரமான வேட்கைதான் கடவுளை எதிர்ச் செயல் புரிய வைக்கிறது. அதுதான் உண்மையான பக்தியாகும்.

சாதகன் ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி அடையும் பொழுது உருவமற்றதிலிருந்து தோன்றும் உருவமானது மீண்டும் அதிலேயே கலந்துவிடுவதை உணர்கிறான். இஷ்டதெய்வத் திடம் கொண்ட அன்பானது அதன்பிறகு மெய்ப்பொருள் மீது கொள்ளும் அன்பாக மாறுகிறது. உண்மையான பக்தனான வன், எல்லாவற்றையும் சரியான கண்ணோட்டத்துடன் காண்கிறான். உருவமற்றதும், உருவமுடையதும், பொது வானதும், பொதுவல்லாததும் ஒரே இறுதியான மெய்ப் பொருளின் இரு தன்மைகள் என்பதை அவன் அறிந்து கொள் கிறான். உலகப் பிணைப்பு என்னும் பிடிப்புக்களை மீறி உயர்ந்து, அவனுடைய மனமும், இதயமும் கடவுளைக் குறித்த சிந்தனையிலேயே முழுவதும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அவன் கடவுளைக் கடவுளின் எல்லா வேறுபட்ட வெளிப் பாடுகளிலும் விரும்புகிறான். அவனுடைய அன்பில் வரையறைகள் இல்லை.

17

ஆன்ம சமர்ப்பணம்

தெய்வீக சக்தி

ஆன்மீக வாழ்க்கையானது வல்லமை வாய்ந்தவர்களுக்கு மட்டுமே உரியதாகும். எப்படி இருப்பினும், இங்கு சக்தி என்றால் நாம் உடல் சக்தியை மட்டுமின்றி, மனத்தின் சக்தி மற்றும் ஆன்மீக சக்தியையும் குறிப்பிடுகிறோம். உள்ளத்தின் உறுதியின் பயனாகவும், மற்றும் நெறிமுறைகளைக் கட்டுப்பாட்டுடன் பின்பற்றுவதாலும் ஒருவருக்கு மிகப் பெரிய அளவில் அகவலிமை ஏற்படுகிறது. ஆனால் இவ்வனைத்தையும் தவிர, வேறு ஒரு சக்தியும் உள்ளது. அது தெய்வீக சக்தியாகும். உண்மையான பக்தன், அவன் பரம் பொருளின் பாதுகாவலில் உள்ளான் என்பதை உணர்கிறான். மற்றும் வரையற்ற சக்தியையும் உணர்கிறான். இடைக்காலத்தில் வட இந்தியாவில் வாழ்ந்த மிகச்சிறந்த புனிதமகான்களின் ஒருவராகிய ஸுர்தாஸ் 'பிருந்தாவனத்தில் உள்ள இளைஞனின் தெய்வீக அருளால், நான் பலவீனமானவர்களின் சக்தியாக இராமன் இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டேன்' என்று பாடியுள்ளார்.

பரம்பொருளுக்கு முழுமையாக சரணடைதல் என்பது, அதுவே ஒரு துணிவுமிக்க முறையிலமைந்த சாதனையாக விளங்குகிறது. அது மனிதர்கள் நினைத்துக் கொண்டிருப்பதைப் போல அவ்வளவு எளிமையானது இல்லை. பொதுவாக மனிதர்கள் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு ஒரு நாளின் வேறுவேறான பல சமயங்களில் அவனையே சார்ந்து, அவர்களுடைய உடலையும் மனத்தையும், ஆன்மாவையும் அவர்களுடைய இஷ்ட தெய்வத்தின் திருப்பாதங்களில் தொடர்ந்து சமர்ப்பித்துக் கொண்டிருக்கலாம். பகவத்

கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு, 'அர்ஜுனா, தேக மாகிய இயந்திரத்தில் ஏற்றி வைக்கப்பட்ட பொம்மைகள் போன்ற எல்லாப் பிராணிகளையும், மாயா சக்தியினால் ஆட்டிவைத்துக் கொண்டு, ஈசுவரன் எல்லாப் பிராணி களுடைய இதயத்துள்ளும் நிற்கிறான்.'

'எல்லாவகையாலும் அவனையே சரணடைவாய். அவனருளால் ஒப்புயர்வற்ற சாந்தியையும், அழிவில்லாத பதவியையும் அடைவாய்.'

'இவ்விதம் ரகசியங்களுக்குள் சிறந்த ரகசியமான ஞானம், உனக்கு என்னால் எடுத்துரைக்கப்பட்டது. குறை வின்றி விசாரித்து, எப்படி விரும்புகிறாயோ, அப்படிச் செய்வாய்.'[1]

நாம் நம்மைக் கடவுளிடமிருந்து அப்பால் இழுத்துக் கொள்ளும்பொழுது, நாம் மிகுந்த அகங்காரம் உடையவர் களாகவும் மற்றும் மேன்மையான உயர்ந்த வழியிலிருந்து விழுந்தும் விடுகிறோம். அகங்காரத்தைப் பற்றிய நம்முடைய கருத்தை விட்டுவிட்டு, அத்ற்குப் பதிலாக நாம் பரம் பொருளிடம் சரணடைய வேண்டும். மற்றும் கடவுளை நம் முடைய விழிப்புணர்வின் மையமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதன்பிறகு நெறிமுறையுடன் கூடிய ஆன்மீக வாழ்க்கையானது எளிமையானதாகி விடுகிறது. நாம் கீழான மனப்பான்மைகள் எழும்பொழுது தீவிரமான பிரார்த்தனை செய்யும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பிறகு ஏதோ ஒரு சக்தி வந்து, நம்மை உயர்த்துவதை நாம் உணர்வோம்.

ஐயப்பாட்டு நிலையின் அருள்வளங்கள்

மிகப் பெரிய ஐயப்பாட்டு நிலையின் நடுவில் இருப்பது, ஆன்மீகக் கண்ணோட்டத்தில் நல்லதாகும். நீ நம்பியவை அனைத்தும் உன்னிடமிருந்து எடுக்கப்பட்டு

---

1. பகவத்கீதை, 18.61-63.

உலகியல் ஆதாரம் எதுவுமின்றி நீ விடப்பட்டால் அது பெரும்பாலும் நன்மையைப் பயப்பதாகும். உன்னுடைய எல்லாப் பழைய மதிப்பீடுகளும், நட்புறவுகளும், பிணைப் புக்களும் தகர்க்கப்பட்டு நீ பற்றிக்கொண்டிருந்த அனைத்தும் அடையாளம் தெரியாமல் மறைந்தால் அதுவும் நல்லதாகும். வெளியிலுள்ள எல்லா வகையான ஆறுதல்களும், மற்றவர் களிடம் கொண்டுள்ள எல்லா நம்பிக்கைகளும் நொறுங்கிப் போனால் அதுவும் நல்லது. அப்போது நீ கடவுள் பக்கம் திரும்புவதற்குக் கட்டாயப்படுத்தப்படுவாய். கடவுள் மட்டுமே நம்முடைய சாசுவதமான மற்றும் உண்மையான நண்பரும் வழிகாட்டியும் ஆவார்.

இந்த அனுபவம் மிகவும் வேதனை நிறைந்தது ஆகும். ஆனால் பல மனிதர்களுக்கு இது தேவையானதாகவும் விளங்குகிறது. இல்லையெனின் அவர்கள் கடவுளையும், அவர்களுடைய ஆன்மீக நோக்கத்தையும் மறந்து விடு வார்கள். உன்னுடைய எதிர்காலத்தைக் குறித்து உனக்கு ஒன்றும் தெரியாமல் போகலாம். அழியத்தக்க பொருட்களை நம்பிக்கையுடன் சாராமல் இருக்கலாம். ஆனால் மனிதர்கள் அதைத்தான் செய்கிறார்கள். சில நேரங்களில் சிகிச்சை முறை யானது நோயைக்காட்டிலும் வேதனையளிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் அதை ஒருவர் அனுபவித்தே ஆக வேண்டும். நோய் எந்த அளவிற்குக் கடுமையாக உள்ளதோ அந்த அளவிற்குச் சிகிச்சை முறையும் கடுமையாகத்தான் இருக்க வேண்டும். மற்றும் மேற்கத்திய நாடுகளில் ‘பெண் மற்றும் பொன்’ என்னும் நோயானது மிகவும் நச்சுத்தன்மை உடையதாகக் காணப்படுகிறது. எனவே அதற்கு வலிமை மிகுந்த ஊசிகளும், மருந்துகளும் தேவைப்படுகின்றன. ஒவ் வொரு நோயைப் பொறுத்தமட்டில், நோய் நிவாரணத்திற் கான ஒரு திருப்புமுனை உள்ளது. மற்றும் இந்த நிலைதான் முழுமையாகக் குணமடையும் தன்மைக்கு வழிகாட்டியாக விளங்கும்.

நான் சில நேரங்களில் கடவுளிடம் பக்தர்களுக்குத் துன்பங்களையும் சோதனைகளையும் அனுப்பி, அவர்களைத்

துன்பத்திற்குட்படுத்தி, கஷ்டங்களைக் கடந்துசெல்ல வைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வேன். அதன்மூலம் அவர்கள் விழிப்புணர்வை அடைவார்கள். மாயை என்பது மிகவும் வலிமையுடையது ஆகும். மனிதர்கள் தங்களுடைய கடந்த கால துன்பங்கள் அனைத்தையும் மறந்து, தங் களுடைய பழைய வழிகளிலேயே செல்வார்கள். கடவுளைப் பற்றித் தொடர்ந்து அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்கு ஏதாவது ஒன்று தேவைப்படுகிறது.

எல்லாத் துன்பங்களுமே நம்முடைய பயிற்சிக்காகவே உள்ளன. நம்முடைய எல்லா இயல்பான தூண்டுதல்களும் கட்டுப்படுத்தப்பட்டு, ஆன்மீக முயற்சி என்னும் தீயில் எரிக்கப்பட வேண்டும். இரும்புக் கம்பி வளைந்துவிட்டால் அதை சம்மட்டியால் அடிக்க வேண்டும். நாம் நம்முடைய அகங்காரத்தால் சிலநேரங்களில், சம்மட்டிக்கும், பட்டைக் கல்லிற்கும் நடுவில் மிக நுண்ணியமாகத் தொங்கிக் கொண்டு உள்ளோம் என்பதை மறந்து விடுகிறோம். எனவே சம்மட்டி கீழே விழும் பொழுது நாம் திடீரென்று பதைபதைத்து, 'ஓ, எனக்கு என்ன நேர்ந்துவிட்டது' என்று கூக்குரல் இடுகிறோம். முதலில், உன்னை யார் அங்கு போகும்படிச் சொன்னார்கள்?

உடல் சார்ந்த மட்டத்தில் மட்டும் துன்பம் இருக்க வேண்டும் என்பதில்லை. ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகர் களின் விஷயத்தில், அவர்கள் மூல மெய்ப்பொருளின் ஒளியை உணராமல் இருக்கும் பொழுது வழிதெரியாமல் இருளில் சிக்கிக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களை அவர்கள் காணும்பொழுது சாரமற்ற நேரங்கள் அவர்களிடம் வழக்கமாகக் காணப்படும். இந்த அனுபவமானது, உலகிய லில் நாட்டம் கொண்ட மனிதனின் துயரங்களைப் போன்றே துயரம் நிறைந்ததாக இருக்கும்.

துன்பத்தின் மூலகாரணம் அகங்காரம்

மனிதர்கள் பெரும்பாலும் கடவுளின் அருளைப் புறக் கணிக்கிறார்கள். அல்லது மறந்து விடுகிறார்கள். அவர்கள்

தங்களுடைய வலிமையில் மட்டுமீறிய நம்பிக்கை கொண்டு கவனமற்றவர்களாகி விடுகின்றனர். இது செருக்கிற்கும் வழி காட்டுவதாக அமைந்துவிடும். நம்முடைய பழங்காலப் புத்தகங்களில் ஒரு வேடிக்கையான கதை உள்ளது. ஒரு காலத்தில் ஒரு முனிவரின் துறவிமாடத்தில் ஒரு சிறிய சுண்டெலி இருந்தது. ஒருநாள் அதன்மீது ஒரு பூனை விழுந்துவிட்டது. அந்த முனிவர் அதன்மீது பரிதாபம் கொண்டு, அதைப் பூனையாக மாற்றிவிட்டார். அதன்பிறகு சில நாய்கள் இந்தப் புதிய பூனையை பற்றி இழுத்துத் துண்டிப்பதற்கு முயற்சி செய்தன. எனவே முனிவர் அதை நாயாக மாற்றிவிட்டார். அதன்பிறகு அந்த நாய் ஒரு சிறுத்தைப் புலியால் துன்புறுத்தப் பட்டபொழுது, முனிவர் அதை ஒரு புலியாக மாற்றிவிட்டார். ஆனால் அது புலியாக மாறியவுடன், முனிவரையே கொல்வதற்கு விரும்பியது. அதன்பிறகு முனிவர், 'சரி, நீ பழைய எலியாகவே இருப்பாய்' என்று கூறினார்.

ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டுள்ள சாதகர்களின் விஷயத்திலும் இதைப் போன்ற விஷயம் நடைபெறுகிறது. அவர்கள் மீது தெய்வீக அருள் பொழியப்படுகிறது. அது அவர்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தூய்மைப்படுத்துகிறது. மற்றும் அவர்களால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஒரு முனைப்பாட்டையும் விடுதலையையும் அடைய முடிகிறது. ஆனால் அவர்கள் அகங்காரம் மிகுந்தவர்களாகி, அவர்கள் முயற்சியால் பெற்றவற்றைக் குறித்து மிகவும் சிறப்புவாய்ந்தவையாக எண்ணி, கவனமற்றவர்களாகி விடுகிறார்கள். அல்லது உலகத்தைப் பழித்து அதைச் சீர்திருத்தும் அளவிற்குச் செல்கிறார்கள். பிறகு திடீரென்று அந்த அருள் உள்வாங்கிக் கொள்ளப்படும் பொழுது, அவர்கள் தங்களைத் தனிமை நிறைந்தவர்களாக உணர்ந்து, மட்டுமீறிய வெற்றிடத்தைச் சந்திக்கின்றனர்.

உண்மையாக, உறுதியாக ஆன்மீக வழியைப் பின்பற்றுபவர்கள் மற்றவர்களிடம் அகங்காரம் குறைந்தவர்களாகவும், மிகுதியான அளவில் தன்னலம் அற்றவர்களாகவும் அன்புடையவர்களாகவும் அக்கறை உடையவர்களாகவும்

இருப்பார்கள் என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். நாம் அளிப்பவர்களாக இருக்க வேண்டும். ஏற்பவர்களாக இருத்தல் கூடாது. உலகியல் பொருட்களைப் பொறுத்த மட்டில், பெரும்பாலான மனிதர்கள் ஏற்பவர்களாகவே உள்ளனர். மற்றவர்களிடமிருந்து அவர்கள் பலவற்றைப் பெற விரும்புகின்றனர். இருந்தும் அவர்கள் அகங்காரம் உள்ளவர் களாகவே காணப்படுகின்றனர். அகங்காரம் குறைந்திருந்தால் மகிழ்ச்சியும் அமைதியும் மிகுந்து இருக்கும். நம் செயல் பாடும் சிறப்புடையதாக இருக்கும்.

உன்னுடைய ஆன்மீக அருள் வளத்தைக் குறித்து, எளிமை நலம் வாய்ந்ததாகக் கருத வேண்டாம். நீ தொடர்ந்து கடந்த காலத்தில் செய்த தவறுகளைப் பற்றியும், பலகீனங் களைப் பற்றியும் நினைத்து ஏங்கிக் கொண்டிருத்தல் கூடாது. ஆனால் எச்சரிக்கை உணர்வுடன் கூடிய மனத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பக்தி வழியிலும் கூட தொடர்ந்து வேறு படுத்தி ஆராய்ந்து அறியும் தன்மை அவசியமானதாகும். கடவுள் நம்மீது பொழிந்து கொண்டிருக்கும் அருளால் பய னடைவதற்கு, மனத்திலே தொடர்ந்து நீடிக்கும் எச்சரிக்கை உணர்வு அவசியமானதாகும். ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியிருப் பதைப்போல நீ கடவுளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத் தால், அவர் உன்னை நோக்கி பத்தடிகள் எடுத்து வைப்பார் என்பதை உணர வேண்டும்.

துன்பத்தை ஆன்மீக ஆற்றலாக மாற்ற வேண்டும்

கடவுளின் உண்மையான பக்தர்கள், செல்வத்திற் காகவோ அல்லது உலகியல் பயன்கள் குறித்தோ பிரார்த் தனை செய்ய மாட்டார்கள். அவர்கள் துன்பம் அகல வேண் டும் என்றும் கூட பிரார்த்திப்பது இல்லை. அவர்களுடைய துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளும் சக்தியைத்தான் அவர்கள் பிரார்த்திப்பார்கள். இரவீந்திரநாத் தாகூரின் ஒரு அழகான பாடல் உள்ளது. அந்தப் பாடல் பின்வருமாறு:

கடவுளே, நீ எனக்கு விரும்பி அருளியிருக்கும் உன் கொடியை ஏந்திச் செல்லும் சக்தியை நீ எனக்கு அளிக்க

வேண்டும். உனக்குத் தொண்டு செய்யும் பொழுது, தவிர்க்க வியலாத பெரிய வேதனையைத் தாங்கிக் கொள்வதற்கு நீ எனக்கு முழு ஈடுபாட்டை அளிக்க வேண்டும். நீ வேண்டு மென்றால் என் இதயத்தை மிகுந்த வேதனையால் நிரப்பிக் கொள்வாய்.

நீ உன்னுடைய சொந்தக் கரங்களால் எனக்கு அளித்துக் கொண்டுள்ள துன்பம் என்னும் பரிசினைத் நான் தவிர்க்கவும் விரும்பவில்லை. இந்தத் துன்பம் என் தலையில் அணிந்து கொள்ளத்தக்க ஆபரணமாக விளங்குகிறது. அதனுடன் நீ எனக்குப் பக்தியையும் அளிக்க வேண்டும். நீ உன்னை மறக்காமல் இருக்க அனுமதித்தாய் எனின், நீ விரும்பும் அளவிற்கு எனக்குப் பணியை அளிப்பாய். உலகத்தின் சிக்கல் களில் என் இதயம் தன்னை இழக்காமல் இருக்க வேண்டும்.

நீ விரும்பினால், நீ விரும்பும் அளவிற்கு என்னைக் கட்டுப்படுத்துவாய். ஆனால் உனக்காக என் இதயத்ததைத் திறக்குமாறு செய்வாய். எந்தக் காரணத்தினாலும் என்னை, உன்னை மறக்கும்படிச் செய்ய அனுமதிக்காமல் இருப்பாய்.[1]

மற்றும் குந்திதேவி ஸ்ரீகிருஷ்ணனிடம் செய்துகொண்ட அழகிய பிரார்த்தனை உள்ளது.

'ஓ ஜகத்குருவே, எல்லா திசைகளிலிருந்தும் பேரிடர்கள் எங்களுக்கு உண்டாகட்டும். அவை உன்னுடைய தரிசனத்தை எங்களுக்கு ஏற்படுத்துகின்றன. அது பிறப்பு மற்றும் இறப்பு என்னும் சுழற்சிக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்கிறது.'[2]

எப்படியும் நமக்கு இனிமையற்ற அனுபவங்கள் ஏற் படும் என்னும் காரணத்தினால், நாம் அவற்றை மேம்பட்ட ஆன்மீக வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்வது சிறந்த தாகும். வாழ்க்கையில் ஏதாவது ஒரு வகையில் வலியையும், துன்பத்தையும், அவமானப்படுத்தப்படுவதையும் எவராலும்

---

1. இரவீந்திரநாத் தாகூர், நைவேத்யம், 20
2. விபத: ஸன்து ந: சச்வத் தத்ர தத்ர ஜகத்குரோ ।
பவதோ தர்சனம் யத்ஸ்யாதபுனர்பவதர்சனம் ॥
—பாகவதம், 1.8.25.

தவிர்க்க இயலாது. இவ்வனைத்தும், உள்ளபடியாகவே ஒரு உயர்ந்த நோக்கத்திற்கு நம்மைத் தூண்டட்டும். தெய்வீகமான வாழ்க்கைக்கு நாம் அவற்றைப் படிக்கற்களாகப் பயன்படுத்துவோம். நாம் எவ்விதத் தடையுமின்றி, சென்று சில மனிதர்கள் செய்ய முயற்சிப்பதைப் போல நமக்கு நாமே சிக்கல்களைப் பெற வேண்டும் என்பது இதன் பொருளல்ல. நாம் துன்பத்தையோ அல்லது இன்பத்தையோ நாடிப் பெறாமல் இவ்விரண்டிற்கும் அப்பாற்பட்டுள்ள கடவுளை மட்டுமே நாட வேண்டும்.

தெய்வீக அருள் நம்முடைய உடல் தொடர்பான எல்லா துன்பங்களையும் வேதனைகளையும் கட்டாயமாக அகற்றும் என்று கூற வியலாது. ஆனால், நமக்கு அருள் இருக்குமாயின் வாழ்க்கையின் கொந்தளிப்பு மிகுந்த சோதனைகளை வெற்றிகரமாகக் கடந்து செல்ல இயலும். இந்த செயற்பாங்கில் நம்மிடம் உள்ள மாசுகளை எரித்துக் கொண்டுவிடலாம். இது நம்முடைய அகத் தூய்மையையும், சரணடைய வேண்டும் என்னும் உணர்வையும் மிகுதிப்படுத்துகிறது. நம்முடைய துயரங்கள் நமக்குத் தெளிவான ஞானத்தையும் நிலைத்த பக்தியையும் அளிக்குமாயின் அவை போற்றத்தக்கவையாகும். நான் வாழ்க்கையை அதிகமாக உணர்ந்து அனுபவிக்கும் அளவிற்கு, தெய்வீக அருள் என்பது நம்முடைய துன்பங்களைக் கட்டாயமாக அகற்றுவதில்லை என்று புரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் அது எப்பொழுதும் பக்தனுக்கு வியக்கத்தக்க அகச்சமநிலையையும் சக்தியையும் அளிக்கிறது. சோதனைகளையும், கஷ்டங்களையும் எதிர்கொள்ளும் அளவிற்குச் சக்தியை அளிக்கிறது. அவனை மிகுந்த தூய்மையுடையவனாகச் செய்கிறது. மற்றும் மிகப் பெரிய அளவிலுள்ள துன்பங்களுக்கிடையிலும் அக அமைதியை அளிக்கும் தெய்வத்தின் இருப்பை அவனை உணரச் செய்கிறது. உண்மையான அமைதி என்பது உறக்கத்தைப் போன்றது அல்ல. அது மனத்தின் ஒரு அமைதியான நிலையாகும். அது தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் இடையில் உன்னை நிலைதடுமாறாமல் இருக்கச் செய்து, பரந்தகன்ற

மெய்ப்பொருளுடன் தொடர்பு கொள்ளுமாறு செய்கிறது. வாழ்க்கையிலுள்ள கஷ்டங்களைக் கண்டு ஓடுபவர்கள் மேலும்மேலும் அவர்களைப் பலவீனமானவர்களாகச் செய்து கொள்கின்றனர். தங்களுடைய கடமைகளைப் புறக்கணித்து, தொடர்ந்து இன்பங்களையே நாடும் மனிதர்களின் வளர்ச்சி தடைபடுகிறது. அவர்கள் ஆன்மீக மேன்மையை முழுமை யாக அடைவதில்லை. கடவுள் எப்பொழுதும் அவர்கள் மீது பொழிய ஆயத்தமாக உள்ள அருளை அவர்களால் பயன் படுத்திக் கொள்ள இயல்வதில்லை.

நம்மீது ஏற்கனவே பொழியப்பட்டுள்ள தெய்வீக அருளை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வோம். நமக்கு நேரமில்லை, அனுகூலமான சூழல் இல்லை என்று குறைகூறிக் கொண்டிருப்பதைவிட, ஏற்கனவே நமக்கு உள்ள நேரத்தையும் அனுகூலத்தையும் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்வோம். மற்றும் அர்ப்பிக்கும் தன்மையுடன், கடவுளை உணர்வதற்கு முயற்சி செய்வோம். நாம் இன்னும் மிகுதியான தெய்வீக அருளிற்காக முயற்சி செய்ய வேண்டும். மற்றும் உலகத்தில் உள்ள அற்பமான பொருட்களின் மீது வைக்கும் அன்பைவிடக் கடவுளின்மீது அதிகமான அன்பை வைக்க வேண்டும். ஏனெனில் உலகப் பொருட்கள்மீது வைக்கும் ஆசையானது, நம்முடைய ஆன்மீக நோக்கத்தை யும் கடவுளையும் மறக்கச் செய்துவிடும்.

நாம் எப்பொழுதும் கடவுளை நோக்கி பாய்ந்து ஓடத்தக்க மனநிலையில் இருக்க வேண்டும்.

கர்மாவும், தெய்வீக அருளும்

கர்மாவின் சில குறிப்பிட்ட வழிவகைகள் கஷ்டங்களின் மூலமாகத்தான் திறமையாகச் செயற்படுத்தப்பட வேண்டும். எனவே தெய்வீக அருள் வரும்பொழுது நாம் ஓரளவிற்கு நிம்மதியை உணர வேண்டும். கஷ்டங்களை அனுபவிப்பது, கர்மாவின் அதிக அளவான பாரம் குறைந்துவிட்டது என்பதைக் குறிப்பிடுகிறது. அன்றியும், கஷ்டங்களை

அனுபவிப்பதால் ஏற்படும் உதவியற்ற நிலையானது, ஆன்மீக வழியில் கடவுளுக்கு நம்மை அர்ப்பிப்பதை நடை முறைப்படுத்துவதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட வேண் டும். இன்பத்திலும், துன்பத்திலும், வாழ்க்கையிலும், மரணத் திலும் கடவுள் நமக்கு உரியவர் ஆவார். அவர் நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மா ஆவார். நம் வாழ்க்கையின் வாழ்க்கை ஆவார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நாம் இந்த உடலில் வாழ்வதற்கு நோய்கள் என்னும் வரிகளை அளிக்க வேண்டும் என்று கூறு வார்.[1] நாம் இந்த வரிகளைச் சிலசமயங்களில் சுமையுடைய தவணைகளில் செலுத்த வேண்டியிருக்கும். அதன்பிறகு சிறிது காலத்திற்கு சிறு ஓய்வு இருக்கும். குருதேவரின் இறுதிக்கட்ட நோயின் பொழுது, 'என் உடல் வேதனையை அனுபவிக்கட்டும். ஆனால் ஓ என் மனமே, நீ பேரின்பத் திலேயே இருப்பாய்' என்று அடிக்கடி கூறுவதைப் பலர் கேட் டுள்ளனர்.[2]

வேகமாக ஓடுவதற்கு முயற்சி செய்யாமல் முன் னோக்கிச் செல்ல வேண்டும். நாம் வேகமாக ஓடுவதற்கு முயற்சி செய்தால், நாம் அதற்காக கூட்டுவட்டியைச் செலுத்த வேண்டி வரலாம். கடவுளை உணர்வதுதான் ஐயத்திற்கு இடமின்றி, நம் இலட்சியமாக உள்ளது. ஆனால் ஆன்மீகப் பண்பினால் மட்டுமின்றி, சரியான மற்றும் அவசியமான செயல்களின் மூலமும் இந்த இலட்சியமானது அடையப்பட வேண்டும். முறையற்ற, தேவையற்ற செயல்களை நாம் முற்றிலும் தவிர்க்க வேண்டும். எனவே நாம் நம்முடைய அக இலட்சியம் மற்றும் புறத்திலே செய்யும் செயல்கள் என்னும் இரண்டிலுமே கவனத்துடன் இருக்க வேண்டும். மெதுவாக வும், உறுதியாகவும் முன்னேறி உன்னுடைய கர்மாவைத்

---

1. Sayings of Sri Ramakrishna, பக்கம், 133.

2. Life of Sri Ramakrishna (கல்கத்தா அத்வைத ஆசிரமம் 1974) என்னும் நூலிலிருந்து பக்கம், 489.

தீர்த்துக் கொள்ள வேண்டும். கடவுளுடன் ஒத்திசைவாக ஒரே சுருதியில் இருக்க வேண்டும் மற்றும் நீ என்ன செய்கிறாய் என்பது குறித்தும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாம் நம்மை எப்பொழுதும் நம்முடைய எண்ண மட்டத்திலும், செயலாற்றும் மட்டத்திலும் திருத்திக் கொள்ள வேண்டும்.

பெரும்பாலான மனிதர்கள் அவர்களுடைய ஆன்மீக நாட்டம் மற்றும் அவர்கள் உலகவாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய இரக்கமற்ற உண்மைக்கும் இடையிலுள்ள முரண் பாட்டினால் துன்பப்படுகிறார்கள். இந்தத் துன்பமானது தன்னிலையிலேயே தீங்கானது இல்லை. அகத் தொடர்பான ஆன்மீகத்தை மீண்டும் சீரமைத்துக் கொள்வதற்குத் தூண்டு விசையாக அது செயல்பட்டால் அது ஒருவருக்கு நன்மை யைச் செய்வதாகவும் அமையலாம். ஒருவர் இந்த உலகத் திலேயே வாழ வேண்டுமென்றாலும் கூட ஒருவர் உண்மை யாக இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டவர் என்பதைப் படிப் படியாக உணரலாம்.

ஒரு விதத்தில் பார்த்தால், நம்முடைய தகுதிக்கு ஏற்ப நாம் அடைகிறோம். நாம் ஏதோ ஒரு பொருளை விரும்பு கிறோம். அதனைப் பெறுகிறோம். மற்றும் அதனுடன் பிரிக்க வியலாமல் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள நன்மை, தீமைகளையும் பெறுகிறோம். நாம் சிலவகையான இன்பங் களை நாடுகிறோம். அதன்பிறகு சுவாமி விவேகானந்தர் கூறுவதைப் போல, ‘மகிழ்ச்சி தன் தலைமீது துயரக் கிரீடத்தை அணிந்தே மனிதனின் முன்னால் வருகிறது’[1] நம்மால் ஒன்று இல்லாமல் மற்றதை ஏற்கவியலாது. நாம் ஏதோ உலகியல் தொடர்பான விருப்பத்தில் நிறைவைப் பெற விரும்புகிறோம். நாம் விரும்பும் பொருளைப் பெறலாம். ஆனால் அத்துடன் இணைந்துள்ள சிக்கலையும் நாம் பெறுகிறோம். நாம் இப்பொழுது இருக்கும் நிலையானது, நம்முடைய கடந்தகால மற்றும் நிகழ்கால உலகியல் தொடர்பான விருப்பங்களின் விளைவு ஆகும். நாம்

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 6.438.

நாமாகவே ஏற்படுத்திக் கொண்டுள்ள சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு நம்மைப் பொருத்திக் கொள்வதற்கும் மற்றும் அவைகளை மீறி மேம்பாடு அடைவதற்கும், நாம் முடிந்த அளவிற்கு விருப்பங்கள் அற்றவர்களாக இருப்பதற்குக் கற்றுக் கொள்வோம். நாமே நம் விதியை நிர்ணயிப்போம். நாம் நம்முடைய கர்மாவைத் திறம்பட செயலாற்றும் முறையில் மேலும் மேலும் கடவுளையே சார்ந்து இருக்கக் கற்றுக் கொள்வோம். அதன்பிறகு இவ்வுலகமானது நம்முடைய பயிற்சியின் களமாக இருக்கும். மற்றும் அதன்மூலம் நம்மால் கடவுளை அடையவியலும். அதன்பிறகு நாம் இவ்வுலகத்தில் வெளிப்புறச்சார்பு உடையவர்களாக தொடர்ந்து இருக்கும் பொழுதும், அதைச் சார்ந்தவர்களாக இருக்க மாட்டோம். நாம் எங்கிருந்தாலும் கடவுளைச் சார்ந்தவர்களாகவே இருப்போம்.

தெய்வீக அன்னையின் லீலை (நாடகம்)

எல்லாமே, தெய்வீக அன்னையின் லீலையாக உள்ளது. அவள் குருவாக, மாணவனாக, நண்பனாக, பகைவனாக பல்வேறு வடிவங்களில் நம்மிடம் வருகிறாள். நாம் நம்முடைய பங்கை எந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்யவியலுமோ அந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்வோம். ஆனால் அதே நேரத்தில் நம்முடைய பங்கைச் சிறப்பாக நடித்துக் காட்டுவோம். பற்றுதலின்றி நமது நாடகத்தை பார்த்துக் கொண்டிருப்போம்.

நாம் நம்மைச் சுற்றி எதைப் பார்த்தாலும் நமக்கு என்ன நேர்ந்தாலும் அது அவளுடைய லீலையின் வெளிப்பாடு ஆகும். அவளுடைய மகிழ்ச்சியின் வெளிப்பாடு ஆகும். சில நேரங்களில் அவள் தன்னிச்சையாக மனிதர்களின் இதயங்களுக்குத் துன்பத்தையும், இன்பத்தையும் அளித்து சிறு குறும்பு செய்து விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது பக்தன் 'தன்னிலை மறந்த பெண்ணே, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கூறுவான். சில சமயங்களில், இயலுலக அண்டத்தின் முழுமையான செயற்பாங்கில் நம்மால் எத்தகைய காரணத்தையோ அல்லது நயத்தையோ

கண்டுகொள்ள இயலாது. ஆனால் இந்த முழுமையான இயலுலக அண்டத்தின் செயற்பாங்கு அதனுடைய மதிமயக்க முற்ற நிலையில் அதன் கொடுமையில் அதன் வேதனையில் மற்றும் இன்பத்தில், அன்னையின் தன்னிலை மறந்த குறும்புச் செயல்களின் வெளிப்பாடுகளாகவே உள்ளன. அவளுடைய லீலைகள் அவள் கொள்ளும் மகிழ்ச்சியின் வெளிப்பாடுகள் ஆகும்.

நாமும் அவளுடைய லீலையைக் கண்டு மகிழ வேண்டும். மற்றும் அதை நாடகமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நமக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவ்வனைத்தும் அந்த விளையாட்டின் மகிழ்ச்சிக் காகவே என்று உணர்ந்து நாம் நடிகர்களின் பாத்திரங்களைச் செயல்படுத்த வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பாடிய பல பாடல்கள் (அவை பெரும் பாலும் வங்காளத்தைச் சேர்ந்த இராம்பிரசாத் மற்றும் வேறு சில புனிதமகான்களாக விளங்கிய கவிஞர்களாலும் இயற்றப் பட்டவையாகும்) இயலுலக அண்டத்தின் செயற்பாங்கின் உருவக வடிவின் பிரதிநிதித்துவங்களாக விளங்கின. உலகியலில் நாட்டம் கொண்ட மனிதனின் பண்படாத மனம், அதைப் பண்படாத வழியிலேயே உணர்ந்து அவைகளின் முழுமையான உட்பொருளைத் தவறவிட்டு விடுகிறது. அவைகளின் சங்கேத முறையமைப்பு உண்மையிலேயே அற்புதமானது ஆகும். உண்மையைச் சொற்களால் எந்த அளவிற்கு வெளிப்படுத்த இயலுமோ, அந்த அளவிற்கு உண்மை மனத்தில் பதியுமாறு வெளிப்படுத்துகின்றன. ஸ்ரீராமகிருஷ்ணருக்குக் குறிப்பாக, தெய்வீக அன்னை பட்டங்களைப் பறக்க விடுவது பற்றி ஒரு பாடல் மிகவும் பிடித்தமானது ஆகும்.

'பட்டம் பறக்க விடுகின்றாய்
பவ சம்சாரச் சந்தையிலே
திட்டம் தீட்டி அற்புதமாய்த்
தேவீ, லீலை புரிகின்றாய்!

நரம்பும் எலும்பும் கூடாக்கி
நயமாய் மாயை நூல்கோத்து
விரும்பும் ஆசைக் காற்றினிலே
விடுவாய் பட்டம் பலகோடி!

விண்ணில் மிதக்கும் பட்டத்தில்
ஒன்றோ இரண்டோ விடுபட்டால்
கண்ணிற் கண்டு கைகொட்டி
காளி நீயும் சிரிக்கின்றாய்!

அறுந்து செல்லும் காற்றாடி
அன்புத் தென்றல் மீதூர்ந்து
பிறந்த பிறவிக் கடல்தாண்டிப்
பேரானந்த நிலைபெறுமே![1]

அன்னையின் திருவிளையாடலிற்காகப் புலன்களால் உணரத்தக்க இவ்வுலகத்துடன் நம்மைக் கட்டியுள்ள கயிறை நாம் கத்தரித்துக் கொண்டு விட வேண்டும். அதன் பிறகு நாம் விடுதலை அடைந்து விடுவோம். மற்றும் நம்முடைய விடுதலையைக் கண்டு அன்னை மகிழ்வடைகிறாள். இல்லையெனின் இந்த விளையாட்டு அதனுடைய இன்ப துன்பங்கள், அதனுடைய நிறைவுகள் செயல்குலைவுகள் போன்றவற்றுடன் காலவரையறையின்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் அன்னையின் பக்கத்திலிருந்து தன்னை மறந்த நிலையின் மிகப் பெரிய சுழற்சியின் திருவிளையாடலாகவும், நம்முடைய பக்கத்திலிருந்து துன்பங்களும், பிணைப்புக்களும் நிறைந்த மிகப் பெரிய சுழற்சியாகவும் காணப்படும்.

உன்னுடைய அற்பமான தனிப்பட்ட விருப்பத்தை முழுமையாகப் புறக்கணித்து நீ மகிழ்ச்சியுடன் ஆட வேண்டும். அவள் தன்னை மறந்த நிலையில் ஆடும் ஆட்டத்தை ஆட வேண்டும். நம்முடைய மனத்தில் பலவகையான உணர்ச்சிகள் எழும் பொழுது அவை நம்மிடமிருந்து

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.123.*

எழுகின்றன என்று நாம் நினைக்கிறோம். அவை நம்முடைய உணர்ச்சிகள்தான். ஆனால் அவை நம்முடைய விருப்பத்தைச் சேர்ந்தவை ஆகும் என்பது வேடிக்கையானது ஆகும். நம் முடைய அடிமைத்தனத்தின் உண்மையான இயல்பைக்கூட நாம் உணர்வது இல்லை. இந்த சிறப்பான இயலுலக அண்டத் தின் ஆட்டத்தில் நாம் பங்குபெற வேண்டுமாயின், இது விளையாட்டு என்று அறிந்துகொள்ள வேண்டும். விளை யாட்டைத் தவிர வேறு எதுவும் இல்லை. நாம் நம்முடைய இருப்பின் ஆழங்களிலேயே இருக்கும்பொழுது நாம் பார்வையாளர்களாக மட்டும் இருக்கிறோம். அதனுடன் எந்த ஒருமைப்பாடும் இல்லை. நம்முடைய தனித்தன்மை என்று கூறப்படுவதும் கூட இயலுலக அண்டத்தின் வெளிப்பாடு தான். ஆனால் நாம் நம்மை, இயலுலக அண்டத் தத்துவத் திலிருந்து தெய்வீக அன்னையிடமிருந்து பிரித்துக் கொண்டு இரங்கத்தக்கவர்களாக செய்து கொள்கிறோம். தெய்வீக அன்னை நாட்டியத்தைத் தொடங்கித் தலைமை வகிக்கிறாள்.

நீ உருளைக் கிழங்குளை வேகவைக்கும்பொழுது அவைகளும் பாத்திரத்தினுள்ளே மிகவும் நகைப்பிற்கிடமான ஒரு ஆட்டத்தை நிகழ்த்துகின்றன என்பதைக் காணவியலும். நாம் அந்த உருளைக் கிழங்குகளைப் போன்றவர்கள் ஆவோம். அவைகளுக்கு எண்ணங்கள் இருந்திருக்குமாயின். ஒருவேளை அவைகள் ஆட்டுவிக்கப்படவில்லை, அவை களுடைய சொந்த சுதந்திரமான விருப்பத்தினாலேயே ஆடு கின்றன என்று கற்பனை செய்திருக்கும். நீ இந்த உண்மையை முழுமையாக உணர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். சரியான வழியில் முன்னேறிச் செல்வதற்கு அது பெரிய அளவில் உதவி செய்யும்.

கடவுளின் கைகளில் ஒரு கருவியாக இருப்பாய்

இயலுலக அண்ட மெய்ப்பொருளுடன் நீ முழுமையான சுருதியுடன் இணைந்து இருந்தால்தான் உன்னால் ஒரு சிறிதளவு சுதந்திரத்தைப் பெறவியலும். வேறுவழியில் நாம் பொதுவாக சுதந்திரம் என்று கூறுவது விலங்குத் தன்மை

கொண்ட சுதந்திரமாகும். இயல்புணர்ச்சிகளின் சுதந்திரம் ஆகும். இயல்புணர்ச்சிகளிலிருந்து பெறும் சுதந்திரம் அல்ல. புலன்களின் செயல்பாடுகள் இயலுலக அண்ட ஆற்றலின் உணர்வு நிலையற்ற வெளிப்பாடுகள் ஆகும். நாம் அந்த வகையான சுதந்திரத்தை அதிகமாக விரும்பினால் உணர்வற்ற தன்மையிலேயே அதிகமாக இருப்போம். அதிகமாக பிணைப்பு உடையவர்களாகவும் ஆகிறோம். இயல்புணர்ச்சி யால் வாழும் வாழ்க்கைக்குப் பதிலாக, விழிப்புணர்வுடன் கூடிய வாழ்க்கையை, விவேகத்துடன் கூடிய வாழ்க்கையை வாழ வேண்டும். இயல்புணர்ச்சிகளின் சுதந்திரம் என்பது உரிமையே தவிர சுதந்திரமே அல்ல. சுதந்திரமான மனிதன் என்று கூறப்படுபவன் உண்மையிலேயே அவன் மனநிலை களுக்கும் உணர்ச்சிகளுக்கும் அடிமையாவான். இவ்வுலகம் முழுவதிலும் அத்தகைய சுதந்திரமான மனிதர்கள் நிறைந்து இருப்பதால், அது மேலும் மேலும் மோசமடைந்து கொண்டே வருகிறது. தெய்வீக அன்னையின் மாயா சக்தியின் கயிற்றில் நகைப்பிற்கு இடமளிக்கும் வகையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் எல்லா பொம்மைகளும் அற்புதமான சுதந்திரமான மனிதர்கள்தான்!

இயலுலக அண்டத்தின் ஆற்றலின் கைகளில் தான் ஒரு கருவியாக இருக்கிறோம் என்பதைச் சாதகன் உணர வேண்டும். ஒருவர் தன்னை செயலைச் செய்பவராக, செயல் முதல்வராக உணராமல் ஒரு கருவி என்று உணர்வது சிறந்த மனப்பான்மையாகும். நாம் ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். பல்வேறு வகையான கடிகாரங்கள் உள்ளன. எல்லாமே அதே மின்சார சக்தியால் செயலாற்றுகின்றன. ஒவ்வொரு கடிகாரமும் அதனுடைய சொந்த சக்தியால் செயலாற்றுகிறது என்று நினைத்துக் கொண்டால் அது பெரிய தவறு ஆகும். நாம் அனைவரும் வலிமை வாய்ந்த ஒரு வெள்ளத்தின் ஆற்றலின் பகுதிகள் ஆவோம் நம்மூலம் அந்த ஆற்றல் செயல்படுகிறது. நாம் எப்பொழுதும் இயலுலக அண்டமையத்துடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்க முயற்சி செய்து, எல்லாவற்றிலும் முடிந்த அளவிற்குத்

தனித்தன்மை அற்றவர்களாக இருக்க வேண்டும். இந்த உடலும் மனமும் ஒரு வலிமைமிகுந்த சக்தியின் கருவிகள் ஆகும். நாம் இயலுலக அண்டமையத்துடன் தொடர்பு உடையவர்களாக எந்த அள்விற்கு ஆகிறோமோ மற்றும் மேலும் மேலும் தனித்தன்மை அற்றவர்களாக ஆகிறோமோ அந்த அளவிற்குச் செயல்முதல்வர் என்னும் எல்லாக் கருத்துக்களையும் விட்டுவிடுவதில் வெற்றி அடைவோம். மற்றும் அமைதியையும் அடைவோம். நாம் கடவுளை விட்டு எந்த அளவிற்கு அதிகமாக ஓடுகிறோமோ அந்த அளவிற்கு அதிகமாக நாம் துன்பத்தை அடைகிறோம்.

உண்மையைக் கூற வேண்டும் எனின் நீ உன் உடலை உயிர்த்துடிப்புடன் இருக்கச் செய்கிறாயா அல்லது உன்மூலம் செயலாற்றும் தெய்வீக சக்தி இருக்கச் செய்கிறதா? நீ, இயலுலக அண்டத்தின் ஆற்றல்களுடன் உன்னுடைய இயல்புகளின் உடல் சார்ந்த, மனம் சார்ந்த மற்றும் ஆன்மீகம் சார்ந்த என்னும் வேறு வகையான மட்டங்களில், அந்த இயக்க ஆற்றலுடன் தொடர்பு கொண்டிருக்கிறாய். உணவினால் பெறப்படும் சக்தியால் உடல் தொடர்ந்து இருப்பதைப் போல ஆன்மாவானது இயலுலக அண்டத்தின் பேராற்றலால் தொடர்ந்து செயலாற்றுகிறது. இந்த ஆற்றல் உள்வாங்கிக் கொள்ளும்பொழுது நீ உயிரற்றவனாக, ஜடமாக ஆகிவிடுகிறாய். எனவே ஒருபொழுதும் உன்னை எதனுடனும் கற்பித்துக் கொள்ளுதல் கூடாது. ஆனால் அந்த தெய்வீக ஆற்றலுடன் அனைத்தையும் கற்பித்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்குப் பதிலாக, அந்த ஆற்றல் வெளிப்படும் தகுதி வாய்ந்த வழியாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பணிவையும் அர்ப்பிக்கும் தன்மையையும் மேற்கொள்வதின்மூலம் உன்னிடம் இந்த திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், இதற்குத் தொடர்ந்து செய்யப்படும் முயற்சி தேவைப்படுகிறது. அகங்காரம் தங்குதடையின்றிப் பாயும் ஆற்றலைத் தடுத்து நிறுத்துகிறது. தெய்வீக ஆதாரத்திடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. அதனால் தான் நாம் துன்பமடைகிறோம்.

உண்மையாகவே நாம் கடவுளின் கைகளில் கருவிகளாக மட்டும் இருக்கிறோம். சுவாமி விவேகானந்தருக்குக் காஷ்மீரில் ஏற்பட்ட அனுபவம் உனக்கு நினைவில் உள்ளதா? இஸ்லாமிய அழிவு ஆற்றலின் சின்னங்களைப் பெற்றுத் திகழ்ந்த ஒரு சிதிலமடைந்த கோயிலில் அவர் இருந்த பொழுது, அவர் அந்தக் காலத்தில் வாழ்ந்திருந்தால் அவ்வாறு ஆவதற்கு அனுமதித்திருக்க மாட்டார் என்று அவருள்ளேயே கூறிக் கொண்டிருந்த பொழுது, திடீரென்று அவருள்ளே, 'நான் உன்னை பாதுகாக்கிறேனா அல்லது நீ என்னைப் பாதுகாக்கிறாயா?' என்னும் தெய்வீக அன்னையின் குரல் கேட்டது. சுவாமிஜி கடவுளை உணர்ந்தவர் ஆகையால் அவரால் தெய்வீகக் குரலைக் கேட்க முடிந்தது.

சாதாரணமான மனிதர்கள் தங்களுடைய சொந்தக் குரலையே தெய்வத்தின் குரல் என்று தவறுதலாகக் கருதக் கூடாது. தெய்வத்தின் குரலை மனிதர்கள் நினைத்துக் கொண்டிருப்பதைப்போல அவ்வளவு சுலபமாகக் கேட்க இயலாது. நம் மனங்கள் தூய்மையடைந்த பிறகு, கடவுளின் விருப்பத்துடன் நம்முடைய விருப்பங்கள் இணையும் பொழுதுதான் நம்மால் அந்தக் குரலைக் கேட்கவியலும். அந்தக் குரல் கேட்கப்படுவதற்கு முன்பு, நம்முடைய முழுமையான இருப்பானது தெய்வீக அதிர்வலைகளுடன் அதிர்ந்து துடிக்க வேண்டும். தெய்வீகக் குரல், காரணத்துடன் முரண்படாமல், அதை மீறிச் செல்கிறது என்பதை நாம் இங்குக் கவனிக்க வேண்டும். இந்தக் காலக்கட்டத்தில் அகக்குரலைக் கேட்பது என்பது நாகரீகமானதொன்றாக ஆகிவிட்டது. மற்றும் இத்தகைய பெரும்பாலான நிகழ்வுகள் ஐயத்திற்கு இடமளிப்பதாக உள்ளன.

கடவுளுடன், அற்பமான நம்மை, விழிப்புணர்வுடன் இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்வதுதான் நமக்கு முக்கியமானது ஆகும். நாம் விழிப்புணர்வுடன் இருக்கும் வரையிலும் இதற்காக உச்ச அளவில் முயற்சிக்க வேண்டும். நாம் உறங்கச் செல்லும் பொழுது, அந்த நேரத்தில் நமக்கு ஆதாரமாக உள்ள அந்த தெய்வீக சக்தியைப் பற்றி நினைக்க

வேண்டும். நாம் தொடர்ந்து 'நான்', 'நான்,' 'நான்' என்று கூறிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், இந்த விந்தையான 'நான்' உறங்கும்பொழுது, அதை யார் பாதுகாக்கிறார்? அப்பொழுது இந்த உடலை எது உயிருடன் வைத்திருக்கிறது? நாம் இந்த அற்பமான தனித்தன்மையைச் சுதந்திரமான பொருள் என்று நினைப்பதுதான் நம்முடைய சிக்கலாக உள்ளது. இல்லை அது தனித்தன்மை உடையது அல்ல. வரையறையற்ற முழுமையின் ஒரு பகுதியாக மட்டும் அது விளங்குகிறது.

நம்முடைய அற்பமான தன்மை அல்லது அகங்காரத் திற்கு நம்மால் எப்படி எதிர்ச்செயல் செய்ய இயல்கிறதோ அதைப் போன்றே நம்முடைய உயர்ந்த தன்மைக்கும் நம் மால் எதிர்ச் செயல் செய்ய இயலும். நம்முடைய தனித் தன்மைக்கு எப்படி நம்மால் எதிர்ச் செயல் செய்ய இயல் கிறதோ, அதைப் போன்றே அதற்குப் பின்னணியில் உள்ள மெய்த் தத்துவத்திற்கும் நம்மால் எதிர்ச் செயல் செய்ய வியலும். ஒரு மனிதனை நாம் விரும்புவதைப் போன்றே. நம்மால் மெய்த் தத்துவத்தையும் விரும்பவியலும். இருப் பினும் இந்த அன்பானது, நாம் மனிதரிடம் கொண்டுள்ள அன்பிலிருந்து மிகவும் வேறுபட்டதாகும்.

கடவுளைச் சக்தி என்று எண்ணும் கருத்தானது, பண்பு களற்ற முழுமுதற்கடவுள் என்னும் கருத்தைவிட உன்னை அதிகமாக ஈர்க்கக் கூடியதாக இருக்கும். ஆனால் அந்தக் கருத்தையும் சரியாக உணர்ந்து, அதில் நிலைத்து இருக்கவும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் நம்மை ஆன்மாவாகக் கருதி மற்றும் கடவுளை எல்லா ஆன்மாக்களின் பெருந் தொகுதியாக அல்லது எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவாகக் கருதினால் நமக்கு அது சுலபமானதாக இருக்கும். ஸ்ரீராம கிருஷ்ணர் இந்தப் பாடலைப் பாடுவது வழக்கம்.

'என்னரும் தாயே உன்றன்
இனிய நல்விருப்பத்தால்தான்....
அருமை அன்னையே! அனைத்தும் உனது
கருணையதனால் கவினுற நிகழும்.

நீதான் இயக்கும் ஆற்றல், மற்றும் நான் வெறும் கருவி
நானே வீடு, நீ அதில் குடிகொண்டுள்ள ஆன்மா
நானே இரதம், நீ இரதமோட்டி!
நான் இயங்குகிறேன். ஓ அன்னையே நீ என்னை
இயக்குகிறாய்'[1]

எப்படியிருப்பினும், மேற்கண்ட பாடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருத்தானது, மிக உயர்ந்த ஆன்மீக நிலையைக் குறிக்கிறது. அதை ஒருவர் நீண்டகால போராட்டத்திற்குப் பிறகு மற்றும் அயராத தன் முயற்சியின் மூலமே அடையவியலும். உண்மையாகவே வலிமையான தன் முயற்சியைக் கைகொண்ட ஒருவன்தான் முன்னேறி, முழுமையாகவும் எத்தகையை நிபந்தனையும் இல்லாமல் பரம்பொருளின் திருவடிகளில் தன்னை அர்ப்பித்துக் கொள்வான். எல்லா வகையான ஆன்மீக முயற்சிகளும் மனத்தைத் தூய்மை செய்கின்றன. மற்றும் முழுமையாக ஒருவரை அர்ப்பிப்பதற்குத் தகுதியுடையவராகவும் செய்கின்றன. ஒருவர் தன்னுடைய ஆன்மீகப் பயிற்சியை விடாப்பிடியாகவும் விடாமுயற்சியுடனும் செய்து வந்தால்தான் அந்த நிலையானது நிறைவேறும்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் நீதிக்கதையில் வரும் பறவையின் சிறகுகளைப்போல, நம்முடைய 'இறக்கைகள்' சோர்வடைந்தால்தான் அர்ப்பிக்கும் தன்மையானது தோன்றும். 'ஒரு பறவை கப்பல் ஒன்றின் பாய்மரத்தின் மீது எதையோ எண்ணியபடி உட்கார்ந்திருந்தது. கங்கையில் நின்று கொண்டிருந்த அந்தக் கப்பல் மெல்ல மெல்ல சமுத்திரத்தை அடைந்தது. அப்பொழுதுதான் பறவைக்குத் திடீரென்று நினைவு வந்தது. உடனே சுற்றுமுற்றும் பார்த்தது. எந்தப் பக்கமும் கரையோ, நிலமோ தென்படவில்லை. கரையை அடைவதற்காக வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும், மேற்கு நோக்கியும் பறந்தது. ஆனால் எங்கும் கரையைக் காண இயலவில்லை. கடைசியில் அது

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.249.

பாய்மரத்தின் மீது அமர்ந்தது. பின்னர் நகரவே இல்லை. அதன் சிறகுகள் மிகவும் சோர்வடைந்திருந்தன. செயலற்று உட்கார்ந்து இருந்தது. பாய்மரத்தின்மீது உட்கார்ந்து தன்னைச் சுமந்து செல்ல அனுமதித்தது.[1]

உச்ச அளவில் தன்முயற்சியைச் செய்தவனால் மட்டுமே உண்மையான அர்ப்பிக்கும் தன்மை என்றால் என்ன என்று அறிந்து கொள்ள இயலும். 'இவ்வனைத்தும் அவனுடைய விருப்பம்' என்று சுலபமாகக் கூறினால் அது போதாது. அர்ப்பிக்கும் தன்மை என்பது ஒரு மனநிலையாகும். அந்த நிலையை ஒருவர், ஒருவருடைய ஆன்மாவானது, இயலுலக அண்ட ஆன்மாவின் ஒரு பகுதி மற்றும் ஒருவருடைய மனமும் உடலும் மேம்பட்ட சக்தியின் கருவிகள் என்று உணர்வதால் மட்டுமே பெற இயலும். உண்மையான அர்ப்பிக்கும் தன்மையானது, நேரடியான ஆன்மீக அனுபவத்திற்குப் பிறகே ஏற்படும்.

சில நடைமுறை யோசனைகள்

உன் வாழ்க்கையைக் குறித்து, பூர்வாங்கப் படியை, செயல்முறை திட்டத்தை உருவாக்குதல் வேண்டாம். நீ பொதுவான ஒரு திட்டத்தைத் தயாரிக்கக் கூடாது என்பது இதன் பொருள் அல்ல. உன்னுடைய வருங்கால வாழ்க்கையின் போக்கைப் பொதுவான முறையில் திட்டமிட வேண்டும். மற்ற அனைத்தையும் கடவுளிடம் விட்டுவிட வேண்டும். கடவுள், அவர் எதை விரும்புகிறாரோ அதை உன்னைச் செய்யும்படிக் கூறட்டும்.

நாம் ஆன்மீக முன்னேற்றத்தையும், ஆன்மீக அனுபவத்தையும் திடமாக விரும்ப வேண்டும். ஆனால் விவரங்களைக் கடவுளிடம் விட்டுவிட வேண்டும். நாம் பொருட்களையும் மற்றவற்றையும் எப்பொழுதும் தெளிவாகப் பார்க்காமல் இருப்பதால், நம்முடைய எதிர்காலத்தைப்பற்றியும் திட்டமிடுவது குறித்தும் நினைக்காமல் இருக்க வியலாது. ஆனால்

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.200-201.

இவ்வனைத்தும் இறுதியில் கடவுளிடம் விடப்பட வேண்டும். நாம் படிப்படியாகப் பரம்பொருளிடம் ஒரே சுருதியில் இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் கடவுளின் விருப்பத்தைப் பின்பற்ற வேண்டும். நாம் இதில் மனமார்ந்து விடாப்பிடியுடன் இருந்தால், நம்முடைய முழுமையான இருப்பானது கடவுளுடன் ஒரே சுருதியில் இருக்கும் ஒரு கட்டத்திற்கு நாம் வருவோம்.

ஒருவர் முழுமையாக அர்ப்பிக்கும் தன்மையை மேற் கொண்டால், ஒருவரால் எந்தத் தவறான அடியையும் எடுத்து வைக்கவியலாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மனிதர்கள் அடுத்தடுத்து ஒரு பேச்சிற்காக, 'நான் எல்லா வற்றையும் கடவுளிடம் விட்டுவிட்டேன்' என்று கூறு வார்கள். அதன்பிறகு அவர்கள் விரும்பும்படியே செய் வார்கள். உலகியல் சார்ந்த பொருட்களின் மீது பற்றுக் கொண் டிருக்கும் மனிதனால் அல்லது தன்னுடைய சொந்த விருப் பங்கள் மற்றும் தப்பு எண்ணங்களின்மீதும் பற்றிக் கொண் டுள்ள மனிதனால் அர்ப்பிக்கும் தன்மையைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க இயலாது. ஒரு குறிப்பிட்ட சிறிய அளவில் பற்றற்ற தன்மையில்லாமல் தன்னைத்தானே அர்ப்பிப்பது என்பது இயலாததொன்று என்பதை எப் பொழுதும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். முழுமையாக நம்மை அர்ப்பிப்பதற்கு, முழுமையான பற்றற்ற தன்மை அவசியமானதாகும்.

ஏழையாக இருக்கும் ஒருவர், தேவைக்கு அதிகமாக ஆசைப்படக் கூடாது. செல்வந்தனாக உள்ள ஒருவன் , உடைமை ஆக்கிக்கொள்ளும் உணர்வை, பொறுப்பாண்மைத் தன்மையுடன் மாற்றீடு செய்து கொள்ள வேண்டும். அதன் பிறகு கடவுள் ஒருவருக்கு அளிப்பதைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது உலகியல் தொடர் பான உடைமைகளில் மட்டுமின்றி, அறிவுபூர்வமான வாய்ப்புவளங்கள், மற்றும் ஆன்மீகத் திருவருள் குறித்தும் உண்மையானதாகும். உன்னிடம் எது இருப்பினும், இசைத் திறமையோ, செயல்திறமையோ அறிவுபூர்வமான

கருத்துக்களோ, அன்போ இவ்வனைத்துமே கடவுளிட மிருந்து பெறப்பட்ட பரிசு என்றும், மற்றவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் கருதப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டில் யோபுவைக் குறித்த கதை உனக்குத் தெரிந்திருக்கும் அவரிடமிருந்த எல்லாவற்றையும் அவர் இழந்துவிட்டார். ஆனால் அவர், 'ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக் கொண்டார். ஆண்டவர் பெயர் போற்றப் பெறுக' என்று மட்டும் கூறினார்.[1] நம்மால் இயன்றதை நாம் தகுதி உடையவர்களுக்கு அளிக்க வேண்டும். நாம் பரிசு களைக் கொடுப்பதிலும் அவை எதுவாக இருப்பினும் மிக வும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அர்ப்பிக்கும் தன்மை என்னும் பெயரில் பொருட்களைப் பாகுபடுத்திக் காணாமல் கொடுக்க வேண்டாம். உண்மையான பக்தன், சரியான நேரத் தில் எப்படி, எப்பொழுது மற்றும் யாருக்குப் பரிசு பொருட் களை அளிக்க வேண்டும் என்பதைக் குறித்த வழிகாட்டு தலையும் பெறுகிறான்.

நீ இப்பொழுதே அமைதியை அடைய வேண்டும் என்பது குறித்து அதிகமாகக் கவலை கொள்ள வேண்டாம். தன்முனைப்பான, மற்றும் இயலுலக அண்டமையத்தின் முனைப்பைச் சார்ந்த இருவகையான அமைதி நிலைகள் உள்ளன. மற்றவர்களிடம் அன்போ அல்லது பரிவோ காட் டாமல் இருப்பவர்கள் அமைதியாக இருப்பதைப் போலத் தோற்றமளிப்பார்கள். அவர்கள் மற்றவர்களின் துன்பங் களைக் குறித்து மனக்கவலை கொள்வதில்லை. மற்றும் சரிசமநிலை உடையவர்களாகவும் உறுதி உடையவர்களாக வும் தென்படுவார்கள். ஆனால் அவர்களுக்கு ஏதாவது ஏற்பட்டால் அவர்கள் நொறுங்கிவிடுவார்கள். இத்தகைய அமைதித் தன்மையைப் பெறாமல் இருப்பது நல்லதாகும். இயலுலக அண்டத்தின் மையத்தைச் சார்ந்த அமைதி நிலை யானது பரம்பொருளுக்கு ஒருவரை அர்ப்பித்துத் கொண்டதன் விளைவாக வருவது ஆகும். கடவுளுடன் தொடர்பு

---

1. பைபிள்—ஜாப் (Job), *1:21*.

ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் வருவது ஆகும். உலக ளாவிய விழிப்பு உணர்வுடன் நம்மை நாம் நிலைநிறுத்திக் கொள்ளும்பொழுதுதான் நம்மால் எல்லாச் சூழ்நிலை களிலும் உண்மையான அமைதியையும் சரிசமநிலையையும் அடைய இயலும்.

மிகுந்த அளவில் உன் குறைகளை ஆராய்ந்து கொண்டு உன்னை பலவீனப்படுத்திக் கொள்ளுதல் கூடாது. மனிதர்கள் அவர்களின் வாழ்க்கையைக் குறித்து குறைகூறிக் கொண்டே இருப்பார்கள் ஏனெனில் அவர்கள் தங்களுடைய குற்றங் குறைகளுக்கான காரணங்களைத் தொடர்வதற்கு அனுமதிக் கின்றனர். நம்முள்ளே மாறுபாடு ஏற்படவில்லை எனின் நம் மனத்தைச் சீர் செய்து கொள்வதற்காக ஆராயவில்லை எனின், அது நமக்குத் தொல்லைகளை அளித்துக் கொண்டே இருக் கும். ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ள செல்லப்பிராணி நாயைப் பற்றிய கதை உனக்குத் தெரியுமா? ஒரு நாயின் மீது முதலில் மிகவும் அன்பு காட்டப்பட்டது. அதற்குத் தன்னுடைய எஜ மானனின் உடல்மீது ஏறிக் குதிக்கும் பழக்கம் இருந்தது. அதன்பிறகு எஜமானன் இந்தப் பழக்கத்தைக் கட்டுப்படுத்த விரும்பினார். ஆனால் அந்த நாய் அதற்குக் கீழ்ப்படிய வில்லை. அது அடிக்கப்பட்ட பொழுதுகூட, அது தன் எஜ மானனின் உடல் மீது ஏறிக் குதிப்பதற்கு முயற்சி செய்தது.'[1]

நம்முடைய மனம் அந்த நாயைப் போன்றது ஆகும். இத்தனை நாளாக அதற்குச் சலுகை காட்டி வந்ததால் அதைக் கட்டுப்படுத்துவதும், அதைக் கடவுளின் திருவடிகளில் அர்ப்பிப்பதும் கஷ்டமானதாக உள்ளது. ஆனால் தொடர்ந்து செய்யும் பயிற்சியால் மனத்தைக் கடவுளுக்கு அது சரணடை யும்படிச் செய்ய வேண்டும்.

முதலில் உள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற் படுத்திக் கொள்ள வேண்டும். முறையான சாதனையின் மூலம் ஓரளவிற்காவது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

---

1. Tales and Parables of Sri Ramakrishna, பக்கம் 237.

அதன் பிறகு, 'செயல் மற்றும் வழிபாடு' என்னும் குறிக் கோளை மேற்கொள்ள வேண்டும். உன்னால், மகிழ்வுடன் செய்யத்தக்க செயலை மீறி, அதிக அளவில் வேலையை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறாயா என்று நீ பார்த்துக் கொள்ள வேண்டும். தொடக்கத்தில் கடவுளைத் தொடர்ந்து நினைப்பதை நிலைநிறுத்திக் கொள்வது என்பது இயலாத தாகும். எனவே நீ செய்யும் அனைத்தையும் தொடக்கத்திலும் இறுதியிலும் முடிந்தால் நீ செயலாற்றிக் கொண்டிருக்கும் பொழுதும் கடவுளுக்கு அர்ப்பிக்க வேண்டும்.

உன்னுடைய வாழ்க்கையின் நோக்கத்தை நீ மறக்கும் பொழுதும், நீ எதைச் செய்தாலும் அது கடவுளை உணர்வ தற்கான வழி என்பதை நீ மறக்கும் பொழுதுதான் வாழ்க்கை யானது இயந்திரகதியாகி விடும். ஒரு இயந்திரத்தைப் போல செயலாற்றுவதால் எந்தப் பயனும் இல்லை. நாம் செய்யும் செயலிலே நாம் அந்தச் செயலைச் செய்யும் அளவில் சிக்கல் ஏற்படுவதில்லை. அதைச் செய்யும் திறமையில் தான் சிக்கல் ஏற்படுகிறது. அதாவது நாம் செயலைச் செய்யும் விதத்தைப் பொறுத்தது ஆகும். நாம் செய்யும் செயலைக் கடவுளுக்கு அர்ப்பிக்கும் மனப்பான்மையுடன் நம்மால் செய்ய இயலுவ தில்லை. நாம் செய்யும் செயலை ஆன்மீக விதிமுறைப் பயிற்சியாகச் செய்வதற்கு இதுதான் முக்கியமான தடையாக உள்ளது. கடவுளை உணர வேண்டும் என்னும் இலட்சியத் தைத் தொடர்ந்து கருத்தில் கொண்டிருக்காவிட்டால் அர்ப் பிக்கும் தன்மை என்பது ஒரு பொழுதும் ஏற்படாது.

நம்மைக் கடவுளிடம் அர்ப்பித்துக் கொள்வதற்குப் பெரியவர்களிடம் பணிவாக நடந்துகொள்வது ஒரு பரீட்சை யாக உள்ளது. பெரியவர்களிடம் பணிவாக நடந்து கொள் வதில் தன்னுடைய அனைத்தையும் ஆன்மீக நாட்டத்தையும் ஆன்மீகப் பயிற்சியையும் விட்டுவிட வேண்டும் என்று கூறுபவன் அர்ப்பித்துக்கொள்வதின் தன்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்று கொள்ள வேண்டும். நாம் கட வுளுக்கு நம்மை அர்ப்பித்துக் கொள்வதை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கும் பொழுது நம் அகங்காரமானது

படிமாற்றம் அடையும் அளவிற்கு அழிக்கப்பட்டு இருப்பது இல்லை. தனித்த விழிப்புணர்வு நிலையானது பரந்துபட்டு அதனுள் பெரியவர்கள் சிறியவர்கள் மற்றும் சமமானவர்கள் என்னும் அனைவருக்கும் இடமளிக்கிறது. அர்ப்பிக்கும் தன்மையானது ஒரு மனிதனுக்கு உயர்ந்த ஞானத்தையும் மதிப்பையும் அளித்து மற்றவர்கள் அவனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கும்படியாகவும் தடுக்கிறது.

அர்ப்பிக்கும் தன்மை என்றால் நீ முட்டாளைப்போல நடந்துகொள்ள வேண்டும் என்பது பொருள் அல்ல. ஒரு காலத்தில் ஒரு மிகச் சிறந்த அறிஞர் இருந்தார். அவருடைய மனைவிக்கு ஒருநாள் எங்கோ செல்ல வேண்டியிருந்ததால் மனைவி அவரிடம் அவள் திரும்பி வருவதற்குள் அடுப்பில் அவரைப் பருப்புகளை வேகவைக்குமாறு கூறியிருந்தாள். அதைச் சமைத்துக் கொண்டிருந்த பொழுது அவரைப் பருப்புகள் பொங்கி, அந்த பாத்திரத்திலிருந்து வெளியே சிந்தத் தொடங்கின. அந்த அறிஞர் உடனடியாக் கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்கினார். அதற்குப் பிறகு அவருடைய மனைவி திரும்பி வந்து, அவள் கணவன் ஏற்படுத்தியிருந்த குளறுபடியைக் கண்டு, அவர் என்ன செய்தார் என்று கேட்டாள். அதன்பிறகு அவள், ‘முட்டாளே, உன்னால் அவரைப் பருப்புக்களின் மீது சிலதுளிகள் எண்ணெயை விட இயலவில்லையா?’ என்று திட்டினாள். நாம் கடவுளிடம் பிரார்த்தனை செய்து கொள்ளும் பொழுது போலியிலிருந்து உண்மையை வேறுபடுத்திக் கண்டுகொள்ளும், கெட்டதிலிருந்து நல்லதை வேறுபடுத்திக் கண்டுகொள்ளும், தப்பிலிருந்து சரியானதை வேறுபடுத்திக் கண்டு கொள்ளும் ஞானத்தை அளிக்குமாறு பிரார்த்திக்க வேண்டும். கடவுள் நமக்கு ஏற்கனவே அளித்துள்ள புரிந்து கொள்ளும் சக்தியின் மூலம் நம்மால் எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயலாற்ற முடியுமோ, அந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல் புரிவோம். மற்றும் நாம் அதைச் செய்து கொண்டிருக்கும் பொழுது கடவுள் நம்மை மேலும் மேலும் நிறைவு செய்வார்.

மற்றவர்களிடமிருந்து அடுத்தடுத்து அறிவுரையை நாடிப் பெறுவதும், வெளிப்புற உதவியை அதிகமாகச் சார்ந்து இருப்பதும் மிகப் பெரிய பிணைப்பு ஆகும். உன்னை வழி நடத்துவதற்கு நீ அதிக அளவில் உட்புறமாகத் திரும்பினால் அந்த அளவிற்கு அதிகமாக நீ சுதந்திரமாக இருப்பாய். கடவுளிடம் வரையற்ற நம்பிக்கையை வைத்து, வாழ்க்கையில் உன் கடமைகளைத் துணிவுடன் செய்து கொண்டிருக்க வேண்டும். கைகள் சுறுசுறுப்புடன் செயலில் ஈடுபட வேண்டும். மனத்தில் கடவுளைக் குறித்த எண்ணங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். அறிவுபூர்வமாகச் செயலாற்றிக் கொண்டு உலகியல் குறித்த எண்ணங்களில் உன் மனத்தை ஈடுபடுத்திக் கொண்டிருந்தால் அப்பொழுது உன் இதயம், மற்றும் விருப்பத்தைக் கடவுளிடம் உறுதியாக நிலை நிறுத்த வேண்டும். உன் அகங்காரத்தைக் கடவுளுக்கு அர்ப்பித்து விட வேண்டும்.

செயலாற்றுவதும் வழிபடுவதும் கைகோத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் செய்யும் செயலையும் வழிபாடாகப் படிமாற்றம் செய்வதுதான் நம்முடைய இலட்சியமாகும். காலப் போக்கில் தொடர்ந்த பயிற்சியின் மூலம்தான் அதை உணர இயலும். இதில் வெற்றி பெற வேண்டுமாயின் நீ உன் வேலையைச் செய்து கொண்டு இருக்கும் பொழுது, பிரார்த்தனை செய்யும் மற்றும் தியானம் செய்யும் மனநிலையைப் போன்ற ஒன்றை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். நீ இதில் எப்பொழுதும் வெற்றியடையவில்லை எனின் அதற்காக கவலை கொள்ள வேண்டாம். இந்தத் தோல்விகள் எல்லாம் வெற்றியின் படிக்கற்களாக இருக்கட்டும். மனத்தின் ஒரு பகுதியில் நாம் கடவுளைப் பற்றி நினைத்துக் கொண்டு மற்றொரு பகுதியால் நம் வாழ்க்கையின் கடமைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கவனித்துக் கொண்டு, செய்யும் செயல்களின் பயன்களைக் கடவுளுக்கு அர்ப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வனைத்தும் மிகவும் கஷ்டமானது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் நாம் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய அவல் இடிக்கும் பெண்ணைப் பற்றிய நீதிக் கதை உனக்குத் தெரியுமா? ஒரு கையால் அவள் எந்திரத்திலுள்ள அவலைக் கிளறிக் கொடுக்க வேண்டும். மற்றொரு கையால் அவள் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். அதே நேரத்தில் நண்பர்களிடமும் வாடிக்கையாளர்களிடமும் 'இவ்வளவு பாக்கி தர வேண்டும்' என்றும் விலை பேசிக் கொண்டிருந்தாள்.[1] நம்முடைய ஆன்மீக முயற்சியில் அதைப் போன்றதொரு அருமையான திறமை கொண்டு வரப்பட வேண்டும்.

சங்கராச்சாரியாரின் பலராலும் அறியப்பட்ட ஒரு பாடல் உனக்குத் தெரிந்திருக்கும். அதில் அவர் 'ஓ கடவுளே, நான் எது செய்தாலும் அது உனக்கு ஆராதனையாகும்' என்று கூறுகிறார்.[2] நீ செய்யும் செயலை மனமார விரும்பும் பொழுது இத்தகைய மனப்பான்மை சுலபமானதாகும். நீ செய்ய வேண்டிய செயலிலுள்ள சில உள்ளார்ந்த குறைபாட்டால், உனக்கு அதைச் செய்யப் பிடிக்கவில்லை எனின், கடவுளிடம் உன் கஷ்டங்களையும் சூழ்நிலையின் அழுத்தத்தால் மட்டுமே அதைச் செய்து கொண்டு இருப்பதாகவும் கூற வேண்டும். நீ விரும்பினால், கடவுளிடம் அதை உன்னிடமிருந்து எடுத்துக் கொண்டு, அதைவிடச் சிறந்த ஒன்றைக் கொடுக்குமாறு வேண்டிக் கொள்ள வேண்டும். அது உன்னுடைய நன்மைக்கு வழிவகுக்கும் எனின், அவர் நிச்சயமாக உன் விருப்பத்தை நிறைவேற்றுவார். இல்லையெனின், பழைய வேலையையே தொடர்வது உனக்கு நன்மையை ஏற்படுத்தும் என்று நீ அறிந்து கொள்ள வேண்டும். அந்தச் சூழ்நிலையில் நீ செய்ய விருப்பப்படாத அந்த வேலையினால் எதிர்பாராத பயன்களையும் கண்டு கொள்ளவியலும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நம்மையெல்லாம் அடிக்கிறாரா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. நம் சிக்கல்களும்,

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.157.
2. யத்யத்கர்ம கரோமி தத்ததகிலம் சம்போ தவ ஆராதனம் ।
—சிவமானஸ பூஜை, 4.

துன்பங்களும் நம்முடைய கர்ம பலன்களைத் தீர்த்துக் கொள்வதின் பலன்கள் ஆகும். எனவே கடவுளைக் குறைகூறுவதற்குப் பதிலாக நம்முடைய அனுபவங்களிலிருந்து நாம் பயனடைவோம். அந்த அனுபவங்கள் எத்தனை கசப்பு மிக்கவையாக இருப்பினும் மேலும் மேலும் உணர்ச்சி வசப்படாத நிலையில் இருந்துகொண்டு எப்பொழுதும் கடவுளையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும். அவர் நம்முடைய சோதனைகளையும் பார்த்துக் கொண்டிருப்பதுடன் மட்டுமின்றி நம்மை அவைகளிலிருந்து விடுவிக்கவும் உதவி செய்யத் தயாராக உள்ளார். கடவுள் உன்னை அவருடைய ஆன்மீக ஓட்டத்துடன் நெருங்கிய தொடர்புபடுத்தியுள்ளார். அந்த ஓட்டத்தைப் பின்பற்றி அந்தத் தொடர்பை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். உரிய நேரத்தில் தெய்வீகத்தின் இருப்பை எப்பொழுதும் உன்னிடம் நீ உணர்வாய். நீ அமைதியாக அமர்ந்திருந்தாலும் கடுமையாக செயலாற்றிக் கொண்டிருந்தாலும் உணர்வாய்.

செயலும், வழிபாடும் கைகோத்துக் கொண்டு இருக்க வேண்டும். சரியான மனநிலையுடன் செய்யப்படும் செயலானது, பிரார்த்தனை, மற்றும் தியானத்தை உள்ளடக்கிய அர்ப்பிக்கும் தன்மையுடன் செய்யப்படும் வழிபாட்டைக் கடவுள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படும். என்னுடைய குருநாதரான சுவாமி பிரம்மானந்தர், எனக்கு இந்த அறிவுரையைக் கூறினார். ‘நீ வேலை செய்யத் தொடங்குவதற்கு முன் கடவுளை நினைத்துக் கொண்டு அவரை வணங்க வேண்டும். நீ வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது இடையிடையே அவ்விதம் செய்ய வேண்டும். மற்றும் நீ வேலையை முடித்த பிறகும் செய்ய வேண்டும்.’

தெய்வீக அருள், நம்முடைய உடல் தொடர்பான எல்லா துன்பங்களையும் வேதனைகளையும் கட்டாயமாக அகற்றும் என்று கூறவியலாது. ஆனால் நமக்கு அருள் இருக்குமாயின் வாழ்க்கையின் கொடிய சோதனைகளை வெற்றிகரமாகக் கடந்து செல்ல இயலும். இந்தச் செயற்பாங்கில் நம்மிடம் உள்ள மாசுகளை எரித்துக்கொண்டுவிடலாம். இது

நம்முடைய மனத் தூய்மையையும் சரணடைய வேண்டும் என்னும் உணர்வையும் அதிகப்படுத்துகிறது. மற்றும் கடவுளின் விருப்பத்திற்கு இன்னும் அதிகமாகச் சரணடையும் தன்மையையும் வளர்க்கிறது. நம்முடைய துயரங்கள் நமக்கு தெளிவான ஞானத்தையும் நிலைத்த பக்தியையும் அளிக்கு மாயின் அவை போற்றத்தக்கவையாகும்.

கடவுளின் நாமத்தைப் பற்றிக் கொள்வாய். உள்ளே குடிகொண்டுள்ள ஆன்மாவைப் பற்றி நினைப்பாய். அதன் புனிதமான இருப்பை உணர்வாய். உன்னுடைய விருப்பத் தைக் கடவுளுக்கு அர்ப்பித்து விட்டு, அமைதியுடன் இருப் பாய். உன் மனத்திற்கும் இதயத்திற்கும் புத்தொளியையும் ஆற்றலையும் அளிக்க வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப்பாய்.

வருபவை அனைத்தையும், அவை வரும் முறையிலேயே ஏற்றுக்கொண்டு சிறந்த முறையில் செயலாற்றுவதைத் தவிர உன்னால் வேறு என்ன செய்ய இயலும்? உனக்குத் தெரி யுமோ அல்லது தெரியாதோ, உன்னுடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலமானது கடவுளிடமே உள்ளது. நம்முடைய பங்கைச் சரியாகச் செய்துகொண்டு எந்த அள விற்குச் சிறப்பாகச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்து, முடிந்த அளவிற்குக் கடவுளிடம் நம்மை அர்ப்பிப்பதுதான் நமக்குச் சிறந்த வழிமுறையாகும்.

பெரிய அளவில் ஏற்ற தாழ்வுகள் நிறைந்த கால கட்டத்தை ஒவ்வொருவரும் கடந்து செல்ல வேண்டும். நீ எப்பொழுது ஏதாவது ஒரு காரணத்திற்காக கவலைப்படு கிறாயோ, அப்பொழுது கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்பக் கூறி கடவுளை நினைத்து உன்னை அர்ப்பித்துக் கொள்ள வேண்டும். உரிய காலத்தில் இந்த முறையானது உனக்குப் பெரிய அளவில் ஆற்றலையும், அமைதியையும் அளிக்கும் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

கடவுளுக்காகத் தொண்டாற்றுவது மகிழ்ச்சியான தாகும். கடந்த காலம், நிகழ் காலம், மற்றும் எதிர்காலமானது

அவனிடமிருப்பதால், நான் எதிர்காலத்தைக் குறித்துக் கவலைப்படமாட்டேன். நாம் கடவுளை நினைத்து நம்மை அவருக்கு அர்ப்பித்து, அவருடைய வரையற்ற இருப்பில், அன்பில், பேரின்பத்தில் மூழ்கியிருப்பதுதான் நம்மால் சிறப் பாகச் செய்யத் தக்கது ஆகும்.

உன்னுடைய உழைப்பின் எல்லாப் பயன்களையும் உன் இதயத்தில் குடிகொண்டுள்ள உன் இலட்சியத்திற்கு வழி காட்டும் கடவுளுக்கு அர்ப்பித்து விட வேண்டும். மற்றும் அமைதியுடன் இருக்க வேண்டும். இந்த முழு உலகமும் உன்னைக் கைவிட்டு விட்டது என்று நீ நினைத்தாலும், கடவுள் உன்னுடன் இருக்கிறார். உனக்குள் இருக்கிறார் என்று உறுதியுடன் நம்ப வேண்டும். எனவே உனக்கு உதவி செய்து உன் பாதைக்கு ஒளியூட்ட வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய வாழ்க்கை யின் தனிமைக்கு நடுவில், வழிகாட்டி ஒளியை அளிக்க வேண்டும் என்று எப்பொழுதும் பிரார்த்தித்துக் கொண்டு, கஷ்டங்களுக்கும் சோதனைகளுக்கும் நடுவில் கடவுளின் தெய்வீக இருப்பை உணர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். உனக்குத் தேவையான வலிமையையும், தைரியத்தையும் கடவுள் உனக்கு அளிப்பார்.

உனக்கு மன அமைதி வேண்டும் என்று நீ விரும்பினால், யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காமல் இருக்க வேண் டும். ஏதாவது உனக்குக் கிடைத்தால் நன்றியுடையவனாக இருப்பாய். இல்லையெனில், கடவுளுக்கு நன்றி கூறுவாய். கடவுள் மட்டுமே உன்னுடைய ஆன்மாவின் ஆன்மாவாக உனக்கு உரியவர். அவரால் உன்னை விட்டுச் செல்ல இய லாது. உன்னாலும் அவரை விட்டுச் செல்ல இயலாது.

ஒரு பணியில் வெற்றி என்பது நம் முயற்சியை மட்டும் சார்ந்தது இல்லை. அது நம்முடைய பெருமுயற்சியை மட்டும் சார்ந்தது இல்லை. மற்ற காரணங்களும் சேர்ந்து வெற்றி ஏற்படுமாறு செய்கின்றன. எப்படியிருப்பினும், நம்முடைய எல்லா முயற்சிகளும் உலக வாழ்க்கையில்

தோல்வியில் முடிந்தாலும் சரியான போக்கில் நாம் கடுமையாக உழைத்து இருந்தால் அகநிலை சார்ந்த வெற்றி ஏற்படும். இந்த அகநிலை சார்ந்த வெற்றியில் தன் கருத்தை வைத்து ஸ்ரீகிருஷ்ணர், 'கருமத்தில்தான் உனக்கு அதிகாரம் உள்ளது. ஒரு பொழுதும் அதன் பயனில் இல்லை' என்று கூறியுள்ளார்.[1]

மற்ற எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் இருப்பதைப் போன்றே, ஆன்மீக வாழ்விலும், மெய்ப் பொருளுடன் கொண்டுள்ள தொடர்பில் நாம் எங்கு இருக்கிறோம் மற்றும் சிக்கல்களை எப்படி தைரியத்துடன் எதிர் கொள்வது என்பது தான் மிகப் பெரிய கடமைப் பொறுப்பாக உள்ளது. அத்துடன், நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். இந்தச் சூழலில், நன்மை ஏற்படுவதற்காக நம்மால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தால் நல்லதே. இல்லையெனின் நாம் வைக்கப்பட்டுள்ள வரையறைக்கு உட்படுத்தப்பட்ட நிலைமையில் நம்முடைய பங்கை எந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்ய வியலுமோ அந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

வாழ்க்கையை விட்டு ஓட முயற்சி செய்து, மரணத்தைப் புகலடைவது முற்றிலும் கோழைத்தனமாகும். அது மேலும் சீர்கேடான நிலையை அடைவதாகும். மனநலத்துடன் உள்ள எந்த மனிதனும் அதைப்பற்றி நினைக்க மாட்டான்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த சீடர்கள் அனைவரும் நமக்கு, ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகன் எப்பொழுதும் யாரோ ஒருவர் மூலம் வழிகாட்டப்படுவதை விரும்புபவனாக இருத்தல் கூடாது என்று அறிவுறுத்தி உள்ளனர் (இயந்திரத்தின்மூலம் செயல்படுத்தப்படுவதைப் போல). நம்முடைய இயல்புகளின் மீது விழிப்புணர்வுடன் கூடிய கட்டுப்பாட்டை அடைவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் தொண்டு, பிரார்த்தனை, அர்ப்பிக்கும் தன்மை போன்றவற்றால், கடவுளின் விருப்பத்துடன் ஒரே

1. பகவத் கீதை, 2.47.

சுருதியில் இருப்பதற்கு முயற்சி செய்து மற்றும் அதன் கட்டளைகளைப் பக்தியுடனும், உறுதியுடனும் பின்பற்ற வேண்டும்.

தெய்வ இச்சை என்று ஒன்று இருப்பது எனக்குத் தெரியும். அது ஒருவரின் சொந்த நன்மைக்காகவும் மற்றவர்களின் நன்மைக்காகவும் மனித இச்சையின்மூலம் செயல்படுகிறது. பிரார்த்தனை, ஜபம், தியானம், மற்றும் பூஜை போன்றவற்றின் மூலம் நாம் அதனுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

உன்னுடைய உயர்ந்த ஒழுக்க நெறிமுறை உணர்வைப் பின்பற்றிக் கொண்டு, பற்றற்ற தன்மையுடனும் வழிபடும் தன்மையுடனும் உன்னுடைய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு, மற்றும் உன்னுடைய ஆன்மீகப் பயிற்சியைப் பக்தியுடனும், ஒழுங்குமுறையுடனும் செய்து கொண்டு உச்ச அளவிற்கு முயற்சிக்க வேண்டும். இந்தக் காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் புனித அன்னையாராக வெளிப்பட்டுள்ள தெய்வீக சக்தியின் பயனை அடைந்தவர்கள் அனைவரும் பாக்கியசாலிகள் ஆவார்கள். நீ உன்னுடைய கப்பல் பாயை விரிக்க விரிக்க தொடர்ந்து வீசிக் கொண்டுள்ள தெய்வீக அருள் என்னும் தென்றலை மேலும் மேலும் உன்னால் பற்றிக் கொள்ள இயலும்.

உப்பு பொம்மையின் ஒப்புமையைக் குறித்து நீ அறிந்திருப்பாய். உப்பு பொம்மை கடலின் ஆழத்தைக் கண்டறிய விரும்பி அதில் கரைந்து விட்டது. கலப்படம் அற்ற உப்பினால் செய்யப்பட்டுள்ள பொம்மைக்கு மட்டுமே இத்தகைய நிலை ஏற்படும். மணலினால் செய்யப்பட்டுள்ள பொம்மைக்கோ அல்லது அதிகமாக உப்பும், மணலும் கலந்து செய்யப்பட்டுள்ள பொம்மைக்கோ இந்நிலை ஏற்படாது. நம் அனைவரிடமும், 'உப்பு', மற்றும் 'மணல்' என்னும் இரண்டும் உள்ளன. முழுமையாக அர்ப்பிக்கும் தன்மையை மேற்கொள்வதற்கு மணலானது நீக்கப்பட வேண்டும் அல்லது 'உப்பாக' மாற்றப்பட வேண்டும். நம்முடைய அகங்காரத்தை அதனுடைய செருக்குடனும் மற்றும் கணக்கற்ற விருப்பங்களுடனும் சுலபமாகப் படிமாற்றம் செய்ய

வியலாது. சிறிது சிறிதாக முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அதன் பயனாக, 'மணலா'னது அகற்றப்பட்டு விடும். அதுவரையிலும் நாம் குரங்குக்குட்டி அதன் தாயைப் பற்றிக் கொண்டிருப்பதைப் போல இருந்து கொண்டு ஸ்ரீகிருஷ்ண ரின் உபதேசமான, 'மாம் அனுஸ்மர யுத்யா ச' என்பதைப் பின்பற்றி நடக்க வேண்டும் (என்னை நினைத்துக்கொண்டு வாழ்க்கைப் போரில் போரிடுவாய்).

'உப்பு' தன்மையானது தன்னை உறுதிப்படுத்திக் கொள் ளும் பொழுது, மிகப்பெரிய அளவில் அன்பு அலைபாய்ந்து நம்மை அடக்கி ஆட்கொள்கிறது. மற்றும் அந்த சமயத்திற்கு அர்ப்பிக்கும் தன்மையானது சுலபமானதாகி விடுகிறது. ஆனால் அதன்பிறகு உடனடியாக, 'மணல்' தன்மை விஞ்சி மேம்பட்டு, வலிமையடைந்தால் முழுமையாக அர்ப்பித்துக் கொள்ளும் தன்மையானது நடக்க இயலாததாகி விடுகிறது. அந்தச் சமயத்தில் நாம் கவலை கொள்ளாமல் அமைதியாக இருக்க முயற்சி செய்ய வேண்டும்.

நம்முடைய தன்முனைப்புடன் கூடிய செயலுடன் தெய்வ இச்சைக்கு எந்த அளவு நம்மால் சரணடைய இய லுமோ, அந்த அளவிற்குச் சரணடைய முயற்சிக்க வேண்டும். நம் ஒவ்வொருவரிடமும் இரண்டு, சில நேரங்களில் மூன்று தன்மைகள் நிறைந்து உள்ளன. மற்றும் இவை முடிவற்ற முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. நம் ஒரு தன்மை மற்றொரு தன்மைக்கு எதிராக செயல்பட்டு, குழப்பத்தை மேலும் மோசமானதாக ஆக்குகிறது.

நாம் நம்மை முற்றிலும் நிலைகுலைந்து போவதற்கு அனுமதிப்பதற்குப் பதிலாக, தியானம் ஜபம் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும். நாம் நம்முடைய கடமைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபட்டிருக்கும்பொழுதும், மற்றும் நம் எல்லா உழைப்பின் பயன்களைக் கடவுளுக்கு அர்ப்பிக்கும் பொழுதும் கடவுளை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

நம்மை நாம் அர்ப்பிக்கும் நிலையானது மூன்று நிலை களைக் கடந்து வருகிறது.

1. அது ஆன்மீகப் பயிற்சியாக இருப்பினும், அல்லது கடமைகளைச் செய்வதாக இருப்பினும், நாம் முதலில் அவற்றைத் தன்முனைப்புடன் செய்கிறோம்.

2. அதன்பிறகு நம்முடைய செயல்களின் பயன்களைக் கடவுளுக்கு அர்ப்பிப்பதற்குக் கற்றுக்கொள்கிறோம்.

3. இறுதி நிலையில் நாம் எல்லாவற்றையும் கடவுளை மகிழ்விப்பதற்காகச் செய்கிறோம். நம்முடைய மனம் தூய்மையடையும் பொழுது நாம் கடவுளின் இருப்பை உணர்கிறோம். மற்றும் அப்பொழுதுதான் நாம் கடவுள் இயக்குபவரைப் போன்றவர், நாம் அனைவரும் இயந்திரங் களைப் போன்றவர்கள் என்று உணர்கிறோம்.

18

யோகத்தின் வழி —வேதாந்தக் கருத்துக் கூட்டிணைப்பு

நான் தொடங்குவதற்கு முன்பு, நம்முடைய ஆய்வுப் பொருளுடன் தொடர்புடைய, ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகளிலிருந்து சில பகுதிகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குருதேவர்: 'மண் உருவத்தைப் பூஜை செய்வது பற்றி பேசினாய். பூஜை, மண் உருவத்திற்கே ஆனாலும் அதில் பயன் இருக்கிறது. பலவிதமான பூஜை முறைகளை இறைவனே ஏற்படுத்தியுள்ளார். இந்த உலகம் யாருடையதோ, அந்த ஆண்டவனே இவைகளை எல்லா மக்களின் தகுதிக்கு ஏற்ப அமைத்திருக்கிறார்.'

ம-: (பணிவுடன்) 'புரிகிறது சுவாமி. சுவாமி, இறைவனிடம் மனத்தைச் செலுத்துவது எப்படி?'

குருதேவர்: 'இறைவனின் திருநாமத்தை எப்பொழுதும் ஜபம் செய். அவரது திருப்புகழை இடைவிடாமல் பாடு. அத்துடன் சத்சங்கம் வேண்டும். அவ்வப்பொழுது பக்தர்களையோ, சாதுக்களையோ நாடிச் செல்ல வேண்டும். குடும்ப விவகாரங்களிலும், உலகியல் விஷயங்களிலும் இரவு பகலாக ஆழ்ந்து கிடந்தால் மனம் இறைவனிடம் செல்லாது. எனவே, அவ்வப்பொழுது தனிமையில் சென்று இறைவனை நினைப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். ஆரம்பத்தில் தனிமை வாழ்க்கையைப் பழகாவிட்டால் பிறகு மனத்தை இறைவனிடம் நிறுத்துவது மிகவும் கடினம் ஆகும். இளஞ்செடியாக இருக்கும் பொழுது சுற்றி வேலி போட வேண்டும். இல்லாவிட்டால் ஆடுமாடுகள் மேய்ந்துவிடும்.'

'மனத்திலோ, மூலையிலோ, காட்டிலோ தியானம் செய்ய வேண்டும். இறைவனே உண்மை. அதாவது நிலையானவர், மற்றவை அனைத்தும் உண்மை அற்றவை அதாவது நிலையற்றவை என்று தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். இவ்வாறு சிந்தித்துச் சிந்தித்து நிலையற்ற பொருட்களை மனத்திலிருந்து அகற்றிவிடு'.

ம-: (பணிவுடன்) 'சுவாமி, இல்லறத்தில் எப்படி வாழ வேண்டும்?'

குருதேவர்: 'எல்லாக் கடமைகளையும் செய். ஆனால் மனத்தை இறைவனிடம் வை. மனைவி, மக்கள், தாய், தந்தை எல்லோருடனும் சேர்ந்து வாழ். அவர்களுக்குச் சேவை செய்வாய். அவர்களிடம், நெருங்கியவர்கள் என்றே பழகுவாய். அதே வேளையில் அவர்கள் உன்னுடையவர்கள் அல்ல என்பதை உள்ளத்தில் தெரிந்து வைத்துக்கொள்.'

ம-: 'சுவாமி, இறைவனைக் காண இயலுமா?'

குருதேவர்: 'முடியும், நிச்சயமாக முடியும். அதற்கு அவ்வப்பொழுது தனிமையில் வாழ வேண்டும். பகவானின் திருநாமத்தையும், மகிமைகளையும் பாட வேண்டும். பகுத்தறிந்து உணர வேண்டும். இந்த வழிகளை எல்லாம் பின்பற்ற வேண்டும்.'[1]

மேற்கண்ட பகுதியில் ஸ்ரீராமகிருஷ்ணர் யோகம் மற்றும் வேதாந்தக் கூட்டிணைப்பு, பக்தி மற்றும் ஞானத்தின் கூட்டிணைப்பு என்று கூட்டிணைப்பு வழியின் இன்றியமையாமையை அளித்து உள்ளார். நவீன காலத்திற்கு இந்தவழிதான் சிறந்த பொருத்தமுடைய வழியாக உள்ளது. வழிபாடு செய்தல், பிரார்த்தனை, தியானம், பகுத்து ஆராய்ந்து அறிதல், தொண்டு போன்ற அனைத்திற்கும் இந்த வழியில் இடம் உள்ளது. ஞான யோகம் என்று கூறப்படும் தன்னைத்தானே பகுத்து ஆராய்ந்து அறியும் முறையை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரால்தான் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.9-12.

இயலும். மற்ற அனைவருக்கும் கூட்டிணைப்பு முறைதான் மிகவும் சுலபமானதாக இருக்கும். இந்த ஒருங்கிணைந்த வழியைத்தான் நாங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த நேரடிச் சீடர்களின் திருவடிகளின் அருகிலமர்ந்து கற்றுக் கொண்டோம்.

பூர்வாங்க விதிமுறைப் பயிற்சியின் அவசியம்

பெரியவர்கள் முதலில் நமக்கு ஒழுக்கநெறி முறையுடன் கூடிய வாழ்க்கையின் தலையாய முக்கியத்துவத்தை அறிவுறுத்தியுள்ளனர். மற்றும் அது ஆன்மீக நெறிமுறையுடன் கைகோத்துக் கொண்டு செல்ல வேண்டும். உலக நடைமுறை வாழ்வில் இருப்பது போன்றே ஆன்மீக வாழ்விலும் திட்ட மிட்டுச் செயல்படுத்தும் முறை இருக்க வேண்டும். நாம் நம்மைத் தயார் செய்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதனால் நாம் ஆன்மீக வாழ்வைப் பின்பற்று வதற்குத் தக்க சரியான மனநிலையுடன் இருப்போம். ஸ்ரீராம கிருஷ்ணருக்கு துர்காசரண் நாக் என்னும் புனிதமகானான ஒரு சிறந்த சீடர் இருந்தார். நாக்மகாசயர் என்று அவர் அழைக்கப் பட்டார். அவருடைய தந்தை அவர் மீது மிகுந்த பற்றுதல் வைத்திருந்தார். ஆனால் அவருக்கு அதிகமாகப் பூஜை செய் யும் பழக்கம் இருந்தது. 'உங்கள் தந்தை ஒரு சிறந்த பக்தர்' என்று அவரிடம் கூறிய பொழுது நாக்மகாசயர், 'அவரால் எதை அடைய இயலும்? அவர் என் மீது மிகவும் பற்றுதலை வைத் திருக்கிறார். நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள படகு அசை யாது' என்று கூறினார். இந்தக் கூற்றிற்குப் பின்னால் ஒரு கதை உள்ளது. ஒரு நிலவொளி நிறைந்த இரவில், சில குடிகாரர் களுக்குப் படகுச் சவாரி செய்ய வேண்டும் என்று எண்ணம் எழுந்தது. அவர்கள் ஆற்றில் இறங்குதுறைக்குச் சென்று, ஒரு படகை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, துடுப்பின் அருகில் அமர்ந்து கொண்டு செலுத்தத் தொடங்கினர். அவர்கள் இரவு முழுவதும் படகைச் செலுத்திக் கொண்டிருந்தனர். அதி காலை நேரத்தில் குடித்ததனால் ஏற்பட்டிருந்த போதை அகன்றவுடன், அவர்கள் ஒரு அங்குலம் கூட நகராமல்

இருந்ததை அறிந்து வியப்படைந்தனர். 'என்ன ஆயிற்று? என்ன ஆயிற்று?' என்று அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர். அவர்கள் நங்கூரத்தை மேலே இழுக்க மறந்துவிட்டனர்.

மனிதர்கள், 'நாங்கள் எங்கள் ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லை' என்று என்னிடம் தொடர்ந்து முறையிடுவதைக் கேட்டு இருக்கிறேன். அதற்கான பதில் இதுதான், 'நீங்கள் ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபட்டு இருக்கும் பொழுது ஒரு சிறு அளவிற்காவது, உலகியல் தொடர்பான விஷயங்களிலிருந்து உங்கள் மனத்தை விடுவித்துக் கொண்டு, உங்கள் தூய்மையான மனத்தைக் கடவுளுக்கு அளிக்க உங்களால் இயலுகிறதா?' அதுதான் கவனிக்கத்தக்கதாகும். எல்லா வழிகளிலுமே நமக்குப் பயிற்சி தேவை. உங்களில் சிலர், சுவாமி விவேகானந்தரின் நூல்களான ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் மற்றும் ராஜயோகம் போன்ற நூல்களைப் படித்திருக்கலாம். ஒருவர் எந்த வழியைப் பின்பற்றினாலும் அவருக்கு விதிமுறைப் பயிற்சியும், மனத்திற்குச் சரியான முறையில் பயிற்சியும் மற்றும் சரியான மனநிலையை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியமானதாகும். ஒருவருடைய மனத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தால், சரியான மனநிலை ஏற்படுத்தப் பட்டிருந்தால் ஒருவர் ஒருவருடைய ஆன்மீகப் பயிற்சியைப் பெரிய வெற்றியுடன் தொடர்ந்து செயல்படுத்தி வரலாம். உலக நடைமுறை விஷயங்களில் நாம் ஒழுங்குமுறையுடன் இருந்து கொண்டு ஆன்மீக விஷயங்களில் குழந்தைகளைப் போல ஒழுங்குமுறை அற்றும், திடீரென்று உணர்ச்சிவசப்படுபவர்களாகவும் இருப்பதுதான் நம்முடைய சிக்கலாகும். முதலில் பக்குவத்துடன் கூடிய அகத்தனித்தன்மையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நம்மில் பலரும் தனிமனிதர்களாக இருக்கிறோம். ஆனால் தனித்தன்மையற்றவர்களாக விளங்குகிறோம். நாம் தனியொருவராக இருக்கிறோம். ஆனால் சிறப்புத்தன்மையற்றவர்களாக இருக்கிறோம். ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமும்,

கடமைகளைச் சரியாக ஆற்றுவதன்மூலமும், ஒழுங்கான முறையில் வழிபடுவதன்மூலமும் ஆன்மீக மயமாக்கப்பட்ட ஒரு தனித்தன்மை உருவாக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் நம்முடைய ஆன்மீகப் பயிற்சி பயனுள்ளதாக இருக்கும். பிறகு நம்முடைய ஜபமும், தியானமும் மிகச் சிறந்த அருள்வளத்தின் ஆதாரமாக மெய்ப்பிக்கப்படும்.

எல்லா வழிகளிலும், எல்லா வகையான யோகங் களிலும், கட்டுப்பாட்டுடன் கூடிய விதிமுறையானது அவசியமானது என்று நான் மீண்டும் கூறுகிறேன். நான் கர்மயோகத்தைப் பின்பற்றினால் என்னுடைய மனம் முற்றி லும் அமைதியாக இருக்க வேண்டும். உலகப் பொருட்கள் மற்றும் கர்மத்தின் பயன்களில் பற்றற்றவனாக இருப்பதற்கு நான் முயற்சி செய்ய வேண்டும்.நான் பக்தி யோகத்தைப் பின்பற்றினால், பரம்பொருளுக்கு என்னை முழுமையாக அர்ப்பித்துக் கொள்ளும் மனப்பான்மை எனக்கு இருக்க வேண்டும். மற்றும் கடவுளைக் காண வேண்டும் என்னும் ஏக்கம் பெருமளவில் இருக்க வேண்டும். உலகத்திலுள்ள வேறு எதுவாலும் தணிக்க இயலாத ஆன்மீக வேட்கை இருக்க வேண்டும். பிரார்த்தனையின் மூலமும், ஜபத்தின் மூலமும், தியானத்தின் மூலமும் மற்றும் இறுதியாக கடவுளின் தொடர்பாலும் ஆன்மீகத்தில் நாட்டமுடைய சாதகன் இந்த ஆன்மீக வேட்கையைத் தணித்துக் கொண்டு, ஒப்புயர்வற்ற அமைதியையும், பேரின்பத்தையும் கடவுளை உணர்வதில் அடைகிறான். பலரும் ஞான யோகத்தைப் பின்பற்ற விரும்புகின்றனர். ஆனால் மனமானது நன்கு பழக்கப்படுத்தப்பட வேண்டும். அதனால், 'நான் உடல் அல்ல, நான் மனம் அல்ல, நான் அகங்காரம் அல்ல அல்லது புலன்கள் அல்ல. நான் ஆன்மா' என்று உச்ச அளவில் தன்னைப் பகுத்து ஆராய்ந்து அழியும் வழியைப் பின்பற்ற இயலும். இதற்கு ஞானயோகத்தை அறிவுறுத்தும் ஆச்சாரி யர்கள், சில பூர்வாங்க தகுதிகளை வலியுறுத்துகின்றனர். சாதகனுக்கு இந்த வாழ்விலும் இனிவரவுள்ள வாழ்வுகளிலும் இன்பங்களை அனுபவிப்பதில் முற்றிலும் பற்றற்ற தன்மை

இருக்க வேண்டும். மற்றும் எது நிலைத்த தன்மையுடையது, எது நிலைத்த தன்மை அற்றது என்று பாகுபடுத்திக் கண்டறியும் திறமை இருக்க வேண்டும். மேலும் பெரிய அளவில் தற்கட்டுப்பாடும் இருக்க வேண்டும். பரம்பொருளிடம் சிரத்தையும், நம்பிக்கையும் இருக்க வேண்டும் பொறுமை இருக்க வேண்டும். ஒருமுனைப்படுத்துவதற்குப் பயிற்சி பெறுதல் வேண்டும். மற்றும் இறுதியாக முக்தி அடைய வேண்டும் என்னும் தீவிரமான ஏக்கம் இருக்க வேண்டும்.

பல மனிதர்கள், 'ஓ, என்னால் ஒருமுகப்படுத்தும் பயிற்சியில் ஈடுபட இயலவில்லை' என்று கூறுவார்கள். அத்தகைய மனிதர்களை நன்கு அறிந்தவனாக, அவர்களின் மனங்கள் போதுமான அளவிற்குத் தூய்மை அடையவில்லை என்று நான் உணர்ந்து அவர்களுக்கு 'உங்களால் ஒருமுகப் படுத்துவதற்கு இயலவில்லை என்பது நல்லதாகும்' என்று கூறுவேன். தூய்மையற்ற மனமானது ஒருமுகப்படுத்தப் பட்டால் அது வெடிகுண்டைப்போல ஆகிவிடும். நாம் பசியுடன் இருக்கும் பொழுதும், வெறுப்பும், பொறாமையும் மிகுந்தவர்களாக இருக்கும் பொழுதும் ஒருமுகப்படுத்தப் பட்டவர்களாக இல்லையா? அத்தகைய ஒருமுகப்படுத்தப் பட்ட நிலை நல்லது அல்ல. உண்மையாக அது ஆபத்தானது ஆகும். எனவே ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பூர்வாங்கமான ஆன்மீக நெறிமுறையானது அவசியமாகும். பதஞ்சலி முனிவருக்கு ஏற்ப யோகத்தின் வழியானது எட்டு நிலைகளை அல்லது நெறிமுறைகளை உள்ளடக்கியது ஆகும். நீ இந்த நெறிமுறைகள் அனைத்தையும் முறையுடன், ஒழுங்குடன் நடைமுறைப்படுத்த வேண்டும். திடீரென்று ஒருவரால் ஆன்மீக வாழ்வில் நிலைபெற்று இருக்க இயலாது.

கடவுளுக்காக ஏங்குவாய்

ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகளில், குருதேவர் மீண்டும் மீண்டும் 'ஆழ்ந்த மன ஏக்கத்துடன் அழுதால் அவரைக் காண இயலும்' என்று கூறுவார்.[1]

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.13.*

ஆன்மீக ஏக்கம் என்பது பசியைப் போன்றதாகும். மனிதர்கள் என்னை, 'நான் எதற்காகத் தியானம் செய்ய வேண்டும்?' என்று கேட்கும் பொழுது, பதிலிற்கு நான் 'நீ எதற்காகச் செய்ய வேண்டும்? செய்யாமல் இரு' என்று கூறுவேன். உன்னிடம் அந்த ஏக்கம் இருக்குமாயின் நீ அந்த முட்டாள்தனமான கேள்வியைக் கேட்க மாட்டாய். உன்னிடம் உண்மையான ஆன்மீகப் பசி ஏற்படும் பொழுது உன்னால் கடவுளை நினைக்காமல் இருக்க இயலாது. உன்னால் பிரார்த்தனை செய்யாமல் இருக்க இயலாது. உன்னால் அவன் திருநாமத்தைக் கூறிக் கொண்டு அவன் புகழை நினைக்காமல் இருக்க இயலாது. இந்த பசியானது எழுப்பப்பட வேண்டும், இந்தப் பசியானது நிலைநிறுத்தப்பட வேண்டும். நீ உன் ஆன்மீகப் பயிற்சிகளை முறையாக ஒழுங்காகச் செய்தால் தான் அத்தகைய நிலை ஏற்படும். நீ உன் உடலிற்கு இயற் பொருள் உணவையே ஊட்டுகிறாய். வாசிப்பதன் மூலமும் கருத்துக்களினாலும் நீ உன் மனத்தை உண்பிக்கிறாய். ஆனால் நீ வளமைக்கு நடுவில் உன் ஆன்மாவைப் பட்டினி போடுகிறாய். உண்மையாகப் பட்டினி போடுகிறாய். பட்டினியாக இருப்பதை நீ உணரவில்லையா? ஆன்மாவானது பரம் பொருளுக்காக ஏங்குகிறது. அது வரையற்ற இருப்பையும் தெய்வீக அன்பையும், பேரின்பத்தையும் உணர்வதற்கு ஏங்குகிறது. மற்றும் நாம் இந்த ஏக்கத்தை நிறைவு செய்வது இல்லை. ஆனால் நாம் அதைச் செய்வதற்கு முயற்சி செய்யும் பொழுது நமக்கு ஒரு புதிய வாழ்க்கை தொடங்குகிறது.

குருதேவர், 'வழி? சாது சங்கமும் பிரார்த்தனையும்தான் வழி. அவசியமானது' என்றும் கூறியுள்ளார்.[1] அதாவது புனித மானவர்களின் தொடர்பு அவசியமானதாகும். ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்றிக் கொண்டு இருப்பவர்களின் தொடர்பும் ஆன்மீக வாழ்வில் நாம் உறுதியுடன் இருப்பதற்கு உதவுபவர்களின் தொடர்பும் கடவுளின் மேன்மையைச் சிறிதளவு பிரதிபலித்து அவர்களுடைய தனிப்பட்ட

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.40.*

உதாரணத்தால் நமக்கு அறிவுபுகட்டுபவர்களின் தொடர்பும் அவசியமானதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களுடைய தொடர்பால் நாம் கடவுளுக்காக ஏங்குவதை வளர்த்துக் கொள்கிறோம்.

இங்கு நீ மிகப் பெரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும். தூய்மையற்ற மனமானது, உலகியல் சார்ந்த பொருட்களின் பின்னால் ஓடிக் கொண்டே இருக்கும். தூய்மையான மனமானது, இயல்பாகவே கடவுளின் சிறப்பைப் பிரதிபலிக்கிறது. அவன் அருகில் செல்கிறது. அவனைத் தியானிக்கிறது. அவனுடைய தெய்வீக இருப்பையும் அன்பையும், பேரின்பத்தையும் உணர்வதற்கு முயற்சி செய்கிறது. மனத்தை எப்படித் தூய்மைப்படுத்த வேண்டும்? முதலில் உன்னால் முடிந்த அளவிற்கு நீ கெட்ட எண்ணங்களையும், கெட்ட உணர்வுகளையும், கெட்ட செயல்களையும் தவிர்க்க வேண்டும். நல்ல எண்ணங்களையும், நல்ல உணர்வுகளையும் மேற்கொள்ள வேண்டும். மற்றும் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். அதுதான் முதல் அடியாகும். நாம் அனைவரும் ஆன்மாக்கள் என்பதை எப்பொழுதும் மனத்தில் கொள்ள வேண்டும். இந்த ஆன்மாவானது இயலுலக அண்ட வாழ்க்கை என்னும் நாடகத்தில் ஒரு பாத்திரத்தை ஏற்று நடிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் மனிதத் தன்மைகளைப் பெற்று வந்துள்ளது. நமக்கு ஒதுக்கப் பட்டிருப்பது எந்த பாத்திரமாயினும் அந்தப் பாத்திரத்தை நன்றாக ஏற்று நடிக்க வேண்டும். அதாவது நாம் வாழ்க்கையின் கடமைகளைச் செய்து கொண்டு, பற்றற்ற தன்மையுடனும் செயலாற்றிக் கொண்டு, கடவுளுக்குத் தொண்டாற்றும் முறையில் செயலாற்ற வேண்டும். ஆனால் மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்கு வெறும் ஒழுக்க நெறிமுறையும், கடமைகள் நிறைவேற்றுவதும் மட்டும் போதாது. வரையற்ற தூய்மைப்பாடின், ஞானத்தின், பக்தியின், பரிவின், அன்பின், அருளின் ஆதாரமாக உள்ள கடவுளைத் தியானிக்க வேண்டும். பிரார்த்தனை செய்ய வேண்டும்.

வளர்ச்சிப்படிகள் உள்ள வழி

நாம் சரியான வழியைப் பின்பற்ற வேண்டும். எனக்குக் காட்டில் வழிதவறி விட்டது என்றால் நான் தவறான வழியைப் பின்பற்றினால் என்ன ஆகும்? நான் மேலும் மேலும் காட்டு வழியிலேயே சென்று கொண்டு இருப்பேன். நான் சரியான வழியைப் பின்பற்றினால் அதிலிருந்து வெளியே வருவேன். எனக்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. மோட்டாரில் சென்று கொண்டிருந்த ஒருவன் தலைதெறிக்கும் வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தான். அவன் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல விரும்பினான். அவன் சிறிதளவு பூகோளம் படித்திருந்த ஒரு பள்ளிச் சிறுவனை, 'மகனே, நான் இந்த வழியாகச் சென்றால், என்னால் அந்த இடத்தை அடைய இயலுமா? என்று கேட்டான். 'ஆமாம், ஐயா, உங்களால் அடைய இயலும்' என்று அந்தப் பையன் கூறினான். 'இந்த வழியில் அது எத்தனை தூரத்தில் உள்ளது' என்று மோட்டாரை ஓட்டிக் கொண்டிருந்தவன் கேட்டான். 'ஐயா, நீங்கள் 25,000 மைல்களைக் கடக்க வேண்டும்' என்று கூறினான், 'நான் மற்றொரு வழியாகச் சென்றால்?' 'இரண்டு மைல்கள்தான்' என்று பதில் வந்தது. உன்னால் கருத்தைப் புரிந்துகொள்ள முடிகிறதா? நீ முதலில் கூறிய வழியைப் பின்பற்றினால், அந்த இடத்தை அடைவதற்கு உலகத்தையே சுற்ற வேண்டும். மற்றொரு வழியாகச் சென்றால் இரண்டு மைல்கள் மட்டும் கடக்க வேண்டும் அதைப் போன்றே ஆன்மீக வாழ்க்கையிலும் சரியான மனநிலை, சரியான போக்குகளை வளர்த்துக் கொண்டு, சரியான திசைகளையும் பின்பற்றினால் உன் இலட்சியத்தை விரைவாக அடைவாய். வேகமாக வளர்ச்சி அடைவாய். உன்னிடத்தில் ஒரு மிகப் பெரிய மாறுதல் ஏற்படும். ஆனால் உன்னுடைய அடிகளை மிக வேகமாக எடுத்து வைப்பதற்கு அதிகமாக முயற்சிக்கக் கூடாது. உறுதியுடன் சரியான வழியில் மெதுவாகச் செல்ல வேண்டும். படிப்படியாக நீ மிகவும் உயர்ந்த மெய்ப் பொருளை அடைவாய்.

நம்முடைய ஆன்மீகப் பயிற்சியில் நாம் ஒவ்வொரு அடியாக முன்னேற வேண்டும். முதலில் பிரதிமையைப் பூஜை செய்வது வருகிறது. அதாவது கடவுளை ஒரு வடிவம், ஒரு சின்னம், ஒரு படம் அல்லது ஒரு விக்கிரகத்தின் உதவி யுடன் வழிபடுவது ஆகும். அடுத்ததாகக் கடவுளின் திரு நாமத்தைப் பாராயணம் செய்து, அவரைப் பற்றியே நினைத்துக் கொண்டு அவர் சிறப்பியல்புகளைப் பாடுவது வருகிறது. அதன்பிறகு மனம் சிறிதளவு தன்னை மறக்கிறது. மற்றும் தியானமானது காலக்கிரமத்தில் மிகவுயர்ந்த விழிப் புணர்வு நிலைக்கு அழைத்துச் செல்கிறது. ஸ்ரீராமகிருஷ்ண ரின் நீதிக் கதை ஒன்று உள்ளது.

'ஒரு விறகு வெட்டி, விறகு வெட்டிக் கொண்டு வர காட் டிற்குச் சென்றான். பிரம்மச்சாரி ஒருவர் அவனிடம் ''முன் னேறிச் செல்'' என்று கூறினார். முன்னேறிச் சென்ற அவ னுக்குச் சந்தன மரம் கிடைத்தது. ''முன்னேறிச் செல்லு மாறுதானே கூறினார். சந்தன மரத்துடன் நின்றுவிடச் சொல்லவில்லையே'' என்று நினைத்த விறகு வெட்டி மேலும் முன்னேறிச் சென்று பார்த்தான். வெள்ளிச் சுரங்கத்தைக் கண்டான். சில நாட்கள் கழித்து மேலும் முன்னால் சென்று பார்த்தான் தங்கச் சுரங்கத்தைக் கண்டான். அதற்குப் பிறகு வைரம், மாணிக்கம் எல்லாம் கிடைத்தன.'[1] அதைப் போன்று நாம் மனமார்ந்து ஆன்மீக வழியைப் பின்பற்றி முதலிலிருந்தே தொடங்கினால், நம்மால் உண்மையை அடைய இயலும். ஆனால் நாம் இறுதி யிலிருந்து தொடங்கினால், நம்மால் எதையும் அடைய இயலாது. சிலமனிதர்கள் அத்வைத சாதனையை மேற் கொள்ள விரும்புகின்றனர். அவர்களுக்கு நான், 'எனக்கு அத்வைத் சாதனையைக் குறித்து எதுவும் தெரியாது. வேறு குருவிடம் செல்லுங்கள். ஆனால் முதலிலிருந்து நீங்கள் தொடங்க விரும்பினால் என்னால் அதைப்பற்றி ஓரளவிற்குக் கூற இயலும்' என்று கூறுவேன்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1. 69-70.*

முதலில் கடவுளின் வடிவத் தன்மையுடன் தொடங்கப் பட வேண்டும். எனக்கு உடலைக் குறித்த உணர்வு உள்ளது (தேஹாத்மபுத்தி). நான் உடல் உருக் கொண்டவன். நான் பல மனிதர்களில் ஒருவன் ஆவேன். என்னால் எப்படி வரம்பற்ற மெய்ப்பொருளைக் குறித்துச் சிந்திக்க இயலும்? என்னால் இயலாது. எனவே நான் அந்த உடல் உணர்வுடனேயே தொடங்கி, மேற்கொண்டு என்ன இருக்கிறது என்று காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். ஹனுமார் ஸ்ரீராமரால் 'நீ என்னைப் பற்றி எப்படி நினைக்கிறாய்?' என்று கேட்கப்பட்டார். அதற்கு ஹனுமார்,

'ஓ கடவுளே! நான் என்னை என் உடலுடன் அடை யாளம் கண்டு கொள்ளும் பொழுது, நான் உங்களுடைய தொண்டன் ஆவேன். நான் என்னை ஒரு தனிப்பட்ட ஆன்மா வாகக் கருதும் பொழுது நான் உங்களில் ஒரு பகுதியாவேன். மற்றும் நான் என்னை ஆன்மாவாகக் காணும் பொழுது நான் உங்களுடன் இரண்டறக் கலந்து விடுவேன். இது நான் உள்ளத்தால் உணர்ந்தது ஆகும்.'[1] எனவே நாம் முதலி லிருந்தே தொடங்க வேண்டும்.

ஒரு குரு தேவைதானா?

பல மனிதர்கள் இந்தக் கேள்வியைக் கேட்கின்றனர். அவர்கள் அவர்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கோ அல்லது கல்லூரிகளுக்கோ அல்லது இசைப் பள்ளிக்கோ அனுப்பும்பொழுது இந்தக் கேள்வியைக் கேட்பது இல்லை. அவர்கள் அவர்களுடைய ஆன்மீக வாழ்க்கையைப் பற்றி நினைக்கத் தொடங்கும் பொழுதுதான் குருவின் தேவையைக்

1. தேஹ புத்த்யா து தாஸோ஽ஸ்மி ஜீவ புத்த்யா த்வதம்சக: ।
ஆத்மபுத்த்யா த்வமேவாஹமிதி மே நிச்சிதா மதி: ॥

பலராலும் நன்கு அறியப்பட்ட இந்தப் பாடலின் மூலம் எது என்று அறுதியாகத் தெரியவில்லை. சுவாமி யதீஷ்வரானந்தரின் 'Universal Prayers' (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம் 1955) என்னும் நூலைப் பார்க்கவும் (பக்கம் 238,239). ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் என்னும் நூலிலும் காணவும்.

குறித்த சந்தேகம் ஏற்படுகிறது. நான் கூறியிருப்பதைப்போல, ஆன்மீக வாழ்க்கை என்று எடுத்துக் கொள்ளும் பொழுது பலரும் வெறும் குழந்தைகளாகவே உள்ளனர். உடல் வளர்ச்சியும், வயதும் மட்டுமே போதுமானது இல்லை. தெய்வீக உணர்வுடனேயே தோன்றியுள்ள, குழந்தைப் பருவத்திலிருந்தே கடவுளின் இருப்பை உணர்ந்துள்ள சில தனித்தன்மை மிகுந்த மனிதர்கள் இருந்தால் அவர்களுக்கு ஆன்மீக குருவின் அவசியம் இல்லை. ஆனால் மற்ற அனை வருக்கும் ஒரு ஆன்மீக குரு வேண்டும். ஒருமுறை ஒரு பக்தர், என்னுடைய குருவான சுவாமி பிரம்மானந்தரை 'மஹராஜ் ஒரு குரு தேவைதானா?' என்று கேட்டார். அதற்கு சுவாமிஜி சிரித்துக் கொண்டு 'அன்பிற்கு உரியவனே, ஒருவன் திருடு வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் கூட அவனுக்கு ஒரு குரு தேவைப்படுகிறார். இந்த மிகவும் பெருமை, சிறப்பு உடைய பிரம்ம வித்தைக்கு, கடவுளைக் குறித்த ஞானத்திற்கு, அதைப் பெறுவதற்கு ஒரு குரு வேண்டாமா' என்று கூறி னார்.[1] சட்டைப் பையில் உள்ளவற்றைத் திருடுபவர்களுக்கும் குருமார்கள் உள்ளனர். ஏனெனில் அவர்கள் பெரிய அளவில் நெறிமுறைகளையும், பயிற்சியையும் கடந்து வர வேண்டும். மற்றும் இதற்குக் கைதேர்ந்த திருடனின் வழிகாட்டுதல் தேவையானதாகும்.

இத்துடன் தொடர்பு படுத்தக்கூடிய வகையில், நான் உனக்கு ஒரு நொடிக்கதையைக் கூற விரும்புகிறேன். கீரீஷ் சந்திர கோஷ் என்பவர் வங்காளத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளரும், நடிகரும் ஆவார். அவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிறந்த பக்தருமாவார். அவருடைய முதுமைப் பருவத்தில் ஹோமியோபதி மருத்துவத்தை தொழிலாகக் கொண்டு இருந் தார். குருதேவரின் திருநாமத்தை மனத்தில் கூறியபடியே அவர் மருந்தைக் கொடுப்பார். அவருடைய ஆற்றல் வாய்ந்த உள்ளுணர்வால், அவர் கையாண்ட சிகிச்சை முறையில் அவ ரால் வெற்றியைக் காண முடிந்தது. ஒருநாள் ஒரு வயதான,

1. Spiritual Talks (கல்கத்தா: அத்வைத ஆசிரமம் 1968) பக்கம் 43.

பண்புடன் கூடிய தோற்றமுடைய நாகரீகமான ஒருவர் அவர் பக்கத்தில் அமர்ந்திருந்தார். அப்பொழுது அங்கு ஒரு இளைஞன் வந்து, 'ஐயா வழியில் நான் என்னுடைய கைக்கடிகாரத்தைத் தொலைத்து விட்டேன்' என்று கூறினான். அங்கு அமர்ந் திருந்த முதியவர் மிகவும் ஆர்வமுற்று, 'எப்பொழுது, எங்கு அதைத் தொலைத்தாய்?' என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன், 'ஐயா, இந்த இந்த நேரத்தில், இந்த இந்த இடத் தில் தொலைத்தேன்' என்று கூறினான். அதற்கு அந்த முதிய வர் 'உனக்கு அது திரும்பக் கிடைக்கும்' என்று கூறினார். அவரால் எப்படி அத்தகைய உறுதியை அளிக்க முடிந்தது? ஏனெனில், நவநாகரீகத் தோற்றத்துடன் இருந்த அந்த முதியவர் சட்டை பையிலுள்ளவற்றைத் திருடுபவர்களின் பல தலைவர்களின் ஒரு தலைவராக இருந்தவர் ஆவார். அவர்களுடைய பல குருமார்களில் ஒருவராக இருந்தார்.

நான் உனக்கு மற்றொரு உதாரணத்தைக் கூறுகிறேன். உனக்கு வானத்திலுள்ள கோளங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமா? நீ ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு புரிந்து கொள்ள முயற்சி செய்து பார். உனக்கு ஒன்றும் பிடிபடுவதில்லை. ஆனால் வானநூல் வல்லுனர் திகைப்பு அடையச் செய்யும் எதையோ கூறுவார். ஒவ்வொரு நாளும் நீ சூரியன் உதயமாவதையும், மறைவதையும் காண்கிறாய். ஒரு மனிதன் வந்து சூரியன் ஒரு பொழுதும் உதிப்பதில்லை. ஒரு பொழுதும் மறைவதுமில்லை. அது பூமியின் சுழற்சி யால்தான் நடைபெறுகிறது என்று கூறுகிறான். நாம் நம்முடைய புலனுணர்வுக் காட்சிகளை மட்டுமே நம்பி னால், நம்மால் இவ்வனைத்தையும் கிரகித்துக் கொள்ள இயலாது. அவ்விதம் நம்மால் இயலவில்லை எனின், நாம் அவரிடம் செல்ல வேண்டும். அவர் மேற்பார்வை யில் படிக்க வேண்டும். பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். அதன் பிறகுதான், நான் நம் கண்களால் காண்பது பொய்த் தோற்றம் என்றும், வானநூல் வல்லுனர் கூறு வதுதான் உண்மையாகும் என்றும் நம்மை நம்ப வைக்க இயலும்.

ஒரு ஆன்மீக குருவும் வந்து திகைப்பு அடையச் செய்யும் எதைப்பற்றியோ கூறுவார். நமக்கு நம் உடலைக் குறித்த உணர்வு இருக்கிறது. நாம் அனைவரும் ஆண்கள் மற்றும் பெண்கள் என்று நினைக்கிறோம். ஆன்மீக குருவானவர் உடலிலிருந்து மட்டும் வேறுபடாமல், மனம், அகங்காரங் களிலிருந்தும் வேறுபட்ட ஆன்மாவாக நாம் இருக்கிறோம் என்று கூறுவார். ஆனால் மற்றவர்கள் நினைப்பதைப் போல நீயும், 'ஓ அவர் ஒரு ஏமாற்றுக்காரர்' என்று நினைத்தால், கடவுள் உனக்கு அருள் புரியட்டும்! நீ உன் குருவைச் சந்தேகிப்பதற்குப் பதிலாக, உன்னையே சந்தேகிக்க வேண் டும். 'நான் இந்த சதையின் திரட்சியா? நான் இந்த அழுக்கின் திரட்சியா? அல்லது உணர்வு உள்ள ஒரு ஆன்மா என்று கூறப்படும் ஒன்று என்னுள் வாழ்கிறதா?' என்று நீ நினைக்கத் தொடங்கும் பொழுது உன்னுடைய ஆன்மீக வாழ்க்கை தொடங்குகிறது. வாழ்நாள் முழுவதும் ஆன்மீகப் பாதை யைப் பின்பற்றிக் கொண்டிருந்த, ஆன்மஞானம் அடைந் துள்ள ஒரு குருவிடம் நான் செல்கிறேன். பரிவு, இரக்கம், அருள் மற்றும் பாசம் உடையவராக அவர் விளங்குகிறார். நான் அவருடைய திருவடிகளின் கீழ் அமர்ந்து, ஆன்மீக நெறி முறைகளைப் பற்றி அவரிடமிருந்து ஓரளவிற்கு அறிந்து கொண்டு என்னுடைய ஆன்மீகப் பயிற்சிகளை முறையாக, ஒழுங்காக மேற்கொள்கிறேன். என்னுடைய மனம் தூய்மை யாக, தூய்மையாக, ஆன்மீக எல்லைப் பரப்பில் ஏதோ ஒரு சிறிதளவை உணர்கிறேன். மற்றும் என்னுடைய இஷ்ட தெய்வம் என்னுள் வாழத் தொடங்குகிறது. நான் என் னுள்ளே ஒரு இருப்பை உணர்கிறேன். அது என் இருப்பில் ஊடுருவி உள்ளதையும், மற்ற எல்லோரிடமும் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதையும் நான் உணர்கிறேன்.

சாந்தோக்ய உபநிஷதத்தின் ஏழாவது அத்தியாயத்தில் நாரதர் மற்றும் சனத்குமாரர் என்னும் இரு முனிவர்களுக் கிடையில் நடைபெறும் உரையாடலை நாம் காண்கிறோம். புனிதமகான்களும், முனிவர்களும் ஆகாயத்திலிருந்து திடு மெனக் கீழே விழுபவர்கள் அல்லர். அவர்களும்

மனிதர்களாகப் பிறந்து இருப்பவர்கள்தான். புனிதமகான்கள் பரிபூரணமடைந்தவர்களாகப் பிறந்தவர்கள் அல்லர். அவர்கள் தங்களுடைய பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் சாதனையின் மூலம் தங் களுடைய உள்ளடங்கிய ஆற்றலை விரிவுறுத்திக் கொள்ள வேண்டும். நாரதருக்கும் அவருடைய உண்மையான மாணவப் பருவம் இருந்தது. அவர் கல்வியின் எல்லாத் துறைகளையும், திருமறை நூல்களையும் விஞ்ஞானங்களையும் கற்று செயல் துறை நூலறிவையும் பெற்றிருந்தார். இந்த எல்லாப் படிப் புத்துறையிலும் ஆழ்ந்த அறிவைப் பெற்றிருந்தாலும் அவர் அவரிடம் ஏதோ குறைபாடு இருப்பதை உணர்ந்தார். அவர், அவருக்கு அவரைப்பற்றி அவருடைய உண்மையான இயல்பைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்பதை உணர்ந் தார். நாம் அனைவரும் வெளியுலகத்தைப் பற்றிப் படிப் பதிலும் அறிந்து கொள்வதிலும் முற்றிலும் நிறைவடைந்து விடுகிறோம். நம்மைப்பற்றி சிறிதளவு அறிந்து கொள்வதை யும் நாம் புறக்கணிக்கிறோம். அது விஞ்ஞானக் கோட்பாடு களுக்கு ஒவ்வாதது ஆகும். பிரிட்டனைச் சேர்ந்த வான்கோள வியல் அறிஞர் (astro-physicist) எடிங்டன் (Eddington) 'எது உண்மைக்கு வேண்டப்பட்டதோ, அதற்கு உண்மையில் ஒரு இடம் இருக்க வேண்டும்' என்று கூறியுள்ளார். கல்வித் துறைப் பொருளில் ஏதோ ஓரளவிற்கு அறிவு பெறாமல் இருந் தால் கல்வியானது முழுமையடையாது. இவ்வுலகமானது, அரைகுறையாகக் கல்வி கற்றவர்களால் நிறைந்துள்ளது. அவர்களுக்கு அவர்களைத் தெரியாது. மிக உயர்ந்த உண்மை யைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் உலகின் ரட்சகர் களாகவும் குருமார்களாகவும் தோற்றமடையச் செய்து கொள் கிறார்கள். அத்தகைய மனிதர்கள், உலகை நிலைகுலைச் செய் யும் எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். இப் பொழுது நாம் மீண்டும், உபநிஷதம் குறிப்பிடும் நிகழ்ச்சிக்கு வருவோம். சனத்குமாரர் நாரதரை, அவர் ஏற்கனவே அறிந் திருப்பவை பற்றித் தனக்குக் கூறுமாறு கேட்டார். நாரதர் அவ ருக்குத் தான் படித்த கல்வித் துறையைச் சார்ந்த பாடங்கள், இலக்கணம், திருமறை நூல்கள், சமயச் சடங்கு முறைகள்

போன்ற அனைத்தையும் உட்கொண்ட ஒரு நீண்ட பட்டியலை அளித்தார். அதன் பிறகு அவர் 'ஐயனே, நான் மந்திரங்களை மட்டும் அறிந்தவனேயன்றி, ஆத்மாவை அறிந்தவனல்லன். ஆத்மாவை அறிந்தவனே சோகத்தைக் கடந்தவன் என்று தேவரீரைப் போன்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் ஆன்மாவை உணரவில்லை. நான் சோகத்திற்கு உட்பட்டு இருக்கிறேன்' என்று கூறினார்.[1] சனத்குமாரர், அளவற்ற இரக்கத்துடன் அவர் கூறியதைக் கேட்டார். அவர் நாரதருக்குப் பிரம்மனைப் பற்றி அறிவுறுத்தத் தொடங்கினார். அவர் முதலில் வாக்கு பிரம்மன் என்று கூறினார். அதாவது பிரம்மனின் வெளிப்பாடுகளின் ஒரு கூறு என்பது பொருளாகும்.மனது, வாக்கினும் பெரியது சங்கல்பம் மனத்தினும் பெரிது சங்கல்பத்தை விட சித்தம் பெரியது. சித்தத்தை விடத் தியானம், விஞ்ஞானம் மற்றும் ஐம்பெரும் பூதங்கள், பிராணன் போன்றவை பெரிது ஆகும். பேரின்பமே மிகவும் உயர்ந்தது ஆகும். இவ்விதம் படிப்படியாகச் சீடன் புரிந்து கொள்வதற்கு வழிகாட்டிய சனத் குமாரர் ஒரு தனிச் சிறப்பு மிக்க செய்தியையும் கூறினார். 'எது அளவு கடந்ததோ, அதுவே பேரின்பமாகும்' வரையறைக்கு உட்பட்ட தன்மையில் பேரின்பம் இல்லை'[2]

நம் மனங்களை எப்படித் தூய்மைப்படுத்துவது?

நம் ஆன்மாவானது அளவு கடந்த மகிழ்ச்சிக்காக, அளவுகடந்த அன்பிற்காக, அளவு கடந்த பேரின்பத்திற்காக ஏங்கிக் கொண்டுள்ளது. ஆனால் வரையறைக்கு உட்பட்ட தன்மையில் நாம் அதைக் காண முயற்சி செய்கிறோம். நாம் அதில் வெற்றி பெறவில்லை எனின் செயல் குலைவு அடைகிறோம் என்பதுதான் சிக்கலானது ஆகும். குருவானவர், 'உனக்கு உண்மையான இன்பம் வேண்டுமாயின், தங்குதடையற்ற இன்பம் வேண்டுமாயின், நீ கடவுளை

1. சாந்தோக்ய உபநிஷதம், 7.1.3.
2. யோ வை பூமா தத்ஸுகம், நால்பே ஸுகமஸ்தி ।
—சாந்தோக்ய உபநிஷதம், 7.23.1

அடைய வேண்டும்' என்று கூறுகிறார். எனவே நாரதர், 'அளவு கடந்தது' என்னும் சொல்லின் பொருள் என்ன? என்று அடுத்த கேள்வியைக் கேட்டார். 'எங்கு வேறொன்றைக் காண்பதில்லையோ, வேறொன்றைக் கேட்பதில்லையோ, வேறொன்றை அறிவது இல்லையோ அது அளவு கடந்தது ஆகும். ஆத்மாவே கீழும், ஆத்மாவே மேலும், ஆத்மாவே பின்னும், ஆத்மாவே முன்னும், ஆத்மாவே வலத்தும், ஆத்மாவே இடத்தும், ஆத்மாவே இது எல்லாம். எவன் இவ்விதம் காண்கிறானோ, சிந்திக்கிறானோ, அறிகிறானோ, அவன் தன்னைத்தானே ஆள்பவன் ஆகின்றான். அதுதான் அளவு கடந்த விழிப்புணர்வு ஆகும்.[1] ஆனால் அதை அடைவது எப்படி? உடனடியாக, அளவு கடந்ததை அடைய விடாமல் எது தடுக்கிறது. இங்கு பண்டைக்காலத்தின் மிகச் சிறந்த குருவான சனத்குமாரர் ஆன்மீக நெறிமுறையின் சாரத்தை மணிச் சுருக்கமாக கொடுத்துள்ளார்.

'ஆஹாரம் தூய்மையானதாக இருந்தால் அந்தகரணம் தூய்மையாகும். அந்தகரணம் தூய்மையடைந்தால் (கடவுளின்) நினைவு நிலைபெறும். நினைவு நிலைபெற்றால் எல்லாக் கட்டுகளும் தளர்ந்து போகும். இது இதயத்தின் முடிச்சுகளை அவிழ்த்து முக்திக்கு வழிகாட்டுகிறது.[2]

நாம் அளவு கடந்த பரம்பொருளை உணரும் பொழுது நாம் பிணைப்புக்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் விடு தலையடைகிறோம். நாம் அளவு கடந்த பரம்பொருளுடன் இரண்டறக் கலந்திருக்கிறோம் என்று உணரும் பொழுது, வாழ்க்கை மற்றும் மரணத்தைக் குறித்த எல்லாச் சிக்கல் களும் தீர்க்கப்பட்டு விடுகின்றன.

நாம் இப்பொழுது ஆஹாரம் என்னும் சொல்லின் பொருளை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம். நாம்

---

1. *சாந்தோக்ய உபநிஷதம், 7.24.1., 7.25.2.*
2. *ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: ஸத்வசுத்தௌ த்ருவாஸ்ம்ருதி ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீனாம் விப்ர மோக்ஷ: ||*
   —சாந்தோக்ய உபநிஷதம், 7.26.2.

உள்ளே எதை எடுத்துக் கொள்கிறோமோ, அதுதான் ஆஹாரம் என்னும் சொல்லின் பொருளாக உள்ளது. உணவு என்பதை மட்டுமே அது குறிக்கிறதா? தூய்மையான சாத்வீக ஆஹாரமா? தூய்மையான மரக்கறி உணவா? எந்த அளவிற்கு இது உதவுகிறது? இது ஓரளவிற்கு உதவுகிறது. ஆனால் உன் மனத்தை எப்படித் தூய்மைப்படுத்துவது என்பதை நீ அறியாத வரைக்கும் பெரியதாக எதுவும் நடைபெறுவதில்லை. மரக்கறி உணவை எடுத்துக் கொள்பவர்களில் பல தீய மனிதர்கள் உள்ளனர். அவர்கள் எந்த வகையான மரக்கறி உணவை உண்பவர்கள்? கடவுள் அவர்களுக்கு அருள் புரியட்டும். ஒரு விஷமுள்ள பாம்பிற்கு நீ தூய்மையான பாலைக் கொடுத்தால் அது விஷத்தைத்தான் உற்பத்தி செய்யும். எனவே நம்முடைய வயிறுகளை தூய்மையான உணவால் நிரப்பிக் கொண்டால் மட்டும் போதாது. நம்முடைய விஷம் நிறைந்த தன்மையானது அகற்றப்பட வேண்டும். எனவே மேற்கண்ட பகுதிக்கு விளக்கவுரை எழுதும் பொழுது சங்கராச்சாரியார்,

'உள்ளே எடுத்துக் கொள்ளப்படுவது ஆஹாரமாகும். அதாவது ஒலி அனுபவம் போன்றவையாகும். அவை செயலாற்றுபவர் உணர்வதற்காக உள்ளே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. புலனுணர்வு உட்பட்ட முழு அறிவாற்றல் கூறு தூய்மையடையும் பொழுது, அதாவது புலனுணர்வு உட்பட்ட முழு அறிவாற்றல் கூறு வெறுப்பு பிணைப்பு, மாயை போன்ற கறைகளிலிருந்து விடுபடுவது ஆகும். அத்தகைய அறிவாற்றல் கூறை ஒருவர் பெறும் பொழுது அக இயல்பானது தூய்மையடைகிறது.'[1]

உங்களில் சிலர் 'மூன்று ஜப்பானியக் குரங்களைக் கண்டிருக்கக் கூடும். இவை மூன்று குரங்கு பொம்மைகள் ஆகும். ஒரு குரங்கு இரு காதுகளையும் பொத்திக் கொண்டு இருக்கிறது. மற்றொன்று இரு கண்களையும் மூன்றாவது குரங்கு வாயையும் மூடிக் கொண்டுள்ளது. நான் ஐரோப்பாவில்

---

1. சாந்தோக்ய உபநிஷதம் - ஆங்கில மொழிபெயர்ப்பு டாக்டர் கங்கா நாத் ஜா (சென்னை, V.C. சேஷாச்சாரி, 1923) பகுதி 4, பக்கம் 219.

இருந்த பொழுது சுவிட்சர்லாந்தில் ஒரு ஏரிக்கரையில் கல்லில் செதுக்கப்பட்டிருந்த உருவங்களைக் கண்டேன். அங்கும் மூன்று குரங்குகள் இருந்தன. ஆனால் ஒரு வேறுபாடு இருந்தது. ஒரு குரங்கு ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டிருந்தது. மற்றொரு குரங்கு ஒரு காதை மட்டும் பொத்திக் கொண்டிருந்தது. மூன்றாவது குரங்கு பாதி வாயை மட்டும் மூடிக் கொண்டு இருந்தது. ஒரு கணத்திற்கு நான் அதிர்ச்சி அடைந்தேன் பிறகு நொடிப்பொழுதில் அதன் பொருளைப் புரிந்து கொண்டேன், 'கெட்டதைப் பார்க்காதே, ஆனால் நல்லதைப் பார். கெட்டதைக் கேட்காதே, ஆனால் நல்லதைக் கேள். கெட்டதைக் பேசாதே, ஆனால் நல்லதைப் பேசு.' முதலில் நான் அது மூலக் கருத்து என்று நினைத்தேன். அதன் பிறகு என் மனம் புகழ்பெற்ற வேதத்தில் உள்ள பிரார்த்தனையை நாடிச் சென்றது.

'தேவர்களே! காதுகளல் நாங்கள் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும். பூஜிக்கத் தகுந்தவர்களே, கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களைக் காண வேண்டும். எங்களுக்குத் தேவர்களால் வழங்கப்பட்டுள்ள உறுதியான அங்கங்களுடன் கூடிய உடலுடன் ஆயுள் முழுவதும் உங்களைத் துதிக்க வேண்டும்.'[1]

இப்பொழுது நாம் இவ்வனைத்தையும் நடைமுறைப் படுத்த வேண்டும். சிறிது காலத்திற்கு நீ அதை மேற்கொள்ளும் பொழுது, ஓரளவிற்கு உன் மனம் தூய்மை அடைகிறது. உன்னுடைய குரல் உறுப்பைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். பயனற்றவற்றைப் பேசுவதால் நீ அதைத் தகாத முறையில் பயன்படுத்துகிறாய். அதைச் செய்யாமல் இருக்க வேண்டும். கடவுளின் திருநாமத்தை எடுத்துக் கொள்வாய். உன்னை ஈர்க்கவல்ல எந்த திருநாமத்தை வேண்டுமானாலும்

1. பத்ரம் கர்ணேபி: ச்ருணுயாம தேவா:
பத்ரம் பச்யேமாக்ஷபிர்யஜத்ரா: ।
ஸ்திரைரங்கைஸ் துஷ்ட்டு வாக்ம் ஸஸ்தனூபி:
வ்யசேம தேவஹிதம் யதாயு: ॥

—ரிக்வேதம், 1.89.8.

எடுத்துக்கொள். ஒரு குறிப்பிட்ட அளவு பக்தியுடன் கடவுளின் எந்த அம்சம் உன்னைக் கவர்கிறதோ, அதன் மீது தியானம் செய்வாய். சில காலத்திற்குப் பிறகு உன் மனம் தூய்மையடைந்திருப்பதை நீ காண்பாய். கடவுளின் திரு நாமத்தைப் பாராயணம் செய்வதும் கடவுளின் திருவுரு வத்தை அகக்காட்சியில் காண்பதும் உன்னை உயர்த்தும். அதன்பிறகு நீ உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் கணநேரத் தோற்றத்தையும், பரம்பொருளின் கணநேரத் தோற்றத்தையும் கூட நீ காண நேரிடலாம்.

யோகத்தின் எட்டு நிலைகள் (எட்டுப்படிகள்)

எப்படி ஆரம்பிப்பது? மிகச் சிறந்த யோகாச்சாரியரான பதஞ்சலி முனிவர், நம் முன்பு எட்டுப் படிகளுடன் கூடிய ஆன்மீக ஏணியை வைத்துள்ளார். அது நம்மை முழுமை அடையச் செய்கிறது.[1] முதல் படியானது யமம் என்று அழைக்கப்படுகிறது. ஐந்து சிறப்புப் பண்புகளைக் கடைப் பிடிப்பதாகும். அஹிம்சை , சத்தியம், அஸ்தேயம் (திருடா மல் இருப்பது), பிரம்மச்சரியம் மற்றும் அபரிக்ரஹம் (மற்றவர்களின் தயவைச் சாராமலிருப்பது) என்பவையாகும். அதற்குப் பிறகு இரண்டாம் படியான நியமம் வருகிறது. அதாவது நடத்தையைக் குறித்த ஐந்து விதிமுறைகள் ஆகும். இவற்றுள் முதலாவது சௌசம் ஆகும். அதாவது உடல் தூய்மை மற்றும் உள்ளத் தூய்மையைக் குறிக்கிறது. அடுத்தது சந்தோஷமாகும். அதாவது மனநிறைவு ஆகும். எப் பொழுதும் ஒருவர் முணுமுணுத்துக் கொண்டும், குறைகூறிக் கொண்டும் இருந்தால், அத்தகைய மனநிலையைப் பெற் றுள்ள ஒருவரால் இந்த உலகிலோ அல்லது ஆன்மீக உல கிலோ வெற்றிகரமாக எதையாவது செய்ய இயலுமா? இந்த உலகத்தைச் சார்ந்து இருப்பவனவற்றுடன் நம்மைப் பொருத்திக் கொண்டு, நம்மைச் சீர்படுத்திக் கொள்வதற்கு

1. யம நியமாஸன ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரண த்யான
ஸமாதயோஷ்டாவங்கானி ॥
—பதஞ்சலி யோகசூத்திரம், 2.29.

முயற்சி செய்ய வேண்டும். தவம் மூன்றாவது விதிமுறை யாகும். வாழ்க்கையில் ஓரளவிற்குக் கண்டிப்புடன் கூடிய பழக்க வழக்கங்கள் இருக்க வேண்டும். ஆன்மீகப் பயிற்சியில் ஒழுங்குமுறையுடன் கூடிய கண்டிப்பு இல்லாமல் ஒவ்வொரு தலைமுறையும், முந்தைய தலைமுறையை விட உறுதியற்ற தாக ஆகிக் கொண்டுள்ளது. இத்தகைய உறுதியற்ற மனிதர்கள் எதையும் சாதிக்க இயலாது. ஸ்வாத்யாயம் நான்காவது விதிமுறையாகும். அதாவது தன்னைத்தானே ஆராய்ந்து கொள்வது ஆகும். நாம் புத்தகங்களைப் படிக்கிறோம். நாம் படித்ததில் எந்த அளவு நம் மனத்தில் பதிகிறது? நாம் ஒரு சொற்பொழிவைக் கேட்டுவிட்டு, அது மிகவும் அற்புதமாக இருந்தது என்று கூறுகிறோம். 'நீ என்ன கேட்டாய்? என்று கேட்கப்பட்டால் நம்மால் எதையுமே திரும்பச் சொல்வதற்கு இயல்வதில்லை. சொற்கள் உள்ளபடியே ஒரு காதின் வழி யாக நுழைந்து மறுகாதின் வழியாக வெளியே வந்து விடு கின்றன. கருத்துக்கள் தக்கவைத்துக் கொள்ளப்படுவதில்லை. ஸ்வாத்யாயம் என்பது நீ ஆராய்ந்து அறிந்துகொண்டதைப் பிரதிபலித்து உன்னில் ஒரு பகுதியாக்கிக் கொள்வது ஆகும். உபநிஷதம் உனக்கு 'ச்ரோதவ்யோ' என்று கூறுகிறது. அதா வது முதலில் பார்க்க வேண்டும் அல்லது கேட்க வேண்டும். அதன் பிறகு, 'மந்தவ்யோ' அதாவது நீ கேட்டதை அல்லது பார்த்ததைப் பிரதிபலிக்க வேண்டும்.[1] அதுதான் வழியாகும். ஒழுக்க நெறிமுறையுடன் கூடிய பாதையில் ஓரளவிற்கு நாம் நிலைபெற்று இருந்தால்தான் ஆன்மீக விதிமுறைகளிலிருந்து நாம் பயன்பாடுகளைப் பெறத் தொடங்குவோம். ஐந்தாவது விதிமுறையானது ஈச்வரப்ரணிதானம் ஆகும். அல்லது கடவுளிடம் சரண் அடைவது ஆகும். உன்னுடைய எல்லா வற்றையும் உடல், மனம், ஆன்மா, அனைத்தையும் கடவு ளிடம் அர்ப்பித்து விட வேண்டும்.

ஆன்மீக ஏணியின் மூன்றாவது படியாக ஆஸனம் உள்ளது என்பது பதஞ்சலி முனிவரின் கருத்து ஆகும். நீ

---

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 2.4.5; 4.5.6.

பலமணி நேரத்திற்கு ஒரு சிலையைப் போல் அமர்ந்திருக்க லாம். உனக்கு என்ன கிடைக்கிறது. ஒன்றும் இல்லை. குறைந்த அளவு ஆன்மீக நாட்டமாவது இருக்க வேண்டும். அப்பொழுது நீ அமர்ந்திருக்கும் நிலையானது உன்னுடைய ஆன்மீகப் பயிற்சிக்கு உதவி செய்யும்.

நான்காவது படியாக பிராணாயாமம் உள்ளது. பிராணாயாமப் பயிற்சியின் பொழுது நீ உன் மூச்சை நிறுத்து கிறாய். நீ என்ன பயனை அடைகிறாய்? அது உடலுடன், தொடர்புடைய வெறும் இயல்பான நிகழ்வாக இருந்தால், காற்று நிரம்பியுள்ள கால்பந்தின் சவ்வுப்பையானது ஒரு மிகச் சிறந்த யோகியாக இருக்கும்! மூச்சை தடை செய்து கொள்வ தால் நீ என்ன பயனை அடைகிறாய்? அது தன்னிலை யிலேயே எந்தப் பயனையும் அடைவதில்லை. ஆனால் மனமானது விதிமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் மன மானது ஆன்மீகப் பாங்குடன் விளங்கும் பொழுது, பிராணாயாமமானது ஒருவரை உயர்ந்த மட்ட உணர்வு நிலைக்கு உயர்வதற்கு உதவி செய்கிறது.

ஐந்தாவது படியானது பிரத்யாஹாரம் என்று அழைக்கப் படுகிறது. அதாவது பற்றற்ற தன்மையில் இருப்பது ஆகும். எல்லாவற்றிலிருந்தும் மனமானது பிரிக்கப்பட வேண்டும். நீ ஏதாவது ஒரு செயலைச் செய்து கொண்டு இருக்கும் பொழுது, நீ மற்ற எல்லா எண்ணங்களையும் அகற்றிவிட்டு அந்தக் குறிப்பிட்ட செயலிற்கு மட்டும் உன் மனத்தில் இட மளிக்கிறாய். நீ பற்றற்ற தன்மையை மேற்கொள்ளவில்லை எனின், நீயே கவலைகளைத் தருவித்துக் கொள்கிறாய். நீ உறங்கச் செல்லும் பொழுது, பலவற்றைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால், உனக்கு உறக்கம் வராது. நீ தூக்கமற்ற நிலையால் துன்பமுற்று, உடல்நலக் கேட்டை ஏற்படுத்திக் கொள்வாய். அதைப்போன்றே நீ தியானம் செய்ய விரும்பி னால், உன்னால் முடிந்த அளவிற்கு உன் மனத்தை உலகப் பொருட்களிடமிருந்து பிரித்துக் கொள்ள வேண்டும். உனக் குள் தோன்றும் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் உரு வங்களிலிருந்தும் உன் மனத்தைப் பிரிக்க வேண்டும். ஆனால்

பற்றற்ற தன்மையானது, உன் மனத்தில் ஒரு வெற்றிடத்தைத் தோற்றுவிக்கக் கூடாது, வெறுமையான மனம் உறங்கிவிடும். பல மனிதர்களுக்குத் தியானம் என்பது உறக்கத்திற்கான அழைப்பு ஆகும். முற்றிலும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். உன்னுடைய மனத்திண்மையை சற்றுக் கூடுதலாகப் பயன் படுத்த வேண்டும். நீ தியானம் செய்யும் பொழுது கடவுளின் திருநாமத்தைப் பற்றிக் கொள்வாய். அப்பொழுது தூங்கி விடுவோம் என்னும் அச்சம் தோன்றாது. அதற்குப் பதிலாக, மனமானது உயர்ந்த மட்டத்திற்குயரும்.

நாம் இப்பொழுது ஆறாவது படியான தாரணத்திற்கு வந்திருக்கிறோம். உன்னுடைய மனத்தைச் சிறிது நேரத்திற்கு ஏதாவது தெய்வீகத் தத்துவத்திலோ அல்லது ஒரு புனிதம் நிறைந்த சொல்லிலோ அல்லது புனிதம் நிறைந்த பேரின்பமான வடிவத்தின்மீதோ, ஒரு குறிப்பிட்ட உணர்வு மையத்தில் நிலைநிறுத்துவது ஆகும். முதலில் நீ உனது உணர்வு மையத்தை உணர்ந்து அதன்பிறகு உன் மனத்தை அங்கு ஒருமுகப்படுத்த வேண்டும்.

கடவுளைக் குறித்த ஒரே எண்ணத்தைத் தொடர்ந்து தடைப்படாமல் நிலைநிறுத்திக் கொள்வது ஏழாவது படியான தியானமாகும். இங்கு ஒருமுகப்படுத்தப்படும் தன்மையானது ஆழ்ந்து இருக்கும். மற்றும் நீண்ட நேரத்திற்கு நீடித்து இருக்கும். நீ தெய்வீக உணர்வில் மூழ்கியிருப்பாய். அது இன்னும் மேம்பட்ட நிலையான சமாதி அல்லது மிகவும் மேம்பட்ட உணர்வு நிலைக்கு வழிகாட்டுகிறது. தியானம் என்பது அறிவு எல்லையைக் கடந்த வழிபாடு ஆகும். கடவுளை உண்மையாகவும் உணர்ச்சியாகவும் வழிபடும் முயற்சி ஆகும்.

நாம் தொடர்ந்து முன்னேறுவதற்கு முன்னால் நம்மை ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டுக் கொள்வோம். நாம் நம்மை நம் உடலுடன் அடையாளம் கண்டுகொண்டு நாம் ஆண்கள் மற்றும் பெண்கள் என்று நினைக்கிறோம். ஆணோ அல்லது பெண்ணோ, ஒரு குறிப்பிட்ட கடவுளை

வழிபடுகிறோம். நாம் நம் ஆன்மீக வாழ்க்கையை அந்த வழியில் தொடங்குகிறோம். மற்றும் அந்த வழியிலேயே நிறைவு செய்கிறோம். ஆனால் நாம் எதைப் பெறுகிறோம்? நம்முடைய ஆன்மீக வாழ்வின் தொடக்க காலத்திலேயே, நாம் என்ன செய்து கொண்டு இருக்கிறோம் என்னும் உணர்வுடன் இருப்பது நம்முடைய பங்கிற்குத் தேவையானதாகும். வழிபாடு செய்வது எந்த வகையில் நம் வாழ்வுடன் இணைக்கப்பட்டுள்ளது?

கடவுளை வழிபடுதல்

கடவுளை வழிபடுதல் என்றால், நாம் என்ன பொருளைக் கொண்டிருக்கிறோம்? கடவுளைக் குறித்த நம்முடைய கருத்து என்ன? ஐரோப்பாவில் ஒரு பக்தர் என்னிடம், 'சுவாமி, தயவு செய்து கடவுள் என்னும் சொல்லைக் கூறாதீர்கள், அது நாங்கள் குழந்தைப் பருவத்தில் இருந்த பொழுது, மேகங்களுக்குப் பின்னால் சுவர்க்கத்தில், அவருடைய விதிமுறையை மீறுபவர்களை எப்பொழுதும் தண்டிப்பதற்கு ஆவலுடன் இருந்த ஏதோ ஒரு உருவத்தை நினைவுபடுத்துகிறது. என்னால் அதை நினைத்துப் பார்க்க இயலாது' என்று கூறினார். 'சரி, ஈஸ்வரன் என்னும் சொல்லைப் பயன்படுத்துவாய். நான் பிரம்மன் என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறேன்' என்று நான் கூறினேன்.

நாம் கடவுளை வழிபட்டால், கடவுளுக்கு நாம் நெருங்கியவர்கள் என்பதை உணர வேண்டும். நாம் பொதுவாகக் கடவுளைப் பற்றி, அவர் படைப்பவர், காப்பவர் மற்றும் அழிப்பவர் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். அவர் பொருட்களை அவரிடமே திரும்ப எடுத்துக் கொள்வதை, நாம் அழித்தல் என்று கூறுகிறோம். ஆனால் அவர் அந்த எல்லாவற்றையும் விட மேம்பட்டவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர் நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மா ஆவார். அவர் மிகவும் நெருங்கியவர்களைவிட நெருக்கமானவர். மிகவும் விரும்பியவர்களைவிட அவர் விருப்பமானவர் ஆவார். இந்த உண்மையை உணர்ந்து

கொள்வதற்கு முதலில் நாம் ஆன்மாக்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நாம் மனம், அகங்காரம், புலன்கள் மற்றும் உடலிலிருந்து வேறுபட்ட ஆன்மா என்பதையும் உணர வேண்டும். நாம் ஆன்மாக்கள், பரம்பொருளின் பகுதிகள் என்பதை உணர்ந்து கொள்ளாமல், ஆன்மாக்களின் ஆன்மாவாக உள்ள ஒப்புயர்வற்ற கடவுளை, பரம்பொருளை நம்மால் அறிந்துகொள்ள இயலாது.

அவர் நம்மிடம் தந்தையாகவும் மற்றும் தாயாகவும் வருகிறார். அவர் நம்முடைய இஷ்ட தெய்வமாகவும் வரு கிறார். அதாவது வழிபடுவதற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட தெய்வமாகவும் வருகிறார். துவைத வேதாந்தக் கொள்கை உடையவர்களுக்கு ஏற்ப மற்றும் நம்மில் பலரும் துவைத வேதாந்தக் கொள்கையை உடையவர்களாகவே தொடங்க வேண்டும். ஆன்மாவும், வான்பேருயிரும் மற்றும் ஆன்மா வும், பரமாத்மாவும் எப்பொழுதும் வேறுவேறானவைகள். ஆனால் எப்பொழுதும் தொடர்புடையவைகளாக உள்ளன. நிலைபெற்ற தன்மை உடைய கடவுளிடம், ஆன்மா நிலை பெற்ற தொடர்பு உடையது என்னும் அறிவுடன் நாம் தொடங்க வேண்டும். அவை எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே உள்ளன. இருப்பினும் மனத்தின் தூய்மைக் கேட்டின் காரணமாக, நாம் கடவுளின் படைப்பின் மீது பற்றுக் கொள்கிறோம். கடவுளின் மீது கொள்வதில்லை. ஒரு தலைசிறந்த மேற்கத்திய மனோதத்துவ விஞ்ஞானி, பொதுவாக சமயப்பற்றுடைய மனிதர்களின் வழிமுறை களைக் கண்டு ஒருமுறை 'மனிதர்களுக்குக் கடவுள் தேவை யில்லை. அவர்கள் கடவுளைப் பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர்' என்று குறிப்பிட்டார். அவர்கள் கடவுளைப் பிரார்த்திக்க விரும்புகின்றனர். அதன் மூலம் கடவுள் அவர்களுடைய எல்லா விருப்பங்களையும் நிறை வேற்றலாம். ஆனால் கடவுள் அவர்களுடைய பிரார்த்தனை களை நிறைவேற்றவில்லை எனின் அவர்களில் சிலர் ஐயமுற்று, 'ஓ, கடவுள் இல்லை. அப்படியே இருந்தாலும் அவர் செவிடு, அவர் குருடு, அவர் பதில் கூறமாட்டார்' என்று

கூறுவார்கள். இத்தகைய குழந்தைத்தனமான கருத்து சரியானது அல்ல. நீ கேட்கும் எல்லாவற்றையும் எப்பொழுதும் உன்மீது பொழிந்து கொண்டிருக்கும் நல்ல கடவுளை மட்டும் நீ விரும்புகிறாய். உனக்கு வரங்களை அளிப்பதைத் தவிர அவருக்கு வேறு ஒரு கடமையும் இல்லை போலும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பரம்பொருளைக் காளியின் வடிவத்தில்தான் முதலில் வழிபட்டார். இயலுலக அண்ட சக்தியின் பிரதிநிதியாக வழிபட்டார். காளியின் வடிவமானது உருவகமாகும். ஆனால் உச்ச அளவில் கருத்தைத் தூண்டுவது ஆகும். அவள் ஒரு கையால் படைக்கிறாள். மற்றொரு கையால் காப்பாற்றுகிறாள். மூன்றாவது கையால் அழிக்கிறாள். நான்காவது கையில் துண்டிக்கப்பட்ட தலையைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். உபநிஷதங்கள் பிரம்மனின் இயல்பைப் பற்றிக் கூறும் பிழம்புருவத்தின் பிரதிநிதியாகவே இது விளங்குகிறது. ஒரு மகன் தன் தந்தையிடம், 'ஐயனே, பிரம்மனைப் பற்றி எனக்குக் கூறுங்கள்' என்று கேட்டான். அதற்குத் தந்தை, 'யாரிடமிருந்து இந்த உயிரினங்கள் அனைத்தும் பிறக்கின்றனவோ, பிறந்தவை யாரால் வாழ்கின்றனவோ, மரணத்திற்குப் பிறகு யாரிடம் ஒடுங்குகின்றனவோ, அவரே கடவுள். அவரை அறிய முயற்சி செய்' என்று கூறினார்.[1] நம்முடைய பக்தி நூல்களில் நாம் பிரம்மனைக் காளி அல்லது நாராயணன் அல்லது சிவன் போன்ற பலவகையான பெயர்களால் அழைக்கிறோம். வேதாந்தத்தில் நாம் ஈஸ்வரன் அல்லது ஸத் சித் ஆனந்தம் என்றழைக்கிறோம். அவர் நம்முடைய ஆன்மாக்களில், நம் ஆன்மாக்களின் ஆன்மாவாக விளங்குகிறார். மீண்டும் நாம் அனைவரும் அவருள்ளே வசிக்கிறோம். நாம் அதை உணர வேண்டும். அவருடைய அருகாமையையாவது உணர வேண்டும். அவருடைய அருகாமையை நாம் உணராவிட்டால், நாம் அவருடைய நெருக்கத்தை உணர முடியவில்லை எனின்,

1. யதோ வா இமானி பூதானி ஜாயந்தே ஏன ஜாதானி ஜீவந்தி ।
யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி ॥
—தைத்திரீய உபநிஷதம், 3.1.1.

அவர் மிகவும் நெருங்கியவர்களைவிட நெருக்கமானர் மிகவும் விரும்புபவர்களைவிட விருப்பமானவர் என்னும் உணர்வை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியிருப்பதைப்போல, இந்த அனைத்திற்கும் நமக்குக் கடவுளைக் குறித்த சரியான கருத்து வடிவம் தேவைப்படுகிறது. ஆனால் நம்முடைய கருத்து வடிவத்திற்குக் கடவுள் மிகமிக விசாலமானவர் ஆவார். நான் ஒரு விளக்கம் அளிக்கிறேன். நாம் அனைவரும் சிறிய நீர்க்குமிழிகளைப் போன்றவர்கள். நம்முடைய கருத்து வடிவத்திற்குக் கூட கடல் மிகப் பெரியது ஆகும். அதனால் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் சில வல்லமை மிகுந்த அலைகளைக் காண்கிறோம். நாம் அவைகளின் அருகில் செல்வோம். அவற்றுடன் நம்மைப் பிணைத்துக்கொண்டு அவற்றின் மூலம் உரிய நேரத்தில், கடலைக் குறித்தே நமக்கு ஒரு கருத்து ஏற்படுகிறது. அதைப் போன்றே நாம் நம்முடைய ஆன்மீகப் பயணத்தை அதைப் போன்ற ஒரு பெரிய மலையைப் போன்ற அலையான இஷ்ட தெய்வத்துடன் தொடங்குவோம். நாம் அவனை வழிபடுவோம். நாம் அவனைப் பிரார்த்திப்போம். இவ்வனைத்தின் மூலம் நமக்கு ஒரு உயர்ந்த விழிப்பு உணர்வு நிலை ஏற்படுகிறது மற்றும் கடவுளைக் குறித்த விசாலமான கருத்தும் ஏற்படுகிறது. இஷ்ட தெய்வம் நம்மிடம், 'இங்கு பார், நான் வல்லமை மிகுந்த அலையாகவும், நீ ஒரு சிறிய நீர்க் குமிழியாகவும் இருக்கலாம். ஆனால் நம் அனைவருக்கும் பின்னால் எல்லையற்ற கடல் உள்ளது' என்று கூறுகிறது. சரியான நேரம் வரும் பொழுது, இஷ்ட தெய்வம் நமக்கு மிக உயர்ந்த உண்மையை வெளிப்படுத்துகிறார். அவர் வரையறையற்ற கடவுளைத் தவிர வேறு யாருமில்லை என்பதை வெளிப்படுத்துகிறார்.

ஜபமும் மற்றும் தியானமும்

நம்மால் திடீரென்று கடவுளை உணர இயலாது. நாம் எங்கு இருக்கிறோமோ, அங்கிருந்து தொடங்க வேண்டும். மற்றும் இறுதியாகக் கடவுளைச் சென்று அடையச் செய்யும்

ஒரு வழியை நாம் பின்பற்ற வேண்டும். ஆன்மீக வாழ்க்கை என்பது மலை ஏறுவதைப் போன்றதாகும். நீ மெதுவாகவும், கவனத்துடனும் மேலும் மேலும் முன்னேற வேண்டும். சுவாமி பிரம்மானந்தர், 'ஒரு வீட்டுடன் ஒட்டியுள்ள முற்றத்தில் நின்று கொண்டுள்ள ஒரு மனிதனை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். அவனுக்கு அதன் மாடிக்குச் செல்ல வேண்டும். ஆனால் மாடிப்படிகளை ஒவ்வொரு படியாகக் கடப்பதற்குப் பதிலாக, அவன் தன்னை உடலுடன் மேல் நோக்கித் தள்ளப்படுவதற்கு அனுமதித்தால் என்ன ஆகும்? அவன் ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் காயமடைவான். ஆன்மீக வாழ்விலும் அப்படியே நிகழும்'[1] என்று கூறியுள்ளார்.

ஓரிரவிலேயே ஆன்மஞானமடைந்தவனாக வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. எளிமையான செயல்களுடன் தொடங்க வேண்டும். ஜபம் செய்தல் அதாவது கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்வது கருதிய பயனைக் கட்டாயமாகத் தரவல்ல முதல் அடியாகும். ஆனால் ஜபத்தைக் கிளிப்பிள்ளை போல செய்யக்கூடாது (கிளிப்பிள்ளை, சொன்னதை அப்படியே சொல்லும்).

பதஞ்சலி முனிவர், 'தஜ்ஜபஸ்த தர்த்தபாவனம்'[2] என்று கூறுகிறார். நீ கடவுளின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறும்பொழுது அர்த்தபாவனத்துடன் செய்ய வேண்டும். அர்த்தபாவனம் என்றால் என்ன? அதன் பொருளில் ஆழ்ந்து ஈடுபடுவது ஆகும். அந்த மந்திரத்தின் பொருள் என்ன? நீ ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியடைய அடைய, அந்த மந்திரத்தின் 'பொருளை' ஆழமாக, இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்வாய். முதலில் நாம், நம்முடைய இஷ்ட தெய்வத்தின் இன்ப நிறைவை அளிக்கிற, சுடர் ஒளியுடன் திகழ்கின்ற வடிவத்தைக் குறித்து நினைப்போம். அதன் பிறகு இஷ்ட

---

1. The Eternal Companion, பக்கம், 245
2. பதஞ்சலி யோக சூத்திரம், 1.28.

தெய்வத்தை வரையற்ற தூய்மையின், ஞானத்தின், நம்பிக்கையின், அருளின், அன்பின், பேரின்பத்தின் உருவம் என்று நினைப்போம். அதன்பிறகு, எல்லா உயிரினங்களிலும் நிலைத்துள்ள, எங்கும் பரவி ஊடுருவியுள்ள பரம்பொருளே ஆவார் என்று இஷ்ட தெய்வத்தைக் குறித்து எண்ண வேண்டும்.

நாம் தியானத்தைக் குறித்துப் பேசுகிறோம். 'நான் தியானம் செய்து கொண்டிருக்கிறேன்' என்று நீ கூறுகிறாய். நீ எதைப்பற்றி தியானம் செய்கிறாய்? எதையாவது ஒன்றைக் குறித்து நினைத்துக் கொண்டே இருக்கிறாயா? அந்தச் சொல்லினால் அந்தக் கருத்து சுட்டப்படவில்லை. தியானம் என்பது, உயர்ந்த ஆன்மீக விழிப்புணர்வு மையத்தில் ஒரு உயர்ந்த ஆன்மீக இலட்சியத்தை நோக்கி, தொடர்ந்து சீரான எண்ண ஓட்டத்துடன் நிலைத்திருப்பது ஆகும். நீ கடவுளைப் பற்றி நினைக்கும் பொழுது, நீ தெய்வீக எண்ணத்தில் தோய்ந்துவிடுகிறாய். ஆனால், இந்தத் தோய்ந்திருத்தல் என்பது திடீரென்று ஏற்பட்டுவிடாது. அதை அடையக் கூடிய ஒரு அடியாக ஜபம் விளங்குகிறது. கடவுளை நினைத்துக் கொண்டே அவருடைய திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவாய். அதன்பிறகு மனம் சிறிதளவிற்கு அமைதியடைகிறது. ஒலியும் அற்று விடுகிறது. இவ்விதம் நீ அவரைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது, இஷ்டதெய்வமானது, இந்த உலகத்திலுள்ள பொருட்களையும்விட மேலும் மேலும் உண்மையானதாகிறது. இயல்பாக மனம் அவனிடம் தோய்ந்து உள்ளது. மற்றும் உனக்குப் படிப்படியாகக் கடவுளின் இருப்பு, அன்பு, அருள் குறித்த நாட்டம் ஏற்படுகிறது. கடவுள் நம்மிடம் இஷ்ட தெய்வமாக, பரம்பொருளாக, சத் சித் ஆனந்தமாக வரக்கூடும். நாம் ஒழுங்காக, முறையாக ஆன்மீகப் பயிற்சியை நடைமுறைப்படுத்தினால் இந்த அனைத்தும் நிகழும்.

தொடங்கும்பொழுது உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் படத்தைத் துணையாக வைத்துக் கொள்வது நல்லது ஆகும். அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும். அந்தப் படத்தின் மீது மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். அந்தப் படத்தை,

புனிதமான வடிவத்தை உன் மனத்தில் பதித்துக் கொள்வது மேலும் சிறந்ததாகும். அதன்பிறகு நீ வெளிப்புறத்தில் எதையும் சார்ந்து இருக்கும் தேவை இருப்பதில்லை. உனக்கு வேண்டும் பொழுதெல்லாம், உன் இஷ்ட தெய்வம் வீற்றிருக்கும் இடத்தை உள்முகமாகப் பார்த்துக் கொள்ளலாம். மற்றும் பிரார்த்தனை செய்யலாம். அவருடைய திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவாய். அவரைத் தியானம் செய்வாய். முதலில் அவர் வடிவத்தையும், அதன் பிறகு அவர் இயல்புகளையும், அதன்பிறகு அவருடைய வரையற்ற ஸ்வரூபத்தையும் தியானிக்க வேண்டும். இம்முறையில்தான் ஒருவர் தியானத்தில் முன்னேற்றம் அடைய இயலும்.

நாம் நம்முடைய இதயத் தாமரையின்மீது தியானம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறோம். இந்த இதயம் எங்குள்ளது? அது உடல் கூறு தொடர்பான இதயம் ஆகும். நம்மால் அங்கு எதையும் செய்ய இயலாது. நம்முடைய உள்ளுணர்வின் மையமானது, இதயத்தின் அந்தப் பகுதியில் உணரப்படுகிறது என்பது உணர்த்தப்பட்டுள்ளது. அது நம்முடைய ஆன்மாவின் உணர்வு ஆகும். அது நம் உடலையும், மனத்தையும் ஊடுருவி நிற்கிறது. அது நம்முடைய ஆன்மாவின் உணர்வு ஆகும். மற்றும் அது பரமாத்மாவின் உணர்விலிருந்து வேறுபடாத அதே உணர்வு ஆகும். அது உள்ளீடு இல்லாததால் அதனை ஆகாயத்துடன் ஒப்பிட இயலும். அதனால்தான் அது சிதாகாசம் என்று அழைக்கப்படுகிறது. நாம் இந்த சிதாகாசத்தில் தியானம் செய்ய வேண்டும். நாம் நம்மை பக்தர்களாகவும் இஷ்டதெய்வத்தைப் பரம்பொருளின் வெளிப்பாடாகவும் நினைத்துத் தியானம் செய்ய வேண்டும்.

சுவாமி பிரம்மானந்தர் எங்களிடம் ‘உன்னுடைய இதயக் கோயிலுக்குள்ளேயே தியானம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நீ தியானப் பயிற்சியில் தொடர்ந்து நீடித்திருக்கும் பொழுது, இந்தக் கோயில் என்பது என்ன என்று உனக்கு வெளிப்படுத்தப்படும்’ என்று கூறுவார்.[1] அது உண்மையே.

---

1. The Eternal Companion, பக்கம் 269.

சிதாகாசம் அல்லது இதயம் என்றால் என்ன என்று அறிந்து கொள்வதற்கு ஆன்மீக விதிமுறைப் பயிற்சியானது அவசிய மானதாகும். முதலில் நீ அதை வெளியில் உள்ளதைப் போல மஹாகாசம் என்று நினைக்கலாம். அதற்குப் பிறகு நீ அதை இயலுலக அண்டத்துடன் தொடர்புடைய அகஉலகம் என்று நினைக்கலாம். உண்மையான இதயம் அல்லது சிதாகாசம் என்பது தூய்மையான உணர்வு எல்லைப் பரப்பில் உள்ளது. அங்கு உணர்வு நிலையில் அடிப்படைக் கூறாக உள்ள ஆன்மாவானது, வரையற்ற பரம் பொருளுடன் சாசுவதமாக இணைக்கப்பட்டுள்ளது. நீ இதயத்தில், அந்த இடத்தில் உன் இஷ்ட தெய்வத்தைத் தியானம் செய்ய வேண்டும்.

நாம் மீண்டும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள பதஞ்சலியின் யோக சூத்திரத்திற்குச் செல்வோம். அதில் அவர் எப்படி ஜபம் செய்ய வேண்டும் என்று கூறுகிறார். 'தஜ்ஜபஸ்த தர்த்த பாவனம்' (அந்தச் சொல்லை அதன் பொருளுடன், உட் பொருளுடன், அது உணர்த்தும் பண்புக் கூறுகளுடனும் உணர்ந்து மீண்டும் மீண்டும் கூற வேண்டும்). நாம் அவ்விதம் செய்தால் என்ன ஏற்படுகிறது. பதஞ்சலி முனிவர் 'தடைகள் அகற்றப்பட்டு, ஒரு புதிய ஆன்மீக விழிப்புணர்வு தோன்று கிறது'[1] என்று கூறுகிறார். ஜபம் மற்றும் எளிய தியான முறை களின் மூலம் தடைகள் அகற்றப்படுகின்றன. இது எப்படி ஏற்படுகிறது? நாம் அதை இம்முறையில் விவரிக்கலாம். நாம் எப்பொழுதும் கவலைகளையும், ஏக்கங்களையும், கெட்ட எண்ணங்களையும் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய கெட்ட எண்ணங்கள் நம் மனங்களைத் தொல்லைப்படுத்தி, நம் உடல்களை சீர்கேடு அடையச் செய்கின்றன. நாம் புனிதமான எண்ணங்களை அதிகமாக நினைக்க நினைக்க நாம் புனிதமான சொல்லை அதிகமாகக் கூறக் கூற, கடவுளின் பேரின்பமயமான வடிவத்தின் மீது அதிகமாகத் தியானிக்க தியானிக்க மனதானது அதிகமாக, நிறைவாக இசைவுடைமையில் நிலைபெறுகிறது. தன்னால்

1. *தத: ப்ரத்யகசேதனாதிகமோப்யந்தராயாபாவச்ச ॥*

—பதஞ்சலி யோக சூத்திரம், 1.29.

ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடல்நலச் சீடர்கேடுகள் அகன்று விடுகின்றன. மனத்தில் இசைவுடைமை நிலை நிறுத்தப்பட்ட பிறகு, இந்த இசைவுடைமை, உடலில் தன்னைப் பிரதிபலித்துக் கொள்கிறது. எனவே மனநலமும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உடல்நலமும், கடவுளின் திரு நாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதால் சீரடைகின்றன. மற்றும் அதனுடைய ஆற்றலை நாம் உணர்கிறோம். கடவுளின் புனிதமான வடிவத்தைத் தியானிக்கும் ஆற்றலால், உள்ளே மறைந்திருந்த இயல்பான ஆற்றல், புதிய ஆன்மீக விழிப்புணர்வாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அப்பொழுது நாம், நாம் இந்த வெறும் உடல்கள் அல்ல. ஆனால் ஆன்மாக்கள். மற்றும் இஷ்ட தெய்வம் பரமாத் மனைத் தவிர வேறு யாருமில்லை. ஒப்புயர்வற்ற அமைதி யின், ஒப்புயர்வற்ற பேரின்பத்தின், ஒப்புயர்வற்ற அன்பின் மூலம் என்பதைக் கண்டுகொள்கிறோம். கடவுளின் திரு நாமம் அத்தகைய ஆற்றல் வாய்ந்தது ஆகும்.

ஆன்மீக வாழ்வு—தொண்டாற்றும் ஒரு வாழ்வு

நாம் ஏற்கனவே யோகத்தின் ஏழு படிகளைப் பற்றி ஆராய்ந்து இருக்கிறோம். எட்டாவது படி என்ன? எட்டாவது படியானது சமாதியாகும். அதில் ஒருவர், ஒப்புயர்வற்ற பேரின்பத்தின் மூலமான பரமாத்மனை உணர இயலும் என்பது பதஞ்சலி முனிவரின் கருத்து ஆகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மூன்று வகையான ஆனந்தங்களைக் குறித்துக் கூறியுள்ளார். 'விஷயானந்தம், பஜனானந்தம், பிரம் மானந்தம் என்று ஆனந்தம் மூன்று வகையாகும். எல்லோரும் ஈடுபட்டுள்ள காமினி-காஞ்சன ஆனந்தம்தான் விஷயா னந்தம். இறைவனின் திருநாமத்தையும் மகிமையையும் பாடுவதனால் வருவது பஜனானந்தம். இறைக் காட்சியில் ஏற்படுகிறது பிரம்மானந்தம்.'[1] பிரம்மானந்த நிலையை அடைவது மிகவும் கஷ்டமானதாகும். அது கடினமான

1. ஸ்ரீராகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.247.

முயற்சியின் உச்சநிலையாகும். மற்றும் கடவுளின் அருளைப் பெறுவதுமாகும். ஆனால் நாம் அதை அடைவதற்கு முன்பே பூஜை செய்வதின் இன்பத்தை அனுபவிக்கலாம். ஆன்மீக வாழ்வில் நம்மால் முடிந்த அளவிற்குப் பஜனானந்தத்தைப் பெற வேண்டும். அது நம் அனைவராலும் பெறத்தக்க நிலையிலுள்ளது. ஜபத்தின்மூலம், தியானத்தின்மூலம், பேரின்ப மயமான வடிவத்திலுள்ள இறைவனிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஆனந்தத்தை, நம்முடன் உள்ள ஆன்மீக சாதகர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். எனவேதான் அத்தகைய ஆன்மீகக் கண்ணோட்டத்தை உடைய பக்தர்கள் ஒன்று சேர்ந்து கடவுளின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுகின்றனர். கடவுளின் பெருமையைப் பாடுகின்றனர். அந்த நேரத்திற்காவது அவர்கள் உலகக் கஷ்டங்களை மறக்கின்றனர். மனமானது பிரம்மானந்தத்தைப் போன்ற மெய்ப் பொருளின் அமைதியைப் போன்ற ஒரு உயர்ந்த மட்டத்தை நோக்கிக் கொண்டு செல்லப்படுகிறது. அத்தகைய ஒரு நிலை அவர்களின் மனங்களுக்கு ஏற்படுகிறது. ஆனால் நான் கூறியதைப் போல, ஒருவர் அத்துடன் நின்றுவிடக் கூடாது. எங்களுடைய சிறந்த குருவானவர் எங்களுக்கு, 'நீ முன்னேறிக் கொண்டிருக்கும் பொழுது, நீ மற்றவர்களும் முன்னேறுவதற்கு உதவ வேண்டும்' என்று கூறுவார். ஆன்ம ஞானம் அடைந்த ஒருவர் மட்டுமே ஒரு உண்மையான குருவாக இருக்க இயலும். ஆனால் மற்றவர்களுக்குத் தொண்டு புரிவதற்காக, ஒருவர் தொடக்கத்திலேயே முற்றிலும் ஆன்ம ஞானமடைந்தவராக இருக்க வேண்டும் என்பது இல்லை. நான் உயர்நிலை வகுப்பில் மாணவனாக இருக்கலாம். ஆசிரியர்கள் குறைவான எண்ணிக்கையிலிருந்தால் கீழ்நிலை வகுப்பில் உள்ளவர்களுக்கு நான் போதிக்கலாம். கீழ்நிலை வகுப்பில் உள்ளவர்களுக்கு நான் தொண்டு செய்பவனாக இருக்கலாம். முழுமையான ஞானம் அடைய வேண்டும் என்று நாம் காத்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஒவ்வொரு நிலையிலும், நம்முடன் இருப்பவர்களுக்கு ஏதாவது தொண்டினைச் செய்வதற்கு நமக்கு இயலும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிறந்த சீடர்களின் திருவடிகளின் கீழ் அமர்ந்து, நாங்கள் கற்றுக்கொண்ட சமயமானது, அகங்காரம் நிறைந்தவர்களாக இருக்கக் கூடாது என்றும், அனைவரிடமும் குடிகொண்டுள்ள கடவுளின் தொண்டிற்கு அர்ப்பித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. சுவாமி விவேகானந்தரின் சில சொற்கள் எப்பொழுதும் என் நினைவிற்கு வரும், 'முதலில் நாம் தெய்வங்கள் ஆவோம். பிறகு, பிறர் தெய்வங்களாக உதவுவோம்.'[1] சுவாமிஜி இதனால் எதை உணர்த்துகிறார்? நாம் ஒவ்வொருவரும் அவரவருடைய வாழ்க்கையை, அவரவர்கள் எல்லாப் பிணைப்புக்களிலிருந்து விடுபட்டு, ஆன்மஞானம் அடைவதுடன் மட்டுமின்றி மற்றவர்களின் இன்னலத்தையும் மேம்படுத்தும் வகையில் அவரவர்களின் வாழ்க்கை முறையானது இருக்க வேண்டும். நம்முடைய இருப்பின் மிகமிக ஆழமான உள்ளிடத்தில் நாம் இறைமையை உணர வேண்டும். எல்லா உயிரினங்களிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்பவர் ஆகவும் நாம் அவரை உணர வேண்டும். சுவாமிஜிக்கே இந்த ஒருங்கிணைந்த தொலைநோக்கு இருந்தது. மற்றும் அவர் மெய்ம்மையை உணர்ந்த இந்த நிலைதான், ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தின் பலவகையான தொண்டுகளுக்கு மருத்துவத் தொண்டு, கல்வித் தொண்டு, போதித்தல் மற்றும் நூல் வெளியீடுகளுக்கும் தெய்வீக அகத்தூண்டுதலாகவும், அடிப்படையாகவும் விளங்குகிறது. மற்றவர்களிடம் உள்ள கடவுளுக்குத் தொண்டு செய்வது இலட்சியமாகும். நாம் நாமே விடுதலை அடைவதற்கு முயற்சி செய்வதைப் போல மற்றவர்களும் விடுதலை அடைவதற்கு நாம் உதவுவதற்கு முயற்சிக்க வேண்டும். அதுதான் முழுமையான வழியாகும். நாம் அனைவரும் நடைமுறைப்படுத்த முயற்சி செய்து கொண்டுள்ள கூட்டிணைப்பு வழியாகும். அது, கர்மயோகம், தியான யோகம், பக்தி யோகம் மற்றும் ஞானயோகம் என்னும் நான்கு யோகங்களையும் உள்ளடக்கிக் கொண்ட வழியாகும்.

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 1.83.

சுவாமி விவேகானந்தர் கூறியிருப்பதைப் போல் முதலில் நாம் தெய்வங்கள் ஆவோம். பிறகு, பிறர் தெய்வங் களாக உதவுவோம் என்பதுதான் மிக உயர்ந்த இலட்சிய மாகும். நாம் ஓரளவிற்கு முன்னேற்றம் அடைந்தால், மற்றவர்களுக்கு ஓரளவிற்கு முன்னேற்றம் அடைவதற்கு நாம் உதவ இயலும். சுவாமிஜியின் மிக உயர்ந்த இலட்சியமான,

'ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாய ச' அதாவது சொந்த முக்தியும், உலக நன்மையும்[1] என்பதை அப்படித் தான் நடைமுறைப்படுத்த வேண்டும். நாம் முன்னேற்றம் அடைய அடைய, நம்முடைய பணிவான முறையிலேயே மற்றவர்கள் முன்னேற்றமடைவதற்கும் நாம் உதவ வேண்டும். நாம் ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள மேற்கொள்ள, நாம் நம் ஆன்மீக வழியில் முன்னேற்றம் அடைய அடைய, மற்றவர்களுக்குத் தொண்டாற்ற முயற்சி செய்வோம். இந்த இரட்டைப் பாதைதான் நாம் மனத் தூய்மையை அடை வதற்கு உதவி செய்கிறது. மனத்தூய்மையடைந்த நிலையானது, தெய்வீக இருப்பையும், தெய்வீக அன்பையும், தெய்வீக அருளையும் அடைவதற்கு உதவுகிறது. இந்த மிகச் சிறந்த இலட்சியம் நம் முன்னுள்ளது. ஒவ்வொருவரும், அவரவ ருடைய சொந்த வழியில், அதை அடைவதற்காக அடிமேல் அடி வைத்து முன்னேறுவோம். மற்றும் அந்தப் பாதையின் ஒவ்வொரு அங்குலத்தைப் பற்றியும் முழுமையாகச் சந்தேகத் திற்கு இடமில்லாமல் அறிந்துகொண்டிருக்க வேண்டும்.

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 6.66.

19
தியான வாழ்விற்கு வேண்டிய இன்றியமையாத கூறுகள்

நம் முன் உள்ள வழி

முதலில், ஆன்மீக இலட்சியத்தைத் தெளிவாகப் பற்றிக் கொள்வது நம் பங்கிற்கு இன்றியமையாததாகும். சாங்கியம் என்னும் பண்டைக் காலத்திய தரிசனமானது, இரண்டு விதமான உட்பொருட்கள் (உளதாம்தன்மைகள்) உள்ளன. புருஷன் அல்லது ஆன்மா என்பது தூய உணர்வு நிலையை உடைய தன்மையை உடையது. மற்றது பிரக்ருதி அல்லது இயற்கை ஆகும் என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. வேதாந்த தரிசனம் மனிதனின் உயிரை ஆன்மா என்று கூறு கிறது. மற்றும் எல்லா ஆன்மாக்களும், பரமாத்மா அல்லது பிரம்மன் என்று அழைக்கப்படும் வரம்பற்ற, எங்கும் நிறைந் துள்ள பரம்பொருளின் பகுதிகள் என்று கூறுகிறது. எனவே வேதாந்த தரிசனத்தில் ஆன்மஞானம் அடைவது என்றால் கடவுளை உணர்வது ஆகும். உயிர் அல்லது ஆன்மா மற்றும் நம் ஆன்மாக்களின் ஆன்மாவான பரமாத்மா என்பது உள்ளது என்று நம்மில் நம்புவோர், பரம்பொருளுடன் இணைவதற்கு விரும்ப வேண்டும். நம்முள்ளும் மற்றும் அனைவரிடமும் உள்ள, எங்கும் நீக்கமற ஊடுருவியுள்ள பரம் பொருளை உணர்வதுதான் நம்முடைய ஆன்மீக வாழ்வின் குறிக் கோளாகும்.

நாங்கள் மாணவர்களாக இருந்த பொழுது ஸ்ரீராம கிருஷ்ணரின் சிறந்த சீடர்களை அணுகிய பொழுது அவர்கள் எங்கள் முன்பு ஆன்மஞானமடைதல் என்னும் இலட்சியத்தை வைத்தனர். ஆனால், ஆன்மஞானம் அடைவது என்றால்

தனிப்பட்ட ஒருசிலருக்கு மட்டுமே உரியது என்னும் பொருளில் அவர்கள் கூறவில்லை. ஒருவன் தன் ஆன்மாவைப் பெருமளவிற்கு அணுகினால், அவன் பரம்பொருளையும் பெருமளவிற்கு உணர்கிறான் மற்றும் பரம்பொருள் அனைத்திலும் வெளிப்படுகிறார் என்பதையும் பெருமளவிற்கு உணர்கிறான் என்று அவர்கள் தெளிவுடன் கூறினர். மற்றும் அதன் விளைவாக ஒருவர் எல்லாவற்றிலுமுள்ள கடவுளுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்னும் எண்ணத்தைப் பெறுகிறார். ஆனால் அதற்கு முன்பு, பிரார்த்தனை மற்றும் வழிபாடுகளின்மூலமாக, ஒருவர் ஆன்மீக வாழ்க்கையை ஒருவருடைய ஆன்மாவைக் குறித்து தெளிவான கருத்தைப் பெறுவதற்காகவும், மற்றும் ஒவ்வொருவரிடமும் குடிகொண்டுள்ள கடவுளைக் குறித்த தெளிவான கருத்தைப் பெறுவதற்காகவும் பின்பற்ற வேண்டும்.

இப்பொழுது, இதுதான் இலட்சியமாக இருப்பதால் நாம் எந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்னும் கேள்வி எழுகிறது. இங்கும் அவர்கள் நம் முன்பு முக்தி மற்றும் தொண்டு என்னும் இரட்டிப்பான இலட்சியத்தை வைக்கின்றனர். செயலும், வழிபாடும் கைகோத்துக்கொண்டு இருக்க வேண்டும். செயலானது, எல்லா உயிரினங்களிலும் குடிகொண்டுள்ள இறைவனுக்குத் தொண்டாற்றும் மனப்பான்மையுடன் செய்யப்பட வேண்டும். நாம் பலவகையான செயல்பாடுகளைச் செய்கிறோம். ஆனால் நமக்கு அதை எப்படிச் செய்வது, நம் கடமைகளை எப்படிச் செய்வது, நம்முடைய ஆன்மீக நன்மைக்காக, பலவகையான செயல்பாடுகளில் நம்மை எப்படி ஈடுபடுத்திக் கொள்வது என்பது தெரியாது. முதலில் செயலை, கடமையாகக் கருதிச் செய்ய வேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் கடமையானது செய்யப்பட வேண்டும். அதன் பிறகு நாம் முன்னேற முன்னேற, நம்முடைய எல்லாவித செயல்பாடுகளிலும் முதன்மை பெற்றுள்ள பரம்பொருளுக்கு நம் செயல்களின் பயன்களை அர்ப்பிக்க வேண்டும் என்பதை நாம் உணர்கிறோம். நாம் எதற்காகச் செயலாற்ற வேண்டும்? என்று நாம்

கேட்கும் ஒரு நேரமும் வருகிறது. கடவுளை மகிழ்ச்சி அடையச் செய்வதற்காக என்னும் விடையும் நம்முள்ளேயே பொங்கி எழுகிறது. தெய்வீக இருப்பு, நம்முள்ளே உட்புகுந்து பரவி ஊடுருவி இருப்பதை உணரும் இன்னுமொரு நேரமும் வருகிறது. அதன் பிறகு நாம் தெய்வீக சக்தி பாய்ந்து செல்லும் வழிகளாகிறோம். மனிதகுலத்தின் நன்மைக்காகச் செய லாற்றும் தெய்வீக சக்தி பாய்ந்து செல்லும் வழிகளாகிறோம்!

ஆன்மீகப் பசியுடன் இருப்பாய்

செயலானது எப்படி முறையான மனப்பாங்குடன் செய்யப்பட வேண்டுமோ, அதைப் போன்றே வழிபாடும் சரியான முறையில் செய்யப்பட வேண்டும். நாம் அனை வரும் ஏதாவது ஒருவகையான அல்லது மற்றொரு வகையான செயலைச் செய்ய வேண்டும். செயல்பாடு என்பது கட்டாய மானதாகும். வழிபடுதல் என்பது அவரவர் விருப்பத்தைச் சார்ந்தது அல்லது கட்டாயமானது அல்ல என்பதுதான் சிக்க லாகும். நம்மில் பலருக்கு எத்தகைய வழிபாட்டைச் செய் வதிலோ, அல்லது ஜபம், தியானம் போன்றவற்றைச் செய் வதிலோ விருப்பம் இருப்பதில்லை. அதுதான் அதனுடைய வருந்தத் தக்க நிலை ஆகும். நமக்கு ஆன்மீகப் பசி இருக்கு மாயின், நாம் ஆன்மீக உணவை எடுத்துக் கொள்ள விரும்பு வோம். நாம் நம் உடலிற்கு உணவளிக்கிறோம். நாம் நம் உடலிற்கு ஆரோக்கியம் அளிக்கவல்ல உணவை அளிக்க வேண்டும். நாம் வாசிப்பின் மூலமாக நம் மனத்திற்கு உணவு அளிக்கிறோம். நல்ல கருத்துக்களாக இருக்க வேண்டும். அதைப் போன்றே, நாம் ஆன்மாவிற்கும் உணவளிக்க வேண் டும். அதை எப்படிச் செய்ய வேண்டும்? வழிபாடு, ஜபம், தியானம் போன்றவற்றை நடைமுறைப்படுத்திச் செய்ய வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஒரு நீதிக்கதை உள்ளது. ஒரு குழந்தை தூங்கப்போவதற்கு முன்பு தாயிடம், 'அம்மா, எனக்குப் பசி எடுத்தால் தயவு செய்து என்னை எழுப்பி விடு' என்று கூறியது. அதற்குத் தாயானவள், 'நான் அதைச் செய்யத்

தேவையில்லை. உன் பசியே உன்னை எழுப்பிவிட்டுவிடும் என்று கூறினாள்.'[1] ஆன்மாவின் பரிணாம வளர்ச்சிப் போக்கிலும், நமக்கு ஆன்மீகப் பசி எடுத்து, நம்முடைய நீண்ட காலத்திய உறக்க நிலையிலிருந்து விழிப்படையும் ஒரு நேரமும் வரும். ஆனால் உறக்கத்திலிருந்து விழிப்படைவது மட்டுமே போதுமானதாகாது. நாம் விழிப்படைந்து செயல் ஆற்றிக் கொண்டிருக்க வேண்டும். எனக்குத் தூய அன்னையாரின் தனிச்சிறப்பு வாய்ந்த கூற்று ஒன்று நினைவிற்கு வருகிறது. 'ஒரு அறையில் பல்வேறு வகைப்பட்ட உணவுப் பண்டங்கள் இருக்கலாம். ஆனால் யாராவது அதைச் சமைக்க வேண்டும். முன்கூட்டியே யார் சமைக்கிறாரோ, அவருக்கு அவருடைய சாப்பாடும் முன்கூட்டியே கிடைக்கிறது.'[2] நம்மில் பலரும் சோம்பேறிகளாக இருக்கிறோம். சரியான நேரத்தில் நாம் சமைக்க விரும்புவதில்லை. நாம் சமைக்க விரும்புகிறோம். ஆனால் நேரம் கடந்து மாலை நேரத்தில்! மற்றும் சிலர் அவர்களுடைய உணவைச் சமைத்துக் கொள்வதைவிட, பட்டினி கிடக்க விரும்புமளவிற்கு மிகவும் சோம்பேறிகளாக இருக்கின்றனர். இயல்பாக, அவர்களுக்கு ஆன்மீக வாழ்வில் பெரிய அளவில் எதுவும் கிடைப்பதில்லை. மற்றும் அவர்கள் துன்பமடைகின்றனர்.

பிரம்மானந்தர் எதை அறிவுறுத்தினார்?

நாம் அமைதியாக அமர்வதற்கு முயற்சித்து மனத்தில் ஏதோ ஒருவகையான வழிபாட்டைச் செய்தால், ஜபமோ, அல்லது தியானமோ, நாம் முதலில் பல தடைகளைச் சந்திக்கிறோம். சுவாமி பிரம்மானந்தர் இது இயல்பானது என்று எங்களுக்குக் கூறுவார். இங்கு நான் 'The Eternal Companion' என்னும் நூலிலிருந்து சிறிதளவு படிக்கிறேன். அந்த நூல் சுவாமி பிரம்மானந்தரின் அறிவுரைகளை உள்ளடக்கியது ஆகும். அவர் கூறுகிறார்:

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.174.*
2. Sri Sarada Devi the Holy Mother, *பக்கம் 520.*

'ஒழுங்காகவும், முறையாகவும் ஜபத்தையும், தியானத்தையும் மேற்கொள்ள வேண்டும். ஒருநாள் கூடத் தவறவிடக் கூடாது. மனமானது, செல்லம் கொடுத்துக் கெடுக்கப்பட்ட குழந்தையைப் போன்றதாகும். எப்பொழுதும் அமைதியற்ற நிலையிலேயே இருக்கும் உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் மீது அதை நிலைநிறுத்தி, விடாமல் தொடர்ந்து அதை ஒரு நிலைப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறுதியில் நீ கடவுளிடம் ஆழ்ந்து இருப்பாய். உன்னுடைய பயிற்சியை நீ இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து செய்தால், சொற்களால் விவரிக்கவியலாத ஒரு இன்பத்தை உணரத் தொடங்குவாய். மற்றும் மனமானது நிலைத்து நிற்கும் தொடக்க காலத்தில் ஜபம் செய்வதும், தியானம் செய்வதும் சாரமற்றதாகத் தென்படும். அது, கசப்பான மருந்தை எடுத்துக் கொள்வதைப் போன்றதாகும். உன்னுடைய மனத்தில் நீ பலவந்தமாகக் கடவுளின் எண்ணத்தைப் பொழிய வேண்டும். பிறகு நீ தொடர்ந்து முயற்சிக்கும் பொழுது மகிழ்ச்சிப் பெருக்கில் இருப்பாய். ஒரு மாணவன் அவனுடைய பரீட்சையில் தேர்வு அடைவதற்கு எத்தகைய அளவு கடந்த சோதனைகளை அனுபவிக்கிறான். கடவுளை உணர்வது என்பது மிகவும் சுலபமான ஒன்றாகும். உள்ளார்ந்து, அமைதி நிறைந்த இதயத்துடன் அவனை அழைக்க வேண்டும்.'[1]

சுவாமி பிரம்மானந்தர் யாரிடம் பேசிக் கொண்டு இருந்தாரோ அந்தச் சீடர், 'சில நேரங்களில் என்னுடைய எல்லா முயற்சிகளினாலும் நான் எந்த வளர்ச்சியையும் அடையவில்லை. எல்லாமே உண்மையற்றவை போல உள்ளன. நம்பிக்கையற்ற நிலை என்னைப் பற்றிக் கொண்டுள்ளது என்று உணர்வேன்' என்று கூறினார். சுவாமி அவருக்கு நம்பிக்கையை ஊட்டினார். அது பின்வருமாறு:

இல்லை, இல்லை. அவநம்பிக்கை வருவதற்கு எந்தக் காரணமும் இல்லை. தியானத்தின் பயன் கண்டிப்பாக

---

1. The Eternal Companion, பக்கம் 335,336.

ஏற்படும். நீ ஜபத்தைப் பக்தியுடன் மேற்கொண்டால் நல்ல பயனை அடைந்து முன்னேறுவாய். ஏனென்றால் பக்தி யானது தானே ஏற்படுவதாகும். உன்னுடைய பயிற்சியை முறையாக, ஒழுங்குடன் இன்னும் சிறிது அதிகமான நேரத் திற்குச் செய்ய வேண்டும். உனக்கு அமைதி ஏற்படும். ஒருவர் தியானம் செய்வதால், ஒருவருடைய உடல் நலமும் சீர் அடைகிறது.

தியானமானது தொடக்க நிலையில், மனத்துடன் போர் செய்வதைப் போன்றதாகும். அமைதியற்ற மனமானது முயற்சியுடன் கட்டுப்படுத்தப்பட்டுக் கடவுளின் திருவடி களில் வைக்கப்பட வேண்டும். ஆனால் முதலில் உன் னுடைய மூளைக்கு அளவிற்கு மீறி சுமையை அளிக்காமல் இருப்பதற்குக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். மெது வாகச் செல்ல வேண்டும். பின்னர் படிப்படியாக உன் முயற்சி யைத் தீவிரப்படுத்த வேண்டும். முறையான ஒழுங்கான பயிற்சியினால் மனது ஒருமுகப்படுத்தப்பட்டு தியானம் செய்வது சுலபமானதாக ஆகிறது. அதற்குப் பிறகு நீண்ட நேரத்திற்கு ஆழ்ந்திருந்தாலும் நீ எத்தகைய சிரமத்தையும் உணரமாட்டாய்.

ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்திற்குப் பிறகு உடலிலும், மனத்திலும் புத்துணர்ச்சியை உணர்வது போல, நீ தியானம் செய்ததற்குப் பிறகு புத்துணர்ச்சியை உணர்வாய் மற்றும் உச்ச அளவில் மகிழ்ச்சியின் அனுபவமானது பின்தொடரும்.

உடலும், மனமும் மிக நெருங்கிய தொடர்புடையவை ஆகும். உடல் தடுமாற்றம் அடைந்தால் மனமும் தடுமாறும் எனவே நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற் காக நாம் உண்ணும் உணவில் தனிப்பட்ட கவனம் மேற் கொள்ளப்பட வேண்டும்.

தியானம் செய்வது என்பது அத்தகைய சுலபமான விஷயம் அல்ல. நீ அதிகமாக உணவு உட்கொண்டால் மனம் அமைதியற்ற நிலையை அடைகிறது. காமம், கோபம், பொறாமை மற்றும் அதைப் போன்ற உணர்ச்சிகளைக்

கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிட்டால் மனம் அலை பாய்ந்து கொண்டு இருக்கும். அலைபாய்ந்து கொண்டிருக் கும் மனத்தினால் உன்னால் எப்படித் தியானம் செய்ய இயலும்?

நீ தியானம் செய்யாவிட்டால் உன்னால் மனத்தைக் கட்டுப்படுத்த இயலாது. மற்றும் மனம் கட்டுப்படுத்தப்படா விட்டால் உன்னால் தியானம் செய்ய இயலாது. ஆனால் நீ 'முதலில் நான் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். அதன்பிறகு தியானம் செய்ய வேண்டும்' என்று நினைத்தால், உன்னால் ஒரு பொழுதும் வெற்றியடைய இயலாது. நீ ஒரே சமயத்தில் மனத்தை நிலைநிறுத்தவும் வேண்டும். தியானம் செய்யவும் வேண்டும்.

நீ தியானம் செய்வதற்காக அமரும் பொழுது மனத்தின் விருப்பங்களையெல்லாம் வெறும் கனவுகள் என்று எண்ண வேண்டும். அவற்றைப் போலியானவை என்று காண வேண் டும். அவைகளால் அவற்றை ஒருபொழுதும் மனத்துடன் பிணைத்துக் கொள்ள இயலாது. நீ தூய்மையானவன் என்று உணர வேண்டும். இந்த முறையில் தூய்மைப்பாடு படிப்படி யாக உன் மனத்தில் நிறையும்.

நீ கடவுளை உணர வேண்டும் என்று விரும்பினால் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் ஆன்மீக நெறி முறைகளைப் பின்பற்ற வேண்டும். தக்க நேரத்தில் நீ ஞானத்தை அடைவாய்.[1]

பரம்பொருளை உணரும் பொழுது, ஞானமடைந்தவன் அமைதியையும், பேரின்பத்தையும் அடைந்து, அந்த அமைதியையும், பேரின்பத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கிறான். சுவாமி நம் முன்பு வைத்துள்ள இலட்சியம் அதுதான். கடவுளை உணர வேண்டும் என்னும் நோக்குடன் செயல்படுத்தப்பட வேண்டிய நடைமுறையையும் அவர் நம்முன் வைத்து உள்ளார்.

---

1. The Eternal Companion, பக்கம் 335,336.

தொடக்க நிலைகள்

நான் கூறியதைப்போல, நீ அமைதியாக அமர்ந்து கொள்வதற்கு விரும்பும்பொழுது, மனத்திலே பல வகையான குழப்பங்கள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் நீ தியானத்திற்கு அமராமல் இருக்கும்பொழுது, நீ ஓரளவு அமைதியை உணர்வாய். ஆனால் நீ தியானம் செய்வதற்கு அமரும் அந்தக் கணத்தில் உன் மனம் கிளர்ந்து எழுகிறது. அது மட்டுமல்ல. உடம்பில் வலி ஏற்படலாம். புலன்கள் மீண்டும் மனம் போன போக்கில் ஓடத் தொடங்கலாம் (புலன்கள் மீண்டும் கட்ட விழ்ந்து ஓடத் தொடங்கலாம்). மனத்திலே கொந்தளிப்பு மிகுந்த எண்ணங்கள் முடிவற்று எழத் தொடங்கலாம். மற்றும் ஜபமும், தியானமும் பெரிய போராட்டமாகி விடுகின்றன. ஆனால் இப்போராட்டத்தைக் கடந்து செல்ல வேண்டும்.

எல்லாச் சமயங்களைச் சார்ந்த நிறைஞானிகளும் அடிப்படையான, குறைந்த அளவு தூய்மைப்பாடு அடையும் குறிக்கோளை நம் முன் வைத்துள்ளனர். அதாவது உடல் தூய்மை, புலன்களின் தூய்மை, மனத் தூய்மை, அகங்காரத்தின் தூய்மை என்பனவாகும். உடல் ஏதாவது ஒரு பிணியினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கலாம். மற்றும் உடலின் பல்வேறுபட்ட உறுப்புக்கள் ஒருங்கிணைந்து, முறையாகச் செயல்படாமல் இருக்கலாம். நம் புலன்கள் வெளியே செல்லும் இயல்புடையவை. புலன்களுடன் தொடர்புடைய பொருட்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றன. நம்முடைய மனமானது, கடந்த கால பதிவுகளால் ஊசலாடுகிறது. மற்றும் நம் மனத்தில் மற்றொரு வகையான முரண்பாடும் உள்ளது. நம் சிந்தனை ஒரு வழியிலும், நம் உணர்வு மற்றொரு வழியிலும் நம் விருப்பம் மூன்றாவது வழியிலும் சென்று கொண்டிருக்கின்றன. அதைத் தவிர நம் அகங்காரம் தவறான போக்கினை உடையதாகவும் விளங்குகிறது. அகங்காரமானது ஒரு நீர்க்குமிழியைப் போன்றதாகும். ஆனால் அந்தச் சிறிய நீர்க்குமிழி தன்னைப் பற்றி மிக அதிகமாக நினைத்துக் கொள்கிறது. அது மற்ற நீர்க்குமிழிகளை மறந்துவிடுகிறது, அது கடலைக்கூட

மறந்து விடுகிறது. மற்றும் வளரவும் விரும்புகிறது. என்ன ஆகிறது? நீர்க்குமிழி உடைந்து விடுகிறது. இது உண்மையாக, பல மனிதர்களிடத்தில் நடைபெறுகிறது.

நம்முன் தோன்றும் இந்த எல்லாச் சிக்கல்களால் நாம் அச்சப்பட வேண்டாம். பகவத்கீதையில் அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனிடம், 'நீங்கள் மனக்கட்டுப்பாட்டைக் குறித்துப் பேசுகிறீர்கள், நீங்கள் ஆன்ம ஞானம் அடைவது பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் என் மனம் மிகவும் கிளர்ச்சி அடைந்துள்ளதை நான் அறிந்துகொண்டுள்ளேன். என்னால் அதைக் கட்டுப்படுத்த இயலாது' என்று முறையிடுவதைக் காண்கிறோம். ஸ்ரீகிருஷ்ணர், மாணவனின் கஷ்டத்தை அடையாளம் கண்டு கொண்டு மிகவும் பரிவுடனும் அன்புடனும் 'ஆமாம், நீ கூறுவது உண்மைதான். ஆனால், சரியான வழிமுறைகளைப் பின்பற்றுவதன்மூலம், பற்றுதலற்ற தன்மையை மேற்கொண்டு, தொடர்ந்து செய்யும் தியானத்தினால், அடக்க முடியாததைப் போலத் தென்படும் இந்தக் கிளர்ச்சியடைந்த மனத்தைக் கட்டுப்படுத்த இயலும்' என்று கூறினார்.[1] அதன் பயனாக, ஆன்மாக்களின் ஆன்மாவான, இந்த பிரம்மாண்டத்தின் பேருயிரிடம் நாம் தொடர்பு படுத்தப்படுகிறோம்.

சூழ்நிலைகளைக் குறித்துக் குறை கூறாதே

நாம் நம்முடைய சூழ்நிலைகளைக் குறித்துப் பெரும்பாலும் அதிகமாகக் குறை கூறுவதை முதலில் கவனிக்க வேண்டும். எப்பொழுதுமே சூழ்நிலைகளைக் குறித்து குறை கூறுவதைக் தவிர நாம் உண்மையாக வேறு எதையும் செய்ய விரும்புவதில்லை. ஒருவேளை நாம் சூழ்நிலையை மாற்றிக் கொண்டாலும், அதே குறைகூறும் பழக்கம் இருக்கும். நாம் எங்குமே முழுநிறை நலத்துடன் கூடிய சூழ்நிலையைக் காண இயலாது. அத்தகைய ஒன்று இல்லை. 'சூழ்நிலை எனக்கு உதவும் வகையில் இல்லை. என்னால் எப்படி தியானம் செய்ய இயலும்?' என்று நீ முறையிடலாம். மிகவும்

---

1. பகவத் கீதை, 6.33-36.

தொல்லை ஏற்படுத்தவல்ல சூழ்நிலைகளுக்கு நடுவில் நீ உறங்குவதற்கு முயற்சி செய்வது இல்லையா? அதைப் போல, சூழ்நிலையின் தன்மை எத்தகையதாக இருப்பினும் நீ தியானத்தில் ஈடுபடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். எப்படி? வெளிப்புறத்தில் உள்ள தொல்லைகளிலிருந்து, நீ உறங்குவதற்கு முன்பு செய்வதைப் போல உன்னை இழுத்துக் கொண்டு விடவேண்டும். பயிற்சியால் இதைச் செய்ய இயலும். பிறகு மீண்டும் நமக்கு நம்முடைய இயற்பொருள் தொடர்பான சிக்கல்கள் உள்ளன. உடலுக்கு ஏதாவது ஒரு தொந்தரவு இருக்கலாம். பல நேரங்களில் நாம் 'ஓ சுவாமிஜி, நாம் தியானம் செய்ய அமரும் பொழுது எனக்குத் தலைவலி ஏற்படுகிறது' என்பது போன்ற முறையீடுகளைக் கேட்கின் றோம். நல்லது. சில மனிதர்களுக்குத் தியானமே ஒரு தலை வலியாகி விடுகிறது! எப்படியிருப்பினும், ஆரோக்கியமாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதனால்தான் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், கீதையின் தியானயோகம் என்னும் அத்தியாயத்தில், 'மிதமான உணவும், ஓய்வும் உடையவனுக் கும், செயல்களில் மிதமான உழைப்புடையவனுக்கும், மித மான உறக்கமும் விழிப்பும் உடையவனுக்கும் யோக மானது துன்பத்தை அகற்றுவதாக உள்ளது' என்று கூறியுள்ளார்.[1] ஒருவர் இருபுறக் கோடிகளையும் தவிர்த்து, நடுவழியைப் பின்பற்ற வேண்டும். இது ஆன்மீக வழியைப் பின்பற்றுவதற்கு உரிய வல்லமையையும், ஊக்கத்தையும் அளிக்கும்.

முதலில் உடலிற்குப் பயிற்சி அளிப்பாய்

ஏதாவது ஒருவகையான ஒழுங்கு நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும். அதனால் நம் உடலானது ஓரளவிற்குப் பயிற்சியைப் பெறும். அதன்பிறகு புலன்களுக்கும், மனத் திற்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல, அகங்காரத்திற்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

---

1. பகவத் கீதை, 6.17.

உடலிற்கு எப்படிப் பயிற்சி அளிப்பது? உன் உணவில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகமாக உண்பதைத் தவிர்க்க வேண்டும். உனக்குப் பொருத்தமானதாக உள்ள மற்றும் உடலின் இசைவுடைமையை ஏற்படுத்துவதற்கு உதவி செய்யவல்ல உணவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பலரும் உணவு உண்பதுதான் வயிற்றுக்கு அளிக்கவல்ல மிகப் பெரிய பயிற்சி என்று நினைக்கின்றனர். அது மட்டும் போதாது. ஆரோக்கியமான உணவை உண்பதுடன், எல்லா உறுப்புக்களுக்கும் ஏதாவது பயிற்சியையும் அளிக்க வேண்டும். முக்கியமாக வயிற்றுக்கு ஏதாவது பயிற்சி அளிக்க வேண்டும். அதனால் உனது செரிமானம், ஒன்று கூட்டுவது, வெளியேற்றுதல் போன்றவை எந்த அளவிற்கு நன்றாக இருக்க வேண்டுமோ, அந்த அளவிற்கு நன்றாக இருக்கும். இவைதான் பின்பற்றத்தக்க ஆரம்பக் கட்ட விதிமுறைகள் ஆகும். நம்முடைய பண்டைய ஆச்சாரியர்கள், 'உடலைக் குறித்து அக்கறை எடுத்துக் கொள்வது முதல் கடமையாகும். ஆன்மீக வாழ்க்கையில் நாட்டம் கொள்வதற்கு அது வழிமுறையாகும்' என்று கூறியுள்ளனர்.[1] சில நேரங்களில் பலவீனமாவர்கள் என்னிடம் வந்து, 'நான் என் உடலை மறக்க விரும்புகிறேன்' என்று கூறுகிறார்கள். அவர்கள் எத்தகைய உடலைப் பெற்றுள்ளனர்? சதைத் தொகுதியும், மற்றும் எலும்புகளும்! உடலை முறையாக வளரச் செய்வாய். உன்னுடைய உடல் ஆரோக்கியமான நிலையில் இல்லை எனின் உன்னால் ஒருபொழுதும் உடலை மறக்க இயலாது.

ஒழுக்க நெறிமுறைகள்

ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகன், ஓரளவிற்கு யோகாச்சாரியரான பதஞ்சலி அவர்கள் கூறும் இயமம், மற்றும் நியமத்தில் நிலைத்து நிற்கவில்லை எனின் ஆசனத்தைக் குறித்து எத்தகைய செயல்முறைப் போதனையையும் அளிப்பதற்கு அவர் விரும்பவில்லை. சாதகன் அகிம்சையைப்

---

1. சரீரமாத்யம் கலு தர்ம சாதனம் ।

பின்பற்ற வேண்டும். உண்மையைப் பேச வேண்டும். பேராசைப்படுதல் கூடாது. இயன்ற அளவிற்குத் தற்கட்டுப் பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். மற்றம் உதவியற்ற நிலையில் மற்றவர்களைச் சார்ந்து இருத்தல் கூடாது. அவர் இதை இயமம் என்று கூறுகிறார்.[1] மற்றும் அதுவும் போதாது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அகத்தூய்மை, புறத் தூய்மையுடன் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒருவர் மனநிறைவுடன் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இயன்ற அளவிற்குத் தன்னுடைய சூழ்நிலைகளுடன் தன்னைப் பொருத்திக் கொள்ள வேண்டும். ஒருவர் உடல், வாக்கு, மனம் என்னும் மூன்று வகையான நெறிமுறைகளைச் செயல்படுத்த வேண்டும். மேலும் ஒருவர் திருமறை நூல் களைப் பயின்று, கருத்துக்களைச் சேகரித்துக் கொள்ள வேண் டும். அதுவும் போதாது. அகங்காரத்துடன் கூடிய செயல்கள் நல்லது அல்ல. ஒருவர் ஒருவரை முழுமையாகப் பரம் பொரு ளுக்கு அர்ப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். சிறிது காலத்திற்குப் பிறகு பக்தன் பரம் பொருளைத் தன் ஆன்மா வின் ஆன்மா என்று கண்டு கொள்கிறான். இவ்வனைத்தும் நியமம் என்பதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.[2]

சுவாமி பிரம்மானந்தர் எங்களிடம், 'நான் காமத்தை வெல்லுவேன், நான் கோபத்தையும், பேராசையையும் வெல்லுவேன்' என்பது உன்னுடைய அணுகுமுறையாக இருக்குமாயின் உன்னால் அவற்றை ஒருபொழுதும் வெல்ல இயலாது. ஆனால் நீ உன்னுடைய மனத்தைக் கடவுளிடம் நிலைநிறுத்தினால், அவ்வுணர்ச்சிகள் அவைகளாகவே உன்னை விட்டுவிடும்' என்று கூறுவார். 'கடவுளை நீ நம்பி னாலன்றி, உன்னால் ஒழுக்க நெறிமுறைகளில் முழுமையாக ஒருபொழுதும் நிலைத்து நிற்க இயலாது'[3] 'கடவுள்' என் பதை அவர் இயலுலக அண்டத்தின் தனிப்பட்ட இருப்பு

1. பதஞ்சலி யோக சூத்திரங்கள், 2.30.
2. மேற்கண்ட நூல், 2.32.
3. The Eternal Companion, பக்கம் 245.

என்னும் பொருளில் கூறவில்லை. தொடக்கத்தில் நாம் கடவுளை ஒரு இருப்பு, அல்லது இவ்வுலகத்தைப் படைத்து, அதனைக் காத்து, அதைத் தன்னுள்ளேயே ஒடுக்கிக் கொள் ளும் ஒரு சக்தி என்று எண்ணக்கூடும். ஆனால் நாம் முன்னேற முன்னேற நாம் வெளியே உள்ள சக்தி என்று நினைத்துக் கொண்டிருந்தது ஒரு சக்தி மட்டுமல்ல. நம்முள்ளும் அது இருக்கிறது என்றும் மற்றும் தொடர்ந்து முன்னேறும் பொழுது நாம் எல்லாவற்றிலும் கடவுளின் இருப்பைப் பார்க்கிறோம் என்றும் உணர்கிறோம்.

மன இசைவுடைமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்

சில நேரங்களில் மனிதர்கள் என்னிடம் வந்து 'சுவாமி என் மனத்தையும் சேர்த்து எல்லாவற்றையும் நான் மறக்க விரும்புகிறேன்' என்று கூறுகின்றனர். அவர்களுக்கு எந்த வகையான மனம் உள்ளது? சுவாமி விவேகானந்தர் 'மனம்' என்னும் சொல்லைச் சிலேடையாகப் பயன்படுத்துவார். வங்காள மொழியில் நாம் அதை 'மொன்' என்று அழைக் கிறோம். 'மொன்' என்றால் 'மணங்கு' என்னும் பொருள் உள்ளது (80 பவுண்டுகள் எடை). எனவே சுவாமி விவே கானந்தர், அவரிடம் சென்ற இளைஞர்களை, 'உன்னுடைய மனம் எண்பது பவுண்டுகள் எடையுள்ளதா அல்லது இரண்டு அவுன்சுகள் எடையுள்ளதா?' என்று கேட்பது வழக்கம். 'உனக்கு எந்த வகையான மனம் உள்ளது?' மனமானது வளர்ச்சி அடைய வேண்டும். உறுதியானது வளர்க்கப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் மனத்தை மேம்படுத்துவது என்னும் ஆய்விற்கு உரிய கருத்தே வருகிறது. அது ஒரு கஷ்ட மான செயலாகும். ஆனால் ஆன்மீகத்தில் ஈடுபாடு இருக்கு மாயின் இவ்வனைத்தும் சுலபமானதாகி விடும். எங்கு ஊக்கம் உள்ளதோ அங்கு ஒரு வழி இருக்கிறது.

நீ ஒரு பரீட்சையில் தேர்வு அடைய வேண்டும் எனின் (முக்கியமாக இந்தியாவில், ஒவ்வொரு இளை ஞனும் ஞானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வதற்குப் பதிலாக அவனையும், அவன் குடும்பத்தையும் பேணிப்

பாதுகாப்பதற்கு ஒரு வேலையைத் தேடிக் கொள்வதில் மிகவும் ஆர்வம் காட்டுகிறான்) எந்த அளவிற்கு கஷ்டங்களை மேற்கொள்கிறாய்! ஏனெனில் நீ முயற்சி செய்வதற்கு ஒரு குறிக்கோள் உள்ளது. ஆன்மீக வாழ்விலும், ஆன்மீக குறிக் கோளை வாழ்க்கை முறையாகவும், தெளிவானதாகவும் நாம் நம் முன்பு வைத்துக் கொண்டால் எல்லாமே சுலபமானதாகி விடும். நாம் மேற்கொள்ளும் எல்லாக் கஷ்டங்களும் தகைமை உடையதாக இருக்கும்.

நாம் கடஉபநிஷதத்தில் வரும் அற்புதமான ஒப்புமையை நமக்கு நினைவுபடுத்திக் கொள்வோம். கட உபநிஷதம் ‘உடல் தேரைப் போன்றது. புலன்கள் குதிரைகள். மனம் கடி வாளம். புத்தி தேரோட்டி. ஆன்மா அந்தத் தேரில் பயணம் செய்பவர்’[1] என்று கூறுகிறது. தேர் சென்றுகொண்டிருக்கும் பொழுது, அதன் சில சக்கரங்கள் கழன்று உருண்டு சென்றால் அதால் தொடர்ந்து செல்ல இயலுமா? குதிரைகள் கட்டுப் பாட்டை இழந்துள்ளன. கிளர்ச்சியடைந்து உள்ளன. குதிரை களைக் கட்டுப்படுத்துவதற்காக, நீ கடிவாளத்தைக் கையில் இறுக்கிப் பிடித்துக் கொள்ள வேண்டும். மற்றும் தேரில் பயணம் செய்பவர், தேரோட்டியை மிகவும் விழிப்புடன் இருக்கும்படிக் கூற வேண்டும். ஆனால் பொதுவாக என்ன நிகழ்கிறது எனின், தேரில் பயணம் செய்பவர் உறங்கச் செல் கிறார். தேரோட்டி குடிவெறியில் இருக்கிறார். கடிவாளம் சோர்வடைந்துள்ளது. அதன்பிறகு குதிரைகள் நிலை தவறி ஓடத் தொடங்குகின்றன. அதிருஷ்டவசமாக எத்தகைய பெரிய விபத்தும் ஏற்படுவதில்லை. எனவே விபத்து ஏற்படுவதற்கு முன்பு நாம் மிகுந்த விழிப்புடன் இருப்போம். தேரில் பயணம் செய்பவரும் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். அவர் தேரோட்டியைச் சுறுசுறுப்புடன் இருக்குமாறு கூற வேண்டும். மற்றும் மனத்தின் உதவியுடன் புலன்களைக் கட்டுப்படுத்த

1. ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து ।
புத்திம் து ஸாரதிம் வித்தி மன: ப்ரக்ரஹமேவச ॥
இந்த்ரியாணி ஹயானாஹு....

—கட உபநிஷதம், 1.3.3.

வேண்டும். சரியான வழியில் புலன்களைச் செலுத்த வேண்டும். அதன்பிறகு தேரானது சரியாக நகர்ந்து செல்லும்.

நம் யாராலுமே, ஆன்மீக ஒழுங்கு நெறிமுறைகளில் திடீரென்று முழுமையை அடையவியலாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு குறைந்த அளவிலாவது வளர்ச்சி அடைந்திருப்பது அவசியமானதாகும். அதனால் நம் உடலும், மனமும், புலன்களும் இசைவுடைமையுடன் கூடிய நிலையில் இருக்கும். மற்றும் நம் அகங்காரம், ஏறுமாறாக உள்ள நம் அகங்காரமானது, நம் சிறிய விருப்பத்தின் பின் னால் உள்ள இயலுலக அண்ட விருப்பத்துடன் தொடர்பு கொள்ளும் மன நிலையை அடைய வேண்டும். முதலில் உடல், பிறகு மனம், பிறகு புலன்கள் இவற்றில் இசைவுடை மையை ஏற்படுத்துவதற்கு நாம் ஓரளவு நிலைநிறுத்தப்பட்ட வுடன், ஓரளவிற்குத்தான் நினைவில் கொள்வாய், நம்மில் ஆன்மீக விருப்பத்தை விழிப்படையச் செய்வதில் வெற்றி யடைந்த பிறகு, இவ்வனைத்தையும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் செய்த பிறகு, தியான வழியில் முதல்படியாக உள்ள ஆசனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

ஆசனம்

ஓரளவிற்கு இயமம் மற்றும் நியமத்தை மேற்கொண்ட பிறகுதான் யோகாச்சாரியரான பதஞ்சலி முனிவர், நம்மை ஒரு குறிப்பிட்ட ஆசனத்தில் அமரும்படிக் கேட்டுக் கொண் டுள்ளார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் எந்த ஆசனத்தைத் தேர்ந்து எடுக்க வேண்டும்? 'உறுதியாகவும், சுக மாகவும் இருப்பது ஆசனம்' என்பது அதனுடைய விளக்க மாகும்.[1] நீ தடுமாற்றம் அடையாமல் நிலைத்து அமரக்கூடிய மற்றும் எத்தகைய தொல்லையையும் நீ உணராமல் உள்ள ஒரு ஆசனத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். 'நான் படுத்துக் கொள்ளலாமா?' என்று யாராவது கேட்கக் கூடும். நல்லது. நீ படுத்துக் கொள்ளலாம் மற்றும் அதை ஒரு ஆசனம் என்று

---

1. ஸ்திரம் சுகமாஸனம் ।

—பதஞ்சலி யோகசூத்திரங்கள், 2.46.

பழக்கப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் நீ சிறிதளவு அபாயத் திற்கு ஆட்பட நேரிடும். அந்த ஆசனமானது பொதுவாக உறக்கத்துடன் தொடர்புடையது ஆகும். படுத்துக் கொண்டு, தியானம் செய்வதற்கு முயற்சி செய்தால் உன்னால் முன் னேற்றம் அடையவே இயலாது. நீ சிறிது நேரம் ஓய் வெடுத்துக் கொள்ளலாம். உன்னை அது சுறுசுறுப்படையச் செய்யும். ஆனால், ஆன்மீக ரீதியாக உன்னை சோர்வடையச் செய்துவிடும். 'உட்கார்ந்து கொண்டு உபாசனை செய்யலாம்'[1] என்று வியாசர் கூறியுள்ளார். உட்கார்ந்து கொண்டு செய்வது சிறந்தது. அது ஒரு அமைதியையும், தணிவையும் ஏற்படுத்த வல்ல ஆசனமாகும். நீ அதில் உடல் மற்றும் மனத்தில் அமைதியையும், தணிவையும் உணர்கிறாய் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். யோகாசனங்களை ஒரு பயிற்சி யாக மேற்கொள்ள விரும்பினால், மற்ற சமயத்தில் அவ்விதம் செய்து கொள்ளலாம். ஆனால், நீ தியானம் செய்வதற்கு அமர்ந்து கொள்ளும்பொழுது உன் மனத்திலும் உடலிலும் அமைதியுடனும் தணிவுடனும் அசையாமலும் நிலையாகவும் இருக்க வேண்டும்.

அனைவருக்காக பிரார்த்தனை செய்வாய்

அமர்ந்துகொண்ட பிறகு, கடவுளை நினைக்க வேண்டும். அவர் நம்முடைய இலட்சியம் ஆவார். அவர் நம்முள்ளே குடி கொண்டுள்ள கடவுள் ஆவார். நீ இறை வணக்கம் செய்யலாம். சிறிது இசையுடன் கூடினதாக இருக்க வேண்டும். உன் மன மும், புலன்களும், உடலும் சிறிதளவு ஆன்மீக அதிர்வலை களுடன் அதிர வேண்டும் பிறகு கடவுளை வணங்குவாய். நாம் ஒரு குறிப்பிட்ட வழியைப் பின்பற்றும் பொழுது, விடாப்பிடியான கொள்கை உடையவர்களாக ஆவதற்கு வழியுள்ளது என்பது ஆன்மீக வாழ்வில் உள்ள ஒரு பெரிய இடையூறு விளைவிக்கக் கூடிய தன்மையாக உள்ளது. எனவே கடவுளை வழிபடுவதுடன் மட்டுமின்றி உன் நாட்டைச்

---

1. ஆஸீன ஸம்பவாத் ।

—பாதராயணர், பிரம்ம சூத்திரம், 4.1.7.

சார்ந்த மற்றும் உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் சேர்ந்த மிகச் சிறந்த ஆச்சாரியர்கள், புனித மகான்களை வழிபடுவதும் மிகவும் சிறந்தது ஆகும். அதற்குப் பிறகு என்ன நடைபெறும்? மனமானது விசாலமாகிறது.

ஆன்மீக வாழ்வில் நேரத்தக்க மற்றொரு விபத்து மிகவும் தன்னலத்துடன் இருப்பது ஆகும். பல நேரங்களில் ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகர்கள் ஆன்மீக வாழ்வின் தொடக்க காலத்திலாவது அவர்களைப் பற்றி அதிகம் நினைத்துக் கொள்வதை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் மற்றவர்களைப் பற்றி மறந்து விடுகின்றனர். எனவே ஒருவருடைய நன்மைக்காக மட்டுமின்றி, அனைவரின் நன்மைக்காகவும் பிரார்த்தனை செய்வது நல்லது ஆகும். நீ அமைதியை விரும்புவதைப் போன்றே, தூய்மைப்பாடை அடைய விரும்புகிறாய். நீ ஞானம் அடைய விரும்புகிறாய். அதைப்போன்றே அனைவரின் அமைதிக்காகவும், தூய்மைப்பாட்டிற்காகவும், ஞானத்திற்காகவும் பிரார்த்தனை செய்ய வேண்டும். எல்லா மனிதர்களும் கடவுளை நோக்கி முன்னேற வேண்டும். எல்லா மனிதர்களும் தூய்மையை அடைய வேண்டும். எல்லா மனிதர்களும் ஞானம் அடைய வேண்டும் என்னும் இந்த வகையான பிரார்த்தனையானது நம் மனத்தை விரிவுறுத்தும் பயனை விளைவிக்கத் தக்கது ஆகும்.

இந்த வகையான பிரார்த்தனையானது, உன்னுடைய நரம்புகளின் உணர்ச்சிகளை எத்தனை விரைவில் மட்டுப்படுத்தி, உன் மனத்தை அமைதியடையச் செய்கிறது என்பதை நீ காணும் பொழுது மிகவும் வியப்படைவாய். அத்துடன் நம் விழிப்புணர்வையும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விரிவுபடுத்துகிறது. இந்த வகையான பிரார்த்தனையும் வழிபடும் முறையும், தியானப் பயிற்சியை மேற்கொள்வதற்குப் பெருமளவில் உதவுகின்றன.

மூச்சுப் பயிற்சியின் தனிச்சிறப்பு

இந்த நிலையில் ஓசையொழுக்குடன் கூடிய மூச்சுவிடும் தன்மையானது மிகவும் உதவி செய்யத்தக்கதாக விளங்கும்.

ஆழமாக ஒரு மூச்சை எடுக்க வேண்டும். மெதுவாக அதை வெளியே விட வேண்டும். நீ உன் மூச்சை அடக்கிக் கொள்ளவோ அல்லது நாசித் துவாரங்களை மூடிக் கொள்ளவோ வேண்டாம். ஒரு நிலைத்த ஒழுங்குபடுத்தப்பட்ட வழியில், இரண்டு நாசிதுவாரங்களின் மூலமும் மூச்சை உள்ளே இழுத்துக்கொண்டு, பிறகு மூச்சை வெளியில் விட வேண்டும். ஆனால் உன் மனத்திற்கு ஆலோசனைகளை வழங்கலாம். 'நான் தூய்மைப்பாடு, உறுதி, மற்றும் அமைதியை உள்ளிழுத்துக் கொண்டிருக்கிறேன்.' கடவுள்தான் எல்லா அமைதியின் மூலமாகத் திகழ்கிறார். நடைமுறையில் ஆன்மீக வாழ்வில் நம்மால் போதிய அளவு தூய்மைப்பாடையும், போதிய அளவு உறுதியையும் மற்றும் அமைதியையும் பெற வியலாது. எந்த அளவிற்கு அதிகமாகப் பெறுகிறோமோ, அந்த அளவிற்குச் சிறந்தது ஆகும். உங்களை தெய்வீக தூய்மைப்பாட்டாலும், தெய்வீக ஆற்றலாலும், தெய்வீக அமைதியாலும் நிறைத்துக் கொள்ளுங்கள். தூய்மை என்னும் மூச்சை வெளியேற்றுவாய். ஒவ்வொருவருக்கும் தூய்மையின் ஓட்டங்களை அனுப்புங்கள். அனைவரிடமும் பரிவு கொள்ளுங்கள். அனைவரிடமும் நட்புடன் இருங்கள். இந்த மனநிலையை நீ பேணி வளர்த்துக் கொள்வதில் வெற்றியை அடைந்தால் மேம்பட்ட விழிப்புணர்வு நிலைகளின் மட்டங்களுக்கு உயர்வது எவ்வளவு சுலமானது என்பதை அறிந்து கொண்டால் நீ வியப்படைவாய். ஏனெனில் நாம் இத்தகைய மனநிலையில் இருக்கும்பொழுது, நம்முடைய புலன்களை அவற்றின் பொருட்களிலிருந்து பிரிப்பது மிகவும் சுலபமானதாகும்.

விருப்பங்களைப் புனிதப்படுத்துவாய்

புலன்கள், வெளியுலகத்துடன் தொடர்புபடுத்திக் கொள்ள விரும்புகின்றன. புலன்களைக் கட்டுப்படுத்த வேண்டும். உபநிஷத காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் செய்ததைப் போல, புலன்களுக்கு உட்புற திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். புலன்களின் செயல்பாடுகளைப்

புனிதப்படுத்த வேண்டும். வேதத்திலுள்ள பிரார்த்தனையானது, 'தேவர்களே! காதுகளால் நாங்கள் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும். பூஜிக்கத்தகுந்தவர்களே கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களைக் காண வேண்டும்' என்று கூறுகிறது.[1] நல்லதையே கேட்க வேண்டும்; நல்லதையே பேச வேண்டும். நல்லதையே பார்க்க வேண்டும். புலன்களுக்கு ஒரு நல்ல இலக்கினைக் கொடுக்க வேண்டும். அவை புனிதமடையட்டும்.

அடுத்ததாக மனம் வருகிறது. அது எப்பொழுதும் குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கிறது. மனத்தை எப்படி அமைதிபடுத்துவது? எல்லாவகையான உணர்ச்சிகளும் விருப்பங்களும் மனத்திற்குச் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. ஆன்மீக மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். விரிவுபடுத்தப்பட்ட விழிப்புணர்வு நிலையை ஒரு சிறிதளவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த கவனமற்றிருக்கும் தன்மைகள் அனைத்தும் போலியானவை. கனவுகளைப் போன்றவை என்று எண்ண வேண்டும். 'காமம், கோபம், பேராசை, மோகம், கர்வம், வன்மம் போன்றவற்றைக் கண்டு அஞ்ச வேண்டாம். பயம் கொள்ளத் தேவையே இல்லை.' அவற்றைப் புனிதப்படுத்துவாய். ஆன்மீகக் கூட்டுறவிற்காக ஏங்குவாய். உன் கோபத்தின் மீது கோபம் கொள்வாய். உன் வழியின் குறுக்கே நின்றுகொண்டுள்ள அனைத்தின் மீதும் கோபம் கொள்வாய். மனிதர்கள் மீது கோபம் கொள்ள வேண்டாம். மிகப் பெரிய செல்வமான கடவுளை நாடுவாய். நீ கர்வம் கொள்ள வேண்டும் எனின், நீ கடவுளுடைய குழந்தை என்று எண்ணியும், அதைப் போன்ற சிலவற்றை எண்ணியும் கர்வம் கொள்வாய். பிறகு என்ன நடக்கும்? நம்முடைய எல்லா விருப்பங்களுக்கும் ஒரு புனிதமான திருப்பம் ஏற்படுத்தப்படுகிறது. அவை நம்மை அதன்பிறகு தொந்தரவு செய்யாது. ஆன்மீக வாழ்க்கையில் அவை நமக்கு உதவி செய்வதாகவும் இருக்கக் கூடும்.

---

1. ரிக் வேதம், 1.89.8.

சமூகத்தில் சில பிரிவினரிடம் ஒரு தவறான கருத்து மேம்பட்டு நிற்கிறது. மேலீடான போக்குடைய மனோதத்துவ நிபுணர்கள் ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகர்களிடம், 'நீங்கள் அனைவரும் உங்களுடைய உணர்ச்சிகளை வலுக் கட்டாயமாக அடக்கிக் கொள்கிறீர்கள் அல்லது ஒடுக்கிக் கொள்கிறீர்கள்' என்று கூறுகின்றனர். நாம் அந்த வகையில் எதையும் செய்வதில்லை. நாம் நம்முடைய புலன்களின் மற்றும் மனத்தின் சக்தியைச் சேமித்துக் கொள்ள விரும்பு கிறோம். நாம் இந்த சக்தியை நம் ஆன்மீகப் பாதையுடன் திருப்ப விரும்புகிறோம். நாம் கடவுளின் சிறப்பைப் பாட விரும்புகிறோம். நாம் கடவுளின் உருவைக் காண விரும்பு கிறோம். அதனால் ஆன்மீக நாட்டம் கொண்டுள்ள சாதகனின் வாழ்வில், கண்ணுக்குப் புலனாகாத பரம்பொருளைக் காண் பதற்குப் புதிய கண்களும் தெய்வீகக் குரலைக் கேட்பதற் காகப் புதிய காதுகளும் மடிப்புவிரியும் ஒரு காலம் ஏற்படு கிறது. அல்லது 'விண்வெளி இசை'யைக் கேட்டு எப் பொழுதுமே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ள வேடிக்கை விளையாட்டை கண்டு மகிழும் ஒரு காலம் ஏற் படுகிறது. ஒருவருக்குக் கடவுளுடன் மகிழ்ச்சியுடன் இருக்க இயலுகிறது. ஆனால் இவ்வனைத்தும் வழியில் இருப்பவை தான். நாம் மேலும் முன்னேற வேண்டும்.

கடவுளின் கோயில்

அனைவராலும் அறியப்பட்டுள்ள கட உபநிஷதத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புமையில் உடலானது தேருக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு ஒப்புமையும் உள்ளது. அதில் உடலானது கோயில் என்றும் அதிலுள்ள இதயப் பகுதி கருவறை என்றும் கூறப்பட்டுள்ளது. இது பேரழகுடன் கூடிய கருத்து ஆகும். இந்தக் கோயிலில் நீ ஒரு பக்தனையும், ஒரு கடவுளையும் காண்கிறாய். நீ அவ்விரு வரையும் இரண்டறக் கலக்குமாறு செய்ய வேண்டும். ஆனால் இந்தக் கோயிலானது மிகவும் சிறப்புத் தன்மை வாய்ந்தது ஆகும். இயற்பொருள் சார்ந்த நம்முடைய இந்தச் சிறு

உடலானது, நம் மனம் சார்ந்த உடல் அல்லது சூட்சுமமான உடலால் ஊடுருவப்பட்டு மாறிமாறி ஒன்றை ஒன்று ஊடுருவி நிற்கின்றன. சூட்சுமமான உடலானது மீண்டும் ஜீவாத்மாவால் ஊடுருவப்பட்டு, மாறிமாறி ஒன்றை மற்றொன்று ஊடுருவி நிற்கின்றது. மற்றும் ஜீவாத்மாவானது பரம் பொருளின் ஒரு பகுதியாகும். உடல், சூட்சும உடல், புலன்கள் மற்றும் மனம் என்னும் இவற்றில் இசைவுடைமையை ஏற்படுத்துவதில் வெற்றி பெறும் பொழுது, நம் உள்ளே ஒளிர்ந்து கொண்டிருக்கும் தெய்வீக ஒளியை மேலும் மேலும் உணர்கிறோம். எனவே நாம் 'இதயம்' என்னும் கர்ப்பக்ருஹத்தில் நுழைகிறோம். மற்றும் 'இதய'மானது ஆன்ம ஒளியால் நிறைந்து இருப்பதைக் காண்கிறோம். மற்றும் இந்த ஒளியானது பரமாத்மனின் ஒரு பகுதியாகும்.

எப்படி தியானம் செய்வது?

நிர்குண தியானத்தை மேற்கொள்ள வேண்டும் எனின், உன் உடல், மனம், முழு உலகத்தையும், மற்றும் அனைத்தையும் கடவுளிடம் மூழ்கச் செய்ய வேண்டும். 'நான் ஒரு சிறு விளக்குக் கோளம் ஆவேன். பரம்பொருளாவது எல்லா இடங்களிலும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் எல்லையற்ற விளக்குக் கோளம் ஆகும்' என்று நினைக்க வேண்டும். ஆனால் நமக்கு உடல் உணர்வு இருக்கும் வரையிலும் இயல்புகளைக் குறித்த உணர்வு மிக அதிகமாக இருக்கும் வரையிலும், நம்மால் இந்த வகையான தியானத்தை மேற்கொள்ள இயலாது. எனவே உன்னுடைய ஆன்மாவானது ஒரு சூட்சுமமான தூய்மையான உடல் (மன உடல்) மற்றும் தூய்மையான இயற்பொருள் சார்ந்த உடலைத் தரித்துள்ளது என்று இப்பொழுது நினைப்பாய். மற்றும் பரம்பொருளானது, நாம் வழிபடும் முழுநிறை நலமான இஷ்ட தெய்வத்தின் வடிவத்தை மேற்கொண்டுள்ளது என்றும் நினைப்பாய்.

இப்பொழுது இதைக் கற்பனை செய்வாய். எல்லையற்ற அன்பாகவும், எல்லையற்ற பேரின்பமாகவும், விளங்கும் எல்லையற்ற தெய்வீக ஒளியில், நாம் பக்தனையும்,

எல்லையற்ற ஒளி, எல்லையற்ற அன்பு உள்ள, எல்லையற்ற பேரின்பத்தின் உருவாக உள்ள இஷ்ட தெய்வத்தையும் காண்கிறோம். ஏதாவது பொருத்தமான மந்திரத்தைக் கூறிக் கொண்டு பரம்பொருளைத் தியானிக்க வேண்டும்.

முதலில் இஷ்ட தெய்வத்தின் பேரின்பமயமான ஒளி பொருந்திய தெய்வீக வடிவத்தைத் தியானிக்க வேண்டும். அதன்பிறகு அவருடைய எல்லையற்ற தூய்மைப்பாடு, அவருடைய எல்லையற்ற அன்பு மற்றும் அவருடைய எல்லையற்ற அருள் போன்றவற்றைத் தியானித்து இறுதியாக அவர் மூழ்கியிருப்பதைப் போல இருக்கும் அவருடைய எல்லையற்ற விழிப்புணர்வு நிலையின் மீது தியானம் செய்ய வேண்டும்.

என்ன நேரிடுகிறது? ஒரு தெய்வீக நாமத்தை மீண்டும் மீண்டும் கூறி, அவருடைய தெய்வீக இருப்பை தியானித்து, ஒரு தன்மையிலிருந்து மற்றொரு தன்மைக்குச் செல்லும் பொழுது, குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழ்கிறது. ஒழுக்க நெறி முறைகளைப் பின்பற்றுவதால் குறிப்பிட்ட அளவு இசைவுடைமையை நிலைநிறுத்துவதில் நாம் வெற்றி பெறுகிறோம் என்று நான் கூறினேன். ஆனால் கடவுளைத் தியானிப்பதின் மூலம் நிலை நிறுத்தப்படும் இசைவுடைமையானது மேம்பட்ட வகையைச் சேர்ந்தது ஆகும். அகத் தூண்டுதலால் நம் மனத்திலும், நம் ஆன்மாவிலும் உண்மையான இசைவுடைமை நிலைநிறுத்தப் பட்டிருக்கும் பொழுது, நாம் இயலுலக அண்டத்தின் இசைவுடைமையுடன் தொடர்பு கொண்டிருப்பதை அறிகிறோம். நம்முடைய உடல் இயலுலக அண்ட உடலின் ஒரு பகுதியாகும்–விராட் புருஷன். நம்முடைய மனம் இயலுலக அண்ட மனத்தின் ஒரு பகுதியாகும்–ஹிரண்யகர்ப்பன், நம்முடைய ஆன்மா, இயலுலக அண்ட ஆன்மாவின் ஒரு பகுதியாகும்–ஈஸ்வரன். ஆன்மீக நெறிமுறைகளைப் பின்பற்றிக் கொண்டு தியானம் செய்யும் பலரும் இத்தகைய விழிப்பு உணர்வு நிலையை அடைகின்றனர். நாம் ஜபம் மற்றும் தியானம் செய்வதைச் சரியான முறையில் பின்பற்றினால் நாம் கண்டிப்பாக சில

தெய்வீகக் காட்சிகள் மற்றும் சிலவகையான தெய்வீக அனுபவங்களால் ஆசீர்வதிக்கப்படுவோம். அது நம்முடைய நம்பிக்கையை அதிகப்படுத்துகிறது. தியானம் செய்யும் வழியில் நம் மனத்தை உறுதிப்படுத்துகிறது.

நம்முடைய மனமானது, தியானம் செய்யப்படும் பொருளிலிருந்து ஓடிவிட விரும்புகிறது. ஆனால் ஒழுக்க நெறிமுறைப் பண்பாட்டைப் பின்பற்றுவதின்மூலம் மனத்தின் இத்தகைய குழப்பங்களைக் குறைப்பதில் நாம் வெற்றி அடைய வேண்டும். மேலும் நம் ஜபம், மற்றும் தியானத்தைச் செய்வதன்மூலம், மனத்திற்கு நாம் ஒரு ஆய்வுப் பொருளைக் கொடுக்கிறோம். அதாவது நாம் திரும்பத் திரும்பக் கூறும் தெய்வீக நாமத்தையும் நாம் கற்பித்துக் கொள்ளும் தெய்வீக வடிவத்தையும் கொடுக்கிறோம். இவ்வனைத்தும் நம் மனத்தைக் குவிமையப்படுத்தவும் மற்றும் நம் கவனத்தை அதில் நிறுத்தவும் பயன்படுகின்றன. நாம் நம்முடைய மனத்தில் சிறிதளவு அன்புடன் கடவுளைப் பற்றி நினைக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இலட்சியத்திற்காக நம் மனத்தில் சிறிதளவு அன்பும், பக்தியும் இருக்குமாயின், ஜபம் மற்றும் தியான வழிகளைப் பின்பற்றுவது நமக்கு சுலபமானதாகிவிடுகிறது.

ஜபமும், தியானமும் என்ன செய்கிறது என்றால் இதைச் செய்கிறது. அவை மனத்தை ஆழ்ந்த கவனம் கொண்டதாகச் செய்கின்றன. அவை அதை உள்ளடக்கி வைத்துள்ளன. நாமமும், தெய்வீக வடிவமும், கருத்தும், கடவுள் மீது கொண்டுள்ள அன்பும் மனத்தை உள்ளுக்குள்ளேயே ஒருமுகப்பட்ட தன்மையுடன் விளங்கச் செய்கின்றன. நாம் தியானம் செய்யும் பொருளின்மீது நம்முடைய ஈடுபாடு வெளிப்புறப் பொருட்களில் நாம் கொண்டுள்ள ஈடுபாட்டை விட அதிகரிக்கும் பொழுது நாம் தியானம் செய்யும் பொருளானது நமக்கு மேலும் மேலும் உண்மையானதாகிறது. மனமானது மிகக் குறைந்த நேரத்திற்காவது கடவுளிடம் ஊன்றி, தெய்வீகமான பேரின்ப வடிவத்தில் ஊன்றி, உன்னதமான இயல்புகளில் ஊன்றி இருக்கிறது. அதன்பிறகு, ஒருவர் தெய்வீக இருப்பை

உணரும் நேரம் வருகிறது. ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகர் களின் வாழ்வில், இந்த கட்டத்தில், கடவுளுடைய வடிவத் தின் புனிதமான காட்சிகளால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதை நாம் கண்டு கொள்கிறோம். பரம்பொருளானது ஏதாவது ஒரு தன்மையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அதற்குப் பிறகு அவர் குருவாகிறார்.

குரு உள்ளேயே இருக்கிறார்

நம்முடைய ஆச்சாரியர்கள் குரு நம்முள்ளேயே இருப்ப தாக நமக்குக் கூறுகின்றனர். ஆன்மீக வாழ்வின் தொடக்கத் தில் வெளியே உள்ள ஒரு குருவிடமிருந்து நாம் உதவியைப் பெறலாம். ஆனால் நாம் முன்னேறும் பொழுது, உண்மை யான குரு உள்ளேயே உள்ளார் என்று உணர்கிறோம். மற்றும் நாம் நம்மை, உள்ளே வீற்றுள்ள குருவின் திருவடிகளில் சமர்ப்பித்துக் கொண்டுவிட வேண்டும். படிப்படியாக அவர் சீடனை ஆன்மீக அனுபவம் என்னும் ஏணியின் கீழ்ப்படி யிலிருந்து மேல்படிகளுக்கு கொண்டு செல்கிறார். நாம் சந்தித்துள்ள புனிதமகான்களுக்கு, அப்படித்தான் ஏற்பட்டு உள்ளது. நமக்கு நம்முடைய மனங்களைச் சரியான சுருதியில் வைப்பது என்பது தெரிந்திருந்தால் நம்மால் புனித மகான் களின் அனுபவங்களை அவர்களுடைய பாடல்களை, அவர் களுடைய இதய உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளை அவர் களுடைய ஆன்மீக ஞானத்தின் வெளிப்படுத்துதல்களை, அவர்களுடைய போதனைகளைக் கேட்க இயலும். உண்மை யிலேயே இத்தகைய அனுபவங்கள் நிகழ்கின்றன. நாம் மனமார ஆன்மீக வழியைப் பின்பற்றினால், அதற்குரிய சில தகுதிகளை நிறைவேற்றியபிறகு, நமக்கு நிச்சயமாக சில ஆன்மீக விளைவுகள் ஏற்படும்.

பரம்பொருளிடம் சரணடைதல்

தியானத்தின் விளைவுகள் நிச்சயமாகப் பின் தொடரும். ஆனால் நாம் ஜபத்தையும், தியானத்தையும் செய்துகொண் டிருக்கும் பொழுது அதிகமான அளவில் விளைவுகளை

எதிர்பார்க்காமல் இருக்க வேண்டும். விளைவுகள் அவை களாகவே வரும். விளைவுகளைப்பற்றி அதிகமாகக் கவலைப் பட்டால், நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சிகளைச் சரியான முறையில் செய்வதற்கு மறந்துவிடுவோம். இங்கு மிகவும் முக்கியமான கேள்வியான, 'பரம்பொருளுக்குச் சரணடை தல்' என்பது எழுகின்றது. யோகாச்சாரியரான பதஞ்சலி முனிவர், 'அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய் வதால் சமாதி உண்டாகிறது' என்று கூறியுள்ளார்.[1] பரம் பொருளுக்கு உன்னை முழுமையாக அர்ப்பிக்க வேண்டும். உன்னுடைய உழைப்பின் உன் ஆன்மீக வாழ்வின் எல்லாப் பயன்களையும் அர்ப்பிக்க வேண்டும். உன்னுடைய சிறிய விருப்பத்தைக் கடவுளின் விருப்பத்துடன் இணைப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அதன் பிறகு ஒரு அற்புதம் நிகழ் கிறது. உள்ளே ஒளிர்ந்து கொண்டுள்ள அந்த உண்மை, அந்த மெய்ப்பொருள், வெளியிலே அனைவரிடமும் ஒளிர்ந்து கொண்டுள்ள மெய்ப்பொருள் தன்னுடைய எல்லாச் சிறப்புக் களுடனும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. அதன் பிறகு ஆன்மாவும், வான்பேருயிரும் இரண்டறக் கலக் கின்றன. சுவாமி விவேகானந்தர், 'சமயமானது அழியாத ஆன்மாவிற்கும், அழியாத கடவுளுக்கும் உள்ள நிரந்தரத் தொடர்பு ஆகும்' என்று சமயத்தின் பொருளை வரையறை செய்துள்ளார்.[2] ஆனால் அதை நாம் உணர்வதற்காக, ஒரு முகப்படுத்தப்பட்ட நம்பிக்கையுடன் பலவகையான நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

உறுதியான மனப்பான்மையை வளர்த்துக் கொள்

இங்கு, நாம் எங்கு இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளும் மிக முக்கியமான கேள்வி வருகிறது. நீ பரம் பொருளை எத்தகைய மனப்பான்மையுடன் அணுக வேண் டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நம்மிடையே

1. ஸமாதி ஸித்தி ஈச்வரப்ரணிதானாத் ॥

—பதஞ்சலி யோக சூத்திரங்கள், 2.45.

2. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.316.

ஒருசிலர் மட்டுமே பரம்பொருளை அவர் நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மா என்று அணுகுவதற்குப் பொருத்த மான தகுதியுடையவர்களாக இருக்கிறோம். நாம் குழந்தை களைப் போல இருக்கிறோம். ஒரு குழந்தை, தந்தை அல்லது தாயைச் சார்ந்து இருப்பதைப் போல நாம் பரம்பொருளைச் சார்ந்து இருக்க விரும்புகிறோம். நமக்கு ஒரு நண்பன் வேண்டும். நமக்கு ஒரு வாழ்க்கைத் துணை வேண்டும். நமக்கு நம்மை விரும்பும் ஒருவர் வேண்டும். நாம் அவரை நம் அன்பின் மையமாக, நம் உணர்ச்சியின் மையமாக வைத்துக்கொள்ள இயலும். இப்பொழுது, கடவுள் அங்கு உள்ளார். அவர், இந்த கணக்கற்ற தெய்வீக வடிவங்களிலும் உறவுகளிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். அவர்களில் யாராவது ஒருவரை எடுத்துக்கொள்ள வேண்டும். ஹிந்து சமயத்தின் பல்வேறு வகையான உட்பிரிவுகளை நாம் ஆராய்ந்ததில், பக்தன், தன் ஆன்மீக வாழ்வைக் கடவுளை குருவாகவோ, தந்தையாகவோ, தாயாகவோ அல்லது தெய் வீகக் குழந்தையாகவோ கூட வழிபடுவதுடன் தொடங்கு கிறான் என்பதைக் கண்டுகொண்டுள்ளோம். கடவுளைக் குழந்தை கிருஷ்ணனாகவும், குழந்தை இராமனாகவும் அன்பு செலுத்தும் பக்தர்களும் உள்ளனர். வேறு சில பக்தர்கள், இந்தப் பிரம்மாண்டத்தைப் படைத்துள்ள அன்னையை அவளுடைய பல்வேறு தன்மைகளிலுள்ள துர்கா, காளி, உமா, அல்லது குமாரியாக வழிபட விரும்பு கின்றனர். இந்த எல்லா வகையான வழிபாடுகளின் மூலமும் அல்லது தியானத்தின் மூலமும் மனமும் இதயமும் தூய்மை யடைகின்றன. ஏற்கனவே கூறி இருப்பதைப்போல ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுவதால் நமக்குக் கிடைக்கும் தூய்மைப்பாடு போதாது. நமக்கு ஒரு உயர்ந்த வகையைச் சார்ந்த, தூய்மைப்பாடு வேண்டும். ஆன்மா தன்னை உடல், புலன்கள் மற்றும் மனத்திடமிருந்து பிரித்துக்கொள்வது மட்டுமின்றி அற்பமான அகங்காரத்திடமிருந்தும் பிரித்துக் கொள்ளத்தக்க, ஆன்மா விஞ்சி மேம்பட வேண்டிய கடைசி பிணைப்பிலிருந்தும் பிரித்துக் கொள்ளத்தக்க தூய்மைப்பாடு வேண்டும். நாம் மேலே குறிப்பிட்டுள்ள உயர்ந்த வகையைச்

சார்ந்த வழிபாடு அல்லது தியானத்தின் மூலமே அது சாத்தியமாகும்.

அனைவரிடமும் ஒரே ஆன்மா

ஆன்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் இடையில் கூட்டுறவு ஏற்படுத்தப்பட வேண்டும். ஒப்புயர்வற்ற பரம்பொருளாக, ஒப்புயர்வற்ற குரு அவருடைய சிறப்பியல்புகளை வெளிப் படுத்திக் கொள்ளும் பொழுது, பக்தன் அவன் வழிபட்டுக் கொண்டிருந்த கடவுள், அவனுள்ளே மட்டுமின்றி அனை வரிடம் வெளிப்படுகிறார் என்று உணர்கிறான். அதற்குப் பிறகு ஒரு புது வாழ்க்கை, நிறைவான வாழ்க்கை தொடங்கு கிறது. ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் கூறுவதைப்போல,

'யோகத்தில் ஊன்றிய உள்ளமுடையவன், எங்கும் சம நோக்கு உடையவனாக, ஆன்மாவை எல்லாப் பொருட்களி லும் உறைவதாகவும், எல்லாப் பொருட்களும் ஆன்மாவிடம் உள்ளனவாகவும் காண்கிறான்.'[1] பக்தன் உணர்கிறான், உள்ளே உள்ள ஆன்மா வெளியிலும் உள்ளது என்றும் அறிந்து கொள்கிறான். அனைவரிடமும் கடவுள் வெளிப்பட்டு இருப் பதைக்கண்டு, எல்லோரிடமும் அவன் கடவுளை வழிபடுகிறான்.

ஒருவருடைய முக்திக்காகவும் மற்றும் உலக நன்மைக்காகவும்

இப்பொழுது, புரிந்துகொள்ள வேண்டிய ஒரு விஷயம் உள்ளது. நாம் மிக உயர்ந்த ஆன்மீக அனுபவத்தை அடை வதற்கு முன்பே, நாம் கடவுளின் தனிப்பட்ட இயல்பை வழி பட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, உயர்ந்த உலகளாவிய மனப்பான்மையானது வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும். நான் கடவுளை குருவாகக் கருதி, என்னைத் தொண்டனாக எண்ணி அவரை அணுகினால், அதே நேரத்தில் என்னுடன் இருப்பவர்களையும் மறக்காமல் இருக்க வேண்டும். நாம் அனைவருமே பரம்பொருளின் தொண்டர்கள் ஆவோம்.

---

1. பகவத் கீதை, 6.29.

நாம் கடவுளை நம்முடைய தந்தையாகவோ அல்லது தாயாகவோ கருதினால், நம்முடன் இருப்பவர்களை அதே கடவுளின் குழந்தைகள் என்று கருத வேண்டும். கடவுளை நம் அனைவருடைய ஆன்மாக்களின் ஆன்மா என்று எண்ணும் தைரியம் நமக்கு இருக்குமாயின், நாம் அனைவரும் உட னொத்த ஆன்மாக்கள், சாசுவதமாகக் கடவுளுடன் இணைக்கப் பட்டுள்ளவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மற்றும் கடவுளுடன் நமக்குள்ள இந்தத் தொடர்பினால், ஒருவர் மற்றவருடன் இணைக்கப்பட்டுள்ளோம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். அதன்பிறகு நம் வாழ்க்கை யானது ஒரு புதிய திருப்பத்தை அடைகிறது. செயல்பாடும் வழிபாடும் கைகோத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்று நமக்குக் கூறிய பெரியோர்கள். 'ஒருவருடைய முக்திக்காக வும் மற்றும் உலக நன்மைக்காகவும் இந்த குறிக்கோளை உன் முன்பு நிறுத்திக் கொள்வாய்' என்றும் நமக்குக் கூறியுள்ளனர். உன்னுடைய ஆன்ம ஞானத்திற்காகவும், அல்லது ஆன்மீக விடுதலைக்கும் நீதான் முயற்சி செய்ய வேண்டும். அதே நேரத்தில் அனைவரின் நலத்தை உயர்த்தவும் முயற்சி செய்ய வேண்டும். ஆன்மஞானமடைந்த ஒருவர் மட்டுமே ஒவ் வொருவரிடத்திலும் கடவுளைக் காணவியலும். மற்றும் அவருடைய தொண்டானது, அகத் தூண்டுதலுடன் கூடியதாக இருக்கும். ஆனால் நம்மிடையே இன்னும் அறியாமையுடன் இருப்பவர்கள் கடவுள் மூலம் நாம் ஒவ்வொருவருடனும் இணைக்கப்பட்டுள்ளோம் என்று உறுதியுடன் கற்பனை செய்ய வேண்டும். நாம் நம்முடைய நலனை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யும் பொழுது, அனைவரின் நலனை யும் உயர்த்துவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

இங்கு, 'செயல்பாடும், வழிபாடும் கைகோர்த்துக் கொண்டு செல்ல வேண்டும்' என்று நமக்கு வழங்கப்பட்டுள்ள போதனையானது ஒரு புதிய பொருளுடன் விளங்குகிறது. நாம் தியானம் செய்வதில் முன்னேற்றமடையும் பொழுது நாம் அகவளர்ச்சி அடைய முயற்சி செய்து கொண்டிருக்கும் பொழுது நாம் நம் குடும்பத்திலுள்ளவர்களுக்காக மட்டும்

செயலாற்றாமல் மற்றவர்களின் நலனுக்காகவும் செயலாற்ற வேண்டும். இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமாயின் இந்த உலகத்தில் என்ன அழகான ஒழுங்குமுறை இருந் திருக்கும்! நம்மில் ஒவ்வொருவரும் தன்னைப்பற்றி நினைப் பதைப் போன்றே மற்றவர்களைப் பற்றியும் நினைத்தால், நாம் கண்டிப்பாக இன்னும் அதிகம் பெறுவோம். பொதுவாக ஒரு தன்னலத்துடன் கூடிய மனநிலையில் நாம், 'எனக்கு என் னிடம் மட்டுமே ஈடுபாடு உள்ளது' என்று நினைக்கிறோம். ஆனால் நம்முடைய கண்ணோட்டம் விரிவடையும் பொழுது, நாம், நாம் அனைவரும் அகல்விரிவான முழுமையின் பகுதிகள் என்பதை உணர்கிறோம். அதன்பிறகு நாம் அனை வருடனும் பெரிய பண்பொற்றுமையையும், நெருக்கத்தை யும் உணர்கிறோம். ஒவ்வொருவரும் 'செயல்பாடும் வழி பாடும்' என்னும் குறிக்கோளை, இத்தகைய கண்ணோட்டத் துடன் உண்மையான வாழ்வில் பொருந்துமாறு செய்து கொண்டால், நம் வாழ்வானது இனிமை நிறைந்ததாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கும் மற்றும் ஆன்மீக விழிப்புணர்வானது பல்வகைப்பட்ட பண்புகள் நிறைந்த மெய்ந்நிகழ்வாக இருக்கும்.'

நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சிகளையும் தொண் டையும் செய்துகொண்டிருக்கும் பொழுது, அகங்காரம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டாம். நம் உழைப்பின் எல்லாப் பயன்களையும் கடவுளுக்கு அர்ப்பிப்போம். ஸ்ரீராம கிருஷ்ணர், 'நாம் கடவுளை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தால், கடவுள் நம்மை நோக்கி பத்து அடிகள் எடுத்து வைப்பார்' என்று கூறுவார். ஆன்மீக உலகத்தில் உணரப்பட வேண்டிய ஒரு உண்மை இது. எனவே முன்னேறுவாய். கடவுள் எப்பொழு தும் உன்னைக் காப்பாற்றி, உன்னை வழிநடத்திச் செல் லட்டும். நீ உன்னுடைய இதயத்தைக் கடவுளின் இருப்பால், தூய்மைப்பாடால் அன்பால் அருளால் நிறைத்துக்கொள்வாய்.

20
ஒருமுகப்படுத்துதலும் மற்றும் தியானமும்

ஒருமுகப்படுத்தப்படும் அனைத்தும் தியானமல்ல

பொதுவாக ஒருமுகப்படுத்தப்படுவதற்கும் தியானத்திற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். 'தியானம்' என்னும் சொல்லால், நாம் ஆழ்ந்து நினைத்தல் என்னும் பொருளைக் கொண்டுள்ளோம். அது சாதாரணமான ஒருமுகப்படுத்தப்பட்ட நிலை அல்ல. அது ஒரு சிறப்பான வகையைச் சேர்ந்த ஒருமுகப்படுத்தப்பட்ட தன்மையாகும். முதலாவதாக தியானமானது, முழுமையான விழிப்பு உணர்வுடன் கூடிய செயற்பாங்கு ஆகும். இது மனத் திட்பத்தின் ஒரு பயிற்சியே ஆகும். இரண்டாவதாக தியானம் என்றால், ஒரு ஆன்மீகக் கருத்தின் மீது ஒருமுகப்படுத்தப் படுவது என்பது பொருளாகும். உலகியல் கருத்துக் களிலிருந்து சாதகன் விஞ்சி மேம்படுவான் என்பதை இது முன் ஊகிக்கிறது. மற்றும் இறுதியாக தியானமானது பொது வாக குறிப்பிட்ட விழிப்புணர்வு மையத்தில் செய்யப்படுவது ஆகும். உண்மையான தியானம் என்பது முற்றிலும் உயர்ந்த நிலையைச் சார்ந்தது ஆகும். மிக நீண்ட பயிற்சிக்குப் பின்னரே அடையத் தக்கது என்பதும் தெளிவாகிறது. அது நீண்ட கால நெறிமுறைகளின் விளைவு ஆகும்.

பொதுவாக தியானம் என்று அறியப்படுவது அப் பெயரைப் பெறும் தகுதியற்றதாக விளங்குகிறது. மனமானது பலவகையான கெட்ட எண்ணங்களாலும், மற்ற போக்கு களாலும் நிலைகுலைவு அடைந்துள்ளது. உலகியல் தொடர்பான விஷயங்கள், கடவுளைக் குறித்து ஆழ்ந்து

நினைப்பதிலிருந்து மனத்தைத் திசை திருப்பி விடுகின்றன. மீண்டும் மீண்டும் முயற்சி செய்து, மனத்தை உள்ளிழுத்து அதைக் கடவுளிடம் நிலைநிறுத்துவதுதான் ஆன்மீக நாட்டம் கொண்ட பெரும்பாலான சாதகர்களின் நிலையாக உள்ளது. அத்தகைய ஒரு நிலை, பொதுவாக தியானம் என்று சொல்லப் படுகிறது. உண்மையாக அது பிரத்யாஹாரம் ஆகும். வெளியே செல்லும் மனத்தை மீண்டும் உள்ளே இழுத்துக் கொள்ளுவது ஆகும். அதே எண்ணத்தில் மனத்தை ஆழ்ந்து, ஒரு சிறிது நேரத்திற்கு நீடித்து நிலைக்கச் செய்வது அடுத்த நிலையான தாரணம் ஆகும். வெளியே செல்லும் போக்குகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டு, மனமானது இறை வனைப் பற்றிய ஆழ்ந்து சிந்தனையில் நீரோட்டமாகத் தொடர்ந்து பாயுமானால், அதுதான் உண்மையான தியானமாகும்.

உலகியலில் நாட்டம் கொண்ட மனிதனின் ஒருமுகப் பட்ட தன்மையானது அவனுடைய முழு மொத்தமான ஆக்கப் பொருள் கூறுகளின் ஆதாயத்திலும், இலாபத்திலும், மகிழ்ச்சியிலுமுள்ளது. ஒரு விஞ்ஞானியின் ஒருமுகப்பட்ட தன்மையானது அவனுடைய பரிசோதனைகளில் உள்ளது. உதாரணமாக அணுவின் அமைப்புமுறை அல்லது ஒரு செடி யின் ஆக்க அமைவு என்பன போன்றவற்றில் உள்ளது. ஒரு மனோதத்துவ விஞ்ஞானியின் ஒருமுகப்பட்ட தன்மை யானது, எண்ணங்களின் விதிமுறைகள் மற்றும் அவைகளின் இயக்கங்களில் உள்ளது. ஒரு யோகியின் ஒருமுகப்பட்ட தன்மையானது, அகங்காரம் மற்றும் அகங்காரமற்ற தன்மை யைப் பகுத்து ஆராய்வதில் உள்ளது. புறஉணர்வு நிலைக்குரிய கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து அறியும் பொழுது இவ் வனைத்தும் பல்வேறு வகையான ஒருமுகப்பட்ட தன்மை களாக உள்ளன. ஆனால், அகஉணர்வு நிலைக்குரிய கண் ணோட்டத்துடன் ஆழ்ந்து ஆராயும் பொழுது, அவைகளின் உட்பொருட்கள் பரவலான நிலையில் வேறுபடுகின்றன. மற்றும் அவை முற்றிலும் வேறுபட்ட அனுபவங்களுக்கும், விளைவுகளுக்கும் வழிகாட்டுகின்றன. ஆன்மீகத்தில்

நாட்டம் கொண்டுள்ள சாதகனின் ஒருமுகப்பட்டதன்மை தான், அவன் எந்த வழியைப் பின்பற்றினாலும் அது மட்டுமே தியானமாகும். அல்லது ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருப்பது ஆகும்.

பொதுவாக, கடவுள் நம்பிக்கை என்பது எப்படிப் புரிந்துகொள்ளப்படுகிறதோ, அத்தகைய கடவுள் நம்பிக்கை இல்லாத உண்மையை நாடும் யோகி காலம் மற்றும் ஆகாயத்துடன் தொடர்பு உடைய புலன்களால் உணரத்தக்க மூலக் கூறுகளில் தியானம் செய்யத் தொடங்கலாம். அதன் பிறகு, காலம் மற்றும் ஆகாயத்தின் வரையறைக்கு அப்பாற் பட்ட மூலக் கூறுகளை அவன் எடுத்துக் கொள்ளலாம். அதன்பிறகு அவன் சூட்சுமமான மூலக் கூறுகளை அவனுடைய ஒருமுகப்பட்ட தன்மை மற்றும் தியானங்களுக்கான பொருட்களாக எடுத்துக் கொள்ளலாம். முதலில் காலம் மற்றும் ஆகாயத்தின் வரையறைக்கு உட்பட்டும், அதன்பிறகு அவைகளின் வரையறைக்கு அப்பாற்பட்டும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் முன்னேறி, மனம் அல்லது ‘உள் உறுப்பு’ அதன்பிறகு அகங்காரமே கூட அவனுடைய ஒருமுகப்பட்டதன்மை மற்றும் தியானத்தின் பொருளாக விளங்குகிறது. மற்றும் இந்தப் பொருட்களின் உண்மையான இயல்பை அறிந்தவனாக வரையறைப்படுத்தும் இத்தகைய துணைப் பொருட்களில் தன்னை அடையாளம் கண்டு கொள்வதை அவன் தவிர்க்கிறான். அவன் தன்னுடைய உண்மையான இயல்பின் மிக அருகில் வந்திருப்பதால், ஒரு அற்புதமான நிலையிலுள்ள பேரின்பத்தையும், ஆன்மீக அறிவொளியையும் அனுபவிக்கிறான்.

வேதாந்த முறையைப் பின்பற்றும் சாதகன், கடவுள் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை உடையவன், முதலில் காலம், ஆகாயம் போன்ற வரையறைகளுடன் தொடர் புடைய ஒரு புனிதமான ஒருவரின் வடிவம் அல்லது படத்தின் மீதோ அல்லது கடவுளின் குறியீட்டு அடையாளமாகத் திகழும் ஒரு பொருளின் மீதோ தியானிக்கலாம். அதன்பிறகு இத்தகைய வரையறைகள் ஏதுமின்றித் தியானிக்கலாம்.

மேலும் முன்னேறி புனிதமான ஒருவரின் இதயத்தின் மீதோ அல்லது தெய்வீக மனத்தின் மீதோ தியானித்து படிப்படியாக அதனுடன் தொடர்புடைய உன்னதமான இயல்புகளை மனத்தில் வாங்கிக் கொள்ளக்கூடும். அதன்பிறகு தனித்த தூய்மையான விழிப்பு உணர்வின் மீதோ, அல்லது இயலுலக அண்டத்தின் விழிப்பு உணர்வின் மீதோ தியானித்து, அதன்மூலம் தன்னுடைய தூய்மையற்ற வரையறைக்கு உட்பட்ட விழிப்புணர்வு நிலையைத் தூய்மை செய்துகொண்டும், விரிவுறுத்திக் கொள்வதில் வெற்றியடைந்தும் அவனுள்ளேயே உள்ள எல்லையற்ற பரம் பொருளிடம் தொடர்பு கொண்டு மற்றும் மிக மேம்பட்ட ஞானத்தை அடைவதற்கு முன்னேறுகிறான். அதில் தியானம் செய்பவன், ஒரு உப்பு பொம்மை கடலுடன் தொடர்பு கொள்ள வருவதைப் போல முழுமுதற் மெய்ப் பொருளுடன் இரண்டறக் கலக்கிறான். இவ்விதம், தனித்த விழிப்புணர்வுடன் தொடர்பு உடைய பலவகையான ஒருமுகப்பட்ட தன்மைகள் மற்றும் தியானத்தில் தொடங்கி பகுக்க வியலாத பரம்பொருளை, முழுமுதற் மெய்ப்பொருளை மிக உயர்ந்த மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை அவன் அடையவியலும், அதில் அகப்பொருள் புறப்பொருள் தொடர்புகள் அனைத்தும் இல்லை. எல்லாத் தொடர்புகளும் முழுமையாகக் கடக்கப்பட்டுள்ளன.

ஒருமுகப்படுத்தப்படுவதற்கு தானாகவே எத்தகைய ஆன்மீகத் தகுதியும் இல்லாமல் இருக்கலாம். ஏற்கனவே கூறியுள்ளதைப்போல அதில் பயிற்சி மேற்கொள்பவன், ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட அளவு மனத் தூய்மையை அடையாமல் இருந்தால், அதே நேரத்தில் மேம்பாடு அடையும் நடைமுறையையும் தொடர்ந்து மேற்கொள்ளாமல் இருந்தால் அது ஆபத்தானதாகவும் கூட இருக்கலாம். மனமானது அதனுடைய மாசு, அழுக்கு, கெட்ட பதிவுகள், போக்குகள் போன்றவற்றிலிருந்து எந்த அளவிற்குத் தூய்மையடைந்துள்ளதோ, அந்த அளவிற்கு ஒருமுகப்படுத்தும் தன்மையும், தியானமும் பயனுள்ளதாக அமையும். தொடர்ந்து செய்யப்படும் கெட்ட செயல்களாலும், கெட்ட எண்ணங்களாலும்,

இவ்வனைத்தும் மனத்தில் சேர்வதற்கு அனுமதிக்கப்பட்டதால் அந்நிலை ஏற்படுகிறது. மிகப் பெரிய அளவில் பற்றற்ற தன்மை மற்றும் தூய்மைப்பாடை அடைவதால் மட்டுமே சாதகனால் உயர்ந்த வகையைச் சார்ந்த ஒருமுகப்பட்ட தன்மையையும், தியானத்தையும் மேற்கொள்ள இயலும். அது இறுதியாக மிக உயர்ந்த ஆன்மீக அனுபவத்திற்கும், முக்திக்கும் அழைத்துச் செல்கிறது.

ஒவ்வொரு சராசரி மனிதனிடமும், ஒருமுகப்பட்ட தன்மையைப் பயிற்சி செய்வதற்குரிய திறமை உள்ளது. ஆனால் அந்தத் திறமையானது பொதுவாக மனிதர்களிடமோ, அல்லது இந்த உலகத்தால் அவனுக்கு பரிசாக அளிக்கப்படும் ஆதாயத்தைத் தரத்தக்க பொருட்கள் அல்லது இன்பத்தின் பக்கமோ திருப்பிவிடப்பட்டு விடுகிறது. ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்றுவதற்காக திடீரென்று புதிய தனிப்பட்ட நுட்பத் திறமைகள் தோற்றுவிக்கப்பட வேண்டியது இல்லை. பழைய திறமைகளுக்கும், மனப்பான்மைகளுக்கும், அவைகளின் தீவிரத்தைத் குறைக்காமல் கடவுளை நோக்கிய திருப்பமானது கொடுக்கப்பட வேண்டும். அதன் பிறகு, உலகியலில் நாட்டம் கொண்ட மனிதன் ஆன்மீக மனிதனாகப் படிமாற்றம் அடைகிறான். எனவே உண்மையான பக்தன். 'கடவுளே, அறியாமை நிறைந்தவன் உலகியல் பொருட்களை நெஞ்சார நேசிப்பதைப்போல நான் உன்னை அத்தகைய உறுதியான அன்புடன் நினைக்க வேண்டும். மற்றும் அந்த அன்பு ஒருபொழுதும் என் மனத்தில் குறையாமல் உறைந்திருக்க வேண்டும்'[1] என்று பிரார்த்திக்கிறான்.

ஒழுக்க நெறிமுறைகளின் அவசியம்

நம்முடைய மனமானது எப்பொழுதும் நம்மை ஏமாற்றவும், நம்மை மோசம் செய்யவும் தயாராக உள்ளது. எனவே நாம் செய்யும் அனைத்திலும் நாள்தோறும் நமக்குக்

1. யா ப்ரீதிரவிவேகானாம் விஷயேஷ்வனபாயினீ ।
த்வாமநுஸ்மரத: ஸா மே ஹ்ருதயான்மா அபஸர்பது ॥
—விஷ்ணு புராணம், 1.20.17.

கண்டிப்புடன் கூடிய ஒழுங்குமுறை தேவையானதாகும். இந்த அவசியமான மனப் பயிற்சியை எப்படி அடைவது? தியான வாழ்க்கையில் அதுதான் முதன்மையான சிக்கலாக உள்ளது. நம்முடைய மனங்களில் பலவகைப்பட்ட எண்ணங்கள் தொடர்ந்து பயிராகிக் கொண்டு இருக்கின்றன. நாம் நம் மனத்தை அமைதிப்படுத்த விரும்பும் பொழுது அது மிகவும் குழப்பமடைந்த நிலையை அடைகிறது. நாம் ஒருமுகப்படுத்த முயற்சிக்கும் அந்தக் கணத்திலேயே அது எதிர்க்கிளர்ச்சி செய்கிறது. அது திடீரென்று வலிமை நிறைந்த ஒரு கடல் வடிவத்தை எடுத்துக் கொள்கிறது. அதில் நாம் மூழ்கிவிடும் அபாயம் ஏற்படுகிறது. மனத்தின் முழுமையான மேற்பரப்பானது வலிமையான எண்ண அலைகளால் குழப்பம் அடைகிறது. மற்றும் நாம் அதை அமைதிப்படுத்து வதற்கு முயற்சிக்கும் அளவிற்கு அவை வலிமை அடை கின்றன. எனவே தியானமானது முதலில் நம்மை அமைதிப் படுத்துவதற்கும், நமக்கு ஒளியை அளிப்பதற்கும் பதிலாகச் சோர்வு அடையச் செய்கிறது.

குதிரைக்குப் பயிற்சியளிப்பவரின் நிலையைப்போல அவர் குதிரையைப் பணியவைப்பதற்குப் பெரிய அளவில் முயற்சியை மேற்கொள்வதைப்போல, நம் மனத்தைப் 'பணிய' வைப்பதற்கு, நாம் பெரிய அளவில் விடாப்பிடியுட னும், விடா முயற்சியுடனும் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப் பட்ட ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஆன்மீக ஒழுங்கு நெறிமுறைகளில் எல்லாவற்றைப் பொறுத்த மட்டிலும் பெரிய அளவில் வரையறுக்கப்பட்ட எல்லைகள் இருக்க வேண்டும். இரு கால்களையும் இரு வேறுபட்ட படகுகளில் வைத்துக் கொள்வதற்கு நமக்கு இயலாது. நாம் என்றாவது ஒருநாள் இலட்சியத்தை அடைய விரும்பினால், உறுதி இன்றித் தடுமாறாமல், படிப்படியாக உறுதியான ஒரு வழிமுறையை பின்பற்றக் கற்றுக் கொள்ள வேண்டும்.

உண்மையான சமயத்தின் வழியில் பொதுவாக உடல் மீது உள்ள ஆசையும், நம் விருப்பங்களும் குறுக்கிடு கின்றன. வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று, சமயத்

தொடர்பான போதனைகளைக் கேட்டுக் கொண்டு, அதன் பிறகு ஒருவர் விரும்பியபடியே செய்யும் போலித் தன்மையை நாம் பொதுவாக வாழ்வில் காண்கிறோம். அது உண்மையான சமயம் அல்ல. கிறிஸ்தவத்திற்கு இது இலாபகரமாக இருக்கக்கூடும். ஆனால் ஏசுநாதரின் போதனைகளைப் பின் பற்றுவது இது அல்ல. எல்லா வகையான ஆன்மீகப் பயிற்சிகளுக்கும் முறையான ஒழுக்க நெறிமுறைகள் அவசியமானதாகும். ஆன்மீகப் பயிற்சிகள் இல்லாமல், உண்மையான சமயம் என்று எதுவும் இருக்கவியலாது. தொடக்கக் காலத்திலிருந்த கிறிஸ்தவர்கள் இதை முழுமையாக அறிந்திருந்தனர். வரலாற்றில் இடைக்காலப் பகுதியில் வாழ்ந்த பல சிறந்த ஞானிகளும் இதனை உணர்ந்திருந்தனர். ஆனால் இப்பொழுது இந்த மரபு முழுமையாக மேற்கத்திய நாடுகளில் மறைந்து விட்டது போலுள்ளது. அதனால்தான் மேற்கத்திய நாடுகள் காட்டு மிராண்டிகளின் மட்டத்திற்கு இறங்கிக் கொண்டுள்ளன.

முதலேயே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல மனமானது கட்டுப்பாடற்ற குதிரையைப் போல உள்ளது. மற்றும் அது கட்டுப்படுத்தப்பட வேண்டும். நாம் குதிரையின் மீது சவாரி செய்ய விரும்பும் பொழுது, குதிரையானது இரு வழிகளில் செயல்படுகிறது. அடங்காமல் முரண்டு செய்கிறது. அல்லது படுத்துக்கொண்டு நகர்வதற்கு மறுக்கிறது. அது ஒரே சீராக இருப்பதற்கு விரும்புவதில்லை. நம் மனக்குதிரையின் கட்டுப்பாடற்ற தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நீதி நெறிமுறையுடன் கூடிய தன்மையானது தேவைப்படுகிறது. பாலுணர்வு குறித்த எண்ணங்களும், பணத்தைப் பற்றிய எண்ணங்களும் அதை ஆதிக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்படும் வரையில், அதைப் பணிய வைக்க, கட்டுப்படுத்த இயலாது.

மனத்தூய்மையின் அவசியம்

நீ மனத் தூய்மையடையாமல் தியானம் செய்ய முயற்சி செய்தால், நீ கடவுளைக் குறித்துத் தியானம் செய்வதைவிட,

உன் மனத்திலுள்ள அழுக்குகளைக் குறித்து தியானம் செய்ய நேரிடலாம். சாதகனை உயர்ந்த எண்ணங்களில், நீண்ட நேரம் தோய்ந்திருக்கச் செய்வதற்காக, மேம்பட்ட மையங்கள் திறக்கப்பட வேண்டும். இங்குதான் பிரார்த்தனை மற்றும் நல்ல செயலைச் செய்வதன் முக்கியத்துவமும் முன் நிற்கின்றன.

அனுபவமற்றவரைத் தனிப்பட்ட தியான வழியைப் பின்பற்றுவதற்கு அனுமதித்தல் கூடாது. நம்முடைய துறவி மடம் சார்ந்த அமைப்பின் விதிமுறைகளில் நாம் இதை ஒருபொழுதும் அனுமதிப்பது இல்லை. நீ உன்னுடைய எண்ணங்களுக்கு முழுமையான எஜமானன் ஆகாதவரை யிலும், ஆன்மீக வாழ்வின் தொடக்க கால கட்டத்தில், அதிக மான அளவில் தியானம் செய்வது ஆபத்தானது ஆகும். நீ தனிமையில் அமர்ந்து மனத்தை அமைதிப்படுத்த முயற்சிக் கும் பொழுது, விலக்கத்தக்க தூய்மையற்ற எண்ணங்கள் உன் உள்ளத்தில் தோன்றி, குழப்பத்தை விளைவிக்கும். இவை உன்னை அடக்கி ஆளவும் கூடும். தொடக்க நிலைகளில், சிறிது நேரத்தை மட்டும் தியானத்திற்காகச் செலவிடுவது நல்லதாகும். மற்ற நேரங்களைச் செயல் செய்வதிலும், தொண்டாற்றுவதிலும், அல்லது வாசிப்பிலும் பயனுள்ள தாகச் செலவிட வேண்டும்.

தொடக்க கால நூற்றாண்டுகளிலிருந்த கிறிஸ்தவத் துறவிகளின் வாழ்க்கைகளிலிருந்து கிறிஸ்தவ துறவு மனப் பான்மை இதைத்தான் அறிந்துகொண்டது. அதிலிருந்து கத்தோலிக்க திருச்சபையானது, ஆழ்ந்த சிந்தனையுடன் கூடிய பயன்தரத்தக்க செயல் கூட்டுறவை விவேகத்துடன் வற்புறுத்தி நடைமுறைப்படுத்தி உள்ளது.

உயர்ந்த வாழ்க்கைக்காகத் தங்களைச் சரியான முறையில் ஆயத்தம் செய்து கொள்ளாதவர்களுக்கு, விருப்பங்களையும், உணர்வுகளையும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தூய்மைப் படுத்தாமல், மேன்மைப் படுத்தாமல் இருப்பவர்களுக்கு மனத்தை ஒருமுகப்படுத்துவது மிகவும் ஆபத்தானதாகிறது.

அது பல கெட்ட விளைவுகளுக்கு அழைத்துச் சென்று விடும். ஒரு வழியில் நாம் அனைவரும் மனத்தை ஒருமுகப்படுத்து கிறோம். ஆனால் நமக்கு அதை எப்படிக் கையாள வேண்டும் என்று தெரிவதில்லை. இந்த ஒருமுகப்படுத்தப்பட்ட மன மானது புலனின்பங்களின் பின்னாலும், மற்றும் எல்லாவகை யான உலகியல் ஈர்ப்புக்களின் மற்றும் பொருட்களின் பின் னாலும் ஒருமுகப்படுத்தப்பட்டு இருப்பதால் மிகவும் தீவிர மாக ஓடும். எனவே, நமக்கு மனத்தைச் சரியான முறையில் எப்படிக் கையாள வேண்டும் என்று தெரியாமலிருந்தால், அது நம்மை வழி தவறிய பாதைக்கு அழைத்துச் சென்று விடும். ஒரே நேரத்தில் தூய்மைப்பாட்டையும், மேம் பாட்டையும் அடையவில்லை எனின், மனத்தை ஒருமுகப் படுத்தாமல் இருப்பது மிகவும் நல்லதாகும். அதனால், எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் தூய்மைப்பாடு, அகிம்சை, சத்தியம், தற்கட்டுப்பாட்டின் அவசியமானது மிக வும் வலியுறுத்தப்பட வேண்டும். நாம் நம்முடைய விருப்பங் களையும், உணர்வுகளையும் மேம்படுத்திக் கொள்ளாமல், ஆன்மீகப் பாதையில் நம்மால் முன்னேற்றமடைவதற்கு இயலாது. நாம் கண்டிப்புடன் கூடிய வகைப்படுத்தப்பட்ட ஒழுக்கவியலையும் நெறிமுறைகளையும் பின்பற்றத் தொடங்கிய பிறகுதான் நாம் மனத்தை ஒருமுகப்படுத்து வதற்கும், தியானம் செய்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும். ஒருமுகப்படுத்தப்பட்ட மனது தூய்மையடையவில்லை எனின் அசலான பேயாகி, ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டுள்ள சாதகனுக்கு முடிவற்ற தொல்லைகளை ஏற்படுத்துகின்றன.

உடல், மற்றும் மனத் தூய்மையானது முற்றிலும் அவசிய மானதாகும். சில நேரங்களில் நாம் உடல் தூய்மையை மட்டும் வலியுறுத்தும் தவறைச் செய்கிறோம். ஏனெனில் உண்மையான மனத் தூய்மையை அடைவது மிகமிகக் கஷ்டமானதாகும். நீராடுவதால் மட்டுமே தங்களை நிறைவு செய்துகொள்ளும் பலர் உள்ளனர். ஆனால் அவர்கள் தூய்மையான மனத்தைப் பெறுவதற்கு அவர்களைக் கஷ்டப் படுத்திக் கொள்வதில்லை. எப்படி இருப்பினும், ஒரு

அழுக்கடைந்த மனத்தை மேம்பட்ட விஷயங்களில் ஒருமுகப் படுத்துவது இயலாததாகும். ஒரு ஆணிடம் ஒரு பெண்ணைப் பற்றிய தூய்மையற்ற எண்ணமோ, அல்லது ஒரு பெண் ணிடம் ஒரு ஆணைப் பற்றிய தூய்மையற்ற எண்ணமோ இருக்கும் வரையில், உண்மையான உயர்ந்த ஒருமுகப் படுத்தப்படும் தன்மையானது அவனுக்கோ, அல்லது அவ ளுக்கோ ஏற்படுவது சந்தேகமே. வெளிப்படையான எத் தகைய உடல் தொடர்பான தொடர்புகளும் இல்லாமலிருக்க லாம். இருந்தபோதிலும் அது பாலுணர்வு தொடர்பானது தான். பாலுணர்வுத் தன்மை ஏதாவது ஒரு வகையில் இருக் கும் வரையில், தூய்மைப்பாடை அடைய வியலாது. மற்றும் தூய்மைப்பாடு இல்லாமல், மேம்பட்ட ஆன்மீக வாழ்க்கை யானது வெகு தொலைவில் உள்ளது ஆகும்.

ஆசனம்

அடுத்ததாகக் கவனிக்கத் தக்கது தடுமாற்றமில்லாத சீராக உள்ள ஆசனமாகும். பொதுவாக அமரும் நிலையில் உள்ள ஆசனமாகும். பதஞ்சலி முனிவர், உறுதியானதாகவும் சுகமானதாகவும் உள்ள ஒரு ஆசனத்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.[1] குந்தியிருக்கும் நிலையானது, சந்தேகத்திற்கு இடமின்றி மிகவும் பயன்தரத் தக்கது ஆகும். ஏனெனில் உடலின் பாரமானது அந்த ஆசனத்தில் முற்றிலும் சரிசமநிலை யுடன் உள்ளது. ஆனால் அது சுலபமானதாக இருக்க வேண் டும். இல்லை எனின் அந்த நிலை ஆன்மீகப் பயிற்சியை மேற் கொள்ள முயற்சிப்பவனின் மனத்தைத் தொல்லைப்படுத்தும். இந்தியர்களுக்கு அது இயல்பான நிலை ஆகும். ஆனால் மேற் கத்திய நாட்டைச் சேர்ந்த பெரும்பாலானவர்களுக்கு அதற் கான மிகுந்த பயிற்சியானது தேவைப்படலாம். சிலருக்கு அதைச் செய்யவே இயலாமலும் போகலாம். எப்படியிருப் பினும் அதைச் செய்ய இயல்பவர்களுக்கு ஆன்மீகப் பயிற்சிக்கு அமர்ந்துள்ள நிலைதான் மிகச் சிறந்த ஆசனமாகும்.

---

1. பதஞ்சலியின் யோக சூத்திரங்கள், 2.46.

இலயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சி

இலயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சியானது ஒரு சிலருக்கு மிகவும் உதவிபுரிகிறது. மனமும், மூச்சும் எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன ஆகும். மற்றும் அவை எப்பொழுதும் ஒன்று மற்றொன்றின்மீது செயல்பட்டுக் கொண்டுள்ளது. பிராணாயாமம் செய்யும் பொழுது, மூச்சை உள்ளே இழுப்பதும் உள்ளே நிறுத்திக் கொள்வதும், வெளியிடுவதும் 1:4:2 என்னும் விகிதத்தில் இருக்க வேண்டும். மிகவும் முனைப்புடனும், மட்டுமீறிச் செயல்படுபவர்களும் பிராணாயாமப் பயிற்சியை மேற்கொள்வது அத்தனை அறிவுடைய செயல் ஆகாது. ஆனால் எளிமையான, ஒழுங்குமுறையுடன் கூடிய மூச்சுப் பயிற்சி அனைவருக்கும் நல்லது ஆகும். எப்படி இருப்பினும், மூச்சை உள்ளே நிறுத்தி வைத்துக் கொள்வது மட்டுமே போதாது. அப்படி இருந்திருக்குமாயின், காற்று நிரப்பப்பட்ட கால் பந்தானது உலகத்திலுள்ள யோகிகளிலேயே மிகச் சிறந்த யோகியாக இருந்திருக்கும். இலயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சியுடன் தூய்மைப்பாடு பற்றியும் நாம் தீவிரமாக எண்ண வேண்டும். 'எல்லாமே தூய்மையானது, நானே தூய்மையானவன், நான் தூய்மையின் உருவம்' என்னும் உறுதியான ஆலோசனைகளை உன் மனத்திற்குக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மூச்சுடனும் அதை உணர வேண்டும். உன் உடலும், உன் மனமும் மேலும் மேலும் தூய்மையடைந்துகொண்டுள்ளன. தூய்மையை உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். தூய்மையையே வெளியேற்ற வேண்டும். உன்னைத் தூய்மையால் நிறைத்துக் கொள்ள வேண்டும். அமைதியை உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். அமைதியையே வெளியேற்ற வேண்டும். உன்னை முழுமையாக அமைதியால் நிறைத்துக் கொள்ள வேண்டும். அல்லது அமைதியை உள்ளே இழுத்துக் கொண்டு, மனக்குழப்பங்கள் அனைத்தையும் வெளியேற்றி விட வேண்டும். பற்றற்ற தன்மையையும், தன்னல மறுப்பையும் உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும். உன் உடலிலும், மனத்திலும் உள்ள

எல்லா தூய்மைக் கேடுகளையும் வெளியேற்றிவிட வேண்டும். ஆற்றலை உள்ளே இழுத்துக் கொண்டு, எல்லா பலவீனத்தையும், பயத்தையும் வெளியேற்றிவிட வேண்டும். இத்தகைய தீவிரமான ஆலோசனைகளை உன் மனத்திற்கு மீண்டும் மீண்டும் வழங்கிக் கொண்டே இருக்க வேண்டும். உண்மையான தியானத்தைத் தொடங்குவதற்கு முன்பு இவ்விதம் செய்ய வேண்டும்.

தியானத்தின் உள்ளடக்கம்

தியானமானது வெற்றிடத்தை நோக்கிக் குவி மையப் படுத்தப் படுதல் கூடாது. தொடக்க நிலையிலிருப்பவன் அவனிடத்தில் வெற்றிடத்தை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்தல் கூடாது. அவன் அப்படிச் செய்தான் எனின், அவன் உணர்வுகள் மழுங்கக் கூடும் அல்லது அந்த வெற்றிடத்தில் தூய்மையற்ற எண்ணங்கள் நிரம்பி விடும். தியானத்தில் சில வரையறுக்கப்பட்ட, எதிர்மறையற்ற ஆன்மீக உட் பொருட்கள் இருக்க வேண்டும். நிர்குண தியானத்தை மேற் கொள்பவர்கள் அது மிகவும் அருவமாக உள்ளது என்று உணர்ந்தால் அவர்களின் உணர்வுகளை ஏதாவது புனிதமான வடிவத்தில் மையப்படுத்த வேண்டும். இது இருவழிகளில் மிகவும் பயன் அளிக்கக் கூடியது ஆகும். ஒருவரை அகங் காரத்திலிருந்து தொலைவிலே அழைத்துச் செல்கிறது. மற்றும் ஒருவருடைய உணர்வுகளை மேன்மைப்படுத்து கிறது. நீ விரும்பிய அல்லது வெறுத்த ஒருவருடைய படம் உன்னை எப்பொழுதாவது தொந்தரவு செய்தால், அதற்கு எதிராக நீ தேர்ந்து எடுத்துள்ள உனது ஒளிரும் புனிதமான இஷ்ட தெய்வத்தின் வடிவத்தைக் கட்டமைத்து விட வேண்டும். எந்த மனிதருடைய நினைவு உன்னைத் தொல்லைப்படுத்திக் கொண்டு உள்ளதோ, அந்த மனிதரின் மீது உனக்கு உள்ள உணர்விற்கு எதிராக இஷ்ட தெய்வத்தின் மீது உன் உணர்வு கலக்கப்பட்டு உணர்வுகளும், கடவுளின் படங்கள் மற்றும் உணர்வுகளுடனும் மாறுபடுத்தப்பட வேண்டும். இவ்விதம் செய்பவர்கள், மிகுதியான அளவில்

தொந்தரவுகள் இன்றி, ஆன்மீக வாழ்வில் விரைந்து முன்னேறுவார்கள். இஷ்ட தெய்வத்திடம் தீவிரமான அன்பையும், ஈர்ப்பையும் உணரும் ஒருவன் தியானம் எளிமையானது என்று கண்டு கொள்வான்.

ஒழுக்கவியல் குறித்த பண்பாடின்றி, நம்மால் ஒரு பொழுதும் கடவுளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள இயலாது. முழுமையான வெற்றிடத்தை நம்முள்ளே ஏற்படுத்திக் கொண்டபிறகு, நம்மால் சரியான எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ள இயலுமாயின் அது நல்லதாகும். அதன் பிறகு இத்தகைய பயிற்சி முறையானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால், தொடக்க நிலையில் இருப்பவனுக்கு இது மிகவும் ஆபத்தானதாகும். ஏனெனில் வெற்றிடத்தை ஏற்படுத்திக் கொண்டபிறகு, சரியான எண்ணத்தைப் பெறுவதில் அவன் வெற்றியை அடையவதில்லை. அவன் தூங்க நேரிடும் அல்லது அவனுடைய ஆழ் மனத்தால் ஆதிக்கம் செலுத்தப்படுவான். தொடக்க நிலையில் இருப்பவனைப் பொறுத்தமட்டில் அவனுடைய மனமானது அவனது விழிப்புணர்வு நிலையின் நுழைவாயிலிற்குக் கீழேயே விழுந்துவிடக் கூடிய ஆபத்து உள்ளது.

பலமனிதர்கள், ஆன்மீக வாழ்க்கையை ஏணியின் மேல் படியிலிருந்து தொடங்க விரும்புகிறார்கள். ஆனால் அவ்விதம் செய்ய இயலாது. ஆன்மீக வாழ்க்கையில் நெடுந் தாண்டுதல்கள் (Long jumps) இல்லை. ஒருவர் உண்மையாக எந்த அளவு முன்னேறி உள்ளார் என்பதை முதலில் அறிந்து கொள்ளாமல் எதையும் சாதிக்கவியலாது. தத்துவத்தைக் குறித்த உயர்ந்த சிந்தனையோ அல்லது வியக்கத்தக்க நுண்பொருள் ஆய்வுக் கோட்பாடு இயல் சார்ந்த (Metaphysical) கனவுகளோ கடவுளை உணர்வது என்ற பொருளைத் தராது. மற்றும் அவைகள் தாமே கடவுளை உணர்வதற்கு வழியையும் காட்டுவதில்லை. அவை உண்மையான அல்லது நடைமுறை வாழ்வுடன் எந்தத் தொடர்பும் இல்லாத, புலப்படாத, மிக நுணுக்கமான ஊகங்களின் பால் அழைத்துச் செல்கிறது. அவைகளில் ஈடுபட்டுள்ள மனிதனின் வாழ்வை அவை எந்த

விதத்திலும் மாற்றுவதில்லை. நாம் எங்கு நின்று கொண்டுள்ளோம் என்பதை நாம் அறிந்துகொண்டு பிறகு அங்கிருந்து தொடர வேண்டும். நாம் தொடக்க நிலையில் உள்ளவர்களாகத் தொடங்கி, மற்றும் ஒவ்வொரு அடியாகச் செல்ல வேண்டும். ஒருபொருண்மைவாதமானது (Monism) ஒரு குறிக்கோளாக நமக்குச் சரியானதாக இருக்கலாம். ஆனால் நடைமுறைப் படுத்தும் தன்மைகளுக்கு இறங்கி வந்தால், நாம் த்வைதிகளாக இருக்கிறோம். மற்றும் நீண்ட நெடுங்காலத்திற்குத் த்வைதிகளாகவே இருப்போம். நான் எப்பொழுதும் யாராவது உண்மை, முழுமுதற் பொருள் போன்றவற்றைக் குறித்து மிக உயர்வாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டால் வியப்படைவேன். ஏனெனில் பெரும்பாலானவை ஒன்றுமற்ற கற்பனை ஊகக் கோட்டைகளாகவும் மற்றும் சாரமற்ற சொற்களாகவும் உள்ளன. வேறு ஒன்றுமில்லை. அவை, ஒரு குறிப்பிட்ட மனிதன் துறவற வாழ்க்கைக்குத் தகுதியானவன் என்பதைக் கூடக் காட்டுவதில்லை. ஒருவன் ஒருபொருண்மை வாதத்தால் ஈர்க்கப்படுகிறானோ, இல்லையோ, அவன் எந்த விதத்திலாவது இருபொருண்மை வாதநிலையிலிருந்தால், அவன் ஒருபொருண்மைவாதி ஆக மாட்டான்.

பெரும்பாலும், நவீன மனிதனின் மனமானது கண்டிப்பு மிகுந்த, விதிமுறைக்கு உட்பட்ட தியானம் என்னும் கருத்தைக் குறித்து எதிர்க்கிளர்ச்சி செய்கிறது. அவன் 'நான் ஏன் நம்மை அதனுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்? நமக்கு இவ்வுலகத்தில் போதுமான அளவிற்கு வேலை இல்லையா? எனவே நம்மை ஈர்க்காத ஒன்றைக் குறித்த பயிற்சிகளை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? நமக்குக் கடவுள்தான் வேண்டும். எனவே ஜபத்தாலும், தெய்வீகத் தன்மைகளாலும், தெய்வீக வடிவங்களாலும் என்ன பயன் ஏற்படப்போகிறது? நாம் முழுமையை அடைவோம். நாம் கடவுளை 'உண்மையிலும் உணர்விலும்' வழிபடுவோம்' என்று கூறுகிறான். இவ்வனைத்தும், சந்தேகத்திற்கு இடமின்றி, முழுநலம் வாய்ந்தவையாக, மதிப்பு உடையனவாக உள்ளன. மற்றும் மிக உயர்ந்த ஆன்மீகத் தன்மை உடையனவாகவும் உள்ளன. ஆனால் நாம்

உண்மையான நடைமுறை வாழ்க்கைக்கு இறங்கி வந்தால், இந்த வகையான சிந்தனையானது எதையும் ஏற்படுத்துவ தில்லை என்று கண்டு கொள்கிறோம். பெரும்பாலும் அத் தகைய மனிதர்கள், அவர்களுடைய தினசரி வாழ்க்கையின் செயல்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் உறுதிப்படுத்தப் பட்ட இருபொருண்மைவாதிகளே, கடவுளை 'உண்மை யிலும் உணர்விலும் வழிபடுவது ஒரு குறிக்கோளாகச் சரி யானதாக உள்ளது. ஆனால் எத்தனை மனிதர்கள் உண்மையில் அவ்விதம் செய்கின்றனர்? அதுதான் விஷயமாகும். பெரும் பாலான மனிதர்கள் பரம்பொருள் அல்லது உண்மையுடன் எத்தகைய தொடர்புமற்ற மங்கலான உணர்வு மற்றும் மங்க லான எண்ணத்துடன் ஒரு வகையில் செயல்படுவது என்றே கருதுகின்றனர்.

விழிப்புணர்வு மையம்

அடுத்தது என்ன? ஆசனம் மற்றும் இலயத்துடன் கூடிய மூச்சுப்பயிற்சிக்குப் பிறகு கடவுளைக் குறித்து எங்கு நினைக்க வேண்டும்? ஒருவருடைய விழிப்புணர்வு மையத்தை எங்கு வைத்துக் கொள்ள வேண்டும்? தலையிலோ, அல்லது இதயத் திலோ வைத்துக் கொள்ள வேண்டும். இந்த இரு மையங்களும் அனைவருக்குமே பாதுகாப்பானது ஆகும். ஒருபொழுதும் இதயத்திற்குக் கீழே உள்ள மையம் தேர்ந்து எடுக்கப்படக் கூடாது. இங்கு தனி நபருக்கு மட்டுமே அறிவுரைகள் வழங்கப் பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிட மிருந்து வேறுபடுகின்றனர். ஆனால் தலை மற்றும் இதயம் என்னும் இரண்டும் எப்பொழுதும் பாதுகாப்பானது ஆகும். நாம் விழிப்புணர்வுடன், நரம்பு சார்ந்த ஓட்டத்தை நம் உட லுடன் தொடர்புடைய இதயம் உள்ள இடத்திற்குச் சற்றேறக் குறைய பொருத்தமான மட்டத்திற்காவது உயர்த்தாமல் இருந் தால் ஆன்மீகத் தொடர்பான தியானத்தைச் செய்யவியலாது. இத்தகைய விழிப்புணர்வுடன் கூடிய ஒருவருடைய நரம்பு சார்ந்த ஓட்டத்தை உயர்த்துவது என்பது ஒருவரைப் புலன் களின் மருட்சிகளுக்கு அப்பால் அழைத்துச் சென்று அவரை

ஒழுக்கவியல் மற்றும் நீதிநெறிமுறைகளின் பண்பாட்டில் உறுதியாக நிலைபெறச் செய்கிறது. பெரும்பாலான மனிதர் களுக்கு இதயத்தில் தியானம் செய்வது உகந்ததாகும். மிகவும் உணர்ச்சி வசப்படும் மனிதர்களுக்கு இதய மையம் உகந்ததாக இருக்காது. எனவே அது தவிர்க்கப்பட வேண்டும். அவர்கள் தலைப் பகுதியில் ஒருமுகப்படுத்துவதை மேற்கொள்ளுவது நல்லதாகும். அவர்கள் சிறிது காலத்திற்குப் பிறகு இதயம் உள்ள மட்டத்திற்கு வரலாம். அதுதான் மேம்பட்ட விழிப் புணர்வின் நுழைவாயிலாக உள்ளது.

ஒரு விழிப்புணர்வு மையமாக இதயம்

நாம் ‘இதயம்’ என்னும் சொல்லை மிகவும் தாராளமாகப் பயன்படுத்துகிறோம். நாம் உண்மையில் அதை எப்படிப் பொருள் கொள்கிறோம்? அது உடலுடன் தொடர்புடைய இதயமா? குழிவான தசைப்பற்றுக்களாலாகிய மாறிமாறி நிகழும் சுருங்கி விரிவடையும் தன்மையால் இரத்த ஓட்டத்தை உடலில் நடைபெறச் செய்யும் உறுப்பான இதயமா? ஒருமுறை ஒரு சீடர் சுவாமி பிரம்மானந்தரிடம், ‘சுவாமி, நான் எந்த மையத்தில் தியானத்தை மேற்கொள்ள வேண்டும்? இதயத்திலா அல்லது தலையிலா?’ என்று கேட் டார். அதற்கு சுவாமி பிரம்மானந்தர், ‘அன்பிற்குரியவனே, நீ விரும்பும் மையத்தில் தியானத்தை மேற்கொள்ளலாம், ஆனால் நான் உனக்கு, முதலில் இதயப்பகுதியில் தியானத்தை மேற்கொள்வாய் என்று அறிவுறுத்துகிறேன். இதயத்தாமரையில், உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் மீது தியானம் செய்வாய்’ என்று கூறினார். அந்தச் சீடர் மீண்டும், ‘சுவாமி, இதயமானது தசையாலும், இரத்தத்தாலும் உரு வானது. அங்கு நான் எப்படிக் கடவுளைப் பற்றி நினைக்க இயலும்?’ என்று கேட்டார். அதற்கு சுவாமி பிரம்மானந்தர், ‘நான் உடல் கூறு அமைப்பைச் சேர்ந்த இதயத்தைக் குறிப் பிடவில்லை. அந்த இதயத்திற்குப் பக்கத்தில் உள்ள ஆன்மீக மையத்தைப் பற்றி நினைப்பாய். தொடக்கத்தில், நீ கடவுளை உடலின் உட்புறத்தில் இருப்பவராக நினைப்பதால் நீ சதை

மற்றும் இரத்தம் குறித்து எண்ணலாம். ஆனால் நீ விரை விலேயே உடலைப் பற்றி மறந்து விடுவாய். மற்றும் அங்கு பேரின்பமயமான வடிவிலுள்ள தேர்ந்து எடுக்கப்பட்ட இலட்சியம் மட்டுமே எஞ்சியிருக்கும்.'[1]

சில நேரங்களில் நாம் நம் இதயம் உள்ள பகுதியைச் சுட்டிக்காட்டி, நம்முடைய உணர்ச்சிகளைக் குறிப்பிடுகிறோம். 'என்னுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து' என்று கூறுகிறோம். அதை உணர்ச்சிமயமான 'இதயம்' என்று அழைக்கலாம்.

உடல் தொடர்பான உணர்ச்சி தொடர்பான இதயங் களைத் தவிர, ஆன்மீக இதயம் அல்லது இதயமையம் அல்லது அனாஹத சக்கரம் என்று கூறப்படும் மற்றொரு இதயம் உள்ளது. பெரும்பாலும் ஒரு தாமரையைப் போல படம் போடப்பட்டிருக்கும் 'இதயத்தாமரை' ஆகும். அது தான் மேம்பட்ட ஆன்மீக விழிப்புணர்வு நிலையின் நேரடி யான உணர்வின் இருப்பிடமாகும்.

மிக வியக்கத்தக்க இந்த மனித உடலில், பல சக்கரங்கள் உள்ளன. அதாவது விழிப்புணர்வு நிலையின் மையங்கள் உள்ளன. ஒவ்வொரு சக்கரமும் மனிதனின் இயற்பொருள் சார்ந்த, மனம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த உடல்கள் சந்திக்கும் இடமாக உள்ளது. கீழே உள்ள மூன்று சக்கரங்களும் கழிவுப் பொருட்களை வெளியேற்றும் உறுப்பு உள்ள பகுதியிலும் இனப்பெருக்கம் செய்யும் உறுப்பு உள்ள பகுதியிலும் கொப்பூழ் உள்ள பகுதியிலும் உள்ளன. இவை மனிதனின் கீழ் நிலையில் உள்ள வாழ்வான, விலங்கின் வாழ்வான, புல னுணர்விற்கு ஆட்பட்ட வாழ்வுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதயப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மையமானது நான் காவது சக்கரமான அனாஹத சக்கரமாகும். இச்சக்கரம் கீழே உள்ள மூன்று மையங்களுக்கும், மேலே உள்ள மூன்று மையங் களுக்கும் இடையில் உள்ளது. இதயமும் மற்றும் மேம்பட்ட மூன்று மையங்களும் மனிதனின் ஆன்மீக வாழ்வுடன்

1. The Eternal Companion, *பக்கம் 347-348.*

இணைக்கப்பட்டவையாகும். மேம்பட்ட மூன்றுமையங்களும் முறையே தொண்டைப் பகுதியிலும், இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள பகுதியிலும், தலையிலும் அமைந்துள்ளன. நீ இந்த மையங்களை இயல் உடல் சார்ந்தவைகளாகப் புரிந்து கொள்ளக் கூடாது. இவை, வெவ்வேறு மட்டங்களிலுள்ள ஆன்மீக விழிப்புணர்வு நிலையின் நுழைவாயில்கள் ஆகும்.

தந்திர முறையைச் சார்ந்த ஆச்சாரியர்களின் கருத்துப்படி குண்டலினி அல்லது மனிதனில் மறைந்துள்ள ஆன்மீக சக்தி யானது, நீ அதைத் தூய்மையான விழிப்புணர்வு நிலை என்றும் கூறலாம், தொடக்கத்தில் தலைமையம் அல்லது ஸஹஸ்ராரத் தில் இருந்தது. அந்தச் சக்தி ஸுஷும்னா என்னும் ஆன்மீகப் பாதை வழியாக பல விழிப்புணர்வு மையங்களின்மூலம் கீழ்முக மாகச் சென்று, முதுகெலும்பின் கீழ்ப் பகுதியை அடைகிறது. அது அங்கு தன்னையே மறந்துவிட்டது. அது அறியாமையின் தள்ளாட்டத்தில் இருந்தது. மற்றும் ஆசைகளாலும், உணர்ச்சி காளலும் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. அது திரும்பிச் செல் லும் வழியை மறந்து விட்டது. ஆன்மீக வாழ்வில், நம் முடைய உண்மையான இயல்பை நினைவுபடுத்திக் கொண்டு, நம் விழிப்புணர்வை கீழே உள்ள மையங்களிலிருந்து மேலே உள்ள மையங்களுக்கு உயர்த்துவதுதான் முக்கியப் பணி யாகும். இதயமானது கீழே உள்ள மையங்களுக்கும், மேலே உள்ள மையங்களுக்கும் இடையில் இருப்பதால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அங்கு நம்முடைய தியானத்தை மேற்கொள்வது நமக்குச் சுலபமானதாகும்.

இதய மையத்தின் முக்கியத்துவம்

மேலும், இதய மையமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் நம்மிடம் நம் ஆன்மாவின் ஆன்மா வாக குடிகொண்டுள்ள பரம்பொருளின் ஒளியை நீ முதலில் அங்குதான் உணர்கிறாய். அது நம்முடைய இஷ்ட தெய்வத் தின் மேலான இருப்பிடமாகும். கடவுளின் பக்தர்களுக்கு இதய மையமானது இயல்பாகவே தியானம் செய்வதற்குச் சிறந்த இடமாக உள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ணர், 'ஆண்டவனின் லீலை யார் மூலமாக வெளிப்படுகிறதோ, அவரிடம் விசேஷ சக்தி காணப்படுகிறது. ஜமீன்தார் எல்லா இடங்களிலும் தங்கலாம். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட வரவேற்பறையில் அவரைப் பெரும்பாலும் காண இயலும். பக்தனே பகவானின் வரவேற்பறை பக்தனின் உள்ளத்தில் திருவிளையாடல் புரிவதை பகவான் விரும்புகிறார். பக்தனின் உள்ளத்தில் அவரது விசேஷ பக்தி வெளிப்படுகிறது. அத்தகைய பக்தனின் அடையாளம் என்ன? பெரிய பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்ற இடங்களில் இறைவனின் விசேஷ சக்தியின் வெளிப்பாடு உள்ளது.'[1] என்று கூறுவார்.

அறிவு ஜீவிகளுக்கு மூளைப் பகுதியில் தியானம் செய்வது சுலபமானதாக இருக்கும். ஆனால் அவர்களுக்கும் இதய மையத்திலேயே தொடங்குவது நல்லதாகும். உபநிஷதங்களில் எல்லாப் பகுதிகளும் முக்கியமாக ஞானத்தையே போதிக்கின்றன. அதில் இதயமானது, முக்கியமான விழிப்புணர்வு மையமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

'இறைவன் எல்லாம் அறிந்தவர், அனைத்து அறிவு வடிவானவர். ஆனந்த வடிவினர், அழிவற்றவர். இந்த உலகம் யாருடைய மகிமையோ, அந்த இறைவன் ஒளிமயமான இதயத்தினுள் உள்ள வெளியில் ஆன்மாவாக ஒளிர்கிறார். மனமாக அமைந்து, பிராணனையும், உடலையும் வழி நடத்துகிறார். இதயத்தில் நிலைபெற்றவராக உடல் முழுவதும் வியாபித்திருக்கிறார். விழிப்புணர்வு பெற்றவர்கள் தங்கள் புத்தியால் அவரை அறிகிறார்கள்'[2]

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.507.
2. ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்யைஷ மஹிமா புவி ।
திவ்யே ப்ரஹ்மபுரே ஹ்யேஷ வ்யோம்ன்யாத்மா ப்ரதிஷ்ட்டித: ॥
மனோமய: ப்ராணசரீரநேதா
ப்ரதிஷ்ட்டிதோऽன்னே ஹ்ருதயம் ஸன்னிதாய ।
தத்விஜ்ஞானேன பரிபச்யந்தி தீரா
ஆனந்தரூபம் அம்ருதம் யத்விபாதி ॥
—முண்டக உபநிஷதம், 2.2.7-8.

நம்முடைய ஆன்மீக ஆச்சாரியர்கள், இதயமானது புனித மான மையமாகும், அது பரமாத்மாவின் மேலான இருப் பிடம் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர். அங்கு அவர், நம்முடைய ஆன்மாக்களின் ஆன்மாவாகக் குடிகொண் டுள்ளார். மிகவும் உணர்ச்சி வசப்பட்டு மனிதர்கள் சிறிது நேரத்திற்கு, இரு புருவங்களுக்கு நடுவில் உள்ள இடத்திலோ அல்லது மூளையின் மையத்திலோ தியானம் செய்யலாம். அவர்களுடைய உணர்ச்சிகளை கீழே உள்ள மையங்களில் விழாமல் தடுத்து நிறுத்துவதற்கு இவ்விதம் செய்யலாம். ஆனால் ஆன்மீக அனுபவங்கள் இதய மையத்திலிருந்தே தொடங்குகின்றன.

இதயத்துடன் பொருந்துகிற விழிப்புணர்வு மட்ட மானது, பக்தன் எங்குக் கடவுளின் தனித் தன்மைகளின் திருக் காட்சிகளால் வாழ்த்தப்படுகிறானோ அந்த மட்டமாகும். அவன் 'உள்ளே உள்ள ஒளியை'யும், தேர்ந்து எடுக்கப் பட்ட இலட்சியத்தின், அல்லது இஷ்டதெய்வத்தின் ஒளி பொருந்திய வடிவத்தைக் காண்கிறான். அத்தகைய திருக் காட்சிகள் எப்பொழுதும் அவற்றுடன், அவன் உடலிலிருந்து வேறுபட்டுள்ள ஆன்மா என்னும் மெய்ப்பிப்பையும் கொண்டு வருகின்றன. பிறகு பக்தன், தான் ஒரு ஆன்மா என்றும் தூய்மையான மனஉடலையும் தூய்மையான இயல் உடலை யும் பெற்றுள்ளதாகவும் உணர்கிறான். மற்றும் பரம்பொரு ளும் ஒரு பேரின்பமயமான வடிவத்தை, அவனை வாழ்த்துவ தற்காகப் புனைந்து கொண்டுள்ளது என்றும் உணர்கிறான்.

பக்தனானவன் இதய மையத்திற்குள் நுழைவதில் வெற்றியடைந்தவுடன், அவனுடைய உடல் உணர்வு மறக்கப் பட்டு விடுகிறது. மற்றும் அந்த நேரத்திற்காவது அவன் கடவுளின் அருள்மயமான, ஒளியுடன் கூடிய இருப்பை உணர்ந்தவனாக இருக்கிறான். அவனுடைய ஆன்மீகப் பயிற்சிகளின் விளைவாக, அவன் ஒரு சூட்சுமமான உணர்வை வளர்த்துக் கொள்கிறான். அந்த உணர்வு அவனை இதய மையத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளும் படிச் செய்கிறது. அதன்பிறகு அவன் இதய மையத்தில்

தியானம் செய்வதின் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்கிறான். மற்றும் தெய்வீகத் தோற்ற அமைதி என்றால் என்ன என்பதையும் புரிந்துகொள்கிறான்.

இதய மையம் எங்குள்ளது?

நம்முடைய ஆன்மீக விழிப்புணர்வு எழுச்சி அடையும் பொழுது, நாம் சாசுவதமான இறைவனுக்கும் சாசுவதமான ஆன்மாவிற்கும் இடையிலுள்ள சாசுவதமான தொடர்பை உணர்கிறோம். ஆனால் மனிதர்களுக்கு இத்தகைய பரிசோதனைகளையெல்லாம் அவர்களாகவே செய்து கொள்வதற்குப் பொறுமை எங்குள்ளது? அவர்கள் வந்து கேள்விகளை மட்டும் கேட்கின்றனர். பல சமயங்களில் சீடர்களுக்கு இதய மையத்தின் முக்கியத்துவத்தை விளக்கியபிறகு, அவர்களைச் சிறிதளவு ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ளுமாறு கூறினால், அவர்கள் அதைச் செய்யாமலே வந்து இதய மையம் எங்குள்ளது? வலப்பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளதா? அல்லது இடப் பக்கத்தில் உள்ளதா? என்று கேட்பார்கள். அதை நீயாகத்தான் கண்டுபிடிக்க வேண்டும். அது உன்னுடைய இதயம். என்னுடைய இதயம் அல்ல. நீதான் கண்டுபிடிக்க வேண்டும். இந்த சாசுவதமான கேள்வி உள்ளது. ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகன் இந்த சூட்சுமமான உள் உணர்வை வளர்த்துக் கொள்வது அவனுடைய உண்மையான கடமைப் பொறுப்பு ஆகும். தூய்மைப்பாடு, தற்கட்டுப்பாடு மற்றும் தீவிரமான ஆன்மீக வேட்கையில்லை எனின், இதய மையமானது திறக்கப் படாமலும் கண்டுபிடிக்கப்படாமலும் இருக்கும்.

எனக்கு இங்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. சைனாவில் அமெரிக்காவைச் சார்ந்த ஒரு மருத்துவருக்கும், சைனாவைச் சார்ந்த ஒரு மருத்துவருக்குமிடையில் ஒரு பெரிய விவாதம் நடைபெற்றது. அமெரிக்காவைச் சார்ந்த மருத்துவர், 'எங்களுடைய உடல் நூல் வல்லுனர்களின் கருத்திற்கு ஏற்ப, இதயமானது இடதுபக்கத்தில் உள்ளது' என்று கூறினார். அதற்கு சைனாவைச் சார்ந்த மருத்துவர்

'எங்களுடைய நூல்கள், இதயம் வலது பக்கத்தில் உள்ளதாகக் குறிப்பிடுகின்றன' என்று கூறினார். ஒரு எளிமையான விவாதமானது ஒரு பெரிய வாய்ச்சண்டையாக வலுத்தது. ஒவ்வொருவரும் தன்னுடைய வாதத்தால் மற்றவரை மூழ்கடிக்க விரும்பினர். அதன்பிறகு மதிநுட்பம் வாய்ந்த கூட்டத் தலைவர் வந்தார். அவர் 'அன்பிற்கு உரியவர்களே, என்ன விஷயம்? ஏன் இது போன்று சண்டையிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார். அந்த இரு மருத்துவர்களும் தங்களுடைய சிக்கலை விவரித்தனர். அந்த முதியவர் சிரித்துக் கொண்டே, 'அன்பிற்கு உரியவர்களே, இதயம் வலது பக்கத்தில் இருந்தால் என்ன? அல்லது இடது பக்க்ததில் இருந்தால் என்ன? இதயமானது சரியான இடத்தில் இருக்கட்டும்' என்று கூறினார். எனவே நாம் உடலுடன் தொடர்புடைய இதயத்தையும், எல்லா கோட்பாடுகளையும் மறந்துவிட்டு, சரியான இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இதயமானது வலது புறத்திலோ, அல்லது இடது புறத்திலோ இல்லை. நாம் பொதுவாக, மனத்திற்கு உகந்த, மனத்திற்கு உகந்ததற்ற நம் உணர்ச்சிகளின் விளைவுகளை உணரும் மார்பின் நடுப்பகுதியின் அருகில் உள்ளது என்பது பல ஆன்மீகப் பெரியவர்களின் கருத்து ஆகும். அவர்களில் எவருமே உடலுடன் தொடர்புடைய இதயத்தைக் குறிப்பிடவில்லை. உடலின் நடுப்பகுதியில் உள்ள ஒரு இடத்தில் அவர்கள் ஆகாசம் என்று அழைப்பது உள்ளது. நீ அதனை ஆகாசம் என்று அழைக்கக் கூடும். தியானமானது, எது மனத்தில் இருக்கிறதோ, எது அதை நிரப்புகிறதோ மற்றும் எது அதன் வரம்பைக் கடக்கிறதோ, இதயத்தில் உள்ள இந்த ஆகாசத்தில்தான் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப்பொழுது, நாம் இதயம் என்று அழைக்கும் ஆன்மீக மையத்தின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம். அங்கு, சிறிது விழிப்புணர்வை உணர்வதற்கு முயற்சி செய்வாய். பிறகு ஒரு சிறிதளவு பகுத்தறிவின் உதவியுடன் இங்குள்ள சிறிதளவு விழிப்புணர்வானது, உடல் முழுவதும் ஊடுருவிச் செல்லும் விழிப்புணர்வாகும் என்று

நினைக்க வேண்டும். அது உண்மையல்லவா? நாம் உடலின் எந்தப் பகுதியையாவது தொடுகிறோம். அது பக்கவாதத்தால் தாக்கப்படாமல் இருப்பின், நாம் அந்த உணர்வை உணர் கிறோம். அதைப் போன்றே, இந்த விழிப்புணர்வானது நம் முடைய முழு மனம் சார்ந்த உடலையும் ஊடுருவுகிறது. மனம் என்பது பருப்பொருள். சூட்சுமமான பருப்பொருள். அது இந்த விழிப்புணர்வின் தொடுகையால்தான் செயல்திறனை அடை கிறது. சதையும், எலும்புகளும் நிறைந்த இவ்வுடலானது எல்லாமே பருப்பொருள். இந்த மெய்ப்பொருளின் தொடுகையால்தான் உயிருள்ளது போல் காணப்படுகிறது.

இதயத்திலுள்ள கடவுளுக்கும் மற்றும் ஆன்மாவிற்கும் இடையிலுள்ள தொடர்பு

முற்காலத்தில் வாழ்ந்த ரிஷி, 'ஒரு தூய்மையான, சூட்சுமமான, பாவமற்ற, ஒரு இருப்பிடம் தாமரையின் வடிவத்தில் உடலின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. அதற் குள் துன்பமற்ற சூட்சுமமான ஆகாசம் உள்ளது. இந்த இடத் தில்தான் தியானம் மேற்கொள்ளப்பட வேண்டும்'[1] என்று கூறுகிறார்.

ஆகாசத்தை, நீ இதயம் என்று கூறும் இடத்தில் நினைக்க வேண்டும். இங்குள்ள இந்த ஆகாசமானது, நம் இயற் பொருள் சார்ந்த உடலையும் மனஉடலையும் ஊடுருவிப் பரவியுள்ள ஆகாசத்தின் ஒரு பகுதியாகும். அது நம்முடைய ஆன்மாவின் இருப்பிடமாகும். அந்த இருப்பிடம் எங்கும் வியாபித்து இருக்கும் பரமாத்மா அல்லது நாராயணனின் ஒரு பகுதியே ஆகும்.

ஆகாசம் என்னும் சொல்லிற்கு ஆழமான பொருள் உள்ளது. இந்த அறையின் வெற்றிடமானது, வரையறைக்கு

---

1. தஹ்ரம் விபாபம் பரமேச்மபூதம்
யத் புண்டரீகம் புரமத்ய ஸம்ஸ்தம் ।
தத்ராபி தஹ்ரம் ககனம் விசோகம்
தஸ்மின் யதந்தஸ்ததுபாஸிதவ்யம் ॥

—*மஹாநாராயண உபநிஷதம், 12.16.*

உட்பட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் அது உண்மை யாகவே வரையறைக்கு உட்பட்டதா? இல்லை. அவ்விதம் இருக்க வியலாது. இந்த அறையிலுள்ள வெற்றிடமானது, அதற்கு வெளியே உள்ள வெற்றிடத்திலிருந்து பிரிக்க இயலாததாக உள்ளது. சுவர்கள் மட்டுமே அதை வரை யறைக்கு உட்படுத்துவதாகத் தோன்றுகிறது. ஆன்மாவைப் பொறுத்தமட்டிலும் அப்படியே உள்ளது. அது இதயத்தால் வரையறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. வரையறைக்கு உட்பட்டதாகத் தோற்றமளிப்பதை, வரை யறைக்கு உட்படாததிலிருந்து பிரிக்க வியலாது. பிரஹ தாரண்யக உபநிஷதத்தில் உள்ள அந்தர்யாமி ப்ராஹ்மணா என்னும் பகுதியில் உபநிஷதகாலத்தைச் சேர்ந்த ஆச்சாரியர் அதைத்தான் கூறியுள்ளார். வரையறைக்கு உட்படாத பரம் பொருள் நிலத்தில் உள்ளது. நீரில் உள்ளது. நெருப்பில் உள்ளது. ஆகாசத்தில் உள்ளது. காற்றில் உள்ளது. சுவர்க்கத் தில் உள்ளது. சூரியனில் உள்ளது. சந்திரனில் உள்ளது. நட்சத்திரங்களில் உள்ளது. அவர் கண்ணில் உள்ளார். மனத் தில் உள்ளார். புத்தியில் உள்ளார். எல்லாவற்றிலும் ஊடுருவி யுள்ளார். அவரே உட்பகுதியைச் சார்ந்த கட்டுப்படுத்துபவர் மற்றும் உன்னுடைய சொந்த அழிவற்ற ஆன்மா ஆவார்.[1] ஆனால், ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சாதகன், உண்மையாக இவ்வனைத்தையும் தன்னுடைய தியானத்தின் மூலமே உணர வேண்டும். ஆன்மாவைக் குறித்துப் பேசினால் மட்டும் போதாது, ஒருவர் அதை உணர வேண்டும், நாட வேண்டும், இறுதியாக அதை அனுபவிக்க வேண்டும்.

தனித்தன்மையும், உலகளாவிய தன்மையும் வேதாந்தக் கருத்தின்படி பிரிக்கவியலாதவை ஆகும். நமக்கு ஒரு உடலும்

---

1. ய: ப்ருதிவ்யாம் திஷ்டன், ப்ருதிவ்யா அந்தர: யம் ப்ருதிவீ
ந வேத, யஸ்ய ப்ருதிவீ சரீரம் ய: ப்ருதிவீமந்தரோ
யமயத்யேஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:
யோ஽ப்ஸு திஷ்டன்..... ।
யோ஽க்னௌ திஷ்டன்..... ॥
—பிரஹதாரண்யக உபநிஷதம், 3.7. 3-23.

இதயத்தில் ஒரு ஆகாசமும் இருப்பதைப்போல, இயலுலக அண்டத்திலுள்ள இதயத்திலும் ஒரு ஆகாசம் இருப்பதாக நீ கூறலாம். அதே ஆகாசம் நம்முடைய மனம் சார்ந்த உடலை யும், இயலுலக அண்டம் சார்ந்த உடலையும் ஊடுருவி யுள்ளது. அதே உணர்வே நம் தனிப்பட்ட ஆன்மாவையும் உலகளாவிய ஆன்மாவையும் ஊடுருவியுள்ளது. எல்லா நாமங்களைக் கடந்தவராக, எல்லா வடிவங்களைக் கடந்தவ ராக, அவர் ஒருவரே தன்னைத் தனிப்பட்டவராகவும், உலகளாவியவராகவும் வெளிப்படுத்திக் கொள்கிறார்.

'தஹ்ரம் விபாபம்' என்று தொடங்கும் மூல பாடத் திற்குப் பல பொருள் விளக்கங்கள் உள்ளன. ஆனால் தத்துவத் தொடர்பான எல்லா வாக்குவாதங்களையும் ஒருபுறத்தில் வைத்துவிட்டு, தனித்த ஆன்மா, இதயத்திலுள்ள ஆகாசத்தில் வீற்றுள்ளது என்பதையும், கடவுள் ஆன்மாவில், எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவாக வீற்றுள்ளார் என்பதையும் நாம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளலாம். நம்முடைய எல்லா ஆச்சாரியர்களும் நமக்கு, நம்முடைய தனிப்பட்ட விழிப் புணர்வு நிலையானது இயலுலக அண்டத்தின் விழிப்புணர் வின் ஒரு பகுதியாகும் என்று கூறுகின்றனர். தனிப்பட்ட விழிப்புணர்வால் தனித்து இயங்க இயலாது. ஒரு நீர்க்குமிழி யால் கடல் இல்லாமல் தனித்து இருக்க இயலுமா? ஒரு சிறிய ஒளிக் கதிரால், அளவற்ற விளக்கு இன்றி தனித்திருக்க இய லுமா? இந்த இதயத்தில் உள்ள ஆகாசத்தால் வரையறைக்கு உட்படாத ஆகாசமில்லாமல் தனித்திருக்க வியலுமா? இய லாது. தனித்த தன்மையும், உலகளாவிய தன்மையும் பிரிக்க இயலாதவை ஆகும். நாம் இதய மையத்தில், தனிப்பட்ட மற்றும் உலகளாவிய தன்மைக்கும் இடையிலுள்ள சாசுவத மான தொடர்பை உணர வேண்டும்.

இதய மையத்தைக் குறித்து தீவிரமாக சிந்தித்து, அதை தெய்வீக விழிப்புணர்வு நிலையின் மையமாகக் கற்பனை செய்ய வேண்டும். உன்னுள்ளே உள்ள தெய்வீக விழிப் புணர்வு நிலையானது வெளியிலும் உள்ளது. எல்லையற்ற தன்மையுள்ள விழிப்புணர்வு நிலையின் இன்றியமையாத

கூறானது பகுக்க முடியாததாகவும், பிரிக்கவியலாததாகவும் உள்ளது என்னும் எண்ணத்தையும் மனத்தில் கொள்ள வேண்டும்.

தொடக்கத்தில் இந்த விழிப்புணர்வு நிலையைக் குறித்து நீ ஒளி என்று எண்ணலாம். உண்மையாக அது ஞானஒளியைக் குறிக்கிறது. தெய்வீக ஒளியைக் குறிக்கிறது. என்னிடம் உள்ள இந்த தெய்வீக ஒளியானது, அதே நேரத்தில் உலகம் முழுவதிலும் வியாபித்து உள்ளது. அது ஒன்றே சாசுவதமாக பகுக்கப் படாததாக விளங்குகிறது. நம்முடைய உடலானது பிரம்மனின் கோயிலைப் போன்றதாகும். ஒவ்வொரு உடலும் பிரம்மனின் கோயிலைப் போன்றதாகும். ஒவ்வொரு உடலும் பிரம்மனின் கோயில் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வனைத்தையும் செய்தபிறகு, உன்னுடைய விழிப் புணர்வை, தெய்வீக விழிப்புணர்வு நிலையுடன் உப்பு பொம்மை கடலில் கலப்பது போலக் கலப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய உப்பு பொம்மையைக் குறித்த நீதிக்கதை உனக்குத் தெரிந்து இருக்கும்.[1] நம் உடல் உணர்வானது வழியில் குறுக்கிடுகிறது. அதை நாம் தெய்வீக விழிப்புணர்வு நிலையுடன் கலக்க முயற்சி செய்யும் அதே சமயத்திலேயே, ஆன்மாவானது, உடல் அல்ல என்னும் எண்ணம் நமக்கு ஏற்படுகிறது.

தொடக்கத்தில் இவ்வனைத்துமே கற்பனை செய்யப் படுபவையாக உள்ளன. ஆனால், இது உண்மையைக் குறித்த கற்பனை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அது பயனற்ற கற்பனை அல்ல. நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சியை மனமார விடாமல் தொடர்ந்தால், என்றாவது ஒருநாள் நீண்டகாலமாக நாம் எதைக் குறித்துக் கற்பனை செய்து கொண்டிருந்தோமோ அந்த உண்மையை நாம் உணர்வோம்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.59.

நாம் இதுவரை விவாதித்ததைச் சுருக்கமாக நினைவு கூர்ந்து தொகுத்து உரைப்போம். தியானம் என்பது சாதாரண மான ஒருமுகப்படுத்தும் தன்மை அல்ல. அது ஒரு தனிவகை யைச் சேர்ந்த ஒருமுகப்படுத்தப்படும் தன்மை ஆகும். அது ஆன்மீக விதிமுறைப் பயிற்சி மற்றும் ஒழுக்க தத்துவங் களைப் பின்பற்றுவதால் ஏற்படும் விளைவு ஆகும். அதற்கு ஒரு ஆன்மீக நிறைவு இருக்க வேண்டும். அது ஒரு குறிப் பிட்ட விழிப்புணர்வு மையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். தொடக்க நிலையில் உள்ள அனைவருக்கும் இதய மையமே சிறந்த மையமாகும். இறுதியாக தியானம் என்பது ஆன்மா, பரம்பொருளுடன் கலப்பதைக் குறிப் பிடுகிறது.

21

தியான வாழ்க்கைக்கான சில நடைமுறைக் குறிப்புகள்

முதலில், தியானத்தில் அமைதி அடைவாய்

'ஓ, என்னுடைய மனம் மிகவும் அமைதியற்று உள்ளது. என்னால் எப்படித் தியானம் செய்ய வியலும்? என்று ஒரு பொழுதும் கூறக்கூடாது. உன்னுடைய மனம் மிகவும் அமைதியற்று இருப்பதால்தான், நீ இன்னும் மிகுதியான அளவில் தியானம் செய்ய வேண்டும். முழுமையாக அமைதியடைந்துள்ள மனத்திற்கு அதிக அளவில் தியானத்தின் தேவையில்லை.

சில நேரங்களில் மனிதர்கள், எதுவும் செய்யாமல் இருப்பதிலேயே அமைதி பெற முயற்சிக்கிறார்கள். பொதுவாக சோம்பேறிகளாக இருந்துகொண்டு, எல்லாவகையான பயனற்ற விஷயங்களைக் குறித்துக் கற்பனை செய்துகொண்டு மனத்தினால் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாக தியானம்தான் அமைதியையும், தணிவையும், சமநிலையையும் அளிப்பதற்காகச் சிறந்த வழியாகும். பலரும், தங்கள் கவனங்களைப் பல்வேறு வழிகளில் திருப்பிக் கொள்வதாலும் கீழான பொழுதுபோக்குகளாலும் தணிவை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். அமைதியைப் பெறவும், மனத்தைப் புத்துணர்ச்சியால் நிறைத்துக் கொள்வதற்கும், தியானமும், ஜபமும் இயற்கையான வழிகளாகும். அவற்றின்மூலம் மனமானது, இயல்பான வழியில் எல்லா ஆற்றல்களின் மூலமாக உள்ள ஆன்மாவை நோக்கிச் செல்கிறது. அதன்பிறகு மனமும், உடலும் அந்த ஆற்றலால் மீண்டும் நிரப்பப்படுகின்றன. எல்லா வலிமையும், எல்லா சக்தியும், எல்லா சமநிலையும் பரம்பொருளிடமிருந்து

வருகின்றன. மற்றும் தியானம்தான் அந்த மூலத்திலிருந்து இவற்றைக் கொள்வதற்கு ஒரு நேரான வழியாகும்.

என்றாவது ஒருநாள், தியானம் செய்வதற்கு நீ மிகவும் குழப்பம் அடைந்து இருந்தால், அல்லது சோர்வுற்ற நிலையில் இருந்தால் சில நிமிடங்களுக்கு அமைதியாக அமர்ந்து தீவிரமாகக் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். 'நீ தூய்மை. நீ என்னைத் தூய்மையால் நிறைப்பாய். நீ சக்தி. நீ என்னைச் சக்தியால் நிறைப்பாய். நீ வலிமை. நீ என்னை வலிமையால் நிறைப்பாய்.'[1] இந்த வகையான பிரார்த்தனையானது மனதை அமைதிப் படுத்தும். சமநிலை, அமைதி, மற்றும் உண்மையான மனிதத் திறமையின் முழுமையான ரகசியமானது நம்முள்ளேயே உள்ளது. இருப்பினும் மனிதர்கள் அதை வெளியில் நாடுகிறார்கள்!

ஒருநாள் முழுவதும் கடுமையாக உழைத்த பிறகு, இரவில் நீ அரைத் தூக்க நிலையில் இருந்தால், உன்னால் இயல்பாகவே தியானம் செய்ய இயலாமல் இருப்பதை நீ கண்டு கொள்வாய். இறைவனைப் பற்றி நினைத்துக் கொண்டே இறைவனின் நாமத்தை சிறிது நேரத்திற்குக் கூறிவிட்டுப் பிறகு உறங்கச் சென்று, பிறகு உடலிலும், மனத்திலும் புத்துணர்வு பெற்று எழுந்திருக்க வேண்டும். ஒரு சிறிதளவு ஓய்வானது பெரும்பாலும் எல்லாச் சோர்வையும் அகற்றிவிடும் ஆனால் தியானம் செய்யும் பொழுது அரைத் தூக்கம் தூங்குவதற்கு இதை ஒரு சாக்காக வைத்துக் கொள்ளக்கூடாது. தியானத்தை ஒழுங்கான முறையில், நீ தூங்கி எழுந்ததற்குப் பிறகு செய்ய வேண்டும்.

உன்னுள்ளேயே தனிமையை நாடுவாய்

உன்னுடைய ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தில் நீ ஒரு தனிமையான இடத்தில் அமைதியாக அமர்ந்து தியானம்

---

1. தேஜோ஽ஸி தேஜோ மயி தேஹி । வீர்யமஸி வீர்யம் மயி தேஹி । பலமஸி பலம் மயி தேஹி । ஓஜோ஽ஸி ஓஜோ மயி தேஹி ।

—சுக்லயஜுர்வேத ஸம்ஹிதை, 19.9.

செய்ய வேண்டும். ஒரு காட்டிற்கோ, அல்லது குகைக்கோ செல்வதால் மட்டுமே உன்னால் தனிமையைத் துய்க்க வியலாது என்பதையும் நீ நினைவில் கொள்ள வேண்டும். உன்னால் உட்புறத்தில் அமைதியாக இருக்க முடிந்தால்தான், வெளிப்புறத்தில் உள்ள தனிமை உனக்கு உதவக் கூடியதாக இருக்கும். உண்மையான மௌனம் என்பது மனத்தின் மௌனமாகும். அது மனத்தை அமைதிப்படுத்தி, வேண்டாத எண்ணங்களிலிருந்து அதை விடுவிப்பது ஆகும். முதலில், கடவுளைக் குறித்த எண்ணத்தைப் பெற வேண்டும். அதன் பிறகு, கடவுளைக் குறித்த எண்ணத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்த இயலாத மற்ற எல்லா எண்ணங்களையும் நீக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். 'வெறும் வெளிப் புறத் தனிமையானது, ஒருவரை இவ்வுலகத்தை மறக்கச் செய்வதில்லை. ஒருவரை, உலகத்தை மறக்கச் செய்வது எதுவோ, அதுதான் உண்மையான தனிமையாகும். எந்தத் தனிமை ஒருவரைக் கடவுளுடன் இரண்டறக் கலக்கச் செய் கிறதோ, அந்தத் தனிமைதான் உண்மையான தனிமை யாகும்'. நீ தியானத்திற்கு அமரும் பொழுது, உன் மனத்தில், உலகத்தைக் குறித்த எல்லாக் கருத்துக்களையும் அழித்துவிட வேண்டும். மற்றும் பிரம்மனைப் (கடவுளை) பற்றி மட்டுமே நினைக்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுவாய்

ஆன்மீக வாழ்வில் அனைத்துமே தெளிவானதாகவும் வரையறுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு சாதகனும் ஒரு வரையறுக்கப்பட்ட நடைமுறையை நிலை நிறுத்தி, எது எப்படி ஆயினும் அதைப்பற்றிக் கொள்வதே அவன் முதலில் செய்ய வேண்டியதாகும். சில மனிதர்கள், அத்தகைய கண்டிப்பு மிகுந்த, திட்டமிட்ட வாழ்க்கையானது அவர்களுடைய வாழ்க்கையை இயந்திரகதியைப் போலச் செய்துவிடும் என்று பயப்படுகிறார்கள். அது உண்மை இல்லை. முக்கியமாகத் தொடக்க நிலையில் இருப்ப வனுக்கு, வரையறுக்கப்பட்ட நடைமுறையில்லாமல் இருக்க

வாய்ப்பளிக்க இயலாது. சஞ்சலிக்கும் மனத்தை ஒழுங்கு முறையில் கட்டுப்படுத்துவதற்கு அது ஒன்றுதான் வழி யாகும். நாம் விழித்துக் கொண்டிருக்கும் நேரத்தைத் திட்ட மிட வேண்டும். நாம் நாள் தோறும் ஆற்றும் கடமைகளை எப்படிச் செய்து முடிப்பது, மிகுந்திருக்கும் நேரத்தில் என்ன செய்வது, எத்தகைய எண்ணங்களை நாம் கொண்டிருக்க வேண்டும் போன்றவற்றைத் திட்டமிட வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உள்ள சாதகனின் வாழ்வானது விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். தன்னுணர்வற்ற நிலையில் நீ சிந்திப்பதையும், உன் செயல்பாடுகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் மேலும் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

பழக்கங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் மற்றும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன்பிறகு ஆன்மீக வாழ்க்கை எளிமையானதாகிவிடும். தொடக்க நிலையிலிருந்த சிரமத் தைப் பெருமளவிற்கு இழந்துவிடும். கண்டிப்புடன் உங் களுடைய நிச்சயிக்கப்பட்ட நேரங்களைக் கடைப்பிடியுங்கள். அதன்பிறகு மனம் மிகவும் அமைதியற்ற நிலையில் இருப் பினும் தியானம் செய்யவியலும். நீ ஆன்மீகப் பயிற்சி மேற் கொள்ளும் நேரங்கள் முழுமையான ஒழுங்குமுறைமையுடன் இருக்க வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் மனம் அதைப் பழக்கப்படுத்திக் கொண்டு வளரும். எல்லாச் சூழ் நிலைகளிலும், ஒரு குறிப்பிட்ட, மிகக் குறைந்த நேரமாவது, ஒருவர் நாள்தோறும் செய்ய வேண்டிய ஜபம் மற்றும் தியானத்திற்காக ஒதுக்கப்பட வேண்டும். கருத்தில் கொள்ளப் பட்ட குறைந்தபட்ச ஜபத்தைச் செய்து முடிக்காமல் காலைச் சிற்றுண்டியை எடுத்துக் கொள்ளக் கூடாது. தொடக்க நிலை யில் இருப்பவரைப் பொறுத்தவரையில் ஆன்மீகப் பயிற்சிக் கான நேரமானது, மெதுவாகவும், நிலைத்த தன்மையுடனும் அதிகப்படுத்தப்பட வேண்டும். மிகவும் முன்னேறியுள்ள சாதகனைப் பொறுத்தவரையில் அவனுடைய மனத்தில் பக்தியின் அடிநீரோட்டம் இருந்து கொண்டிருக்கும். அது அவனுடைய மனத்தின் ஒரு பகுதியை எப்பொழுதும் அவன்

வெளிப்புறத்தில் என்ன செய்து கொண்டிருந்தாலும் பக்தியைச் சார்ந்த பயிற்சிகளில் சுறுசுறுப்புடன் இருக்குமாறு செய்கிறது. அந்த நிலையை அடையும்வரையிலும், ஆன்மீகப் பயிற்சிக்கான முறைகளையும், நேரத்தையும் பொறுத்த மட்டில் ஒழுங்குமுறையானது எல்லா சாதகர்களாலும் சோர்வடையாமல் வழுவாமல் பின்பற்றப்பட வேண்டும்.

நாம் இன்னும் கூர்உணர்வைப் பெறாதவர்களாக இருக்கிறோம். நாம் நம்முடைய நோக்கங்களை இன்னும் தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்கிறோம். சில நேரங்களில் நாம் நம்முடைய செயல்களுக்கும், எண்ணங்களுக்கும் நல்ல எளிதில் நம்பத்தக்க விளக்கங்களைக் கண்டு கொள்வதற்கும் நம்மை ஏமாற்றவும் நம் மனத்தை அனுமதிக்கிறோம். நீ உன் மனத்திற்கு, அது ஆன்மீகப் பயிற்சியின் பெரிய சிரமத்திற்கு எதிராகக் குறைகூறினால், 'நீ நிலைகுலைந்தால் நான் பார்க்கிறேன்' என்று கூற வேண்டும். மேன்மையான வாழ்க்கையை வாழ முயற்சி செய்யும் பொழுது, அந்த முயற்சியில் மரணமடைய நேரிட்டாலும் நாம் அதைப் பொருட்படுத்தக் கூடாது. மனமானது நீண்ட காலத்திற்குக் கிளர்ச்சி செய்துகொண்டும், குறை கூறிக் கொண்டே இருக்கும். மனமானது, 'இங்கு பார். நீ இன்று சிறிது நேரத்திற்குத்தான் தூங்கினாய். இது உன்னுடைய நரம்புகளுக்குக் கெடுதலை ஏற்படுத்தக் கூடும். நீ நரம்புகள் தொடர்பான நிலைகுலைவை அடையாமல் இருக்க அக்கறை கொள்வாய். ஓரிரு நாட்களுக்கு உன் பயிற்சிகளை நிறுத்தி வைப்பாய்' என்று கூறும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் உன் மனத்தை நீ நன்கு உதைக்க வேண்டும். சாட்டையடி கொடுக்க வேண்டும். இத்தகைய கெட்ட மனத்தைக் கடுமையாக நடத்த வேண்டும். குதிரையின் மீது சவாரி செய்பவர் அது நகர மறுக்கும்பொழுது, அதைச் சாட்டையால் அடிப்பதுபோல உன் மனம் எதிர்க் கிளர்ச்சி செய்தால் அதை நன்றாக விளாச வேண்டும்.

நாம் நாள்தோறும் நம்முடைய ஆன்மீகப் பயிற்சிக்காக நேரத்தை ஒதுக்குவதற்கு ஆயத்தமாக இல்லை எனின்,

நம்மால் ஒருபொழுதும் முன்னேற இயலாது. இந்த உண்மையைப் பலரும் உணரவே இல்லை என்று தோன்றுகிறது. பயனற்றதை எண்ணுவதிலும், வம்பு அடிப்பதிலும் குறிக்கோளற்ற செயல்களிலும், ஊர் சுற்றுவதிலும் தேவையற்று நேரத்தை வீணடிப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதன்பிறகு நம்முடைய ஆன்மீகப் பயிற்சிக்கு நமக்கு அதிகமான நேரம் கிடைக்கும். ஒரு நாளில் தொடர்பற்ற தன்மையில் தியானம் செய்வதால் எதையும் சாதிக்க வியலாது. முடிந்த அளவிற்கு நேரம் சேமிக்கப்பட வேண்டும். தேவையற்ற வேலைகளில் நம்முடைய உடலின் சக்தியை அளவிற்கு அதிகமாகச் செலவழிக்கக் கூடாது. தற்சமயத்தில் உடலின் சக்தியானது அதிகமான அளவில், பயனற்றவகையில் வீணடிக்கப் படுகிறது. மனத்தில் மிக அதிகமான அளவில் அமைதியற்ற தன்மை உள்ளது. எங்கு பார்த்தாலும் சுழல்களே, தீவிரமான ஆன்மீகப் பயிற்சிக்குத் தகுந்த மனநிலையை அடைய வேண்டுமாயின் நீ சுழல்களைத் தகர்க்க வேண்டும்.

உன் தியானத்தின் பண்புத்தரத்தை செம்மைப்படுத்துவாய்

உன் தியானத்தைத் தீவிரப்படுத்த கற்றுக் கொள்வாய். அளவைவிட, பண்புத்தரத்தின்மீது அதிகமாகக் கவனம் செலுத்துவாய். ஓயாமல் செயலாற்றிக் கொண்டு இருப்பவர்களுக்கு வேறுவழியில்லை. நீ எந்த அளவு நேரத்தைத் தியானத்திற்கு ஒதுக்கினாலும், அது சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். உன்னுடைய ஒருமுகப்படுத்தும் தன்மையின் ஆற்றலை அதிகரிக்க வேண்டும். அதைப் போன்றே உன்னுடைய வாசிப்பின் பண்புத் தரத்தையும் நீ உயர்த்த வேண்டும். நீ ஒரு புத்தகத்தைப் படிக்கும் பொழுது, ஒருமுகப்பட்ட தன்மையுடனும், ஒரு வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காகவும் படிப்பாய்.

தியானம் செய்யும்பொழுது கவனக்குறைவுடன் இருப்பது முற்றிலும் நேரத்தை வீணடிப்பது மட்டுமல்லாமல் அது நிச்சயமாக ஆன்மீக ஈடுபாடு குறைந்திருப்பதன் அடையாளமாகவும் உள்ளது. பல மனிதர்கள், தியானம் என்னும்

பெயரில் உலகியல் தொடர்பான விஷயங்களையே தொடர்ந்து எண்ணிக் கொண்டிருப்பார்கள். மனம் மிகவும் சோர்வடைவதாகவோ (தமோ குணம்) அல்லது அமைதி யற்று (இரஜோ குணம் மிகுந்து) இருப்பதாகவோ நீ உணர்ந் தால், நீ உடனடியாக எழுந்து, எழுச்சியூட்டும் பகுதியைப் படித்தபிறகு, தியானம் செய்வதற்குரிய சரியான மனநிலை திரும்பும் பொழுது மீண்டும் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். தியானம் மற்றும் உறக்கம் என்னும் இரண்டையும் ஒருபொழுதும் இணைத்தல் கூடாது. தியானம் செய்யும் நேரத் தில் மனமானது ஒரு பொழுதும் அரைத் தூக்க நிலையை அடைவதற்கு அனுமதிக்கப்படுதல் கூடாது. பல மனிதர் களுக்குத் தியானமானது, உறக்கத்திற்கு அழைப்பு விடுவதாக உள்ளது! அது அதன்பிறகு ஒரு கெட்ட பழக்கமாகிவிடும்.

தகுந்த நாட்கள்

கடவுளின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவ தற்கோ அல்லது கடவுளின் மீது தியானம் செய்வதற்கோ ஆண்டு விவரக் குறிப்பையோ, அல்லது பஞ்சாங்கத்தையோ நாட வேண்டியது இல்லை. கடவுளைக் குறித்து நினைப் பதற்கு ஒவ்வொரு நாளும் உகந்த, தகுந்த நாள் ஆகும். ஒவ் வொரு நாளும் நம்மை மரணத்தின் அருகில் அழைத்துச் செல்கிறது. எனவே கடவுளைப்பற்றி நினைக்காமல் கழிந்த நாளானது பயனில்லாமல் கழிக்கப்பட்ட நாள் ஆகும். ஒரு குடும்பத்தில் ஜனனம் அல்லது மரணம் நிகழ்ந்தபின், சில நாட்களுக்கு சமயத் தொடர்பான சடங்குகளைச் செய்வது உகந்தது அல்ல என்னும் கருத்து ஹிந்துக்களின் மரபில் உள்ளது. ஆனால் அது வெளிப்புற சடங்குகளுக்கு மட்டுமே பொருந்தும். ஜபத்திற்கும், தியானத்திற்கும் பொருந்தாது. ஆன்மீகப் பயிற்சியானது, எல்லா நாட்களிலும் எல்லா சூழ்நிலைகளிலும் தொடரப்பட வேண்டும்.

சிலருக்கு ஜோதிடத்தில் மிகப் பெரிய அளவில் நம்பிக்கை இருக்கும். வங்காளத்தில் பின்மாலை நேரங்கள் உகந்தவை அல்ல என்று கூறப்படுகிறது. நான் 1911 ஆம்

ஆண்டு சென்னைக்குச் சென்ற பொழுது, ராகுகாலமானது பெரும்பாலும் காலை நேரத்தில் இருப்பதைக் கண்டு கொண்டேன்.[1] சோம்பேறியாக இருப்பவர்களுக்கு, நடைமுறையில் முழுநாளும் உகந்த நாளாக இல்லாமல் இருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது!

ஒருமுறை 1929 ஆம் ஆண்டில், ஆகஸ்டு மாதத்தில் வேலை நிமித்தமாகப் பேலூருக்குச் சென்றிருந்தேன். மஹாபுருஷ் மஹராஜ் (சுவாமி சிவானந்தர்) அவ்பொழுது இராம கிருஷ்ண மிஷனின், தலைவராக இருந்தார். அவர் சென்னையில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளில் மிகவும் ஈடுபாடு உடையவராக இருந்தார். நான் பேலூர் மடத்திற்குச் செல்லும் பொழுதெல்லாம் அவர், விரைவிலேயே என்னைச் சென்னைக்குத் திரும்பிச் செல்லுமாறு கூறுவார். அதனால் மிஷனின் செயல்பாடுகள் பாதிக்கப்படாமல் இருக்கும் என்று கூறுவார். நான் அப்பொழுது அங்கு சென்றபொழுது, பேலூர் மடத்தில் அதிகமாக சில நாட்கள் தங்க வேண்டும் என்று விரும்பினேன். எனவே மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள் வழக்கம்போல, நான் எப்பொழுது திரும்பிச் செல்கிறேன் என்று கேட்ட பொழுது, தொடர்ந்து வரவிருக்கும் சில நாட்கள் உகந்த நாட்கள் அல்ல என்று கூறினேன். உண்மையாக நான் உகந்தநாள் அல்லது மங்கலமற்ற நாள் என்பதிலெல்லாம் கவனம் செலுத்துவதில்லை. பேலூர் மடத்தின் ஆன்மீகச் சூழலில் சில நாட்கள் அதிகம் தங்குவதற்கு அது ஒரு சாக்கு ஆகும். அந்த சமயத்தில் மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள் எனக்கு வழங்கிய அறிவுரையானது நம் அனைவருக்கும் தெளிவை அளிக்கும் செய்தியாக உள்ளது.

மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள், ‘நீங்கள் அனைவரும் செயலாற்றும் மனிதர்கள் ஆவீர்கள். மங்கலகரமான நாட்களை எதிர்நோக்குவது உங்களுக்கு உகந்தது அல்ல. வேலையற்று இருப்பவர்களால் ஒவ்வொரு அடியிலும்

---

1. ஒரு நாளின் குறிப்பிட்ட இடைநேரம் ஹிந்துக்களால் எந்தச் செயலைச் செய்வதற்கும் உகந்தது அற்றதாகக் கருதப்படுகிறது.

பஞ்சாங்கத்தை கலந்து ஆலோசிக்க இயலும். குருதேவரும் 'அத்தகைய விஷயங்களை நம்புவோர் மட்டுமே அவற்றால் பாதிக்கப்படுவார்கள். மற்றவர்கள் பாதிக்கப்படுவதில்லை' என்று கூறுவார். அதுவுமின்றி, நீங்கள் அனைவரும் அன்னையின் பக்தர்கள். எல்லாச் சூழ்நிலைகளிலும் அவள் உங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறாள். மற்றும் அவள் எப்பொழுதும் அதைச் செய்து கொண்டிருப்பாள். ஒருவர் கடவுளின் பெயரைக் கூறிக் கொண்டு, ஒரு பயணத்தைத் தொடங்கினால், அவர் துன்பத்தை அடைய மாட்டார். கடவுளின் திருநாமத்தின் சக்தியால் துயரம்கூட திருவருளாக மாறிவிடும்' என்று கூறிவிட்டு அவர் பாடினார்.

அன்னை துர்கையின் திருநாமத்தைக் கூறிக்கொண்டு
யார் ஒரு பயணத்தைத் தொடங்கினாலும்
சிவன் அவருடைய வெல்லவியலாத திரிசூலத்தால்
நிச்சயம் அவரைப் பாதுகாப்பார்

துளசிதாசரால் இயற்றப்பட்டுள்ள ஈரடிச் செய்யுளில் அதே கருத்து காணப்படுகிறது.

நிலவின் ஒவ்வொரு கலையும் மங்கலமானது
ஒவ்வொரு நாளும் மங்கலமானநாள்
கடவுளை மறந்தவனை மட்டுமே
ஒரு மங்கலமற்ற நாள் பாதிக்கிறது.

ஒருவர் இதயபூர்வமாக கடவுளின் திருநாமத்தைக் கூறும் நாளே நல்ல நாள் ஆகும்.[1]

நான் 1933 ஆம் ஆண்டில் மேற்கத்திய நாடுகளுக்கு முதற் கடல் பயணத்திற்காகக் கப்பலில் ஏறியபொழுது அது ஒரு மங்கலகரமான நாளா, இல்லையா என்று அறிந்து கொள்வதைப் பற்றி கவலைப்படவில்லை. எல்லாமே எனக்கு நன்றாக நடந்தேறின. நான் கடவுளின் திருப்பணிக்காகச் செல்கிறேன் என்னும் கருத்துடன் சென்று கொண்டிருந்தேன்.

---

1. For Seekers of God, பக்கம் 84.

மனம் தூய்மையாக இருந்தால் பஞ்சாங்கத்தை நாடும் தேவையே இருக்காது. நீ கடவுளின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறினால், எல்லா நேரமும் மங்கலகரமான நேரம் தான். நான் ஐரோப்பாவில் இருந்த பொழுது பல மனிதர்கள் என்னுடைய கையையும், ஜாதகத்தையும் ஆராய விரும்பினர். எனக்கு ஜாதகமே இருக்கவில்லை. ஒரு பக்தர் என்னிடம், 'சுவாமி, நட்சத்திரங்கள் மற்றும் கோள்களின் செயல்விளைவில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?' என்று கேட்டார். நான், 'நட்சத்திரங்களையும், கோள்களையும் கட்டுப்படுத்தும் ஒரு சக்தியின் கைகளில் நான் இருக்கிறேன்' என்று பதில் கூறினேன்.

மேன்மையான மனிதர்களின் பிறந்த நாட்களில் நாம் அதிகமான நேரத்தை நினைவுகூர்வதற்கும், தியானம் செய்வதற்கும், பிரார்த்தனை செய்வதற்கும் ஒதுக்க வேண்டும். மற்றும் வெளிப்புற இடைத் தடங்கல்களை மேலும் தவிர்க்க வேண்டும். வெளியிலே விழாக்கள் கொண்டாடி, சமூகத்திற்கு உரிய கொண்டாட்டமாக மட்டும் அவை இல்லாமல், உள்ளார்ந்து உள்ள நம் ஆன்மாவை நோக்கி, அமைதியாக உள் இழுத்துக் கொள்வதாகவும் இருக்க வேண்டும். அங்கு நாம் நம்மால் அவர்களுடைய விழிப்புணர்வு நிலையின் மட்டத்தை அடைய இயலுமாயின் நம்மால் அவர்களுடன் தொடர்பு கொள்ள இயலும். இந்த மேன்மையான மனிதர்கள் இங்கிருந்து அகன்று விட்டனர் என்று கருதாமல் இருப்பாய். இல்லை, அவர்கள் வாழ்நாளில் வாழ்ந்ததைப் போன்றே இப்பொழுதும் வாழ்ந்து கொண்டுள்ளனர். உண்மையாக இருக்கும் ஒவ்வொருவராலும் மற்றும் அவருடைய விழிப்புணர்வை உடல் சார்ந்த மட்டத்திலிருந்து எப்படி உயர்த்துவது என்பதையும் மற்றும் எப்படி அதை மேன்மையான மனிதர்களிடத்திலும், அவர்களுடைய இலட்சியத்தின் மீதும் நிலைநிறுத்துவது என்பதையும் அறிந்துகொண்டால், அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். அவர்களுடைய தொடர்பில் இருக்கவும் இயலும். ஏசுநாதர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மட்டுமே வாழ்ந்தார் என்று

எண்ணாதே. புத்தர் இறந்து இங்கிருந்து சென்றுவிட்டார் என்று எண்ணாதே. அவர்கள் அனைவரும் மரணமற்றவர்கள். ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் இன்னும் வாழ்ந்து கொண்டுள்ளனர். அவர்களுடைய சக்தியானது ஆயிரக் கணக்கான மனிதர்களின் விதிக்கு உருவம் கொடுத்துக் கொண்டும் விதிகளுக்கு வழிகாட்டியாகவும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

தியானத்திற்கான நேரம்

சுவாமி பிரம்மானந்தர் நமக்கு அறிவுறுத்தி இருப்பதைப் போல அதிகாலை நேரம், நண்பகல் நேரம், மாலை நேரம் மற்றும் நள்ளிரவு நேரம் என்று ஒரு நாளில் நான்கு முறைகள் தியானம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இயற்கை யானது இந்த காலக்கட்டங்களில் அமைதியாக இருக்கிறது. மற்றும் ஆன்மீக அதிர்வலைகளின் ஓட்டத்தில் நம்முடைய உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் ஒரு மாறுதலும் ஏற்படு கிறது. இந்த நான்கு நேரங்களிலும் தியானம் செய்ய இய லாதவர்கள், காலை மற்றும் மாலை நேரங்களையாவது விடாமல் பற்றிக் கொண்டு செய்ய வேண்டும்.

நாம் ஒருநாளில் எத்தனை தடவைகள் சாப்பிடுகிறோம்? இயற்பொருள் சார்ந்த உணவு உண்பதற்கு நமக்கு நேரம் இருக்குமெனின், ஆன்மீக உணவிற்காகவும் நேரம் ஒதுக்கிக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டாமா? அது ஒரு ஆரோக்கியமான மனநிலைக்கு முற்றிலும் அவசியமான தாகும். நமக்குப் பசி இருக்கும்பொழுது நாம் ஓடிச் சென்று ஏதாவது உணவைப் பறித்துக் கொள்கிறோம். ஆன்மீக உண விற்கான பசியையும் நாம் உணர வேண்டும். அதன்பிறகு நாம் நேரமில்லை என்று குறைகூற மாட்டோம்.

தியானம் செய்வதற்குக் காலை நேரமே மிகச் சிறந்த நேரமாகும். இரவிலே நம் உறக்கமானது நம்முடைய பல நினைவுகளை அழித்து இருக்கும் அல்லது அமைதிப் படுத்தி இருக்கும். அப்பொழுது நமக்கு நம் மனத்தை

ஒருமுகப்படுத்துவது சுலபமாக இருக்கும். காலையில் நீ எழுந்தவுடன் கடவுளை வழிபட்டு, அவருடைய புனிதமான திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூற வேண்டும். உன்னுடைய மனத்தை நீ உலக விஷயங்களைக் குறித்து நினைப்பதற்கு முன்னால் மந்திரத்தாலும் புனிதமான வடிவத்தாலும் (திருவுருவச்சிலை) நிறைத்துக் கொள்ள வேண்டும். நீ படுக்கையை விட்டு எழுந்தவுடனேயே, உன் மனத்தை உலகியல் விஷயங்களில் நிலைபெற்றுத் தங்குவதற்கு அனுமதித்தல் கூடாது. அப்பொழுது விழிப்புணர்வு உள்ள மனமானது சுறுசுறுப்புடன் இருப்பதில்லை. ஆனால் விழிப்புணர்வு அற்ற மனமானது மிகவும் ஏற்புத்திறமுடையதாக விளங்கும். எனவே நீ அப்பொழுது உன்னுடைய மனத்திற்கு எத்தகைய ஆலோசனைகளை வழங்கினாலும், அது விழிப்புணர்வற்ற மனத்தின் ஆழத்தில் மூழ்கி விடுகிறது. விடிவதற்கு முன்புள்ள நள்ளிரவு கழிந்த நேரமானது ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகர்களுக்கு மிகவும் அரிதானதாகும். அது ஜபத்திற்கும் மற்றும் தியானத்திற்கும் முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

நீ உன் தியானத்தை முடித்தவுடன் சிறிது நேரத்திற்கு அங்கேயே அமர்ந்திருப்பது நல்லதாகும். நாம் தணிவடைந்தவர்களாக நாம் தியானிக்கும் பொருளைப் பற்றி நினைத்துக் கொண்டு அமைதியுடன் அமர்ந்திருக்க வேண்டும். அதன் பிறகு நம் மனமானது புதிய ஆன்மீக எண்ணங்களால் நிரப்பப் படும் மற்றும் நாம் ஒரு உயர்மட்ட மகிழ்ச்சியை உணர்வோம். இந்த மகிழ்ச்சி எங்கிருந்து வருகிறது? அது மனத்தின் ஆழத்திலுள்ள அடுக்குகளிலிருந்து வருகிறது. இது பஜனானந்தமாகும். வழிபாடு செய்தல் அல்லது தியானம் செய்வதிலிருந்து தோன்றும் மகிழ்ச்சியாகும். அப்பொழுது நாம் நம்முடனும் மற்றும் இவ்வுலகத்துடனும் அமைதியாக இருப்போம். அதன் பிறகு நாம் சில வழிபாட்டு வாசகங்களையும் பாடல்களையும் பாடலாம். தியானம் செய்வதால் ஏற்பட்டுள்ள மனநிலையையும், அக மகிழ்ச்சியையும் தீவிரப் படுத்துவதற்காகவும் திடப்படுத்துவதற்காகவும் அவ்விதம்

செய்யலாம். அங்கிருந்து எழுந்தவுடனேயே நாம் ஒரு வருடனும் பேசக் கூடாது. ஆனால் ஆழ்ந்த சிந்தனையுடனும் தன்னடக்கமான அமைதியுடனும் இருக்க வேண்டும். இத்தகைய பயிற்சியானது தியானத்தின் ஒரு தொடர்ந்த அடி நீரோட்டத்திற்கு அனுகூலமாக இருந்து உதவும். மற்றும் நம்முடைய மனத்தை ஒரு உயர்ந்த நிலையில் வைத்துக் கொள்வதற்கும் உதவிபுரியும்.

தியானத்தை முடித்தபிறகு இவ்விதம் அமர்ந்து இருப்பது சுருக்கமானதாக இருக்க வேண்டும். நீ 15 நிமிடங் களுக்குத் தியானம் செய்தால், முக்கால் மணி நேரத்திற்கு அதன் பிறகு அப்படியே உட்கார்ந்து கொண்டிருப்பாயா? நீ ஒரு மணி நேரத்திற்கோ அல்லது ஒன்றரை மணி நேரத் திற்கோ தியானம் செய்தால் நீ பதினைந்து நிமிட நேரங் களுக்கு அப்படியே அமர்ந்திருக்கலாம். அல்லது உன் னுடைய ஆன்மீக மனநிலையை, உலக எண்ணங்களின் திடீர்த் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள அவ்விதம் செய்யலாம். சுவாமி பிரம்மானந்தர் அப்படிச் செய்ய வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

உறக்கம் குறித்த அறிவுரைகள்

ஒரு சாதகனுக்கு ஐந்து அல்லது ஆறுமணி நேர உறக்கம் போதுமானதாகும். எட்டு மணி நேர உறக்கம் பொதுவாக மிக அதிகமானதாகும். நம்முடைய நரம்பு மற்றும் மன உலைவு களை ஒரே நாளில் எல்லா சமயங்களிலும் குறைந்த அளவில் வைத்திருக்க வேண்டும் என்னும் உணர்வைப் போல உறக்கம் அத்தனை அவசியமானது இல்லை. நமக்குத் தியானம் செய்ய இயல வேண்டும் என்பதற்காக நாம் தணிவுடன் இருப்பதற்கு இயல வேண்டும். நாம் முதலில் நம் நரம்புகளில் உள்ள அழுத்தத்தை எப்படிக் குறைக்க வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். எளிதில் அமைதியை இழக்கும் தன்மையை உடையவர்களால் ஒருபொழுதும் தியானம் செய்ய இயலாது. அதன்பிறகு நாம் நம்முடைய உள் ளுணர்ச்சிப்பாங்கையும், உணர்வுகளையும் கட்டுப்படுத்த

வேண்டும். அவை நல்லவையாக இருப்பினும், தூய்மை யானவையாக இருப்பினும், மேன்மையுடையனவாக இருப் பினும் கட்டுப்படுத்த வேண்டும். பரம்பொருளுக்கு நம்மை அர்ப்பிக்கும் மனநிலையை நாம் வளர்த்துக் கொண்டால் நம் மனத்தைச் சாத்வீக இயல்பு கொண்டதாகவும், பரம்பொரு ளுடன் இசைவுற்ற நிலையிலும் இருக்குமாறும் நம்மால் செய்து கொள்ள இயலும். அதன்மூலம் நாம் நம்முடைய எல்லாக் கவலைகளையும், மிகப் பெரிய அளவில் உள்ள மனம் மற்றும் நரம்புகளின் அழுத்தத்தையும் குறைத்துக் கொள்ள இயலும். நம்மால் இதைச் செய்ய இயலும் எனின் தியானம் செய்ய இயல்வதற்கு வெகு நேரத்திற்கு முன்பே நம் மால் ஒருவகையான அமைதியை உணர இயலும். தியானம் செய்வதற்கு முயற்சி செய்யும் முன் இயன்ற அளவிற்குத் தணிவுடன் இருப்பதை ஒரு தகுதியாகக் கொள்ள வேண்டும்.

உணவு உட்கொண்டபிறகு, ஒரு இரண்டுமணி அளவில் சிறிதளவு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு 'பூனைத்தூக்கம்' கூட மனத்திற்குப் பெருமளவில் புத்துணர்ச்சி யைக் கொடுக்கவல்லது ஆகும். இது மிகவும் பயன் அளிக்கக் கூடியதாகும். ஆனால் பலருக்கும் இதை மேற்கொள்வதற்குக் கஷ்டமாக இருக்கும். அவர்களுடைய மனத்தின் பரபரப்பு மற்றும் கொந்தளிக்கும் செயல்களிலிருந்து பலருக்கும் சிறிதளவு ஓய்வு எடுப்பதும் மற்றும் மீண்டும் மனத்தை புனிதமான உருவத்தாலும் புனித மந்திரத்தின் இசைவுடை மையை அளிக்கவல்ல அதிர்வலைகளாலும் நிறைப்பது கஷ்டமானதாக உள்ளது.

நாம் உறங்கச் செல்வதற்கு முன்போ அல்லது படுக்கைக் குச் செல்லும் பொழுதோ உலக விஷயங்கள் நிறைந்த புதினங் களையோ (Novels) அல்லது சிறுகதைகளையோ, புனைகதை களையோ படிக்கக் கூடாது என்பதைப் பழக்கமாகக் கொள்ள வேண்டும். அந்த நேரத்தில் நமக்கு ஏதாவது புனிதமான எண்ணமோ, அல்லது புனிதமான மந்திரமோ நாம் ஊன்றி நினைப்பதற்குக் கட்டாயமாக வேண்டும். நீ கடவுளின் மடியின் மீது உறங்கப் போவதாக நினைத்துக் கொள் அல்லது

தெய்வீக ஒளிக்கடலில் உன் ஆன்மாவானது ஒரு ஒளியின் முனையைப் போல இரண்டறக் கலக்கிறது என்றோ அல்லது அதைப் போன்ற வேறு ஏதாவது எண்ணத்தை எண்ண வேண்டும். நாம் உறங்குவதற்கு முன்பு நம் முழுமனத்திலும் கடவுள் நிறைந்திருக்க வேண்டும். நாம் உலகியல் தொடர் பாக ஏதாவது படிப்பதற்கு நம்மை அனுமதித்தோம் எனின், நாம் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது நம்முடைய விழிப் புணர்வற்ற நிலையில் உள்ள மனத்தில் இது தொடர்ந்து தன் வேலையைச் செய்து கொண்டு இருக்கும் மற்றும் மிகுந்த கெட்ட விளைவுகளை ஏற்படுத்தும். மாலை நேரத்தில் நாம் நம்முடைய மனத்தை அதை எப்படிச் சுறுசுறுப்புடன் இருக்க அனுமதிக்கிறோம் என்பதில் கவனத்துடன் இருக்க வேண் டும். ஒருமுகப்படுத்தப்பட்ட அமைதியுடன் கூடிய நிலையில் கடவுளிடம் கருத்தூன்றி இருக்க வேண்டும். தெய்வீக வடிவத் திலோ, தெய்வீக திருநாமத்திலோ, அல்லது இரண்டிலுமோ இருக்க வேண்டும். அது கருதிய பயனைக் கட்டாயமாகத் தரத்தக்கது வழியாகும். இம்முறையில்தான் நம்மால் படிப் படியாக நம் விழிப்புணர்வு அற்ற மனத்திலுள்ள விஷயங் களைப் படிமாற்றம் செய்வதில் வெற்றி அடைய இயலும். நாம் உறங்கச் செல்வதற்கு முன்பு உலகியல் தொடர்பான நூல்களைப் படிப்பது மிகவும் கேடு விளைவிப்பது ஆகும். இந்த வகையில் கவனமற்றிருப்பதால் நாம் நமக்கு எந்த அளவில் தீங்கினை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொதுவாக நாம் உணர்வதில்லை. நாம் உறங்கிக் கொண் டிருக்கும் பொழுது நம் விழிப்புணர்வு அற்ற மனத்தின் செயல்பாடுகள் மிகவும் முக்கியமானவை ஆகும். மற்றும் அவைகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது.

காலையில் நீ எழுந்த பிறகும், இரவு உறங்கச் செல்வதற்கு முன்பும் உனக்குக் கடவுளைப் பற்றி நினைப்பது கஷ்டமானதாக இருந்தால், கடவுளின் படத்தை உன் அருகில் வைத்துக் கொண்டு, விளக்கை அணைக்கும் பொழுதும், காலையில் எழுந்தவுடனும் அந்தப் படத்தைப் பார்ப்பதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். கடவுளின் படத்தைப்

பார்க்கும் வழக்கத்தை நீ நடைமுறைப் படுத்தினால், கடவுளைப் பற்றி நினைக்காமல் உறங்கச் செல்வதோ அல்லது எழுந்திருப்பதோ உனக்குக் கஷ்டமாக இருப்பதை நீ விரைவில் உணர்வாய்.

குறிப்பிட்டுக் கூற வேண்டிய வேறு ஒரு விஷயமும் உள்ளது. இரவில் உனக்கு விழிப்பு ஏற்பட்டால், உடனடியாக அமைதியான, குழப்பமற்ற முறையில் உன் ஜபத்தைத் தொடங்க வேண்டும். தேவையற்ற சிரமம் இல்லாமல் செய்ய வேண்டும். ஆனால் நீ பயிற்சி செய்து கொண்டு இருக்கும் பொழுது ஜபமும், உறக்கமும் ஒருபொழுதும் தொடர்பு படுத்தப்படக்கூடாது. அப்படிச் செய்தால் அது மிகவும் தவறானதாகும். உறங்கச் செல்வதற்கு முன்பு 100 முதல் 1000 முறைகள் ஜபிக்க வேண்டும். உன்னை புனிதமான மந்திரத் தால் நிறைத்துக் கொள்ள வேண்டும். மற்றும் நீ திட்டமிட்ட எண்ணிக்கையை அடையும்வரையிலும் ஒருபொழுதும் ஜபம் செய்வதை நிறுத்தக் கூடாது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

நிலைத்த விழிப்புணர்வு மையத்தை வைத்துக்கொள்வாய்

உனக்கு ஒரு நிலைத்த, உறுதியான விழிப்புணர்வு மையம் இருக்க வேண்டும். உன்னுடைய 'நான்' என்னும் உணர்வின் மூலாதாரத்தை நாடுவதால் மட்டுமே அல்லது பரம்பொருளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதால் மட்டுமே அதைக் கண்டு கொள்ள இயலும். எப்பொழுதும் அந்த விழிப்புணர்வு மையத்தையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும். ஒருபொழுதும் இதயத்திற்குக் கீழே உள்ள மையத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. உன் மனத்தை ஒருபொழுதும் கீழாக உள்ள மையங்களில் ஒரு முகப்படுத்துவதற்கு முயற்சி செய்தல் கூடாது. இருப்பினும் தந்திரமுறையைச் சார்ந்த நூல்கள் அதைக் குறிப்பிடுகின்றன. தொடக்க நிலையிலிருப்பவனுக்கு கீழாக உள்ள மையங் களில் ஒருமுகப்படுத்தும் தன்மையானது பாலுணர்வு மற்றும் வேறு உணர்ச்சிகளைத் தூண்டுவதற்கு வழியமைத்து விடும்.

உணவுக் கட்டுப்பாடு

ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகன் ஒரு பொழுதும் தன் வயிற்றை அதிக உணவால் நிறைத்துக் கொள்ளக் கூடாது. ஆன்மீக வாழ்க்கையில் உணவிற்கு அதனுடைய சரியான இடம் அளிக்கப்பட வேண்டும். அது ஒருவகையான ஆட்டிப் படைக்கும் தன்மையுடையதாக இருத்தல் கூடாது. உன்னுடைய தேவைகளுக்குப் பொருத்தமானதாக உள்ள, உணவு வகையின் அளவை நிர்ணயம் செய்ய வேண்டும். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உபவாசம் இருப்பது நல்லது ஆகும். ஆனால் எப்பொழுதும் மிதமாக இருப்பதைப் பழக்கிக் கொள்வது நல்லது ஆகும். ஒரு சில உடல் அமைப்பிற்கு உபவாசம் இருப்பது ஒத்துக் கொள்ளாமல் இருக்கும். அத்தகையவர்கள் உபவாசம் இருக்க வேண்டும் என்னும் ஆவலைத் தவிர்க்க வேண்டும். உபவாசம் இருப்பதற்கு முயற்சி செய்து கொண்டே அதில் தோற்கும் சில மனிதர்களும் உள்ளனர். அவர்கள் அதைக் குறித்து எப்பொழுதும் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். எப்பொழுதும் கடவுளைப் பற்றி நினைப்பதற்குப் பதிலாக மிகுதியான அளவில் நேரமும் சக்தியும் இத்தகைய தேவையற்ற முயற்சிகளில் வீணடிக்கப்படுகின்றன.

ஆசனம்

ஆசனத்தைப் பொறுத்தமட்டில் இரண்டுவேறு விதமான ஆசனங்களை நீ மேற்கொள்ள வேண்டும். உனக்குச் சிரமம் ஏற்படும் பொழுது, நீ ஒரு ஆசனத்திலிருந்து மற்றொரு ஆசனத்திற்கு உன்னை மாற்றிக் கொள்ளலாம். சாதனையின் மையக் கோட்பாடாக தியானம் விளங்குகிறது. மற்ற அனைத்துமே சரியான மனநிலையை அடைவதற்கு உரிய முன்னேற்பாடுகளைத் தவிர வேறு எதுவும் இல்லை. சரியான மனநிலை இருக்கும் பொழுது தியானம் செய்வது மிகவும் சுலபமானதாக உள்ளது. இந்தியாவில் தற்சமயம் பல்வேறு வகையான ஆசனங்களைச் செய்யும் நடைமுறையானது

மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. ஆன்மீக வாழ்விற்கு இத் தகைய எல்லா ஆசனங்களும் அவசியமானது அல்ல. உடலும், தலையும் நேராக இருக்க வேண்டும். நாம் தடுமாற்றம் இல்லாமல், தணிவுடன், சுகமாக இருக்க வேண்டும் என்பது தான் மிகவும் முக்கியமானதாகும். போதுமான அளவு பயிற்சி செய்த பிறகுதான் இது எளிமையானதாகவும், இயல்பானதாகவும் இருக்கும்.

இலயத்துடன் கூடிய மூச்சுப்பயிற்சி

ஒழுங்குடன், நெறிமுறையுடன் கூடிய அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ளாதவர்களுக்கும், தகுதி வாய்ந்த குருவிடம் தொடர்ந்து போதனையைப் பெறாதவர்களுக்கும் பிராணாயாமப் பயிற்சியானது ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கலாம். ஆனால் முறையுடன் கூடிய மூச்சுப் பயிற்சியை மூச்சை அடக்கிக் கொள்ளாமல் பயிற்சி பெறுவதில் எத்தகைய கேடும் இல்லை. முதலில் ஒருவர் அதைக் குறிப்பிட்ட நேரத்திற்குச் செய்யலாம். அதற்குப்பிறகு ஒருவர் அதை மற்ற நேரங்களிலும் செய்யலாம். எப்பொழுதும் இலயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சியை, அது ஒரு பழக்கமாக ஆகும் வரையிலும் செய்ய வேண்டும். ஒழுங்குமுறையற்ற மூச்சுப் பயிற்சியானது பெரிய அளவில் சக்தியை வீணடிக்கிறது மற்றும் அதே நேரத்தில் அது மனத்தையும் அமைதி அற்றதாகச் செய்து விடுகிறது. புலன்கள் அடக்கப்பட வேண்டும். மனம் இலயம் நிறைந்ததாக ஆக்கப்பட வேண்டும். உடல் என்னும் இயந்திரத்தின் சக்கரங்கள் உன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் வர வேண்டும். அதற்குப் பிறகு நீ இயந்திரத்தை இயக்குவதில் மகிழ்ச்சி அடைவாய்.

தொடர்ந்த விழிப்புணர்வின் அவசியம்

வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும், படிநிலைகளிலும் முழுமையான விழிப்புணர்வுடன் இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். நீ எடுத்துக் கொள்ளும் ஒவ்வொரு பொறுப்பான பணியிலும் உன்னுடைய உண்மையான செயல்

நோக்கத்தை அடையாளம் கண்டு கொள்வதற்கும் கற்றுக் கொள்ள வேண்டும். உன்னைக் கடுமையாக விமர்சித்துக் கொள்ள வேண்டும். ஆனால் இந்த விமர்சனமானது ஆக்க பூர்வமானதாக இருக்க வேண்டும். அழிவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது. உன்னுடைய ஆன்மீக முயற்சி யிலும், பரிணாம வளர்ச்சியிலும் உனக்கு உதவ வேண்டு மாயின் அது அவ்விதம் இருக்க வேண்டும். 'நான் ஒரு பாவி' என்னும் எதிர்மறை மனப்பான்மையானது உன்னை இன்னும் பாவியாக்குகிறது. பாவியாகத்தான் ஆக்குகிறது. மற்றும் உன்னிடமிருந்து ஆன்மீக தொடர்பான எல்லா முதல்நிலை முயற்சிகளையும் அகற்றி விடுகிறது.

தொடர்ந்து செய்யப்படும் செயல்களின் மூலம் பழக்கம் உருவாக்கப்படுகிறது. நீ உன் செயல்களை மாற்றிக் கொண் டால் பழக்கங்களையும் மாற்றிக் கொள்ள வியலும். பழக்க மானது நம்முடைய இரண்டாம் பட்ச இயல்பே ஆகும். நம் முடைய இருப்பின் முக்கியமான பகுதி இல்லை. தொடர்ந்து செய்யப்படும் பயிற்சியின்மூலம் மிக மோசமான பழக்கத் தையும் மாற்ற இயலும். மிக நீண்ட நாளைய பழக்கமாக இருப்பின், அதை விஞ்சி மேம்படுவது மிகவும் கஷ்டமான தாகும். ஒரு கெட்ட பழக்கமானது, அதை மாற்றுவதற்காகத் தொடர்ந்து செய்யப்படும் முயற்சிகளுக்குப் பிறகு நீடிக்கு மாயின் அதைக் குறித்து ஒருவர் சோர்வடையத் தேவை யில்லை. ஒருவர் அவரை அவருடைய விழிப்புணர்வற்ற மனத்தின் செயல்பாடுகளை எச்சரிக்கையுடன் கண் காணிப்பவராக வைத்துக் கொண்டால் மற்றும் நெறிமுறை களுடன் கூடிய திட்டமிட்ட ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்டால் எல்லாக் கெட்ட வழக்கங்களும் விரை வில் குறைந்து பிறகு மறைந்துவிடும். ஆனால் விடா முயற்சியும், பொறுமையும் கண்டிப்பாக இருக்க வேண்டும். நீ புதிய கெட்ட வழக்கங்களை வளர்த்துக் கொள்ளாமல் இருக்கிறாயா என்று கவனிக்க வேண்டும். பழைய கெட்ட வழக்கங்களே போதுமான அளவிற்குத் தொல்லைகளை அளிக்கின்றன.

ஒரு சங்கிலியின் வலிமையானது, அதனுடைய மிகவும் பலவீனமாக உள்ள தனிவளையத்தின் வலிமையைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. எனவே கெட்ட தோழமை யையோ அல்லது கெட்ட தொடர்பையோ எதிர்த்து நிற்க நம் திறமையானது நாம் மிகவும் பலவீனமாக உள்ள தருணங் களில், அதற்கு நம்முடைய எதிர்ச் செயல்களை வைத்து மதிப்பிடப்படுகிறது. எனவே நாம் நம்மை கண்காணித்துக் கொண்டு இருக்க வேண்டும். தீமைகளின் இயக்க விளைவிலிருந்து முடிந்த அளவிற்கு நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். சரியாக, முறையாக சிந்திப்பதன் மூலமும், நடத்தையின் மூலமும் நம்மை நாமே பகுத்து ஆராய்ந்து அறிவதன் மூலமும், பிரார்த்தனை மற்றும் தியானத்தின் மூலமும் நம்முடைய இயல்புகளிலுள்ள பலவீனங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எல்லா முயற்சிகளையும் செயல்படுத்த வேண்டும்.

நாம் உண்மையிலேயே விழிப்புணர்வுடன் இருந்து கொண்டு, உண்மையான சாதகனின் வாழ்வை மேற்கொள்ள முயற்சி செய்தால், நம்மால் நம்முடைய மனத்தில் எழும் எல்லா எண்ணங்களையும் எல்லா உணர்ச்சிகளையும் மற்றும் மனத்தின் எல்லா அசைவுகளையும் கவனிக்க இயலும். சாதாரணமாக நாம் இவ்வனைத்தையும் குறித்து கவன மற்றவர்களாகவும் ஊக்கமற்றவர்களாகவும் விளங்குகிறோம். நம் மனக் குதிரை, நம்மைப் பள்ளத்தில் தூக்கி எறிந்த பிறகு தான் நாம் எத்தகைய ஆபத்தான நிலையில் இருக்கிறோம் என்பதைக் குறித்து நாம் அறிந்துகொள்கிறோம், ஆனால் அதை அடைவதற்கு முன்பு, நம்முடைய கவனமற்ற தன்மை யாலும் சரியான முயற்சி இல்லாமல் இருந்ததாலும், உணரப்படாமல் அது பள்ளத்தின் வரை சென்றிருந்தது.

கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண் டும். கவனக்குறைவால்தான் வழியிலே எல்லா விபத்துக் களும் ஏற்படுகின்றன. எனவே உன்னைக் கண்காணித்துக் கொண்டு இருப்பாய். எப்பொழுதும் எச்சரிக்கையுடன் இருப்பாய். ஒரு நிமிடநேரத்திற்குக் கூட உன் மனத்தைக்

கண்காணிக்காமல் விட்டுவிடாதே. சாதகர்கள் எந்த வழியைப் பின்பற்றினாலும், எல்லா சாதகர்களுக்கும் இது பொதுவான விதிமுறையாகும்.

உன் சூழ்நிலையுடன் பொருத்திக் கொள்ளுதல்

நீ எங்கு இருந்தாலும் ஒரு ஆன்மீகச் சூழலை ஏற்படுத்திக் கொள்வாய். உன்னுடைய அறையை ஒரு கோயிலாக மாற்றுவாய். நீ ஒரு புனிதமான இடத்திற்கோ அல்லது துறவிகளின் மடத்திற்கோ செல்லும் பொழுது, அதனுடைய புனிதமான சூழலை அனுபவிப்பது மட்டுமே போதாது. அதற்கு நீயும் உன் பங்கு ஏதாவது அளிக்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் முழுமையான ஆன்மீகச் சூழலானது உள்ளீடற்றதாக உள்ளது. நம் பங்கு ஏதாவதை நாம் அதற்கு அளிக்கக் கற்றுக்கொள்ளாவிட்டால் இந்தியாவிலும் அதுவே நிகழும் வாய்ப்பு உள்ளது. கட்டிடங்களும், படங்களும் மட்டுமே போதாது. பெரும்பாலான சமயங்களில் இவற்றின் வருகையால் ஆன்மீக இழப்புக்கள் ஏற்படுகின்றன.

சூழ்நிலைகளைக் குறித்து முணுமுணுப்பதில் எந்தப் பயனும் இல்லை. உலகம் உனக்காக மாறாது. நீதான் உன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். நீ உன்னைச் சரியாக சுருதி சேர்த்துக்கொண்டு, மிக உயர்ந்த உண்மையுடன், எங்கும் வியாபித்துள்ள பரம்பொருளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். நாம் ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது, நாம் நம்மைக் குறித்தும் மற்றும் கடவுளைக் குறித்து மட்டுமே எண்ண வேண்டும். மற்ற எல்லாவற்றையும் நாம் மறந்துவிட வேண்டும். நாம் கடவுளைத் தவிர வேறு எதைக் குறித்தும் அதிகமாகக் கவலைப்படத் தேவையில்லை. நாம் கடவுளுடன் மட்டுமே வாழ வேண்டும். இது உண்மைதான். ஆனால் இறுதியாக அடைய வேண்டிய நிலை இதுவல்ல. ஆனால் அதை அடைவதற்குரிய படிக்கல்லாக இது மிகவும் தேவையானதாகும். அவனால், அவனுக்காக, அவன்மூலம் மட்டுமே இறுதியாக நாம் எல்லாவற்றிலும் அதே கடவுளைக் காண வேண்டும். அனைவரிடமும் அன்பு செலுத்த வேண்டும்.

கடவுளிடம் ஒரு உறுதியான மனப்பான்மையை வளர்த்துக்கொள்வாய்

ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகன் ஒரு உறுதியான மனப்பான்மை அல்லது தொடர்பைக் கடவுளிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும். கடவுளின் ஒரு குறிப்பிட்ட இயல்பைத் தீவிரமாக விரும்புபவனாக அல்லது அவதார புருஷரை விரும்புபவனாகத் தொடங்க வேண்டும். அதன்பிறகு அவன் தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் பின்னணியில், இயலுலக இருப்பைக் காணக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன்பிறகு அவன் இயலுலக அண்டத்தின் பின்னணியில் பரம் பொருளைக் காணக் கற்றுக்கொள்ள வேண்டும். அவதார புருஷர் அல்லது இஷ்டதெய்வமானவர், நம்மைப் படிப் படியாக மிக உயர்ந்த ஞானத்தை நோக்கி அழைத்துச் செல் கின்றார். எல்லாவற்றையும் கடந்த நிலையிலுள்ள முழு முதற் பொருளை உணர்வது என்பது, எல்லா இடங்களிலும் பரவியுள்ள தெய்வீக தத்துவத்தை உணர்வதன் மூலமே நடை பெறுகிறது. தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள் ளாமல் அறிவை ஈர்க்கும் தன்மை எவ்வளவு இருப்பினும் நெடுந்தாண்டுதல்மூலம் யாராலுமே பரம்பொருளை அடைய வியலாது. நாம் நம்முள்ளே, இயலுலக அண்டத்திற்கு உரிய கண்ணோட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றியடை யும் அளவிற்கு நாம் ஆணோ அல்லது பெண்ணோ, நுண் பொருளோ அல்லது பருப்பொருளோ அல்ல என்றும் எல்லாமே ஒன்றுதான் அது தன்னைப் பலவகையான பெயர் களிலும், வடிவங்களிலும் வெளிப்படுத்திக் கொள்கிறது என்றும் அறிகிறோம்.

நாம் மிக மோசமான, அச்சத்தை ஏற்படுத்தும் பொருட் களிடத்திலும் கடவுளை மட்டுமே காண்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். மோசமானதும், அச்சத்தை ஏற்படுத்து வதும் ஒருபொழுதும் நம் மனத்தில் விஞ்சி நிற்பதற்கு அனுமதிக்கக் கூடாது. அவர் கண்ணுக்குப் புலனாகும் அனைத்துப் பொருட்களிலும், தூய்மையற்றவற்றிலும்,

மோசமானவற்றிலும், இழிவானவற்றிலும் கூட இருக்கிறார். ஆனால் இத்தகைய வெளிப்பாடுகள் நம் மனத்தைப் பாதிப்ப தற்கு ஒருபொழுதும் அனுமதிக்கப்படக் கூடாது. அல்லது நம் மனத்தைத் தன்வசப்படுத்திக் கொள்ளக் கூடாது. இயலுலக அண்டத்தின் தொலைக்காட்சியை வளர்த்துக் கொள் ளாமல் நம்மால் சமநிலையையும், மன அமைதியையும் பெறவியலாது.

பரம்பொருளை மட்டுமே காண்பதில் நாம் எந்த அளவு வெற்றி அடைகிறோமோ, அந்த அளவிற்கு நாம் வரையறை களையும் முரண்பாடு உள்ள எதிரிணைகளையும் மறக் கிறோம். நாம் புலன்களால் உணரத்தக்க உலகத்தின் முழுமை யான நாடகத்தையும் மறந்து விடுகிறோம். கடவுளைத் தவிர மற்ற அனைத்தும் சிறப்பற்றவை. தற்காலிகமானவை. இரண் டாம் இடத்திற்கு உரியது, வெறும் நிழல், பயனற்ற கடந்து செல்லும் காட்சியே ஆகும் என்று நாம் உணர்ந்துகொண்டால் நம்மால் அதைச் செய்ய இயலும், புலன்களால் நம் மனத் திற்கு அளிக்கப்படும் மருட்சிகளிலிருந்து நாம் நம்மை விடு வித்துக்கொள்ள இயலாவிட்டால் கட்டுப்பாடற்ற மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நம்மால் இயலாவிட்டால், கடவுளின் பக்கம் உண்மையாகத் திரும்புவதற்கு இயலாது. மற்றும் கடவுளை நம் வாழ்வின் இயக்க மையமாக வைத்துக் கொள்ள இயலாது.

பொருட்களை, அவை உள்ளபடியே காண்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். புலன்களால் உணரத்தக்க மட்டத் தில் எல்லா இடங்களிலும் நீ அழுக்கையும், மலர்களையும் அருகருகில் காண்கிறாய். அந்த வெளிப்பாடுகளின் மட்டத் திற்கு அப்பால் நம்மால் செல்ல இயலாத வரைக்கும், முரண்பட்டுள்ள எதிரிணைகளுக்கு அப்பால் நம்மால் செல்ல இயலாத வரைக்கும் அவை எப்பொழுதும் பிரிக்க வியலாத நிலையிலேயே உள்ளன. நீ சாதனை செய்யத் தொடங்கும் ஆரம்பக் கட்டத்தில், உலகத்தின் மீதும், அதன் இன்பங் களின் மீதும் ஒரு அருவருப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு நீ இந்த அருவருப்பை விஞ்சி

மேம்படுவாய். மற்றும் ஆன்மீகக் கண்களால் இந்த உலகத்தைக் காண்பாய்.

உன் மனத்தைத் திறமையாகக் கையாளக் கற்றுக்கொள்வாய்

நீ மனத்தின் சரியான முனையைத் தொடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். உனக்குப் பால் கறக்கத் தெரியவில்லை எனின், பசுவிடமிருந்து உனக்குப் பால் கிடைக்காது. மிகப் பெரிய அளவில் உனக்குப் பால் தேவைப்பட்டால் பால் கறப்பதில் நிபுணனாக இருக்க வேண்டும். அதைப் போன்றே, உன் மனத்தை உனக்குத் திறமையாகக் கையாளத் தெரியவில்லை எனின், அதிலிருந்து உனக்குப் பெரிய அளவில் பயன் ஏற்படாது. நீ புத்தகங்களைப் படிப்பதன்மூலம் உன் மனத்தைப் பல நல்ல கருத்துக்களால் நிறைத்து இருக்கலாம். உனக்குப் பாலிற்குப் பதிலாக நல்ல உதைகள்தான் கிடைக்கும்.

மனத்திலே பல பிரிவுகள் உள்ளன. சிலவற்றை நீ எச்சரிக்கையுடன் பூட்டி வைக்க வேண்டும். அதாவது கெட்ட உணர்ச்சிகளையும் மற்றும் நினைவுகளையும் கட்டுப்படுத்த வேண்டும். மற்றவை திறக்கப்பட வேண்டும். அதாவது பற்றற்ற தன்மையைச் செயற்படுத்தும் மனப்பான்மை, நம்பிக்கை, பக்தி போன்றவையாகும். இவை ஊக்கமூட்டப்பட வேண்டும். மற்றும் இறுதியாக நீ எல்லாப் பிரிவுகளுக்கும் தீ வைக்க வேண்டும். ஏனெனில் உண்மையானது நல்லது மற்றும் கெட்டது என்னும் இரண்டிற்கும் அப்பால் உள்ளது.

எப்பொழுதும் கடவுள் ஒருவர் பக்கமே திரும்புவாய்

இவ்வுலகத்தில் நாம் பெறும் ஒவ்வொரு குத்தும், ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு உதையும் கடவுளை நோக்கி நம்மைத் தள்ளுகின்றன. மற்றும் நமக்கு உலகத்தின் நிலையற்றதன்மையை நினைவு படுத்துகின்றன. அதன்மூலம் நம்முடைய எல்லா ஏமாற்றங்களும், நம்முடைய எல்லாத்

துன்பங்களும் அருள்வளமாக ஆகின்றன. உனக்கு ஏதாவது சுமை இருக்குமாயின், தெய்வீகக் காற்றோட்டத்தைத் தருவித்து, முழு வளிமண்டலத்தையும் அதனால் தூய்மைப் படுத்த வேண்டும். நீராவியானது சில சமயங்களில் அதிக அளவு சேர்த்துவிட்டால் அதை வெளியேற்றுவது நல்லதாகும். ஆனால் அதுவும் கடவுளை நோக்கியே செலுத்தப்பட வேண்டும். நீ கடவுளை உன்னுடைய நண்பனாக, விளையாட்டுத் தோழனாக, தோழியாக உனக்கு வேண்டுமென்றால் திட்டலாம். உனக்கு உண்மையாக அவருடன் எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிந்திருந்தால் அவர் உனக்கு மிகவும் அருகில் இருக்கிறார். நீ அவருடன் உரிமையுடன் பேசினால் அவர் வருத்தம் அடைய மாட்டார். கடவுளுடன் ஒரு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதுதான் ஆன்மீக வாழ்வில் மிகப் பெரிய மிக முக்கியமான பணியாகும்.

ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகன் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடவுளை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும். தொடக்கத்தில் அவன் மனிதர்களின் மற்றும் நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம், ஆனால் உரிய நேரத்தில் அவன் மேலும் மேலும் கடவுளிடமிருந்து அகத் தூண்டுதலை இழுத்துக்கொள்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் துன்பத்தில் இருக்கும் பொழுது, நம் மனம் முழுவதும் குழம்பிய நிலையிலுள்ளது. நாம் மிகப் பெரிய வேதனையை உணர்ந்தாலும் நாம், 'ஆமாம். என்னுடைய உடலும் மனமும் மட்டுமே இதை உணர்கின்றன. ஆனால் என்னுடைய ஆன்மாவானது அவைகளால் தொடப்படுவதில்லை மற்றும் ஆன்மாவை அவைகளால் சிறைப்படுத்த இயலாது' என்றும் கூற வேண்டும். எப்பொழுதும், எல்லா நேரங்களிலும் ஆன்மாவின் மேன்மையை, சுதந்திரத் தன்மையை வலியுறுத்துவாய். கடவுளை உணர்ந்தவர்கள் எப்பொழுது துன்பம் அடைகிறார்களோ அவர்கள் பார்வையாளர்களாக மட்டும் உள்ளனர். அவர்கள் உடனடியாக அவர்களின் மனத்திற்கு ஒரு உயர்ந்த திருப்பத்தை அளித்து,

எல்லாச் சூழ்நிலைகளிலும் பாதிக்கப்படாதவர்களாக உள்ளனர்.

நம் இதயங்களில் குடிகொண்டுள்ள கடவுளை உணரும் நம்முடைய ஆற்றலானது உறுதிப்படுத்தப்பட வேண்டும். நம்முள்ளே உள்ள தெய்வீக விழிப்புணர்வை நோக்கி நம் முடைய எல்லா எண்ணங்களும் மற்றும் உணர்வுகளும் திருப்பப்பட வேண்டும். அதைக் குறித்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இந்த வெளியுலகத்தில் மிக அதிக அளவில் துன்பமும் மிக அதிக அளவில் எண்ணக்குலைவும், வேதனையும் வலியும் உள்ளன. மற்றும் அது எப்பொழுதும் அப்படித்தான் இருக்கும். புலன்களால் உணரத்தக்க இவ் வுலகம் முரண்பாடுகள் உள்ள எதிரிணைகள் இல்லாமல் இருக்க வியலாது. எனவே எப்பொழுதும் நன்மையும் தீமை யும், துன்பமும் வேதனையும் இருக்கும். மாறுபாடற்ற மகிழ்ச்சி என்பது ஒருபொழுதும் இருக்க வியலாது. இந்த நிலைமையை ஒருபொழுதும் மாற்ற இயலாது. அதிக அளவிற்குக் கடவுளைப் பற்றிக் கொண்டு, உண்மையான அர்ப்பிக்கும் தன்மையை வளர்த்துக்கொள்வதுதான் நீ செய்ய வேண்டியதாகும். இது ஒரு நழுவல் அல்ல. இது ஒன்றுதான் அமைதியை மற்றும் இன்பத்தை அடைவதற்கான ஒரே வழி யாகும். அதுதான் நடைமுறைத் தீர்வு ஆகும். நீ தொடர்ந்து குறைகூறிக் கொண்டிருக்கும் வெளியுலகத்திலுள்ள எல்லாத் தொல்லைகளும், மற்றும் இந்த உலகத்திலுள்ள எல்லா மன உலைவுகளும் நம்மைப் போருக்கும், உலகப் போர்களுக்கும் அழைத்துக் கொண்டு செல்லலாம். நமக்குக் கடவுளை நாடு வதற்கு வலிமை அளிப்பதாக இருக்க வேண்டும். கடவுள் மட்டுமே அமைதியின் கருவூலமாகத் திகழ்கிறார். நம் முடைய எல்லாத் துன்பங்களும் மற்றும் தொல்லைகளும் மற்றும் ஏமாற்றங்களும் தொடர்ந்து நமக்கு இவ்வுலகத்தின் நிலையற்ற தன்மையை நினைவு படுத்தட்டும். நமக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய எதுவும் இவ்வுலகத்தில் இல்லை. நாம் இவ்வுலகத்திடமிருந்து எந்த இன்பத்தையும், எந்த மகிழ்ச்சியையும் எதிர்பார்க்க வேண்டாம். நமக்குக் கடவுள்

மட்டுமே வலிமையின் மூலாதாரமாக உள்ளார். எல்லாம் கடவுளின் விருப்பப்படியே நடக்கட்டும். நாம் அனைவரும் அவருடன் ஒன்றாக இணைவோம். உண்மையாக, ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகனின் மனப்பான்மை இவ்விதம் இருக்க வேண்டும்.

எளிமையின் அவசியம்

உன்னுடைய நடைமுறைத் தொடர்புகள் அனைத்திலும் நேர்மையாக இருப்பாய். இறுமாப்பையும், போலித்தனத்தையும் விட்டுவிடுவாய். குழந்தையைப்போல இருப்பாய். ஆனால் சிறுபிள்ளைத்தனமாக இருக்காதே. உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்களின் நடுவில் இருக்கும்பொழுது ஒட்டாமல் ஒதுங்கி இருப்பாய். இங்கு ஏளனத்துடன் கூடிய செருக்கின்றி நயமுடன் நடந்துகொள்ள வேண்டும். நீ பொதுவாக மற்றவர்களிடம் பரிவு உடையவனாக இருக்கலாம். இருப்பினும் ஒட்டாமல் ஒதுங்கியே இருக்க வேண்டும். மற்றும் தனிப்பட்ட முறையில் அவர்களை உன் அருகில் வருவதற்கு அனுமதிக்காமல் இருக்க வேண்டும்.

நாம் எளிமையாக இருக்கும் அந்தக் கணத்தில் எல்லாமே எளிமையாகி விடுகின்றன. கடவுளின் உண்மையான குழந்தைகளைப்போல கள்ளங்கபடமற்றவர்களாக வாழ வேண்டும். நாம் ஒரு குழந்தையின் எளிமையையும், தூய்மையையும் வயது வந்த மனிதரின் முதிர்ச்சியையும், அறிவையும் ஒருங்கிணைப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நீ உன் இதயத்தில் இருப்பவற்றை அனைவருக்கும் கூறிவிடக் கூடாது. தூய்மையான, ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள மனிதர்களிடம் நீ உன் இதயத்தில் இருப்பனவற்றைக் கூறலாம். நீ உன் வீட்டுக் குப்பைகளை வெளியே வந்து கிளறத் தேவையில்லை. தீய மனிதர்கள் நீ வெளிப்படையாக ஒப்புக் கொண்டவற்றைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவற்றை உனக்கு எதிராகத் திருப்பி விட்டு உன் வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகச்

செய்துவிடுவார்கள். ஆனால் நீ ஒரு விவேகமுள்ள பெரியவரிடம், ஏற்கனவே ஆன்மீகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ள ஒருவரிடம், அதனுடைய கஷ்டங்களை அனுபவித்த ஒருவரிடம் நீ உன் இதயத்தைத் திறந்து பேசலாம். நீ உன் மனத்தை ஒருபொழுதும் உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்களிடமும், தவறான மனிதர்களிடமும் திறக்கக் கூடாது. நீ கஷ்ட காலத்தில் இருக்கும்பொழுது, அனுபவமும், முதிர்ச்சியும் உடைய ஒருவர் கிடைக்கவில்லை எனின், உன் இஷ்ட தெய்வத்தை நோக்கித் திரும்ப வேண்டும். உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்களால், உனக்கு அறிவுரையைத் தர இயலாது. முட்டாள்களின் அறிவுரைகளைக் கேட்பதே துன்பம் ஏற்படுவதற்கான பெரிய காரணங்களில் ஒன்று ஆகும்.

அவர்களுக்கு அவர்களையே தெரியாது. எனவே அவர்களால் உனக்கு எப்படி உதவ இயலும்? அவர்களுக்கு நல்ல நோக்கு இருப்பினும் கூட, ஆன்மீக விஷயங்களில் அவர்களால் உனக்குச் சரியான அறிவுரையைக் கூற வியலாது. அப்படி அவர்கள் கூறினால் அது உன் முழு வாழ்க்கையையும் பாதிக்கக் கூடும். அதற்கு மற்றொரு வகையான மனப்பாங்கு தேவைப்படுகிறது. உலகியலில் நாட்டம் கொண்டவர்களிடம் அத்தகைய மனப்பாங்கு இல்லை. ஒளியைப் பிரதிபலிப்பதற்கு அவர்களுடைய கண்ணாடிகள் மிகவும் அழுக்கடைந்துள்ளன. ஒருவேளை அவை அதைப் பிரதிபலித்தால், படமானது மங்கலாகத் தெளிவற்று இருக்கும் மற்றும் உருவம் சிதைந்தும் இருக்கும். குழப்பம்தான் அதன் விளைவாக இருக்கும்.

முதலில் உண்மையான நாகரீகம்,
பண்புடைய மனிதனாக இருப்பாய்

இது மிக முக்கியமான ஒரு விஷயமாகும். நீ ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்ட ஆணாக அல்லது பெண்ணாக ஆவதற்கு முன்பு, நாகரீகம், பண்பு நிறைந்த ஆணாக, அல்லது பெண்ணாக, அந்தச் சொல்லின் உண்மையான பொருளுக்குத்

தகுந்தாற்போல ஆக வேண்டும். பண்பு நிறைந்த ஆண்கள் மற்றும் பெண்களால் மட்டுமே ஆன்மீக ஈடுபாடு கொண்ட ஆண்களாகவும் பெண்களாகவும் ஆக இயலும். நான் எப்பொழுதுமே மனிதர்களுக்கு மீண்டும் மீண்டும் பக்தனாக ஆவதற்கு முன்பு, ஆன்மீக வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் வருவதற்கு முன்பே, நீ பண்பு நிறைந்த ஆணாகவும், பெண்ணாகவும் ஆக வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறுவேன். ஆன்மீக வாழ்க்கைக்கு வழிகாட்டும் பூர்வாங்கப் பயிற்சிகளில் குறைந்தபட்சமாவது அவனோ அல்லது அவளோ நிலைநிறுத்திக் கொண்டால் பக்தனால் ஒரு பண்பு நிறைந்த ஆணாகவும் பண்பு நிறைந்த பெண்ணாகவும் ஆக இயலும். சில நேரங்களில் மனிதர்கள் மிகவும், உயர்நிலைக்குப் பொருத்தமற்ற நிலையில் பண்பாடற்ற முறையில் நடந்து கொள்வதை நாம் காண்கிறோம். பல நேரங்களில் நன்றாக வளர்ந்துள்ள மனிதர்கள் குழந்தைகளைப்போல நடந்து கொள்கின்றனர். குழந்தைப் பருவமானது தாண்டப்பட வேண்டும். சில நேரங்களில் மனிதர்கள், அவர்களுடைய வாழ்நாள் முழுவதும், அவர்களால் தங்களைச் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல சரியாகப் பொருத்திக் கொள்ள வியலாத காரணத்தால், மற்றும் சரியான மனப்பான்மையில்லாததால் உயர்நிலைக்குப் பொருத்தமற்ற தன்மையுடனும் முரட்டுத்தனத்துடனும் இருக்கிறார்கள். அது தவறான குழந்தைப்பருவத்தால் ஏற்படும் வினைப்பயன் ஆகும். அது தடைப்பட்ட வளர்ச்சியின் பயன் ஆகும். நான் பல சமயங்களில் மனிதர்களை அவர்கள் ஆன்மீக வாழ்வைத் தொடங்குவதற்கு முன்பு Dale Carnegie என்பவரின் How to Win Friends and Influence People மற்றும் How to Stop Worrying and Start Living என்னும் புத்தகங்களைப் படிக்கும்படிக் கூறுவேன். நம்முடைய பல சிக்கல்களுக்கும், ஆன்மீக வாழ்விற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. அவை நம்முடைய தவறான மனப்பான்மைகளாலும் தவறான நடத்தையாலும் ஏற்படுத்தப்பட்ட சிக்கல்களே ஆகும்.

நமக்குப் பழக்கமற்றவர்கள் நாம் நல்லவர்கள் என்று அறிந்துகொண்டால் மட்டும் போதாது. நாம் நல்லவர்கள் மற்றும் முழுமையாகக் கட்டுப்பாடு உடையவர்கள் என்பதை நம் அருகில் உள்ளவர்களும் உணரும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். முன்பின் பழக்கமற்றவர்களுக்கு நல்ல புன்சிரிப்புடன் கூடிய முகத்தைக் காட்டுவது மிகவும் சுலபமானதாகும். நாம் எப்பொழுதோ ஒரு முறை பார்க்கும் ஒருவருடைய கருத்துக்கு மதிப்பு அளிப்பதைவிட, நம் அருகில் இருப்பவர்களின் கருத்துக்கு மதிப்பு அளிக்க வேண்டும்.

பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்வாய்

சகிப்புத்தன்மையற்ற தன்மையும், மதவெறியும் ஒரு மனிதனுக்கு எத்தகைய ஆன்மீக அனுபவமோ அல்லது உறுதி யான நம்பிக்கையோ இல்லை என்பதைத்தான் காட்டுவதாக உள்ளது. அது ஒரு நாத்திகனின் போக்கு ஆகும். அவர் நம்பிக்கையற்ற நிலையில் ஏதாவது ஒரு உறுதியான கோட் பாட்டைப் பற்றிக்கொண்டு விடுகிறார். ஏனெனில் அவருக் குள்ளே ஆழமாக அவருடைய சொந்த சந்தேகங்களை விழிப் புணர்வுடன் முயன்று அவரால் வெல்ல இயலுவது இல்லை. உண்மையான நம்பிக்கை உடையவர்கள் அனைவரிடமும் பரிவுடன் இருப்பார்கள். மற்றும் மற்ற உண்மையான சமய ஆர்வமுடைய ஆன்மீக நாட்டம் உடையவர்களிடம் பொறாமை கொள்ள மாட்டார்கள். சமயத்திற்காக அடிதடி யில் ஈடுபடுவது நிச்சயமாக சமயப் போலி நடிப்பின் அறிகுறியே ஆகும்.

ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகன் எல்லாச் சூழ் நிலைகளிலும் பொறுமையாக இருக்கவும், உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளவும் கற்றுக்கொள்ள வேண்டும். நம் முடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் எல்லாம் வடி வமைக்கப் படுவதில்லை. சாதகமற்ற வெறுப்பை விளை விக்கும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளத்தான் வேண்டும். முக்கியமாக நவீன நகரங்களில் தியானம் செய்வதற்கு நீ

எப்பொழுதும் சாதகமான நிலைகளை எதிர்பார்க்க இயலாது. நீ இருக்கும் சூழ்நிலையையும் மற்றும் நேரத்தையும் சிறப் பான முறையில் பயன்படுத்திக் கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய சுற்றுச் சூழலுடன் இசை வுடைய தன்மையில் வாழ்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நம்முள்ளே உள்ள இசைவற்றதன்மையிலேயே கோபத் திற்கான காரணம் உள்ளது. ஒரு மனிதன், மற்றவர்களின் மீது அவன் கோபம் கொள்வதற்கு முன்பு, தன் மேலேயே கோபம் கொள்கிறான். ஒருவர் தன்னை வெறுப்பது, மற்றவர்களை வெறுப்பதைப் போன்றே மிகவும் தீயதாகும். நவீன மன இயல் வல்லுனர்கள் காட்டியிருப்பதைப்போல அதுதான் மற்ற பல சிக்கல்களுக்கு மூலகாரணமாக உள்ளது.

ஆன்மாவைக் கடவுளுடன் இணைக்கும் வழிகள் பெரும்பாலும் தடைப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தடைகள் நீக்கப்பட வேண்டும். இல்லையெனின் அது நம்முள்ளே இசைவுடைமையற்ற தன்மையையும் மற்றவர்களிடத்தில் சிக்கல்களையும் தோற்றுவிக்க வழிகாட்டுவதாக அமைந்து விடும். கடவுளுடன் எப்பொழுதும் ஒரே சுருதியுடன் இருப்ப வர்கள் எப்பொழுதுமே இசைவுடைய தன்மையுடன் இருப்பார்கள்.

அமைதியற்ற நிலையுடன் இருக்க வேண்டாம். உடல் தொடர்பான மனத்தொடர்பான அமைதியற்ற தன்மையைத் தவிர, உள்ளத்தின் அடி உணர்வுத்தளத்தின் அமைதியற்ற தன்மை என்னும் ஒருவகையும் உள்ளது. மனிதனுக்கே அதைப்பற்றித் தெரியாமல் இருக்கலாம் அத்தகைய விழிப் புணர்வற்ற நிலையிலுள்ள அமைதியற்ற தன்மையானது, அதிகமான சக்தியை இழக்கச் செய்து விடுகிறது.

குறைகூறாமல் இருப்பாய்

சில நேரங்களில் மனிதர்கள், அவர்கள் பல ஆண்டு களாக ஆன்மீகப் பயிற்சியை மேற்கொண்டு இருப்பினும்,

எதையுமே அவர்கள் சாதிக்கவில்லை என்று முறையிடுகின்றனர். நாம் அவர்களுடைய மனங்களைப் பகுத்து ஆராய்ந்தால், அவர்கள் பெரும்பாலும் எல்லா நேரங்களிலும், 'நான் பிரார்த்தனை செய்கிறேன். மற்றும் ஜபம் செய்கிறேன். இருப்பினும் எந்த விளைவும் ஏற்படவில்லை' என்பனவற்றையே நினைத்துக் கொண்டிருப்பதை நம்மால் அறிந்துகொள்ள இயலும். அவர்கள் ஆற்றலை அவ்விதம் சிந்திப்பதில் செலவழிப்பதைவிட அவர்கள் கடவுளிடம் அவர்களின் மனங்களை ஒருமுகப்படுத்தி இருந்தால், அது அதிக அளவிற்குப் பயனுள்ளதாக இருந்திருக்கும். நாம் தொடர்ந்து இந்த 'நான்' என்பதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால், நாம் அகங்காரம் உடையவர்களாக ஆகிறோம். நாம், நாம் மட்டுமே பக்தர்கள் என்று நினைக்கிறோம், பக்தர்கள் இதைக் குறித்து மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். ஆரம்ப நிலைகளில், 'நான்' என்னும் உணர்வை வேருடன் அழிக்காவிட்டால், அதன்பிறகு அதை அப்படிச் செய்வது மிகவும் கஷ்டமானதாகி விடும். அதனால்தான் தூய அன்னையார், 'ஒருவன் தன்னுடைய ஆன்மீக வளர்ச்சியை மதிப்பிட முயற்சிப்பது அகங்காரமே ஆகும். உன்னுடைய சாதனையின் பயன்களைக் கடவுளுக்கு அர்ப்பித்து விடுவாய். நீ செய்யும் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பித்துவிடுவாய்' என்று கூறியுள்ளார்.

ஏதாவது ஒருவகையில் உன்னுடைய எல்லா செயல்பாட்டையும் கடவுளுடன் இணைத்துக் கொள்வாய். கடவுளுக்காகவே எல்லாவற்றையும் செய்வாய். நீ வாழ்க்கையில் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் எல்லாக் கடமைகளையும் செய்வாய். நீ இந்த செயல்முறையை மேற்கொண்டால் உனக்குச் சிறந்த விளைவுகள் ஏற்படும். ஆன்மீக வாழ்க்கையில் மாயவித்தையோ அல்லது அற்புதமோ இல்லை. அது மிகவும் எளிமையானது, ஆனால் கஷ்டமானது.

உனக்கு உன் குருவால் அளிக்கப்பட்ட மந்திரத்தை நீ தொடர்ந்து கூறிக் கொண்டே இருக்க வேண்டும். அதாவது

கடவுளின் திருநாமத்தை இடைவிடாமல் கூறிக் கொண்டே இருக்க வேண்டும். நீ தனிமையில் இருக்கும்பொழுது அதை உரக்கக் கூறலாம். மனதிற்குள்ளேயே அதை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டு அதைக் கேட்டுக் கொண்டிருப்பது தான் மிகச் சிறந்த முறையாகும். உன் முழு மனத்தையும் அத னுடைய அதிர்வலைகளால் நிறைத்துக்கொள்ள வேண்டும். இறைவனின் திருநாமத்திற்கு மிகப் பெரிய சக்தி உள்ளது. ஆனால் அது உள்ளடங்கிய ஆற்றல் ஆகும். தொடர்ந்து செய்யப்படும் பயிற்சியானது இந்த சக்தியைத் தானாகவே வெளிப்படச் செய்யும். தொடர்ந்து மந்திரத்தைக் கூறிக் கொண்டு இருப்பது, மந்திரத்தை மனத்தின் ஆழமான அடுக்குகளுக்குக் கொண்டு செல்லும். அங்கு அது மனத்தில் கெட்ட எண்ணங்கள் தோன்றாமல் இருக்கும்படிச் செயல் படும். தளர்வற்ற ஊக்கத்துடன் தொடர்ந்து மேற்கொள்ளப் படும் ஜபத்தின் சிறந்த பயன்களை நீயே கண்டு கொள்வாய்.

தேவையற்ற மனநிறைவற்ற தன்மையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. சில மனிதர்கள் மன உளைச்சலில் செழிப் படைவதாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்குக் கவலைப் படுவதற்கு எதுவும் இல்லாமல் இருக்கும்பொழுது அவர் களாகவே புதிய கவலைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதன்பிறகு அவர்கள் அவைகளைப்பற்றியே நினைத்து ஏங்கி அவற்றை அதிகப்படுத்திக் கொள்கின்றனர். குரங்கிற்கு அரிப்பு ஏற்படுகிறது. அது பிறாண்டிக் கொள்கிறது. அதன் பிறகு சிறிய காயம் ஏற்படுகிறது. அது பிறாண்டிக் கொண்டே இருக்கிறது. அது ஒரு காயத்தை ஒரு பெரிய புண்ணாக ஆக்கி விடுகிறது. நம்முடைய நிலையானது இதைப்போன்ற ஒன் றாக இல்லையா? நாம் நம்முடைய சிக்கல்களைக் குறித்து எண்ணி ஏங்குவதால் அவற்றை அளவிற்கு மேல் பெரிது படுத்துகிறோம். அதற்குப் பதிலாக கடவுளைப் பற்றியே எண்ணி ஏன் ஏங்கக் கூடாது?

வாழ்க்கையில் துன்பத்தையும், வேதனையையும் தவிர்க்க இயலாது. ஒவ்வொரு மனிதனுக்கும் இவற்றில் அவனுடைய பங்கு இருக்கிறது. சில மனிதர்கள் மகிழ்வுடன்

இருக்கிறார்கள் எனின், அவர்கள் இவற்றை விஞ்சி மேம் படுவதற்குக் கற்றுக் கொண்டுள்ளனர். சிலருக்குத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்னும் உணர்வு எழுகிறது. இது அவர்களுடைய சிக்கலைத் தீர்த்து வைக்குமா? சிக்கல் களானது வேறு ஒரு மட்டத்திற்கு மாற்றப்படுகின்றன. ஏனெ னில் உடல் அழிந்த பிறகும்கூட உயிர் தொடர்ந்து வாழ்கிறது. இருந்தபோதிலும் அது சிக்கல்களை எதிர்கொள்ளவே வேண்டும். ஒருவரின் உயிரைச் செயற்கையான முறையில் முடித்துக் கொள்வது என்பது விலைமதிப்பற்ற நேரத்தின் இழப்பு மற்றும் கற்றுக்கொண்டு ஒருவரை மேம்படுத்திக் கொள்ளும் மதிப்புள்ள வாய்ப்புக்களை இழப்பதுமாகும். எனவே அத்தகைய முட்டாள்தனமான எண்ணங்களைக் கைவிடுவது நல்லது.

சில நேரங்களில் மனமானது நல்ல மனநிலையுடன் இருக்கிறது. சத்துவகுணம் அதில் மிகுந்து இருப்பதுதான் அதன் காரணமாகும். இது நிலைத்த தன்மை உடையது அன்று. குணங்கள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும். அதுதான் இயற்கையின் விதிமுறையாகும். எனவே சில நேரங்களில் உன் மனத்தில் ரஜோ குணமும், தமோ குணமும் மிகுந்து இருக்கும். அப்பொழுது நீ அமைதியற்ற நிலையிலும் அல்லது முழுமையான சோர்வுடனும் இருப்பாய். இவ் வனைத்தும் தவிர்க்க இயலாததுதான். ஆனால் கடவுளின் திரு நாமத்தை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டு, ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்வதால், சத்துவகுணம் உன்னிடம் தோன்றுவதற்கு நீ உதவி செய்கிறாய். அதன் பிறகு நீ மகிழ்ச்சி யுடனும், அமைதியுடனும் இருக்கிறாய். பழக்கத்தின் மூலம் இந்த மனநிலையானது அதிகமாக நீட்டிக்கப்படலாம் மற்றும் உறுதிபடுத்தப்படலாம்.

அகத்திலும் புறத்திலும்
இசைவுடைமையை நிலைநாட்டுவாய்

ஆன்மீக இலட்சியமானது மிகவும் உறுதியாக இல்லை எனின், மனமானது பெரும்பாலும் வெறுமையாக

இருக்கும். இறைவனின் திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவாய். எப்பொழுதும் கடவுளை நினைத்துக்கொண் டிருப்பாய். அது எதிர்மறையான மனநிலையை அகற்றி விடும்.

நமக்கு நம்முடைய இயல்பான மனப்போக்கும் மற்றும் உறவு போன்றவைகளும் உள்ளன. அனைவரிடமும் தாராள மாகக் கலந்து பழகாமல் இருப்பதற்கு அதுவே காரணமாக உள்ளது. அது இயல்பானதுதான். ஆனால் நாம் ஆன்மீகத் தில் படிப்படியாக முன்னேற்றமடைந்தால் இந்த இயல்பை யும் மீறி மேலே உயர இயலும். நம்முடைய கருத்துக்கள் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட நம்முடைய சொந்த மனம் சார்ந்த தூய்மைக் கேடுகள், ஆசைகள், உணர்ச்சிகள், மனப்பான்மைகள், பதிவுகள் போன்றவைதான் தியானம் செய்வதற்கு மிகப் பெரிய தடைகளாக உள்ளன. நம்முடைய ஆன்மீக விழிப் புணர்வை எழுச்சியடையச் செய்து நாம், ஆன்மா பரம் பொருளின் வெளிப்பாடு என்று நினைப்பதுதான் இதற்குத் தீர்வு ஆகும்.

சூட்சுமமான உடலானது, இயற்பொருள் சார்ந்த உடலை முழுமையாக ஊடுருவிச் சென்று பரவுகிறது. அது அதன் உட்புறம், வெளிப்புறம் என்னும் இரண்டிலும் உள்ளது. அதைப் போல தனித்த விழிப்புணர்வு நிலையிலுள்ள ஆன்மா வானது சூட்சுமமான மற்றும் இயற்பொருள் சார்ந்த உடல் களின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் உள்ளது. எல்லை யற்ற பரம்பொருள் எல்லா உயிரினங்களையும், பொருட் களையும் முழுமையாக ஊடுருவிப் பரந்து உள்ளது. சக்கரம் என்பது இயற்பொருள் சார்ந்த, மனம் சார்ந்த உடல்கள் தொடர்பு கொள்ளும் இடமாகும். மற்றும் ஆன்மாவும், பரமாத்மாவும் தொடர்பு கொள்ளும் இடமாகும். நாம் இயற்பொருள் சார்ந்த நிலையிலிருந்து சூட்சுமமான நிலை, அதன் பிறகு ஆன்மாவை நோக்கிச் செல்லும்பொழுது விளக்கப்படம் இவ்விதமாக இருக்கும்.

ஆன்மா அல்லது காரணசரீரம்	—	மிகவும் உள்ளிருப்பது
சூட்சும உடல்	—	இடைப்பட்டது
பருஉடல்	—	மிகவும் வெளியிலிருப்பது

ஆனால் உண்மையில் அது இப்படி இருக்கிறது

ஆன்மா அல்லது காரணசரீரம்	—	மிகவும் வெளியிலிருப்பது
சூட்சும உடல்	—	இடைப்பட்டது
பருஉடல்	—	மிகவும் உள்ளிருப்பது

எனவே ஆன்மாவும் அதைவிட பரம்பொருளும் நுண்மையான அனைத்தையும்விட நுண்மையானது மற்றும் மிகப் பெரிய அனைத்தையும்விட மிகப் பெரியதாகும் (அனோரணீயான் மஹதோ மஹீயான்). எனவே அணு என்பது மஹத்தாகவும் உள்ளது.

சத்-சித்-ஆனந்த உருவத்தைத் தியானம் செய்து, அதனுடன் இரண்டறக் கலந்து, அனைவரிடமும் அந்த தெய்வீக அன்பையும், இன்பத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்படித்தான் நம் வாழ்வானது முழுமை நிறைந்ததாகவும் இனிமை நிறைந்ததாகவும் நமக்கும் பிறருக்கும் அருள்வளம் நிறைந்ததாகவும் ஆக்கப்பட வேண்டும். முதலில் உன் சொந்த வாழ்க்கையில் சிறிதளவிற்காவது ஒழுங்கான, முறையான சாதனையின்மூலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பிறகு, 'செயல்பாடும் வழிபாடும்' என்னும் இலட்சியத்தை மேற்கொள்ள வேண்டும். நீ மகிழ்ச்சியுடன் செய்யும் வேலையை விட அதிகமான அளவிற்கு வேலையை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறாயா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். உன்னுள்ளே குடிகொண்டுள்ள கடவுளிடம் வழிகாட்டுவதற்கும் ஒளியைத் தருவதற்கும் வேண்டிக் கொள்ள வேண்டும்.

அமைதியைக் கண்டு கொள்வதற்கு ஒரே ஒரு வழி எனக்குத் தெரியும், அது ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமாகும். பிரார்த்தனை மற்றும் தியானத்தின் மூலமாகும். அதைத்தான் உங்கள் ஒவ்வொருவருக்கும் யோசனையாக என்னால் கூறவியலும்.

நம்முடைய ஆன்மாவின் ஆன்மாவாக விளங்கும், எல்லா உயிரினங்களின் ஆன்மாவாக விளங்கும் கடவுளைத் தொடர்பு கொள்வதால் மட்டுமே சாதகன் உணரும் அமைதி யற்ற தன்மையையும், வெறுமையையும் அகற்ற இயலும். ஆன்மீக வழியைப் பின்பற்றுவதாலும் மேற்கொண்ட பணி களைக் கண்ணுங்கருத்துமாக ஆற்றுவதாலும் பரம்பொரு ளிடம் கொண்டுள்ள அன்புடன் கூடிய பக்தியாலும் உரிய காலத்தில் இந்த ஆன்மீகக் கூட்டுறவை அடைய இயலும்.

ஆன்மீக வாழ்க்கையானது பக்தனை, அன்பு ஆதரவு இருப்பவனாக, மற்றும் மற்றவர்களிடம் அன்பு உடைய வனாகச் செய்யாவிட்டால் அத்தகைய வாழ்க்கையால் என்ன பயன் ஏற்படும்? நாம் அனைவரும் ஒரு சிறந்த பக்தனுக்கு இருக்க வேண்டிய இயல்புகளாக பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் விவரித்துள்ள இயல்புகளை நினைவில் கொள்ள வேண்டும். மற்றும் ஸ்ரீகிருஷ்ணருடைய அடிச்சுவடு களைப் பின்பற்ற வேண்டும்.

'எவ்வுயிர்களிடத்தும் பகைமை இல்லாதவனாக, சினேகம் உள்ளவனாக, கருணை உடையவனாக, "என்னு டையது" "நான்" என்னும் எண்ணமற்றவனாக, இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகக் கருதுபவனாக, பொறுமை உடைய வனாக, எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்தவனாக, யோகத்திலே நாட்டமுடையவனாக, அடங்கிய மனத்தை உடையவனாக, திடமான நிச்சயம் உடையவனாக என்னிடத்தில் மனத்தையும் புத்தியையும் அர்ப்பித்தவனாக, யார் என் பக்தனாக உள் ளானோ, அவன் எனக்கு மிகவும் பிரியமானவன் ஆவான்.'[1]

நீ உன் மூளையில் அளவுக்கு அதிகமாகச் சுமையை ஏற்றி, அதன் திருகு எதுவும் தளர்ந்து விடாமல் இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். முறையாக, ஒழுங்காகச் செய்யும் பயிற்சி மட்டுமே நமக்கு ஒருமுகப் பட்ட தன்மையை ஏற்படுத்தும் மற்றும் தொடக்க காலத்தில், மனம் சரியான நிலையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும்

1. பகவத் கீதை, 12.13,14.

இது செய்யப்பட வேண்டும். மனம் அமைதியற்று இருந்தால் அதைக் குறித்துக் கவலைப்படாமல் இருப்பாய். தியானத்தின் பொருளானது மற்ற எல்லாவற்றையும்விட தனிப்பற்றாக ஆகத் தொடங்கும் அளவிற்கு மனது அதைப்பற்றியே ஊன்றி நிலைக்க விருப்பப்படும். தெய்வீகத் திருநாமத்தின் சக்தி அத்தகையது ஆகும். மற்றும் தியானத்துடன் அது இவ்வுட லிலும், மனத்திலும் இசைவுடைமையை ஏற்படுத்துகிறது. சரி யாகப் புரிந்துகொள்ளுவதற்கு ஊக்கமளித்து, ஆன்மீக ஆய்வுப் பொருளில் மிகபெரிய ஆர்வத்தையும் ஏற்படுத்துகிறது.

நாம் அனைவரும் நம் மனங்களில் உறுதியாக, உண்மை யாக, ஆன்மீக வழியைப் பின்பற்றுவோர் 'தான்' என்னும் எண்ணம் குறைந்தவர்களாகவும், அதிகமான அளவில் தன்னலமற்றவர்களாகவும் மற்றவர்களிடம் அன்புடனும், பரிவுடனும் உள்ளனர் என்பதைக் கொள்ள வேண்டும். நாம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். ஏற்பவர்களாக இருத்தல் கூடாது. நாம் இதைச் செய்வதில் எந்த அளவிற்கு அதிகமாக வெற்றி பெறுகிறோமோ, அந்த அளவிற்கு அதிக மாக நாம் சுதந்திரமானவர்களாகவும் மகிழ்ச்சி நிறைந்தவர் களாகவும் அமைதியுடையவர்களாகவும் உணர்வோம்.

நீ கடவுளை உன்னுடைய எல்லாமாகக் கருதினால் அது போதுமானது. அவர் எனக்கு என்னுடைய ஆன்மாவின் ஆன்மா ஆவார். மற்றும் மற்ற எல்லாமும் ஆவார். நான் என் னுடைய இயல்பையோ, அல்லது வடிவத்தையோ, அல்லது என்னுடைய இஷ்டதெய்வத்தின் வடிவத்தையோகூட பற்றிக் கொள்ளவில்லை. ஆனால், என்னுடைய ஆன்மாவின் ஆன்மா வுடனும், எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவுடனும் எப்பொழுதும் ஒரே சுருதியில் இருக்க வேண்டும் என்று உணர்வதற்கு முயற்சி செய்யும் ஆன்மா ஆவேன். எல்லையற்ற பரம்பொருள்தான் இஷ்டதெய்வத்தின் வடிவத்தை மேற்கொண்டுள்ளது. இதை ஜபம் செய்வதின் மூலம் உணர்ந்துகொண்டு கடவுளுடைய பேரின்பமயமான வடிவத்தின் மீது தியானம் செய்வாய்.

நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சி குறித்த கால வரையறையைக் குறித்தும், பயிற்சி செய்யும் நேரத்தைக்

குறித்தும் மிகவும் கண்டிப்புடன் இருக்கத் தேவையில்லை. நம்மால் செய்ய இயலும் அனைத்தையும் செய்வோம். மனத்திலும் உடலிலும் உலைவு இன்றி தணிவுடன் இருப் போம். ஆனால் எப்பொழுதும் நம்முடைய அற்பநிலை யிலுள்ள மனத்தால் ஏமாற்றப்படாமல் இருக்கிறோமோ என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

பலமணி நேரங்களுக்குத் தொடர்ந்து ஜபத்தையும், தியானத்தையும் செய்வதற்குப் பதிலாக சிறிது ஓய்வு எடுத்துக் கொள்வது நல்லதாகும். சிறிது நேரத்திற்குப் படிக்கலாம். அல்லது பயன் அளிக்கக் கூடிய உடல் சார்ந்த பணி எதை யாவது மேற்கொள்ளலாம்.

நாம் பரம்பொருளின் கணநேரக் காட்சியைப் பெற்றால் தான், கடவுளின் மேன்மையைக் குறித்து ஏதோ ஓரளவிற்கு நம்மால் புரிந்துகொள்ள இயலும், ஒருவருக்குக் கடலைப் பற்றி சிறிதளவு தெரிந்திருக்காவிட்டால், அவருக்கு அலை யைப் பற்றி என்ன தெரியும்? ஒருவருக்கு வரையறை அற்ற ஆகாசத்தைக் குறித்து எத்தகைய கருத்தும் இல்லை எனின், அவரால் வரையறைக்கு உட்பட்ட ஆகாசத்தைக் குறித்து எப்படி அறிந்துகொள்ள இயலும்? அல்லது வரையறை அற்ற ஒளியைப் பற்றி சிறிதளவும் அறிந்து கொள்ளாமல் ஒரு ஒளிக்கதிரைக் குறித்து அறிந்துகொள்ள இயலுமா?

தியானம் செய்வதற்கான செயல்முறை இதுதான், உன் னுடைய இதயமானது உன் ஆன்ம ஒளியால் நிறைக்கப்பட் டுள்ளது. அது உன் மனத்திலும், உடலிலும் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் பரவியுள்ளது என்று நினைத்துக் கொள் வாய். அடுத்ததாக, அது எல்லா இடங்களிலும் ஒளிர்ந்து கொண்டுள்ள ஒளிபொருந்திய வரையறையற்ற பரம்பொரு ளின் ஒரு பகுதி என்று நினைத்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய உடலையும் மனத்தையும் மற்றும் உலகம் முழுவதையும் அதனுள் இரண்டறக் கலக்குமாறு செய்து, நீ, வரையறையற்ற பரம்பொருளின் ஒரு சிறிய ஒளிவட்டம் என்று நினைக்க வேண்டும்.

இந்த நிர்குண தியானமானது (வடிவம் ஏதும் அற்ற தியானம்) உன்னைக் கவராமல் இருக்கலாம். அப்படியே கவர்ந்தாலும், நீண்ட நேரத்திற்கு அப்படிச் செய்வது கஷ்டம் ஆகும். எனவே உன்னுடைய ஆன்மாவானது ஒரு தூய்மை யான மனஉடலையும், தூய்மையான புற உடலையும் தரித் துள்ளது என்று நினைப்பாய். மற்றும் பரமாத்மாவானவர் உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் வடிவத்தைப் பெற்றுள் ளார் என்றும் நினைப்பாய். இஷ்ட தெய்வத்திற்கு உரிய மந்திரத்தை மீண்டும் மீண்டும் கூறுவாய். மற்றும் பரம்பொரு ளின் ஒளி பொருந்திய வடிவத்தைத் தியானம் செய்வாய். இஷ்ட தெய்வமாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர், எல்லா இடங்களிலும் ஒளிர்ந்து கொண்டுள்ள வரையற்ற பரம் பொருளைத் தவிர வேறு யாருமில்லை என்றும் நினைப்பாய்.

22

ஆன்மீக வாழ்வில் பிரார்த்தனையின் இடம்

பிரார்த்தனை —உலகியல் மற்றும் ஆன்மீகம்

வட்டார கிறிஸ்தவ சமய குரு ஒரு சிறுவனிடம், 'நீ ஒவ்வொரு இரவிலும் உன் பிரார்த்தனைகளைக் கூறு கிறாயா?' என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன், 'இல்லை ஐயா. சில இரவுகளில் எனக்கு எதுவும் தேவைப்படுவ தில்லை' என்று பதில் கூறினான். ஒரு குழந்தைக்குப் பிரார்த்தனை என்றால், உலகத்திலுள்ள பலவகைப்பட்ட பொருட்களைக் கேட்பது ஆகும். அச்சிறுவன் அவனுடைய தந்தையையோ அல்லது தாயையோ கேட்பதைப்போல கடவுளிடமும் பல பொருட்களைக் கேட்கிறான். ஒரு குழந்தை யின் கடவுளைக் குறித்த எண்ணமானது பெரும்பாலும் முழுவளர்ச்சி அடைந்த பருவத்திற்கும் கொண்டு செல்லப் படுகிறது. மனிதர்கள் கடவுளை ஒரு மிகப் பெரிய வரம் அளிப்பவராகக் காண்கிறார்கள். அவர்கள் கடவுளிடம் பல வற்றைக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். மற்றும் அவர் களுடைய பிரார்த்தனைகள் நிறைவேற்றப்படவில்லை எனின் அவர்கள் கடவுள் என்பவர் இருக்கிறார் என்பதையே சந்தேகிப்பார்கள். இப்பொழுது பயங்கரமான போர் நடந்து கொண்டிருக்கிறது* போர்புரியும் நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் அவர் களுடைய நாட்டின் வெற்றிக்காகப் பிரார்த்தித்துக் கொண்டு உள்ளனர். தேவாலய குழுக்களும் பிளவுபட்டுள்ள குருமார்

---

* இரண்டாவது உலகப் போர். இந்தச் சொற்பொழிவு *1944* ஆம் ஆண்டு பிலடெல்பியாவில் ஆற்றப்பட்டது.

களும் சடங்குகள் செய்யும் சமயகுருமார்களும் தங்கள் நாடுகளுக்கு ஆதரவு அளிக்கக் கடவுளை வேண்டிக் கொண்டுள்ளனர். இந்த மனிதர்கள் கடவுளை யார் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர்? ஆகாயத்தில் மேலே உள்ள ஒரு கொடுங்கோலன். கீழே உள்ள மனிதர்களிடம் கொடூரமாகவும் ஒரு சார்பு உடையவனாகவும் நடந்துகொண்டு மற்றும் அவர்களுடைய இயல்புணர்ச்சிகளான பேராசை, பகைமை போன்றவற்றுடன் விளையாடிக் கொண்டிருப்பவனா?

முதலாம் நூற்றாண்டில், அலெக்சாந்திரியாவிலிருந்த யூத தத்துவஞானியான Philo Judaeus கடவுள் முழுமையாகத் தூய்மையானவர், எல்லா நன்மைகளின் மூலாதாரம் ஆவார், பருப்பொருள் தீமையின் மூலாதாரமாகும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தார். முழுமையான மேம்பாட்டுடன் கடவுளிடம் மீண்டும் செல்வது மனிதனின் குறிக்கோள் ஆகும். விவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவத்தில் இந்தக் கருத்து முதன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது. தீமையின் படைகள் அனைத்தும் சாத்தானாக உருவமைக்கப்பட்டுள்ளது. தனிமனித நன்மை மற்றும் தீமை என்ற இருமையின் மூலம் பார்சி சமயத்தைச் சேர்ந்ததாகும். கிறிஸ்தவ கண்ணோட்டத்தில், ஏசுநாதர் தீமையை வென்றவர் ஆவார்.

கடவுள், நன்மை, தீமைகளுக்கு அப்பாற்பட்டவர். அவை 'மாயை' என்னும் மட்டத்தைச் சேர்ந்தவை. கடவுள் சத்-சித்-ஆனந்தமாவார். அவர் வரையறையற்ற இருப்பு ஆவார். படைத்தல், அழித்தல், நன்மை, தீமை என்னுமிவை மாயாசக்தி எனப்படும் அதே ஆற்றலைச் சார்ந்த இரு வேறுபட்ட தன்மைகள் ஆகும் என்பது ஹிந்து சமயத்தின் கருத்து ஆகும். இந்த ஆற்றல்களின் ஆட்டபாட்டங்கள் மனிதர்களின் உள்ளார்ந்த மனப்பாங்குகளைச் சேர்ந்தது ஆகும். மனிதனிடம் இரு மனப்பாங்குகள் உள்ளன. வித்யா மற்றும் அவித்யா ஆகும். வித்யாவானது தன்னைத் தூய்மைப்பாடு, பற்றற்ற தன்மை, கடவுள்மீது அன்பு மற்றும் ஞானம் என்று வெளிப்படுத்திக் கொள்கிறது. அவித்யாவானது மருட்சி, கொடுமைத்தனம், தன்னலம், புலனுணர்விற்கு ஆட்பட்ட

தன்மை என்பன போன்றவற்றில் தன்னை வெளிப் படுத்திக் கொள்கிறது. இந்த மனப்பான்மைகள் மனிதனின் ஆன்மாவுடன் தொடர்புடையனவாகத் திகழ்கின்றன. அவனுக்குத் தொடர்ந்து ஏற்படும் பிறவிகளில் சேகரிக்கப் பட்டதன் பயனாக அவை உள்ளன. இங்கு மனிதனின் பொறுப்பு உள்ளது. அவன் தர்மம் என்று அழைக்கப்படும் வித்யாவின் வழியைத் தேர்ந்தெடுத்து மேலும் மேலும் கடவுளை அணுகலாம். மற்றும் இறுதியாக, கடவுளின் அருளால் நன்மை, தீமை என்னும் இரண்டையும் கடந்து செல்லலாம். அல்லது அவன் அதர்மம் அல்லது அவித்யா எனப்படும் வழியைத் தேர்ந்தெடுத்து, கடவுளை விட்டுத் தள்ளிச் சென்று மேலும் மேலும் துன்பத்தைத் தன்மீது குவித்துக் கொள்ளலாம். கடவுள், நன்மை, தீமை என்னும் இரண்டிற்கும் அப்பாற்பட்டவராக இருப்பினும், அவர் தன்னை மனிதனாக, அவதாரமாக, மனித குலத்தின் நன்மைக்காக வெளிப்படுத்திக் கொள்கிறார். கடவுளின் திரு அவதாரமாக, மனித குலத்திற்கு ஆன்மீகப் பெருமுயற்சியின் வழியைக் காட்டுகிறார். இந்த வழி, பெரும்பாலும் ஒரு புதிய வழியே ஆகும். அது மனிதனை அவனுடைய உண்மையான இருப்பிடத்திற்கும் சாரமான முழுமைக்கும் மீண்டும் அழைத்துச் செல்கிறது.

கடவுள் அனைவரிடத்திலும் உள்ளே உறையும் சாட்சியாகத் திகழ்கிறார். ஆன்மீக வாழ்க்கை என்பது எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவைக் கண்டு பிடிப்பது ஆகும். பிரார்த்தனையானது நம்மைக் கடவுளின் அருகே அழைத்துச் செல்கிறது. அது நம்முடைய இயல்பான ஆன்மீக ஆற்றல்களை எழுச்சி அடையச் செய்கிறது. கடவுள் நம்முடைய பிரார்த்தனையைக் கேட்கிறார். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் தொடர்ந்து கூறியிருப்பதைப்போல பிரார்த்தனையானது உள்ளார்ந்ததாக இருக்க வேண்டும். பிரார்த்தனை செய்யும் பொழுது மனமும், இதயமும் ஒன்றுபட்டிருக்க வேண்டும். கடவுள் நம்முடைய பிரார்த்தனைக்கு ஒருவிதமாக செவி சாய்க்கிறார். அது ஒரு விதத்தில் நம்முடைய நன்மைக்காகத்தான் ஆகும். பெரும்பாலும் மனிதர்களுக்கு

அவர்களுக்கு எது நல்லது என்பது தெரிவதில்லை. மிகுந்த உலகியல் தொடர்பான அவர்களின் பிரார்த்தனைகளுக்குப் 'பதிலே அளிக்கப்படுவதில்லை'. அது நல்லதே ஆகும். கடவுள் எல்லா மனிதர்களின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்ற வேண்டும் எனின், உலகமானது ஒழுங்கற்ற நிலையில் இருக்கும். எஞ்சி உயிருடன் உள்ள ஒவ்வொரு மனிதனும் பைத்தியமாக இருப்பான். ஒரு சிறுமி அவள் இரவில் எப்பொழுதும் கூறும் பிரார்த்தனையுடன் ஒரு பிற்சேர்க்கையையும் சேர்த்துக் கொண்டாள். 'தயவு செய்து குளிர்காலத்தில் மலர்களை கதகதப்புடன் வைத்துக் கொள்ள வெண்பனியை அனுப்பவும்.' அதன் பிறகு அச்சிறுமி தன் அன்னையிடம், 'அந்தச் சமயத்தில்தான் நான் கடவுளை முட்டாள் ஆக்கினேன்' என்று கூறினாள். 'எனக்கு பனி தேவைப்பட்டது. அப்பொழுதுதான் என்னால் பனிச்சறுக்கு வண்டியில் செல்ல இயலும்.' நம்முடைய பிரார்த்தனை களினால் கடவுளை முட்டாளாக்க வியலாது.

பிரார்த்தனையில் நம்பிக்கைதான் மிகவும் முக்கிய மானது ஆகும். பிரார்த்தனை பயனளிக்க வேண்டுமாயின் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடவுள் ஒருவர்தான் புகலிட மாவார் என்னும் உண்மையின் அடிப்படையில் அது இருக்க வேண்டும். இரு மனிதர்கள் ஒரு திறந்த படகில் கடலில் மிதந்து கொண்டு இருந்தனர். அவர்களில் ஒருவன் ஒரு பெரிய குடிகாரன். அவன் 'ஓ கடவுளே, என்னைக் காப்பாற்றுவாய். நான் ஒருபொழுதும் மீண்டும் குடிக்க மாட்டேன்' என்று பிரார்த்தித்துக் கொண்டான். அவனுடன் இருந்தவன், 'கொஞ்சம் காத்திருப்பாய். நீண்ட தூரத்திற்குச் செல்லாதே. நான் ஒரு கப்பல் வருவதைக் காண்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்' என்று அறிவுரை கூறினான். பல மனிதர்களும் பிரார்த்தனை செய்யும் பொழுது அப்படித்தான் நினைக்கிறார்கள்.

மனிதர்கள் பயத்தினாலும், கவலையாலும் அல்லது ஏக்கத்தாலும் பிரார்த்தனை செய்கிறார்கள். முற்காலத்தில் வாழ்ந்த மனிதன் அவனைக் காப்பாற்ற வேண்டும் என்று

இயற்கையின் பல்வேறு ஆற்றல்களைப் பிரார்த்தித்துக் கொண்டான். தென்னாப்பிரிக்காவின் சுளு (Zulu) இனத்தைச் சார்ந்தவன் வழிபடும் பொழுது, 'நான் சொல்வதைக் கேள். இல்லையெனின் உனக்கு முட்செடிதான் உணவு' என்று அச்சுறுத்துவான். ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய மனிதன் அவன் மனத்தின் ஆழத்திலிருந்து பிரார்த்தனை செய்கிறான். அவனுடைய பிரார்த்தனையானது ஆன்ம விடுதலைக்காக ஏங்கும் அவனுடைய ஆன்மாவின் சொல் உணர்ச்சி ஆகும். ஒரு உண்மையான பக்தன், பிரார்த்தனை செய்யும் பொழுது அவன் கடவுளின் விருப்பத்திற்கு உட்படுகிறான். அது உண்மையான ஒளியை நாடும் பிரார்த்தனையாகும். காயத்ரீ என்று கூறப்படும் பழங்காலத்திய ஹிந்து பிரார்த்தனை யானது இன்றும் இலட்சக் கணக்கான ஹிந்துக்களால் கூறப் படுகிறது. அது மிகவும் சிறப்பு வாய்ந்த பிரார்த்தனைகளில் ஒன்றாக விளங்குகிறது. 'நாம் பரம்பொருளின் ஒப்புயர்வற்ற ஒளி வடிவத்தைத் தியானிப்போம். அவர் மூன்று உலகங் களையும் ஒளிரச் செய்கிறார். அவர் நம்முடைய ஆன்மீக இயல்புணர்வை எழுச்சி அடையச் செய்யட்டும்.'[1]

சுவாமி விவேகானந்தர் வளர் இளமைப் பருவத்தில் இருந்த பொழுது அவருடைய தந்தை, பல குழந்தைகளையும் அவர் தாயையும், உறவினர்களையும் இவரது ஆதரவில் விட்டுவிட்டு திடீரென்று மரணமடைந்தார். குடும்பத்திற்கு உதவி செய்வதற்காக ஏற்புடைய ஒரு ஆதாரத்தைப் பெறு வதற்கு அவர் செய்த எல்லா முயற்சிகளும் தோல்வி யடைந்தன. மிகுந்த வேதனையுடன் அவருடைய அன்பிற்கு உரிய குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணரை அவர் அணுகினார். மற்றும் அவருக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் துறவின் திருவுருவமாகத் திகழ்ந்த குருநாதர் அவரிடம் 'கோயிலிலுள்ள தெய்வீக அன்னையிடம் சென்று நீயே அவனைப் பிரார்த்திப்பாய்.' அவள் கண்டிப்பாக

---

1. தத் ஸவிது: வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி ।
தியோ யோ ந: ப்ரசோதயாத் ॥

—ரிக் வேதம், 3.62.10

நீ சொல்வதைக் கேட்பாள்' என்று கூறினார். இளைஞரான விவேகானந்தர் அன்னையின் முன்பு நின்ற பொழுது அவர் அவளுடைய தெய்வீக ஒளியைக் கண்டார் மற்றும் அவளுடைய உயிரின் இருப்பை உணர்ந்தார். அவர் அவருடைய குடும்பத்தைப் பற்றி முற்றிலுமாக மறந்துவிட்டு, உலக விஷயங்களைப் பற்றியும் மறந்துவிட்டு பக்திக்காகவும், ஆன்ம ஞானத்திற்காகவும், மட்டுமே தொடர்ந்து பிரார்த்தனை செய்தார். அவர் குருதேவரிடம் திரும்பிவந்த பொழுது தான் அவருக்கு அவருடைய 'தவறு' நினைவிற்கு வந்தது. மீண்டும் ஒருமுறை குருதேவர் அவரைத் திருப்பி அனுப்பினார். ஆனால் மீண்டும் விவேகானந்தரால் பக்திக்காகவும், ஞானத்திற்காகவும் மட்டுமே பிரார்த்திக்க முடிந்தது. இதே போன்று பல முறைகள் நடந்தன. இறுதியாக குருதேவர் விவேகானந்தர் மீது பரிவு கொண்டு, அவருடைய குடும்பத்தினர் வாழ்க்கையின் அத்தியாவசியமான தேவைகள் இல்லாமல் இருக்க மாட்டார்கள் என்று வாழ்த்தினார்.[1]

இது நம் அனைவருக்குமே ஒரு பாடமாகும். நாம் பக்தி, வலிமை, தூய்மைப்பாடிற்கு மட்டுமே பிரார்த்தனை செய்வோம். இது ஆன்மீக பிரார்த்தனை ஆகும். அது பல்வேறு உருவங்களில் இருக்கக் கூடும். ஆனால் எல்லாமே ஆன்மாவைக் கடவுளிடம் கொண்டு செல்வதைத்தான் நோக்கமாகக் கொண்டுள்ளன. உண்மையான தியானத்தை நோக்கிய முதலடியாக ஆன்மீக பிரார்த்தனை விளங்குகிறது.

இந்து சமயத்திலுள்ள ஆன்மீக பிரார்த்தனையின் வடிவங்கள்

எல்லாக் காலங்களிலும், எல்லா சமயங்களிலும் ஆன்மீகத்தில் நாட்டமுடைய சாதகர்களும், பக்தர்களும் அவர்களுடைய உள்ளார்ந்த ஏக்கங்களையும், உன்னதமான உணர்ச்சிக் கனிவுகளையும் பாசுரங்கள், தோத்திரங்கள்,

---

1. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், 3.192.

மற்றும் இறை வணக்கப் பாடல்களில் இயல்பாக வெளிப் படுத்தி உள்ளனர். சில சமயங்களில் அவர்கள் பாடுவார்கள், மற்றும் மனநிறைவுடன் பிரார்த்திப்பார்கள். மிகவும் மேம் பட்ட நிலையில் நிலைத்து, கவலைகளையோ தேவை களையோ எண்ணிக் கவலைப்படாமல் பாடுகின்றனர். பெரும்பாலான நிகழ்வுகளில் குறைபாடுகளின் உணர்வும் முழுமையற்ற தன்மையும் அல்லது உதவியற்ற மற்றும் துன்ப உணர்வும் சோர்வுற்றுள்ள, போராடிக் கொண்டுள்ளவர்களை ஆறுதலுக்காகவும், உற்றுழி உதவிக்காகவும் எல்லாம் வல்ல எப்பொழுதும் தூய்மையாக உள்ள கடவுளின் பக்கம் திரும்ப வைக்கிறது. ஸ்ரீகிருஷ்ணர் பகவத் கீதையில் கூறி இருப்பதைப் போல நான்கு வகையான மனிதர்கள் கடவுளை வழிபடு கின்றனர். துன்புற்றவனும், ஞானத்தை நாடுவோனும் செல் வத்தை நாடுவோரும் மற்றும் ஞானியும் கடவுளை வழிபடு கின்றனர்.[1]

ஆன்மஞானமடைந்த மனிதனுக்குக் கடவுளைத் தொழு வதும், கடவுளைத் தியானிப்பதும், பொங்கிப் பொழியும் அன்பு மற்றும் பக்தி மேலிட அவன் புகழையும், சிறப்பை யும் கூறுவது இயல்பானதொன்றாகும். ஆனால் மற்றவர் களின் நிலை வேறுபட்டது ஆகும். வாழ்க்கையின் சிக்கல் களால் அலைக்கழிக்கப்பட்டு, அல்லது பாவம் செய்த உணர் வால் கவலையடைந்து, மனித உதவியின் பயனற்ற தன்மையை உணர்ந்து, கவலைகளால் அலுத்துப்போன மனிதன், பாதுகாப்பிற்காகவும், ஆதரவுக்காகவும் கடவுள் பக்கம் திரும்புகிறான். இன்பங்களை நாடுபவன், மனித முயற்சிகள் பயனற்றவையாக உள்ளன என்பதை அறிந்து கொண்டு, அவனுடைய உதவியற்ற நிலையில் அவனுடைய விருப்பங்கள் நிறைவேற வேண்டும் என்பதற்காகக் கடவுளை நாடுகிறான். ஆனால் ஞானத்தை நாடுபவனுக்கு எத்தகைய உலகியல் சிக்கல்களும் உடல் தொடர்பான விருப்பங் களும் அவனைத் தொல்லைப்படுத்துவதற்கு இல்லாமல்

---

1. பகவத் கீதை, 7.16.

இருக்கலாம். ஆனால் அவனுடைய உள்ளார்ந்த இதயத்தில் ஆன்மப் பசியையும் ஒரு வெறுமை உணர்வையும் அல்லது வரையறைக்கு உட்பட்ட வாழ்வின் துன்பத்தையும் உணர் கிறான். அதை உலகத்தில் உள்ள எதுவாலுமே அகற்றவிய லாது. அவனுடைய ஆன்மா ஒரு மேன்மையான வாழ்விற்காக ஏங்குகிறது. அவன் அதைத் தேடும் முயற்சியில் அமைதி மற்றும் பேரின்பத்தின் மூலாதாரமான கடவுளிடம் வருகிறான்.

இந்த எல்லா வகையைச் சேர்ந்த பக்தர்களும் தெய்வீக உதவியையும், அருளையும் ஒரு அச்சம் கலந்த தவிர்க்க வியலாத தேவையைப் பூர்த்தி செய்ய நாடுகிறார்கள். எனவே கடவுள் அவர்களுக்கு இயல்பாகவே இன்றியமையாதவராக விளங்குகிறார். ஐயுறவாதிகளும் (Sceptics) அவர்களுடைய உதவியற்ற நிலையிலும் மற்றும் நம்பிக்கையிழந்த நிலை யிலும், ஆறுதலுக்காகவும், உதவிக்காகவும் கடவுளிடம் முறையிடுவதைக் கேட்கலாம். உலகாயதவாதிகள் என்று கூறப்படுபவர்களின் பிரார்த்தனையானது, ‘ஓ கடவுளே, கடவுள் என்று ஒருவர் இருந்தால், என் உயிரைக் காப்பாற்று வாய், எனக்கு உயிர் என்று ஒன்று இருந்தால்.’ இவ்விதம் உள்ளது. முதலில் அது சிரிப்பூட்டுவதாக இருப்பினும் அதில் ஓர் அழகான உண்மை உள்ளது. அது பரிவிரக்கம் உடைய சமயம் சார்ந்த உளநூல் மாணவனை ஈர்க்காமல் இருக்காது. உலகாயதவாதிகூட எப்பொழுதாவது வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணராமல் இருக்க வியலாது. ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகன் அதை அறிந்து கொண்டு, உணர்ந்துகொண்டு, அவனுடைய இதயத்தின் ஆழத்திலிருந்து, கடவுள் உடனடியாக அவனுக்கு உதவு வதற்கு வர வேண்டும் என்று கடவுளிடம் அழுகிறான்.

‘ஓ கடவுளே, ஒவ்வொரு நாளும் கடந்து செல்வதால் வாழ்க்கையின் வரையறையானது குறைவது காணப்படு கிறது. மற்றும் இளமை அழிகிறது. கடந்து சென்ற நாட்கள் ஒருபொழுதும் திரும்பி வராது. உண்மையிலேயே, காலம் தான் இவ்வுலகத்தை விழுங்குகிறது. எதிர்கால நிலை என்பது,

தண்ணீரின் மேல் பரப்பிலுள்ள நீர்க்குமிழிகளைப் போல நிலையற்றது. சிலநாள் வாழ்வுடையது ஆகும். மற்றும் வாழ்க்கையே, மின்னலின் ஒளியைப்போல கணநேரம் இருப்பதுதான். எனவே, அனைவரின் புகலிடமே, உன் அடைக்கலத்தை நாடும் என்னை நீ எப்பொழுதும் காப்பாற்ற வேண்டும்.'[1]

உண்மையைக் கண்டறிந்துள்ள மேன்மையான மெய்யுணர்வாளர்கள், அவர்கள் எங்கும் நீங்கமற நிறைந்துள்ள எல்லாவற்றையும் கடந்த மெய்ப்பொருளை உணர்ந்துள்ளதால் தூய்மைப்பாடு மற்றும் புனிதத்தன்மை போன்றவற்றை அவருடன் தொடர்பு படுத்துகின்றனர். வளர்ச்சி அடையாத சாதகனால் எப்படியிருப்பினும், உண்மையாகவே இறைமையைப்பற்றி எத்தகைய மேம்பட்ட கருத்தையும் மேற்கொள்ள இயலாது. எங்கும் ஊடுருவிப் பரவியுள்ள பரம் பொருளை நம்புவதாக அவன் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டாலும் அவன் கடவுளை, மனித வடிவத்தையும், மனித உணர்வுகளையும் பெற்றுள்ளவராகவே கருதுகிறான். மற்றும் அவன் அவனுடைய கடவுளை எல்லா பக்தர்களிடமும் அன்புடன் இருப்பவர் என்று கருதினாலும் அவன் அவரை ஒரு பொறாமை உள்ளவராகவும் மற்றும் பயப்படத் தக்கவராக இருப்பதாகவும், தன் பக்தர்களின் எதிரிகளைத் தண்டிக்கவும் மற்றும் நம்பிக்கையற்றவரை வரையற்ற நரகத்திற்கு அனுப்ப எந்த சமயத்திலும் தயாராக இருப்பவர் என்றும் கருதுகிறான். மேலும் அவன் மற்றவர்களிடம் உண்மையாக உள்ள மற்றும் கற்பித்துக் கொண்ட கேடுகளைக் காண்கிறான். ஆனால் அவனிடமே அதைவிடப் பெரிய கேடுகள் காணப்படுகின்றன என்பதை அவன் உணர்வதில்லை. உலகத்திலுள்ள ஏறத்தாழ எல்லா பகுதிகளிலும் எல்லாச் சமயங்களிலும், எல்லாச் சமயக் கோட்பாடுகளிலும்

---

1. ஆயுர்நச்யதி பச்யதாம் ப்ரதிதினம் யாதி க்ஷயம் யௌவனம்
ப்ரத்யாயாந்தி கதா: புனர்ன திவஸா: காலோ ஜகத்பக்ஷக: ।
லக்ஷ்மீஸ் தோய தரங்கபங்க சபலா வித்யுச்சலம் ஜீவிதம்
தஸ்மான்மாம் சரணாகதம் சரணத த்வம் ரக்ஷ ரக்ஷாதுனா ॥
—ஸ்ரீசங்கரர், சிவாபராத க்ஷமாபன ஸ்தோத்ரம்,13.

இத்தகைய ஒன்றை நாம் காண்கிறோம். ஆனால் சாதகன் அவனுடைய பழைய கருத்துக்களை விஞ்சி மேம்பட்டு, கடவுளானவர் எங்கும் நிறைந்து இருப்பவர் மட்டுமல்ல. அவர் எல்லா தூய்மைப்பாடின், முழுமையின் மூலாதார மாவார் என்னும் கடவுளைக் குறித்த உன்னதமான கருத்தை யும் மனத்தில் கொள்கிறான்.

மேலும், சாதகன் அவனைக் குறித்த மேலான, உயர்ந்த அகக்காட்சிகளைக் காணும் திறமையையும் பெறுகிறான். மற்றும் இது உண்மையில் அவனுடைய ஆன்மீக வளர்ச்சியின் ஒரு முக்கியமான அடையாளமாகும். இந்த அகக் காட்சி உதய மானவுடன், அவனால் அவனுடைய மனத்தையும், உடலை யும் கறைப்படுத்திக் கொண்டுள்ள தூய்மைக்கேடுகளையும், கேடுகளையும் சுலபமாகக் கண்டு கொள்ள முடிகிறது. அவன் அவனுடைய பாவ உணர்வு மற்றும் முழுமையற்ற தன்மை யால் வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறான். மற்றும் இவற்றை, மிகச் சிறந்த தூய்மைப்படுத்துபவராக விளங்கும் கடவுளின் அருள் மற்றும் தொடுகை மூலம் விலக்கிக் கொள்ள நினைக்கிறான். கடவுளை உபநிஷதகாலத் தில் வாழ்ந்த மெய்யுணர்வாளர்கள் இவ்விதம் விவரித் துள்ளனர்.

‘அவன் எங்கும் ஊடுருவியுள்ள, ஒளிமயமான, உடலற்ற, முழுமையான, தூய, பாவமற்ற இறைவனை அடைகிறான்’.[1]

‘அவன் பாவமற்றவன். பாவமற்றவனின் மனத்தில் குடிகொண்டுள்ளான்.’[2]

‘தீய ஒழுக்கத்திலிருந்து விலகாதவன், புலனடக்கம் இல்லாதவன், மன ஒருமைப்பாடு இல்லாதவன், மனத்தின் பரபரப்பு அடங்கப் பெறாதவன் இத்தகையவன் எவ்வளவு

---

1. ஸ பர்யகாச்சுக்ரமகாயமவ்ரணம் அஸ்னாவிரகம் சுத்தமபாபவித்தம் ।
—ஈசாவாஸ்ய உபநிஷதம், 8.

2. தஹ்ரம் விபாபம் பரமேச்மபூதம் யத் புண்டரீகம் புரமத்ய ஸம்ஸ்தம் ।
—மஹாநாராயண உபநிஷதம், 12.16.

தான் அறிவாளியாக இருந்தாலும் ஆன்மாவை அடைவதில்லை'.[1]

தூய்மைப்படுத்துபவர், காப்பாற்றுபவர் —கடவுள்

எப்பொழுதும் தூய்மையாக இருப்பவர் மற்றும் தூய்மைப்படுத்துபவர் என்னும் கடவுளைப்பற்றிய இக் கருத்தானது ரிக் வேத ஸம்ஹிதையிலேயே காணப்படுகிறது. ரிஷி, 'பேரண்டத்தின் மிகச் சிறந்த நெறிமுறைகளின் அரசன், பாவம் மற்றும் தீமையின் பிணைப்புக்களிலிருந்து காப்பாற்றுவதற்காக, பாவங்களை மன்னிப்பதற்காக வருணபகவானைப் பிரார்த்திக்கிறார்.[2] இந்தக் கருத்து மீண்டும் மீண்டும் பெரும்பாலான வேதங்கள் மற்றும் மற்ற இந்து சமய இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

உபநிஷதத்தில் ரிஷி பிரார்த்தனை செய்கிறார்.

'மனிதன், எங்கும் ஊடுருவி நிறைந்துள்ள, சாசுவதமாக நிலைபெற்றுள்ள, புனிதமான பேரொளியாக விளங்கும் பரம்பொருளால் கேடுகளிலிருந்து விடுவிக்கப்படுகிறான். நாமும் நம்முடைய பெரிய பகைவனாக உள்ள பாவப்பட்ட நிலையைக் கடந்து அப்பால் செல்வோம். எப்பொழுதும் புனிதமாக உள்ள கடவுளால் தூய்மைக் கேடுகளிலிருந்து விடுவிக்கப்படுகிறான்.[3]

---

1. நாவிரதோ துச்சரிதாத் நாசாந்தோ நாசமாஹித: ।
நாசாந்தமானஸோ வாபி ப்ரஜ்ஞானேன ஏனமாப்னுயாத் ॥
—கட உபநிஷதம், 1.11.24.

2. வி மச்சரத்தாய ரசனாமிவாக ருத்யாம தே வருண காம்ருதஸ்ய
மா தந்துச்சேதி வயதோ தியம் மே மா மாத்ரா சார்யபஸ: புர ருதோ: ॥
'ஓ! வருணனே, என்னிடமுள்ள பாவத்தை ஒரு கயிற்றைப்போலப் பிடுங்கி எறிந்துவிடு. உன்னிடமிருந்து நாங்கள் தண்ணீர் நிரம்பிய வழியைப் பெறுவோம். பக்திபூர்வமான செயல்களை நெய்யும் (ஆழ்ந்த கவனம்) என்னிடமிருந்து நூலைக் கத்தரித்து விடாதே. காலத்திற்கு முன்னால் (காலம் முதிர்வதற்கு முன்பு) புனித சடங்குகளின் மூலத்தை அழித்துவிடாதே.' —ரிக் வேதம், 2.28.5

3. சரணம் பவித்ரம் விததம் புராணம் யேன பூதஸ்தரதி துஷ்க்ருதானி ।
தேன பவித்ரேண சுத்தேன பூதா: அதிபாப்மானமராதிம் தரேம: ॥
—மஹாநாராயண உபநிஷதம், 1.11.

கடவுளுடைய தெய்வீக அருளைப் பெறுவதற்கும் ஆன்மஞானம் அடைவதற்கும், முக்தி அடைவதற்கும் தூய்மைப்பாடுதான் தகுதியாக உள்ளது என்று பக்தன் பிரார்த்திக்கிறான்.

'எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் என்னால் எத்தகைய பாவங்கள் செய்யப்பட்டிருப்பினும், கடவுள் என்னை மன்னித்து, அவற்றிலிருந்து தூய்மைப்படுத்த வேண்டும்.'[1]

உண்மையாக உபநிஷதத்தில் பக்தனின் நிலைத்த பிரார்த்தனையாக அது உள்ளது.

'யார் தேவர்களைப் படைத்து வளர்ப்பவனோ, உலக நாயகனோ, துன்பத்தை அகற்றும் உருத்திரனோ, (தீர்க்கதரிசி யான மஹரிஷியோ) ஆதியில் ஹிரண்யகர்ப்பனைப் படைத் தவனோ அவன் பரிசுத்தமான புத்தியை நமக்களித்து அருள்புரியட்டும்.'[2]

கேடும் மற்றும் தூய்மைக்கேடும் எந்த வடிவத்திலும் உண்மையான சாதகனுக்கு மிகப் பெரிய துன்பத்தை ஏற்படுத்துகிறது மற்றும் அவன் பரம்பொருளுடன் இரண்டறக் கலப்பதற்கு குறுக்காகவும் நிற்கிறது. எனவே அவன் தன் வேதனையில் மீண்டும் மீண்டும் தூய்மைப் படுத்துபவராக உள்ள, காப்பாற்றுபவராக உள்ள கடவுளின் பக்கம் திரும்புகிறான். மற்றும் கடவுளும் அவருடைய வரையற்ற அருளால் அவனிடம் நம்பிக்கையூட்டும் சொற்களைக் கூறுகிறார்.

---

1. யன்மே மனஸா வாசா கர்மணா வா துஷ்க்ருதம் க்ருதம் ।
தன்ன இந்த்ரோ, வருணோ ப்ருஹஸ்பதி: ஸவிதா ச புனந்து புன: புன: ॥
—மஹாநாராயண உபநிஷதம், 1.12.

2. யோ தேவானாம் ப்ரபவச்சோத்பவச்ச
விச்வாதிபோ ருத்ரோ மஹர்ஷி: ।
ஹிரண்யகர்பம் ஜனயாமாஸ பூர்வம்
ஸ நோ புத்த்யா சுபயா ஸம்யுனக்து ॥
—ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 3.4

'பாவிகளுக்குள்ளும் நீ மிகக் கொடும்பாவியாக இருப்பினும், எல்லாப் பாவத்தையும் ஞானம் என்னும் படகு ஒன்றினாலேயே நன்கு கடந்திடுவாய்.'[1]

மற்றும் அன்பு நிறைந்த கடவுள் பக்தனுக்குத் தேறுதல் கூறி அவனை தன்னிடம் சரணடையும்படிக் கூறுகிறார். 'எல்லா தர்மங்களையும் பற்றற விட்டொழித்து என் ஒருவனையே சரணடைவாய். நான் எல்லாப் பாவங்களிலிருந்தும் உன்னை விடுவிப்பேன்.'[2]

உண்மையாக ஹிந்துதர்மத்தில் தூய்மைப்பாடும் புனிதத் தன்மையும் அருளுடனும் இரக்கத்துடனும் பிரிக்க வியலாத நிலையில் கடவுளைக் குறித்து கருத்துடன் தொடர்பு படுத்தப் பட்டுள்ளது. மற்றும் அது வெளிப்படையாகத் தெரிகிற ஒரு உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. மற்றும் பக்தனின் இதயத்தின் ஆழத்திலிருந்து பாடல்கள் வெளிப் படுகின்றன.

'ஓ கடவுளே, என் பாவங்களைப் பொறுத்து நீ என்னை மன்னிப்பாய். ஓ கருணைக் கடலே, புகழ் உன்னைச் சாரட்டும்.[3]

'நான் ஆயிரம் பாவங்களைச் செய்துள்ளேன். மற்றும் நான் பயங்கரமான உலகியல் கடலில் விழுந்துள்ளேன். ஓ கடவுளே, நான் உதவியற்ற நிலையில் உள்ளேன். உன்னிடம் சரணடைந்துள்ளேன். நீ என்னை உன்னுடையவன் ஆக்கிக் கொள்வாய்.'[4]

---

1. அபி சேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம: ।
ஸர்வம் ஜ்ஞான ப்லவேனைவ வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி ॥
—பகவத் கீதை, 4.36.

2. ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச ॥
—பகவத் கீதை, 18.66.

3. ஸர்வமேதத் க்ஷமஸ்வ ஜய ஜய கருணாப்தே ।
—சங்கரர், சிவாபராத க்ஷமாபன ஸ்தோத்ரம், 16

4. அபராதஸஹஸ்ர ஸங்குலே பதிதம் பீமபவார்ணவோதரே ।
அகதிம் சரணாகதம் ஹரே க்ருபயா கேவலமாத்மஸாத்குரு ॥
—Universal Prayers, பாடல் 252

பக்தனுக்கு கடவுள்மீது உள்ள அன்பின் ஆழங்கள்

மனிதனுக்கு அவனுடைய பரிணாம வளர்ச்சியில் அவனுடைய ஆன்மீக வளர்ச்சியின், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் பாவ உணர்வும் மற்றும் கடவுளின் மன்னிக்கும் தன்மையின் நம்பிக்கையும் முக்கியமாகத் தேவையானதாக உள்ளது. ஆனால் ஹிந்து சமயத்தின் மேல்நிலைகளில் இவை மிகவும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துக்களாக இல்லை. ஏனெனில் ஹிந்து தர்மத்தின் எல்லாக் கோட்பாடுகளும், சமய உட்பிரிவுகளும் வெளிப்படாமல் மறைந்துள்ள தெய்வத்தை யும், மனிதனுடைய உண்மையான ஆன்மாவின் தூய்மைப் பாட்டையும் நம்புகின்றன. மற்றும் எல்லா வரையறைகளி லிருந்தும் அதன் உள்ளார்ந்த விடுதலையையும் நம்பு கிறது. ஒரு ஹிந்து பக்தனின் இதயமானது மற்ற எல்லா வற்றையும்விட தெய்வீக அன்பிற்கும் தெய்வத்துடன் இரண்டறக் கலப்பதற்கும் மற்றும் ஆன்மீக விடுதலைக் காகவும் ஏங்குகிறது. அவன் தனித்துவம், பொதுத்துவம் என்னும் தன்மைகளில் தனித்துவத்தன்மையை வலி யுறுத்துகிறான்.

அவன் கடவுளுடன் உடன் இணைந்து வாழ விரும்பு கிறான். அவன் கடவுளுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பை மேற்கொள்கிறான். மற்றும் அவனுடைய இலட்சியத்தை உணர்வதற்காக அவன் பலவகையான உணர்ச்சிக் கனிவுகளை யும் மனப்பான்மைகளையும் புலப்படுத்துகிறான். அவற்றின் ஆழத்தை மேம்போக்காகக் காண்பவரால் சுலபமாக மதிப் பீடு செய்யவியலாது. கடவுளானவர், அவனுக்கு ஏற்ப, இந்த அண்டம் முழுவதிலும் ஊடுருவி, அதற்கு ஆதாரமாகவும், தோற்றம் கொண்டுள்ள அனைத்தின் மூல ஆதாரமாகவும் மட்டுமின்றி, அன்பின் கடவுளாகவும் அவருடைய தெய்வீக மேன்மையை பக்தனுடன் தந்தையாகவும், தாயாகவும், குருவாகவும், நண்பனாகவும், குழந்தையாகவும் நெருக்க மான உறவுமுறைகளிலும் வெளிப்படுத்திக் கொள்கிறார். அவர் தன்னை மனித ஆன்மாவின் நிலைபெற்ற காதலனாக வும் வெளிப்படுத்திக் கொள்கிறார். ஆன்மா தன்னுடைய

இருப்பின் ஆழத்திலிருந்து தன் அன்பிற்குரியவருடன் இரண்டறக் கலப்பதற்கு ஏங்குகிறது. இவ்விதம் ஏங்குவது பக்தி என்று அழைக்கப்படுகிறது. நாரதரின் கருத்துப்படி அது 'சிறப்புக் குன்றாதது' ஆகும்.[1] மற்றும் எல்லாச் செயல் களையும் கடவுளுக்கு அர்ப்பிப்பதையும் மற்றும் அவனை மறந்தால் மிகுந்த கவலை ஏற்படுவதையும் சுட்டிக் காட்டுகிறது.[2]

பொதுவாக பக்தர்கள் கடவுளைத் தெய்வீக குருவாகவும் தந்தையாக அல்லது தாயாக வழிபடுவார்கள். ஆனால் நிலை பெற்ற அன்பிற்கு உரியவர் என்பது அவர்களுடைய ஆற்றல் எல்லைக்கு அப்பாற்பட்டதாகும். ஸ்ரீயமுனாச்சாரியரின் இதயத்திலிருந்து வரும் பாடலானது மிகவும் உருக்கமாக உள்ளது.

'கடவுளே, முதலில், நீ என் பிரார்த்தனையைக் கேட்க வேண்டும். நான் உண்மையை மட்டுமே கூறுகிறேன். பொய் யுரை அல்ல. நீ உன் கருணையை என் மீது காட்டவில்லை எனின், என்னை விட அதிகமான தகுதி உடைய ஒருவர் உனக்கு ஒருபொழுதும் கிடைக்க மாட்டார்கள்.[3]

'நீ என் தந்தை, நீ என் தாய், நீ என் கணவன், நீ என் மகன் நீ என் விருப்பத்திற்குரிய நண்பன், நீயே என் உறவினர், நீ என் குரு மற்றும் இந்தப் பிரம்மாண்டத்தின் இலட்சியம் ஆகும். நான் உனக்கு உரியவன், உன்னுடைய தொண்டன் மற்றும் ஊழியன், என்னுடைய ஒரே புகலிடம் நீதான், நான் உன்னிடம் சரணடைந்துள்ளேன். மற்றும் உண்மையாக

---

1. அநிர்வசனீயம் ப்ரேமஸ்வரூபம் ॥
—நாரத பக்தி ஸூத்திரங்கள், 4.51.

2. நாரதஸ்து ததர்ப்பிதாகிலாசாரதா தத்விஸ்மரணே பரம
வ்யாகுலதேதி ॥
—நாரத பக்தி ஸூத்திரங்கள், 1.19.

3. ந ம்ருஷா பரமார்த்தமேவ மே ச்ருணு விஜ்ஞாபனமேகமக்ரத: ।
யதி மே ந தயிஷ்யஸே ததோ தயனீயஸ்தவ நாத துர்லப: ॥
—ஸ்தோத்ர ரத்னம், 50.

ஓ கடவுளே, என்னுடைய சுமைகள் முழுமையாக உன் மீது கிடக்கின்றன.'[1]

விஞ்சவியலாத உணர்ச்சி மிகுந்த அன்புடன் ஸ்ரீ சைதன்யரும் தன் அன்பிற்குரிய கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்கிறார்.

'இந்த அண்டத்தின் இறைவனே, நான் அழகிய மனைவியையோ அல்லது கவிதை சார்ந்த திறமையையோ விரும்பவில்லை. ஒவ்வொரு பிறவியிலும் உன்னிடம் முழுமையான மற்றும் தன்னலமற்ற பக்தியையும் நீ அருளினாய் எனின்.'[2] எல்லாவற்றையும் உட்கொள்ளும் மற்றும் எல்லாவற்றையும் அணைத்துக் கொள்ளும் அன்பானது எது தன்னுடைய அலை வீச்சில் எல்லா மனப்பான்மைகளையும் அடக்கிக் கொள்கிறதோ மற்றும் எதில் இவை தங்களுடைய மேம்பட்ட நிறைவையும் உணர்வையும் அடைகின்றனவோ, அத்தகைய அன்புடன் கடவுளை அணுக இன்னமும் சில தகுதியுள்ள புனித ஆன்மாக்கள் உள்ளன.

இந்து சமயத்தின் ஆன்மீக அனுபவத்தின் அனைத்தையும் அணைத்துக்கொள்ளும் செயல் எல்லை

ஆழமான, தன்னை மறந்த நிலையின் ஆனந்த பரவசமான அன்பானது ஆன்மாவை வயப்படுத்த வல்லதாகும். ஆனால் இவை ஒரு ஹிந்து சமயத்தைச் சார்ந்த பக்தனின் ஆன்மீக அனுபவத்தைக் கரையச் செய்வது இல்லை. வியக்கத் தக்க ஆன்மீகச் சிறப்புப் பண்புகளை உடையவர்கள், அவர்களுடைய உருவ-அருவ என்னும் இரு வழிபாட்டு

---

1. பிதா த்வம் மாதா த்வம் தயிததனயஸ்த்வம் ப்ரியஸுஹ்ருத் ।
த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிச்சாஸி ஜகதாம் ॥
த்வதீயஸ்த்வத் ப்ருத்யஸ்தவ பரிஜனஸ்த்வத்கதிரஹம் ।
ப்ரபன்னச்சைவம் ஸத்யஹமபி தவைவாஸ்மி ஹி பர: ॥
—ஸ்தோத்ர ரத்னம், 60.

2. ந தனம் ந ஜனம் ந ஸுந்தரீம் கவிதாம் வா ஜகதீச காமயே ।
மம ஜன்மனி ஜன்மனீச்வரே பவதாத்பக்திரஹைதுகீ த்வயீ ॥
—ஸ்ரீசைதன்யரின் சிக்ஷாஷ்டகம், 4.

முறைகளின் அனுபவங்களின் எல்லைக்குள்ளும் சூழ்ந்து கொள்ளப்படுவதற்கு விரும்புகின்றனர். அவர்களுடைய ஆன்மீக விழிப்புணர்வானது வரையறைக்கு உட்பட மற்றும் எல்லைக்கு உட்பட மறுக்கிறது. அவர்கள் அவர்களின் அன்பிற்கு உரிய கடவுளைப் பல உருவங்களில் கண்டு மகிழ்கின்றனர். ஆனால் அவ்வப்பொழுது அவர்களின் மனங்களைப் பரம்பொருள் குறித்த தீவிரமான பசி பற்றிக் கொள்கிறது. அவர்கள் மெய்ப் பொருளின் ஆழங்களுக்குள் மூழ்கி, அறிவெல்லையைக் கடந்து சத்-சித்-ஆனந்தத்தில் தங்களை இழக்கிறார்கள். அவர்கள் எப்பொழுது தொடர் வாழ்க்கையின் மட்டத்திற்குத் திரும்புகிறார்களோ அப்பொழுது அனைத்தும் எல்லையற்ற பரம்பொருளின் பேரொளியைப் பிரதிபலிப்பதைக் காண்கிறார்கள். அதைக் குறித்து உபநிஷதம் இம்முறையில் விவரித்துள்ளது.

'அங்கே சூரியன் ஒளிர்வதில்லை. சந்திரனும் நட்சத்திரங்களும் ஒளிர்வதில்லை, மின்னல் ஒளிர்வதில்லை. இந்த அக்கினி எப்படி ஒளிர இயலும்? ஒளிர்கின்ற ஆன்மாவை அனுசரித்தே மற்ற அனைத்தும் ஒளிர்கின்றன. அனைத்தும் அதன் ஒளியால் ஒளிர்கின்றன.'[1]

நிலைத்த தன்மையில் படைப்பு முழுவதிலும் பரவியுள்ள அனைவரிடமும் இந்த நிலைத்த தத்துவத்தை உணர்ந்து, பலவாறாக உள்ள ஒரு மெய்ப்பொருளை உணர்ந்து, அவர்கள் அனைவரையும் விரும்புகின்றனர். அவர்கள் அனைவரையும் வழிபடுகின்றனர். அவர்கள் எல்லாவற்றையும் அனுபவிக்கின்றனர். தொடர்பற்ற நிலையும், தொடர்புடைய நிலையும் அவர்களுக்கு இயல்பாகவே உள்ளன. ஸ்ரீசங்கராச்சாரியார் எழுதியுள்ள பாடல்களிலும், தோத்திரங்களிலும் ஆன்மீகத் திருக்காட்சிகளால் சூழப்பட்டுள்ள சூழலின் கண நேரத்

---

1. ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்
நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்னி: ।
தமேவ பாந்தமனுபாதி ஸர்வம்
தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ॥

—முண்டக உபநிஷதம், 2.2.10.

தோற்றத்தை நாம் காண்கிறோம். இந்த மிகச் சிறந்த ஒரு அத்வைதியானவர் பரம்பொருளைத் தன்னுடைய சொந்த ஆன்மாவில் காண்பதைப் போன்றே, எல்லாவற்றின் பின்னணியிலும் காண்கிறார். அவர் அதைத் தியானித்து தான் அந்தப் பரம் பொருளைவிட வேறு இல்லை என்பதை உணர்ந்து கொண்டுள்ளார்.

'விடியலில் என் இதயத்தினுள்ளே தானே ஒளிரும் சத்-சித்-ஆனந்த வடிவாக உள்ள மெய்ப்பொருளை மிக உயர்ந்த துறவிகளின் இலட்சியத்தை, எல்லாவற்றையும் கடந்த, நிலைத்து உள்ள மெய்ப்பொருளை, விழிப்பு, கனவு, உறக்கம் என்னும் மூன்று நிலைகளையும் கடந்துள்ள மெய்ப் பொருளைத் தியானிக்கிறேன். நான் மூலக் கூறுகளின் கலவை அல்ல. நான் பகுக்க முடியாத பரம்பொருள்.'[1]

உண்மையான தீர்க்கதரிசியான ஸ்ரீசங்கரர் எல்லா புனிதமான கருத்துக்களிலும், அதே தெய்வீக தத்துவத்தை அடையாளம் கண்டுகொள்கிறார். அவர் தன்னுடைய குருவிற்கு தன் வணக்கத்தை அர்ப்பிக்கிறார். அவர் அவருடைய குருவிடத்திலும் நிலைத்த பரம்பொருளைக் காண்கிறார்.

'குருவாகத் திருவுருவம் கொண்டுள்ள நலத்தை அளிக்கும் பரம்பொருளுக்கு நான் என் வணக்கங்களை அர்ப்பிக்கிறேன். ஒரு நகரம் ஒரு நிலைக் கண்ணாடிக்குள் பிரதிபலிக்கப் படுவதைப்போன்று மாயையின் சக்தியால் உறக்கத்திலிருப்பதைப்போல, தன்னிடமே பிரம்மாண்டம் இருப்பதைக் காண்கிறார். தன்னுடைய மேம்பட்ட நிலையில் தன்னுடைய சொந்தமான, உண்மையான ஆன்மாவை இருமையற்ற ஒன்றை யார் உணர்கிறாரோ, அவருக்கு என்

---

1. ப்ராத: ஸ்மராமி ஹ்ருதி ஸம்ஸ்புரதாத்மதத்வம்
ஸச்சித்ஸுகம் பரமஹம்ஸகதிம் துரீயம் ।
யத் ஸ்வப்னஜாகரஸுஷுப்தமவைதி நித்யம்
தத் ப்ரஹ்ம நிஷ்கலமஹம் ந ச பூதஸங்க: ॥
—ஸ்ரீசங்கரரின் ப்ராத:ஸ்மரண ஸ்தோத்திரம்.

வணக்கங்கள்.'[1] சங்கரருக்குச் சிவன், விஷ்ணு மற்றும் மற்ற ஆண் தெய்வங்களும், பெண் தெய்வங்களும் அதே வரையற்ற பரம்பொருளைப் பற்றிச் சொல்கிறார்கள். அந்த வரையற்ற பரம்பொருள், வரையறைக்கு உட்பட்டதன் உண்மையான பொருளைத் தருகிறது.

'ஒப்புயர்வற்ற ஆன்மாவை, இறைவனை முழுமுதற் கடவுளை, இந்தப் பேரண்டத்தின் மூலப்பொருளை, விருப்பங்களற்ற, வடிவமற்ற, ஓம் என்னும் சின்னத்தின்மூலம் உணரப்படும், இந்தப் பேரண்டம் யாரிடமிருந்து தோற்றம் கொண்டதோ, யாரால் காத்துப் பேணப்படுகிறதோ, யாரிடம் ஒடுங்குகிறதோ அத்தகைய முழுமுதற் பொருளை நான் போற்றி வழிபடுகிறேன்.'[2]

மிக ஆழமான பக்தி உணர்வுடன் அவர் விஷ்ணுவைப் பிரார்த்தித்துக் கொள்கிறார்.

'இறைவனே, எல்லா இடங்களிலும் ஊடுருவி இருக்கும் முழுமுதற்பொருளே, நீ என் அகங்காரத்தை அகற்றுவாய். என் மனத்தை அமைதிப்படுத்துவாய். நீ உலகத்தைக் குறித்த என் மாயையை அகற்றிவிடு. எல்லா உயிரினங்களின் மீதும் என் அன்பை மிகுதிப்படுத்துவாய். சம்சார ஸாஹரத்திலிருந்து என்னைக் காப்பாற்றுவாய்.'[3]

---

1. விச்வம் தர்ப்பணத்ருச்யமானனகரீதுல்யம் நிஜாந்தர்கதம்
பச்யன்னாத்மனி மாயயா பஹிரிவோத்பூதம் யதா நித்ரயா ।
ய: ஸாக்ஷாத்குருதே ப்ரபோதஸமயே ஸ்வாத்மானமேவாத்வயம்
தஸ்மை ஸ்ரீகுருமூர்த்தயே நம: இதம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே ॥
—ஸ்ரீசங்கரரின் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம், 1.

2. பராத்மானமேகம் ஜகத்பீஜமாத்யம்
நிரீஹம் நிராகாரமோங்காரவேத்யம் ।
யதோ ஜாயதே பால்யதே யேன விச்வம்
தமீசம் பஜே லீயதே யத்ர விச்வம் ॥
—ஸ்ரீசங்கரரின் வேதஸார சிவ ஸ்தோத்திரம் 5.

3. அவிநயமபநய விஷ்ணோ தமய மன: சமய
விஷயம்ருகத்ருஷ்ணாம் ।
பூததயாம் விஸ்தாரய தாரய ஸம்ஸாரஸாகரத: ॥
—ஸ்ரீசங்கரரின் விஷ்ணு ஸட்பதீ, 1.

அவர் மேலும் தொடர்கிறார்.

'அலைகள் அவை தாங்களே கடலில் கலக்கின்றன. கடல் அலைகளில் கலப்பதில்லை. எனவே உண்மையாக, ஓ இறைவனே, எல்லா வகையான வேறுபாடுகளும் அகற்றப் பட்ட பிறகு, நான் என்னை உம்மிடம் இழக்கிறேன். நீ உன்னை என்னிடம் இழப்பதில்லை.'[1]

மிகச் சிறந்த அத்துவைத தத்துவஞானியின் இதய மானது, தெய்வீக அன்னையின் அன்பு மிகுந்த அழைப்பிற்கு ஒரு சாதாரணமான பக்தனின் நிலையில் தன்னை இருத்திக் கொண்டு மிகவும் உருக்கத்துடனும், கனிவுடனும் பதில ளிக்கிறது.

'ஓ அன்னையே, இந்த உலகத்தில், உன்னுடைய கணக்கற்ற தகுதியுடைய புதல்வர்களின் நடுவில், நான் நெறியற்ற தன்மைக்கு உதாரணமாக விளங்குகிறேன். இருப் பினும் நலம் செய்பவளே, என்னைக் கைவிடுவது உனக்கு ஏற்றதல்ல, நான் உன் குழந்தை, சில சமயங்களில் ஒரு கெட்ட குழந்தை பிறக்கலாம். ஆனால் எங்கும் ஒரு பொழுதும் கெட்ட அன்னை என்று யாரும் இருந்ததில்லை.'[2]

மற்றும் அன்னை மட்டுமே அவருடைய புகலிடமாக விளங்குகிறாள்.

'ஓ அன்னையே! நான் எந்த தர்மத்தையும் செய்ய வில்லை. நான் தியானம் செய்யவில்லை. நான் எத்தகைய சமயச் சடங்குகளையும் செய்தது இல்லை. நான் எந்த புனிதமான நாமத்தையும் கூறியது இல்லை. நான் பூஜை

---

1. ஸத்யபி பேதாபகமே நாத தவாஹம் ந மாமகீனஸ்த்வம் ।
ஸாமுத்ரோ ஹி தரங்க க்வசன ஸமுத்ரோ ந தரங்க: ॥
—சங்கரரின் விஷ்ணு ஸட்பதீ, 3.

2. ப்ருதிவ்யாம் புத்ராஸ்தே ஜனனி பஹவ: ஸந்தி ஸரலா:
பரம்தேஷாம் மத்யே விரலதரலோஹம் தவ ஸுத: ।
மதீயோயம் த்யாக: ஸமுசிதமிதம் நோ தவ சிவே
குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி ॥
—சங்கரரின் ஸ்ரீதேவ்யபராத க்ஷமாபன ஸ்தோத்ரம், 3.

செய்தது இல்லை. சரியான முறையில் பிரார்த்தனைகளைக் கூறி நான் என் உறுப்புக்களைத் தூய்மை செய்து கொண்டது இல்லை. எனவே இந்தப் பேரண்டத்தின் அன்னையாக விளங்கும் நீதான் என்னுடைய ஒரே புகலிடமாக உள்ளாய். நீதான் என்னுடைய ஒரே புகலிடமாக உள்ளாய்.'[1]

மென்மையான உணர்ச்சிகளின் வியக்கத்தக்க விளையாட்டையும் மீறி அவருக்குத் தெய்வீக அன்னை, பரம் பொருளைத் தவிர வேறு யாருமில்லை. மற்றும் மனித வடிவம் அவளுடைய பிரதிபலிப்பாக விளங்குகிறது. அவள் விளையாட்டாக, ஒரு முழுமையான ஞானத்தைக் கடவுளாகவும், ஆன்மாக்களாகவும் பகுத்து உள்ளாள். அவர் அவளுடைய இருப்பில் தன்னை இழக்க விரும்புகிறார்.

'இந்த பிரம்மாண்டத்தின் அன்னையே, என்னுடைய புலன்கள் எப்பொழுது கட்டுப்பாட்டை அடையும்? எனக்கு எப்பொழுது நண்பர்களோ அல்லது பகைவர்களோ இருக்க மாட்டார்கள்? நான் எப்பொழுது தவறான மற்றும் ஏமாறச் செய்யும் நம்பிக்கைகளிலிருந்து விடுதலை அடைவேன்? என்னுடைய மனம் எப்பொழுது அதன் வேருடன் அழிக்கப்படும்?'[2]

உண்மையாக நம்மால் இந்து தர்மத்தின் திருமுறைப் பாடல்களையும், தோத்திரங்களையும் நுழைபுலத்துடனும், நுண்ணறிவுத் திறத்துடனும் ஆராய்ந்து படிக்க இயன்றால், வேதகால தீர்க்கதரிசியுடன் சேர்ந்துகொண்டு, 'ஒரே ஒரு

---

1. ந ஜானாமி தானம் ந ச த்யானயோகம் ।
ந ஜானாமி தந்திரம் ந ச ஸ்தோத்ர மந்த்ரம் ॥
ந ஜானாமி பூஜாம் ந ச ந்யாஸயோகம் ।
கதிஸ்த்வம் கதிஸ்த்வம் த்வமேகா பவானி ॥
—சங்கரரின் பவானி அஷ்டகம், 3.

2. கதா வா ஹ்ருஷீகாணி ஸாம்யாம் பஜேயு:
கதா வா ந சத்ருர்ன மித்ரம் பவானி ।
கதா வா துராசாவிஷூசீவிலோப:
கதா வா மனோ மே ஸமூலம் வினச்யேத் ॥
—சங்கரரின் தேவிபுஜங்கப்ரயாத ஸ்தோத்திரம், 20.

மெய்ம்மை உள்ளது. ஆனால் முனிவர்கள் அம்மெய்ம் மையை பலவிதமாக அழைக்கின்றனர்' என்று கூறாமல் இருக்க இயலாது.[1] சிவ மஹிம்ன ஸ்தோத்திரத்தில் பலரும் அறிந்த ஒரு பகுதியில் ஒரு கருத்து மிகவும் தெளிவாகவும் உள்ளார்ந்தும் விவரிக்கப்பட்டுள்ளது.

'வேதத்தில் பலவகையான வழிகள் கற்பிக்கப்பட் டுள்ளன. யோகம், சைவம், வைஷ்ணவம் போன்ற திருநூல் தொகுதிகளும் உள்ளன. இவற்றில் சிலர் ஒன்றையும், வேறு சிலர் மற்றொன்றையும் சிறந்தது என்று கருதுகின்றனர். பக்தர்கள் இத்தகைய தெய்வீக வழியைப் பின்பற்றுகின்றனர். நேராக இருப்பினும், வளைந்து இருப்பினும் அவர்களுடைய வேறுபட்ட மனப்பான்மைகளுக்குத் தகுந்தாற்போல பின் பற்றுகின்றனர். இருப்பினும் ஓ கடவுளே, எல்லா நதி களுக்கும் கடல் முடிவு எல்லையாக இருப்பதைப்போல அனைவருக்கும் நீதான் அவர்களுடைய இலக்கின் நோக்க மாக விளங்குகிறாய்.'[2]

பிரார்த்தனையானது ஏதாவது ஒரு வகையில் எல்லா வகையான சாதகர்களுக்கும் அவசியமானதாகும். அது ஆன்மா, கடவுளுக்காக ஏங்கும் ஏக்கத்தின் வெளிப்பாடு ஆகும். இஷ்ட தெய்வத்திடம் இருப்பதுபோல வரையற்ற தன்மைக்கும் அதே அளவான அன்பையும் ஏக்கத்தையும் ஒருவரால் உணர இயலும். அது இயல்பான மனப்பாங்கைப் பொறுத்ததாகும். ஒரு பக்தனின் பிரார்த்தனையானது அதிகமான உணர்ச்சி விளக்கத்துடனும், உணர்ச்சிகள் செறிந்ததாகவும் இருக்கும். ஞானத்தைத் தேடும் ஞானியின் பிரார்த்தனையானது சொற் களால் விவரிக்கப்படாமல் இருக்கலாம். மற்றும் அவன்

---

1. ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி ।

—ரிக்வேதம், 1.164.46

2. த்ரயீ சாங்க்யம் யோக: பசுபதிமதம் வைஷ்ணவமிதி
ப்ரபின்னே ப்ரஸ்தானே பரமிதமத: பச்யமிதி ச ।
ருசீனாம் வைசித்ரயாத்ருஜுகுடில நானாபதஜுஷாம்
ந்ருணாமேகோ கம்யஸ்த்வமஸி பயசாமர்ணவ இவ ॥

—புஷ்பதந்தர், சிவமஹிம்ன ஸ்தோத்திரம், பாடல் 7.

அமைதியாகவும் இருக்கக் கூடும். ஆனால் அவனுடைய ஆழமான அகமௌனமே ஒருவகையான சிறந்த உள்முக பிரார்த்தனையாகும். சில நேரங்களில் நாம் ஒருவரிடமே இந்த இரு மன நிலைகளும் மாறிமாறி வருவதைக் காண் கிறோம். மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை உணர்வதற்குத் தீவிரமாக ஏங்குவதுதான் முக்கியமானதாகும். மௌனமான பிரார்த்தனையின் மூலம் அந்த ஏக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இயலாதவர்கள் நாம் மேலே ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவர்களைப்போல சொற்களுடன் கூடிய பிரார்த்தனையின் உதவியை எடுத்துக் கொள்கின்றனர்.

மேலும், நாம் செய்யும் பிரார்த்தனைகளில் நாம் தன்னலத் துடன் இருத்தல் கூடாது. நாம் நமக்குப் பிரார்த்திப்பது போன்றே மற்றவர்களுக்கும் பிரார்த்திக்க வேண்டும். உனக்கு வேண்டப்பட்டவர்கள் அனைவருக்கும் நீ பிரார்த்திக்க வேண்டும். அதன்பிறகு நல்லவர்களுக்காகவும், ஆன்மஞானம் அடைய வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கும் அனைவருக்காகவும் பிரார்த்திக்க வேண்டும். இறுதியாக, எல்லா மனிதர்களுக்காகவும் பிரார்த்திக்க வேண்டும். எல்லா இடங்களிலும் எல்லா உயிரினங்களுக்கும் பிரார்த்திக்க வேண்டும். எல்லா திசைகளுக்கும் நல்ல பிரார்த்தனைகளை அதிகமாக அனுப்புவாய். உன்னிடமிருந்து அமைதியும் நல்ல எண்ணங்களும் எல்லா திசைகளுக்கும் பரவட்டும்.

இங்கு கீழே, சுவாமி யதீஷ்வரானந்தர் அவர்கள் அவர் சொற்பொழிவுகளைத் தொடங்குவதற்கு முன்பும், வகுப்புக் களைத் தொடங்குவதற்கு முன்பும் கூறும் சில பிரார்த்தனை களும் தியான வழிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

நம் அனைவரின் இதயங்களிலும் குடிகொண்டுள்ள எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந்துள்ள, பேரின்ப நிலையான பரம்பொருளுக்கு நம் வணக்கங்களை அர்ப்பிப் போம். அவர் கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலத் தின் இறைவன் ஆவார். அவரை உணர்வதின்மூலம் ஒருவர் அச்சத்தைக் கடந்து சென்று அமைதியை அடைகிறார். அவர் படைப்பின் ஒப்புயர்வற்ற தத்துவம் ஆவார். ஒப்புயர்வற்ற

மெய்ப்பொருள் ஆவார். ஒப்புயர்வற்ற பேரொளி ஆவார். மற்றும் ஒப்புயர்வற்ற ஆன்மா ஆவார். எங்கும் ஊடுருவி நிறைந்துள்ள, பேரின்ப நிறைவுடையவரான அவரிடமிருந்து நாம் அனைவரும் தோன்றியுள்ளோம். அவருள் நாம் வாழ்கிறோம். அவரிடம் திரும்பச் செல்கிறோம். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

நம்முடைய உடலையும், மனத்தையும் தளர்த்தி சில கணங்களுக்கு அமைதியாக அமர்ந்திருப்போம். எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந்துள்ள பரம்பொருளுக்கு முழுமுதற் கடவுளுக்கு நம்முடைய வணக்கங்களை அர்ப்பிப்போம். நம்முடைய உணரும் திறனிற்கு அவர் வழிகாட்டட்டும். உலகத்திலுள்ள எல்லா சிறந்த ஆச்சாரியர்களுக்கும், புனித மகான்களுக்கும் கூட நாம் நம் வணக்கங்களை அர்ப்பிப் போம். ஏனெனில் நாம் அவர்களது போதனைகளை மரபு உரிமையாகப் பெற்றுள்ளோம். நாம் உண்மையை விரும்பு வதற்கு நம்மை அவர்கள் ஊக்குவிக்கட்டும்.

ஒப்புயர்வற்ற பரம்பொருள்தான் எல்லா துய்மைப்பாடு களின் ஆதாரமாகும். நாம் தூய்மைப்பாடின் அதிர்வலைகளை உள்ளே இழுத்துக் கொள்வோம். அவை நம்முடைய எல்லா தூய்மைக்கேடுகளையும் அழிக்கட்டும். தூய்மைப்பாடின் அதிர்வலைகளையே நாம் வெளிவிடுவோம். நாம் வலிமை யின் அதிர்வலைகளை உள்ளே இழுத்துக் கொள்வோம். அவை நம்முடைய எல்லா பலவீனங்களையும் அழிக்கட்டும். நாம் வலிமையின் அதிர்வலைகளையே வெளிவிடுவோம். நாம் அமைதியின் அதிர்வலைகளை உள்ளே இழுத்துக் கொள்வோம். அவை நம்முடைய எல்லா அமைதியற்ற தன்மைகளையும் அழிக்கட்டும். நாம் அமைதியின் அதிர் வலைகளை வெளிவிடுவோம். நாம் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் மற்றும் தெற்கிலும் உள்ள நம் உடனொத்த அனைவருக்கும் தூய்மைப்பாடு, வலிமை மற்றும் அமைதி யின் அலைகளை அனுப்புவோம். நாம் நம்முடன் அமைதி யாக இருப்போம். மற்றும் உலகம் முழுவதுடனும் அமைதி யாக இருப்போம்.

நாம் இப்பொழுது காண்பவராக அல்லது பார்வை யாளராக உள்ள மனநிலையை அடைவோம். மற்றும் நம் மனத்தை ஒலி மற்றும் வேறு வகையான தொந்தரவுகள் போன்ற எல்லாவகையான கவனமாற்றங்களிலிருந்தும் இழுத்துக் கொள்வோம். நம் உள்ளே எழும் எல்லா வகை யான எண்ணங்கள், உணர்வுகள், மற்றும் உருவங்களிட மிருந்தும் நம்மைப் பிரித்துக் கொள்வோம். நாம் மிகுந்த விழிப்புணர்வுடன் இருப்போம். நம் உடலானது தெய்வீகம் நிறைந்த கோயிலாகும். நாம் நம்முடைய விழிப்புணர்வை மிகப் புனிதமான இதயத்தில் குவிமைப்படுத்துவோம். அங்கு நம்முடைய ஆன்மாவானது ஒரு சிறிய ஒளிவட்ட மாகத் திகழ்கிறது. மற்றும் அது எல்லா இடங்களிலும் ஒளிர்ந்து கொண்டுள்ள வரையறையற்ற பரம்பொருளின் ஒரு பகுதி என்று உணர்வோம். வரையறையற்ற பரம் பொருளானது சூரியனிலும், சந்திரனிலும் கோள்களிலும் இயல்பாக உள்ளது. வரையறையற்ற பரம் பொருளானது எல்லா உயிரினங்களிலும் ஒளிர்கிறது. இந்தப் பரம்பொருள் நம் கண்களிலும், காதுகளிலும், நம்முடைய எல்லாப் புலன் களிலும் இயல்பாக உள்ளது. பரம்பொருளானது நம் மனத் தில் ஒளிர்கிறது. நம் இதயத்தில் ஒளிர்கிறது. நாம் அனை வரும் அதன் தொடர்பை உணர்வோம்.

அத்வைதியானவன், பரம்பொருளைச் சத்-சித்- ஆனந்த வடிவத்தில் தியானிக்கிறான். பக்தனானவன் அதே பரம் பொருளைக் கடவுளின் பல வகையான தன்மைகளில் தந்தையாக, தாயாக, நண்பனாக, காதலனாக வழிபடு கிறான். வரையறையற்ற கடவுளானது தன்னைச் சிறந்த ஆண் கடவுளர்களாக, பெண் கடவுளர்களாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. பரம்பொருள் மீண்டும், மனித குலத்திற்கு அருள் புரிவதற்காக தெய்வீக அவதார புருஷராக பூமிக்கு இறங்கி வருகிறது. நாம் நமக்குப் பிடித்தமான எந்தப் பொருளையும் தியானம் செய்வதற்காகத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் நாம் தியானம் செய்யும் பொழுது, நாம் அனைவரும், வழிபடுபவனும், வழிபடப்படுவதும்

ஒரே சத்-சித் ஆனந்தத்தில் மூழ்கி உள்ளதாக உணர வேண்டும்.

உண்மையாக ஒரே ஒரு பரம்பொருள்தான் தன்னை ஒரு விதத்தில் பக்தனாகவும், மற்றொரு விதத்தில் அவன் வழிபடும் கடவுளாகவும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. நாம் அந்த தெய்வீகத் தொடர்பை முழுமையாக உணர வேண்டும். மற்றும் அந்த தெய்வீக இருப்பானது நம்முடைய நரம்புகளின் உணர்ச்சிகளை மட்டுப்படுத்தி, நம் மனங்களை அமைதிப்படுத்தி நம் இதயங்களை வருடட்டும். அந்த பரம்பொருள், நாம் புரிந்து கொள்வதற்கு வழிகாட்டியாக அமைந்து, நம்முடைய விழிப்புணர்வை ஒளிரச் செய்யட்டும்.

நாம் எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந்துள்ள பேரின்ப நிறைவாக விளங்கும் பரம்பொருளைச் சில கணங்களுக்கு நாம் விரும்பும் எந்தத் தன்மையிலாவது, நாம் விரும்பும் எந்த வழியிலாவது தியானிப்போம். ஆனால் நாம் எல்லா வழிகளிலும் தெய்வீகத் தொடர்பை உணர வேண்டும்.

எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந்துள்ள, பேரின்ப வடிவான பரம்பொருளானது நம் ஆன்மாக்களின் ஆன்மா வானது நம் எல்லோரையும் காப்பாற்றட்டும். நம் அனை வருக்கும் வழிகாட்டட்டும். நம் அனைவரையும் போஷிக் கட்டும். நாம் கற்றுக்கொண்ட போதனைகள் அவனுடைய அருளால் பயனுடையதாகவும், ஆற்றல் மிகுந்ததாகவும் விளங்கட்டும். நம் அனைவரிடமும் அமைதியும், இசை வுடைமையும் நிலைத்து நிற்கட்டும். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

ஓ கடவுளே, எல்லா ஆன்மீக வழிகளுமே உனக்கு ஓடை களைப் போல, இருப்பின், விழிப்புணர்வின், பேரின்பத்தின் ஒரு பெருங்கடலாகும்.

நீ எங்கள் ஆன்மாக்களின் ஆன்மா ஆவாய்.

நீ எங்கள் தாய், நீ எங்கள் தந்தை, நீ எங்கள் நண்பன்.

நீ எங்கள் தோழன். நீ எங்கள் ஞானம், நீ எங்கள் செல்வம். எங்களுடைய எல்லாமாக நீ விளங்குகிறாய்.

எங்களை உண்மையற்ற நிலையிலிருந்து உண்மை நிலைக்கு அழைத்துச் செல்வாய். அறியாமை இருளிலிருந்து அறிவுப் பேரொளிக்கு அழைத்துச் செல்வாய். மரணத் திலிருந்து மரணமற்ற பெருநிலைக்கு அழைத்துச் செல்வாய்.

எல்லா வகையிலும் எங்கள் ஆன்மாக்களின் வழியாக அடைவாய் மற்றும் உன்னுடைய ஊக்குவிக்கும் இருப்பால் எங்களையெல்லாம் வாழ்த்துவாய். எக்காலத்திற்கும் வாழ்த்து வாய். எங்களுடைய இதயங்களின் இதயத்தில் உன்னைக் காண்போமாக. எங்களுடன் இருக்கும் அனைவரிடமும் உன்னைக் காண்போமாக. நாங்கள் உன்னை விரும்புவோ மாக. மற்றும் எல்லாவற்றிலும் உனக்குத் தொண்டாற்று வோமாக.

இவ்வுலகம் அமைதியுடன் இருக்கட்டும். அனைவரும் ஆபத்திற்கு உட்படாமல் இருக்கட்டும். அனைவரும் எது நல்லதோ அதை உணரட்டும். அனைவரும் உன்னதமான எண்ணங்களால் தூண்டப்பட வேண்டும். எல்லா இடங் களிலும் எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.[1]

---

1. மேலும் பல பிரார்த்தனை பாடல்களுக்கு Universal Prayers என்னும் நூலைப் பார்க்கவும்.

23

ஆன்மீகம் சார்ந்த வழிபாடு

எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பிப்பாய்

'பொதுவாக மனிதர்கள் மிகவும் விரும்புவனவற்றையும் மற்றும் ஒருவர் தனிப்பட்ட முறையில் எதை விரும்பினாலும் அவை எனக்கு அர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அர்ப்பிப்பு, அளவுகடந்த வினை பயன்களை ஏற்படுத்துகின்றன.'[1]

கடவுளிடமிருந்து நாம் பெறும் பொருட்களைக் கொண்டே நாம் கடவுளை வழிபடுகிறோம். நாம் பூவைத் தோற்றுவிப்பதில்லை. அல்லது நெருப்பையும் தோற்றுவிப்பதில்லை. அவை நம்மிடம் வருகின்றன. மற்றும் நாம் அவற்றை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. பக்தன் அவனுக்குக் கிடைக்கும் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பிக்கிறான். அதில் என்ன விந்தை உள்ளது? அதன்மூலமாக நீ உன் மனத்தை விரிவுபடுத்திக் கொள்கிறாய். கடவுள் உனக்கு என்ன அளிக்கிறாரோ, நீ அதைக் கடவுளுக்கு அர்ப்பிப்பதன்மூலம் நீ உன்னையே தூய்மைப்படுத்தப்பட்டவனாக உணர்கிறாய். மற்றும் உன் ஆன்மா உயர்வுறுகிறது. அது பரம்பொருளின் வாழ்த்துக்களின் பெரும்பகுதியைச் சேகரித்துக் கொள்கிறது. அவற்றை நீ உன்னுடையவை என்று ஒதுக்கிவைத்துக் கொள்ளும் அளவிற்கு உன் ஆன்மாவானது மேலும் குறுகியதானதாகவும் மறைக்கப்பட்டதாகவும் ஆகிவிடுகிறது.

---

1. *யத்யதிஷ்டதமம் லோகே யச்சாதிப்ரியமாத்மன: ।
தத்தன்னிவேதயேன்மஹ்யம் ததானந்த்யாய கல்பதே ॥*
—பாகவதம், *11.11.41.*

பரம்பொருளுக்கு எதை வேண்டுமானாலும் அர்ப்பிக்க லாம். உன்னுடைய உணவு, புதிய உடை, கார் மற்றும் உனக்குக் கிடைக்கும் அனைத்தையும் அர்ப்பிக்கலாம். நீ அதைப் பயன்படுத்தத் தொடங்குவதற்கு முன்பு மானசீகமாக முதலில் அதைக் கடவுளுக்கு அர்ப்பித்து விட வேண்டும். அதைப் புதிய ஆன்மீகச் சின்னமாக ஏற்றுக் கொண்டு, மிகவும் கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். இத்தகைய நிலை மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது. மற்றும் அதை உயர்த்து கிறது. கடவுள்தான் மிகச் சிறந்த தூய்மைப்படுத்துபவராக விளங்குகிறார். அவருடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ள எதுவும் புனிதமானதாகிவிடுகிறது. புனிதப்படுத்தப்பட்ட வற்றைக் கையாளுவதன்மூலம் நாம் நம்மை புனிதப்படுத்திக் கொள்கிறோம். தூய்மைப் படுத்திக் கொள்கிறோம். நம் முடைய ஆசிரமங்களில், புதிய வெளியீடுகளும் அழைப் பிதழ்களும் முதலில் கோயிலிற்கு அனுப்பப்படுகின்றன. அவை கடவுளுக்கு அர்ப்பிக்கப்பட்ட பிறகுதான் புழக்கத்தில் விடப் படுகின்றன. இது ஒரு நல்ல பழக்கமாகும். வீட்டில் நீ வாங்கும் எல்லாவற்றைப் பொறுத்தமட்டிலும் இப் பழக்கத்தை மேற்கொள்ளலாம்.

இந்தச் செயலானது, அதன் அளவில் பெரியதாக இல் லாமல் இருக்கக் கூடும். ஆனால் இம்முறையில் நூற்றுக் கணக்கான சிறிய அர்ப்பணங்களும் செய்யப்பட்டால், சில ஆண்டுகளுக்குப் பிறகு படிப்படியாகத் திரண்டு வளர்ந்துள்ள அவைகளின் பயன் உண்மையாகவே பேராற்றல் வாய்ந்ததாக இருக்கும். படிப்படியாக சரணடையும் உணர்வும் பற்றற்ற தன்மையும் நம்முடன் இருக்கத் தொடங்கும். உண்மையாக இதை அடைவதற்கு வேறு எந்த வழியும் இல்லை. சரணடை யும் மனப்பான்மையும், தூய்மைப்பாடும் திடீரென்று வந்துவிடாது. அவை நூற்றுக்கணக்கான சிறிய செயல்களின் பயனாகச் சேர்ந்துள்ளவை ஆகும்.

பக்தியைச் சார்ந்த தனிமுறைக் கொள்கைக் குழுக்களில் முக்கியமாக வைணவத்தில் புனிதமானவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்னும்

கருத்தானது மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆன்மீக வாழ்வில் தொண்டாற்றுவது என்பது மிகவும் முக்கியமானதாகும். கடவுளுக்கு அனைத்தையும் அர்ப்பித்துவிட்டு, அதன் பிறகு ஒருவர் அதைப் பயன்படுத்துவது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நல்லது ஆகும். அது உன்னைப் பரம்பொருளுடன் இணைக்கிறது. ஆனால் உன்னுடைய நேர்மைக்கு உரிய தேர்வு என்ன? நீ அனைத்தையும் கடவுளுக்காகத் துறப்பதற்குச் சித்தமாக இருக்கிறாய் என்பதை நீ எப்படி அறிந்து கொள்வாய்? நீ துறப்பதற்குத் தயாராக உள்ள ஆயத்த நிலை தான் ஒரே தேர்வு ஆகும். நீ அனைத்தையும் கடவுளுக்காகத் துறப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். தொண்டாற்றுவது ஒன்றுதான் துறக்க வேண்டும் என்னும் கருத்தை வளர்த்துக் கொள்வதற்கான சிறந்த வழியாகும். தொண்டாற்றுவது இயல்பாகவே ஏதோ ஒருவகையான தியாகத்தைக் குறிப்பாகச் சுட்டுகிறது. மிகவும் பசியாக உள்ள ஒரு மனிதன் உன்னிடம் வரும்பொழுது உன் உணவின் பகுதியை அவனுக்கு அளிப்பாய். ஒரு ஏழை உன்னிடம் வரும்பொழுது, உன்னிடமுள்ள செல்வத்தின் ஒரு பகுதியை அவனுக்களிப்பாய். அதைப் போன்றே நீ உன் நேரம், இன்பங்கள், ஆற்றல் போன்றவற்றை உடல்நலமில்லாமல் இருப்பவர்களுக்கும் அறியாமை நிறைந்தவர்களுக்கும் அல்லது துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் பணிவிடை செய்வதில் தியாகம் செய்ய வேண்டும். ஒவ்வொருவரையும், கடவுள் உறையும் கோயிலாகக் கருத வேண்டும். மனிதனுக்குத் தொண்டு செய்வதால், நீ கடவுளை வழிபடுகிறாய். இது சுவாமி விவேகானந்தரின் செயல் தத்துவத்தின் பின்னணியில் உள்ள கருத்து ஆகும். ஏழையான, பசி இருக்கும் மனிதனிடம் ஆன்மீகத்தைக் குறித்துப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை. அவனுக்கு முதலில் உணவு அளிக்கப்பட வேண்டும். அதுதான் கடவுளை வழிபடும் முறையாகும். மலர்களையும் நறுமணப் புகையையும் அர்ப்பிப்பது மட்டுமே வழிபாடு இல்லை.

நாம் கூட்டிணைப்பை உட்கொண்ட கண்ணோட்டத்தையும் பரவலான தொலைபரப்புத் தோற்றத்தையும்

வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய வரையறைக்கு உட்பட்ட இருப்பு, வரையறைக்கு உட்பட்ட விழிப்புணர்வு மற்றும் வரையறைக்கு உட்பட்ட இன்பங்களின் பின்னணியில் ஒரு பகுக்க இயலாத வரையறைக்கு உட்படாத பரம்பொருள், தன்னை ஒவ்வொருவரின் மூலமாகவும் வெளிப்படுத்திக் கொள்கிறார். அவருக்கு அனைத்தையும் அர்ப்பிப்பதுதான் மிக உயர்ந்த வழிபாடு ஆகும். நம்மால் இந்த வகையான வழிபாட்டைச் செய்ய இயலும் எனின், கீழானவற்றை மட்டும் செய்து கொண்டிருப்பதில் ஏன் நிறைவு அடைய வேண்டும்?

உபாஸனை அல்லது மனவழிபாடு

கடவுளைப் பருப்பொருள் சார்ந்த பொருட்களால் வழிபடும் முறையைத் தவிர, மானசீக வழிபாடு என்னும் வேறு வகையான வழிபாடும் உள்ளது. அது உண்மையிலேயே உயர்ந்த வகையைச் சார்ந்த வழிபாடு ஆகும். வடமொழியில் அது உபாஸனை என்று அழைக்கப்படுகிறது. அதற்கு, 'அருகில் அமர்வது' (கடவுளுக்கு) என்பது நேர்ப்பொருளாகும். நடைமுறையில் கடவுளைக் குறித்து 'தியானம்' என்பதும், கடவுளைக் குறித்து 'ஆழ்ந்து நினைத்தல்' என்பதும் பொருளாகும். இத்தகைய மானசீக வழிபாட்டு முறையானது, துவைதம் மற்றும் விசிஷ்ட அத்வைத வேதாந்த முறைகளின் ஆன்மீகப் பயிற்சியின் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. இத்தகைய முறைகள் கடவுளையும், ஆன்மாவையும் இரண்டு தனிப்பட்ட உளதாம் தன்மைகளாகக் கருதுகின்றன. வழிபடுபவன் இந்த இரண்டிற்கும் நெருங்கிய உறவினை வேறுவேறான கோணங்களில் ஏற்படுத்த முயற்சி செய்தாலும், இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாடானது ஒருபொழுதும் முற்றிலும் நீங்குவதில்லை. பக்தன் முதலில் தொண்டனாக இருக்கிறான் மற்றும் கடவுள் எஜமானராக இருக்கிறார். வளர்ச்சி அடைந்த நிலைகளில் பக்தன் ஆன்மாவாக விளங்குகிறான். மற்றும் கடவுளானவர் ஆன்மாக்களின் ஆன்மாவாக விளங்குகிறார். இந்த

மனப்பான்மையானது அத்வைத நிலைக்கு ஒரு படிக்கல்லாகப் பயன்படக்கூடும்.

வடிவற்ற பரம்பொருளைச் சார்ந்து இருக்கும் இயல்பை உடையவர்களுக்கு, முதலில் பிரம்மனை அல்லது பரம்பொருளைக் கடலாகவும் மற்றும் தனிப்பட்ட ஆன்மாவை அலை என்றும் கருதுவது உதவக் கூடியதாக இருக்கலாம். தனிப்பட்ட ஆன்மாவின், 'நான்' என்பதுதான், பரம்பொருளிலிருந்து வேறுபட்டதாக விளங்குகிறது. ஆனால் உண்மையில், மனித உயிருக்கும், பேரளவினதாகிய முழுமைக்கும் உள்ள தொடர்பில் மட்டுமே உள்ளது. எப்பொழுதும் அலையின் மீது தியானம் செய்வதற்குப் பதிலாக ஒருவர் கடல் மீது தியானிக்கலாம். அலையானது நீர் என்னும் மூலதத்துவத்தில் ஒன்றுபட்டுள்ளது. அது கடல் என்று நாம் அழைக்கும் பரந்த தொகுதியுடனும் மற்றும் நாம் அலை என்று அழைக்கும் சிறிய பொருள் என்னும் இரண்டுடனும் அடையாளம் கண்டு கொள்ளத்தக்கதாக உள்ளது. சாதகன் ஆன்மீகப் பாதையில் முன்னேறிக் கொண்டு இருக்கும்பொழுது இறுதியாக அவனால் நீர் மட்டுமே உண்மையானது அலை உண்மையானதல்ல என்பதை உணர்ந்து கொள்ள இயலுகிறது. தனிப்பட்ட தன்மை மற்றும் முழுமை, மனித உயிர் மற்றும் பேரளவினதாகிய முழுமை என்பதற்கு இடையிலுள்ள வேறுபாடு அற்றுவிடுகிறது. மற்றும் முழுமுதற்பொருளான இரண்டாவது அல்லாத ஒருமையே எஞ்சி நிற்கும்.

எப்படி இருப்பினும் மிகப் பெரும்பாலான மனிதர்களுக்கு இந்நிலையை அடைவது மிகவும் கஷ்டமானதாகும். அவர்கள் தியானம் செய்வதற்கு சில வகையான வழிபடத்தக்க சின்னங்கள் தேவைப்படுகின்றன. இல்லையெனின் அவர்களின் மனம் அலைபாயும். தியானத்தை எளிமைப்படுத்துவதற்காக சில புனிதமான பொருட்கள் தேர்ந்து எடுக்கப்படுகின்றன. கடவுளின் சின்னமாக ஒரு பொருளை வழிபடும் முறையானது தனிப்பட்ட கடவுளைத் தியானிக்கும் பக்தர்களுக்கும், தனிமனிதரைக் குறிக்காமல் தியானிக்கும் பக்தர்களுக்கும் பொதுவான பழக்கமாக

உள்ளது. கடவுள் ஒரு சின்னமாக வழிபடப்படவில்லை. அந்தச் சின்னத்தின் மூலமாக வழிபடப்படுகிறார். கடவுள் என்றால் ஒப்புயர்வற்ற பரம்பொருள் ஆவார்.[1] அப்பரம் பொருளால் எல்லாம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. மற்றும் அந்தப் பரம்பொருளிடமே எல்லாம் திரும்பச் செல்கின்றன. ஒரு வகையில், எந்தப் பொருளும் கடவுளின் சின்னமாக விளங்கலாம். ஆனால் மிகப் பழமையான காலத்திலிருந்தே உலகத்திலுள்ள சமயங்கள் சில சின்னங்களைச் சிறப்பான புனிதமுடையவனாகப் பற்றிக் கொண்டுள்ளன.

சூரியன் கடவுளின் ஒரு சிறந்த சின்னமாக உள்ளது. இயலுலக அண்டத்தின் ஆற்றல், ஒளி மற்றும் வெப்பத்தின் மூலாதாரமாக விளங்குகிறது. ஒரு காலத்தில் சூரிய வழிபாடானது உலகம் முழுவதிலும் பரவலாகப் பரவி இருந்தது. ஹிந்துக்களும், பார்சி சமயத்தைச் சார்ந்தவர்களும் நெருப்பை கடவுளின் சின்னமாக வழிபடுகின்றனர். வேதங்கள் நெருப்பை அழியாத தன்மையுடையது என்று கூறுகின்றன. அது மனிதர்களுக்கு நடுவில் தன் இருப்பிடத்தை வைத்துக் கொண்டுள்ளது. மற்றும் அதைக் 'கடவுளரின் வாய்' என்றும் அதன்மூலம் மற்ற எல்லாக் கடவுளரும் திருப்படையலைப் பெறுகின்றனர் என்றும் கூறுகின்றன. ஆனால் நாம் அனைவரும், சின்னமானது கடவுள் அல்ல என்பதை நம் மனங்களில் கொள்ள வேண்டும். நெருப்பு அல்லது சூரியனின் பின்னணியில், தியானம் செய்யும் பொழுது, நிலைபெற்ற பேரொளியையே காண வேண்டும். இந்தச் சின்னங்கள் அனைத்தும் அந்த பேரொளியின் வெளிப்பாடுகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை

ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த சீடர்களில் ஒருவரான ஸ்ரீபிரம்மானந்தர் எங்களுக்குக் கூறுவார்.

'மனிதர்கள் பலவகையான வழிபாட்டு முறைகளைச் சார்ந்துள்ளனர். பல்வேறு வகையான மனப்பான்மைகளை

---

1. *ஜன்மாத்யஸ்ய யத:* ।

—பிரம்ம சூத்திரம், *1.1.2.*

நிறைவு செய்வதற்காக திருமறை நூல்கள், கடவுளை அடைவதற்கான நான்கு வகையான வரையறை செய்யப்பட்ட முறைகளை விளக்குகின்றன. சடங்குகளால் வழிபடுவது ஒரு முறையாகும். அதாவது கடவுளை உருவத்திலோ அல்லது சின்னத்திலோ வழிபடுவது ஆகும். கடவுளைப் பிரார்த்தனை மற்றும் ஜபங்களின்மூலம் வழிபடுவது இதைவிட உயர்ந்தது ஆகும். சாதகன் இஷ்ட தெய்வத்தின் ஒளிரும் வடிவத்தைத் தியானிக்கிறான். அவன் கடவுளைப் பிரார்த்தித்து ஜபமும் செய்கிறான். தியானம் இதைவிடவும் உயர்ந்தது ஆகும். அதாவது கடவுளைக் குறித்த இடைவிடாத எண்ண ஓட்டமாகும். ஒரு மனிதன் இந்த வகையான வழிபாட்டு முறையைப் பின்பற்றும் பொழுது, அவன் தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் உயிர்ப்புடன் கூடிய இருப்பில் இரண்டறக் கலந்துவிடுகிறான். இங்கு பிரார்த்தனையோ அல்லது ஜபமோ இல்லை. ஆனால் இருமை உணர்வு உள்ளது. அவரும் இருக்கிறார். மற்றும் நானும் இருக்கிறேன். ஆன்மா மற்றும் பிரம்மன் (கடவுள்) என்னும் கூட்டொருமையில் தியானம் செய்வதுதான் மிகவும் உயர்ந்த முறையாகும். அது நேரடியாக மற்றும் உடனடியாகக் கடவுளிடம் அழைத்துச் செல்கிறது. கடவுளை தொடர்ந்து அனுபவிக்க இயலும். எல்லாக் காலத்திலும் அவர் இருக்கிறார் என்று அறிவது ஆகும். அது எங்கும் நிறைந்துள்ள பரம் பொருளை உண்மையாக உணர்வது ஆகும். சாதகன் வளர்ச்சி அடைவதற்கு இந்த நிலைகள் மூலமாக உள்ளன. ஒரு மனிதன் அவன் எங்கு இருக்கிறானோ அங்கிருந்து தொடங்க வேண்டும்.[1]

பலராலும் நன்கு அறியப்பட்ட வடமொழிப்பாடல் இவ்விதம் கூறுகிறது.

'ஆன்மீக விதிமுறையில் மிகவும் உயர்ந்தது, பிரம்மனை (கடவுளை) உணர்வதற்கான பயிற்சி ஆகும்.' அடுத்தது தியானமாகும். சுலோகங்களைக் கூறுவதும், தெய்வத்தின்

---

1. The Eternal Companion, *பக்கம் 244.*

திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவதும் மூன்றாவது படியாகும். ஒரு வடிவத்தின் துணையுடன் வெளிப்புற வழிபாடு செய்வது தாழ்ந்தது ஆகும்.[1]

மற்றொரு சுலோகம் இவ்விதம் கூறுகிறது.

'விக்கிரக ஆராதனை செய்வது முதல்படியாகும். கடவுளுடைய திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுவதும், அவருடைய தெய்வீக சிறப்புக்களைப் பாடுவதும் இதை விடச் சிறந்ததாகும். தியானம் அல்லது கடவுளைக் குறித்த ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு இருப்பது இன்னும் மேலானதாகும். இறுதியான மற்றும் மிகமிக உயர்ந்த நிலையானது 'நானே அவன் (கடவுள்)' என்று உணர்வதாகும்.[2]

மற்றுமொரு சுலோகம் இவ்விதம் கூறுகிறது.

'சடங்குகளைச் செய்யும் இருபிறப்பாளர்கள் நெருப்பிலே கடவுளை வழிபடுகின்றனர். தியானம் செய்பவர்கள் கடவுளை உள்ளே குடிகொண்டுள்ளவராகப் போற்றுகின்றனர். மந்தபுத்தி உடையவன் கடவுளை ஒரு விக்கிரகத்தின் உதவியுடன் வழிபடுகிறான். ஒரேபடித்தான நுண்ணோக்குடைய ஞானிகள் அவனை எல்லா இடங்களிலும் காண்கின்றனர்.[3]

முன்னேற்றமடைந்தவர்கள், வெளிப்புறச் சின்னத்தைக் குறித்து கவலை கொள்வதில்லை. அவர்கள் கடவுளை எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவராகவும், அவர்களுடைய இதயங்களில் குடிகொண்டு உள்ளவராகவும் தியானம் செய்கின்றனர். பொதுப்படையாகப் புரிந்து கொண்டவர்கள் அவர்களுடைய ஆன்மீக வாழ்வை,

---

1. உத்தமோ ப்ரஹ்மஸத்பாவோ த்யானபாவஸ்து மத்யம:
ஸ்துதிர்ஜபோஙதமோபாவோ பஹி: பூஜாதமாதமா ॥
—மஹாநிர்வாண தந்திரம், 14.122.

2. ப்ரதமா ப்ரதிமா பூஜா ஜபஸ்தோத்ராதி மத்யமா ।
உத்தமா மானஸீ பூஜா ஸோஹம் பூஜோத்தமோத்தமா ॥
—தந்திரஸாரம்.

3. உத்தர கீதை, 3.7.

கடவுளை ஒரு விக்கிரகத்தின் உதவியுடன் வழிபடுபவதில் தொடங்குகிறார்கள். அந்த விக்கிரகம் அவர்களுடைய நம்பிக்கையைத் தொங்கவிடும் ஒரு கொக்கியைப் போன்றது ஆகும். ஞானமடைந்தவர்களுக்கு எத்தகைய சின்னங்களின் தேவையும் இல்லை. அவர்கள் பரம்பொருளை அகம், புறம் என்னும் இரண்டிலும் அடையாளம் கண்டு கொள்கின்றனர். ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் நிறைந்து இருப்ப வராகவும் எல்லாவற்றையும் கடந்துள்ளவராகவும் உணர்கின்றனர்.

ஒருவர் பரம் பொருளுடன் இரண்டறக் கலப்பதுதான் இரண்டாவது அல்லாத ஒருமையுடன் இணைவதுதான் அத்வைத ஆன்மீகப் பயிற்சியின் இலட்சியமாகும். புலன் களால் அறியத்தக்க, எப்பொழுதும் மாறுபட்டுக் கொண்டு இருக்கும் அண்டத்தின் எத்தகைய மாறுதலுமற்ற அடிப் படைத் தத்துவத்தை, மூலாதாரமான பரம்பொருளைக் கண்டு கொள்வதில் ஒருவருடைய எண்ணங்களையும் அனுபவங் களையும் பகுத்து ஆராய்ந்து அறிவதில் சமரசத்திற்கு இடமளிக்காமல் இருப்பதன் மூலமே இந்த நிலையானது அடையப்படுகிறது. இந்த வழி முறையைப் பின்பற்றுபவன், முழுமையான தூய்மைப்பாடில் நிலைத்து இருப்பதால், ஆன்மாவை வரையறைக்கு உட்படுத்தும் எல்லா இணைப்பு களையும் மறுக்கிறான். மற்றும் அதன்மூலம் இறுதியான உண்மையை அடைகிறான். நிதித்யாசனம் என்று கூறப்படும் இந்த முறையானது ஒருவகையான விலகிச் செல்வது ஆகும் அல்லது ஒருவருடைய இருப்பின் ஆழங்களில் ஆராய்வு செய்வதாகும்.

தனிப்பட்ட ஆன்மாவும், உலகளாவிய ஆன்மாவும் இரண்டறக் கலக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் தகுதி யில் சிறிதளவு குறைந்துள்ள சாதகன் அஹம்க்ரஹ உபாசனை என்னும் வழிபாட்டு முறையை மேற்கொள்ளலாம். இந்த முறையில், வழிபடுபவன், தன்னை, அவன் வழிபடும் பொருளுடன் கடவுள் அல்லது பிரம்மன் அல்லது ஏதாவது குறிப்பிட்ட கடவுளுடன் அடையாளம் கண்டுகொண்டு

தன்னுடைய ஆன்மாவின் மீதே தியானம் செய்கிறான். வழிபடுபவனுக்கும், வழிபடுபொருளுக்கும் இடையிலுள்ள தனித்துவத்தில் தியானம் செய்வது முழுமுதற் கடவுளை இரண்டாவது அல்லாத ஒருமையை அடைவதற்கு வழிகாட்டி யாக உள்ளது.

சின்னங்களின் மூலம் வழிபடுதல்

இந்த வழிமுறையும் கஷ்டமானது என்று கண்டுகொள்ப வர்களுக்கு, ப்ரதீக உபாசனை அல்லது வேறு சில பொருத்த மான சின்னத்தின் உதவியுடன் வழிபடும் முறையானது வகுத்துரைக்கப்பட்டுள்ளது. கடவுள் ஒரு சின்னமாக வழி படப்படவில்லை. ஆனால் சின்னத்தின் மூலம் வழிபடப் படுகிறார். வரையறைக்கு உட்பட்ட சின்னத்தில், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள, வடிவங்கள், நாமங்கள் என்னும் எல்லா வகையான வரையறைகளையும் கடந்துள்ள கடவுளின் இருப்பை அடையாளம் கண்டுகொள்வதுதான் இதன் நோக்கமாகும். சுவாமி விவேகானந்தர் குறிப்பிடு வதைப்போல,

‘எங்கு பிரம்மமே வழிபடு பொருளாக இருந்து, பிரதீகம் அதை நினைவுகூர்வதற்கான ஒரு சின்னமாக மட்டுமே இருக்கிறதோ, அதாவது எல்லாவற்றிற்கும் மூலகாரணமான பிரம்மம் பிரதீகத்தின் மூலமாக வழிபடப்படுகிறதோ, அந்த வழிபாடு நிச்சயமாகப் பலன் தருகிறது.’[1] பிரதீகமானது, வழிபடுபவனின் மனம், அறிவு அல்லது ஆன்மாவைப் போன்று உள்ளே இருக்கலாம். அல்லது சூரியன், ஆகாசம், நெருப்பு, ஓம் போன்றவற்றைப் போல வெளியிலேயும் இருக்கலாம். சரியாக, முறையாகச் செய்யப்படும் தியானத்தி னால் அதே பரம்பொருளானது இறுதியாக, எல்லா இடங் களிலும் ஊடுருவி நிறைந்துள்ள மற்றும் அதன் இருப்பின் அகம், புறம் என்னும் மட்டங்களுக்கு அப்பாற்பட்டதாகவும் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது.

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 1.440.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சின்னங்களால் வழிபடு வதையும் அருவமானது அல்லது சூட்சுமமானது என்று உணர்பவர்கள், ஒரு பிரதிமை அல்லது மனிதப் பண்புகள் ஏற்றப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தித் தொடங்கலாம். ஆனால் இங்கும் அந்த வடிவமானது ஈஸ்வரனின் அல்லது பரம்பொருளின் சின்னமாகத்தான் வழிபடப்படுகிறது என் பதைத் தெளிவுடன் புரிந்துகொள்ள வேண்டும். சுவாமி விவேகானந்தர் கூறுவதைப்போல,

'மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் உருவ வழிபாட்டிற்கும் பொருந்தும். திருவுருவம் ஒரு தேவதைக் காகவோ, மகானுக்காகவோ இருக்குமாயின் அந்த வழிபாடு பக்தியையும் தராது, முக்திக்கும் அழைத்துச் செல்லாது. அது ஒரே கடவுளுக்காக அமையுமாயின் அது பக்தி, முக்தி இரண்டையுமே தரும்.[1]

இந்தியாவில் ஆண்டிற்கு ஒருமுறை வழிபடப்படும் துர்கா பூஜை அல்லது கணேச பூஜைக்கான திருவுருவங்கள் களிமண்ணால் செய்யப்படுகின்றன. அந்த திருவுருவங்களை ஆற்றிலோ அல்லது ஏரியிலோ மூழ்கடிக்கப்படுவதுடன் விழாக்கள் முடிவடைகின்றன. ஒருமுறை, தட்சிணேசுவரத் தில், காளிக்கு மிகப் பெரிய கோயிலைக்கட்டியிருந்த இராணி இராசமணியின் மருமகனாரான மாதூர் அவர்களுக்கு, அந்த ஆண்டின் துர்கா பூஜை முடிந்த பிறகு அந்த திருவுருவத்தை விட்டுப் பிரிவது மிகவும் கஷ்டமானதாக இருந்தது. அவர் மிகவும் உயர்ந்த பக்தியுடன் பல நாட்களுக்கு வழிபட்டு வந்த திருவுருவமானது ஆற்றிலே எறியப்பட்டு விடும் என்று எண்ணும் பொழுதே அவர் இதயம் பிளவுபட்டது. அந்தத் திருவுருவத்தை யாரும் நகர்த்தக் கூடாது என்று ஆணை பிறப்பித்து, எரிச்சலுற்ற சிறுவனைப் போல இருந்தார். அவ ருடைய உறவினர்களும், பணித்துறையைச் சேர்ந்தவர்களும் உதவிக்காக ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஓடினர். ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கு வந்து மாதூரிடம், 'அன்னை திருவுருவத்தில் மட்டும்

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 1.441.

இருக்கிறாளா? அவள் நிலைத்து வாழும் இடமான உன் இதயத்தில் நீ ஏன் அவளைப் பிரதிஷ்டை செய்து கொண்டு, அந்த திருவுருவத்தைத் தூக்கி எறியக் கூடாது?' என்று கேட்டார். தெய்வீக அன்னை, சாசுவதமாக அவர் இதயத்தில் குடிகொண்டு உள்ளாள் என்னும் எண்ணம் அவரிடம் தோன்றியவுடனே அவர் உடனடியாக இயல்பான நிலையை அடைந்தார். மற்றும் நீரிலே மூழ்கும்படிச் செய்யும் சடங்குகள் சரியான முறையில் நடைபெற்றன.[1] இந்த எளிமையான நிகழ்ச்சி ஹிந்துக்கள் திருவுருவங்களை வழி படும் போக்கை வெளிப்படுத்துகிறது.

கடவுள் ஒருவர்தான். ஆனால் அவருக்குப் பலவகைப் பட்ட தன்மைகள் உள்ளன. நம்மால் அவருடைய முழுமைத் தன்மையையும், பெருஞ்சிறப்புக்கள் அனைத்தையும் வழி பட இயலாமல் இருப்பதால் நாம் கடவுளின் ஏதாவது ஒரு தன்மையை வழிபாட்டிற்கு எடுத்துக் கொள்கிறோம். ஆனால் அவருடைய தனிப்பட்ட தன்மைகளான சிவன் அல்லது விஷ்ணு அல்லது தெய்வீக ஆற்றல்களின் மூலம் நாம் அவரை அணுகுவதற்கும், நமக்குப் பலவகையான சின்னங்களின் உதவி தேவைப்படுகிறது. பருப்பொருள் சார்ந்த, சொல் சார்ந்த, மனம் சார்ந்த சின்னங்களின் உதவி தேவைப்படு கிறது. அவற்றைத் தனியாகவும் எடுத்துக் கொள்ளலாம். சேர்த்தும் எடுத்துக் கொள்ளலாம். சின்னமானது முழுமுதற் பொருள் ஆகாது. அது கடவுளைக் கருத்துக்களின் தொடர் புடன் நினைவு கொள்வதற்கான ஒரு வழியாகும்.

ஆன்மீக வாழ்க்கையில் அனுபவம் அற்றவர் அல்லது புதிதாக மேற்கொள்ள இருப்பவர், பருப்பொருள் சார்ந்த சின்னங்களைக் கடவுளின் திருவுருவத்தையோ அல்லது ஒரு யந்திரத்தின் உதவியையோ எடுத்துக் கொள்ளலாம். அவன் வளர்ச்சியடையும்பொழுது, பருப்பொருள் சார்ந்த சின்னங் களின் உதவியை விடுத்து, தெய்வீக எண்ணத்தைக்

---

1. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், 2.196.

கொண்டுவருவதற்கு ஒரு அடையாளத்தைப் பயன்படுத் தலாம். மேலும் முன்னேறி அவன் பருப்பொருள் மற்றும் ஒலி சார்ந்த சின்னங்களை விடுத்து எண்ண மட்டத்தில் அமைதியாகவும், ஆரவாரமற்றும் வேறு எந்தத் தொடர்பு மின்றி மானசீக வழிபாட்டை மேற்கொள்ளலாம். கடவுளைப் பற்றி எண்ணும் பொழுதே, அவனால் அவனுடைய அற்ப மான 'நான்' என்பதை இழக்க இயலுமாயின் உப்பு பொம்மை யைப்போல, வரையறையற்ற பரிபூரணம் என்னும் கடலில் அவனை இழக்க இயலுமாயின் அவன் மேலே விவரிக்கப் பட்டுள்ள முறையையும் விட்டுவிடலாம். பரிபூரணம் என்னும் கடலில் அவன் அவனை இழக்கும் பொழுது வழி படுபவனுக்கும் வழிபடும் பொருளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு முழுவதுமாக மறைந்துவிடுகிறது.

நம்முடைய தொலைநோக்கானது வரையறைக்கு உட் பட்டது ஆகும். மற்றும் நாம் பார்க்கும் அனைத்துமே இந்த வரையறையால் வண்ணம் பூசப்பட்டுள்ளது. நாம் காண்பது உண்மையில் ஒளியல்ல. பிரதிபலிப்பை மட்டும் காண் கிறோம். அதையும் ஒரு குறிப்பிட்ட அளவு எல்லைக்கு உட் பட்டே காண்கிறோம். நம்முடைய புரிந்து கொள்ளும் தன்மையும் எல்லைக்கு உட்படுத்தப்பட்டதாகவே விளங்கு கிறது. நம்மால் முழுமுதற் பொருளை நேரடியாக உணர இயலாது. நாம் என்ன செய்து கொண்டு இருக்கிறோமோ, அது நமது மனத்தை வரையறைக்கு உட்படுத்தும் இணைப்புக் களின் வழியாக, சங்கரர் கூறும் கால தேச நிமித்தத்தின் வழி யாக ஆகும். ஒவ்வொரு புலனுணர்வும் நம் மனத்தாலும் அதன் அலைகளாலும் அதன் உருவங்களாலும் வண்ண மடிக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின், நாம் சின்னங்களின் செயல் எல்லையில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறோம். அது உண்மையைச் சுட்டுகிறது. அதே நேரத்தில் அதை மறைக்கிறது.

எப்படி இருப்பினும், உண்மையான சின்னங்கள், பொய் யான சின்னங்கள் என்று கணக்கற்ற சின்னங்கள் உள்ளன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். கானல் நீருக்குத் தண்ணீரின் தோற்றம் உள்ளது. ஆனால் அது ஒரு

உண்மையற்ற இயற்காட்சியாகும். அதற்கும் தண்ணீருக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. ஆனால் அலையானது கடலின் உண்மையான சின்னம் என்று அடையாளம் கண்டு கொள்ளப்படலாம். ஏனெனில் அது அதிலிருந்து தோற்ற மடைகிறது. அதனுடன் தொடர்பு கொண்டுள்ளது. மற்றும் அதிலேயே கலந்து விடுகிறது. பெருங்கடலைப்போல அது வும் அதே பொருளால் உருவாக்கப்பட்டுள்ளது— நீர்.

மேலும், கீழான மற்றும் மேம்பட்ட சின்னங்கள் உள்ளன. ஒரு சொல்லின் எழுத்துக்கள் எல்லாம் ஒரு பெயரின் ஒலிச் சின்னங்கள் ஆகும். அது அதனுடைய முறையில், மனத்தில் தோன்றும் உருவத்தின் சின்னமாகிறது. அந்த உருவமே, சிந்திக்கும் முறையின் சின்னமாக விளங்குகிறது. எண்ணமும் உண்மையைக் குறித்த சின்னமாகிறது. அது அதனை வெளிப்படுத்த முயற்சி செய்கிறது. ஆனால் அதை மேலே குறிப்பிடப்படுள்ள எதிர்மறையான வழியால் மட் டுமே அவ்விதம் செய்ய இயலும். உண்மைக்கும், அதனைத் தெரிவிப்பதற்கும் இடையில் பல குறியீடாக அமைந்த வழிமுறைகள் குறுக்கிடுகின்றன. இந்த ஆழமான புதிரானது இந்தியாவில் மிகப் பல்லாண்டுகளுக்கு முன்பே புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. அதனால்தான் இந்தியாவில் பல வகைப்பட்ட குறியீட்டுருவான வழிபாடுகள் பொறுத்துக் கொள்ளப்பட்டன. மற்றும் பேணி வளர்த்து உருவாக்கப் பட்டன. ஞானம் எய்தியவர்கள் இடையில் குறுக்கிடும் எல்லா சாதனங்களையும் அகற்றிக்கொண்டு உண்மையின் சாரத்திற்குள் ஊடுருவிச் சென்று அவர்களுடைய அடிச் சுவடுகளைச் சிறிதே குறைந்த தகுதியுள்ள சாதகர்கள் பின் பற்ற வேண்டும் என்பதற்காகத் தடங்களை விட்டுச் சென்றுள்ளனர்.

ஹிந்து சமயத்தில் சின்னங்கள் மற்றும் தெய்வீக அவ தாரங்களை வழிபடும் பரப்பு எல்லை மிகவும் விரிந்ததாகும். எனவே இங்கு நாம் பயன்படுத்தப்படும் சில சின்னங்களை மற்றும் வேதகாலத்திலிருந்து இன்றுவரை வழிபடுவதிலும் தியானிப்பதிலும் பூஜிக்கப்படுபவர்களையும், கடவுளை

ஏதாவது ஒரு தன்மையில் உணர்வதைக் கருத்தில் கொண்டு விவாதிப்போம்.

ஹிந்து சமயத்தின் சில சின்னங்கள்

சிவன் இலிங்க உருவச் சிலையில் அல்லது இலிங்க வடிவத்தில் வழிபடப்படுகிறார். அதனுடைய மூலக் குறிப்பு எதுவாக இருப்பினும், சிவனை வழிபடுபவர்களின் மனங் களில் படைப்பாற்றல் தொடர்பை நினைவுபடுத்துவதே இல்லை. அவர்களுக்கு இலிங்கம் என்பது மனித வடிவம் கற்பிக்கப்படாத, மனித-விலங்கு உருவம் கற்பிக்கப்படாத பரம்பொருளின் ஒரு சின்னமாகும். அது வடிவங்களாக வெளிப்பட்டிருப்பினும், அவ்வனைத்தையும் கடந்து நிற் கிறது. தந்திர வழிபாட்டு முறையைச் சேர்ந்த பக்தன் இலிங்கத்தைத் தெய்வீக ஆண்-பெண்ணின் படைப்பாற்றல் சின்னமாகக் கருத்தில் கொள்கிறான். சாளக்கிராமம், என்பது மற்றொரு மனித வடிவம் கற்பிக்கப்படாத, விஷ்ணுவிடம் தொடர்புபடுத்தப்படும் ஒரு சின்னமாகும். அவர் பெரும் பாலும் நான்கு திருக்கரங்கள் உள்ள வடிவத்தில் வழிபடப் படுகிறார். சங்கு, சக்கரம், கதை மற்றும் தாமரையைத் தாங்கியவாறு உள்ள உருவில் வழிபடப்படுகிறார். அல்லது அவருடைய தெய்வத்திரு அவதாரங்களான இராமர், கிருஷ்ணர் போன்ற வடிவங்களில் வழிபடப்படுகிறார். தந்திர வழிபாட்டு முறையைப் பின்பற்றுவோரும் மற்றும் மற்றவர் களும் சில சமயங்களில் கடவுளை பரம்பொருளின் மறை யாற்றல் உடைய உடலைக் குறிக்கும் இயந்திரங்களின் மூலம் வழிபடுகிறார்கள். சில சமயங்களில் மூன்று அளவைக் கூறுகள் உள்ள விக்கிரகத்தில் கடவுளை எழுப்புவதற்குப் பதிலாக இரு அளவைக் கூறுகள் உள்ள படமும் சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது. மறை ஆற்றல் வழிபாட்டின் பல வகைகளில் ஒரு நீர் நிறைந்த குடம் பயன்படுத்தப்படுகிறது. தனியாகவோ அல்லது மற்ற உருவங்களுடன் சேர்ந்தோ, உருவமற்ற எல்லா இடங்களிலும் ஊடுருவி உள்ள உருவ மாகப் பரம் பொருளைக் குறிக்கிறது. நெருப்பு, மற்ற

உருவங்களின் இடத்தை எடுத்துக் கொள்ளலாம். ஏற்றப்பட்டுள்ள நெருப்பு, கடவுளின் உடலாகக் கருதப்படுகிறது. மற்றும் அதற்குப் படையல் அர்ப்பித்து வணங்கப்படுகிறது.

இன்னும் பண்பட்ட வழிபாட்டு முறைகளில், ஓம் என்பது போன்ற மந்திரமோ அல்லது தெய்வீக திருநாமமோ சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது. மந்திரம் என்பதற்கு, 'ஒலி அடையாளமாக உள்ளது. அதை மீண்டும் மீண்டும் கூறிப் பிரதிபலித்தால் ஆன்மாவைப் பிணைப்புக்களிலிருந்து விடுவிக்கிறது' என்பது நேரடியான பொருளாகும்.[1]

ஒலி அடையாளமாக ஓம் என்பது, வேறுபடுத்தப்படாத (அகண்ட) பிரம்மனைக் குறிப்பிடுகிறது. மற்ற மந்திரங்களும் அல்லது பெயர்களும் அதே பரம்பொருளின் வேறுபடுத்திக் காட்டப்படும் தன்மைகளைக் குறிப்பிடுகிறது. தாந்திரீக வழிபாட்டு முறையில் பல தெய்வங்களுக்கு குறிப்பிட்ட பீஜ மந்திரங்கள் வகுத்து அமைக்கப்பட்டுள்ளன. வேறுவகைப் பட்ட தாந்திரிக தெய்வங்களுக்கு முக்கியமான பீஜமந்திரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவைகளுக்குப் பொருத்தமான தெய்வீக உருவங்களை அல்லது வெளிப்பாடுகளைத் தியானம் செய்யும் பக்தனின் முன்பு தோன்றச் செய்யும் அல்லது தோற்றுவிக்கும் சக்தி இருக்கிறது என்று கருதப்படுகிறது.

புனிதமான திருநாமங்கள் தெய்வீக சக்தியின் ஒலி வெளிப்பாடுகள் ஆகும். அது ஜபம் அல்லது திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறுதல் மற்றும் அதனுடைய பொருளின் மீது தியானம் செய்வதால் எழுப்பப்படுகிறது. ஸ்ரீசைதன்யர் 'உனக்குப் பல வகையான திருநாமங்கள் உள்ளன. ஓ கடவுளே மற்றும் அது ஒவ்வொன்றிலும் நீ உன்னுடைய முழுமையான சக்தியைப் பாய்ச்சுகிறாய்'[2] என்று கூறியுள்ளார். கடவுளின் பல திருநாமங்கள் அவருடைய பல வகையான தன்மைகளைக் குறிப்பிடுகின்றன. ஜபத்தின்மூலம்

1. மனனாத் த்ராயதே இதி மந்த்ர: ।
2. நாம்னாமகாரி பஹுதா நிஜஸர்வசக்திஸ்தத்ரார்ப்பிதா ।
—சிக்ஷாஷ்டகம், 2.

அவற்றை உணரலாம். அதே கடவுளுக்குப் பலவகையான தன்மைகளுடன் கூடிய திருநாமங்களை பயன்படுத்தும் முறையானது வேதகாலத்திலிருந்து நடைமுறையில் இருக்கிறது.

நாம் ஒரு ஏசுநாதர், ஒரு சைதன்யர் அல்லது ஒரு இராம கிருஷ்ணரின் வாழ்க்கையை ஆராய்ந்து காணும்பொழுது அவர்கள் அனைவருக்குமே கடவுள்தான் மிகப் பெரிய உண்மையாக விளங்கியதை அறிந்து கொள்கிறோம். அவர் களுடைய வாழ்க்கைகளில் கடவுள்தான் மையப் பொருளாக விளங்கினார். மற்றும் மற்ற அனைத்தும் அதற்கு அடுத்தபடி யாகவே விளங்கின. நீ எந்த ஒரு சின்னத்தையும் எடுத்துக் கொள்ளலாம். மற்றும் கடவுளுடன் எந்த வகையில் வேண்டு மானாலும் தொடர்பு கொள்ளலாம். நீ கடவுளை உன்னுடைய தந்தையாக, தாயாக, குழந்தையாக, நண்பனாக, அன்பிற்கு உரியவராகக் கருதலாம். ஆனால் எப்பொழுதும் கடவுளை நீ மிகவும் அருகில் இருப்பவராகவும் மிகவும் விருப்பப்பட்ட வராகவும் வைத்துக்கொள்ள வேண்டும். கீழே கொடுக்கப் பட்டுள்ள, பலராலும் அறியப்பட்ட பாடலில் விவரிக்கப் பட்டுள்ள அன்பின் தீவிரம் மிகவும் முக்கியமானதாகும்.

'ஓ ஒப்புயர்வற்ற கடவுளே, நீ என் தந்தை, நீ என் தாய்.
நீ என் உறவினர் மற்றும் நண்பன்
நீ என்னுடைய அறிவு மற்றும் செல்வம்
நீயே எனக்கு எல்லாமுமாவாய்'[1]

வழிபாட்டின்மூலம் ஆன்மீக முன்னேற்றம்

ஆன்மீகத்தில் போதுமான அளவு வளர்ச்சி அடைவதற்கு முன்பே சிலர் சமய வழிபாடுகள் செய்வதைத் துறந்து விடுகின்றனர். இது மிகவும் தவறானது ஆகும். விக்கிரக

---

1. த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ பந்துச்ச ஸகா த்வமேவ ॥
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தேவ தேவ ॥
—பிரபன்ன கீதை, 28.

ஆராதனை செய்பவர்களை ஒருபொழுதும் குறைகூறுதல் கூடாது. விக்கிரக ஆராதனை செய்வதில் மிகப் பெரிய உண்மை உள்ளது. பிராடஸ்டன்ட் கிறிஸ்தவ சமயத்தினர் அதை மறுப்பது முற்றிலும் தவறானது ஆகும். அவர்களுக்கு ஆன்மீக மரபுகள் குறித்தும், ஆன்மீக வாழ்க்கையைத் குறித்தும் எதுவும் தெரியாது. புனிதமான விக்கிரகத்தில் அகம் குறித்த வெளிப்பாடுகள் மட்டுமின்றி, புறம் சார்ந்த வெளிப் பாடுகளும் உள்ளன. இந்தக் கருத்தானது உரோமன் கத்தோலிக்கர்களின் உருவ வழிபாட்டு முறையின் பின்னணி யில் உள்ளது. நூற்றாண்டுகளின் ஓட்டத்தில், இறைமை இயல் வல்லுனர்களின் கைகளில் இவை உருச்சிதைந்து விட்டன. நம்மில் பெரும்பாலானவர்களுக்கு, நாம் உண்மை யாகவே வளர விரும்பினால், உடல் சார்ந்தோ அல்லது மனம் சார்ந்தோ ஏதாவது ஒரு வடிவத்தை வழிபடுவது முற்றிலும் அவசியமானதாகும். சிந்தனை அளவில் மட்டும் இருத்தல் கூடாது.

ஆனால், நம் வாழ்நாள் முழுவதும் உருவங்களை மட்டுமே வழிபட்டுக் கொண்டு இருப்பதை உணர்ந்தால், கவலை தரத்தக்க தவறு உள்ளது என்பது பொருளாகும். நம் சாதனையின் பயனாக நாம் ஏதாவது ஆன்மீக வளர்ச்சியை அடைந்து கொண்டு இருக்கிறோமா அல்லது இல்லையா என்று நாம் எப்பொழுதும் அறிந்துகொள்ள வேண்டும். தொடக்க நிலையில், புற வழிபாட்டுமுறை பயன்தரத்தக்க தாக இருக்கலாம். சில மனிதர்கள் சிறந்த முறையில் சடங்கு செய்பவர்களாக இருப்பார்கள். மற்றும் அதில் பெரிய மகிழ்ச்சியையும் அடைவார்கள். ஆனால் நாம் வாழ்நாள் முழுவதையும் புறவழிபாடு செய்வதிலேயே கழித்துக் கொண்டு இருத்தல் கூடாது. புற வழிபாடானது நம்மை எப் பொழுதாவது அகவழிபாட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாம் கஸ்தூரி மானைப் போல இருத்தல் கூடாது. அந்த மானிற்கு அதன் கொப்பூழிலேயே கஸ்தூரி நறுமணம் உள்ளது. ஆனால் அந்த இனிய நறுமணத்தின் மூலத்தைக் கண்டு கொள்வதற்கு அது இங்குமங்கும் ஓடுகிறது.

இறுதியில் கீழே விழுந்து இறந்து விடுகிறது. அதைப் போன்றே நாம் நாடும் கடவுளானவர் சாசுவதமாக நம் முடைய இதயங்களிலேயே குடிகொண்டு உள்ளார். ஆனால் நாம் அவரை வெளியில் காண விரும்புகிறோம்.

நாம் எப்பொழுதும் நமக்குச் சொந்தமான தெய்வத் தையோ அல்லது தெய்வங்களையோ தோற்றுவித்துக் கொண்டு இருக்கிறோம். நாம் மஹாதேவக் கடவுளின் உரு வத்தைத் தோற்றுவிக்க முயற்சி செய்கிறோம். ஆனால் அது அழகற்ற குரங்கைப்போல ஆகி விடுகிறது. நமக்குச் சரியான கருத்து எது என்று அறியாமல் இருந்தால் மற்றும் வாழ்க்கை யில் அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதையும் அறியாமல் இருந்தால் எல்லாமே அழகற்ற குரங்காகி விடு கின்றன. அதுதான் ஆபத்து ஆகும்.

'முக்தியை அடைய விரும்புகிறவனுக்கு உருவவழிபாடு தடையாக உள்ளது. மற்றும் மறுபிறவியையும் தோற்றுவிக் கிறது. துறவை நாடுபவன் அவன் இதயத்தில் குடிகொண் டுள்ள கடவுளையே வழிபட வேண்டும். அவன் புற வழி பாடுகள் அனைத்தையும் விட்டுவிட வேண்டும்.[1]

இது முன்னேற்றமடைந்துள்ள ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகர்களுக்கு உரியதாகும். அனைவரும் உருவ வழிபாடு செய்வதை விட்டுவிட்டு நேரடியாக நிர்குண தியானத்தைத் தொடங்க வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. கடவுளை ஒருவருடைய ஆன்மாவிலும் ஒரு வருடைய இதயத்தின் ஆழத்திலும் நாட வேண்டும் என்பது தான் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆன்மீக வாழ்க்கை என்பது படிக்கட்டுகளைப் போன்றதாகும். நாம் ஒவ்வொரு படியாக முன்னேற வேண்டும். முதலில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். இல்லையெனில் முன்னேற இயலாது. நாம் கோயிலிற்குச் செல்லுதல் போன்ற புறவழிபாட்டு முறைகளில் தொடங்க வேண்டும். ஆனால் நாம் மேலும் மேலும் உள்முக

1. மைத்ரேயீ உபநிஷதம், 2.26.

நோக்குடன் கூடியவர்களாகப் பரம்பொருளை அவருடைய உண்மையான இருப்பிடத்தில் நம் ஆன்மாக்களில் நாட வேண்டும்.

உடல், கடவுளின் கோயிலாகும்

'நம்முடைய இவ்வுடலானது கடவுளின் கோயில் ஆகும்' என்று ஒரு சிறிய உபநிஷதம் கூறுகிறது.[1] கடோபநிஷதம் இந்தக் கருத்தை ஒரு அழகான உவமையுடன் விளக்குகிறது. 'உன் ஆன்மாவானது தேரில் பயணம் செய்பவர் ஆகும். உன் உடல் தேர் ஆகும்'.[2] கடவுளை நெருப்பு, தண்ணீர் போன்ற மூலக் கூறுகளிலும் செடிகள், விலங்குகள் அல்லது களிமண், கல் மற்றும் உலோக உருவங்களிலும் வழிபடுவதற்குப் பதிலாக நாம் அவரை மனித உடல் என்னும் உருவை, அதை ஒரு கோயிலாகவோ அல்லது தேராகவோ அல்லது கடவுள் உறையும் ஒரு வீடாகவோ கருதி வழிபடலாம். அவர் நம் முடைய அனைவரின் இதயங்களிலும் குடிகொண்டு ஒளிர்ந்து கொண்டிருக்கிறார். எங்கும் ஊடுருவி நிறைந்துள்ள கடவுளை மனித உடலில் வழிபடுவதின்மூலம் நாம் அவரை பேரள விளதாகிய முழுமையிலும் உணரத் தொடங்குகிறோம். பிண்டமானது (உடல்) அண்டத்தின் சிறிய உரு ஆகும்.

ஆனால் முழுமுதற் கடவுளுக்குப் பதிலாக சின்னம் அல்லது வடிவம் அல்லது தனித்தன்மையானது மிகவும் முக்கியத்துவம் பெற்றுவிட்டால் வழிபாடானது அதனுடைய புனிதமான மதிப்பை இழந்து விடுகிறது. எனவே நம் வழி பாடு மற்றும் பிரார்த்தனையின்மூலம் பயன் அடைவதற்காக, நாம் சரியான மனநிலையையும், போக்கையும் பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும். அது இல்லாமல் ஆன்மீக வளர்ச்சி ஏற்பட இயலாது. ஆனால், சரியான மனநிலையை எப்படி ஏற்படுத்திக் கொள்வது? தந்திரத்துறையைச் சார்ந்த

---

1. தேஹோ தேவாலய: ।

—மைத்ரேயீ உபநிஷதம், 2.1.

2. ஆத்மானம் ரதினம் வித்தி சரீரம் ரதமேவ து ।

—கட உபநிஷதம், 1.3.3.

நூல்கள், நம்முடைய எண்ணங்களின் கீழ் மட்டங்களைக் கட்டுப்படுத்தினால் இதைச் செய்ய இயலும் என்று சுட்டிக் காட்டுகின்றன. நம்மிடமுள்ள ஆன்மீகத் தொடர்பான சாத்தியக் கூறுகளைப் படிப்படியாக உணர்வதின் மூலம் செய்ய இயலும். வெவ்வேறு மட்டங்களைச் சார்ந்த சிந்தனைகள், முதுகுத்தண்டில் உள்ள ஆறு சக்கரங்களுடனும் மூளையிலுள்ள ஏழாவது சக்கரத்துடனும் தொடர்பு கொண்டுள்ளன. இதனைப் படிக்கட்டுகளால் இணைக்கப்பட்டுள்ள பல அடுக்குத் தளங்களை உடைய ஒரு கட்டிடத்திற்கு ஒப்பிடலாம். மையங்கள், நமக்கும் பல்வேறு மட்டங்களைச் சார்ந்த விழிப்புணர்வு நிலைக்கும் இடையிலுள்ள தொடர்பை ஏற்படுத்தும் புள்ளிகளே ஆகும்.

ஆன்மீகப் பயிற்சியின் பாதையானது, அதாவது விழிப் புணர்வை ஒரு மையத்திலிருந்து மற்றொரு மையத்திற்கும் மிக உயர்ந்த மட்டத்தைச் சார்ந்த விழிப்பு உணர்வு மையத் திற்கும் உயரச் செய்வது மிகவும் கஷ்டமானதாகும். ஆனால் தியான வழியைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொரு சாதகனும் முயற்சியின் குவிமையம் அல்லது விழிப்புணர்வு மையத்தை, இதயம் உள்ள பகுதியின் மையத்திற்காவது உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த மையத்தை ஒரு ‘அக ஆகாசத்திற்கும் ஒப்பிடலாம். சிலருக்கு அவர்களின் விழிப் புணர்வு மையமாக இதயத்தைச் செய்து கொள்வது சுலபமான தாக இருக்கிறது. மற்றும் வேறு சிலருக்கு நெற்றியை விழிப்புணர்வு மையமாகச் செய்து கொள்வது சுலபமானதாக உள்ளது.

எத்தகைய ஒரு குறிப்பிட்ட சின்னத்தை அல்லது உரு வத்தை நோக்கியோ ஈர்க்கப்படாதவர்கள் ஏதாவது ஒரு உயர்ந்த மையம் அல்லது விழிப்புணர்வு மட்டத்தில், ஒரு வருடைய இருப்பில் மட்டுமின்றி; அண்டத்தில் உள்ள மனிதர்கள் மற்றும் எல்லாப் பொருட்களையும் ஊடுருவி நிற்கும் தெய்வீக ஒளியைத் தியானிக்கலாம். எப்படி இருப்பினும், ஏதாவது ஒரு வடிவமற்ற தியானம் செய்ய இயலாத சாதகன், சுடரும் ஒளி வடிவத்தில் தியானத்தை

மேற்கொள்ளலாம். அது இறுதியாக உருவமற்ற ஒளிரும் தன்மையையே தியானிப்பதற்கு வழிகாட்டிவிடுகிறது.

ஆன்மாவானது ஒரு காரண தொடர்புடைய உடலால் மறைக்கப்பட்டுள்ளது. அது தன்னுடைய போக்கில் ஒரு மன உடலால் மறைக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு ஒரு இயற் பொருள் உடலால் மறைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று உடல் களும் காரண தொடர்புடைய மனஉடல், இயற் பொருள் சார்ந்த உடல் என்பவை கறைபடிந்தவை ஆகும். காரணத் தொடர்புடைய உடலானது தொடக்கத்திலிருந்தே உள்ள அறியாமையால் கறைபடுத்தப்பட்டுள்ளது. மன உடலானது நம்முடைய இயல்புகளாலும், உணர்ச்சிகளாலும் கறைபடுத்தப் பட்டுள்ளது. இயற்பொருள் சார்ந்த உடலும், மன உடலும் இசைவுத்தன்மையற்ற அகங்காரம் மற்றும் அதன் தன்னலம் மிக்க விருப்பங்களாலும் கறைபடுத்தப்பட்டுள்ளது. இசைவுத் தன்மையற்ற அகங்காரமானது மனத்தைச் சோர்வடையச் செய்கிறது. சோர்வடைந்த நிலையிலுள்ள மனம் புலன் களைப் பாதிக்கிறது. மற்றும் அவை இரண்டும் சேர்ந்து உடலின் இயக்கத்தைச் சீர்குலையச் செய்கின்றன. இந்த உண்மையானது ஒவ்வொரு நாளும் சமகாலத்திய மனோ தத்துவ வல்லுனர்களால் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. எப்படி இருப்பினும் இத்தகைய இசைவுத்தன்மை யற்ற நிலைக்கு ஒரு நிவாரணம் உள்ளது. இந்த அனைத் தையும் கண்ணுக்குப் புலனாகும் மற்றும் சூட்சுமமான உடல்களைச் சேர்த்து அவை எங்கிருந்து வந்தனவோ அந்த மூலாதாரத்திற்கே அழைத்துச் செல்ல வேண்டும். நாம், நாம் கடவுளில் வாழ்கிறோம். மற்றும் கடவுள் நம்மில் வாழ்கிறார் என்னும் ஒப்புயர்வற்ற உண்மையை மறந்து விடுகிறோம். நம்மையும் உட்கொண்ட எல்லாப் பொருட்களும் அடிப்படையான மெய்ம்மையுடன் இணைக்கப்பட வேண்டும்.

நமக்கு நம்மைப்பற்றியும் அல்லது நம் புலன்கள் எவ்விதம் செயலாற்றுகின்றன என்பது குறித்தும் மிகச் சிறிய

அளவே தெரியும். உதாரணமாக, நாம் கீழ்மட்டத்தில் வாழும் பொழுது, நம்முடைய உடல் சார்ந்த புலன்களுடன் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறோம். நாம் அதிக அளவில் ஆன்மீக விழிப்புணர்வை அடையும் பொழுது, நம்முடைய உயர்மட்ட விழிப்புணர்வு மையங்கள் வலிமையடைகின்றன. அதன்மூலம் அவை கீழ் மட்டத்தில் உள்ள மையங்களைக் கட்டுப்படுத்த இயலும். பலவகைப்பட்ட விழிப்புணர்வு மையங்கள் உள்ளன. தியானத்தின் மூலம் ஒருவர், கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்திற்கு தனித்த ஆன்மாவானது இயலுலக அண்ட உயிருடன் இணையும் வரை முன்னேறிச் செல்கிறார். இதற்கு மிகுந்த அளவில் பயிற்சி தேவைப்படுகிறது. ஆனால் மெதுவாக விழிப்புணர்வானது மேல் நோக்கி உயர்த்தப்படுகிறது. வழிகளைத் தெளிவாக வைத்துக் கொள்வதாலும் மற்றும் ஆர்வமுயற்சியாலும், நாம் முழுமுதற்பொருளை கணநேரத்திற்காவது காணும்வரை, நம்முடைய விழிப்புணர்வு நிலையின் மட்டமானது உயர்த்தப்படுகிறது. ஒரு கண நேரத்திற்கு நாம் பரம்பொருளுடன் பிரிக்க இயலா நிலையில் ஒன்றுபடுகிறோம். அப்பொழுது நாம் இனமறியப்படாத மெய்ப்பொருளானது நம்முள்ளே குடிகொண்டுள்ளது என்பதை அறிகிறோம். சாசுவதமாக உள்ள இருப்பையுடைய மெய்ப்பொருளை நம்மால் அகத்திலும், புறத்திலும் உணர இயலுமாயின், நாம் ஒரு புதிய சக்தியால் நிரப்பப்பட்டவர்கள் ஆகிறோம், நம்முடைய வாழ்க்கையின் பண்பு நலத்திலும் கடமை, கடப்பாட்டிலும் மாறுதல்கள் ஏற்படும். பிறரைக் குறித்த நம் மனப்பான்மை மற்றும் நம்மைக் குறித்த நம் மனப்பான்மை என்னும் இரண்டிலும் வேறுபாடு காணப்படும்.

நம்மிடையே மிகச் சிலர் மட்டுமே, இந்த முறையில், வேறு எதனையும் சாராமல், ஆர்வ முயற்சியின் பயிற்சியால் இத்தகைய மேம்பட்ட விழிப்பு உணர்வு நிலையை அடைய இயலும். அதன்மூலம் அகங்காரத்திலிருந்து விடுபடலாம். அல்லது புலன்களைக் கடந்தநிலைக்குச் செல்ல இயலும். ஆனால் எங்கும் நீக்கமற நிலைந்திலங்கும்

பரம்பொருளை நம்மால் ஜபம் மற்றும் தியானத்தினால் அடைய இயலும்.

ஆன்மீக வழிபாட்டின் மிகச் சிறந்த முறை— ஜபம்

வழிபாடு, உடல் சார்ந்து, மனம் சார்ந்து, சொல் சார்ந்து மூன்று வகைகளில் செய்யப்படுகிறது. அதாவது புற வழி பாடு, தியானம் மற்றும் போற்றுவதும், பிரார்த்தனை செய்வதுமாகும். இவைகளில் முதல்வகையானது, திருமறை நூல்கள் விவரித்துள்ள உரிமைக் கட்டளைகளான சமயச் சடங்குகளையும், ஆசாரங்களையும் உள்ளடக்கியது ஆகும். இது ஒரு சராசரி மனிதனின் வாழ்விலிருந்து பெரும்பாலும் அகன்றுவிட்டது. சமூக வாழ்வில் உள்ள அழுத்தமும், ஓய் வற்ற நிலையும் மற்றும் நவீன வாழ்க்கையின் மற்ற அனுகூல மற்ற நிலைகளும்தான் இதன் முக்கியக் காரணமாக விளங்கு கிறது. இந்த யுகத்தின் போக்குகளை உணர்ந்திருந்த புராணங் களை எழுதியவர்கள் மனம் சார்ந்த மற்றும் சொல் சார்ந்த வழிபாட்டைப் பெரிய அளவில் வற்புறுத்திக் கூறியுள்ளனர். இந்த இரண்டில் சொல் சார்ந்த வழிபாட்டைக் குறிப்பாக வலியுறுத்தியுள்ளார்.

சொல் சார்ந்த வழிபாடு என்பது, ஒரே ஒரு திருநாமத் தையோ அல்லது பல திருநாமங்களையோ மற்றும் கடவுளின் தனித்தன்மைகளையோ கூறுவது என்று பொருள்படுகிறது. முதலில் கூறப்பட்டிருப்பது ஜபம் என்று அழைக்கப்படு கிறது. அடுத்ததாகக் கூறி இருப்பது ஸ்தோத்திரம் அல்லது கீர்த்தனம் என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக இவ் விரண்டும் ஒருங்கிணைந்தே காணப்படும்.

மனு, 'உண்மையை நாடுபவன்', 'மிக உயர்ந்த இலட்சி யத்தை ஜபத்தின் மூலமே அடைகிறான்' என்று கூறியுள்ளார்.[1] மஹா பாரதம் 'ஜபம் ஆன்மீகப் பயிற்சிகளிலேயே மிகவும் சிறந்ததாகும்' என்று ஜபத்தைப்பற்றிக் கூறியுள்ளது. பாக வதம் இந்தக் கருத்தை முழு மனத்துடன் ஆதரிக்கிறது. 'சத்திய

1. மனு ஸ்ம்ருதி, 2.87.

யுகத்தில் தியானத்தின் மூலம் ஒருவர் அடைந்ததை, திரேதா யுகத்தில் யாகத்தின் மூலம் ஒருவர் அடைந்ததை துவாபர யுகத்தில் வழிபாட்டின்மூலம் ஒருவர் அடைந்ததைக் கலியுகத்தில் கடவுளின் திருநாமங்களைக் கூறுவதாலேயே ஒருவர் அடைய இயலும்' என்று குறிப்பிட்டுள்ளது.[1] மற்றும் இத்தகைய பாராயணம் அல்லது ஜபம், கடவுளின் இயல்புகளை ஊன்றி நினைப்பதையும் குறிப்பாகச் சுட்டுகிறது. நாமபாராயணத்துடன் சாதகன் ஒரு புனிதமான உருவத்தைக் கற்பித்துக் கொள்ள வேண்டும். (பொதுவாக அது அவனுடைய இஷ்ட தெய்வமாக இருக்கும்) அல்லது அன்பு, பரிவு, ஆற்றல், தூய்மைப்பாடு போன்ற இறைமையின் தெய்வீக இயல்புகளைப்பற்றி எண்ண வேண்டும். மிகப் பெரும்பாலான சாதகர்களுக்கு அவர்களுடைய இஷ்ட தெய்வத்தின் வடிவத்தைக் கற்பித்துக் கொள்ளுவது எளிமையானதாக உள்ளது.

அகக் காட்சியில் கற்பித்துக்கொள்ளுதல் என்பது இஷ்ட தெய்வத்தின் உருவத்தை அன்புடனும், பயபக்தியுடனும் அழைப்பதாகும். அது தன்நிலையிலேயே ஒரு உயர்ந்த வகையான மானஸ பூஜையாகத் திகழ்கிறது. ஜபத்துடன் இன்று நடைமுறையில் உள்ள அனைவரையும் சார்ந்ததாக உள்ள ஆன்மீக வழிபாட்டு முறையாக உள்ளது. கற்பித்துக் கொள்ளுவது என்பது, தொடக்க நிலையிலுள்ள சாதகனின் ஆன்மீக வாழ்வில் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறது. ஜபமும் அகக்காட்சியில் கற்பித்துக் கொள்வதும் கைகோத்துக் கொண்டு இருக்க வேண்டும். புனிதமான வடிவமானது ஒளிரும், பேரின்பத்தை நல்கும், உயிர்ப்புடன் கூடிய உண்மையானதாகக் கற்பித்துக் கொள்ளப்பட வேண்டும். உன்னுடைய உடலை சுடர்விடும் ஒளியாக எண்ணி, பிறகு உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் ஒளிரும் வடிவத்தை, உன் இதயப் பகுதியின் நடுவில் ஒளிரும் மையத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

---

1. க்ருதே யத்த்யாயதோ விஷ்ணு: த்ரேதாயாம் யஜதோ மகை ।
த்வாபரே பரிசர்யாயாம் கலௌ தத்தரிகீர்த்தனாத் ॥
—பாகவதம், 12.3.52.

இங்கு, இந்த வகையான, அகக் காட்சியில் உருவாக்கிக் கொள்ளும் முறைக்கு சில வழிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன. சரியான ஆசனத்தில் அமர்ந்துகொண்டவுடன் பக்தன் தன் கைகளைக் குவித்துக் கொண்டு 'தூய்மையற்றோ, தூய்மையுடனோ, எல்லா சூழ்நிலைகளிலும் யார் கடவுளை நினைக்கிறார்களோ, அவர்கள் அகத்திலும், புறத்திலும் தூய்மையடைகிறார்கள்'[1] என்று கூற வேண்டும். பக்தன் அவன் உடலிலும், மனத்திலும் தூய்மையை உணர வேண்டும். அவனுடைய ஆன்மாவானது கீழ் மையங்களிலிருந்து தலையிலுள்ள மையத்திற்கு எழும்பி உயர்ந்து, அங்குள்ள உலகளாவிய பரம்பொருளின் பேரொளியில் கலப்பதாகக் கற்பனை செய்ய வேண்டும். மேலும் அவன் கண்ணுக்குப் புலனாகும் மற்றும் சூட்சும உடல்கள் எல்லாப் பொருட்களுடனும், வடிவங்களுடனும், பரம்பொருளின் பேரொளியில் இரண்டறக் கலந்து, அகத்திலும், புறத்திலும் எல்லா இடங்களிலும் அது மட்டுமே ஒளிர்ந்து கொண்டிருக்கிறது என்று கற்பனை செய்ய வேண்டும். பெரும்பாலான மனிதர்களால் இந்த நிலையில் நீண்ட நேரத்திற்கு நீடித்திருக்க இயலாது. அதன் பிறகு பக்தன். அவனுடைய இதயப் பகுதியில் அவனுடைய விழிப்புணர்வு மையத்தை உணர வேண்டும். மற்றும் அந்த மையத்தில் பேரொளிப் பெருங்கடலிலிருந்து, அவனுடைய இஷ்ட தெய்வத்தின் ஒளிரும் தெய்வீக வடிவம் வெளிப்பட்டு இருப்பதையும் மற்றும் சாதகன் தூய்மைக் கேடுகள் அனைத்திலிருந்தும் விடுபட்டுத் தூய்மையடைந்துள்ள தன் வடிவத்தையும் கற்பனை செய்து கொள்ள வேண்டும். இப்பொழுது சாதகன் தன்னைப் புதிய சூட்சுமமான ஆன்மீக உடலுடன் அடையாளம் கண்டு கொண்டு, சிறிது நேரத்திற்குக் கடவுளின் திருநாமத்தைக் கூறிக் கொண்டு, அவனுடைய இஷ்ட தெய்வத்தைத் தியானித்து வழிபடுதல் வேண்டும். அவன், புனிதமான உருவம் மற்றும் அவனுடைய சொந்தமான புதிய ஆன்மீக

1. அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தாங்கதோ'பிவா ।
ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸபாஹ்யாப்யந்தர சுசி: ॥

உடல் இரண்டையும் ஆதரிக்கும் மற்றும் ஊடுருவி உள்ள உருவமற்றதன் கண்பார்வையிலிருந்து மறையச் செய்ய வேண்டும். இறுதியாக பக்தன் கீழே வரும் பிரார்த்தனையைக் கூறிக் கொண்டு, எல்லாவற்றையும் பரம் பொருளுக்கு அர்ப்பித்துவிட வேண்டும்.

'அறிவு மற்றும் உடலில் இன்றியமையாத ஊக்கத்தின் தூண்டுதல்களுக்கு ஆட்பட்டு, விழிப்பு நிலை, கனவுநிலை மற்றும் ஆழ்ந்த உறக்க நிலைகளில், எண்ணம், சொல், செயல் களால், பல்வேறுபட்ட உறுப்புக்களால் என்னால் எத்தகைய பாவம் செய்யப்பட்டிருப்பினும், அவ்வனைத்தும் பரம் பொருளுக்கு அர்ப்பணமாகட்டும்.'[1]

மேலே கூறப்பட்டுள்ள முறையில் ஜபத்தையும், தியானத்தையும் முடித்தபிறகுகூட பக்தன், அவனுடைய விழிப்பு உணர்வு மையத்தையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும். எப்பொழுதும் அந்த மேம்பட்ட மனநிலை யிலேயே இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒவ் வொரு சாதகனிடத்திலும், நிலையான விழிப்புணர்வு மையம் நிலையான மந்திரம் மற்றும் புனிதமான வடிவம் என்னும் மூன்றும் இருக்க வேண்டும். நல்ல விளைவுகளை ஏற்படுத்து வதற்கு, கற்பித்துக் கொள்ளுவதும், ஜபமும் மிகத் தீவிரமாகச் செய்யப்பட வேண்டும்.

உலகியல் சார்ந்த விஷயங்களைப் போன்றே ஆன்மீக விஷயங்களிலும், நம் எண்ணங்களிலும் செயல்களிலும் நாம் முற்றிலும் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும். சில மனிதர்களுக்கு தியானத்தின் அத்தகைய கண்டிப்பு மிகுந்த விதிமுறைகளும், ஒழுங்கான பழக்கங்களும்

---

1. *இத: பூர்வம் ப்ராணபுத்திதேஹதர்மாதிகாரதோ*
ஜாக்ரத்ஸ்வப்னஸுஷுப்த்யவஸ்தாஸு
மனஸாவாசா ஹஸ்தாப்யாம் பத்ப்யாமுதரேண
சிச்னா யத்க்ருதம் யதுக்தம்
யத்ஸ்ம்ருதம் தத்ஸர்வம் ப்ரஹ்மார்ப்பணம் பவது ஸ்வாஹா ॥
—என்னும் ஸ்லோகத்தின் ஓர் எளிய மொழிபெயர்ப்பு.

பிடிப்பதில்லை. பொதுவாக அத்தகைய விருப்பமற்ற தன்மை யானது, அமைதியற்றுள்ள மனநிலை மற்றும் எதிர்ப்பின் அடையாளமாகும். தொடக்கத்தில் ஒரு குறிப்பிட்ட வரை யறுக்கப்பட்ட விதிமுறைகளும் நடைமுறையும் இல்லாமல், யாராலும் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற இயலாது. மிகவும் ஆபத்தான, பனிக்கட்டியின் மீது (Ice) தடங்கலில் லாமல் சறுக்கிச் செல்லும் விளையாட்டைத் தொடங்கு வதற்கு முன்பு, மனிதர்கள், பனிக்கட்டியின் மீது சறுக்கிச் சென்று குறிப்பிட்ட உருவம் வரைவதற்குப் பயிற்சி செய் வதை நான் பார்த்து இருக்கிறேன். அதைப் போன்றே, ஆன்மீக வாழ்விலும் ஒருவர் முதலில் தியானத்தைக் குறித்த உறுதியான நெறிமுறையுடன் தொடங்க வேண்டும். அதன் பிறகு ஒருவர் அத்தகைய நெறிமுறைகளைக் கடந்து செல்லலாம்.

ஒரு புனித மகானின் அவசியம்

நவீன மனிதன், மிவும் எளிமையாக, 'ஓ, கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார்' என்று கூறுகிறான். கடவுள் உண்மையாக எப்படி இருக்கிறார் என்று நினைப்பதற்கு அவன் முயற்சி செய்யும்பொழுது, தனக்குக் கடவுளைப் பற்றிய திட்டவட்டமான, தெளிவான கருத்து இல்லை என் பதை அறிந்து கொள்கிறான். பெரும்பாலான மனிதர்களுக்குக் கடவுளைக் குறித்து தெளிவற்ற, துல்லியமற்ற கருத்துக்கள் தான் உள்ளன. உருவமற்ற கடவுளை வழிபடுபவர், தேவாலயத்திலிருந்து வீட்டிற்கு வந்ததும், அவர் தன்னைத் தன் உடலுடனும் அதன் தொடர்புடையவற்றிலும் சுறுசுறுப் பாக்கிக் கொள்கிறார். அவரால் ஆன்மாவின் மட்டத்திற்கு உயர இயலுவதில்லை. மற்றும் அவர் யாரைப் பற்றி அதிக மாகப் பேசுகிறாரோ, அத்தகைய உருவமற்ற வரையறையற்ற கடவுளுடன் எத்தகைய நடைமுறைத் தொடர்பும் அற்றவ ராக இருக்கிறார். நமக்குத் திடமான உடலுணர்வு இருக்கும் பொழுது, நம்முடைய தனிமனித நிலையையே ஒரே உண்மைநிலை என்று நாம் கருதும் பொழுது, நம்முடைய

ஆன்மீகப் பயிற்சிக்கும், வளர்ச்சிக்கும் நமக்கு ஒரு புனிதமகான் தேவைப்படுகிறார்.

பரம்பொருளானது, கீழ்மட்ட நிலையில் கண்ணுக்குப் புலனாகாமல் இருப்பினும், மேல் மட்டத்தில் அது உண்மை ஆகிறது. மனித நிலையின் கீழ் மட்டத்தில் இருந்துகொண்டிருக்கும் உருவம் மற்றும் மனத்தில் தோன்றும் எல்லாத் தேவையற்ற காட்சிகளையும் எண்ணங்களையும் நாம் கோட்பாட்டு அளவான கருத்துக்களால் எதிர்க்க இயலாது. கண்ணுக்குப் புலனாகாமல் உள்ள கருத்துக்களின் உதவியுடன், நம் மனங்களில் எழும் எல்லாவகையான தீய தேவையற்ற எண்ணங்களையும் உருவங்களையும் நம்மால் எதிர்த்துத் தடை செய்ய இயலாது. நாம் அவற்றைத் எதிர்த்துத் தடை செய்வதற்கு அவைகளுக்கு எதிரான நல்ல எண்ணங்களையும் புனிதமான உருவங்களையும் எழுப்ப வல்லவர்களாக இருக்க வேண்டும். யாரில் நம்முடைய உயர்ந்த கருத்துக்கள் மெய்யுருவாகி உள்ளதைக் காண்கிறோமோ, அத்தகைய புனிதமகான் ஒருவர் இங்குதான் தேவைப்படுகிறார். நாம் நம்முடைய வடிவங்களே உண்மையானவை என்று கருதும் வரையிலும், நமக்கு உறுதியான ஒரு புனிதமான வடிவம் தேவைப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் வடிவத்திற்கும் வடிவமற்றதற்கும் இடையில் அவற்றைத் தொடர்புபடுத்தவல்ல ஒரு இணைப்பை நாம் கண்டு கொள்ள வேண்டும். வடிவம் என்பது வடிமவற்றதன் வெளிப்பாடாகவே விளங்குகிறது. புனிதமான மகான் எல்லாவற்றின் பின்னணியிலுள்ள வடிவமற்ற உண்மைத் தத்துவத்தின் வெளிப்பாடாகவே விளங்குகிறார்.

புனிதமான மகான் வரையறைக்கு உட்பட்டதையும், வரையறை அற்றதையும் இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறார். இவ்விதமாகப் புரிந்துகொள்ளப்பட்டால், அது அறிவையும், உணர்வையும் நிறைவு செய்கிறது. அறிவானது வரையறையற்றதை விரும்புகிறது. உணர்வுகள் வரையறைக்கு உட்பட்டதை விரும்புகின்றன. மெய்த்தத்துவத்தை எப்பொழுதும் உணர்ந்திருக்கும் புனிதமகானை,

மெய்த்தத்துவத்தின் வெளிப்பாடாக சரியான கண்ணோட்டத் துடன் நாம் பார்த்தால், புனிதமகானிடம் நாம் மேற்கண்ட இரண்டையும் காண்கிறோம்.

புனிதமான வடிவத்தை அழைப்பதற்கு ஒருவர் ஓம் என்னும் புனிதமான ஒலிச்சின்னத்தின் உதவியை நாடலாம். மற்றும் இது முதலில் வடிவத்தைக் குறிப்பதற்கும் அதன் பிறகு வடிவம் அற்றதைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட லாம். பொதுவாக தகுதியுடைய குருவால் அளிக்கப்பட்ட, மந்திரம் என்று அழைக்கப்படும் சொற்கள் நிறைந்த சிறிய நூற்பாவானது பயன்படுத்தப்படலாம். சாதகனுக்குக் குரு விடமும், மந்திர சக்தியிலும் நம்பிக்கை இருக்க வேண்டும். ஜபம் செய்யும்பொழுது, பக்தன் புனிதமான திருநாமத்தைப் பாராயணம் செய்வதுடன் ஒலிச்சின்னத்துடன் தொடர்புடைய இஷ்ட தெய்வத்தின் வடிவத்தையோ அல்லது உருவமற்ற பரம்பொருளையோ நினைக்க வேண்டும். விழிப்புணர்வு மையமானது, வரையறையற்ற விழிப்பு உணர்வின் ஒரு பகுதியாகும். அது நம்முடைய முழு இருப்பையும் ஊடுருவி உள்ளது. இல்லை அண்டம் முழுவதிலும் ஊடுருவி நிற்கிறது. மற்றும் அதற்கப்பாலும் எத்தகைய வரையறையுமின்றி ஊடுருவி நிற்கிறது. முதலில் ஒலியும், எண்ணமும் இணைந் திருக்க வேண்டும். அதன்பிறகு ஒலியானது தெய்வீகக் கருத்திலும் உணர்விலும் இரண்டறக் கலந்து விடுகிறது. நீ உன்னுடைய பயிற்சியை விடாமல் செய்துகொண்டே இருந் தால், நீ மேலும் மேலும் இவற்றின் பொருட்களை உணர்ந்து கொள்வாய். கடவுளை ஒன்றனுக்கு மேம்பட்ட விதங்களில் அணுகலாம்.

நாமும் ஏசுநாதரை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பின்பற்றுபவர்களாக பரம்பொருளின் ஒரு அவதாரமாக நாம் ஏசுநாதரைக் கருதுகிறோம். கிறிஸ்த வர்கள் நம்புவதைப்போல தனித்த ஒரே ஒரு அவதாரம் என்று நாம் கருதுவது இல்லை. நம்மையும் உட்கொண்ட இந்த அண்டம் முழுவதும், சாதாரணமான, முழுமையற்ற வெளிப்பாடாகத் திகழ்கிறது. ஆனால், ஏசுநாதர், புத்தர்,

இராமகிருஷ்ணர் இவர்களையெல்லாம் நாம் முழுமையான நிலைத்திருக்கும் 'Logos' 'சொல்' நிலைத்திருக்கும் வேதங்கள் மற்றும் விவிலியத்தின் சொல்லின் தனிப்பட்ட வெளிப்பாடுகளாகக் கருதுகிறோம். இந்தக் கருத்தானது, கிழக்கிலுள்ள நாடுகளில் இருப்பவர்களுக்கும், மேற்கிலுள்ள நாடுகளில் இருப்பவர்களுக்கும் பொதுவானதாக உள்ளது. இந்த முழுமையான வெளிப்பாடுகளாகத் திகழ்பவர்கள் முழுமையற்ற வெளிப்பாடுகளாக உள்ளவர்களுக்கு, ஒளியை யும், உண்மையையும் காட்டுவதற்காக உள்ளனர். Logos அல்லது சொல் அதே ஒரு தனிமனிதரைக் குறிக்காத உண்மை யாகும். அதனுடைய பொதுப்படையான வெளிப்பாட்டில் அது தனிப்பட்டதாகவோ அல்லது மனிதனாகவோ ஆகிவிடுகிறது.

இத்தகைய வெளிப்பாடுகள் பல இருக்கக்கூடும் ஆனால், தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் அது ஒன்று தான். நாம் எல்லா மிகச் சிறந்த வெளிப்பாடுகளையும் அல்லது ஒன்றையோ, பலவற்றையோ ஏற்கக்கூடும். ஆனால் உலக நன்மைக்காக அவ்வப்பொழுது தன்னைத் தோற்றிக் கொள்ளும் நிலைத்த பரம்பொருளிடம் நாம் அனைவரும் உண்மையானவர்களாக இருக்க வேண்டும்.

புனிதமகான், பின்னணியில் உள்ள ஒரு தத்துவத்தைவிட வேறாக உன்னை ஈர்த்தால் நீ அவரைத் தியானிக்கலாம். வழிபடலாம். ஆனால், இது அந்த உண்மைத் தத்துவத்தை உணர்வதற்கு வழிகாட்டும் படிக்கல்லாக இருக்க வேண்டும். உரிய நேரத்தில் நீ தியானிப்பதற்கு முயற்சி செய்து கொண் டுள்ள முழுமுதற்பொருள், அவர்தான் புனிதமகானாகவும் வெளிப்பட்டுள்ளார். மற்றும் எல்லாவற்றையும் கடந்துள்ள அவர், அனைவரிடத்திலும் உறைகிறார் என்பதை உனக்கு வெளிப்படுத்துவார். மற்றும் அவரை அவருடைய முழுமை யான வெளிப்பாடுகளிலும் மற்றும் எல்லா முழுமையற்ற வெளிப்பாடுகளிலும், மிகச் சிறந்த தீர்க்கதரிசிகளாகவும் சாதாரணமான ஆண்-பெண்களாகவும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும், இந்த விஷயத்தில் கிழக்கு, மேற்கு

என்னும் கேள்விக்கு இடமில்லை. ஏனெனில் பரம்பொருள் எல்லா வரையறைகளையும் கடந்தது ஆகும்.

ஒலியானது கடவுளின் அடையாளமாகும். வடிவமும் கடவுளின் அடையாளமாகும். நாம் தெய்வீக விழிப்புணர்வு நிலையை அழைப்பதற்கு இந்த இரு அடையாளங்களின் உதவியை ஏற்றுக்கொள்கிறோம். புனிதமகானின் உதவியுடன், தன்னையே திருநாமமாகவும், வடிவமாகவும், வெளிப்படுத்திக் கொண்டுள்ள உண்மைத் தத்துவத்தை உணர்வதற்கு முயற்சி செய்கிறோம். அதன் பிறகு நாமும் அந்த உண்மைத் தத்துவத்தின் வெளிப்பாடுகள் என்று உணரத் தொடங்குகிறோம்.

எங்கும் நிறைந்துள்ள மெய்ப்பொருளின் கணநேரத் தோற்றத்தை புனிதமகானிடம் கண்டபிறகு, அந்த மெய்ப் பொருளின் கண நேரத் தோற்றத்தை நாம் நம்மிடமும், மற்றவர்களிடமும் காண்கிறோம். நாம் மெய்ப்பொருளை எல்லா வடிவங்களிலும், நல்லவை கெட்டவைகளிலும் காண்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்லவற்றிற்கும், கெட்டவற்றிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஐயத்திற்கு இடமின்றி இழந்துவிடாமல் காண வேண்டும். அதன் பிறகு கெட்டவைகளால் நம்மைப் பாதிக்க இயலாது. நாம் பரம் பொருளை, இயற்பொருள் சார்ந்த உலகத்தில் உள்ள வடிவங் களில் காண்பதற்கு முயற்சி செய்வதுடன், மட்டுமின்றி மனத்தில் எழும் வடிவங்களிலும் காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

வடிவங்களில் கருத்து ஊன்றி இருப்பதற்கு விரும்பாத வர்களுக்குப் பரம்பொருளைத் தன்னிடமும், மற்றவர்களிட மும் அடையாளம் கண்டுகொள்வதுதான் ஒரே வழியாகும். நம் உடல் ஒரு கோயிலாகும். அதில் ஆன்மா குடிகொண்டு உள்ளது. மற்றும் பரம்பொருள் அந்த ஆன்மாவின் ஆன்மா ஆவார். இது ஏற்கனவே விவாதிக்கப்பட்டுள்ளது. எப்படி இருப்பினும் வெகு சிலரால் மட்டுமே இந்த உயர்ந்த இலட்சி யத்தை நீண்ட நேரத்திற்குப் பற்றிக் கொள்ள இயலும்.

முடிவுரை:

ஹிந்து சமயத்தில் 'வழிபாடு' என்னும் சொல்லின் பொருளானது, மற்ற சமயங்களில் அந்தச் சொல்லிற்கு உரிய பொருளைப்பற்றிக் கேள்விப்படுவதிலிருந்து சிறிது வேறு பட்டு விளங்குகிறது. அதற்கு, 'உபாசனை' என்பது பொரு ளாகும். அது ஏற்கனவே விவரிக்கப்பட்டு இருப்பதைப் போல, ஆன்மா அதே தன்மையை அடையும் வரை பரம் பொருளைப் படிப்படியாக அணுகுவது ஆகும். அது, 'ஆன்மீகம் சார்ந்த வழிபாடு' என்னும் பொருளையும் பெறு கிறது. ஒருவர் உடலுடன் கூடிய உருவத்தில் தொடங்கி, பிறகு மனத்தில் உள்ள உருவத்திற்கு விலகிச் சென்று, தெய்வீகத் திருநாமங்களைப் பாராயணம் செய்து, இறுதியாக ஆன்மா பரம்பொருளுடன் இரண்டறக் கலப்பதில் நிறைவு பெறு கிறது. படித்தரத்துடன் கூடிய ஒழுக்கக் கட்டுப்பாடுகளின் நடைமுறையால் உடல் உணர்வும் அகங்காரமும் படிப்படி யாகக் குறைகிறது. மற்றும் மறைந்துள்ள ஆன்மாவின் தெய்வீகத்தன்மையானது மேலும் மேலும் வெளிப்படத் தொடங்குகிறது. ஆன்மாவின் இந்த முன்னேற்றத்தில், அது முழுமையை அடையும் வரையிலும் அது பல நிலைகளைக் கடந்து சென்று, பல தடைகளைக் கடந்து மேம்படுகிறது.

ஜபம்தான் நவீன காலத்திற்குப் பொருத்தமான மிகச் சிறந்த வழிபாட்டு முறையாகும். ஜபமானது, ஆன்மீகம் சார்ந்த வழிபாட்டிற்கு உரிய மன உணர்வுடன் செய்யப்பட வேண்டும். அத்தகைய மனநிலை இழக்கப்பட்டால்தான் ஜபமானது இயந்திரகதியாகும் நிலையை அடைகிறது. பெரும்பாலும் மனிதர்கள் இந்த முக்கியக் கருத்தை மறந்து விடுகின்றனர். ஜபமானது, உயர்ந்த முறையைச் சார்ந்த வழிபாடாகச் செய்யப்பட வேண்டும். ஜபத்தைப் பயனுள்ள ஆன்மீக நெறிமுறையாகச் செய்வதற்கு அன்பு மற்றும் வழிபடுதல் என்னும் மனப்பான்மைகள் இருக்க வேண்டும். இயந்திர கதியில் கடவுளின் திருநாமங்களைப் பாராயணம் செய்வதிலும் சிறிதளவு பயன் இருக்கிறது என்பதில் சந்தேகம்

எதுவும் இல்லை. ஏனெனில் கடவுளின் திருநாமத்திலேயே அதனுடைய உள்ளார்ந்த சக்தி உள்ளது. ஆனால் ஜபமானது பக்தியுடன் ஒரு வழிபாட்டு முறையைப் போலச் செய்யப் படும் பொழுது நம்முடைய உடலும், மனமும் ஆன்மாவும் உணர்ச்சிவசப்படுகின்றன. இதுதான் ஜபத்தின் மூலம் ஆன்மீக வாழ்க்கையில் அடையும் வெற்றியின் இரகசியமாகும்.

நாம் ஒரு விஷயத்தை எப்பொழுதும் மனத்தில் கொள்ள வேண்டும். நாம் நம் உடலை விட ஆன்மாவிற்கு முக்கியத் துவம் கொடுக்க வேண்டும். ஆன்மாவை விடக் கடவுளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உடலை, ஆன்மா உறை யும் வீடாக மட்டுமே காண வேண்டும். மற்றும் ஆன்மா வையே கடவுளின் இருப்பிடமாகக் கருத வேண்டும். நாம் நம்மை நம்முடைய ஆன்மாக்களுடன் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அதன் பிறகு, நம் தொடர்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் இந்தக் கருத்திற்கு அழுத்தம் கொடுக்காமல் இருப்பின், நம் முடைய முழு வாழ்க்கையே உடல் வழிபாட்டைப்போல ஆகிவிடும். ஒரு புனித மகானை வழிபடுவதைக் கீழ்மையாக எண்ணி மற்றும் அதை ஒருவகையான உருவ வழிபாடாகக் கருதுகிறவர்கள், அது அவர்களுடைய சொந்த உடலை வழி படுவதைவிட மிகவும் சிறந்தது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் உண்மையாக பக்தர்கள், மற்றொரு விதத் தில் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளைத் தங்களிடமும் மற்றும் மற்ற எல்லா உயிரினங்களிலும் காண்கின்றனர். அவர்களுடைய முழு வாழ்வும் இவ்விதத்தில் பரம் பொருளின் வழிபாடாகவே ஆகிவிடுகிறது. மற்றும் அவர்கள் ஒப்புயர்வற்ற அமைதியையும், நிறைவையும் அனுபவிக் கின்றனர்.

24
இறைவனின் திருநாமத்தின் சக்தி

சொற்களின் சக்தி

உனக்குச் சொல்லின் சக்தியில் நம்பிக்கை உள்ளதா? நான் உனக்கு ஒரு கதை கூறுகிறேன். சாயங்களை விற்கும் ஒருவர் தன் பெயரைக் கெடுத்து விட்டதாக மற்றொருவருக்கு எதிராக ஒரு வழக்கைத் தொடுத்திருந்தார். நீதிமன்றத்தில் நீதிபதி அவனிடம், மற்றவர் என்ன செய்தார் என்று கேட்டார்.

'அவர் என்னை காண்டாமிருகம் என்று அழைத்தார்' என்று அவர் கூறினார்.

'எத்தனை நாட்களுக்கு முன்பு?' என்று நீதிபதி கேட்டார்.

'இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு.'

'பிறகு நீ ஏன் இப்பொழுது முறையிடுகிறாய்?'

'ஏனெனில் நான் அந்த விலங்கை இன்று காலையில் தான் பார்த்தேன்'

ஒரு பெயரின் பொருளை அறிந்துகொண்டால் அதற்கு மிகப்பெரிய சக்தி உள்ளது என்பதை உணரவியலும். யாராவது ஒருவர் வெறுப்பினால் நம்மைக் காண்டாமிருகம், முட்டாள்வாத்து, அல்லது மடக்கழுதை என்று திட்டினால் நாம் எரிச்சலடைகிறோம். கோபம் கொள்கிறோம்.

நாம் அனைவரும் நம்முடைய பெயர்களுக்கு எப்படி நம் எதிர் உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறோம் என்பதை அறிவோம். ஒரு கூட்டத்தில் ஒரு மனிதனுடைய கவனத்தை ஈர்ப்பதற்கான மிகச் சிறந்த வழியானது, அவனுடைய

சொந்தப் பெயரைச் சொல்லி அழைப்பதுதான் ஆகும். உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனை எழுப்ப வேண்டு மெனின் நாம் இப்படித்தான் செய்கிறோம். புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞரான டென்னிசன் ஒரு சிறப்பான உள் அனுபவத்திற்கு ஆட்பட்ட நிலையைத் தன்னுடைய 'பழங் கால முனிவர்' என்னும் கவிதையில் விவரித்துள்ளார்.

'ஒரு முறைக்கு மேல் நான் தனியாக
என்னுள்ளே மூழ்கி அமர்ந்திருந்த பொழுது
என்னுடைய சின்னமாக விளங்கும் அச்சொல்
'நான்' எனும் அழிவிற்கு ஆட்பட்ட வரையறை தளர்ந்து
மற்றும் பெயரற்றதில் கலந்தது, ஒருமேகம்
ஆகாயத்தில் உருகுவதுபோல, நான் எனது
உறுப்புக்களைத் தொட்டேன், உறுப்புக்கள்
வினோதமாக இருந்தன. என்னுடையதல்ல மற்றும்
சந்தேகத்தின் நிழல் இல்லை. ஆனால்
முழுமையான தெளிவு மற்றும் நான் என்ற இழப்பால்
இத்தகு பெருவாழ்வின் சேர்க்கை, நமதுடன்
சேர்த்துக் காணும் பொழுது, தீப்பொறிக்கு சூரியன்போல
சொற்களால் வெளிப்படுத்த இயலாது.
தாங்களே, ஆனால் நிழலுலகின் நிழல்கள்'[1]

உன்னுடைய பெயரானது பரம்பொருளின் அடையாள மாக உள்ளது என்னும் உண்மையை நீ அறிந்து கொண்டு இருக்கிறாயா? டென்னிசனால் முடிந்தது. ஏனெனில் உடலுணர்வை மீறிய மெய்யுணர்வு நயத்துடன் அவருக்குத் தன்னிடம் புலனுணர்வுகளுக்கு அப்பாற்பட்ட உலகங்களின் ஒரு வகையான கண நேரத் தோற்றத்தைப் பெயரைக் கருவி யாகக் கொண்டு எழுப்பிக் கொள்ள முடிந்தது. ஒரு சாதாரண மான பெயருக்கே அத்தகைய ஆற்றல் இருக்குமெனின், கடவுளின் திருநாமத்திற்கு எந்த அளவிற்கு அதிகமான

---

1. மேக்ஸ்முல்லரால், 'The Six Systems of Indian Philosophy' (New York, Longmans, Green and Co., 1928) என்னும் நூலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (பக்கம், 194).

ஆற்றல் இருக்க வேண்டும்! ஆனால் கடவுளின் திருநாமத்தின் ஆற்றலை, அதன் பொருளை உணர்ந்தவனால் மட்டுமே அது எதைக் குறிக்கிறது என்று உணர வியலும்.

ஓம் என்னும் புனிதச் சொல்

சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது இமயமலைப் பகுதியில் உள்ள அல்மோரா என்னும் இடத்தில் ஒருநாள் ஒரு முதிர்ந்த மரத்தடியில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவாறு அமர்ந்து இருந்தார். தியானத்தை முடித்துக் கொண்டவுடன் சுவாமி விவேகானந்தர் அவருடனிருந்த சகோதர துறவியான சுவாமி அகண்டானந்தரிடம், 'நல்லது. இந்த ஆலமரத்தடியில் இங்கு, என்னுடைய வாழ்க்கையின் மிகப் பெரிய சிக்கலானது தீர்வைக் கண்டு கொண்டுள்ளது' என்று கூறினார். அதன் பிறகு அவர் இந்த அனுபவத்தின் சுருக்கமான குறிப்புரையைத் தன்னுடைய நாட் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்தது இவ்விதம் உள்ளது.'

'சொல் போன்றவை தோற்றம் கொண்டபொழுது அண்டமும், பிண்டமும் ஒரே ஒழுங்கைமைவில் அமைக்கப் பட்டன. தனிப்பட்ட ஆன்மா, வாழும் உடலில் உறையி விடப்பட்டிருப்பதைப்போல, இயலுலக அண்டத்தின் ஆன்மா வாழும் பிரக்ருதியில் (இயற்கையில்) புலன்களால் அறியத்தக்க உலகத்தில் உறையிலிடப்பட்டுள்ளது. ஒன்று (ஆன்மா) மற்றொன்றால் (இயற்கை) இவ்விதம் மறைக்கப் பட்டு உள்ளது ஒத்த தன்மை உடையது ஆகும். ஒரு கருத் திற்கும், அதை வெளிப்படுத்தும் சொல்லிற்கும் இடை யிலுள்ள தொடர்பு ஆகும். அவை, ஒன்றே மற்றும் ஒத்தவை ஆகும். மனம் சார்ந்த பிரித்தெடுத்தலாலேயே அவற்றை ஒருவர் வேறுபடுத்திக் காண இயலும். சொற்கள் இன்றி எண்ணம் இருக்கவியலாது. எனவே தொடக்கத்தில் சொல் போன்றவை இருந்தன. உலகளாவிய ஆன்மாவின் இருமைத்தன்மை சாசுவதமானதாகும். எனவே நாம் மனத் தால் உணர்வதும், சாசுவதமாகத் தோற்றம் கொண்டுள்ள,

சாசுவதமாக வடிவம் பெறாமல் உள்ளதின் கலவையே ஆகும்.'[1]

பல ஆண்டுகளுக்குப் பிறகு சுவாமி விவேகானந்தர் மேலே குறிப்பிட்டுள்ள கருத்துக்களை அவருடைய 'பக்தி யோகத்தில்' விவரித்து எழுதியுள்ளார்.

'இந்த உலகம் வெளிப்பட வேண்டுமானால் பெயர், வடிவம், (நாமரூபம்) என்ற இரண்டு நியதிகள் (உபாதிகள்) வேண்டும் என்று இந்தியத் தத்துவ சாஸ்திரம் கூறுகிறது. நாம ரூபமற்ற எண்ண அலை ஒன்று கூட மனித உள்ளத்தில் எழ இயலாது. இயற்கை முழுவதுமே ஒரே நியதிப்படி அமைக்கப் பட்டிருப்பது உண்மையானால், நாமரூபம் அதே நியதிக்கு உட்பட்டே பிரபஞ்சமும் உருவாகியிருக்க வேண்டும்.' பிடியளவு களிமண்ணை அறிந்தால், களிமண்ணால் அமைந்த அனைத்துப் பொருட்களையும் அறியலாம்' எனவே பிண்டத் தைப் பற்றிய அறிவு அண்டத்தைப்பற்றிய அறிவிற்கு அழைத்துச் செல்கிறது.

நாமரூபம் இரண்டுள் ரூபம் என்பது ஒரு பொருளின் புறத் தோற்றம். நாமம் என்பது அந்தப் பொருளின் சார மாகும். அகச்சத்தாகும். உடல் என்பது ரூபம். மனம் அல்லது அந்தக்கரணம் என்பது நாமம். பேசும் திறன் பெற்ற உயிர் இனங்கள் அனைத்திலும் ஒலிக்குறியீடுகள் நாமத்துடன் தொடர்புடையனவாக உள்ளன. தனிமனித மனத்தில் எழு கின்ற எண்ண அலைகள் , முதலில், சொற்களாக வெளிப் பட்டுப் பிறகு மேலும் மேலும் தூல வடிவத்தைப் பெறு கின்றன. பிரபஞ்சத்தில் பிரம்மா என்றும், ஹிரண்யகர்ப்பன் என்றும் அழைக்கப் பெறும் பிரபஞ்ச மகத் முதலில் நாமமாக வெளிப்பட்டு, பின்னர் ரூபமாக அதாவது இந்தப் பிரபஞ்ச மாக ஆகிறது. நாம் அறிகின்ற இந்த உலகம்தான் ரூபம். இதை வெளிப்படுத்திக் கொண்டு இதற்குப் பின்னால் நிற்பது ஒலி சக்தியாகும். இது ஸ்ஃபோடம் என்று அழைக்கப்படுகிறது.

---

1. Eastern and Western Disciples, The Life of Swami Vivekananda (கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1974) பக்கம், 197.

இது அழிவற்றது. விளக்க முடியாதது. அதன் வெளிப்பாடாக லோகாஸ் (Logos) அல்லது சொல் உள்ளது. அழிவற்ற இந்த ஸ்ஃபோடம்தான் அனைத்து எண்ணங்களுக்கும் அதாவது நாமங்களுக்கும் மிக இன்றியமையாத நிலையான மூலப் பொருளாக உள்ளது. அந்தச் சக்தியைக் கொண்டே கடவுள் உலகைப் படைக்கிறார். இல்லை. கடவுள் முதலில் ஸ்ஃபோட மாக ஒரு எல்லைக்கு உட்படுகிறார். பின்னர் இன்னும் தூலமாக நாம் உணர்கின்ற உலகமாகப் பரிணமிக்கிறார். இந்த ஸ்ஃபோட்டத்தை ஒரே ஒரு சொல்லால்தான் குறிக்க முடியும். அதுதான் 'ஓம்'. எந்தப் பகுப்பு முறையைக் கையாண்டாலும், ஒரு சொல்லிலிருந்து அதன் கருத்தை எப்படிப் பிரிக்க இயலாதோ அதுபோல ஓம் என்பதும் நிலையானதான ஸ்ஃபோட்டமும் பிரிக்க இயலாதவையாகும். எனவேதான் புனிதமான சொற்கள் அனைத்துள்ளும் புனிதமானதும், நாமரூபங்களுக்கெல்லாம் தாயானதும் அழிவற்றதும் ஆன இந்த ஓங்காரத்திலிருந்துதான் பிரபஞ்சம் முழுவதும் படைக்கப்பட்டுள்ளது.'[1]

வேறு விதமாகக் கூற வேண்டும் எனின் பரம்பொரு ளானது தன்னை தெய்வீகக் கருத்தினால் வெளிப்படுத்திக் கொள்கிறது. மற்றும் தெய்வீகக் கருத்தானது தெய்வீக ஒலி அல்லது சொல்லின்மூலம் வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்தக் கருத்தானது தெய்வீகத் திருநாமத்தின் சக்தியைச் சரி யான முறையில் புரிந்து கொள்வதற்கு அடிப்படையாக உள்ளது. மற்றும் இந்த வகையான சாதனையை மேற் கொண்ட கணக்கற்ற முனிவர்களாலும், புனித மகான் களாலும் உறுதி செய்யப்பட்டுள்ளது மற்றும் இந்தியாவின் ஆன்மீக மரபின் ஒரு பகுதியாகவும் உள்ளது. சுவாமி பிரம்மானந்தர் அவர்கள் தன்னுடைய சொந்த அனுபவத்தைக் குறித்துப் பின்வருமாறு கூறியுள்ளார்.

'ஒருநாள் ஸ்ரீராமகிருஷ்ணர், போதித்துக் கொண்டிருந்த போக்கில், கடவுள் ஒலியாக வெளிப்பட்டு இருப்பதைக்

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 1.435-436

குறித்துப் பேசினார். (Logos) நான் இதை, என் நண்பகல் நேரத்தில் தியானத்திற்கு உரிய விஷயமாக எடுத்துக் கொண்டேன். மற்றும் நான் தியானித்தபடி அமர்ந்திருந்தேன். திடீரென்று நாத பிரம்மம் எனக்கு வெளிப்பட்டது.'[1]

கடஉபநிஷதம் 'ஓம்' என்பதைக் குறித்து, ஆன்மீகப் பெருமுயற்சியின் இலட்சியம் என்று கூறி மற்றும் அதை மிக உயர்ந்த மெய்ப்பொருளுடன், இனம்கண்டு கொண்டுள்ளது.

'எல்லா வேதங்களும் எந்த லட்சியத்தை உபதேசிக்கின்றனவோ, எதற்காக எல்லாத் தவங்களும் செய்யப்படுகின்றனவோ, எதை விரும்பி பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கிறார்களோ, அந்த லட்சியத்தை அடைவதற்கான மந்திரத்தைச் சுருக்கமாக உனக்குக் கூறுகிறேன். அது ஓம், ஓம் என்னும் இந்த மந்திரமே நிலைபெற்ற இறைவன். இந்த மந்திரம் மேலானது இந்த மந்திரத்தை அறிந்து யார் எதை விரும்புகிறானோ, அவனுக்கு அது கிடைக்கிறது.'[2]

முண்டக உபநிஷதம் ஓம் என்பது குறித்து, 'ஓங்கார மந்திரமே வில், ஆன்மா அம்பு, இறைவனே இலக்கு' என்று விவரித்துள்ளது. 'அம்பை எய்பவன் அலைபாயாத மனத்தினனாக இருக்க வேண்டும். அம்பைப் போல அந்த இலக்குமயமாக ஆக வேண்டும்'[3] என்று விவரித்துள்ளது. இங்கு ஓம் என்பது உபநிஷதத்தின் முழுமையான பொருளாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஞானத்தை தாங்கி நிற்கிறது. அதனுடைய துணையுடன் நாம் நமது தூய்மைப்படுத்தப்பட்டுள்ள மனத்தை பிரம்மனிடம் ஒருமுகப்படுத்த வேண்டும். ஹிந்து சமயத்தில் ஓம் என்பது மிகவும் புனிதமான சொல் மற்றும் அடையாளமாகும். மற்றும் மிகப் பழங்காலத்திலிருந்தே ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மரபுமுறையாக

---

1. The Eternal Companion, பக்கம் 249.
2. கட உபநிஷதம், 1.2.15,16.
3. ப்ரணவோ தனு: சரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே ।
அப்ரமத்தேன வேத்தவ்யம் சரவத் தன்மயோ பவேத் ॥
—முண்டக உபநிஷதம், 2.2.4.

ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேதாந்தத்தின் சாரத்தைச் சுருக்கமாக உட்கொண்டிருக்கும் மாண்டூக்ய உபநிஷதம், 'இந்த உலகம் அனைத்தும் ஓங்காரமேயாகும். ஓம்காரத்தின் விளக்கத்தைக் காண்போம். சென்றவை, இருப்பவை, வருபவை எல்லாம் ஓம்காரமே ஆகும். மூன்று காலங்களையும் கடந்ததாக எது உள்ளதோ அதுவும் ஓம்காரமே'[1] என்று விவரித்துள்ளது.

இந்த உபநிஷதம் ஓம் என்னும் சொல்லைக் கூர்மையாக ஆராய்ந்து, ஒவ்வொரு அசையையும் (Syllable) ஒரு குறிப்பிட்ட உணர்வு நிலையுடன் இனம் கண்டு கொண்டுள்ளது. வேதாந்த தத்துவம், ஒரு மனிதனின் இயல்பான அனுபவமானது விழிப்பு நிலை, கனவு நிலை, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை என்னும் மூன்று நிலைகளைக் கொண்டதாக உள்ளது என்னும் கருத்தினைக் கொண்டுள்ளது. அதைப் போன்றே, ஓம் என்னும் சொல்லையும் அ, உ, ம என்னும் மூன்று அசைகளாகப் பிரிக்க வியலும். மற்றும் இந்த அசைகள் முறையே, மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நிலைகளைக் குறிக்கின்றன. அண்டமும், பிண்டமும் ஒரே ஒழுங்கமைவில் இணைந்து உருவாக்கப்பட்டிருப்பதால், அ. உ. ம என்னும் அசைகளும் பரந்த இயலுலகத்தையும், பரந்த மன உலகத்தையும், இந்த இரு உலகங்களின் இயல்பான அடிநிலைக் கூறுகளையும் முறையே சுட்டுகின்றன. பிரம்மன் அல்லது முழுமுதற்கடவுளின் வெளிப்பாடுகளாகவே இவை உள்ளன. எப்படியிருப்பினும் அவ்வனைத்தையும் கடந்து, அமாத்திரப் பிரணவம் அல்லது ஒலியற்ற அல்லது வெளிப்படாத ஓம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

சொல் (Logos) மற்றும் நாதபிரம்மன்

பதஞ்சலியும் அவருடைய யோக சூத்திரத்தில் 'ஓம்' என்னும் சொல்லை ஈஸ்வரன் அல்லது கடவுளின்

---

1. ஓமித்யேததக்ஷரமிதம் ஸர்வம் தஸ்யோபவ்யாக்யானம் பூதம் பவத்பவிஷ்யதிதி ஸர்வமோங்கார ஏவ ॥

—மாண்டூக்ய உபநிஷதம், 1.

அடையாளமாகக் குறிப்பிட்டுள்ளார்.[1] அவர் மேலும் இந்த ஓம் என்னும் சொல்லை இடைவிடாமல் பாராயணம் செய்து கொண்டிருந்தால் ஆன்மீக முன்னேற்ற பாதையில் ஏற்படும் எல்லாத் தடைகளையும் அகற்றி, அகநோக்கு ஆற்றல் வெளிப் பட்டு ஆன்ம விழிப்புணர்வு நிலைக்கு வழிகாட்டும்'[2] என்று கூறியுள்ளார். இவ்விதம் ஹிந்து சமயத்தில் ஓம் என்பது மிக முக்கியமான சொல் அடையாளமாக விளங்குகிறது. இது எப்படி இருப்பினும் புனிதர் ஜான் அவர்களின் போதனையில் கூறியிருக்கும் 'சொல்' என்பதைவிட அதிக மர்மமானது இல்லை.

அது இவ்விதம் தொடங்குகிறது.

'தொடக்கத்தில் வாக்கு இருந்தது,
அவ்வாக்கு கடவுளோடு இருந்தது,
அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது,
வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில்
கடவுளுடன் இருந்தார்
அனைத்தும் அவரால் உண்டாயின
உண்டானது எதுவும் அவரால்
இன்றி உண்டாகவில்லை
அவரிடம் வாழ்வு இருந்தது
அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாக இருந்தது
வாக்கு மனிதர் ஆனார்
நம்மிடையே குடிகொண்டார்[3]

நான்காவது திருமறையை எழுதியவர் இங்கு ஏசுநாதரை சொல்லுடன் கிரேக்கர்களின் லோகோஸை (Logos) இனம் கண்டுகொள்ள முயற்சி செய்துள்ளார். எப்படி இருப்பினும், இது அப்பொழுது புதிய கருத்தாக இருக்கவில்லை.

1. தஸ்ய வாசக: ப்ரணவ: ।
—பதஞ்சலி யோக சூத்திரம், 1.27.

2. தத: ப்ரத்யகசேதனாதிகமோऽப்யந்தராயாபாவச்ச ॥
—பதஞ்சலி யோக சூத்திரம், 1.29.

3. பைபிள்—செயின்ட் ஜான், 1:1-14.

பழங்காலத்தில் இருந்த சில சமயக் கோட்பாடு முறை களிலிருந்த ஒசிரிஸ், மித்ரா போன்ற தெய்வங்களும் ஒரு காலத்தில் சாசுவதமான சொல்லின் (Logos) வெளிப்பாடு களாகவே கருதப்பட்டனர்.

பழங்காலத்தில், Logos (சொல்) என்னும் கருத்தானது மிகவும் பரவலாக செல்வாக்கு அடைந்திருந்தது. தொடக்க காலத்தில் கிரேக்க நாட்டிலிருந்த தத்துவஞானிகளுள் ஒரு வராக ஹிராக்ளிடஸ் (Heraclitus) விளங்கினார். இயலுலக அண்டத்தின் விசையையும், மாறுபாடுகளையும் ஒழுங்கு படுத்திக் கொண்டுள்ள ஏதோ ஒரு அடிப்படைத் தத்துவம் இருக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து ஆகும். மற்றும் அவர் அதை Logos என்று அழைத்தார். அதற்குப் பிறகு அது உலகளாவிய மெய்யறிவுடன் இனம் கண்டுகொள்ளப் பட்டது. அந்த மெய்யறிவின் ஒரு பகுதி மனிதனின் பகுத் தறிவு ஆகும். கிரேக்க அறிஞர் சீனோவின் (Zeno) கோட்பாட் டாளர்கள் அதற்கு இறைமைக் கோட்பாட்டின் மூலக்கூறை உணரவைக்கும் தன்மையை அளித்து, லோகோவை அவர் களுடைய பல தெய்வ வழிபாட்டின் கருத்துடன் இனம் கண்டு கொண்டனர். யூதர்கள் தொடக்கத்தில் இந்த உலக மானது 'கடவுளின் சொல்லால்' படைக்கப்பட்டது என்று கருதினர். அதற்குப் பிறகு யூத தத்துவ ஞானியான பிலோ ஆப் அலெக்ஸாந்திரியா என்பவர் இந்த 'சொல்' அல்லது 'கட வுளின் சுவாசத்தை' அதைச் சுதந்திரமாக உள்ள பொருள் என்று அமைத்து மற்றும் அதை லோகோஸ் என்று அழைத் தார். கடவுள், இந்த முழுமையற்ற உலகத்தில் லோகோஸின் தலையீடால் செயல் ஆற்றுகிறார் என்று அவர் கருதினார். நான்காவது விவிலிய 'நற்செய்திகளை' எழுதிய செயின்ட் ஜான், லோகோஸைக் கடவுளுடன் இனம் கண்டு கொண் டார். இவ்விரண்டும் முழுமுதற் கடவுளுக்கும் செயல்பாட் டிற்கும் உடைய இடுகுறிப் பெயர் என்று கருதினார். லோகோஸ் ஏசுநாதராக தற்குறிப்பேற்றம் பெற்றது.

இந்தியாவின் லோகோஸ் (சொல்) என்னும் கருத்தானது, இலக்கண நூலாசிரியர்களுடன் தொடங்கியது.

அவர்கள் அதை ஸ்ஃபோட்டா என்று அழைத்தனர். அதற்குப் பிறகு தந்திர சாத்திரங்கள் அதை மேலும் விரிவுபடுத்தின. மந்திர சாத்திரம் தந்திரசாத்திரங்களின் ஒரு பகுதியாக உள்ளது. அது முழு பிரம்மாண்டமும் அதிர்வலைகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது ஆகும். நாம் ஒலி என்று அழைப்பது புறத்திலுள்ள இயற்பொருள் சார்ந்த அதிர்வலைகள் ஆகும். காதுகளால் கேட்கத்தக்க ஒலியை விட, வானொலி அலைகளைப் போன்ற மின் காந்த இயல்புடைய அலைகள் இன்னும் சூட்சுமமானதாகும். அவைகள் ஆகாயத்தின் அதிர்வலைகள் ஆகும். வானொலி அலைகளைக் காதுகளால் கேட்கத்தக்க ஒலி அலைகளாக, ஒரு வானொலிப் பெட்டியின் உள்ளிருக்கும் பிரத்யேகமான கருவிகளின்மூலம் மாற்ற இயலும். எண்ண அலைகள் இன்னும் சூட்சுமமானவையாகும். எண்ணம்தான் நாதபிரம்மத்தின், இயலுலக அண்ட மனத்தின் சாசுவதமான, புலன்களுக்கு அப்பாற்பட்ட, இயலுலக அண்டத்தின் உயர்த்துடிப்புக்கள் ஆகும்.

நாதபிரம்மன் என்பது வெறும் கோட்பாடு சார்ந்த கருத்து அல்ல. அதை உணர இயலும். சூட்சுமமான மனத்தால் அதைக் கேட்க இயலும். சூட்சுமமான வானொலி அலைகளைக் கேட்பதற்குப் பிரத்யேகமான கருவிகள் தேவைப்படுவதைப்போல நாத பிரம்மத்தின் அதிர்வலைகளைக் கேட்பதற்கும் உயர்ந்த தூய்மையான மனம் தேவைப்படுகிறது. மனம் தூய்மைப்படுத்தப்பட்டு ஒருமுகப்படுத்தப்பட்டால், ஒருவரால் நிலைத்த மிக மிக சூட்சுமமான, இயலுலக அண்டத்தின் அதிர்வலைகளை மிக நீளமாக இழுத்துவிடப்படும் தொடர்ந்த ஒலியாக, அனாஹத ஒலியாகக் கேட்கவியலும். இது வெறும் கற்பனை அல்ல, அல்லது நோயால் பீடிக்கப்பட்ட நிலையுள்ள காதுகளால் ஏற்படுவதும் அல்ல. ஒருவன் அதிகமான அளவில், சிங்கோனாப் பட்டையின் காரமடங்கிய மருந்தை எடுத்துக் கொள்வதால் கேட்கப்படும் நோய் சார்ந்த ஒலிக்கும், அல்லது தலையில் பெரிய அடியை வாங்கிக் கொள்வதால் ஏற்படும் ஒலிக்கும் இந்த ஒலிக்கும்

எத்தகைய தொடர்பும் இல்லை. நீ உன் விரல்களால் காதுகளை மூடிக்கொள்ளும் பொழுது ஏற்படும் முரல்வு போன்ற ஒலியும் அல்ல. அது முற்றிலும் வேறுவகையைச் சார்ந்த அனுபவம் ஆகும். அது நீண்ட நாட்களாக மேற்கொண்ட நிலைத்த ஆன்மீகப் பயிற்சியின் விளைவு ஆகும். அனாஹத ஒலியானது, நாதபிரம்மனில் அல்லது இயலுலக அண்டத்தின் மனத்தில் தோன்றி, மீண்டும் அதையே சாரும் சூட்சுமமான ஒலி அதிர்வலையாகும். அது நீர் ஊற்றிலுள்ள நீரோட்டத்தைப் போன்றதாகும்.

மனம் அமைதியாகவும், ஆன்மீகப் போக்கு ஒரு உயர்ந்த மட்ட விழிப்புணர்வு நிலைக்கு உயர்ந்தும் இருந்தால்தான் இயலுலக அண்டத்தின் இத்தகைய சூட்சுமமான உயிர்த் துடிப்புக்களைக் கேட்க இயலும். ஆனால், ஆன்மீகப் பாதையைப் பின்பற்றும் ஒவ்வொருவராலும் இது கேட்கப்பட வேண்டும் என்னும் அவசியம் இல்லை. யாருடைய மனமானது அதனுடைய இலயத்திற்கு ஏற்ப சுருதி கூட்டப்பட்டுள்ளதோ, அவர்களால் மட்டுமே அதைக் கேட்க இயலும். ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள மற்றவர்களுக்கு வேறு அனுபவங்கள் ஏற்படும். அனாஹத ஒலியானது சுழுமுனை (ஸுஷும்னா) நாடியின் செயல்பாட்டுடன் தொடர்புடையதாகும். சுழுமுனை என்பது நம்மிடம் உள்ள முக்கியமான ஆன்மீக வழியாகும். அது முதுகுத் தண்டு வடத்திற்கு ஒப்பானது ஆகும். மிகப் பெரும்பாலான மனிதர்களுக்கு இந்த வழியானது மூடப்பட்டிருக்கிறது. தூய்மைப்பாடாலும், மிகத் தீவிரமான ஆர்வத்தாலும், மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட தன்மையாலும் இந்த வழியைத் திறக்கலாம். அப்பொழுது அதில் தோன்றும் ஆன்மீக ஓட்டம் ஒரு சூட்சுமமான ஆன்மீக இசையைத் தோற்றுவிக்கிறது. பண்டைக் காலத்தில் கிரேக்க நாட்டைச் சேர்ந்த பைத்தகோரஸ் என்னும் அறிஞரின் ஆதரவாளர்களான மெய்ஞ்ஞானிகள் இதை, 'வான்கோளத்தின் இசை' என்று கூறினர். ஹிந்து சமயத்தைச் சார்ந்த பக்தர்கள் சில நேரங்களில் இதை 'கிருஷ்ணரின் புல்லாங்குழல் இசை' என்று கூறுவார்கள். அது

எப்பொழுதும் நிலைபெற்று விளங்கும் கிருஷ்ணரின் உண்மையான புல்லாங்குழல் இசை ஆகும். இயலுலக அண்டத்தின் முழுமுதற் பொருளிடமிருந்து வெளிப்படும் தெய்வீக இசையானது, ஆன்மாவைப் புளகாங்கிதமடையச் செய்து, மற்றும் அதனை உயர்ந்த மட்டத்தைச் சார்ந்த ஆன்மீக விழிப்புணர்வு நிலைக்கு அழைத்துச் செல்கிறது.

சுவாமி விவேகானந்தர்,

'உச்சரிக்கப்படுகின்ற ஒலிகள் எல்லாமே அடி நாக்கிலிருந்து உதட்டு நுனிவரையிலுள்ள இடைப்பட்ட இடத்தில் தான் உருக்கொள்கின்றன. முதலில் தொண்டையிலிருந்து உண்டாகின்ற ஒலி அகரம். உதட்டில் முடிகின்ற கடைசி ஒலி மகரம். நாக்கின் அடிப்பகுதியிலிருந்து உதடு வரைக்கும் முன்னோக்கி உந்திவரும் ஒலி உகரம், சரியானபடி உச்சரித்தால், ஓங்காரம் ஒலியமைப்பு முறை முழுவதையுமே தன்னுள் அடக்கியதாகும். வேறு எந்த ஒலியும் இப்படி இல்லை. இதற்கு நிகராக எந்தச் சொல்லும் இல்லை. எல்லாச் சொற்களுக்கும் மூலகாரணம் ஸ்ஃபோடம்தான். ஆனாலும் அது முழு வடிவம் பெற்ற ஒரு தனித்த சொல் அல்ல. ஒரு சொல்லை மற்றொரு சொல்லிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற எல்லா இலக்கணங்களையும் நீக்கிக் கொண்டே வரும்பொழுது, மேலும் நீக்க முடியாதபடி எஞ்சியிருக்கும் மூலநாதம் எதுவோ, அதாவது வேறுபட்ட தோற்றத்திற்கு வருவதற்கு முன்பு இருந்த முழுமுதல் நாதம் எதுவோ, அதுவே ஸ்ஃபோடம் எனவேதான் ஸ்ஃபோடத்தை நாத பிரம்மம் என்று அழைக்கிறோம். ஓம் உண்மையாகவே கடவுளின் குறியீட்டுருவம் ஆகும்'[1] என்று கூறியுள்ளார்.

மந்திரம் என்பது என்ன?

இவ்விதம் நாம் ஓம் என்பதன் தனிச்சிறப்பானது எவ்வளவு ஆழமானது மற்றும் விரிவானது என்பதையும் கண்டு கொண்டோம். நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில்

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 1.436-437.

நமக்கு, ஜபத்திலும், தியானத்திலும் ஆன்மஞானம் அடைவதற்கான வழியில் பயன்படுத்தப்படும் 'ஓம்' என்பதன் இருளை அகற்றும் தன்மையை நாம் புரிந்துகொள்ளுவது தேவையான ஒன்றாகும். பொதுவாக ஓம் என்பது, பகுக்க முடியாத பரம்பொருளைக் குறியீடாகக் குறிப்பிட்டாலும், எந்த ஒரு இஷ்ட தெய்வத்துடனும் தொடர்பு கொள்ளும் வகையிலும் பயன்படுத்தப்படலாம். உண்மையாக அது, எல்லா புனிதமான சடங்குகளிலும், மற்றும் கூற்றுகளிலும் பயன்படுத்தப்படும் அளவிற்கு மிகப் புனிதமானதாகக் கருதப்படுகிறது. பொதுவாக, எப்படியிருப்பினும், கடவுளின் ஒவ்வொரு தனிப்பட்ட தன்மைக்கும் அதற்கான திட்டவட்டமான ஒலி அடையாளம் உள்ளது. கடவுளின் பெயர், மற்றும் சில சமயங்களில் தனிச் செறிவுடைய, உட்பொருளை உடைய பீஜங்கள் என்று அழைக்கப்படும் சொற்குறியீடு போன்றவற்றிற்கும் ஒரு அடையாளம் உள்ளது. இதைக் குறித்து சுவாமி விவேகானந்தர்,

'ஒன்றே ஒன்று' ஆகவும், அகண்ட சச்சிதானந்தப் பொருளாகவும் விளங்கும் நிறைவான பிரம்மத்தைக் குறைபாடு உடைய மனிதன் தன் தகுதிக்கு ஏற்ப ஒரு சில நிலைகள் உடையவராக, ஒரு சில பண்புகளுடன் கூடியவராக உணர்கிறான். அதுபோல, அவரது திருமேனியாக விளங்குகின்ற இந்த உலகமும் மனிதனின் மனப்பாங்கிற்கு ஏற்பவே உணரப்படுகிறது.

பக்தனின் இந்த மனப்பாங்கு, அவனது மனத்தில் மேலிட்டு நிற்கின்ற மூலகங்கள் அல்லது தத்துவங்களால் தீர்மானிக்கப்படுகிறது. இதன் பயனாக ஒரே கடவுள், பல வகை வடிவங்களில், பலவகை குணங்களுடன் அறியப்படுகிறார். ஒரே பிரபஞ்சம் பல்வேறு விதமாகக் காட்சியளிக்கிறது. வேறுபாட்டுக் கருத்துக்களை அவ்வளவாகக் கொண்டிராத உலகம்தழுவிய குறியீடான ஓங்காரத்தைப் பொறுத்தவரையில் கூட, எண்ணமும், ஒலிக்குறியீடும் இணைபிரியாமல் இருக்கும் நியதியைக் காண்கின்றோம். கடவுளைப் பற்றியும், உலகைப் பற்றியும் எழுந்துள்ள கணக்கற்ற

கருத்துக்களுக்கும் இந்த நியதி பொருந்தும். இதன்படி ஒவ்வொரு கருத்தும் ஒரு தனிப்பட்ட சொல் வடிவத்தைப் பெற்றுள்ளது. இந்தச் சொற்கள் (மந்திரங்கள்) முனிவர்களின் மிக ஆழ்ந்த ஆன்மீகக் காட்சிகளில் வெளிப்பட்டவையாகும். இவை இறைவனுடைய ஒரு தனிப்பட்ட இயல்பையும், அவை குறிக்கும் உலகத்தையும் நமக்குச் சொல் வடிவில் தெரிவிக்கின்றன. ஓம்காரம் முழுமுதற் பொருளின் வேறுபாடற்ற வடிவத்தைக் குறிப்பது போல, மற்ற மந்திரங்கள் அதே பிரம்மத்தின் தனித்தனியான இயல்புகளைக் குறிக்கின்றன. இவை எல்லாமே இறைவனைப் பற்றி தியானம் செய்யவும், உண்மையறிவை அடையவும் உதவியாக உள்ளது.[1]

வடமொழிச் சொல்லான சப்தம் என்பது ஒலி, மற்றும் சொல் என்னும் இரண்டையும் குறிக்கிறது. நாம் பேசும் பொழுது, நாம் கேட்பது வைகரீ என்று அழைக்கப்படும் ஒலியின் பொதுப்படையான உருவம் ஆகும். அது குரல்வளை அதிர்வு நாளங்கள், மற்றும் நாக்கின் அசைவுகளால் தோற்றுவிக்கப்படுகிறது. அதற்குப் பின்னணியில் சிந்திக்கும் செயற்பாங்கின் விளைவான சொல் உள்ளது. இந்த ஒலிக்கு மத்யமா என்று பெயர், எண்ணமே, பச்யந்தீ என்று அழைக்கப்படும் இன்னும் சூட்சுமமான உணர்வின் விளைவு ஆகும். அது அதனுடைய முறையில் வெளிப்படாமல் இருக்கும் சப்தபிரம்மனிடம் தோன்றுகிறது. ஒலியின் இந்த நிலை பரா என்று அழைக்கப்படுகிறது. எனவே பராவிலிருந்து, பச்யந்தீ மற்றும் மத்யமா மூலமாக வைகரீ வரையிலும் மனிதனின் எண்ண வாழ்க்கையானது பரவி இருக்கிறது. நம்முடைய அக உலகத்தைப் பற்றி எவ்வளவு குறைந்த அளவிற்கு எண்ணுகிறோம். நாம் எப்படி அக்கறையின்றி சிந்திக்கிறோம். மற்றும் எப்படி கவனமின்றிப் பேசுகிறோம்! சிந்திப்பது என்பது ஊக்கம் மிகுந்த செயல்முறையாகும். மற்றும் அதனுடைய மூலமாக வெளிப்படாத சூட்சுமமான ஆதாரம் உள்ளது. தவறான முறையில் சிந்திப்பது ஆழமாகச் செயல்பட்டு நம்

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 1. 438.

முழுமையான உடல்-மனம்சார்ந்த-அமைப்பைப் பாதிக்கிறது. அதைப் போன்றே, நல்ல எண்ணங்கள், நம்முடைய ஆளுமையின் ஆழமான மட்டங்களையும் கூட சீர் செய்கிறது.

நாம் சாதாரணமாகச் சிந்திப்பதில், நம் மனத்தின் ஆன்மீக அடித்தள அடுக்குகளைப்பற்றி உணராமல் இருக்கிறோம். ஆனால் மந்திரங்கள் என்று அழைக்கப்படும் சிறப்பான எண்ண விதிமுறை நம்மை அந்த மூலத்திற்கு அழைத்துச் செல்கிறது. தெய்வீக மந்திரத்தைப் பாராயணம் செய்து, மற்றும் அதன் பொருளில் உறைந்து இருக்கும் பொழுது, நாம் சூட்சுமமான, மிக சூட்சுமமான விழிப்புணர்வு மட்டங்களை அடைகிறோம். மற்றும் மேம்பட்ட, இன்னும் மேம்பட்ட ஆன்மீக அனுபவங்களால் பேரின்ப மடைகிறோம். முறையான ஜபத்தினால், செயலற்றுத் தோற்றமளிக்கும் ஒலிகளும் உயிர்ப்படைந்து மிகப் பெரிய ஆற்றலை அடைகின்றன. ஒவ்வொரு மந்திரத்திற்கும் அதனுள்ளே இயல்பான ஆற்றல் உள்ளது (மந்திர சைதன்யம்). ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைந்துள்ள ஒருவர் மந்திர பாராயணம் செய்யும்பொழுது அது அதனுடைய ஆற்றலால் நிரம்பி 'உயிர்' பெறுகிறது. அவர் ஒரு சீடனிற்கு மந்திரத்தை அளிக்கும்பொழுது இந்த ஆற்றலும் செலுத்தப்படுகிறது. மந்திரத்தின் ஆற்றலை, ஆன்மீக விதிமுறைகளை முறையாகப் பின்பற்றிக் கொண்டு தூய்மையான வாழ்வை வாழ்பவர்களால் மட்டுமே உணரவியலும்.

மந்திரம் என்னும் சொல்லிற்கு ஆன்மாவை எது பட்டறிவினால் விடுவிக்கிறதோ என்பது நேரடியான பொருள் ஆகும். மந்தமான மனம் உடையவர்களுக்கு ஒரு மந்திரம் என்பது வெறும் ஒரு சொல் அல்லது சுருக்கமான விதிமுறையாகும். ஆனால் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள மனிதனுக்கு அது மிகச் சிறந்த ஆற்றலுடன் கூடிய ஒருமுகப் படுத்தப்பட்ட எண்ணமாக விளங்கி, ஆழ்தடம் சார்ந்த ஆன்மீக அனுபவங்களுக்கு அழைத்துச் செல்கிறது. ஒருவர் மந்திரத்தை முறையாகப் பாராயணம் செய்தால், அவரால் மிகச் சிறந்த ஞானத்தையும் முக்தியையும் அடையவியலும்.

ஒரு யோகி ஒலியின் தடத்தைப் பின்பற்றிச் செல்வதால் அவனுடைய இஷ்ட தெய்வத்தின் ஆன்மீகத் திருக்காட்சிகளைப் பெற்று, அதன்பிறகு எல்லா விதமான ஒலி அதிர்வலைகளுக்கு அப்பாற் சென்று, ஒப்புயர்வற்ற பரம்பொருளை அடைகிறான்.

மந்திரங்களில் பல வகைகள் உள்ளன. மிகமிகப் பழைமை வாய்ந்த, மிகவும் புகழ் பெற்ற மந்திரங்களில் ஒன்றாக காயத்ரீ மந்திரம் விளங்குகிறது. 'நமச்சிவாய' என்பது சிவனுடைய, சிறப்பாக அறியப்பட்ட மந்திரமாக உள்ளது. 'நமோ நாராயணாய' என்பது நன்றாக அறியப்பட்டுள்ள விஷ்ணுவின் மந்திரமாகும். 'ஹரே ராமா ஹரே ராமா' போன்ற மந்திரங்களும், மற்றும், 'ஸ்ரீராம ஜயராம ஜய ஜய ராமா' என்பன போன்ற மந்திரங்களும் இலட்சக் கணக்கான ஹிந்துக்களால் கூறப்படுகின்றன. இந்த எல்லா மந்திரங்களும் கணக்கற்ற முனிவர்களின் வாழ்க்கைகளுடனும், அனுபவங்களுடனும் தொடர்புடையனவாக விளங்குகின்றன. ஒவ்வொரு மந்திரமும் சரியான முறையில் பாராயணம் செய்யப்பட்டால், சாதகனிடத்தில் குறிப்பிட்ட அதிர்வலைகளின் தொகுதியைத் தூண்டிவிடுகிறது. அது இறுதியாக தியானிக்கப்படும் தெய்வத்தையே வெளிப்படுத்தி விடுகிறது. தாந்திரிக மரபில் மந்திரங்கள் பொதுப்படையாக வெளிப்படுத்தப்படுவது இல்லை. ஒரு மந்திரத்தைத் தன் குருவிடமிருந்து பெற்றுக் கொள்ளும் சீடன் அதை இரகசியமாக வைத்துக் கொள்கிறான். மற்றும் அதை மிக நெருங்கிய உறவினர்களுக்கும் வெளிப்படுத்துவதில்லை. இந்த ஒவ்வொரு மந்திரமும், பீஜம் எனப்படும் முக்கியமான அசையை உட்கொண்டுள்ளது. அது அந்தக் குறிப்பிட்ட கடவுளின் சிறப்பான ஆற்றலைச் சுட்டிக்காட்டுகிறது. அது நம்மிடம் உள்ள தெய்வத்தின் படைக்கும் ஆற்றலை எழுப்புவதாகக் கூறப்படுகிறது.

ஜபத்தின் ஆற்றல்

மந்திரத்தின் ஆற்றலானது, தகுதியுடைய சாதகர்களிடத்தில் மட்டுமே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர், அவருடைய வாழ்வின் இறுதிக் கட்டத்தில் ஒருநாள் அவருடைய சீடரான நரேந்திரனுக்கு இராம மந்திரத்தைக் காசிப்பூர் தோட்ட வீட்டில் தீட்சையளித்தார். இது நரேந்திரனிடம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர் இயல்பாகவே தன்னடக்கம் என்னும் பெரிய ஆற்றலைப் பெற்றிருந்தார். இது நடைபெற்ற பொழுது அவர் ஒரு ஆனந்த பரவச நிலையை அடைந்து ஸ்ரீராமரின் திருநாமத்தை, 'ராமா, ராமா' என்று உரத்த உணர்ச்சி நிறைந்த குரலில் திரும்பக் கூறிக் கொண்டு அந்த வீட்டைச் சுற்றிச்சுற்றி வந்தார். அவருக்கு உண்மையாக வெளிப்புற உணர்வே இருக்கவில்லை. அதே முறையில் இரவு முழுவதையும் கழித்தார். குருதேவருக்கு இதைக் குறித்து அறிவிக்கப்பட்ட பொழுது, 'அவன் அப்படியே இருக்கட்டும். உரிய நேரத்தில் இயல்புநிலைக்குத் திரும்பு வார்' என்று கூறினார். சில மணி நேரங்களுக்குப் பிறகு நரேன் இயல்பு நிலைக்குத் திரும்பினார்.[1]

நம்முள்ளே எழும் ஒவ்வொரு சொல்லும் ஏதோ ஒரு கருத்து அல்லது விருப்பத்தின் வெளிப்பாடாக உள்ளது. மந்திரங்கள் மனிதனின் ஆன்மீக ஏக்கங்களுக்கான நிலைக் கோளாகத் திகழ்கிறது. ஒரு சாதாரணமான சொல்லானது கூறப்பட்டாலோ அல்லது கேட்கப்பட்டாலோ நம்மிடம் அது குறிப்பிட்ட கருத்தையோ அல்லது விருப்பத்தையோ தோற்று விக்கிறது. அதைப் போன்றே மந்திரங்களும் நம்மிடம் மறைந் துள்ள ஆன்மீக இயல்புகளைத் தோற்றுவிக்கும். இத்தகைய மறைந்துள்ள ஆன்மீக இயல்புகளின் வெளிப்பாடுகள் ஒரு குறிப்பிட்ட பண்பாடு உடைய குழுவிடத்தில் பொதுப்படை யாக இருக்கும். எனவே ஒவ்வொரு குறிப்பிட்ட பண்பாடு உடைய குழுவிற்கும் அவர்களுடைய சொந்தமான சொல் அடையாளம் அல்லது மந்திரங்கள் இருக்கும். இவைகள் முறையாகப் பாராயணம் செய்யப்பட்டால் ஆன்மீக நாட்டத்தைத் தோற்றுவிக்கின்றன. பொதுவாக இவை

1. The Life of Swami Vivekananda, *பக்கம் 130.*

பெரும்பாலான மனிதர்களிடம் மறைந்தே உள்ளன. மனிதனிடத்தில் மறக்கப்பட்டுள்ள ஆன்மீக இயல்பை விழிப்படையச் செய்வதுதான் ஜபத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு சாதகனுக்கும் ஒரு இஷ்ட தெய்வம் இருக்க வேண்டும். குறிப்பிட்ட மந்திரம் இருக்க வேண்டும். மற்றும் நிலைத்த விழிப்புணர்வு மையம் இருக்க வேண்டும். சாதகன் எப்பொழுதுமே அவனுடைய விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

ஜபம் அல்லது கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்வதை பல வகைகளில் செய்யலாம்.

சாதகன் அதை உரக்கவும் கூறலாம். அவனுக்குக் கேட்கும் அளவிற்காவது உரக்கக் கூறலாம். இது வாசிகம் எனப்படும். அல்லது உதடுகளை மட்டும் அசைத்து செவிகளுக்குக் கேட்காதவாறு முணுமுணுக்கலாம். இவ்விதம் பாராயணம் செய்வது உபாம்ஸு எனப்படும். நாக்கோ அல்லது உதடோ அசையாதவாறு மந்திரத்தை மனத்திலேயே பாராயணம் செய்வது மூன்றாவது முறையாகும். மௌனமாக இவ்விதம் பாராயணம் செய்யப்படும் முறை மானசீகம் என்று அழைக்கப்படுகிறது. மனத்திலேயே பாராயணம் செய்வது தான் நிச்சயமாகச் சிறந்த முறை ஆகும். ஆனால் செய்வது கஷ்டம் என்று கருதுகின்றவர்கள், மற்ற இரு முறைகளைப் பின்பற்றலாம். ஜபம் செய்யும் பொழுது சாதகன் அவனுடைய விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியமானது ஆகும்.

உலக சமயங்களில் ஜபம்

'உன் கடவுளாகிய ஆண்டவனின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே' என்பதையும் மற்றும் ஏசுநாதரின் 'வீணாக மீண்டும் மீண்டும் கூறுதலை'க் கண்டிப்பதையும் பல வகைகளில் விளக்கம் அளிக்கலாம். பொதுவாகக் கூறுமிடத்தில், கிறிஸ்தவ சமயத்தில், விண்ணப்பம் செய்து கொள்ளும் பிரார்த்தனைதான், கடவுளின் திருநாமத்தைப்

பாராயணம் செய்வதை விட வலியுறுத்தப்படுகிறது. இருப்பினும் கத்தோலிக்கர்கள் AVE MARIA (HAIL MARY) என்று நாம பாராயணம் செய்வதற்கு ஜபமாலையைப் பயன்படுத்துகின்றனர். நாம் கிரேக்க மரபு வழுவாத கிறிஸ்தவர் தொகுதியில் ஹிந்துக்களின் ஜபம் செய்யும் முறையை ஒத்துள்ள, ஒருவகையான பிரார்த்தனைப் பாராயணத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருப்பதைக் காண்கிறோம். வரலாற்றின் இடைக்காலத்தில் வாழ்ந்த கிரேக்க நாட்டு புனித மகான்கள் 'Jesus Prayer' (ஏசுநாதர் பிரார்த்தனை) என்று அழைக்கப்பட்ட எளிமையான முறைப்படுத்தப்பட்ட பாராயணம் செய்யும் உத்தியில் 'The way of a Pilgrim' என்னும் பலராலும் அறியப்பட்டுள்ள நூலில் இந்த உத்தியானது வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

'என்ன வேலை செய்து கொண்டு இருப்பினும், எப்பொழுதும், எல்லா இடங்களிலும், உறங்கும் பொழுதும் கூட, அவருடைய சாசுவதமான இருப்பை மனத்தில் வடிவமைத்துக் கொண்டு அவருடைய அருளைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, தொடர்ந்து இடைவிடாத முறையில் ஏசுநாதரின் தெய்வீகத் திருநாமத்தை உதடுகளாலும், உணர்வாலும், இதயத்தாலும் கூறுவது ஆகும். இது ஏசுநாதரைக் குறித்து தொடர்ந்து செய்யப்படும் மானசீக பிரார்த்தனையாகும். வேண்டுதல், இத்தகைய சொற்கூறுகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. 'இறைவனே, ஏசுநாதரே, என்மீது கருணை காட்டுவாய்.'

இஸ்லாமிய சமயத்தில் ஸூபி மெய்ஞ்ஞானிகள் பல நூற்றாண்டுகளுக்கு, அல்லா அல்லது அலி என்று நாம பாராயணம் செய்வதை ஆன்ம ஞானம் அடைவதற்கான வழிமுறையாகப் பயன்படுத்தி வந்தனர். 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த இஸ்லாமிய இறைமைநூல் இயல் பேராசிரியரான AL-GHAZALI அவர்களின் கல்விச்சாலையில் தீட்சை அளிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட போதனை பின்வருமாறு உள்ளது.

சாதகன் ஏதாவது ஒரு மூலையில் தனியாக அமர்ந்து கொள்ள வேண்டும். அவன் தனது மனத்தில் மிக உயர்ந்த கடவுளைத் தவிர வேறு எதுவும் நுழையாதிருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். பிறகு அவன் தனியிடத்தில் தனித்து இருக்கும்பொழுது, அவன் தன்னுடைய நாக்கினால் அல்லா அல்லா என்று தொடர்ந்து விடாமல், அவனுடைய எண்ணத்தை அதில் நிறைநிறுத்தி கூற வேண்டும். இறுதியில் அவனுடைய நாக்கினுடைய அசைவு நின்றுவிடும் ஒரு நிலையை அவன் அடைவான். மற்றும் அதிலிருந்து சொல் வெளிப்பட்டது போல இருக்கும். அவனுடைய நாக்கிலிருந்து அசைவின் தடம் அகற்றப்படும்வரை அவன் இதில் விடா முயற்சியுடன் இருக்க வேண்டும். அவனுடைய இதயமானது அந்த எண்ணத்திற்கு ஆட்பட்ட நிலையில் இருப்பதை அவன் உணர்வான். அவன் அந்தச் சொல்லின் வடிவம் அதன் எழுத்துக்களும் வடிவமும் அவன் இதயத்திலிருந்து அகலும் வரையிலும் முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது அங்கு கருத்து மட்டுமே உள்ளது. அவன் இதயத்திலிருந்து பிரிக்க வியலாத நிலையில், இதயத்தைப் பற்றிக் கொண்டிருப்பதைப்போல உள்ளது. கடவுள் அவனுக்கு எதைத் திறந்து காட்டப்போகிறார் என்பதற்குக் காத்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு ஒன்றும் இருப்பதில்லை. அவன் மேலே கூறப்பட்டுள்ள வழிமுறையைப் பின்பற்றினால் மெய்ப்பொருளின் பேரொளியானது அவன் இதயத்தில் ஒளிரும் என்பதில் அவன் உறுதியுடன் இருக்கலாம்.

புத்த சமயத்தில் ஒழுக்க நெறிமுறையுடன் கூடிய வாழ்வும், தியானமும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால், மஹாயான புத்தமதப்பிரிவில், ஞானத்தை அடையும் வழி முறையாக நாமபாராயணம் குறிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிலுள்ள பலராலும் நன்கு அறியப்பட்ட 'சின்' என்னும் சமய உட்பிரிவில் சாதகன் தொடர்ந்து 'நமோ அமிதாபா புத்தாயா' (ஜப்பானிய மொழியில் அது நமு-அமிதா-புட்சு என்று உள்ளது) என்று கூறுகிறான். ஸுகாவதி வ்யூஹ ஸூத்திரம் என்னும் நூலின் விளக்கவுரையில் ஒரு பகுதி உள்ளது.

'அமிதா என்னும் திருநாமத்தை இதயபூர்வமாக, நடக்கும் பொழுதும், அல்லது நிற்கும் பொழுதும், அமர்ந்திருக்கும்பொழுதும் அல்லது படுத்துக் கொண்டிருக்கும் பொழுதும், ஒரு கணம்கூட அதை நிறுத்தாமல் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்க வேண்டும். இந்த பயிற்சி அமிதாபுத்தாவின் மூல சப்தத்துடன் ஒத்திருப்பதால் உறுதியாக முக்தியை விளைவிக்கிறது.'

மற்றொரு திருமறை நூலான ஸுரங்காமா ஸுத்திரம் 'இந்தப் பயிற்சியால் ஏற்படும் (அமிதாபா புத்தா என்னும் நாமபாராயணம் செய்வது) பயன் இதுவாகும். இந்த ''அமிதாபா புத்தா'' என்னும் திருநாமத்தை நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் யார் ஒருவர் கூறினாலும், நிச்சயமாக புத்தா அமிதாபாவைக் காண்பார்கள். மற்றும் அவரிடமிருந்து ஒருபொழுதும் பிரியமாட்டார்கள். அவ்விதம் தொடர்பு கொண்டிருக்கும் காரணத்தால், நறுமணப் பொருட்களைச் செய்பவர்கள் அந்த நறுமணத்தால் ஊடுருவப் படுவதைப் போல அவர்களும் அமிதாபாவின் அருளால் நறுமணம் ஊட்டப்படுவார்கள். வேறு எந்த வழியையும் சாராமல் ஞானம் அடைவார்கள்.'

ஹிந்து சமயத்தில் ஜபம்

ஹிந்து சமயத்தில், ஜபத்திற்கு ஏதாவது ஒரு வகையில் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். தென்னிந்தியாவைச் சேர்ந்த சைவ, வைணவ புனித மகான்களும், வட இந்தியாவைச் சேர்ந்த சிறந்த புனித மகான்களும் கடவுளின் திருநாமத்தைத் தொடர்ந்து பாராயணம் செய்வதை மிகவும் வலியுறுத்தியுள்ளனர். துக்காராம் வருமாறு பாடியுள்ளார்.

'கடவுளே உன் திருநாமம் என்
எண்ணங்களில் நிறையும் பொழுது
உன்னிடம் என் அன்பு சுடரென உயர்ந்து
மகிழ்ச்சியால் என் உதடு மௌனமாகட்டும்

என் கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நிறைந்து
ஒவ்வொரு உறுப்பும் பரவசமுற்று
ஆம், உன் அன்பால் என் உருவம்
நுனிவரை நிறைந்து தோன்றட்டும்

இவ்விதம் என் உடல் சக்தி அனைத்தையும்
மகிழ்வுடன் போற்றும் பாடல்களில் செலவழித்து
எல்லா இரவுகளிலும் பகல்களிலும் உன்
பெயரை நான் பாடுவது எப்பொழுதும் ஓயாது

ஆம், எப்பொழுதும் அப்படிச் செய்வதாக துக்கா
கூறுகிறான். இதுதான் மிகச் சிறந்தது
இதனால் புனிதமகான்களின் திருவடிகளில்
நிலைத்த அமைதி உண்டென நான் அறிவேன்.[1]

குரு நானக்கும், அவரைப் பின்பற்றுபவர்களும் தெய்வத் திருநாமத்திற்குப் பெரிய முக்கியத்துவத்தை அளித்துள்ளனர். இறைவனின் திருநாமத்தை விடாமல் தொடர்ந்து கூறுவது நானக்கால் அறிவுறுத்தப்பட்ட முக்கியமான விதிமுறையாகத் திகழ்கிறது. வங்காளத்தில் சைதன்ய மஹாபிரபு எல்லாப் பிரிவைச் சேர்ந்த மனிதர்களிடத்திலும் ஜபத்தை நன்கு அறியப்பட்டதாகச் செய்தார். நாமருசி, ஜீவதயை மற்றும் வைஷ்ணவசேவை என்னும் மூன்று கொள்கைகள் அவரைப் பின்பற்றுபவர்களின் கோட்பாடாக உள்ளது. அவர் இளைஞ னாக இருந்தபொழுது (சைதன்யர்) அறிவுபூர்வமான திறமைக்கும், புலமைக்கும் பெயர் பெற்றவராக விளங்கி னார். ஆனால் அவர் எல்லாவற்றையும் துறந்து தெய்வீக அன்பால் எழுச்சியடைந்தவராக விளங்கினார்.

இதயம் என்னும் கண்ணாடியைத் தூய்மைப்படுத்தும் மற்றும் உலக வாழ்க்கை என்னும் பெரும் காட்டுத் தீயை அணைக்கும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் நாமசங்கீர்த்தனம் ஒப்புயர்வற்ற புகழ் அடையட்டும். இது இறுதியான

---

1. Nicol Macnicol, Psalms of Maratha Saints (கல்கத்தா, அஸோஸி யேஷன் பிரஸ்) பக்கம் 71-72.

விண்ணுலகப் பேரின்பத்தின் வெள்ளைத்தாமரையின் மீது பாயும் நிலவொளியாகும். அது, ஆன்மஞானம் (வித்யை) என்னும் மணப்பெண்ணின் வாழ்வாகவும், ஆன்மாவாகவும் உள்ளது. அது பேரின்பப் பெருங்கடலைப் பொங்கச் செய்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் மிக இனிமையான அமுதத்தை அளிக்கிறது. கூறப்போனால் அது அனைவருக்கும் அமைதியை அளிக்க வல்ல நீராட்டு ஆகும்'[1] என்று அவர் பாடியுள்ளார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறியுள்ளார்.

'ஜபம் என்றால் தனிமையில், மௌனமாக இறைவனின் திருநாமத்தைப் பாராயணம் செய்வது ஆகும். நீ ஒருமுகப் படுத்தப்பட்ட மனத்துடன் கூடிய பக்தியினால் கடவுளின் திருநாமத்தைக் கூறும் பொழுது, கடவுளின் வடிவத்தைக் கண்டு கடவுளை உணரலாம். அவர் அருள் கிடைக்கிறது. ஒரு பெரிய மரக்கட்டை தண்ணீரில் மூழ்கிக் கிடக்கிறது. அதைச் சங்கிலியால் கரையில் கட்டியிருக்கிறார்கள். சங்கிலியின் வளையங்களை ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொண்டே போனால் கடைசியில் பெரிய கட்டையைத் தொட்டு விட லாம். அதைப் போன்றே, கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்வதால் நீ அவருடன் இரண்டறக் கலந்து இறுதியாக அவரை உணரலாம்.'[2]

தூய அன்னையார் அவர்கள் சாதனை செய்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு நாளைக்கு ஒரு லட்சம் நாம ஜபங்கள் செய்வார். அவர் தன்னுடைய வாழ்க்கையில் இறைவனின் திருநாமத்தின் ஆற்றலை மெய்ப்பித்துக் காட்டி உள்ளார். ஜபத்தினாலும், தியானத்தினாலும் அவர் உடல் உணர்வை இழப்பார் மற்றும் மேம்பட்ட விழிப்புணர்வு நிலையின்

1. சேதோ தர்பணமார்ஜனம் பவமஹாதாவாக்னி நிர்வாபணம்
ச்ரேய: கைரவசாந்திரிகாவிதரணம் வித்யாவதூஜீவனம் ।
ஆனந்தாம்புதிவர்தனம் ப்ரதிபதம் பூர்ணாம்ருதாஸ்வாதனம்
ஸர்வாத்மஸ்னபனம் பரம் விஜயதே ஸ்ரீகிருஷ்ண ஸங்கீர்த்தனம் ॥
—ஸ்ரீசைதன்யரின் சிக்ஷாஷ்டகம், 1.

2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.468.

அனுபவங்களின் உயரங்களுக்கும் செல்வார். அவர் அவருடைய போதனைகளில் மீண்டும் மீண்டும் ஜபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். இங்குக் கொடுக்கப் பட்டுள்ள தூய அன்னையார் மற்றும் அவரது சீடர்களுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் அதைத் தெளிவாக விளக்குகிறது.

சீடர்: அம்மா, குண்டலினி சக்தி எழுச்சி அடையாமல் இருந்தால், எதையும் அடைய முடியாது.

அம்மா: குழந்தாய், அப்படித்தான் குண்டலினி படிப்படி யாக எழுப்பப்படும். நீ கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்வதால் எல்லாவற்றையும் உணர்வாய். மனம் அமைதி யற்று இருப்பினும், நீ ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு இறை வனின் புனிதமான திருநாமத்தை லட்சம் முறைகள் கூறலாம். குண்டலினி சக்தி எழுச்சி அடைவதற்கு முன்பு ஒருவர் அனாஹத ஒலியைக் கேட்கலாம். ஆனால் தெய் வீக அன்னையின் திருவருளின்றி எதையுமே சாதிக்க இயலாது.[1]

கோயல்பாராவில் ஒரு சீடர் தூய அன்னையாரிடம், 'அம்மா, என் மனம் மிகவும் அமைதியற்று உள்ளது. என்னால் எந்த வழியிலும் அதை ஒருநிலைப்படுத்த இயலவில்லை' என்று கூறினார். அதற்கு அன்னை, 'காற்றானது மேகங்களைக் கலைத்து விடுவ்தைப் போல, கடவுளின் திருநாமமானது உலகியல் ஈடுபாடு என்னும் மேகத்தைக் கலைத்துவிடுகிறது' என்று கூறினார்.[2]

'ஒருவர் இறைவனின் திருநாமத்தை ஒரு நாளைக்கு 15 அல்லது 20 ஆயிரம் முறைகள் கூறினால் மனம் ஒரு நிலைப்படும். அது உண்மையாகும். ஓ! கிருஷ்ணலாலே, அதை நானே உணர்ந்து இருக்கிறேன். முதலில் அவர்கள் அதை மேற்கொள்ள வேண்டும். அதில் அவர்கள்

---

1. Sri Sarada Devi The Holy Mother, *பக்கம் 401.*
2. *மேற்கண்ட நூல், பக்கம் 405.*

தோல்வியடைந்தால் பிறகு அவர்கள் அதைப்பற்றி முறையிடலாம். ஒருவர் சிறிதளவு பக்தியுடன் ஜபத்தை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவ்விதம் செய்யப்படுவது இல்லை. அவர்கள் எதையுமே மேற்கொள்ள மாட்டார்கள். ஆனால், 'நான் ஏன் வெற்றி பெறவில்லை? என்று மட்டும் முறையிடுவார்கள்.'[1]

'ஒருவர் ப்ராரப்த கர்மத்தின் பயனை அனுபவித்தே ஆக வேண்டும். அதிலிருந்து யாராலும் தப்ப இயலாது. ஆனால் ஜபம் அல்லது இறைவனின் புனிதமான திருநாமத்தைப் பாராயணம் செய்வது அதனுடைய தீவிரத்தைக் குறைக்கும். ஒரு மனிதன் அவனுடைய காலை இழப்பதற்கு விதிப்பட்டுள்ளான். ஆனால் அவன் அதற்கு பதிலாக, அவனுடைய காலில் முள் குத்துவதால் ஏற்படும் வேதனையை மட்டும் அடையும் நிலையைப் போன்றதாகும்.'[2]

ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த சீடர்களில் ஒருவராகிய சுவாமி பிரம்மானந்தர், ஜபத்தைப் பெரிய அளவில் வலியுறுத்தியுள்ளார். ஒருமுறை ஒரு சீடர் அவரிடம், 'மஹராஜ், குண்டலினி சக்தியை எப்படி எழுப்ப வேண்டும்?' என்று கேட்டார். அதற்கு மஹராஜ், 'அதை எழுப்புவதற்கு தனிப்பட்ட சில பயிற்சிகள் உள்ளன என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் ஜபத்தின் மூலமும், தியானத்தின் மூலமும் அதை எழுப்ப முடியும் என்று நான் நம்புகிறேன். ஜபம் செய்வது தான் இந்தக் காலத்திற்கு தனிப்பட்ட முறையில் பொருத்தமானதாக இருக்கும்.'[3]

மற்றொரு சமயத்தில் அவர் வருமாறு கூறினார். 'ஜபம், ஜபம், ஜபம்! நீ வேலை செய்து கொண்டிருக்கும் போதும் ஜபம் செய்வாய். உன்னுடைய எல்லா செயல்பாடுகளுக்கிடையில் கடவுளின் திருநாமத்தை நூற்றுக் கொண்டிருப்பாய். உன்னால் இதைச் செய்ய இயலும் எனின், இதயத்தின்

1. மேற்கண்ட நூல், பக்கம், *398*.
2. மேற்கண்ட நூல், பக்கம், *423*.
3. The Eternal Companion, பக்கம் *275*.

எல்லா எரிச்சலும் தணிந்து விடும். பாவிகள் பலரும், கடவுளின் திருநாமத்தில் புகலடைந்து, தூய்மையடைந்து, தெய்வீகத் தன்மையடைந்து விடுதலை அடைந்துள்ளனர். கடவுளிடமும், அவருடைய திருநாமத்திலும் தீவிரமாக நம்பிக்கை வைப்பாய். அவை வேறு வேறானவை அல்ல என்பதையும் அறிந்து கொள்வாய்.'[1]

'நாங்கள் இந்த மேற்கோள்களை எல்லாம் எதற்குக் கொடுத்திருக்கிறோம்? இவ்வனைத்தும் எதைக் காட்டு கின்றன? ஞானமடைந்தவர்களின் இத்தகைய சொற்கள், இறைவனின் திருநாமத்தில் மிகப் பெரிய சக்தி உள்ளது என் பதைக் காட்டுகின்றன. ஒருவருக்கு இந்த சக்தியில் நம்பிக்கை இருக்க வேண்டும். நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான மனிதர்கள் ஜபத்தின் மூலம் ஆன்மீக முன்னேற்றம் அடைந் துள்ளனர். அது ஒரு முக்கியமான ஆன்மீக ஒழுக்க விதிமுறை யாகும். இறைவனுடைய திருநாமத்தின் சக்தியானது சாதகனுள் முன்னோ, பின்னோ, தன்னைக் கண்டிப்பாக உணர்த்திக்கொள்ளும். தெய்வத் திருநாமமானது, மனத்தில் எழும் கெட்ட எண்ணங்களை எதிர்த்துத் தடைசெய்யும். இறைவனுடைய திருநாமத்தைத் தொடர்ந்து பாராயணம் செய்யாமல் முற்றிலும் தூய்மையான வாழ்வை மேற்கொள்ள இயலாது. நான் வாழ்க்கையில், என்னுடைய சொந்த உண்மையான அனுபவத்திலிருந்து பேசிக் கொண்டு இருக் கிறேன். எனவே நாம் இறைவனின் திருநாமத்தைத் தொடர்ந்து கூறுவோம். நம்முடைய உடலும், மனமும் தூய்மையடைந்து ஆன்மீக அதிர்வலைகளை பரவச் செய்யட்டும். இறைவனின் திருநாமம் நம் தடைகளை அகற்றி, நம் ஆன்மாவை வான்பேருயிருடன் தொடர்பு படுத்தி, ஜீவாத்மனைப் பரமாத்மனுடன் தொடர்பு படுத்தட்டும்' ஆன்மாவை மேம்படுத்தி பரம்பொருளுடன் இரண்டறக் கலக்கச் செய்யும் ஆன்ம இசையைப்பாடுவதற்கு நாம் கற்றுக் கொள்வோம்.

---

1. மேற்கண்ட நூல், பக்கம், 297.

சில நடைமுறை யோசனைகள்

முதலில் பருப் பொருள் மட்டத்தைச் சார்ந்துள்ள நிலையிலிருந்து உயர்ந்து எண்ண மட்டத்திற்கு வர வேண்டும். அதற்குப் பிறகு ஆன்மீக மட்டத்திற்கு உயர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். உயர்ந்த ஆன்மீகப் போக்குகளுடன் தொடர்பு கொள்வதற்கு முன்பு, நம்மிடமுள்ள கீழான போக்குகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். கீழ்மட்டத்திலுள்ள அதிர்வலைகள் மிகவும் வலிமையுடன் இருக்கும் பொழுது, இறைவனின் திருநாமத்தை விறுவிறுப்புடனும், விடாப்பிடியுடனும் கூற வேண்டும். நம்முடைய வளி மண்டலம், பலவகைப்பட்ட மூலங்களிலிருந்து ஒலி அதிர் வலைகளை நிறைத்துக் கொண்டு உள்ளது. இவை நம் அறிவிற்கு எட்டாமலே நம்மைப் பாதிக்கின்றன. நீ வானொலி ஒலிபரப்பின் மூலம் இசையைக் கேட்டால், பலவகைப்பட்ட இசையின் சாயல் நுட்பத்தை உன்னால் வேறுபடுத்திக் கண்டறிய முடியும். சில வகையான இசை உன்னை எழுச்சியுறச் செய்கிறது. சில வகையான இசை உன்னை அமைதியற்றவனாக ஆக்குகிறது. சில வகையான இசை உன்னைத் தன்னிலை மறக்கச் செய்கிறது. கெட்ட இசையை பஜனைகள் மற்றும் புனிதமான நூல்களைப் படிப்பதன் மூலமும் எதிர்த்துத் தடை செய்ய வேண்டும்.

உனக்குச் சொந்தமான அக இசையைத் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும். உண்மையாக அது தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. நீ உன் மனத்தை முறையாக உள்முகமாகச் சுருதி சேர்த்தாய் எனின், உன்னால் அதைக் கேட்க இயலும். ஆன்மாவை மயக்கும் கிருஷ்ணரின் புல்லாங் குழலின் இன்னிசையை அகத்தில் கேட்க வியலும். அது ஆன்மாவைப் பேரின்பத்தால் நிறைக்கிறது. மற்றும் உடலையும், மனத்தையும் அமைதியில் நீராட்டுகிறது.

ஜபத்தைத் தொடங்குவதற்கு முன்பு நம்பிக்கை மிக அவசியமாக இருக்க வேண்டும். முதலில், ஜபம் செய்வது ஓரளவிற்கு இயந்திரகதியில் இருந்தாலும் அதைக் குறித்துக்

கவலை கொள்ள வேண்டாம். ஆனால் ஒருவருக்கு மந்திரத்தின் ஆற்றலில் நம்பிக்கை இருக்க வேண்டும். தொடக்க நிலையில் இருக்கும் சாதகன், அவனுடைய விழிப்புணர்வு மையமானது மேலே செல்வது, கீழே வருவது, என்று தொடர்ந்து இவ்விதத்தில் மாறிக் கொண்டே இருப்பதைக் காண்கிறான். ஒவ்வொரு சாதகனுக்கும் இது மிகவும் கஷ்டமாக இருக்கும். தொடக்கத்தில் அதனுடைய விளைவு என்னவாக இருந்தாலும், அளவற்ற பொறுமையுடன், ஒழுங்கான குறித்த நேரங்களில் அவன் ஜபம் செய்வதை மேற்கொள்ள வேண்டும். உரிய காலத்தில் வெற்றியை அடைவதற்கு இது ஒன்றுதான் வழியாகும்.

நீங்கள் ஜபம் அல்லது தியானம் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது, நீங்கள் உங்களை ஒரு பொழுதும் அரைத் தூக்க நிலையில் இருப்பதற்கு அனுமதித்தல் கூடாது. இது மிகவும் ஆபத்தானது ஆகும். உறக்கம், அரைத் தூக்கம், மற்றும் தியானம் என்னும் இவை எந்த விதத்திலும் தொடர்புபடுத்தப்படக் கூடாது. உனக்குச் சோர்வாக இருந்தால், எழுந்து அந்த அறையிலேயே, சோர்வு உன்னை விட்டு அகலும் வரையிலும் அங்கும் இங்கும் நடக்க வேண்டும். மனம் பொறுக்க முடியாத அளவிற்கு அமைதியற்று, வெளிப்பொருட்களை நோக்கிச் சென்றால் நாம் விடாப்பிடியாக ஜபத்தைத் தொடர வேண்டும். இயந்திர கதியில் கூடச் செய்யலாம். இந்த அமைதி அமைதியற்ற நிலைக்கு உட்படாமல் அந்த வழியில், நம்முடைய மனத்தின் ஒரு பகுதியாவது ஜபம் செய்வதில் ஈடுபட்டு இருக்கும். இவ்வாறு முழுமனமும் அந்த நிலையில் நிலைத்தும் இருக்க வியலாது.

உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் பெயரையோ, அல்லது மந்திரத்தையோ ஒவ்வொரு முறை கூறும் பொழுதும் உன்னுடைய முழு உடலும், மனமும், புலன்களும் தூய்மையடைந்து கொண்டிருப்பதாகக் கற்பனை செய்ய வேண்டும். இந்த நம்பிக்கையானது உறுதிபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் ஒருவகையில் இதுதான் ஜபத்திற்கு

ஆதாரமான கருத்து ஆகும். இஷ்ட செய்வத்தின் பெயரானது ஒருவருடைய நரம்புகளைத் தணிவு செய்கிறது. மனத்தை அமைதிப்படுத்துகிறது. மற்றும் உடலில் உதவத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துகிறது. மனம் மிகவும் உளைச்சல் நிறைந்த, உலைவுடன் கூடிய நிலையில் இருந்தால், உடனடியாக இஷ்ட தெய்வத்தின் பெயரை மெல்லிய குரலில் கூறிக் கொண்டு, கடவுளைப் பற்றி நினைக்க வேண்டும். இது உன் மனத்திலும் உடலிலும் சமநிலையை, ஒரு புதிய இலயத்தை ஏற்படுத்துவதாகக் கற்பனை செய்ய வேண்டும். உண்மையாக இது எப்படி உன் முழு நரம்பு மண்டலத்தையும் அமைதிபடுத்துகிறது என்பதையும், வெளியே செல்லும் இயல்புடைய மனத்தை எப்படி இது நிறுத்துகிறது என்பதையும் நீ உணர்வாய்.

நீ ஜபம் செய்வதற்கு முன்போ அல்லது ஜபம் செய்யும் பொழுதோ இலயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சியையும் மேற்கொள்ளலாம். இலயத்துடன் கூடிய சீரான மூச்சுப் பயிற்சியானது அமைதியை அளிக்கிறது. நரம்பு மண்டலத்திற்கு உறுதியான சமநிலையையும் அளிக்கிறது. மற்றும் உன்னுடைய ஆன்மீகப் பயிற்சிகளில் முன்னேற்றமடைவதற்கு உதவுகிறது. நீ மூச்சுப் பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது உன்னுடைய மனத்திற்கு, 'நான் தூய்மையை உள்ளே இழுத்துக் கொள்கிறேன், எல்லாத் தூய்மைக் கேடுகளையும் வெளியேற்றுகிறேன். நான் வலிமையை உள்ளே இழுத்துக் கொள்கிறேன், எல்லா பலகீனங்களையும் வெளியேற்றுகிறேன். நாம் அமைதியை உள்ளே இழுத்துக் கொள்கிறேன். எல்லா அமைதியற்ற தன்மைகளையும் வெளியேற்றுகிறேன், நான் விடுதலையை உள்ளே இழுத்துக் கொள்கிறேன், எல்லா பந்தங்களையும் வெளியேற்றுகிறேன்' என்று திடமான யோசனைகளை வழங்க வேண்டும். இத்தகைய யோசதனைகளை நீ ஜபம் செய்யும்பொழுதும் அளிக்கலாம். இவை உண்மையான பயிற்சிக்கு அடித்தளத்தை ஏற்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

புனிதமான எண்ணமானது உடலிற்கும், மனத்திற்கும் ஐயத்திற்கு இடமின்றி இசைவுடைமையைத்

தோற்றுவிக்கிறது. நீ ஒவ்வொரு முறை மந்திரத்தைக் கூறும் பொழுதும் நீ மேலும் மேலும் தூய்மையடைகிறாய் என்று எண்ண வேண்டும். உடனடியாக ஜபத்தின் பயனை உன்னால் அறிந்துகொள்ள இயலாது. சில காலத்திற்கு விடாமுயற்சி யுடன் உறுதியுடன் பயிற்சி செய்து கொண்டிருந்தால் உன் னால் அதை உணரவியலும். மற்றும் சில ஆண்டுகளுக்குப் பிறகு உன்னிடம் எத்தகைய பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து நீ வியப்படைவாய். பல தடவைகள் முயன்று செய்வதற்குக் குறியிலக்கு உள்ளது. உடலும், நரம்பு களும் ஒரு குறிப்பிட்ட அளவிற்காவது ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். மற்றும் இலயத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். பயிற்சியின் மூலம் உடல், மனம், சுவாசம் என்னும் அனைத்தையும் இலயம் நிறைந்ததாக நாம் செய்ய வேண்டும். அதன்பிறகுதான் ஆன்மீகப் பயிற்சிகளுக்கும் தியானத்திற்கும் நம்மால் சரியான மனநிலையுடன் இருக்க வியலும் மற்றும் அவற்றைச் சரியான ஆர்வத்துடனும் முறை யாகவும் செய்ய இயலும். அனைத்துமே பூர்வாங்க நிலை களுடன் தொடர்பு உடையனவாக உள்ளன.

இந்தப் பாதையில் எல்லாமே கஷ்டமானதாக உள்ளது. கற்பனை செய்து கொள்வது கடினமானது. மனத்தைக் கட்டுப் படுத்துவது கடினமானது. மற்றும் தியானம் செய்வதும் கடின மானதுதான். ஜபம் சரியான முறையில் செய்யப்பட வேண் டும் எனின் அதுவும் கஷ்டமானதுதான். ஆனால் சிறிதளவு குறைவாக. எனவே புதியதொரு வல்லமையைப் பெற வேண் டும். அதற்கு இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகள் மிகவும் உதவிகரமாக இருக்கும். ஒலி மற்றும் ஒலி அடை யாளங்களின் பெரிய ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புனித நாமமும், புனித மந்திரமும் உன்னைத் தூய்மைப்படுத்துகின்றன மற்றும் மேன்மைப் படுத்துகின்றன என்பதை உணர்ந்துகொள்ள நீ முயற்சி செய்ய வேண்டும். உரிய நேரத்தில் நீயே கடவுளின் திருநாமபாராயணமானது சாதகனின் தொடக்க கால வாழ்க்கையில், ஆன்மீகப் பயிற்சி யில் மிகவும் அவசியமான பகுதியாகும் என்பதை உணர்வாய்.

எப்பொழுதும் ஒலி அடையாளங்களின் உதவியை நாட வேண்டும். ஒலியும், எண்ணமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது ஆகும். எண்ணங்களே அவற்றைப் பல வகையான ஒலிகளாக வெளிப்படுத்திக் கொள்கின்றன. புனிதமான கருத்து (எண்ணம்) பல புனித நாமங்களின் வழியாக வெளிப்படுகிறது. மற்றும் புனிதமான கருத்திற்கும், ஒலிக்கும் பிரிக்கவியலாத தொடர்பு உள்ளது. எனவேதான் நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சியில் ஒலியைப் பயன்படுத்துகிறோம். புனிதமான எண்ணத்தை ஒலியின் துணையுடன் அழைப்பது நமக்கு எளிதாகிறது. நாம் ஒலி அடையாளத்திலிருந்து அதன் பின்னணியிலுள்ள கருத்திற்கு அனுப்புகிறோம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இல்லை எனின் ஒலி நமக்கு உறுதுணையாக இருக்காது. முதலில் வெளிப்புற வழிபாட்டைச் செய்ய வேண்டும். அதன்பிறகு ஒவ்வொரு சாதகனாலும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஆன்மீகப் பயிற்சியானது ஜபமும், தியானமும் ஆகும். அதன் பிறகு இறுதியாக கண்களை மூடிக் கொண்டோ, அல்லது மூடிக் கொள்ளாமலோ, எல்லா இடங்களிலும் நிறைந்து உள்ள பரம்பொருளின் அனுபவம் ஏற்படுகிறது. இதுதான் மிகவும் உயர்ந்த நிலையாகும். ஒருவர் இந்த நிலையை இதற்கு முன்பு கூறப்பட்டவை அனைத்தையும் படிப்படியாகக் கடந்து வந்த பிறகுதான் அடையவியலும்.

ஒலி அடையாளத்திற்கும், மற்றும் புனிதமான எண்ணத்திற்கும் இடையில் ஒரு உறுதியான தொடர்பை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நீ ஒலி அடையாளத்தின் உயிர்மைய இடத்தை அணுகும் பொழுதே, அந்தக் கணத்திலேயே எண்ணமும் வருகிறது. தட்டச்சுப் பொறியின் விரற்கட்டையைத் தொட்டவுடனேயே, அதனுடன் ஒத்திசைவான எழுத்து தாளில் அச்சடிக்கப்படுவதைப் போன்று நீ உன் ஒலி அடையாளத்தை அணுகும் அக்கணத்திலேயே அதற்கு ஒத்திசைவாக உள்ள எண்ணம் உன்னுள் எழுந்து உன் உதவிக்கு வர வேண்டும். ஆனால் இதற்கு இந்த இரண்டிற்கும் இடையில் மிகவும் உறுதியான தொடர்பானது

நாள்தோறும் செய்யும் முறையான பயிற்சியால் ஏற்படுத்தப் பட வேண்டும்.

உன் மனத்தில் மிகப் பெரிய புயல் எழும்புவதற்கு ஆயத்தமாக இருந்து உன்னை நிலைகுலையச் செய்தாலும் நீ ஜபம் செய்து கொண்டே இருக்க வேண்டும். தேவைப்பட் டால், புனிதமான நாமத்தை உரக்கக் கூறுவாய். அல்லது உனக்கு மட்டும் கேட்குமளவிற்கு உரக்கக் கூறுவாய். பெரும் பாலும் மிகவும் குழம்பிய நிலையில் இருக்கும்பொழுது மௌனமாகப் பாராயணம் செய்வதும் மட்டும் போதாது. செவிமடுக்கத்தக்க ஒலியானது அலையும் மனத்தைக் கட்டுப் படுத்துகிறது. நாம் ஒருபொழுதும் ஒலி அதிர்வலைகளின் விளைபயன்களைக் குறைக்கக் கூடாது. நம்முடைய முழு மனமும், உடலும்கூட இலயத்துடன் கூடிய புனிதமான நாமபாராயணத்திற்கு செவிசாய்க்கிறது. ஜபமானது மனத்தை இயலுலக அண்டத்தின் மேம்பட்ட அதிர்வலைகளுடன் ஒரே சுருதியில் இருக்குமாறு செய்கிறது. இது மனத்தை அமைதிப் படுத்தி, மேன்மைப்படுத்தி மற்றும் ஒருமுகப்படுத்துகிறது. சில மனிதர்கள் மணிக்கணக்கில் உரக்க ஜபம் செய்வார்கள் மற்றும் அதன்மூலம் பெரும் ஆன்மீக பலனையும் அடை வார்கள். மந்திரத்தை வாய்மூலம் சொல்லாமல் மனத்திலேயே பாராயணம் செய்வதாலும் அதே பலனைப் பெற வியலும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஜபத்தை, ஒரு சங்கிலியின் ஒரு முனை யானது ஆற்றில் மூழ்கியுள்ள கனமான கட்டையுடன் கட்டப் பட்டு இருப்பதற்கு ஒப்பிடுவார். நீ அந்த சங்கிலியைப் பற்றிக் கொண்டு, ஒவ்வொரு வளையமாக முன்னேறிச் சென்று இறுதியில் கட்டையை அடைந்து விடலாம். அதைப் போன்றே ஒவ்வொரு திருநாமத்தை மீண்டும் மீண்டும் கூறும் பொழுது அது உன்னைக் கடவுளுக்கு அருகில் அழைத்துச் செல்கிறது. ஒலியானது ஞானத்தை எழுப்புவிக்கிறது. மற்றும் ஞானமானது நம்மைப் பரம்பொருளுடன் தொடர்பு கொள்ளு மாறு செய்கிறது. உன்னுடைய ஜபம் குணமட்டத்தில் மேலும் மேலும் மேன்மை அடைந்து கொண்டுள்ளதா என்று நீ கவனிக்க வேண்டும். நீ ஜபத்தை விழிப்புணர்வுடனும்,

அறிவு பூர்வமாகவும் செய்ய வேண்டும். மற்றும் நாட்கள் செல்லச் செல்ல அதிக அளவில் ஜபத்தை மேற்கொள்ள வேண்டும். எப்பொழுதும் சங்கிலியைப் பற்றி நினைத்துக் கொண்டு, அடுத்த வளையத்தைப் பற்றிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இந்த விதத்தில் மேலும் மேலும் நீ இறை வனை அணுகி, தியானத்திற்கு உன்னை ஆயத்தம் செய்து கொள்கிறாய்.

நாம் அடித்துச் செல்லப்படுவோம் என்று தோன்றி னாலும், சங்கிலியைப் பற்றிக் கொள்வதற்கு நம்மால் இயன்ற அளவிற்கு முயற்சி செய்வோம். நாம் பெரும்பாலும் நம்மை அச்சுறுத்தும் ஆபத்தைப் பெரிது செய்கிறோம். அதன் பிறகு நம்முடைய முனைப்பான கற்பனையால் நாம் அதைப் பெரிதுபடுத்திக் கொண்டிருந்தோம் என்பதை உணர்கிறோம். நிலைமையானது பாதகமானதாக இருந்திருக்கலாம். ஆனால் பொதுவாக அது நாம் எண்ணியதைப் போல அத்தனை மோசமானதாக இல்லை. பெரும்பாலும் அது நாம் கற்பித்துக் கொள்வதைப் போல அத்தனை மோசமான திருப்பத்தை அடைந்திருப்பது இல்லை. மற்றும் நிலைமையானது உண்மையாகவே மோசமானதாக இருந்தாலும் எத்தகைய எதிர்ப்பாற்றலும் இன்றி உன்னை நீ தோற்றுப் போவதற்கு அனுமதித்து, முயற்சியை ஏன் கைவிட வேண்டும்? எப் பொழுதும் உன்னுடைய ஜபத்தையும், பிரார்த்தனையையும் செய்து கொண்டிருக்க வேண்டும். அத்தகைய சூழ்நிலைகளில் உன்னால் இயன்ற அளவிற்கு, ஒத்த அளவில் சூழ்நிலை களை எதிர்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நீ தோற்றுப்போனாலும் உன்னுடைய தோல்வியானது வெற் றியை அடைவதற்கான படிக்கற்கள் என்பதை மெய்ப்பிக்கும்.

முறைப்படி ஒருவர் ஏதாவது புனிதமான ஒலி அடை யாளத்தைப் பாராயணம் செய்வதுடன் வடிவத்திலும் ஊன்றி நிலைத்திருக்க வேண்டும். ஆனால் ஒருவர் தியானம் செய்யும் மனநிலையில் இல்லையெனின், தொடர்ந்து புனிதமான திருநாமத்தையோ அல்லது மந்திரத்தையோ ஆயிரம் அல்லது இரண்டாயிரம் முறைகள் ஜபம் செய்யலாம். அது சிறிதளவு

இயந்திரகதியில் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தத் தேவையில்லை. இம்முறையில் பயிற்சியை மேற்கொண் டால், சில காலத்திற்குப் பிறகு தியானம் செய்வது சுலபமாக இருப்பதை ஒருவர் அறிந்து கொள்ளலாம். தியானம் என்பது ஜபத்தின் நீட்டித்த நிலையாகும். ஜபம் என்பது இடை வெளிகள் உள்ள தியானமாகும். ஒரு வகையில் தியானம் என்பது இடைவெளிகள் அற்ற ஜபமாகும். ஆனால் இயல் பாகவே மிகவும் தீவிரமான செயல்முறையாகும். ஜபத்தில் ஒலியும் எண்ணமும் இடைவெளிகளுடன் திகழ்கின்றன. தியானத்தில் எண்ணம் மட்டுமே இடைவெளிகள் அற்று உள்ளது. நமக்குத் தியானம் செய்ய வேண்டும் எனின், நாம் முதலில் ஜபம் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். உன்னால் தியானத்தில் திடீரென்று குதிக்க இயலாது.

ஒவ்வொரு முறையும் மனமானது சமநிலையை இழக்கக் கூடும் என்று அச்சுறுத்தினால் புனிதமான திருநாமத் தைப் பாராயணம் செய்ய வேண்டும். மற்றும் புனிதமான வடிவத்தை உன்னுடைய விழிப்புணர்வு நிலையின் மையத் தில் நினைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒலியையே பற்றிக் கொண்டு அதன் பொருளைப் பற்றி நினைக்க வேண்டும். நம்மால் இவ்விதம் சில சமயத்திற்குச் செய்ய இயலும் எனின், மிகப் பெரிய அளவில் உறுதியானது வரும். அதன்பிறகு நம்முடைய தாறுமாறாகக் குழப்பம் நிறைந்த மூளையானது ஓரளவிற்குத் தெளிவடையும். நம்முடைய சிந்தனையும், உணர்ந்து கொள்ளும் திறமும் மேலும் உறுதி யாகும். ஜபமானது பல தடைகளை அகற்றி, சாதகனைத் தியானம் செய்யும் நிலைக்கு ஆயத்தம் செய்கிறது. நீ அதனைச் சார்ந்து இருப்பதாக உணர்ந்தாலும் உணராவிட் டாலும் அதையே தொடர்ந்து செய்து கொண்டு இருக்க வேண்டும். உன்னுடைய மனம் அதைச் செய்வதற்குச் சார்ந்து இருக்கவில்லை என்பதற்காக நீ ஏன் அதை நிறுத்த வேண்டும்? ஏன் தோல்வியை ஏற்க வேண்டும்? உன் சொந்த மனத்தாலேயே ஏன் ஏமாற்றப்பட வேண்டும்? புனிதமான நாமபாராயணத்தைச் செய்து கொண்டே இருப்பாய். அது

சுட்டிக்காட்டும் இலட்சியத்தைப் பற்றி நினைப்பாய். நீ உன்னைத் தோல்வியடைவதற்கு ஒரு பொழுதும் அனுமதிக்காமல் இருப்பாய். நீ நாமபாராயணத்தைச் செய்து கொண்டே இருப்பாய். அதனால் உன் செவிகள் அந்த ஒலியைக் கேட்டுக் கொண்டிருக்கும் மற்றும் மனமானது அதன் பொருளில் குடிகொண்டு இருக்கும்.

இறைவனின் திருநாமத்தின் ஆற்றல்

ஆன்மீக வாழ்க்கையின் தொடக்க காலத்தில் நீ உண்மையான தியானத்தைக் குறித்துக் கவலை கொள்ளத் தேவையில்லை. ஜபம் செய்வாய். உன் இஷ்ட தெய்வத்துடன் குடிகொண்டு இருப்பாய். உரிய காலத்தில் ஜபம் தியானமாக வளர்ச்சியடையும். தியானம் என்பது, தியானிக்கப்படும் பொருளை இடைவிடமால் எண்ணுவது ஆகும். அது ஒரு குவளையிலிருந்து எண்ணெய் மற்றொரு குவளைக்கு தொடர்ந்து இடையீடற்று விழும் ஒழுக்கைப் போன்றதாகும்.

ஜபத்தினால் பரம்பொருளானது இந்த உலகைவிட உண்மையானதாகத் தென்படும். அதன் பிறகுதான் உண்மையான தியானநிலை என்பது சாத்தியமானதாகும். முதலில் செய்ய வேண்டியதை முதலில் செய்துவிட வேண்டும். அடுத்த அடியானது (நிலை) தானாகவே வரும்.

நீ விரும்பும் விதத்தில் தியானத்தைச் செய்யத் தொடங்குவாய். காதினால் கேட்கத் தகுந்த விதத்தில் ஓம் என்று நாமபாராயணம் செய்வதற்கு ஒருவர் தன்னைச் சுருதி சேர்த்துக் கொண்டால் ஒருவர் படிப்படியாக ஒலியற்றதாகச் செய்து, இந்தியாவைச் சேர்ந்த ரிஷிகள் 'சப்தப்ரம்மன்' என்று கூறுவதுடனும் அல்லது பண்டைய கிரேக்க நாட்டின் பைத்தகோரஸ் என்பவரின் ஆதரவாளர்கள் கூறும், 'வான கோளத்தின் இசை' என்பதுடனும் தொடர்பு கொள்ள இயலும். இசைவுடைமையுடன் கூடிய ஒலியைப் பாராயணம் செய்ய வேண்டும். அது ஒரு அடையாளம், வரையற்ற இருப்பையும், அன்பையும், பேரின்பத்தையும் உடைய பரம்பொருளின்

வெளிப்பாடு என்பதை அறிய வேண்டும். உன்னுடைய சொந்த, 'வானொலிப் பெட்டியை' முறையாகச் சுருதி சேர்த்துக் கொள்வதால், நீ இயலுலக அண்டத்தின் அதிர் வலைகளுடன் தொடர்பு கொள்கிறாய். அது இயலுலக அண்டத்தின் மனத்துடன் உனக்குத் தொடர்பை ஏற்படுத்து கிறது. அதன்மூலம் எங்கும் நிறைந்துள்ள உன் ஆன்மாவின் ஆன்மாவான மற்றும் எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவான பரம்பொருளுடன் தொடர்பு ஏற்படுகிறது.

எல்லா வழிகளிலும், எப்படியாவது ஜபத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும். சாதகன் பெற்றுக் கொள்ளும் புனிதமான சக்தி மந்திரத்திற்குத் தடைகளை அகற்றும் மற்றும் ஆன்மீக விழிப்புணர்வை எழுச்சியடையச் செய்யும் மிகப் பெரிய ஆற்றல் உள்ளது. இது உண்மையிலேயே இந்தப் பேரண்டத்தின் அன்னையின் ஆற்றலாகும். அவளை தேவீ என்றோ காளீ என்றே அழைக்கலாம். இந்த யுகத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணராக வெளிப்பட்டுள்ளாள்.

சில சமயங்களில் சாதகனுக்கு, அவனுடைய மேம்பட்ட விழிப்புணர்வு மையங்களில் ஏதாவது ஒன்றை (இதயம், தலை போன்றவை) அவன் ஜபமாலையாலோ அல்லது அவ னுடைய உள்ளங்கையாலோ, ஜபம் செய்யும் பொழுது தொட் டால் அது மிகவும் உதவியாக இருக்கும். அந்த மையத்தை உடல் சார்ந்ததாக உணர்வது அவனுடைய விழிப்புணர்வை அங்கு நிலை நிறுத்துவதற்குச் சுலபமானதாக இருக்கும்.

புனிதமான ஒலியானது மனத்திற்கு ஒரு வகையான பின்பலத்தை அளிக்கிறது. ஏதாவது பெரிய குழப்பத்தில் இருக்கும்பொழுது, ஒருவர் சிறிது அமைதியாக இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மற்றும் உள்முகமாக ஆராய வேண்டும். மற்றும் இதயத்தின் ஆழத்திலிருந்து கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். ஏதாவது குழப்பங்கள் ஏற்படும் பொழுது நீ ஏன் உன்னை நிலைகுலைய அனுமதிக்கிறாய்? நீ சங்கிலியைப் பிடித்துக் கொண்டிருப்பதை விடும் கணத்தில் தடுமாற்றம் அடைகிறாய். முற்றிலும் உதவியே இல்லாத

பொழுது கடவுள் ஒருவர்தான் ஒரே உதவியாகத் திகழ்வார். ஆன்மீகம் சார்ந்த தன்னுதவிக்கு ஜபம் மிகவும் முக்கியமான வழிவகையாக உள்ளது. ஜபம் நம்மை நம் ஆன்மாக்களின் ஆன்மாவின் அருகில், மிக அருகில் கொண்டு செல்கிறது.

நம்முடைய நிலைமையில், நம்மால் உண்மையாக ஜபத்தை மட்டுமே செய்ய வியலும், ஆனால் ஒரு மதிப் பிற்காக நாம் சிலசமயங்களில் அதற்குத் தியானம் என்னும் பெயரைக் கொடுக்கிறோம். உண்மையான தியானத்தைவிட மேம்பட்ட எதையும் செய்யவியலாது என்பது ஐயத்திற்கு இடமற்ற உண்மை ஆகும். ஆனால் நாம் நம்மை ஒழுக்கப் பண்பாட்டையும் நம் கடமையைச் செய்வதையும் முறையாக மேற்கொண்டு நம் ஜபம், பிரார்த்தனை, புனிதமான திருமறை நூல்களைப் படித்தல் மற்றும் அவைகளின் பொருட்களில் முடிந்த அளவிற்கு மூழ்கியிருத்தல் போன்றவற்றிற்கு ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இந்த பூர்வாங்கப் பயிற்சிகள் நம் மனத்தை பல்வகையான கவன மாற்றங் களிலிருந்து உள்ளிழுத்துக் கொள்வதற்கும், மற்றும் புனித மான எண்ணங்களில் நம்மை மூழ்கியிருக்கச் செய்யவும் உதவி புரியும் தன்மையுடையனவாகும். ஆனால் தொடக்கத் தில் இடையீடுகள் இருக்கும். அதற்குப் பிறகு விடாமல் செய் யும் பயிற்சியால் நம்மால் நம்முடைய எண்ண ஓட்டத்தில் இடையீடு அற்றவகையில் தொடர்ந்து இருக்க வியலும்.

நாம் நம் உடல், மனம், எண்ணம், சொல், செயல் போன்றவற்றில் மேலும் மேலும் தூய்மையடையும் பொழுது, நம்மால் சிறப்பான, மேலும் சிறப்பான முறையில் ஒருமுகப்படுத்த இயலும். மிக மிகச் சிறப்பாக தியானம் செய்ய இயலும். அதன்பிறகு, உரிய நேரத்தில் பரம்பொரு ளுடன் அவரது தனிப்பட்ட மற்றும் பொதுவான இயல்பு களுடன் நம்மால் தொடர்பு கொள்ள இயலும். அதன் பிறகு நம் இதயங்களுக்குள்ளேயே வரையறைக்கு உட்பட்ட, வரை யறைக்கு உட்படாத ஆன்மா மற்றும் நம் ஆன்மாக்களின் ஆன்மாவான கடவுள் இவர்களுக்கு இடையிலுள்ள தொடர்பை உணர வியலும். இவ்விதமாக தியானமானது

தன்னுடைய இலட்சியத்தை அடைகிறது. மேம்பட்ட விழிப் புணர்வு நிலையின் மிக உயர்ந்த நிலையை அடைகிறது. அங்கு ஆன்மாவானது முழுமுதற் மெய்ப் பொருளிடம் நேரடியாகத் தொடர்பு கொள்கிறது. அதுதான் அதனுடைய உண்மையான இயல்பு ஆகும். மற்றும் அதனுடைய இயல்பான முழுமையையும், சுதந்திரத்தையும் அமைதியை யும், பேரின்பத்தையும் அடைகிறது.

கடவுளின் திருநாமம் அனைவருக்கும் அமைதியையும் பேரின்பத்தையும் அளிக்கட்டும்.

25

வடிவமற்ற தியானம்

இருமையற்றதன்மை வெகுதொலைவிலுள்ள இலட்சியம்

பலராலும் நன்கு அறியப்பட்ட வடமொழி சுலோகம் ஒன்று உள்ளது. அது ஹிந்து சமயவழிபாட்டின் உண்மையான மெய்க்கருத்தை மிகப் பொருத்தமாகத் தெரிவிக்கிறது.

'ஓ கடவுளே, என்னுடைய தியானத்தில் நான் வடிவ மற்ற உனக்கு வடிவங்களைக் கற்பித்திருக்கிறேன். ஓ ஜகத் குருவே, உன் புகழைப் பாடியிருப்பதால், நான், நீ எல்லா வாக்கிற்கும் அப்பாற்பட்டவன் என்றும் உண்மையை மறுத்திருக்கிறேன். புனிதமான இடங்களிலும் மற்றும் அதைப் போன்ற இடங்களிலும் நீ சிறப்பாக வெளிப்பட்டுள் ளாய் என்று உன்னை விவரித்து இருப்பதால், நான் உன் னுடைய எங்கும் நீக்கமற நிறைந்துள்ள தன்மையை மறுத் திருக்கிறேன். உலகத்தின் இறைவனே, என்னால் செய்யப் பட்டுள்ள மூன்று வகையான உருவச் சிதைவு என்னும்[1] தவறுக்காக என்னை மன்னிப்பாய்.

எல்லா வழிபாடுகளும், எல்லா வடிவங்களின் பின்னால் எல்லா நாமங்களின் மற்றும் அடையாளங்களைத் தாண்டி வடிவமோ இயல்புகளோ அற்ற ஒப்புயர்வற்ற பேரொளியை ஒளிரச் செய்கின்றன என்னும் அடிப்படையான ஊகத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆன்மீக வாழ்வு என்பது இறுதியான

---

1. ரூபம் ரூபவிவர்ஜிதஸ்ய பவதோ த்யானேன யத்கல்பிதம்
ஸ்துத்யானிர்வசனீயதாகிலகுரோ தூரிக்ருதா யன்மயா ।
வ்யாபித்வஞ்ச நிராக்ருதம் பகவதோ யத்தீர்த்தயாத்ராதினா
க்ஷந்தவ்யம் ஜகதீச தத்விகலதாதோஷத்ரயம் மத்க்ருதம் ॥
—யாரோ ஒருவர்.

இருமையற்ற ஒருமையை உணர்வதற்காக வழிநடத்திச் செல்லும் படிக்கட்டைப் போன்றதாகும். அதை ஒரு மேல் தளத்திற்கு ஒப்பிடலாம். நம்மில் பலரும் இன்னமும் படிக் கட்டுகளிலேயே இருக்கிறோம். மேல் தளத்தில் இல்லை. நாம் அந்தப் படிக்கட்டுகளுக்கு இப்பொழுது மிகுதியான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆனால் நம்முடைய இலட்சியமானது படிகளைத் தாண்டி அப்பால் உள்ள மேல் தளம் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண் டும். மேலும் நாம் முதலில், படிக்கட்டுகளில் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பலரும் இருமையற்ற தியானத்தை மேற்கொள்ள விரும்புகிறார்கள். பெரும்பாலும் அத்வைதத்தைக் குறித்த சில நூல்களைப் படித்த பிறகு அவ்விதம் செய்கின்றனர். பல ரும் முழுமுதற் கடவுளைப்பற்றிப் பேசுகின்றனர். அவர்கள் என்ன அனுபவத்தைப் பெற்றுள்ளனர்? பலரும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு விட்டுவிடுகின்றனர். தாங்கள் முன்னேற வில்லை என்பதை உணர்கிறார்கள். மற்றும் வேறு சிலருக்கு, இருமையற்ற ஒருமையானது அவர்களின் அறிவு எல்லைக்கு அப்பால் உள்ளது என்பதைப் பயனற்ற முயற்சியால் தெரிந்து கொள்வதற்கே பல மாதங்களோ அல்லது பல ஆண்டுகளோ கூட ஆகலாம். மனிதர்கள் இருமையற்ற ஒருமை என்பது உண்மையான அனுபவ நிலை என்பதை மறந்துவிடு கின்றனர். அறிவுபூர்வமாக எது உன்னை ஈர்க்கிறது என்பது முக்கியமானது அல்ல. உன்னால் என்ன செய்ய இயலும் என்பதுதான் முக்கியமானதாகும். புத்தகங்களைப் படித்து விட்டு நாம் எதையுமே முயற்சி செய்து பார்க்கக் கூடாது.

உண்மையான ஆன்மீக அனுபவம் பெற்றுள்ள ஒரு இரு பொருண்மை கோட்பாட்டாளர் (துவைதி) அனுபவம் அடையாமல் உள்ள ஒருபொருண்மைக் கோட்பாட்டாளரை விட (அத்வைதி) பெருமளவு மேம்பட்டவர் ஆவார்.

நாம் தியானம் செய்துகொண்டிருக்கும் வரையிலும், தியானம் என்பது இருக்கும் வரையிலும், தியானிக்கப்படும்

பொருள் சூட்சுமமான வடிவத்தில் இருக்கும் வரையிலும் அது இருபொருள்வாதம்தான் (துவைதம்தான்). எனவே நாம் இப்பொழுது இரண்டாவது அற்ற ஒருமையைக் குறித்து கவலைப்பட வேண்டாம். பரம்பொருளுடன் இரண்டறக் கலப்பது குறித்து இப்பொழுது கவலைப்பட வேண்டாம். பெரும்பாலான மனிதர்களுக்கு அந்த நிலையை அடைவதற்கு லட்சக்கணக்கான ஆண்டுகள்கூட ஆகலாம்.

பலவற்றின் பின்னணியிலுள்ள முழுமை

பலவற்றுள்ளும் ஒரு முழுமையை நிறுவுவது மிகவும் முக்கியமானதாகும். எல்லா பலவகையான தன்மைகளுக்கு இடையில் முழுமையை, நாம் நம்முடைய இறுதியான இலட்சியத்தை மறந்துவிடக் கூடாது. நாம் தியானிக்கும் கடவுளின் வடிவங்களுக்கு வரையறையற்ற முழுமுதற் பொருள் பின்னணிச் சூழலில் அமைக்கப்பட வேண்டும். பக்திப்பாதையில் சாதகன், அவனுடைய மனத்தையும், உணர்வையும் தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் மீது ஒருமுகப்படுத்துகிறான். மிகப் பெரும்பாலான மனிதர்களுக்கு அவர்களின் தியானத்திற்கு அத்தகைய புனிதமான வடிவங்களின் உதவி தேவையானதாகும். ஆனால் அவர்கள், இத்தகைய எல்லா தெய்வீக வடிவங்களும் முழுமுதற் கடவுளின் சிறப்பான வெளிப்பாடுகள்தான் என்பதை மறந்து விடக் கூடாது. உன் ஆன்மாவும், மற்றும் இஷ்ட தேவதையும் அந்த அடிப்படை மெய்ம்மையில் ஒன்றுதான். அதை வேதாந்தம் பிரம்மன் என்று அழைக்கிறது. ஆனால் இஷ்ட தெய்வம் என்பது பிரம்மனின் ஒரு சிறப்பான வெளிப்பாடாக விளங்குகிறது.

சிறந்த அவதார புருஷர்களிடத்திலும் தீர்க்கதரிசிகளிடத்திலும் நீ ஒரு தனிப்பட்ட தெய்வீக தூய்மைப்பாடு, ஞானம், அன்பு போன்றவற்றைக் காண்கிறாய். நம்முடைய சிறிய தன்மைகளின் மையக் கருவிலும் அதே தூய்மைப்பாடும், ஞானமும், அன்பும் உள்ளன. ஆனால் அவ்வனைத்தும் அறியாமையால் மறைக்கப்பட்டுள்ளன. நம்முடைய தனி மனித நிலையானது உண்மையான தன்மை மற்றும் போலித்

தன்மையின் கலவையாக விளங்குகிறது. அனல்பொறியானது அதனுடைய ஒளித்தன்மையை மறந்துவிட்டு, அதை மங்க லான தன்மையுடன் அடையாளம் கண்டு கொள்கிறது. அதன் பிறகு வாழ்க்கையில் எல்லாக் குழப்பங்களும், துன்பங்களும் தோன்றுகின்றன. நீ வரையற்ற விழிப்புணர்வு நிலையின் பெருங்கடலில் மூழ்கியுள்ளாய் என்று கற்பனை செய்து கொண்டால், உன்னுடைய தனித்தன்மையானது ஏதோ ஒரு சூட்சுமமான ஒன்று அது பருப்பொருள் இயல்புடைதாக ஆகிவிட்டது என்பதை உணர்வாய்.

வடிவமற்ற தியான வகைகள் (நிர்குண தியான வகைகள்)

எப்படியிருப்பினும், இஷ்டதெய்வத்தைக் குறித்து தியானிப்பதற்குப் பதிலாக, நீ விரும்பினால் மனிதப் பண்புகள் ஏற்றப்படாத பரம்பொருளின் ஏதாவது ஒரு அடை யாளத்தைத் தியானிக்கலாம். அதாவது சமுத்திரம் அல்லது ஆகாயம் அல்லது ஒளியின் அகன்ற பரப்பு அல்லது அம்பரம் போன்றவற்றைத் தியானிக்கலாம். இது வடிவமற்றதைத் தியானிப்பதாகும். ஆனால் இது ஒருபொருண்மை வாதம் அன்று. அதை அடைவதற்குரிய படியாகும். மிகப் பெரிய ஒளிப்பரப்பு, மற்றும் இஷ்டதெய்வத்தின் மீது தியானம் செய்வது இருபொருள் வாதத்திற்கு உரிய தியானமாகும். ஆனால் மிகப் பெரிய ஒளிப்பரப்பின்மீது தியானம் செய்வது இஷ்ட தெய்வத்தின்மீது தியானிப்பதை விட ஒருபொருண்மை வாதத்திற்கு அருகில் உள்ளது. மற்றும் நான் மீண்டும் கூறு கிறேன். உண்மையான ஆன்மீக அனுபவம் பெற்றுள்ள ஒரு இருபொருண்மை கோட்பாட்டாளர் (துவைதி) அனுபவம் அடையாமல் உள்ள ஒரு பொருண்மை கோட்பாட்டாளரை விட (அத்வைதி) பெருமளவில் மேம்பட்டவர் ஆவார்.

வடிவமற்ற தியானத்தில், அகன்ற பரந்த ஒளிப் பரப்பும் (நீ தியானிக்கும் பொருள்) மற்றும் ஒளியின் சிறு பொறியாக உள்ள நீயும் வரையறையற்ற பரந்துபட்ட ஒளிப் பெருங் கடலில் மூழ்கியிருப்பதாக நினைக்க வேண்டும். நாம் முத லில் ஏறத்தாழ நம் உடலைப் பற்றித்தான் நினைக்கிறோம்.

மற்றும் நம் பின்னணியிலும் அனைத்தின் பின்னணியிலும் உள்ள விழிப்புணர்வு நிலையின் அடிப்படையான மெய்ம்மை குறித்த உறுதியற்ற கருத்து மட்டுமே உள்ளது. அதன்பிறகு நாம் உடலைவிட, விழிப்புணர்வு நிலையின் அடிப்படையான மெய்ம்மைக்கு அழுத்தம் கொடுத்து, மற்றும் அனைவரின் உடல்களிலும் வாழ்ந்து கொண்டுள்ள அவர்களுக்கு வாழ்வு அளித்துக் கொண்டுள்ள தெய்வீக உயிர்த்துடிப்பைக் காண்பதற்கு முயற்சி செய்கிறோம்.

ஒரு பக்தனுக்கு வடிவமற்றதை, வடிவத்துடன் கூடிய கடவுளை விரும்புமளவிற்கு விரும்புவது சாத்தியமானது தான். அது இயல்பான மனநிலையைப் பொறுத்தது ஆகும். இதில் மூன்று நிலைகள் உள்ளன.

1. வடிவம் மற்றும் இயல்புகளுடன் கூடியது. (ஸாகாரம்-ஸகுணம்)

2. வடிவமற்றது மற்றும் இயல்புகளுடன் கூடியது (நிராகாரம்-ஸகுணம்)

3. வடிவமற்ற மற்றும் இயல்புகள் அற்றநிலை (நிராகாரம்-நிர்குணம்)

நாம் ஆன்மீகப் பயிற்சியைச் செய்து கொண்டிருக்கும் போக்கில், நாம் எங்கிருந்து தொடர்ந்து செயற்பட வேண்டும் என்னும் உறுதியான நோக்கு நிலையை மேற்கொள்ள வேண்டும். சில பக்தர்கள் குறிப்பிட்ட சில மனநிலைகளில் வடிவம் மற்றும் இயல்புகளுடன் கூடியதை விரும்புவார்கள். மற்றொரு மனநிலையில் வடிவமற்ற, இயல்புகளுடன் கூடியதை விரும்புவார்கள். நாம் எத்தகைய மன நிலையில் இருப்பினும், ஒவ்வொரு அடியிலும் நாம் பரம்பொருளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். நாம் தியானிக்கும் பொருளை விட (வடிவமுள்ளதோ, வடிவம் அற்றதோ) இந்த அகத் தொடர்புதான் மிகவும் முக்கியமானது ஆகும்.

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு வடமொழியிலுள்ள இந்த ஏட்டுரைப்பகுதி மிகவும் விருப்பமானதாகும். ஒரு சமயம் ராமர் அனுமனிடம் 'நீ என்னை எப்படிக் கருதுகிறாய்?' என்று

கேட்டபொழுது அனுமன் கூறிய பதில், 'பிரபோ, நான் என்னும் உணர்வு இருக்கும் பொழுது நீ பூரணன், நான் அம்சம், நீ எஜமானன், நான் சேவகன் என்று காண்கிறேன். உண்மை ஞானம் வரும்பொழுது நீயே நான், நானே நீ என்று காண்கிறேன்' என்று கூறினார்.[1]

நாம் தேர்ந்தெடுக்கும் நோக்கு நிலையானது நம்முடைய உண்மையான அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். புத்தகங்களைப் படித்த பிறகு நாம் நம்முடைய மனப்பான்மைகளை மாற்றிக் கொண்டே இருத்தல் கூடாது. ஒரு உயர்ந்த நோக்கு நிலையானது ஈர்க்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் உண்மையாக நம்மால் அதை நடைமுறை வாழ்க்கையில் பொருத்திக் கொள்ள முடியுமா என்பது தான் கேள்வியாக உள்ளது.

சில சாதகர்களுக்கு ஒரு வகையான தியானத்தை மேற்கொள்வதில் நிறைவு ஏற்படுவதில்லை. அவர்கள் வழிபாடு செய்பவரும், வழிபடும் பொருளும் உள்ள வரையற்ற பெருங்கடலை, நீர்க்குமிழியைப் போலும், அலையைப் போன்றும் எண்ணுகின்றனர். பக்தனானவன் தன்னைவிடப் பரம்பொருளைப்பற்றி அதிகமாக நினைக்கிறான். அதன் பிறகு அவன், வழிபடும் பொருளிலும் தன்னிலும் உள்ள மெய்த்தத்துவத்தைப்பற்றி நினைக்கிறான். அடுத்த நிலையில் வரையற்ற பெருங்கடலில் நீர்க்குமிழியும் அலையும் இரண்டறக் கலந்து விடுகின்றன.

நம்முடைய இயல்பின்மீது மிக அருகலாகப் பிடிமானம் இருப்பினும், ஒருவர் பல பிறவிகளைக் கடக்க வேண்டும். இந்தப் பிடிமானம் அகன்றால் நீர்க்குமிழியானது கடலுடன் இரண்டறக் கலந்து விடுகிறது. ஆனால் நாம் இப்பொழுது பெருங்கடலில் இரண்டறக் கலப்பதைக் குறித்துக் கவலை கொள்ளத் தேவையில்லை. அதற்கு இன்னும் நீண்டகாலம் ஆகும். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்த பொழுது, ஒரு பெண்மணி அவரிடம், பிரம்மனுடன்

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.63-64.

இரண்டறக் கலப்பது என்னும் கருத்தைக் குறித்த தன்னுடைய அச்சத்தைத் தெரிவித்தார். சுவாமிஜி முறுவலுடன் அவரிடம் அத்தகைய அச்சம் ஏற்படுவதற்கு எத்தகைய காரணமும் இல்லை என்று கூறினார். நீர்த்துளியானது பெருங்கடலில் கலக்கும்பொழுது, சூரியனின் கிரணங்கள் அதை மேலே தூக்கி, மீண்டும் பூமிக்குக் கொண்டு வருகிறது. ஆன்மா, பிரம்மனுடன் கலப்பது என்னும் உடனடியாக நிகழத்தக்க 'ஆபத்து' ஏற்படாது.[1] மிகப் பெரும்பாலான மனிதர்களுக்கு அந்த நிலையை அடைவதற்கு இலட்சக் கணக்கான ஆண்டுகள்கூட ஆகலாம். அதுவரையிலும் அவர்கள், அவர் களுடன் இருப்பவர்களுடன் செயலாற்றவும், அவர்களுடைய இன்ப-துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளவும் மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டிருப்பார்கள்.

நாம் இறப்பதற்கு முன்பு, கடவுளின் சில கணநேரத் தோற்றங்களையாவது காண வேண்டும். இந்தப் பிறவி யில் நீ வெற்றி அடையவில்லை எனின், மீண்டும் மீண்டும் தோன்றுவாய். இறுதியாக நீ உன் இலட்சியத்தை அடையும் வரையிலும் ஒவ்வொரு பிறவியையும் கடந்து செல்வாய்.

முதலில் உன்னிடமிருந்து தொடங்குவாய்

நாம் இஷ்ட தெய்வத்தின் மீதோ, அல்லது நிர்குண தியானத்தையோ மேற்கொண்டாலும், நம்மை நம் உடலுடன் அடையாளம் கண்டு கொள்வதைக் குறைப்பதுதான் மிகவும் முக்கியமானதாகும். சில மனிதர்கள் உருவ வழிபாட்டை, 'களிமண் வடிவங்களை' வழிபடுவதை வெளிப்படையாகக் கண்டனம் செய்வார்கள். ஆனால் அதே சமயத்தில் அவர்கள் உடல் மீது பற்றுக் கொண்டு இருப்பார்கள். பல மனிதர் களுக்கு அவர்களுக்கு உரிய உடல்தான் இந்த உலகத்திலேயே மிகவும் போற்றி வழிபடத்தக்க பொருளாக உள்ளது. இவ்வகையான உடல் வழிபாடுதான் இருக்கும் உருவ

1. Eastern and Western Disciples, Life of Swami Vivekananda (கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1974) பக்கம் 351.

வழிபாடுகளில் மிகவும் மோசமான வழிபாடு ஆகும். இருப்பினும் பலரும் 'மண் உருவங்களை' அவர்கள் வழிபடாததால் அவர்களைப் பற்றி உயர்வாக எண்ணிக் கொண்டுள்ளனர். சிலர் கடவுளின் இயல்பு குறித்து பகுத்து அறிந்துகொள்வதற்கு ஆவலாக உள்ளனர், ஆனால் அவர்களைப் பகுத்து ஆராய்ந்து கொள்வதற்கு விரும்புவதில்லை. நீ உருவமுடைய தன்மை, மற்றும் உருவமற்ற தன்மையைக் கடவுளின் மீது பொருத்துவதற்கு முன்பு, அதை முதலில் உன்மீது பொருத்திக் கொள்ள வேண்டும். கடவுளைக் குறித்த நம் கருத்தானது, நம்மீது நாம் கொள்ளும் கருத்தைச் சார்ந்துள்ளது என்பது ஒரு முக்கியமான நடைமுறை ஒழுங்கு ஆகும். எனவே வடிவமற்ற கடவுளைத் தியானம் செய்வதற்காக நாம் முதலில் நம்மையே வடிவமற்றவர்கள் என்று கருத வேண்டும். நாம் கடவுளை உருவமற்றவராகச் செய்வதற்கு முன்பு நம்மை உருவமற்றவர்களாகச் செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இதைப் பெரும்பாலானவர்கள் செய்ய மாட்டார்கள். அதனால்தான் அவர்கள் பல சமயங்களில் தங்களுடைய தனித்தன்மையற்ற தியானத்திலிருந்து மிகக் குறைந்த பயன்களை அடைகின்றனர். பல மனிதர்கள், நிர்குண தியானம் என்னும் பெயரில் அவர்களுடைய மனங்களை ஒரு உணர்ச்சியற்ற நிலையை அடைவதற்கு அனுமதிக்கின்றனர். பழக்கப்படுத்தப்படாத மனத்திலிருந்து, எல்லா வடிவங்களையும் அகற்றுவதற்கு முயற்சி செய்வது பொதுவாக உறக்கத்தையோ அல்லது சில நேரங்களில், நல்ல எண்ணங்களின் இடத்தில் தீய எண்ணங்களை அனுமதிக்கும் பயன் முடிவாகவும் ஆகிவிடுகிறது. எனவே வடிவமற்ற தியானத்தை மேற்கொள்வதற்கு, முதலில் உன்னிடமிருந்தே தொடங்க வேண்டும். நீ உன்னையே ஆன்மாவாகவும் அகத்தில் உள்ள பேரொளியாகவும் கருதுவாய்.

உட்புறத்திலிருந்து நம் உடலைப் பார்ப்பதற்கு முயற்சி செய்வதும், அதற்கு உயிரூட்டும் ஆன்மாவைப் பற்றி நினைப்பதும், நம் இயல்பைக் குறித்த உணர்வைக் கட்டாயமாகக் குறைக்கிறது. ஆனால் எண்ணங்களும், உணர்வுகளும்

முற்றிலும் மறையாமல் இருக்கக் கூடும். மீண்டும், உன் மனத்திலே தோன்றி, உனக்குக் குழப்பங்களை ஏற்படுத்தும் உருவங்களின்மீதும், உட்புறத்திலிருந்து காணும் அந்த வழி முறையையே பயன்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய வெளிப்புறத் தோற்றமும், மற்றும் மற்றவர்களின் வெளிப்புறத் தோற்றமும் ஆசைகளுடனும், உணர்ச்சிகளுடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. நாம் உள்முக நோக்கைப் பெறும் அந்தக் கணத்திலேயே அவை மறைவது போலத் தென்படுகின்றன. நம்முடைய உடல் உணர்வில் முகமானது ஒரு பெரிய பங்கினை வகிக்கிறது. நாம் உட்புறத்திலேயே நம் முகத்தைக் காண இயலும். பய பக்தியுடன் கூடிய மனநிலையுடன், ஒவ்வொரு வடிவத்தை யும் அணுகினால், நமக்கு இறைவனைக் காண்பது சுலபமான தாக இருக்கும்.

முதலில் நாம் நம் இயல்புகளை வளர்த்துக் கொண்டு அதன்பிறகு எவ்விதப்பண்பும் அற்றதில் ஒரு விதத்தில் கரைக்க வேண்டும். இந்தப் பண்பு அற்ற நிலையிலிருந்து அதன் பிறகு ஒரு தூய்மையான தன்மை உதயமாகும். எப் பொழுதும் விழிப்பு உணர்வுடன் இருக்கும் மற்றும் தன் மூலத்தைச் சார்ந்து இருக்கும். இதுதான் நம்முடைய மேம் பட்ட தன்மையாகும். அதுதான் பரம்பொருளின் உண்மை யான கருவியாகிறது.

நாம் ஆன்மாவின் மட்டத்தில், உடல் தன்மைக்கு ஒரு பொழுதும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்று எண்ணுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். கீழே குறிப் பிடப்பட்டுள்ள சங்கரரின் சில சிறந்த ஸ்தோத்திரப் பகுதி களால் குண்டுவீசி இந்த தனிமனித நிலை என்னும் இற்றுப் போன உணர்வை நம்முடைய இந்த அகங்காரத்தைத் தகர்த்து எறிந்துவிட வேண்டும்.

'நான் மனமும் இல்லை. அறிவும் இல்லை, அகங்கார மும் இல்லை, பருப்பொருளின் மூலமாகக் கருதப்படும் கடுநிலை நினைவியல் நுண்படிவமும் (Mind-stuff) இல்லை.

நான் கேட்கும், சுவைக்கும், முகரும், தொடும் அல்லது பார்க்கும் புலனும் இல்லை. அல்லது பூமி, நெருப்பு, காற்று என்னும் மூலக் கூறுகளும் இல்லை. நான் தூய விழிப்புணர்வு மற்றும் பேரின்பத்தின் இயல்பை உடையவன். நான்தான் மெய்ப்பொருள், நான்தான் மெய்ப்பொருள்.'[1]

'நான் ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல, பாலற்றவனும் இல்லை. நான் அன்பு நலம் உடைய மெய்ப் பொருள், ஒப்புயர்வற்ற பேரொளி.'[2]

'நான் மனிதனும் அல்ல, கடவுளும் அல்ல; தெய்வமாகக் கருதத் தக்கவனும் அல்ல. நான் அந்தணனும் இல்லை, க்ஷத்திரியனும் இல்லை; வைசியனும் இல்லை, சூத்திரனும் இல்லை; நான் மாணவனும் இல்லை. இல்லறத்தானும் அல்ல; காட்டில் வாழ்பவனும் அல்ல. துறவியும் அல்ல நான் ஆன்மா ஆவேன். வரையறையற்ற விழிப்புணர்வு ஆவேன்.'[3]

மனமார்ந்து, 'நான் பிரம்மன்', 'நான் பிரம்மன்' என்று கூறிக் கொண்டே இருக்க வேண்டும்.

விழிப்புணர்வு நிலைகள்

நம் உடல், நம்முடைய விழிப்புணர்வு மையமாக இருக்கக் கூடும். நம் மனம் நம்முடைய விழிப்புணர்வு

---

1. மனோபுத்த்யஹங்கார சித்தானி நாஹம்
ந ச ச்ரோத்ர ஜிஹ்வே ந ச க்ராணநேத்ரே ।
ந ச வ்யோம பூமிர் நதேஜோ ந வாயு:
சிதானந்த ரூப: சிவோஹம் சிவோஹம் ॥

—நிர்வாண ஷட்கம், 1.

2. புமான் நைவ ந ஸ்த்ரீ ததா நைவ ஷண்ட: ப்ரக்ருஷ்ட
ப்ரகாசஸ்வரூப: சிவோஹம் ।

—நிர்வாண மஞ்சரி, 1.

3. நாஹம் மனுஷ்யோ ந ச தேவயக்ஷௌ
ந ப்ராஹ்மணக்ஷத்ரிய வைச்ய சூத்ரா: ।
ந ப்ரஹ்மசாரி ந க்ருஹீ வனஸ்தோ
பிக்ஷுர்ன சாஹம் நிஜபோதரூப: ॥

—ஹஸ்தாமலக ஸ்தோத்திரம், 2.

மையமாக இருக்கக் கூடும். நுண்ணிய ஆன்மா நம்முடைய விழிப்புணர்வு மையமாக இருக்கக்கூடும். எல்லையற்ற பரம்பொருள் நம்முடைய விழிப்புணர்வு மையமாக இருக்கக் கூடும். நம்முடைய எல்லா மனப்பான்மைகளும், நம் எல்லா செயல்களும் எண்ணங்களும் நாம் தேர்ந்து எடுத்துள்ள விழிப்புணர்வு மையத்தையும் மற்றும் நம்முடைய ஈர்ப்பு மையத்தையும் சார்ந்ததாக இருக்கும்.

நம்மிடம் இருவகையான விழிப்புணர்வு நிலைகள் உள்ளன. நாம் ஆன்மாவை நம்முடைய விழிப்பு உணர்வு மையமாகச் செய்கிறோம். மற்றும் அதில் பரம்பொருளை உணர்கிறோம். அல்லது வரையற்ற பரம்பொருளை நம் முடைய விழிப்புணர்வு மையமாகச் செய்கிறோம் மற்றும் ஆன்மாவை வரையறையற்ற பரம்பொருளின் வெளிப் பாடாக உணர்கிறோம். நாம் ஆன்மாவை விழிப்புணர்வு மையமாகச் செய்து, எல்லையற்ற பரம்பொருளை, அதனைச் சுற்றியுள்ள ஒருவட்டத்தை போல உணர்கிறோம்; அல்லது பரம்பொருளை நமது விழிப்பு உணர்வின் மையமாக்கி, நம் ஆன்மாவை அதனுள் இருக்கும் ஒரு புள்ளியைப் போல உணர்கிறோம். ஒவ்வொரு ஆன்மாவும் ஒரு புள்ளியைப் போன்றது ஆகும். மற்றும் கடவுள் ஒரு வரையற்ற பேரொளிப் பெருங்கடல் ஆவார். மற்றும் கடவுள் வட்டத் திலுள்ள ஒவ்வொரு புள்ளியையும் இணைக்கும் ஒரு வரை யற்ற பேரொளிப் பெருங்கடல் ஆவார். முதலில் இவ் வனைத்தும் ஒரு கற்பனையைப் போல இருக்கலாம். ஆனால் கடைசியில் அது ஒரு அனுபவமாகிறது.

நாம் இங்குக் கொடுக்கப்பட்டுள்ள மூன்று ஆன்மீக மனநிலைகளில், ஏதாவது ஒரு மனநிலையில் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

1. முழுமையில் நிலைபெற்று தனித்தன்மையை அதில் கலப்பது.

2. ஒருவர் தன்னைப் பரம்பொருளுடன் அடையாளம் கண்டு கொண்டு, அதன்பிறகு தனித்தன்மையை பரம்பொரு ளின் வெளிப்பாடு என்று உணர்வது.

3. ஒருவர் தன்னைத் தனி மனிதனாக நினைத்துக் கொண்டு, அதன்பிறகு, நம் உள்ளே குடிகொண்டுள்ள, எல்லா இடங்களிலும் ஊடுருவியுள்ள உண்மைத் தத்துவத்தை, நம் ஆன்மாவின் ஆன்மாவை, ஆன்மா முழுவதுமாக சார்ந்து உள்ள பரம்பொருளை உணர்வது.

அகங்காரம் தொடர்ந்து இருக்கும் வரையிலும் மேலே 2 மற்றும் 3-இல் கூறியிருப்பதைப்போல பரம்பொருளுடன் தொடர்பு கொண்டு இருப்போம். அகங்காரம் பரம்பொருளை விட அதிக உண்மையாவதை ஒரு பொழுதும் அனுமதித்தல் கூடாது.

முழுமை என்னும் உணர்வை திடப்படுத்துவதற்கு ஏற் கனவே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பொருண்மை கருத்தைக் குறித்த தியானங்களைத் தொடர்ந்து செய்யலாம். ஒவ்வொரு அடியாக உயர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். புனிதமான வடிவத்தின் உன்னதமான இயல்புகளுடன், வடிவமற்ற, இயல்புகளுடன் கூடிய நிலைக்கு உயர வேண்டும். அங் கிருந்து, வடிவமற்ற, இயல்புகள் அற்ற தூய்மையான பரம் பொருளை நோக்கிச் செல்ல வேண்டும்.

நீ திரும்பி வரும் பொழுது அதே போன்று நேர்மாறாகச் செய்ய வேண்டும். நீ அவ்விதம் செய்தால் உடலுணர்வு வலிமையானாலும் ஆன்மா எப்பொழுதும் பரம்பொருளின் உதவியையும், தொடர்பையும் பெறும் என்று நீ கண்டு கொள்வாய்.

அருவ தியானம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள வடிவமற்ற தியான முறைகளில் ஏதாவது ஒன்றை மேற்கொள்ளலாம்.

1. சாதகன் தன்னை ஒரு மீன் என்றும், சாசுவதமாக பகுக்கப்படாமல், வகுக்க இயலாமல் உள்ள சச்சிதானந்தப் பெருங்கடலில் எத்தகைய தடைகளும் இன்றி நீந்துவதாகவும் கற்பனை செய்து கொள்ள வேண்டும்.

2. சாதகன் தன்னை ஒரு பறவை என்றும், வரையறை யற்ற ஆகாயத்தில், எங்கும் எத்தகைய குறுக்கீடுகளும் இன்றிப் பறப்பதாகவும் கற்பனை செய்து கொள்ள வேண்டும்.

3. சாதகன் ஒரு பானையைப் போல, முழுவதுமாக நீரில் மூழ்கியிருக்கிறான். வெளியிலும் தண்ணீர், உள்ளேயும் தண்ணீர்.

4. சாகதன் தன்னை, தன்னிலை உணர்ந்த ஒளிப்புள்ளி என்றும் வகுக்க முடியாத பேரொளி என்னும் பெருங் கடலில் மூழ்கியிருப்பதாகவும் கற்பனை செய்து கொள்ள வேண்டும்.

நீ உன்னை ஒரு ஒளிப்புள்ளியுடன் அடையாளம் கண்டு கொள்கிறாய். அதன்பிறகு நீ அதை வரையறை அற்ற ஒளி வட்டத்தின் ஒரு பகுதி என்று உணர்கிறாய். இறுதியாக உன் ஒளிப்புள்ளியை விரிவு செய்வாய். அல்லது அதை பரந்த ஒளி யுடன் கலக்குமாறு செய்வாய். அல்லது அது எங்கு வேண்டு மானாலும் நகரட்டும். ஆனால் எல்லா இடங்களிலும் ஒளி மட்டும்தான் உள்ளது. இது ஒரு அரிய வகையான தியானமாகும்.

வானத்திலுள்ள கோளங்களைப்பற்றிச் சிறிதளவு நாம் ஆராய்ந்து அறிந்துகொள்வது, நமக்கு பரந்த அகலிடத்தை குறித்ததொரு கருத்தினை அளிக்கிறது. நம்மால் வரையறை அற்றதைக் குறித்து எண்ண இயலாது. ஆனால் பரந்த அகலிடத்தைக் குறித்து எண்ண முடியும். அதன் பிறகு மெது வாக அதைப் பெரிது படுத்திக் கொண்டே போகவியலும். ஆகாயத்தின் பரந்து பட்ட தன்மையையும் நட்சத்திரங்கள் மற்றும் வானிலுள்ள பால் மண்டலங்களின் (Galaxies) எண்ணிப்பார்க்க வியலாத அளவுகளையும் குறித்து எண்ணு வாய். பிரஹதாரண்யக உபநிஷதத்தில்,

'வரையறையற்ற பரம்பொருள் எல்லா நட்சத்திரங் களிலும் கோள்களிலும் இருக்கிறது. அவைகளின் உள்ளேயும் உள்ளது. அவைகளின் வெளியேயும் உள்ளது. மற்றும் அதே

வரையறை அற்ற பரம்பொருள் மனிதர்களிடத்திலும் குடிகொண்டுள்ளது.'[1] என்று கூறப்பட்டுள்ளது.

வரையறைக்கு உட்பட்ட, சிறிய, அற்பமான சிறுகூறை நினைப்பதற்குப் பதிலாக பரந்த அகலிடத்தை, வரையறை யற்றதை, நட்சத்திரங்களை, சூரிய மண்டலத்தை, வானகப் பால் வீதி மண்டலத்தை (Milky way) ஒண்மீன் படலங்கள் தோன்றிக் கொண்டிருக்கும் புதிய நட்சத்திரங்களின் அமைப்பு முறை (Nebulae) போன்றவற்றைக் குறித்து நினைப்பது சிறந்த தாகும். அதன் பிறகு இந்த பூமி, ஆகாயம், சூரியமண்டலம் அனைத்தையும் வரையறையற்ற பகுக்கவியலாத பேரொளிக் கடலில் கரையச் செய்ய வேண்டும்.

ஹிந்துக்களின் மிகப் பழமையான, மிகவும் புனிதமான இறைவனின் புகழ்ப்பாடல்களுள் ஒன்றான, அனைவராலும் நன்கு அறியப்பட்ட புருஷஸூக்தத்தில் வேதகால முனிவர் (ரிஷி), 'இங்குக் காணப்படுவதெல்லாம் இறைவனின் மகிமையே ஆகும். ஆனால் இறைவன் இவற்றைவிடச் சிறப்பு மிக்கவர். தோன்றியவை எல்லாம் அவருடைய கால்பங்கு மட்டுமே ஆகும்'[2] என்று கூறியுள்ளார்.

நம்முடைய மனம் சிறிய, அற்பமான கீழான பொருட் களைச் சார்ந்து இருப்பதன் விளைவாக சுருங்கி விடும் பொழுது எல்லாம் நாம் அத்தகைய எழுச்சியூட்டும் எண்ணங் களைப் பற்றி நினைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆகாயத்தின் பரந்தபட்ட தன்மையையும், கணக்கற்ற சூரிய மண்டலங்களின் பரந்துபட்ட தன்மையையும் குறித்து நினைக்க வேண்டும். இயற்கையைக் கடவுள் என்று எண்ணாமல், இயற்கையில் கடவுள், ஆகாயத்தில் கடவுள்

1. யச்சந்த்ரதாரகே திஷ்டன் சந்த்ரதாரகாதாந்தர: யம் சந்த்ரதாரகம் ந வேத, யஸ்ய சந்த்ரதாரகம் சரீரம், யச்சந்த்ரதாரகமந்தரோ யமயதி, ஏஷ த ஆத்மாந்தர்யாம்யம்ருத: ॥

—பிரஹதாரண்யக உபநிஷதம், 3.7.11.

2. ஏதாவானஸ்ய மஹிமா । அதோ ஜ்யாயாம்ச்ச பூருஷ: பாதோஸ்ய விச்வா பூதானி... ॥

—ரிக் வேதம், 10.90.3.

என்னும் வெளிப்பாடுகளில் உள்ள கடவுளை நீ எண்ணிப்பார்.

சில நேரங்களில் நம்மை ஒருமுகப்படுத்திக் கொள்வதற்காக நமக்கு, மனிதப் பண்புகள் ஏற்றப்பட்ட, அல்லது மனிதப் பண்புகள் ஏற்றப்படாத தெளிவான சில வடிவங்கள் தேவைப்படுகின்றன. இல்லையெனின் பெரும்பாலான மனிதர்களுக்கு ஒருமுகப்படுத்த இயலாது. ஒரு பொருளுக்கு ஒரு தெளிவான வடிவம் இல்லாமல் நம்மால் நம் மனத்தைப் பொருத்தவியலாது மற்றும் அதனை ஒருமுகப்படுத்தவும் இயலாது. பெரும்பாலான மனிதர்களால் இவ்விதம் செய்வதற்கு இயலுவதில்லை.

எனவே மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு ஏதோ ஒரு தெளிவான, ஒரு வரையறைக்கு உட்பட்ட ஒன்று தேவைப் படுகிறது. இந்த நிலையில், வரையறைக்கு உட்பட்டதைத் தேர்ந்தெடுப்பது மனப்பாங்கைப் பொறுத்தது ஆகும். நாம் ஒருமுகப்படுத்துவதில் தேர்ந்தவுடன், வரையறைக்கு உட் பட்ட வடிவத்தில் உறையும் பரம்பொருளைத் தியானம் செய்வதற்கு முயற்சி செய்யலாம். உன்னால் வரையறைக்கு உட்படாததையும், வரையறைக்கு உட்பட்டதையும் தொடர்பு படுத்துவதற்கு இயன்றால் மற்றும் வறையறைக்கு உட் பட்டதை வரையறைக்கு உட்படாததன் வெளிப்பாடு என்று காணவியன்றால் அந்த தியானமானது மிகவும் சிறந்ததாகும். ஆனால் வரையறைக்கு உட்பட்டதை ஒருபொழுதும் கடவுளாகக் கருதுதல் கூடாது. வரையறைக்கு உட்பட்ட எல்லா வடிவங்களின் பின்னணியிலும் பரம்பொருள் இருப்பதைச் சாதகன் காண வேண்டும். ஆனால் வரையறைக்கு உட்பட்ட வடிவங்களை அவன் கடவுளாகக் கருதக் கூடாது. முதல் வகையில் அவன் பரம்பொருளை வலியுறுத்துகிறான். இரண்டாவது வகையில் அவன் வடிவத்தை வலியுறுத்து கிறான். அது மிகவும் ஆபத்தானது ஆகும். மற்றும் ஏமாற்ற மடையச் செய்துவிடும். நாம் வரையறைக்கு உட்பட்டதைப் பரம்பொருளின் வெளிப்பாடு என்று எண்ணி தியானம் செய்யும் பொழுது, நம்மிடம் தீவிரத் தன்மை மற்றும்

பரந்தகன்ற தன்மை என்னும் இரண்டும் உள்ளது. அத்தகைய தியானம் சரியான முறையில் செய்யப்பட்டால் அது மிகவும் சிறப்பானதாகும்.

இத்தகைய எல்லா விதமான தியானங்களுக்கும் இடையில், நாம் ஆன்மாக்களாக இருக்கிறோம் என்னும் மிக முக்கியமான உண்மையை மறந்து விடக் கூடாது. நாம் வரையறைக்கு உட்பட்ட வடிவத்தைத் தியானிக்கிறோமோ அல்லது வடிவமற்றதைத் தியானிக்கிறோமோ, நாம் நம்மை ஆன்மாக்களாகக் காண வேண்டும். பரம்பொருளானது ஆன்மாவைவிட மேலும் உண்மையானது மற்றும் விரிந்து அகன்றது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆதி சங்கராச்சாரியார், 'ஓ இறைவனே! அலைகள் தான் பெருங்கடலில் கலக்கின்றன. மற்றும் பெருங்கடல் அலைகளில் கலப்பது இல்லை. எல்லா வரையறைகளும் என்னிடமிருந்து அகன்றபின்பு, நான்தான் உன்னுடன் கலக்கிறேன். நீ என்னுடன் கலப்பது இல்லை.'[1]

ஆன்மாவில் அமிழ்ந்திருப்பாய்

மிகவும் மேம்பட்ட ஆன்மீக விழிப்புணர்வு நிலைகளில் சாதகன் முற்றிலுமாக புலன்களால் அறியத்தக்க இவ்வுலகத்தை மறந்து விடுகிறான். ஸ்ரீராமகிருஷ்ணருடைய அமுத மொழிகளில் இந்தக் கருத்தானது ஒரு வேடன் ஒரு பறவைக்கு குறிவைத்திருக்கும் எடுத்துக்காட்டால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'வேடன் ஒருவன் பறவையைக் குறி வைக்கிறான். அருகில் திருமண ஊர்வலம் செல்கிறது. ஊர்வலத்தில் மணமகன், உறவினர், மேளதாளங்கள், வண்டி, குதிரை என்று என்னென்னவோ போகின்றன. ஆனால் வேடனுக்கு இவை எதுவும் தெரிவதில்லை. இப்படி ஒரு ஊர்வலம் அருகில் சென்றதைக் கூட அவன் அறியவில்லை.'[2]

1. அத்தியாயம் 22, பக்கம் 653, அடிக்குறிப்பு 1.
2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.104.

நாம் எதை உண்மை என்று ஏற்றுக் கொள்கிறோமோ அது நம்முடைய ஆற்றல், அறிவு, எண்ணங்கள் மற்றும் செயல்களை முழுமையாக ஈர்க்கிறது என்பது ஆன்மீக வாழ்வின் அடிப்படையான விதிமுறையாகும். நாம் இந்த உலகத்தை உண்மை என்று ஏற்றுக்கொண்டால், நாம் அதனுடனேயே நம்மை ஈடுபடுத்திக் கொள்கிறோம். விஞ்ஞானியானவன் பேரண்டத்தில் மறைந்துள்ள கருத்துக்களில் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். நீ ஆன்மீக வாழ்வை நோக்கித் திரும்ப வேண்டும் எனின், இவ்வுலகமானது உனக்கு கடவுளைவிட அதிக உண்மையானதாக விளங்கக் கூடாது. ஒருவன் இந்த முழு உலகத்தைவிடக் கடவுள் அதிகமாக உண்மையானவர் என்பதை நம்பவில்லை எனின் ஒருவனால் த்வைதியாகக் கூட இருக்க வியலாது. ஒரு த்வைதி கூட, கடவுளை விட இவ்வுலகமானது. ஒரு தாழ்வளவான உண்மையே என்று கருதுகிறான். பரம் பொருள் மட்டுமே சாசுவதமானது மற்றும் அழிவற்றது ஆகும். எந்த சமயமுமே இவ்வுலகத்திற்குக் கடவுளுக்குக் கொடுத்துள்ள அதே உண்மைத் தகுதியை அளிக்கவில்லை.

அத்வைதம் தொடக்க காலத்திருந்தே உலகம் உண்மையல்ல, பரம்பொருள் மட்டுமே ஒரே மெய்ப் பொருள் என்று உறுதியாகக் கூறிக் கொண்டிருக்கிறது. த்வைதமானது இவ்வுலகத்தை உண்மையானது என்று முதலில் ஏற்றுக்கொண்டு மற்றும் அதற்கு அந்த உண்மை நிலையை அளிப்பவராக கடவுளை நாடுவதற்கு முயற்சிக்கிறது. எப்படியிருப்பினும், மேம்பட்ட விழிப்புணர்வு நிலை சாதகனை ஈர்க்கும் பொழுது, சாதகன் துவைதியாகவோ அல்லது அத்வைதியாகவோ ஆரம்பித்து இருப்பினும், அவனுடைய விழிப்புணர்விலிருந்து, புலன்களால் அறியத்தக்க, இவ்வுலகம் மறைந்துவிடுகிறது. த்வைதமும் அத்வைதமும், ஆன்மாவிற்கும், கடவுளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடும் சொற்கள் ஆகும். இது கவனிக்கத்தக்க முக்கியமான விஷயம் ஆகும். இந்த உலகம் உண்மையானதா, அல்லது உண்மையற்றதா என்னும் கேள்வி இங்கு முக்கியம் இல்லை.

பரம்பொருளின் மேம்பட்ட உண்மைத் தன்மையை வலியுறுத்தி, அதனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவது தான் மிகவும் முக்கியமானது ஆகும்.

நம்முடைய தனித் தன்மையைக் கடவுளுடன் எப்படித் தொடர்புபடுத்திக் கொள்வது? ஒரு சிறு பகுதியை முழுமையுடன் எப்படி இணைப்பது? ஆன்மீக வாழ்வில் இதுதான் நம்முடைய கடமையாகும். மற்றும் எந்த அளவிற்கு நாம் அதைச் செய்வதில் வெற்றி அடைகிறோமோ அந்த அளவிற்கு நாம் அதிகமாக ஆன்மீக இயல்புடையவர்களாகவும், ஞான ஒளிபெற்றவர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும் இருப்போம்.

ஒருவர், தன்னைப்பற்றிய கருத்தை மாற்றிக் கொள்வதில் ரகசியம் அடங்கியுள்ளது. நாம் நம்மை நம்முடைய உடல்களுடன் அடையாளம் கண்டுகொண்டால் இவ்வுலகமும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் இயல்பான முறையில் நம்மை வந்து அடையும். நாம் நம்மை ஆன்மாக்கள் என்று கருதினால்தான் பரம்பொருள் நமக்கு உண்மையானதாக இருக்கும். நாம் உடல்கள், நாம் ஆண்கள் மற்றும் பெண்கள், நாம் செயல்களைச் செய்பவர்கள் மற்றும் இன்பங்களை அனுபவிப்பவர்கள் என்னும் எண்ணங்களை நாம் எப்படி எதிர்த்துத் தடை செய்வது? நாம் ஒரு வலிமை வாய்ந்த, நேர் எதிர்மறையான எண்ண ஓட்டத்தைத் தோற்றுவிக்க வேண்டும். மற்ற எல்லா எண்ணங்களும் மங்கி மறையுமளவிற்கு இந்த எண்ணத்தைத் தீவிரமானதாகவும் உயிர்க்களைவாய்ந்ததாகவும் செய்ய வேண்டும். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட ஒவ்வொரு சாதகனும் அவன் தத்துவார்த்தமாக அத்வைதியாக இருப்பினும் அல்லது த்வைதியாக இருப்பினும் இதைச் செய்ய வேண்டும். அவன் தன்னை, தானே ஒளிரும், உடலுடனோ அல்லது மனத்துடனோ பிணைப்பற்ற ஆன்மாவாகக் கருத வேண்டும். அவன் இந்த உண்மையானது அவன் இயல்புகளில் மூழ்கும் வரையிலும் மற்றும் வாழ்க்கையைக் குறித்த அவனுடைய

கண்ணோட்டத்தைப் படிமாற்றம் செய்யும் வரையிலும், இந்த உண்மையைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

தூய்மைப்பாடை அடையும் இரகசியம் இங்கு உள்ளது. ஆன்மாவானது நிலைத்த தூய்மைத் தன்மை உடையது. மற்றும் அதுதான் நம்முடைய உண்மையான இயல்பு ஆகும். நம்முடைய உண்மையான இயல்பை அறியாமல் எந்த அளவிற்கு அதிகமாக நாம் முயற்சி செய்தாலும், நம் மால் உண்மையான தூய்மைப்பாடை அடையவியலாது. ஆன்மாவை மனத்துடனும் புலன்களுடனும், உடலுடனும் அடையாளம் கண்டு கொள்வதுதான் எல்லா தூய்மைக் கேடுகளின் அடித்தளம் ஆகும்.

ஆன்மாவைப் பற்றி நினைப்பதால்
நாம் ஆன்மா ஆகிறோம்

மனமானது மரபுத் தொடர்பால் ஒரேயடியாக ஒரு நிலைப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. அது இயக்க ஆற்றல் உள்ள இயல்புடையது ஆகும். முறையான கட்டுப்பாட்டால் அதனை மாற்ற வியலும். சொல்லப் போனால் அதற்கு, அதன் வழியாகச் செல்லும் ஒவ்வொருவகையான அனுபவத்தையும் பதிவு செய்து கொள்ளும் இயல்பு உள்ளது. பதிவு செய்யப் பட்டுள்ள பகுதி நம்முடைய இயல்பாக ஆகும் வரையிலும் பதிவு செய்யும் தன்மை உள்ளது. ஒரு கெட்ட மனிதனைப் பற்றி நினைப்பதால் நாம் அவனுடைய இயல்புகளையும் நம்முள்ளே வாங்கிக் கொண்டு நாமே கெட்டவர்களா கிறோம். இஷ்ட தெய்வத்தைத் தியானிப்பதால் நாம் அவ ருடைய தூய்மைப்பாடையும், சிறந்த பண்புகளையும் நம் முள்ளே வாங்கிக் கொண்டு நாமே தூய்மையானவர்களாக ஆகிறோம். இது எல்லா மனிதர்களிடமும் நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு மனம் சார்ந்த இயற்கை யான ஒழுங்கமைதியாகும். இந்த இயற்கையான ஒழுங் கமைதியானது இந்தியாவில் வெகுகாலத்திற்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டது. மற்றும் எல்லா வகையான ஆன்மீக தியானங்களுக்கும் அடித்தளமாகவும் ஆகியுள்ளது.

நம்முடைய மேம்பட்ட ஆன்மாவின் இயல்பில் மனம் ஊன்றி நிற்குமாறு படிமாற்றம் செய்யப்படுவதின் மதிப்பை ஒரு அத்வைதிகூட அடையாளம் கண்டுகொள்கிறான். எனவே ஞான மார்க்கத்தைப் பின்பற்றும் ஒருவர், உபநிஷதங்களின் மகா வாக்கியங்களான 'தத்வமஸி', மற்றும் 'நானே பிரம்மன்' போன்றவற்றின் மீதும், அல்லது சங்கரர் மற்றும் மற்ற குருமார்களால் இயற்றப்பட்ட இருமையற்ற அனுபவத்தை விவரிக்கும் சுலோகங்களின்மீதும் தியானம் செய்வதை நீ காண வியலும்.

உண்மையான ஆன்மாவின் இயல்பின்மீது மனத்தைத் தீவிரமாக ஒருமுகப்படுத்துவதால், ஒருவர் தன்னிடத்தில், ஆன்மாவைக் குறித்து மறந்துபோன நினைவுகளை எழுச்சி யடையச் செய்துகொள்ள இயலும். ஆனால் ஒருமுகப்படுத்து வதில் தீவிரத்தன்மை இருக்க வேண்டும். குறிவைக்கப் பட்டுள்ள இலட்சியத்தை நோக்கி முழுமனமும் பாய வேண்டும். எப்படியிருப்பினும் நாம் நம் மனத்தை முத லிலேயே தூய்மைப்படுத்தி, புலன்களால் உணரத்தக்க இவ் வுலகத்தைக் குறித்து, நம்முடைய கண்ணோட்டத்தில் ஒரு முழுமையான மாறுதலை ஏற்படுத்திக் கொள்ள இயல வில்லை எனின் இவ்விதம் செய்ய இயலாது. இவ்வுலகம் மற்றும் அதன் இன்பங்களின்மீது தீவிரமான உணர்ச்சியற்ற நிலையை ஏற்படுத்திக் கொள்ளவில்லை எனின் ஒருவரால் அவருடைய முழுமையான மனத்தை ஆன்மாவின் பக்கமாகத் திருப்ப இயலாது.

சாதாரண மனிதர்களின் மனமானது அமைதியற்ற நிலை யில் உள்ளது. அது புலன்கள் நாடும் பொருட்களால் தொடர்ந்து எல்லா திசைகளிலும் இழுக்கப்படுகிறது. மற்றும் அது தானாகவே உணர்ச்சிகளாலும், ஆசைகளாலும் இங்கு மங்கும் இழுக்கப்படுகிறது. நாம் நம்முடைய செயல்களுக்கு எத்தகைய சாக்கு போக்குகளை முன் வைத்தாலும், புலன்கள் நாடும் பொருட்களின் மீதுள்ள பிணைப்பின் சக்தியை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். உலகத்தின் மீது முற்றிலும் பற்றற்று இருக்கும் ஒருவனால், உடனடியாக அவனுடைய

முழுமனத்தையும் ஆன்மாவை நோக்கித் திருப்புவதற்கு இயலுகிறது. தொடர்ந்து செய்யும் தியானத்தால் அவன் அவனே ஆன்மா, உடலோ அல்லது மனமோ இல்லை என்று உணர்கிறான்.

பாகவதத்தில் மேலே கூறப்பட்ட கருத்தானது ஒரு அவதூதர் (தேச சஞ்சாரம் செய்யும் துறவி) ஒரு கரப்பு மற்றும் குளவியிடமிருந்து கற்றுக்கொண்ட படிப்பினையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.[1] ஒரு குளவி கரப்புகள், சிலந்திகள், கம்பளிப்புழு போன்றவற்றைத் தன்னுடைய கொடுக்கால் கொட்டி செயலிழக்கச் செய்தபிறகு அவற்றைத் தன்னுடைய கூட்டிற்கு எடுத்துச் செல்வது என்பது அனைவருக்கும் தெரிந்ததாகும். அதன் பிறகு குளவி இந்த உதவியற்ற பலியாக உள்ள உயிர்களின் முன்பு முட்டைகளை இட்டு கூட்டை மூடிவிடும். அடைகாத்த முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் இந்த பூச்சிகளை உண்டு, குளவியாக வளர்கின்றன. குளவியின் வாழ்க்கையைக் குறித்த முழு நிலைத் தொடர் வரிசையானது ஒருவேளை இந்தியாவில் கண்டுபிடிக்கப் படாமல் இருந்திருக்கலாம். ஆனால் கூட்டில் காணப்படும் கரப்பு போன்றவை குறித்து பலரும் அறிந்து இருந்தனர். மற்றும் இதுதான் கரப்பு குளவியைக் குறித்துத் தீவிரமாகத் தியானம் செய்தால் குளவியாகவே ஆகிவிடுகிறது என்னும் பொதுவான நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கக் கூடும். ஹிந்தி இலக்கியத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் 'குளவியும் மற்றும் கரப்பான் பூச்சியும்' என்னும் நீதிக் கதைக்கு இது அடிப்படையாக இருக்கலாம்.

ஆன்மாவின் மீது செய்யப்படும் இந்த வகையான தியானமானது ஒருவகையான தற்தூண்டுதல் ஆகும் என்பது இதன் பொருள் இல்லை. சாதாரணமான மனித மனத்திற்குப் பரம்பொருளானது அதனுடைய அனுபவத்திற்கு அப்பாற் பட்டதாக இருப்பினும், தூய்மையடைந்துள்ள மனத்தினால் அதை நேரடியாக உணர இயலும். எனவே இந்த நிலையில்

1. *பாகவதம், 11.9.23*

தியானம் என்பது தோற்றத்தின்மீது அல்ல. உண்மையின் மீதே ஆகும். தியானமானது, தானே ஒளிரும் உண்மைக்கு மாறாக எழும் எண்ணங்களைத் தடுப்பது ஆகும். ஆன்மா வானது தானே ஒளிரும் இயல்புடையது. நம் எல்லா எண்ணங் களின் பின்னணியில் அது எப்பொழுதும் உள்ளது. எண் ணங்கள் ஒருமுகப்படுத்தப்படுவதின் மூலம் அமைதி படுத்தப்பட்டு, ஆன்மாவை மறைத்துள்ள அறியாமை அகன்றவுடன் ஆன்மாவானது சுடர்விடுகிறது.

வழிபாடு மற்றும் பகுத்து ஆராய்வதான இரட்டை வழிமுறைகள்

பொதுவாக நம்முடைய எண்ண வாழ்க்கையும் மற்றும் உடல் தொடர்பான வாழ்க்கையும், நம் பருஉடலுடனும், மற்றும் சூட்சும உடலுடனும் முழுவதுமாக இனம் கண்டு கொள்வதைச் சுட்டிக் காட்டுகிறது. எனவே தவறாக இவ்விதம் அடையாளம் கண்டு கொள்வதிலிருந்து நம்மால் திடீரென்று வெளிவருவதற்கு இயலுவது இல்லை. ஆனால் நம்மால் அதை முடிந்த அளவிற்குக் குறைக்கவியலுகிறதா என்று நாம் கண்டுகொண்டு நாம் நம் இலட்சியத்தை நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கும்பொழுது இவ்விதம் தவறாக அடையாளம் கண்டுகொள்வதை மேலும் மேலும் குறைப்ப தற்கு முயற்சி செய்ய வேண்டும்.

நம்முடைய எல்லா உணர்வுகளின் பின்னணியிலும் நாம் ஆண்கள் மற்றும் பெண்கள், நாம் இயல்புகளைக் கொண்ட வர்கள், தனிமனிதர்கள் என்னும் இந்தக் கருத்து இருப்பது தான் சிக்கலானது ஆகும். அதே நேரத்தில் நாம் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்ட சாதகர்கள் அல்லது கடவுளின் பக்தர்கள் என்றும் உணர்கிறோம். ஆனால் இந்த உணர்வை, நம் தனி மனித நிலை என்னும் கருத்தின் எல்லையைக் கடந்து மேம் படும் வழிமுறையாகவும் செய்து கொள்ளவியலும். நாம் சாதகர்கள் அல்லது பக்தர்கள் என்னும் கருத்தை மனத்தில் கொண்டு ஒரு ஆண் அல்லது பெண் தெய்வத்தை வழி படலாம். ஆனால் இத்துடன் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்

தன்னைத் தானே பகுத்து ஆராயும் இயல்பும் முற்றிலும் தேவையான ஒன்றாக இருக்கிறது. ஏனெனில் சாதகன் மற்றும் பக்தனின் இந்தக் கருத்தும்கூட முற்றிலும் ஒரு தவறான கருத்தாகவும் இருக்கலாம்.

முழுக்க முழுக்க நம்மை நாமே பகுத்து ஆராயும் பாதையை நம்மால் பின்பற்ற இயலாததால் வெவ்வேறு இயல்புகள் இணைந்த ஒரு பாதையைப் பின்பற்ற வேண்டும். நாம் நம்மைப் பக்தர்களாக கண்டு கொண்டு கடவுளை வழி பட வேண்டும். மற்றும் நம்முடைய தனித்தன்மையை ஆன்மா மற்றும் பருஉடல், சூட்சுமஉடல் அடங்கியிருக்கும் ஆன்மா அற்றவையாகப் பிரித்துப்பார்க்க முயற்சி செய்ய வேண்டும். அதன்பிறகு ஆன்மா அல்லாதவைகளிடமிருந்து நம்மைத் தூரப்படுத்திக் கொண்டு, ஆன்மாவுடன் நம்மை அடையாளம் கண்டு கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதுதான், வழி பாடு மற்றும் பகுத்து ஆராய்வதுமான இரட்டை வழிமுறை யாகும். இது எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டும்.

ஒருமுகப்படுத்துவதற்கு நம்மில் பலருக்கும் ஒரு தனிப் பட்ட புனிதமான குறிக்கோளோ அல்லது இஷ்ட தெய்வமோ தேவைப்படுகிறது. ஆனால் நம் இஷ்ட தெய்வ தியானத்துடன் அதற்கு இணையாக, இந்த இஷ்ட தெய்வம் எதனால் வெளிப் பட்டுள்ளதோ, அந்த மெய்த் தத்துவத்தைப்பற்றி நினைப்பதற் கும், தியானம் செய்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இவ் விதமாக நாம் பரம்பொருளின் தனித்த இயல்பைக் குறித்த, அல்லது தனிப்பட்ட இயல்பைக் குறிக்காத முறையில் செய் யும் தியான முறைகளை ஒருங்கிணைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இத்துடன் கூடுதலாக, நாம் ஒரு பொருண்மை சார்ந்த தியானங்களையும் மேற்கொள்ள வேண்டும். அதில் நாம் நம்முடைய ஆன்மாவை, ஆன்மா அல்லாத பிறவற்றி னின்று பருஉடல், நுண்உடல் போன்றவற்றிலிருந்து பிரிப்ப தற்கு முயற்சி செய்ய வேண்டும். நம் உடல்கள், பருஉடல், நுண்உடல் போன்றவையாகும். இந்த முறை அனைவராலும் பின்பற்றப்பட வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும். நாம் இதைப் பல தடவைகள் செய்ய வேண்டும்.

நிலைத்த இயல்புடன் கூடிய தியானவகைகளை நாம் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ள வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானதாகும். பல பொருள் மற்றும் ஒரு பொருள் சார்ந்த இத்தகைய தியானங்களை எத்தகைய இடையீடும் மாறுபாடும் இல்லாமல் நாள்தோறும் உணர்ந்து மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும். இவ்விதம் செய்யப்படுகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய பயிற்சியின் ஒரு பகுதியாக, தவறாமல் அதைச் செய்வதை ஒரு வழக்கமாக மேற்கொள்ள வேண்டும். அது நம்முடைய சாதனைக்கு மிகவும் தேவையான ஒன்றாகும். என்றாவது ஒருநாள் ஒருவர் தன்னுடைய உடலைக் குறித்த உணர்வும், தனிப்பட்ட தன்மையும் வழக்கமாக இருப்பதைவிட திடமாக இருப்பதை உணர்ந்தால், அவர் அப்பொழுது திருமறை நூல்களின் வாசகங்களை, முக்கியமாக அத்வைத தொடர்பான வாசகங்களை வழக்கத்தைவிட அதிகமாக மேற்கொள்ள வேண்டும். தியானிக்க வேண்டும். ஒருவருடைய மனம் எதிர்க்க முயற்சி செய்தாலும் ஒருவர் அதிகமான அளவு தியானம் செய்ய வேண்டும். நாம் தொடர்ந்து சில முக்கியமான கருத்துக்களைக் கூற வேண்டும் மற்றும் நினைவில் கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் நிலைத்த சில ஏட்டுரைப் பகுதிகளை கூற வேண்டும். இது ஒவ்வொரு முறையும் புதிய வாசிப்புகளை மேற்கொள்வதைவிட மிகவும் சிறந்ததாகும். சில கருத்துக்கள் தொடர்ந்து செய்யப்படும் பயிற்சியால் நம்முள்ளே ஆழமாக வலிந்து செலுத்தப்பட வேண்டும்.

புலன்களால் உணரத்தக்க உலகத்திலிருந்து துன்பங்களும், வேதனைகளும் வரும் பொழுது எல்லாம் நாம் விழிப்புணர்வுடன் நம்மை அவைகளிடமிருந்து இழுத்துக் கொள்ள முயற்சி செய்து, நம்மிடம் உள்ள கடவுளை நோக்கிச் செல்ல வேண்டும். உண்மையாகவே ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டிருக்கும் சாதகனுக்கு வெளியுலகத்திலிருந்து விலகிச் செல்வது மிகவும் அவசியமானது ஆகும். அவன் கடவுளை நோக்கி இன்னும் அதிகமாக திரும்புகிறானோ, இல்லையோ

உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்கள் இதற்கு நேர் மாறானதைச் செய்வார்கள். வேறுபடுத்திக் காண்பதின் மூலம் தங்களைப் புலன்களால் உணரத்தக்க உலகத்திலிருந்து பிரித்துக் கொள்வதற்கு முயற்சி செய்யாமல் அவர்கள் கடவுளை நோக்கிச் செல்ல முயற்சி செய்கிறார்கள். சிறிய தனித்தன்மைளை நம் உடலிலிருந்தும், மனத்திலிருந்தும் நம்மால் பிரிக்க இயன்றால் மட்டும் போதாது. ஆனால் நாம் வரையறைக்கு உட்பட்டதை, வரையறைக்கு உட்படாத துடன் தனித்த ஆன்மாவை இயலுலக அண்ட ஆன்மாவுடன் இணைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். தற்சமயத்திற்கு நம்மால் இவைகளை மட்டுமே செய்ய இயலும். முழுமுதற் பொருளான, அறிவு எல்லைக்கு அப்பாற்பட்டதான இரண்டா வது இல்லாத ஒருமையானது மிகவும் தொலைவில் உள்ளது. வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு நம்மால் அடைய இயலாது.

நம் உடலுடன் அடையாளம் கண்டு கொள்வது எத்தனை அளவு குறைகிறதோ, அந்த அளவிற்கு நாம் தூய்மை அடை கிறோம், மற்றும் நாம் தூய்மை அடையும் அளவிற்கு ஏற்ப நமது உடலுடன் அடையாளம் கண்டு கொள்வது குறைகிறது. தூய்மைப்பாடும், பற்றற்ற தன்மையும் பக்கவாட்டில் செல் கின்றன. இது ஒரு இணையொத்த வளர்ச்சியின் நிகழ்வே ஆகும். மற்றும் ஒரு நச்சுச் சுழல் அல்ல. நாம் நம்மை நம் உடலுடன் அடையாளம் கண்டு கொள்வது குறைந்திருக்கும் அளவிற்கு, மற்றும் தூய்மைப்படுத்தும் வழிமுறை தீவிர மடைந்திருக்கும் அளவிற்கு அந்த அளவிற்கு நாம் ஆன்ம ஞானத்தை நோக்கிச் செல்வோம்.

ஸ்வேதாஸ்வதர உபநிஷதத்தில் இந்தப் பகுதி உள்ளது, 'தனது உடலைக் கீழ் அரணிக்கட்டையாகவும், பிரணவத்தை மேல் அரணிக்கட்டையாகவும் செய்து தியானப் பயிற்சியால் கடைந்து, மறைந்தாற்போலிருந்த தெய்வத்தையும் கண்டு கொள்ளலாம்.[1]

---

1. ஸ்வதேஹம் அரணீம் க்ருத்வா ப்ரணவம் ச உத்தராரணீம் ।
த்யான நிர்மதனாப்யாஸாத் தேவம் பச்யேந் நிகூடவத் ॥
—ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், *1.14*

அதாவது ஒருவர் நிலைத்த உறுதியுடனும், விடா முயற்சி யுடனும் ஒருவருடைய ஜபத்தை மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் அவருடைய மனத்தை ஆன்மாவின் மீதும் நிலைநிறுத்தியிருக்க வேண்டும். இருவழிமுறையான இது தான் வழிபாடு மற்றும் தன்னைத்தானே பகுத்து ஆராய்வு செய்து கொள்வதும் ஆகும்.

அறிவானது எண்ணமாக, அறியாமையை அகற்றுகிறது. அதன்பிறகு அந்த அறிவு மறைந்துவிடுகிறது. அறிவு சாதக னுக்குத் தனிப்பட்ட ஆன்மாவைக் குறித்த உண்மையான கருத்தையும், இயலுலக அண்டத்தின் ஆன்மாவைக் குறித்த உண்மையான கருத்தையும் அளிக்கிறது. அதன் பிறகு அவை களின் முழுமையான இணைப்பை ஏற்படுத்துகிறது. அதன் பிறகு அது இல்லாமல் போய்விடுகிறது. பரம்பொருளை அடைந்து விட்ட நிலையில் அங்கு அறிபவரோ, அறிவோ, அறியப்பட்டதோ இருப்பதில்லை. தூய்மையான வரை யறையற்ற விழிப்புணர்வு மட்டுமே எஞ்சியுள்ளது.

தன் அணுகுமுறையில் த்வைதியாக இருக்கும் பக்தன், தன் ஆன்மாவைக் கடவுளுடன் இணைப்பதற்கு முயற்சி செய்கிறான். அத்வைதி உச்ச அளவில் பகுத்து ஆராயும் வழி யில் முயற்சி செய்கிறான். அதில் கடவுள் அல்லாத அனைத் தும் நீக்கப்பட்டு, கடவுள் உணரப்படுகிறார். இருவருமே அகங்காரத்தை மறுக்க முயற்சி செய்கின்றனர். அதை நீக்க முயற்சி செய்கின்றனர். ஆனால் வேறு வேறு வழிகளில் செய் கின்றனர். பக்தன் 'நான் துச்சமானவன் அனைத்தும் நீயே' என்று கூறுகிறான். அத்வைதியானவன் என்னுடைய தனித் தன்மை ஒன்றுமற்றது. வரையற்ற பரம்பொருளே எல்லாமாக உள்ளது' என்று கூறுகிறான். இந்தக் கருத்தை வெளிப் படுத்தும் ஒரு வடமொழி உரைநடைப் பகுதி உள்ளது.

'சிலமனிதர்கள் உன்னை வழிபட்டு, ''நான் உன் னுடையவன்'' என்று கூறுவார்கள். வேறு சிலர் ''நான் உன் னுடையவன் மட்டும்தான்'' என்று கூறுவார்கள். மனப் பான்மைகளில் இத்தகு சிறிய வேறுபாடு இருப்பினும்

இருவருடைய இறுதியான விளைபயன் ஒரே இயல்புடையதாக உள்ளது.'[1]

எனவே, உண்மையைக் கூறப் போனால் வரையறையற்ற 'நீ' (Thou) என்பது வரையறையற்ற நானைப்போல (I) ஒரே இயல்பு உடையதுதான். இரண்டுமே அதே இறுதியான உண்மைக்கு வழி காட்டுகின்றன. அதை வெளிப்படுத்தும் முறைதான் வேறுபட்டு விளங்குகிறது. அணுகுமுறையும் வேறானதாக உள்ளது.

---

1. தவாஸ்மீதி பஜத்யேக: த்வமேவாஸ்மீதி சாபர: ।
இதி கிஞ்சித் விசேஷோऽபி பரிணாம: ஸமோத்வயோ: ॥
—நரஹரி, போதஸாரம்

26

கடவுளின் இருப்பை உணர்வாய்

மனத்தை உயர்ந்த மட்டத்தில் வைத்துக் கொள்ளுதல்

ஆன்மீக வாழ்க்கையில் நாம் காலையிலும், மாலையிலும், ஒரு மணிநேரம் அல்லது இருமணி நேரங்களைத் தியானம் செய்வதில் செலவிடுவது போதுமானது அல்ல. நாம் முழுவதும் ஓரளவிற்குத் தியானத்தைத் தொடர்ந்து செய்யும் மனநிலையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். நாம் வாழ்வின் அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது கூட கடவுளைக் குறித்த அடி எண்ண நீரோட்டம் இருக்க வேண்டும். இது தியானத்திற்கு அமரும்பொழுது தூய்மையற்ற எண்ணங்கள் எழுவதைத் தடுத்து மற்றும் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்குப் பெருமளவில் உதவுகிறது. நாள்தோறும் நாம் மேற்கொள்ளும் தியானத்திற்குத் துணையாக கடவுளின் இருப்பைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் பயிற்சி இருக்க வேண்டும். மற்றும் சரியான முறையில் செய்யப்பட்டால் அது தன்னிலையிலேயே ஒரு தீவிரமான ஆன்மீகப் பயிற்சி ஆகிறது. அது ஒருமுகப்படுத்தப் படாமல் பலமணிநேரங்களுக்குச் செய்த தியானத்திற்குச் சமமானதாகும்.

பகவத் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் அர்ஜுனன் கிருஷ்ணரிடம் ஞானம் நிலைத்து, சமாதி நிலையில் இருப்பவனின் (ஸ்தித ப்ரஜ்ஞன்) இயல்புகளைக் கேட்கிறான்.[1] ஒரு முழுநிறைவான பக்தனின் இயல்புகளை இந்த நூலில் பல இடங்களிலும் மற்றும் மற்ற ஆன்மீக நூல்களிலும் இவ்விதத்தில் தொகுத்து அட்டவணைப்படுத்தி

1. பகவத் கீதை, 2.54.

இருப்பதின் நோக்கம் என்ன? சங்கரர் பகவத் கீதையின் இரண்டாவது அத்தியாயத்திற்கு எழுதியுள்ள விளக்கவுரையில் இந்தக் கருத்தை விவரித்துள்ளார். முக்தியடைந்த ஒரு மனிதனின் இயல்புகளை, முழுமைநிலையை அடையாதவர்கள், ஒழுக்க நற்பண்புக் கூறுகளாக அல்லது விதிமுறைப் பயிற்சிகளாக பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். முயற்சி செய்து கொண்டிருக்கும் மனிதனுக்கு, விடாமுயற்சியுடன் கூடிய விதிமுறைப் பயிற்சியாக இருப்பது, முழுநிறைவு அடைந்த மனிதனுக்கு ஒரு அணிகலனாகத் திகழ்கிறது. எனவேதான் முன்னேற்றமடைந்த மனிதனின் சிறப்பியல்புகளையும் நடத்தையையும் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது.

மனத்தை எப்பொழுதும் ஒரு உயர்ந்த மட்டத்தில் வைத்துக்கொள்வதின் முக்கியத்துவம்தான் இந்த எல்லா அறிவுரைகளின் கவனிக்கத்தக்க முதன்மையான கருத்தாக உள்ளது. மனம் கீழே இறங்கி வருவதற்கு ஒருபொழுதும் அனுமதிக்கக் கூடாது. நீ ஒப்புயர்வற்ற இலட்சியத்தை மறந்து விட்டு உலகியல் நாட்டங்களில் மூழ்கி இருக்கும் பொழுது இந்நிலை ஏற்படுகிறது. கடமைகளும், செயல்பாடுகளும் தவிர்க்க இயலாதவை. இவை கடவுளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் வழிமுறைகளாக மாற்றப்பட வேண்டும். ஒருவர் இதைச் செய்யவில்லை எனின், காலையிலும், மாலையிலும் சிறிது நேரம் செய்யும் ஜபம் மற்றும் தியானம் பெரிய அளவில் உதவாது. நாம் எப்பொழுதும் கடவுளை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் செய்யும் நினைக்கும் அனைத்தையும் கடவுளுடன் தொடர்புபடுத்துவதுதான் இதைச் செய்வதற்கான ஒரே வழிமுறையாகும். கடந்த காலத்தைப் பற்றி ஏங்கிக் கொண்டிருப்பதோ அல்லது மனத்தைச் சோம்பேறித்தனமாக, மந்தமாக வைத்துக் கொண்டிருப்பதோ மிகவும் ஆபத்தானதாகும். நாம் மனத்தை வெறுமையாக இருப்பதற்கு அனுமதித்தால், அது கடந்த கால அனுபவங்களைக் குறித்து ஏங்கிக் கொண்டும், பயனற்ற எண்ணங்களை எண்ணிக் கொண்டும் இருக்கும்.

இந்த அனைத்தும், யாருக்கும் எந்த நன்மையையும் அளிக்காது.

உனக்கு அத்தகைய ஒரு மனநிலை ஏற்பட்டால் உடனடியாக ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்க வேண்டும் அல்லது யாருக்காவது தன்னலமற்ற தொண்டு செய்ய வேண்டும். அந்த மனநிலை உடனடியாக அகன்று விடுவதை நீ காண்பாய். இல்லையெனின், நீ உன் கடந்த காலத்தைக் குறித்து ஏங்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தால், நீ உன் நேரத்தை மட்டும் வீணடிப்பதில்லை, தன்னாலேயே ஏற்படுத்திக் கொள்ளப்படும் தடைகளையும் தோற்றுவித்துக் கொண்டிருப்பாய். சமயவாழ்க்கையில் கருத்து சார்ந்த ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தை ஒருபொழுதும் அதிகமாக வலியுறுத்த முடியாது. பெரும்பாலான சாதகர்களுக்கு அவை மிகவும் முக்கியமானவையாகும். உனக்குக் கருத்து ஊன்றி வாசிப்பது இனி தேவையானதில்லை. தியானத்தின் மூலமே எல்லாவற்றையும் அடைந்துவிடலாம் என்று நினைப்பது தகாத துணிவுடைமை ஆகும். தியானமானது உயர்ந்த மையங்களைத் திறக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் மனம் சார்ந்த மற்றும் எல்லா உயர் நிலையான ஆற்றல்களையும் இத்தகைய உயர்ந்த மையங்களின் வழியாகப் பாய வைக்க இயலாது. ஆனால் அதிக அளவிலுள்ள தேவைக்கு மேம்பட்ட ஆற்றலானது கீழே உள்ள மையங்களில் தங்கியிருக்கிறது. இந்த ஆற்றல் ஏதாவது படைப்பாற்றல் மூலம் வெளிப்படுவதற்கு வழி ஏற்படுத்தப்படவில்லை எனின், அது தேவையற்ற மனக்குழப்பத்திற்கு வழிகாட்டிவிடும். வாசிப்பதும், தன்னலமற்ற சேவை செய்வதும் ஆன்மீக பயிற்சி வகையாகக் காணப்பட வேண்டும். அவை ஆன்மீக வாழ்வின் ஏதாவது ஒரு அகல்விரிவான திட்டத்தின் பகுதியாக வடிவமைக்கப்பட வேண்டும். அவற்றைத் தேவையற்றவை என்றோ அல்லது பயனற்றவை என்றோ விட்டுவிடக் கூடாது. மற்ற நேரங்களில் உன்னால் படைப்பாற்றல் மிக்க எதையாவது செய்ய இயலுமாயின் வாழ்க்கையின் சலிப்பை நீ ஒருபொழுதும் உணரமாட்டாய்

இல்லையெனின் முக்கியமாகத் தொடக்க நிலையில் இருப்பவர்களுக்கு ஆன்மீக வாழ்வே ஒரு பொறுக்கவியலாத சலிப்பு நிறைந்ததாக ஆகிவிடும்.

நம் ஆன்மீக வாழ்வு, ஒருநாளின் இயல்பான ஓட்டத்தில் நம் மனத்தில் கடவுளைக் குறித்து அடுத்தடுத்து தோன்றும் எண்ணவகையைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒருமுறையோ அல்லது இரு முறைகளோ ஒரு மணி நேரத்திற்கு அமர்ந்து தியானம் செய்வது போதுமானது அல்ல. நாள்தோறும் நாம் செய்யும் செயல்கள் மற்றும் கடமைகளுக்கிடையில் கடவுளின் எண்ணமானது தொடர்ந்து பொங்க வேண்டும். அதுதான் உண்மையான ஆன்மீக வாழ்வு ஆகும். இல்லை எனின் ஒருநாளில் ஒரு மணி நேரத்திற்கோ அல்லது இரண்டு மணிநேரத்திற்கோதான் உன்னால் ஆன்மீகத்தில் நிலைத்திருக்கவியலும். மற்ற நேரங்களில், உலகியலில் நாட்டம் கொண்ட சாதாரணமான மனிதனை விட நீ வேறுபட்டவன் அல்ல.

ஆனால் இதற்கு நீண்ட காலத்திற்கு விழிப்புணர்வுடன் கூடிய முயற்சி தேவையானதாகும். இனிமையற்ற சூழ்நிலைகளையும், மனிதர்களையும் தவிர்க்க இயலாது. மற்றும் இவை மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. எனவே நீ அவற்றையும் கடவுளுடன் தொடர்புபடுத்துவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். கடவுள் இருக்கிறார் என்னும் பெரிய அளவுத் திட்டத்தில் தீயமனிதர்கள் என்று கூறப்படும் துரதிருஷ்டமான சூழ்நிலைகளுக்காகச் சிறிதளவு இடத்தைத் தேடிக் கொள்வாய். அதன்பிறகு மொத்தத்தில் நீ பொதுவாக மனிதர்கள் கொடுமை நிறைந்தவர்களாக இல்லை. சூழ்நிலைகளும் துரதிருஷ்டமானதாக இல்லை என்று கண்டு கொள்வாய். உறுதியான பயிற்சியால் உன்னுடைய அகங்காரத்தைப் பின்பக்கத்திற்கு தள்ளிவிட்டு, கடவுளை முன்னணிக்குக் கொண்டுவந்து உன்னுடைய எண்ண வாழ்க்கையில் கடவுளுக்கு முதன்மையான இடமளிக்க வேண்டும். நம்முடைய அற்பமான அகங்காரத்தைப் பற்றிக் கொள்வதுதான் ஆன்மீக வாழ்க்கையில் உள்ள முக்கியமான சிக்கல் ஆகும்.

இது குறைக்கப்பட வேண்டும், உன்னைக் குறித்த உன்னுடைய மனப்பான்மைதான் ஒரு வேளை உன்னுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு மிகப் பெரிய தடையாக இருக்கக்கூடும். சூழ்நிலைகளோ, மற்ற மனிதர்களோ அந்த அளவிற்குத் தடையாக இருக்க மாட்டார்கள்.

இடைவிடாத, தொடர்ந்த பயிற்சி

உன்னுடைய கைகள் சுறுசுறுப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, பயிற்சியின் மூலம் உன்னால் கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்யவியலும் அல்லது நீ கடவுளைப் பற்றி நினைத்துக் கொண்டு பிரார்த்தனைப் பாடலையோ அல்லது ஸ்தோத்திரப் பாடலையோ கூறவியலும். இந்த முறையில்தான் உன்னால் செயலை வழிபாடாக படிமாற்றம் செய்யவியலும் மற்றும் கடவுளின் அருகிலும் இருக்கவியலும்.

ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பிரார்த்தனையும் தியானமும் குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படுவது மிகவும் தேவையானதாகும். ஆனால் இது மட்டுமே போதாது. வேலை செய்து கொண்டிருக்கும் நேரத்திலும், பிரார்த்தனை செய்யும் மற்றும் தியானம் செய்யும் பாங்கும் தொடரப்பட வேண்டும், அப்பொழுதுதான் ஒருமுனைப்படுத்தப்பட்ட மனநிலையுடன் செய்ய முயற்சிக்கும் செயலானது ஒருவகையான ஆன்மீகப் பயிற்சியாகிறது. பிரார்த்தனை, மற்றும் தியானத்தைப் போல பயன்தரத் தக்கதாகவும் விளங்குகிறது. 'ஓ கடவுளே, நான் செய்யும் அனைத்துமே உன் வழிபாடே ஆகும்' என்று ஹிந்து சமயத்தைச் சார்ந்த ஒரு ஸ்தோத்திரப் பாடல் கூறுகிறது.★

உன்னுடைய தியானம் மற்றும் பிரார்த்தனைகளை முறையாக, ஒழுங்காகச் செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். மற்றும் அத்துடன் நாள் முழுவதும் சிறிதளவு புனிதமான எண்ணத்தையும் நீ கொண்டிருக்க வேண்டும். நீ

★ அத்தியாயம் 17, பக்கம் 495, அடிக்குறிப்பு 2.

சோம்பலுடன் செயலற்று இருக்கும் கணங்களில் கடவுளின் திருநாமத்தையும் எண்ணத்தையும் நிறைந்துக் கொள்ளும் அளவிற்கு, உன்னிடம் மிகப் பெரிய அளவில் ஆன்மீகப் படி மாற்றம் ஏற்பட்டு உன் இதயத்தில் மேலும் மேலும் கடவுளின் இருப்பையும் அன்பையும் பேரின்பத்தையும் உணர்வாய்.

ஆன்மீகப் பாதையைப் பின்பற்றுபவர்களுக்கு ஏற்றமும் இறக்கமும் தவிர்க்க இயலாதவையாகும். எனவே அதைக் குறித்துக் கவலை கொள்ள வேண்டாம். ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு நதியில் வெள்ளமானது அது பெருங்கடலை நெருங்கிக் கொண்டு இருக்கும்பொழுதுதான் ஏற்படுகிறது என்று கூறுவார். நீ உன்னுடைய மனநிலைகளைக் குறித்துக் கவலை கொள்ள வேண்டாம். மனத்திற்கு அதனுடைய ஏற்றங்களும், இறக்கங்களும் உள்ளன. ஆனால் நீ உன் ஜபத்தையும், தியானத்தையும் ஒரே சீராக உறுதியுடன் செய்துகொண்டு மாறாத தன்மை உடைய பரம் பொருளின் இருப்பை உணர்ந்து கொண்டு இருந்தால் உனக்கு மேலும் திடநிலை ஏற்படும்.

சிறிது நேரத்திற்கு ஜபத்தையும், தியானத்தையும் மேற்கொண்ட பிறகு, உன் கடமைகளைச் செய்ய வேண்டும். பரம் பொருள் எல்லா உயிரினங்களிலும் குடிகொண்டு இருப்பதைப் போல உன்னுடைய இதயத்திலும் உன் ஆன்மாவின் ஆன்மாவாக குடி கொண்டுள்ளார் என்பன போன்ற உணர்வுகளையும் உன் மனத்தில் நீ கொண்டிருக்க வேண்டும். நீயும், மற்ற அனைவரும் கடவுளிடம் குடிகொண்டுள்ளீர்கள் என்றும் கருத வேண்டும்.

நீ இந்த வகையில் தொடர்ந்து செயலாற்றினால், உன் ஆன்மா மற்றும் பரம்பொருள் இணையும் இடமான இதய மையத்தைக் குறித்து மேலும் மேலும் உணர்ந்து கொள்வாய். இது உனக்கு காலக் கிரமத்தில் உடல் மற்றும் மன திடத்தை அளிக்கும்.

கடவுளுடன் அகநிலைத் தொடர்பு

ஒவ்வொரு சாதகனும் ஒரு நிலைத்த விழிப்புணர்வு மையத்தையும், ஒரு இஷ்ட தெய்வத்தையும், ஒரு

மந்திரத்தையும் நிலைத்த பயனை அடைவதற்காகக் கைக் கொள்ள வேண்டும். மேலும் கப்பலோட்டியின் திசை காட்டும் கருவியானது நிலைத்து வடதிசையையே காட்டிக் கொண்டு இருப்பதைப் போல நம் மனமானது எப்பொழுதும் நம் விழிப்புணர்வு மையத்திலுள்ள இஷ்ட தெய்வத்தின்மீதும் புனிதமான மந்திரத்தின்மீதும் நிலைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு சாதகனுக்கும் அவனுடைய விழிப்புணர்விற்கு ஒரு நிலையான மேம்பட்ட ஆன்மீக மையமானது இருக்க வேண்டும். அவன் தன்னுடைய விழிப்புணர்வு மையத் திலேயே எப்பொழுதும் இருப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். அவன் காலை நேரத்தில் தியானம் செய்யும் பொழுது அவனுடைய மனத்தை அங்கு நிலைநிறுத்துவதில் வெற்றியடைந்தால் இதை அவனால் சுலபமாகச் செய்ய இயலும். உண்மையான 'நான்' என்பதை அவனால் அங்கு காண முயன்றால் அவனுடைய உண்மையான விழிப் புணர்வை இந்தத் தலைமையான விழிப்புணர்வுடன் தொடர்புபடுத்துவது சுலபமானதாக இருக்கும். எப்பொழுதும் சாதகன், அவனுடைய விழிப்புணர்வு மையத்துடன் ஆழமாக வேர் ஊன்றி நிற்கிறானா என்பதைக் கண்டுகொள்ள வேண்டும். மனமானது இந்த ஆன்மீக மையத்திலிருந்து கல்லி எறியப்பட்டால், அது வேறு எங்காவது வேர்களைத் துளைத்துக் கொண்டு இறங்கிவிடும். மற்றும் இது அமைதி யற்ற நிலையைத் தோற்றுவித்துவிடும். ஞான மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் எப்பொழுதும் 'நான்' என்னும் விழிப் புணர்வு மையத்தைத் தொடர்ந்து தன்னைத் தானே பகுத்து ஆராய்ந்து கொள்வதன்மூலம் பற்றிக் கொண்டிருக்க முயற்சி செய்ய வேண்டும். அவர்கள் மிகுந்த அளவில் சமநிலையுடன் காணப்படுவார்கள். மற்றும் ஆன்மீக உணர்ச்சியற்ற தன்மையை நீண்ட இடைவெளிகளில் உணரமாட்டார்கள்.

பக்தனின் நிலை வேறுபட்டதாகும். அவன் தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் வடிவத்திற்கு அதிகமான முக்கியத் துவத்தை அளிக்கிறான். கடவுளை நினைக்க இயலாத பொழுது மிகவும் துன்பம் அடைகிறான். பக்திநெறியைப்

பின்பற்றுபவர்கள் அவர்களுடைய தனித்த விழிப்புணர்வு நிலையை அவர்களுடைய இஷ்ட தெய்வங்களின் விழிப்பு உணர்வு நிலைகளுடன் தொடர்புபடுத்துவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் உயிர்ப்பு நிறைந்த இருப்பை நீ உணராதபொழுது, உன்னுடைய சொந்த விழிப்புணர்வு நிலை அதனுடைய அடித் தளத்தை இழக்கிறது. மற்றும் நீ எத்தகைய உதவியுமின்றி கட்டுப்படுத்தவியலாமல் காற்றில் மிதப்பதைப் போல உணர்வாய். சில நேரங்களில் சாதகன் அவன் தியானம் செய்யும் பொழுது அவன் இஷ்ட தெய்வத்தின் வடிவத்தை உயிர்க்களையுடன் கூடியதாகச் செய்வதில் வெற்றியடைவான். ஆனால் இஷ்ட தெய்வத்துடன் முறையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும், மற்றும் தன்னுடைய விழிப் புணர்வை இஷ்டதெய்வத்துடன் தொடர்புபடுத்திக் கொள் வதற்கும் இயலாத நிலையின் இருப்பான். இது ஆழ்தடம் சார்ந்த குழப்பத்தை ஏற்படுத்தும் மற்றும் பெரும்பாலும் நீடித்த அமைதிகுலைந்த நிலையையும் ஏற்படுத்தி விடும். பல நாட்களுக்குச் சாதகன் ஒருவகையான உணர்ச்சி வசப் பட்ட வெறுமை நிலையில் வாழும் சூழ்நிலை ஏற்படும்.

தற்காலிகமாக உன் இஷ்டதெய்வத்துடன் தொடர்பு கொள்ளவியலாத நிலை ஏற்பட்டுள்ளது என நீ உணர்ந்தால் மனத்தைத் தளரவிட வேண்டாம். நீ உன்னுடைய ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்து கொண்டும், பிரார்த்தனை செய்து கொண்டும், மற்றும் திருமறை நூல்களை வாசித்துக் கொண் டும் இருப்பாய். உள்ளார்ந்த தீவிரத்துடன் காத்துக்கொண் டிருக்க வேண்டும். உள் தொடர்பானது முன்பு இருந்ததை விட மேலும் ஆழமாக ஏற்படுத்தப்படும்.

உண்மையாக நம் ஆன்மாக்கள் எப்பொழுதும் பரம் பொருளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆனால் நாம் தன்னுணர்வற்ற செயல் எல்லையில் இருப்பதால் நம்மால் அதை உணர இயலுவதில்லை. நம்முடைய தூய்மைக் கேடுகளும் உள்ளார்ந்த தூண்டுதல்களும் மற்றும் மட்டுமீறிய உணர்ச்சி வசப்படும் தன்மையும், நம்மைக் கடவுளின்

தொடர்பை சுலபமாக உணரவல்ல ஒரு உயர்ந்த விழிப் புணர்வு மட்டத்திற்கு உயரவிடாமல் செய்து விடுகின்றன. எனவே ஆன்மீக வாழ்க்கையில் மனத் தூய்மைக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய இஷ்ட தெய்வத்தைத் தீவிரமான அன் புடன் உணராததும் மற்றும் இஷ்ட தெய்வத்துடன் முறை யான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றி அடை யாத நிலையும்தான் நவீன மனிதர்களின் முதன்மையான சிக்கலாக உள்ளது. பரம்பொருளிடம் நமக்கு உண்மையான அன்பு இருக்குமாயின் அந்த அன்பானது செயலாக வெளிப் படுவதற்கு உகந்ததாக இருக்கும் ஒவ்வொரு வகையான செயல்பாடும் கடவுளைச் சாதகன் போற்றி வழிபடும் வெளிப்பாடாக ஆகி விடுகிறது.

மிதமிஞ்சிய செயல்பாடு ஒருதடை

தங்களைத் தாங்களே எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையே அறிந்து கொள்ளாமல் இந்த உலகத்தைக் காப்பாற்ற விரும்பும் சில மனிதர்கள் உள்ளனர்! உன்னுடைய சொந்த சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளாமல் உன்னால் உலகத்தின் சிக்கல்களைத் தீர்க்க இயலாது. விடாப்பிடியான கொள்கையை உடைய சீர்சிருத்தவாதிகளின் சிக்கல் இதுவாகும். அவர்களுக்குத் தங்களைப்பற்றி உண்மை யான எதுவும் தெரியாது. இருப்பினும் அவர்கள் மற்றவர் களைச் சீர்திருத்தம் செய்ய விரும்புகின்றனர். நம்முடைய விபரீதமான இயல்பு அத்தகையது ஆகும். நாம் நம்முடைய செயல்பாடுகளை அது நம்முடைய கருத்தையும், ஆற்றலை யும் ஈர்த்துக் கொள்ளும் வரையிலும் பெருக்கிக் கொண்டே போகிறோம். ஆனால் நாம் நம்முடைய கடமைகளைத் தேவையற்ற முறையில் பெருக்கிக் கொள்ளக் கூடாது. நாம் செயல்பாடுகளின் பின்னால் ஓடிக்கொண்டு இருக்கக் கூடாது. நமக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஓய்வு தேவையாகும். நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சிகளுக்கும் மற்றும் வழிபாடு களுக்கும் நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆன்மீக வாழ்க்கையில் மிதமிஞ்சிய அளவில் செயலாற்றுவது ஒரு தடையாகும். மனிதர்களிடம் நாம் மீண்டும் மீண்டும் செயல்பாடுகளைப் பெருக்கிக் கொள்ளும் மனப்பான்மையைக் காண்கிறோம். முக்கியமாக மேற்கத்திய நாடுகளில் அமைதியற்றதன்மை, மற்றும் குறிக்கோளற்ற அடங்காத உணர்ச்சிகள் பெருகிக் கொண்டு வருவதைக் காண்கிறோம். ஸ்ரீராமகிருஷ்ணர் சில மனிதர்களுக்கு, அவர்களின் வேலைகளை அதிகப்படுத்தும், கடமைகளை அதிகப்படுத்தும் போக்கை ஊக்கப்படுத்த மாட்டார்.[1] அது ஒரு சமநிலையற்ற மனப்பான்மையாகும். அது அமைதியற்ற தன்மையையும் மற்றும் தப்பித்துக்கொள்வதற்கு ஒரு முயற்சியையும் காட்டுகிறது. பாராட்டப்படுமளவிற்கு அதில் எதுவும் இல்லை. ஓய்வைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் எந்த மனிதனாலும் எதையும் சாதிக்க வியலாது. மிதமிஞ்சிய வேலைகளைச் செய்யும் மனிதர்களிடம் சமநிலை இருப்பது இல்லை மற்றும் இயல்புகடந்த மன நிலைகளை உடையவர்களாக இருப்பார்கள். கள்ளைக் குடித்து போதை ஏறியுள்ள மற்றும் தேளால் கொட்டப்பட்ட குரங்கின் நடவடிக்கைகளின் வியத்தக்க நிலை எதுவும் இல்லை. மற்றும் இத்தகைய மனிதர்களின் செயல்பாடுகளும் அதைப் போன்றே அரைகிறுக்குத்தனமான, எத்தகைய தொடர்புமில்லாத செயல்களாக, செயலானது செயலைச் செய்வதற்காகவே என்பது போன்றும் இருக்கும். அதன்பிறகு அவர்கள் 'ஆன்மீகப் பயிற்சிகளைச் செய்வதற்கு நேரம் எங்குள்ளது?' 'எனக்கு மட்டும் நேரம் இருந்தால்' என்று முறையிடுவார்கள். அமைதியற்ற நிலை என்பது சோம்பலைப் போல மோசமானதே. உணர்ச்சிவசப்படும் தன்மையானது மந்த நிலையைப்போல மோசமானதே. எனவே இந்த வகையான செயல்பாடு ஏதோ கவிதை எழுதும்படி ஒன்றும் இல்லை. மற்றும் அத்தகைய நிலையில் கடமை என்பது ஒரு சாக்குப்போக்கு ஆகும். பலநேரங்களில் கடமையானது ஒருவருடைய அமைதியற்ற நிலையினாலும், சமநிலையற்ற

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.641.

தன்மையாலும் ஒரு சாக்குப் போக்காக அவராலேயே ஏற் படுத்திக் கொள்ளப்படுவது ஆகும். நாம் நம்மிடமிருந்து ஓடி விட விரும்புகிறோம். வேலைகளைப் பெருக்கிக்கொண்டே போகிறோம். அதனால் நமக்கும் பிறருக்கும் ஆறுதலளிக்கக் கூடிய சாக்குப்போக்கு கிடைக்கிறது. உண்மையான கடமை என்பது வேறுவகைப்பட்டதாகும். உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்களுக்குத் தேவையற்ற சமூகம் சார்ந்த செய் கடமைகள் எல்லா இடங்களிலும் உள்ளன. அவர்களிடம் தூய்மைக்கேடு அதிக அளவில் உள்ளது. மற்றவர்களுக்கோ, உனக்கோ நன்மையை ஏற்படுத்தாத அத்தகைய தேவையற்ற வேலையை ஒரு பொழுதும் தோற்றுவித்துக் கொள்ளுதல் கூடாது.

யாருக்கெல்லாம் அன்றாட வாழ்க்கையானது பெரிய போராட்டமோ அவர்களுக்குக் கடவுளின் பக்கம் திரும்பு வதற்குக் கஷ்டமாக இருக்கும். இந்தப் போராட்டத்தையும் மீறி கடவுளின் பக்கம் ஒரு சிலராலேயே திரும்பவியலும் அனைவருக்கும் சரியாகப் பயன்படுத்துப்படும் ஓய்வு வேண்டும். எப்பொழுதும் பிரார்த்தனை, ஜபம், தியானம், ஆழ்ந்து ஆராய்ந்து வாசித்தல் மற்றும் மற்ற வகைகளைச் சேர்ந்த ஆன்மீகப் பயிற்சிகளின் மூலம் கடவுளின் செயல் களைச் செய்ய வேண்டும். இவைகளுக்கு முடிந்த அளவு நேரத்தைக் கைக்கொள்ள வேண்டும். வேலையானது முற்றிலும் பற்றற்றதன்மையுடன் செய்யப்பட வேண்டும். அது வழிவகை, முடிவு அல்ல என்று கருதப்பட வேண்டும்.

கருவியும் செயல்படுகிறது. நாம் செயல்படும்பொழுது கடவுளின் கைகளில் கருவியாக இருக்கிறோம் என்னும் கருத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதன்பிறகு நம்முடைய மனப்பான்மையானது முற்றிலுமாக மாறும். மற்றும் நம் முடைய செயல்பாடும் ஆன்மீக நடைமுறையின் ஒரு பகுதி யாக ஆகும். கடவுளுக்குச் செய்யும் தொண்டாக ஆகும். நாம் எந்தச் செயலைச் செய்ய நேர்ந்தாலும் இதுதான் நம்முடைய விழிப்புணர்வுடன் கூடிய மனப்பான்மையாக இருக்க வேண்டும். அதன்மூலம் சிலவகையான செயல்பாடுகள்

விட்டொழிக்கப்பட வேண்டும். பாகவதம், 'இந்த உலகத்தில் யாருடைய செயல்பாடு தர்மத்தைச் சார்ந்ததாக இல்லையோ, அவன் உயிருடன் இருப்பினும் உண்மையாக இறந்தவனே யாவான். அதன் விளைவாகத் துறவறம் மற்றும் கடவுளின் திருவடிகளையும் சார்வது இல்லை'[1] என்று கூறுகிறது.

செயல்பாடும், வழிபாடும்

முதலில் சாதகன் செயல்பாட்டிற்கும், வழிபாட்டிற்கும் இடையில் சில வேறுபாடு இருப்பதாக உணர்ந்தாலும் அவன் அந்த இரண்டையும் சரணாகத மனப்பான்மையுடன் செய்து கொண்டிருப்பான். அதன் பிறகு அவன் அவனுடைய அக வழிப்பாட்டை மற்ற எல்லாக் கடமைகளின் நடுவிலும் செய்ய இயலுகிறது என்பதை உணர்கிறான். இறுதியாக அவனுடைய எல்லா செயல்களும் வழிபாடாக ஆகிவிடுகிறது. நாம் முதலில் நாம் செய்யும் செயல்களின் பயன்களைக் கடவுளுக்கு அர்ப்பித்து நம் செயல்பாடுகளை இயன்ற அளவிற்குத் தன்னலமற்ற முறையில் செய்ய வேண்டும். அதன் பிறகு, கடவுளின் கைகளில் கருவிகளாக இருந்து கொண்டு செயலாற்றக் கற்றுக்கொள்கிறோம். அதன்பிறகு நம் வாழ்க்கையானது ஒரு பகுக்கவியலாத படையலாகி விடுகிறது.

செயல்பாடும், வழிபாடும் கைகோத்துக் கொண்டு இருக்க வேண்டும். இரண்டுமே மனம் தூய்மையடைவதற்குப் பயன்படுகின்றன. மற்றும் மேம்பட்ட விழிப்புணர்வுநிலை படிப்படியாக வளர்வதற்கு உதவுகின்றன. ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க வியலாத இருவகை ஆன்மீக ஒழுங்கு விதிமுறைகளாகக் காணப்பட வேண்டும்.

தியானம் என்னும் பெயரில் எந்த ஒரு ஆணோ, அல்லது பெண்ணோ, அவனுடைய அல்லது அவளுடைய கடமைகளைப் புறக்கணிக்கக் கூடாது. நாம் எப்பொழுதும் கடவுளை

---

1. நேஹ யத்கர்ம தர்மாய ந விராகாய கல்பதே ।
ந தீர்த்தபதஸேவாயை ஜீவன்னபி ம்ருதோ ஹி ஸ: ॥
—பாகவதம், 3.23.56.

நினைத்துக் கொண்டு நம் செயல்களைச் செய்தால் தனிப் பட்ட முறையில் தியானத்தை அதிகமான நேரத்திற்குச் செய்யத் தேவையில்லை. சாதகன் ஏதாவது ஒருவகையில் கடவுளுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்பதுதான் மிக வும் முக்கியமானதாகும். நாம் நம் அன்றாடக் கடமைகளைச் செய்து கொண்டிருக்கும் பொழுது மனத்திலேயே மந்திர பாராயணம் செய்வதுதான் இதைச் சாதிப்பதற்கான சிறந்த வழி முறையாகும். சுவாமி பிரம்மானந்தர் நமக்கு அறிவுறுத்தி இருப்பதைப் போல ஜபம் என்னும் சக்கரம் நம்முள்ளே தொடர்ந்து சுழன்று கொண்டிருக்க வேண்டும்.[1] எப்பொழுதும் ஒலி அடையாளத்தின் உதவியை நாட வேண்டும். நீ சோம்ப லாக உள்ள கணங்களைக் கடவுளின் திருநாமங்களால் நிறைப்பாய்.

எப்பொழுதெல்லாம் தொண்டு செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறதோ நாம் உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும், விருப்பத்துடன், மனம் இசைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனின் ஆன்மாவானது குறுகிவிடும். அதிகப்படி யான செயல்களை நாடாமல் இருக்க வேண்டும். ஆனால் ஏதாவது சூழ்நிலை உருவானால், தொண்டு செய்ய வேண் டும். நாம் கொடுப்பதால் வளர்கிறோம். வாங்கிக் கொள் வதன் மூலம் வளர்வதில்லை. வாங்கிக் கொள்பவர் அளிப்ப வராக இருக்க வேண்டும். எதையாவது அளிப்பவராக இருக்க வேண்டும். நீங்கள் உங்களை அற்பத்தனம் நிறைந்தவர்களாக ஆவதற்கு ஒருபொழுதும் அனுமதித்தல் கூடாது. பற்றற்ற தன்மையுடன் இருக்க வேண்டும். ஆனால் இரக்கமுடைய வராக இருக்க வேண்டும். எங்கெல்லாம் உன்னால் இய லுமோ, அங்கெல்லாம் உதவி செய்ய வேண்டும். பற்றற்ற தன்மையுடன், நீ செயல்முதல்வர் அல்ல என்று உணர்ந்து செய்ய வேண்டும்.

சில நேரங்களில் ஆன்மீகம் சார்ந்த விஷயங்களில் நாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய முயற்சி செய்தால், அது ஒரு

---

1. The Eternal Companion, பக்கம் 181.

குருவாக பாவனை மேற்கொள்வதைப் போல ஆகிறது என்று நினைக்கிறோம். நம்மிடம் உயர்வு மனப்பான்மை மற்றும் தற்பெருமை இல்லையெனின் அது உண்மை அல்ல. அது ஒரு தொண்டு ஆகும். ஒரு நல்ல வாய்ப்பு நமக்குக் கிடைக்கும் பொழுது அல்லது அதை அளிப்பதற்கான ஒரு தேவை எழும் பொழுது நாம் நம்மை ஒருபொழுதும் அத்தகைய தொண்டு செய்வதிலிருந்து சுருக்கிக் கொள்வதற்கு அனுமதித்தல் கூடாது.

செயல்பாடை வழிபாடாக மாற்றுவதற்கு முதலில் ஆன்மீக மனநிலையைத் தியானம் மற்றும் ஜபத்தால் பண் படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒரு மனிதன் ஒரு செயலை மேற்கொண்டிருக்கும்பொழுது அவனால் எல்லா நேரத்திலும் கடவுளைப்பற்றி நினைத்துக்கொண்டு இருக்க வியலாது. எனவே அந்தச் செயலைத் செய்யத் தொடங்கு வதற்கு முன்பும், செய்து கொண்டிருக்கும் பொழுது இடை யிலும் மற்றும் அதைச் செய்து முடிக்கும் பொழுதும், கடவுளை மகிழ்விப்பதற்காக கடவுளுக்குச் செய்யும் தொண் டாக அதைச் செய்கிறான் என்று நினைக்க வேண்டும். இந்த முதலடியை எடுத்து வைப்பதில் ஒருவர் வெற்றியடைந்தால், அவன் செயலைச் செய்து கொண்டிருக்கும் பொழுதும் அவனால் கடவுளை அடுத்தடுத்து நினைக்க வியலும்.

மனத்திற்கு இரண்டு விதமான போக்குகள் உள்ளன. மேல்மட்டப் போக்கு, கீழ்மட்டப்போக்கு என்பனவாகும், பொதுவாக கீழ் மட்டப்போக்கில் பயனற்ற எண்ணங்கள் நிறைந்து இருக்கும். மனத்தின் இந்த அடி ஓட்டத்தைக் கடவுளைப்பற்றி நினைப்பதற்குப் பழக்கப்படுத்தவியலும். ஒருவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியை ஒருவர் செய்ய வேண்டும். மற்றும் அதே சமயத்தில் அவர் அந்தப் பணியைக் கடவுளுக்காகச் செய்கிறார் என்று நினைத்தால் அவ்விதம் பழக்கப்படுத்தவியலும். இது செய்து கொண்டிருக்கும் பணி இயந்திரகதியில் நடைபெறுவதைத் தடுக்கிறது மற்றும் மனத்தில் உலகியல் எண்ணங்கள் இடம் பெறுவதையும் தடுக்கிறது.

சிலநேரங்களில் சூழ்நிலைகளின் உந்துதலால் ஒருவருக்கு அதிகபடியான பணியைச் செய்ய வேண்டிருக்கும். ஆனால், ஒருவருடைய மனத்திற்கு முறையான பயிற்சி அளிக்கப் பட்டிருந்தால் மிகத் தீவிரமாகப் பணி செய்து கொண்டிருக்கும் பொழுது அதனிடையிலும் ஒருவரால் கடவுளைப் பற்றி நினைப்பதற்கு இயலும். இதற்கு முறையான பூர்வாங்க விதிமுறையானது தேவையானதொன்றாகும்.

கடவுள் மட்டுமே செயல்முதல்வர் என்பதை மனத்திற்கு எப்படி உணர்த்தி நம்ப வைப்பது? செயல்பாடு மற்றும் வழிபாடால் நீ முதலில் கடவுளின் இருப்பை உணர வேண்டும். உன் ஆன்மாவின் ஆன்மாவை உணர வேண்டும். அதற்குப்பிறகு உன்னால் சுலபமாக அவருடைய விருப்பம் மற்றும் ஆற்றலையும் உணர்ந்துகொண்டு அதுதான் உன் உடல்மூலம் மனத்தின் மூலம் மற்றும் இந்தப் பேரண்டத்தின் எல்லாவற்றிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் உணர இயலும்.

இது நம்மை அர்ப்பிக்கும் தன்மை என்னும் இலட்சியத்திடம் கொண்டு செல்கிறது. அர்ப்பித்தல் என்றால் ஒருவருடைய ஆன்மா, மனம், மற்றும் உடலைப் பரம்பொருளுக்கு அர்ப்பித்து, அவருடைய கைகளில் ஒரு கருவியாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தித்து, அவருக்காகவே தொண்டு செய்து, அனைவரின் வாழ்க்கை நல உயர்வை முன்னேற்றுவதற்கு முயற்சி செய்து, மற்றும் அத்துடன் ஒருவருடைய முக்திக்காக முயற்சி செய்வது என்பதாகும். மனிதனிடம் உள்ள கடவுளை விரும்பி மற்றும் தொண்டு செய்வது தான் மையக்கருத்து ஆகும். மற்றும் இவ்விதம் மனித வாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சியத்தை உணர்வது ஆகும். தொண்டானது உடல் சார்ந்ததாக, அறிவு சார்ந்ததாக, ஒழுக்க நீதிநெறி முறைமை மற்றும் ஆன்மீகம் சார்ந்ததாக, நம்மை நெருங்கித் தொடர்பு கொள்பவர்களின் தேவைகளுக்கு ஏற்றாற்போல இருக்கலாம்.

நான் ஏற்கனவே கூறியுள்ளதைப்போல ஒருவர் கடவுளைப் பற்றியும் நினைத்து எல்லாச் செயல்பாடுகளையும்

அவருக்கு அர்ப்பித்துவிட வேண்டும். கடவுளை மறந்து, அவரை அடையும் இலட்சியத்தை மறந்து, இயந்திரகதியில் செயலாற்றுபவர்கள் மட்டும் இயந்திரத்தன்மை உடையவர்கள் ஆகிறார்கள். செயலின் அளவைப் பொறுத்த மட்டில் அதிகமான குழப்பம் ஏற்படுவதில்லை. கடவுளுக்கு அதை அர்ப்பிக்கும் தன்மையுடன் செய்ய இயலாத நிலைதான் குழப்பத்தின் காரணமாக உள்ளது. ஆன்மஞானத்தை அடைய வேண்டும் என்னும் இலட்சியத்தை தொடர்ந்து கருத்தில் கொண்டு அற்பமான அகங்காரமானது துறக்கப்பட்டு தெய்வீக விழிப்புணர்வு நிலையில் இரண்டறக் கலக்கப்படவில்லை எனின் எத்தகைய அர்ப்பிக்கும் தன்மையும் இருக்க வியலாது. அர்ப்பித்தல் என்றால் ஒருவர் அனைத்தையும் துறந்து மற்றவர்களுக்கு, சரியாக இருப்பினும் தவறாக இருப்பினும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று கூறுபவன், அர்ப்பித்தல் என்பதின் மெய்க்கருத்தைப் புரிந்து கொள்ள வில்லை, அப்படியே புரிந்துகொண்டிருந்தாலும் அவனால் அந்த இலட்சியத்தைச் சரியாக வெளிப்படுத்த இயலவில்லை என்று கொள்ள வேண்டும். ஒருவர் உண்மையாக அர்ப்பிப்பதை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி காணும் பொழுது அகங்காரம் அதிக அளவில் அழிவதற்குப் பதிலாக அதிக அளவில் மாறுபடுகிறது என்று கூறலாம். தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையானது தெய்வீக விழிப்புணர்வு நிலையுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது. மற்றும் தனிப்பட்ட விருப்பமானது தெய்வீக விருப்பத்துடன் இணைகிறது. ஒருவர் ஒருவருடைய உடலானது இயலுலக அண்ட உடலின் ஒரு பகுதி என்பதையும் உணர இயலும். அத்தகைய ஒரு மனிதன் ஒரு பொழுதும் இயந்திரத்தன்மை உடையவனாக ஆகமாட்டான். அதற்குமாறாக தன்முனைப்பான வாழ்க்கையை மேற்கொள்வதற்குப் பதிலாக இயலுலக அண்ட மையம் சார்ந்த வாழ்க்கையை மேற்கொள்வான்.

நீ செய்து கொண்டிருக்கும் செயலின்தன்மை எத்தகையதாக இருப்பினும், அனைவரிடமும் குடிகொண்டுள்ள உன்னிடம் குடிகொண்டுள்ள கடவுளுக்கு எல்லாவற்றையும் ஒரு

தொண்டு வடிவமாகச் செய்து கொண்டிருக்கிறாய் என்று எண்ண வேண்டும். பகவத்கீதையின் பதினெட்டாம் அத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணர், பரம்பொருளை ஒருவர் அவருடைய கர்மங்களால் அர்ச்சித்து ஆன்மீக ஞானநிலையை பக்குவ நிலையை அடையலாம் என்று கூறியுள்ளார்.[1] எந்த நேர்மையான செயலும், தாழ்ந்ததாக இருப்பினும் அது கடவுளுக்குச் செய்யும் தொண்டு வடிவமாகக் காணப்படும். ஆனால் அது பற்றற்ற தன்மையுடன் செய்யப்பட வேண்டும்.

தீவிரம் தேவை

மூன்று வகையான செயல்கள் உள்ளன. எத்தகைய நிலையான குறிக்கோளும் அற்ற விழிப்புணர்வற்ற செயல், ஒரு உறுதியான குறிக்கோளுடன் கூடிய விழிப்புணர்வுடன் கூடிய செயல் மற்றும் சாதாரணமான விழிப்புணர்வு நிலையுடன் மேற்கொள்ளப்படும் மேம்பட்ட விழிப்புணர்வு வகையைச் சார்ந்த செயல் என்பவையாகும். நாம் மேம்பட்ட விழிப்புணர்வு நிலையுடன் உள்ள தொடர்பை இழக்காதபடி செயலாற்றக் கற்றுக் கொள்ள வேண்டும். இங்கு அந்தச் செயலிற்காகப் புதிய செயல் ஆற்றல் தோற்றுவிக்கப்படுவதில்லை. ஆனால் பழைய செயல் ஆற்றலிற்குப் புதிய, மேலான திருப்பம் கொடுக்கப்படுகிறது. வெளிப்புறத்திலிருந்து புதிதாக எதுவும் கொண்டுவரப்படுவது இல்லை. ஆனால் ஒரு புதிய அக விழிப்புணர்வு ஏற்படுகிறது. அது நம்முடைய உள்ளார்ந்த இயல்பு நிலையாகும்.

தீவிரமான ஆன்மீக முயற்சியின்மூலமாக நம்மால் மனத்தில் கடவுளை நோக்கிப் பாய்ந்து செல்லும் ஒரு அடி ஓட்டத்தை ஏற்படுத்த இயலும். மனத்தின் மற்ற பகுதி வேலையில் ஈடுபட்டிருந்தாலும் இதைச் செய்ய இயலும். இவ்விதம் மனத்தில் இரு ஓட்டங்கள் பாய்ந்துகொண்டுள்ளன. விழிப்புணர்வுடன் மனத்தைக் கூறுபடுத்தவியலும். மற்றும் ஆன்மீக வாழ்க்கையில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு

---

1. *பகவத் கீதை, 18.46.*

அது தேவையானதுமாகும். ஆன்மீகப் பயிற்சியை உறுதியாக மேற்கொள்வதன்மூலம் நம்முடைய மனத்தின் பெரும்பகுதியைக் கட்டுப்படுத்த இயலும். நாம் இதை அதிகமாகச் செய்தோம், எனின் நம்மால் நம் மனத்தை மிகுந்த திறமையுடன் இரண்டாகப் பிரிக்க இயலும் மற்றும் நம்முடைய எல்லாக் கடமைகளின் நடுவில் நம்மால் கடவுளின் இருப்பை மிகத் திறமையாக நடைமுறையில் பயிற்சியால் உணர இயலும். பொதுவாக கீழ்மட்ட ஓட்டமானது உணர்வற்ற ஓட்டமாக உள்ளது. மற்றும் பயனற்றவைகளால் நிரப்பப்பட்டுள்ளது. தியானம் செய்யும் பொழுது இந்த மேல்மட்ட ஓட்டத்தையும், கீழ்மட்ட ஓட்டத்தையும் ஒரே ஓட்டமானதாகச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதன்பிறகு நாம் செயலாற்றிக் கொண்டு இருக்கும் பொழுது இந்த கீழ் மட்ட ஓட்டத்தை இயன்ற அளவிற்கு ஏதாவது ஆக்கபூர்வமான திசையை நோக்கிப் பாயச் செய்ய வேண்டும். நாம் கீழ்மட்ட ஓட்டத்தின் உட்பொருட்களை மாற்றி அமைக்க வேண்டும். நாம் அவற்றை விழிப்புணர்வு மட்டத்திற்குக் கொண்டு வர வேண்டும். நாம் இதைச் செய்யும்பொழுது மனத்தின் பெரும்பகுதியை நம் கட்டுப்பாட்டிற்குள் பெற முடிகிறது. அதே சமயத்தில் நம்மால் மிகவும் தீவிரத்தன்மையுடன் கூடிய மிகவும் விழிப்புணர்வுடன் கூடிய மனத்தையும் பெறவியலுகிறது. ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்டுள்ள சாதகனுக்கு இது ஒரு முக்கியமான விதிமுறை ஆகும். ஆன்மீக வாழ்க்கை என்பது மனம் மேலும் மேலும் விழிப்புணர்வை அடைவது ஆகும். விழிப்படைந்துள்ள மேல்மட்டமானது இறுதியாக மிகவும் மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை அடைவதற்கு வழிகாட்டுகிறது.

நீ உன் செயலைச் செய்து கொண்டிருக்கும்பொழுது உன் மனத்தையும், அதன் அசைவுகளையும் அமைதியான நிலையில் ஆராய்ந்து காண வேண்டும். அது எப்படித் தன்னைப் பல வகையான பயனற்ற, சில நேரங்களில் தீங்கை ஏற்படுத்தக் கூடிய செயல்களின் முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். அதன்பிறகு பெருமளவில்

உன்னால் விழிப்புணர்வுடன் மனத்தைக் கட்டுப்படுத்த இயலும். மற்றும் நீண்டகால, உறுதியான பயிற்சியினால் மூளையின் நரம்புகள் இருந்தபடியே லேசாக ஆகி தங்களுடைய பெரும்பாலான எதிர்ப்புத் தனத்தை இழந்து விட்டன என்று நீ கண்டு கொள்வாய். உடல் மற்றும் மனம் சார்ந்த தடைகள் முடிந்த அளவிற்கு நம் இலட்சியமான மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை அடைவதற்கான வழியில் உள்ள தடைகளை நீக்குவதற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்

நாம் நமக்காக எதையோ பெறுவதற்கு முயற்சி செய்கிறோம். பிறகு அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு முயற்சி செய்கிறோம். முதலில் நம்முடைய சொந்த அக வளர்ச்சியின்மீது பெரிய அளவில் அழுத்தம் ஏற்படுத்தப் படலாம். ஆனால் மற்றவர்களின் நன்மையைக் கண்டு கொள்ளாமல் இருத்தல் கூடாது. முதலில் நம்மிடம் ஓரளவிற்கு முன்னேற்பாடுகள் இருக்க வேண்டும். இல்லையெனில் மற்றவர்களுக்கு நம்மால் திறமையாகத் தொண்டு செய்யவும் இயலாது. முதலில் நாம் புனிதமானவர்களாக இருப்பதற்கு முயற்சி செய்வோம். அதன் பிறகு மற்றவர்கள் புனிதமானவர்களாக ஆவதற்கு உதவுவோம். ஆனால் இந்த இரண்டும் இணைந்து இருத்தல் வேண்டும். ஒருவர் தன்னுடைய சொந்த ஆன்மீக வளர்ச்சியை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உயர்த்திக் கொண்டால்தான், அதன்பிறகுதான் மற்றவர்களுக்காகத் திறமையான வழியில் செயலாற்ற இயலும். சுவாமி விவேகானந்தர், ‘நான் என்னுடைய சொந்த முக்தியைக் குறித்துக் கவலைப்படவில்லை’[1] என்று அவர் கூறியபொழுது அவர் ஏற்கனவே முக்தியடைந்திருந்தார். ஆன்மீகத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்த பிறகுதான் அவர் மற்றவர்களுக்காகச் செயல்பட்டார்.

---

1. Eastern and Western Disciples, Life of Swami Vivekananda *(கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1974)* பக்கம் 487.

கடவுள் நம்மை மிக உயர்ந்த மனநிலையில் வைக்கட்டும். மற்றும் அவருக்குத் தொண்டாற்றுவதற்கான ஆற்றலை நமக்கு அளிக்கட்டும். மற்றும் நாம் அதை மேற்கொள்வோம். இந்த வகையான தொண்டானது நம்மை நம் லட்சியத்தின் அருகில் அழைத்துச் செல்கிறது. சில நேரங்களில் ஒருவர் உயர்ந்த மனநிலையில் அவருக்காக மட்டுமின்றி, மற்றவர்களுக்காகவும் இருக்க வேண்டியிருக்கிறது. இது ஆன்மீகப் பயிற்சிக்குக் கூடுதலான செயல் தூண்டுதலாகப் பயன்படுகிறது. உன்னிடம் ஏதாவது இருந்தால்தானே எதையாவது கொடுக்கவியலும்? எனவே சில நேரங்களில் நம்முடைய உள்ளார்வத்திற்காக மட்டுமின்றி தேவையின் காரணமாக நாம் அதிகமாக சேகரித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதிகமான அளவு பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

இதுதான் நம் அனைவரின் குறிக்கோள் ஆகும். நம்முடைய சொந்த நலனையும் மற்றவர்களின் நலனையும் உயர்த்திக் கொள்வதற்கு முயற்சி செய்வது ஆகும். உண்மையைக் கூறப்போனால் இவ்விரண்டையும் ஒருபொழுதும் பிரிக்கவியலாது. தொண்டு செய்வதின் மூலன் ஒற்றுமை உணர்வு மேலும் மேலும் வருகிறது. அகங்காரம் எந்த அளவிற்கு ஊன்றிக்குறைக்கப்படுகிறதோ, மேலும் மேலும் ஒற்றுமை உணர்வானது தன்னை உறுதிப்படுத்திக் கொள்கிறது. அதன்பிறகு நாம் இறுதியாக கடவுளை எல்லா ஆண்களிடத்திலும், பெண்களிடத்திலும் மற்றும் அகஉலகத்திலும் புற உலகத்திலும் உணரத் தலைப்படுகிறோம்.

உலகத்தை நோக்கிய மாறுபட்ட மனப்பான்மை

இந்த ஒற்றுமை உணர்வை உண்மையாக அடைவதற்கு முன்பு, ஒருவர் அவருடைய சாதனையின் போக்கில் (ஆன்மீக சாதனை) அதைக் கற்பனை செய்துகொண்டு, உணர வேண்டும். மெய்ப்பொருளைக் குறித்த ஒரு தெளிவுடன் கூடிய கற்பனையின் உதவியின்றி செயலாற்றுவது ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். இவ்வுலகில் செயலாற்றும் பொழுது நீ

மனிதர்களுடன் பழக வேண்டும் மற்றும் அவர்களுடன் வாழ வேண்டும். எனவே தொடக்கத்திலேயே ஒரு ஆன்மீகக் கண்ணோட்டத்தை ஏற்படுத்திக் கொள்வது தேவையானதாகும். எனவே சாதகன், கற்பனையின் உதவியை நாட வேண்டும். பதஞ்சலி அவருடைய யோக சூத்திரத்தில், 'யோகத்திற்கு எதிரான எண்ணங்களைத் தடுக்க அவற்றிற்கு நேர்மாறான எண்ணங்களைக் கொண்டுவர வேண்டும்' என்று கூறியுள்ளார்.[1]

எனவே எப்பொழுதாவது மனத்தில் ஒரு கெட்ட எண்ணமோ அல்லது கெட்ட கற்பனையோ எழும்பொழுது, அதற்கு நேர்மாறான நல்ல எண்ணத்தைக் கொண்டு வர வேண்டும். சரியான வகையைச் சார்ந்த நல்ல கற்பனைகள் கெட்ட கற்பனைகளுக்குப் பதிலாக மாற்றீடு செய்யப்பட வேண்டும். இது இறுதியான தீர்வு அல்ல. ஆனால் தொடக்கத்தில் பெரும்பாலான மனிதர்களால் இதைத்தான் செய்ய இயலும். இது காவல்துறையின் உதவியுடன் திருடர்களைத் துரத்துவதைப் போன்றதாகும். ஆனால் நாம் ஒரு பாதுகாப்பான இடத்தை அடைந்த பிறகு, அதன்பிறகு நமக்குக் காவல்துறையினரின் உதவி தேவைப்படுவது இல்லை. எனவே நாம் உணரும் வரையிலும், நாம் நல்ல கற்பனைகளின் உதவியைப் பெற வேண்டும். அது இல்லாமல் நம்மால் இவ்வுலகத்தில் வாழவியலாது; மற்றும் ஆன்மீகத்தில் முன்னேற்றத்தையும் அடையவியலாது.

எப்படியிருப்பினும் கற்பனையானது தவறான வழியை எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும். அது வேறுபடுத்தி அறியும் தன்மை, மற்றும் துறவு, ஆன்மாவின் இயல்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். மற்றவர்களைக் குறித்த உன்னுடைய மனப்பான்மையானது, உன்னிடம் உனக்கு உள்ள மனப்பான்மையைச் சார்ந்ததாக உள்ளது. நீ உன்னை

---

1. விதர்க்கபாதனே ப்ரதிபக்ஷபாவனம் ।

—பதஞ்சலி யோக சூத்திரம், 2.33.

ஒரு உடலாகக் காண்கிறாய் எனின், உன்னைச் சுற்றிலும் நீ மனித உடல்களை மட்டுமே காண்கிறாய். நீ உன்னை உன் உடலில் குடிகொண்டுள்ள ஒளிரும் ஆன்மாவாகக் கருதினால் உன்னைச் சுற்றி இருப்பவர்களிடமும் அதே ஒளி ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் காண்பாய்.

நாம் என்றாவது ஒருநாள், தீமையை எதிர்கொள்வதற்கு ஆயத்தமாக இருந்து, அதிலும் கடவுளைக் காணும் வரையிலும் நம்முடைய சிக்கல் தீராது. நாம் வடிவத்தைவிட மூலமான உயிர்ப்பகுதிக்கும் மற்றும் நன்மை, தீமைகளை விட அடிப்படைத் தத்துவத்திற்கும் பெருமளவில் அழுத்தம் கொடுப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். நாம் நன்மை, தீமை என்னும் இரண்டிற்கும் அப்பாற்பட்டுள்ள உண்மைத் தத்துவத்தைக் குறித்துக் கவலைப்படாமல் நன்மை மற்றும் தீமையுடன் மட்டுமே நம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்கிறோம். நாம் ‘எனக்கு வடிவங்கள் முக்கியமானது அல்ல. நான் மூலமான உயிர்ப்பகுதியின் மீதே அதிகமான அக்கறைகொண்டு உள்ளேன்’ என்று கூற வேண்டும்.

சிவனை வழிபடும் சிலர், எல்லாப் பெண்களையும் பெண் தெய்வமான பார்வதியுடனும், எல்லா ஆண்களையும் பரம்பொருளான சிவனுடன் தொடர்புபடுத்தி, அதன் பிறகு இறுதியாக பெண் தெய்வத்தையும், கடவுளையும் அவர்கள் எந்தத் தத்துவத்திலிருந்து வெளிப்பட்டார்களோ, அதிலேயே ஒன்றுபடுத்தி விடுகின்றனர். இந்த விதத்தில் இத்தகைய வழிபாட்டை மேற்கொள்வோர் பல சிக்கல்களைத் தீர்த்து விடுகின்றனர். ஒரு மனிதன் எல்லாப் பெண்களையும் பெண் தெய்வமான பார்வதியாகவும் எல்லா ஆண்களையும் பரம் பொருளான சிவனாகவும் கண்டால், அது எத்தகைய வேறுபாட்டை ஏற்படுத்தும்!

வேறு சில பக்தர்கள் எல்லா ஆண்களையும் ஸ்ரீராம கிருஷ்ணரின் வடிவத்திலும், மற்றும் எல்லாப் பெண்களையும் தூய அன்னையாரின் வடிவத்துடனும் தொடர்புபடுத்தி, இறுதியில் அவர்களைக் கடந்து அவ்விருவரின்

பின்னணியிலுள்ள அடிப்படையான மெய்த் தத்துவத்தை அடைகின்றனர். இவ்விதத்தில் தான் நம்முடைய சிக்கல்கள் உண்மையாகவே தீர்க்கப்படும். தற்பொழுது நாம் இருக்கும் நிலையில், குழப்பத்தை ஏற்படுத்தும் எண்ணங்களும் மற்றும் கெட்ட வடிவங்களும் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும். ஆனால் அது இறுதித் தீர்வாக இருக்கவியலாது. நன்மை மற்றும் தீமையின் பின்னணியில் நாம் முழுமையை மட்டுமே காணும் ஒரு காலம் வரும். அதன் பிறகு நன்மையும், தீமையும் நம்மைப் பாதிப்பது நின்றுவிடும்.

இத்தகைய பருப்பொருள் சார்ந்த வடிவங்கள் உருவமற்ற பரம்பொருளின் வெளிப்பாடுகள், அடிப்படை மெய்ம்மை அல்ல என்று நம்மால் உண்மையாகக் காண இயலுமாயின், மற்றும் பருப்பொருளை எண்ணத்தின் வெளிப்பாடு என்றும் மற்றும் எண்ணத்தை வரையறையற்ற விழிப்புணர்வு நிலையின் வெளிப்பாடு என்றும் நம்மால் காண இயலுமாயின் அதன்பிறகு நம்மால் எல்லாவற்றையும் அவற்றின் சரியான இடங்களில் காண வியலும். மற்றும் அவற்றின் உண்மையான காட்சியமைப்பிலும் காண வியலும். அதன் பிறகு அத்தகைய உடல் சார்ந்த, அல்லது மனம் சார்ந்த வடிவங்களால் நாம் ஏமாற்றப்பட மாட்டோம். கடவுளின் இருப்பை பயிற்சியின்மூலம் உணர்வதற்கு அத்தகைய மனப் பான்மை தேவைப்படுகிறது.

உடலளவில் நாம் வரையறையற்ற பேரண்டத்தின் உடலுடன் சரியான சுருதியுடன் இருக்க வேண்டும். மனத்தளவில் வரையறையற்ற பேரண்டத்தின் மனத்துடன் சரியான சுருதியில் இருக்க வேண்டும். மற்றும் ஆன்மீகச் சார்பாக வரையறையற்ற ஒப்புயர்வற்ற பரம்பொருளுடனும் சரியான சுருதியில் இருக்க வேண்டும். அதற்குப் பிறகு நாம் எல்லாவற்றையும் அவற்றின் சரியான இடத்திலும் சரியான கண்ணோட்டத்திலும் கண்டு அதற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்வோம். வரையறைக்கு உட்பட்டது. எப்பொழுதும் வரையறைக்கு உட்படாததுடன் ஒரே சுருதியில் இருக்க வேண்டும். அதுவும் வேறுபட்ட எல்லா மட்டங்களிலும்

வேறுபட்ட எல்லா வகையான விழிப்புணர்வு நிலைகளிலும் இருக்க வேண்டும். ஒருவர் எப்பொழுதும் எல்லா மட்டங் களிலும் கடவுளின் இருப்பை உணர வேண்டும்.

இயலுலக அண்ட ஆற்றலின் கட்டுப்படுத்தும் ஆற்றல்

தனிப்பட்ட மனமானது இயலுலக அண்டத்தின் மனத் துடன் தொடர்பு கொண்டுள்ளது. மற்றும் மனம் சார்ந்த ஆற்றலானது இயலுலக அண்டத்தின் மூலாதாரத்திலிருந்து வருகிறது. இந்த மனம் சார்ந்த ஆற்றலை எப்படிக் கட்டுப் படுத்த வேண்டும் மற்றும் எப்படி செலுத்தப்பட வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்த ஆற்ற லானது, கீழே உள்ள மையங்களுக்குப் பாய்ந்து செல்லாத வாறு தடுப்பதற்கும் மற்றும் புலன் உறுப்புக்களின் மூலம் வெளியே பாய்ந்து, அற்பமான சிந்தனையின் மூலமும் பயனற்ற பேச்சுக்களைக் குறித்து கவலைப்படுவதின் மூல மும் வீணாகிவிடுகிறது. தொடக்கத்தில் இது ஒருவிதமான மன உளைச்சலைத் தோற்றுவிக்கும். ஆனால் அது தவிர்க்க இயலாதது ஆகும். முழுமை அடைந்துள்ள மனிதனுக்கு இத்தகைய கட்டுப்பாடு தேவையில்லை. ஏனெனில் மனம் சார்ந்த அவனுடைய எல்லா ஆற்றல்களும் உயர்ந்த வழிகளின் வழியாகப் பாய்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் நம்முடைய நிலையில் விழிப்புணர்வுடன் கூடிய கட்டுப்பாடு அவசியமானதாகும். விழிப்புணர்வு அற்ற நிலையிலுள்ள கட்டுப்பாட்டை மனோ தத்துவ வல்லுனர்கள் அடக்குமுறை என்று கூறுகின்றனர். சில வகையான அடக்கு முறைகள் சிலருக்கு தீங்கினை விளைவிக்கலாம். ஆனால் விழிப் புணர்வுடன் கூடிய அறிவுபூர்வமான கட்டுப்பாடு ஆன்மீக வாழ்க்கைக்கு மட்டுமின்றி, இயல்பான ஆரோக்கியத்துடன் கூடிய சமூக வாழ்க்கைக்கும் அவசியமானது ஆகும். இங்கு இந்திய மனோதத்தவ இயல் மேற்கத்திய மனோதத்துவ இயலினின்றும் வேறுபடுகிறது.

இயலுலக அண்டத்தின் ஆற்றலானது நம் அனைவரின் மூலமும் பாய்ந்து கொண்டிருக்கிறது. நாம் அனைவரும்

ஏறத்தாழ கருவிகள் ஆவோம். ஆனால் நாம் விழிப்புணர்வுடன் கீழே உள்ள மையங்களின் மூலம் இந்த ஆற்றல் வெளிப்படுவதை தடுத்து மற்றும் உயர்ந்த மையங்களின்மூலம் அதை வெளிப்படுத்தினால் நாம் எப்பொழுதும் புத்துணர்வுடன் இருப்போம். மற்றும் எண்ண வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் நமக்கு முதுமை என்பதே இல்லை. சில நேரங்களில் நம்முடைய பழைய பதிவுகளினாலும், போக்குகளினாலும், உயர்ந்த மையங்களில் நம்முடைய செயல்பாட்டை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இயலுவதில்லை. மற்றும் வலிமையான கீழ்நோக்கிய ஈர்ப்பு ஆற்றல் இருக்கும். ஒரு உண்மையான பலப்போட்டி இருக்கும். நாம் எவ்வகையிலாவது வளர்ச்சி அடைய வேண்டுமாயின் இதைத் தவிர்க்க இயலாது. நம்மால் அந்த ஆற்றலின் ஓட்டத்தை ஒரு பொழுதும் தடுக்க இயலாது. நம் விருப்பமுயற்சியால் விழிப்புணர்வுடன் அறிவுபூர்வமான ஒரு உயர்ந்த திசையை அதற்கு அளிக்க இயலும்.

விழிப்புணர்வுடன் கூடிய அறிவுபூர்வமான சிந்தனை தேவையானதாகும். விழிப்புணர்வுடன் கூடிய சிந்தனையானது தடையை அகற்றுகிறது. மற்றும் தடையானது அகற்றப்பட்டவுடன் நம்மிடம் மனம் சார்ந்த ஆற்றல் மிகுதியாகப் பாய்கிறது.

முதலில், விருப்பத்துடன் கூடிய முயற்சியால், விழிப்பு உணர்வுடன் கூடிய ஆரம்பத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் பிறகு ஓட்டமானது தொடர்ந்து செயல்படுகிறது. விழிப்பு உணர்வுடன் புதிய கருத்துக்களைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். விழிப்புணர்வுடன், சிந்திப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் புதிய வழிகளைக் கண்டுகொள்ள வேண்டும். இவை கண்டுபிடிக்கப்பட்டவுடன் மனம்சார்ந்த ஆற்றலைத் திசைதிருப்பும் முழுமையான செயல்முறையும் எத்தகைய முயற்சியும் தேவைப்படாததாக, இயல்பாக ஆகிவிடுகிறது.

விழிப்புணர்வுடன் கூடிய உயர்ந்த சிந்தனையினால் நாம் உயர்ந்த வழிகளைத் திறக்கிறோம். அதன் பிறகு பாதை

திறக்கப்பட்டவுடன், உயர்ந்த சிந்தனையானது சுலப மானதாகிவிடுகிறது. உயர்ந்த எண்ணங்கள் உள்ளே பாய் கின்றன. உண்மையாக அவை விசைப்பாய்ச்சலுடன் வரு கின்றன. ஆனால், எப்பொழுதுமே தொடக்கமானது, விருப்பத்துடன் கூடிய முயற்சியுடன் விழிப்புணர்வுடன் ஏற்படுத்தப்பட வேண்டும். விழிப்புணர்வு அற்ற நிலையில் உயர்ந்த எண்ணங்கள் நம்மிடம் வந்துகொண்டு இருக்கு மாயின் அதைப்போன்ற கீழான எண்ணங்களும் ஒருநாள் நம்மிடம் வரும். எனவே எல்லா வகைகளிலும் விழிப் புணர்வு அற்ற நிலையின் செயல்பாடானது தவிர்க்கப்பட வேண்டும்.

உயர்ந்த எண்ணங்கள் விழிப்புணர்வுடன் கூடிய நிலை யில் நம்மூலம் பாய்ந்து செல்வதற்கு அனுமதிக்கப் பட வேண்டும். அது ஒருபொழுதும் விழிப்புணர்வு அற்ற நிலையில் நிகழும் செயல்பாடாக ஆகக்கூடாது. விழிப் புணர்வுடன் கூடிய முயற்சியால் உயர்ந்த வழிகள் திறக்கப் பட்டு இருக்கும் பொழுது, உயர்ந்த எண்ணங்கள் நம்மிடம் விழிப்புணர்வு உள்ள நிலையிலேயே வருகின்றன. அதன் பிறகு உயர்ந்த வாழ்க்கை முறையானது மிகவும் சுலப மானதாகி விடுகிறது. உடல் சார்ந்தும், மனம் சார்ந்தும் ஒரு புதிய வழியானது திறக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் உயர்ந்த எண்ணங்கள் எத்தகைய தடையுமின்றி பாயவியலும். இங்கு உயர்ந்த என்னும் சொல்லிற்கு ஆழ்ந்த என்பது பொரு ளாகும். நாம் 'உயர்ந்த' என்று வெளிப்புற அகலிடத்தின் அளவில் பேசுகிறோம். ஆனால் ஆன்மீக வாழ்க்கையில் உள்ளுணர்வுதான் முக்கியமானது. அதனால், நாம் மன ஆற்றலின் மையங்கள் மற்றும் வழிகளைப் பொறுத்த வரையில் 'ஆழ்ந்த' என்னும் சொல்லையே பயன்படுத்த வேண்டும். எப்படியிருப்பினும் விழிப்புணர்வுடன் தொடக்கத்தை ஏற்படுத்துவதுதான் நமக்கு மிகவும் முக்கியமானதாகும். இதுதான் பூர்வாங்கமாகச் செய்யப்பட வேண்டிய செயல் ஆகும். மற்ற அனைத்தும் பின் தொடர்கின்றன.

உயர்ந்த மையங்களைத் திறத்தல்

வரையறைக்கு உட்பட்டது, எப்பொழுதும் வரை யறைக்கு உட்படாததுடன் தொடர்பு கொண்டுள்ளது. கீழ் மட்டங்களில் இது உணரப்படாமல் இருக்கிறது. மேல் மட்டங்களில் இது உணரப்படுகிறது. உன்னால் உணர வியலும். ஒரு உயர்ந்த மட்டத்திற்கு உயர்வதுதான் நீ செய்யத் தக்கது ஆகும். அதன் பிறகு அந்த ஆற்றலின் உயர்ந்த வெளிப் பாடுகளைப் பெற வேண்டும்.

ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டுள்ள சாதகனுக்கு உயர்ந்த மையங்களைத் தூண்டிவிட்டு, அவைகளைச் செயல்பட வைப்பதுதான் கடமையாகும். ஒருவர் விழிப் புணர்வுடன் கீழே உள்ள மையங்களின் செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். உயர்ந்த மையங்களின் விழிப் புணர்வு நிலையைத் தூண்டிவிட வேண்டும். ஆனால் இது விழிப்புணர்வுடன் செய்யப்பட வேண்டும். அது விழிப் புணர்வுடன் கூடிய அறிவுபூர்வமான செயல்முறையாக இருக்க வேண்டும். ஜபம் பிரார்த்தனை, தியானம் போன் றவை உயர்ந்த மையங்களின் செயல்பாட்டைத் தொடங்கு வதற்குரிய வழிவகைகள் ஆகும்.

சில நேரங்களில் உயர்ந்த மையத்தையும் கீழே உள்ள மையத்தையும் ஒரே சமயத்தில் நீ உணர்வாய். அதாவது இரண்டுமே ஒரே சமயத்தில் செயலாற்ற விரும்பும். அதன் பிறகு மிகப் பெரிய அளவில் பலப் போட்டி நடைபெறும். இது தவிர்க்கவியலாத ஒன்றாகும். ஒவ்வொருவரும் இந்த நிலையைக் கடந்துதான் செல்ல வேண்டும். அதன் பிறகு விருப்பத்துடன் கூடிய முயற்சியால் நீ கீழே உள்ள மையத்தின் செயல்பாட்டை நிறுத்த வேண்டும்.

நாம் நாள்தோறும் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயிற்சி யால், மிகத் தீவிரமான முயற்சியால், உயர்ந்த மைங்களின் செயல்பாடு மேலும் மேலும் இயல்பானதாகவும் இருக்கும். சுமையும் குறையும். ஆனால் ஒரு விதத்தில் பார்த்தால் இந்தப் போர்நிலை வழியாகக் கடந்து செல்வதற்கு முன்னால்

இதை நம்மால் ஒரு பொழுதும் அடைய வியலாது. தடைகள் நீக்கப்பட்டு ஆற்றலானது உயர்ந்த வழிகளின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, உயர்ந்த மட்டத்தில் ஆக்கப் பூர்வமாக இருக்க வேண்டுமெனின் உடலையும் மனத்தையும் பொதுவாக தூய்மைப்படுத்திக் கொள்ளுவது தேவையான தாகும். ஆக்கப்பூர்வமாக கீழே உள்ள மையமோ, உடல் சார்ந்த மட்டமோ அல்லது உயர்ந்த மட்டமோ செயல்பட வேண்டும். அதன் வெளிப்பாடை ஒருபொழுதும் தடுத்து நிறுத்த இயலாது. ஆனால் அதன் திசையைத் திருப்பி விடலாம். ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள சாதகன் இதைத்தான் செய்ய வேண்டும்.

ஒருவருடைய ஆற்றலைக் கட்டுப்படுத்துவது மட்டுமே போதுமானது ஆகாது. ஆனால் அதற்கு உயர்ந்த இலக்கை எப்படிக் கொடுப்பது என்பதை ஒருவர் அறிந்துகொள்ள வேண்டும். இல்லையெனின் ஆற்றலானது சுற்றிச் சுற்றி வந்து, அது மேலும் மேலும் ஒரு பெரிய நீர்ச்சுழியைப்போல ஆகிவிடுகிறது. அல்லது அது சுலபமாக கீழான போக்கை மேற்கொண்டு, கீழே உள்ள ஒரு மையத்தின் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளலாம். இந்த ஆற்றலின் முழுமை யான பாய்ச்சல் நிறுத்தப்பட்டால் பலமனிதர்கள் மந்த நிலையை அடைகின்றனர். அதாவது கீழே உள்ள மையங் களின் மூலம் அவர்களால் அதற்கு எத்தகைய வெளிப் பாட்டையும் அளிக்கவியலாது. ஆனால் அதே சமயத்தில் அதற்கு உயர்ந்த திருப்பத்தையும் அளிக்க இயல்வதில்லை. எனவே அந்த ஆற்றலானது தேங்கத் தொடங்கி சிக்கல் களை ஏற்படுத்துகிறது. பலராலும் அதை உயர்ந்த மட்டங்களில் பயன்படுத்த இயலாது. மற்றும் கீழே உள்ள மையங்களின் மூலம்தான் பயன்படுத்தவியலும். கீழே உள்ள மையங்களின்மூலம் பாய்ந்து செல்லும் ஆற்றல் நிறுத்தப் பட்டால் அவர்கள் மந்தமாக சோர்ந்துபோகின்றனர். அல்லது நீர்ச் சுழிகளைப்போல ஆகின்றனர். மற்ற மனிதர்கள், கீழே உள்ள மையங்களைச் சார்ந்து இருப்ப வர்களாக இருந்தால், அவர்களுக்கு நாம் அறிவுரைகள் கூறும்

பொழுது அதனால்தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

சில நேரங்களில் ஒருவர், இயலுலக அண்டத்தின் ஆற்றல் பொங்கி வருவதை உணர்வார்கள். அதைத் தடுக்க இயலாது. முன்னதாக எடுத்துக்கொண்ட பயிற்சி மற்றும் தூய்மை நிறைந்த மனத்தினாலும் நாம் அதைச் சமாளிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். பல்வேறு வகைப்பட்ட மனநிலைகளும் உணர்வுகளும் நமக்கு ஏற்படுகின்றன. உயர்ந்த மனநிலைகளை மட்டும் பண்படுத்திப் பேணு வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். கீழான மனநிலை களைவிட்டுவிட வேண்டும்.

அகக்கட்டுப்பாடு

பெரும்பாலும் நம்மிடம் சில, அரை உணர்வுத்தளம் சார்ந்த செயற்பாங்கு செயற்பட்டுக் கொண்டே இருக்கும். நமக்குத் தெரியாமலே நடந்து கொண்டு இருக்கும். நாம் அதனுடைய விளைவுகளை மட்டுமே உணர்கிறோம். எனவே நம் மனத்தின் செயல்பாடுகளை நாம் கட்டுப்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இயலுலக அண்டத்தின் ஆற்றல் நம்மிடம் பாய்வதைக் குறித்த விழிப்புணர்வு உடையவர்களாக இருக்க வேண்டும். மற்றும் அதை நம்முள்ளே கையாள நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். வெளிப்புறத்தில் நிகழும் நிகழ்வுகளை முழுமையான அளவிற்கு நம்மால் கட்டுப்படுத்த இயலாமல் இருக்கக் கூடும். ஆனால் நம்மீது நமக்கு முடிந்த அளவிற்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களின் செயல்விளைவு உள்ளது. சுற்றுச் சூழலின் செயல் விளைவு உள்ளது. மற்றும் வெளிப்புற வளிமண்டலத்தின் செயல் விளைவும் உள்ளது. ஆனால் நாம் அவற்றால் பாதிக்கப்படுவோம் என்று உணர் வதற்குத் தக்க காரணம் இல்லை. உனக்கு அவைகளுக்கு எதிராகச் செயல்பட இயலாது என்றால், ஒரு விதத்தில் நீ

தனித்து இருக்க வேண்டும். அதன் பிறகு நீ பாதிக்கப் படுவதாக உணர மாட்டாய். தேவையற்ற தூண்டுதலோ அல்லது உணர்ச்சி வேகமோ வந்தால் நீ நிலைகுலைந்து தடுமாற மாட்டாய். மற்றும் பயிற்சியின் மூலம் நாமாகவே அவைகளிடமிருந்து தனிப்பட்டு விடுவோம்.

நீ வெளிப்படையாக இருந்து தீயமனிதர்களின் தொடர்பு ஏற்பட்டால் நீ மோசமான நிலையில் பாதிக்கப்பட் டிருப்பதாக உணர்வாய். அத்தகைய சூழ்நிலைகளில் நீ பாது காப்புடன் இருக்கவில்லை எனின், தவறான வகை மாதிரி யைச் சேர்ந்த ஒருவன் வந்து உன்னைக் கீழே தள்ளி விட்டு விடுவான். மற்றும் இந்தக் கீழ்நோக்கு வெளிப்புறத் தாக்கத்தினால் இருக்கலாம் அல்லது நம்முடைய சொந்த கவனக்குறைவு மற்றும் வேறுபடுத்திக் காணும் தன்மை இல்லாமல் இருப்பதாலும் கூட இருக்கக்கூடும். ஆன்மீக வாழ்வில் அகச்சீரமைவு என்பது மிகவும் தொல்லையளிக்கும் செயலாகும். மற்றும் அது இல்லாமல் ஒருபொழுதும் சமநிலையும், அமைதியும் இருக்கவியலாது.

உனக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டால் அதைக் கடவுளுக்கு அனுப்பிவிடு

இந்த எல்லாக் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒழுக்க விதி முறைப் பண்பாடு, நமக்குப் பெருமளவில் உதவி செய்கிறது. சில நேரங்களில் மிகப் பெரிய அளவில் உறுதியுடன்கூடிய முயற்சியால் அகச் சமநிலையானது நிலைநிறுத்தப்பட வேண்டும். ஆனால் பயிற்சியின்மூலம் இதுவும் மேலும், மேலும் இயல்பானதாகி விடுகிறது. மற்றும் ஆன்மீக வாழ்க்கையில் நீ உயர்ந்த தியான மனநிலையுடன் இருக்க முயற்சி செய்தால் இந்தச் சமநிலையைப் பெறுவது சுலப மானதாக இருக்கும். மற்றும் ஏதாவது அகல்விரிவான விழிப் புணர்வுடன் தொடர்பு கொண்டிருந்தாலும் சமநிலையைப் பெறுவது சுலபமானதாக இருக்கும். ஏனென்றால் அப் பொழுது நீ உன்னிடம் உள்ள எதிர் விளைவுகளை ஏதோ அகல்விரிவாக இருக்கும் இடத்திற்கு அனுப்புகிறாய். நீ

அதிர்ச்சி அடைகிறாய். ஆனால் நீ அதை வேறு எதனிடமோ அனுப்பி விடுகிறாய். எனவே ஒருவிதத்தில் வரையறை யற்ற பரம்பொருள் நம்முடைய அதிர்ச்சி—ஈர்ப்பவராக விளங்குகிறர்.

பக்தர்கள் இதைச் செய்ய முயற்சி செய்வார்கள். அதிர்ச்சியைக் கடவுளிடம் அனுப்பிக் கொண்டே அவர் களுடைய பக்திசார்ந்த முறையிலேயே, 'கடவுளே, இது உன்னுடைய விருப்பம் ஆகும். என்ன செய்வது?' என்பார்கள். எதிர் விளைவுகளைக் குறைப்பதற்காக இது பக்தனுடைய மனம் சார்ந்த வழியாகும்.

ஞானி வகையைச் சேர்ந்தவன், அவன் பரம்பொருளின் ஒரு பகுதியாவான் என்று நினைக்க முயற்சிக்கிறான். மற்றும் பகுதியால் ஒருபொழுதும் முழுமையிலிருந்து தாவிக்குதிக்க இயலாது. வரையறையற்றது, எப்பொழுதும் வரையறைக்கு உட்பட்டதற்கு உதவி செய்வதற்கு ஆயத்தமாக உள்ளது. ஏனெனில் அந்த இரண்டையும் ஒரு பொழுதும் பிரிக்க இயலாது. நீர்க்குமிழியின் நிலையில் ஒவ்வொரு அடியிலும் பெருங்கடல் நீர்க்குமிழிக்கு ஆதாரமாக இல்லை எனின் நீர்க்குமிழி ஒவ்வொரு கணத்திலும் சிதறிவிடும். சில நேரத் தில் அது அதனுடைய மையத்தை மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கிறது. ஆனால் அது தன் மையத்தைப் பெருங்கடலில் இருந்துகொண்டுதான் மாற்றிக் கொள்கிறது. மற்றும் இதைத் தான் நாமும் செய்ய வேண்டும்.

என்றாவது ஒருநாள், உன்னிடம் மிகப் பெரிய அளவில் உணர்வுகள் தோன்றினால் மற்றும் உனக்கு எப்படி தணிவடைவது என்பது தெரியவில்லையாயின் கடவுளிடம் ஓட வேண்டும். இந்த உணர்வு உன்னைக் கடவுளிடம் அழைத்துச் செல்லட்டும். மற்றும் நீ அழ விரும்பினால் கடவுளை அடையும் வரையில் காத்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் அதை அடையும் வரை நிற்க வேண்டாம். எல்லாவற்றையும் கடவுளிடம் அனுப்புவதற்கு இதுதான் ஒரே வழியாகும்.

வரையறைக்கு உட்பட்டது, வரையறைக்கு உட்படாத கடவுளிடம் தொடர்பு கொள்ள முயற்சி செய்தால் ஒழிய, எந்தத் தீவிரமான தூய்மைப்படுத்துவதாலும் செய்ய இயலாது. நாம் எல்லா அழுக்கையும், குப்பையையும் மறைத்துக் கொண்டு விடுகிறோம். சிலசமயங்களில் அதை மலர்களின் அடியிலும் மறைத்து வைக்கிறோம். மனம் முழுவதும் உண்மையாகத் தூய்மையாக்கப்படும் வரை யிலும், ஆன்மீக வாழ்க்கையில் எதையும் செய்ய இயலாது. மேலீடாகத் தூய்மை செய்து கொண்டால் அது போது மானது அல்ல.

வரையறைக்கு உட்பட்டது எப்பொழுதும் தூய்மை யற்றே இருக்கும். வரையறையற்ற பரம்பொருளிடம் தொடர்பு கொள்வதால் மட்டுமே அதால் தூய்மையடைய இயலும். இவ்விதம் அதனுடைய வரையறையற்ற தன்மையை உணர்ந்து கொள்கிறது. உண்மையான மூலபாவம் வரை யறைக்கு உட்பட்ட தன்மையாகும். நம்முடைய இயல்பான வரையறைக்கு உட்பட்ட தன்மை மற்றும் நம்முடைய வரையறைக்கு உட்பட்ட தன்மையைக் கொண்டு, நம் முடைய உண்மையான பூர்வாங்க தன்மையான வரை யறையற்ற தன்மையுடன் தொடர்பு கொண்டால்தான் மூல பாவத்திலிருந்து விடுபட இயலும்.

நாம் இந்த ஒருங்கிணைந்த அனுபவத்தைப் பெறும் பொழுது, இந்த முழு உலகமும் உருமாற்றம் அடைந்து நம் கண்களின் முன்பு நிற்கிறது. எல்லாமே நமக்கு உகந்ததாகவும் பயனுடையதாகவும் ஆகிறது. இதயத்தின் எல்லா முடிச்சுக் களும் முறுக்கல்களும் அகன்றுவிட்டன. மற்றும் பரம் பொருளின் பேரின்பமானது நம்மை எல்லா வகையிலும் நிறைக்கிறது. அதன்பிறகு நாம் வேதகால ரிஷி பாடி யுள்ளதைப்போல உணர்வோம்:

'இன்ப நிறைவுடைய காற்று நமக்கு இனிமையாக உள்ளது
கடல்கள் நம்மீது பேரின்பத்தை பொழிகின்றன
நம் வயலிலுள்ள சோளம் நமக்குப் பேரின்பமளிக்கட்டும்

செடிகளும், பயிர்களும் நமக்குப் பேரின்பமளிக்கட்டும்
கால்நடைகள் நமக்கு பேரின்பமளிக்கட்டும்
சொர்க்கத்திலுள்ள தந்தையே, எங்களுக்குப்
பேரின்பமளிப்பவனாக இரு.
பூமியின் மீதுள்ள தூள் பேரின்பம் நிறைந்ததாக உள்ளது
இது அனைத்தும் பேரின்பம்—அனைத்தும் பேரின்பம்
அனைத்தும் பேரின்பம்'[1]

---

1. மதுவாதா ருதாயதே மதுக்ஷரந்தி ஸிந்தவ ।
மாத்வீர்ன: ஸந்தவோஷதீ: ॥
மதுநக்தமுதோஷஸி மதுவத் பார்த்திவம் ரஜ: ।
மதுத்யௌரஸ்து ந: பிதா ॥
மதுமான்னோ வனஸ்பதி: மதுமானஸ்து ஸுர்ய: ।
மத்வீர்காவோ பவந்து ந: ॥
—மஹாநாராயண உபநிஷதம், 39 (சுவாமி விவேகானந்தர் மொழி பெயர்த்தது).

பகுதி 3

ஆன்மீக அனுபவம்

27
உண்மையற்ற நிலையிலிருந்து உண்மை நிலைக்கு

மனிதனும் மெய்ம்மையும்

நாம் அனைவரும் நம்மால் ஏற்படுத்தப்படும் துன்பங்கள், மற்றவர்களால் ஏற்படுத்தப்படும் துன்பங்கள் மற்றும் இயற்கையில் நிகழும் இயல்பான நிகழ்ச்சிகளால் ஏற்படுத்தப்படும் துன்பங்கள் என்னும் மூன்று வகையான துன்பங்களால் (தாபத்ரயம்) துன்பப்படுகிறோம். பொதுவாக இந்த மூன்றும் கலந்துதான் காணப்படும். ஆனால் பெரும் பாலும் நம்மால் ஏற்படுத்திக் கொள்ளப்படும் சிக்கல்களே நம் துன்பத்தின் செயல் எல்லையில் ஆதிக்கம் செலுத்து கின்றன.

வாழ்க்கையின் நோக்கம் என்ன? இந்த மூன்று வகை யான துன்பங்களிலிருந்து விடுபடுவது ஆகும். ஒவ்வொரு வரும் தொடர்ந்து துன்பம் மற்றும் பிணைப்பைத் தவிர்ப்ப தற்கு முயற்சி செய்து கொண்டுள்ளனர். ஆனால் பேரின்பத் தையும், விடுதலையையும் அடைவதற்கு வேறு சாத்தியக்கூறு இல்லையெனின், யாருமே துன்பத்திலிருந்து விடுபடும் உந்து அவாவை உணர மாட்டார்கள். இந்த இயல்பான திறமையும், சாத்தியமும்தான் வாழ்க்கையின் மையமான உண்மையாகும். தப்பிக்க இயலாது என்று மனிதர்கள் நம்பவைக்கப்பட் டார்கள் எனின் யாரும் அசையக்கூட மாட்டார்கள்.

நம் ஒவ்வொருவரிடமும் வாழ்க்கை, ஞானம் மற்றும் மகிழ்ச்சியின்மீது அளவற்ற விருப்பம் உள்ளது. நாம் அனை வரும் விழிப்புணர்வுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ விரும்பு கிறோம். இவ்விதமாக இருத்தல், ஞானம் மற்றும் பேரின்பம்

என்பது நம்முடைய ஆன்மாக்களின் சாரமாகவும் நம்முடைய உண்மையான இயல்பாகவும் உள்ளது.

நாம் வெளியுலகிலே பகுத்து ஆராய்ந்து பார்த்தால், புலன்களால் உணரத்தக்க இயற்காட்சிகளின் பின்னணியிலும் அதே உள்ளதைக் காண்கிறோம். எல்லாமே, உயிருள்ளவை, உயிரற்றவை போன்ற அனைத்தும் நம் முன்பு ஒரு இருக்கும் பொருளாக நிற்கிறது. ஏதோ இருக்கிறது மற்றும் ஒவ்வொன் றிற்கும் தன்னை நம் உணர்வுகளுக்குள் வலிந்து நுழைத்துக் கொள்ளும் திறமை உள்ளது; ஒவ்வொன்றும் ஒருவிதமான ஒளிரும் தன்மையைக் கொண்டுள்ளது. அது புலனறிவு உடைய உயிரிலும் புலனறிவு இல்லாதவற்றிலும் இரண் டிலும் ஒளிர்கிறது. இதில் தன்மையில் எந்த விதமான வேறு பாடும் இல்லை. ஆனால் படி அளவில்தான் உள்ளது. உள் உலகத்தில் இருப்பது போல வெளியுலகத்திலும் நாம் வாழ்வு மற்றும் விழிப்பு நிலையின் இந்த நிலைத்த உணர்வைக் காண்கிறோம்.

இவ்விதமாக, நம்மிடம் மட்டுமின்றி, வெளிப்புறத் திலுள்ள எல்லாப் பொருட்களிலும், மெய்ம்மையின் தோற்றத்தைக் காண்கிறோம். மீண்டும், நம்மைச் சுற்றி நாம் காணும் இயற்பொருள் சார்ந்த பொருள்கள், ஒவ்வொரு தனிமனிதனின் சில தேவைகளை நிறைவு செய்கின்றன. நாம் அனைவரும் ஒரு குறிப்பிட்ட புலன் இன்பத்தைத் தேடிக் கொண்டு புலன் இன்பப் பொருட்களின் பின்னால் ஓடு கிறோம். நாம் அந்தப் பொருளைக் கைக்கொள்வதன்மூலம், அவனுடைய இயல்பு எத்தன்மை உடையதாக இருப்பினும், அதிலிருந்து இன்பத்தைப் பெற இயலும் என நினைக் கிறோம். நம்மிடம் எப்பொழுதும் மகிழ்ச்சியைப் பெற வேண்டும் என்னும் விருப்பம் உள்ளது. புலனுக்கு உரிய பொருட்கள் நம் மனத்தை மட்டுமே ஈர்க்கின்றன. நாம் அவைகளிடமிருந்து ஏதோ இன்பத்தை பெறப் போகிறோம் என்னும் எண்ணத்தால் அவ்விதம் உள்ளது. நாம் இதனால் தான் மருட்சி அடைகிறோமே தவிர, அந்தப் பொருளின் மீது உள்ள உள்ளார்ந்த மதிப்பினால் அல்ல. இவ்விதமாக,

வெளியிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் அதற்கு அதனாலேயே வாழும் திறமை உள்ளது. அதைக் குறித்த நம்முடைய விழிப்புணர்வைத் தூண்டும் மற்றும் நம் மனத்தை ஈர்க்கும் திறமை உள்ளது என்று நாம் கண்டு கொள்கிறோம்.[1]

எப்படி இருப்பினும், நாம் அந்த புறப் பொருட்களை ஆராய்ந்தால், இறுதியாக நமக்கு அவைகளின் உண்மையான இயல்பைப்பற்றி எதுவும் தெரியாது. அவைகளின் வடிவங்களையும், பெயர்களையும் மட்டுமே அறிந்து கொள்கிறோம் என்று கண்டு கொள்கிறோம். தற்சமயத்தில் அவை சுட்டிக் காட்டும் மெய்ம்மை நமக்குத் தெரியாமல் உள்ளது. பெயர்களும் வடிவங்களும் நம்மிடமும், புறத்தில் உள்ள பொருள்களிடத்திலும் உண்மையை மறைத்து விடுகின்றன. ஆனால் எல்லா வடிவங்களும், பெயர்களும் அவைகளின் பின்னணியில் மெய்ப்பொருளின் பெருஞ்சிறப்பை மங்கலாகப் பிரதிபலிக்கின்றன. இந்தப் பொதுவான இறுதியான மெய்ப்பொருள், நம் அக வாழ்க்கை மற்றும் புற உலகின் அடிமூலக் கூறுகளை வடிவமைக்கிறது. உபநிஷதங்களில் இந்த மெய்ப்பொருள் பிரம்மன் அல்லது ஆத்மா என்று அழைக்கப்படுகிறது.

நம்மிடம் எப்பொழுதும் அரைஉணர்வுத் தளம் சார்ந்த தனித்துவமான உணர்வு, இந்த மெய்ப்பொருள் அல்லது பிரம்மனிடம் தொடர்பு கொண்டுள்ள உணர்வு உள்ளது. அது தெளிவற்றதாக இருக்கலாம், திட்பமற்றதாக இருக்கலாம். ஆனாலும் அது இருக்கிறது. இந்த வரையறையற்ற தன்னாற்றலுணர்வை உறுதிப்படுத்துவதுதான் ஆன்மீக வாழ்க்கையின் கடமைப் பணியாக உள்ளது. நாம் நேருக்கு நேராக உண்மையைச் சந்திக்க வேண்டும் எனின் (மெய்ப் பொருளை) முதலில் நாம் நம்மிடமிருந்து தொடங்க வேண்டும். நம்முடைய அகங்காரத்தின் பின்னணியில் நம்மிடம் எது இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும்.

---

1. அஸ்தி பாதி ப்ரியம் ரூபம் நாம சேத்யம்சபஞ்சகம் ।
ஆத்யத்ரயம் ப்ரஹ்மரூபம் ஜகத்ரூபம் ததோத்வயம் ॥
—த்ருக்-த்ருச்ய-விவேகம், பாடல், 20

'நான்' என்னும் விழிப்புணர்வின் மூலம்

பொய்யான அடையாளம் கண்டு கொள்வது இருக்கும் வரையிலும், பொய்யான, தனித்தன்மைகளைக் குறித்த உணர்வு இருக்கும் வரையிலும், இறுதியான உண்மையை உணரவே இயலாது. நம்மிடம், உடலையும், மனத்தையும் மற்றும் அகங்காரத்தையும் ஆன்மா என்று கண்டு கொள்ளும் பொய்யான அடையாளம் கண்டு கொள்ளும் தன்மை உள்ளது. மற்றும் இத்தகைய அடையாளம் கண்டு கொள்ளும் தன்மை இருக்கும் சமயத்தில், நம்முடைய விழிப்புணர்வு மையத்தை நாம் தொடர்ந்து மாற்றிக் கொண்டே இருக் கிறோம் என்பதையும் காண்கிறோம். இயல்பான நிகழ்வு களின் மட்டத்தில், செயலாற்றிக் கொண்டோ அல்லது வாழ்ந்து கொண்டோ இருக்கும் பொழுது கூட ஒருவருடைய உணர்வுகளை உச்சநிலையில் வேரூன்றி வைத்துக்கொள்ள லாம் என ஒன்று உள்ளது. ஆனால், உடல் மற்றும் மனத்துடன் இந்தத் தவறான அடையாளம் கண்டு கொள்ளுதல் இருக்கும் வரை, ஒருபொழுதும் இதைச் செய்ய இயலாது. சில நேரங் களில் நாம் நம்மை நம் உடலுடன் இனம் கண்டு கொண்டு, 'ஓ! எனக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. உடல் வலியை உணர் கிறேன்' என்று கூறுகிறோம். சில நேரங்களில் மனத்துடன் இனம் கண்டுகொண்டு 'ஓ! அவர் என்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. நான் மிகவும் வருத்தப்படுகிறேன்' என்று கூறுகிறோம். இது எல்லாமே தவறாக அடையாளம் கண்டுகொள்வது ஆகும். ஆனால் இந்த அடையாளம் கண்டுகொள்வதில் உள்ள பொது வான விஷயம், 'நான்', 'நான்', 'நான்' என்பதாகும். எப் பொழுதும் இந்த 'நான்' என்பதுதான் பல்வேறு வடிவங்களில் வருகிறது. இந்த 'நான்' என்பது இருக்கும் வரையிலும் நம்மால் கடவுளின் கண நேரத் தோற்றத்தைக் கூடக் காண இயலாது. ஆனால் இங்குக் கவனிக்கத்தக்க ஒரு விஷயம் உள்ளது. நாம் இவ்விதம் தவறாக அடையாளம் கண்டு கொள்ளும் பொழுதும், நம்மிடம் மாறுதல் அடையாத 'ஏதோ

ஒன்றைக்' குறித்த உணர்வு உள்ளது.[1] நிலைத்துள்ள, மாறுபாடு அடையாத 'ஏதோ ஒன்று' என்ன என்பதை ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டுள்ள சாதகன் கண்டு பிடிக்க வேண்டும். அது அவனுடைய கடமை ஆகும்.

இந்த 'நான்' என்பது என்ன? இந்த அறிபவனை எப்படி அறிவது?[2] எந்த அளவிற்கு எல்லை அற்றதாக இருப்பினும், வரையறையற்றதைக் குறித்து எத்தகைய கருத்தும் இல்லாமல், வரையறைக்கு உட்பட்டதைக் குறித்த கருத்தும் இருக்க இயலாது. ஒன்றை உண்மையாக ஏற்றுக்கொண்டு, மற்றதையும் நாம் மெய்யாகக் கொள்கிறோம். வரையறையற்றதை நம்மால் முறைப்படுத்த இயலாது. தூய விழிப்புணர்வு நிலையைக் (பிரம்மன் போன்ற) குறித்த கருத்தை நாம் கொள்ள இயலாது. அதை ஒருபொழுதும் முறைப்படுத்த இயலாமல் இருப்பினும் அதை உள்ளுணர்வால் உணர இயலும். நேரடியாக மேம்பட்ட விழிப்பு உணர்வு நிலை அனுபவம் என்று ஒன்று உள்ளது.

யாரை 'அது' தேர்ந்து எடுக்கிறதோ மற்றும் யாருக்கு 'அது' 'தன்னை' வெளிப்படுத்துகிறதோ, அவனால் 'உண்மையை' உணர இயலும்.'[3]

ஒருபொருண்மைவாத கண்ணோட்டத்தில் நீயேதான் உன்னைத் தேர்ந்தெடுப்பவர் ஆவாய். ஏனெனில் இந்த பரம்பொருள் இந்த உண்மையானது உன்னை விட வேறுபட்ட ஏதோ ஒன்று அல்ல. மற்றும் நீயே உன்னை இந்த உண்மையை உணர்பவராகத் தேர்ந்தெடுத்தால் மற்றும் அதற்காக உண்மையாக முயற்சி செய்தால் நீ அதுவாக ஆகிறாய். ஒருபொருண்மைவாத கண்ணோட்டத்தில் கடவுளை உணர்வது என்பது உன்னை நீ உணர்வது ஆகும்.

---

1. ப்ரதிபோதவிதிதம் ।

—கேன உபநிஷதம், 2.4.

2. விஜ்ஞாதாரமரே கேன விஜாநீயாத் ।

—பிரஹதாரண்யக உபநிஷதம், 2.4.14, 4.5.15.

3. கட உபநிஷதம், 1.2.23, முண்டக உபநிஷதம், 3.2.3.

த்வைத கண்ணோட்டத்தில் கடவுள் தேர்ந்து எடுப்பவர் ஆவார். கடவுளால் தேர்ந்தெடுக்கப்படுபவருக்குக் கடவுளின் அருள் கிடைக்கிறது. ஆனால் இங்கும், 'நான்' என்னும் சிக்கல் நீடிக்கிறது. தூய்மைப்பாடிற்காக யார் மிகவும் கஷ்டப் பட்டு முயற்சி செய்திருக்கிறார்களோ, யார் அதற்கு ஆயத்த மாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு மட்டுமே கடவுளின் அருள் கிடைக்கும். பாவிகள் என்று அழைக்கப்படுபவர் களின் விஷயத்திலும், திடீரென்று புனிதமான வாழ்க்கைக்கு மாறி உள்ளவர்களின் விஷயத்திலும், அவர்களுடைய உண்மையான 'பாவம்புரிதல்' அவர்களுடைய, கீழ்மட்டத் தில் உள்ள மனத்தின் செயல்பாடுகளைக் குறித்த அறிவை அவர்களுக்கு அளிக்கிறது. அவர்களிடம், தூய்மைப்பாடிற்கு தன்னுணர்வற்ற ஆனால் தீவிரமான முயற்சி உள்ளது. த்வைத கண்ணோட்டத்தில் ஆன்மீக உணர்தல் என்றால் கடவுளை உணர்வது ஆகும்.

அத்வைத கண்ணோட்டத்தில் தன்னை உணர்தல் (ஆன்மாவை உணர்தல்) மற்றும் கடவுளை உணர்தல் என்னும் இரண்டும் ஒன்றே ஆகும். த்வைதம் சார்ந்த பள்ளிகளில் இந்த இரண்டிற்கும் இடையில் ஒரு வேறுபாடு காட்டப்படுகிறது. முதலில் தன்னை உணர்வது வருகிறது. அதன் பிறகு கடவுளை உணர்வது வருகிறது. ஆனால் இந்த இரு வழிகளிலும் அகங்கார உணர்வைக் கடந்து ஆன்மாவைக் காண்பது தேவை யானதாக இருக்கிறது. உண்மையான ஆன்மீக வாழ்வானது ஆன்மாவைக் கண்டு கொள்வதில்தான் தொடங்குகிறது. 'துணிவுடன் உண்மையை எதிர்கொள்வாய்'[1] இரக்கம் அற்ற முறையில் தன்னைத்தானே ஆராய்ந்து அறிய வேண்டும். முதலில் உன்னுடைய சொந்த ஆன்மாவைக் காண முயற்சி செய்து, மறுபடியும் எய்தப் பெறுவாய். உன்னுடைய ஆன்மாவானது உண்மையாக உன்னிடமே காணாமல்போய் விட்டது. அதை நீ மீண்டும் கண்டுபிடித்த பிறகுதான் இந்த உயர்ந்த உணர்தலைக் குறித்த கேள்வியே

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு! 9.34.*

எழுகிறது. மனிதன் அவனுடைய சொந்த ஆன்மாவைத் தேடுவதில்தான் ஆன்மீக வாழ்க்கையானது தொடங்குகிறது. நாம் உடல்கள் அல்ல; உணர்ச்சிகளின் தொகுதிகள் அல்ல. ஆண்களும் அல்ல, பெண்களும் அல்ல, ஆனால் ஆன்மாவின் உள்ளியல்பிற்கு உரியவர்கள். மிகப் பரந்த மெய்த் தத்துவத்தின் பகுதிகள் ஆவோம். அது இந்தப் புலன்களால் காணத்தக்க உலகத்தைவிட மிகவும் மதிப்பு உடையது என்னும் உண்மையை உணர்ந்து கொள்வதில்தான் ஆன்மீக வாழ்வு தொடங்குகிறது. நம்முடைய முயற்சியின் அடித் தளமாக இந்த விழிப்புணர்வு இருக்க வேண்டும் என்பது அவசியமானதாகும்.

ஆன்மீக வாழ்வின் அடிப்படையான விதிமுறைகள்

இயலுலக அண்டத்திற்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பை இரு முக்கியமான விதிகள் ஆள்கின்றன. முதலாவது விதிமுறை இவ்விதம் உள்ளது. ஒருவர் எதை யாவது உண்மை என்று ஏற்றுக் கொண்டால் அது அவருடைய முழுமையான இருப்பையே ஈர்க்கிறது. ஒருவருடைய எண்ணங்கள் ஒருவருடைய உணர்வுகள் மற்றும் ஒருவரின் விருப்பம் என்று அனைத்தையும் ஈர்க்கிறது. போலித் தோற்ற மான இவ்வுலகம் நமக்கு உண்மையாகத் தென்பட்டால், அது நம்முடைய முழுமையான இருப்பையே ஈர்க்கிறது. அதன் பிறகு நாம் இந்த உலகத்திலிருந்து திரும்பி, நம்முடைய முழு இதயத்தையும் கடவுள் மீது பொருத்திக் கொள்வோம். நாம் இந்த உலகத்தை உண்மை என்று ஏற்றுக்கொண்டால், நாம் அதிலேயே மூழ்கியிருப்போம். நாம் கடவுளை உண்மை என்று ஏற்றுக் கொண்டால் நாம் கடவுளிடமே மூழ்கி இருப் போம். எனவே நமக்கு எதுவெல்லாம் உண்மை என்று தென்படுகிறதோ நாம் அவற்றை நம் முழுமனத்துடன் பின்பற்றுகிறோம்.

எனவே, மெய்ப்பொருளின் இயல்பைக் குறித்து ஆராய் வது நமக்கு அவசியமானதாக உள்ளது. நாம் இந்த ஆராய்வை மேற்கொள்ளும் பொழுது, நாம் மற்றொரு உண்மையையும்

கண்டுகொள்கிறோம். அதாவது ஆன்மீக வாழ்வின் அடிப்படையான இரண்டாவது விதி முறையைக் கண்டு கொள்கிறோம். அதாவது பரம்பொருளைக் குறித்த நம் கருத்தானது, நாம் நம் மீது கொள்ளும் கருத்தைச் சார்ந்ததாக உள்ளது என்பதாகும். ஒரு குழந்தைக்கு அதனுடைய பொம்மைகள் எல்லாம் உண்மையான உயிருடையவை ஆகும். குழந்தை வளரும் பொழுது, குழந்தைக்குக் குழந்தையைக் குறித்த கருத்தே மாறுபட்டுவிடுகிறது. எனவே பொம்மைகள் அவற்றின் உண்மைத் தன்மையை இழக்கின்றன. அதைப் போன்றே புதுமலர்ச்சிப் பருவம் (adolescence), இளமைப் பருவம் மற்றும் முதுமைப்பருவம் போன்றவை, இந்தப் புற உலகத்தைக் குறித்த மனிதனின் கருத்தில் மாறுதலை ஏற்படுத்துகின்றன. நம்மைக் குறித்த நம் அறிவிற்கும் வாழ்க்கையைக் குறித்த நம்முடைய கண்ணோட்டத்திற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு உள்ளது. புலன்களால் உணரத்தக்க இவ்வுலகத்தைக் குறித்த நம் அறிவை, அகஉணர்வு நிலையின் மாறுபட்ட நிலையானது எப்பொழுதும் தரத்திலே விஞ்சியுள்ளது.

ஒரு அரசனை ஏதோ ஒரு நோய் தாக்கியதால் அவன் கண்கள் பாதிக்கப்பட்டது என்று பலராலும் அறியப்பட்ட கதை இக்கருத்தை விளக்குகிறது. மருத்துவர்கள் அரசனை எப்பொழுதும் பச்சை நிறத்தில் உள்ள பொருட்களைக் காணும்படி அறிவுறுத்தினர். அரசன் அரண்மனை முழுவதும் மற்றும் பழத்தோட்டம் போன்றவற்றிற்குப் பச்சை நிறம் அடிக்கும்படி உத்தரவிட்டார். ஆனால் மதிநுட்பம் வாய்ந்த அமைச்சர், அதற்குப் பதிலாகப் பச்சைக் கண்ணாடி அணிந்து கொள்ளும்படி யோசனை கூறினார். அதன் பிறகு அரசன் உலகம் முழுவதையும் பச்சை வண்ணத்திலேயே கண்டார். ஆன்மீக வாழ்க்கையானது, நம்மைக் குறித்த நம் கருத்து மாறுபடும் பொழுதுதான் நாம் நம்மை ஆன்மாக்கள் என்று காணத் தொடங்கும் பொழுதுதான் தொடங்குகிறது. நாம் நம்மை ஆன்மாவாகக் காணும் பொழுது, நாம் பரம் பொருளை நாடிச் செல்வோம்.

எப்பொழுதாவது இந்த இயற்பொருள் சார்ந்த உலக மானது ஆன்மீக உலகைவிட அதிக உண்மையானதாகத் தென் பட்டால் நம் உணர்வில் ஏற்கனவே நம் உடலானது நம் ஆன்மாவைவிட அதிக உண்மையானதாகத் தோன்றுகிறது. நிகழ்ச்சியை ஆராயும்பொழுது, நம்முடைய விழிப்புணர்வில் முதலில் ஒரு வீழ்ச்சி ஏற்படுகிறது. அதன்பிறகு நாம் உடலைக் குறித்தும், புறஉலகைக் குறித்தும் மேலும் விழிப் புடையவர்களாக ஆகிறோம்.

பகுத்தறிவின் அடிப்படை

நேரடியான அனுபவத்தின் மூலம் மெய்ப்பிப்பதுதான் பகுத்தறிவின் அடிப்படையாகும் என்பது வேதாந்தக் கருத்து ஆகும். அது வெறும் ஆய்வறிவுக் கோட்பாடோ (Intellectualism) அல்லது தர்க்கத்தால் கூறுபடுத்துவதோ அல்ல. பகுத்தறிவானது எப்பொழுதுமே அனுபவத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. பகுத்தறிவானது நம்மிட முள்ள மறுக்க முடியாத உண்மையான ஆன்மாவின் இருப்பைக் குறித்துத் தொடங்குகிறது. டெஸ்கார்டெஸ் (Descartes) 'நான் நினைக்கிறேன். எனவே நான் இருக்கிறேன்' (cogito ergo sum) என்று கூறியுள்ளார். ஒரு ஹிந்து இந்த வாக்கியத்தை எதிர்மறையாக அமைப்பான். 'நான் இருக் கிறேன், எனவே நான் நினைக்கிறேன்'. இந்த பகுத்தறி வானது நம்மைச் சுற்றியுள்ள புற உலகத்திலும், நம்மிடம் உள்ள அக உலகத்திலும் விரிவுபடுத்தப்பட்டு உள்ளது. அதன் பிறகு நாம் ஆன்மா மட்டுமே நிலைத்த மாறுபாடு அற்ற ஒரே மெய்ப்பொருள், மற்ற அனைத்தும் நிலையற்றவை என்றும் கண்டு கொள்கிறோம். மாறிக் கொண்டே இருப்பது உண்மையற்றதாகும். அல்லது விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்னும் மூன்று நிலைகளிலும் எப்பொழுதும் நீடித்திருக்கும் ஒன்றைவிட குறைந்த உண்மையாக இருக்க வேண்டும். வேதாந்தம் சார்ந்த சாதகன் இப்படித்தான் உண்மையையும், உண்மையற்றதையும் வேறுபடுத்திக் காண்பான்.

தெளிவான பகுத்து ஆராயும் முறை இருக்க வேண்டும். நாம் நம் எண்ணங்களிலிருந்து நம்மைப் பிரித்துக் கொண்டும் அவற்றைக் கண்காணிக்கலாம். நாம் நம் மனத்தையும் கண் காணிக்கலாம். எனவே மனம் என்பது ஒரு பொருள். மற்றும் அது வேறு ஒரு ஆதாரப் பொருளால் கண்காணிக்கப்படலாம்.

'வடிவமானது உணரப்படுகிறது. மற்றும் அதை உணர்வது கண். அது (கண்) உணரப்படுகிறது. மற்றும் அதை உணர்வது மனம். மனம் அதனுடைய உருமாற்றங்களுடன் உணரப்படுகிறது. மற்றும் சாட்சியானது (ஆன்மா) உண்மை யாக உணர்கிறது. ஆனால் அது (சாட்சி) வேறு எதுவாலும் உணரப்படுவதில்லை'.[1]

இந்த முறையில்தான் நம்மை நாமே பகுத்து ஆராய்ந்து கொள்வது, நம்முடைய உண்மையான இயல்பை ஆராய்வது நடத்தப்படுகிறது. இதனால் ஆதாரப் பொருளை, பொருளைக் காணும், ஆன்மாவின் கணநேரத் தோற்றத்தை நாம் காண் கிறோம். ஆனால் மெய்ப்பொருளானது ஆதாரப் பொருள் மற்றும் பொருள் என்னும் இவைகளுக்கு அப்பால் உள்ளது.

நீ ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது நீ உன்னிடம் 'ஓ இந்த எண்ணம் என் மனத்தில் எழுகிறது' என்று கூறிக் கொள் கிறாய். எனவே நீ உன்னுடைய எண்ணத்திற்குக் கூட சாட்சி யாகிறாய். மனமானது, தோன்றி மறைந்துகொண்டு இருக்கும் பல எண்ணங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே மன மானது தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் சாட்சி, ஆன்மா மாறுவதில்லை. உண்மைக்கான எல்லா மனித ஆராய்வும், எப்பொழுதும் மாறுபாடற்ற இந்த ஆன்மா விலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும். இந்த தன்னாற்ற லுணர்வு பண்புக்கூறுதான் நம்முடைய தனித்தன்மையின் அடிப்படையாகும். எல்லாவிதமான உடல் சார்ந்த, மனம் சார்ந்த மாறுபடுகளுக்கிடையில் நம்மிடம் ஏதோ மாறுபாடு

---

1. ரூபம் த்ருச்யம் லோசனம் த்ருக் தத்த்ருச்யம் த்ருக்து மானஸம் ।
த்ருச்யா தீவ்ருத்தயஸ்ஸாக்ஷீ த்ருகேவ ந து த்ருச்யதே ॥

—த்ருக்-த்ருச்ய-விவேகம், 1

அற்ற இயற்கை அமைதி உள்ளது. மற்றும் இது மெய்ப் பொருளை அடைவதற்கான வழிகாட்டும் குறிப்பை அளிக்கிறது.

நம்முடைய விழிப்புணர்வில் உண்மையாக இருப்பது எப்பொழுதும் அப்படியே தொடர்ந்து இருக்கிறது. நீர்க் குமிழி மறைந்துவிட்டால் நீர் அணுக்கூறு (particle) மறைவது இல்லை. இந்த உடல் நீர்க்குமிழி ஆகும். ஆன்மா என்பது தண்ணீர்த் துளியாகும். நம்மிடம் உள்ள உண்மையான சாரம் எப்பொழுதும் அப்படியே உள்ளது. எது வரம்பற்ற நோக்கு நிலையிலிருந்து உண்மையில்லையோ அது வெளியேறு கிறது. உடல் அழிகிறது. மற்றும் ஆன்மாவானது அழிவற்று, நிலைத்த மாறுதலற்று இருக்கிறது.

நம்மைக் குறித்த நம் கருத்தானது நம் செயல்பாடுகளில் ஒரு முக்கியமான விளைவை ஏற்படுத்துகிறது. ஒருவேளை நாம் நம்மை உடல் என்று கண்டுகொண்டால் உடல் தொடர் பான இன்பம்தான் நம் வாழ்வில் குறிக்கோளாக ஆகிவிடு கிறது. மற்றும் நம் ஆன்மாவானது மரணத்திற்குப் பிறகு தொடர்ந்து வாழும் மற்றும் நம் எதிர்காலமானது நம்முடைய தற்போதைய செயல்பாடுகளைச் சார்ந்து இருக்கும் அதாவது உடல் சார்ந்த மனம் சார்ந்த எல்லாச் செயல்பாடுகளும் சார்ந்து இருக்கும் என்று நினைத்தால் அப்பொழுது நம்முடைய மனப்பான்மை என்னவாக இருக்கும்? அதன்பிறகு நாம் வேறுவிதமாகச் செயல்படுவோம். ஏனெனில் மரணத்திற்குப் பிறகு எல்லாமே முடிந்து விடப்போவது இல்லை. அதன் பிறகு நாம் நமக்கு எது நிறைவையும், அமைதியையும், பேரின்பத்தையும் அளிக்கிறது என்று தேடுவதற்கு முயற்சி செய்வோம். எனவே நம்முடைய மனப்பான்மையானது நாம் தினந்தோறும் நடந்துகொள்ளும்முறை சிந்திக்கும்முறை போன்றவற்றைப் பொறுத்தவரையில் நல்ல செயல் தொடர்பான வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. பாகுபடுத்தி ஆராய்ந்து அறிவதன்மூலம் நாம் சரியான மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நோக்குபவரின் இயல்பு

'நான்' என்னும் பொது அமைதிதான் ஜீவன் என்று அழைக்கப்படுகிறது. ஜீவன் என்னும் நிலை உருவாவதற்கு மூன்று பொருட்கள் தேவையானதாகும். மனம் அல்லது அந்தகரணம், 'நான்' என்னும் உணர்வு மற்றும் மனத்தில் பிரம்மனின் பிரதிபலிப்பாக விளங்கும் சிதாபாஸம் என்பதாகும். இம்மூன்றும் ஒருங்கிணைந்து ஜீவனை உருவாக்குகின்றன. இவைகளில் மனத்தின் இருப்புதான் அடிப்படையான கூறு ஆகும். அது சத்துவ குணம், ரஜோ குணம் மற்றும் தமோ குணம் என்னும் மூன்று குணங்களின் தனித்ததொரு விளைவாக உள்ளது. அது மாயையை உருவாக்குகிறது. இந்த மனம்தான் 'நான்' என்னும் உணர்வைத் தோற்றுவிக்கிறது. மற்றும் பிரம்மனின் ஒளியையும் பிரதிபலிக்கிறது. பிரதிபலிக்கப்பட்ட ஒளி 'நான்' என்னும் உணர்வுடன் இணைந்து ஜீவனை உருவாக்குகிறது. மனமானது, உயர்ந்த ஞானத்தால் அழிக்கப்பட்டுவிட்டால் பிரதிபலிப்பு என்ன ஆகும்? பிரம்மன்தான் தொடக்க நிலையில் பிரதிபலிக்கப்பட்டது. படி உருக்காட்டுபவர் (reflector) இல்லாமல் இருக்கும் பொழுது, பிரதிபலிப்பானது பிரம்மனிடமிருந்து வேறுபடாமல் உள்ளது. வேறுவகையில் கூற வேண்டும் எனின், குணங்கள் கட்டுப்பட்ட நிலையில் ஜீவனும், பிரம்மனும் ஒன்றுதான். மனம் இருக்கும் வரையிலும் ஜீவனும் உள்ளது. அது வரையறைக்கு உட்பட்ட எல்லையை உடையது. மனம் மறைந்துவிடும் பொழுது, பிரம்மன் மட்டுமே எஞ்சியுள்ளது. அதற்கு வரையறையும் இல்லை. பிணைப்பு இல்லை. அது வரையறையற்றது, முழுமுதற்பொருள் மற்றும் இரண்டாவது அல்லாத ஒருமையாகும்.

ஐயத்திற்கு இடமின்றி இது மிக உயர்ந்த நோக்கு நிலையாகும். உலகத்தில் எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் மனித குலத்தால் அடையப்பட்ட மிக உயர்ந்த உச்சமான நோக்கு நிலையாகும். அது தற்சமயத்தில் நம்மில் பலருக்கும் அடைய இயலாத தொலைவில் உள்ளது. மற்றும் அதை

அடைவதற்குப் பல்லாண்டுகளோ அல்லது பல பிறவிகளோ ஆகலாம். உடனடியாக நம்முடைய கவனம் என்னவாக இருக்க வேண்டும்? நம்முடைய உடனடியான சிக்கலானது, பிரதிபலிப்பைப் படி உருக்காட்டுபவரிலிருந்து பிரிப்பது ஆகும். பிரம்மன் மனத்தின் மூலமே ஒளிர்கிறார். ஆனால் நாம் மனத்தின் பலவகையான உருத்திரிபுகளால் (அதாவது எண்ணங்கள் போன்றவற்றால்) நாம் வேறுபலவற்றில் கவனம் செலுத்திக் கொண்டு இருப்பதால், நம் மனத்தின் மூலம் ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஒளியைப் புரிந்துகொள் ளாதவர்களாக இருக்கிறோம். உருத்திரிபுகளிலிருந்து விடு பட்டு மனம் தூய்மையடைந்த பிறகுதான் நம்மால் இந்த பிரதிபலிக்கும் ஒளியைக் காண இயலும். நாம் அப்பொழுது அந்த ஒளி எண்ணங்களிலிருந்து வேறுபட்டு விளங்குவதைக் காண்கிறோம். இந்த பிரதிபலிக்கப்பட்டுள்ள ஒளியானது உண்மையிலேயே வரையறையற்ற பரம்பொருளின் பேரொளி யின் ஒரு பகுதி என்பதையும் உணர்கிறோம். முதலில், எப் படியிருப்பினும் நாம் நம்முடைய சொந்த உயர்ந்த தன்மை யின் சில கண நேரத் தோற்றங்களைக் காண வேண்டும். பரம்பொருளைக் குறித்த கேள்வி பிறகுதான் வருகிறது.

உள்ளொளி

உள்ளுணர்வு, நேரடிக் காட்சியின் ஆற்றலானது நம் மிடம் செயலற்ற நிலையில் உள்ளது. அந்த இழந்த உணர்வை மீண்டும் பெற வேண்டும். அதன்மூலமாகவே மேம்பட்ட உண்மைகளின் கணநேரக் காட்சிகள் தென்படுகின்றன. இந்த மேம்பட்ட உணர்வு ஆற்றலை எப்படி வளர்த்துக் கொள்ள வேண்டும்? நீ எப்படி உறக்கத்திற்கு ஆட்படுகிறாய் மற்றும் உறக்கத்திலிருந்து எப்படி மீண்டு வருகிறாய் என்பதைக் கவனிக்க வேண்டும். முதலில் புலன் உறுப்புக்கள் அனைத்தும் மனத்திற்குள் மீண்டும் உள்வாங்கிக் கொள்ளப் படுகின்றன. பிறகு எண்ணங்கள் மறைகின்றன. மற்றும் ஒரு மங்கலான 'நான்' என்னும் உணர்வு இருக்கும். இறுதியாக இந்த 'நான்' என்னும் உணர்வு ஆழ்ந்த உறக்கத்துடன்

இரண்டறக் கலந்துவிடுகிறது. நீ விழித்து எழும் பொழுது இதற்கு எதிர்மறையான செயல்முறை நிகழ்கிறது. முதலில், 'நான்' என்னும் உணர்வு வெளிப்படுகிறது. அதன்பிறகு இது மனத்தில் எழும் எண்ணங்களுடன் மற்றும் சுற்றி உள்ள பொருட்களுடனும் தொடர்பு கொள்கிறது. விழிப்பு வந்தவுடன் ஒரு மங்கலான இடைப்பட்ட காலம் இருக்கிறது. அப்பொழுது நீ தூய்மையான 'நான்' என்னும் உணர்வை ஒரு கண நேரத்திற்குத் தக்க வைத்துக் கொள்கிறாய். அது நமக்குப் புற உலக உண்மையாக இன்னும் புலப்படுவது இல்லை. நாம் விழித்துக் கொண்டிருக்கும் நேரங்களிலும் இதைப் போன்ற தூய்மையான விழிப்புணர்வு நிலை விழிப்புணர்வுடன் அடையப்பட வேண்டும். சாதகனின் முன்பு உள்ள உண்மையான கடமை அதுதான். இருளையும், ஒளியையும் பிரிக்கும் கோடு மெல்லிய இழை போன்று இருக்கும் பொழுது நாம் அந்த மட்டத்தை அடைய வேண்டும்.

பிரஹதாரண்யக உபநிஷதத்தில் அரசர் ஜனகர் யாஜ்ஞவல்க்யரிடம், 'இந்தப் புருஷனுக்கு ஒளியாவது எது?' என்று கேட்டார். அதற்கு யாஜ்ஞவல்க்யர், 'அரசே, சூரியன்தான் ஒளி, சூரிய ஒளியாலேயே இவன் இருக்கிறான். வெளியே செல்கிறான். வேலை செய்கிறான். திரும்பி வருகிறான்' என்று கூறினார். 'ஆனால் யாஜ்ஞவல்க்யரே, சூரியன் அஸ்தமித்துவிட்டால் இவனுக்கு ஒளியாவது எது? 'சந்திரன் ஆகும்'. 'சந்திரனும் இல்லா விட்டால் இவனுக்கு ஒளியாவது எது?' 'அக்கினி', 'அக்கினியும் இல்லாவிட்டால் இவனுக்கு ஒளியாவது எது?' 'ஒலி' யாகும். 'ஒலியும் இல்லாவிட்டால் இவனுக்கு ஒளியாவது எது?' இவ்விதமாகக் கேள்விகள் கேட்டுவிட்டு அவர் இறுதியாகத் தன்னுடைய சொந்த ஆன்மாவிற்கே திரும்பினார்.[1] மனம்தான் புறப் பொருள்களை அடையாளம் கண்டுகொள்கிறது. ஆனால் மனத்தின் பின்னணியில் ஒளிரும் ஆன்மா உள்ளது. அதனுடைய ஒளியில் நாம் மனத்திற்குள்ளேயே பொருட்களைக் கனவில்

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 4.3.2-7.

காண்கிறோம். நம் மனத்திற்குள்ளே பொருட்களைக் காணும் அந்த ஒளியைப்பற்றி நினைக்க வேண்டும். கனவில் பொருட்களை வெளிப்படுத்தும் அந்த ஒளியைப் பற்றி நினைக்க வேண்டும். அது என்ன ஒளி? அது ஆன்மாவாகும். ஆன்மாவானது தானே ஒளிர்வதாகும். அது தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறது. வேறு எதுவும் அதை வெளிப்படுத்தாது. அது மற்ற பொருட்களையும் வெளிப்படுத்துகிறது. வெளியிலுள்ள பொருட்கள் உள்ளே உள்ள மனம் சார்ந்த வடிவங்கள் போன்றவற்றையும் வெளிப்படுத்துகிறது. இந்தப் பொருட்கள் மறைந்தவுடன், தானே ஒளிரும் ஆன்மா மட்டுமே ஒளிர்ந்துகொண்டிருக்கும். விழிப்பு நிலை மற்றும் ஆழ்ந்த உறக்க நிலை என்னும் இவ்விரு நிலைகளுக்கும் நடுவில் நாம் ஏறத்தாழ ஒரு நொடி நேரத்திற்கு இந்தத் தூய்மையான ஆன்மாவாக இருக்கிறோம். நாம் விழித்துக் கொண்டிருக்கும் சமயத்திலும் அதை நிரந்தரமாக அடைய வேண்டும் என்பதுதான் நம் கடமைப் பொறுப்பு ஆகும். அதன் பிறகு அது ஒரு பொழுதும் இழக்கப்படுவது இல்லை.

உள்ளுணர்வை எப்படி எழுப்புவது?

அறிவு, உணர்வு மற்றும் உறுதி என்னும் மூன்று வகையான இயல்பான ஆற்றலைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதன்மூலம் நாம் மறக்கப்பட்டுள்ள உள்ளுணர்வு என்னும் ஆற்றலை நம்மிடம் வளர்த்துக்கொள்ள இயலும். முதலில் இந்த ஆற்றல்கள் அனைத்தும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். தூய்மைப்படுத்துவது கஷ்டமான செயல் ஆகும். அதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. முன்பு ஏற்பட்ட அனுபவங்களின் பதிவுகள் (ஸம்ஸ்காரங்கள்) அங்கு மறைந்து உள்ளன. அவற்றை அகற்றுவதற்கு நீண்டகாலம் ஆகும். சில பதிவுகள் உறுதியான முயற்சியால் அழிக்கப்பட வேண்டும். சில பதிவுகள், மற்ற பதிவுகளின் உதவியுடன் கட்டுப்படுத்தப்பட வேண்டும். வேறு சில பதிவுகள் மற்ற வடிவங்களாக மாற்றப்பட வேண்டும். மனத்திலேயே பதிவுகளாகச் சேகரிக்கப்பட்டுள்ள ஆற்றலானது, உயர்ந்த

வழிகளை நோக்கித் திருப்பப்பட வேண்டும். இது நிறை வெய்திய நிலை என்று அழைக்கப்படுகிறது. இங்கு கர்ம யோகத்தின் அவசியத்தை நாம் உணர்கிறோம். நீ வெறுப்பை விஞ்சி மேம்பட்டுவிட்டாய் என்று நினைத்துக் கொள்வதால், நீ அதனை விஞ்சி மேம்படுவது இல்லை. நீ அந்தக் கருத்தை நடைமுறைப் படுத்த வேண்டும். உன் வாழ்க்கையில் வெளிப் படுத்த வேண்டும். கருத்துக்கள் செயல்களாக மாற்றப்பட வேண்டும், நல்ல செயல்களின் விளைவுகள் மீண்டும் நல்ல பதிவுகளாக (ஸம்ஸ்காரங்களாக) சேகரிக்கப்படுகின்றன. இவை மனத்தைத் தூய்மைப்படுத்தி வலுப்படுத்துகின்றன. சில பதிவுகள் முறையாக ஒழுங்காகச் செய்யப்படும் ஜபம் மற்றும் தியானத்தால் மாற்றியமைக்கப் படலாம் அல்லது வெற்றி கொள்ளப்படலாம். தியானம் பல வகையான ஆற்றல் களை ஒருதரப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் உதவி செய்கிறது. உணர்தல், விருப்பப்படுதல் மற்றும் சிந்தித்தல் என்னும் மூன்று ஆற்றல்களின் தூய்மைப்படுத்துதல், ஒருங் கிணைத்தல், ஒருமுகப்படுத்துதல் எப்பொழுது அடையப்படு கிறதோ, அப்பொழுது உள்ளுணர்வு என்னும் ஆற்றலானது உணரப்படுகிறது. ஆன்ம ஒளியானது முதலில் கணநேரத் திற்கு ஒளிக்காட்சிகளாகவும் அதன் பிறகு ஒரே சீராக நிலைத்த ஒளிக்கதிராகவும் ஒளிரும்.

அதற்குப் பிறகு ஆன்மாவானது ஜீவனாக, மனத்தின் மூலம், புலன் உறுப்புக்களின் மூலம், உடலின் மூலம் செயல் படுகிறது என்று நாம் கண்டு கொள்கிறோம். ஸ்ரீசங்கரர், தக்ஷிணாமூர்த்தியைக் குருவாகத் துதித்து இயற்றியுள்ள அவருடைய புகழ்பெற்ற ஸ்தோத்திரத்தில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

'ஒரு பானையில் மறைந்துள்ள ஒளிக்கதிர்கள் அப்பானை யிலுள்ள பல துளைகளின் மூலம் வெளிப்படுவதைப் போல, ஆன்மாவானது தன்னைக் கண்களில் மூலமும், மற்ற புலன் உறுப்புக்களின் மூலமும் வெளிப்படுத்திக் கொள்கிறது. இது, 'எனக்குத் தெரியும்' என்னும் எண்ணத்தை உருவாக்கு கிறது. ஆன்மா தன்னை வெளிப்படுத்திக் கொண்டவுடன்

ஒவ்வொரு பொருளும் (அதாவது அறியப்பட்டுள்ளது) ஒளிர்கிறது. பரம்பொருளைத் தவிர வேறு யாரும் இல்லாத, தக்ஷிணாமூர்த்தி என்று அறியப்பட்டுள்ள அந்த ஆச்சாரியரை நமஸ்கரிக்கிறேன்.[1]

நாம் இந்த அனுபவத்தைப் பெறும்பொழுது நம்மால் உண்மையான ஆன்மாவிலிருந்து கருவிகளைப் பிரிப்பதற்கு இயலும், பிறகு இதற்கு முன்பு நாம் 'நான்' என்று அழைத்துக் கொண்டிருந்தது பொய்யான 'நான்' என்று தென்படுகிறது. பொய்யான நான் என்பது உடல், மனம், புலன்கள் போன்ற வற்றின் கூட்டாகும். உண்மையான ஆன்மாவானது இந்த அனைத்தின் பின்னணியில் அவற்றை ஒளிரச் செய்து கொண்டும் உணர்ச்சியூட்டிக் கொண்டும் உள்ளது. நம் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் ஒளிரும் ஆன்மாவை உணர்வதுதான் நம்முடைய தற்போதைய பணியாகும். அது தான் நம்முடைய உடனடியான நோக்கமாகும். இறுதியான இலட்சியம் என்பது ஐயத்திற்கு இடமின்றி, இந்த சிறு ஆன்மாவை வரையறைஅற்ற பரம்பொருள் அல்லது பிரம்ம னுடன் இடண்டறக் கலக்குமாறு செய்வது ஆகும். ஆனால் அந்தச் சிக்கல் இப்பொழுது எழாது. நாம் எங்கு இருக் கிறோமோ, அங்கிருந்து தொடங்குவோம். நாள்தோறும் செய்யும் ஜபம், தியானம், வாசித்தல் மற்றும் தன்னலமற்ற முறையில் கடமைகளைச் செய்து கொண்டும் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு முன்னேறுவோம்.

மூன்றுவகையான உடல்கள்

புலன்களால் அறியத்தக்க இந்த உடல் புலன்களால் அறியத்தக்க பருப்பொருளால் ஆக்கப்பட்டுள்ளது. இந்த

---

1. நானாச்சித்ரகடோதர ஸ்தித மஹாதீப ப்ரபா பாஸ்வரம்
ஜ்ஞானம் யஸ்ய து சக்ஷுராதி கரணத்வாரா பஹி: ஸ்பந்ததே ।
ஜானாமீதி தமேவ பாந்தமனுபாதி ஏதத்ஸமஸ்தம் ஜகத்
தஸ்மை ஸ்ரீகுரு மூர்த்தயே நம: இதம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயே ॥
—ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம், 4

உடல்தான் பிறப்பிற்கும், இறப்பிற்கும் ஆட்படுகிறது. நம் அனைவருக்கும் இந்தப் பரு உடலிலிருந்து வேறுபட்ட சூட்சும உடலும் மற்றும் ஒரு காரண உடலும் உள்ளது. பரு உடல் அழிந்தவுடன், எஞ்சியுள்ள மற்ற இரு உடல்களும் இன்னும் ஒரு இணையை வடிவமைக்கின்றன. புலன்கள் எந்த உடலைச் சார்ந்தவை? புலன்கள் என்று கூறும்பொழுது நாம் பரு உடலைச் சார்ந்த வெளியிலுள்ள புலனுணர்வு உறுப்புக்களான கண், காது போன்றவை என்று பொருள் கொண்டால் அப்பொழுது அவை பருஉடலைச் சார்ந்தவை ஆகும். ஆனால் புலன்கள் என்று கூறும்பொழுது நாம் கண்ணும், மற்ற வெளிப்புற உறுப்புக்களும் ஒரு சூட்சுமமான ஆற்றலால் கருவிகளாக இருக்கின்றன என்று பொருள் கொண்டால் அவை சூட்சுமமான உடலைச் சேர்ந்தவை ஆகும். காரண உடலானது சூட்சுமமான உடலின் ஆதாரத்தை யும் வடிவமைக்கிறது.

பரு உடல் அழிந்ததும் எதுவும் முடிவதில்லை. ஆன்மா வானது அதனுடைய எல்லா உணர்வுகளுடனும் விருப்பங் களுடனும், அது புலன்களால் உணரத்தக்க உடலில் கட்டுப் பட்டு இருந்ததைப் போன்றே இப்பொழுதும் உள்ளது. எனவே ஒருவர் இறப்பதறகு முன்பு அவை எல்லாவற்றி லிருந்தும் விடுபட வேண்டும். மரணம் ஒரு தீர்வு அல்ல. ஏனெனில் நான் கூறியிருப்பதைப்போல மரணத்துடன் எது வும் முடிவதில்லை. அது நம்மை மேம்படுத்துவதும் இல்லை. நம் மடமையைக் குறைப்பதும் இல்லை. வாழ்க்கைக்கும், மரணத்திற்கும் அப்பாற்பட்டுள்ள அந்த மூல தத்துவத்தை நாம் உணர வேண்டும். நம்மிடம் கண்ணை விட வேறுபட்ட ஏதோ ஒரு சக்தி உள்ளது. ஆனால் கண்ணின் மூலம் வெளிப் படுகிறது. காதைவிட வேறுபட்ட ஏதோ ஒரு சக்தி உள்ளது. ஆனால் காதின் மூலம் வெளிப்படுகிறது, மனத்தைவிட வேறுபட்ட ஏதோ ஒரு சக்தி உள்ளது. ஆனால் மனத்தின்மூலம் வெளிப்படுகிறது. மற்றும் அதே சக்திதான் தன்னை அதே போன்று, வேறுபட்ட கருவிகளின் மூலம் அல்லது புலன் உறுப்புக்களின் மூலம் வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஆழ்ந்த உறக்க நிலையில் புலன்களும், மனமும் காரண உடலில் உள்வாங்கிக் கொள்ளப்படுகின்றன. ஆனால் ஒருவர் அவருடைய விழிப்பு நிலைக்குத் திரும்பும் பொழுது அவர் அருடைய எல்லா விருப்பங்களுடனும், அடக்க முடியாத ஆசைகளுடனும், உணர்ச்சிகளுடனும் மற்றும் காமம், கோபம் வெறுப்பு போன்றவற்றுடன்தான் வருகிறார். மற்றும் எந்த ஆதாயத்தையும் பெற்று இருப்பதில்லை. இங்குதான் ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் ஆழ்ந்த உறக்கம், சமாதி மற்றும் ஆழ்ந்த உறக்கம் என்னும் இவைகளுக்கிடையிலுள்ள பெரிய வேறுபாடு உள்ளது. உண்மை தோற்றம் அளிக்கும் பொழுது அது நம்முடைய எல்லா விருப்பங்களையும் உணர்ச்சிகளையும் எரித்து விடுகிறது. ஒரு முட்டாள் சமாதி நிலையை அடைந்தால் அவன் ஞானமடைந்தவனாக மீண்டு வருவான். ஆனால் ஒரு முட்டாளால் சமாதி நிலையை அடையவே இயலாது!

வகைப்படுத்தப்பட்டுள்ள ஒரு முறையில் நமக்கு மூன்று உடல்கள் உள்ளன. மற்றொரு முறையில் நமக்கு ஐந்து கோசங்கள் உள்ளன. பொதுவாக நாம் பருஉடலைத்தான் அதிக மாக உணர்கிறோம். சூட்சுமமான மற்றும் காரண உடல்களின் பால் உள்ள எல்லா உணர்வுகளையும் இழக்கிறோம். ஒவ் வொரு மனிதனும் பெற்றுள்ள வேறுவகையான உடல்களைக் குறித்த கருத்தை உருவாக்க இயலுமா? நாம் உண்மையாக உள்முக நோக்கு உடையவர்களாக இருந்தால், மனத்தின் வெளிப்புறமாகச் செல்லும் இயல்புகளை நிறுத்தி, அதைத் திருப்பி உள்முகமாகச் செலுத்தினால் கண்டிப்பாக இயலும். வாழ்க்கையின் தத்துவமானது உடலுடன் தொடர்புபடுத்தப் பட்டு இருக்கும் வரையில் ஒவ்வொரு அணுவும் அதனால் உயிர்ப்பிக்கப்படுகிறது. உடலில் நாம் விசையுடன் தொடர்பு கொள்கிறோம். விசை என்றால் ஆற்றல் ஆகும். மற்றும் அது அதிர்வலையைக் குறிக்கிறது. நாம் மேலும் முன்னேறும் பொழுது நாம் மற்றொரு வகையான விசை அல்லது அதிர்வலையுடன் தொடர்பு கொள்கிறோம். எண்ணங்கள் உணர்ச்சிகள் போன்றவை ஆகும். இவ்விதத்தில் நாம்

நம்முடைய தனித்த தன்மையானது ஒருவிதத்தில் அதிர் வலைகளின் கூட்டுறவு என்று கண்டு கொள்கிறோம். சில நேரங்களில் நம் மனங்களில் மிகவும் குழப்பம் நிறைந்த எண்ணங்கள் தோன்றுகின்றன. அதன் பிறகு நாம் கொதித்துக் குமுறிக் கொண்டுள்ள அதிர்வலைகளின் தொகுதியாக ஆகி விடுகிறோம். நம் உடலானது அதில்தான் இடம்பெற் றுள்ளது. மேலும் முன்னேறும்பொழுது நம்மால் மனத்தை அமைதிப்படுத்த இயலுமாயின், நாம் நம்முடைய விழிப்பு நிலையை உணர்கிறோம். தூய்மையான விழிப்புணர்வு நிலையை அல்ல. இயல்பாக, ஒருவகையான வெவ்வேறு இயல்புகள் கலந்த விழிப்புணர்வு நிலையாகும். அதில் இந்த குழப்பமான உணர்வுகளும், உணர்ச்சிகளும் கலந்துவிடு கின்றன. உறுதிப்பட்ட விழிப்புணர்வு நிலையில் 'நான்' என்பது முதன்மையான காரணக் கூறாக உள்ளது. இதைக் கருவியின் விழிப்புணர்வு நிலை என்பதிலிருந்து வேறுபட்ட தாக இயக்கியின் (agent) விழிப்புணர்வு நிலை என்று கூற லாம். அதாவது மனமும் மற்றும் புலன்களும் ஆகும். இதுவே அனுபவத்தால் அறியப்படும் 'நான்'. அது தைஜஸன் என்று கூறப்படுகிறது. மற்றும் இந்த இயக்கியிலிருந்து வேறு பட்டதான தூய்மையான விழிப்புணர்வு நிலை உள்ளது. அதாவது தூய்மையான தனிப்படுத்தப்பட்ட விழிப்பு உணர்வு நிலை உள்ளது. தன்னை எல்லாவிதமான அறிவு மற்றும் எல்லாவிதமான உணர்வுகள் வழியாக வெளிப்படுத்திக் கொள்கிறது. மாண்டூக்ய உபநிஷதம் அதை 'ப்ரஜ்ஞன்' என்று கூறுகிறது.[1]

தனிமனிதனும் மற்றும் இயலுலக அண்டமும்

தனிப்பட்ட தன்மையுடன் விளங்கும் இந்த விழிப் புணர்வு நிலையை அடைந்த பிறகு, ஒருவர், இந்த தனிப் பட்ட தன்மையுடன் விளங்கும் விழிப்புணர்வானது வரை யறையற்ற, மாறாத தன்மையுடைய அல்லது பிரம்மனின் ஒரு

---

1. மாண்டூக்ய உபநிஷதம், 4,5.

பகுதி என்றும் கண்டு கொள்கிறார். அன்றியும் நாம் தன்னைத் தானே உள் ஆராய்வு செய்துகொள்பவராக இருக்க வேண்டும் மற்றும், தன்னை உணரும் மன ஆற்றல் கொண்டவராகவும், சிந்திப்பவராகவும் இருக்க வேண்டும். சிலர், தனிப்பட்ட தன்மையுடன் விளங்கும் விழிப்பு உணர்வு நிலையை அடைந்த பிறகே, இயலுலக அண்ட விழிப்புணர்வுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்கின்றனர். மற்றும் வேறுசிலர், இயலுலக அண்ட விழிப்புணர்வை எல்லா நேரங்களிலும், எல்லா நிலைகளிலும் நினைக்க முயற்சி செய்கின்றனர். ஏனெனில் தனித்த தன்மையானது பல்வேறுபட்ட மட்டங்களில் இயலுலக அண்டத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

நான் என்னுடைய உடலின் உண்மையான இயல்பைக் குறித்து நினைக்க முயற்சி செய்தால், அது மற்ற அனைவரின் உடல்களும் இருப்பதைப் போன்றே வரையறையற்ற பருப்பொருள் என்னும் பெருங்கடலில் ஒரு பகுதி என்று கண்டு கொள்கிறேன். பருஉடலிலிருந்து நான் பிராணனால் ஆகியிருக்கும் உடலிற்கு வருகிறேன். இங்குள்ள உயிர்நிலையான ஆற்றலானது, இயலுலக அண்டத்தின் உயிர்நிலையான ஆற்றலின் ஒரு பகுதி என்று உணர்கிறேன். அதன் பிறகு எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளின் பகுதிக்கு வருகிறேன். என் எண்ணங்களின், உணர்ச்சிகளின் பகுதி என்று உணர்கிறேன். இதைப் போன்றே, என்னுடைய விழிப்புணர்வானது, இயலுலக அண்டத்தின் விழிப்புணர்வின் ஒரு பகுதியாகும். மனமும் புலன்களும் அதனுடைய கருவிகள் ஆகும். இறுதியாக நான் என்னுடைய தூய்மையான, தனித்த தன்மையுடன் உள்ள விழிப்புணர்வு நிலையானது, பிரம்மனின் தூய்மையான தனித்த தன்மையுடன் உள்ள விழிப்புணர்வு நிலையின் ஒரு பகுதி என்று உணர்கிறேன். இந்த ஒப்புயர்வற்ற விழிப்புணர்வு நிலைதான் நம்முடைய எல்லாச் செயல்களுக்கும், எண்ணங்களுக்கும் பின்னணியில் இருந்து கொண்டு அவ்வனைத்திற்கும் உயிர்த் தோற்றத்தை அளிக்கிறது. எனவே நம்முடைய தனித்தன்மையானது பலதிறப்பட்ட

கூட்டொருமை ஆகும். நாம் அதைப் பருஉடல் சார்ந்த தன்மையைக் கடந்து சென்று, சூட்சுமமான தன்மை, மேலும் சூட்சுமமான தன்மைகளைப் பகுத்து ஆராய வேண்டும். சில நேரங்களில் ஒருவர் உண்மையாகவே தன்னைத்தானே உள் ஆராய்வு செய்து கொள்பவராக இருந்தால் அவர் எண்ணங் களின் தொகுதியாக ஆகியிருப்பதை, அவருடைய உட லானது எண்ணங்களின் மடுவில் மிதப்பதை உணர இயலும்.

பொதுவாக நாம் நம்மை உடலுடன் அடையாளம் கண்டு கொண்ட விதமும் மற்றும் அதன் புறத்தோற்றத்தைக் காணும் விதத்தானாலும், அது சதை மற்றும் எலும்பைத் தவிர வேறு எதுவாலும் செய்யப்படவில்லை என்று கற்பனை செய்வதற்குக் கூட மிகவும் கஷ்டமாக உள்ளதைக் காண் கிறோம். இன்னும் அதிகமான நுட்ப உணர்வு வேண்டும். மற்றும் நம்மை நாமே ஆராய்ந்து கொள்வதற்கு இணங்காமல் இருப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். எல்லா சூட்சும மான தன்மைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள நாம் ஒரு உயர்ந்த உணர்வு நிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நாம் மேம்பட்ட மெய்யுணர்வு நயத்தை வளர்த்துக் கொண்டால் நாம் நம்முடைய தனித்தன்மைகளை எண்ணங் களின் ஒரு இணைவு ஆக, விருத்திகளின் கட்டாக உருமாற்றிக் கொள்ளலாம். மற்றும் எப்படியிருந்தாலும் எண்ணம் என்பது சூட்சுமமான பருப்பொருளைத் தவிர வேறு எதுவும் இல்லை. மற்றும் அது புலன்குறித்த செய்தியைச் சார்ந்தது ஆகும். ஒருபொழுதும் முழுமுதற்பொருளையோ அல்லது புலன் சாராத தூய அகநிலை அறிவுணர்வால் உணரப்படும் கருத்துப்படிவமும் அல்ல. தொடக்கத்தில், நம்முடைய தனித் தன்மை என்பது செந்தழலாக தகதகக்கும் இரும்பு உருளை யைப் போன்றதாகும். அதில் இரும்புப் பந்தும், சிகப்பு ஒளியும் பிரிக்க இயலாதவை போலத் தோற்றமளிக்கும். ஆனால் அவைகளைப் பிரிக்க இயலும். அவை உண்மையில் ஒன்றுபட்டவை அல்ல. சில நேரங்களில் ஒருவர், இந்த தூய விழிப்புணர்வின் இருப்பானது உடலிலிருந்து மாறுபட்டது என்றும் நினைக்கலாம். சில நேரங்களில் ஒருவர் மிகவும்

மேம்பட்ட நிலையில் ஆழ்ந்து இருக்கும்பொழுது அவர் தன்னை உடல் மற்றும் மனத்திலிருந்து வேறுபட்டவராக உணரக் கூடும்.

நம்முடைய எல்லா உணர்ச்சி வேகங்களும், உணர்வு களும் உடலின் மூலப்பண்புக் கூறை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஒரு ஆன்மீக அனுபவம் ஏற்பட்ட பிறகு, நமக்குத் தொடர்ந்து உறவுகளும், உணர்ச்சி வேகங்களும், உணர்வுகளும் இருந்து கொண்டு உள்ளன. ஆனால் அவைகள் அதற்குப்பின் உடலுடன் தொடர்பு கொண்டனவாக இருப்பது இல்லை. நாம் உடல் உணர்வைத் தாண்டி மேலே உயர்ந்தாலும் நாம் ஒருவருடன் ஒருவர் முழுமையின் பகுதி களாகக் தொடர்புபடுத்தப்பட்டிருப்போம். மற்றும் இந்த உறவானது கணவன்-மனைவி, பெற்றோர் குழந்தைகள், சகோதரர்கள்-சகோதரிகள் மற்றும் நண்பர்களுக்கும் இடை யிலுள்ள உறவைவிட மிகவும் நெருக்கமானது ஆகும்.

ஒருவர் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடையும் பொழுது மேலும் மேலும் ஒருவகையான மனம் சார்ந்த ஊடுகதிரை (X-ray) வளர்த்துக்கொள்கிறார். அது தெளிவான முறையில் பகுத்து ஆராய்வதற்கு மிகவும் தேவையானதாகும். பிறகு நாம் பொருட்கள் மற்றும் உறவுகளின்மூலம் பார்ப்பதற்குக் கற்றுக் கொள்கிறோம். அதன்பிறகு நம்மை நம்முடைய கட்டுப்பாடற்ற மனத்தால் ஏமாற்றமடையச் செய்வதற்கு அனுமதிப்பதில்லை. ஒருவர் இந்த மனம் சார்ந்த ஊடு கதிரைத் தன்னுள்ளேயே செலுத்தி ஒருவருடைய உண்மை யான இயல்பைக் கண்டு கொள்ள வேண்டும்.

ஒரு உண்மையான இயலுலக அண்ட உணர்வு எப் பொழுதும் மற்றவர்களை நாம் உடமையாக்கிக் கொள்ள விரும்பும் பிடியைத் தளர்த்துகிறது. ஆனால் பொதுவாக நாம் என்ன செய்கிறோம் என்றால் நமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மற்றவர்களை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம். கண்ணிற்குத் தெரியும்படியாகவோ அல்லது சூட்சுமமாகவோ செய்கிறோம். நம்முடைய எல்லாத்

துன்பங்களும், செயல்குலைவுகளும், ஏமாற்றங்களும் இதிலிருந்தே தோன்றுகின்றன. ஆன்மீகப் பயிற்சியின் சரியான வழியைப் பின்பற்றி, என்ன ஆயினும் தவறாமல் முயற்சியைக் கைவிடாமல் இருப்பின் ஆன்மாவிற்கு அதை வரையறைக்கு உட்பட்ட துணைப் பொருட்களிடமிருந்து விடுவித்துக் கொண்டு, பரம்பொருளை அடைந்து உலகளாவிய பேருயிரிடம் அதற்கு உள்ள நிலைத்த தொடர்பை உணர இயலும். ஸ்ரீராமகிருஷ்ணர், 'ஆராய்ச்சி செய்து பார்க்கும் பொழுது, நான் அது, இது எல்லாம் இல்லாமல் போய் விடுகிறது. வெங்காயத்தின் சிவப்பான முதற்தோலை உரித்தால் வெள்ளைத் தோல் வருகிறது. இப்படி உரித்துக் கொண்டே போனால் உள்ளே ஒன்றையும் காண முடிவதில்லை'[1] என்று கூறுவார்.

ஒருவர் அவருடைய தனிப்பட்ட விழிப்பு உணர்வு நிலையை விடாமல் தக்க வைத்துக் கொண்டே, இயலுலக அண்ட விழிப்புணர்வுடன் தொடர்பு கொள்ள இயலும். மற்றும் ஒருவர் அதைச் செய்யவில்லை எனின், அறிவு எல்லைக்கு அப்பாற்பட்ட விழிப்புணர்வு நிலையை அவரால் அடைய இயலுமா? என்னும் கேள்விக்கே இடமில்லை. ஒருவர் படிப்படியாக மிக உயர்ந்த உண்மையை உணர்வதற்கு முன்னேறிச் செல்ல வேண்டும். பரம்பொருளைப்பற்றி வீணாகப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை. வியக்கத்தக்க ஊகக் கோட்டைகளிலும், கற்பனைகளிலும் சிறகடித்துப் பறப்பதாலும் எந்தப் பயனும் இல்லை.

நம்முடைய தற்போதைய நிலையை விஞ்சி மேம்படுவதற்கு விழிப்புணர்வுடன் கூடிய முயற்சிகளைக் கைக்கொள்ள வேண்டும். அதன்பிறகு நாம் முன்னேறும் பொழுது, கீழ் மட்டங்களில் உள்ள முரண்பாடுகள் அகன்றுவிடும். ஆனால் மேல் மட்டங்களில் முரண்பாடுகள் இருக்கும். மிக உயர்ந்த மட்டத்தை அடையும் வரையிலும் போராட்டங்களும், முரண்பாடுகளும்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.148.*

தொடர்ந்து கொண்டு இருக்கும். நாம் எல்லா நிகழ்வுகளுக்கும் எப்பொழுது இரண்டாம் அல்லது மூன்றாம்பட்ச உண்மைகள் என்ற நிலையை வழங்குகிறோமோ, அப்பொழுது இந்த நிகழ்வுகள் உள்ள உலகத்தால் பாதிக்கப் படாமல் இருக்கலாம்.

இயற்பொருள் சார்ந்த உலகின் தன்மை

உன்னுடைய விழிப்புணர்வின் காட்சிப் பொருளாக எது இருப்பினும் அது மாயையாகும். மற்றும் நீ அறிபவரை அறியப்படுவதிலிருந்தும், காண்பவரைக் காணப்படுவதிலிருந்தும் மற்றம் சாட்சியை அவர் காணும் எல்லாப் பொருட்களிடமிருந்தும் பிரிக்க வேண்டும். உணர்பவரை உணரப்படுவனவற்றிலிருந்து பிரிக்க வேண்டும். ஆன்மீகப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இரக்கமற்ற முறையில் தன்னைத்தானே பகுத்து ஆராய்ந்து கொள்வதும் மற்றும் தெளிந்த சிந்தனையும் இருக்க வேண்டும்.

புறப்பொருள் இருக்கிறது. ஆனால் நமக்கு அதனுடைய உண்மையான இயல்பைப் பற்றித் தெரியாது என்பது ஜெர்மனியைச் சேர்ந்த தத்துவஞானியான கான்ட் (Kant) என்பவரின் கருத்து ஆகும். நாம் அதைக் காணும் பொழுது, காலமும், அம்பரமும் (spcae) அந்தப் பொறிக்காட்சிக்கு எதையோ பங்களிக்கின்றன. கான்ட் எதை அம்பரம் காலம் மற்றும், காரண காரியத் தொடர்பு என்று கூறுகிறாரோ அதை வேதாந்தம் மாயை என்று அழைக்கிறது. மற்றும் அது கடக்கப் பட வேண்டும். அதைக் கடப்பதற்கு கான்ட் அவர்களுக்கு எந்த வழியும் தென்படவில்லை. எனவே அவர், 'thing-in-itself' 'வஸ்து' தன்னிலையிலேயே அதை ஒருபொழுதும் அறியவே இயலாது என்று கூறியுள்ளார். வேதாந்தத்திற்கு அதற்குரிய வழிமுறை தெரியும். மற்றும் அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அது உனக்குக் கூறுகிறது. கான்டிற்கு, காரண காரிய தொடர்புள்ள உலகத்தையும், மனத்தையும் கடந்து செல்வதும் மற்றும் காண்பவரைக் காணப்படுவதிலிருந்து தனியாகப் பிரிப்பதும் இயலக் கூடிய

செயல் என்பது தெரிந்திருக்கவில்லை. கான்ட் விட்ட இடத்திலிருந்து வேதாந்தம் தொடங்குகிறது.

இயற்பொருட்கள் எப்பொழுதுமே புலப்படுபவை ஆகும். அவை ஒன்று அல்லது மற்றொரு புலன் உறுப்பால் உணரப்படுகின்றன. புலன் உறுப்புக்களே மனத்திற்குப் புலப்படுபவையாகும். மனது, தன்முறையில் ஆன்மாவிற்குப் புலப்படுவதாக ஆகிறது. ஆன்மா எப்பொழுதுமே சாட்சியாக உள்ளது மற்றும் அது ஒருபொழுதும் உணரப்படுவதாக ஆகாது. ஏனெனில் இது ஒரு எல்லையற்ற பின்னோக்கிச் செல்வதற்கு உரிய காரணம் ஆகும். நாம் எங்காவது நிற்க வேண்டும்.

வேதாந்தத்தில் விழிப்புணர்வானது எப்பொழுதும் வலியுறுத்தப்படுகிறது. பருப்பொருள், ஆன்மா, மனம், சடப்பொருள் என்னும் இவ்வனைத்தும் விழிப்புணர்வில் இருக்கின்றன. நாம் இந்த உண்மையை ஒருபொழுதும் மறக்கக் கூடாது. இல்லையெனின், எல்லாவற்றையும் குளறு படி செய்து, உண்மையான ஆய்வின் அடிப்படையை மறந்து விடும் அபாயம் உள்ளது. ஆழ்ந்த உறக்கத்தில் விழிப்புணர்வு உள்ளது. தூக்கத்திலிருந்து எழுந்ததும் நாம் 'எனக்கு எதுவும் தெரியாது' என்று கூறுகிறோம். ஆனால் 'எனக்கு எதுவும் தெரியாது' என்று நம்மைக் கூற வைப்பதற்கு, உறங்கும் பொழுது விழிப்பு உணர்வு இருந்திருக்க வேண்டும். எனவே விழிப்பு உணர்வு இல்லாத ஒரு நேரத்தை ஒருவரால் உறுதிப் படுத்த இயலாது.

ஒரு மனிதன் எப்பொழுது அவனை விட வேறுபட்ட ஏதோ ஒன்று உள்ளது என்று நம்புகிறானோ, அப்பொழுது ஏதோ ஒன்றை, எதுவாக இருப்பினும் அடைவதற்கு ஒரு விருப்பம் கொள்கிறான். அத்தகைய விருப்பம் உள்ளது என்னும் உண்மையே அவனிடம் ஏற்கனவே அவன் ஒரு ஆன்மா என்னும் கருத்து தோன்றியுள்ளது மற்றும் அவனைத் தவிர மற்ற அனைத்தும் அவனுக்குப் பருப்பொருள் என்பதற்கு விளக்கச் சான்றாக உள்ளது. எனவேதான் ஞானமடைந்த

மனிதனுக்கு முற்றிலும் விருப்பங்களே அற்ற நிலையானது பல்வகைப்பட்ட திறங்கள் நிறைந்த உண்மையாக உள்ளது. அவனுக்கு அவன்மீது முழுமையான கட்டுப்பாடு உள்ளது. அத்தகையவன், இரண்டாவது இல்லாத ஒருமையை உணர்ந்திருப்பதால் அவன் விரும்புவதற்கு எதுவும் இல்லை. மற்றும் அத்தகைய மனிதனுக்குக் காட்சிப் பொருட்களே இருப்பதில்லை.

உண்மையும், தோற்றமும்

இப்பொழுது எதிர்மறையாகத் திருகாணியானது கழற்றப்பட வேண்டும். பரிணாம வளர்ச்சி மற்றும் மேல் அடுக்கப்பட்ட முறைக்குப் பிறகு வருவது, காரணம், உள்முகமாக நோக்குதல் அல்லது மேல் அடுக்கப்படுவதை அகற்றுவதற்கு திரும்பிப் போகும் முறையாகும். முதலில் துப்புரவு, தூய்மையுடன் கூடிய ஆயத்தப்படுத்திக் கொள்ளும் வாழ்க்கை முதலில் வருகிறது. மனத்தில் தூய்மைக் கேடு இருக்கும் வரையிலும் பிரதிபலிப்பவர் (Reflector) விழிப்புணர்வின் ஒளியை முறையாகவும், முழுமையாகவும் ஒரு பொழுதும் பிரதிபலிக்க இயலாது. மற்றும் நம் மனம்தான் அந்த பிரதிபலிப்பவர் ஆகும். அதனால்தான் மனமானது மீண்டும் சரியானமுறையில் ஒளியைப் பிரதிபலிப்பதற்குத் தொடங்குவதற்கு முன்பே அங்குள்ள அழுக்கும், குப்பையும் நிறைந்த எல்லா அடுக்குகளும் அகற்றப்பட வேண்டும். குறைபாட்டுடன் பிரதிபலிக்கப்பட்டுள்ள ஒளிதான் நம்மிடமுள்ள முழுமையான சிக்கல் ஆகும். அது உண்மையை உருச்சிதைத்துக் காட்டி மற்றும் மருட்சியையும், மயக்கத்தையும் தோற்றுவிக்கிறது.

ஒரு வேதாந்தி, உயிர்களின் பரிணாம வளர்ச்சியை வாழ்க்கையின் ஒரு கட்டமாக நம்புகிறான். ஆனால் ஒரு பொழுதும் அதுதான் இறுதியான இலட்சியம் என்று நம்புவதில்லை. அவனுக்கு இந்தப் பரிணாம வளர்ச்சியேகூட வெறும் தோற்றமாக, மாயையாகத் தென்படுகிறது. இறுதியான உண்மையாகத் தென்படுவது இல்லை. அதனால் நாம்

எப்பொழுதாவது பரிணாம வளர்ச்சியைப்பற்றிப் பேசினால் கூட, அது ஏதோ ஒரு மனப்பாங்கின் பொருளிலேயே உள்ளது. ஒரு முழுமையான உண்மையாக அல்ல. முழுமுதற் பொருளுக்கு பரிணாம வளர்ச்சி என்று எதுவும் இல்லை. எல்லா மாறுதல்களுக்கும், மாறுபாடு அற்ற நிலைத்த ஆன்மா தான் சாட்சியமாகும்.

வெறும் தோற்றமானது உண்மையாக உள்ளது. மற்றும் உண்மையானது உண்மையற்றதாக இருப்பதுதான் நம்மிடம் உள்ள முழுமையான சிக்கலாகும். உண்மையாக இது மிகவும் நகைப்பிற்கிடமான நிலையாகும். முட்டாள்களாக இருக்கும் நாம் அதற்குரிய விலையாகத் துன்பத்தையும், வேதனையை யும் அளித்துக் கொண்டு இருக்கிறோம். மற்றும் மயக்கங்கள் நீங்குவதற்கு முடிவே இல்லை. தவறாக அடையாளம் கண்டு கொள்ளப்படும் அனைத்தும் தகர்க்கப்பட வேண்டும். தொடக்கத்தில் இவ்வனைத்தும் வேதனை நிறைந்ததாக இருக்கும். வேதனையானது போற்றுவதற்கு உரியது ஆகும். ஏனெனில் வேதனைதான் விடுதலை மற்றும் பேரின்பத்தின் முன்னோடியாக உள்ளது. உலகின் இருளானது கடவுளால் ஒளிரச் செய்யப்படுகிறது. ஆனால் நமக்கு கடவுளின் உண்மை இயல்பு தெரியாது. மற்றும் கடவுளின் ஒளியையும் காண்பது இல்லை. இருப்பினும் மங்கலாகப் பிரதிபலிக்கப் படும் ஒளியின் உதவியுடனேயே நாம் வாழ்கிறோம் மற்றும் செயல்படுகிறோம்.

அத்வைத வேதாந்தத்தில் பரிணாம வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் ஏதோ ஒன்று, ஏதோ ஆகிறது என்னும் கேள்விக்கே இடமில்லை. அது பால் தயிராவதைப் போன்றது அல்ல. அப்பொழுது அது அதனுடைய உண்மை இயல்பை இழந்து விடும். ஆனால் கயிறு பாம்பாக ஆவதைப்போல ஆகும். இங்கு, கயிறு, உண்மையாக எந்த மாற்றத்தையும் அடைவது இல்லை. ஆனால் கயிறு பாம்பாகத் தவறாகக் கருதப்பட்டபொழுது, அது உண்மையான ஒரு பாம்பின் எல்லாச் சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது. பயம் போன்ற வற்றை ஏற்படுத்துகிறது. அதைப் போலவே உண்மை

அற்றதை உண்மையாகக் கருதும் பொழுது, நாம் நமக்கு முடிவற்ற சிக்கல்களை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

நாம் விழித்துக் கொள்ளாமல் இருக்கும் வரைக்கும் கனவுலகமானது நமக்கு உண்மையானதாகத் தோற்றமளிக்கிறது. ஆன்ம தரிசனம் ஆகாத வரையிலும் நமக்கு உண்மையானதாகத் தென்படுகிறது. மற்றும் நம் விழிப்பு நிலையும், நம் கனவு நிலையைவிட மேலான உண்மையாக இருப்பதில்லை. இரண்டுமே சமமான அளவில் உண்மையற்றதாகும்.

'உண்மையற்ற' என்னும் சொல் தவறாகப் புரிந்து கொள்ளப்படக்கூடாது. பாம்பின் தோற்றத்திற்கு ஒரு காரணமும் இல்லை என்பதால் ஒரு கயிற்றைப் பாம்பு என்று உணர்வது தவறு என்று கூற இயலாது. கயிறானது அடித்தள அமைப்பாக உள்ளது. அதன்மீது பாம்பு என்னும் கருத்தானது வைக்கப்படுகிறது. வெறும் பொருளற்ற நிலை என்னும் உணர்வில் மாயையானது பொய்த் தோற்றம் அன்று. எப்படி மாறுபாடு அற்ற ஒரு பரம்பொருள் (பிரம்மம்) பல உருவங்கள் உள்ள உலகமாகத் தோன்றுகிறது என்பதை விளக்குவதற்காக உருவாக்கப்பட்ட சொல் ஆகும். புத்த சமயம் கூறும் நிர்வாணம் என்பதும் ஒன்றுமற்ற தன்மையைக் குறிப்பிடவில்லை. நிர்மூலமாக்குதல் என்பது உணர்வு அனுபவமும், வருத்தமும் அற்ற நிலையின் அழிவைக் குறிக்கிறது. எந்த ஒரு பொருளின் நிர்மூலத்தைப் பற்றிய அறிவு பெறுவதற்குக்கூட ஒரு உணரும் சாட்சி வேண்டியுள்ளது. அதுதான் ஆன்மா ஆகும். ஏதோ சில உணர்வுகள் இல்லாமல் நிர்மூலத்தைப் பற்றி ஒன்றும் அறிந்து கொள்ள இயலாது. நிர்வாண நிலையில் புத்தர், 'நிர்மூல'மாகியிருந்தால், அவரால் எப்படி அவ்வளவு ஆண்டுகள் போதித்து இருக்க இயலும்? வேதாந்தம் ஒரு விதமான மேம்பட்ட புறவாய்மை இயல் (Realism) ஆகும். இருப்பினும் வேதாந்தத்தில் கருத்தியற்கோட்பாட்டிற்கும் (Idealism) புறவாய்மை இயலிற்கும் இடமுள்ளது. பொதுவாக எப்படிப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளனவோ அவ்விதத்தில் இவைகளுக்கு வேதாந்தத்தில் இடம் உண்டு.

இருப்பும் (வாழ்வும்), விழிப்புணர்வும்

'சத்' அல்லது உண்மையானது, கடந்த காலத்தில் இருந்தது. நிகழ்காலத்தில் இருக்கிறது. எதிர்காலத்திலும் அது தன்னுடைய இயல்பை எப்பொழுதும் மாற்றிக்கொள்ளாமல் அல்லது எப்பொழுதும் எத்தகைய படிமாற்றத்திற்கும் ஆட் படாமல் தொடர்ந்து இருப்பது ஆகும் என்று விவரிக்கப் படுகிறது. இந்தத் தகுதியை நிறைவு செய்யாத எந்த ஒன்றும் அசத் அல்லது உண்மையற்றது என்னும் நிலைக்கு உட்பட்டு உள்ளது. 'அசத்' என்பது முற்றிலும் இல்லாத ஒன்றாக இருக்காது. ஏதாவது ஒன்று சிலகாலத்திற்கு இருந்துவிட்டு பிறகு மீண்டும் மறைந்து அல்லது ஏதாவது மாற்றத்தை அடைந்தால் அது 'அசத்' என்னும் வகையினத்தைச் சார்ந்த தாகக் கருதப்படுகிறது. புலன்களால் அறியத்தக்க இந்த உலக மானது எத்தகைய விதிவிலக்குமின்றி அத்தகைய ஒன்றாகத் திகழ்கிறது. சில பொருட்கள் முற்றிலும் உண்மையற்றவை. எத்தகைய சூழ்நிலைகளிலும் எந்தக் காலத்திலும் இருக்க இயலாதவை ஆகும். உதாரணத்திற்கு மனக்கோட்டைகள், முயற்கொம்புகள் மற்றும் மலடியின் மகன் போன்றவற்றைக் கூறலாம். இந்தச் சொற்கள் எத்தகைய பொருளையும் தெரியப் படுத்துவது இல்லை. மற்றும் உண்மையான எதிரிணையும் இல்லை. நாம் மனக்கோட்டையைக் கற்பனை செய்யலாம். ஆனால் நம்மால் அதில் ஒருபொழுதும் வாழ இயலாது. இவைகளிலிருந்து வேறுபட்ட சில பொருட்கள் உள்ளன. அவற்றை அனுபவத்தால் அறியப்படுபவை என்னும் வகை யினத்திற்கு உட்படுத்தலாம். பரம்பொருளை உணர்ந்தால் தான் அவற்றை உண்மையற்றவை என்று மெய்ப்பிக்க இயலும். புலன்களால் அறியத்தக்க நாம் உணரும் இந்த உலகமானது அனுபவத்தால் அறியப்படுபவை என்னும் வகையினத்திற்கு உட்பட்டதாக விளங்குகிறது. மிக உயர்ந்த உண்மை உதயமாகும் வரையிலும் அது தொடர்ந்து நீடிக் கிறது. அதனுடைய ஒளியானது, புலன்களால் அறியத்தக்க இந்த உலகத்தின் நிழலைக்கூட மறையச் செய்து விடுகிறது. நம்முடைய சொந்த குறிப்பிடத்தக்க இருப்பின் நிழலையும்

மறையச் செய்து விடுகிறது. இந்த மிக உயர்ந்த ஞானத்தை அடைந்த பிறகு, ஞானமடைந்த மனிதன், கண்களால் உணரத் தக்க உலகத்தின் மட்டத்திற்கு இறங்கி வரும்பொழுது, அவன் இந்த முழுமையான புலன்களால் அறியத்தக்க இருப்பைக் காண்கிறான். ஆனால் அதை ஒரு நிழலாகக் கருதுகிறான். அதை உண்மை அற்றது. அதற்கு உண்மையான முழுமை யான இருப்பு கிடையாது என்று அறிந்துகொள்கிறான்.

நம்முடைய இயல்பில் இறுதியான மெய்ம்மையாக உள்ள அந்த விழிப்புணர்வு உள்ளது. அது அனுபவத்தால் அறியப்படும் உண்மை என்பதன் கீழ்வரும் விழிப்புணர் வுடன் கலந்து உள்ளது. எனவே நம்முடைய பொதுவான விழிப்புணர்வானது, தூய்மையான விழிப்புணர்வு மற்றும் அதனுடைய தொடர்புடைய பருஉடல்-நுண்உடல் விழிப் புணர்வின் கூட்டு இணைவு ஆகும். நாம் எந்த அளவிற்குப் புலன் குறித்த உணர்வுகளை விலக்குகிறோமோ, அந்த அளவிற்கு நாம் ஆன்மீக இயல்புடையவர்களாக ஆவோம். இந்த உலகம் சார்ந்த நம்முடைய அனுபவத்திற்கும் மற்றும் பரம்பொருளைச் சார்ந்த நம்முடைய அனுபவத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு, புலன்களால் அறியத்தக்க உலகத்தின் பக்கத்தில் இல்லை. எல்லாச் சூழ்நிலைகளிலும் முழுமையான நிலையிலும், தொடர்பு கொண்டுள்ள நிலை யிலும் தொடர்ந்து நிலைத்து இருப்பதன் பக்கத்தில் உள்ளது. நம்முடைய விழிப்புணர்வானது முற்றிலும் தவறானது அல்ல. அது உண்மைக் கூறு மற்றும் பொய்யான கூறையும் உள்ளடக்கிக் கொண்டு உள்ளது. இரண்டாவதாக கூறப்பட் டுள்ளது, முழுமையான தன்னைப் பலவகைகளாக வெளிப் படுத்திக் கொண்டுள்ள பரம்பொருளை உணர்வதன் மூலம் நீக்கப்பட வேண்டும்.

முதலில் சாதகன் பலவற்றைக் காண்கிறான். அதன்பிறகு அவன், பலவற்றிலும் உள்ள முழுமையைக் காண முயற்சி செய்கிறான். முழுமை மற்றும் பற்பல என்னும் இரண்டுமே உண்மையாகக் காட்சி அளிக்கின்றன. பிறகு மேலும் முன்னேறி முழுமை மட்டுமே உண்மையானது என்று

உணர்கிறான் மற்றும் புலன்களால் உணரத்தக்க உலகத்திற்கு இரண்டாம் பட்ச உண்மை நிலையே உள்ளது. அது முற்றிலும் முழுமையின் இருப்பையே சார்ந்து உள்ளது என்று உணர்கிறான்.

வேதாந்தமானது தன் இயல்பைக் குறித்து ('நான்' என்னும் உணர்வு) ஆராய்வதில் தொடங்குகிறது. அது இரண்டாவது அற்ற ஒருமையை அடைவதில் முடிகிறது. இந்த இரு நிலைகளுக்கும் இடையில் பல இடைப்பட்ட விழிப்புணர்வு நிலைகள் உள்ளன. சாதகனின், 'நான்' என்னும் உணர்வு, முழுமையான இருப்புடன் இணையும் வரையில் விரிவடைந்து கொண்டே செல்கிறது. அதற்கு ஏற்புடையதாக இவ்வுலகத்தைக் குறித்து அவன் கருத்தானது மாறிக் கொண்டே இருக்கிறது. 'நான்' என்பதையும், உலகத்தையும் மற்றும் கடவுளையும் பிரிக்கும் கோடுகள் மேலும் மேலும் மங்கிக்கொண்டே வருகிறது. மற்றும் இறுதியாகப் பரம் பொருளின் பேரொளியானது எல்லா இருப்பையும் மறைத்து விடுகிறது.

28
ஆன்மீக உருநிலை மாற்றம்

திடீர் நிலைமாற்றம்

உலக ஆன்மீக வரலாற்றில், கீழான இயல்புகளை உடைய, விலங்கின் மனப்பான்மையைக் கொண்டிருந்த மனிதர்கள், தெய்வீக மனிதர்களாக உருநிலை மாற்ற மடைந்து, தெய்வீக உணர்வையும், தெய்வீக அருளையும் பிரதிபலித்துக் கொண்டிருந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளைக் காண்கிறோம்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையைக் குறித்துப் படித்த வர்கள், வங்காளத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற நாடக நடிகரான கிரீஷ் என்னும் சிறந்த மனிதரின் பெயரை நினைவு கூர் வார்கள். நாங்கள் இளைஞர்களாக இருந்த பொழுது அவரைப் பார்க்கும் மற்றும் அவர் பேச்சைக் கேட்கும் சலுகை எங்களுக்கு இருந்தது. அவர் ஒரு காலத்தில் கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். ஆனால் அவ ருடைய குருதேவரான ஸ்ரீராமகிருஷ்ணரின் ஸ்பரிசமானது அவரிடத்தில் வியக்கத்தக்க உருநிலை மாற்றத்தை ஏற்படுத்தி, அவருடைய வாழ்க்கையையே முற்றிலுமாக மாற்றிவிட்டது. விலங்கு மனப்பான்மையிலிருந்து, தெய்வீகத் தூய்மையான நிலைக்கு அவர் மாறினார். அந்நிலையில் அவர் ஒருநாளில் ஒவ்வொரு கணத்திலும் தெய்வீக உணர்வை உணர்ந்துகொண் டிருந்தார்.

இந்தியாவில், பண்டைக் காலத்தில் ஒரு இளைஞன் அவன் குடும்பத்திற்கு ஆதரவாக உதவி செய்வதற்கு வேறு எந்த வழியையும் காணாமல், நெடுஞ்சாலை வழிப்பறியில் ஈடுபட்டு இருந்தான். அந்தக் காலத்தில் ஆன்மீக அறிவொளி

வழங்கிக் கொண்டிருந்த மிகச் சிறந்த முனிவரான நாரதர் அவ் வழியாகச் சென்றபொழுது, கொள்ளைக்காரனால் தாக்கப் பட்டார். நாரதர் அந்த இளைஞனை, 'நீ இந்தக் குற்றங்களை யெல்லாம் உன் குடும்பத்திற்காகச் செய்வதாகக் கூறுகிறாய். ஆனால் அவர்களில் யாராவது நீ இத்தனைக் காலமாக வரு வித்துக் கொண்டுள்ள மிகப் பெரிய அளவிலுள்ள பாவத்தில் பங்கு ஏற்பார்களா? என்று நயத்துடன் கண்டித்து, 'சென்று அவர்களைக் கேட்பாய்' என்று கூறினார். கொள்ளைக்காரன் இதைப்பற்றி ஒருபொழுதும் எண்ணிப் பார்த்தது இல்லை. மற்றும் அந்த விஷயத்தைக் குறித்த உண்மையைக் கண்டறிய விரும்பினான். நாரதர் எங்கும் போய்விடக் கூடாது என்று அவரை ஒரு மரத்தில் கட்டிவிட்டு அவன் வீட்டிற்குச் சென்றான். அவன் அவனைச் சேர்ந்த ஒவ்வொருவரிடமும் தந்தை, தாய், மனைவியிடம் தன் பிழைப்பிற்காக எப்படிக் கொள்ளையடித்தும், கொலை செய்தும் பொருளீட்டியதாக விவரித்து, 'என்னுடைய பாவத்தில் பங்கு ஏற்கிறீரா?' என்று கேட்டான். ஆனால் அவர்களில் ஒருவர் கூட அதற்குச் சிறி தளவும் தயாராக இல்லை. எங்களைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய கடமையாகும். நீ எந்த வழியில் சம்பாதிக்கிறாய் என்பதைப் பற்றியும் எங்களுக்குக் கவலை இல்லை. உன் பாவங்களிலும் நாங்கள் பங்கு ஏற்கவில்லை' என்று கூறினர். அவன் தான் மேற்கொண்டிருந்த வாழ்வின் பயனற்ற தன்மை யையும், தீய புண்படுத்தும் இயல்பையும் உணர்ந்தான். மற்றும் உண்மையின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்னும் பெரிய விருப்பத்தையும் உணர்ந்தான். நாரதரிடம் விரைந்துசென்று, அவரை அவிழ்த்துவிட்டு, அவர் தனக்குக் குருவாக வேண்டும் என்றும் ஆன்மீக போதனைகளை அளிக்க வேண்டும் என்றும் மன்றாடினான். அவன் தியானம் செய்யக் கற்றுக் கொண்டான் என்றும், அடுத்தடுத்து தியானத் தில் அந்த நிலையில் மூழ்கியதாகவும் மற்றும் ஒரு எறும்புப் புற்று அவனைச் சுற்றி உண்டாயிற்று என்றும் கதை கூறுகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு நாரதர் அவனைக் காண்பதற்காக திரும்பி வந்துபொழுது, முன்னாளில் கொள்ளைக்காரனாக

இருந்து வழிப்பறி செய்தவன் ஞானமடைந்தவனாக இருந்ததைக் கண்டார். அவர்தான் இராமாயணம் என்னும் மிகச் சிறந்த காவியத்தை எழுதியவரான வால்மீகியாவார். இராமாயணம், இராமர் என்னும் அவதார புருஷரின் வாழ்க்கை மற்றும் அருஞ்செயல்களை விவரிக்கிறது.

இந்நிகழ்ச்சி நடைபெற்று பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அருளாளர் பிரான்ஸிஸ் அஸ்ஸிஸியில் பிறந்தார். அவர் நகரத்திலுள்ள உல்லாசமான இளம் மனிதர்களின் தலைவனாக இருந்தார். மற்றும் அவர் நண்பர்கள் அவரை 'களியாட்டத்தில் ஈடுபடுவோர்களின் அரசன்' என்று அழைத்தனர். ஆனால் ஒருமுறை அவர் ஒரு சிறிய தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த பொழுது, அந்த தேவாலயத்தைப் பழுது பார்க்கும்படி தெய்வீகக் குரலொன்று அவருக்குக் கட்டளை இடுவதை அவர் கேட்டார். திடீரென்று அவரிடம் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டது. அதன்பிறகு அவர் தூய்மை நிறைந்த பிரார்த்தனை, தொண்டு செய்யும் வாழ்க்கையை விரும்பித் தேர்ந்தெடுத்தார். ஆனால் இந்த வகையான வாழ்க்கையானது அவ்வளவு எளிமையானது அல்ல. அவர் மாற்றம் அடைந்தபிறகு, ஒரு மலை வழியில் கடவுளைப் புகழ்ந்து பாடிக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்த பொழுது, அவர் ஒரு கொள்ளையர்களின் குழுவை எதிர்பாராமல் எதிர்கொண்டார். அவர்கள் அவரை, 'நீ யார்?' என்று கேட்டனர். அருளாளர் பிரான்ஸிஸ் அவர்கள் மிகப் பெரிய அரசரின் தூதர் என்று பதிலளித்தார். திகைப்படைந்த கொள்ளையர் அவரை ஒரு பனித்திரள் மிகுந்த குழியில் தள்ளிவிட்டுச் சென்று விட்டனர். ஆனால் பிரான்ஸிஸ் கலக்கமடையாமல் எழுந்து, கடவுளை எப்பொழுதும் போலப் புகழ்ந்து பாடிக் கொண்டே தன் பயணத்தைத் தொடர்ந்தார். அவருள் ஏற்பட்டிருந்த ஆன்மீக உருநிலைமாற்றமானது, இத்தகைய வகையான தொல்லைகளை எதிர்கொள்வதற்குப் போதுமான அளவு ஆழமாக உறுதியை அளித்து இருந்தது. சிறிது காலத்திற்குப் பிறகு அவர் சிறந்த சமய அமைப்பைத் தோற்றுவித்தார்.

நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த இறைமை இயல் வல்லுனர் மற்றும் மெய்ஞ்ஞானியான அருளாளர் அகஸ்டைன் அவர்களைப் பற்றி நினைத்துப்பார். இளைஞனாக இருந்தபொழுது அவர் நெறி தவறிய வாழ்வை மேற்கொண்டிருந்தார். விரைவில் அவருக்கு அவர் மீதே வெறுப்பு ஏற்பட்டது. மற்றும் அவருக்கு பரு உடலுக்கு எதிரான ஆன்மாவின் கடினமான போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. இறுதியாக அவருக்கு அதை அதற்கு மேலும் தாங்க இயலவில்லை. ஒருநாள் அவர் கண்களில் கண்ணீருடன் 'ஓ இறைவனே, இன்னும் எவ்வளவு நாட்களுக்கு இன்னும் எவ்வளவு நாட்களுக்கு? நாளை, மற்றும் நாளையா. இன்று ஏன் இல்லை? இப்பொழுதே ஏன் இல்லை?' என்று அழுதார். ஞானத்திற்காக அவர் அழுது கொண்டிருந்த பொழுது, 'எடுத்துப் படிப்பாய், எடுத்துப் படிப்பாய்' என்று ஒரு குரல் கேட்டது. அகஸ்டின் அண்டை வீட்டுக்காரரான நண்பரின் வீட்டிற்குச் சென்று பைபிளைத் திறந்தார். அவர் திறந்த பக்கம் திருத்தூதர்களின் செயல்கள் என்பதாகும். மற்றும் அவர் படித்தார். 'கலவரங்கள் மற்றும் குடிபோதையில் இல்லை. காமத்திலும் ஒழுக்க வரம்பற்ற தன்மையிலும் இல்லை. சச்சரவிலும் பொறாமைப் படுவதிலும் இல்லை. ஆனால் உன்னை இறைவன் ஏசுநாதரிடம் ஒப்படைத்து விடு. மற்றும் பருஉடல், அதனால் ஏற்படும் காம ஆசைகளுக்கும் இடம் ஒதுக்காதே' உடனடியாக அவரிடம் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது. அருவடைய உடலின்பம் சார்ந்த விருப்பம் அகன்றது. களிக்கூத்தாடியான அகஸ்டைன் உருநிலை மாற்றத்திற்கான பயணத்தைத் தொடங்கிவிட்டார். எதனால் அனைத்தும் ஆக்கப்பட்டுள்ளதோ, அந்த மெய்மையின் கணநேர தோற்றத்தை அவர் கண்டார். 'இருந்தோம்' என்பது உண்மையற்றதாகிவிட்டது. நிலையான ஒரு இருப்பு, 'நிலைகொள்' ஒன்றுதான் இருந்தது. கடந்த காலமானது நிலைத்திருக்கும் 'நிகழ்காலத்தில்' மறைந்துவிட்டது. அகஸ்டைன் அவருடைய இதயத்தின் ஆழத்திலிருந்து, 'ஓ இறைவனே, உன்னை உணர்வதற்கு எனக்கு உதவுவாய்,

என்னை உணர்வதற்கு உதவுவாய். உன்னை உணர்ந்தால் எனக்கு என்னை உணர இயலும்' என்று பிரார்த்தித்தார். அதற்குப்பிறகு, அவர் மனத்திற்கே பிடிபடாத ஒரு ஆன்மீக சக்தி, அந்தப் போராடிக் கொண்டிருக்கும் மனிதனை, 'அவனுடைய அகங்கார நீர்ச்சுழிக்கு' அப்பால் நோக்க இயலச் செய்தது.

இது உண்மையான, தன்னியல்பான தெய்வீக அனுபவமாகும். அந்த அனுபவம் அகஸ்டைனை ஞானியாகவும், அருளாளராகவும் மாற்றியது. இது ஆன்மீக விழிப்புணர்வால் ஏற்பட்ட அகம் சார்ந்த சமநிலையால் ஏற்பட்டது ஆகும். நம் அகவாழ்வை தெய்வீக விழிப்புணர்வின் உருநிலைமாற்றமாக ஆக்கிக் கொள்வதில்தான் அகம்சார்ந்த சமநிலையின் இரகசியம் உள்ளது. ஒருவருடைய விழிப்புணர்வு மையத்தை அகங்காரத்திலிருந்து கடவுளிடம் மாற்றி அமைத்துக் கொள்வதில் உள்ளது.

நாம் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிறந்த சீடரான சுவாமி விவேகானந்தரிடம் இதைப்போன்ற விழிப்புணர்வு மையத்தை மாற்றிய ஏதோ ஒன்றைக் காண்கிறோம். அவருடைய தந்தை திடீரென்று இயற்கை எய்தியபிறகு, நரேந்திரனுக்கு மிகவும் கஷ்டமான காலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அவருடைய குடும்பம் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருந்ததால் துன்பப்பட்டுக் கொண்டிருந்ததால் ஒரு வேலை தேடிக் கொள்வது மிகவும் அவசியமானதாக இருந்தது. அவர் எத்தகைய பயனுமின்றி ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று கொண்டிருந்தார். ஒருகாலத்தில் நரேந்திரனை நரேந்திரனின் நண்பர்கள் என்று கூறியவர்கள் இப்பொழுது நரேந்திரனை நிராகரித்தனர். இந்த உலகமானது திடீரென்று முற்றிலும் கொடுமையாக உள்ளது போல காட்சி அளித்தது. குடும்பத்தில் உணவுப்பொருட்களும் இல்லாமல் சில நாட்கள் இருந்தன. நரேந்திரனின் பணம் வைத்துக் கொள்ளும் பை காலியானபொழுது, அவர் அன்னையிடம் சாப்பிடுவதற்காக வெளியில் அழைக்கப்பட்டிருப்பதாகக் கூறி உண்மையாக உணவு உட்கொள்ளாமல் இருந்தார். இத்தகைய

சோதனைகளுக்கு நடுவில் அவர் 'கடவுள் உண்மையிலேயே இருக்கிறாரா? மற்றும் அப்படி அவர் இருந்தால் துன்பத்தில் உள்ள ஒரு மனிதனின் உணர்ச்சி மிகுந்த பிரார்த்தனைகளைக் கேட்கிறாரா?' என்று வியப்புற்றார்.

ஒரு மாலை நேரத்தில் சோர்வடைந்த உடலுடனும் மனத்துடனும் அவர் கல்கத்தாவிலிருந்த வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது, மிகுந்த சோர்வால் ஆட்கொள்ளப் பட்டு தெருவை ஒட்டியிருந்த ஒரு வீட்டின் முற்றத்தில் தளர்ந்து அமர்ந்துவிட்டார். திடீரென்று ஏதோ ஒரு தெய்வீக சக்தியின் செயலைப்போல அவருடைய ஆன்மாவின் உறைகள் ஒவ்வொன்றாகக் கழன்றன. தெய்வீக நீதி மற்றும் துன்பங்கள் இரண்டும் உடனிருப்பதைப்பற்றிய எல்லா சந்தேகங்களும் கரைந்தன. ஆழத்தில் ஏற்பட்ட உட்புறக் காட்சியினால் அதில் அவர் எல்லாவற்றிற்கும் பொருளை உணர்ந்து கொண்டார். அவர் உடல் களைப்பு அகன்றது. அவ ருடைய மனமானது அற்புதமான வலிமையாலும், அமைதி யாலும் புத்துணர்வைப் பெற்றது.[1] அதற்குப் பிறகு விவே கானந்தர் பல ஆன்மீக அனுபவங்களைப் பெற்றார். மிகச் சிறந்த ஞானியாக ஆனார்.

அகமாற்றத்திற்கான காரணம்

அத்தகைய எடுத்துக்காட்டுக்கள் நம் கவனத்தை ஈர்க் கின்றன. ஏனெனில் அவை நம் கண்களைக் கவர்ந்து ஈர்க்கும் படி உள்ளன. ஆனால் இத்தகைய உருநிலை மாற்றங்களி லிருந்து முற்றிலும் வேறுபட்ட பல எளிய, சிக்கலற்ற நிகழ்வு களும் உள்ளன. விலங்குத் தன்மையிலிருந்து தெய்வத் தன்மைக்கு படிமாற்றமடைந்த மனிதர்களும் உள்ளனர். இது எப்படி ஏற்படுகிறது? பழைய தன்மையிலிருந்து வெளிப் படும் புதிய தன்மையானது முற்றிலும் புதிய மாதிரியைச் சார்ந்து இருப்பதைப்போலத் தோன்றுகிறது. மற்றும் தன்

1. Eastern and Western Disciples, Life of Swami Vivekananda (கல்கத்தா, அத்வைத ஆசிரமம், 1974), பக்கம் 90-94.

முந்தைய சாயலில் சிறிதளவையே பெற்று இருப்பதைப் போன்றும் தோன்றுகிறது. உடலைப் பொறுத்த வரையில் ஐயத்திற்கு இடமின்றி அவைகளுக்கு ஒரே அடிப்படைதான் உள்ளது. ஆனால் உள்ளே அடங்கி உள்ள விழிப்புணர்வானது முற்றிலுமாக மாறிவிட்டது. அத்தகைய ஒரு மாற்றம் எப்படி ஏற்படுகிறது?

பண்டைய யோக ஆச்சாரியரான பதஞ்சலி இந்த சூத்திரத்தை அளித்துள்ளார். 'இயற்கையின் மாறுபாட்டிற்கு நற்செயல்களும், தீய செயல்களும் நேர் காரணங்கள் அல்ல. நீரின் போக்கிலுள்ள தடையை விவசாயி நீக்கும் பொழுது அது தன் சொந்த இயல்பாலேயே பாய்வது போல, செயல் களும் இயற்கையின் பரிணாமத்திற்கான தடைகளை நீக்கு கின்றன.'[1] இப்படித்தான் ஒருவகை மாதிரியிலிருந்து மற் றொருவகை மாதிரிக்குப் பரிணாம வளர்ச்சியானது பல் வகைப்பட்ட பண்புகள் நிறைந்ததாக விளங்குகிறது. சுவாமி விவேகானந்தர் இந்த சூத்திரத்தின் விளக்கவுரையில்

'வயல்களுக்குப் பாய வேண்டிய நீர் ஏற்கனவே வாய்க் காலில் இருக்கிறது. மடைகளால் தடுக்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான். விவசாயி இந்த மடைகளைத் திறந்ததும், புவியீர்ப்பு விசையால் நீர் தானாகப் பாய்ந்து செல்கிறது. அதுபோல் எல்லா முன்னேற்றமும் ஆற்றல்களும் ஒவ்வொரு மனிதனிடமும் ஏற்கனவே உள்ளன. நிறைநிலையானது மனிதனின் இயல்பிலேயே உள்ளது. அது தன்போக்கில் வெளிப்படுவது தடுக்கப்படுகிறது; அவ்வளவுதான். யாராவது அந்தத் தடைகளை நீக்கினால் இயற்கை முன்னே பாய்கிறது. அவன் ஏற்கனவே தன்னிடம் உள்ள ஆற்றல்களை அடையப் பெறுகிறான். தீயவர் என்று நாம் கருதுபவர்கள், தடைநீக்கப்பட்டு இயற்கை பாய்ந்தவுடன் மகான்களாகி விடுகின்றனர். நிறைநிலையை நோக்கி இயற்கையே நம்மை

---

1. நிமித்தமப்ரயோஜகம் ப்ரக்ருதீனாம் வரண பேதஸ்து தத: க்ஷேத்ரிகவத் ॥

—பதஞ்சலி யோக சூத்திரம், 4.3

அழைத்துச் செல்கிறது. உரிய காலத்தில் எல்லோரையும் அங்கு கொண்டு சேர்க்கும். ஆன்மீகத்தில் முன்னேற்றமடை வதற்கான எல்லா முயற்சிகளும் போராட்டங்களும் தடை களை நீக்குவதற்காகவே ஆகும். தடைகள் நீங்கினால் மட்டும் போதும். நமது பிறப்புரிமையாகிய நமது இயல்பாகிய நிறைநிலையின் வாசல்கள் திறக்கின்றன.

பண்டைய யோகிகளின் பரிணாமக் கொள்கை, தற்கால ஆராய்ச்சிகளின் வெளிச்சத்தில் நன்கு விளங்கும். ஆனாலும், பண்டைய யோகிகளின் விளக்கம் சிறந்தது. தற்கால விஞ் ஞானிகள் பரிணாமத்திற்கு இரு காரணங்களைக் கூறு கின்றனர். ஒன்று, வாழ்க்கைத் துணை தேர்வு (Sexual Selection); இரண்டாவது தகுதி மிக்கதே வாழ முடியும் என்ற கொள்கை யாகும் (Survival of the fittest). ஆனால் இவை போதுமானவை அல்ல. உணவு தேடுதல், வாழ்க்கைத் துணைதேடுதல் ஆகிய இரண்டிலுமே தேவைப்படாத அளவிற்கு மானிட அறிவு முன்னேறி விட்டதென்று வைத்துக் கொள்வோம். அப் பொழுது பரிணாமமே நின்றுபோய் மனித முன்னேற்றமும் நின்று போய் உயிர்கள் அழிந்துபோகும் என்று நவீன விஞ்ஞானிகள் கூறுவார்கள்.

ஒவ்வொரு கொடியவனின் மனசாட்சிக்கு ஒரு தவறான சமாதானம் உண்டாவதுதான் இந்த வாதத்தின் விளைவு ஆகும். கொடியவர்களையும், தகுதியற்றவர்களையும் (தகுதி யைத் தீர்மானிக்கும் ஒரே நீதிபதிகளும் அவர்களே) கொன்று அழிப்பதன் மூலம் இனத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறிக் கொண்டு, தங்களையும் தத்துவ மேதைகளாகக் காட்டிக் கொள்பவர்களுக்கும் இங்கே பஞ்சமில்லை. மகத்தான பண்டைய பரிணாமவாதியான பதஞ்சலியோ, ஒவ்வோர் உயிரிலும் ஏற்கனவே உள்ள நிறைநிலையை வெளிப் படுத்துவதுதான் பரிணாமத்தின் உண்மை ரகசியம் என்று கூறுகிறார். இந்த நிறைநிலை தடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடைக்குப் பின்னால் உள்ள எல்லையற்ற அலை தன்னை வெளிப்படுத்துவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டங்களுக்கும், போட்டிகளுக்கும் காரணம்

நமது அறியாமையாகும். மடையைத் திறந்து, நீருக்கு வழி விட நமக்குச் சரியான வழி தெரியவில்லை. பின்னால் உள்ள எல்லையற்ற அலை தன்னை வெளிப்படுத்த வேண்டும். இதுவே எல்லா வெளிப்பாடுகளுக்கும் காரணம் ஆகும்.

உயிர் வாழ்வதற்கும் காமத்தைத் தணித்துக் கொள்வதற்கு மான போட்டிகள் வெறும் தற்காலிகமானவை, அவை தேவையற்றவை. அறியாமையால் ஏற்பட்ட புறவிளைவு. இந்தப் போட்டிகள் எல்லாம் நின்ற பின்பும், நாம் ஒவ் வொருவரும் நமது இயல்பான நிறைநிலையை அடையும் வரை, இந்தப் பூரணமான இயற்கை நம்மை முன்னே தள்ளிக் கொண்டு செல்லும். ஆனால் முன்னேற்றத்திற்குப் போட்டி தேவை என்று எண்ணுவது நியாயமல்ல. மிருகத்திடம் மனித சக்தி அடக்கப்பட்டுக் கிடந்தது. கதவு திறந்ததும் அது வெளி வந்தது. அது போன்று மனிதனிடம் தெய்வம் தோன்றா நிலை யில் உள்ளது. அறியாமையாகிய சிறையில் அது அடைப் பட்டுள்ளது. அறிவு சிறையை உடைத்துத் திறக்கும்பொழுது தெய்வம் வெளிப்படுகிறது'[1] என்று கூறியுள்ளார்.

இங்கு 'தெய்வம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது புனித மான ஆன்மா ஆகும். அது அறியாமையின் இறுதித் தடை களை அகற்றுவதற்கு நமக்கு உதவுகிறது. அதனால் ஆன்மா வானது தன்னுடைய எல்லா மேன்மைகளுடனும், சிறப்புக் களுடனும் ஒளிரும்.

அறியாமையே, மாற்றம் ஏற்படாமலிருப்பதன் முதன்மையான தடையாகும்

இந்த அறியாமை என்னும் தடை என்பது என்ன? சூட்சுமமான பதிவுகளும், இயல்புகளும், விருப்பங்களும் மற்றும் உணர்ச்சிகளும், உணர்வற்ற நிலையில் ஆழங்களில் உள்ளன. அவை நம்முடைய உணர்வுபூர்வமான வாழ்க்கை யில் பெரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவை சூட்சுமமான உடல், மனம் சார்ந்த மற்றும் உணர்ச்சிகளின்

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.189-190.

உடலில் இருந்து கொண்டு தங்களைப் பருஉடல் மூலம் வெளிப்படுத்திக் கொள்கின்றன. அடிஉணர்வுத்தளத்தைக் கட்டுப்படுத்துவது என்றால், சூட்சுமமான உணர்ச்சி வேகங்களும், விருப்பங்களும், உணர்வுகளும் கீழ் மட்டங்களில் அவை வெளிப்படுவதற்கு அனுமதித்தல் கூடாது என்பது பொருளாகும். அவை மேல் மட்டத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும், தூய்மைப்படுத்தபட வேண்டும், மேன்மைப் படுத்தப்பட வேண்டும். தனிமனித மற்றும் சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆன்மீகக் கண்ணோட்டத்திலிருந்து எல்லா சூட்சுமமான இயல்புகளுக்கும், மற்றும் பதிவுகளுக்கும் ஒரு ஆன்மீகத் திருப்பம் அளிக்கப்பட வேண்டும். பழக்கங்களையும், இயல்புகளையும் அவற்றின் அடிவேரிலேயே இயல்பான நிலைக்கு மாற்ற வேண்டும். மற்றும் அது அதனுடைய முறையில் எல்லையைக் கடக்க வேண்டும், மேம்பட வேண்டும்.

பிணைப்புக்களும், வெறுப்புக்களும் அகங்காரத்தில் இருந்து தோன்றுகின்றன. அகங்காரம் அறியாமையால் ஏற்படுகிறது. ஆன்ம ஞானம் அல்லது பரம்பொருளை உணர்வது மட்டுமே ஆசையின் வித்துக்களை எரித்து ஆன்மாவை அதனுடைய மூல தூய்மைப்பாடு, விடுதலை மற்றும் அமைதியைப் பெறச் செய்யவியலும். சிறிய உபநிஷதமான அம்ருதபிந்து உபநிஷதம்,

'மனிதனுடைய பிணைப்பிற்கு அவன் மனமே காரணம் ஆகும். மற்றும் முக்தி அடைவதற்கான வழியாகவும் அது விளங்குகிறது' என்று கூறுகிறது.[1] மனமானது உலகியல் பொருட்களின் மீது பற்றுக் கொண்டு இருக்கும் பொழுது பிணைப்பு அதனுடைய விளைவாக உள்ளது. மற்றும் அத்தகைய பற்றுதலிலிருந்து அது விடுபட்ட பிறகு, ஆன்மாவிற்கு அதன் விடுதலை மீண்டும் கிடைக்கிறது. அது நம் ஒவ்வொருவரின் பிறப்பு உரிமையாகும்.

---

1. மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: ।

—அம்ருத பிந்து உபநிஷதம், 2.

நம்முடைய எல்லாத் தூண்டுதல்கள், விருப்பங்கள் மற்றும் உணர்ச்சிகளின் பின்னணியில் சாசுவதமான வாழ்க்கையையும், முழுமையான ஞானத்தையும் அழிவற்ற பேரின்பத்தையும் வேண்டும் ஆன்மாவின் விருப்பம் உள்ளது. இந்த விருப்பமானது, மிக உயர்ந்த ஆன்மீக அனுபவமான, சச்சிதானந்தத்தை அடைவதால் நிறைவேற்றப்படுகிறது. நம்முடைய தனிப்பட்ட விழிப்புணர்வினுள் புகுந்து, ஊடுருவி, மாறிமாறி ஊடுருவி நிற்கும் இது நம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. நம்முடைய அறியாமையும் அகங்காரமும் தான் நம்முடைய ஆன்மீக இயல்பை நம்மை மறக்கும்படிச் செய்கின்றன. ஆன்மஞானத்தின்மூலம் நம்முடைய விடுதலையை மீண்டும் பெறவியலும். இதுதான் ஆன்மீக வாழ்வின் வெளிப்படையான இரகசியம் ஆகும்.

தவறான எண்ணங்களும் உணர்வுகளும் நம்முடைய உடலையும், மனத்தையும் பாதிக்கின்றன என்பது பொதுவான அனுபவம் ஆகும். உண்மையை நாடும் பல மருத்துவர்களும், உளஇயல் வல்லுனர்களும், அறியாமையால் ஏற்பட்டுள்ள நம்முடைய தவறான மனப்பான்மைகளும், உணர்ச்சிகளும், பல உடல் சார்ந்த, மனம்சார்ந்த நோய்களுக்குக் காரணமாக உள்ளன. அவைகளைப் பெரிய அளவிற்குத் தடுக்க இயலும் என்றும் உண்மையை நம் மனத்தில் பதிய வைக்கிறார்கள். மதிநுட்பம் வாய்ந்த மருத்துவரான ஸர் வில்லியம் ஆஸ்லர் (William Osler) ஒரு எலும்புருக்கி நோயாளியின் விதியானது, அவன் மார்பில் என்ன இருக்கிறதோ அதைவிட அவன் தலையில் என்ன உள்ளதோ அதைத்தான் மிகுதியாகச் சார்ந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். நம்முடைய வெளிப்புறச் செயல்களைவிட, நம் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளையே அதிகமாகச் சார்ந்துள்ளது.

ஒவ்வொரு மனிதனும் மாறலாம்

உலகியலில் நாட்டம் கொண்ட ஒரு மனிதனாலும், அவன் உலகியலையும் அவன் மனத்தில் ஏற்படுத்திக் கொண்டுள்ள சிக்கல்களையும் துறப்பதற்கு ஆயத்தமாக

இருந்தால் மாற இயலும். இல்லையெனின் ஒருபொழுதும் இயலாது. அரைகுறை ஆர்வமுடைய கடவுள்பற்று போதாது. நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள படகு நகராது. நம்முடைய சிக்கல்கள் நம்மை உலகியல் வாழ்க்கையில் நங்கூரமிட்டு நிறுத்துகின்றன. முதலில் நங்கூரமானது உயர்த்தப்பட வேண் டும். எத்தகைய வலியை ஏற்படுத்துவதாக இருப்பினும், நம்முடைய சிக்கல்களை நாம் தகர்க்க வேண்டும். அதன்பிறகு நாம் ஏற்கனவே இழந்த சமயத்தை ஈடுகட்ட வாழ்க்கைப் படகை வேகமாகச் செலுத்த வேண்டும். நம்மிடம் ஆழ மாக வேர் ஊன்றியுள்ள எல்லாப் பதிவுகளையும் (ஸம்ஸ் காரங்களை) வேரோடு கல்லி எறியவில்லை எனின், நாம் ஆன்மீகவாதிகளாகவோம் என்று நம்ப இயலாது. ஆன்மீகத் தூய்மைப்பாட்டிற்கு முன்பாக ஒழுக்க நெறிமுறைகளின் தூய்மைப்பாடு இருக்க வேண்டும்.

பல மனஇயல் வல்லுனர்கள், அகமுரண்பாடுகள் அடக்கிவைக்கப்பட்டுள்ள கோபம், வெறுப்பு, பொறாமை, பயம் மற்றும் மற்ற எதிர்மறையான உணர்ச்சிகள், நமக்குக் கழுத்துப் பகுதியில் வலியையும், வயிற்றில் புண்களையும் இரத்தத்தில் சர்க்கரையையும், இதயம் சார்ந்த நோய்களை யும் மற்றும் நரம்புக் கோளாறுகள் சார்ந்த பல்வேறு வகை யான பிணிகளையும் ஏற்படுத்தும் என நமக்கு வெளிப் படுத்துகின்றனர். அவர்கள் நமக்கு உணர்ச்சிகளை மேன்மைப் படுத்திக் கொள்வதன் மூலம் எப்படி நரம்புசார்ந்த கோளாறு களின் போக்கு மாறுதல் அடைகிறது என்பதையும் மற்றும் நோயாளியின் புற வாழ்க்கை எவ்விதம் மாறுதலை யடைகிறது என்பதையும் கூறுகின்றனர். பல ஆண்டுகளுக்கு நோயாளிகளாக இருந்தவர்கள் அவர்களுக்காக அவர்களே சிந்திப்பதற்குக் கற்றுக் கொண்டதன் பயனாக, வாழ்க்கையின் சிக்கல்களை எதிர்கொள்ளவும் மற்றும் தங்களை மீண்டும் ஒரு ஆரோக்கியமான அடிப்படையில் தக்கவாறு பொருத்திக் கொள்ளவும் கற்றுக் கொண்டதன் விளைவாக தங்கள் ஆரோக்கியத்தை மீண்டும் இயல்பை மாற்றவியலும். சிறு குழந்தை மட்டுமே வளைந்து கொடுக்கக் கூடிய நிலையில்

இல்லை. நம் அனைவராலும் மாற்றமடைவதற்கான திறமையை உறுதியாகக் கைக்கொள்ள இயலும், நாம் வாழும் வரையிலும் அடிப்படை வழிமுறைகளையே நம்மால் மாற்றிக் கொள்ள இயலும்' என்று ஒரு நவீன மனோதத்துவ நிபுணர் உறுதியாகக் கூறியிருப்பது ஊக்கம் அளிக்கக் கூடிய தாக உள்ளது.

இந்தியாவில் நமக்குத் தெரிந்த 'ஒரு மனிதன் சுவாசித்துக் கொண்டிருக்கும் வரையிலும் நம்பிக்கை உள்ளது' என்னும் பழமொழி உள்ளது. நம்மிடையே, உள்ளார்ந்த, சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பும் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கைக்கு இடம் உள்ளது. பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை ஊட்டுகிறார்.

'எல்லா பாவிகளுக்குள்ளும் நீ மிக கொடும் பாவியாக இருப்பினும், எல்லாப் பாவத்தையும், ஞானம் என்னும் படகு ஒன்றினாலேயே நன்கு கடந்து விடுவாய்'[1] ஆன்ம ஞானம் என்பது சுடர்விட்டெரியும் தீயைப்போல, கேடுகள் அனைத்தையும் எரித்துவிட்டுப் பரம்பொருளின் மேன்மையை வெளிப்படுத்துகிறது. அந்தப் பரம்பொருள் நாம் அதை அறிந் தாலும், அறியாவிட்டாலும் நம் ஒவ்வொருவரின் இதயத் திலும் குடிகொண்டுள்ளது.

ஹிந்து முனிவர்கள், அவர்களுடைய பரந்துபட்ட ஆன்மீக அனுபவங்ளிலிருந்து, நமக்குக் காலங்காலமாக நம் முடைய ஆன்மீக விழிப்புணர்வை மாற்றிக் கொள்வதன் மூலம், நம்முடைய எண்ணங்களிலும், உணர்ச்சிகளிலும் உடலிலும் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த இயலும் என்று கூறிக் கொண்டுள்ளனர். தூய்மையற்ற மனமும், தூய்மையற்ற சூட்சும உடலுமன்றி, விலங்குத்தன்மை கொண்ட மனிதனின் தூய்மையற்ற பருஉடலும்கூட அவதார புருஷனுக்கு உரிய தூய்மையான சூட்சும உடலாகவும், தூய்மையான பரு உடலாகவும் படிமாற்றம் செய்ய இயலும். அவதார புருஷனின் உடலானது மிகத் தூய்மையான ஆக்கப்

---

1. பகவத் கீதை, 4.36

பொருளால் ஆக்கப்பட்டுள்ளது. ஒரு புனிதமான முறையில் காந்த முனைவாக்கம் ஊட்டப்பட்டதாகவும் (Polarize) வேறு பட்டமுறையில் அமைக்கப்பட்டதாகவும் விளங்குகிறது. அதனால் அந்த உடலிற்குள் அவனால் எந்த தவறையும் செய்யவியலாது.

ஸ்ரீராமகிருஷ்ணர், இரும்பால் செய்யப்பட்ட வாள் பரிச மணி தீண்டியதும் பொன்வாளாக மாறி விடுகிறது[1] என்னும் இந்த விளக்கத்தை அளித்துள்ளார். உருவத்தில் அது பழைய வாளைப் போன்றே உள்ளது. ஆனால் அதனால் யாருக்கும் துன்பம் செய்ய இயலாது. வாளின் உள்ளார்ந்த தனிக்கூறு மாற்றம் அடைவதைப் போன்றே நம் உடல் மற்றும் மனத் தின் உள்ளார்ந்த தனிக்கூறு மாற்றமடைகிறது. நாம் யோகப் பயிற்சியை நடைமுறைப்படுத்தும் பொழுது இதையே காண்கிறோம்.

மனிதனின் பழக்க வழக்கங்களும், மனப்பாங்குகளும்

நம்முடைய சூட்சுமமான பழக்கவழக்கங்கள் மற்றும் மனப்பாங்குகளைக் குறித்த பல வகையான கருத்துக்கள் உள்ளன. ஆன்மீக வாழ்வில் அவை வெல்லப்பட வேண்டும். படிமாற்றம் செய்யப்பட வேண்டும். மற்றும் எல்லைகடந்து மேம்பட வேண்டும். பகவத் கீதை தமோகுணம், ரஜோ குணம், மற்றும் சத்துவ குணம் என்னும் மூன்று தனிப்பட்ட இயல்புகளைக் கொண்ட மூன்று வகைப்பட்ட மனிதர்களை விவரிக்கிறது. தமோ குணமானது விலங்குத்தன்மை கொண்ட மனிதனை ஆதிக்கம் செலுத்துகிறது. இருள், அறியாமை, மருட்சி, கவனமற்றதன்மை என்னும் இயல்புகளைக் கொண்டவர்கள் ஆவார்கள். ரஜோ குணமானது உணர்ச்சி மிகுந்த நிலை, அமைதியற்ற தன்மைகளை, இயல்பாகக் கொண்டதாக விளங்குகிறது. இவை சராசரி மனிதனை உட னிருக்கும் எல்லா முரண்பாடுகள், வேதனையுடன் ஆதிக்கம் செலுத்துகின்றன. சத்துவகுணமானது ஆன்மீகத்தில் நாட்டம்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.193.*

கொண்ட மனிதனிடம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஞானமும் இசைவுடைமையும் இயல்பாக உள்ளன.[1]

தமோகுணம் உள்ளவன் தூய்மையற்ற உணவை உண்கிறான்.[2] அவன் நிலையற்ற தன்மை உடையவனாகவும் அகங்காரமுள்ளவனாகவும், வஞ்சகம் நிறைந்தவனாகவும் சோர்வடைந்தவனாகவும், காலம் தாழ்த்துபவனாகவும் தயக்கம் நிறைந்தவனாகவும் இருப்பான்.[3] அவன் விளைவு களைப் பொருட்படுத்தாமல் மருட்சியால் தன் எல்லாச் செயல்களையும் மேற்கொள்கிறான்.[4] அவன் ஏதாவது பரிசினை அளித்தால் அதை தவறான மனிதனுக்குத் தவறான இடத்தில் அல்லது தவறான நேரத்தில் அல்லது முறையில் அளிப்பான்.[5] அவன் வழிபட்டால் உண்மையான பக்தியின்றி யும், தானம் செய்யாமலும் அதைச் செய்கிறான்.[6] அவன் மூட நம்பிக்கைகளால் மருட்சி அடைந்தவனாகவும் பிறர் நாசத்தைக் கருதியும் கடுமையான பழக்கவழக்கங்களை மேற்கொள்கிறான்.[7]

ரஜோ குணம் உடையவன், கசப்பு, புளிப்பு, உப்பு, கடுஞ்சூடு மற்றும் காரத்துடன் கூடிய உணவை விரும்பித் தேர்ந்தெடுப்பான்.[8] அவன் ஆசையுடைவனாகவும், கர்ம பலனை விரும்புபவனாகவும், லோபியாகவும், இம்சை நோக்கம் உடையவனாகவும், அசுத்தமானவனாகவும், மகிழ்ச்சியிலும், சோகத்திலும் நிலையற்ற மனத்தை உடைய வனாகவும், பேராசை நிறைந்தவனாகவும் வன்முறை நிறைந்தவனாகவும், விரைவில் எழுச்சி அடைகிறவனாக வும் அல்லது வாட்டம் அடைபவனாகவும், கோபம் மற்றும்

---

1. *பகவத் கீதை, 14.11-13.*
2. *மேற்கண்ட நூல், 17.10.*
3. *மேற்கண்ட நூல், 18.28.*
4. *மேற்கண்ட நூல், 18.25.*
5. *மேற்கண்ட நூல், 17.22.*
6. *மேற்கண்ட நூல், 17.13.*
7. *மேற்கண்ட நூல், 17.19.*
8. *மேற்கண்ட நூல், 17.9.*

கவலை சார்பு உடையவனாகவும் இருப்பான்.[1] அவன் பிரதி பலனைக் கருதியோ, பயனைக் கருதியோ மற்றும் மன வருத்தத்துடனோ தானத்தை அளிப்பான்.[2] அவன் யாகத்தைப் பயனை அடைய விரும்பியோ அல்லது பலரும் காண வேண்டும் என்னும் பகட்டிற்காகவோ செய்வான்.[3] தவத்தை, உபசாரம், வெகுமானம், பூஜை இவற்றைக் கருதி பகட்டிற் காகச் செய்வான்.[4] ஆயுள், புத்தி, பலம், ஆரோக்கியம் இவற்றை வளர்ப்பனவும் தூயதாகவும், நலமளிக்கக் கூடிய தாகவும் உள்ள உணவை சத்துவகுணம் அல்லது இசை வுடைமையைப் பெற்றுள்ள ஒருவன் எடுத்துக் கொள்வான்.[5] ஸாத்வீக இயல்பைக் கொண்டவன் பற்று நீங்கியவனாக, 'நான்' என்னும் எண்ணம் அற்றவனாக, விடா முயற்சியும், ஊக்கமும் உடையவனாக, வெற்றியிலும் தோல்வியிலும் மாறுபாடு இல்லாதவனாக விளங்குவான்.[6] அவனுடைய செயல்கள், பயனடைய வேண்டும் என்னும் விருப்பம் இல்லாமலும், மற்றும் பற்று இல்லாமலும், விருப்பு, வெறுப்பு இன்றியும் செய்யப்படுகின்றன.[7] அவன் தானத் தைத் தகுதியான இடத்திலும், தகுதியான காலத்திலும், தகுதி உடையவர்களுக்குக் கொடுப்பது கடமை என்று எண்ணி திருப்பித்தர இயலாதவர்க்குக் கொடுப்பான்.[8] அவன் மூன்று வகையான தவத்தை ஆழ்ந்த பக்தியுடன் ஆன்மீக நோக்கத் திற்காக மட்டும் மேற்கொள்வான். தூய்மையும், பிரம்மச் சரியமும், அஹிம்சையும் உடல் தவத்திற்கு உட்பட்டன வாகும். கடுமையற்றதும், உண்மையானதும், பிரியமானதும், நன்மையைக் கருதுவதும் ஆகிய சொற்களும் தமக்குரிய வேதம் ஓதும் பழக்கமும் வாக்கால் செய்யும் தவம் ஆகும்.

---

1. *பகவத் கீதை, 18.27.*
2. *மேற்கண்ட நூல், 17.21.*
3. *மேற்கண்ட நூல், 17.12.*
4. *மேற்கண்ட நூல், 17.18.*
5. *மேற்கண்ட நூல், 17.8.*
6. *மேற்கண்ட நூல், 18.26.*
7. *மேற்கண்ட நூல், 18.23.*
8. *மேற்கண்ட நூல், 17.20.*

மனத்தின் தெளிவு, அன்புடைமை, மௌனம், தன்னடக்கம், பரிசுத்தமான நோக்கம் என்னும் மனத்தால் செய்யும் தவம் ஆகும்.[1]

நம்முடைய தூண்டுதல்களும், மனப்பான்மைகளும் உருவாவது குறித்து பலவகையான எண்ண ஓட்டங்கள் உள்ளன. அகப்பண்புகளுக்குப் புற வாழ்வுக் கூறுகளே காரணம் என்னும் கோட்பாட்டாளர் (behaviourist) சுற்றுச் சூழல்தான் மிகப் பெரிய பங்கினை வகிக்கிறது என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர். அகமுகமாகச் சிந்திப்பவர்கள் அதற்கு மாறாக, இயல்பான உணர்வுகள், இயற்கையான தூண்டுதல்கள் அல்லது உந்தவாக்கள், உறுப்பமைதி உடைய உயிரின் உள்ளியல்பானது ஆகும். மற்றும் நாம் சுற்றுச் சூழலின் விளைபயன் அல்ல. அல்லது வெளிப்புறத்தூண்டு தல்களின் எதிர்விளைபயன் அல்ல அல்லது வெளிப்புறத் தூண்டுதல்களின் எதிர்விளைவான உயிரினமும் அல்ல. உறுப்பமைதி உடைய உயிருக்கு (organism) அதற்கே மாறு பாடு அடைய வேண்டும் என்னும் பரிணாம வளர்ச்சி சார்ந்த தூண்டுதல் உள்ளது. (elan vital) சில உயிர்நூல் அறிஞர்களும் (Biologists) மற்றும் மனோதத்துவ நிபுணர்களும் நம்முடைய இயல்பான உணர்வுகளை குழந்தைப்பருவத்தில் தடம் காண்கிறார்கள். மற்றும் அவை எல்லாவற்றிகும் நமது பெற் றோர் மற்றும் மூதாதையர்களை உடைமையாக்கும் அள விற்குக் கூடச் செல்கிறார்கள்.

வேறுசில மேற்கத்திய சிந்தனையாளர்கள், வானுலகைச் சேர்ந்த சில உயிர்கள், அவர்களுடைய முழுமையான சொந்த உள்ளியல்பான இயல்புகளுடனும், விருப்பங்களுடனும் உணர்ச்சிகளுடனும் மனித உடல்களில் தோன்றுகின்றனர் என்று நம்புகின்றார்கள். தாமஸ் ஹக்ஸ்லி என்னும் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டு வல்லுனரான மற்றும் டார்வினின் ஆதரவாளருமான அவர், புலனறிவுடைய ஒவ்வொரு உயிரும் அது எதை விதைத்துள்ளதோ, அதையே அறுவடை

---

1. பகவத் கீதை, 17.14-17.

செய்கிறது. இப்பொழுது உள்ள வாழ்க்கையில் இல்லாவிட்டாலும், அல்லது முற்பிறவிகளின் வரையற்ற தொடர்களின் ஒன்றோ அல்லது மற்றொன்றோ, அவற்றில் இதுவே அண்மைப் பருவமாகும். பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டைப் போன்றே மறு பிறவிக் கோட்பாட்டின் வேர்களும் உண்மை உலகத்திலே உள்ளன என்பது அவருடைய முடிவாகும். நாம் உறுப்பமைதி உடைய உயிரில் உள்ளியல்பாக உள்ள சில இயல்புகளுடன் தோன்றியுள்ளோம். அதனால் தான் உறுப்பமைதி உடைய உயிரானது, வெளிப்புறத் தூண்டுதல்களுக்கு எவ்விதமோ அவ்விதத்திலேயே அது எதிர்ச் செயலாற்றுகிறது.

பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணர், 'உடலில் உறையும் ஆன்மாவிற்கு இவ்வுடலில் குழந்தைப் பருவம், இளமை, மூப்பு, எப்படியோ, அப்படியே வேறு உடல் அடைவதிலும் ஆகும்' என்று பண்டைய ஹிந்துக்களின் கருத்தைக் கூறியுள்ளார்.[1] 'மனிதன் எவ்வாறு நைந்துபோன துணிகளை எறித்துவிட்டு, வேறு புதியனவற்றை எடுத்துக் கொள்கிறானோ, அவ்வாறே உடலில் உறைபவன், நைந்து போன உடல்களை விட்டுவிட்டு வேறு புதியவற்றை அடைகிறான்'[2] ஆனால் நாம் நம் பழக்கவழக்கங்களையும் மனப்பான்மைகளையும் நம்முடன் சுமந்து செல்கிறோம். நம்முடைய பழக்க வழக்கங்களையும், மனப்பான்மைகளையும் தடம் கண்டு கொள்ள விழையும் நம் மூதாதையர்கள் நம்மைத் தவிர வேறு யாருமில்லை. நம்முடைய மூதாதையர்களைப் பலியாடு ஆக்குவதற்குப் பதிலாக மற்றும் நம்முடைய எல்லாக் கேடுகளுக்கும் அவர்களைக் குற்றம் கூறாமல், நம்முடைய தற்போதைய நிலைக்கு நம் மீதே எல்லாப் பொறுப்புக்களையும் முழுமையாக ஏற்று, இன்னும் சிறப்படைய வேண்டுமென்பதற்காக நம்மை மாற்றிக்கொள்ள முயற்சி செய்வோம். இதுதான் மிகச் சிறந்த நடைமுறைப்படுத்தத் தக்க கருத்து ஆகும்.

---

1. பகவத் கீதை, 2.13.
2. மேற்கண்ட நூல், 2.22.

நம்மிடம் உள்ள தேவரும் அசுரனும்

நாம் நம்முடைய அகஇயல்புகளை ஆராய்ந்து நோக்கினால், நம்முள்ளே நேர்மாறான ஆக்கக் கூறுகள் இருப்பதைக் காண்கிறோம். நாம் கடவுளையோ அல்லது அரக்கரையோ காண்பதற்கு நம்மிடமிருந்து வெளியே செல்லத் தேவையில்லை. அவை அனைத்தும் நம்மிடமே உள்ளன. பண்டையக் காலத்தில் இந்தியாவிலிருந்த முனிவர்கள் சிறந்த இயல்கடந்த உளநிலை ஆராய்ச்சியாளர்களாகவும், (Metaphysicians) மனோதத்துவ வல்லுனர்களாகவும் விளங்கினர். மற்றும் இதை உபநிஷதத்துக்களிலிருக்கும் பல உபகதைகள் வெளிப்படுத்துகின்றன. இவ்விதத்தில் பிரஹதாரண்யக உபநிஷதத்தில் தேவர்கள், மனிதர்கள் மற்றும் அசுரர்கள் என்னும் மூன்று வகையான உயிரினங்களைப் பற்றிப் படிக்கிறோம்— அவர்கள் அனைவரும் பிரஜாபதியின் குழந்தைகள் ஆவார்கள். முதலில் படைத்தவர் அவரிடமிருந்து போதனையை நாடினார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே அக்ஷரமான 'த' என்பதை அவருடைய போதனையாக அளித்தார். தேவர்கள் அதை 'உங்களுடைய புலன்களையும் மற்றும் மனத்தையும் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்' எனறு பொருள் கொண்டனர். மனிதர்கள் அதை, 'உங்களுடைய பேராசையைக் கட்டுப்படுத்திக் கொண்டு, தானம் போன்ற செயல்களைச் செய்யுங்கள்' என்று பொருள் கொண்டனர். மற்றும் அசுரர்கள் அதை, 'உங்களுடைய கொடிய இயல்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு அன்புடனும் இரக்கத்துடனும் இருங்கள்' என்று பொருள் கொண்டனர்.

மிகச் சிறந்த அத்வைத தத்துவ ஞானியான சங்கரர் இந்த உபகதைக்கு இவ்விதமான விளக்கம் அளித்துள்ளார். இங்கே தேவர்கள் எனவும், அசுரர்கள் எனவும் குறிப்பிடப்பட்டவர்களும் மனிதர்களைவிட வேறல்லர். ஒரே வகை மாதிரியைச் சேர்ந்த மனிதன், அவனுடைய தன்னடக்கம் தானம், தயை மற்றும் சத்துவகுணம், ரஜோ குணம், தமோ குணம் என்பனவற்றில் எது மிகுந்த ஆதிக்கம் செலுத்துகிறதோ

அதற்கு ஏற்றாற்போல் தேவர், மனிதன், அசுரன் என்று அழைக்கப்படுகிறான். அதனால்தான் ஒரே போதனையானது கேட்பவரின் மேலோங்கியுள்ள இயல்பிற்கு ஏற்றவாறு மூன்று வேறுபட்ட முறைகளில் புரிந்துகொள்ளப்பட்டது. மனிதர்களிடம் எவர்கள் எல்லா நற்குணங்களும் பொருந்தி யிருந்தும் இந்திரிய அடக்கம் அற்றவர்களோ, அவர்கள் தேவர்கள் ஆவார்கள். உலோபித்தனம் மிகுந்தவர்கள் மனிதர்கள் ஆவார்கள். ஹிம்ஸையும், கொடூர இயல்பும் மிகுந்தவர்கள் அசுரர்கள் ஆவார்கள். கூறப்பட்டுள்ள மூன்று முறைகளுமே மனிதன் பயிற்சி செய்வதற்காக உள்ளன. ஏனெனில் கடவுள், மனிதன், அசுரர் எல்லோருமே நம் மனித இயல்பினுள் வாசம் செய்கின்றனர். மற்றும் சமநிலை, நல்ல செயல்களைச் செய்தல், பேராசையையும், கொடூர இயல்பை யும் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் என்னும் இவற்றின் படித்தரத்திற்கு ஏற்ப நாம் தேவர்கள், மனிதர்கள் அல்லது அசுரர்கள் என்று அழைக்கப்படுகிறோம்.[1]

உபநிஷதத்தில் பலராலும் நன்கு அறியப்பட்டுள்ள இந்தப் பகுதி உள்ளது. 'ஒரு மரத்தில் அழகிய இறகுகள் கொண்ட இரு பறவைகள் அமர்ந்துள்ளன. இரண்டும் ஒன்றுடனொன்று மிகுந்த நேசம் பாராட்டுகின்றன. ஒரு பறவை அறியாமையால் மீண்டும் அந்த மரத்திலுள்ள பழங் களை உண்கிறது. மற்றொன்று பழங்களை உண்ணாமல் கம்பீரமாக அமைதியாக அமர்ந்துள்ளது. கீழ்க்கிளையில் அமர்ந்திருக்கும் பறவை, ரஜோகுணத்தால் தூண்டப்பட்டு மாறிமாறி இனிப்பும், கசப்புமான பழங்களைத் தின்பது மனிதனின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதைக் குறிப்பிடுகிறது. மேலே அமர்ந்திருக்கும் பறவைக்கு, சத்துவ குணம் மேலோங்கி இருப்பவர்களைப் போன்று, மரத்தின் கீழ்க்கிளைகளில் வளரும் பழங்களின்மீது நாட்டம் இல்லை. நொடிக்கு ஒரு தரம் ஒரு பொழுதும் நிறைவடை யாமல் அமைதியற்ற முறையில் பழங்களை தின்று

---

1. *பிரஹதாரண்யக உபநிஷதம், 5.2.1-3 (சங்கரரின் விளக்கம்).*

கொண்டிருக்கும் பறவை மேலே உள்ள பறவையைக் காண் கிறது. அது மிகவும் அமைதியாக உள்ளது. எந்தக் கணத்திலும் பறப்பதற்கு ஆயத்தமாக உள்ளது. மேலே உள்ள பறவை யிடம் இந்தப் பறவைக்குப் பெரிய அளவில் அன்பு ஏற்படு கிறது. அங்கு சென்று அதனுடன் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்பி முன்னே தாவும்பொழுது, மற்றொரு பழத் தைக் கண்டதால் நின்றுவிடுகிறது. இறுதியாக எப்படியிருப் பினும், மேல் நோக்கிய வளர்ச்சியைத் தடைசெய்யும் எல்லா வகையான விருப்பங்களையும் துறந்து, மேலே உள்ள பறவையைச் சென்று அடைவதில் இந்தப் பறவை வெற்றி யடைகிறது. வெற்றியடையும் பட்சத்தில் அவை இரண்டுமே உண்மையில் ஒன்றே என்பதைத்தான் கண்டு கொள்கிறது.[1] அப்பொழுது அந்தப் பறவை அறியாமையால் அது தன்னை ரஜோ குணத்துடன் அடையாளம் கண்டு கொண்டு இருந்தது, உலகியல் விருப்பத்தின் உணர்வுகள் ஏற்படுத்தும் சக்திகள் அவ்விதம் செய்கிறது என்று உணர்கிறது. இவ்விதம் அடை யாளம் கண்டு கொள்வது நின்று, அதன் மாற்ற இயலாத ஆன்மீக இயல்பை உணரும் தருணத்தில் விலங்குத் தன்மை யானது படிமாற்றம் அடைந்து எல்லையைக் கடந்து மேம்படுகிறது.

ஆன்மாவின் முகமூடிகள்

அறியாமையானது ஆபத்தானது ஆகும். ஏனெனில் அது நம்மை ஆன்மாவை மறக்கச் செய்து விடுகிறது. இந்த அறியாமையின் காரணத்தால் ஆன்மாவானது ஒரு முக மூடியை அணிந்து கொள்கிறது. நாம் உண்மையாக எதுவாக இருக்கிறோம் என்று கூறவியலாத அளவிற்கு ஒவ்வொரு முகமூடியாகப் புனைந்து கொள்கிறோம். வங்காளத்தின் மிகச் சிறந்த நாடக நடிகரான கிரீஷ், 'எங்களிடம் உள்ள சில நடிகைகளை ஒப்பனை செய்து முடித்த பிறகு என்னால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளவியலாது. அல்லது

---

1. முண்டக உபநிஷதம், 3.1.1-3. ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 4.6,7.

யார், யார் என்றே தெரியாது' என்று கூறுவார். அதைப் போன்றே ஆன்மாவானது ஒரு சூட்சும உடலைத் தரிக்கிறது. பிறகு ஒரு பரு உடலைத் தரிக்கிறது. அதன்பிறகு அதன்மீது எல்லாவகையான ஆடைகளையும், அதன் உண்மை இயல்பை அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்கும் வரையிலும் தரிக்கிறது. மற்றும் சிலநேரங்களில் நமக்கு நம் உண்மை இயல்பு என்ன என்று தெரியாமல் இருப்பதைப் போன்றே, மற்றவர்களையும் நாம் அடையாளம் கண்டு கொள்ள வியலாமல் இருக்கக் கூடும். அறியாமை என்னும் முகமூடி அழிக்கப்பட்டு முகமூடியின் மூலமே காண்பதற்குக் கற்றுக்கொண்டால் தவிர நம்மால் நம்முள்ளே உள்ள ஆன்மாவைக் காண இயலாது. நம்மை முகத்திரையுடன் இவ்விதம் தவறாக அடையாளம் கண்டு கொள்வதுதான் நம்முடைய துன்பத்திற்குக் காரணமாக உள்ளது. மற்றும் நம்முடைய பிணைப்பிற்கும் காரணமாக உள்ளது. ஆன்மா வானது தன்னுடைய ஆன்மீகத் தன்மையை உணர்ந்ததும், வான்பேருயிருடன் இணைந்ததும், துன்பமானது அகன்று விடும். மரத்தின் மேல்கிளையில் உள்ள பறவை எப் பொழுதும் அங்கேயே இருக்கிறது. அது தன்னுடைய அன் பிற்கு உரியவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

வேதாந்தம், மனமும், புலன்களும் ஆன்மாவின் சூட்சும மான உறைகள் ஆகும், நம் பரு உடலானது கண்ணுக்குத் தெரியும் உறை என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. இந்த இரு உறைகளுமே தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அவை ஏற்கனவே அங்குள்ள ஆன்ம ஒளியைப் பிரதிபலிக்க வேண்டும்.

நமக்கு மனம், உடல், மற்றும் ஆன்மாவைக் குறித்த தெளிவான கருத்து இருக்க வேண்டும். உடலிற்கும், மனத் திற்கும் உள்ள தொடர்பைக் குறித்து பலவகைப்பட்ட கருத்துக்கள் உள்ளன. உளநிலை மருத்துவ ஆய்வாளர்கள் (Psychoanalysts) தனிமனிதரை உடலும் மனமும் உள்ளவராக அல்லது மனமும், உடலும் உள்ளவராகக் கருதுவது இல்லை. ஆனால் ஒருங்கிணைந்த உடல்-மனம் உள்ளவர் என்று

கருதுகின்றனர்.[1] அவர்களுள் ஒருவர், 'மனமும் உடலும் ஒன்றுதான் மற்றும் பகுக்க இயலாதது. உன்னுடைய மனம் தான் உன் உடல், உன் உடல்தான் உன் மனம்' என்று கூறி யுள்ளார். இன்னும் வேறு சிலர் மனத்திற்கு உடலைவிட உயர்ந்த இடத்தை அளித்துள்ளனர். 'மனம் என்பது ஏதோ மூலப் பொருள் அல்லாதது ஆகும். அதைப்பார்க்க வியலாது தொட வியலாது. அளக்க வியலாது. நிறுக்க வியலாது. அது ஏதோ ஆன்மீகம் சார்ந்த ஒன்று ஆகும். நீ விரும்பினாய் எனின்[2] இது, உடல்-மன கோட்பாடுகளில் வளர்ச்சியடைந்த ஒன்று ஆகும். டாக்டர் யுங் இன்னும் ஒருபடி மேலே சென்று, 'அகங்காரம், முழுமையிலிருந்து பிரிந்துள்ள காரணத்தினால் கேடு அடைந்துள்ளது. மற்றும் மனித குலத்திடமிருந்தும், ஆன்மாவிலிருந்தும் தன்னுடைய தொடர்பை இழந்துள்ளது'[3] என்று கூறியுள்ளார். 'The Modern Man in Search of a Soul' என்னும் அவருடைய நூலிலிருந்து, மனமானது தூய்மையான ஆன்மாவிலிருந்து வேறுபட்டது, அது, அதனுடைய நுண்மை யான உறை மற்றும் கருவி என்பதை அவரும் உணரவில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது. மேற்கத்திய மனோதத்துவ இயலானது இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. மனிதனுடைய உண்மையான ஆன்மாவைக் கண்டு கொள் ளும் என்பதற்கு இன்னும் நேரம் வரவில்லை.

ஹிந்து முனிவர்கள் மனிதனுடைய பலவகையான உணர்வு நிலைகளைக் குறித்து ஆராய்ந்து அறிந்தனர். மனித னுடைய உண்மையான இயல்பைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் ஆராய்ந்தனர். வேதாந்தம் மனிதனின் மூன்று உடல்களைக் குறித்துப் பேசுகிறது. மனிதனின் இயல்பின் சாரம் தூய்மையான ஆன்மாவே ஆகும். முதலில் காரண உடல் உள்ளது. உணர்வற்ற அகங்காரம் உள்ளது.

---

1. E.A. Strecker and K.E. Appel, Discovering Ourselves (*நியூயார்க், மாக்மில்லன் கம்பெனி, 1954) பக்கம் 19.*

2. மேற்கண்ட நூல், பக்கம் 9.

3. Dr. Carl G. Jung, Modern Man in Search of a Soul (London, Routledge and Kegan Paul, 1953) *பக்கம் 141.*

அதில் ஆழ்ந்த உறக்க நிலையில் இருப்பது போன்று எல்லா வேறுபாடுகளும் செயலற்று உள்ளன. அடுத்தது சூட்சுமமான உடல் வருகிறது. அது தன்னுணர்வுடைய அகங்காரம் மனம், சூட்சுமமான நினைவுகளின் பதிவுகள், புலனறிவின் சூட்சும மான உறுப்புக்கள், செயல்களின் வித்துக்கள் என்று இவ் வனைத்தும் இணைந்த ஒன்றாக உள்ளது. அதன் அனைத்தும் கனவுகளில் வெளிப்படுகின்றன. ஆனால் உடல் சார்ந்த செயல்பாடுகளில் மூன்றாம் நிலையாக உள்ள விழிப்பு நிலை என்று கூறப்படுவது கனவு நிலையை விடச் சிறிது மேம் பட்டதாக விளங்குகிறது. உடலைச் சார்ந்த கண், காது, மற்றும் மற்ற புலன் உறுப்புக்களும் சூட்சுமமான ஆற்றல் களின் வெறும் கருவிகளாகவே உள்ளன. அவை அவற்றைக் காணும், கேட்கும் மற்றும் இதைப்போன்ற ஆற்றல்களாக வெளிப்படுத்திக் கொள்கின்றன. உடல் சார்ந்த வாழ்வின் ஒவ்வொரு நாளின் செயல்பாடுகளாக உள்ளன. உடல் சார்ந்த உறுப்புக்களின் பரு உடலானது சூட்சும உடலின் இருப்பிட மாகும். மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்படுகிறது.

இயல்புகளின் உரு மாற்றீடு
—ஆன்மீக மாற்றத்தின் முக்கியமான சோதனை

ஆன்மீகத்தில் நல்ல நிலையை அடைந்து, மற்றவர்களும் நல்லநிலையை அடைய வேண்டும் என்று வற்புறுத்தி, வெளிப்படுத்திக் கொள்ளும் மனிதர்களை நீங்கள் கண்டு இருக்கிறீர்களா? தாங்கள் எப்படி நல்லநிலையை அடைய வேண்டும் என்று கற்றுக் கொள்வதற்கு முன்பு அவர்கள் மற்றவர்களை நன்னிலைப் படுத்த விரும்புகின்றனர். போலி யாக மதம் மாறுவது பற்றிய ஒரு கதை உள்ளது. ஒரு ஞாயிற்றுக் கிழமை காலைப்பொழுதில் ஒரு சிறு பெண், ஒரு மளிகைக் கடையின் முன்பக்கக் கதவைத் தட்டினாள். மளிகைக்கடைக்காரரின் பெண்ணான அவளுடைய தோழி இரண்டாம் மாடியிலுள்ள ஜன்னலிலிருந்து ஒரு கணத்திற்கு தலையைக் காட்டி, ‘தோழியே, நாங்கள் அனைவரும் கூடாரத்தில், திறந்த வெளியில் நிகழ்ந்த சமயக் கூட்டத்திற்குச்

சென்று மதம்மாறி விட்டோம். உனக்கு ஞாயிற்றுக் கிழமை யன்று பால் வேண்டுமானால், நீ பின்பக்கத்திலுள்ள கதவு வழியாகத்தான் வர வேண்டும்' என்று கூறினாள். இதற்கு முன்பு அந்தக் கடையானது ஞாயிற்றுக் கிழமையன்று திறந்து வைக்கப்பட்டிருக்கும். ஆனால் இப்பொழுதிலிருந்து, முன் பக்கத்தின் கதவானது மூடப்பட்டிருக்கும். வியாபாரமானது வழக்கம்போல பின்பக்கத்திலுள்ள கதவின் வழியாக நடை பெறும். நம்மில் பலரும் பெருமளவில் இதையேதான் செய்ய முயற்சி செய்கிறோம். இந்த வகையான மதமாற்ற மானது பழைய வாழ்க்கையை விட மோசமானது ஆகும். உண்மையான மாற்றம் இருக்க வேண்டும். நாம் நம்முடைய வழிகளை ஏதோ ஒரு மேம்பட்ட நிலைக்காக மாற்றிக் கொள்ள வேண்டும். பாசாங்கான வாழ்க்கையைத் துறந்து, நாம் ஒழுக்க நெறியுடன் கூடிய பாதையை மனமார்ந்து பின் பற்றி, தமோ குணம், ரஜோ குணம் போன்றவற்றின் கீழான இயல்பை வெற்றிகொள்ள வேண்டும். மருள் நிறைந்த, தொல்லைகளை ஏற்படுத்தும் சக்திகளை சத்துவகுணத்தின் உதவியுடன் வெல்ல வேண்டும். சத்துவகுணமானது இசை வுடைமையுடன் கூடிய இயல்புடையதாகும். அது ஆன்மாவை ஆன்மீக வழியில் நிலைத்திருக்கச் செய்கிறது.

இந்தப் பாடத்தைத்தான் நாங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிறந்த சீடர்களின் திருவடிகளினருகில் அமர்ந்து கற்றுக் கொண்டோம். குருதேவர் உடல் உருவில் வாழ்ந்து கொண் டிருந்தபொழுது, சில பக்தர்களுக்கு என்ன ஆயிற்று என்பதை யும் அவர்கள் எங்களுக்குக் கூறினர். முக்கியமாக உடலுடன் கூடிய அவர் வாழ்வு முடிவடையத்தக்க சமயத்தில், ஆன்மீகத் தில் ஈடுபாடு கொண்ட பல சாதகர்கள் அவரைச் சுற்றியிருப் பார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த சீடரான சுவாமி விவேகானந்தர் அவருடைய சில சகோதர சீடர்கள், குருதேவ ரின் வியக்கத்தக்க இயற்கை கடந்த தெய்வீக வெளிப்பாடு களுக்காக அவர்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் குருதேவரின் தெய்வீக சக்தியானது அவர்களை எப்பொழுதும் மிக உயர்ந்த ஆன்மீக மனநிலைகளுக்கு

ஆழ்த்தியது. அவர்களின் சிலர் மெய்மறந்த அரையுணர்வு நிலையில் கண்ணீருடன் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கீழே விழுந்து விடுவார்கள். சுவாமி விவேகானந்தர் ஒருமுறை குருதேவரிடம், அவர் அத்தகைய நிலையை ஒரு பொழுதும் அடைந்ததில்லை என்று முறையிட்டார். தூய்மையான மனத்தையும், இதயத்தையும் பெற்றால் அது மிக உயர்ந்த ஆன்மீக அனுபவத்திற்கும், விடுதலைக்கும் அழைத்துச் செல்கிறது. அது மனித இயல்பையே முற்றிலுமாக மாற்றி விடுகிறது. மேலோட்டமான உணர்ச்சிகளும் காட்சிகளும் அதனுடன் ஒப்பிடப்படும் பொழுது மிகச் சிறிய விஷயங்கள் ஆகும் என்று குருதேவர் கூறினார். 'குழந்தாய், குழப்பம் அடைய வேண்டாம். ஒரு பெரிய யானை ஒரு சிறிய குளத்திற்குச் சென்றால், அங்கு மிகப் பெரிய குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் அது கங்கை நதியின் நீருக்குள் சென்றால் சிறிய குழப்பம்தான் ஏற்படுகிறது. இந்த பக்தர்கள் எல்லாம் சிறிய குளத்தைப் போன்றவர்கள். ஆனால் நீ அந்த நதியைப் போன்றவன்' என்று கூறினார்.[1]

குருதேவரின் போதனைகளைப் பின்பற்றியபடியே சுவாமி விவேகானந்தர், இளைய பக்தர்களிடம், உணர்ச்சிக் கனிவுகளின் வெளிப்பாடுகள், ஒத்த இசைவுடைய மாற்றத் துடன் தூய்மையான இயல்புடன் உலகியல் பற்றுக்களை அழிக்கவல்ல உறுதியுடன், ஆன்மீக விழிப்புணர்வு நிலையை ஏற்படுத்துதல் இயல்பாக நிகழவில்லை எனின் ஆன்மீக வாழ்வில் அவைகளுக்கு உண்மையான மதிப்பு இல்லை என்று கூறுவார். பலரும், ஆன்மீக வாழ்வின் கட்டுப்பாடுகள் மிகுந்த ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொள்வதற்கு விருப்ப மின்றி, பகட்டிற்காகச் செய்து போலியானவர்களாக ஆகிவிடு கின்றனர். ஒழுக்க நெறிமுறையின் நூலிழையை வலுப் படுத்தி, தூய்மைப்பாட்டினை அடைய வேண்டும் என்னும் அக்கறையற்றவர்கள், மிகப் பெரிய உணர்ச்சி வேகம் பாயும் வழிகளாகி, அவற்றின் தீவிரத்தைத் தாங்க இயலாமல் தங்கள்

---

1. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், *3.271-285.*

மனங்களின் ஆற்றலை இழந்து விடுகிறார்கள். ஆனால் உள்ளார்ந்து, உண்மையாக வழியைப் பின்பற்றி, அவர்களின் கடமைகளை வழிபாடுகளாகச் செய்து, அகத்தைத் தூய்மைப் படுதிக் கொள்வதற்கான பல்வேறு ஆன்மீக ஒழுக்க நெறி முறைகளைப் பின்பற்றுபவர்களுக்கு ஆன்மீக வாழ்வானது முற்றிலும் பாதுகாப்பானது ஆகும்.

நாம் ஆன்மீக வாழ்வில் இடறு குழிகளைக் குறித்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மற்றும் நம்முடைய இயல்புகள் மாற்றமடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அது தூய்மையான ஒழுக்க நெறிமுறைகளையும், வலிமை யையும் ஏற்படுத்துகிறது. இவ்விதத்தில் நம்மை உயர்ந்த ஆன்மீக அனுபவங்களைத் தயார் செய்கிறது. இது மட்டுமே நம்மிடம் விலங்குத்தன்மை மிகுந்த தமோ குணத்தை அல்லது அசுர இயல்பை மற்றும் ரஜோ குணம் உடைய வனை சத்துவகுணமுடைய கடவுளாக மாற்றி மற்றும் நாம் இறுதியாகக் கடவுளை உணர்வதற்கு வழிகாட்டியாக உள்ளது. அதுதான் வாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சியமாகும்.

இதற்கு முற்பட்ட அத்தியாயங்களில் நாம் ஏற்கனவே நம் இயல்பை தூய்மைப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பல வகையான நெறிமுறைகளைக் குறித்து விவாதித்துள்ளோம். நாம் மேலும் மேலும் சத்துவகுணத்தைப் பெற்றால் என்ன ஏற்படுகிறது என்பதில் ஒரு கணத்திற்கு ஆழ்வோம். சத்துவ குணத்தில் நிலைபெற்றுள்ள மற்றும் ஒழுக்கம், ஆன்மீக நெறிமுறைகளைப் பின்பற்றுவதால் ஏற்படும் விளைவான தூய்மைப்பாட்டில் நிலைபெற்றுள்ள ஒருவனுடைய அடை யாளங்களாவன. உடல் லேசாக இருக்கும். உடல் உணர்வால் ஒருவன் அழுத்தப்படுவதில்லை. புலன்கள் உறுதியானதாக வும், தெளிவுடையதாகவும் இருக்கும் ஒருவன் நல்ல சம நிலையை அடைகிறான். மனம் அகல் விரிவுடன் கூடிய விழிப் புணர்வை அடைகிறது. தெளிவடைந்துள்ள அறிவினால் மகிழ்ச்சி பொங்குகிறது. ஒரு புதிய ஆன்மீக விழிப்புணர்வு உதயமாகிறது. ஆன்மாவானது வான்பேருயிரைக் குறித்த உணர்வை எய்துகிறது. கீழ்க்கிளையில் உள்ள பறவையானது

நிலைத்த சாட்சியான, மேல்கிளையில் உள்ள பறவையைக் குறித்த விழிப்புணர்வை அடைகிறது. ஆன்மாவானது. தன்னை அகங்காரம், மனம், புலன்கள் மற்றும் உடலுடன் தவறாக அடையாளம் கண்டுகொண்ட சிக்கல்களிலிருந்து விடுபட்டு, வான்பேருயிருடன் இணையும் வரையிலும் மிக உயர்ந்த விழிப்புணர்வு நிலையின் மட்டத்திற்கு உயர்வடைகிறது. இதுதான் ஆன்மீகச் செயல்பாடுகளின் உச்சநிலையாகும்.

உபநிஷதம், 'பொன்னொளியுடன் ஒளிர்பவனும், தலைவனும், ஆள்பவனும், இறைவனுக்கான வழியாகவும் திகழ்கின்ற ஆன்மாவை எப்பொழுது ஒருவன் பார்க்கிறானோ, அப்பொழுது அந்த மகான் (ரிஷி) புண்ணிய பாவங்களை உதறிவிட்டு, துன்பமற்ற மேலான சமநிலையை அடைகிறான்' என்று சாற்றுகிறது.[1] மற்றும் ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் நமக்கு, 'எவருடைய தீவினைகள் ஒழிந்தனவோ, எவருடைய சந்தேகங்கள் தவிர்ந்தனவோ, எவருடைய புலன்கள் நன்கு அடங்கியவையோ, எவர்கள் எவ்வுயிர்க்கும் நன்மையையே நாடுபவரோ, அந்த ரிஷிகள் பிரம்மத்தினிடம் முக்தியை அடைகிறார்கள்'[2] என்று கூறியுள்ளார். இதுதான் தெய்வீக மனிதனின் இலட்சியம் ஆகும். இந்தச் சிறந்த இலட்சியத்தை அடைவதற்காக நாம் நம் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மீக இலட்சியமானது எப்பொழுதும் 'இலட்சியமாகவே' இருந்துவிடக் கூடாது. நமக்கு ஆன்மீகப் பயிற்சியானது எப்பொழுதும் 'பயிற்சி'யாகவே இருந்துவிடக் கூடாது. கடமைக்காகச் செய்யப்படுவதாக இருத்தல் கூடாது. அது நம்முடைய வாழக்கையை மாற்ற வேண்டும். நம் வாழ்க்கை உருமாற்றம் அடைய வேண்டும். என்றாவது ஒருநாள் நாமும் தெய்வீக மனிதனின் தூய்மைப்பாட்டையும் தெய்வீக உணர்வையும், அன்பையும் அடைய வேண்டும்.

---

1. யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்
கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோனிம் ।
ததா வித்வான் புண்யபாபே விதூய
நிரஞ்ஜன: பரமம் ஸாம்யமுபைதி ॥ —முண்டக உபநிஷதம், 3.1.3.
2. பகவத் கீதை, 5.25.

29
சாதனையில் எதிர்விளைவுகள்

ஆன்மீக வாழ்வு தடங்கல் ஓட்டப்பந்தயம் போன்றது

'ஸ்ரேயாம்ஸி பஹு விக்னானி'— (வாழ்வின் வளம், வெற்றியை அடையும் பாதையானது தடைகள் நிறைந்தது ஆகும்) என்று ஒரு இந்தியப் பழமொழி கூறுகிறது. ஆன்மீக வாழ்விற்கு இந்த உண்மை இன்னும் பொருந்தும். ஆன்மீக வாழ்விற்குத் திரும்பியவுடன், ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டுள்ள சாதகன் அந்தப் பாதையானது தடைகளும், கஷ்டங்களும் நிறைந்தது. அதில் நடந்து செல்வது என்பது அதிகமான அளவில் துன்பங்களுக்கு உட்படுதலாகும் என உணர்ந்து கொள்கிறான். அவன் உலகியல் வாழ்க்கையிலிருந்து விலகி, ஒப்புயர்வற்ற அமைதியையும், நிறைவையும் அடையும் நம்பிக்கையுடன் பிரார்த்தனை மற்றும் தியானத்தின் வழியை மேற்கொண்டுள்ளான். அவன் உலகத்திலுள்ள சமயங்களின் தலைசிறந்த அருளாளர்கள் அனுபவித்ததாகக் கூறப்படும் கடவுளுடன் ஒருங்கிணைந்து இருப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி, தியானம் செய்வதால் ஏற்படும் பேரின்பம் போன்றவற்றைப் பற்றிப் படித்துள்ளான். ஆனால் அவர்கள் செய்ததைப்போல தியானப் பயிற்சியை நீண்ட நேரத்திற்கு மேற்கொள்ள முயற்சி செய்தால், அவனுடைய ஊக்கத்துடன் கூடிய முயற்சியைத் தொடர்ந்து செயலாற்றவியலாத நிலையில் அவன் இருப்பதை உணர்கிறான். முதலில் அவனுக்கு எல்லாமே நல்ல முறையில் சென்று கொண்டிருப்பதைப் போலத் தோன்றும். சாதகன் அவனுடைய ஜபத்திலும், தியானத்திலும் கடுமையான பழக்க வழக்கங்கள் போன்றவற்றிலும் மகிழ்ச்சியடைந்தவனாகத் தென்படுகிறான். ஆனால் அதன் பிறகு விளைவுகள் ஏற்படுகின்றன.

ஒரு நாளைக்குச் சில நிமிடங்களுக்கு மட்டுமே தியானம் செய்பவர்களுக்கு இத்தகைய விளைவுகளைக் குறித்து எதுவும் தெரியாமல் இருக்கக்கூடும். ஆனால் ஜபம், பிரார்த்தனை, ஆழ்ந்து சிந்தித்தல் போன்றவற்றை நீண்ட நேரம் மேற்கொள்ளும் உண்மையான சாதகர்கள், அவர்கள் அகத்திலிருந்தும், புறத்திலிருந்தும் வரும் விளைவுகளை நிச்சயமாக எதிர்கொள்ள வேண்டிவரும். தியானம் என்பது மனத்தைக் கடைதல் போன்றதாகும். நாம் நம்முள்ளே மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு முயற்சி செய்யும் பொழுது நாம் மிகுந்த அளவில் மனத்தின் உணர்வற்ற பகுதியைக் கலக்குகிறோம். நாம் தியானப் பயிற்சியை மேற்கொள்ளும் வரையிலும், 'உணர்வற்றநிலை' என்று ஒன்று இருப்பதையே கவனித்து இருக்க மாட்டோம். நாம் அதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யும் பொழுது அது எதிர்க்கிளர்ச்சி செய்கிறது. மனத்திலே குழப்பத்தை ஏற்படுத்தும் எண்ண ஓட்டங்களை ஏற்படுத்துகிறது. அகத்தில் ஏற்படும் இந்தக் குழப்பங்கள், மற்றவர்களிடம் நம்முடைய செயல்கள் மற்றும் மனப்பான்மைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அது அதன் முறையில் நாம் வாழும் சமூகத்திடமிருந்து விளைவுகளை வரவேற்கிறது. இத்தகைய அகம் சார்ந்த, புறம் சார்ந்த எல்லா விளைவுகளுடன் கூடிய தியானம் சார்ந்த வாழ்வானது இன்பமான, இனியதான ஒன்று அல்ல என்பதை உணர்ந்து கொள்கிறான். அவன் ஆன்மீக வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு முன்பு மகிழ்ச்சியாக இருந்ததாக மீண்டும் மீண்டும் உணர்கிறான். பலரும், அவர்கள் தங்களுடைய பயிற்சிகளை நிறுத்திவிடும் அளவிற்குப் பெருமளவில் நம்பிக்கையை இழக்கிறாரக்ள். சிலர் கடமை உணர்வுடன் இயந்திர கதியில் அதை மேற்கொள்கின்றனர். வெகு சிலர் மட்டுமே பெரிய அளவிலான மனஉறுதியுடனும், தணியாத ஆர்வத்துடனும் படிப்படியாக முன்னேறுகின்றனர்.

நம் ஆன்மீக வாழ்வை விழிப்புணர்வுடன் சிறிது சிறிதாகக் கட்டியமைப்பது என்பது மிகவும் கஷ்டமான பணியாகும். அகத்திலும், புறத்திலும் புலன்கள் சீற்றத்துடன்

வீசிக் கொண்டிருக்கின்றன. மற்றும் உன்னால் அந்த இரண்டையும் தாங்கிக் கொள்ள இயல வேண்டும். அதன் பிறகுதான் உன்னால் கட்டமைக்க இயலும். நீங்கள் அனை வரும் சாதனையின் பொழுது மிகக் கஷ்டமான நேரங்களைக் கடந்து செல்ல வேண்டும். சிலர் செல்லும் வழியிலேயே விழுந்து விடக்கூடும் மற்றும் விட்டுவிடப் படுகிறார்கள். சில நேரங்களில் உங்கள் சிக்கல்கள் அதிகரிக்கவும் கூடும். உங் களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களின் சாதகமற்ற எதிர்ச் செயல்கள் என்னும் வடிவில் வரும் வெளிப்புறத் தடைகளும் அதிகரிக்கக் கூடும்.

சில நேரங்களில் உடல்கூட ஒவ்வொரு இயலத்தக்க விதத்திலும் முரண்டு பிடிக்க கூடும். மனமானது உளைச்சல் களால் நிறைந்து எதிர்த்து எழக்கூடும். நரம்புகள் மிகவும் துடிப்புள்ளவையாக விளங்கும். பழைய போக்குகளும் பழைய நினைவுகளும், பழைய விருப்பங்களும் பெருமள வில் பலமடைந்து, உடல் மட்டத்தில் வெளிப்பட விரும்பும். நாம் ஆன்மீக வாழ்வை மேற்கொள்ள விரும்பினால் நீண்ட காலத்திற்கு மேற்போக்கு இல்லாத அமைதிகுலைந்த நிலை களையும், நம்முடைய விருப்பங்களுடனும், உணர்ச்சி களுடனும் அவைகளைப் படிய வைப்பதற்கு முன்பு மட்டு மீறிய போராட்டங்களின் மூலமும் நாம் இத்தகைய சோதனை களைக் கடக்க வேண்டும். அப்பொழுது வாழ்க்கையானது ஒரு தடங்கல் ஓட்டப் பந்தயத்தைப் போல தோன்றும். தடை களை விஞ்சி மேம்படுவதற்கு முடிவே இல்லாமல் இருக் கும். மற்றும் நீண்ட காலத்திற்கு இடைஓய்வும் அளிக்கப் படாமல் இருக்கும். ஆன்மீக வாழ்க்கையை மிகவும் தீவிர மாகவும் உண்மையாகவும் மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் இவ்வனைத்தையும் உணர்வார்கள்.

விளைவுகளின் இயல்புகள்

சங்கரரால் எழுதப்பட்டது என்று கருதப்படும் சிறிய ஆய்வுக் கட்டுரையான அபரோக்ஷானுபூதி, சாதனையை

மேற்கொள்ளும் காலத்தில் எழும் தடைகளைக் கீழ்க் கண்ட வாறு வரிசைப்படுத்தியுள்ளது.

'சமாதி நிலையை மேற்கொள்ள முயலும் பொழுது தவிர்க்கவியலாமல் பல தடைகள் தோன்றுகின்றன. அவை ஆழ்ந்து ஆராய்வு செய்வதில் குறைபாடு, சோம்பலுடன் கூடிய முயற்சியற்ற தன்மை, புலனின்பத்தில் ஈடுபாடு, உறக்கம், ஊக்கமற்றதன்மை, கவனச்சிதறல், இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணம் மற்றும் ஒரு வெறுமை உணர்வு போன்றவைகளாகும். பிரம்மஞானத்தை அடைய வேண்டும் என்று விரும்புபவன், இத்தகைய கணக் கற்ற தடைகளிலிருந்து மெதுவாக விடுபட வேண்டும்.'[1]

பதஞ்சலி அவருடைய யோகசூத்திரத்தில் இதைப் போன்ற ஒரு பட்டியலைக் கொடுத்துள்ளார்.

'நோய், மனச்சோர்வு, சந்தேகம், ஊக்கமின்மை, சோம்பல், புலனின்பங்களில் பற்று, மதிமயக்கம், மனம் குவியாமல் இருத்தல், பெற்ற நிலையிலிருந்து வழுவுதல் என்னும் இவை தடைகள் ஆகும்.'[2]

நாம் இந்தத் தடைகளின் பட்டியல்களை ஆராய்ந்து பார்த்தால், இந்தத் தடைகள் அனைத்துமே நம்மால் ஏற் படுத்திக் கொள்ளப்படுபவை என்னும் முக்கியமான கருத்தைக் கவனிக்கலாம். அவை நம்முள்ளேயே தோன்றுகின்றன. அதற்காக மற்றவர்களைக் குறைகூறுவதில் எந்தப் பயனும் இல்லை. நாம் சாதனை புரியும் பொழுது பல்வேறு காலங் களில் தோன்றுகின்றன.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்யப்படும் ஆன்மீக முயற்சிகளுக்குப் பிறகு நமக்கு ஆன்மீக அனுபவம் ஏற்படு கிறது. அது பொதுவாக தற்காலிகமானது. மற்றும் ஆன்ம ஒளியின், 'கணநேரத்' தோற்றமாகவும் இருக்கும். அப் பொழுது பலரும் தாங்கள் ஆன்மஞானம் அடைந்து

1. *அபரோக்ஷானுபூதி, சங்கராச்சாரியர் பாடல், 128.*
2. *பதஞ்சலி யோகசூத்திரங்கள், 1.30;*
விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.118.

விட்டதாகவும் அதற்கு மேலும் அவர்களுடைய மனங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் அவசியம் இல்லை என்றும் நினைக்கின்றனர். அது மிகவும் ஆராய்ந்து அறியாமல் எடுக்கப்பட்ட முடிவாகும் என்பதை அவர்களே விரைவில் உணர்வார்கள்.

மனத்தில் சேர்ந்துள்ள அருவருக்கத்தக்க அழுக்கும், மாசும் அதனுடைய எல்லா மூலை முடுக்குகளிலிருந்தும் அகற்றப்படவில்லை எனின் நம்முடைய சிக்கலானது உண்மையாகத் தீராது. கதவிலுள்ள ஒரு துளையின் மூலமாக ஒரு அறையில் சிறிதளவு ஒளி உள்ளே நுழைய அறையின் மற்றப்பகுதிகளெல்லாம் இருள் சூழ்ந்து, தொடர்ந்து அழுக் குடன் இருக்குமானால் எதையும் சாதித்ததாக ஆகாது. மனத் திலுள்ளே ஒளியின் சிறு கீற்று உள்ளே நுழைந்து, அங்கே உள்ள அழுக்கு மற்றும் மாசு போன்றவை தற்காலிகமாக மனத்தின் ஆழத்திலுள்ள ஒரு மூலைக்குத்தள்ளப்பட்டால் அது உண்மையான ஆன்மீக ஒளியைப் பெற்றது என்று ஆகாது. அத்தகைய நிலையில் ஒரு மனிதன் இந்த வகையான 'கணநேரத் தோற்றத்தைக்' காண்பதற்கு முன்பு எந்த நிலையில் இருந்தானோ, அதே நிலையில்தான் இருக்கிறான். வெறும் நடைமுறைசாராத கோட்பாட்டுத் திட்டமும், தத்துவங்களும் அவை எத்தகைய ஆச்சரியமிக்கவையாக இருப்பினும், நமக்கு எந்த வகையிலும் உதவாது. நடை முறைப்படுத்துதல், மேன்மையடைதல், மனத்தின் இருண்ட மூலைகளிலுள்ள அழுக்கை அகற்றுதல்தான் தேவையான தாகும். மனத்தின் எல்லா விருத்திகளையும் முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறப்படுவது, சில மனிதர்கள் எண்ணுவதைப்போல நம்முடைய உடனடியான சிக்கல் அல்ல. மனத்தின் எல்லா விருத்திகளையும் நிறுத்து வதற்கு முயற்சி செய்து, மனத்தை வெறுமையாக்குவது தொடக்க நிலையில் இருப்பவனைத் தானே ஏற்படுத்திக் கொண்ட உறக்க நிலைக்கு அழைத்துச் சென்றுவிடும். மற்றும் எத்தகைய உண்மையான ஞான ஒளியையும் ஏற்படுத்தாது. அவர்களின் ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தில், மனத்தின்

விருத்திகளை முழுமையாக நிறுத்த வேண்டும் என்று பேசுகிறவர்களுக்கு அவர்கள் என்ன பொருள் கொண்டுள்ளார்கள் என்பதே தெரியாது.

விளைவுகளுக்கான காரணங்கள்

நம் ஆன்மீகப் பாதையைச் சிக்கல் நிறைந்ததாகச் செய்யும் பெரும்பாலான தடைகள், நம்முடைய கவனம் அற்ற வாழ்க்கை முறைகளால் ஏற்படுத்தப்படுகின்றன. தியானப் பயிற்சியையும் மேற்கொண்டு, அதே நேரத்தில் அதிகமாக உண்டு கொண்டு, அதிகமாக உறங்கிக் கொண்டு, அதிகமாகப் பணி செய்து கொண்டு, மிகவும் அதிகமாகப் பேசிக் கொண்டு அல்லது முட்டாள்தனமாகப் பேசிக் கொண்டு மற்றும் இதைப் போன்று வேறு சிலவற்றைச் செய்யும் மனிதர்களும் உள்ளனர். விதிக்குப் புறம்பான மற்றும் பொறுப்பற்ற தன்மையுடன் கூடிய வாழ்க்கை முறைகள் ஆன்மீக நாட்டத்துடன் ஒவ்வாதது ஆகும். ஒழுங்குவரையறையுடன் கூடிய வாழ்க்கையையும் ஒழுங்கான நல்ல பழக்க வழக்கங்களையும் பின்பற்ற இயலாதவர்களுக்கு ஆன்மீக வாழ்வானது இயலாத ஒன்றாகும்.

மேலே உள்ளனவற்றைத் தவிர, சாதனை செய்யும் காலத்தில் எதிர்விளைவுகள் ஏற்படுவதற்கு, மனம் போதுமான அளவிற்குத் தூய்மையற்றதாக இருப்பதுதான் மிகவும் வழக்கமாக உள்ள ஒரு காரணமாக உள்ளது. தியானம் சார்ந்த வாழ்வு முறையை மேற்கொள்ளும் பெரும்பான்மையான மனிதர்கள் அதன் நெறிமுறை சார்ந்த பகுதியின்மீது உள்ளார்ந்த கவனம் செலுத்துவது இல்லை. அவர்கள் தியானப் பயிற்சியை மேற்கொள்வதற்கு மிகவும் விருப்பத்துடன் உள்ளனர். மனச்சலிப்பூட்டும் ஆர்வமற்ற ஒழுக்க நெறிமுறைகளின் விவரங்களை அவர்கள் தவிர்த்துப் பக்க வழியாகச் செல்ல முயற்சி செய்கின்றனர். மனிதர்களுக்கு, எப்பொழுது ஆன்மீக வாழ்வின் மேம்பட்ட தன்மைகளைப் பற்றிய புத்தகங்கள் சுலபமாகக் கிடைக்கின்றனவோ, இந்த நவீன காலத்தில் மேலே கூறியுள்ளது மிகவும் பொருத்தமானதாகும். தியானம்,

ஆன்மீக விழிப்புணர்வு, குண்டலினி சக்தி எழும்புதல், காட்சிகள் போன்றவை ஈர்க்கும் தன்மை கொண்டனவாக, மிகவும் சுலபமானவை என்பது போலும் தோன்றுகின்றன. ஆனால் கட்டுப்பாடு மிகுந்த, நீதிநெறிமுறைகளுடன் கூடிய வாழ்வில்லாமல் அவற்றை அடையவியலாது. யாராவது ஏதாவது, உயர்ந்த அனுபவத்தை வெறும் முயற்சியால் அடையப் பெற்றால், எல்லா பழைய மனப்பான்மைகளும் பெரும் ஆற்றலுடன் தோன்றி, அவனைக் கீழே இழுத்துத் தள்ளிவிடும்' அது மீண்டும் மீண்டும் துன்பம் தரவல்ல வீழ்ச்சியாகவே இருக்கும்.'

மனமானது ஆசைகள் நிறைந்ததாக உள்ளது. அவை மனத்தை எல்லா திசைகளுக்கும் இழுக்கின்றன. உணர்வு அற்றநிலையின் அடி ஆழங்களிலிருந்து பலவகையான உணர்ச்சிகள் தொடர்ந்து எழுந்து, மனத்தை அமைதியற்ற தாகச் செய்து விடுகின்றன. பெரும்பாலான சாதகர்கள், இத்தகைய மறைந்துள்ள மற்றும் வெளிப்படையான சிக்கல் களுக்கு நடுவில் மனத்தைக் கட்டுப்படுத்துவார்கள். ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தில், சாதகனின் ஆர்வம் புத்துணர்ச்சி யுடன் இருக்கும் பொழுது, அவன் இத்தகைய மனம் சார்ந்த சிக்கல்களைப் புறக்கணிக்கக் கூடும். ஆனால் எப்பொழு தாவது அவைகள் அவற்றை உணரச் செய்கின்றன. அப் பொழுது, தொடக்கத்தில் இருந்த ஆர்வநிலை ஓரளவிற்குக் குறைந்திருக்கும். இந்தத் தடைகள் மேலும் உறுதியுடனும் கட்டுமீறியதாகவும் தோன்றுகின்றன.

சில சாதகர்கள், அவர்களுடைய ஆன்மீக உணர்ச்சி ஆர்வத்தில் மேலும் மேலும் பயனுள்ள மற்றும் உயர்ந்த விருப்பங்களையும் அடக்கிக் கொள்வார்கள். மனிதனுடைய அன்பு, இரக்கம் மற்றும் மேம்பட்ட அறிவு பூர்வமான நேரான, ஒழுங்கான, இயல்பான தேவைகளை மறுக்கும் உச்ச அளவிற்குச் செல்கிறார்கள். ஆன்மீக வாழ்க்கையின் தொடக்கத்தில் பெரும்பாலான சாதகர்களுக்குக் கெட்ட உணர்வுகளை எதிர்த்துத் தடைசெய்யும் நல்ல உணர்வுகளின் உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு வாசித்தல், பக்தி

இசை, சமூகசேவை போன்றவற்றின் உதவி தேவைப்படு கிறது. அவர்களுடைய கீழான உணர்வுகளை எதிர்த்துத் தடை செய்வதற்குத் தேவைப்படுகிறது. முதலில் கூறியுள்ளதை மறுப்பதன்மூலம், இரண்டாவதிடம் மிகவும் சுலபமாக இரையாகி விடுகிறார்கள். மிகவும் உன்னதமான நல்ல உணர்வுகளும் மிக உயர்ந்த தரமான ஆன்மீக அனுபவத்தைப் பெறுவதற்குத் தடையாக உள்ளன என்பது உண்மையாகும். ஆனால் அது மேம்பட்டுள்ள சாதகனுக்கு உரிய சிக்கலாகும். ஆனால் தொடக்க நிலையிலுள்ள ஆன்மீக அனுபவம் என்றால் என்ன என்றே தெரியாத ஆரம்பநிலையிலுள்ள சாதகனுக்கு, அத்தகைய நேரடியான அனுபவம், வாசித்தல், வாழ்க்கையின் கடமைகளைச் சரவரச் செய்தல், புனிதமான மனிதர்களுக்குத் தொண்டு செய்தல் போன்றவற்றிலிருந்து கிடைக்கும் மனவலிமையை அடையாத சாதகனுக்கு சில நேரத்திற்குத் தேவைப்படுகின்றன. எல்லா சமயங்களைச் சேர்ந்த ஆச்சாரியர்களும் சாதகன் கீழ்க் கண்டவற்றைப் பின்பற்ற வேண்டும் என்று அனுபவ அறிவுடன் வலியுறுத்து கின்றனர். ஒரு சாதகன் தன்னை ஆணவத்துடன் இத்தகைய எல்லா பூர்வாங்க உதவிகளிலிருந்தும் பிரித்துக் கொண்டு, பொய்யான உள் வலிமையை நம்பிக்கையுடன் சார்ந்து இருப்பது ஆபத்தானது ஆகும். உண்மையான ஆன்மீக அனுபவத்தின் பேரின்பத்தை உணராதவரையிலும், கீழான இன்பங்களின் மீது உள்ள விருப்பங்கள் ஏதாவது ஒரு வகை யில் எதிர்த்து நிறுத்தப்பட வேண்டும். தொடக்க நிலையில் இருப்பவனுக்கு தியானத்தால் மட்டுமே எப்பொழுதும் இதைச் செய்ய இயலாது. ஐயத்திற்கு இடமின்றி விதிவிலக் காக மனத்தூய்மையைப் பெற்றுள்ள மற்றும் கடவுளைக் காண வேண்டும் என்றும் தீவிரமான விருப்பம் உடைய சாதகர்களின் நிலை வேறுபட்டது ஆகும். ஆனால் அத்தகைய மனிதர்கள் மிகவும் அரிதாகத்தான் இருக்கின்றனர்.

சாதனை செய்யும் காலத்தில் எதிர்விளைவுகள் ஏற்படு வதற்கான மூன்றாவது காரணம், சாதகன் மிக அதிகமாக முயற்சி செய்வதாகும். பல சாதகர்களால், தொடக்க

காலத்தில் நீண்ட நேரத்திற்கு உள்முகமாக ஆழ்ந்து சிந்திக்க வியலாது. தொடர்ந்து செய்யப்படும் தியானத்தால் ஏற்படும் உடல் மற்றும் மனம் சார்ந்த அழுத்தத்தை, சுமையைத் தாங்கிக் கொள்ளக் கூடிய வலிமையான நரம்புகளின் ஆற்றல் அவர்களிடம் இல்லை. இத்துடன் கூடுதலாக அவர்கள் பிராணாயாமப் பயிற்சிகளையும் (பொதுவாக, சரியான வழிகாட்டுதல் இல்லாமல்) மேற்கொள்கின்றனர். மற்றும் பலவகையான கடுமையான பழக்க வழக்கங்களையும் மேற்கொள்கின்றனர். உடலிற்கு வழக்கமாக அளிக்க வேண்டிய உணவையும், ஓய்வையும், உறக்கத்தையும் அளிக்காமலிருப்பது, ஒரே ஆசனத்தில் நீண்ட நேரத்திற்கு அமர்ந்து மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி செய்வ தால் ஏற்படும் அழுத்தத்தை மிகுதிப்படுத்துகிறது. இதன் விளைவாக மனத்தின் ஆற்றல்கள் சோர்வடைகின்றன. அல்லது நரம்புகள் சீர்குலைவதால், அது அடுத்தடுத்துப் பல கவலையளிக்க கூடிய சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. சாதகன் அவனுடைய உடல் சார்ந்த மற்றும் மனம் சார்ந்த ஆற்றல்களைக் குறித்து புறவாய்மை உடையவனாக இருக்க வேண்டும். நரம்புகளைப் பாதிக்கும் அளவிற்கு மிகுந்த உணர்ச்சி வசப்படுபவர்கள், திடீரென்று அதிக அளவிற்குத் தியானம் செய்ய முயற்சித்தல் கூடாது. அவர்கள் மெதுவாகச் செய்ய வேண்டும். சிறிய அளவுள்ள எண்ணிக்கையில் சாதகர்கள், தீவிரமான விருப்பம் மற்றும் பெரிய அளவில் மன உறுதியையும் பெற்றுள்ளனர் என்பது உண்மைதான், ஆனால் கண்மூடித்தனமாக அவர்கள் செய்வதைப் போலச் செய்வதற்கு முயற்சி செய்தல் கூடாது. உன்னுடைய இயல்பை கூர்ந்து ஆராய்ந்து, உன்னால் எந்த அளவிற்குச் சுமையைத் தாங்க இயலும் என்று கற்றுக்கொள்ள வேண்டும். இயல்பாகவே உணர்ச்சி வசப்படும் தன்மை உள்ளவர்களும் பலவகையான திட்டங்களைக் குழப்பத்துடன் மூளையில் ஓட விட்டுக் கொண்டிருப்பவர்களும், தொடர்ந்து அமர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேல் தியானம் செய்யும் ஆர்வச் சோதனையைத் தவிர்க்க வேண்டும். தியானத்தைத்

தொடர்ந்து நீண்ட நேரம் செய்வதற்கு ஒருவருக்கு அமைதியாக, கிளர்ச்சியற்ற மனப்பான்மை தேவைப்படுகிறது. மேலும் மூளையானது, கட்டுப்பாட்டுடன் கூடிய பிரம்மச் சரியத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஊட்டமளிக்கப்பட வேண்டும். தன்னடக்கம் அற்றவர்களின் மூளைகள், சுலபத்தில் சூடுஏறிவிடும் தன்மை உடையனவாகும்.

ஏற்கனவே சிறிதளவு முன்னேற்றம் அடைந்துள்ள சாதகர்களுக்கு வேறு வகையான எதிர்விளைவுகள் ஏற்படுகின்றன. ஒரு வெறுமை நிலை மிகவும் பொதுவாகக் காணப்படும் உணர்வு ஆகும். பல நாட்களுக்கு, பல வாரங்களுக்கு நல்ல தியானம் செய்து, அதை உணர்ந்து மகிழ்ந்த பிறகு, சாதகன் திடீரென்று தியானத்தை மேற்கொண்டு செய்வதில் ஈடுபாட்டை இழந்துள்ளதாக உணர்கிறான். அவனுக்கு ஒருமுகப் படுத்துவது கஷ்டமாக இருப்பதை உணர்கிறான். அவன் ஏதோ வெற்றிடத்தில் மிதப்பதாக உணர்கிறான். இது பொதுவாக ஒளிமிக்க அகக் காட்சியைக் காண்பதால் ஏற்படும் எதிர்விளைவு ஆகும். உன்னுடைய இஷ்ட தெய்வத்தைத் தீவிரமாக அகக்காட்சியில் கண்டு சிலநேரத்திற்கு அந்த மகிழ்ச்சிக்கு உட்பட்டு வெற்றி கண்டால் அதற்குப் பிறகு உன்னால் அகக்காட்சியை உருவாக்க வியலாது என்று கண்டு கொள்கிறாய். நீ முற்றிலும் திக்கற்ற நிலையில் இருப்பதைப் போல உணர்வாய். நீ இஷ்ட தெய்வத்தின் உயிர்த் தோற்றத்துடன் உள்ள தொடர்பை இழந்து விட்டதாக உணர்கிறாய் மற்றும் இது மிகப் பெரிய துயரத்தை ஏற்படுத்துகிறது. அத்தகைய சூழ்நிலைகளில் உள்ளே உள்ள ஆன்மாவானது, எப்பொழுதும் கடவுளிடம், எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை நினைவில் கொள்வது நல்லது ஆகும். உன்னுடைய கற்பனையும் உன்னைத் தோல்வியுறச் செய்யும் பொழுது, உண்மையாக நீ எதையும் இழந்து விடவில்லை. இத்தகைய வெறுமை நிறைந்த சமயங்களில் அவை எவ்வளவு சோதனையைக் கொடுத்தாலும் ஒருவர் அவருடைய விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக் கொண்டு ஜபத்தை மேற்கொள்ள வேண்டும்.

சாதனையின் பொழுது ஏற்படும் எதிர்விளைவுகளுக்கு இன்னும் ஒரு காரணமும் உள்ளது. அதாவது ஒருவருடைய விழிப்புணர்வு மையத்தை மாற்றுவதால் ஏற்படுவதாகும். ஆன்மீக வாழ்க்கைற்குத் திரும்புவதற்கு முன்பு, ஒரு சராசரி மனிதனின் விழிப்புணர்வானது, கீழாக உள்ள மையங் களிலேயே இயங்கிக் கொண்டிருக்கும். அவனுடைய பொது வான வாழ்க்கையானது உண்பது, உறங்குவது மற்றும் புலன் இன்பங்களைத் துய்ப்பது போன்றவற்றையே சார்ந்து உள்ளது. ஆன்மீக வாழ்விற்குத் திரும்பிய பிறகு அவன் தன்னைக் கீழான எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பது இல்லை. அவன் மேம்பட்ட எண்ணங்களின் தேவையை உணர்கிறான். இதற்கு விழிப் புணர்வு மையத்தை மாற்றுவது என்று பொருள் ஆகும். உன்னுடைய விழிப்புணர்வு மையத்தை இதயம் அல்லது தலை உள்ள மட்டத்திற்கு மாற்றுவதற்கு முயற்சி செய்யும் பொழுது இந்த மையங்களில் நீண்ட நேரத்திற்கு உன்னால் தொடர்ந்து இருக்கவியலாது என்பதை நீ உணர்கிறாய். அப்பொழுது நீ உனக்கு நிலையான விழிப்பணர்வு மையம் இல்லை என்று கண்டு கொள்கிறாய். இது மனத்தில் ஆழங் காணவியலாத அமைதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது.

எத்தகைய அகத் தொடர்புமின்றி, பொருட்களுடன் செயல் தொடர்புகொண்டு இந்த உலகத்தில் வாழ்வது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் அனுபவமாகும். சாதகன், அவ னால் மேலான விழிப்புணர்வு மையத்தில் இஷ்ட தெய்வத் தைக் குறித்துத் தியானம் செய்யவோ, அல்லது அவன் முதலில் செய்ததைப் போல, கீழான மையங்களில் நாட்டம் கொண்டு உலகியலை அனுபவிக்கவோ அவனால் இயல வில்லை என்று கண்டு கொள்கிறான். அகங்கார உணர்வு ஒரு நிலையின்றி அலையும் பொழுது, சாதகன் தன்னைப் பற்றிய உறுதியில் ஐயுறவுகொள்கிறான். அதன்பிறகு அவனுடைய இயல்புகளும், நடத்தையும் சிறிது காலத்திற்கு நிலையற்ற தன்மையில் இருக்கும். இது ஆன்மீக முன்னேற்றத்தின் போக்கில் தவிர்க்கவியலாத நிலை ஆகும். ஒருவர் இந்த

நிலையை எவ்வளவு விரைவில் விஞ்சி மேம்படுகிறார் என்பதுதான் சிக்கலானதாகும். சில சாதகர்கள் மேன்மையான நிலை மற்றும் ஏளனத்திற்கு ஆட்பட்டநிலை என்னும் இரு நிலைகளுக்கு நடுவில் ஊசலாடிக் கொண்டு இந்த நிலை யிலேயே நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து நீடித்திருப்பார்கள். வேறுசில சாதகர்கள், நிலையாகப் பழைய வழிகளுக்குச் சென்று, அவர்களுடைய விழிப்புணர்வு மையத்தைப் முன்பு செய்ததைப் போன்றே கீழான மையங்களில் இருத்திக் கொண்டு விடுவார்கள்.

தெய்வீக விழிப்புணர்வுடன் உன் விழிப்புணர்வைத் தொடர்புபடுத்துவாய்

ஆன்மீக விழிப்புணர்வு, நம் தனிப்பட்ட விழிப்புணர் வின் நீட்சியாக இருக்க வேண்டும். நாம் நம்முடைய சொந்த விழிப்புணர்வின் அடித்தளத்தில் உறுதியுடன் நின்று கொண்டு, அதன் பிறகு ஆன்மீக விழிப்பு உணர்வைப் பெற வேண்டும். புள்ளியானது மிகவும் நிலைத்தன்மையுடன் உறுதியானதாக இருக்க வேண்டும். அதன் பிறகு முழு வட்டத்துடன் சரியான சுருதியுடன் இருக்க வேண்டும். ஒரு நிலைத்த, உறுதியான இலக்குக்குறி இல்லாமல் வட்டத்தின் எந்த நேருணர்வையும் பெற இயலாது. நான் இருக்கும் பொழுதுதான் கடவுள் இருக்கிறார். நான் எல்லாக் குழப்பங் களிலிருந்தும் விடுபட்ட ஆன்மா ஆவேன். இந்த 'நான்' என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். வரையறைக்கு உட் பட்ட தொடர்ந்து குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ள மற்றொரு 'நான்' அகற்றப்பட வேண்டும். நாம் நம்முடைய விழிப்புணர்வைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் நம் விழிப்புணர்வு மையமானது, பொய்யான அகங்காரத்திலிருந்து, உண்மையான ஆன்மாவிற்கு மாற்றப் பட வேண்டும். நாம் எப்பொழுதும் நம்முடைய மேம்பட்ட விழிப்பு உணர்விலேயே ஆழ்ந்து இருக்க வேண்டும். சில நேரங்களில் நாம் நம்முடைய சொந்த விழிப்புணர்வில் வேர் ஊன்றி இல்லாமல் வரையறையற்றதில் மிதக்க

விரும்புகிறோம். நாம் ஒரு சமயத்திலும் நிலைகுலைந்து (வேர் ஊன்றாமல்) இருத்தல் கூடாது. நம்முடைய வேர்கள் எங்கேயாவது பாய்ந்து கொண்டிருக்க வேண்டும். நாம் நம்முடைய வேர்களைத் தவறான நிலத்திலிருந்து அகற்றி னால், நாம் உடனடியாக நம் உண்மையான தன்மையில் வேரூன்றி இருக்க வேண்டும். மற்றும் நம்மை நிலை குலைந்து இருப்பதற்கு அனுமதித்தல் கூடாது.

பக்தர்கள் அவர்களுடைய தியானத்திற்கு உரிய பொருளைப் பற்றி நினைக்கும்பொழுதும் மற்றும் வடிவத் தைத் தெளிவாகக் காணும் பொழுதும் அவர்களால் தொடர் பையும் ஏற்படுத்திக்கொள்ள இயல வேண்டும். இல்லை யெனில் அவர்கள் கற்பனை உலகத்தில் மிதப்பார்கள். ஒருவர் அவருடைய விழிப்பு உணர்வை அவருடைய தியானத்திற்கு உரிய பொருளான இஷ்ட தெய்வத்தின் விழிப்புணர்வுடன் தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். ஒருவர் இதைச் செய்யவில்லை எனின், உள்ளார்ந்த குழப்பங்களும் அமைதி யற்ற தன்மையும் தொடரும். மற்றும் நீடித்த பயிற்சியின் குறிக்கோளை அடைய இயலாமல் ஆகிவிடும். உன்னுடைய இஷ்ட தெய்வத்துடன் நேரடியான உயிர்த்துடிப்பின் இருப்பு உனக்கு இல்லையெனின் நீ காற்றில் பறப்பதைப்போல உணர்கிறாய். மற்றும் நிலைகுலைந்து போகிறாய். உன் னுடைய சொந்த விழிப்பு உணர்வு அதனுடைய ஆதாரத்தை இழக்கிறது. நீங்கள் உங்களை அந்தப் பொய்யான அடித் தளத்திலிருந்து இயன்ற அளவிற்கு மிக விரைவாகவும் மிக வும் உறுதியுடனும் வேருடன் பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் நேரடியான இருப்பானது பெருமளவிற்கு வலியுறுத்தப்பட வேண்டும். பிறகு நீயும் ஒரு அக அமைதியை உணர்வாய். இஷ்ட தெய்வம் என்பது கற்பனை அன்று, நீ இஷ்டதெய்வத்தின் வடிவத்தைத் தெளிவு படுத்திக் கொண்டவுடன், இஷ்ட தெய்வத்தின் இருப்பானது ஏதோ ஒரு உண்மையாகும். இது மிக முக்கியமான கருத்து ஆகும். பயிற்சியானது சரியான முறையில் செய்யப்பட்டால் நீ

வரையற்ற வலிமையையும், அமைதியையும், மோன அமைதியையும் உணர்வாய். உன் இதயத்தில் பேரின்பக் கலன் வைக்கப்பட்டு இருப்பதைப் போன்ற ஆழ்ந்த அக அமைதியை உணர்வாய்.

தற்பொழுது உள்ள உன்னுடைய பயிற்சியின் பல தீய விளைவுகள், தேவையான தொடர்பை ஏற்படுத்திக் கொள் ளாமல் மற்றும் உன்னுடைய சொந்த விழிப்புணர்வை உன் இஷ்ட தெய்வத்தின் விழிப்புணர்வுடன் தொடர்புபடுத்திக் கொள்ளாமலும், உன்னுடைய இஷ்ட தெய்வத்தைத் தெளி வாக வடிவமைப்பதால் ஏற்படுகிறது. ஆன்மீக வாழ்வில் எப்பொழுதுமே அத்தகைய ஒரு நெருக்கடி ஏற்படும். அது தங்களுடைய பயிற்சிகளைத் தீவிரமாகவும், ஒழுங்காகவும், கடமையுணர்ச்சியுடன் செய்யும் அனைவருக்கும் ஏற்படு கிறது. உண்மையாக முன்னேறியிருந்தால் மற்றும் உண்மை யாகவே தியானத்தை ஊக்கத்துடன் செய்பவர்களுக்கும் அது ஏற்படுகிறது. இந்த அமைதியற்ற நிலையிலிருந்தும் நெருக் கடியிலிருந்து யாருமே விட்டு வைக்கப்படுவது இல்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய ஆன்மீக குருவிடம் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் மற்றும் தங்களுடைய பயிற்சிகளைக் குறித்தும் விவாதிக்க வேண்டும். சிலருக்கு ஆவதைப் போல எத்தகைய கஷ்டங்களும் ஏற்படவில்லை எனின் ஏதோ தவறு இருக்கிறது என்பது பொருளாகும். அவர்களில் பயிற்சிகள் பயனளிக்கக் கூடிய வகையில் இல்லை.

ஞானியைப் பொறுத்தமட்டில் நெருக்கடிகளின் உக்கிரம் மிகமிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. சமநிலையும், ஆராய்ந்து காணும் தன்மையும் பெருமளவில் உள்ளது. இருப்பினும் அங்கும் சில நெருக்கடிகள் கண்டிப்பாக ஏற்படும். ஆனால், பக்தனுக்கும், ஞானிக்கும் ஆன்மீக உணர்வானது எல்லாச் சூழ்நிலைகளிலும் தனிப்பட்ட விழிப்புணர்வின் நீட்சியாகவே இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உன் முயற்சியைக் கைவிடாதே

நம் அனைவருக்கும், உடல் சார்ந்த, மனம் சார்ந்த இந்த எதிர்விளைவுகள் வரும்— மற்றும் நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சியுடன் இந்த எதிர்விளைவுகளைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலையும் அதிகப்படுத்திக் கொள்ள வேண் டும். பல மனிதர்கள் இந்த எதிர் விளைவுகளுக்கு ஆட்பட்டு நிலைகுலைந்துபோகின்றனர். பலர் சில காலத்திற்கு முற்றி லும் அமைதியற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்வதற்கு முன்பு இருந்ததை விட மோசமான நிலையை அடைகின்றனர். கீழே உள்ள மையத்திலிருந்து மேம்பட்ட மையத்திற்கு உன் விழிப் புணர்வு மையத்தை மாற்ற வேண்டும் எனின், நீ அமைதியற்ற நிலையுடன் கூடிய காலத்தைக் கடக்க வேண்டும். மனிதர்கள் உலகியல் வாழ்க்கையை மேற்கொண்டு இருக்கும் பொழுது, அவர்களுக்கு உண்மையாக இத்தகைய பண்பு வேறுபாடு களைக் குறித்த விழிப்புணர்வு இருப்பதில்லை. ஆனால் ஆன்மீகப் பயிற்சியானது சரியான முறையில் மேற்கொள்ளப் பட்டால், எப்பொழுதும் பலவகையான அடி உணர்வுத் தள ஓட்டங்கள் எழுகின்றன. மற்றும் இது அமைதியற்ற தன்மைக்கு வழி காட்டுகிறது. அடுத்தடுத்து, அத்தகைய சூழ்நிலைகளில் எத்தகைய ஆற்றலும் எஞ்சியிருப்பதில்லை. சில நேரங்களில் நீண்ட காலத்திற்குக் குழப்பமும், உறுதியற்ற தடுமாற்றமும் ஏற்படுகிறது. மற்றும் ஒழுக்க நெறிமுறை களில் நிலையற்ற தன்மையும் ஏற்படுகிறது.

அவர்கள் இத்தகைய சோர்வடைந்த நிலைகளில் இருக் கும் பொழுது, அதை திடத்துடன் அதிகப்படுத்திக் கொள் வதற்குப் பதிலாக ஆன்மீகப் பயிற்சியை விட்டுவிட வேண் டும் என்று கருதுகின்றனர். அப்படி அவர்கள் விட்டுவிட் டார்கள் எனின், ஆன்மீகத்தைப் பொறுத்த வரையில் அவர் களின் கதி அதோகதிதான். கேடார்ந்த வீழ்ச்சியை அவர்களால் தவிர்க்க இயலாது. மற்றும் அதிலிருந்து நீண்ட காலத்திற்கு அவர்களால் மீள முடியாமாலும் இருகக் கூடும். எனவே

அத்தகைய நேரங்களில் ஒருவருடைய ஆன்மீகப் பயிற்சியை விட்டுவிடுவது மிகவும் தீங்கானது ஆகும். மற்றும் ஆபத்தானதும் ஆகும். அதை இன்னும் அதிகமாகவே பற்றிக் கொள்ள வேண்டும். அதை மேலும் தீவிரமானதாகவும், பயனுள்ளதாகவும் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அமைதியான, நிலைத்த, ஒருமுனைப்பாட்டுடன் மற்றும் விடாப்பிடியுடன் கூடிய ஜபம் மற்றும் தியானத்தின் செயல்பாடு கட்டுப்பாடுடன் கூடிய ஒழுக்க நெறிமுறைப் பண்பாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். இவ்விதம் செய்யாத அனைவரும் முன்போ அல்லது பின்போ வெளியேற்றப் படுகிறார்கள். மற்றும் அவர்களால் இலட்சியத்தை அடைய இயலாது.

இயமம் மற்றும் நியமத்தின் முறைமைகளை செயல் படுத்தாதவனால் எதையுமே அடைய வியலாது.[1] எல்லாப் பக்கங்களிலிருந்தும் அவன் மீது விழும் உளைச்சல்களையும் அழுத்தங்களையும் அவனால் தாங்கிக் கொள்வதற்கு இயலாதபடி அவனுடைய ஆற்றலானது மிகவும் குறைந்த அளவில் உள்ளது. அதனால்தான் எந்த ஒரு சாதகனும் தேவையற்றவாறு உடல் சார்ந்த, மற்றும் மனம் சார்ந்த வழிகளின் மூலம் ஆற்றலை வீணடிப்பதற்கு வாய்ப்பினை அளித்தல் கூடாது. ஒழுக்கம் சார்ந்த நெறிமுறைகளைக் குறித்து ஏன் அத்தனைக் கட்டுப்பாட்டுடன் இருந்தனர்? மற்றும் இயமம் நியமம் சார்ந்த விதிமுறைகளை எதற்காக விதித்து வற்புறுத்த வேண்டும் என்பதையும் பண்டைக் கால ஆச்சாரியர்கள் முழுமையாக நன்றாக அறிந்திருந்தனர். இந்த விதிமுறைகள் நிறைவேற்றப்படவில்லை எனின் நரம்புகள் சீர்குலைதல் பெரிய அளவில் நம் சக்திகள் பலகீனமாதல் மற்றும் பெரிய அளவில் புலன்களுக்கு அடிமைகள் ஆவதும்தான் விளைவாக இருக்கும். இந்த அனைத்தும் வெறும் கோட்பாட்டுத் திட்டம் என்று நினைத்தல் கூடாது. ஆன்மீக வாழ்வின் இந்த தொடக்க கால நிலைகளை நாமும் கடந்து வந்துள்ளோம். மற்றும்

1. அத்தியாயங்கள், 9,17 & 18.

நம்முடைய சிறந்த ஆச்சாரியர்களிடமிருந்துப் பலவற்றைப் பார்த்தும், கேட்டும் இருக்கிறோம், இவை பழைய மரபுகளைச் சார்ந்த, பழைய சுவடிகளில் காணப்படும் வெறும் புத்தகம் சார்ந்த ஞானம் அல்ல.

சாதனையின் முதல் கட்டமானது, ஒருவர் இத்தகைய எல்லா விதமான பெருமளவான எதிர்விளைவுகளை மேற்கொள்ளும்பொழுது, அது ஒரு பெரிய சோதனை முயற்சி நிறைந்த காலமாகும். ஒருவருக்குப் பொறுமையும், விடாப்பிடியான முயற்சியும் இருக்க வேண்டும். அதன்பிறகு நல்ல நாட்கள் வரும். ஆற்றல் வாய்ந்த மனத்தின் சக்தியானது கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் நம்மால் அசைவதற்குக் கூட சக்தியைப் பெறவியலாது. நமக்கு உறுதியான உடலும், உறுதியான மனமும் இருப்பினும், நாம் மட்டுமீறிய பயத்தையும் அமைதியற்ற தன்மையையும் உணரும் ஒரு காலம் வரும். முதலில் கட்டுப்பாடற்ற உணர்ச்சிகளுடனும், கற்பனைகளுடனும், போராட வேண்டிய காலம் வருகிறது. அதன்பிறகு மனம் சார்ந்த தன்னியக்கங்களுடனும், அறிவு பூர்வமான பழக்கவழக்கங்களுடனும் போராட வேண்டிய காலம் வருகிறது. ஆனால் அதன்பிறகு சமநிலை அமைதி மற்றும் அக இசைவுடைமையுடன் கூடிய காலம் பின் தொடருகிறது.

சாதகன் எச்சரிக்கையுடன் தன் குருவின் போதனைகளைப் பின்பற்றி, புனிதமானவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தால், ஐயத்திற்கு இடமின்றிச் சில எதிர்விளைவுகளைத் தவிர்க்க இயலும். ஆனால், நீ எத்தகைய எதிர் விளைவையும் உணரவில்லை எனின், மற்றும் தொடக்க காலத்திலிருந்தே உன் ஆன்மீக வாழ்வானது எத்தகைய இடையூறுமின்றிச் சென்று கொண்டிருக்கிறது என்றால் உன் சாதனையில் ஏதோ தவறு இருக்கிறது என்று நம்பத்தக்கதாக இருக்கும். உன்னுடைய ஆன்மீகப் பயிற்சியானது ஆழமானதாகவோ அல்லது தீவிரமானதாகவே இல்லாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. உன் ஆன்மீகப் பயிற்சியானது இயந்திர கதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடும்.

எப்படியிருப்பினும், போராட்டங்களும் மற்றும் குழப்பங்களுமே உன்னுடைய தீவிரமான ஆன்மீகப் பயிற்சியின் அடையாளங்கள் என்பது இதன் பொருள் அல்ல. ஆன்மீக முயற்சியுடன் ஆன்மீகம் சாராத விஷயங்களும் அடுத்தடுத்துக் கலந்துவிடும். ஆனால் உமியானது தானியத்திலிருந்து விரைவில் பிரிக்கப்பட்டுவிடும். ஆன்மீகத்தில் உண்மையான நாட்டம் கொண்டவர்கள் அவர்கள் வெற்றியடைந்து வாகை சூடும்வரையிலும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள். தங்களுடைய ஆன்மீகப் பசியைச் செயற்கையான முறையில் தூண்டிவிட்டுக் கொண்டவர்கள் தொடக்க காலத்தில் சிறிதளவு எதிர்க்கும் தன்மையைக் காட்டிவிட்டு விரைவில் நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள். அல்லது மனநல மருத்துவ மனைக்குப் போக நேரிடலாம்.

சாதகனுக்குப் பரிவுடன் கூடிய சிகிச்சை தேவை

சாதகன், அவன் சாதனையை மேற்கொள்ளும் காலத்தில் மிகவும் அன்புடனும், புரிந்துகொள்ளும் ஆற்றலுடனும் கையாளப்பட வேண்டும். ஏனெனில் மனத்தின் அமைதியற்ற தன்மையானது அவனுடைய தவறு அல்ல. ஆனால் அது அவனுடைய ஆன்மீகப் பயிற்சியின் விளைவு ஆகும். அவனை அதற்குக் குறைகூறுவதில் எந்தப் பயனும் ஏற்படாது. நாம் அவனை மதிப்பிடத் தேவையில்லை. அவன் இந்தக் காலக்கட்டங்களை எல்லாம் கடந்த பிறகு மனிதர்களில் சிறந்த மனிதனாக இருப்பான். இத்தகைய கால கட்டங்கள் நம் அனைவருக்கும் வரும். ஆனால் வேறு வேறு கட்டங்களில் வரும் இதுவும் அதிருஷ்டகரமானதுதான். ஏனெனில் இந்த எல்லா அனுபவங்களும் நம்மில் சிலருக்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு உதவக் கூடியதாக இருக்கும். சுவாமி விவேகானந்தர் ஒரு முறை, 'நான் என் குருதேவருடன் நீண்ட ஆறு ஆண்டு காலத்திற்குப் போராடினேன். அதன் விளைவாக அந்த வழியின் ஒவ்வொரு அங்குலத்தையும் அறிந்துகொண்டேன்'

என்றுகுறிப்பிட்டுள்ளார்.[1] அவருடைய தீவிரமான ஆன்மீக முயற்சிகள், அவருக்குச் சாதகர்கள் விஞ்சி மேம்படத்தக்க எல்லா விதமான கஷ்டங்களையும் அறிவுறுத்தியது.

பல சாதகர்கள், ஆன்மீக வாழ்க்கையானது அத்தகைய உள்ளார்ந்த அமைதியற்ற தன்மையை ஏற்படுத்தினால் அது தீங்கை விளைவிக்கும் என்றும் ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் எண்ணி பயப்படுகிறார்கள். கவனமற்றவர்களுக்கு அவ்விதம் ஆகும் என்பதில் சந்தேகம் இல்லை. மிக உயர்ந்த விலையைக் கொடுப்பதற்கு விருப்பமற்றவர்கள் ஆன்மீக வாழ்வை முயற்சி செய்து பார்க்கத் தேவையில்லை. இயல் பான உணர்ச்சிகள் மற்றும் தூய்மையற்ற நினைவுகள் என்னும் சிறையின் சுவர்களை உடைத்துக் கொண்டு ஆன்மீக விழிப்புணர்வு என்னும் ஒளியுடன் கூடிய பரந்துபட்ட அகன்ற இடத்திற்கு வருவது ஒரு வீரச் செயல் ஆகும். மற்றும் அது உறுதியுடையவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் சாதகனை அவன் விரும்புபவர்களுடன் இருப்பதற்கு அனுமதித்தல் கூடாது. மற்றும் முழுமையான, தூய்மையான வாழ்வை மேற்கொள்ளாதவர்களுடன் இருப்ப தற்கும் அனுமதித்தல் கூடாது. அவன் இன்னும் ஆன்மீகத்தின் குழந்தைப் பருவத்திலும் மற்றும் வளரிளமைப் பருவத் திலும் இருக்கிறான். ஒரு வளர்ந்தவர் எந்த ஒரு அபாயமும் இல்லாமல் துணிச்சலாகக் காரியத்தில் இறங்குவது போல அவனால் இயலாது. நீ ஏற்கனவே ஆன்மீகத்தில் நன்கு முன் னேற்றமடைந்துள்ளவர்களின் குழுவைச் சேர்ந்தவனாக இருக்கிறாய் என்று நினைக்கக் கூடாது. உங்களில் பெரும் பான்மையானவர்கள் அப்படி இருக்கவில்லை. உங்களைப் பற்றி மிகவும் உறுதியுடன் உணராமல் இருக்க வேண்டும்.

ஆன்மீக வாழ்க்கையைச் செயற்கையான அடித் தளத்தில் வாழ இயலாது. நீ உடல் பயிற்சியைச் செய்யும் விதத்தில் ஆன்மீகப் பயிற்சியை எடுத்துக் கொள்ள இயலாது.

---

1. சகோதரி நிவேதிதா, The Master as I Saw Him *(கல்கத்தா, உத்போதன் அலுவலகம், 1972) பக்கம் 12.*

நம்முடைய வாழ்க்கை எப்பொழுதும் இயற்கையான வாழ்வாக இருக்க வேண்டும். இயற்கையான வாழ்க்கை என்றால், நம்முடைய உயர்ந்த இயல்புடன் ஒரே சுருதியில் சேர்ந்து இருப்பதாக இருக்க வேண்டும். நம்முடைய கீழான விலங்குத் தன்மையுடன் சுருதி சேர்த்து இருத்தல் கூடாது. அது உலகியல் தன்மை நிறைந்த மனிதன், 'ஆன்மீக வாழ்க்கை' என்னும் சொல்லைப் புரிந்து கொண்டிருப்பதற்கு நேரெதிரானது ஆகும். உண்மையான ஆன்மீக வாழ்க்கை என்பது ஆன்மப் பசியால் ஏற்பட்டுள்ள விளைவு ஆகும். அது, ஒரு மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர வேண்டும் என்னும் தீவிரமான விருப்பத்தின் விளைவாகும்.

நீங்கள் அனைவருமே எப்பொழுதாவது இந்த எதிர் விளைவுகளைக் கடந்தே ஆக வேண்டும். இவை வரும் பொழுது அஞ்ச வேண்டாம். ஆனால் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். எதிர்விளைவின் முறைமை வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால் நீ தீவிரமாகச் சாதனையில் ஈடுபட்டால் எதிர்விளைவுகளைத் தவிர்க்க இயலாது. மற்றும் உடனொத்த சாதகனுக்கு, அவன் அமைதியற்ற தன்மையுடன் கூடிய காலத்தைக் கடந்து கொண்டிருக்கும்பொழுது எப்பொழுதும் அவனுக்கு உதவுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவனிடம் எப்பொழுதும் அன்புடனும், அவன் நலத்தை எண்ணிப் பார்ப்பவனாகவும் இருக்க வேண்டும்.

கடவுளே ஒரு பக்தனின் பொறுப்பு ஆணையை ஏற்றுக் கொண்டிருக்கும்பொழுது, அவரே பக்தனை எல்லாச் சோதனைகளையும் கடக்க வைக்கிறார். அவர், நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உன் மீது இந்த மிகப் பெரிய போராட்டங்களைச் சுமத்துகிறார். எனவே நீ அவற்றை வரவேற்று, உன் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்தப் போராட்டங்களைச் சந்தித்து மற்றும் அவற்றை விஞ்சிமேம்படுதல், மன அமைதியைப் பெறுவதைவிட மிகவும் முக்கியமானதாகும். மனஅமைதி எப்படியும் உன்னிடமிருந்து நழுவிவிடும்.

ஆன்மீக வாழ்வானது தீவிரப்படுத்தப்படலாம். பயிற்சியின் வேகம் விரைவுபடுத்தப்படலாம். ஆன்மீகப் பசியால் தூண்டிவிடப்படலாம். அதனால் ஆன்மீக முயற்சிகளின் காலம் குறைக்கப்படலாம். ஆனால் நீ எல்லா எதிர்விளைவுகளையும், துன்பத்துடன் கூடிய மனமாற்றங்களையும் கடந்து செல்லத்தான் வேண்டும். ஆனால் அதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, விரைவாக அவற்றைக் கடந்துவிடலாம். உன் சாதனையின் தீவிரம் அதிகமானால், எதிர் விளைவுகள் பெரிய அளவில் இருக்கும். ஆனால் அவைகளின் காலநீட்சியானது குறைவானதாக இருக்கும். சுவாமி அபேதானந்தர் அவருடைய வாழ்க்கையில், பத்து வாழ்க்கைகளின் அனுபவங்களைக் கடந்து வந்ததாகக் கூறுவார்.

எல்லா யோகிகளும், அவர்களுடைய ஆன்மீக முயற்சிகளின் காலநீட்சியை, அவர்களுடைய சாதனைகளைத் தீவிரப் படுத்துவதன்மூலம் குறைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றனர். அவர்கள் பெரிய அளவில் எதிர்விளைவுகளையும், தடைகளையும், மருட்சிகளையும் சந்திக்க வேண்டும். ஆனால் அவர்கள் மிகப் பெரிய அளவில் மனத்திட்பத்தையும், வலிமையையும் பெற்றிருப்பதால், அவர்கள் மன மகிழ்வுடன் கரடுமுரடான சோதனை முறைகளைக் கடந்து சென்றனர். அப்படியிருக்கும்பொழுது உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்கள் ஆன்மீக வாழ்க்கையில் நத்தை செல்லுவதுபோல மிக மெதுவாகச் செல்லும் ஒரு நீண்ட காலத் திட்டத்தைத் தயாரிக்கின்றனர். அவர்கள் வெறும் படிப்பதிலும், எண்ணுவதிலும் நிறைவடைய வேண்டியதுதான்.

மேம்பட்ட விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக் கொள்வாய்

நீ உன்னுடைய சொந்த ஆன்மீக விழிப்புணர்வு மையத்தைக் கண்டு பிடிக்காமல் இருக்கும் வரையிலும் தான் இத்தகைய எல்லா ஆன்மீகப் போராட்டங்களும் உனக்குத் தொல்லையளிக்கும். நீ அதைக் கண்டு பிடித்தவுடன், போரில் பாதிக்குமேல் வெற்றி அடையப்படுகிறது. உன் வழியைக் குறித்து உனக்குச் சந்தேகத்திற்கு இடமற்ற

உறுதி ஏற்படுகிறது. மற்றும் இத்தகையபோக்கு உன்னுடைய பல ஐயப்பாடுகளையும் உளைச்சல்களையும் அகற்றி விடுகிறது. அதன்பிறகு போராட்டங்கள் சூட்சுமமான முறையில் நடைபெறும். வன்மை குறையும், வெளியிலே சிறிதளவுதான் வெளிப்படும். அதன்பிறகு அகத்தில் நடைபெறும் போர்முறையை உன்னால் மிகுந்த சமநிலையுடனும், உறுதியுடனும் நடத்த இயலும். ஒவ்வொரு உண்மையான முயற்சிக்குப் பின்னாலும் அதனுடைய பரிசு உள்ளது.

நீ எப்பொழுதும் உன்னுடைய விழிப்புணர்வு மையத்தையே பற்றிக் கொண்டிருக்க வேண்டும். நீ எத்தகைய தளர்வடையச் செய்யும் சூழ்நிலையிலிருப்பினும் பற்றிக்கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு சிக்கல் தோன்றினால் நீ உன் விழிப்புணர்வு மையத்திற்குச் சென்றுவிட வேண்டும். அந்தச் சிக்கல் தீரும் வரையில் அங்கேயே இருக்க வேண்டும். எத்தகைய உருவத்திலாவது மருட்சி உன்னை அணுகினால் அங்கு செல்வாய். ஏதாவது கெட்ட உணர்வு உருக்கொள்ள விரும்பினால் அங்கு செல்வாய். உனக்கு வெளியுலகிலிருந்து உதைகளும், அடிகளும் விழும் பொழுது அங்கு செல்வாய். அதை எல்லா சமயங்களிலும் நிலையாக வைத்திருப்பாய். அதை உன்னுடைய உண்மையான இருப்பிடமாகக் கொள்வாய். விழிப்புணர்வு மையத்தை மாற்றாமல், மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைப்பது இயலாத பணியாகும். நீ உன்னுடைய சாதனை, உன்னுடைய ஜபம் மற்றும் தியானத்தை, தொடர்ந்து விடாமல் தீவிரமாக நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளாமலிருந்தால், உன்னால் திறமையாக உன்னுடைய விழிப்பு உணர்வு மையத்தை மாற்ற வியலாது. நிலைத்திருக்கச் செய்ய இயலாது. எண்ண ஓட்டங்களை மாற்ற இயலாது. மற்றும் அவற்றை மேல்மட்ட வழிகளில் பாயச் செய்ய இயலாது.

சிலசமயங்களில் நம்முடைய பழைய பழக்க வழக்கங்களின் காரணமாக, நம் விழிப்புணர்வு மையம் மேல் மட்டத்தில்

சிறிது நேரத்திற்கு இருந்துவிட்டு கீழே செல்லும். அப்பொழுது அந்த மையத்தில் விளங்கும் எல்லா வகையான எண்ணங்களும் குமிழிகள் போல் எழும். எனவே அத்தகைய சூழ்நிலைகளை எதிர் கொள்வதற்கு நீ உன்னை ஆயத்தப் படுத்திக் கொள்ள வேண்டும். நீ எப்பொழுதும் உன்னை ஆன்மாவாக, தானே ஒளிரும் உளதாம் தன்மை உடையதாக, மனத்திலிருந்தும் உடலிலிருந்தும் பிரிக்கப்பட்டு விளங்குவ தாகவும் எண்ண வேண்டும். நீ வழக்கமாகச் செய்யும் தியானத் திற்குப் பிறகு உபநிஷதங்களிலிருந்து அல்லது சங்கராச் சாரியரின் அத்வைதத் தொடர்பான பாடல்களையும் படிக்க வேண்டும்.[1] உன்னுடைய உண்மையான ஆன்மாவைக் குறித்த பகுதிகளை மீண்டும் மீண்டும் கூறும் பொழுது, இந்த கருத்துக்களை உன் மனத்தின் ஆழத்தில் இழுத்துக் கொள் வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

நேர்முகம் மற்றும் மறைமுகம் என்னும் ஆன்மீகப் பயிற்சி முறைகளை இணைத்து அவ்வழியைப் பின்பற்ற வேண்டும். உடல் மற்றும் அதனுடன் தொடர்பு கொண் டுள்ள அனைத்தையும் மறுப்பாய். ஆனால் உன்னுடைய முழுமையான இருப்புடன் ஆன்மாவைத் தீவிரமாகவும், உறுதியுடனும் வலியுறுத்திக் கொள்வாய். தொடக்க நிலை யில் இருக்கும் பலருக்கு இது தலைவலியை ஏற்படுத்தக் கூடும். ஒரு மாறுதலிற்காக ஏன் இதை வைத்துக் கொள்ளக் கூடாது?

ஆன்மீகப் பயணியின் வளர்ச்சி

நம்முடைய வாழ்க்கையின் முழுமையான போக்கு மாற்றப்பட வேண்டும். நாம் என்ன செய்திருக்கிறோமோ அதைத் துடைத்து அழித்துவிட வேண்டும். நாம் ஒரு விதத் தில் நம்முடைய நண்பர்களைத் துறந்துவிட்டு, நம் பகைவர்

---

1. சுவாமி யதீஷ்வரானந்தர், The Divine Life (சென்னை ஸ்ரீராம கிருஷ்ண மடம், 9-வது பதிப்பு, 2002) பக்கம் 276-297 என்னும் நூலில் உள்ளது.

களை உள்ளே வந்து நம்முடன் வாழ்வதற்கு அனுமதித்து உள்ளோம். நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது மட்டுமின்றி, மற்ற நேரங்களிலும், நாம் முன்பு செய்துள்ள கெட்ட செயல்கள் மற்றும் தீய எண்ணங்களை அகற்றுவதற்கும் எதிர்த்துத் தடைசெய்யும் செயல்களும் மாறான எண்ணங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். இது நெடிது தொடரவல்ல கஷ்டமான பணி யாகும். மற்றும் அதற்கு வீரமும் விடாமுயற்சியும் தேவைப் படுகிறது. ஆன்மீக வாழ்வு என்பது இன்பம் நிறைந்த இனிய வாழ்வு அல்ல. மிகவும் கடினமான பணியாகும்.

நம்முடைய மனித இயல்பு என்பது நல்லவை, தீயவை என்னும் இரண்டையும் உள்ளடக்கியதாகும். கெட்டவை படிப்படியாக அகற்றப்பட வேண்டும். நல்லவை ஆதரித்துப் பேணப்பட வேண்டும். ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியின் போக்கில் நல்லவை, தீயவை என்னும் இரண்டும் காட்சி யளிக்கும். சாதகன் உண்மையை எதிர்கொண்டு, மற்றும் வாழ்க்கையின் உயர்ந்த உயிர்ப்பண்புகளைத் தூண்டி விட்டுக் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய தவறு களாலும் நன்மை அடைய வேண்டும். அவைகளைக் குறித்து அதிக அளவில் ஏங்காமல் நாம் நம்மை வலுப்படுத்திக் கொள்வோம். நம் ஆற்றலின்மூலம் எல்லா வகைகளிலும் அவை மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்போம். நாம் சறுக்கி னால், அது நம்மை அடக்கமுள்ளவர்களாகச் செய்யட்டும், மற்றும் நம்முடைய ஆற்றலின் மூலமாக உள்ள, ஆதாரமாக உள்ள பரம்பொருளை மேலும் சார்ந்து இருக்குமாறு செய்யட்டும்.

கிழக்கிலுள்ள அல்லது மேற்கிலுள்ள ஒவ்வொருவரும் போராட்டங்களைக் கடக்க வேண்டும். கிழக்கில் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிமுறைகளின் பண்பாடு இடையீடற்று நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இது சில சாதகர்களுக்கு உதவி செய்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அதனால் பயனடையாத வேறு பல சாதகர்களும் உள்ளனர். எனவே மேற்கு நாடுகளில் ஆன்மீக வாழ்க்கையானது மிகவும் கஷ்டம்

நிறைந்தது என்று குறைகூறுவதில் எந்தப் பயனும் இல்லை. உன்னுடைய சொந்த இயல்புதான் கஷ்டமானது ஆகும். நீ எப்படியாவது அதை மாற்றிக் கொள்ளவே வேண்டும். ஆன்மாவின் வளர்ச்சிப் போக்கில், இயல்புணர்ச்சி சார்ந்த நன்மையானது விழிப்புணர்வுடன் கூடிய நன்மையின் மூலம், அதன் பிறகு இயல்பான நன்மையுடன் எத்தகைய முரண் பாடும் இன்றி போராட்டங்களுடன் கடக்க வேண்டியுள்ளது. எனவே நம்முடைய பரிணாம வளர்ச்சியில் விழிப்புணர் வுடன் கூடிய போராட்டம் என்பது ஒரு கட்டமாகும். மற்றும் இது ஒரு இன்றியமையாத பின்னடைவு என்பது பொருள் அல்ல. எப்படியிருப்பினும் எல்லா விதமான பின் சறுக்கல் களையும் சரி எனக் காட்டவில்லை.

பகுதியளவான வெற்றியானது நம்முடைய ஒழுக்க நெறிமுறை சார்ந்த மற்றும் ஆன்மீக வாழ்வில் பெரிய பெரிய வெற்றிகளை நோக்கிய தூண்டுவிசையை அளிக் கிறது. ஆனால் முழுமையை அடைந்தாகி விட்டது என்று அது நம்மை ஒரு பொழுதும் எண்ண வைக்கக் கூடாது. நம்முடைய கீழான இயல்புகளையும், போக்குகளையும், கட்டுப்படுத்தி நாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள் வதில் சிறிதளவு முன்னேற்றம் அடைந்து இருப்பினும், தீய மனப்பான்மைகளும், தூய்மைக்கேடுகளும் பெரு மளவில் உள்ளன. அவைகளும் கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் இறுதியில் நீக்கப்பட வேண்டும் என்பதை அது குறிக்கிறது.

நம்முடைய ஒழுக்க நெறிமுறை மற்றும் ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது எப்பொழுதும் நம் முடைய இயல்பான செயல்படத்தக்க மறைந்துள்ள ஆற்றல் களின் மீது மற்றும் இலட்சியத்தின் அருகிலே, மிக அருகிலே செல்லத்தக்க திறமையின்மீது நிலைத்த நம்பிக்கை இருக்க வேண்டும். நாம் மறைந்து உள்ள ஆற்றலை நடைமுறையில் உள்ள ஆற்றல் என்று கருதக் கூடாது. அது வாழ்க்கை யில் முழுமையாக உணரப்படும் வரையில், நம்முடைய

எண்ணங்களிலும், செயல்பாடுகளிலும் ஒரு முழுமையான உருநிலை மாற்றத்தை அது ஏற்படுத்தும் வரையிலும் அவ்விதம் கருதுதல் கூடாது.

ஆன்மீக அனுபவத்தைப்பற்றி வெறும் கனவு கண்டால் மட்டும் போதாது. நமக்கு அதிக அளவில் பணம் வருவதாக நாம் கனவு காணலாம். ஆனால் கனவில் நமக்குக் கிடைக்கும் பணத்தின் மூலமாக நம்மால் நடைமுறை உலகில் உணவை வாங்குவதற்கோ மற்றும் நம் பசியைத் தணித்துக் கொள் வதற்கோ இயலாது என்பதை நாம் எப்பொழுதும் மனத்தில் கொள்ள வேண்டும்.

நாம் காற்றை விதைக்கிறோம். எனவே அதை சூறாவளி யாகத்தான் அறுவடை செய்ய வேண்டும். அடங்கியுள்ள எல்லா சூறாவளிகளும் மேலே எழும்பும். மனத்தில் புதைந் துள்ள எல்லா தீய உருவங்களும் எப்பொழுதாவது வளர்ச்சி யடையும். நாம் முரடனை நேராக 'சந்தித்தே ஆக வேண்டும்.'[1]

---

1. இந்தச் சொற்றொடருடன் தொடர்புடைய ஒரு வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு உள்ளது. சுவாமி விவேகானந்தர், இந்தியா முழுவதிலும் யாத்திரையை மேற்கொண்டு இருந்தபொழுது, காசியில் அன்னை துர்காவின் கோயிலிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பொழுது அவர் ஒரு குரங்குப் படையால் பின்தொடரப்பட்டார். முதலில் அவர் குரங்குப் படை அவருக்குத் தீங்கு செய்யும் என்று பயந்து தப்பி ஓடு வதற்கு முயற்சி செய்தார். ஆனால் குரங்குகள் அவரைத் துரத்தத் தொடங்கின. திடீரென்று வயது முதிர்ந்த துறவி ஒருவருடைய குரல் அவரை அழைத்து, 'எப்பொழுதும் மிருகங்களை எதிர்த்து நில்லுங்கள்' என்று கூறுவதைக் கேட்டார். சுவாமிஜி திரும்பினார். அவருடைய பயம் அகன்று விட்டது. அவர் எதிர்த்து நிற்பதைக் கண்ட குரங்குகள் ஓட்டம் பிடித்தன. பல ஆண்டுகளுக்குப் பிறகு, நியூயார்க்கில் அவர் அளித்த ஒரு சொற்பொழிவில் இந்த நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டு, இந்தக் கதையின் படிப்பினையைப் பற்றியும் குறிப்பிட்டார், 'நம் வாழ்க்கைக்கே இது ஒரு படிப்பினை. பயங்கரத்தை எதிர் கொள்ளுங்கள். தைரியமாக எதிர்த்து நில்லுங்கள். எப்பொழுது நாம் அவைகளுக்கு முன்னால் ஓடுவதை நிறுத்துகிறோமோ, அப்பொழுது குரங்குகளின் விஷயத்தில் உள்ளதைப்போல வாழ்க்கையின் துன்பங்கள் பின்தங்கி விடுகின்றன.'

—விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.413.

பொருள்களை அவை உள்ளபடியே காணக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு எல்லாவற்றிலும் கடவுளைக் காண வேண்டும். காட்சியிலிருந்து அவனை முழுமையாக மறைத்துக் கொண்டு, இந்த மாயையின் லீலை அனைத்தும் அவனுள்ளே நடந்துகொண்டுள்ளன. நாம் மாயையை மீறிப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள நம் ஆன்மீகப் பயிற்சியானது, நம்மை ஒரு வகையான மனம் சார்ந்த ஊடுகதிரை வளர்த்துக் கொள்ள இயலச் செய்கிறது. அந்தத் திறனின் பயனாக புலன்களால் உணரத்தக்க பொருட் களின் இயல்பையும் மற்றும் புலன்களால் உணரத்தக்கப் பொருட்களாகத் தோன்றும் மெய்ப் பொருளையும் நம்மால் காண இயலுகிறது.

அது ஒரு கடினமான நீண்ட போராட்டமாகும். அதற்கு முடிவே இல்லை என்பது போலத் தோன்றுகிறது. நாம் அதிகமாக முன்னேற முன்னேற இந்தப் போராட்ட மானது சூட்சுமமானதாகவும் உறுதியானதாகவும் ஆகிறது. நாம் கடந்தே செல்ல வேண்டிய, இரக்கமற்ற முறையில் நாம் நம்மைப்பகுத்து ஆராய்ந்து கொள்ளும் போக்கில் மிக வும் மோசமான விஷயங்கள் நமக்கு புலப்படுத்தப்படு கின்றன. எந்த விஷயங்களுக்குப் பொதுவாக நாம் பெரிய பகட்டான பெயர்களைச் சூட்டுகிறோமோ, அவை புலப்படுகின்றன. தன்னலமற்ற உறவுகள், மனித உணர்வுகள் மற்றும் உணர்ச்சிக் கனிவுகள் என்று நம்மால் கூறப்படு பவை அனைத்தும் ஏறத்தாழ நம்முடைய தாழ்ந்த படி யிலுள்ள தன்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கடவுள்மீது நாம் கொண்டுள்ள அன்பு, பக்தி, தெய்வீக மனிதர்களிடம் நாம் கொண்டுள்ள அன்பு, உடனொத்த பக்தர்களிடம் கொண்டுள்ள அன்பு என்னும் அனைத்தும் மிகப் பெரிய அளவிற்கு தன்னல நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டுள்ளன. ஆனால் இந்த அனைத் திற்கும் அடிப்படையாக, எப்பொழுதுமே ஒரு தெய்வீக ஆக்கக் கூறு உள்ளது. அது பெருமளவில் தெய்வீக

மற்ற பொருட்களுடன் கலந்து உள்ளது. தங்கமானது மாசுகளிலிருந்து பிரித்து எடுக்கப்பட வேண்டும். அதுதான் ஆன்மீக வாழ்வின் கடமைப் பொறுப்பு ஆகும்.

நம்முடைய உணர்ச்சிக்கனிவுகளிலுள்ள வேறுபட்ட ஆக்கக் கூறுகளையும் மற்றும் மனத்தின் மீதும், விழிப் புணர்வு மையங்களின்மீது இந்த உணர்ச்சிக் கனிவுகளின் விளைவுகளையும் கவனித்தால் நம்மால் அடுத்தடுத்து அவைகளின் உண்மையான படித்தரத்தையும் தகுதியையும் உணரவியலும். உயர்ந்த மட்ட மையங்களுடன் தொடர்பு கொண்டுள்ள உணர்வுகள், தாழ்ந்தபடியிலுள்ள எண்ண மட்டத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடும், மற்றும் மிக மோசமான வகையைச் சேர்ந்த உணர்ச்சிகளாக தரத்தில் தாழவும் கூடும். எனவே நாம் எப்பொழுதும் மனிதர்களுடன் சேர்ந்து இருக்கும் பொழுது எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மற்றும் ஆண்களையும், பெண்களையும் உனக்குத் தெரியும். அவர்களை வெளிப்புறத் தோற்றத்தைக் கொண்டு எடை போட இயலாது. நாம் நம்மை மற்றும் மற்றவர்களை மிகுந்த நுண் ஆய்வுடன் மேலும் மேலும் ஆராய நாம் இந்த உண்மையை மேலும் மேலும் அறிகிறோம். சிலசமயங்களில் இது நமக்குத் துயரத்தை அளிக்கிறது.

இங்குக் கவனிக்கத்தக்க ஒரு விஷயம் உள்ளது. நாம் நம்மை மதிப்பிடும் பொழுது, நம்முடைய பலகீனமான தன்மையைப் படித்தரமாகக் கொள்ள வேண்டும். வல்லமை வாய்ந்த தன்மையைக் கொள்ளக் கூடாது. ஒரு சங்கிலியின் பலமானது அதனுடைய பலகீனமான தனிவளையத்தைச் சார்ந்து இருப்பதைப்போல, நம்முடைய பலகீனமானது நம்முடைய ஆன்மீக வளர்ச்சியையும், நம் இன்ப-துன்பங்களையும் தீர்மானிக்கின்றன. நாம் நம்முடைய வல்லமை நிறைந்த இயல்புகளைக் குறித்து மிகவும் கர்வம் கொள்ளவோ அல்லது மட்டுமீறிய தன்னம்பிக்கை கொள்ளவோ கூடாது. நம்முடைய பல கஷ்டங்களும் இந்த அடிப்படையிலிருந்துதான் வருகின்றன.

நாம் ஏற்ற தாழ்வுகள் நிறைந்த ஒரு காலத்தை கடக்கும் பொழுதும், நம் நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தீமையின் ஆற்றல் மிகவும் ஓங்கியிருக் கும் பொழுது. அது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ஊக்கமிழக் கும் வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும். நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று அறிந்துகொண்டு நாம் நம் வாழக்கையின் வழக்கமான கடமைகளைச் செய்து கொண்டும் மற்றும் ஆன்மீகப் பயிற்சிகளை மேற் கொள்ள வேண்டும். நம்மீது பொழியப்பட்டுள்ள தெய்வீக அருளை நாம் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையில், நிலைத்த, அழிக்கவியலாத எதையோ அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும், அருளானது தற்காலிகமாக நம்மிடமிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று நாம் உணரும் பொழுது, நாம் அதைப் பற்றிக் கொள்ளவியலும். புலன்களால் உணரத் தக்க இவ்வுலகத்தில் பாதுகாப்பையும், அமைதியையும் நாடாமல் இருக்க வேண்டும். அது எப்பொழுதுமே மாறிக் கொண்டுள்ளது. அதில் நீ மகிழ்ச்சியை நாடினால் உன்னால் மகிழ்ச்சியற்ற நிலையை அடைவதையும் தவிர்க்க இயலாது.

உண்மையைக் கூறப்போனால், வெறும் உணர்ச்சிக் கனிவுகளின் மட்டத்தில், ஆன்மாவின் பரிணாம வளர்ச்சிக்கு அவை எந்த அளவிற்குத் தேவையானதாக இருப்பினும் நமக்குப் பாதுகாப்பு இல்லை. நம்முடைய உணர்வுகள், தெய்வீக விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண் டிருக்க வேண்டும். மற்றும் அத்துடன் தொடர்பு கொண் டிருக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் நாம் உண்மை யான சமநிலையை அடைகிறோம். மற்றும் பயத்திலிருந்து விடுபடுகிறோம். ஐயத்திற்கு இடமின்றி இந்த இலட்சியத்தை படிப்படியாக முன்னேறி மற்றும் பல தோல்விகளையும், முயற்சி சிதைவுகளையும் கடந்துதான் நம்மால் அடைய இயலும்.

ஆன்மீகப் போராட்டங்களையும், எதிர்விளைவுகளையும் எப்படி எதிர்கொள்வது?

நம்மில் ஒவ்வொருவரும் ஏற்ற தாழ்வுகளைக் கடக்க வேண்டும். இத்தகைய மாற்றங்கள் நமக்கு மேலும் மேலும் உயர்வதற்கான இன்றியமையாமையை, நாம் அந்த நிலையை அடையும் வரையிலும், மற்றும் குணங்களைக் கடந்து, அறிவு எல்லையைக் கடந்து மேம்படும் வரையிலும் நமக்கு அளிக்கட்டும்.

உன்னுடைய ஆன்மீகப் பயிற்சியை ஒழுங்காகவும் ஒரே சீராகவும், குறுக்கீடு இன்றியும் மற்றும் அதைச் செய்வதற் கான ஆர்வ உணர்வு இல்லை எனினும் நீ அதனை மேற் கொள்ள வேண்டும். உன்னுடைய சாதனையை நீ நடுவில் தளர்த்திக் கொள்வதால் உன்னுடைய சிக்கல்களை தீர்த்துக் கொள்வது இல்லை. குறுக்கீடுகள் நம் வளர்ச்சியை தாமதப் படுத்துகின்றன. நீ நல்ல மனநிலையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், காலையிலும், மீண்டும் மாலையிலும் குறைந்தது ஒரு மணி நேரத்தையாவது நீ தியானம் செய்வ தற்கும், பிரார்த்தனை செய்வதற்கும் செலவழிக்க வேண்டும். உன்னுடைய ஆன்மீக வெள்ளத்தின் பாய்வானது நிலை நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். விருப்ப முயற்சியால் இதைச் செய்ய இயலும். இல்லை, செய்யப்பட வேண்டும். சாதகன் தடுத்து நிறுத்தவும் வேண்டும். வற்புறுத்தவும் வேண்டும். அவன் அவனுடைய சாதனையைச் சில காலத் திற்குத் தடுத்து நிறுத்தும் அகத் தூண்டுதல்களைத் தடுக்க வேண்டும். மற்றும் அது தொடரப்படுவதை நிலைநிறுத்திக் கொள்வதற்கு வற்புறுத்த வேண்டும். எதிர்விளைவுகளும், தடைகளும் உன்னுடைய மன உறுதிக்கான சோதனை களாகும். அவற்றை விஞ்சி மேம்படுவதால் நாம் பெரிய அளவில் மன ஆற்றலைப் பெறுகிறோம்.

நமக்குக் கடவுளின் அருள் இருக்கிறது. இருப்பினும் நாம் அதை உணர்வது இல்லை. நாம் கடவுளை நம்முடைய எல்லா முயற்சிகள் மற்றும் போராட்டங்களுக்கு நடுவில்

நம்மைக் காப்பாற்றி வழிநடத்தி, நம்மை அவன் அருகில், மிக அருகில் அழைத்துச் செல்ல வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். பிரார்த்தனை என்பது ஒரு முக்கியமான உதவியாகும். உன்னால் சரியான வழியில் தியானம் செய்ய இயலவில்லை எனின் நீ பிரார்த்திக்கலாம். இது மிகப் பெரிய அக ஆறுதலை அளிக்கிறது மற்றும் நம்முடைய கஷ்டங்கள் எல்லாம் விரைவில் மறைவதை நாம் காணலாம். சிறிய சறுக்கல்கள் மற்றும் வீழ்ச்சிகளைக் குறித்துக் கவலைப்படாமல் சாதகன் கடவுளை அவனுடைய வாழ்வின் மையமாகக் கொண்டு அவன் முன்னேற வேண்டும். அத்தகைய பக்தியுள்ளவனுக்கு தோல்விகள் வெற்றியின் படிக்கற்களாக உள்ளன. அவர்கள் பல சோதனைகளைக் கடந்து, இறுதியில் அவைகளிடமிருந்து வெற்றியுடன் வெளியே வருகிறார்கள்.

நாம் கடவுளின் மீது நமக்கு உள்ள நம்பிக்கையை தீவிரப்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணர் பொருத்தமுறக் கூறுவதைப்போல நாம் கடவுளை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்க முயற்சி செய்தால், அவர் நம்மை நோக்கிப் பத்து அடிகள் எடுத்து வைக்கிறார். தாய் குழந்தையை விளையாடிக் கொண்டிருக்க அனுமதிக்கிறாள். ஆனால் குழந்தை விளையாட்டில் சோர்வுற்று அவளுக்காக அழ ஆரம்பிக்கும் பொழுது, அவளை நோக்கித் தவழ்ந்து வரும் பொழுது அவள் குழந்தையிடம் ஓடிச் செல்ல வேண்டும்'[1] தங்களுடைய பலவீனமான மனித வழிகளில் அவனை (கடவுளை) அணுக விரும்பும் பக்தர்களின் நிலையும் அதே போன்றதுதான்.

சில நேரங்களில் நீ சோர்வுற்று இருப்பதை உணரலாம். இது தவிர்க்க இயலாதது ஆகும். அத்தகைய சமயங்களில் கடவுளுடன் அகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். சோர்வுற்ற மனநிலையானது ஒரு மேம்பட்ட மனநிலையால் மாற்றீடு செய்யப்படும். நீ

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.149-150.*

கடவுளுடன் அகத் தொடர்பை நிலைநிறுத்திக் கொள்ள எப்பொழுதும் முழுமையான முயற்சி செய்ய வேண்டும். மன நிலையில் இயல்பாகவே ஏற்ற இறக்கங்கள் இருக்கக் கூடும். ஆனால் நாம் கடவுளுடன் ஒரே சுருதியில் இருப்பதற்கு முயற்சி செய்தால், நம்முள்ளே ஏதோ உயர்ந்த மனநிலையானது எப்பொழுதும் இருக்கும். அது சில நேரங்களில் ஏதோ மறைந்து விட்டதைப் போலத் தோன்றினாலும் கலங்காமல் இருக்க வேண்டும். உன்னை அமைதியாகவும் குழப்பமில்லாமலும் மேம்பட்ட விழிப்புணர்வு நிலைக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். மற்றும் தொடர்பை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பிறகு எல்லாம் சரியாகிவிடும்.

சில நேரங்களில் அடி உணர்வுத்தளம் அல்லது தன்னுணர்வற்ற செயல் எல்லையிலிருந்து அவை மறைந்துள்ள இடத்திலிருந்து நம்முடைய பழைய பதிவுகள் விழிப்புணர்வு மட்டத்திற்கு வரும் காரணத்தால் மனம் சார்ந்த மற்றும் உடல் சார்ந்த குழப்பங்களும் ஏற்படலாம். இது மிகவும் தொல்லையளிக்கத் தக்கது. தொந்தரவு அளிக்கவல்லது. ஆனால் நாம் சமநிலையற்ற தன்மையை அடைதல் கூடாது. நாம் பொருட்கள் வருவது போன்றே அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சாட்சியின் மனநிலையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். நாம் அவற்றில் கடவுளைக் காண முயற்சி செய்ய வேண்டும். எல்லா உணர்வுகளும், எல்லா அதிர்வலைகளும், எல்லா எண்ணங்களும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் சாசுவதமான செயற்கருவியை உணர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்குப் பிறகு கடவுள் அடிப்படை அளவில் உண்மையாகிறார். மற்ற உருவங்கள் நிழல்கள் போலக் காணப்பட்டுத் தங்களுடைய ஈர்க்கும் தன்மை மற்றும் கவர்ச்சியை இழக்கின்றன. இது செய்யப்பட்டதும் மனம் மற்றும் உடல்சார்ந்த இசைவுடைமை மீண்டும் பெறப்படுகிறது. உன்னுடைய மூளையானது தெளிவற்றிருப்பதாக நீ உணர்ந்தால், கடவுளைப் பிரார்த்திப்பாய். கடவுளைத் தியானிப்பாய். உன்னிடம் உள்ள உண்மையான

ஆன்மாவானது ஒரு தெய்வீக சுடர்ப்பொறியைப்போல உள்ளது. அது வரையறையற்ற பேரொளிப் பெருங்கடலில் ஒரு பகுதி என்றும் உணர்வதற்கு முயற்சி செய்தால் மேம் பட்ட மனநிலையானது மீண்டும் திரும்பி வரும்.

நாம் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடவுளைப் பற்றிக் கொண்டு இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மனம் சோர்வுற்று இருக்கும் சமயங்களில் ஜபம் பெருமளவில் உதவிபுரியும், புனிதமான திருநாமத்தை தனக்கு மட்டும் கேட்கும்படிப் பாராயணம் செய்வதால் ஒருவருக்கு அது மிகப் பெரிய தணிவை அளிக்கிறது. நீ அதை உனக்குள்ளேயே மிக மெல்லிய குரலில் பாடிக் கொள்ளலாம். மற்றும் உள்ளத் தில் வெறுமையும், அமைதியற்ற நிலையும் இருக்கும் பொழுது நீ கடவுளைப் பற்றி நினைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவரை உணரும் பேரின்பம் கிடைக்கவில்லை எனின் அன்பிற்கு உரியவர் நம் ஆன்மாவின் ஆன்மாவான கடவுளை நினைத்துக் கொண்டிருப்பதால் எழும் மகிழ்ச்சி யுடன் நிறைவு அடைய வேண்டியதுதான்.

கண்ணுக்குப் புலனாகும் மற்றும் சூட்சும மட்டங்களில் நடைபெறும் இத்தகைய போராட்டங்களின் பொழுது, முடிந்த அளவிற்குப் புனிதமான எண்ணங்களில் நிலைத் திருக்க முயற்சி செய்து அவ்விதத்தில் புனிதமற்ற எண்ணங் களை அகற்ற வேண்டும். ஆனால் சில நேரங்களில் தீமை யைச் சார்ந்த கற்பனைகள் வளர்ந்து மற்றும் புனிதமற்ற உருவங்கள் நம்மையும் மீறி தெளிவுடன் வரத் தொடங்கும் அத்தகைய ஒரு நிலையில், நாமபாராயணம் செய்து கொண்டு, இஷ்ட தெய்வத்தின் வடிவத்தைக் கற்பித்துக் கொள் வதற்கு முயற்சி செய்து, தீய எண்ணங்களைப் பொறுத்த மட்டில் நம்மை ஒரு சாட்சியின் நிலையை ஏற்று, நம்மை அவைகளின் தடைவேலியிலிருந்து பிரித்துக்கொள்ள வேண் டும். நாம் மறந்திருக்கும் கணங்களில் நாம் நம்மை தீய எண்ணங்களுடன் அடையாளம் கண்டு கொண்டு உடல் மற்றும் மன ரீதியில் பாதிக்கப்பட்டு இருப்பதாக உணரக் கூடும், இருப்பினும் உண்மையில் எத்தகைய தீங்கையும்

செய்வதில்லை. ஆனால் நாம் மேலும் மேலும் எச்சரிக்கை உணர்வு மிகுந்தவர்களாக, நம்மை அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்கும் பயிற்சியை மேற்கொண்டால், நாம் அவற்றை அவை நம் முன் அவற்றைத் தோற்றிக் கொண்டாலும் ஒரு தொலைவில் வைத்திருக்கலாம்.

நாம் ஒரு 'தனித்த' மனநிலையில் இருந்து, மற்றும் மற்ற மனிதர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று விரும்பினால் பரம்பொருள் நமக்குப் பெரிய அளவில் உறுதுணையாக இருக்கிறார். நீர்க்குமிழியானது அலையிடமிருந்து பெரிய உதவியைப் பெறுகிறது. பெருங்கடல் (பெருங்கடல் அலை மற்றும் நீர்க்குமிழியை விட அதிக அளவு உண்மையான தாகும்) ஒரு மறைபொருள் போலத் தோன்றுகிறது. அலையின் ஸ்பரிஸத்தால் நீர்க்குமிழி, பெருங்கடலுடன் அதற்கு உள்ள தொடர்பை உணர்கிறது.

ஆனால் நாம் 'பொதுவான' மனநிலையில் இருக்கும் பொழுது அல்லது இஷ்டதெய்வத்துடன் நம்மால் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை என்று உணர்ந்தால் ஒரு சாட்சியின் மனப்பான்மையை மேற்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் கஷ்டங்களைக் கண்டு ஓடுபவர்கள், தங்களைப் பலவீனப்படுத்திக் கொண்டு, ஆன்மீகத்தில் வளர்ச்சியடைவதற்குத் தகுதியற்றவர்களாக ஆக்கிக் கொண்டு விடுகின்றனர். கடவுளின் மீது நம்பிக்கை வைத்து தங்களுடைய கஷ்டங்களை எதிர் கொள்வதைத் தேர்ந்து எடுப்பவர்கள் ஒரு மிகப் பெரிய அகவலிமையை உணர்வார்கள். நீ தெய்வீக அலை ஓட்டத்துடன் நேரடியான தொடர்பு கொண்டிருந்தால் மற்றும் உன்னுடைய பக்தி என்னும் கப்பலின் பாயை அவிழ்த்து விரித்திருந்தால், தெய்வீக அருள் என்னும் தென்றல் உலகியலில் சூறாவளிகளுக்கும் புயல்களுக்கும் நடுவிலும் உன்னை முன் நடத்திச் செல்லும். இது ஒவ்வொருவருக்கும் தவிர்க்க இயலாதது ஆகும். இந்த உலகம் என்பது மொத்தத்தில் ஒரு பயிற்சி பெறும் நிலைக்களன் ஆகும். மற்றும் நாம் அடிக்கடி தவறாக நினைத்துக் கொள்வதைப் போல ஒரு களியாட்டத் தோட்டம் இல்லை.

போராட்டத்தின் பல்வேறு ஆயுதங்கள்

உள்முகமாகச் சிந்தனை செய்யும் மனமானது நமக்கு, நம்முள்ளே நடைபெற்றுக் கொண்டுள்ள நிகழ்வுகளை எப் பொழுதும் நம் கவனத்திற்குக் கொண்டு வருகிறது. நாம் நம் மனத்தில் எழும் ஒவ்வொரு எண்ணத்தைக் குறித்தும் அல்லது எழ விரும்பும் எண்ணத்தைக் குறித்தும் மிகவும் விழிப்புணர் வுடனும் உணர்ந்து கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும். மனக்கட்டுப்பாட்டைப் பெறாமல் நம்மால் முன்னேற இயலாது மற்றும் நம் மனத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை உணராமல் நம்மால் அதை ஒருபொழுதும் கட்டுப்படுத்தவும் இயலாது. எனவே ஆன்மீக வாழ்க்கையின் உயர இதுவே முதல்படிகளில் ஒன்றாகும்.

தற்சமயத்தில் நம் மனத்தின் ஒரு பகுதியானது புலன் இன்பத்தையும், புலன் வாழ்க்கையையும் விரும்புகிறது. அதே சமயத்தில் மனத்தின் மற்றொரு பகுதி அதற்காக ஏங் காமலுள்ளது. உன்னுடைய புலன்களை ஈர்க்கும் எல்லாப் பொருட்களின் மீதும் அல்லது பழைய தொடர்புகளை உன் னுள் எழுப்பும் இயல்புடைய பாங்குகளின்மீதும் ஒரு வெறுப்பை நீ வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எல்லா உலகியல் இன்பங்களின்மீதும் உண்மையாக உணர்ச்சி வசப்படாமல் இருக்கும் அந்தக் கணத்திலேயே இந்தச் சிக்கல் தீர்ந்துவிடுகிறது. அதன்பிறகு நீ புலனின்பங்கள் என்று கூறப் படுபவைகன்ளக் காட்டிலும் இனிமையாக உள்ள ஏதோ ஒன்றைச் சுவைப்பாய். எப்படியிருப்பினும் அவை முக்கியத் துவம் அற்றவை ஆகும். மருட்சியானது ஏதாவது ஒரு வகை யில் உன்னை நிலைகுலையச் செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்று நீ உணர்ந்தால் அத்தகைய கெட்ட எண்ணங்களின் தீய விளைவுகளை ஆராய்ந்து காண்பாய் அல்லது தூய்மைப்பாடு மற்றும் துறவின் உருவமாகத் திகழும் ஒரு சிறந்த மனிதரின் வாழ்க்கையைக் குறித்து ஊன்றி நினைப்பாய். ஆரோக்கியமான பெருமிதமானது அடுத்தடுத்து

நம்முயற்சிகளில் உறுதுணையாக இருக்கும். 'நான் கடவுளின் ஒரு பக்தன், நான் ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்ற விரும்பு கிறேன். அதனால் திடமற்ற மனநிலை உள்ளவன் என்பது எக்கட்டத்திலும் எனக்குப் பொருந்தாது' என்று கருத வேண் டும். ஒருவருடைய புலன் உணர்ச்சிகளுக்கும், விருப்பங் களுக்கும் அடிபணிவது எப்பொழுதும் பலகீனம் மற்றும் கோழைத்தனங்களின் அடையாளமாகும். உனக்கு உன்மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள இயலவில்லை எனின், உடனொத்த வேறு சில சாதகர்களிடம் செல்வாய். மனத்தின் போக்கை மாற்றுவாய். மற்ற சாதகர்களுடன் ஏதாவது புனித மான விஷயம் குறித்துப் பேசுவாய். அல்லது அதைப் போன்று வேறு ஏதாவது ஒன்றைச் செய்வாய். நீ தனியாக இருந்துகொண்டு, நீ விரும்பும் பொருட்களைக் குறித்து எண்ணி ஏங்குவதற்கு இடமளித்தல் கூடாது. இது விஷயங் களை மேலும் மோசமடையச் செய்யும். அதன்பிறகு பெரும் பாலும் உன் கால் சறுக்கி, நீ துன்பம் அடைவது நிச்சயமாகும். அத்தகைய சூழ்நிலையில் உன் மனம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், உன்னால் முடிந்தால் உன்னை உயர்த்த வல்ல ஏதோ ஒன்றைப் படிப்பதற்கோ அல்லது ஆராய் வதற்கோ உன்னை வற்புறுத்திக் கொள்வாய்.

முதலில், தியானமானது முறையாகச் செய்யப்பட்டால், அது மனத்தின் அடி உணர்வுத்தளத்தை முற்றிலும் கலக்கு கிறது. அங்கு மறைந்துள்ள மோசமான விஷயங்கள் இயற்கை யாகவே மேலே வருகின்றன. எனவே சாதகன் ஒருபொழுதும் பயப்படக் கூடாது. உள்முகமாகத் திரும்பியுள்ள மனமானது மிகவும் மோசமான கூர்உணர்வை உடையதாக ஆகிறது. மற்றும் எந்த அனுபவங்கள் மனத்தில் ஒரு பதிவையும் விடவில்லை என்று கண்டு கொள்ளப்பட்டதோ, அந்த அனுபவங்கள், ஆழமான வடுக்களையும், கீறல்களையும் ஏற்படுத்தியுள்ளன என்று கண்டுகொள்ளப்படுகிறது. அத்தகைய எல்லாப் பதிவுகளும் துடைத்து அழிக்கப்பட வேண்டும். மற்றும் அதைச் செய்வதற்காக ஒருவர் அவற்றை தைரியத்துடன் எதிர் கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் உன்னுடைய ஒழுக்க நெறிமுறைகள் குறித்த இழைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஒரு சாட்சியின் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். உன்னை உன்னுடைய விருப்பங்களுடனும், அடக்க முடியாத ஆசைகளிலிருந்தும், வெளிப்புற நிகழ்வுகளிலிருந்தும் அடையாளம் கண்டுகொள்வதைத் தவிர்ப்பாய். உன் மனமானது வெறியாட்டத்தில் இருப்பினும் அதைக் கவனித்துக் கொண்டு, உன்னை அதனிடமிருந்து பிரித்துக் கொள்வதற்கு முயற்சி செய்வாய். நீ உன் எல்லா மனநிலைகளின் நிலைத்த சாட்சியாவாய். உன்னுடைய எண்ணங்களுடன் உன்னை ஒருபொழுதும் அடையாளம் கண்டு கொள்ளாமல் இருப்பாய். தொடக்க நிலையில் இருப்பவருக்கு இது மிகவும் கஷ்டமான அடியாகும். ஆனால் அந்த அடி ஒருமுறை எடுத்து வைக்கப்பட்டவுடன் போகப் போகச் சுவை குறைந்து எல்லாமே இயல்பான தாகிவிடும்.

ஒரு புனிதமான வடிவத்தைத் தியானிப்பதும், ஜபம் செய்வதும் மிகவும் உறுதுணை செய்பவையாகும். வடிவமானது, வடிவமற்றதற்கும் எங்கும் ஊடுருவிப் பரவியுள்ள பரம்பொருளுக்கும் நுழைவாயிலாக உள்ளது. ஒரு தெய்வீக வடிவத்தைப் பிரார்த்திப்பாய் மற்றும் அதைக் கற்பித்துக் கொள்வதற்கு முயற்சி செய்வாய். பிறகு, ஏதாவது விரும்பத்தகாத வடிவங்கள் உன் மனத்தில் எழுந்தால், உன்னுடைய இஷ்ட தெய்வத்தின் வடிவத்தின் உதவியால் அதை அகற்ற முயற்சி செய்து, அதனுள் இரண்டறக் கலந்து விடுவாய்

வேதாந்தத்தை உன்னுள்ளே செலுத்திக் கொள்வதற்கு ஒரு பொழுதும் மறக்காதே. அது மிகவும் உறுதுணையானது ஆகும். முதலில் உன்னுடைய சொந்த தெய்வீக ஆற்றலைக் குறித்து எண்ணுவாய். பிறகு மற்ற மற்ற எல்லா உருவங்களின் தெய்வீக ஆற்றலைக் குறித்து எண்ணுவாய். உனக்குத் தொல்லை அளிப்பவர்களிடம் உள்ள தெய்வீக ஆற்றலைக் குறித்து எண்ணுவாய். இயல்பாகவே நாமே தூய்மையானவர்களாகவும், புனிதமானவர்களாகவும் இருப்பின், நாம் இதை

இந்த வாழ்க்கையிலேயே, மனத்தின் மூலம் மட்டுமன்றி, உடலின் மூலமும் வெளிப்படுத்த வேண்டும். இங்குதான் உண்மையான எல்லா ஆன்மீகப் போராட்டங்களுக்கான சோதனை உள்ளது. மனம் சார்ந்த வாழ்க்கை உடல் சார்ந்த வாழ்க்கை என்னும் இரண்டிலுமே உணரப்பட வேண்டும். நம்முடைய ஆன்மீகப் பயிற்சிகள், உடல் சார்ந்த மற்றும் இலட்சியத்திற்கு இடையில் தேவையான இசைவுடைமையை ஏற்படுத்துவதில் உதவி புரிய வேண்டும். ஆன்மீக வாழ்க்கை என்றால் பேராற்றல் வாய்ந்த தளராத உறுதி மற்றும் ஒருமுகப்பட்ட தன்மையுடன் கூடிய நோக்கமுமாகும். இவற்றின் உதவியுடன் மட்டுமே வெற்றியை அடையவியலும்.

நீ எந்தச் சூழ்நிலையிலும் உன் மனப்பான்மை மாறியுள்ளது என்றோ, அல்ல தவறான எண்ணங்கள் உன்னுள்ளே எழுகின்றன என்றோ வருத்தப்படவோ அல்லது சோர்வடையவோ கூடாது. அது இயல்பானதுதான். இப்பொழுது சீரான பயிற்சியின் மூலம் நீ உயர்ந்த ஆன்மீக அனுபவங்களை உன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும். நாம் மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை நம்முடைய விழிப்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டும். பலவற்றுள்ளும் ஒன்றைக் காண வேண்டும். தெய்வீக ஞானத்தை, தூய்மைப்பாட்டை, ஒற்றுமையை உடல் மற்றும் மன மட்டங்களில் வெளிப்படுத்த வேண்டும். நாம் ஆன்மீகப் பாதையை உறுதியுடன் சீராகப் பின்பற்றிக்கொண்டு, கடவுளிடம் நம்பிக்கை கொண்டிருந்தால் இது காலத்தைப் பொறுத்து ஒன்றாகவே விளங்குகிறது. சுவாமி விவேகானந்தரின் வலிமையளிக்கவல்ல சிறிய பாடலை நினைவில் கொள்வாய்.

'கோலக் கதிரோன் மேகத்தால்
கொஞ்சம் மறைந்துபோனாலும்
நீலவானம் ஒளிமங்கி
நிறையும் இருளால் சூழ்ந்தாலும்

சற்றே தொடர்ந்து பற்றிடுக
தைரியத்தோடு திகழ்பவனே
வெற்றி என்பது நிச்சயமாய்
விரைவில் உன்னைத் தேடிவரும்!
கூதிர் காலம் போய்ப்பிறகு
கோடை வந்திங்குற்றாலும்
மோதும் அலையை முகட்டினிலே
முழைகள் எழுப்பி நின்றாலும்

ஒளியும் இருளும் ஒன்றோடொன்
றுந்திடும் அந்த நேரத்தும்
தளர் வெதுமின்றி அசையாமல்
தைரியமாக இருப்பாய் நீ.[1]

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.18.

30
ஆன்மீக அனுபவத்தின் மெய்ம்மை

தற்காலத்திய சந்தேகங்கள்

நாம் ஆன்மீக அனுபவங்களைக் குறித்து நினைத்துப் பார்க்கும்பொழுது, இந்த அனுபவங்கள் அனைத்தும் உண்மையா என்னும் கேள்வி எழுகிறது. எனக்கு நியூயார்க்கில் ஒரு திருச்சபை சமய குருவைத் தெரியும். ஒருநாள் அவர் அவருடைய மகளிடம் ஆன்மீகத்தைக் குறித்து ஏதோ கூறிய பொழுது அவள் வியப்படைந்து, 'அப்பா, அது உண்மையா அல்லது நீங்கள் போதிக்கிறீர்களா' என்று கேட்டாள். நாம் பலவகைப்பட்ட ஆன்மீக அனுபவங்களைப் பற்றிக் கேட்கிறோம், மற்றும் எப்பொழுதும், 'அவை உண்மையானவையா?' என்று வியப்படைகிறோம்.

எப்பொழுதும் எல்லாவற்றையும் குறித்து விவாதிப்பதற்கு முயற்சி செய்யும் ஐயுறவாதிகள் (Sceptics) உள்ளனர். அத்தகைய எல்லா அனுபவங்களும் அதிகமாகத் தூண்டிவிடப்பட்டுள்ள நரம்புகளினால் ஏற்படுத்தப்படுகின்றன என்னும் கருத்தைச் செயல்துறைக் கோட்பாட்டாளர் (Realist) கொண்டுள்ளார். வில்லியம் ஜேம்ஸ், இம்மனிதர்களில் சிலரை, 'மருத்துவம் சார்ந்த உலகாயதவாதிகள்' என்று அழைப்பார். இவர்களில் ஒருவர் ஒரு சிறந்த ஞானியைக் குறித்து பால்தன்மை சார்பாக அவர் சீர்கேடு அடைந்திருப்பதால் அவருக்கு ஆன்மீக அகக் காட்சிகள் தோன்றுகின்றன' என்று கூறியுள்ளார். மற்றொருவருக்கு, 'அவர் நரம்புக் கோளாறால் துன்புற்றுக் கொண்டிருப்பதால் அவருக்கு ஆன்மீக அனுபவங்கள் ஏற்படுகின்றன' என்று கூறியுள்ளார். நரம்புக் கோளாறுக்கு ஆட்பட்ட ஒருவர்தான், உலகியலிலிருந்து தன்னைப் பிரித்துக் கொண்டு, வேறு வகைப்பட்ட

விழிப்புணர்வு மட்டத்தை அடைகிறார் என்பது அவருடைய கருத்து ஆகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர், கண்டிப்பு மிகுந்த கடுமையான ஆன்மீக விதிமுறைப் பயிற்சிகளை மேற்கொண்டபொழுது பல மனிதர்கள், அவருடைய மூளை குழம்பியுள்ளது என்று எண்ணினர். அவர் அவருடைய பல குருமார்களில் ஒருவ ராகிய பைரவி பிராம்மணியைச் சந்தித்த பொழுது அவரிடம், ஸ்ரீராமகிருஷ்ணர் மனிதர்களின் கருத்தைப் பற்றிக் கூறினார். அதற்கு, ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்திருந்த அப் பெண்மணி, 'இங்கு பார், இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு வரும் ஏதாவது ஒரு பொருள் மீது பைத்தியமாக உள்ளனர். நீ கடவுள் மீது பைத்தியமாக இருக்கிறாய். மற்றவர்கள் உலகியல் பொருட்களின் மீது பைத்தியமாக உள்ளனர். அது ஒன்றுதான் வேறுபாடு ஆகும்' என்று பதில் கூறினார்.[1]

நரம்புக் கோளாறுக்குப் பலியாகியிருப்பவனுக்கும் 'தெய்வீகக் கண்' என்னும் புதிய அகக் காட்சியின் ஆற்றலைப் பெற்றுள்ள உண்மையான ஞானிக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் அவருடைய 'Varieties of Religious Experience' என்னும் நூலில் நாம் வழக்க மாக இருந்து கொண்டிருக்கும் விழிப்புணர்வு அடுக்குடன் ஆழ மான ஒரு அடுக்கிலிருந்து உண்மையான ஆன்மீக அனுபவம் வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். அவர் யோகப் பயிற்சியை ஆன்மீகம் சார்ந்த நுண்ணறிவுத் திறனை ஏற்படுத்தும் திறனுடையதாகக் கூறியுள்ளார்.[2] யோகமானது நம்முடைய விழிப்புணர்வுடன் தொடர்புபடுத்திக்கொள்வதற்கு உறுதுணை யாக உள்ளது. யோகியானவன், உடல் சார்ந்த வாழ்வுடன் கூடிய தடைகளை விஞ்சி மேம்பட்டு, பரம்பொருளை நேருக்கு நேர் காணக்கூடிய ஒரு நிலையை அடைந்துள்ளான்.

---

1. *குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், 1.291-292.*

2. வில்லியம் ஜேம்ஸ், Varieties of Religious Experience (New York, The Modern Library, Random House) *பக்கம் 72,391,418,475.*

சமயம் சார்ந்த கருத்துக்களுக்கு விஞ்ஞானிகளின் எதிர்ப்பு குறைந்துகொண்டு வருகிறது. பொதுவாக உள்ள ஆய்வுக்கூடங்களின் உத்திகளால் அளக்கவியலாத ஒரு ஆன்மீக அனுபவ மட்டத்தை அடையாளம் கண்டுகொள்ளத் தொடங்கியுள்ள நவீன விஞ்ஞானிகளும் உள்ளனர். பல விஞ் ஞானிகள் செயலறிவால் அறியத்தகுந்த இந்த விஞ்ஞானத் தின் எல்லை வரையறைகளை உணர்ந்து, புலன் அனுபவத் திற்கு அப்பால் உள்ள ஒரு உண்மையை அறிந்து கொள்வதற் கான வழிமுறைகளைத் தேடிக் கொண்டுள்ளனர். உலகத்தின் தலைசிறந்த ஞானிகளின் செயல்பாடுகளில் ஒரு புதிய அக் கறை ஏற்பட்டுள்ளது. உலகத்திலுள்ள சமயங்களைச் சார்ந்த ஞானிகளின் அனுபவங்கள் வெகு நன்றாகவே உறுதிபடுத்தப் பட்டுள்ளதால் அவைகளைப் பகற்கனவுகள் என்று ஒதுக்கி விட இயலாது.

காலங்காலமாக கிழக்கு, மேற்கு என்னும் இரண்டிலும் பல சிறந்த ஞானிகள் இருந்துள்ளனர். அவர்களில் சிலர் மிக உயர்ந்த ஞானம் பெற்றவர்களாக விளங்கினர். மரபு சார்ந்த சமயங்கள் சில பூர்வாங்க சடங்குகளிலேயே நிறைவை அடைந்து விடுகின்றன. கிறிஸ்தவ சமயத்தில் ஞானஸ்நான மானது முதல்நிலை சடங்காக உள்ளது. இப்பொழுது ஞானஸ் நானத்தைக் குறிக்கும் பல கோட்பாடுகள் உள்ளன. ஒரு குழுவினர், தண்ணீரில் முழுமையாக மூழ்காவிட்டால் ஒரு மனிதனுக்கு மீட்பு அளிக்கப்பட மாட்டாது என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர். மற்றொரு குழுவினர் அதே அளவு அகத்தூய்மை அடைந்துவிட்ட உணர்வை நெற்றியில் புனிதத் தண்ணீரால் சிலுவைக் குறி இட்டால் ஒருவர் பெறுவார் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர்.

இன்னும் வேறு சிலர், மனத்தூய்மையை வற்புறுத்து கிறார்கள், உடல்சார்ந்த ஞானஸ்நானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகின்றனர். ஒருமுறை சீனாவில் சமயப் பரப் பாளர்களின் சமயவினை கூட்டுவழிபாடு நடத்தப்பட்டது. அதில் ஒரு தீட்சை செய்விப்பவரும் (Baptist) அதன்பிறகு கிறிஸ்தவ கோட்பாட்டைப் பின்பற்றும் ஒருவரும் (Methodist)

மற்றும் இறுதியாக ஆங்கில நண்பர் கழகத்தைச் சார்ந்தவரும் உரையாற்றினர். அப்பொழுது சீனா நாட்டைச் சேர்ந்த ஒருவர் மற்றொருவரிடம், 'இந்த ஒவ்வொரு கிறிஸ்தவரும் நமக்குத் தனித்தனியான திருமுறை கோட்பாடுகளை வழங்கிக் கொண்டு உள்ளனர். அவைகளுக்கு இடையிலுள்ள வேறு பாடு என்ன என்பதை உன்னால் கூற இயலுமா?' என்று கேட்டார். 'எத்தகைய வேறுபாடும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை' என்று அந்த நண்பர் கூறி, 'சிலவற்றில் பெரிய அளவில் நீர் நனைப்பு உள்ளது, சிலவற்றில் மிகக்குறைந்த அளவில் நீர் நனைப்பு உள்ளது. மற்றும் சிலவற்றில் நீர் நனைப்பு இல்லை' என்று கூறினார்.

சமயத்தின் வெளிப்புற முறைகளிலுள்ள சிறிய வேறு பாடுகளைப் பெரிதுபடுத்துவது மதவெறியாகும். அது ஒரு வருக்கொருவர் பகைமையை ஏற்படுத்தவல்ல பல்வேறு குழுக்களை மட்டுமே தோற்றுவித்துள்ளது. குழுக்களின் பக்கம் திரும்புவதற்குப் பதிலாக நாம் உறுதியாக உண்மை யான ஞானிகளின் பக்கம் திரும்புவோம். அவர்கள் ஆன்மீக ஒழுக்க நெறிமுறைகளை மேற்கொண்டதால் இறுதியான உண்மையை உணர்ந்துள்ளனர். மற்றும் அதை அவர்களின் வாழ்க்கைகளின் நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர், 'சிலர் பாலைப்பற்றிக் கேள்விப்பட்டி ருக்கிறார்கள். சிலர் பாலைப் பார்த்திருக்கிறார்கள், சிலரோ பாலைக் குடித்திருக்கிறார்கள். வெறும் கேள்விப்பட்ட வர்கள் அஞ்ஞானிகள், பார்த்திருப்பவர்கள் ஞானிகள், குடித் திருப்பவர்களுக்கே விசேஷ விஞ்ஞானம் ஏற்பட்டு உள்ளது. அதாவது சிறப்பாக அதைப்பற்றி அவர்கள் அறிந்திருக் கிறார்கள்.'[1]

'ஐயா, நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?'

பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தரான நரேந்திரன் கல்லூரி மாணவனாக இருந்த பொழுது கடவுள் நம்பிக்கை

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.135.

அற்றவராக இருந்தார். அவர் பல சமயத் தலைவர்களை அணுகி, அவர்களில் யாராவது ஒருவருக்கு உண்மையான, நேரடியான கடவுள் அனுபவம் ஏற்பட்டு உள்ளதா என்று கேட்டார். இறுதியாக விதி அவரைச் சிறந்த நவீன ஞானியும், தீர்க்கதரிசியுமான ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அழைத்துக் கொண்டு சென்றது. கல்லூரி மாணவனான அந்த இளைஞன், அந்த முனிவரை, மழுப்பலற்ற முறையில் கேட்ட முதல் கேள்வியானது, 'ஐயா நீங்கள் கடவுளைப் பார்த்திருக்கிறீர்களா?' என்பதாகும். ஒரு கணம் கூடத் தயங்காமல், ஒவ்வொரு சொல்லிலும் உண்மை ஒலிக்க அந்த முனிவர், 'ஆமாம், உன்னை நான் இங்கு பார்ப்பது போலவே அவரையும் பார்த்திருக்கிறேன்' என்று அந்த இளைஞனிடம் கூறினார். நரேந்திரன் இரண்டாம் முறை அங்கு சென்ற பொழுது அந்நிகழ்வில், மிகப் பெரிய ஆன்மீகப் பசியுடன் வெந்து கொண்டிருந்த பொறுமையற்ற அந்த இளைஞனுக்கு நேரான ஆன்மீக அனுபவச் சுவையைக் கொடுக்க விரும்பினார். அகநிலைகடந்த குருதேவரின் ஸ்பரிசத்தினால், சீடனுக்கு அந்த அறை அதிலுள்ள எல்லாப் பொருட்களுடனும் அவனைச் சுற்றிச் சுழல்வது போன்றும், ஒரு வெற்றிடத்தில் மறைவது போன்றும், அதில் அவனும் இரண்டறக் கலக்க இருப்பதைப் போன்ற ஒரு விசித்திரமான அனுபவம் ஏற்பட்டது. அவனுக்கு அத்தகைய அனுபவம் அறிமுகம் இல்லாமலிருந்ததால் 'நீங்கள் எனக்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? வீட்டில் எனக்குப் பெற்றோர் இருக்கின்றனர்' என்று கத்தினான். ஒரு புன்சிரிப்புடன் குருதேவர் அவனை உடனடியாக வழக்கமான விழிப்பு உணர்வு நிலைக்குக் கொண்டு வந்தார்.[1] ஸ்ரீராமகிருஷ்ணரின் வழிகாட்டுதலுடன் நரேந்திரன் விரைவில் ஆன்மீக நெறிமுறைகளில் பயிற்சி பெறத் தொடங்கினார். மற்றும் உரியகாலத்தில் கணக்கற்ற அகக்காட்சிகள் மற்றும் மிக உயர்ந்த ஆன்மீக அனுபவமான

1. Eastern and Western Disciples, The Life of Swami Vivekananda (கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1974) பக்கம் 47-48.

நிர்விகல்பசமாதி உள்ளிட்ட பல அனுபவங்களைக் கிடைக்கப் பெற்றார். பல ஆண்டுகளுக்குப் பிறகு, சுவாமி விவேகானந்தர். தன்னைப் பின்பற்றியவர்களுக்கு, 'ஆன்மாவை உணராத வரையில், தனக்கு ஆன்மா இருக்கிறது என்று கூறவோ, கடவுளைக் காணாத வரையில் கடவுள் இருக்கிறார் என்று கூறவோ ஒருவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? கடவுள் ஒருவர் இருந்தால் அவரை நாம் காண வேண்டும். ஆன்மா ஒன்று உண்டானால் அதை நாம் உணர வேண்டும். இல்லாவிடில் அதை நம்பாதிருப்பதே நல்லது. ஆஷாடபூதியாக இருப்பதை விட வெளிப்படையாக நாத்திகனாக இருப்பதே சிறப்பு. ஒருபுறம் படித்தவர்களின் நவீன கருத்து மதம், தத்துவஞானம், பரம்பொருளைத் தேடல் எல்லாமே வீண் என்று அவர்கள் கூறுகின்றனர். மறுபுறம் அரைகுறையாகக் கற்றவர்களோ, இவற்றில் எதற்கும் அடிப்படை இல்லை, அவை உலகிற்கு நன்மை செய்வதற்கான தீவிர தூண்டு சக்திகளாக இருக்கும், அவற்றின் மதிப்பு அவ்வளவே என்று கருதுவதாகத் தோன்றுகிறது. இறைவனிடம் நம்பிக்கை வைத்தால் மக்கள் நல்லவர்களாகவும் ஒழுக்கம் உடையவர்களாகவும் ஆகலாம். எனவே நல்ல குடிமக்களாக இருக்கலாம். இது இவர்களின் கருத்து.'

இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருப்பதற்காக நாம் அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. ஏனெனில் அவர்களுக்குக் கிடைக்கிற உபதேசம் எல்லாம் சாரம் எதுவுமற்ற, பொருளற்ற பிரசங்கங்களில் வெறும் நம்பிக்கை வைப்பதற்கு மட்டுமே. வெறும் வார்த்தைகளைப் பிடித்துக் கொண்டு வாழுமாறு மட்டுமே அவர்களுக்குச் சொல்கிறார்கள். அது நடக்குமா? அது நடந்திருக்குமானால் மனித இயல்பின்மீது எனக்குத் துளிக்கூட மதிப்பில்லாமல் போயிருக்கும். மனிதனுக்கு உண்மை வேண்டும். உண்மையை அவன் அனுபவத்தில் உணர வேண்டும். அதைக் கிரகித்தபின், அனுபவித்த பின், உணர்ந்தபின், அதன் பிறகு மட்டுமே எல்லா சந்தேகங்களும் மறையும். எல்லா இருளும் அகலும். எல்லா கோணல்களும் நிமிர்ந்து நேராகும் என்று வேதங்கள் பறைசாற்றுகின்றன.

'அழியாத அமரத்துவத்தின் குழந்தைகளே! மேலான உலகங்களில் வாழ்பவர்களே! வழி கண்டு பிடிக்கப்பட்டு விட்டது. இந்த இருளிலிருந்து வெளியேற வழி ஒன்று உள்ளது. எல்லா இருளுக்கும் அப்பால் உள்ள பரம் பொருளை அறிவதே அது. வேறு வழியே இல்லை.'[1]

கேள்விஞானம் மட்டுமே போதாது

மனத்தின் மிகப் பெரிய தூய்மைக்கேடால் நம்மால் உண்மையைத் தெளிவாகக் காண இயலுவது இல்லை. நாம் முயற்சி செய்து நம்முடைய மன அழுக்கை அகற்ற வேண்டும். மற்றவர்கள் நமக்குத் தேவையான ஆலோசனைகளை மட்டுமே வழங்கவியலும். ஆனால் நாம் அதற்குத் தகுந்தாற்போல நம் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நமக்கு மனம் சார்ந்த ஒரு தொலை நோக்காடி (Telescope) வேண்டும். நம் ஒவ்வொருவரிடமும் திறமையானது அடங்கியுள்ளது. அது வெளியிலிருந்து வருவதுமில்லை. அதை நம் இயல்புடன் சேர்க்கவியலாது. ஆனால் இத்தனை வருடங்களாக நாம் புறக்கணித்த ஒன்று ஆகும். நம்முடைய சாதாரணமான மனதானது தூய்மையாக தூய்மையாக, அதற்குப் பின்னால் நாம் ஒரு சூட்சுமமான ஆன்மீக மனத்தைக் கண்டு கொள்கிறோம். அது புத்தி அல்லது இதயம் என்று அழைக்கப்படுகிறது. அது மலர்வதால், ஒரு புதிய கண் திறக்கப்படுகிறது. அது, 'தெய்வீகக் கண்' ஆகும். 'திவ்யசக்ஷு' என்று கீதையில் 11-ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] ஆன்மீக வாழ்க்கை என்றால், இந்த தெய்வீகக் கண் வளர்ச்சி அடைவதுதான் ஆகும்.

நாம் அனைவரும் முழுமையான புலன்களைப் பெற்றிருக்கிறோம். மற்றும் புலன்களின் மூலம் நாம் எதை அனுபவிக்கிறோமோ, அது உண்மையானது, நிலைத்தது

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.7,8.
2. பகவத் கீதை, 11.8.

என்று நாம் ஒருபொழுதும் நினைக்கக்கூடாது. பாகுபடுத்தி ஆராய்ந்து அறியும் முதல் பயிற்சியும், முதலில் உதயமான ஞானமும் இவ்வுலகமானது தொடர்ந்து மாறிக்கொண்டே வருகிறது என்பதைப் புலப்படுத்தியுள்ளது. ஒரு வானொலிப் பெட்டி முடிவற்ற மின் அலைகளைப் பெற்றுக் கொண்டே இருக்கிறது. ஆனால் நம் புலன்களால் அவற்றை நேரடியாக உணர இயலாது. அதைப் போன்றே நம்முடைய மேலோட்ட மான மனத்தாலும், ஆன்மாவிலிருந்து வெளிப்படும் சூட்சும மான ஆன்மீக அலைகளையும், கடவுளிடமிருந்து வெளிப் படும் சூட்சுமமான ஆன்மீக அலைகளையும் உணரவியலாது. ஆனால் மனம் தூய்மைப்படுத்தப்பட்டு, உள்முகமாகத் திருப்பப்பட்டு, ஒருமுகப்படுத்தப்பட்டால், நாம் நமக் குள்ளே சூட்சுமமான, மிக சூட்சுமமான உலகங்களையும் கண்டு பிடிக்கிறோம்.

வெறும் வாசிப்பு, விவாதம், மற்றும் நல்ல உணர்வுகள் மட்டுமே போதாது. உண்மையான ஆன்மீகப் பயிற்சியை முழுமையான நிறை ஆர்வத்துடன் மேற்கொள்வதற்குத் தயாராக இல்லாதவர்கள் வேறு ஏதாவது பக்கம் திரும்பி விடுவது உசிதமானது ஆகும். அவர்களால் ஆன்மீக வாழ்வில் எந்த முன்னேற்றத்தையும் ஒரு பொழுதும் காண வியலாது. மனிதர்களுக்கு ஏதாவது உயர்ந்த அனுபவமோ அல்லது எண்ணமோ ஏற்பட்ட கணத்தில் அவர்கள் மிகச் சிறந்த எதையோ அல்லது மிக முக்கியமான எதையோ அடைந்து விட்டதாகக் கருதும் அற்பத் தன்மை உடையவர்களாக உள்ளனர். உண்மையான ஆன்மீக வாழ்வு என்றால் என்ன மற்றும் உண்மையாக அது எங்கு தொடங்குகிறது என்பதைக் குறித்த கருத்து உண்மையாக அவர்களிடம் இல்லை.

ஒரு சமய போதகருக்கு ஒரு உடன் பிறந்தவர் இருந்தார். அவர் ஒரு மருத்துவர். அவர்கள் பார்ப்பதற்கு ஒரே போன்று இருந்தனர். ஒரு நாள் ஒரு நண்பர் அவர்களில் ஒருவரை வழியில் நிறுத்தி, அவருடைய நேர்த்தியான விளக்கப் பேருரைகளுக்காக அவரைப் பாராட்டினார். அதற்கு அந்த மனிதர், 'நான் போதிப்பவர் அல்ல. நான் செயறப்படுத்துபவன்'

என்று கூறினார். சமயத்தைப் போதித்தால் மட்டும் போதாது. ஆன்மீக வாழ்க்கையைக் குறித்து பேசினால் மட்டும் போதாது. நாம் உண்மையான சில ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பெரும்பாலோர், ஆன்மீகப் பயிற்சியை மேற் கொள்ளத் தயக்கம் காட்டுகின்றனர். நம்முடைய இயல்பான திறமைகளை, நம்முடைய உண்மையான இயல்பை உணர் வதற்கு, ஆன்மீக உண்மைகளை உணர்வதற்கு இயலச் செல் லும் ஒரு வழியில் நமக்குப் பயிற்சி அளிக்கவில்லை எனின், ஆன்மீக வாழ்வு என்பதன் பொருள் என்ன? ஏசுநாதரின் போதனை, புத்தரின் போதனை, ஸ்ரீகிருஷ்ணரின் போதனை, ஸ்ரீராமகிருஷ்ணரின் போதனை இவைகளுக்கு என்ன அர்த்தம்? நாம் நம்மை உணர்வதற்கான வழியை அவர்கள் காட்டியுள்ளனர். ஆனால் நாம் உண்மையை உணரவில்லை எனின், அவை நமக்குப் பயனற்றுப் போகிறது. ஆன்மீக மரபு இல்லாததனால் ஏசுநாதரின் போதனை மேற்கத்திய நாடு களில் உணரப் படாமல் போய் விட்டது. மற்றும் வெறும் காலியான ஓடுமட்டும் எஞ்சியுள்ளது. ஒரு கிறிஸ்தவர், ஏசுநாதரைப் புரிந்து கொள்வதற்கு முன்பு ஏசுநாதரின் விழிப்பு நிலையை அடைய வேண்டும். புத்த சமயத்தைப் பின்பற்றும் ஒருவர், புத்தரைப் புரிந்து கொள்வதற்கு முன்பு புத்தரின் விழிப்பு நிலையை அடைய வேண்டும்.

சமயத்தின் கட்டளைக் கற்கள்

நம்முடைய ஆன்மீகப் பயிற்சியின் தொடக்க நிலை யில், நமக்கு எத்தகைய ஆன்மீக அனுபவமும் ஏற்படுவது இல்லை. ஏனெனில் பாரம், பாராமான அழுக்குகளும், குப்பைகளும் பெருக்கி அகற்றப்பட வேண்டிய ஒரே கால மாக அது உள்ளது. மனமானது ஓரளவிற்கு ஏற்கனவே வலிமையை அடைந்திருந்தாலும்கூட தீய எண்ணங்கள் தோன்றும். ஆனால் அவை அதற்கு மேல் நமக்குத் தீங்கு செய் யாது மற்றும் அதைச் சுலபமாக வென்றுவிடலாம். ஒரு பட கிற்குச் சிறந்த மற்றும் அனுபவம் நிறைந்த படகோட்டி இருப்பின் அது மூழ்கிவிடும் என்னும் பயமின்றி புயலைச்

சந்திக்கலாம். நம்முடைய மனத்திலிருந்து புலன்களால் உணரத்தக்க இவ்வுலகமானது முழுவதுமாக மறையவில்லை எனின், விருப்பங்களும், உணர்ச்சிகளும், ஈர்ப்புக்களும், வெறுப்பும் அவைகளுடைய சூட்சுமமான வடிவங்களிலிருந்து மறையாது.

அதுவரையிலும் உணர்ச்சிகள் நம் மனத்தில் தோன்றிக் கொண்டு இருக்கலாம். ஆனால் நாம் நம்முடைய ஒழுக்க நெறிமுறைகளின் இழையை ஆன்மீகப் பண்பாட்டின் மூலம் உறுதியாகச் செய்தால் நம்மால் அவற்றை எதிர்த்து நிற்கவியலும் மற்றும் அவற்றை அகற்ற இயலும். ஒழுக்க நெறிமுறைகளின் இழையை வலுப்படுத்துவதே ஆன்மீக முன்னேற்றத்தின் அடையாளமாகும். நாம் அருள் வருவதை உணரும் வரையிலும், முயற்சி செய்ய வேண்டும். ஆன்மீக வாழ்வில் தன் முயற்சி என்பது இன்றியமையாதது ஆகும். நாம் மிகப் பெரிய அளவில் உண்மையாகவே முயற்சி செய்யவில்லை எனின், நம்மால் உண்மையான சரணாகதி நிலையை அடையவியலாது.

நாம் மிகுந்த உறுதியான, ஆரோக்கியமான, தூய்மையான, பரிசுத்தமான உடலைப் பெற்றிருந்தால்தான் நம்மால் சரியான வகையைச் சார்ந்த அகக் காட்சியைப் பெற இயலும். அத்தகைய காட்சியால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் உண்மையிலேயே தாங்கிக் கொள்ளக் கூடிய தூய்மையான உடல் வேண்டும். தாங்கிக் கொள்ள இயலும். நமக்கு முழுமையாகத் தூய்மையாக்கப்பட்ட உணர்ச்சி வேகங்கள் அற்ற மனமும் மற்றும் உண்மையான ஆன்மீக உள்நோக்கும் இருந்தால், அது நம்மை நாம் உடல் அல்ல. மனமும் அல்ல, ஆண்களும் அல்ல, பெண்களும் அல்ல. இவ்வனைத்திலிருந்தும் வேறுபட்ட ஆன்மீக உளதாம் தன்மைகள் என்றும் உணர வைக்கிறது.

உண்மையான அகக்காட்சியானது, வடிவத்துடன் இருப்பினும், எப்பொழுதும் ஆன்மீக மூலக் கூறுகளை உள்ளடக்கிக் கொண்டு, முழு முதற் மெய்ப்பொருளான, பிரம்மனின்

மேன்மையைப் பிரதிபலிக்கிறது. எப்பொழுதும் உண்மையை உணர்ந்த த்வைதியாக இருப்பது, உண்மையை உணராத அத்வைதியைவிட சிறந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வடிவத்துடன் கூடிய உண்மையான அகக்காட்சி யானது, ஆன்மீகத்தின் உயர்ந்த மிக உயர்ந்த நிலைகளுக்கு அழைத்துச் செல்லத் தக்க ஒரு நிலையாக உள்ளது. ஆனால் உண்மையை உணராத, கோட்பாட்டைச் சார்ந்துள்ள ஒரு பொருண்மைவாதமானது உன்னை எங்கும் இருக்க விடுவ தில்லை. ஒரு அத்வைதியின் முழுமுதற் பொருளானது மிகுந்த தொலைவிலுள்ளது. மற்றும் நாம் எதைப் பற்றிக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம் என்றால் மேலாகச் சொல்லப் போனால் விசிஷ்ட அத்வைதமாகும். நாம் அனை வருமே வரையற்ற ஒரு முழுமையின் பகுதிகள் என்பது அதனுடைய கோட்பாடு ஆகும். எல்லாப் புலன்களும் அமைதி யடைந்து முழுமையாகக் கட்டுப்படுத்தப் பட்டால், மனமும் அவ்வாறே அமைதியடைந்து கட்டுப்படுத்தப்பட்டால், அந்த நிலையில் மட்டுமே உண்மையான அகக்காட்சியானது தோன்ற வியலும். அவ்விதம் இல்லையெனில் தோன்ற வியலாது.

மிகுதியாகச் சூடேறி மருட்சியடைந்த நிலையிலுள்ள மூளைக்கும், உண்மையான அகக்காட்சியைப் பெறுவதற்கும் மிகவும் குறித்துக் காட்டத்தக்க வேறுபாடு உள்ளது. உண்மை யான ஆன்மீக அனுபவத்தின் விளைவாக நாம் அதிக அளவு தூய்மையையும், பெரிய அளவில் உணர்ச்சிகளிலிருந்து விடுபட்டு புனிதத் தன்மையையும், ஒருமுனைப்பாட்டையும் பெறுகிறோம் என்பது ஒரு தகுதிச்சான்று ஆகும். சரணாகதி அடையும் நம்முடைய இயல்பு அதிகரிக்கிறது மற்றும் ஆன்மா, பரம்பொருளுடன் தன்னைப் பொருத்திக் கொள் கிறது. ஸ்ரீராமகிருஷ்ணர், 'கடவுளின் அருள் என்னும் தென்றல் எப்பொழுதும் வீசிக்கொண்டிருக்கிறது. நீ செய்ய வேண்டியதெல்லாம் உன் கப்பலின் பாயைவிரித்து வைத்துக் கொள்வதுதான்' என்று கூறுவார்.[1] பக்தன், கடவுளின்

1. Sayings of Sri Ramakrishna, பக்கம் 205.

கணநேரத் தோற்றத்தைப் பெற்ற பிறகு, அவன் சரியான காற்றைப் பற்றிக் கவலைப்பட மாட்டான். அந்தக் காற்று சூட்டுடன் கூடியதா, குளிர்ச்சி நிறைந்ததா அல்லது காற்றே இல்லையா என்று கவலைப்பட மாட்டான். தெய்வீக ஆற்றலின் ஓட்டமானது அவனைச் சரியான திசையில் முன்னேற்றிக் கொண்டிருக்கிறது என்று அவன் உணர்வான்.

அகக்காட்சியின் மற்ற இரு தகுதிச் சான்றுகள் பேரின்பமும், ஐயமற்ற நிலையும் ஆகும். உண்மையான ஆன்மீக அனுபவமானது சொற்களால் கூற வியலாத அமைதியையும் மகிழ்ச்சியையும், ஒரு நிறைவான உணர்வையும் ஏற்படுத்துகிறது. நம்மிடம் உள்ள ஏதோ ஒன்று, அது உண்மை என்று அறிகிறது. அது அதனுடன் அதனுடைய சொந்தமான, தெளிவான ஒளியையும், உண்மை என்னும் முத்திரையையும் கொண்டு இருக்கிறது. முற்றிலும் தூய்மையான, புனிதமான, ஒழுங்கான நெறிமுறைகளுடன் கூடிய வாழ்க்கையை மேற்கொண்டுள்ளவர்களை பொய்யான அகக்காட்சிகளால் சுலபமாக நெறிதவறச் செய்ய வியலாது. உண்மையான ஆன்மீக அனுபவத்திற்கு அதனுடைய சொந்தமான விளக்கச் சான்று உள்ளது.

எப்படியிருப்பினும் மிகுதியான ஆர்வம் உடைய பல சாதகர்கள் தொடக்கத்தில் உண்மையற்ற ஒளிகளால் தவறாக வழி காட்டப்படுகின்றனர். அவர்கள் சரியான வழியில் சென்று கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் எப்படித் தீர்மானிப்பார்கள்? வேதாந்தத்தின்படி ஆன்மீகத்திற்கு மூன்று கட்டளைக்கற்கள் உள்ளன. அவை ஸ்ருதி, அனுபவம் மற்றும் யுக்தி என்பவையாகும். இந்தக் கருத்தானது, ப்ரஹதாரண்யக உபநிஷதத்திலுள்ள புகழ்பெற்ற பகுதியில் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது.

'ஆன்மாவே பார்க்கப்பட வேண்டும், கேட்கப்பட வேண்டும், நினைக்கப்பட வேண்டும், நிச்சயமாக அறியப்

பட வேண்டும்.'[1] வேதங்கள் அல்லது ஞானமடைந்த ஒரு ஆச்சாரியரிடமிருந்து நாம் பெறும் வழிகாட்டுதல்தான் முதல் பெரிய உதவியாகும். நாம் வேதங்களை ஒரு வகையான கடமையாகப் படித்தால் மட்டும் போதாது. அவைகள் உட்கொண்டுள்ள பொருளைக் குறித்து ஒருவர் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். மற்றும் உண்மையை உணர்வது சாத்தியம்தான் என்பதைக் குறித்த உறுதியுடன் கூடிய தெளிவையும் பெற வேண்டும். தகுதி வாய்ந்த சரியான ஆச்சாரியர் உண்மையான தகுதியுடைய ஒரு மாணவனுக்கு உபதேசம் செய்த அந்தக் கணத்திலேயே மாணவன் நொடிப் பொழுதில் உண்மையை உணர்ந்து விடுகிறான் என்னும் துணிபுரையில் உண்மை உள்ளது. ஆனால் சாதகன் முதலில் கட்டுப்பாடு மிகுந்த ஒழுக்க நெறிமுறைப் பண்பாட்டால் உண்மையான தகுதியை அடைந்திருக்க வேண்டும்.

ஒருவர் உண்மையுடன் நேரடியான அனுபவத்தைப் பெற வேண்டும் என்பது ஆன்மீக வாழ்க்கையில் கவனிக்கத் தக்க மிக முக்கியமான விஷயம் ஆகும். கண்மூடித் தனமாகப் பின்பற்றுவது என்பது சமயம் சார்ந்த வாழ்க்கையின் கட்டளைவிதி அல்ல. ஏதாவது ஒரு சமயக் கொள்கைக்கு ஆதரவு தருவது (மேற்கு நாடுகளில் அது புரிந்து கொள்ளப் பட்டிருப்பதைப்போல) சமயம் ஆகாது. சமயம் என்றால் உணர்தல் ஆகும். சமயம் சார்ந்த உண்மைகள் ஒருவருடைய வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்பட வேண்டும். ஒருமுறை அல்ல, மீண்டும் மீண்டும் மெய்ப்பிக்கப்பட வேண்டும். உண்மையின் கணநேரத் தோற்றத்தைக் காண்பது முடிவானது அல்ல. கண நேரத் தோற்றத்தைக் காணாமல் இருப்பதைவிட அது சிறிது மேலானது ஆகும். மேலும் நம்முடைய ஆன்மீக அனுபவங்கள் நம் திருமறை நூல்களுடன் ஒத்திசைவுடன் இருக்க வேண்டும்.

---

1. ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஸ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யோ மைத்ரேயீ ॥

—பிரஹதாரண்யக உபநிஷதம், 2.4.5; 4.5.6.

இறுதியாக, திருமறை நூல்கள் மற்றும் அனுபவம் என்னும் இரண்டுமே பகுத்து ஆராய்வதற்கு உட்படுத்தப்பட வேண்டும். இது, திருமறை நூல்களிலிருந்து நாம் பெறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதுடன் மட்டுமின்றி, நம்மைக் குறித்த நம் அறிவையும் பெருக்குகிறது. நம்மை நாமே ஆராய்ந்து கொள்வதுதான் மிகச் சிறந்த பகுத்தறிவு ஆராய்வு ஆகும். இந்த உலகத்தில் எது நிலைபெற்றது, எது தற்காலிகமானது என்பதைத் தீர்மானிக்கவும் பகுத்தறியும் முறை மேற்கொள்ளப்படலாம். திருமறை நூல்கள் சாராத அல்லது உள்ளுணர்வை அடிப்படையாகக் கொள்ளாத உணர்ந்த ஆய்வறிவுக்கோட்பாடு (Intellectualism) இறுதியாக ஐயுறவாதத்திற்கு (Scepticism) வழிகாட்டி, ஒரு மனிதனின் ஆன்மீக எதிர் காலத்தையே அழித்துவிடும். தன்னுடைய சொந்த ஆணவத்திலேயே திளைத்திருக்கும் ஒரு மனிதன் ஒரு சொந்த சோகத்திற்கு ஆட்படுவது உறுதியாகும்.

இவ்விதத்தில் திருமறை நூல்கள், அனுபவம் மற்றும் பகுத்தறிவு என்பவை ஆன்மீக வாழ்வின் மூன்று வகையான தகுதிச் சான்றுகளாக அமைந்துள்ளன. மற்றும் இந்தத் தகுதிச் சான்றானது எல்லா நிலைகளிலும் எல்லா சாதகர்களாலும் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

உண்மையான மெய்யார்வம் மிகுந்த, விழிப்புணர்வுடைய சாதகன், அவனைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளிலும் படிப்பினையை உணர்கிறான். அவன் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும், உண்மைக்கும், பொய்க்கும் இடைப்பட்ட விருப்பத்தேர்வுடன் கூடிய கணமாகும். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட ஒவ்வொரு சாதகனும் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். மற்றும் அவனுடைய இதயத்தில் வேறுபடுத்திக் காணும் உத்வேகமான தீயை தெளிவுடன் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த நிகழ்வும், எந்த எண்ணமும் அவன் கவனத்திலிருந்து தப்பக் கூடாது. அத்தகைய ஒரு மனிதனுக்கு இந்த பிரம்மாண்டம் முழுவதுமே ஒரு பெரிய ஞான நூல் ஆகும்.

கனவும், உண்மையும்

கனவுகள் என்றால் என்ன? ஒரு சிறுவன் அவன் தாயிடம் அவன் கண்ட ஒரு கனவைப் பற்றிக் கூறினான். மற்றும் தாய் அவனிடம், 'ஜானி, கனவுகள் என்றால் என்ன?' என்று கேட்டாள். அதற்கு அச்சிறுவன், 'நீ தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது இயங்கும் திரைப்படத்தைக் காண்கிறாய்' என்று பதில் கூறினான். கனவுகளில் பல வகைகள் உள்ளன. சில பொருளற்றவை. சில நம்முடைய விருப்பங்களின் பிரதி பலிப்புக்கள் ஆகும். சில இதற்கு நேர்மாறாக உயர்ந்த ஆன் மீகத் தகுதி உடையனவாகும். சில கனவுகள், கடந்த காலத் தைக் குறிப்பிடுகின்றன. கடந்த பிறவிகளையும் கடந்த காலத் தையும் குறிப்பிடுகின்றன. நாம் நம்முடைய சில கனவுகளை ஆராய்ந்தால், நாம் சந்திக்கும் சில மனிதர்கள் அல்லது அவர் களுக்கு ஏற்பட்டுள்ள சில நிகழ்வுகள், நம்முடைய நிகழ்கால வாழ்க்கையைச் சேர்ந்தது அல்ல என்று உணர்ந்து கொள் கிறோம். சில கனவுகள் நம் வருங்காலத்தைக் குறிப்பிடு கின்றன. 1940-ஆண்டில் ஒருநாள் ஸ்வீடனில் இருந்தபொழுது நான் 2000 ப்ராங்குளை (francs) அனுப்ப வேண்டும் என்னும் உணர்வுடன் விழித்துக் கொண்டேன். நான் இதைச் செய் தேன். சில நாட்களுக்குப் பிறகு ஒரு யுத்த நெருக்கடிநிலை நடவடிக்கையாக அந்த நாட்டிலிருந்து சிறிய அளவில்தான் பணம் அனுப்பலாம் என்னும் சட்டமானது அமுல்படுத்தப் பட்டது. ஆப்ரகாம்லிங்கன் படுகொலையினால் நிகழப் போகும் தன் சொந்த மரணத்தைப் பற்றிய கனவைக் கண்டார். மற்றும் மற்றவர்களுக்கும் அதைப்பற்றிக் கூறினார்.

சில கனவுகள் நம்முடைய மறைந்துள்ள விருப்பங்களை யும், சிக்கல்களையும் வெளிப்படுத்துகின்றன. பல கனவுகள் குறியீடுகளாக உள்ளன. அவைகளின் உட்பொருள்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். பிராயிடு மற்றும் யுங் என்னும் இரண்டு தலைசிறந்த நவீன மனோதத்துவ நிபுணர் களும் கனவுகளுக்கு மிகப் பெரிய முக்கியத்துவத்தை அளித்துள்ளனர். நோயாளியின் மனநிலையைக் குறித்த தடயங்களை அளிப்பதாக அத்தகைய முக்கியத்துவத்தைக்

கொடுத்துள்ளார். எப்படி இருப்பினும் அவர்களின் கணிப்புகள் எப்பொழுதும் உண்மையாக இருந்ததில்லை. முக்கியமாக பிராயிடு, எல்லாக் கனவுகளும் அடக்கப்பட்டுள்ள பாலுணர்வு சார்ந்த விருப்பங்களின் வெளிப்பாடுகள் என்னும் ஊன்றிய கருத்தைக் கொண்டு இருந்தார். அது உண்மையே அல்ல. ஆனால் அது ஒருவருடைய கனவைப் பற்றி ஆராய்ந்து, ஒருவருடைய மனத்தின் செயல்பாடுகள் குறித்து நுண்ணறிவுத் திறனைப் பெறுவதற்குப் பயனுள்ளதாக உள்ளது. நாம் நம்முடைய கனவுகளை ஆராய்ந்தால், நம்முடைய ஆளுமையின் ஒரு புதிய பண்பு அமைவைப் பற்றி கண்டு கொள்கிறோம். நாம் நம்மைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் அளவிற்கு நல்லவர்கள் அல்ல. சில கனவுகள் நம்முடைய பண்புகளின் மோசமான பக்கத்தை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அதில் பயப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. உன்னைப் பற்றிய உண்மையானது உன்னை வலிமையுடையவனாகவும் மற்றும் உன் குறைபாடுகளை விஞ்சிமேம்படுவதற்கான அதிகமான உறுதியுடைவனாகவும் செய்ய வேண்டும்.

அடிக்கடி கனவுகள் ஆழ்மன விழிப்புணர்வு அடுக்கிலிருந்து வருகின்றன. இராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன், டாக்டர் Jekyl மற்றும் Mr. Hyde என்பவர்களைப்பற்றி, அவர் அந்தப் புகழ்பெற்ற கதையை எழுதுவதற்கு முன்பே கனவு கண்டதாகக் கூறப்படுகிறது. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த, ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த வேதியியல் வல்லுனரான KEKULE கனவில்தான் சாம்பிராணி எண்ணெயின் (Benzene) அமைப்புமுறையைக் கண்டுபிடித்தார். ஒருநாள் அவர் கணப்படுப்பின் அருகில் அரை உறக்கத்தில் இருந்தபொழுது அவர் பல கட்டமைப்புச் சார்ந்த சுருக்க விதிமுறைகள் அவர் கண்களின் முன்பு வளைந்து நெளிந்து கொண்டிருப்பதைக் கண்டார். அவைகளின் சில, இரு பாம்புகள் மற்றொன்றின் வாலை விழுங்க முயற்சி செய்து கொண்டிருப்பதைப்போல, ஒரு முடிவற்ற வட்டமாக ஒரு நிலைப்படுத்தப்பட்டதாக அவர் தீடீரென்று கண்டார்.

சில கனவுகள், ஆன்மாவின் ஆழமான ஆன்மீக ஆர்வத்தைக் குறித்துக் கூறுகின்றன. ஒருநாள் இரவில் ஒரு கனவில் என்னுடைய குருநாதரான சுவாமி பிரம்மானந்தருக்கு, 'நான் எல்லாவற்றிலும் கடவுளைக் காண முயற்சி செய்கிறேன்' என்று எழுதினேன். அந்தக் கனவிலேயே அவர், 'ஒவ்வொரு பகுதியிலும் முழுமையைக் காண்பதற்கு முயற்சி செய்வாய். ஒவ்வொரு வரையறைக்கு உட்பட்ட பொருளிலும், வரையறையற்ற கடவுளைக் காண முயற்சி செய்வாய்' என்று பதில் எழுதினார். பல நாட்களுக்கு இதுதான் என் தியானத்தின் ஆய்வுப் பொருளாக இருந்தது.

ஆன்மீகம் சார்ந்த கனவுகளும் உள்ளன. அதில் பெரிய ஆன்மீக உண்மைகள் வெளிப்படுகின்றன. ஒருவர் கனவில் ஒரு மந்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது பரவசமான ஒரு காட்சியைக் காணலாம். கனவில் பெறும் மந்திரமானது, ஒருவர் அவருடைய குருவால் தீட்சை அளிக்கப்பட்ட பொழுது குருவால் அளிக்கப்பட்ட மந்திரத்துடன் ஒத்ததாக இருக்கும். நாம் அத்தகைய பல எடுத்துக் காட்டுகளை தூய அன்னையார் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடியான சீடர்களின் வாழ்க்கைகளிலும் காண்கிறோம். கனவிலே, ஒரு தெய்வீக வடிவத்தின் காட்சியானது, ஆன்மீக வாழ்வில் போராடிக் கொண்டிருக்கும் சாதகனுக்கு மிகவும் ஊக்கமூட்டுவதாக இருக்கும். எப்படியிருப்பினும், அந்த அனுபவத்தின் மகிழ்ச்சியானது நீண்ட காலத்திற்கு நீடித்து இருப்பினும், சரியான, முறையான தியானத்திற்கும், மற்றும் ஒழுக்கநெறி முறைகளின் தூய்மைப்பாட்டிற்கும் விழிப்புநிலையில் தூண்டுதல் அளிக்கப் பயன்படாவிட்டால் சாதகன் எந்தப் பயனையும் பெறுவதில்லை. ஒரு அனுபவம் அது விழிப்புணர்வாக இருந்தால் ஒழிய, அதற்கு ஆன்மீகத் தகுதி மிகக் குறைந்த அளவில்தான் உள்ளது.

கனவு காண்பவன், எந்த ஒளியால் கனவைக் காண்கிறானோ, அந்த ஒளிக்கு அவன் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும். பிரஹதாரண்யக உபநிஷதத்தில் இந்த உள் ஒளியைக் குறித்த குறிப்பிடத்தக்க விவாதம் உள்ளது.

ஒருமுறை மிகச் சிறந்த முனிவரான யாஜ்ஞவல்கியர் அரசர் ஜனகனின் சபைக்குச் சென்றிருந்தார். அரசர் முனிவரிடம் மனிதன் எந்த ஒளியால் செயலாற்றுகிறானோ மற்றும் பொருட்களைக் காண்கிறானோ, அதைக் குறித்து வரிசை யாகக் கேள்விகளைக் கேட்டார். யாஜ்ஞவல்கியர் பொருத்த மான பதில்களைக் கூறினார். முதலில் அவர் சூரிய ஒளி யாலேயே மனிதன் இருக்கிறான். சூரியன் அஸ்தமித்ததும் சந்திரன். சந்திரன் மறைந்தபிறகு நெருப்பு. நெருப்பு அணைந்த பிறகு ஒலி— இவை தொடர்ந்து மனிதனுக்கு ஒளி அளிப்பவையாக உள்ளன. இறுதியாக அரசர் முனிவரிடம், 'ஆனால் யாஜ்ஞவல்கியரே, சூரியனும் அஸ்தமித்து சந்திரனும் மறைந்து அக்னியும் அணைந்துவிட்டால், ஒளியும் இல்லையென்றால் மனிதனுக்கு ஒளியாக இருப்பது எது?' என்று கேட்டார். அதற்குச் சிறந்த முனிவரான யாஜ்ஞ வல்கியர் 'ஆன்மாவே இவனுக்கு ஒளியாக இருக்கிறது'[1] என்று கூறினார். மற்ற ஒளிகள் எல்லாம் வெளியிலிருப்பவை. அவை மனிதனுக்கு அவனுடைய விழிப்பு நிலையில் மட்டும் உதவவல்லவை. ஆனால் கனவு, மற்றும் ஆழ்ந்த உறக்க நிலைகளில் ஆன்மாவின் ஒளியால்தான் மனிதன் தன்னை அறிந்து கொள்கிறான் மற்றும் மகிழ்வு அடைகிறான். அது வேறு எதுவாலும் ஒளிர்வதில்லை. ஆனால் மற்ற அனைத்தை யும் ஒளிரச் செய்கிறது. ஆன்மீக ஞான நிலையில் இந்த ஒளி மட்டுமே ஒளிர்கிறது. தன்னாலேயே ஒளிர்கிறது.

நவீன மனிதன் உறக்க நிலையை ஓய்வுகொள்ளும் நேர மாகவே காண்கிறான். மேற்கு நாடுகளில் ஆழ்ந்த உறக்க நிலை யானது ஒரு பொழுதும் தத்துவம் சார்ந்த ஆராய்ச்சிக்கு உரிய தாகவோ அல்லது உள்முகச் சிந்தனையைச் சார்ந்ததாகவோ ஆகவில்லை. ஆனால் உபநிஷதங்களில் ஆழ்ந்த உறக்க நிலையைக் குறித்த ஆழமான சிந்தனையைக் காண்கிறோம்.

'எப்படி ஒரு பருந்தோ, கருடனோ வான வெளியில் பறந்து களைத்துப் போய்ச் சிறகுகளை அசையாமல் பரப்பிக்

---

1. *பிரஹதாரண்யக உபநிஷதம், 4.3.2-6.*

கொண்டு கூட்டை நோக்கிச் செல்லுமோ, அப்படியே இப் புருஷனும் ஆழ்ந்த உறங்கும் எந்நிலையிலும் ஒரு ஆசைக்கும் ஆசைப்படுவதில்லையோ, ஒரு கனவையும் காண்பதில் லையோ, அந்நிலையை நோக்கி ஆர்வத்துடன் செல்கிறான்.'[1]

அதே உபநிஷதம் மேலும், ஆழ்ந்த உறக்க நிலையை 'இங்கு தகப்பன் தகப்பனாக இல்லை, தாய் தாய் அல்லள், உலகங்கள் உலகங்களன்று, கொலையாளி கொலையாளி அல்லன், தவசி தவசியல்லன்.' இவ்விதம் விவரித்துள்ளது.[2] அந்த நிலையில் ஒருவர் காண்பதில்லை, கேட்பதில்லை, சுவைப்பதில்லை, பேசுவதில்லை, கவனிப்பது இல்லை. ஏனெனில் இந்த எல்லா செயல்களுக்கும், இரண்டாவது பொருள் அவசியமாகிறது. ஆனால் ஆழ்ந்த உறக்க நிலையில், தனிப்பட்ட ஆன்மாவானது, வரையறையற்ற பரம்பொருளுடன் கலந்து விடுகிறது. மற்றும் தூய்மையான பேரின்பத்தை அனு பவிக்கிறது. மிகப் பரந்த நீர்ப்பரப்பைப் போல பகுக்கப்படாத விழிப்புணர்வு மட்டுமே உள்ளது.[3] இந்த நிலையானது விடு தலை நிலையை ஏறத்தாழ ஒத்திருக்கிறது. ஆனால் இந்த இரண்டிற்கும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது. தனிப்பட்ட ஆன்மாவானது சந்தேகத்திற்கு இடமின்றி ஆழ்ந்த உறக்க நிலையில் கலப்பற்ற இன்பத்தை அனுபவிக்கிறது. ஆனால் அப்படியிருப்பினும் அது பிணைப்பிலுள்ளது. அறியாமை யிலுள்ளது. அது உறக்கம் கலைந்து விழிப்படையும்பொழுது மீண்டும் பழைய தன்மையையே உடையதாக விளங்குகிறது. பழைய துன்பங்கள், வரையறைகள் போன்றவற்றை அனு பவிக்கின்றது. நாம் விழிப்புணர்வுடன் இருக்கும் பொழுது ஆழ்ந்த உறக்க நிலையின் அனுபவத்தைப் பெற வேண்டும்.

ஸான்பிரான்ஸிஸ்கோவில், ஞாயிற்றுக் கிழமை பள்ளி யின் ஒரு ஆசிரியை அவளுடைய வகுப்பில் இருந்த குழந்தை களுக்கு மனிதர்கள் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்று கூறினாள். ஒரு சிறிய பையன் 'ஆல்கட்ரஸ் சிறையிலுள்ள

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 4.3.19
2. பிரஹதாரண்யக உபநிஷதம், 4.3.22
3. பிரஹதாரண்யக உபநிஷதம், 4.3.32

(Alcatraz Prison) கெட்ட மனிதர்கள் எந்த விதம்? அவர்களும் கடவுளின் குழந்தைகளா?' என்று கேட்டான். அந்த ஆசிரியை குழப்பம் அடைந்து சிறிது நேரத்திற்கு மௌனமாக இருந்தாள். அதன்பிறகு அறிவுத்திறமை வாய்ந்த ஒரு சிறு பெண் 'ஆமாம், அவர்களும் கடவுளின் குழந்தைகள்தான். ஆனால் அவர்களுக்கு அது தெரியாது' என்று கூறினாள். ஆழ்ந்த உறக்க நிலையில் நாம் கடவுளுடன் கலந்து இருக்கிறோம். ஆனால் நாம் விழிப்படையும் பொழுது அதைக் குறித்த எண்ணம் இருப்பதில்லை. நம்முடைய உண்மையான தெய்வீக இயல்பை மறந்து, நாம் இயலத்தக்க எல்லா வழிகளிலும் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறோம். இவ்வுலகம் ஒரு சிறைச்சாலையைப் போன்றது. நாம் நம்முடைய உண்மையான இயல்பை மறந்திருப்பதால் இங்கு இருக்கிறோம். அந்த ஆழ்ந்த உறக்க நிலையைப் போன்ற ஏதோ ஒன்று நம் தியானத்தில் விழிப்புணர்வுடன் கொண்டுவரப்பட வேண்டும். ஆன்மீக அனுபவமானது நம்மிடம் ஆழ்ந்த உறக்க நிலையின் முழுமையான ஒய்வமைதி, அமைதி, மகிழ்ச்சி, ஒப்புயர்வற்ற ஞானம், தூய்மைப்பாடு மற்றும் மனநிறைவை ஏற்படுத்துகிறது.

ஒருமுறை, ஸ்ரீராமகிருஷ்ணரின் தலைசிறந்த சீடர்களில் ஒருவரான சுவாமி பிரேமானந்தர், பேலூரிலுள்ள துறவிகளின் மடத்தில், கோயிலில் தியானம் செய்துகொண்டு இருந்தார். அவர் விரைவில் சமாதியில் மூழ்கினார். புதிதாகச் சேர்ந்திருந்த ஒருவர் அவரை எழுப்ப முயற்சி செய்தார். ஆனால் இயலவில்லை. நீண்ட நேரத்திற்குப் பிறகு சுவாமிஜி இயல்பு நிலைக்குத் திரும்பிய பொழுது, அனுபவமற்ற இளைஞன், 'சுவாமிஜி, நீங்கள் தூங்கிக் கொண்டு இருந்தீர்களா?' என்று கேட்டான். மேன்மையான சுவாமிஜி, அதற்குப் பதிலாக ஒரு வங்காள மொழிப்பாடலைப் பாடினார். .... 'நான் என்னுடைய உறக்கத்தை உறங்கச் செய்து கொண்டிருந்தேன்'[1] அவர் விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்கநிலை எல்லாவற்றையும் கடந்த மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை

---

1. சுவாமி கம்பீரானந்தர், The Apostles of Ramakrishna *(கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1972) பக்கம் 139-140.*

அடைந்திருந்தார். சுவாமி துரீயானந்தர் அவர் உறக்கத்தை எப்படி வென்றார் என்று பேசியுள்ளார். அவர் உறக்கத்தை 'உற்று அறிய' விரும்பினார். எண்ணங்கள் எல்லாவற்றையும் அமைதிப்படுத்திவிட்டு உறக்கம் ஆட்கொள்ளவிருந்த அக் கணத்தில் அவருடைய மன உறுதியால் விழித்துக் கொண்டிருந் தார். அவ்விதம் பயிற்சி செய்ததால் அவர் உறக்கமானது ஒடுங்கி விட்டது. அவரைப் பிரம்மனிடமிருந்து ஒரு மெல்லிய கூறு பிரிக்கிறது என்று கூறியுள்ளார்.[1] அவர் மேம்பட்ட விழிப் புணர்வு நிலையின் நுழைவாயிலை அடைந்து இருந்தார்.

மனம் சார்ந்த நிகழ்வுகளின் புதிர்நிலைகள்

பல விழிப்புணர்வு மட்டங்கள் இருக்கின்றன. கண் களுக்குப் புலனாகும் பொருட்களை கண்டு கொள்ளும் உணர்வுமட்டம் ஒரு மட்டமாகும். நாம் பகற் கனவுகளைப் பற்றி எண்ணும் பொழுது அந்த நேரத்தில் மனமட்டத்தில் இருக்கிறோம். ஆனால் பொதுவாக நமக்கு இந்த மட்டத் தைப் பற்றி ஒரு சிறுகூறுதான் தெரியும். மற்றும் நம் மனத் தைப் பற்றி மிகச் சிறிதளவுதான் நமக்குத் தெரியும். பரந்த இயலுலக மனத்தைப்பற்றி (மஹத்) நமக்கு ஒன்றுமே தெரியாது. அந்த பரந்த இயலுலக மனத்தின் பகுதிகளாக நம் மனங்கள் உள்ளன. அங்கு என்ன ஆற்றல்கள் மறைந்து உள்ளன? அங்கு எத்தகைய விசித்திரமான செயல்கள் நடைபெறுகின்றன என்பவற்றைக் குறித்து நமக்கு மிகக் குறைந்த அளவான அறிவுதான் உள்ளது. இயற்பொருள் சார்ந்த உலகின் ஆற்றல்களை நாம் கையாளுவதைப் போன்றே நம்மால் பிராண சக்திகளையும், மன ஆற்றல்களை யும் கையாள இயலும். சிலருக்கு இந்த ஆற்றல் இயல்பாகவே வருகிறது. வார்ஸாவில் நான் ஒரு பெண்மணியைச் சந்தித்தேன். பொருட்களில் மறைந்துள்ள இயல்புகளை அவரால் காண இயலும். அவரால் இயங்காமல் உள்ள ஒரு இயந்திரத்தின் குறையைக் கண்டுபிடிக்க இயலும். சுவாமி

---

1. சுவாமி ரிதஜானந்தர் எழுதிய 'சுவாமி துரீயானந்தர்' (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 1973) பக்கம் 4.

விவேகானந்தர் ஹைதராபாத்திலுள்ள ஒரு மனிதனால் புதிய தான ரோஜாக்கள், திராட்சைகள் மற்றும் வேறு பல பொருட் களை எங்கிருந்தோ தருவிக்க இயலும் என்று கூறியுள்ளார்.[1]

ஒவ்வொருவருக்கும் மன ஆற்றல்கள் உள்ளன. பிராணன் அனைவரிடமும் செயலாற்றுகிறது. மிகப் பெரும்பாலான மனிதர்களிடம் இந்த அனைத்தும் வெளிப்புறமாக புலனின் பங்களின் நிறைவிற்காகவும் உலகத்தில் வெற்றி அடைய வேண்டும் என்பதற்காக மட்டுமே திருப்பிவிடப்படுகின்றன. இவ்விதம் வீணாவதை நாம் கட்டுப்படுத்தினால் நம்முள்ளும் மன ஆற்றல் திரள்வதைக் காண இயலும். பிறகு அதை ஆன்மீக வழிகளில் எப்படி வழி நடத்திச் செல்ல வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அங்குதான் நமக்கு ஆன்மீக வாழ்வை மேற்கொண்டுள்ளவர்களின் வழிகாட்டு தல் தேவைப்படுகிறது. இல்லையெனின் திரண்டுள்ள நமது மன ஆற்றல் வேறு வழிகளில் பாய்ந்து, நாம் சிறு மதிப்புள்ள அற்பமான மறைவியலான சக்திகளைப் பெறுகிறோம். தொலைவில் நடக்கும் நிகழ்வுகளை நம்மால் காண இயலும் அல்லது தொலைவிலுள்ள ஒலிகளைக் கேட்க இயலும் அல்லது நம்மால் மற்றவர்களின் எண்ணங்களை அறிந்து கொள்ள இயலும். இத்தகையவை சிறிது காலத்திற்கு நம்மை வியப்படையச் செய்யும். ஆனால் அவைகளுக்கு உண்மை யில் எத்தகைய உயர்ந்த மதிப்பும் இல்லை. அவை, உண்மையை நாம் அடைய வேண்டிய வழிகளில் உள்ள தடைகள் மட்டுமே ஆகும். மன ஆற்றல்கள் நமக்குத் துன்பங் களிடமிருந்து விடுதலையையோ, மனநிறைவையோ அல்லது பேரின்பத்தையோ அளிப்பதில்லை. அவை நம்மை மேலும் அகங்காரம் உள்ளவர்களாகச் செய்கின்றன.

ஞானமடைந்தவர்கள் இத்தகைய ஆற்றல்களுக்கு மிகக் குறைந்த அளவு கவனத்தையே அளிக்கின்றனர். அவர்களுக்கு அத்தகைய ஆற்றல்கள் இருந்தால், அவர்கள் அதை மிகவும் எச்சரிக்கையுடன் மற்றவர்களின் நலனிற்காகவே பயன் படுத்துகின்றனர். சுவாமி பிரம்மானந்தர் ஆன்மீக ஆற்றலின்

---

1. சுவாமி விவேகானந்தரின் *எழுந்திரு! விழித்திரு!* 2.256.

களஞ்சியமாகத் திகழ்ந்தார். அவர் அதை மிகவும் எச்சரிக்கையுடன் மற்றவர்களின் நன்மைகளுக்காகவே பயன்படுத்தினார். அவருக்கு ஆழமான மன ஆற்றலின் நுழைபுலம் இயல்பாகவே இருந்தது. அவர் ஒருநாள் ஒரு இளைஞனை, 'உன்னைச் சுற்றி அடர்த்தியான மேகமூட்டம் உள்ளது. உனக்கு நாற்பது ஆண்டுகள் ஆகும்பொழுது அது வெளிப்படும்' என்று எச்சரித்தார். அந்த இளைஞன், சுவாமிஜி அவனை எச்சரித்திருந்த அதே காலகட்டத்தில், பைத்தியமாகி இறந்துவிட்டான்.

சுவாமி பிரம்மானந்தரால் அவருடைய சீடர்களின் கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தைக் காண வியலும். நான் முதன் முதலில் அவரைக் கல்லூரியில் மாணவனாக இருந்தபொழுது சந்தித்தேன். நான் என்னுடைய நண்பனுடன் பலராம்பாபுவின் வீட்டிற்கு அவரைப் பார்ப்பதற்காகச் சென்றேன். அவர் என்னுடைய நண்பனை, அவனுடைய உள்ளங்கையைக் காட்டும்படிக் கூறினார். அவனுடைய கையைப் பார்த்த பிறகு, 'காமம், உனக்கு இடையூறை ஏற்படுத்தக் கூடும். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் விரும்பினால் அது அகன்றுவிடும்' என்று கூறினார். ஆனால் சுவாமி பிரம்மானந்தர் என் உள்ளங்கையைப் பார்க்கவில்லை. சுவாமி பிரேமானந்தர் அவரிடம் அப்படிச் செய்யுமாறு கேட்டுக் கொண்டபிறகு கூட அவர் அப்படிச் செய்யவில்லை. எனக்குச் சோர்வு ஏற்பட்டது. ஆனால் அதற்குப்பிறகு சுவாமி பிரம்மானந்தர், அவருடன் இருந்தவர்களிடம் நான் துறவியாக வருவேன் என்று கூறியதாகக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அருள் கிடைக்கப் பெற்றேன். அவர் குறி கூறியது உண்மையானது. நான் துறவியானேன். என் நண்பன் இல்லற வாழ்வில் ஈடுபட்டான். ஆனால் அவன் கடவுளின் மிகச் சிறந்த பக்தனாக இருந்தான்.

1917 ஆம் ஆண்டில் நான் பெங்களூரில் இருந்த பொழுது குடல் சார்ந்த காய்ச்சலால் உடல்நலமில்லாமல் இருந்தேன். நான் ஒரு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். ஒருநாள் காலையில் ஒரு முதியவர் அழைத்து வரப்பட்டு என்னுடைய படுக்கைக்கு அடுத்த படுக்கையில் இருத்தப்பட்டார். அன்று மாலையில் அவர் இறந்துவிட்டார். என்னிடம் இறப்பைக்

குறித்த எத்தகைய அச்சமும் இருக்கவில்லை. ஆனால் என்னுடைய கடுமையான உடல் வலியானது பொறுக்க முடியாததாக இருந்ததை உணர்ந்தேன். அதன்பிறகு நான் இதைவிட இறப்பது மேலானது என்று நினைத்தேன். என்னிடம் அத்தகைய எண்ணம் வலுப்பட்ட பொழுது சுவாமி பிரம்மானந்தர் காட்சியளித்து, 'உன்னால் எப்படி இறக்க இயலும்? ஸ்ரீராமகிருஷ்ணரின் செயல்பாடுகளை இன்னும் செய்ய வேண்டும்' என்று கூறிக் கொண்டே அவர் மறைந்துவிட்டார். அந்த அனுபவம் என்னுடைய முழு இருப்பையே மாற்றி விட்டது. நான் மிகப் பெரிய அமைதியாலும், ஆழமான சரணாகத உணர்வாலும் நிறைவடைந்தேன். என்னுடைய நோயும் தேறியது. பிரம்மானந்தரின் பல சீடர்களுக்கு அத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. அவரிடம் மிகப் பெரிய ஆற்றல்கள் இருந்தன. அவர் அவற்றை ஆராய்ந்து அறிந்து பயன்படுத்தினார். மற்றவர்களின் நலனிற்காகவே பயன்படுத்தினார்.

மன ஆற்றல்களின் பலவகைகள் உள்ளன. ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கையில் நாம் சந்திரா மற்றும் கிரிஜா என்னும் இரு இளைஞர்களைக் காண்கிறோம். அவருடைய குருவான பைரவி பிராம்மணி அவர்களை ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அறிமுகப்படுத்தினார். சந்திரா அவனுடன் ஒரு வியக்கத்தக்க பந்தைக் கொண்டு வருவான். அதன் உதவியுடன் அவன் திடீரென்று மனிதரின் கண்களிலிருந்து மறைந்துவிடக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தான். ஆனால் அவன் உயர்ந்த அளவில் மனத்தூய்மையைப் பெற்றிருக்கவில்லை. எனவே அவன் அந்த ஆற்றலைத் தவறாகப் பயன்படுத்தத் தொடங்கினான். மற்றவர்களின் வீடுகளில் யாருக்கும் தெரியாமல், தென்படாமல் நுழைந்தான். ஆனால் அவன் விரைவில் காமத்தால் ஆட்கொள்ளப்பட்டு அதன் விளைவாக அந்த ஆற்றலையே இழந்துவிட்டான். மற்றொரு இளைஞனான கிரிஜாவிற்கு மற்றொரு ஆற்றல் இருந்தது. ஒருநாள் இரவில் அதை அவன் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு, செயல்முறையால் மெய்ப்பித்துக் காட்டினான். காரிருளாக இருந்ததால், சம்பு மல்லிக்கின் தோட்ட வீட்டிலிருந்து அவருக்கு தட்சிணேசுவரத்திலுள்ள

காளி கோயிலிற்கு வழியைக் கண்டுபிடித்துச் செல்வது கஷ்டமாக இருந்தது. அவருடன் சென்று கொண்டிருந்த கிரிஜா, நின்றுவிட்டுத் திரும்பினான். அவனுடைய பின்புறத்திலிருந்து ஒளிக்கற்றை வெளிப்பட்டு, காளிகோயிலின் கதவு வரையிலும் தெருவைப் பிரகாசப்படுத்தியது. ஒப்புயர்வற்ற யோகியான ஸ்ரீராமகிருஷ்ணர் இத்தகைய சிறுமதிப்புடைய அத்தகைய ஆன்மீக ஆற்றல்களை ஒருபொழுதும் வெளிப்படுத்தியது கிடையாது. இந்த குறிப்பிட்ட நிகழ்வில், அவர் சந்திரா மற்றும் கிரிஜாவிடமிருந்து அவர்களுடைய அந்த ஆற்றல்களைத் திரும்பவும் தன்னிடமே எடுத்துக் கொண்டார். மற்றும் அதன்மூலம் அவர்களின் மனங்களைக் கடவுளை உணர்வதை நோக்கித் திருப்பினார்.[1]

எல்லா சிறந்த ஆன்மீக மனிதர்களுமே, மனத்தின் ஆற்றல்களின் பால் கவனத்தைச் செலுத்துவதை விட்டுவிட வேண்டும் என்றே கருதினர். ஏனெனில் இவை சாதகனை, இன்றியமையாத ஆன்மீக வழியிலிருந்து கவனத்தைத் திருப்பி, மற்றும் இறுதியாக முற்றிலும் அழிவிற்கு வழி காட்டுவதாகவும் இருந்து விடக் கூடும். மனம் சார்ந்த அனுபவங்கள் எல்லா உண்மையான சாதகர்களுக்கும் ஒழுங்கான முறையில் சாதனையை மேற்கொண்டு இருப்பவர்களுக்குப் பொதுவானதாக இருக்கும். ஒருவர் அப்பொழுது மணிஓசையைக் கேட்கக் கூடும். அல்லது இந்தப் பிரம்மாண்டத்தில் சாசுவதமாக அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தானே எழும் ஒலியான அனாஹத ஒலியாகவும் இருக்கும். அல்லது ஒருவர் மறைவடக்கமாக உள்ள உள்ளொளியைக் காணக்கூடும். இவ்வனைத்தும் நீ சரியான பாதையில் சென்று கொண்டு இருக்கிறாய் என்பதற்கான அறிகுறிகள் ஆகும். அத்தகைய பயனை மட்டுமே அவை பெற்றுள்ளன. நாம் வழி காட்டி கம்பத்தைத் தெரு என்று தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. சுவாமி விவேகானந்தர், இளைஞராக இருந்த பொழுது அவருக்கு அற்புதமான ஆன்மீக அனுபவங்கள்

---

1. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், 2.225-226.

ஏற்படும். ஒருமுறை அவருக்குத் தொலைவில் நடப்பதை உணரும் ஆற்றல் ஏற்பட்டது. அவர் பகுத்தறிந்து காணும் இயல்புடையவராக இருந்ததால், அவர் அவருடைய அனு பவங்களை ஒப்பு நோக்கி அவை உண்மை என்று உணர்வார். எப்படியிருப்பினும் அவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் இதைப் பற்றிக் கூறிய பொழுது, குருதேவர், விவேகானந்தரை அவ ருடைய தியானத்தைச் சில நாட்களுக்கு விட்டுவிடும்படிக் கூறினார். அதனால் அந்த ஆற்றல் அவரிடமிருந்து அகன்று விடும் என்று கூறினார்.

பலருக்கும் பேய்கள் மற்றும் உடலிலிருந்து பிரிந்து சென் றுள்ள ஆவிகள் மீதும் ஈடுபாடு உள்ளது. ஒரு உண்மையான சாதகனுக்கு அவைகளால் எந்தப் பயனும் இல்லை மற்றும் அவன் தன்னை அத்தகைய விசித்திரமான நிகழ்வுகளிலிருந்து ஒதுக்கிக் கொண்டு விட வேண்டும். ஆனால் மனித இயல் பிற்குக் குணப்படுத்தவியலாத அதிகமான ஆர்வம் உள்ளது. பலரும் தங்களுடைய விலைமதிக்க வியலாத நேரத்தை, உண்மையான ஆன்மீக வாழ்விற்குத் திரும்புவதற்குப் பதி லாக, ஆவியுலகத் தொடர்பு கோட்பாடு, மற்றும் ஆவியுல குடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவற்றில் வீணடித்துக் கொண்டுள்ளனர். நீ சுவாமி அபேதானந்தரின் 'Life beyond death' என்னும் நூலைப் படித்திருக்கக் கூடும். அவர் அதில் பல ஆவிதொடர்புகாட்சிக் குழுக்களுடன் கூட இருந்ததாக விவரித்து உள்ளார். இந்தியாவில் யாராவது ஒருவன் பேயால் பிடிக்கப்பட்டிருந்தால், அவன் உடனடியாக கோயிலிற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அல்லது பேயோட்டுபவ ரிடம் அழைத்துச் செல்லப்பட்டு அந்தத் தொல்லையிலிருந்து விடுவிக்கப்படுகிறான். ஆனால் அவன் அமெரிக்காவில் 'ஆவி யுலக இடைஈட்டாளராக அதன்மூலம் பணம் சம்பாதிக்கிறான். ஆவியுலக இடையீட்டாளரைச் சார்ந்த நிகழ்வுகள் உண்மை யானதாக இருக்கலாம். ஆனால் அத்தகைய செயல்களுடன் விளையாடிக் கொண்டிருப்பது நேரத்தை வீணடிப்பது ஆகும். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நிரஞ்ஜனன் என்னும் பெயர் கொண்ட ஒரு சீடர் இருந்தார். அவர் குருதேவரிடம் போவதற்கு முன்பு

ஆவியுலகுடன் தொடர்புகொள்ளும் ஒரு குழுவினருக்கு ஆவியுலக இடையீட்டாளராகச் செயல்பட்டு வந்தார். குருதேவர் அதைப் பற்றிக் கேள்விப்பட்டதும். அவர் அந்தப் பையனை அந்த வழக்கத்தை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். 'குழந்தாய், நீ பேய்களைப்பற்றியும் ஆவிகளைப்பற்றியும் எண்ணிக் கொண்டிருந்தால், நீ பேய்களாகவும் ஆவிகளாகவும் ஆவாய். நீ கடவுளைப் பற்றி நினைத்தால் உன் வாழ்வே தெய்வீகமாக இருக்கும்' என்று கூறினார்.[1]

ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கையில், அவர் எல்லா வகையான ஆவிகளையும் எதிர்கொண்டுள்ளார். அவருடைய குருவான தோதாபுரி அவர்களுக்கும் தட்சிணேசுவரத்திலிருந்த ஒரு ஆவியுடன் எதிர்படுதல் ஏற்பட்டது. தட்சிணேசுவரத்திலிருந்து காளி கோயிலில் ஒரு பைரவர் இருந்தார். மற்றவர்களுக்கு அவரைக் காண வியலாது. ஒருநாள் தோதாபுரி, பஞ்சவடியின் கீழ் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்த பொழுது, அந்த மரக்கிளைகளிலிருந்து ஒரு உயரமான மங்கலான உருவம் கீழே வருவதைக் கண்டார். தோதாபுரி சிறிது கூடக் கலங்கவில்லை. அவர் அந்த விசித்திரமான வருகையாளரிடம் 'மிகவும் நல்லது. நீயும் நானும் ஒரே இனம்தான் நீ பிரம்மனின் ஒரு வெளிப்பாடு, நான் மற்றொரு வெளிப்பாடு. வா, வந்து உட்கார்ந்து கொள். தியானம் செய்வாய்' என்று கூறினார். அந்த பைரவன் சிரித்துவிட்டு அகன்று விட்டான்.[2]

நாம் ஆவிகளுடன் நம் நேரத்தை வீணடிப்பதைக் காட்டிலும் எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவான அமைதி மற்றும் பேரின்பத்தின் உண்மையான மூலமான பரம்பொருளிடம் செல்ல வேண்டும். நாம் இந்த மனமட்டங்களின் பக்கவாட்டிலோ அல்லது கடந்து, பரம்பொருளின் மட்டத்திற்கு மேம்படுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அங்கு தனிப்பட்ட ஆன்மாவானது, வான்பேருயிரிடம் தொடர்பு கொள்கிறது. இந்தத் தொடர்பு ஏற்படாதவரையிலும், ஆன்மாவின்

1. The Apostles of Ramakrishna, பக்கம் 162.
2. குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர், 2.237-238.

பசியானது தொடர்ந்து இருக்கும் வரையிலும் உன்னால் ஒரு பொழுதும் உண்மையான அமைதியையோ அல்லது நிறைவையோ அடையவிலயாது. இயலுலக அண்ட ஆன்மாவின் ஸ்பரிசமானது ஆன்மாவின் மீது பட வேண்டும். உள்ளே உள்ள உண்மையான ஒளி இதயத்தின் இருளடைந்துள்ள பகுதிகளை ஒளிரச் செய்ய வேண்டும். அதன்பிறகுதான் மனிதனால் வாழ்க்கையின் துயரங்களைக் கடக்க இயலும். உண்மையான ஆன்மீக அனுபவமானது கடவுளிடமிருந்து நேராக வருகிறது. அது சாதாரணமான மனம், மற்றும் பகுத்தறிவின் ஆற்றல் எல்லைக்கு அப்பால் உள்ளது. சிறந்த ஸூபிஞானியான அல்-கஸாலீ (AL-GHAZALI):

'ஏகாந்தத்தில் எனக்கு வெளிப்பட்ட பொருட்களை விவரிப்பதற்கோ அல்லது குறிப்பிட்டுச் சொல்வதற்கோ இயலாது. அந்தக் காட்சியானது ஒரு ஒளியால் ஒளிர்கிறது. அந்த ஒளியானது மறைக்கப்பட்ட எல்லா வகையான பொருட்களையும் வெளிப்படுத்துகிறது. புத்தி அதைச் எட்டுவதில் தோல்வியடைகிறது. ஸூபியின் முறையால் ஒருவர் அடையும் ஆனந்தப் பரவச நிலையானது, உடனடியான உணர்வுக் காட்சியாகும். ஒருவர் அவருடைய கையால் பொருளைத் தொட்டதைப் போன்றது ஆகும்' என்று கூறியுள்ளார்.

சிறந்த நியோபிளேட்டோனிஸ (புதிய பிளேட்டோ கோட்பாடு) ஞானியான ப்ளோடினஸ் (plotinus):

'கடவுளை ஒருவர் எப்படி அறிவது என்று நீ கேட்கிறாய். என்னுடைய விடை—பகுத்தறிவால் அறிய இயலாது. பகுத்தறிவின் பணியானது வேறுபடுத்தி அறிவதும் வரையறுப்பதும் ஆகும். கடவுளை அதனுடைய பொருட்களாக படிநிலைப்படுத்த இயலாது. பகுத்தறிவை விட மேம்பட்ட, தனிப்பட்ட நுட்பத் திறமையால்தான் உணரவியலும். உன்னுடைய வரையறைக்கு உட்பட்ட தன்மையிலிருந்து வேறு ஒரு நிலையை அடைந்தால் அங்கு தெய்வீகத்தின் சாரம் உன்னுடன் தொடர்பு கொள்ளும்' என்று கூறியுள்ளார்.

ஒரு உண்மையான ஆன்மீக அனுபவம் உனக்கு என்ன செய்யும்?

ஒரு உண்மையான ஆன்மீக அனுபவமானது அதனுடைய பயன்களை வைத்து மதிப்பிடப்படுகிறது. அகக்காட்சிகளும் மற்றும் மற்ற ஆன்மீக அனுபவங்களும் சாதகனின் இயல்புகளில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தி, சாதகனை வலிமையுடையவனாகவும் தூய்மையானவனாகவும், மற்றவர்களிடம் மிகவும் பெருந்தன்மை உடையவனாகவும் செய்கிறது. அவை அவனிடம் ஒரு புதிய நம்பிக்கையை நிறைக்க வேண்டும். அந்த நம்பிக்கையானது அவன் செயல்களில் பிரதிபலிக்க வேண்டும். பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகச் சிறந்த கார்மலைட் ஞானியான (Carmelite Mystic) அருளாளர் ஜான் ஆப் தி கிராஸ் உண்மையான ஆன்மீக அனுபவத்தைக் குறித்து வருமாறு கூறியுள்ளார்.

'அவை ஆன்மாவை அற்புதமாக உயர்த்துகின்றன. அவற்றுள் ஒன்றே ஒன்று ஒரே அடியில் சில குறைபாடுகளை அழித்துவிடப் போதுமானது ஆகும். எவைகளை ஆன்மா தன்னிலிருந்து விடுப்பதற்கு பயனின்றி முயற்சி செய்திருந்தாலும், மற்றும் ஆன்மாவை சிறந்த இயல்புகளால் அலங்கரித்து ஆன்மாவின் மீது இயல்பு நிலை கடந்த பல பரிசுகளை வைத்துத் திணிக்கும்.

மேற்கு நாட்டில் மிகவும் திடமான கற்பனையை உடைய ஒரு பெண்மணி ஒருமுறை ஸ்ரீராமகிருஷ்ணரை அகக்காட்சியில் கண்டதாகக் கூறினார். மற்றொரு இளைஞன் ஒரு பெண்ணை நேசித்து, அவன் தியானம் செய்தபொழுது அந்தப் பெண்ணை 'அகக்காட்சி'களில் கண்டு, அந்தக் காட்சிகளை தெய்வீக அன்னையின் வெளிப்பாடுகள் என்று தவறாக எண்ணினான். இந்த இரு நிலைமைகளுக்கும் நான், அவர்கள் அவர்களுடைய சொந்த மிகவும் தெளிவான கற்பனைகளின் பலி உயிர்கள் என்னும் அப்பட்டமான உண்மையைக் கூற வேண்டும். அகக்காட்சிகளுக்கு மேல் அகக் காட்சிகள் உள்ளன. சில அகக்காட்சிகள் தெளிவான கற்பனைகளின் விளைவுகள் ஆகும். மற்றும் முற்றிலும் தன்னுணர்விற்கு உரிதாகும். வேறு

சில அகக்காட்சிகள், ஏற்புத்திறமுடைய மனத்தால் உணரப் பட்ட சூட்சுமமான உண்மைகளின் தன்னிலைவேறான வெளிப் பாடுகள் ஆகும். அவைகளின் தகுதிகளை அவற்றின் விளைவு களைக் கொண்டுதான் மதிப்பிட வேண்டும். மாயக் காட்சிகள் அவற்றின் பின்னணியில் எந்த உண்மையுமற்ற உணர்வு களைக் குறிக்கின்றன. ஆனால் அவை நோயுற்றுள்ள நரம்புகள் மற்றும் நிலைகுலைந்த மனங்களின் விளைவுகள் ஆகும். மனம் சார்ந்த அனுபவங்கள், தன்னியல்பானதாக இருப் பினும் எப்பொழுதும் மாறிக் கொண்டுள்ள சூட்சுமமான உலகைச் சார்ந்தவையாக உள்ளன. அவைகளுக்கு ஆன்மீகத் தகுதி இல்லை. அதற்கு மாறாக, ஒரு உண்மையான ஆன்மீக அனுபவமானது, நேரடியாக, மாற்றமில்லாத உண்மையுடன் தொடர்பை ஏற்படுத்துகிறது. மற்றும் நம் வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாக்கும் விளைவை ஏற்படுத்துகிறது. அது நம்முடைய இயல்புகளை நம் விழிப்புணர்வை மற்றும் இவ் வுலகத்தின் மீது உள்ள கண்ணோட்டத்தையும் மாற்றுகிறது. ஒருமுறை சுவாமி விவேகானந்தர் திண்ணிய ஆனால் குறிப் பிடத்தக்க குறிப்புரையைக் கூறியுள்ளார். 'ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்த்து இருப்பதாகக் கூறுகிறவர்கள், அவருடைய தூய்மைப் பாடையோ, துறவையோ அல்லது பக்தியையோ சிறிதள வாவது உள்ளே ஈர்த்துக் கொள்ளவில்லை என்றால் அவர்கள் அதற்கு பதில் ஒரு குரங்கையே பார்த்து இருக்கலாம்.'

சாதகன் ஆன்மீக அனுபவங்கள் ஏற்படுவதைக் கண்டு பொறுமையை இழத்தல் கூடாது. ஆன்மா ஆயத்தம் ஆனதும், சரியான நேரத்தில் அவை வரும், அதுவரையிலும் அவன் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது சிறந்த தாகும். ஒரு தூய்மையான அமைதியான இயல்பை ஏற்படுத்திக் கொள்வது, பயனற்ற வகையில் அற்புதமான ஆன்மீக அனு பவங்ளைப் பெற்றுக் கொண்டிருப்பதாக வீணாகக் கற்பனை செய்துகொண்டு வாழ்க்கையைப் பாழ் செய்து கொள்வதை விட மிகவும் சிறந்தது ஆகும். நான் மேற்கு நாடுகளில் இருந்தபொழுது ஒழுங்கான, முறையான ஆன்மீக நெறி முறைகளின் போக்கினால் பயனடைய விரும்பிய ஆண்களை யும், பெண்களையும் சந்தித்து இருக்கிறேன். சுவிட்ஜர்லாந்தைச்

சேர்ந்த ஒரு பெண்மணியிடம் அற்புதமான அதிர்வலைகளும் தூய்மைப்பாடும் அமைதியும் இருந்தன. ஆனால் அவள் மனக்கோட்டை கட்டும் பாங்குடையவளாக இருந்தாள். அவளுடைய ஆற்றலானது ஒரு சுழற்சியை ஏற்படுத்தியது. அவள் ஒரு மனோதத்துவ மருத்துவரிடம் அழைத்துச் செல்லப் பட்டாள். ஆனால் அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அந்தப் பெண்மணி அவளுடைய அக அனுபவங்களைக் குறித்து எனக்கு ஒரு கடிதம் எழுதினாள். நான் அவளுக்குச் சில ஆன்மீக நெறிமுறைகளைக் கூறினேன். அவை வியக்கத் தக்க பயனை அளித்தன. ஹேக் (Hauge) என்னுமிடத்தில் டச்சு இளைஞன் ஒருவனைச் சந்தித்தேன். அவன் ஒரு விசித்திரமான மௌனத்தை அனுபவித்தான். ஆனால் அதை இழந்து விட்டான். அவன் அந்த அமைதித்தன்மையை ஒழுங்குமுறையுடன் கூடிய ஆன்மீக நெறிமுறைகளின் மூலம் மீண்டும் பெற விரும்பினான். நான் அவனையும், அவனுடைய மனைவியையும் சரியான முறையில் தியானம் செய்யுமாறு கூறினேன். அவர்கள் அதன்மூலம் மேம்பட்ட பயனை அடைந்தனர்.

மிகவும் பண்பட்ட ஒரு பெண்மணி, சுவிட்ஜர்லாந்தில் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்தவரின் மனைவி, 'The Spiritual Teachings of Swami Brahmananda' என்னும் நூலைப்படிக்க நேர்ந்தது. அவள் என்னைச் சந்தித்தாள். மற்றும் சில கேள்விகளைக் கேட்டாள். ஆன்மீகத்தின் பால் அவளுக்கு அதிகம் நாட்டம் இருந்ததை நான் கண்டு கொண்டேன். வாழ்க்கையில் சிக்கல்களை எதிர்கொள்ள இயலாதவளாக இருந்தாள் என்பதை உணர்ந்தேன். 'நான் அவளுக்கு அக மற்றும் புற வாழ்க்கையின் நடுவில் ஒரு சமநிலையை அடைந்து ஆகாயத்திலும், பூமியிலும் உள்ள தொடர்புகளுக்கு உண்மையாக இருக்கும்படியும் அறிவுறுத்தினேன். மேலும் வழிபாட்டையும், செயல்பாட்டையும் இணைத்துக் கொள்ளும் படியும், அவளுடைய ஆன்மாவை கடவுளின் திருநாமம் என்னும் இசையால் நிறைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினேன். அவள் உண்மையாக முயற்சி செய்தாள். மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடைந்தாள்.

ஒரு ப்ராடஸ்டன்ட் மதகுரு (Romain Rolland) ரொமெயின் ரோலண்டு எழுதிய 'The Life of Sri Ramakrishna' என்னும் புத்தகத்தைப் படித்த பிறகு என்னிடம் வந்தார். அவர் ஆன்மீக வாழ்க்கையைக் குறித்த நடைமுறை அறிவுரைகளை அறிந்து கொள்ள விரும்பினார். அதில் உள்ளார்ந்த ஆர்வத்துடன் இருந்தார். நான் அவருடன் பல முறைகள் பேசினேன். நான் அவர் முதலில் எந்த இடத்தில் இருக்கிறார் என்று அறிந்துகொள்ளும்படிக் கூறி, மற்றும் நான் அளித்த சில எளிமையான அறிவுரைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தினேன். அவர் ஒத்துழைத்தார். மற்றும் விரைவிலேயே ஒரு புதிய அக இசைவுடைமையை அடைந்தார். அவருடைய நண்பர்கள் அவருடைய விளக்கப் பேருரைகள் மேம்பட்டிருப்பதாகக் கூறினார். சிலர் மேற்கத்திய நாடுகளில் ஒருவரால் யோகப் பயிற்சியை மேற்கொள்ள இயலாது என்று கூறுகின்றனர். பல ஆண்டுகளின் அனுபவத்திற்குப் பிறகு, அது உண்மையல்ல என்று நான் உறுதியான நம்பிக்கையுடன் கூறுவேன். மேற்கத்திய நாடுகளில், மேம்பட்ட நிலைக்கு உயர்ந்துள்ள மனம் கொண்ட, ஒன்றிற்கு மேற்பட்ட இளைஞர்களைச் சந்திக்கும் பாக்கியம் எனக்கு ஏற்பட்டது.

நான் ஆன்மீகப் பயிற்சியால் மகிழ்ச்சியையும், அமைதியையும் அடைந்திருந்த பல இளைஞர்களைப் பார்த்தேன். கிழக்கில் இருப்பினும், மேற்கில் இருப்பினும், தொடர்ந்த நிலைத்த ஆன்மீகப் பயிற்சியின் பலன்களை யார் ஒருவராலும் உறுதியாக உணர இயலும். கடவுள் மனிதனின் அக நாட்டங்களை மட்டும் பார்க்கிறாரே தவிர அவனுடைய பழக்க வழக்கங்களையோ, வெளிப்புறத்தில் அணியும் ஆடையையோ பார்ப்பதில்லை.

ஆன்மீக அனுபவத்தின் வகைகள்

ஆன்மீக அனுபவங்களுக்கு எல்லைகள் இல்லை. அதில் வரையறையற்ற வகைகள் உள்ளன. இவற்றில் சில கீழ் நிலையைச் சார்ந்தவை ஆகும். அவை உண்மையான ஆன்மீக அனுபவங்களைவிட மிகுந்த அளவில் கைகாட்டி மரங்கள்

அல்லது சுட்டிக்காட்டும் கருவிகளின் இயல்பை உடையன வாக இருக்கும். மனமானது முறையாக, பொருத்தமுடைய தாக இருக்கும் பொழுது உன்னால் புலன்களுக்கு அப்பாற் பட்ட அதிர்வலைகளைக் கேட்கவியலும். உன்னுடைய பரு உடலைச் சார்ந்த காதால் அதைக் கேட்கவியலாது. உன் மனத் திற்குள்ளேயே அவை கேட்கப்படுகின்றன. சில நேரங்களில் தொலைவில் ஒலித்துக் கொண்டுள்ள மணியோசையின் இனிமையை உன்னால் கேட்கவியலும். தனிமையான இடங் களிலும் முக்கியமாக நள்ளிரவிலும் அவற்றைச் சுலபமாகக் கேட்கவியலும். நான் மாயாவதியில்* இருந்தபொழுது அவற் றைக் கேட்டிருக்கிறேன். இங்கும் வீஸ்பேடனிலும் அதைக் கேட்கிறேன். சில நேரங்களில் சில அதிர்வலைகள் உன்னிட முள்ள ஆகாசத்தின் ஆழத்திலிருந்து தோன்றுவதை நீ உணர லாம். ஒரு குளத்திற்குள் ஒரு கல் எறியப்பட்டால் நீர்க் குமிழிகள் தோன்றுவதைப் போலத் தோன்றும். நீ ஒரு குறிப் பிட்ட ஒருமுகப்படுத்தப்பட்ட நிலையிலிருந்தால் நிலைத்த, யாராலும் ஏற்படுத்தப்படாத இயலுலக அண்ட மனத்தின் நாத அதிர்வலைகளான அனாஹத ஒலியைக் கேட்கலாம்.

அதன்பிறகு, அகநிலை உணர்வுபெற்ற, அறிவு நிலை கடந்த ஒளியின் அனுபவம் உள்ளது. இந்த உள் ஒளியானது விழிப்புணர்வின் ஒளியாகும். இவற்றில் சில அனுபவங்கள் நன்மையை ஏற்படுத்தவல்லவையாகும். அவை நீ அதிகமான ஒருமுனைப்பாட்டை அடைந்துகொண்டு இருக்கிறாய் என் பதைக் குறிப்பிடுகின்றன. ஆனால் நீ அவற்றின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டாம். அப்படிச் செய்தால், நீ மாட்டிக் கொண்டுவிடுவாய். நீ உன்னுடைய இலட்சியத்தை மறந்து விட்டு, பக்க ஈர்ப்புக்களுடன் பிணைக்கப்பட்டு விடுவாய்.

---

* இது இமயமலைப் பகுதியிலுள்ள ஒரு மலை வாழ் ஸ்தலமாகும். ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தைச் சார்ந்த மாதப் பத்திரிகையான பிரபுத்த பாரதம் ஆசிரியரின் அலுவலகம் அங்கே நிறுவப்பட்டுள்ளது. சுவாமி யதீஷ்வரானந்தர், அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக 1922-ஆம் ஆண்டிலும், பிறகு 1926-27-ஆம் ஆண்டுகளிலும் இருந்தார்.

நான் தொடர்ந்து பலமுறைகள் கூறியிருப்பதைப் போல வெறும் ஒருமுனைப்பாடு மட்டும் அதிக அளவில் பயன்படுவதில்லை. ஒருமுனைப்பாடானது தன்னிலையிலேயே ஒரு ஆன்மீக உட்பொருளைக் கொண்டிருக்காமல் இருக்கக்கூடும்.

நாம் இயலுலக அண்டத்தின் ஒலியைக் கேட்டால், நாம் அந்த ஒலியின் மூலத்திற்கே சென்றுவிட வேண்டும். நாம் ஒரு ஒளியைக் கண்டால், அந்த ஒளியின் மூலத்திற்கே சென்றுவிட வேண்டும். ஒப்புயர்வற்ற பரம்பொருள்தான் இத்தகைய இயல் நிகழ்வுகளின் மூலமாகும். அதுதான் நம்முடைய இலட்சியமாகும். ஒரு உண்மையான சாதகன், அத்தகைய கீழ் நிலைப்பட்ட அனுபவங்களை அவை ஏற்படும் பொழுது அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். அவன் அவற்றைப் பற்றி மற்றவர்களிடம் பேசவும் கூடாது. அதன்மூலம் அவர்களையும் குழப்பக் கூடாது. நீ ஜபமும், தியானமும் செய்யும் பொழுது, உன்னுடைய இஷ்ட தெய்வம்தான் விழிப்புணர்வு மற்றும் பேரின்பத்தின் உருவாக இருப்பவர் ஆவார். மனத்தின் அனுபவங்களைக் குறித்து எண்ணாமல் இருக்க வேண்டும்.

பெரும்பாலான சாதகர்களுக்கு இஷ்ட தெய்வம் இல்லாமல் தியானிக்க இயலாது. ஏனெனில் அவர்களின் உணர்வுகளை அதில் மையப்படுத்திவிடவியலும். அவர்கள் இஷ்ட தெய்வத்தின் வடிவத்துடன் தொடங்க வேண்டும். மற்றும் அதை உயிருள்ளதாகவும், உணர்வுடன் கூடியதாகவும் செய்ய வேண்டும். வடிவமானது நம்முள்ளே தெய்வீக இயல்புகளைத் தோன்றச் செய்கின்றன. மற்றும் நம்முடைய ஒருமுனைப்பாடு ஆழமாக நிலைகொள்வதால், நாம் இஷ்ட தெய்வத்தின் விழிப்பு உணர்வுடன் தொடர்பு கொள்கிறோம். இஷ்ட தெய்வத்தில் நாம் தனிப்பட்ட மற்றும் பேரண்டத்தின் விழிப்பு உணர்விற்கும் இடையிலுள்ள தொடர்பைக் காண்கிறோம். பிறகு நாம் அதே தொடர்பை நம்முள்ளேயும் உணர்கிறோம். அதன்பிறகு, நம் விழிப்புணர்வு விரிவடைகிறது. அதன் பிறகு நாம் தனிப்பட்ட விழிப்புணர்வு நிலையின் வெளிப்பாடாகக் கருதுகிறோம். இறுதியில் பேரண்ட

விழிப்புணர்வு நிலை மற்றும் தனிப்பட்ட விழிப்புணர்வு நிலை என்னும் இந்த இரண்டும் எல்லாவற்றையும் கடந்துள்ள விழிப்புணர்வு நிலையுடன், இரண்டாவது அற்ற ஒருமை என்று கூறப்படுவதுடன் இரண்டறக் கலந்து விடுகிறது.

அதன்பிறகு மேலும் முன்னேறி, தன்னிலையற்றது, எது தன்னைத் தன்னிலை உடையதாக வெளிப்படுத்திக் கொள் கிறதோ அது நம்முடைய அனுபவத்தின் மையமாகிறது. நாம் நம்முடைய சொந்த ஆன்மாவும், மற்றும் மற்றவர்களின் ஆன்மாவும் ஒரு பகுக்கப்படாத விழிப்புணர்வின் வெளிப் பாடுகள் என்பதை உணர்கிறோம். நாம் எல்லாவற்றிலும் ஒப்புயர்வற்ற பரம்பொருளைக் கணடு, அனைவருக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்னும் ஆழமான அகத்தூண்டு தலையும் உணர்கிறோம். நம்மிடையே ஒழுக்க நெறியில் குழப்பம் ஏற்படாமல், நாம் அனைவருக்காகவும் ஆழ்ந்த அன்பு மற்றும் பரிவால் நிறைவடைகிறோம்.

முதலில் நாம் இயலுலக அண்டத்தின் அதிர்வலை களுடன் தொடர்பு கொள்கிறோம். அதன்பிறகு இயலுலக அண்ட மனத்துடன் தொடர்பு கொள்கிறோம். அதன்பிறகு வரையறைக்கு உட்பட்ட விழிப்புணர்வு, மற்றும் வரை யறைக்கு உட்படாத விழிப்புணர்வு என்னும் இவைகளுடன் இடையிலுள்ள தொடர்பை உணர்கிறோம். ஒரு கண்ணோட் டத்திலிருந்து, இவ்வனைத்துமே, ஒன்று, மற்றொன்றுக்குள் உள்ள வட்டங்களைப்போலத் தோன்றுகிறது, ஒரே மைய முள்ள வட்டத்தைப் போலத் தோன்றுகிறது. நாம் எண்ணங் களின் மட்டத்தில் வாழலாம். நாம் நம் உடலையும், மற்ற வர்களின் உடலையும் வெறும் எண்ணங்களின் மட்டத்திற்குக் குறைக்க இயலாது. அதன்பிறகு நாம் இந்த எண்ண வடிவங் களை அமைதிப்படுத்திவிட்டு அருவ மட்டத்தை அடைந்து ஒப்புயர்வற்ற அமைதியையும் பேரின்பத்தையும் துய்க்கலாம்.

ஒரு ஆன்மீக அனுவத்திற்கு மூன்று வகையான சான்று, ஆதாரங்கள் இருக்க வேண்டும்:

1. தன்னுடைய சொந்த அனுபவத்தின் சான்று ஆதார மாக அந்த அனுபவத்தை மீண்டும் மீண்டும் உணர்தல்

2. தன்னுடைய சொந்த அனுபவத்தை, தன் குருவிட மிருந்து கேட்டதுடன் ஒப்பிட்டுக் காணும் சான்று ஆதாரம்.

3. தன்னுடைய சொந்த அனுபவத்தை உண்மையான திருமறை நூல்களில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதுடன் ஒப்பிட்டுக் காணும் சான்று ஆதாரம். நாம் இத்தகைய சான்று ஆதாரங்களை மேற்கொள்ளா விட்டால், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதற் கான வாய்ப்பு எல்லை ஏற்பட்டு, நம் அனுபவங்களே, கட்டுப்படுத்தாத மனத்தின் ஆபத்தான கற்பனை களாக ஆகிவிடக்கூடும்.

நமக்கு உடல் உணர்வு இருக்கும்பொழுது நாம் இயற் பொருள் சார்ந்த உலகத்துடன் ஒரே சுருதியில் இருக்க வேண்டும், நாம் மன மட்டத்துடன் இருக்கும் பொழுது, நாம் இயலுலக அண்ட மனத்துடன் ஒரே சுருதியில் இருக்க வேண்டும். ஆன்மீக மட்டத்திற்கு உயரும் பொழுது, நாம் ஒப்புயர்வற்ற பரம்பொருளுடன் ஒரே சுருதியில் இருக்க வேண்டும். உயர்ந்த மட்டங்களில் நாம் உணரும் ஒளியும், மகிழ்ச்சியும், இசைவுடைமையும் வெளிக்கொண்டுவரப் பட்டு கீழ் மட்டங்களில் வெளிப்படுமாறு செய்யப்பட வேண் டும். அதன் பிறகு நாம் தெய்வீக ஆற்றலின், ஞானத்தின், பேரின்பத்தின் வழிகளாவோம். உலகத்தின் நன்மைக்காக அவ்விதம் ஆவோம்.

31
ஆன்மீக மலர்ச்சி

உடல், மனம் மற்றும் ஆன்மா

ஆன்மீக மலர்ச்சியின் விளங்காத மெய்ம்மையைப் புரிந்துகொள்வதற்காக, வாழ்க்கையில் நம்மிடம் வழக்கத்திலுள்ள நம்முடைய உண்மையான இயல்பு மற்றும் விழிப்புணர்வு நிலைகளை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

நம்முடைய உண்மையான இயல்பு தெய்வீகத்தன்மையாகும் அதாவது பிரம்மனே நம்முடைய உண்மையான இயல்பு ஆகும். இந்த உண்மையான இயல்பானது ஆன்மா என்று அழைக்கப்படுகிறது. ஆனால் உண்மையில் இது பரம்பொருளைவிட, பிரம்மனை விட வேறானது இல்லை என்பதுதான் ஆன்ம ஞானமடைந்தவர்களின் அனுபவம் ஆகும். அறியாமையானது இந்த உண்மையான இயல்பை மறைக்கிறது. அறியாமையால் நாம், நாம் கடவுளை விட வேறுபட்டவர்கள், நாம் வரையறைக்கு உட்பட்டவர்கள், அழியத்தக்கவர்கள் என்று உணர்கிறோம். அறியாமையானது ஒரு வெறியூட்டும் மது ஆகும். அது ஒருவரை அவரை மறக்கச் செய்கிறது. மாயத் தோற்றங்களை உருவாக்குகிறது. முதலில் அது நம்முடைய உண்மையான இயல்பை மறைக்கிறது. அதன்பிறகு நம்மை நாம் இல்லாதவற்றுடன் அடையாளம் கண்டு கொள்ளச் செய்கிறது. அறியாமையால். உண்மையான ஆன்மாவானது உடலுடன், புலன்களுடன், மனத்துடன் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, அகங்காரத்தின் மாயத் தோற்றமானது உருவாக்கப்படுகிறது. அதன் விளைவாக நமக்குப் பருஉடல் மற்றும் சூட்சும உடல் என்னும் இரு உடல்கள் உள்ளதாக நாம் நினைக்கிறோம். உள்முகமாக ஆராய்வதின் மூலம், நமக்குக் காரண உடல் என்று கூறப்படும் இன்னும்

சூட்சுமமான உடல் உள்ளது என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள இயலும். இம்மூன்றிற்கும் அப்பாற்பட்டு, நம் உண்மையான இயல்பான ஆன்மா உள்ளது.

மேலும் நாம் மூன்று நிலையான விழிப்புணர்வுகளில் சிக்கிக் கொள்கிறோம். விழிப்பு நிலையில் விழிப்புணர் வானது இயற்பொருள் சார்ந்த உடலுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது மற்றும் நாம் இயற்பொருள் சார்ந்த உலகத்தைத் தெரிந்து கொள்கிறோம். கனவு நிலையில் விழிப்புணர்வானது சூட்சுமமான உடலுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது. நம்முடைய மனம் சார்ந்த பதிவு களால் ஏற்படுத்தப்பட்டுள்ள கனவுலகில் நாம் வாழ்கிறோம். ஆழ்ந்த உறக்க நிலையில் விழிப்புணர்வானது நம் காரண உடலுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது. அது காரண உலகத்துடன் ஒரே சுருதியில் இருக்கிறது. மற்றும் மனம் அதனுடைய செயல்பாடுகளை நிறுத்திக் கொள்கிறது.

ஞானமடைந்தவர்கள், இந்த மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்டு எல்லாவற்றையும் கடந்துள்ள விழிப்புணர்வு நிலை உள்ளது. அதற்குத் துரீயம் என்று பெயர். அந்த நிலை யில் ஒருவர் அவருடைய தூய்மையான ஆன்மீக இயல்பை மீண்டும் பெறுகிறார் என நமக்குக் கூறுகின்றனர். இந்த மிக உயர்ந்த தூய்மையான விழிப்புணர்வு நிலையை அடைவதும், ஆன்மாவானது பரம்பொருளைத் தவிர வேறு எதுவுமில்லை என்று உணர்வதும் எப்படியிருப்பினும் சாதகர்களுக்கு இது படிப்படியாக நடைபெறும் செயல்முறையாகும். ஆன்மீக விழிப்புணர்வு நிலையை அடைவது படிப்படியாக மலர்ச்சி அடையும் முறைமையை மேற்கொள்கிறது. சாதகன் முழுமை யான ஆன்மஞானத்தை அடைவதற்கு முன்பு அவன் கடக்க வேண்டிய பல நிலைகள் உள்ளன. இந்த ஆன்மீக மலர்ச்சி யைப் பற்றித்தான் நான் இப்பொழுது விவாதிக்கப் போகிறோம்.

நம் விழிப்புணர்வு நிலையில் நாம் பரு உடலுடன் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறோம். அப்பொழுது

நாம் குள்ளாமனவர்கள் அல்லது உயரமானவர்கள், இளமை யானவர்கள் அல்லது வயதானவர்கள் அல்லது வெண்மையாக இருக்கிறோம் அல்லது கருமையாக இருக்கிறோம் என்று நினைக்கிறோம். நாம் நம்மை மனத்துடன் அடையாளம் கண்டு கொள்ளும் பொழுது நாம் வேதனை அல்லது இன்பம், துன்பம் அல்லது மகிழ்ச்சி போன்றவற்றை உணர்கிறோம். அகங்காரத்துடன் அடையாளம் கண்டுகொள்ளும் பொழுது நாம், 'நான்தான் செய்பவன்', 'நான் கட்டுப்பட்டவன்' அல்லது 'நான் சுதந்திரமானவன்' என்று நினைக்கிறோம்.

நாம் நம்முடைய அறியாமையை விடுத்து, நம்முடைய உண்மையான ஆன்மீக இயல்பை உணர வேண்டும். நாம் வெறும் நினைப்பதால் மட்டும் இதை நம்மால் செய்ய இயலாது. விருப்பங்கள் குதிரைகளாக இருப்பின் அனை வரும் சவாரி செய்வார்கள். நாம் நம்மை அறிதுயில் நிலைக்கு ஆட்படுத்திக் கொண்டிருக்கிறோம். மற்றும் நாம் நம்மை அறிதுயில் நிலையிலிருந்து விடுவித்துக்கொள்ள வேண்டும். இதை எப்படிச் செய்ய வேண்டும்? நம்முடைய பழைய இயல்பை மீண்டும் கட்டமைத்துக் கொள்ள வேண்டும்.

நாம் நம்முடைய எண்ணுதல், உணர்தல் மற்றும் செயல் படுதல் என்னும் பழைய இயல்புகளை உடைத்தெறிந்து விட்டு, புதிய நல்ல ஒழுக்க நெறிமுறைகளுடன் கூடிய பழக்க வழக்கங்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். மற்றும் நம்முடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் செயல் களையும் ஆன்மீக குறிக்கோளுடன் வழிநடத்த வேண்டும். அதன் பிறகு நாம் தூய்மையானவர்களாக ஆவோம்.

ஒழுக்க நெறிமுறைகளின் விதிமுறைகள், பிரார்த்தனை தெய்வீக நாமபாராயணம் மற்றும் தியானம் போன்றவற்றின் விளைவாக மனம் தூய்மையடைகிறது. மற்றும் நாம் உள்முக மாக ஆராயும் ஆற்றலைப் பெறுகிறோம். அதன்பிறகு ஞானி களின் 'ரகசியப்படிகளை', ஒரு ரகசியமான மின் ஏற்ற மாடத்தை (elevator) அதனுடைய வெவ்வேறு இறங்கும் நிலைகள், வெவ்வேறு விழிப்புணர்வு மட்டங்களுடன்

தொடர்பு கொண்டுள்ளதைக் கண்டு கொள்கிறோம். நாம் நமக்குள்ளே பலவகையான விழிப்புணர்வு மையங்களைக் கண்டு கொள்கிறோம். தந்திர சாத்திரங்களில் இந்த ஒவ்வொரு மையமும் சக்கரம் என்று அழைக்கப்படுகிறது. நாம் அனைவரும் நம்முடைய எண்ணங்களும், உணர்வுகளும், செயல்பாடுகளும் நம்முடைய மனநிலைகளுக்கு ஏற்றவாறு எப்படி மாறுபடுகின்றன என்பதை அறிவோம். இந்த மனநிலைகள் விழிப்பு உணர்வு மையங்களுடன் ஓரளவிற்குத் தொடர்பைப் பெற்றுள்ளன. அதன்மூலம் நாம் குறிப்பிட்ட நேரங்களில் தொடர்புபடுத்தப்படலாம்.

ஷோபன்ஹாவர் (Schopenhauer), குழந்தை இளைஞனாக வளரும் பொழுது பாலுணர்வுதான் விருப்பத்தின் மையமாக இருப்பதாகக் கூறுகிறார். அப்பொழுது ஒருவர், எண்ணங்கள், உணர்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் என்னும் அனைத்தும் பாலுணர்வால் ஆதிக்கம் செலுத்தப்படும் புதிய உலகில் வாழ்கிறார். நாம் மிகவும் பசியுடன் இருக்கும் பொழுது நம் வயிறை உணர்கிறோம். ஆழமான உணர்ச்சிகளுடன் ஊசலாடிக் கொண்டிருக்கும் பொழுது, நாம் இதயத்தை உணர்கிறோம். நம்முடைய எண்ணங்கள் தெளிவாகவும் பிரகாசத்துடனும் விளங்கும்பொழுது நாம் இரண்டு புருவங்களுக்கு இடையிலுள்ள புள்ளியை உணர்கிறோம். இது இரு தன்மைகளைக் குறிப்பிடுகின்றன. 1. நமக்குப் பல வகையான விழிப்புணர்வு மையங்கள் உள்ளன. 2. நாம் தொடர்ந்து, ஒரு மையத்திலிருந்து மற்றொரு மையத்திற்கு நிலை பெயர்ந்து கொண்டிருக்கிறோம். நாம் இங்கு உடல் சார்ந்த மையங்களை மட்டுமே குறிப்பிட்டு இருக்கிறோம். நம் உடல் சார்ந்த வாழ்வுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ள இந்த மையங்களைத் தவிர, ஆன்மீக விழிப்புணர்வுடைய மேம்பட்ட மையங்களும் உள்ளன. அவை கண்களுக்குப் புலப்படாது. சாதாரண மனத்தினாலும் அவற்றைப் புரிந்து கொள்ள இயலாது. அவை சூட்சுமமான ஆன்மீக மையங்கள் ஆகும். மிகவும் முன்னேற்றமடைந்து உள்ள யோகிகளால் மட்டுமே அவற்றை அறிய இயலும். தந்திரசாத்திரங்கள், சக்கரங்கள் எனப்படும்

அத்தகைய விழிப்புணர்வு மையங்கள் இருப்பதாகக் குறிப் பிடுகின்றன.

இந்த பலவகைப்பட்ட விழிப்புணர்வு மையங்களைப் பற்றியும் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் ஒரு தெளிவான கருத்தைப் பெறுவது நமக்கு மிகவும் அவசிய மானதாகும். புலனுணர்விற்கு அப்பாற்பட்டவற்றைப்பற்றி விவரிக்கும்பொழுது, நாம் சிலநேரங்களில் உடல் சார்ந்த மொழியை பயன்படுத்துமாறு வலுக்கட்டாயப்படுத்தப்படு கிறோம். குண்டலினி சக்தியைப் பற்றி விவரிக்கும் பொழுதும் அதுதான் செய்யப்பட்டுள்ளது. அது மனிதனிடம் அடங்கியுள்ள ஆன்மீக சக்தியாகும். அது சில நேரங்களில் பாம்பு சக்தி என்று அழைக்கப்படுகிறது. அது சுருண்டுள்ள பாம்பிற்கு ஒப்பிடப்படுகிறது. அது முதுகெலும்பின் கீழ்ப் பகுதியில் உறங்கிக் கொண்டு இருக்கிறது.

சுழுமுனை, இடா மற்றும் பிங்களா

குண்டலினி அல்லது சுருண்டுள்ள சக்தியானது விழிப் புணர்வின் படைப்பாற்றல் தன்மையின் ஆற்றலே ஆகும். யோக மொழியில் அது சுருண்டு, முதுகெலும்பின் அடிப் பகுதிக்கு ஒத்திசைவான பகுதியில் உறங்கிக் கொண்டு இருக் கிறது. ஆன்மீக விழிப்புணர்வு அடைந்தவர்களுக்கு இந்த சக்தியானது சுழுமுனை என்னும் ஆன்மீகப் பாதையின் வழி யாகப் பாய்கிறது. இந்த ஆன்மீகப் பாதையானது இடா மற்றும் பிங்களா எனப்படும் பாதைகளுடன் அருகருகே அமைந்துள்ளது. இவை முதுகெலும்பின் இடப்பகுதி மற்றும் வலப்பகுதியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. சுழுமுனை யானது நடுவில் உள்ளது. அடிப்படையான அல்லது எல்லா வற்றிற்கும் கீழாக உள்ள மையத்தில் ஒன்று சேரும் மூன்று வழி களை வரைபட உருவத்தில் காண்பாய். நடுவில் இருப்பது ஆன்மீக வழி. மற்ற இரண்டும் மனிதனின் சாதாரண உடல் சார்ந்த மற்றும் மனம் சார்ந்த வாழ்க்கையுடன் தொடர்பு கொண் டுள்ளது. ஒரு சராசரி மனிதனிடம் அந்த வழிகளின் சந்திப்பில் அவன் திரட்டும் சக்தியானது இரண்டு பக்க வழிகளில்

மட்டும் பாய்கிறது. ஆனால் நடுவழியில் பாய்வது இல்லை. அதனால் எல்லா சக்தியும் பக்க வழியாகச் செல்கின்றன. மற்றும் அந்த சக்தி தன்னைச் சாதாரண உலகியல் எண்ணங்கள், உணர்வுகள் செயல்கள் மூலம் வெளிப்படுத்திக்கொள்கிறது.

ஒவ்வொரு மையமும் ஒரு குறிப்பிட்ட விழிப்புணர்வு மட்டத்தில், ஒரு தனி மனிதன் மற்றும் இயலுலக அண்டத் திற்குமிடையில் ஒரு தொடர்பு நுனி ஆகும். கீழிருந்து மேலே செல்லும் முதல் மூன்று மையங்கள், மனிதனின், உண்பது, குடிப்பது, உறங்குவது, புலனின்பங்களை அனுபவிப்பது மற்றும் பால்சார்ந்த இன்பங்களை உட்கொண்ட விலங்கு வாழ்வுடன் தொடர்பு உடையதாகும். எப்பொழுது மனித னின் உணர்வு நிலை அவனுடைய இதய மையத்திற்கு உயர் கிறதோ, அப்பொழுது அவனுடைய முதல் ஆன்மீக எழுச்சி ஏற்படுகிறது. அங்குதான் அவன் ஆன்மாவைக் கண்டு கொள்கிறான்.

சிலசமயங்களில் விழிப்புணர்வு மையங்கள், அவை தொடர்பு கொண்டுள்ள உடல் சார்ந்த பின்னல் அமைவுகள் மற்றும் நரம்பு மையங்கள் இவற்றை வைத்து விவரிக்கப்பட் டுள்ளது. ஆனால் அந்த மையங்கள் அவைகளுடன் அடை யாளப் படுத்தப்படக் கூடாது. தன்னுடைய புகழ்பெற்ற நூலான 'The Serpent power' என்னும் நூலில் 'Sri John woodroffe' கருத்துத் தெரிவித்து இருப்பதைப்போல இந்த 'தாமரைகள்' அல்லது விழிப்புணர்வு மையங்கள் மிகவும் சூட்சுமமான மையங்கள் ஆகும். அவை பருவுடலின் வழிகளை உயிர்ப்பித்து மற்றும் கட்டுப்பாட்டில் வைக்கிறது. இந்த வழிகள் முதுகெலும்புப் பகுதிகளில் அமைந்த நரம்பு மையங்கள், பின்னல் வேலைகள், நரம்புகள், நாளங்கள் மற்றும் உறுப்புக்களால் குறிப்பிடப்படுகின்றன.

சக்கரங்கள் அல்லது விழிப்புணர்வு மையங்கள்

நம்முடைய பருஉடலை ஊடுருவியுள்ள சூட்சும உடலை நாம் கூர்ந்து நோக்கினால், மனம் சார்ந்த மற்றும்

உணர்ச்சி சார்ந்த இயல்புகளைப்பற்றிய தெளிவான கருத்தைப் பெற இயலும். மற்றும் நாம் நம்முடைய உணர்ச்சி சார்ந்த இயல்பினை மட்டுமின்றி நம்முடைய புலன்கள் மற்றும் பருஉடல் சார்ந்த உறுப்புக்களையும் கட்டுப்படுத்து வதற்குக் கற்றுக்கொள்ள இயலும். நம்முடைய பருஉடலி லுள்ள மறைவான உறுப்புக்களையும் அவற்றின் செயல் பாங்குகளையும் நம்மால் எப்படிக் காண இயலுவது இல்லையோ மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் நமக்கு எதுவும் தெரிவதுமில்லையோ அதைப்போன்றே உணர்வற்ற நிலை மற்றும் மேம்பட்ட விழிப்புணர்வு நிலை யையுடைய மனம் சார்ந்த அடுக்குகள் உள்ளதாக நம் குரு மார்கள் நமக்குக் கூறுகிறார்கள். ஆழமாக வேரூன்றியுள்ள நம்முடைய பல விருப்பங்களும் உணர்ச்சிகளும் இந்த உணர்வற்ற நிலையில்தான் இடம்பெற்றுள்ளன. ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றத்தை அடைய வேண்டுமாயின், அவை கண்டுபிடிக்கப்பட்டு வேருடன் அழிக்கப்பட வேண்டும். மேம்பட்ட விழிப்புணர்வானது ஆன்மீக அனுபவம் மற்றும் பேரின்பத்தின் மட்டம் ஆகும்.

காரண, சூட்சும மற்றும் பரு உடல்களுக்கு தொடர்பை ஏற்படுத்தவல்ல பல நுனிகள் உள்ளன. இந்த நுனிகள் எவை முதுகெலும்புப் பகுதியில், தலையிலிருந்து முதுகெலும்பின் அடிவரையிலுள்ள பகுதியில் இருக்கின்றனவோ அவை ஏற்கனவே கூறப்பட்டுள்ள சக்கரங்கள் ஆகும். ஆன்மா, மனம் மற்றும் உடல் இந்த இணைப்பில் சந்திக்கின்றன. மற்றும் ஒன்றுடனொன்று இயக்க விளைவை ஏற்படுத்திக் கொள் கின்றன. இந்தச் சக்கரங்களின் வழியாக, தொடர்ந்து இந்த எல்லாமூன்று உடல்களுக்கிடையில் தகவல் செல்கின்றன. ஆனால் சாதாரணமான மனிதர்களுக்கு, கீழே உள்ள மூன்று சக்கரங்கள் மட்டுமே சுறுசுறுப்பாக இயங்குகின்றன. மேல் நிலையில் உள்ளவை இயக்கமற்று ஒடுங்கி உள்ளன. மேல் நிலையில் உள்ள மையங்களை சில யோக விதிமுறைகளால் எழுச்சி அடையச் செய்ய இயலும். மற்றும் ஒவ்வொரு மையமும் இயக்கிவிடப்பட்டவுடன், ஒரு குறிப்பிட்ட

விழிப்புணர்வு நிலையை வெளிப்படுத்துகிறது. உடலிற்கும் மனத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு காரணமாக இந்த இரண்டும் ஒன்றுடன் ஒன்று செயல் மற்றும் எதிர்ச் செயலை ஆற்றுகின்றன. எண்ணங்களும் மற்றும் உணர்ச்சிகளும் மனத்தைப் பாதிப்பதுடன் மட்டுமின்றி, அதை மாற்றவும் இயலும் என்பது நமக்குத் தெரியும்.

தன்னலம் மிகுந்த விலங்கு சார்ந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும், மனிதனின் விலங்குத்தன்மையைச் சார்ந்த வாழ்வுடன் தொடர்பு கொண்டுள்ள, கீழான விழிப்புணர்வு மையங்களைத் தூண்டுகின்றன. மேம்பட்ட எண்ணங்களும் உணர்வுகளும் மேலான மையங்களில் எதிர்செயலாற்று கின்றன. நம் ஒவ்வொருவரிடமும் மூன்று தனித்த இருப்பு நிலைகள் உள்ளன. அவை ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள தமோ குணம், ரஜோகுணம் மற்றும் சத்துவ குணம் ஆகும். தமோ குணம் என்பது சோம்பல்தன்மை மிகுந்த நிலை யாகும். மனநிறைவற்ற நிலை மற்றும் மேம்பட்ட வாழ்க் கைக்கான முயற்சியும் இருப்பதில்லை. ரஜோ குணம் என்பது உயர்ந்த மற்றும் தாழ்ந்த இயல்புகளுக்கு இடையில் உள்ள போராட்டமான வாழ்வு ஆகும். தமோ குணமும், ரஜோ குண மும் கீழான மையங்கள் அல்லது சக்கரங்களுடன் தொடர்பு உடையவை ஆகும். மேலான நிலையில் உள்ள மையங்கள் சத்துவ குணத்துடன் தொடர்பு உடையவை ஆகும். சத்துவ நிலையில், மேலான இயல்பு அல்லது விழிப்புணர்வு நிலை யானது மேம்பட்டு உள்ளது. ஆனால் தீயதன்மையானது இன்னும் படிமாற்றம் அடையப்படவில்லை. உணர்வற்ற நிலையில் கெட்ட தன்மைகளின் வளர்ச்சிக்குரிய விதைகள் உள்ளன. அவற்றைத் தோண்டி எடுத்து வெளியே எறிவதற்கு இயலாது. ஆனால் அவற்றை ஆன்மீக அனுபவத்தின் ஒளி யினால் எரித்துவிடலாம்.

நாம் சத்துவ நிலையில் இருந்தால்தான் சுழுமுனை யானது சுறுசுறுப்புடன் செயல்படும். நம் இயல்புகளில் செயல்பட்டுக் கொண்டுள்ள மன ஆற்றல்கள் இசை வுடைமையைப் பெற வேண்டும். மனம் அதிக அளவு

செயலாற்றினாலோ அல்லது அமைதியற்று இருந்தாலோ, நம்முடைய மனத்தின் ஆற்றலின் பெரும்பகுதியானது வேறு பாதையில் திரும்பிவிடும் என்பதில் நாம் உறுதியுடன் இருக்கலாம். நாம் நம்மை அதிகப்படியாகச் செயலாற்றவோ, அமைதியற்ற நிலையில் இருப்பதற்கோ, கோபம், வருத்தம், மிகவும் களிப்புடனோ அல்லது கவனமற்றவராகவும் இருப்பதற்கு அனுமதித்தால், நாம் மிகவும் அதிகமான அளவில் நம் மன ஆற்றலை இழக்கிறோம். மனிதர்கள் நினைத்துக் கொண்டிருப்பதைப்போல குண்டலினியை எழுப்புவது அத்தனை எளிமையான செயலன்று. அதற்குப் பெரிய அளவில் மன உறுதியும், ஒழுக்க நெறிமுறைகளும் தேவையாகும். தொடக்கத்தில் மன ஆற்றலை சுழுமுனை வழியாக, மன உறுதியைப் பயன்படுத்துவதால் மட்டும் செலுத்துவது கஷ்டம் ஆகும்.

எனவே முதலில் இதய மையத்திலுள்ள கடவுளின் வடிவத்தின்மீது மனத்தை ஒருமுகப்படுத்துமாறு நாம் கேட்டுக்கொள்ளப்படுகிறோம். கடவுளிடம் கொண்டுள்ள பக்தியின் மூலம் இதயத்தில் நம் மனத்தை ஒருமுகப்படுத்து வதற்கு நாம் முயற்சி செய்கிறோம். ஆற்றலை இழக்கும் எல்லா வகைகளும் சரிபார்க்கப்பட வேண்டும். மற்றும் இதய மானது நம்முடைய விழிப்புணர்வு மையமாகிறது. நாம் இந்த அனைத்தையும் செய்யும் பொழுது, கடவுளுடைய அருளால் குண்டலினி எழுச்சியடைகிறது. முதலில் நாம் தாமரை, ஒளி, கடவுளின் வடிவம் போன்றவற்றைக் குறித்த கற்பனை களுடன் தொடங்குகிறோம். ஆனால் நம்முடைய ஆன்மீக விழிப்பு உணர்வு எழுச்சியடையும் பொழுது, நாம் இத்தகைய கற்பனைகளின் பின்னணியிலுள்ள உண்மையை உணர் கிறோம். அதன்பிறகு நாம் அதுவரைக்கும் உண்மையாக இருக்கும் பொருட்களைப்பற்றி கற்பனை செய்து கொண் டிருந்தோம் என்பதையும் உணர்கிறோம்.

விருப்பங்களின் விதைகளும், கடந்த கால அனுபவங் களின் மறைந்துள்ள பதிவுகளும் நம் மனத்தில் இருக்கும் வரையிலும், ஆன்மீக அனுபவம் தொடர்ந்து நிலைகொள்ளாது.

முதலில் நமக்கு சில கண நேரத் தோற்றங்கள் மட்டுமே ஏற்படும். ஆனால் ஒவ்வொரு சிறிய ஒளிக்கீற்றின் ஒளியும் மறைந்துள்ள சில பதிவுகளை எரிக்கின்றன. ஆன்மீக அனுபவத்தின் மிக மிக உயர்ந்த நிலையான நிர்விகல்ப சமாதி என்று அழைக்கப்படுவது, பெரும்பாலான விருப்பங்களின் விதைகள் இவ்விதத்தில் அழிக்கப்பட்டால்தான் ஏற்படும். பாதி அளவான அனுபவங்கள், தற்காலிகமான ஆன்மீக அகக் காட்சிகள், எப்பொழுதாவது ஏற்படும் ஆனந்த பரவச நிலைகள், அவை அவைகளிடம் எந்த அளவிற்கு நன்மையைக் கொண்டிருப்பினும், அவைகளால் நமக்கு மிகமிக உயர்ந்த பேரின்பத்தை அளிக்க இயலாது.

ஆன்மீக அனுபவம் மட்டுமே நமக்குக் கடவுளையும் ஆன்மாவையும் உண்மைகளாக்கும். இயற்காட்சிகளின் பின்னணியில் இறைவனை நாடுவதுதான் சமயத்தின் குறிக்கோள் ஆகும். நாம் பொதுவாக பல புறப்பொருட்களைச் சார்ந்து இருக்கிறோம். ஒரே மெய்பொருளாக உள்ள கடவுளை மட்டுமே சார்ந்து இருப்பதில்லை. உண்மையல்லாத பொருட்கள் நமக்கு உண்மையாக ஆகி உள்ளன. நாம் உண்மையான வஸ்துவை உண்மையற்றதாக்கி விட்டோம். உண்மையை அறியவல்ல ஆற்றலானது நம்மிடம் ஒடுங்கிக் கிடக்கிறது. நாம் இந்த ஆற்றலை எழுப்ப வேண்டும். ஒவ்வொரு சக்கரத்திலும் நமக்குப் புதியதொரு அனுபவம் ஏற்படுகிறது. நாம் உண்மையின் புதியதொரு தன்மையை உணர்கிறோம். இதயமையம் விழிப்பு அடையும்பொழுது ஒருவர் அவரை ஆன்மாவாக உணர்கிறார். ஒளிரும் ஒரு விழிப்புணர்வுப் புள்ளியாக, உடல் மற்றும் எண்ணங்களிலிருந்து வேறுபட்ட ஜீவாத்மாவாக உணர்கிறார். குண்டலினி சக்தியானது, இருபுருவங்களுக்கு இடையிலுள்ள மையத்தை அடையும் பொழுது, சாதகன், ஜீவாத்மாவானது பரமாத்மனின் ஒரு பகுதி, ஆன்மாவானது வான்பேருயிரின் பகுதி என்பதை உணர்கிறான். பெரும்பாலோருக்கு இந்த நிலையைத் தாண்டி மேலே செல்ல இயலாது.

பாம்புடன் விளையாட வேண்டாம்

சாதகர்கள் அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டிய ஒரு கருத்து இங்குள்ளது. உடல் தூய்மை, மனத்தூய்மை இல்லாமல் யாரெல்லாம் ஆன்மீக விதிமுறைப் பயிற்சிகளை மேற்கொள்கிறார்களோ, அவர்கள் ஆன்மீகக் கண்ணோட்டத்திலிருந்து தங்களுடைய ஆற்றலை வீணடிப்பது மட்டுமின்றி அதிகமான அளவு ஆற்றலை வரவழைத்து ஒருங்கு சேர்க்கும் ஆபத்திற்கும் ஆட்பட நேரிடும், அந்த ஆற்றலானது உலகியல் வழிகளின்மூலம் பாய்ந்து, அவர்களுடைய பாலியல் வாழ்க்கையையும் உட்கொண்ட உலகியல் வாழ்க்கையைத் தீவிரப் படுத்தும், இவ்விதத்தில் அவர்களுக்குப் பெருமளவில் தீங்கை ஏற்படுத்தும், ஸ்ரீராமகிருஷ்ணரின், 'கிராமங்களில் வயலுக்கு நீர் பாய்ச்சுவார்கள். தண்ணீர் வெளியே போவதைத் தடுக்க வயலைச் சுற்றி நான்கு பக்கமும் வரப்பு கட்டியிருப் பார்கள். அதில் இடையிடையே மடைகளும் வளைகளும் இருக்கும். ஆனால் தண்ணீர் வளைகள் வழியாக வெளியே போய் விடுகிறது. ஆசைகள்தான் வளைகள். உலகியலில் நாட்டம் கொண்ட மனிதனின் ஆற்றலானது அந்த வளை களின் வழியாக உலகியல் பாதைகளிலேயே பாய்ந்துவிடு கிறது'[1] என்னும் நீதிக்கதையை நினைவில் கொள்ள வேண்டும்.

நான் சுவிட்ஜர்லாந்தில் இருந்தபொழுது அனைவராலும் அறியப் பெற்றிருந்த ஒரு மனோதத்துவ நிபுணரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அவரிடம் பல மாணவர்கள் இருந்தனர். அவர் அவர்களுக்கு யோகப் பயிற்சி அளித்தார். நான் அவ ருடைய மனைவி, 'பாம்பு சக்தி' (Serpent-power)யை ஓவிய மாக வரைவதைப் பார்த்தேன். நான் அவரைப் பார்த்து, 'பாம் புடன் விளையாடுவது ஆபத்தானது அல்லவா?' என்று கேட் டேன். அவர் சிரித்துவிட்டு, 'ஓ, இல்லை சுவாமி. மனிதர்கள் அதை உள்ளார்ந்த அக்கறையுடன் மனத்தில் கொள்வதில்லை' என்று கூறினார். ஆனால் சில நேரங்களில், சிலர் அதில்

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.516,517.

உள்ளார்ந்த அக்கறை கொண்டு, குண்டலினி சக்தியை மனத் தூய்மை அடையாமலேயே எழுப்புவதற்கு முயற்சி செய்கின்றனர். போதுமான அளவிற்கு மனத் தூய்மை இல்லாமல் மனத்தை ஒருமுகப்படுத்தும் பயிற்சியை மேற்கொள்வது ஆபத்தானது ஆகும். தியானத்தின்மூலம் அதிகப்படுத்தப்பட்டுள்ள ஆற்றலானது ஆன்மீகப் பாதையின் வழியாகச் செல்லவில்லை எனின், அது தன்னை வெளிப்புறத்தில் உலகியலில் நாட்டம் கொண்ட மனிதனிடம் மட்டுமீறிய உணர்ச்சி வேகத்துடன் வெளிப்படுத்திக் கொள்ளும், அவனுக்குத் தீங்கு செய்து, மற்றவர்களுக்கும் தீங்கினை ஏற்படுத்தும். அகமுகமாக மனத்தைத் திருப்பியவர்களுக்கு ஒருங்கு கூட்டப்பட்டுள்ள ஆற்றலானது அதை வெளிப்புறத்தில் வெளிப்படுத்திக் கொள்ளாது. அந்தச் சூழ்நிலையில் அது தனிப்பட்ட மனிதனிடம் ஒரு சுழலை ஏற்படுத்திக் கொண்டு அவனுடைய நரம்புகளையும் மனத்தையும் தகர்த்து, அவனை முற்றிலும் சீர்குலைத்து விடும்.

இன்னும் சிலருக்கு மனமானது தியானத்தினால் கிளறப்பட்டிருப்பதால், அதில் மறைந்துள்ள எல்லா நல்ல மற்றும் தீயவையும் மிக அதிகமான வேகத்துடன் மேற்புறத்தில் வந்து, உடல் சார்ந்த மற்றும் மனம் சார்ந்த சீர்குலைவை ஏற்படுத்தக்கூடும். அத்தகைய மனத்தூய்மை அற்றவர்கள், 'பாம்புடன்' விளையாட விரும்பினால், எப்பொழுதும் மிகுந்த துயரத்தை அடைகின்றனர். மீண்டும் வேறு சிலரிடம் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஆற்றலானது தன்னை தொலைவில் நடப்பதை உணர்தல், எண்ணங்களைப் படித்தல் போன்ற சிறுமதிப்புடைய அற்பமான மன ஆற்றல்களாக வெளிப்படுத்திக் கொள்ளும். அத்தகைய ஆற்றல்கள் அத்தகைய மனிதர்களை அகங்காரம் நிறைந்தவர்களாகவும், எத்தகைய திறமையற்றவர்களாகவும் செய்து விடுகிறது. இன்னும் வேறு சிலரிடம், மறைந்துள்ள ஆற்றலானது பாதி விழிப்புற்று இருக்கும். ஆன்மீக ஆற்றலானது உயர்ந்த மையத்தை நோக்கி உயரக்கூடும். ஆனால் அவலமான விளைவுகளுடன், உலகியல் பற்றுக்களைத் தூண்டிவிட்டுப்

பிறகு வீழ்ந்து விடும். ஆனால் ஒழுக்க நெறிமுறைகளை உள்ளார்ந்து பின்பற்றிக் கொண்டு, அத்துடன் பிரார்த்தனை, ஜபம் மற்றும் தியானப் பயிற்சிகளையும் மேற்கொண்டால், உண்மையாகவே பயப்படுவதற்கு எதுவும் இல்லை. அத்தகையவனுக்கு ஆன்மீக வாழ்வு மிகவும் பாதுகாப்பானது ஆகும்.

ஆன்மீக மலர்ச்சி ஒரே சீருடன் இருப்பது அபூர்வம்

ஒவ்வொரு சாதகனும் எதிர்கொள்ள வேண்டிய கடின மான சிக்கல் என்பது, ஆன்மீக வளர்ச்சியானது மிக அபூர்வ மாகத்தான் ஒரே சீருடன் கூடிய தன்மையுடன் விளங்குகிறது என்பதாகும். ஆன்மீக மலர்ச்சி என்பது ஒரு நேர்க் கோட்டில் ஏற்படுவது அல்ல. ஒரு உயர்ந்த மையத்தை அடைந்த பிறகு, சாதகன் அந்த வழி மூடப்பட்டிருப்பதை உணரலாம். அவன் அந்த மையத்தில் சிக்கிக் கொண்டு விடுகிறான். மற்றும் அவனுடைய ஆற்றல்கள் வேறுபாதையில் திரும்புகின்றன. அவன் அங்கிருந்து வெளியே வருவதற்கு நீண்ட காலம் ஆக லாம். சில நேரங்களில் சாதகன் தன்னை எத்தகைய வளர்ச்சி யும் அடையாமல் சுற்றிக் கொண்டே இருப்பதாக உணர்வான். இத்தகைய இடைவெளிகள் அல்லது சாரமற்ற காலங்கள் மிகச் சிறந்த கிறிஸ்தவ ஞானியான அருளாளர் ஜான் ஆப் தி கிராஸ் அவர்களால் 'ஆன்மாவின் இருண்ட இரவுகள்' என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சாதகனின் வாழ்விலும் இது தவிர்க்க இயலாததாக உள்ளது. ஆனால் சாதகன் ஒழுக்க நெறிமுறையுடன் கூடிய பாதையைச் சீராகப் பின்பற்றினால் அவைகளின் தீவிரமும், கால வரையறையும் குறையும், மனத்தூய்மையும் கட்டுப்பாடுடன் கூடிய ஒழுங்குமுறைமை யும் மற்றும் பக்தியும் சீரான ஆன்மீக வளர்ச்சியை உறுதி செய்கின்றன.

குண்டலினி சக்தி எழுச்சியடைவதன் விவரணையானது சுலபமானதாக இயலமைதி வாய்ந்ததாகத் தோன்றக் கூடும். ஆனால் உண்மையிலேயே அது மிக, மிகக் கஷ்டமானது ஆகும். பகவத் கீதை இதை, 'மனிதர்களில் ஆயிரம் பேர்களில்

ஒருவன் சித்தி அடைய முயற்சி செய்கிறான். முயற்சி செய்யும் சித்தர்களில் யாரோ ஒருவர் உண்மையில் என்னை உணர் கிறான்'[1] என்று கூறுகிறது. யாரோ ஒருவருக்கு உண்மையில் அது எழுச்சி அடைகிறது. ஆனால் இதில் தன்னம்பிக்கையை இழக்கும் அவசியமில்லை. பெரும்பாலான மனிதர்களின் வாழும் முறையைப் பார்த்தால், அவர்களைப் பொறுத்த மட்டில், குண்டலினி சக்தி மிக மெதுவாக எழுச்சியடைவதோ அல்லது எழுச்சி அடையாமல் இருப்பதோ நல்லது என்று நமக்குத் தோன்றுகிறது. பெரும்பாலான மனிதர்கள் அது எழுச்சி அடைவதற்கு ஆயத்தமான நிலையில் இல்லை. அது ஏற்படுத்தும் மிகப்பெரிய அளவிலான எதிர்விளைவுகளை அவர்களால் எதிர்கொள்ள இயலாது. உண்மையாக ஒரு வருடைய ஆன்மீக வாழ்வின் தொடக்க காலத்தில் குண்ட லினி சக்தியைப் பற்றிய எல்லாவற்றையும் மறந்து கட வுளைப் பற்றி மட்டும் நினைப்பது சிறந்ததாகும். உன் னுடைய இஷ்ட தெய்வத்தின் மீது உள்ள அன்பானது உன் னுடைய எல்லா ஆற்றல்களையும், கவனத்தையும் ஈர்த்துக் கொள்ளட்டும். குண்டலினியை உன் இஷ்ட தெய்வத்திடம் விட்டுவிடுவாய். உன்னுடைய ஆன்மீக வாழ்வின் நலனை அவர் பார்த்துக் கொள்வார். கடவுள் உனக்குச் சரியான நேரத்தில் எழுச்சியை அருள்வார்.

நான் தொடர்ந்து கூறிக் கொண்டிருப்பதைப்போல ஒரு கூட்டிணைவான பாதையை, கர்மம், ஞானம், பக்தி என்னும் மூன்றும் இணைந்த பாதையைப் பின்பற்றுவது சிறந்தது ஆகும். உன் தியானத்துடன், தன்னலமற்ற தொண்டு கைகோத்துக் கொண்டு செல்ல வேண்டும். அது மனத்தைத் தூய்மைப்படுத்தி உரமூட்டுகிறது. உன்னை நீயே பகுத்து ஆராயும் தன்மையை மேற்கொண்டு, மனத்தைப் பற்றற்ற தன்மையுடனும், அமைதியுடனும் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஜபம் மற்றதைச் செய்கிறது. முறை யாகச் செய்யப்பட்டால், ஜபமானது ஒரு அகம் சார்ந்த

---

1. பகவத் கீதை, 7.3.

இசைவுடைமையை ஏற்படுத்துகிறது. அது படிப்படியாக சுழுமுனை வழியாகப் பாய்ந்து அதைச் செயற்பட வைக்கிறது.

குண்டலினி சக்தியை எழுப்புவதற்கான சிறந்த வழிமுறைகள்

நம்முடைய ஆன்மீகப் பாதை எதுவாக இருப்பினும், ஹிந்துவினுடைய, புத்த சமயத்தைச் சார்ந்தவனுடைய, கிறிஸ்தவனுடைய அல்லது சூபியினுடைய பாதையாக இருப்பினும், தூய்மைப்பாடு, தியானம் மற்றும் கடவுளை உணர்தல் என்னும் மூன்று நிலைகளை நாம் அனைவரும் கடந்து செல்ல வேண்டும். நம்முடைய ஆன்மீக விழிப் புணர்வு நிலையை எழச் செய்யும் எண்ணத்துடன் நாம் தியானத்தை எப்படித் தொடங்குவது? என்னும் கேள்வி இங்கு எழுகிறது. ஒருமுறை எங்களில் ஒருவர், எங்களுடைய ஆன்மீக குருவான சுவாமி பிரம்மானந்தரை நோக்கி, 'ஐயா, மறைந்துள்ள ஆன்மீக விழிப்புணர்வான குண்டலினியை எப்படி எழச் செய்ய வேண்டும்?' என்று கேட்டார். அதற்கு சுவாமிஜி இவ்விதம் பதிலளித்தார்:

'சிலர் தனிப்பட்ட பயிற்சிகள் உள்ளன. அவற்றின்மூலம் குண்டலினியை எழுப்பலாம் என்று கருதுகின்றனர். ஆனால் நான் ஜபம் மற்றும் தியானப் பயிற்சிகளை மேற்கொள்வது தான் அதை விழிப்படையச் செய்வதற்கான சிறந்த முறை களாகக் கருதுகிறேன். தற்காலத்திற்கு, முக்கியமாக ஜபத்தை மேற்கொள்வது பொருத்தமானதாகும். இதைவிட எளிமை யான ஆன்மீகப் பயிற்சி வேறு எதுவும் இல்லை. ஆனால் தியானமும் மந்திர பாராயணத்துடன் இணைத்துச் செய்யப் பட வேண்டும்.[1]

கடவுளைப் பல வகைகளில் காணலாம். தந்தையாக அல்லது தாயாக அல்லது பேரொளியாகக் காணலாம். மற்றும் இதைப் போன்று வேறு பலவாறாகவும் காணலாம்.

1. The Eternal Companion, பக்கம் 275.

இதயத்தை உன்னுடைய விழிப்புணர்வு மையமாகக் கொண்டு, நீ விரும்பும் ஒரு வடிவத்தில் அங்குக் கடவுளை எண்ண வேண்டும். கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்யலாம். அல்லது திருமறை நூல்களை, அது குறிப்பிடும் கடவுளுடைய தன்மையில் தோய்ந்து படிக்கலாம். இது ஒரு எளிமையான தியான முறை ஆகும். ஆனால் காலக்கிரமத்தில் இது உண்மையான தியானத்திற்கு வழிகாட்டுகிறது. அது தனிப்பட்ட ஆன்மாவும் பரம்பொருளும் இரண்டறக் கலப்பதற்கு உதவி செய்கிறது.

புனிதமான சொல்லிற்கும், புனிதமான எண்ணத்திற்கும் பெரிய ஆற்றல் உள்ளது. ஒருவர் நாமபாராயணம் செய்து கொண்டே கடவுளைத் தியானிக்கும்பொழுது, தூய்மையான புனிதமான அதிர்வலைகளும், எண்ணங்களும் ஒருவருடைய உடலையும், புலன்களையும், மனத்தையும், அகங்காரத்தை யும் தூய்மையாக, மேன்மேலும் தூய்மையாக்குவதாக உணர வேண்டும். இது தீவிரத்துடன் செய்யப்பட்டால், மூச்சுவிடு வது லயம் நிறைந்ததாக விளங்கி, உயிர் நிலையான சக்தி யானது இசைவுடைமையுடன் திகழ்கிறது. மனம் தூய்மை யானதாகவும் அமைதியானதாகவும் ஆகிறது. மற்றும் அகங்காரமானது இயலுலக அண்டத்தின் மையமாக ஆவதற்கு வழிகோலுகிறது. இது படிப்படியாக ஆன்மீக மலர்ச்சிக்கு அழைத்துச் செல்கிறது. தியானத்துடன் செய்யப்படும் நாம பாராயணமானது ஒரு தெய்வீக இசையை ஏற்படுத்துகிறது. அது ஆன்மீக வழியை சிக்கலற்றதாக்கி உறங்கிக் கொண் டுள்ள பாம்பின் சக்தியை எழுச்சி அடையச் செய்கிறது. மற்றும் அதை உயிர்க்களையுடன் விளங்கும் மேலான மையங்களை நோக்கிச் செல்லுமாறு செய்கிறது.

குண்டலினியின் ஏற்றம்

விழிப்புணர்வானது மேலும் மேலும் எழுச்சி அடையும் பொழுது அது குறுக்கு, நெடுக்கு என்னும் இரு போக்கு களிலும் இயங்கத் தொடங்குகிறது. ஆன்மாவும், வான்பேரு யிரும் இன்னும் அருகிலே சேர்ந்து ஈர்க்கப்படுகின்றன. இது

உபநிஷதங்களில், இணை பிரியாத ஒரே போன்ற இரண்டு பறவைகள் ஒரே மரத்தின் மேல் மற்றும் கீழ்க் கிளைகளிலும் அமர்ந்துள்ளன' என்னும் ஒப்புமையால் உருவகப்படுத்தப் பட்டுள்ளது.[1] கீழே அமர்ந்துள்ள பறவை மேலே பார்த்து, இறுதியாக அவை இரண்டும் ஒன்று என்று உணர்கிறது. யோகத்திற்கு உரிய சொல்நடையைப் பயன்படுத்த வேண்டு மெனின், கீழ்க்கிளையில் உள்ள பறவையானது, முதுகுத் தண்டின் கீழ்ப் பகுதியில் அமர்ந்துள்ள தனிப்பட்ட ஆன்மா வாகும். மேல்க் கிளையில் அமர்ந்துள்ள பறவையானது மூளையிலுள்ள ஆயிரம் இதழ்த் தாமரையில் அமர்ந்துள்ள பரம்பொருளாகும். தனிப்பட்ட விழிப்புணர்வு ஆன்மீகப் பாதையான சுழுமுனை வழியாகப் பாய்ந்து, உச்சிமுனையை அடைந்து பரம்பொருளுடன் தான் இரண்டறக் கலப்பதை உணர்கிறது. இதுதான் ஆன்மாவின் மிக உயர்ந்த ஆன்மீக நிலை மற்றும் அனுபவத்தின் எழுச்சியாகும். பெரும்பாலான ஆன்மாக்கள் இந்த நிலையிலிருந்து, இயல்நிகழ்ச்சிகள் நிறைந்த செயல் எல்லைக்கு மீண்டும் திரும்புவதில்லை. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர், சில முனிவர்கள் அத்தகைய உயர்ந்த ஆன்மீக எழுச்சியின் நிலையிலிருந்து மனிதகுலத் தின் நன்மைக்காக கீழே வருவதற்கு விரும்புவதாகக் கூறியுள்ளார்.[2]

ஒவ்வொரு மையம் அல்லது சக்கரத்துடன் தொடர் புடைய அனுபவங்களைக் குறித்து, இந்தத் தலைப்புப் பொருளில் நவீன காலத்தின் மிகச் சிறந்த நிபுணராக விளங் கும் ஸ்ரீராமகிருஷ்ணர், அவருடைய சொந்த அனுபவத் திலிருந்து என்ன கூறுகிறார் என்பதைக் காண்போம்.

'பெருமளவிற்குச் செய்யப்படும் முயற்சி மற்றும் ஆன்மீகப் பயிற்சிகளால் குண்டலினியானது எழுச்சி அடைகிறது. முதுகுத் தண்டுள்ள பகுதியில் இடா, பிங்களா மற்றும் சுழுமுனை என்னும் மூன்று நரம்புகள் இருப்பதாக

1. முண்டக உபநிஷதம், 3.1.1-3, ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 4.6-7.
2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், 1.155.

யோகிகள் கூறுகின்றனர். சுழுமுனையுடன் ஆறு தாமரைகள் அல்லது மையங்கள் உள்ளன. மிகவும் கீழ்த்தளத்தில் இருப்பது மூலாதாரமாகும். அதன்பிறகு முறையே ஸ்வாதிஷ் டானம், மணிபூரகம் அனாஹதம் விசுத்தி மற்றும் ஆஜ்ஞை, என்னும் இவை உள்ளன. இவையே ஆறு மையங்கள் ஆகும். குண்டலினி, எழுச்சி அடையும் பொழுது கீழே உள்ள மையங்களின் வழியாக அனாஹத மையத்திற்கு வருகிறது. அது இதயப் பகுதி ஆகும். அது அங்கு தங்குகிறது. அந்த நேரத்தில் சாதகனின் மனமானது கீழே உள்ள மூன்று மையங்களிலிருந்து உள்வாங்கப்பட்டிருக்கிறது. அவன் தெய்வீக விழிப்புணர்வின் எழுச்சியை உணர்கிறான். மற்றும் ஒளியைக் காண்கிறான். அவன் திகைத்து வியப்பில் அந்தப் பேரொளியைக் கண்டு ‘இது என்ன?’ ‘இது என்ன?’ என்று கூவுகிறான்.

ஆறு மையங்களைக் கடந்தவுடன் குண்டலினி ஆயிரம் இதழ்த் தாமரை என்று அழைக்கப்படும் ஸஹஸ் ராரத்தை அடைகிறது. மற்றும் சாதகன் சமாதி நிலையை அடைகிறான்.

வேதங்கள், இந்த மையங்களை, ‘பூமி’ அல்லது ‘மட்டங்கள்’ என்று குறிப்பிடுகின்றன. அத்தகைய ஏழு மட்டங்கள் உள்ளன. இதயத்தில் உள்ள மையமானது வேதம் கூறும் நான்காம் மட்டத்துடன் பொருந்துவதாக உள்ளது. தந்திர சாத்திரங்கள் இந்த மையத்தில் அனாஹதம் எனப்படும் தாமரை உள்ளதாகவும், அதற்கு 12 இதழ்கள் இருப்பதாகவும் கூறுகிறது.

விசுத்தி என்னும் கூறப்படும் மையமானது ஐந்தாவது மட்டமாகும். இந்த மையம் தொண்டையிலுள்ளது மற்றும் 16 இதழ்களுடன் கூடிய தாமரை உள்ளது. குண்டலினி இந்த மட்டத்தை அடைந்ததும், பக்தன், கடவுளைப் பற்றியே பேசவும், கேட்கவும் விரும்புகிறான். உலகியல் தொடர்பான தலைப்புக்களில் அல்லது ‘பெண் மற்றும் பொன்’ குறித்துப் பேசுவது அவனுக்குப் பெரிய அளவில் வேதனையை

ஏற்படுத்துகிறது. எங்கு இத்தகைய விஷயங்களைக் குறித்து மனிதர்கள் பேசுகிறார்களோ, அவன் அந்த இடத்தை விட்டு அகன்று விடுவான்.

அதன்பிறகு ஆறாவது மட்டம் வருகிறது. இதனுடன் ஒத்திசைவான மையம் 'ஆஜ்ஞை' என்று அழைக்கப்படு கிறது. இந்த மையமானது இருபுருவங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. மற்றும் இதற்கு இரு இதழ்கள் உள்ள தாமரை உள்ளது. குண்டலினி அங்கு அடைந்ததும், சாதகன் கடவுளின் வடிவத்தைக் காண்கிறான். ஆனால் இன்னும் பக்தனுக்கும் கடவுளுக்கும் இடையில் மிகச் சிறிய தடை உள்ளது. அது லாந்தர் விளக்கின் உள்ளே உள்ள சுடரைப் போன்றது ஆகும். நீ சுடரைத் தொட்டு விட்ட தாக நினைக்கலாம். ஆனால் உண்மையாக நீ தொட வில்லை. ஏனெனில் கண்ணாடித் தடுப்பு இருப்பதால் முடிவதில்லை.

இவற்றில் கடைசியாக இருப்பது ஏழாவது மட்டமாகும். தந்திரசாத்திரங்கள் இதை ஆயிரம் இதழ்த் தாமரையை உடைய மையம் என்று கூறும். குண்டலினி அதை அடையும் பொழுது, சாதகன் சமாதி நிலையை எய்துகிறான். அந்தத் தாமரையில் சச்சிதானந்த வடிவினராக சிவன் குடிகொண்டுள் ளார். அங்கு எழுச்சி அடைந்த குண்டலினி சக்தியானது சிவ னுடன் கலக்கிறது. இது சிவனும், சக்தியும் இணைந்த நிலை என்று அழைக்கப்படுகிறது. குண்டலினி சக்தி ஸஹஸ் ராரத்தை அடைந்தவுடன், மனம் சமாதி நிலையை அடைந்த வுடன், சாதகனுக்கு வெளியுலகைப் பற்றிய எல்லா உணர்வு களும் இற்று விடுகின்றன. ஆனால் அந்த நிலையில் உடல் அதிக நாள் நீடிப்பது இல்லை. வாயில் பால் ஊற்றினால் வெளியே வந்துவிடுகிறது. இந்தத் தளத்தில் இருந்தால் 21 நாட்களில் உடல் வீழ்ந்துவிடும். பெருங்கடலில் 'கரும் பகுதி களை' (அபாயகரமான பகுதிகளான) அடைந்த பிறகு கப்பல் ஒருபொழுதும் திரும்பி வருவதில்லை. ஆனால் ஈஸ்வர கோடிகள் அதாவது அவதார புருஷர்கள் போன்றவர்களால்

இந்த சமாதி நிலையிலிருந்து கீழே இறங்கி வர இயலும். அவர்கள் பக்தர்களுடன் தொடர்பு கொண்டு இருக்க விரும்புவதாலும் மற்றும் கடவுளின் மீது கொண்டுள்ள அன்பால் மகிழ்வடைவதாலும் அந்த உயர்ந்த நிலையிலிருந்து அவர்களால் இறங்கி வர இயலும். கடவுள் அவர்களிடம் 'ஞான அகங்காரத்தை'யும் அல்லது 'பக்தி அகங்காரத்தை'யும் விட்டு வைத்திருக்கிறார். அதனால் அவர்களால் மனிதர்களுக்கு போதிக்க இயலும். அவர்களின் மனங்கள் ஆறு மற்றும் ஏழாம் மட்டங்களுக்கு இடையில் நகர்ந்துகொண்டிருக்கும். இரு மட்டங்களுக்கு நடுவில் அவை முன்னும் பின்னுமாக ஒரு படகு ஓட்டும் பந்தயத்தை நடத்துவது போன்றதாகும்.[1]


முழுமையான ஞானம் அடைந்த இத்தகையோர் எல்லா உயிரினங்களிலும் கடவுள் ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் காண்கின்றனர். மற்றும் மற்ற மனிதர்களிடம் நிறைவான அன்பையும், பரிவையும் கொண்டுள்ளனர்.

இவர்கள்தான் மேம்பட்ட விழிப்புணர்வு பற்றிய போதனையை நமக்கு அளிக்கின்றனர். அவர்களுடைய முழு வாழ்வும் மனிதர்களை ஆன்மீகப் பாதையில் வழி நடத்திச் செல்வதில் செலவடைகிறது. எல்லா வகையான தூய்மைக் கேடுகளிலிருந்தும் தன்னலங்களிலிருந்தும் முற்றிலும் விடுபட்டவர்களாக, எப்பொழுதும் கடவுளைப் பற்றிய விழிப்பு உணர்வு நிலையிலேயே மூழ்கியவர்களாக, இந்த மேன்மையான மனிதர்கள், உலக நன்மைக்காக தனித்தன்மையுடன் கூடிய எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர். அவர்கள் மனிதனின் ஆன்மீக அமைவு நோக்கத்தின் சாட்சிகளாக விளங்குகின்றனர். மனிதனின் ஆன்மாவின் தெய்வத்தன்மையின் சாட்சிகளாக விளங்குகின்றனர். நாம் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்.

இங்கு ஆன்மீக மலர்ச்சியின் பலவகையான நிலைகளைக் குறிக்கும் விளக்க வரைபடம் உள்ளது.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.153.*


ஆன்மீக மலர்ச்சியின் வரைபடம்
உருவம் சார்ந்த முறை
A
B
A
B
A
B
I
II
III
அருவம் சார்ந்த முறை
IV
V
VI
VII
VIII
IX
X
XI

I. ஒரு சாதாரண மனிதனான A, ஒரு இஷ்ட தெய்வத்தின் பால் B ஈர்க்கப்பட்டு இசைந்து வழிபடுகிறான்.

II. A யானவன் B யிடம் மேலும் மேலும் அதிகமான மேன்மையைக் காண்கிறான்.

III. A யானவன் B யானவர் மேன்மை பொருந்திய வெளிப் பாடு என்று உணர்கிறான். இதற்கு நேர் எதிராக A தானே குறைபாடுடைய வெளிப்பாடு ஆவான். எப்படியும் அதே வரையறையற்ற உண்மை O வின் வெளிப்பாடு ஆவான்.

IV. A யானவன் தான் ஆன்மா என்று உணர்கிறான். தூய்மையான விழிப்புணர்வின் நுனியைப் போல இதற்கு நேர் எதிராக உண்மையானது தூய்மையான விழிப்புணர்வின் வட்டமாகும். ஆனால் நுனியானது வட்டத்தை விட மேலும் உண்மையானதாகத் தோன்றுகிறது.

V. A யானவன் வட்டமானது நுனியை விட மேலும் உண்மையானது என்று கண்டு கொள்கிறான்.

VI. A யானவன் வட்டமானது புள்ளியை விட மேலும் உண்மையானது என்று கண்டு கொள்கிறான்.

VII. புள்ளி விழிப்பு உணர்வானது, வட்ட விழிப்புணர்வில் பரம்பொருளில் இழக்கப்படுகிறது.

VIII. மிகவும் உயர்ந்த, உண்மையாக உள்ள வட்டமானது தன்னையே, உயர்ந்த அல்லது குறைந்த தெய்வீக மேன்மையுள்ள பல ஆன்மாக்களாக வெளிப்படுத்திக் கொள்வதாகக் காணப்படுகிறது.

IX. மிக உயர்ந்த உண்மையானது தன்னை முதலில் ஆன்மாக்களாக வெளிப்படுத்திக் கொண்டு மேலும் தன்னை மனிதர்களாக வெளிப்படுத்திக் கொள்கிறது. நிகழ்வுகளை ஆராயுமிடத்தில் எல்லா உயிரினங்களாக வெளிப்படுத்திக் கொள்கிறது. அவதார புருஷரான, இஷ்ட தெய்வமான B யாருடைய வழிபாட்டால்

A யானவன் தன் ஆன்மீக வாழ்வைத் தொடங்கினானோ, மீண்டும் ஒரு புதிய சூழ்நிலையில் தோன்றுகிறார். இயல்பாகவே வேறுவேறு அவதார புருஷர்களும் அல்லது இஷ்ட தெய்வங்களும் உள்ளனர். ஆனால், பக்தனானவன் அவனுடைய சொந்த இஷ்ட தெய்வத்தையே தனிப்பட்ட முறையில் சார்ந்து உள்ளான்.

X. ஒரே ஒரு பரம்பொருள் தன்னைப் பல ஆன்மாக்களாக வெளிப்படுத்திக் கொள்கிறது.

XI. முழு முதற்பொருளான, இரண்டாவது அற்ற ஒருமையாகும்.

முழுமையான ஞானமடைந்தவன். IX, X அல்லது XI-ல் இருப்பதைப்போல, ஆன்மீக விழிப்புணர்வின் எந்த நிலையில் வேண்டுமானாலும் இருக்கக் கூடும். ஆன்மீக விழிப்புணர்வின் மற்ற நிலைகளும் உள்ளன. அவன் விரும்புவதுபோல அவனால் அங்கு இருக்க இயலும். ஆன்மீக அனுபவத்திற்கு எல்லைகளே இல்லை.

தொகுப்பு ஆசிரியரின் குறிப்பு

இங்குள்ள விளக்க வரைபடங்களும், அவற்றின் விளக்கங்களும் முதலில் சுவாமி யதீஷ்வரானந்தர் அவர்களாலேயே *1934*-ஆம் ஆண்டு வாக்கில், ஐரோப்பாவில் அவர் தங்கியிருந்த பொழுது, அதன் தொடக்கக் காலத்தில் அவராலேயே தயாரிக்கப்பட்டது ஆகும். அவற்றில் சுவாமிஜி ஒரு சாதகன் அவனுடைய ஆன்மீக வளர்ச்சியின் பலவகையான நிலைகளைக் கடக்கும் பொழுது, அவன் பெறும் ஆன்மீக அனுபவ முறைகளை உருவரைபடமாகச் சுட்டிக்காட்டுவதற்கு முயற்சி செய்துள்ளார். இஷ்ட தெய்வத்தின் மீது கொள்ளும் எளிமையான பக்தியிலிருந்து உணர்ச்சி ஏற்றங்களுடன் கூடிய இருமையற்ற அனுபவம் வரைக்கும் மற்றும் அங்கிருந்து உண்மையை எல்லாக் கோணங்களிலிருந்தும் காணும்,

எல்லாவற்றையும் தழுவியுள்ள ஒருங்கிணைந்த காட்சிவரையிலுமாகும். முழு முன்னேற்றத்தையும் ஒரு மணி உருவிலுள்ள வளைவாக பாவித்துக் கொள்ளலாம். முதலில் கீழ் விழிப்புணர்வு மையத்திலிருந்து, மிக உயர்ந்த விழிப்புணர்வு மட்டங்களின் வரையிலுள்ள எழுச்சி உள்ளது. மிக உயர்ந்த விழிப்புணர்வு மட்டத்தை அடைந்தபிறகு, அங்கிருந்து கீழான மையங்களுக்கு இறங்கி வருவது, பரம்பொருளின் ஒரு வேறுபட்ட பரந்துபட்ட உருவளவை, உணர்வதற்கு ஆகும். இந்த 'மேலே போவதும்' மற்றும் 'கீழே இறங்குவதும்' முறையே ஞானம் மற்றும் விஞ்ஞானம் என்று ஸ்ரீராமகிருஷ்ணரால் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே இந்த வரைபடமானது ஸ்ரீராமகிருஷ்ணருடைய அடிப்படையான தத்துவம் சார்ந்த கருத்துக்களின் வரைபடம் சார்ந்த உருவமைப்பு ஆகும்.

இந்த வரைபடத்தின், கையெழுத்தின் படியெடுக்கப்பட்ட பிரதிகள், இந்தியாவிலும் மற்றும் வெளிநாடுகளிலுமுள்ள அவர்களுடைய சீடர்களுக்குள் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எப்படியிருப்பினும் பலரும் தனிப்பட்ட முறையில் அறிவுறுத்தப்படும் தன்மையின்றி, இந்த வரைபடத்தைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருந்தது என்று உணர்ந்து அதைக் குறித்த விவரமான விளக்கக் குறிப்பை அளிக்க வேண்டுமென்னும் அவர்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தினர். இந்தத் தேவையை நிறைவு செய்வதற்காக நாங்கள் அந்த வரைபடத்தின் சுருக்கமான விளக்கத்தை மூன்று பிரிவுகளில் கீழே கொடுத்துள்ளோம்.

ஆன்மீக வளர்ச்சியின் தொடக்க நிலைகள்

வேதாந்தத்தில் ஆன்மீக அனுபவத்தைப் பெறுவதற்கு இரண்டு முக்கியமான பெரு வழிகள் உள்ளன. ஞான மார்க்கம் மற்றும் பக்தி மார்க்கம் ஆகும். மற்ற வழிகளான கர்மம் மற்றும் யோகம் போன்றவை பொதுவாக, இந்த முக்கியமான பாதைகளுடன் உடன் இணைந்த பாதைகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஞான மார்கம் தனிப்பட்ட

முயற்சியைப் பெருமளவில் வலியுறுத்தி, இருமைத் தன்மை யற்ற அனுபவத்தைக் குறிக்கோளாக கொண்டுள்ளது. பக்தி மார்கம் தெய்வீக அருளை வற்புறுத்துகிறது மற்றும் இஷ்ட தெய்வத்தின் அனுபவத்தைக் குறிக்கோளாகக் கொண் டுள்ளது. எப்படியிருப்பினும் இந்தப் பாதைகள் முற்றிலும் வேறானவை அல்ல. அவை ஒன்றுடனொன்று இணைவாக செல்வது மட்டுமல்ல பல முனைகளில் குறுக்கிட்டுச் செல் கின்றன. அவைகளில் வளர்ச்சி அடைந்த நிலைகளில் இவ் விரண்டையும் வேறுபடுத்திக் காண்பது கஷ்டமானதாகும். ஒன்றைத் தவிர்த்துவிட்டு ஒரே ஒரு வழியைப் பின்பற்றுவது பெருமளவில் கஷ்டமானதாகும். தீங்கு விளைவிக்கக் கூடிய தாகவும் இருக்கலாம். மிகப்பெரும்பாலான சாதகர்களுக்கு இந்த இரு வழிகளும் இணைந்த பாதையைப் பின்பற்றுவது சிறந்ததாகும். அதாவது ஞான மார்கம் மற்றும் பக்தி மார்கம் என்னும் இருவழிகளும் இணைந்த வழியைப் பின்பற்ற வேண்டும். நிகழ்ச்சியை ஆராயுமிடத்தில் பெரும்பாலானோர் அதைத்தான் செய்கிறார்கள்.

கூட்டிணைப்பு வழியைப் பின்பற்றும் ஒரு சாதகன் பொதுவாக அவனுடைய ஆன்மீக வாழ்க்கையை இஷ்ட தெய்வத்தை வழிபடுவதுடன் தொடங்குகிறான். அவன் விஷ்ணு, சிவன், தேவி அல்லது கணேசர் போன்ற குறிப் பிட்ட கடவுளிடம் ஈர்க்கப்படுவதை உணர்கிறான். அல்லது தெய்வீக அவதாரங்களான ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீகௌ ராங்கர், ஸ்ரீராமகிருஷ்ணர் அல்லது ஏசுநாதர் போன்றவர் களிடம் ஈர்க்கப்படுவதை உணரக்கூடும். இவர்களில் ஒரு வரை அவன் அவனுடைய இஷ்ட தெய்வமாக ஏற்றுக்கொள் கிறான். பல சூழ்நிலைகளில், கடவுளுடைய, குறிப்பிடப் பட்ட தன்மையில் மேல் ஏற்படும் ஈர்ப்பானது, அகத் தூண்டு தலால் ஏற்படுவது ஆகும், சாதகனுக்கே அவன் ஏன் அவ் விதம் ஈர்க்கப்பட்டுள்ளான் என்பதை விவரிக்க இயலாமல் இருக்கக் கூடும். குழந்தைப்பருவத்தில், குடும்பத்தில் இருந்த மரபின் விளை பயனாக இருக்கக் கூடும். வைஷ்ணவக் குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகள், அவர்களைச் சார்ந்த

பெரியவர்களிடமிருந்து நாராயணன் அல்லது விஷ்ணுவை விரும்பவும், வழிபடவும் கற்றுக்கொள்கிறார்கள். படிப்படியாக இது அவர்களின் முழுமனத்தையும் கவர்ந்துவிடுகிறது. மற்றும் அதற்குப் பிறகு விஷ்ணுவின் மீதோ அல்லது அவருடைய ஒரு திரு அவதாரத்தின் மீதோ அவர்கள் பெருமளவில் ஒரு ஈர்ப்பை உணர்வதாகக் கண்டு கொள்கிறார்கள். இதைப் போன்றே மற்ற சமயமரபுகளைச் சார்ந்த குடும்பத்தில் பிறந்த குழந்தைகள், அவர்களுடைய மரபுகளுடன் தொடர்புடைய அவதார புருஷர்களை விரும்புவதற்குக் கற்றுக்கொள்கிறார்கள்.

இது ஒரு பொதுவான விதியாக இருப்பினும் விதிவிலக்குகளும் உள்ளன. இந்த நவீன காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தியாவிலும் மற்றும் மேற்கத்திய நாடுகளிலும் இலட்சக் கணக்கான மனிதர்களின் வாழ்க்கைகளில் போற்றப்படும் நடுநாயகனாகக் குடிகொண்டுள்ளார். இவ்வனைத்தும் கடவுளின் குறிப்பிட்ட தன்மையின்மீது ஒரு மனிதனுக்கு ஏற்படும் ஈர்ப்பானது அவனுடைய மனத்தின் வடிவமைப்பைச் சார்ந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. மற்றும் அது அதனுடைய முறையில் அவனுடைய ஸம்ஸ்காரங்களால் (அடங்கியுள்ள பதிவுகளால்) தீர்மானிக்கப்படுகிறது. சில சாதகர்கள் மட்டுமே, அவர்களாகவே இவ்வனைத்தையும் அறிந்துள்ளனர். பொதுவாக சாதகனுக்கு, அவன் ஒரு இஷ்ட தெய்வத்தின் பால் தடுக்க இயலாத தன்மையுடன் ஈர்க்கப்படுகிறான் என்பது தெரியும். மற்றும் அந்த தெய்வத்தை வழிபடுவதற்கு ஒரு கட்டாயமான தூண்டுதலையும் உணர்கிறான் (படம்1).

முதலில் அவனுடைய இஷ்ட தெய்வத்துடன் தொடர்புடைய தெய்வத்தன்மையின் இயல்பு குறித்து அவனுக்குப் பொதுவாக எத்தகைய தெளிவான கருத்தும் இருப்பது இல்லை. மற்றும் அந்த இஷ்ட தெய்வத்திற்கு எல்லா வகையான மனித இயல்புகளையும் கற்பித்துக் கொள்வதை அவனால் தவிர்க்க இயலாது. சிறந்த ஸூபி தத்துவஞானியான Ibn Arabi ஒருமுறை, மிகப் பெரும்பாலான மனிதர்கள்

ஒவ்வொரு மனிதனின் அகங்காரத்தின் கருத்துருவத்தைத்தான் கடவுள் என்று அழைக்கிறார்கள் என்று கூறியுள்ளார். ஒவ் வொரு மனிதனின் கடவுளைப் பற்றிய கருத்தானது அவ னுக்கு அவனைக் குறித்த கருத்தையே சார்ந்துள்ளது என்பது இந்தக் கருத்தின் ஆழமான கருத்து ஆகும். ஒரு மனிதன் வளரும் பொழுது, அவனைப்பற்றிய கருத்து மாறுபடுகிறது. அதற்கு ஏற்ப கடவுளைக் குறித்த அவுனுடைய கருத்தும் மாறுபடுகிறது. பேராசை மிகுந்த உணர்வுகள், வெறுப்பு மற்றும் பயம் போன்றவற்றால் தடுமாறுபவர்கள் கடவுளை இத்தகைய சில இயல்புகளை உடைய ஒருவராகக் கருது கின்றனர். செமிட்டிக் சமயங்களில் பொறாமையுடைய ஒரு கடவுளின் கருத்தானது இந்த முறையில்தான் அதன் தோற்றம் ஏற்பட்டது. காளி அல்லது துர்கையைக் குறித்த ஹிந்து சமயத்தின் கருத்தானது எப்படியிருப்பினும் வேறுபட்ட வகையைச் சேர்ந்தது ஆகும். அது இயலுலக அண்டத்தின் இயல் நிகழ்ச்சிகளின் ஒரு உண்மையான உணரும் திறனை அடிப்படையாகக் கொண்டது ஆகும். எப்படியும் ஒரு வருடைய இஷ்ட தெய்வத்தைக் குறித்த மூலக் கருத்து எது வாக இருப்பினும், ஆன்மீக வாழ்வில் ஒருவர் வளர்ச்சி அடை யும் பொழுது அது படிப்படியாக மாறுகிறது. சாதகனின் மனம் தூய்மை அடைவதால், அவன் வழிப்பட்டுக் கொண் டுள்ள தெய்வத்திற்கு அளவற்ற அன்பு, கரையற்ற அருள் மற்றும் தெய்வீகப் பேரொளி போன்ற உன்னதமான இயல்புகள் நிறைந்துள்ளன என்று கண்டு கொள்கிறான் (படம் 2). அவன் இப்பொழுது இந்த தெய்வீக இயல்புகளில் மேலும் மேலும் நிலைத்து இருக்க வேண்டும் என்று உணர் கிறான். அத்தகைய எண்ணம் அதன் முறையில் அவனுடைய சொந்த மனத்தில் சூட்சுமமான மாறுதல்களை ஏற்படுத்து கிறது. இது முதற்கொண்டு, அவனுடைய ரூபதியானமானது குணதியானத்துடன் சேர்ந்து கொள்கிறது. அவன் ரூபதியானத் தைவிட்டு விடவும் கூடும்.

இந்தக் கட்டத்தில் சாதகன் உலக இன்பங்களின் மீது உள்ள ஈர்ப்பை இழக்கத் தொடங்குகிறான். அவன் அவனைச்

சுற்றியுள்ள ஆண்கள் மற்றும் பெண்களிடமிருந்து அவனுடைய இஷ்ட தெய்வத்தை வேறுபடுத்திக் கொண்டிருக்கும் அந்தப் பிளவு அவனைத் திகைக்க வைக்கிறது. அவன் சாதாரணமான மனிதர்களிடம் உள்ள வரையறைகளையும், பலவீனங்களையும் காண்கிறான். அதே சமயத்தில் அவர்களுக்காக இரக்கப்படுகிறான். கடவுள்மீது அவனுக்கு உள்ள அன்பும், ஈர்ப்பும் எப்பொழுதும் இருப்பதைவிட அதிகமாகிறது. அவன் தன் இஷ்ட தெய்வத்தை மேலும் அதிகமாக பற்றிக் கொள்கிறான். தன் மனம், விருப்பம், பகுத்தறிவு, உணர்வு எல்லாவற்றையும் இஷ்ட தெய்வத்திடமே மையப் படுத்திக் கொள்கிறான். அவன் தீவிரமான விருப்பத்துடன் இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்திக்கிறான் மற்றும் தியானிக்கிறான். மற்றும் கடவுளால் நீண்ட காலத்திற்கு அசையாமல் இருக்க இயலாது.

தெய்வத்தின் மறுமொழியானது முதலில், இதய மையம் எழுச்சியடையும் உருவத்தில் வருகிறது. தெய்வீக ஒளிக் கிரணம் ஒன்று பக்தனின் இதயத்தைத் தொடுகிறது. 'இதயத் தாமரை' ஒருவிதத்தில் திடீரென்று மலர்கிறது. இதய மையம் திறப்பதுதான் முதன்முதலில் ஏற்படும் ஐயமற்ற, தெளிவான, நம்பவைக்கும் ஆன்மீக அனுபவம் ஆகும். இது, ஜீவாத்மா அதனுடைய நீண்ட காலத்திய ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழிப்புற்றுள்ள நிலையைக் குறிப்பிடுகிறது. சாதகன் அவனுடைய இஷ்ட தெய்வத்தை அவனுடைய இதய மையத்தில் உயிருடனும் ஒளிபொருந்தியதாகவும் மற்றும் அவனுடைய சொந்த ஆன்மாவானது அந்த தெய்வீகப் பேரொளியுடன் ஊடுருவியுள்ளதையும் காண்கிறான். அதன் பிறகு அவன் தன்னைக் கடவுளிடம் பங்கு பெற்றுள்ள ஒரு கூறாகக் காண்கிறான். இந்தக் கட்டத்தில்தான் சாதகன் தன்னுடைய சொந்த ஆன்மாவைக் கண்டுகொள்கிறான். அவன் கடவுள் தான் ஒளியின் மூலமாகத் திகழ்கிறார் மற்றும் இஷ்ட தெய்வமும் அவன் ஆன்மாவும் அந்த ஒளியின் பகுதிகள் என்று கண்டு கொள்கிறான். இங்கு 'ஒளி' என்றால் வெளியிலுள்ள ஒளியைப் போன்றது அல்ல. ஆனால் விழிப்பணர்வின்

ஒளியாகும். 'தோற்றப்படாத ஒளி' என்று கிறிஸ்தவ ஞானிகள் கூறும் ஒளியாகும் (படம் 3).

இருமையற்ற ஒருமையின் அனுபவம்

அடுத்த கட்டத்தில் சாதகன், இஷ்ட தெய்வத்தின் வடிவ மானது வடிவமற்றதுடன் இரண்டறக் கலப்பதைக் கண்டு கொள்கிறான். இது மிக உயர்ந்த முறையைச் சார்ந்த உண்மை யான அனுபவம் மற்றும் வெறும் கற்பனையல்ல என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். இப்பொழுது எல்லா இடங் களைச் சுற்றியும் மற்றும் அகத்தினுள்ளும் பரந்துபட்ட பேரொளிப் பெருங்கடல் உள்ளது. அந்த தெய்வீக ஒளி வெள்ளத்தில், உடல் உணர்வு அழிந்துவிடுகிறது. 'நான்' என்னும் உணர்வு தொடர்ந்து உள்ளது. சாதகன் கடவுளைத் தூய்மையான விழிப்புணர்வின் பெருங்கடலைப் போன்றும், அவன் தன்னையே அதனுடைய மையமாகவும் கண்டு கொள்கிறான். இப்பொழுது எஞ்சி இருப்பவை ஆன்மாவும் மற்றும் கடவுளும்தான். ஒரு புள்ளி மற்றும் ஒரு வட்டத்தை போன்றதாகும். புள்ளி (அகங்காரம்) மையமாகும். அந்த மையத்தைச் சுற்றிலும் தெய்வம் ஒரு வரையற்ற ஒளியாகத் திகழ்கிறது. எப்படியிருப்பினும் இந்தப் புள்ளியானது, வட்டத்தை விட அதிக உண்மையானதாகத் தெரிகிறது. சுவாமி விவேகானந்தர் கடவுள் மற்றும் மனிதன் என்னும் சொற்களுக்கு அளித்துள்ள விளக்கத்தை இங்கு நினைவு படுத்திக் கொள்ளலாம்.

'மனிதன் ஓர் எல்லையற்ற வட்டம். அந்த வட்டத்திற்கு எல்லைக் கோடு எங்கும் இல்லை. ஆனால் மையம் ஓரிடத்தில் அமைந்துள்ளது. இறைவனும் ஒரு எல்லையற்ற வட்டம் அந்த வட்டத்திற்கும் எல்லைக்கோடு எங்கும் இல்லை. ஆனால் அதன் மையம் எங்கும் உள்ளது'[1] (படம் 4).

சாதகன் மேலும் முன்னேறி, உண்மையைக் குறித்த அவனுடைய கருத்தானது மாறுபட்டுக் கொண்டு வருவதைக்

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.248.*

காண்கிறான். அவனுடைய சொந்த தனித்தன்மை மேலும் மேலும் குறைந்த அளவில் உண்மையானதாகவும் பரம் பொருள் மேலும் மேலும் அதிக அளவில் உண்மையான தாகவும் ஆகிறது. அகங்கார உணர்வானது சீராகக் குறைந்து கொண்டு வருகிறது (படம் 5). விரைவில், தெய்வீகப் பேரொளியின் மேன்மையில் அகங்காரமானது ஒளிமங்கி வெளிறியதாகவும், முக்கியமற்றதாகவும் தெரிகிறது. பரம் பொருள் மட்டுமே ஒரே உண்மையானதாகத் தோன்றுகிறது (படம் 6). இறுதியில், காலை நேரத்தின் ஒளியில் நட்சத்திரம் காணப்படாததைப்போல, கடவுளிடம் அகங்கார உணர்வு, 'நான்' என்னும் உணர்வு முற்றிலும் தன்னை இழந்துவிடு கிறது. பகுக்க இயலாத வரையறையற்ற பரம்பொருள் மட்டும் எஞ்சியுள்ளது. இதுதான் அத்வைத நிலையாகும் (படம் 7). இதுதான் மிக உயர்ந்த ஆன்மீக அனுபவ நிலை யாகும் என்பது அத்வைத பள்ளியின் கருத்தாகும். இது மாண்டூக்ய காரிகையில் வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

'பானை போன்றவை அழியும்பொழுது (உடையும் பொழுது), அதனுள் அடைபட்டிருந்த ஆகாயவெளி போன் றவை ஆகாயத்துடன் கலப்பது போல, ஜீவர்கள் ஆன்மா வுடன் இணைகிறார்கள்.'

இந்த ஆன்மாவானது, சொற்களின் விவரணைக்கு அப் பாற்பட்ட நிலையில் உள்ளது. மனத்தின் எல்லாவகையான செயல்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் உள்ளது. ஆன்மாவானது முழுமையான அமைதியை உடையது. நிலைத்த பேரொளியாக விளங்குகிறது. செயல்பாடு, பயம் போன்றவற்றிலிருந்து விடுபட்டது மற்றும் ஜீவனின் ஒரு முகப்படுத்தப்பட்ட உணரும் ஆற்றலால் அடையத்தக்கது ஆகும்.

இந்த மிக உயர்ந்த பேரின்பமானது ஆன்மாவை உணர் வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அது அமைதி யாகும். முக்திக்குச் சமமானது ஆகும். விவரணைக்கு அப் பாற்பட்டது. பிறப்பற்றது. அது மேலும் கடவுள், பிரம்மன்

என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அறிவு தேடும் பொருளான பிறக்காத ஆன்மாவுடன் அது ஒன்றுபட்டது ஆகும்.[1]

சுவாமி விவேகானந்தர் இந்த அனுபவத்தை அவருடைய, 'ஸமாதி' என்னும் கவிதையில் விவரித்துள்ளார்.

'சூரியன் இல்லை, சந்திரன் இல்லை
சுடரும் ஒளியும் மறைந்தனவே!
பாருலகத்தின் சாயலை ஒத்துப்
பரந்த வெளியில் மிதந்ததுவே!

உள்முகமொடுங்கிய உள்ளத்தின் வெறுமையில்
ஓடும் அகிலம் மிதக்கிறதே!
துள்ளி எழும்பிடும், மிதக்கும், அமிழ்வுறும்
தொடரும் மறுபடி, 'நான்' அதனில்!

மெல்லவே மெல்லவே சாயைகள் பற்பல
மீண்டன மூலக் கருப்பையுளே!
'உள்ளேன் நான், 'உள்ளேன் நான்' எனும் நீரோட்டமே
ஓடியதேதொரு முடிவின்றி!

ஒழுகலும் நின்றிட, வெறுமையுள் வெறுமையாய்
உலகம் அடங்கிக் கலந்ததுவே!
மொழிவதும் இல்லை, நினைப்பதும் இல்லை
முற்றும் உணர்பவன் செயல்புரிவான்.'[2]

விஞ்ஞானம் —ஒருங்கிணைந்த அனுபவம்

அத்வைதம்தான் மிக உயர்ந்த ஆன்மீக அனுபவமா? இந்துமரபுகள் அதுதான் என்று உறுதியாக உள்ளன. இதைக் குறித்து சுவாமி விவேகானந்தர் வருமாறு கூறுகிறார்.

---

1. மாண்டுக்ய காரிகை 3.4,37,47, மொழிபெயர்ப்பு சுவாமி நிகிலானந்தர் (மைசூர் ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமம், 1974) பக்கம் 138, 194, 206.

2. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.55.

'நம்முள் ஓர் ஒருமை இருக்கிறதென்று உலக மதங்கள் எல்லாமே கூறுகின்றன. அந்த வகையில் பார்த்தால் அப்படிக் கடவுளுடன் ஒன்றியிருப்பதைவிட முன்னேற்றம் ஒன்றும் இருக்க இயலாது. வேறுபாடுகளுக்குள் இந்த ஒருமையைக் காண்பதுதான் அறிவு. நான் உங்களை ஆண்களும் பெண் களுமாகக் காண்கிறேன். இது வேறுபாடு. உங்கள் அனை வரையும் ஒன்று சேர்த்து மனிதர்கள் என்று கூறும்பொழுது அது விஞ்ஞான அறிவாகிறது. வேதியியலை எடுத்துக் கொள்ளுங்கள். தெரிந்த எல்லாப் பொருட்களையும் அவற் றின் மூலகங்களாகப் பிரிக்கவும், முடிந்தால் எந்த மூலகத் திலிருந்து மற்ற எல்லா மூலகங்களும் உருவாயினவோ, அந்த மூலகத்தைக் கண்டு பிடிக்கவும் வேதியியல் அறிஞர்கள் முயன்று கொண்டு உள்ளனர். அந்த ஒரே மூலகத்தைக் கண்டு பிடிக்கும் காலமும் வரலாம், அந்த மூலகமே மற்ற எல்லா மூலகங்களுக்கும் பிறப்பிடம். அதனை அடைந்த பிறகு அவர்கள் மேலே செல்ல இயலாது. வேதியியல் பூரண மாகிவிடும். மதவிஞ்ஞானத்திலும் அதுபோல்தான் நம்முள் அந்தப் பூரணமான ஒருமையைக் கண்டு பிடித்துவிட்டால் அதற்கு மேல் முன்னேற்றம் இல்லை.'[1]

இருமையற்ற ஒருமைதான் இவ்விதத்தில் அடையத்தக்க மிக உயர்ந்த நிலையாகும். 'இதுதான் இறுதியான அனு பவமா?' என்பது உண்மையான கேள்வியாகும். அத்வைத அனுபவம் ஆன்மீக உணர்வின் முழுப்பரப்பையும் பயன் படுத்தித் தீர்த்து விட்டதா? ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் உண்மையான அத்வைத அனுபவத்தை அடைந்தவர்களின் கருத்துப்படி அதுதான் இறுதியான அனுபவமாகும். அரை குறையான அகக் காட்சிகளோ, கண நேரத் தோற்றங்களோ அல்ல. சமாதி நிலையை அடைந்தபிறகு உடல் நிலைப்ப தில்லை. அவர்கள் புலன்களால் உணரத்தக்க உலகத்திற்கு மீண்டும் வருவதில்லை.[2] எப்படியிருப்பினும் மிகக் குறைந்த

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.324.
2. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.155.

அளவு எண்ணிக்கையில் சில முனிவர்கள் திரும்பி வருகிறார்கள். அத்வைதமானது மிகவும் உயர்ந்த அனுபவமாக இருப்பினும், அவர்களுக்கு அது இறுதியான அனுபவம் அல்ல.[1] நிமிர்வு நிலை அளவு செல்லும் அனுபவத்தில் அத்வைதமானது சந்தேகத்திற்கு இடமின்றி மிக உயர்ந்த நிலையானதாகும். ஆனால் கிளைநிலை அளவு அனுபவத்தில் பரம்பொருளின் மற்ற உருவளவைகள் இன்னும் கண்டு படிக்கப்படாமலே உள்ளன. விதிவிலக்காக உள்ள சில தகுதியுடைய ஞானமுடையவர்கள் ஈஸ்வர கோடிகள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் உண்மையின் இத்தகைய கிளைநிலை மட்டங்களை ஆராய்ந்து அறிவதைச் சவாலாக மேற்கொள்கின்றனர். மிக உயர்ந்த அத்வைத அனுபவத்தை அடைந்ததும், இந்த முனிவர்கள் மீண்டும் இந்த இயற்காட்சிகள் நிறைந்த உலகத்திற்குத் திரும்பி வரும் பொழுது அவர்கள் அதை முற்றிலும் ஒரு புதிய கண்ணோட்டத்தில் காண்கின்றனர். அவர்கள் மேலே செல்லும்பொழுது, இவ்வுலகமும் மற்றும் அதன் கணக்கற்ற உயிரினங்களும் படிப்படியாக அவைகளின் மெய்ம்மையை இழந்து, முற்றிலும் மறைந்து விடுகின்றன. ஆனால் அவர்கள் கீழே வரும் பொழுது, இவ்வனைத்தும் பரம்பொருளுடன் எல்லாப் பகுதிகளிலும் ஊடுருவி இருப்பதைக் காண்கின்றனர். பின்னணியைப் பிரம்மன் (கடவுள்) வடிவமைக்கிறார் என்னும் விழிப்புணர்வு அல்லது இந்த இயற்காட்சிகளின் அடிப்படையான மூலக் கூறானது இழக்கப்படவில்லை. ஆனால் அவற்றில் நிலைத்தன்மையுடன் ஊடுருவியுள்ள பரம் பொருளைக் குறித்த ஞானமானது வளம் பெற்றுள்ளது. உலகத்தின் இந்த ஒருமை சார்ந்த நிலைமாற்றத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் தொழில் நுட்பத் துறை சார்ந்த விஞ்ஞானம் என்னும் புதிய சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

ஒரு விஞ்ஞானியின் அனுபவத்தை, அதாவது விஞ்ஞானத்தைப் பெற்ற ஒருவரின் அனுபவத்தை ஸ்ரீராமகிருஷ்ணர் வருமாறு விவரிக்கிறார்.

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.155.

'ஞானி, ''இதுவல்ல'', ''இதுவல்ல'' என்று பகுத்தறிந்து உலகப் பொருட்கள் மீதுள்ள பற்றை விடுகிறான். அப்பொழுதுதான் அவனால் பிரம்மத்தை அறியமுடியும். படிகள் ஒவ்வொன்றாகக் கடந்து மாடியை அடைவது போன்றது இது. ஆனால் விஞ்ஞானி அவருடன் பேசுகிறான். மேலும் சிலவற்றைக் காண்கிறான். செங்கல், சுண்ணாம்பு, காரை போன்ற எந்தப் பொருட்களால் மாடிகட்டப் பட்டிருக்கிறதோ, அதே பொருட்களால்தான் படிகளும் கட்டப்பட்டிருப்பதை அவன் காண்கிறான். ''இதுவல்ல'', ''இதுவல்ல'' என்னும் வழியின் மூலம் யாரை பிரம்மம் என்று அறிந்தானோ, அவரே இந்த அண்டசராசரங்களாகவும், உயிர்களாகவும் ஆகியிருக்கிறார். நிர்க்குணமே சகுணமாகவும் இருப்பதை விஞ்ஞானி காண்கிறான்.

மாடியிலேயே ஒருவனால் நீண்டகாலம் தங்க இயலாது. கீழே வந்தே ஆக வேண்டும். சமாதி நிலையில் பிரம்மத்தைக் கண்டவர்களும் கீழே இறங்கி வருவார்கள். அதே பிரம்மம் தான் உலகமாகவும், உயிர்களாகவும் ஆகியிருப்பதைக் காண்கின்றனர்.

ச, ரி, க, ம, ப, த, நி —நியில் நீண்ட நேரம் நிற்க இயலாது. நான்-உணர்வு நீங்குவதில்லை. அவரே நான், அவரே உயிர்கள், உலகம் எல்லாம் என்று அப்பொழுது விஞ்ஞானி காண்கிறான். இதுவே விஞ்ஞானம்'

பிரம்மம் மேரு மலையைப்போல அசைவற்றது, செயலற்றது என்று விஞ்ஞானி காண்கிறான். இவ்வுலகம் இறைவனின் சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களால் உருவாகியுள்ளது. ஆனால் அவர் இவற்றுடன் சம்பந்தப்படாதவராக இருக்கிறார்.

யார் பிரம்மமாக இருக்கிறாரோ, அவரே, பகவானாகவும் இருப்பதை விஞ்ஞானி காண்கிறான். குணங்களைக் கடந்தவரான அவரே ஆறு ஐசுவரியங்கள் நிறைந்த பகவானாகவும் இருக்கிறார். உயிர்கள், உலகங்கள், மனம், புத்தி,

பக்தி, வைராக்கியம், ஞானம் இவை எல்லாம் பகவானின் ஐசுவரியங்கள்.''[1]

ஒரு விஞ்ஞானி, முழுமையாகப் பரம்பொருளை உணர்ந்தவன், அவன் எந்த கட்டங்களைக் கடந்து செல்கிறான்? அவனுடைய விழிப்புணர்வு, முழுமையான நிலையிலிருந்து கீழே வரும் பொழுது, முதலில் அவன் பிரம்மன் தன்னையே பல ஆன்மாக்களாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளது என்பதை அறிகிறான் (படம் 8). இன்னும் கீழே இறங்கி, புலன்களால் காணத்தக்க உலகத்தின் மட்டத்திற்கு வரும்பொழுது, இந்த முழுமையான பிரம்மாண்டமாக பிரம்மனே ஆகியிருக்கிறார் என்று காண்கிறான். எல்லா உயிரினங்களும், ஒப்புயர்வற்ற ஒரு பரம்பொருளின் வெளிப்பாடுகள் என்று காண்கிறான். மற்றும் ஒரு மனிதனுக்கும், மற்றொரு மனிதனுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் இந்த வெளிப்பாட்டின் இயல்பு மற்றும் தர அளவில் உள்ள வேறுபாடுகளாலேயே ஆகும். இந்தக் கட்டத்தில் அந்த முனிவர் தெய்வீக அவதாரத்தின் மறைபொருளை உணர்ந்து கொள்கிறார் (படம் 9).

சாதகன் அவனுடைய ஆன்மீக வளர்ச்சியின் ஆரம்ப கட்டங்களில் கடவுளின் வடிவங்களையும் கடந்து செல்ல வேண்டும். அதன்பிறகு அவன் இஷ்ட தெய்வம் அல்லது ஒரு அவதாரம் அல்லது ஒரு தெய்வம் என்பவை இயல்புகளற்ற முழுமுதற்பொருளின் நிழல் என்று அறிந்து கொள்கிறான். ஆனால் இப்பொழுது ஒரு விஞ்ஞானியின் முதிர்ந்த ஆன்மீக அனுபவத்தை அடைந்த பிறகு, இந்த முனிவர் இஷ்ட தெய்வத்தை ஒரு புதிய கண்ணோட்டத்தில் காண்கிறார். அதன் பிறகு அந்த முனிவர் ஸ்ரீராமகிருஷ்ணருடைய வடிவத்துடன் கூடிய கடவுள் எந்த அளவிற்கு உண்மையோ, வடிவமற்ற கடவுளும் அந்த அளவிற்கு உண்மையாவார் என்னும் கூற்றின் பொருளைப் புரிந்துகொள்ளத் தொடங்குகிறார்.

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.60,61.*

'இறைவனுக்குப் பல்வேறு வடிவங்கள் உள்ளன. ஈசுவர லீலை, தேவலீலை, மனித லீலை, உலக லீலை என்று அவருடைய லீலைகள் பல்வேறானவை. பிரேம பக்தியைப் போதிப்பதற்காக யுகம் தோறும் இறைவனே மனிதனாக அவதரிக்கிறார். சைதன்ய தேவரைப் பார். அவதார புருஷரால்தான் இறைவனின் பிரேம பக்தியை அனுபவிக்க இயலும். இறைவனின் மகிமை அளவற்றது. ஆனால் எனக்கு வேண்டுவதெல்லாம் பிரேமையும் பக்தியும்தான். எனக்கு வேண்டியது பசுவின்பால். பசுவின் மடியிலிருந்து பால் வருகிறது. அவதார புருஷர்கள் பசுவின் மடியைப் போன்றவர்கள்.'[1]

வேறுவிதமாகக் கூற வேண்டும் எனின் செடிகள், விலங்குகள், மனிதர்கள், தெய்வங்கள், பெண் தெய்வங்கள் மற்றும் அவதாரங்கள் என்னும் எல்லா உயிரினங்களும் பிரம்மனில் இன்றியமையாமல் ஒன்றுபட்டு இருப்பினும், மனிதனுக்கும் இஷ்ட தெய்வத்திற்குமிடையில் இன்னும் ஒரு அடிப்படையான வேறுபாடு உள்ளது. சுவாமி விவேகானந்தர் இந்தக் கருத்தை அவருடைய 'பகுத்தறிவும் மதமும்' என்னும் சொற்பொழிவில் தெளிவாக்கியுள்ளார்.

'நீங்களும் நானும் கடவுள் என்று வேதாந்தம் சொல்லும்பொழுது அது சகுண கடவுளைக் குறிப்பிடவில்லை. ஓர் உதாரணத்தைக் காண்போம். களி மண்ணிலிருந்து யானை ஒன்று செய்யப்படுகிறது. அதே களிமண்ணிலிருந்து ஒரு சுண்டெலியும் செய்யப்படுகிறது. களிமண் சுண்டெலியால் என்றாவது களிமண் யானையாக இயலுமா? இரண்டையும் தண்ணீரில் போடுங்கள். இரண்டும் களிமண் ஆகிவிடுகின்றன. களி மண் நிலையில் இரண்டும் ஒன்று. ஆனால் சுண்டெலி மற்றும் யானையின் நிலையில் என்றென்றும் அவை வேறுபட்டவை. எல்லையற்றதும் நிர்க்குணமானதுமான பரம்பொருள் உதாரணத்தில் வரும் களிமண்ணைப் போன்றது.'[2]

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.376
2. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 3.374

முழுமையான ஞானமடைந்த மனிதன், விஞ்ஞானியானவன் நாம் இங்கே இப்பொழுது விவரித்துள்ள எந்த மேம்பட்ட மட்டங்களிலும் இருக்கக் கூடும். அவன் சில சமயங்களில், 'தான்' என்னும் உணர்வை முற்றிலும் பரம் பொருளில் மூழ்குவதற்கு அனுமதிப்பான் (எதை ஸ்ரீராம கிருஷ்ணர் நித்யம் - சாசுவதமானது, மாறாத இயல்புள்ளது என்று கூறினாரோ) அல்லது அவன் இயற்காட்சிகள் உள்ள மட்டத்திற்கு (லீலை என்று அழைக்கப்படும்) இந்தப் புதிர் நிறைந்த பேரண்டத்தின் செயல்பாடுகளைக் கண்டு மகிழவும் மற்றும் முயற்சி செய்து கொண்டிருக்கும் சாதகர்களை வழி நடத்துவதற்கும் வரக்கூடும். ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள் ளதைப்போல:

'ஒரு மனிதன் நித்தியத்தை, முழுமுதற்பொருளை, லீலைகளின் தடயங்களைப் பின்பற்றியபடி அடைய வேண்டும். படிக்கட்டு வழியாக மாடியை அடைவதுபோல் லீலையைப் பிடித்துக் கொண்டே நித்தியத்தை அடைய வேண்டும். நித்தியத்தைக் கண்டபிறகு லீலைக்கு வந்து, பக்தியைக் கைக்கொண்டு பக்தனாக வாழலாம். இது நல்ல பக்குவமான வழியாகும்.'[1]

நித்தியத்திற்கும், லீலைகளுக்குமிடையில், முழுமை யான ஞானம் அடைந்த மனிதனுக்கு, கணக்கற்ற ஆன்மீக மட்டங்கள் திறக்கப்படுகின்றன. அவன், அவன் விரும்பும் ஏதாவது ஒரு மையத்திலிருந்து கொண்டு, பல வழிகளில் உண்மையை உணர்ந்த பேரின்பத்தைத் துய்த்துக் கொண் டிருப்பான் (படங்கள் 9,10,11).

அத்வைத நிலை ஏற்பட்ட பிறகு நிகழும் அனுபவ நிலைகளின் கருத்தானது புதியது அல்ல என்பது இங்குக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். கடந்த காலப் பதிவு களின் நொய்ம்மையும் மனத்தின் அழிவும் முழுமையான முக்தியை அடைவதற்காக அத்வைத அனுபவத்தைப் பின் தொடர வேண்டும் என்பது வித்யாரண்யரின் கருத்து

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.376

ஆகும்.[1] பதஞ்சலியின் கருத்தும் இவ்வாறுதான் உள்ளது. அவர் மிக உயர்ந்த வகையான ஆன்மீக ஞானத்திற்கு ஏழு நிலைகளை இனம் கண்டு கொள்கிறார். அவைகளில் முதல் நான்கு நிலைகள் கார்ய விமுக்தியை ஏற்படுத்துகின்றன. மற்றும் இறுதி மூன்று நிலைகள், சித்த விமுக்தியை ஏற்படுத்துகின்றன.[2] வித்யாரண்யர், பிரம்மஞானம் அடைந்தவர்களை நான்கு வகைகளாக வகைப்படுத்தி உள்ளார். பிரம்மவித், பிரம்மவித்வரா, ப்ரம்மவித்வரீயான் மற்றும் பிரம்மவித்வரிஷ்டா என்பவர்கள் ஆவார்கள். அவர்கள், பிரம்மனைப்பற்றிய அறிவில் எந்த அளவு நெருக்கம் கொண்டு உள்ளனர் என்பதற்கு ஏற்ப அவர் வகைப்படுத்தியுள்ளார்.[3]

சம்பிரதாயமாக விவரிக்கப்பட்டுள்ள ஜீவன் முக்தன் என்பதிலிருந்து, ஸ்ரீராமகிருஷ்ணர் விவரிக்கும் விஞ்ஞானி என்பதை எது வேறுபடுத்திக் காட்டுகிறது? விஞ்ஞானி என்பவர் முழுமையான ஞானம் அடைந்துள்ள ஒரு வகையைச் சார்ந்தவர் ஆவார். தனிச் சிறப்பு வாய்ந்த முறையில். கடவுளால் உலகத்திற்குப் போதனை செய்வதற்காகப் பொறுப்புரிமை அளிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அப்படியிருக்க, ஜீவன் முக்தர் என்பவர் சாதாரணமான மனிதர் ஆவார். அவருடைய கடந்த கால வினைகளின் வலிந்து செயற்படுத்தும் ஆற்றலின் பயனாக (ப்ராரப்த கர்மம்) அவர்களின் உடலுடன் வாழும் வாழ்க்கையானது தொடர்கிறது. விஞ்ஞானி மற்றும் ஜீவன் முக்தன் என்னும் இரண்டிற்கும் இடையிலுள்ள இந்த வேறுபாடானது, புத்த சமயத்திலுள்ள போதிசத்துவர் மற்றும் அர்ஹத் என்னும் இரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் போன்றது ஆகும். மிக உயர்ந்த ஆன்மஞான அனுபவத்திற்கு அதுவும் பல நிலைகள் உள்ளதை ஒப்புக்கொள்கிறது. அர்ஹத் என்பவர் ஞானமடைந்தவர் ஆவார். நிர்வாணத்தை அடைந்த

---

1. வித்யாரண்யர், ஜீவன்முக்தி விவேகம், அத்தியாயம் 1.

2. பதஞ்சலி யோக சூத்திரங்கள் 2.27. இந்தச் சூத்திரத்திற்கு வியாசர் மற்றும் ஸதாசிவ பிரம்மேந்திரரின் விளக்க உரைகளைக் காணவும்.

3. ஜீவன் முக்தி விவேகம், அத்தியாயம் 4.

பிறகு அவர் தன்னுடைய சொந்த முக்தியை அடைகிறார். போதி சத்துவர் ஞானமடைந்த ஆன்மா ஆவார். ஆனால் நிர்வாணம் அவர் அடையும் தூரத்திலிருப்பினும் துன்பப் பட்டுக் கொண்டிருக்கும் மனித குலத்திற்கு உதவுவதற்காக நிர்வாணத்திற்குத் தன் முதுகைக்காட்டி கொண்டுள்ளார். அவர் எல்லா மனிதர்களின் முக்தியையும் இலக்காகக் கொண்டுள்ளார்.

சுவாமி யதீஷ்வரானந்தர் அவர்கள் கூறுவதைப்போல இவ்வனைத்திலிருந்தும், ஆன்மீக அனுபவத்தின் பரப்பு எல்லைக்கோ அல்லது வகைகளுக்கோ உண்மையாக வரை யறை என்பது இல்லை என்று நாம் தீர்மானிக்கலாம். அதனால்தான் ஸ்ரீராமகிருஷ்ணர், 'வாழ்ந்து கொண்டிருக் கும் வரையிலும் நான் கற்றுக்கொண்டே இருக்கிறேன்' என்று கூறியுள்ளார்.

32

இந்த வாழ்விலேயே உண்மையான விடுதலையை அடைதல்

ஆன்ம விடுதலையின் நோக்கம்

ஒரு மனிதன் ஒரு சமய குருவைப் பார்க்கச் சென்றிருந்தான். சமய குருவின் மகளான இளஞ்சிறுமியை அம் மனிதன் கதவிற்கு அருகில் சந்தித்தான். அச்சிறுமி, 'தந்தை வீட்டில் இல்லை' என்று கூறினாள். பிறகு நம்பிக்கையுடன் கூடிய புன்சிரிப்புடன் அவள், 'ஆனால் முக்தியைக் குறித்து நீ எந்த கேள்வியைக் கேட்க விரும்பினாலும் அதைக் குறித்த எல்லாவற்றையும் என்னால் உனக்குக் கூற இயலும். முக்தியைக் குறித்த முழுமையான திட்டத்தையும் நான் அறிவேன்' என்று கூறினாள்.

முக்தி என்பது பேசுவதால் அடையக்கூடிய ஏதோ ஒன்று இல்லை. பல மனிதர்களும் நினைத்துக் கொண்டிருப்பதை விட அது மிகவும் ஆழமானது ஆகும். அது ஆன்மாவின் உண்மையான இயல்பு மற்றும் அதனுடைய இறுதியான அமைவு நோக்கத்துடன் தொடர்பு உடையது ஆகும். முக்தியைக் குறித்து ஒவ்வொரு சமயத்திற்கும் அதனுடைய சொந்தக் கருத்து உள்ளது. ஆனால், மரணத்திற்குப் பிறகு ஆன்மா அடையும் முழுமையான இன்பநிலை அது என்பதை எல்லாச் சமயங்களும் ஏற்றுக்கொள்கின்றன.[1] இந்தப் பேரின்ப நிலையை எப்படி அடைவது என்பதுதான் கேள்வியாகும். முழுமையான ஒழுக்க நெறிமுறைகளுடன் கூடிய வாழ்க்கையை மேற்கொண்டால் முக்தியை அடையலாம்

1. *சுவாமி யதீஷ்வரானந்தர்,* The Adventures in Religious Life, *அத்தியாயம் 4* —The Type of Salvation We Want *(சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 1976).*

என்பது யூதமதக் கருத்து ஆகும். கிறிஸ்தவ சமயம் இத்துடன், ஏசுநாதர் மட்டுமே ரக்ஷகர் என்பதில் நம்பிக்கை ஒருவருக்கு இருந்தால்தான் என்னும் துணை வாசகத்தையும் சேர்த்துக் கொண்டு உள்ளது. ஏசுநாதர் தன்னுடைய இறப்பினால் மனிதகுலத்தை, முதல் பாவத்தின் கறையிலிருந்து மீட்டார் என்ற நம்பிக்கையை கிறிஸ்தவ சமயம் கொண்டுள்ளது. இஸ்லாமிய சமயம் இந்தக் கருத்தை மறுக்கிறது. அதன்படி முக்தி என்பது முழுவதும் கடவுளின் தீர்ப்பு ஆகும். மற்றும் அதைப் பெறுவதற்கு முகம்மது நபிகள் நாயகம்தான் இறுதி அருட்போதகர் என்ற நம்பிக்கையானது முற்றிலும் அவசிய மானது ஆகும். ஹிந்து சமயம் பேரின்பப் பேறு என்றால் முக்தி அல்லது விடுதலையாகும் என்னும் கருத்தைக் கொண் டுள்ளது. மனித வாழ்க்கையில் முக்தியை நாடுவது ஒரு முக்கியமான காரணக்கூறு ஆகும்.

விடுதலை என்றால் என்ன? நாம் நான்கு விதமான விடுதலைகளைப்பற்றி செவிமடுக்கிறோம். வறுமை தவிர்ப்பு உரிமை, அச்சம் தவிர்ப்பு உரிமை, பேச்சுரிமை மற்றும் சமயக் கொள்கை உரிமை என்பவையாகும். ஆனால் இந்த உரிமைகள், விடுதலைகள் எல்லாம் வரையறைகளை உடையது ஆகும். அவை எந்த அளவிற்குத் தேவையானதாக இருப்பினும் இந்த விடுதலைகள் எல்லாம் வரையறைகளை உடையது ஆகும். அவை மனிதனின் சமூக வாழ்க்கையை மட்டுமே குறிப்பிடுகின்றன. எல்லா நவீன ஜனநாயக நாடு களும், அவைகளுடைய குடிமக்களுக்கு இந்த விடுதலை களை உறுதியளிக்கின்றன. ஆனால் ஆன்மாவின் சுதந்திரத் திற்கு அவை கட்டாயமாக உத்தரவாதம் அளிப்பது இல்லை. ஒரு மனிதனின் ஆன்மாவானது அவனுடைய உள்ளு ணர்வுகள், உணர்ச்சிகள் மற்றும் நம்பிக்கைகள் என்னும் விலங்குகளால் பிணைக்கப்பட்டுள்ளது. சமூகத்தில் அவன் விரும்பும் அத்தனை சுதந்திரங்களும் அவனுக்கு இருப் பினும், அவன் உள்ளுக்குள்ளே ஒரு சுதந்திரமான மனிதன் என்பதை உணரவில்லை எனின், அவன் தன்னை எப்படி ஒரு சுதந்திரமான மனிதன் என்ற கூறிக்கொள்ள இயலும்? நமக்கு

ஏதோ அதிகமாகத் தேவைப்படுகிறது. நாம் ஆன்மாக்கள் என்று உணரும் பொழுதுதான், உண்மையான சுதந்திரத்திற் கான இயல்பான ஆர்வம் நம்மிடம் எழும். அப்பொழுதுதான் நமக்கு உண்மையான ஆன்மீக வாழ்க்கை தொடங்கும். நம்மைக்குறித்த நம்முடைய மனப்பான்மை மாறுபடுவது தான் ஆன்மீக விழிப்புணர்வின் முதல் அடையாளம் ஆகும். அப்பொழுது நாம், நாம் உடல்கள் அல்ல, மனங்களும் அல்ல, ஆன்மாக்கள்— விழிப்புணர்வு மையங்கள் என்று கண்டு கொள்கிறோம்.

மேம்பட்ட ஆன்மீக விடுதலைக்கான இந்தக் கருத்தை எது எழச் செய்கிறது? அது பரம்பொருளுடன் ஆன்மா அத னுடைய தொடர்பைக் குறித்துக் கொண்டுள்ள விழிப்புணர்வு ஆகும். சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளதைப்போல ஒவ்வொரு மனிதனிடமும் விடுதலைக்கான பசி உள்ளது.[1] ஆனால் சாதாரணமான மனிதர்களிடம் இந்தத் தூண்டுத லானது உலகியலின் பக்கம் திரும்புகிறது. இன்பங்களை அனுபவிக்கும் உரிமை அல்லது ஆட்சி முறை உரிமை போன்றவையாகும். உண்மையான விடுதலை என்பது ஆன்மாவானது பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து, எல்லா பிணைப்புக்களிலிருந்தும் விடுபடுவது ஆகும். மிக வும் அபூர்வமாக வெகு சிலரிடம்தான், கடவுளுக்காக ஆன்மா தீவிரமாக ஏங்குவது எழுகிறது.

தொடக்கத்திலிருந்தே இருந்து வரும் அறியாமையின் காரணத்தினால், தனிப்பட்ட ஆன்மாவானது பிரம்மனிட மிருந்து அல்லது உலகளாவிய விழிப்புணர்விலிருந்து அல்லது கடவுளிடமிருந்து பிரிந்துள்ளது. ஆன்மாவாக இருப்பது, கடவுளிடமிருந்து பிரிந்து உயிராக இருப்பது எப் பொழுதும் வேதனை, பிணைப்பு மற்றும் வரையறைகளைக் குறிக்கிறது. பிரம்மனை அடைவதினால் ஆன்மா என்னும் நிலையை விடுவித்துக் கொள்ளவில்லை எனின், அல்லது கடவுளை உணராமல் இருந்தால் ஒருவராலும் விடுதலை

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 4.407-410

அடைய இயலாது. ஆன்மா என்னும் நிலையில் இருப்பது, பிணைப்பையும் மனித அன்பு என்று கூறப்படும் பலவகைப் பட்ட அன்பும் மற்றும் வெறுப்பும் துன்பத்தையும் வேதனை யையுமே குறிக்கிறது. ஜீவன் தன்னுயை உண்மையான நிலைத்த தன்மையை அறியும் வரையிலும், பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் என்னும் சுழற்சிக்கு ஆட்பட்டே ஆக வேண்டும். நமக்குச் சுதந்திரமும், அச்சமற்ற தன்மையும் வேண்டும். நாம் உடல் மற்றும் மனத்தின் வரையறைகளை உடைத்துக் கொண்டு சுதந்திரமடைய விரும்புகிறோம். நாம் பல வகையான ஆசைகள், உணர்ச்சிகள், விலங்குத்தன்மை மிகுந்த விருப்பங்கள் போன்றவற்றைப் பற்றிக் கொண்டிருக் கும் வரையிலும் நம்மால் இதை அடையவே இயலாது. நம்முடைய உடல் மற்றும் மனம் மற்றும் மற்றவர்களின் உடல், மனத்தைப் பற்றிக் கொண்டிருப்பதைத் துறக்காத வரையிலும் ஆன்ம ஞானத்தை அடையவியலாது.

உண்மையான விடுதலை

விடுதலை என்பதன் உண்மையான கருத்தை நாம் கொண்டிருப்பது நமக்கு அவசியமானதாகும். நமக்குப் புலன் களுக்காக விடுதலை வேண்டுமா? நமக்கு உரிமை வேண் டுமா? அல்லது புலன்களிடமிருந்து விடுதலை வேண்டுமா? விடுதலை என்பதன் சரியான கருத்து என்ன? மனத்தை இன்பங்களின் பின்னால் ஓட அனுமதிப்பதற்கான விடு தலையா? புலன்களிடம் அடிமைகளாக இருப்பதா? இவ் விதத்தில் நம்முடைய சவக்குழிகளை நாமே தோண்டிக் கொள்ளும் விடுதலையா? அல்லது எல்லா ஆசைகளையும் கட்டுப்படுத்தி எல்லா ஆசைகளையும் வென்று மேம்பட்டு, புலன்களிடமிருந்தும் அவைகளின் விருப்பங்களிடமிருந்தும், விடுதலை அடைவதா? புலன்களுக்கான சுதந்திரமானது நம் முடைய கீழான விருப்பங்களை நிறைவு செய்து கொள்ளும் சுதந்திரமானது துன்பத்திற்கு வழிகாட்டுகிறது. உண்மையான விடுதலை என்பது எல்லாத் துன்பங்களிலிருந்தும் முற்றிலும் விடுதலை அடைவது ஆகும். இந்த நிலையை ஆன்மாவை

விருப்பங்கள், புலன்களிடமிருந்து பிரித்துக் கொண்டால் மட்டுமே அடைய இயலும். சுவாமி விவேகானந்தர், 'முழுச் சுதந்திரத்திலிருந்து பிறக்கின்ற அருட் செல்வம்தான் அழியாத பேரமைதிதான் மதத்தைப்பற்றிய மிக உயர்ந்த கருத்தாகும். இதுதான் வேதாந்தத்தின் கடவுள் கருத்துக்கள் அனைத்திற்கும் அடிப்படையாக உள்ளது. அவர் முற்றிலும் சுந்திரமானவர், எதனாலும் கட்டுப்படாதவர், எந்த மாற்றமும் இல்லாதவர், இயற்கையுடன் எந்தத் தொடர்பும் அற்றவர், எதுவும் அவரிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த இயலாது. இத்தகைய சுதந்திரம்தான் உங்களிடமும் என்னிடமும் இருக்கிறது. இதுவே உண்மையான சுதந்திரம்'[1] என்று கூறியுள்ளார்.

ஆன்மீகக் கருத்துப் போக்கில் சுதந்திரம் என்பது, கட்டுப்பட்ட நிலையிலிருக்கிறோம் என்னும் விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதுடன் ஒரு மேம்பட்ட விழிப்புணர்வு நிலையின் எழுச்சியையும் குறிக்கிறது. அதில் ஆன்மாவானது முழு முதற் பொருளாக, இந்தப் பேரண்டத்தின் முழு முதற் பொருளாக தன் உண்மையான இயல்பை அறிந்து கொள்கிறது. உலகிலுள்ள எல்லா சமயங்களும் இந்த ஆன்மீக சுதந்திரத்தைக் குறித்து ஏதோ ஒரு கருத்தைக் கொண்டுள்ளன. அதை அவை வாழ்க்கையின் உச்சகுறிக்கோள் நலமாகக் கருதுகின்றன. நம் மனத்திலிருக்கும் ஆன்மீக சுதந்திர முறையைக் குறித்து, சமய இலக்கியத்தில் பலவகையான சொற்கள் உள்ளன. கிறிஸ்தவ சமயமானது முக்தி மற்றும் பரிகாரம் என்று பேசுகிறது. புத்தசமயமானது விருப்பங்கள் மற்றும் தன்னலம் சார்ந்த செயல்பாடுகளை ஒழிப்பது, நிர்வாணம் என்று பேசுகிறது. ஹிந்து சமயம், ஆன்மா அதனுடைய எல்லாத் துன்பங்களிலிருந்தும், பிணைப்புக்களிலிருந்தும் முற்றிலும், இறுதியாக விடுபடும் விடுதலையை முக்தி, மோக்ஷம், அபவர்கம் அல்லது நிச்ரேயஸ போன்ற சொற்களைப் பயன்படுத்தி விவரித்து ஆன்மீக வாழ்க்கையின் மிகவும் உயர்ந்த இலட்சியமாகக் குறிப்பிடுவதைப்பற்றிப்

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! *4.411.*

பேசுகிறது. அவ்விதமிருக்க, சாங்கிய தத்துவத்தில் முக்தி என்றால் ஆன்மாவை மூன்று விதமான துன்பங்களிலிருந்தும் விடுவிப்பது என்று அறிகிறோம். வேதாந்தமானது முக்தி என்றால் முழுமையான பேரின்பத்தின் அனுபவம் என்றும் கூறுகிறது.

மூன்று வகையான துன்பங்களாவன: உடல் சார்ந்த பிணிகளால் ஏற்படும் துன்பங்கள், ஆசைப்படுதல், மடமை மற்றும் பேராசை போன்றவற்றால் ஏற்படுவது ஆகும். மற்ற உயிரினங்களால் அதாவது காட்டு விலங்குகள், தீயவர்களால் ஏற்படுத்தப்படும் துன்பங்கள் மற்றும் நம் கட்டுப்பாட்டில் இல்லாத வெப்பம், குளிர், காற்று, மழை, பூகம்பம் போன்ற வலிய ஆற்றல் மிகுந்தவற்றால் ஏற்படுத்தப்படும் துன்பங்கள் ஆகும். வடமொழிச் சொல்லான துக்கம் என்பது சாதாரண மான உடல் சார்ந்த மற்றும் மனம் சார்ந்த துக்கத்தை விட வேறு ஏதோ அதிகமான ஒன்றையும் குறிப்பிடுகிறது. அது வரையறை மற்றும் பிணைப்பையும் சுட்டுகிறது. வரையறை யற்ற விழிப்புணர்வு நிலையும், பேரின்பமும்தான் ஆன்மா வின் உண்மையான இயல்பு என்பது வேதாந்தத்தின் கருத்து ஆகும். ஆனால் அதனுடைய அனுபவநிலையில் அது வரை யறைக்கு உட்பட்டது. உடல், புலன்கள் மற்றும் மனத்தால் பிணைக்கப்பட்டிருப்பது ஆகும். ஆன்மாவை எல்லா பிணைப்புக்களிலிருந்தும் விடுவிப்பதுதான் குறிக்கோளாக விளங்குகிறது. அதாவது இயலுலக அண்டத்தின் ஆற்றல்கள் அல்லது குணங்களின் ஆட்டத்தைக் கடந்து செல்வது ஆகும்.

மனிதனின் ஆன்மா கட்டுப்பட்டு இருக்கும் வரையிலும் அவனால் உண்மையான இன்பத்தை அடையவியலாது. இன்பமானது வெளிப்புறப் பொருட்களில் இல்லை. அது மனிதனுடைய ஆன்மாவின் உள்ளார்ந்த உண்மையான இயல்பு ஆகும். அறியாமையானது ஆன்மாவின் உண்மை யான இயல்பை மறைக்கிறது. இவ்விதத்தில் அறியாமை தானே மிகப் பெரிய பிணைப்பாக விளங்குகிறது. அறியாமை அகங்காரத்தைத் தோற்றுவிக்கிறது. அகங்காரமானது பிணைப்பு, வெறுப்பு மற்றும் பயத்தைத் தோற்றுவிக்கிறது.

இவ்வனைத்தும் ஆன்மாவைப் பிணைத்து, அதனுடைய சொந்த உள்ளார்ந்த இயல்பான வரையறையற்ற இன்பத்தை அனுபவிப்பதிலிருந்து தடுக்கிறது. எப்படியிருப்பினும் மனிதனுடைய பரிணாம வளர்ச்சியில், அவனுடைய ஆன்மா வானது அதனுடைய நீண்ட காலத்திய அயர்ந்த உறக்க நிலை யிலிருந்து விழிப்படையும் ஒரு நிலை வருகிறது. மற்றும் அது அதனுடைய இந்த பிணைப்பு நிலையைக் குறித்தும் விழிப்பு அடைகிறது. இந்த நிலை ஏற்பட்டதும், அவன் அவனுடைய உண்மையான நன்மையை உணர்ந்து முற்றிலும் விடுதலை அடைய விரும்புகிறான்.

நம்மில் பலரும், எப்படியிருப்பினும் இந்த உண்மை யான விடுதலையை அடைய விரும்புவதில்லை. நாம் நம் முடைய தற்பொழுதுள்ள வரையறைகளுடன் கூடிய வாழ்வு மற்றும் அதன் நிலைகளிலேயே நிறைவு அடைந்து விடு கிறோம். ஒரு ஆலைத் தொழிலாளரைக் குறித்த கதை ஒன்று உள்ளது. அவன் மூளை திரும்பிய (Insane) காரணத்தினால் அரசு மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. அவன் அங்கு சேர்ந்து சில வாரங்கள் ஆனபிறகு அவனுடன் பணியாற்றும் ஒருவன் அவனைச் சந்தித்தான்.

'வாழ்க்கை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?'

'நான் நன்றாக இருக்கிறேன்.'

'கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நீ சீக்கிர மாக வேலை செய்யத் திரும்பி விடுவாய் என்று நான் நினைக்கிறேன்?'

'நீ என்ன கருதுகிறாய்? இந்த அழகிய பெரிய வீடு மற்றும் தோட்டத்தை விட்டுவிட்டு ஒரு ஆலையில் திரும்பச் சென்று வேலை செய்வதா? நீ நிச்சயமாக நான் பைத்தியம் என்று எண்ணுகிறாய்'

ஆன்மீக வாழ்க்கையைக் குறித்துப் பலரும் இதே வகை யில்தான் உணர்கின்றனர். அவர்கள் அவர்களுடைய அற்ப மான தூய்மையற்ற தன்னலம் மிகுந்த வாழ்க்கைகளிலேயே

நிறைவடைந்து விடுகின்றனர். மிக உயர்ந்த ஆன்மீக விடுதலைக்காக முயற்சி செய்வது வெறும் பைத்தியக்காரத்தனம் என்று நினைக்கின்றனர்

குணங்களின் பிணைப்பு

நமக்குள்ளும், நமக்கு வெளியிலும் மூன்று இயலுலக அண்ட ஆற்றல்கள் செயலாற்றிக் கொண்டுள்ளன. தமஸ் அல்லது இருள், சோம்பல்தன்மை மற்றும் மருட்சி போன்ற ஊக்கமற்ற சுறுசுறுப்பற்ற ஆற்றல்கள், ரஜஸ் அல்லது காமம், பேராசை மற்றும் உலகியலைச் சார்ந்த செறிவான இறுக்கமுடைய உணர்ச்சிகளுடன் கூடிய ஆற்றல்கள், சத்துவம் அல்லது அன்பு மற்றும் ஞானத்துடன் கூடிய இசைவுடைமையுடன் கூடிய இன்பத்திற்கு வழிகாட்டும் ஆற்றல்கள் ஆகும். சத்துவ குணம் மிகவும் பயனளிக்க வல்லதாகும். ஏனெனில் மனத்தைத் தூய்மைப் படுத்தி ஒளிரச் செய்கிறது. தமோ குணத்தின் இருள் நிறைந்த இயல்புகளால் கீழே அமுக்கப் படுகிறவர்கள் பரிணாம வளர்ச்சியின் அளவுகோலில் கீழ் நோக்கிச் செல்வார்கள். ரஜோ குணத்துடன் செயல்படுபவர்கள் அவர்கள் வாழ்நாள் முழுவதும், மேலேயும் செல்லாமல், கீழேயும் போகாமல் போராடிக் கொண்டு இருப்பார்கள். பெரும்பாலான மனிதர்கள் அப்படித்தான் செய்கிறார்கள். ஆனால், இசைவுடைமையுடன் கூடிய சமநிலையான சத்துவத்தில் நிலைத்து இருப்பவர்கள், முழுமுதற் கடவுளை உணரும் வரையில் மேலும் மேலும் உயர்ந்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் சத்துவகுணமும், ஆன்மாவை மேலோட்டமான ஞானம் மற்றும் மேன்மையான இன்பங்களில் பிணைப்பைத் தோற்றுவித்து ஆன்மாவைப் பிணைக்கிறது. தூய்மைப்பாடு, பக்தி, பரிவு, தன்னடக்கம் போன்ற சாத்துவிக இசைவுடைமையுடைய வெளிப்பாடுகள், ஒருவருக்கு உண்மையை உணர்வதில் உறுதுணை புரிகின்றன. ஆனால் சத்துவகுணம் மட்டுமே இறுதியான உண்மையாகாது. ஆன்ம ஞானம் அடைவதுதான் இலட்சியமாகும். ஆன்மாவானது

எல்லா பிணைப்புக்களிலிருந்தும், அறியாமையிலிருந்தும் முற்றிலும் விடுபட்டுள்ள நிலையாகும். வெறும் நேர்மையும் மற்றும் தன்னடக்கமும் மட்டுமே மிக உயர்ந்த ஆன்மீக அர்த்தத்தில் சுதந்திரம் அடைய உதவுவதற்குப் போதுமானது ஆகாது.

ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த நீதிக்கதையைக் கூறுவது வழக்கம். பணக்காரன் ஒருவன் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். திடீரென்று மூன்று திருடர்கள் அவனைச் சுற்றி வளைத்து, அவனிடம் இருந்தவற்றையெல்லாம் பறித்துக் கொண்டனர். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்ட பிறகு அவர்களுள் ஒருவன், இவனை விட்டு வைப்பதால் என்ன லாபம்? கொன்று விடுவோம் என்று கூற, இரண்டாவது திருடன், 'இவனை வெட்டுவதால் எந்தப் பயனும் இல்லை. நன்றாகக் கட்டி இங்கேயே விட்டுவிடலாம்' என்றான். அப்படியே அந்தத் திருடர்கள் அவனை நன்றாகக் கட்டிப்போட்டு விட்டு அந்த இடத்திலிருந்து சென்றனர். சிறிது நேரத்திற்குப் பிறகு மூன்றாவது திருடன் தனியாக அந்த இடத்திற்குத் திரும்பி வந்தான். பணக்காரனின் அருகில் சென்று கட்டை அவிழ்த்துவிட்டான். பிறகு பணக்காரனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, அவனுக்கு வழி காட்டியவாறே சென்றான். நெடுஞ்சாலை வந்ததும், அந்தத் திருடன் அதைப் பணக்காரனுக்குக் காட்டி, 'நீ இந்த வழியாகச் சென்றால் சுலபமாக உன் வீட்டை அடைந்துவிடலாம்' என்றான். பணக்காரன் உடனே அன்புடன், 'அது எப்படி ஐயா, நீங்களும் என்னுடன் வாருங்கள். எங்கள் வீட்டிற்கு வந்தால் நாங்கள் மிகவும் ஆனந்தமடைவோம்' என்றான். ஆனால் அதற்கு அந்தத் திருடன், 'நான் ஒரு திருடன். நான் அங்கே வரமுடியாது. வந்தால் போலீசார் பிடித்துக் கொள்வார்கள்' என்று கூறி, வழியைக் காட்டிவிட்டுச் சென்றுவிட்டான்.[1]

அதைப் போன்றே தமோ குணம் நம்மை அழிக்கும் இயல்புடையதாக விளங்குகிறது. ரஜோ குணம் உலகத்தின்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.294-295.*

பிணைப்புக்களுடன் நம்மைப் பிணைக்கிறது. மற்றும் சத்துவ குணமானது நம்மிடம் முக்தியை அடையும் தூண்டுதலைத் தோற்றுவிக்கிறது. சத்துவ குணமானது தூய்மைப்பாடு, பரிவு போன்ற நல்லியல்புகளைத் தோற்றுவிக்கிறது. அது பரம் பொருளை அடைவதற்கான வழியைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் ஆன்மாவானது தொடர்ந்து மேல் நோக்கிச் சென்று கொண்டிருக்க வேண்டும். இந்த மூன்று குணங்களையும் ஒரு வீட்டின் மேல்தளத்திற்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டு களுக்கு ஒப்பிடலாம். அந்த மேல்தளம் பிரம்மனைக் குறிக் கிறது. சத்துவகுணமானது மேல்தளத்திற்கு அழைத்துச் செல்லும் படிக்கட்டுகளின் இறுதியான படியாகும். ஒருவர் உள்ளுணர்வின் இயல்பான ஆற்றலின் பயனாக மூன்று குணங்களைக் கடக்கும் வரை, அவரால் பிரம்ம ஞானத்தை அடையவியலாது. அது ஒருவருக்குத் தனித்தவகையைச் சேர்ந்த உள்நோக்கை அளிக்கிறது. ஆன்மீக வாழ்வானது ஒழுக்க நெறிமுறைகளுடன் கூடிய வாழ்க்கையை விட வேறுபட்ட ஒன்றாகும். ஒழுக்க நெறிமுறைப் பண்பாடானது, சந்தேகத்திற்கு இடமில்லாமல் கட்டாயமாகத் தேவைதான். ஆனால் ஆன்மீக விழிப்பு உணர்வும் இருக்க வேண்டும். இது பரம் பொருளைக் குறித்து இடைவிடாமல் தியானமும், ஜபமும் செய்வதால் ஏற்படுகிறது. அது இறுதியாக சாதகனை, அவனிடத்திலும் மற்றவர்களிடமும், பரம்பொருளின் இருப்பை உணரச் செய்கிறது. இயலுலக அண்ட ஆற்றல் களின் வலையில் சிக்கிக் கொண்டிருக்கும் வரையிலும் ஆன்மாவால் ஆன்மீக விடுதலையை அடைய வியலாது. அது நம் அனைவரையும் தாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் உடல் உருக் கொண்டுள்ள ஆன்மா, இறுதியாக குணங்களை மீறி உயரும் பொழுது அது பிறப்பு, இறப்பு, முதுமை, வேதனை போன்றவற்றிலிருந்து விடுதலை அடைந்து அழிவற்ற அமரத்தன்மையைப் பெறுகிறது.

நம் மனித இயல்பு என்பது விளங்காத சிக்கலாக உள்ளது. மாயை அல்லது இயலுலக அண்டத்தின் அறி யாமையை ஒன்று சேர்ந்து உட்கொண்டிருக்கும் மூன்று

குணங்கள் என்று கூறப்படும் இயலுலக அண்டத்தின் ஆற்றல்கள் உடல் மற்றும் வெளியுலகத்துடன் சேர்ந்து கொள்ளும் பாங்குடைய அகங்காரம் மனம், அதனுடைய விருப்பங்களுடன் புலன்களை ஏற்படுத்துகின்றன. இந்த சிக்கலான இயல்பு மேலான தன்மையை மறைத்து விடுகிறது. அந்த மேலான தன்மைதான் நம்முடைய உண்மையான இயல்பு ஆகும். நாம் நம்மை நம்முடைய வெளிப்புறத் தன்மைகளிலிருந்தும் சூழ்நிலைகளின் வரையறைகளி லிருந்தும் விடுவித்துக் கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். எதிர்மறையாகக் கூறினால் மிக உயர்ந்த விடுதலையானது, அறியாமையிலிருந்து விடுபடுவது ஆகும். அதுதான் எல்லாக் கேடுகளுக்கும் மூலகாரணமாக உள்ளது. நேராகக் கூறினால், பிரம்மன் கடவுள், அல்லா அல்லது தாவோ என்று கூறப் படும் மிக உயர்ந்த உண்மையை உணர்வதாகும். ஞான மடைந்தவர்களுக்கு இதுதான் உண்மையான விடுதலை யாகும். விடுதலை அல்லது முக்தியானது ஞானமடைவ தால் அடையப்படுகிறது. அது ஒழுக்க நெறிசார்ந்த மற்றும் ஆன்மீக படிமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

ஒழுக்க நெறிமுறைச் சுதந்திரம்
—ஆன்மீக சுதந்திர திசையில் ஒரு காலடி

பகவத் கீதையின் 16-வது அத்தியாயம் இரு வகையான மனிதர்களைக் குறித்த விவாதத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ளது. அவர்கள் தெய்வீக இயல்பைப் பெற்றிருப்பவர்கள் (தெய்வ ஸம்பத்து) மற்றும் அசுர இயல்பைப் பெற்றிருப்பவர்களும் ஆவார்கள் (அஸுரஸம்பத்து). அச்சமின்மை, மனத்தூய்மை, ஞானம், தன்னடக்கம் தானம், யஜ்ஞம் செய்தல், நேர்மை, அகிம்ஸை, உண்மை, துறவு, சினமின்மை, துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்களிடம் கருணை காட்டுதல் மற்றும் மிருதுத்தன்மை உடையவர்களாக இருத்தல், பணிவு மற்றும் பொறுமை என்பவை தெய்வீக இயல்புகள் ஆகும். அஸுர இயல்புகள் அதிக அளவிற்கு எண்ணிக்கையில் விவரமாக இருப்பினும் சுருக்கமாக அவைகளைக் காணலாம்.

அகங்காரம், தற்பெருமை, இறுமாப்பு, கோபம் மற்றும் மடமையாகும். இந்த இருவகையான இயல்புகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடானது குணங்களின் ஆட்டமே ஆகும். தமோ குணமும், ரஜோ குணமும் அதிக அளவில் இருப்பவர்கள், அசுர இயல்புகளைப் பெற்றவர்களாக இருப் பார்கள். சத்துவகுணம் அதிக அளவில் இருப்பவர்கள் தெய்வ இயல்புகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள்.

நாம் நம்முடைய சொந்த வாழ்க்கைகளை உற்று ஆராய்ந்தால் இந்த இரு இயல்புகளும் நம்மிடம் இருப்பதை நம்மால் அறிந்து கொள்ள இயலும். சில நேரங்களில் நாம் தெய்வங்களைப் போன்றும், வேறு சில நேரங்களில் அசுரர் களைப் போன்றும் நடந்துகொள்கிறோம். சத்துவகுணத்தில் நம்மால் நிலைபெற்று இருக்க முடியாமல் இருப்பதுதான் இந்த ஊசலாட்டத்திற்கான காரணமாகும். ஒழுக்க நெறி களுடன் கூடிய வாழ்க்கையை மேற்கொள்வது அதன் மட்டத் திலேயே மட்டும் போதுமானது ஆகாது. சாதாரணமான ஒழுக்க நெறிமுறை என்பது ரஜோ குணம் கலந்ததாக இருப்ப தால், அது மனிதனை ஆன்மீக அனுபவம் பெறுவதிலிருந்து தடுத்து நிறுத்துகிறது. மனமானது ரஜோ குணத்திலிருந்து தூய்மையடைந்தால், சத்துவ குணம் மேலோங்குகிறது. மற்றும் மனமானது பரம்பொருளின் ஒளியைப் பிரதிபலிக் கிறது. ஆனால் முதலில், தமோ குணமானது நீக்கப்பட வேண்டும். புலனின்பங்களை அளவிற்கு அதிகமாகப் பற்றிக் கொள்ளுதல், சோம்பல்தன்மை, தற்பெருமை போன்றவை துறக்கப்பட வேண்டும். ஒரு மனிதனுக்கு உண்மையான உள் வலிமை இருந்தால்தான் இதைச் செய்ய இயலும். பல மனிதர்கள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளும் புறப் பகட்டானது பொதுவாகக் கோழைத்தனத்தின் முகமூடியாக உள்ளது. உண்மையான ஒழுக்க நெறிமுறைகளை உடைய ஒரு மனிதனுக்குப் பெரிய அளவில் உள்ளுரமும், வலிமை யும் உள்ளன. அவன் தமோ குணத்தை விஞ்சி மேம்பட்டு, ஒரு அமைதியான, அன்பார்ந்த இயல்பை அடைந்துள் ளான். ஆனால் இந்த நிலையும், ஒருவனுக்கு ஆன்மீக

அனுபவத்திற்கு வழிகாட்டவில்லை என்றால் அதனால் பயன் இல்லை. பொதுவாகக் கூறுமிடத்தில் உண்மையான ஒழுக்க நெறிமுறையானது ஒரு மனிதனை ஆன்மீகம் மற்றும் விடுதலைப் பாதையை நோக்கி அழைத்துச் செல்கிறது. அதனால்தான் கீதை, 'தெய்வ இயல்புகள் முக்திக்கும், அஸுர இயல்புகள் பந்தத்திற்கும் கொள்ளத் தக்கது ஆகும்' என்று கூறுகிறது.[1]

நாம் எந்த அளவிற்கு நல்ல வாழ்க்கையை வாழ்வதில் வெற்றி அடைகிறோமோ, அந்த அளவிற்கு நாம் ஒழுக்க நெறிமுறை சுதந்திரத்தை அடைகிறோம். ஆனால் முழுமையான, மொத்தமான விடுதலையை ஆன்மீக அனுபவத்தின் மூலம்தான் பெற இயலும். அது ஞானமடைந்த மனிதனை அறியாமையின் பிடியிலிருந்து விடுவிக்கிறது. அதுதான் எல்லா வகையான பிணைப்புகளுக்கும் மற்றும் துன்பங்களுக்கும் மூல காரணமாக உள்ளது.

'நிர்வாணம் அடைவதால் ஞானமடைந்த ஆன்மாவானது புனிதத்தன்மையில் நிலைபெற்று இருக்கிறது மற்றும் முக்தியை அடைகிறது' என்று புத்தர் கூறியுள்ளார். ஏசுநாதர் 'உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள், உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்' என்று கூறியுள்ளார்.[2] ஞானமடைந்த பிறகு மட்டுமே வரும் ஆன்மீக விடுதலையைப் பற்றி அவர் கூறியுள்ளார். சைனாவில் தாவோ நெறியைச் சார்ந்தவர்களின் ஒரு பழைய கூற்று உள்ளது.

'படைப்பு தொடங்கிய பொழுது பரம்பொருள் உலகின் தாயாகியது. ஒரு மனிதனுக்கு அவனுடைய தாயைத் தெரிந்து இருந்தால், அவன் பதிலுக்கு அவன்தான் அவளுடைய மகன் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பான். அவன் தன்னுடைய மகன் ஸ்தானத்தை அடையாளம் கண்டுகொள்ளும் பொழுது அவன் அதன் விளைவாக அவன் தாயுடன் இருப்பான்.

1. *பகவத் கீதை, 16.5*
2. *பைபிள்—செயின்ட் ஜான், 8:32.*

மற்றும் தன்னுடைய வாழ்க்கையின் முடிவுவரை அவன் ஆபத்திலிருந்து விடுபட்டு இருப்பான்.'

சொர்க்க இன்பங்களைப் பெறுவது வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல

தொடக்க காலத்திலிருந்தே ஹிந்து தர்மத்தில் சொர்க்கம் மற்றும் மற்ற உலகங்களின் இன்பங்களைக் குறித்தும் கூறப் பட்டுள்ளன. ஆனால் அவை இறுதியான இலட்சியமாக ஒரு பொழுதும் கருதப்படுவதில்லை. உச்ச உயர் குறிக்கோளாகக் கொள்ளப்படவில்லை. மீமாம்சகர்கள் என்று கூறப்படும் சிறிய குழுவைச் சேர்ந்த தத்துவஞானிகள் சடங்குமுறை, புற ஆசாரங்களால் (யாகங்கள் போன்றவை) ஒருவர் சொர்க்கத் திற்குச் செல்ல இயலும் என்று நம்பினர். எனவே அவர்கள் வேதத்தில் கூறப்பட்டுள்ள சடங்கு முறைகளைச் செய் வதற்குப் பெரிய முக்கியத்துவத்தை அளித்தனர். ஆனால் உப நிஷதங்களிலும், பகவத்கீதையிலும், சங்கராச்சாரியரின் நூல்களிலும், பாகவதத்திலும் மற்றும் மற்ற திருமறை நூல்களிலும் சொர்க்க இன்பங்களை விரும்புவது வெளிப் படையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. வைஷ்ணவ ஆச்சாரியர் களும் ஆன்மீகத்தில் நாட்டம் உடைய சாதகனுக்கு சொர்க்கம் குறிக்கோளாக இருத்தல் கூடாது. விஷ்ணுவின் ஒப்புயர்வற்ற இருப்பிடமே (தத் விஷ்ணோ பரமம் பதம்). எங்கும் வியாபித் துள்ள கடவுள் அதற்குப் பதிலாக சாதகனின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

ஆன்மாக்கள் உண்மையானவை. கணக்கற்ற ஆன்மாக்கள் உள்ளன. அதைப் போன்றே இன்பங்களை அளிக்க வல்ல உலகங்களும் கணக்கற்றவை ஆகும் என்பது மீமாம்சகர்களின் கருத்து ஆகும். ஆன்மாக்கள், மரணத்திற்குப் பிறகு, இவ் வுலகத்தில் அவர்கள் செய்த செயல்களின் விளைவுகளுக்குத் தகுந்தாற்போல இந்த உலகங்களுக்குச் செல்கின்றன. மீமாம் சகர்களுக்கு எல்லாம் வல்ல ஒரு கடவுள் அல்லது ஈஸ்வரன் என்பதில் நம்பிக்கை இல்லை. மற்றும் அவர்களுடைய இலட்சியம் மோக்ஷமோ அல்லது விடுதலையோ அல்ல.

சொர்க்கம் தான் அவர்களின் இலட்சியம் ஆகும். சமயச் சடங்குகள் சார்ந்த யாகங்களைச் செய்வதின்மூலம் அதை அடையவியலும் என்பது அவர்களின் நம்பிக்கையாகும். அவர்கள், சந்தேகத்திற்கு இடமின்றி, உபநிஷதங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ள பிரம்மன் அல்லது ஆத்மன், சத்சித் ஆனந்தமாக உள்ள முழுமுதற் பொருளை நம்புவதில்லை. அந்தப் பரம் பொருளின் மேலீடான வெளிப்பாடுகளாக அகம்சார்ந்த, புறம் சார்ந்த அனைத்தும் உள்ளன.

சமயம் சார்ந்த சடங்குகளையும் புற ஆசாரங்களையும் செய்யும் வழிகளைப் பின்பற்றுவதால் ஒருவர் சில தகுதி களை அடையவியலும் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருவர் உயர்ந்த வானுலகங்களைச் சென்று அடையலாம். ஆனால் அதன்பிறகு மீண்டும் ஒருவர் கீழே வர வேண்டும். ஏனெனில் இந்த இடங்களும் நிலையற்றவை ஆகும். நிலைத்த சொர்க்கம் அல்லது நிலைத்த நரகம் என்று ஒருபொழுதும் இருக்கவியலாது. புலன்களால் உணரத்தக்க அனைத்தும் காலத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மற்றும் காலத் திலேயே தோன்றுகின்றன. காலத்திலேயே மறைகின்றன.

'இவ்வுலகத்தில் ஒரு மனிதன் சமயச் சடங்குகள் யாகங்கள் போன்றவற்றால் கடவுளரை வழிபட்டு சொர்க்கத்திற்குச் செல்கிறான். ஒரு கடவுளைப் போல அவன் அங்கு வானுலகிற்குரிய இன்பங்களை, அவனே முயன்று பெற்ற இன்பங்களைத் துய்க்கிறான். அவன் சொர்க்கத்தில் அவன் செய்த நல்ல செயல்களின் தகுதிகள் முடிவுறும் வரையிலும் இன்பங்களைத் துய்க்கிறான். அதன்பிறகு அவன் தகுதிகள் காலாவதியான பிறகு, அவனுடைய விருப்பத்திற்கு எதிராக, காலத்தால் இயக்கப்பட்டு கீழே வருகிறான்.'[1]

ஒருவர் அவருடைய ஆற்றல்களை, இவ்வுலக இன்பங் களின் பின்னால் ஓடிச் சென்றோ அல்லது அடுத்ததை நோக்கி ஓடியோ, வீணடித்தல் கூடாது. வேதாந்தத்தைப் பின்பற்றும் ஒரு சாதகனுக்கு உண்மையான உணர்ச்சிவசப்படாத

---

1. பாகவதம், 11.10.23,26 மற்றும் பகவத் கீதை, 8.16.

நிலையானது அவசியமான தகுதியாகக் கருதப்படுகிறது. கடவுளுடன் இரண்டறக் கலக்கும் அழிவற்ற பேரின்பத்தை உன்னால் அடைய இயலும் பொழுது, எல்லா பேரின்பங் களின் மூலத்தை உன்னால் அடைய இயலும்பொழுது, இங்குக் கிடைக்கக் கூடிய இன்பங்களுடன் அதிக அளவில் வேறுபடாமல் உள்ள சொர்க்கத்திலுள்ள அழியக் கூடிய இன்பங்களை நாடி ஏன் செல்ல வேண்டும்? பலவிதமான இன்பங்கள் உள்ளன. நீ எந்த வகையைத் தேர்ந்து எடுக்கிறாய் என்பதுதான் கேள்வியாகும். ஒருவர் இதைக் குறித்து மிகவும் தெளிவுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும். தன் விருப்ப இன்பநுகர்வில் மகிழ்ச்சியுள்ளது. சொர்க்கம் சார்ந்த இன்பங்களில் விடுதலையை நுகர்வது என்னும் பெரிய அளவிலான மகிழ்ச்சியுள்ளது. உனக்கு என்ன வேண்டும் என்பதை ஒரேயடியாக முடிவு செய்ய வேண்டும். நீ ஆன்மீகப் பாதையைத் தேர்ந்து எடுத்தாய் எனின், கடவுளை உணர்வதை உன்னுடைய இலட்சியமாக முடிவு செய்தாய் எனின், இங்கும், இதற்குப் பிறகும் இன்பங்களைத் துய்க்க வேண்டும் என்னும் உன்னுடைய விருப்பத்தைத் துறக்க வேண்டும். அத்தகைய தெய்வீகமான துறவறப் பாதையைச் சூழ்ந்து முற்றுகையிட்டுக் கொண்டுள்ள சோதனைகளையும் இன்னல்களையும் எதிர்கொள்வதற்கு நீ ஆயத்தமாக இருக்க வேண்டும்.

ஒருவர் எல்லா செயல்களையும் விட்டுவிட வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. ஒருவருடைய செயலைத் தூண்டக் கூடிய இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்னும் விருப்பத்தை விட்டுவிடுவதுதான் மிகவும் முக்கிய மானதாகும். எல்லாச் செயல்களும் எத்தகைய விருப்பமும் இன்றிச் செய்யப்பட வேண்டும். இதுதான் தன்னலமற்ற செயலாகும். இந்த விதத்தில் செயலானது செய்யப்பட்டால், அது மனத்தைத் தூய்மை செய்கிறது. மற்றும் கடவுளின் ஒளியை ஏற்றுக் கொள்வதற்குத் தகுதியுடைதாகச் செய்கிறது. தன்னலத்துடன் கூடிய விருப்பமில்லாமல் உன்னால் செயல் களைச் செய்ய இயலவில்லை என்றால், உன்னுடைய

செயல்களின் பயன்களைக் கடவுளுக்கு அர்ப்பித்து விட வேண்டும். பகவத் கீதையில், 'யாரிடமிருந்து பொருட்கள் எல்லாம் உற்பத்தியாகின்றனவோ, யாரால் இவ்வனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அவனைத் தனக்குரிய கர்மத்தால் அர்ச்சித்து மனிதன் பக்குவ நிலையை அடைகிறான்' என்று கூறப்பட்டுள்ளது.[1]

உன் செயல்களால் கடவுளை வழிபட வேண்டும். அது கடவுளை வழிபடுவதற்குரிய சிறந்த முறைகளில் ஒன்றாகும். சமயச் சடங்குகளும், புற ஆசாரங்களும் கூட, கடவுளை மகிழ் விக்க வேண்டும் என்னும் ஒரே கருத்துடன் செய்யப்பட்டால் அவைகளும் பயனுடையவையாகும். பலருக்கும் தொடக்க நிலைகளில் அவை தேவையானதாக இருக்கக் கூடும். ஆனால் உயர்ந்த வகையைச் சார்ந்த வழிபாடுகளும் உள்ளன. ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகன் இத்தகைய உயர்ந்த வகையைச் சேர்ந்த வழிபாடுகளை மேற்கொண்டு, மேலும் மேலும் கடவுளை அணுக வேண்டும். உயர்ந்த வகையைச் சார்ந்த வழிபாடுகளை உன்னால் மேற்கொள்ள இயலும் எனின் தாழ்ந்த வகையைச் சார்ந்த வழிபாடுகளிலேயே எதற்காக நிறைவடைந்து இருக்க வேண்டும்?

எப்படியிருப்பினும் இங்குக் கவனிக்கத் தக்க ஒரு விஷயம் உள்ளது. மீமாம்சகருடைய உயர்ந்த பண்பட்ட சொர்க்கத்தில் அனுபவிக்கத்தக்க இன்பங்கள் இந்த உலகத் தில் சாதாரணமான மனிதர்கள் மேற்கொண்டுள்ள, பருப் பொருள் சார்ந்த, தாழ்ந்த விலங்குகள் சார்ந்த இன்பங்களைக் காட்டிலும் கண்டிப்பாக மேம்பட்டவை ஆகும். மேலே கூறப்பட்டிருப்பது (இன்பங்கள்) கடவுளை உணரும் இன்பத்தைவிடத் தாழ்ந்தது என்பதில் சந்தேகம் இல்லை. மற்றும் அவை திருமறைகளால் வன்மையாகக் கண்டிக்கவும் பட்டு இருக்கக் கூடும். ஆனால் அவை, நடத்தை கெட்ட நிலையிலுள்ள மற்றும் ஊழல்களில் மானம் கெட்டு இருப்பதை விட மிகச் சிறந்தனவாகும்.

---

1. பகவத் கீதை, 18.46.

மீமாம்சகர்களுக்கு உறுதியான தர்ம உணர்வு உள்ளது. உண்மையாக, இந்தியாவின் தத்துவத்தின் பல்வேறு பள்ளி களில் மீமாம்சகர்களே ஒழுக்கவியல் குறித்து மிகப் பெரிய அளவிற்கு விவாதித்து உள்ளனர். வேதங்களில் கூறப்பட் டுள்ள உரிமைக் கட்டளைகளைப் பின்பற்றுவதும் வேதங் களால் தடை செய்யப்பட்டுள்ள செயல்களைத் தவிர்ப்பதும் மனிதனின் கடமையாக உருவாக்கப்பட்டுள்ளது என்பது அவர்களுடைய கருத்து ஆகும். மீமாம்சை தத்துவத்தின் மிகச் சிறந்த நிபுணர்களில் ஒருவர் கர்மம் கர்மத்திற்காகவே என்னும் கோட்பாட்டை உறுதியாகப் பற்றிக் கொண்டு இருக்கிறார். மற்றும் வேதாந்தத்திலுள்ள உரிமைக் கட்டளை களுக்குக் கீழ்ப்பணிந்து நடக்க வேண்டும் என்னும் அவ ருடைய கருத்தானது, இம்மேனுவல் கான்ட் அவர்களின் (Immanuel Kant) ஆணித்தரமான கட்டளையைவிட அதிக அளவில் வேறுபட்ட ஒன்றாக இல்லை. ஹிந்து சமயத்தைச் சார்ந்த எல்லாப் பள்ளிகளிலும், தர்மம் எப்பொழுதும் ஆர்ந்தமைந்த அடிப்படை மெய்ம்மையாக உள்ளது. ஹிந்து சமயத்தில், தர்மத்தை மீறி நடப்பதின் பயம் வலியுறுத்தப்பட் டிருப்பதைப்போல, கடவுளைக் குறித்த பயமானது அந்த அளவிற்கு வற்புறுத்தப்படவில்லை. சமயத் தொடர்பான விதிமுறைச் சட்டத்தை மீறி நடப்பதற்கு ஒருவர் அச்சப்படு வார். ஒவ்வொருவரும் தர்மத்தின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். ஹிந்து சமயத்தில் ஒழுக்க நெறியற்றவனுக்கு இடமில்லை. ஆன்மீக முன்னேற்றம் அடைந்துள்ள மனிதன் தர்மத்தின் பருப் பொருள் சார்ந்த சில கூறுகளைக் கடந்து செல்லலாம். ஆனால் ஒருவரும் அடிப்படையான கோட்பாடு களை மீறுதல் கூடாது.

வேதாந்த இலட்சியமே மிகவுயர்ந்த விடுதலை

பிறப்பிற்கும், இறப்பிற்கும் அப்பாற்பட்ட ஒரு நிலையை அடைந்து, அங்கிருந்து கீழே இறங்காத விடுதலையின் ஒரு நிலையைத்தான் வேதாந்தமானது இலட்சிய நோக்கமாகக் கொண்டுள்ளது. நாம் நம்மை நம்முடைய உடல் மற்றும்

மனத்திலிருந்து வேறுபடுத்திக் கொண்டால்தான் விடுதலையைப் பெற இயலும். வேறு விதமாகக் கூற வேண்டும் எனின், தவறான இயல்புகளிலிருந்து வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். பருப்பொருள் சார்ந்த பொருட்களிலிருந்து முழுமையாகப் பிரித்துக் கொள்வதுதான் உண்மையான விடுதலையாகும். ஒருவருடைய ஆன்மாவைத் தவிர வேறு எதைச் சார்ந்து இருப்பினும் அது பிணைப்பு ஆகும் மற்றும் துன்பம் ஆகும். முழுமையை அடைந்துள்ளவன் தன்னுடைய ஆன்மாவை மட்டுமே சார்ந்து இருப்பான், மற்றவர்களைச் சார்ந்து இருப்பதில்லை. ஆன்மாவின் பேரின்பத்தை அனுபவிக்கிறான். அவன் ஆத்மாராமா என்று அழைக்கப்படுகிறான். தன்னுடைய ஆன்மாவிலேயே மட்டற்ற மகிழ்வுடன் இருப்பவன் ஆவான். அவன் புலன்களால் உணரத்தக்க மற்றும் மனத்தால் உணரத்தக்க சூட்சுமமான எல்லாவகையான இன்பங்களையும் கடந்திருக்கிறான். ஞானமடைந்துள்ள ஒரு மனிதனுக்கு, சொர்க்கத்தைச் சார்ந்த இன்பங்களும் துன்பங்கள்தான், ஏனெனில் அவன் அதைவிட மிக உயர்ந்த நிலையிலுள்ள இன்பத்தையும் விடுதலையையும் அனுபவித்து உள்ளான். அத்தகைய சொர்க்கம் சார்ந்த இன்பங்களை வழங்குவது உலகியல் இன்பங்களை விட மேலானவை ஆகும். இருப்பினும் அவை நிலைத்த இன்பங்கள் அல்ல. மற்றும் ஒருவருடைய வரையறைகளைக் கடந்து செல்வதற்கும் விடுவதில்லை. எனவேதான் உள்ளார்ந்த அக்கறையுடன் கூடிய மனங்களை உடைய சாதகர்கள், சொர்க்கத்தைச் சார்ந்த எந்த ஒரு விருப்பத்தையும் ஆன்மீக முன்னேற்றத்திற்குத் தடையாகக் கருத வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அழியத்தக்க விளைவுகளுக்கு அழைத்துச் செல்லக் கூடிய, சமயச் சடங்குகள் மற்றும் புற ஆசாரங்களுடன் கூடிய பாதையைப் பின்பற்றுவதைவிட ஒருவர் மேலும் மேலும் உணர்ச்சிவசப்படாத நிலையையும், ஞானத்தையும், பக்தியையும் பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மரணமானது உன் முகத்தை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருக்கிறது. மற்றும் நீ இன்பத்தை பற்றி நினைத்துக்

கொண்டிருக்கிறாய்! மாயையின் சக்தி அத்தகையதாகும். நாம் நம்முடைய விலை மதிக்கவியலாத நேரத்தை எல்லா வகையான முட்டாள்தனமான செயல்களிலும் செலவழித்துக் கொண்டே போகிறோம். புதிய வகைகளில் பிணைப்புக்களை ஏற்படுத்திக் கொள்கிறோம். ஒப்புயர்வற்ற விடுதலை என்னும் இலட்சியத்தை மறந்து விடுகிறோம். ஸ்ரீராமகிருஷ்ணருடைய நீதிக் கதையான, மீன் பிடிப்பவனின் வலையும் மற்றும் மீனும் அதனுடைய பொருளில் மிகவும் தெளிவாக உள்ளது. வலையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு வழி திறந்துள்ளது. இருப்பினும் ஒரு சில மீன்களே அதன் வழியாகத் தப்பிக்கின்றன. மற்ற மீன்கள், வலையைக் கௌவிக் கொண்டு, தலையைச் சேற்றில் புதைத்தபடி நிம்மதியாக இருக்கும். 'இனி ஒரு பயமும் இல்லை. நாம் சுகமாக இருக்கிறோம்' என்று நினைத்துக் கொள்ளும்.[1] நம் நிலையும் அதே போன்றதுதான். நாம் மிகவும் பாதுகாப்பான இடம் என்று நினைத்துக் கொண்டிருக்கும் இவ்வுலகமானது மரணம் நம்மை விஞ்சி மேம்படும் பொழுது நம் கண்களிலிருந்து மறைந்துவிடுகிறது. நமக்கு மரணத்தைக் குறித்து எத்தகைய பயமும் பற்றிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதனுடைய உண்மையைப் புறக்கணிக்கும் அளவிற்கு முட்டாளாகவும் இருத்தல் கூடாது. வாழ்க்கை என்பது உண்மையாயின், மரணம் என்பதும் உண்மையாகும்.

ஹிந்து சமயத்தில் முக்தி அடைவது என்றால் ஆன்மா தன்னுடைய எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுவது ஆகும். அல்லது விடுதலை அடைவது ஆகும். அது கலப்பற்ற அமைதி நிலையாகும். அத்தகைய முழுமையான விடுதலையடைந்த நிலை மற்றும் பேரின்பநிலையில் வாழ்வது அல்லது அந்த நிலையை அடைவதற்கான தீவிரமான முயற்சியைத்தான் நாம் 'ஆன்மீக வாழ்வு' என்னும் சொல்லின் பொருளாகக் கருதுகிறோம். மரணத்திற்குப் பிறகு மட்டுமே அடையத்தக்க நிலை இதுவன்று. இந்த உலகத்தில் இங்கேயே

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.21

அதனை அடைய இயலும். இந்த நிலைபெற்ற விடுதலையை அடைந்த மனிதன் ஒரு ஜீவன்முக்தன் என்று அழைக்கப் படுகிறான்.

உண்மையான ஞானம் — மிக உயர்ந்த விடுதலைக்கான வழி

ஆன்மாவை, இந்தப் பேரின்பநிலையுடன் கூடிய விடுதலையை அடைவதிலிருந்து எது தடுக்கிறது என்பது அடுத்த கேள்வியாகும். இந்தியாவிலுள்ள எல்லாத் தத்துவப் பள்ளிகளும், மனிதனுடைய பிணைப்பிற்கு அறியாமையே காரணம் என்பதை ஒத்துக்கொள்கின்றன. ஆனால் இந்த அறியாமையின் இயல்பைக் குறித்துப் பலவகையான கருத்துக்கள் உள்ளன. மாயை எனப்படும் இயலுலக அண்டத் தின் அறியாமையானது தொடக்க காலத்திலிருந்தே உள்ளது. அது சூரியனை மேகம் மறைப்பது போல உண்மையை, பிரம்மனை மறைத்துவிடுகிறது. மேலும் இந்த மாயை யானது, இந்த உலகத்தை அதனுடைய கணக்கற்ற வகைகளை உடைய உயிரினங்களுடன் வெளிப்படுமாறு செய்கிறது. அதன் விளைவாக, மனிதனுக்கு அவன் உண்மையான இயல்பு பிரம்மம் என்பது தெரிவதில்லை. எல்லாத் துன்பங் களுக்கும், எல்லாக் கேடுகளுக்கும், எல்லா இருமைகளுக் கும், நம்முடைய வாழ்க்கையின் மையமாக உள்ள உண்மை யைக் குறித்து அறியாமல் உள்ள உண்மைதான் காரணமாக உள்ளது என்பது அத்வைத வேதாந்தத்தின் கருத்து ஆகும். வேதாந்தம் மீண்டும் ஞானத்தை அடைவதன்மூலமே இந்த தொடக்கக் காலத்திலிருந்தே உள்ள அறியாமையை அழிக்க வியலும் என்று கூறுகிறது. உண்மையான ஞானத்தை அடை வதே பிரம்மனுடன் நம்முடைய ஒத்ததன்மையை உணரும் ஞானத்தை அது சச்சிதானந்தமாக விளங்கும் மெய்ப்பொருள் என்பதை உணர்வதுதான் வேதாந்தத்தில் ஆன்மீக வாழ்க்கை என்று அறியப்படுகிறது. வேதாந்தத்தின் த்வைதம் சார்ந்த பள்ளிகளிலும் ஆன்மா, ஜீவாத்மாவானது, அதனுடைய உண்மையான இயல்பைப் பொறுத்தவரையில் கடவுள்

அல்லது பரமாத்மனுக்கு ஒப்பாகக் கருதப்படுகிறது. த்வைத வேதாந்திகளும், ஆன்மா உடலுருவைப்பெற்று இருக்கும் நிலையில், ஆன்மாவிற்கு அதனுடைய உண்மையான ஞான மானது சுருக்கப்பட்ட நிலையிலுள்ளது. இது அதனுடைய உண்மையான இயல்பு, மற்றும் கடவுளின் உண்மையான இயல்பைக் குறித்த அறியாமையைத் தோற்றுவிக்கிறது. ஆன்மீக நெறிமுறைகளின் மூலமாகவும், கடவுளின் அரு ளாலும் ஆன்மாவானது விரிவடைந்து உண்மையான ஞானத்தை மேலும் மேலும் பெறுகிறது.

எனவே, வேதாந்தத்தைச் சார்ந்த எல்லாப் பள்ளிகளுமே, உண்மையான ஞானமே ஆன்மாவின் உள்ளார்ந்த இயல்பாகும் என்பதை நம்புகின்றனர். மாயையால் அது மறைக்கப்பட் டுள்ளது என்பது அத்வைதத்தின் கருத்தாகும். அது சுருங்கி யிருக்கிறது. அதுதான் வேறுபாடு ஆகும் என்பது த்வைதத்தின் கருத்தாகும். இந்த உண்மையான ஞானத்தை அடைந்து வெளிப்படுத்துவதுதான் ஆன்மீக வாழ்க்கையின் முயற்சி யாகும். அதனால்தான் சுவாமி விவேகானந்தர் சமயத்தை, 'மனிதனிடம் ஏற்கனவே உள்ள தெய்வீகத் தன்மையின் வெளிப்பாடு ஆகும்' என்று வரையறுத்து உள்ளார். அவ ருடைய ஒப்புமை கூறவியலாத சொற்களால் அவர் சமயம் என்றால் என்ன என்று சுருக்கமாகக் கூறியுள்ளார்.

'ஒவ்வோர் ஆன்மாவும் உள்ளடங்கிய தெய்வீகம் நிறைந்தது. புற, மற்றும் அக இயற்கையை அடக்குவதன் மூலம் இந்த அக தெய்வீகத்தை வெளிப்படுத்துவதே நோக்க மாகும். செயல் அல்லது வழிபாடு அல்லது பிராணனைக் கட்டுப்படுத்துதல் அல்லது தத்துவ ஆராய்ச்சி இவற்றுள் ஒன்றாலோ, பலவற்றாலோ, எல்லாவற்றாலுமோ இதனைச் செய்து சுதந்திரனாக இரு! இதுவே மதத்தின் முழு உண்மை. கொள்கைகளும், கோட்பாடுகளும் சடங்குகளும், சாஸ்திரங் களும் கோயில்களும், உருவங்களும் இரண்டாம் நிலை யிலுள்ள விளக்கங்களே ஆகும்.'[1]

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 2.156,157.

இந்த உள்ளார்ந்த ஆற்றல் வாய்ந்த தெய்வத்தன்மையை உறுதிபடுத்துவதுதான் மனித வாழ்க்கையின் பணி ஆகும்.

உண்மையான ஞானம் அல்லது நேரடியான அனுபவம் என்பது ஹிந்து சமயத்தில் இவ்விதத்தில், ஆன்மீக வாழ்க்கையின் பரீட்சை மற்றும் அடிப்படைத் தத்துவம் ஆகும். உள்ளுணர்வு சார்ந்த இந்த ஞானத்தை தன் முயற்சியின்மூலமோ அல்லது கடவுளின் அருளாலோ அல்லது இரண்டின் மூலமாகவோ பெறவியலும். ஆனால் நேரடியான அனுபவம் இல்லாமல் அல்லது ஒருவருடைய உண்மையான இயல்பை உணராமலோ, ஒருவரால் முழுமையான விடுதலையும் பேரின்பத்தையும் அடைய வியலாது. அவைதான் வாழ்க்கையின் இலட்சியமாகும். ஹிந்து சமயத்தின் எல்லா ஆன்மீக நெறிமுறைகளும் (யோகங்கள் என்று அழைக்கப்படுகின்றன) இந்த நேரடியான அனுபவத்தை அடைவதற்கான வழிமுறைகள் ஆகும்.

அகங்காரம் —சிறைச்சாலையின் சிற்பி

உண்மையான ஞானமானது நம்முடைய தவறான தன்மைகளை, அதனுடைய எல்லா தவறான தொடர்புகளுடன் தகர்த்து எறிகிறது. நம்முடைய விழிப்புணர்வு மையத்தை உடல் மற்றும் மனத்திலிருந்து ஆன்மாவிற்கு மாற்றுகிறது. பருப்பொருளிலிருந்து ஆன்மாவிற்கு மாற்றுகிறது. நம்முடைய தற்போதைய தன்மையானது, நம் உடல், புலன்கள், மனம் மற்றும் அகங்காரம் எல்லாம் ஒருங்கிணைந்தது ஆகும். ஆன்மீக வாழ்வு என்பது, இந்தச் சிக்கலை முறித்துவிட்டு, விழிப்புணர்வு மையத்தை இந்தச் சிக்கலிருந்து ஆன்மாவிற்கு மாற்றுவது ஆகும். அதைவிட அதிகமாக வேறு எதுவும் இல்லை. ஆனால் இந்தச் சிக்கலை தொடர்ந்த ஆன்மீகப் பயிற்சியால் மட்டுமே தகர்க்க இயலும். இது மிகவும் முக்கியமானது ஆகும். இந்தத் தகர்த்தல் என்பது வியப்பை ஏற்படுத்தக் கூடியது அல்ல, புரியாத மறைபொருளும் அல்ல. ஆனால் வரையறுக்கப்பட்ட, திட்டவட்டமான தெளிவான துல்லியமான ஏதோ ஆகும். புதிர்நிறைந்தது

அல்ல. ஒருபொழுதும் இரகசியம் புதிர் என்ற பேச்சிற்கே இடம் இருக்கக் கூடாது. யோகம் என்பது புரியாத மறை பொருள் அல்ல. புதிரானதும் அல்ல. அது மிகவும் எளிமை யான ஒன்று ஆகும். நாம் தவறாக நம்மை இந்த மாய சேர்மானத்துடன் அடையாளம் கண்டு கொண்டிருந்தோம். ஆன்மீக வாழ்வு என்றால், நம் உடல், புலன்கள், மனம் மற்றும் அகங்காரம் என்னும் முழுமையான கலவையைத் துண்டித்த பிறகு நாம் உண்மையிலேயே இருப்பதுபோல எளிமையாக இருப்பதுதான் ஆகும். உண்மையிலேயே நாம் மிகவும் எளிதானவர்கள் சிக்கலானவர்களும் அல்ல. எத னுடனும் சேர்க்கப்பட்டவர்களும் அல்ல. ஆனால் ஒரே சீரான நீடித்த பயிற்சியில்லாமல் இதை உணரவியலாது.

அறியாமையானது இந்த அனைத்தையும் சேர்த்துப் பிணைக்கிறது. அறியாமை அகன்றதும் இந்தச் சிக்கல் சிறிது காலத்திற்குத் தொடரும். அதன் பிறகு நின்றுவிடும். நாம் படகைச் செலுத்துவதை நிறுத்தினாலும், கடந்த காலத்திய இயங்கு விசையானது (Momentum) படகைச் சிறிது தொலை விற்குக் கொண்டு செல்லும். நாம் நம்மை உண்மையற்ற சேர்மானமான உடல், மனம் போன்றவற்றுடன் அடையாளம் கண்டுகொள்வதை நிறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பது தான் இங்குத் தகுதிச்சான்று ஆகும். மிக உயர்ந்த ஞானோ தயம் புத்தருக்கு உதயமானபொழுது அவர்,

'வாழ்க்கையின் பல வீடுகள்
என்னை உட்கொண்டுள்ளன.
அவனை எப்பொழுதும் நாடி, புலன்களின்
சிறைகளுக்குத் தீர்வுகாண
எப்பொழுதும் அவனை நாடுகிறேன்
புலன்களின் இச்சிறைகள் துன்பச் சுமைகள்
என் இடையறாத முரண்பாடுகள் துன்பமீந்தன
ஆனால் இப்பொழுது
நீ, இவ்வுடலை உருவாக்கினை நீ!
எனக்கு உன்னைத் தெரியும், நீ ஒருபொழுதும் மீண்டும்

வேதனைச் சுவர்களைக்கட்ட மாட்டாய்
போலித் தோற்றங்களின் மோட்டுவிட்டத்தைக்
காட்டமாட்டாய்
களிமண்ணில் புதிய மிதவையை வைக்க மாட்டாய்
உன் வீடு தகர்ந்து விட்டது; மற்றும்
கூரையின் முகட்டு உத்தரம் பிளந்தது!
மருட்சி அதை வடிவமைத்தது!
விடுதலையை அடைய அங்கிருந்து
நான் பாதுகாவலுடன் கடந்தேன்.'

என்று அவர் வியந்து கூறினார்.

முதலில் நாம் உலோகக் கலவையை எல்லாவகையான பயனற்ற பொருட்களான தூள், அழுக்கு, மண் போன்றவற்றி லிருந்து பிரித்து, அதன்பிறகு அதை நெருப்பில் போட வேண்டும். இது முதலில் செய்யப்படும் பிரிவு ஆகும். அதன் பிறகு எல்லா மாசுகளும் எரிக்கப்பட வேண்டும். தூய்மை யான தங்கம் மட்டுமே எஞ்சுகிறது. இதுதான் தூய்மைப் படுத்துதல் ஆகும். அதைப்போன்று ஆன்மீக வாழ்வில் நாம் வேறுபடுத்திக் கண்டறிவதன்மூலம், அதாவது உடல், மனம் போன்றவற்றிலிருந்து வேறானது என்று வேறுபடுத்திக் கண்டறிந்து, அதன்பிறகு அதை மனத்தின் தூய்மைக்கேடு களிலிருந்து விடுவிக்க வேண்டும். இதை ஒழுங்கான நெறி முறைகளால் செய்ய வேண்டும். நாம் எந்த அளவிற்கு புலன் கட்டுப்பாட்டையும், முழுமையான பிரம்மச்சரியத்தையும், வேறுபடுத்திக் காண்பதையும் கடைப்பிடிக்கிறோமோ, அந்த அளவிற்கு உண்மையான, ஞானத்தை நாம் அடைகிறோம். அது இல்லாமல் ஞானத்தை அடையவியலாது. நாம் ஞானத் தைப் பெறும் அளவிற்கு, பிணைப்பிலிருந்தும், துன்பத்தி லிருந்தும் விடுபடுகிறோம். அதன்பிறகு இறுதியாக, உண்மை யான ஆன்மாவானது நம்மை ஒப்புயர்வற்ற பேரின்பம் மற்றும் அமைதியால் நிறைத்து ஒளிர்கிறது.

நம் அனைவரிடமும் உண்மைக்கும், பொய்க்கும் இடையில் ஒரு முடிச்சு உள்ளது. அதுதான் நம் அகங்காரம்

ஆகும். உண்மையான ஞானம் முடிச்சை எரிக்கிறது. அகங்காரம் அல்லது பொய்யானதன்மை மறைந்த பிறகு, நாம் உண்மையான ஆன்மாவை உணர்கிறோம். அதன் பிறகு நாம் அதுதான் நம்முடைய உண்மையான இயல்ப ஆகும், நாம் அனைவரும் பகுக்கவியலாத மாறுதலற்ற, எல்லாவற்றையும் ஊடுருவி உள்ள, எல்லா உயிரினங்களிலும் உள்ள ஒப்புயர்வற்ற ஆன்மா, ஒப்புயர்வற்ற பரம்பொருளின் ஒரு முழுமையின் பகுதிகள் அல்லது கூறுகள் என்பதை உணர்கிறோம்.

விடுதலையடைந்த பிறகு மற்றவர்களுக்கு உதவுவாய்

நம்மிடம் மையத்தை நோக்கிச் செல்லும் மற்றும் மையத்திலிருந்து வெளியே செல்லும் ஆற்றல்கள் உள்ளன. மையத்தை நோக்கிச் செல்லும் ஆற்றலைப் பயன்படுத்தி நாம் உள்ளே செல்ல வேண்டும் அதாவது நாம் நம்முடைய உண்மையான விழிப்புணர்வு மையத்தை அடைய வேண்டும். நம் உடல், மற்றும் மனத்தின் பல்வேறு வகையான செயல்பாடுகளும் நம்முடைய ஒரு குறிப்பிட்ட விழிப்புணர்வு மையத்துடன் தொடர்பு கொண்டுள்ளன. நாம் அதைக் கண்டுபிடிக்க வேண்டும். கடவுளும், ஆன்மாவும் சந்திக்கும் புள்ளி அது ஆகும். நம்மிடம் உள்ள மையத்தை நோக்கிச் செல்லும் ஆற்றலானது, இந்த மையத்தை நாம் அடையும்படி குவிமையப்படுத்தப்பட வேண்டும்.

மையத்திலிருந்து வெளியே செல்லும் ஆற்றலை நாம் பிணைப்புகளிலிருந்து வெளிவருவதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மாவானது அதனுடைய உண்மையான இயல்பில் எப்பொழுதும் சுதந்திரமாக உள்ளது. ஆன்மாவானது எப்பொழுதாவது அதன் உள்ளார்ந்த சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொழுது அது தன்னுடைய எல்லா வரையறைகளிலிருந்தும் வெளியே வந்து விடுகிறது. நாம் நம்முடைய உடல் மற்றும் மனத்தைப் பொறுத்த மட்டில்தான் கட்டுப்படுத்தப்பட்டுள்ளோம். நம் கட்டுப்பாட்டிற்கு அவற்றை வைப்பதற்கு நாம் கற்றுக்கொண்டுவிட்டால் நாம் விடுபடுகிறோம். தற்கட்டுப்பாட்டுடன் கூடிய

வாழ்க்கையானது சுதந்திரம் மற்றும் வலிமை நிறைந்த அற்புதமான வாழ்வாகும். உண்மையான மகிழ்ச்சி அங்கு தான் உள்ளது. மற்ற எல்லா வகையான இன்பங்களும் பயனற்ற பல கண்ணாடி மணிகளைப் போன்றதாகும். அது மீண்டும் மீண்டும் உடையும் இயல்புடையது ஆகும். ஆனால் தற்கட்டுப்பாட்டுடன் கூடிய இந்த மகிழ்ச்சியானது நிலைத்தது மற்றும் மாறுபாடு அற்றது ஆகும்.

ஆன்மீக வழியைப் பின்பற்றி, நம் மனத்தையும் இதயத் தையும் தூய்மைப்படுத்திக் கொண்டு, நாம் அனைவரும் இந்த வாழ்விலேயே ஆன்ம ஞானத்தையும், முக்தியையும் அடை வதற்கு முயற்சி செய்ய வேண்டும். சில குறைந்த அளவு குறிக்கோளில் நம்மை நிறுத்திக் கொள்வதற்குப் பதிலாக வேதாந்தம் நம்மை ஆன்மஞானமடைதல் மற்றும் விடுதலை என்னும் மிக உயர்ந்த குறிக்கோளை நம்முன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. இந்த வாழ்க்கை யில் நாம் ஒப்புயர்வற்ற பரம்பொருளை உணரத் தவறினால், நாம் மற்ற வாழ்வுகளைக் கடந்து சென்று, இந்த மிக உயர்ந்த ஞானத்தையும், விடுதலையையும் அடையும் வரை முயற்சி செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அதன்பிறகு நாம் நம்முடைய பணிவு சார்ந்த முறையில், மற்றவர்களுக்கும் ஞானமடையும் பாதையில் உதவவியலும்.

இந்த வாழ்க்கையிலேயே நாம் வாழ்ந்து கொண்டு இருக்கும் பொழுதே விடுதலையடைவதுதான் நம்முடைய நோக்கம் ஆகும். நாம் இறப்பதற்கு முன்பு விடுதலை அடை வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மனிதப் பிறவியானது ஒரு அரிய சிறப்பு உரிமையாகும். மனிதனால் மட்டுமே முழுமை மற்றும் விடுதலை அடைய முயற்சி செய்ய இயலும். அவ னுடைய உடனடியான உலகியல் தேவைகளைக் கடக்கவல்ல ஒரு உயர்ந்த நோக்கத்தை குறித்து அவனால் மட்டுமே விழிப் புணர்வுடன் இருக்க வியலும். எனவே இந்த நோக்கத்தை அடைவதற்காக ஒவ்வொரு மனிதனும் அவனுடைய வாழ்க்கையைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது அவனுடைய கடமையாகும். எல்லா மனிதர்களும்

இப்பொழுதே அடைவதில் வெற்றி பெறாமல் இருக்கக் கூடும். ஆனால் ஒவ்வொருவரும் அதற்காக முயற்சிக்க வேண்டும். நாம் இப்பொழுது பாதி அளவு விடுதலை அடைவோம். இல்லையெனின் முழுமையாகவே விடுதலை அடைவோம். மிகவும் தாழ்ந்த ஒரு இயல்தூண்டுதலின் பிடியிலிருந்து ஒருவன் விடுதலையடைந்தால், அவன், எல்லா இயல் தூண்டுதல்களுக்கும் அடிமைகளாக உள்ளவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் ஆவான்.

சுவாமி விவேகானந்தர்,

'உண்மையை எதிர்கொள் கவனமுடன்
ஒன்றாய் நீ இரு அதனோடு
கண்டிடும் கனவுகள் கலையட்டும்'[1]

என்று கூறியுள்ளார். பல மனிதர்களும் அவர்களின் வாழ்க்கைகளைப் பொய்த் தோற்றங்களின்மீது கட்டுவதற்கு முயற்சி செய்கின்றனர். அவர்கள் ஒரு பாசாங்கான உலகத்தில் வாழ்கின்றனர். அவர்கள், தாங்கள் மிகவும் புத்திசாலிகள் மற்றும் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று கற்பனை செய்து கொள்கிறார்கள். அவர்கள் அவர்களுக்கு அற்புதமான ஆன்மீக அனுபவங்கள் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்கின்றனர். ஆனால் அவர்களின் வாழ்க்கைகளில் திடீரென்று ஒரு துயரம் நிறைந்த நெருக்கடி நிலை ஏற்பட்டு விடும். அப்பொழுது அவர்கள் அந்த நெருக்கடியான நிலையை எதிர்கொண்டு விஞ்சி மேம்படுவதற்கான உள்ளார்ந்த ஆற்றல் அவர்களிடம் இல்லை என்பதைக் கண்டு வருந்துவார்கள். அதன் பிறகு அவர்களுடைய வாழ்க்கைகள் ஆட்டச் சீட்டுகளைப் போல தளர்ந்து வீழ்ந்துவிடும். உண்மை மட்டுமே நம்மைக் காப்பாற்றும், உண்மையை அடித்தளமாகக் கொண்டுள்ள வாழ்வு மட்டுமே நீண்ட நாளைக்கு தொடர்ந்து நீடிக்கும். நாம் நம்முடைய உண்மையான வாழ்வுடன் தொடங்க வேண்டும். நம் வாழ்க்கையின் சாதாரணமான அனுபவங்கள் புலனுணர்வு அனுபவங்கள். அவை துன்பத்தையும்

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.34.

வேதனையையும் ஏற்படுத்தினாலும் நம்முடைய வாழ்க்கைகளின் அடித்தளத்தை உருவாக்க வேண்டும். நம்முடைய பொய்யான நம்பிக்கைகளின்மீதும் கனவுகளின்மீதும், கற்பனைகளின் மீதும் அல்ல. நீ ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்டு இருக்கிறாய் என்று கற்பனை செய்து கொண்டால் போதாது. நீ வாழ்க்கையின் கரடுமுரடான உண்மைகளை எதிர் கொண்டு, அவற்றை ஒவ்வொன்றாக விஞ்சி மேம்பட வேண்டும். நீ செயற்கையான வாழ்வை வாழாமல் உண்மையான வாழ்வை வாழ்ந்தால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு ஆன்மீக வாழ்க்கையைப் பின்பற்றினால், நீ உண்மையான உயர்ந்த ஆன்மீக அனுபவத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவனாக ஆகிறாய். நீ ஒரு ஆன்மீக அனுபவத்திற்கு ஆயத்தமாக இருந்தால் அது உனக்குத் தானாகவே வரும். ஆன்மீக அனுபவம் என்பது நீ கற்பித்துக் கொள்வது அல்ல. அது வியப்பான அதிர்ச்சியை அளிக்கத்தக்க உண்மையான அனுபவமாகும்.

சாதாரணமான மனிதர்கள் காற்று திசைகாட்டியைப் போன்றவர்கள் ஆவார்கள். அவர்கள் அவர்களுடைய தூண்டுதல்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றனர். மற்றும் தொடர்ந்து எல்லா திசைகளுக்கும் மாறிக் கொண்டுள்ளனர். ஆன்மீக வாழ்வை வாழும் சாதகனால் அவ்விதம் வாழ இயலாது. அவன் தூண்டுதல்கள் சார்ந்த வாழ்க்கையை விட்டு விட வேண்டும். அவனுக்கு வரையறுக்கப்பட்ட வாழ்க்கை முறை வேண்டும். அது இறுதியான முக்தியை நோக்கி ஒளிர்வதாக இருக்க வேண்டும். அவன் தன்னைக் கட்டுப்பாடுகள் உள்ளவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கட்டுப்பாடுகள் இயல்பாக வரும் வரையிலும் செய்து கொள்ள வேண்டும். அதன்பிறகுதான் அவனால் கட்டுப்பாடுகள், நெறிமுறைகளைக் கடந்த ஒரு நிலையை அடையவியலும். கட்டுப்பாட்டுடன் கூடிய நெறிமுறைகள் நமக்கு ஆன்மீக அனுபவத்தை அளிக்கின்றன. அந்த ஆன்மீக அனுபவங்கள் நமக்கு உயர்ந்த முக்தியை அளிக்கின்றன.

உண்மையான விடுதலையானது, நமக்காக மட்டுமின்றி மற்றவர்களுக்கு உதவுவதற்காகவும் தேவைப்படுகிறது.

தன்னை விடுவித்துக் கொண்ட ஒரு மனிதனால்தான் மற்றவர்களை விடுவிக்க இயலும். ஒரு அறிஞர் ஒரு அரசனுக்குத் திருமறை நூல்களை விளக்குவதற்கு முயற்சி செய்த ஸ்ரீராமகிருஷ்ணருடைய நீதிக் கதை உனக்குத் தெரிந்து இருக்கும். ஒவ்வொரு நாளும் பிரவசனம் முடிந்த பிறகு பண்டிதர் அரசனை நோக்கி, 'அரசரே, புரிகிறதா?' என்று கேட்டார். அதற்கு அரசன், 'நீ முதலில் புரிந்துகொள்' என்று தினமும் கூறுவார். அவர் அவரே உலகியல் பந்தங்களால் கட்டப்பட்டிருப்பதை உணர்ந்தார். அதனால் அவரால் அரசரைப் பந்தத்திலிருந்து விடுவிக்க இயலவில்லை என்பதை உணர்ந்தார். அவருக்கு இந்த ஞான உதயம் ஆனவுடன் அவர் உலகைத் துறந்து இல்லறத்தைத் துறந்து துறவறத்தை ஏற்றார். அரசரிடம் ஒருவனை அனுப்பி, 'அரசரே, இப்பொழுது நான் புரிந்து கொண்டேன்' என்ற செய்தியை மட்டும் கூறி அனுப்பினார்.[1] நாம் மற்றவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவிக்க வேண்டும் எனின், நாம் நாமே அதிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். உலகியல் மருட்சிகளால் அடக்கி ஆட்கொள்ளப்பட்டவனால் அவனுடன் இருக்கும் மனிதர்களுக்குத் தொண்டாற்ற இயலாது. எனவே மற்றவர்களுக்கு உதவுவதற்காக நாமே விடுதலை அடைய வேண்டும். நாம் எந்த அளவிற்கு விடுதலை அடைந்திருக்கிறோமோ, அந்த அளவிற்கு மட்டுமே மற்றவர்களை விடுதலைக்கான வழியில் நம்மால் வழிநடத்திச் செல்ல இயலும்.

ஆன்ம விடுதலை என்னும் கருத்தானது, பல மேற்கத்திய திறனாய்வாளர்கள் தவறாக எண்ணிக்கொண்டு இருப்பதைப் போல தன்னலம் மிகுந்த இலட்சியம் அல்ல. இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஞானமடைந்தவர் காலங்காலமாக மனிதர்களின் ஆன்மீக நலனிற்காகச் செயலாற்றி உள்ளனர். இந்த நவீன காலத்திலும், இந்தியா ஆன்மீகத்தின் மிகச் சிறந்த புனித இடமாகத் தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கிறது என்றால் அதற்கு எண்ணற்ற ஆன்மஞானம்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 3.34-35.*

அடைந்தவர்களின் முயற்சிகள்தான் காரணமாகும். ஆன்ம விடுதலையின் பயன்களைப் பெற்ற அவர்கள், மற்றவர்கள் அதைப் பெற வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். நம்முடன் இருக்கும் மற்றவர்களுடன் நாமும் விடுதலை அடைய வேண்டும் என்று கஷ்டப்பட்டு முயற்சி செய்வோம். இதுதான் மிக உயர்ந்த இலட்சியமாகும்.

'தீயமனம் கொண்டவர்கள் நல்லியல்புகளைப் பெற வேண்டும்
நல்லியல்புகளைப் பெற்றவர்கள் அமைதியைப் பெற வேண்டும்
அமைதியைப் பெற்றவர்கள் பிணைப்பிலிருந்து விடுபட வேண்டும்.
விடுபட்டவர்கள் மற்றவர்களை விடுபடச் செய்ய வேண்டும்.[1]

1. *துர்ஜன: ஸஜ்ஜனோ பூயாத் ஸஜ்ஜன: சாந்திமாப்னுயாத் ।*
சாந்தோ முச்யேத பந்தேப்யோ முக்தச்சான்யான் விமோசயேத் ॥

33

விடுபட்ட நிலையில் வாழ்க்கை

வாழ்க்கையில் மோக்ஷம்

ஸ்ரீராமகிருஷ்ணர், பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தர் என்று உலகப் புகழ்பெற்ற, தன்னுடைய தனிப்பட்ட பாசத்திற்கு உரிய சீடரான நரேந்திரனிடம் பேசிக் கொண்டு இருந்தார். 'நான் ஒருமுறை நரேந்திரனிடம், 'ஒரு கோப்பை நிறைய இனிப்புப் பானம் இருக்கிறது. நீ ஓர் ஈயாக உள்ளாய். நீ எங்கே உட்கார்ந்து அதைக் குடிப்பாய்?' என்று கேட்டேன். அதற்கு நரேந்திரன், 'கோப்பையின் விளிம்பில் உட்கார்ந்து தலையை நீட்டிக் குடிப்பேன்' என்றான். 'ஏன் அப்படி? நடுவில் சென்று மூழ்கிக் குடித்தால் என்ன?' என்று கேட்டேன். 'நான் அதில் மூழ்கி இறந்து விடுவேன்' என்றான் அவன். இதற்குக் குருதேவர் சிரித்துவிட்டு, 'குழந்தாய், இது சாதாரணமான பானம் அல்ல. சச்சிதானந்த பானம். அது அமுதபானம். அதில் மூழ்கினால் மனிதன் சாகமாட்டான். சாகாத தன்மையை அடைகிறான்' என்று கூறினேன்.[1] குருதேவர் பிரம்ம ஞானம் அடைவதைக் குறித்துப் பேசினார். உபநிஷதம், 'மேலான பரம் பொருளை உணர்ந்தவன், பரம் பொருளாகவே ஆகிறான்' என்று கூறுகிறது.[2] ஆன்மீக அனுபவத்தில் பல படித்தரங்கள் உள்ளன. வெகு சிலரே, பிரம்மனுடன் இரண்டறக் கலக்கும் மிக உயர்ந்த அனுபவத்தைப் பெறுவதற்காக அவற்றின் வழியாகச் செல்கின்றனர். நம்மில் பலர் தெய்வீகப் பேரின்பத்தில் ஒரு சிறு வாயளவு தான் எடுத்துக் கொள்கிறோம். அதில் மூழ்குவதற்குத்

---

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.648*
2. *ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி ॥*
—முண்டக உபநிஷதம், 3.2.9.

தயங்குகிறோம். பிரம்மன் என்னும் சமுத்திரத்தில் ஆழமாக மூழ்குவதன் பலன்தான் உண்மையான எல்லா அறிவாற்றலையும் கடந்த அமைதியாகும். கணநேரத்திற்கு விட்டு விட்டுச் சிறிய அளவில் ஏற்படும் அமைதியல்ல. ஆனால் ஆழமான, நிரந்தரமான அமைதியும், பேரின்பமும் ஆகும்.

வேத காலத்தைச் சேர்ந்த ஒரு ரிஷி, ஒரு நதிக் கரையில் நின்று கொண்டு, 'அழியாத அமரத்துவத்தின் குழந்தைகளே, கேளுங்கள். தேவலோகவாசிகளும் நான் சொல்வதைக் கேட்கட்டும். அறியாமை என்னும் இருளுக்கு அப்பால் உள்ள சிறந்த பேரொளியான பரம்பொருளை நான் உணர்ந்துள்ளேன். அவனை அறிவதால் மட்டுமே ஒருவர் மரணத்தை வெல்ல இயலும். வேறு எந்த வழியும் இல்லை என்று சாற்றியுள்ளார்.[1] முற்காலத்திலிருந்து இக்காலம் வரையிலும், இந்தியாவில் எண்ணற்ற முனிவர்களும், புனித மகான்களும் அதே உண்மையைப் போதித்து உள்ளனர். அழிவற்ற தன்மை என்றால் நாம் என்ன பொருள் கொள்கிறோம்? ஒவ்வொருவரிடமும் வாழ வேண்டும் என்னும் விருப்பமும் மரணத்தைக் குறித்த பெரிய அச்சமும் இருப்பினும், தற்சமயம் அவர்கள் இருப்பதைப் போன்றே தொடர்ந்து எல்லாக் காலத்திற்கும் இருப்பதற்கு ஒருவரும் விரும்பமாட்டார்கள். அழிவற்ற தன்மை என்றால் தொடர்ந்து இருப்பது என்பது மட்டும் பொருள் அல்ல. அது முதலில் விழிப்புணர்வின் நிலைமாற்றத்தைக் குறிக்கிறது. சாதாரண மனிதனின் விழிப்புணர்வானது, புலனனுபவத்தின் வரையறைக்கு உட்பட்டதாகும். அது அதைக் கடந்து செல்வதில்லை. ஆன்மீக அனுபவம் ஏற்படும் பொழுது, அது முதலில் விழிப்புணர்வு

---

1. ச்ருண்வந்து விச்வே அம்ருதஸ்ய புத்ரா:
ஆயே தாமானி திவ்யானி தஸ்து: ।
வேதாஹமேதம் புருஷம் மஹாந்தமாதித்ய
வர்ணம் தமஸ: பரஸ்தாத் ।
தமேவ விதித்வாதிம்ருத்யுமேதி நான்ய:
பந்தா வித்யதேऽயனாய ॥

—*ஸ்வேதாஸ்வதர உபநிஷதம், 2.5, 3.8.*

நிலைமாற்றத்தை ஏற்படுத்துகிறது. அப்பொழுது ஒருவர், அவர் உடல் மற்றும் மனம் அல்ல, ஆன்மா என்பதை உணர்ந்து கொள்கிறார். அடுத்ததாக விழிப்புணர்வு விரிவு அடைகிறது. அதன்பிறகு நாம், எல்லா உயிரினங்களிலும் குடிகொண்டுள்ள பரம்பொருளின் பகுதிகள் நாம் என்பதை உணர்கிறோம். மேலும் முன்னேறி, பரம்பொருள் மட்டுமே ஒரே உண்மை என்பதையும் உணர்கிறோம்.

உலகத்திலுள்ள எல்லா சிறந்த சமயங்களும், உயர்ந்த ஆன்மீக அனுபவம் ஏற்படக்கூடிய சாத்தியத்தை அடையாளம் கண்டு கொண்டிருப்பினும் இறைமை இயல் வல்லுனர்கள் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முயற்சி செய்கின்றனர். கிறிஸ்தவர்களின் இறைமை இயல் ஆராய்வு நூலானது கடவுளுடன் ஆன்மா இரண்டறக் கலக்கும் நிலையானது, ஆன்ம விடுதலையின் பேரின்ப நிலையானது மரணத்திற்குப் பிறகே நிகழ இயலும் என்னும் கருத்தைக் கொண்டுள்ளது. இஸ்லாமியத்தின் கருத்தும் ஏறத்தாழ இதே போன்றுதான் உள்ளது. எப்படியிருப்பினும் இந்த சமயங்களைச் சார்ந்த பல சிறந்த ஞானிகள், அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த பொழுதே, இறைவனுடன் இரண்டறக் கலக்கும் ஆன்மீக, அனுபவத்தையும் ஒப்புயர்வற்ற அமைதியையும், பேரின்பத்தையும் உணர்வதற்கு முயற்சி செய்துள்ளனர்.

ஹிந்து சமயத்தில், மிக உயர்ந்த இலட்சியமாக வாழ்க்கையின் குறிக்கோளாக, இந்த வாழ்க்கையிலேயே முழுமையான விடுதலையை அடைவதுதான் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அறியாமையின் பிடிகளிலிருந்து மற்றும் அதனுடைய எல்லா விளைவுகளான அகங்காரம், வெறுப்பு, அடக்க முடியாத ஆசை மற்றும் துன்பம் என்னும் இவ்வனைத்திலிருந்தும் விடுதலை அடைவது ஆகும். இந்த முழுமையான விடுதலையானது விழிப்புணர்வு விரிவு அடைதல் மற்றும் நிலைமாற்றம் அடைதல், இறுதியாக ஆன்மாவும், பிரம்மனும் இரண்டறக் கலப்பதை உணர்வதினாலும் அடையப்படுகிறது. இது இங்கேயே இந்த

உலகத்திலேயே, ஒருவர் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுதே அடைய வேண்டிய நிலையாகும். மரணத்திற்குப் பிறகு அல்ல. இந்த நிலையை அடைந்த ஒரு மனிதன், 'ஜீவன் முக்தன்' என்று அழைக்கப்படுகிறான். சங்கராச்சாரியர், அவருடைய புகழ்பெற்ற நூலான விவேக சூடாமணியில் கீழே குறிப்பிட்டுள்ள சொற்களால் அத்தகைய போற்றத்தகுந்த மனிதனைப் பற்றிக் கூறியுள்ளார்.

'அவன் இந்த வாழ்க்கையிலேயே ஆன்மஞானத்தில் நிலைபெற்று இருக்கும்பொழுது விடுதலையடைந்தவன் என்று கூறப்படுகிறான். அவனுடைய பேரின்பத்திற்கு முடிவில்லை. அவன் இந்த உலகத்தின் தோற்றத்தைப் பெரும்பாலும் மறந்து விடுகிறான். அவன் மனமானது பிரம்மனால் நிறைவுற்றிருப்பினும் அவன் முற்றிலும் விழிப்புடன் இருக்கிறான். விழிப்பு நிலையிலுள்ள வாழ்வின் அறியாமையிலிருந்து விடுபட்டு உள்ளான். முழுமையான விழிப்புணர்வுடன் இருப்பினும் எத்தகைய ஆசையுமற்று இருக்கிறான். அவனுக்கு உலகத்தின் துன்பங்கள் எல்லாம் முடிவடைந்து விட்டன. அவன் மனித உடலுடன் கூடியவனாகத் திகழ்ந்தாலும், பரம்பொருளுடன் இணைந்த நிலையிலேயே இருக்கிறான். அத்தகைய ஒரு மனிதன், இந்த வாழ்க்கையிலேயே விடுதலையடைந்தவன் என்று கூறப்படுகிறான். நன்மையும், தீமையும் இருப்பது போல் காணப்படுகின்றன. மனிதர்களும் மற்றும் பொருட்களும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டவையாகத் தோன்றுகின்றன. அப்படியிருந்த போதிலும், மனித குலத்திற்கும் பரம்பொருளுக்கும் எத்தகைய வேறுபாடும் இல்லை என்று உணரத் தொடங்கியுள்ளான். எல்லாமே பிரம்மனில் ஒன்றுபட்டுள்ளன என்பதை அவன் அறிவான். அவன் வேறுபடுத்திக் காண்பது இல்லை. விடுதலையடைந்துள்ள ஒரு மனிதனை நாம் அப்படித்தான் அடையாளம் கண்டு கொள்கிறோம். மனிதன் அவனைக் கௌரவிக்கக் கூடும், அவனை அவமதிக்கக் கூடும் என்றாலும் அவனுடைய உணர்வுகள் அதே போன்று உள்ளன. நதிகள் சமுத்திரத்தில் பாயும்பொழுது சமுத்திரம் எப்படிக்

கொந்தளிப்பது இல்லையோ, அதைப் போல புலன்களுக்கு உரிய பொருட்கள் அவன் மனத்திலே பாயும் பொழுது அவனிடம் எத்தகைய எதிர்விளைவும் இருப்பது இல்லை. அவன் ஒரே ஒரு உண்மையின் விழிப்புணர்வில் வாழ்கிறான். அத்தகைய ஒரு மனிதன், உண்மையிலேயே, இந்த வாழ்விலேயே விடுதலை அடைந்தவன் ஆவான்.'[1]

ஆன்மீக விழிப்புணர்வில் நிலைபெற்றுள்ள ஒருவன் மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க இயலாத ஒழுக்க நெறி முறைத் தொடர்பான முரண்பாடுகளைக் கடந்துள்ளான். விடாமுயற்சியுடன் கூடிய ஆன்மீகப் பயிற்சியின்மூலம் கெட்ட விருப்பங்கள் அகன்றுவிட்டன. அவனிடம் நல்ல விருப்பங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அந்த விருப்பங்கள் இந்த ஒப்புயர்வற்ற ஞானம் உதயமாவதற்கு முன்பும் இருந்தன. அல்லது அவன் உலகம் சார்ந்த நல்லது அல்லது கெட்டது என்னும் கருத்துக்களைக் குறித்து விருப்பு-வெறுப்பற்றவனாக இருக்கக் கூடும், மற்றும் புலன் களைக் கடந்த விழிப்பு உணர்வு நிலையிலேயே மூழ்கி யிருக்கக்கூடும். பரம்பொருளின் விருப்பத்தால் ஞான மடைந்தவர்களில் சிலர் அருள் நிரம்பியவர்களாக, மனித குலத்திற்கு ஆச்சாரியர்கள் ஆவதற்காக பூமிக்குத் திரும்பி வருகின்றனர்.

'ஒரு எரிபொருள் சுட்டெரிக்கப்படும் பொழுது எப் பொழுதும் அமைதியாக உள்ள ஒரு ஒளிப்பிழம்பைப்போல, அவர்கள் இடைவிடாமல் ஒப்புயர்வற்ற ஆன்மீக விழிப் புணர்வு நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மறைமுக நோக்கம் ஒன்றுமறியாத அன்புப் பெருங்கடலாக உள்ளனர். தங்களை அவர்களுக்குப் பணிவுடன் ஒப் படைத்துக் கொள்ளும் எல்லா நல்ல மனிதர்களுக்கும் ஒரு நண்பனாக, வசந்தகாலம் வருவதுபோல அவர்கள் மனித

---

1. சங்கராச்சாரியரின் விவேக சூடாமணியின் சுருக்கம், மொழி பெயர்ப்பு: சுவாமி பிரபவானந்தர் மற்றும் கிறிஸ்டோபர் ஈஷருட் (California, Vedanta Press, Hollywood, 1947) பக்கம் *122-124*.

குலத்திற்கு நன்மையைக் கொண்டு வருகின்றனர். அவர்கள் தாங்களே இந்த உலகம் என்னும் பயங்கரப் பெருங்கடலைக் கடந்து விட்டவர்கள். மற்றும் ஒரு விதமான சுயநலமும் இல்லாமல் அவர்கள் மற்றவர்களுக்கு அதைக் கடக்க உதவு கின்றனர். இந்த சிறந்த ஆன்மாக்களின் உண்மையான இயல்பு, மற்றவர்களின் துன்பங்களை அகற்றுவதற்குத் தாங்களாகவே செயலாற்றுவது ஆகும். எப்பொழுது சூரிய னின் கடும் சீற்றமான கிரணங்களால் சூடு ஆகும் பொழுது சந்திரனானது தானாகவே பூமியைக் குளிர்விக்கிறதோ அதைப் போல இவர்கள் செய்கின்றனர்.'[1]

விடுதலையான ஆன்மாவின் அடையாளங்கள்

சீனாவின் சிறந்த முனிவரான கன்ப்யூஷியஸ் (K'ung fu-tzu) பதினைந்தாம் வயதில் என் மனம் கற்றுக் கொள்வதில் விருப்பமுற்றிருந்தது. முப்பதாவது வயதில் நான் உறுதியுடன் இருந்தேன். நாற்பதாவது வயதில் எனக்குச் சந்தேகங்கள் இருக்கவில்லை. ஐம்பதாவது வயதில் எனக்குச் சொர்க்கத்தின் கட்டளைகள் தெரிந்திருந்தன. அறுபதாவது வயதில், உண்மையை உட்கொள்வதற்கு உரிய இணங்கி நடக்கும் உறுப்பாக என் காது விளங்கியது. எழுபதாவது வயதில் என் இதயம் எதையெல்லாம் விரும்பியதோ, அதை என்னால் வரம்பு மீறாமல் செய்ய முடிந்தது' என்று கூறி யிருப்பதில் அவர் வாழ்க்கையின் குறிக்கோளை விவரித்து உள்ளார். அதாவது முழுமையான ஒழுக்க நெறிமுறை சுதந்திரம் அடைவது என்பதாகும். விடுதலையடைந்த ஆன்மாவானது தீய இயல்புகளாலோ அல்லது நடைமுறை வழக்கிலுள்ள நீதிநெறி முறைகளின் தொகுப்பாலோ பிணைக்கப்படுவது இல்லை. தூய்மைப்பாடு, அவனுடைய இன்றியமையாத இயல்பாகிவிட்டது. எந்த அளவிற்கு என்றால் அவன் தன்னை நடத்தையின் பலவிதிமுறைகளுக்கு கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டாம். ஸ்ரீராமகிருஷ்ணருடைய

1. மேற்கண்ட நூல், பக்கம் 42-44.

சொற்களில், 'தப்பான சுரத்தைப் பாட இயலாத கைதேர்ந்த பாடகனைப்' போன்றவன் ஆவான்.[1]

ஜீவன் முக்தனின் மற்றொரு தனிச்சிறப்புப் பண்பு அவன் அகங்காரத்திலிருந்து விடுபட்டு இருப்பது ஆகும். அகங் காரமானது இதயத்தில் முடிச்சுகளைத் தோற்றுவிக்கின்றன. அது மனிதனின் மனத்தைச் சிக்கலாக்குகிறது. கடினமான தாகச் செய்கிறது. தன்னலத்திற்காகச் சூழ்ச்சி செய்கிறது. மற்றவர்களைக் குறித்த நம்முடைய போக்கானது நம் அகங் காரத்தின் இயல்பால் தீர்மானிக்கப்படுகிறது. புலன் உணர்வு களைக் கடந்த மிக உயர்ந்த விழிப்புணர்வு நிலையைப் பெற் றிருப்பதால், இதயத்தின் எல்லா முடிச்சுக்களும் வேறாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மற்றும் நம்முடைய எல்லா சந்தேகங் களும் அழிக்கப்பட்டுவிட்டன என்று உபநிஷதம் கூறு கிறது.[2] எல்லாவிதமான ஒழுக்கநெறிமுறைகளின் முரண் பாடுகளும் அகன்றுவிடுகின்றன. மற்றும் நாம் எல்லா இடங்களிலும் தெய்வீகமான இசைவுடைமையைக் காண் கிறோம்.

முழுமையை அடைந்தவன், வெறுப்புக் கொள்வ திலிருந்து விடுபட்டு இருப்பான். ஈஸாவாஸ்ய உபநிஷதம், 'யார் எல்லா உயிரினங்களையும் ஆன்மாவிலும் ஆன்மாவை எல்லா உயிரினங்களிலும் காண்கிறானோ, அவன் யாரையும் வெறுப்பதில்லை' என்று கூறுகிறது.[3] பிரம்மனை அறிந்தவன் மற்றவர்களுக்காக அன்பையும் அருளையும் நிறைத்துக் கொண்டிருக்கிறான். அவனிடம் மற்றவர்களுக்குக் கொடுப்ப தற்காக வாழ்த்துக்களைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவனுடைய அன்பிற்கு ஜாதியின் எல்லைகளோ, முறைப் பட்ட சமயக் கோட்பாட்டின் எல்லைகளோ சமூகமதிப் பீடோ தெரியாது. அவன் எத்தகைய பாரபட்சமுமின்றி அனைவரையும் விரும்புகிறான். எங்களில் சிலருக்கு

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.42
2. முண்டக உபநிஷதம், 2.2.8; கட உபநிஷதம், 2.3.15.
3. ஈசாவாஸ்ய உபநிஷதம், 6.

ஸ்ரீராமகிருஷ்ணரின் புகழ்பெற்ற சிறப்பு மிகுந்த சீடர்களிடம் தொடர்பு கொள்ளும் பாக்கியம் இருந்தது. நாங்கள் அவர்களிடம் மட்டுமே மற்றவர்கள் மீது உள்ள தன்னலமற்ற தூய்மையான அன்பைக் கண்டோம். காலையிலிருந்து இரவின் பிற்பகுதி வரையிலும் எங்களுடைய நலனைக் குறித்த எண்ணங்களிலேயே ஈடுபட்டு இருந்தனர்.

ஒரு ஜீவன் முக்தன், பயத்திலிருந்து விடுபட்டு இருப்பான். பிரஹதாரண்யக உபநிஷதம். 'அபயம் வை ப்ரஹ்ம'[1] (பிரம்மமே பயமில்லாதது) என்று கூறுகிறது. ஒரு நாள் யாஜ்ஞவல்க்ய முனிவர் விதேஹ நாட்டின் அரசரான ஜனகரைப் பார்க்கச் சென்றிருந்தார். அரசன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, முனிவர் அவருக்கு தூய்மையான விழிப்புணர்வான அனைத்தையும் ஊடுருவி நிறைந்துள்ள பிரம்மனைப் பற்றி அறிவுறுத்தினார். சீடரே மிக உயர்ந்த தகுதி பெற்ற சாதகன் ஆவார். எனவே அவரால் வேகமாக உண்மையைக் கிரகித்துக் கொள்ள முடிந்தது. இதைக் கவனித்த யாஜ்ஞவல்க்ய முனிவர், 'ஓ ஜனகரே, நீ உண்மையாகவே அச்சமற்ற தன்மையை அடைந்துள்ளாய்' என்று கூறினார்.[2]

சுவாமி விவேகானந்தர் கூறுவதைப்போல பெரும்பாலான மனிதர்கள் வேட்டையாடப்பட்ட குற்றவாளிகளைப் போல வாழ்கிறார்கள். அவர்களுடைய இதயங்கள் சுதந்திரமாக இல்லை. அவர்கள் தீய சக்தியால் பின்தொடரப்படுவதைப் போன்று, வாழ்க்கைப் பாதையில் ஓடுகிறார்கள். வாழ்க்கையின் அழகையும், மேன்மையையும் தவற விட்டு விடுகிறார்கள். அவர்களால் அமைதியாக உட்கார்ந்து கொள்ளவோ அல்லது அச்சமில்லாமல் இயங்கவோ இயலாது. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகளில் ஒரு நெசவாளிப் பெண்ணைக் குறித்த, ஆர்வத்தைத் தூண்டும் கதை உள்ளது.

'ஒருநாள் அவளுடைய தோழி ஒருத்தி அவளைக் காணச் சென்றாள். அவள் அவளுடைய தோழிக்காக சாப்பிடுவதற்கு

1. பிரஹதாரண்யக உபநிஷதம், 4.4.25.
2. பிரஹதாரண்யக உபநிஷதம், 4.2.4.

ஏதாவது செய்து கொண்டு வருவதற்காக அந்த அறையை விட்டு அகன்றாள். இதற்கிடையில் அவள் தோழி அங்கிருந்த ஒரு பட்டு நூற்கண்டை எடுத்து அக்குளில் மறைத்து வைத்துக் கொண்டாள். அந்த நெசவாளப் பெண் திரும்பி வந்தபொழுது உடனடியாக, வந்தவள் ஒரு நூற்கண்டை எடுத்து விட்டதைக் கண்டு கொண்டாள். அவள் அவளுடைய தோழியிடம் இருவரும் நடனமாட வேண்டும் என்று ஆலோசனையைத் தெரிவித்தாள். நெசவாளிப் பெண் இரு கைகளையும் தூக்கியபடி ஆடினாள். ஆனால் அவளுடைய தோழியோ ஒரு கையைத் தூக்கியபடி நடனமாடினாள். மற்றொரு கையானது உடலை அழுத்திக் கொண்டிருந்தது.'[1] விடுதலையான மனிதனுக்கு மறைப்பதற்கு எதுவும் இல்லை மற்றும் அவன் அச்சமற்றவனாக இருக்கிறான்.

மனிதர்களிடம், வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் குறித்து தேவையற்று ஏங்கும் இயல்பு உள்ளது. ஆபத்தைப் பெரிதுபடுத்தி மிகவும் கிளர்ச்சி அடையும் இயல்பு உள்ளது. இந்த இயல்பானது, பொருத்தமான எண்ணங்களையும், உணர்வுகளையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் தடுக்கப்பட வேண்டும். அச்சத்திற்குப் பதிலாக நமக்கு தைரியம் இருக்க வேண்டும். திரிந்த மனநிலையுடன் உதவியற்ற நிலையில் இருப்பதைவிட, நமக்கு ஆரோக்கியம் மிகுந்த பொறுத்துக் கொள்ளும் மனநிலை வேண்டும். அது நம்மை அமைதியுடன் இருக்கச் செய்கிறது. மற்றும் நம்முடைய வழியை சுற்றுச்சூழலில் உள்ள மாறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் பின்பற்றச் செய்கிறது. நான் 1940-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெர்கெனிலிருந்து (Bergen) (நார்வேயில் உள்ளது) அமெரிக்காவிற்குக் கடற்பயணம் மேற்கொண்ட பொழுது, முதல்நாள் எப்பொழுதும் போல கப்பலில் நடனமும், மகிழ்ச்சிக் கொண்டாட்டமும் இருந்தது. இரண்டாவது நாள் ஜெர்மனி நார்வேயின் மீது படை எடுத்ததையும், பெர்கென் போன்ற துறைமுகங்கள் நாசிப்படை வீரர்களிடம்

---

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 2.250.

வீழ்ச்சியடைந்ததையும் கம்பியில்லாத தந்திச் செய்தி மூலம் நாங்கள் அறிந்து கொண்டோம். இது அந்தக் கப்பலில் ஒரு துயரத்தை ஏற்படுத்தியது. எல்லா இசையும் இரைச்சலும் திடீரென்று நின்றுவிட்டன. கப்பலை ஓட்டுபவர்களின் தொகுதியும், பல பயணிகளும் அச்சமும், கிளர்ச்சியும் அடைந்தனர். அவர்களுடைய தாய் நாடான நார்வேக்குத் திரும்பச் செல்லும் நம்பிக்கையும் இருக்கவில்லை. மேலும் கப்பலுக்கு நீர்மூழ்கிக் குண்டுகளால் தாக்கப்படும் கூடுதலான அபாயமும் இருந்தது.

இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற பொழுது மேற்கத்திய நாடுகளில் பலமுறை 'சுவாமிஜி, நீங்கள் எப்படி இவ்வளவு அமைதியுடன் இருக்கிறீர்கள்? யுத்தத்தின் வேதனையையும் கொடுமையையும் நீங்கள் உணரவில்லையா?' என்று நான் கேட்கப்பட்டு இருக்கிறேன். 'நீங்கள் உணர்வதைவிட அதிகமாக நான் உணர்வதால்தான் நான் அமைதியாக இருக்கிறேன்' என்று நான் பதில் கூறுவது வழக்கம். கற்பித்துக் கொண்ட அல்லது உண்மையான தொல்லைகளைக் குறித்து ஏங்குவதால் மற்றும் அவற்றைப் பெரிதுபடுத்துவதால் எந்தப் பயனும் இல்லை. ஆபத்தான காலங்களில் நாம் மேலும் அதிகமாகக் கடவுளைப்பற்றி நினைக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். முடிந்த அளவிற்குக் கடமைகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் நாம் சிறந்த, மேன்மையான மனிதர்களின் வாழ்க்கைகளிலிருந்து படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டும். சாக்ரடீஸின் மரணத்தைக் குறித்து எண்ணிப் பார். அவர் ஒருபொழுதும் செய்யாத குற்றங்களுக்காகக் குற்றம் சாட்டப்பட்டு இருந்தார். மற்றும் நியாயமற்ற அற்ப காரணங்களுக்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருப்பினும் அவர் தீர்ப்பளித்த நீதிபதிகள் மீது வெறுப்பு அடையவில்லை. APOLOGY எனப்படும் புகழ்பெற்ற உரையாடலில் ப்ளேட்டோ, சாக்ரடீஸின் இந்த வழக்கு விசாரணையை விவரித்து உள்ளார். வெல்ல இயலாத துணிவுடனும் உறுதியான அன்பு நிறைந்த இதயத்துடனும் சாக்ரடீஸ் நீதிபதிகளிடம், 'ஏதன்ஸ்

நகரத்தைச் சேர்ந்தவர்களே, உங்கள் மீது எனக்கு இரக்கத்துடன் கூடிய அன்பு இருக்கிறது. ஆனால் நான், நுட்பத்துடன் கூறப்போனால், உங்களைவிட கடவுளுக்குக் கீழ்ப்படிவேன். எனக்கு வாழ்வும், உறுதியும் இருக்கும் பொழுது நான் ஒரு பொழுதும் என்னுடைய தத்துவத்தைப் போதிப்பதையும் நடைமுறைப்படுத்துவதையும் நிறுத்த மாட்டேன். யார் ஒருவரைச் சந்தித்தாலும் அவரை ஊக்குவித்து நல்ல தன்மையை நாடும்படி கூறுவேன்.'

இவ்விதம் கூறிவிட்டு சாக்ரடீஸ் நீதி மன்றத்தை விட்டு வெளியேறினார். அப்பொழுதிலிருந்து இச்சொற்கள் மிகவும் பிரபலமாகிவிட்டன. 'புறப்படும் தருணம் வந்து விட்டது. மற்றும் நாம் நம் வழிகளில் செல்ல வேண்டும். நான் இறப்பதற்கு, நீங்கள் வாழ்வதற்கு எது சிறந்தது என்பது கடவுளுக்கு மட்டுமே தெரியும். மரணத்திற்காகக் குறிப்பிடப்பட்டிருந்த அந்த நாளின் மாலை நேரத்தில் சாக்ரடீஸின் சில நண்பர்கள் அவரைச் சிறையிலிருந்து தப்பித்துச் செல்லும்படி இணங்க வைப்பதற்கு முயற்சி செய்தனர். ஆனால் அவர் மறுத்துவிட்டார். குறிப்பிடப்பட்ட நேரம் வந்தபொழுது அவர் எப்பொழுதும் போல அமைதியாக இருந்தார். அவர் அவருக்கு அளிக்கப்பட்ட ஒரு குவளையிலிருந்து விஷத்தை அமைதியாக அருந்தினார். அந்த விஷம் செயல்பட வேண்டும் என்பதற்காகச் சிறிது நடந்துவிட்டு, இறப்பதற்காக அமைதியுடன் படுத்துக் கொண்டார்.

முழுமையான தூய்மைப்பாடு, அகங்காரமற்று இருத்தல், அனைவரிடத்திலும் அன்பாக மற்றும் இரக்கமுடன் இருத்தல் மற்றும் அச்சமற்றதன்மை இவை விடுதலையடைந்த மனிதனின் சில அடையாளங்கள் ஆகும். மேலும் அவனுடைய உள்ளார்ந்த உணர்ச்சிகளின்படி அவன் ஆன்மா என்பதும் பிணைப்பற்றவன் என்பதும், பேரின்பம் நிறைந்தவன் என்பதும் அவனுக்குத் தெரியும். ஞானம் ஏற்படும் பொழுது அதைக் குறித்த உண்மையை ஒருவர் உள்ளுணர்வால் தெரிந்து கொள்வார். நமக்குச் சூரியனைக் காட்டுவதற்காக விளக்கு எப்படித் தேவையில்லையோ

அதைப்போல புலன்களுக்கு அப்பாற்பட்ட விழிப்புணர்வு நிலைக்கும் அதை உணர்ந்து கொள்வதற்கு எத்தகைய வெளிப்புற உதவியும் தேவைப்படுவது இல்லை. ஞான மடைந்த மனிதன், அவனுடைய ஆன்மாவிலேயே ஒப்புயர் வற்ற பேரின்பத்தையும் நிறைவையும் பெறுகிறான். மற்றும் அதிலேயே நிலைத்து மூழ்கி இருக்கிறான். அதனால்தான் அவன் ஆத்மாராமா என்று அழைக்கப்படுகிறான். சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருச்சின்னங்களை உள்ளடக்கிக் கொண்ட, பேலூர் மடத்தில் பூஜிக்கப்படும் ஒரு தாமிரப் பாத்திரத்தைப் பற்றி 'ஆத்மாராமேர் கௌட' (ஆத்மாராமாவின் பெட்டி) என்று கூறுவார்.

உலக ஆச்சாரியர்களின் எடுத்துக்காட்டுகள்

உலகத்தின் சிறந்த அருள் போதகர்கள், சிறந்த சமயம் சார்ந்த இயக்கங்களைத் தோற்றுவித்தவர்கள் அவர்களே, நான் மேலே குறிப்பிட்டுள்ள, முழுமையான ஆன்ம விடுதலை யடைந்தவர்களுக்கு எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றனர். அவர்கள் அவர்களைப் பின்பற்றும் இலட்சக் கணக்கானவர் களால் கடவுளின் மேன்மையான வெளிப்பாடுகளாக வழி படப்படுகின்றனர். இந்த சிறந்த மனிதர்களின் வாழ்க்கை களில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனித குலத்தின் மீது அவர்கள் கொண்ட வரையற்ற அன்பும், பரிவும்தான் நமக்கு மிகவும் மதிப்பு மிக்கதாகத் திகழ்கிறது. உபநிஷதங்களுக்கும், பகவத் கீதைக்கும், பிரம்ம சூத்திரங்களுக்கும், விளக்கவுரை களையும், அதைத் தவிர பல தனிப்பட்ட நூல்களையும் எழுதியுள்ள மிகச் சிறந்த அத்வைத தத்துவ ஞானியான சங்கராச்சாரியார் அவர்களே அவர் தன்னுடைய புத்தகங்களில் அடிக்கடி எழுதியுள்ள குறிக்கோளான விடுபட்ட ஆன்மாவின் புற உருவாகத் திகழ்ந்தார். மிகவும் உயர்ந்த ஆன்மஞானத்தை அடைந்த பிறகு, அவர், சமயத்திற்கு மீண்டும் உயிர்ப்பளிக்க வும், மனிதர்களை ஒப்புயர்வற்ற பேரின்பப்பாதையில் வழிநடத்திச் செல்லவும் இந்தத் தொடர்பியல் மட்டத்திற்குத் (relative plane) திரும்பி வந்தார். ஆன்மீகத்தை நாடிய பல

சாதகர்கள் அவரிடம் சென்றனர். சிலர் அவருடைய நெருக்கமான சீடர்கள் ஆயினர். அவர்களுடைய உதவியுடன் நான்கு சிறந்த துறவிகள் மடம் சார்ந்த மையங்களை இந்தியாவின் நான்கு பகுதிகளில் ஏற்படுத்தினார். மற்றும் நாடு முழுவதிலும் பயணம் மேற்கொண்டு அவருடைய போதனையைப் பரப்பினார்.

அவர் தொடர்ந்து செய்து கொண்டிருந்த செயல்களுக்கு நடுவில் எப்படியிருப்பினும் அவர் தன் தாயை மறக்கவில்லை. அவருக்கு இளகிய இதயம் இருந்தது. ஒருநாள் அவர் உள்ளுணர்வால் அவருடைய தாய் மரணப்படுக்கையில் இருக்கிறார் என்று அறிந்து கொண்டதும் தாயின் அருகில் இருப்பதற்காக சொந்த கிராமத்திற்கு விரைந்து சென்றார். அவர் தாய் வழிபட்டு வந்த பரம்பொருளான விஷ்ணுவின் காட்சியை அவர் காணுமாறு சங்கரர் செய்தார். அவர் தத்துவத்திலேயே மூழ்கிய தத்துவஞானியாக இருப்பினும், ஹிந்து சமயத்தின் ஆண் தெய்வங்கள் மற்றும் பெண் தெய்வங்களிடம் கனிவுமிக்க இரக்கம் மற்றும் பக்தியைக் கொண்டிருந்தார். ஞானமடைந்த மனிதர்கள் ஒருபொழுதும் ஒரு சார்பாகவோ அல்லது குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகவோ இருக்கவில்லை. அவர்களுடைய பரந்த அகன்ற தொலைநோக்கு அனைவரையும் அணைத்துக் கொண்டது.

ஹிந்துக்களால் ஸ்ரீகிருஷ்ணர் மிகச் சிறந்த அவதார புருஷர் என்று கருதப்படுகிறார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர் கரையற்ற அன்பை வெளிப்படுத்தி, அன்பின் உருவமாகவே திகழ்ந்தார். சிறுவனாக இருந்த பொழுது அவர் ஒரு சாதாரணமான இடையனைப் போன்றே, அவருடைய தோழர்களுடன் விளையாடிக் கொண்டு இருந்தார். அவர் பிருந்தாவனத்திலிருந்த சிறுவர்களும், சிறுமிகளும் போற்றி, பூசித்து, வழிபட்ட அருமையான அன்பிற்கு உரியவராக இருந்தார். அவர்களால் கிருஷ்ணரைச் சிறிது நேரத்திற்குக் கூட மறக்க இயலாத அளவிற்கு அவர்கள் கிருஷ்ணனை அந்த அளவிற்கு நேசித்தனர். இருப்பினும்,

கடமை அழைத்த பொழுது, அவர் அவர்களை விட்டுப் பிரிந்து சென்றார். அவர் வளர்ந்ததும் மதுராவிற்குச் சென்றார். அங்கு அவருடைய தாய் மாமனான கொடுங்கோலன் கம்சன் ஆண்டு கொண்டிருந்தான். கம்சன் அவனுடைய சொந்த தந்தையான உக்ரசேனனைச் சிறையிலடைத்துவிட்டுத் தகாத முறையில் அரியணையைப் பறித்துக்கொண்டான். கிருஷ்ணர் கம்சனை ஒரு மற்போரில் கொன்றுவிட்டு உக்ரசேனனை விடுவித்து, அவரை மீண்டும் அரசராக்கினார். இதற்குப் பிறகு கிருஷ்ணர் துவாரகைக்கு அவரைப் பின்பற்றும் பலருடன் சென்று ஒரு புதிய ராஜ்ஜியத்தை ஏற்படுத்தினார். ஆனால் அவரே அரசனாகவில்லை. உக்ரசேனனே துவாரகைக்கும் அரசராகத் தொடர்ந்து இருந்து வந்தார். கிருஷ்ணர், மன்னர்களை உருவாக்கும் ஆற்றல் உடையவராக இருந்தார். ஆனால் எங்கெல்லாம் அதர்மம் தலை தூக்கியதோ அங்கெல்லாம் அவர் குறுக்கிட்டார். அவர் பாண்டவர்களுக்கு அவர்களுடைய ராஜ்ஜியத்தைக் கிடைக்குமாறு செய்தார். குருக்ஷேத்திரத்தில் நடந்த மிகப் பெரிய போரில் அவர் போரிடவில்லை. அவர் அர்ஜுனனின் தேரோட்டியாக இருந்து வழிநடத்தினார். அவர் எப்பொழுதுமே செயல்களைப் பற்றற்ற முறையில் மேற்கொண்டார். அவர் அதைக் கீதையின் மூலம் போதித்து உள்ளார்.[1] கிருஷ்ணர் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டாலும் அவர் முழுமையான விடுதலையை அடைந்திருந்தார். மற்றும் உலகத்தில் பிணைப்புக் கொள்ளாமல் இருந்தார். ஆனால் அவர் எல்லா வகையான மனிதர்களிடமும் வரையற்ற பரிவைக் கொண்டிருந்தார். பிருந்தாவனத்திலிருந்த மிகவும் ஏழையான சிறுவர்-சிறுமியர்களிடமிருந்து அரசகுமாரிகள் வரை அனைவரிடமும் பரிவு கொண்டிருந்தார். அவர் ஆன்மீக ஆற்றல் மற்றும் அன்பின் உருவமாகத் திகழ்ந்தார். பகவத் கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் பல இடங்களில் விடுதலையடைந்த மனிதனின் இயல்புகளை

1. *ஸ்ரீராமகிருஷ்ணானந்தர்*, Sri Krishna, Pastoral and King-maker *(சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 12-வது பதிப்பு 2006)*.

விவரித்து உள்ளார்.[1] மற்றும் இவ்வனைத்தையும் அவர் தன்னிலேயே முழுமையாக வெளிப்படுத்தி இருந்தார்.

புத்தரின் வாழ்க்கையானது, மனிதகுல வரலாற்றில் இருண்ட சந்துகளில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் சிறந்த ஒளியாக திகழ்கிறது. இராஜகுமாரனாகப் பிறந்த, அவருக்கு வாழ்க்கையில் எல்லாப் பேறுகளும் இருந்தன. அவர் வாழ்க்கையின் துயரங்களாலும், மற்றும் மனிதர்களின் வேதனைகளாலும் மிகவும் நெகிழ்வடைந்தார். வரலாற்றுப் புகழ்மிகுந்த அவருடைய துறவிற்குப் பிறகு மற்றும் பல ஆண்டுகளாகச் செய்த கடினமான துறவறத்தின் பயனாக அவர் இறுதியாக ஒப்புயர்வற்ற ஞானத்தை அடைந்த பொழுது, அவர் நிலைத்த அமைதியையும், நிறைவையும் பெற்றார். சிறிது காலத்திற்கு அவர் இந்த தெய்வீகப் பேரின்ப அனுபவத்தில் நீடித்திருந்தார். ஆனால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனித குலத்தின் மீது அவருக்கு இருந்த ஆழமான அன்பானது, அவரை அத்தகைய மேன்மையான உயரத்திலிருந்து கீழே இறங்கி வரச் செய்து மனிதர்களுக்கு மத்தியில் செயலாற்ற வைத்தது. புத்தர் கடவுளைக் குறித்து ஒருபொழுதும் நேரடியாகப் பேசவில்லை. அவருக்கு உண்மைதான் கடவுள் மற்றும் அந்த உண்மையைத் தூய்மைப்பாடு மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட மனத்தால் அடைய இயலும். அவர் அவருடைய சீடர்களுக்கு, 'தோழர்களே, நான் எல்லாப் பிணைப்புக்களிலிருந்தும் தெய்வீகமான பிணைப்புகளிலிருந்தும், மனிதர் சார்ந்த பிணைப்புக்களிலிருந்தும் விடுபட்டு இருக்கிறேன். தோழர்களே, நீங்களும் எல்லாப் பிணைப்புக்களிலிருந்தும், தெய்வீகமான மற்றும் மனிதன் சார்ந்த பிணைப்புக்களிலிருந்தும் விடுபட்டு உள்ளீர்கள். தோழர்களே, நீங்களும் உங்களுடைய பயணத்தைப் பலரின் நன்மைக்காக, பலருடைய பேரின்பத்திற்காக, உலகத்தின்மீது உள்ள பரிவினால் மேற்கொள்ளுங்கள்' என்று கூறினார்.[2]

---

1. *பகவத் கீதை, அத்தியாயம், 2, 12, 14.*
2. F.L. Woodward, Some Sayings of the Buddha—*(லண்டன் ஆக்ஸ்போர்டு யூனிவர்சிடி பிரஸ், 1939) பக்கம் 30.*

ஏசுநாதர் ஏழ்மை மிகுந்த தச்சுவேலையை மேற்கொண்டிருந்த ஜோசப் மற்றும் அவர் மனைவியான மேரி என்பவர்களின் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய இளமைப் பருவத்தைக் குறித்து நமக்கு மிகவும் சிறிதளவே தெரிகிறது. அவருக்கு முப்பது வயதான பொழுது, அவர் பாலஸ்தீனத்திற்குச் சென்று மனிதர்களுக்கு முக்தியை அடைவதற்குப் புதிய வழியை அறிவுறுத்துமாறு உள்ளிருந்து வந்த ஒரு அழைப்பை உணர்ந்தார். அவர் வாழ்க்கையில் முழுமையான தூய்மைப்பாடு இருக்க வேண்டிய அவசியத்தைப்பற்றியும், கடவுளிடம் தீவிரமான அன்பும் இருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். மனிதன் மீது கொள்ளும் அன்பும் அடுத்த வீட்டில் இருப்பவரையும் தன்னைப் போன்றே விரும்ப வேண்டும் என்பதும் அவருடைய தனித்த தன்மையுடன் கூடிய போதனையாகும். அவர் போதித்தது மனித இயல்பிற்குரிய அன்பை அல்ல. ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் உள்ள சொந்தத்தை அடிப்படையாகக் கொண்டது ஆகும். ஏழ்மையிலிருந்தவர்களுக்கும், துன்பப்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும் அவர் இதயத்தில் பரிவு நிரம்பியிருந்தது. அவர் மனிதர்களைப் பார்த்து, 'பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறேன்' என்று கூறினார்.[1] அவர் அவருடைய நண்பர்கள், உறவினர்களிடம் பற்றுக் கொள்ளாமல் உண்மையான துறவியாக இருந்தார். அனைவரையும் சம நோக்குடன் கண்டார். ஒருநாள் அவர் ஒரு பெரிய கூட்டத்தின் நடுவில் அமர்ந்திருந்த பொழுது யாரோ ஒருவர் வந்து அவருடைய அன்னையும், உடன் பிறந்தவர்களும் அவரைக் காண்பதற்காகக் காத்துக் கொண்டுள்ளனர் என்னும் செய்தியைக் கூறினார். ஆனால் ஏசுநாதர் பக்தர்களைச் சுட்டிக்காட்டி, 'இவர்கள்தான் என்னுடைய தாயும் உடன் பிறந்தவர்களும் ஆவார்கள்' என்று கூறினார். அதற்குப் பிறகு அவர் ஒரு சிறப்பு மிகுந்த குறிப்பிடத்தக்க செய்தியைக் கூறினார். 'கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும்

1. *பைபிள்—செயின்ட் மேத்யூ 11:28.*

சகோதரியும் தாயும் ஆவார்' என்று கூறினார்.[1] ஏசுநாதரின் போதனையின் மையக் கருத்தானது கடவுளை உணர்வது ஆகும். நம்முள் இருக்கும் கடவுளின் சாம்ராஜ்ஜியத்தை உணர்வது ஆகும். அவர்,

'தூய்மையான உள்ளத்தோர்
பேறு பெற்றோர்; ஏனெனில்
அவர்கள் கடவுளைக் காண்பர்'

என்று அறிவுறுத்தியுள்ளார்.[2]

இந்த அறிவுரை, உலகியலிலும், புலனின்பங்களிலும் மூழ்கி இருப்பவர்களுக்கு, உண்மையான சமயம் என்பது என்ன என்பதைத் தொடர்ந்து நினைவுபடுத்தவல்லதாக உள்ளது.

சைதன்யர் 15-ஆம் நூற்றாண்டில் வங்காளத்தில் பிறந்தார். அவருடைய இளமைப் பருவத்தில் அவர் திறமையான தர்க்கவாதியாகவும், அறிஞராகவும் விளங்கினார். ஆனால் இளமையின் முழுநிறைவு நிலையில் அவர் ஒரு மாற்றத்திற்கு ஆட்பட்டு கடவுளுக்காக உள்ள தீவிரமான ஏக்கத்தால் நிரம்பி இவ்வுலகைத் துறந்தார். அவருடைய எஞ்சியிருந்த வாழ்வு முழுவதும் கடவுளிடம் மதிமயங்கிய நிலையிலேயே கழிக்கப்பட்டது. அவர் கடவுளின் திருநாமத்தை அனைவருக்கும் எத்தகைய சாதி, சமயம் சார்ந்த வேறுபாடும் இல்லாமல் போதித்துக் கொண்டு, மக்களுடனேயே இருந்தார். குற்றவாளிகள் கூட அவருடைய அன்பின் ஸ்பரிசத்தை உணர்ந்து, அவர்களுடைய தீய வழியிலிருந்து மீண்டனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (1836-1886) வங்காளத்தில் உள்ள ஒரு மிகச் சிறிய கிராமத்தில் ஏழ்மை நிலையிலிருந்த பிராம்மணப் பெற்றோர்களின் மகனாகப் பிறந்தார். அவருடைய குழந்தைப் பருவத்திலேயே அவருக்கு இறை அனுபவங்கள் ஏற்பட்டன. அதற்குப் பிறகு அவர் கல்கத்தாவிலிருந்து

---

1. பைபிள்—செயின்ட் மார்க், 3:33-35.
2. பைபிள்—செயின்ட் மேத்யூ, 5:8.

தக்ஷிணேஸ்வரம் என்னும் ஊரிலிருந்த காளிகோயிலில் அர்ச்சகராக ஆனார். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு நீடித்த ஆன்மீக அனுபவங்களின் தேடுதல் மற்றும் செயல்முறைப் படுத்துதல் என்னும் சிறப்பு வாய்ந்த தொகுப்பின் தொடக்க மாக அது இருந்தது. தீவிரமான விருப்பத்தால், ஏக்கத்தால் அவர் காளியின், தெய்வீக அன்னையின் திவ்வியதரிசனத் தைப் பெற்றார். அதன்பிறகு அவர் ஹிந்து சமயத்தின் பல் வேறு பாதைகளைப் பின்பற்றிக் கடவுளை உணர முயன்றார். அவர் இந்த எல்லா வழிகளிலும் குறிப்பிடத்தக்க குறுகிய காலத்தில் வெற்றியடைந்தார் மற்றும் பலவழிகளில் தெய்வீகப் பேரின்பத்தை அனுபவித்தார். இறுதியாக அவர் அத்வைத வழியை மேற்கொண்டு, பிரம்மனின் இருமையற்ற ஒருமையை உணர்ந்தார். இவ்வனைத்துடன் நிறைவடை யாமல் அவர் இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ வழிகளையும் மேற்கொண்டு முதலில் அந்தச் சமயங்களைத் தோற்றுவித்த வர்களின் அகக்காட்சி பெறும் அருளைப் பெற்று, இறுதியாக ஹிந்து சமயத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றியதால் அடைந்த அதே ஆள் சார்பற்ற அனுபவத்தைப் பெற்றார். அதன்பிறகு அவர் தன்னுடைய நேரடியான அனுபவத்தின் அடிப்படையில், எல்லா சமய வழிகளும் ஒரே இலட்சியத்தை நோக்கி வழிநடத்திச் செல்கின்றன. அதாவது கடவுளின் அனுபவத்திற்கு என்னும் முடிவிற்கு வந்தார்.

அவர் வாழ்க்கையின் எஞ்சிய பகுதியானது இடைய றாமல் கடவுளுடன் கலந்து இருப்பதிலேயே கழிக்கப் பட்டது. அவர் எல்லா உயிரினங்களிலும் ஒப்புயர் வற்ற கடவுளின் வெளிப்பாட்டைக் கண்டார். பருப்பொருள் சார்ந்த கறைகளிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு ஞானம் மற்றும் துறவின் சுடர்வீசும் எடுத்துக் காட்டாகத் திகழ்ந் தார். அவர் சாதி, சமயம் அல்லது சமூக அந்தஸ்து போன்ற எத்தகைய வேறுபாடுகளும் இல்லாமல், அனைவரையும் விரும்பி, கடவுளின் குழந்தையைப் போல வாழ்ந்தார். பல மனிதர்கள், மரபு வழுவாத ஹிந்துக்களும் அறிவுஜீவிகளான இளைஞர்களும், பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களும்,

கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் கூட்டங்கூட்டமாக அவரிடம் சென்று அவருடைய ஆன்மீக ஆற்றலால் ஏற்ற மடைந்தனர். அவர் துறவிகளான சீடர்களின் குழுவிற்குப் பயிற்சி அளித்தார். அவர்கள் அவருடைய போதனைகளை எல்லா திசைகளிலும் பரப்பினர். ஸ்ரீராமகிருஷ்ணர், கடவுளை, நேரடியான, மேம்பட்ட விழிப்புணர்வு நிலையில் உணரும் கருத்தை மீண்டும் ஏற்படுத்தினார். வாழ்க்கையில் ஒழுக்க நெறிமுறைகளின் தூய்மைப்பாடு மற்றும் சமயங் களுக்கு இடையிலுள்ள இணக்கமுடைமை இருக்க வேண் டியதின் அவசியத்தையும் வலியுறுத்தி உள்ளார். இப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணருடைய செல்வாக்கு உலகம் எங்கும் மனித நடவடிக்கைகளில் பல்வேறு துறைகளில் விரிவடைந்து கொண்டிருக்கும் வட்டங்களில் பரவிக்கொண்டுள்ளது.[1]

ஸ்ரீராமகிருஷ்ணருடைய தூய்மையான வாழ்க்கைத் துணைவியரான ஸ்ரீசாரதாதேவியும் *(1853-1920)* உலக ஆச்சாரி யர்களுள் ஒருவராகக் கருதப்பட வேண்டியவர் ஆவார். இந்தியாவின் சமயம் சார்ந்த வரலாற்றில் அவர் தனித்தன்மை பெற்ற, முக்கியமானப் பெண்மணியாக விளங்குகிறார். சீதா, சாவித்திரி போன்றவர்களின் சீர்மையானது பலராலும் நன்கு அறியப்பட்டதாகும். ஆனால், பிரம்மவாதினிகளான உப நிஷதங்கள் காலத்தைச் சேர்ந்த மைத்ரேயீ, கார்கி போன்ற வர்களால் முன்வைக்கப்பட்டவை இன்னும் பரவலாக அறியப்பட வேண்டும். ஸ்ரீசாரதாதேவியின் வாழ்க்கை மகளாக, சகோதரியாக, இல்லறத்தரசியாக, ஆன்மீக ஈடுபாடு கொண்ட சாதகியாக மற்றும் துறவியாக என்னும் ஒவ்வொரு கட்டங்களிலும் சிறந்த வெளிப்பாடுடன் கூடியதாக

---

1. ஸ்ரீராமகிருஷ்ணருடைய மிகவும் அதிகாரபூர்வமான இரு வாழ்க்கை வரலாற்று நூல்களாவன: The Life of Sri Ramakrishna என்னும் மஹாத்மா காந்தியின் முன்னுரையுடன் கூடிய நூல் ஆகும் (கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1977); Sri Ramakrishna the Great Master என்னும் நூல் சுவாமி சாரதானந்தரால் எழுதப்பட்டு, சுவாமி ஜகதானந்தரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 6-வது திருத்தப்பட்டப் பதிப்பு, 2008).

இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணருடன் சேர்ந்து அவர் வாழ்ந்த தனித்தன்மை மிகுந்த வாழ்க்கையானது, கணவன் கணவனுக்காக விரும்பப்படுவதில்லை. ஆனால் ஆன்மாவின் பொருட்டு விரும்பப்படுகிறான். மற்றும் மனைவி, மனைவிக்காக விரும்பப்படுவதில்லை. ஆனால் ஆன்மாவின் பொருட்டு விரும்பப்படுகிறாள் என்னும் பண்டைக் காலத்திய உபநிஷதங்களின் குறிக்கோளை உண்மையான நடைமுறையில் உணர்வதாக இருந்தது. மிக உயர்ந்த ஞானத்தை அவர் அடைந்தபிறகு, அவர் தெய்வீக அன்னையின் ஆற்றலின் உருவாகத் திகழ்ந்தார். அதை அன்னையாக வெளிப்படுத்தினார். அவரைச் சென்றடைந்த நூற்றுக் கணக் கானவர்களுக்கு குருவாக இருந்தார். அன்னை அவர்களுக்குப் பாதுகாவலையும், ஆறுதலையும், அமைதியையும், தூய்மைப்பாட்டையும் மற்றும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்றாற்போல ஆன்மீக விழிப்புணர்வையும் அளித்தார்.

அவருடைய தொடக்கக்காலமானது, வீட்டு வேலைகளைச் செய்வதிலும், அவருடைய பெற்றோர்களைக் கவனித்துக் கொள்வதிலும், மற்றும் சகோதரர், சகோதரிகளைக் கவனித்துக் கொள்வதிலுமாகக் கழிந்தது. தட்சிணேசுவரத்தில் அவருடைய தெய்வீகக் கணவனுக்கு ஒருமுகப்பட்ட கவனத்துடன் பணிவிடை செய்தார். மற்றும் அவருடைய இளைய சீடர்களுக்குத் தாயாகவும் விளங்கினார். குருதேவரின் மறைவிற்குப் பிறகு, ஒரு சாதாரணமான கிராமத்துப் பெண்மணியைப் போல தொடர்ந்து வாழ்க்கையை மேற்கொண்டார். சமூகத்தின் எல்லா வகுப்புப்படிகளையும் சார்ந்த, சில வழி தவறியவர்களையும் உட்கொண்ட அவருடைய கணக்கற்ற சீடர்கள் மற்றும் பக்தர்களின் நலனிற்காக இடைவிடாமல் தொடர்ந்து பணிகளைச் செய்தார். இருப்பினும் அவர் அக்காலத்திலிருந்த சில சிறந்த ஆன்மீகச் சான்றோர்களால் மதிக்கப்பட்டார். மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் ஒருமைப்பாட்டிற்குக் கணிசமான அளவில் தன்

பங்கை அளித்துள்ளார். மிகச் சிறந்த சுவாமிஜியான விவேகானந்தர் கூறுகிறார்:

'அவரது வாழ்க்கையின் உட்பொருள் என்ன என்பதை நீங்கள் யாரும் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. படிப் படியாகத் தெரிந்து கொள்வீர்கள். சக்தி இல்லாமல் உலகிற்கு முன்னேற்றம் கிடையாது. இந்தியாவில் அந்த மகா சக்தியை மீண்டும் உயர்பெற்றெழச் செய்வதற்கே அன்னை தோன்றி யுள்ளார். அவரை ஆதாரமாகக் கொண்டு மீண்டும் கார்க்கி களும், மைத்ரேயிகளும் உலகில் தோன்றுவார்கள்.'[1] தூய அன்னையாரான ஸ்ரீசாரதா தேவியிடம் வெளிப்பட்ட அத் தகைய மிகச் சிறந்த தெய்வீகத் தாய்மையை உலகம் இது வரையில் கண்டது இல்லை. அவர் உலகத்திலுள்ள பெண் களின் மிகச் சிறந்த இலட்சியமாக விளங்குகிறார் மற்றும் ஆயிரக்கணக்கான சோர்வடைந்தவர்களுக்கு எப்பொழுதும் பரிவுகாட்டுபவராகவும் எப்பொழுதும் மன்னிப்பவராகவும், ஆயிரக்கணக்கான சோர்வடைந்த ஆன்மாக்களுக்கு அன்பு செலுத்தும் தாயாகவும் திகழ்ந்தார்.[2]

புனிதமகான்களின் எடுத்துக்காட்டுகள்

நாம் இப்பொழுது உலகத்திலுள்ள சில சிறந்த புனித மகான்களைக் குறித்து அறிந்து கொள்வோம். உலகத்தில் உள்ள ஒவ்வொரு சமயமும் அதிக அளவான எண்ணிக்கை யில் புனிதமகான்களைத் தோற்றுவித்துள்ளது. அவர் களுடைய அகத்தூண்டுதலை மூல அருள்போதகர்களிட மிருந்து பெற்ற இந்த புனிதமான மனிதர்கள், சாதாரணமான மனிதர்களிடம் ஆன்மீக வாழ்வு குறித்த போதனையை எடுத்துக் கொண்டு செல்வதற்கு முயற்சி செய்தனர்.

---

1. சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 9.464.

2. ஸ்ரீசாரதா தேவியின் வாழ்க்கையைக் குறித்த விவரங்களுக்கு, சுவாமி தபஸ்யானந்தர், Sri Sarada Devi, The Holy Mother; சுவாமி கம்பீரானந்தர், Holy Mother Sri Sarada Devi; சுவாமி ஆசுதோஷானந்தர், அன்னை ஸ்ரீசாரதா தேவி: விரிவான வாழ்க்கை வரலாறு (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 2008) பதிப்புக்களைப் பார்க்கவும்.

நூற்றாண்டுக்கால அளவுகளில், இந்த புனிதமகான்களின் மௌனமான செயல்பாடுகள்தான், மனித குலத்தைக் காட்டு மிராண்டிகளின் அளவிற்குத் தாழ்ந்து வீழாமல் அதனுடைய பண்பாட்டை நிலைநிறுத்திக்கொள்ளுமாறு செய்துள்ளது. போர்கள் மற்றும் குருதி சிந்துதல், படுகொலை அழிவு, முழுமையான புலன் உணர்வுகளுக்கு ஆட்பட்ட தன்மை, பேராசை போன்றவைகளுக்கிடையில் வரலாற்றின் வெறுமையான சமவெளிகளுக்கு, உலகச் சமயங்களின் இந்தச் சிறந்த புனித மகான்கள் பாலைவனச் சோலைகளைப் போல உள்ளனர்.

ப்ளோட்டினஸ் (Plotinus A.D. 204-270) தொடக்க காலத் திலிருந்த மேற்கத்திய புனித மகான்களுள் ஒருவராவார். அவர் கிறிஸ்தவர் அல்ல, ஆனால் கிறிஸ்தவ இறைமையியல் ஆய்வுத்துறையின்மீது (Theology Neo-Platonism) என்னும் தன்னுடைய தத்துவக் கொள்கையால் மற்ற எந்தச் சிந்தனை யாளரை விட அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளார். அலேக்ஸாந்திரியாவில் பிறந்தார். இளைஞன் ப்ளோட்டினஸ், முழுமையான உண்மையின் இருப்பை அறிந்து கொள்வதற்கு மிகப் பெரிய அளவில் ஆர்வம் கொண்டிருந்தான். அவன் பல பள்ளிகளின் கதவுகளைத் தட்டிவிட்டு இறுதியாக மிகச் சிறந்த தத்துவஞானியான அம்மோனியஸ் ஸாகாஸ் (Ammonius Saccas) என்பவரின் சீடன் ஆனான். அவன் இந்தியாவிற்கு வந்து இந்தியர்களின் தத்துவத்தை ஆராய்வதற்கு விரும்பி னான். ஆனால் அவ்விதம் செய்ய இயலவில்லை. அவர் உரோம் நாட்டில் தன்னுடைய முதுமைப் பருவத்தைக் கழித் தார். பல சீடர்களைத் திரட்டினார். அவர்களின் போர்பைரி (PORPHYRY) முதன்மையானவராகத் திகழ்ந்தார். போர்பைரி தன்னுடைய குருவின் வாழ்க்கை வரலாற்று நூலில், ப்ளோட்டினஸ் தன்னுடைய வாழ்க்கையில் நான்கு முறைகள் மிக உயர்ந்த மேம்பட்ட விழிப்புணர்வு நிலையை அடைந்த தாகக் குறிப்பிட்டு உள்ளார். அவர் மரபில் பின் தொடர்ந்து வந்த ப்ரோக்ளஸ் (Proclus) ப்ளோட்டினஸ்ஸிற்கு இந்தப் புகழுரையை வழங்கியுள்ளார்.

'அவர் எப்பொழுதும் தூய்மையாக வைத்துக் கொண்ட அவருடைய ஆன்மாவானது, அடிப்படையான மெய்ம்மை யையே நோக்கிப் பறந்தது. அதைப் பிரார்த்தித்தது மற்றும் அதைப் பூஜித்தது. அவர் எப்பொழுதும் சதையாலும், இரத்தத் தாலும் ஊட்டம் அளிக்கப்படும் இந்த கொந்தளிக்கும் அலை களுடன் கூடிய விலங்குத்தன்மை மிகுந்த வாழ்விற்கு மேலே தன்னை உயர்த்திக் கொள்வதற்கு பெரு முயற்சி செய்தார். இவ்விதம் இந்த தெய்வீகமான மனிதருக்கு அவருடைய எண்ணங்கள் எப்பொழுதும் ஒப்புயர்வற்ற கடவுளை நோக்கியே மற்றும் கண்ணுக்குப் புலப்படாத உலகத்தை நோக்கியே இருந்தன. அவருடைய உருவம் புலப்படும் உருவமோ அல்லது அறிவால் உணரத்தக்க உருவமோ இல்லை. ஏனென்றால் அவர் அறிவிற்கும் வாழ்க்கைக்குமே மேலானவர் ஆவார்.'[1]

ப்ளோட்டினஸ் அவர்களே இந்த ஒருங்கிணைந்த நிலையைக் குறித்து, 'எனவே இது கடவுள்களின் மற்றும் தெய்வீக மகிழ்ச்சி நிறைந்த மனிதனின் வாழ்க்கை ஆகும். எல்லா உலகக் கவலைகளிலிருந்தும் விடுபடுதல் ஆகும். மனித இன்பங்கள்கூட வராமல் இருக்கும் ஒரு வாழ்க்கை ஆகும்.' மற்றும் தனிநிலையிலிருந்து கடவுளின் நிலைக்குத் தனிநிலையின் ஓட்டம் உள்ளது. அவர் மரணமடைவதற்கு முன்பு கூறிய இறுதிச் சொற்கள் இவையாகும். 'நான் என்னுள் உள்ள தெய்வத் தன்மையை எல்லாம் வல்ல தெய்வத்திற்கு மீண்டும் ஒப்படைக்கிறேன்.'

புத்தரின் சிறந்த சீடர்களுள் ஒருவரான உபகுப்தர் மிகவும் புனிதமான மனிதராவார். அவருடைய பயண ஓட்டத்தில், அவர் நல்ல நடத்தை இல்லாத, அழகிய இனிமையான பெண்ணைச் சந்தித்தார். அவள் அவரை அவளுடைய விருப்பத்திற்கு உகந்தவராக இருக்க வேண்டும் என்று

---

1. W.R. Inge, Mysticism in Religion (London, Hutchinsons University Library, Prince's Gate) *பக்கம் 106.*

விரும்பினாள். உபகுப்தர், 'உடல் சார்ந்த இன்பங்கள், இறுதி விளைவாக துன்பங்களையே அளிக்கும்' என்று கூறி அங்கிருந்து அகன்றார். ஆனால் அந்தப் பெண்மணிக்கு அவர் தேவைப்பட்டால் வருவதாக உறுதியளித்தார். ஆண்டுகள் உருண்டோடின. அந்தப் பெண்மணி ஒரு நோய்க்கு இரை யாகி இருந்தாள். அந்த நோய் அவளுடைய அழகை அழுகிய சிதைந்த சதைப் பிண்டமாகும் வரையில் பாழ்படுத்தியது. அவள் தீவிரமாக உபகுப்தரைப்பறறி நினைத்தாள். உபகுப் தரும் உடனடியாகத் திரும்பி வந்தார். 'என்னுடைய உடல் அழகாகவும், பட்டுத் துணிகளாலும், நகைகளாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்த பொழுது நீங்கள் வருவதற்கு மறுத்தீர்கள். நான் மிகவும் வெறுக்கத்தக்க நிலையில் இருக் கும் பொழுது ஏன் வந்தீர்கள்'? என்று கேட்டாள். அதற்கு உபகுப்தர், 'சகோதரியே, யார் பார்க்கிறானோ மற்றும் புரிந்து கொள்கிறானோ, நீ எதையும் இழக்கவில்லை. எனக்கு உன் மீது உள்ள அன்பானது, வெளிப்புற அழகை மட்டும் பயனற்றுச் சார்ந்துள்ள அன்பை விட மிகவும் ஆழமானது ஆகும்.' அவளுடைய கண்கள் ஒளியைப் பெற்றன. நம்பிக் கையை அவள் மீண்டும் பெற்றாள். உண்மையாக அவளால் புத்தருடைய ஞானமடைதல் என்னும் போதனையைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அவள் ஞானத்தையும், அமைதி யையும் அடைந்தாள்.

கிறிஸ்தவ ஞானிகள்

கிறிஸ்தவ சமயமானது பல ஞானிகளைத் தோற்று வித்துள்ளது. ஏசுநாதரின் சீடர்களைத் தவிர இவர்களைப்பற்றி நாம் மிகவும் குறைவாகவே அறிந்துள்ளோம். மிகவும் தொடக்க காலத்திலிருந்த ஞானி புனிதமகான் பால் (St. Paul) ஆவார். அவர் இளைஞனாக இருந்தபொழுது கிறிஸ்தவ சமயத்தை வன்மையாக எதிர்த்தார் என்று கூறப்படுகிறது. அதன்பிறகு ஒருநாள் அவர் டமாஸ்கஸ்ஸிற்குச் (Damascus) சென்று கொண்டிருந்த பொழுது அவருக்கு ஒரு அற்புத மான ஆன்மீக அனுபவம் ஏற்பட்டது. அவர் மிகவும்

சுடர்விடுகின்ற ஒளியைக் கண்டார். அவர் மூன்று நாட்களுக்குக் குருடாக ஆகும் அளவிற்கு அந்த ஒளி அவரை விஞ்சி நின்றது. மற்றும் அவர் ஏசுநாதரின் குரலைக் கேட்டார். இது அவரைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றியது. மற்றும் அவர் அவருடைய எஞ்சி இருந்த வாழ்நாளை மனிதருக்கான அன்பின் நற்செய்தியைப் (gospel) போதிப்பதில் செலவிட்டார். அவருடைய முழுமையான வாழ்வு, கடவுளையே மையமாகக் கொண்டிருந்தது. 'அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கிறோம், இயங்குகின்றோம். இருக்கின்றோம்.'[1]

'எனவே இனி வாழ்பவன் நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்' என்று அவர் கூறியுள்ளார்.[2] அவர் பரவலாகப் பயணம் செய்தார். மற்றும் மனிதர்களுக்குக் கடவுளை மையமாகக் கொண்ட தூய்மையான மற்றும் தொண்டு மனப்பான்மை உடைய வாழ்க்கையை மேற்கொள்ள உதவ முயற்சித்தார்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனிதமகான் பிரான்ஸிஸ் ஆப் அஸ்ஸிஸி, (St. Francis of Assisi) *(1181-1226)* கிறிஸ்தவ உலகின் மிகவும் சிறந்த புனிதமகான்களுள் ஒருவராவார். அவர் தன்னுடைய இளமையை நண்பர்களுடன் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் கழித்தார். ஆனால் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்ட பிறகு, அவர் ஆன்மீக வாழ்விற்கு மாறினார் மற்றும் உலகையும் துறந்தார். ஒருநாள் ஒரு பாழடைந்த தேவாலயத்தில் பிரார்த்தித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு தெய்வீகக் குரல் அவரை, அந்த தேவாலயத்தைச் செப்பனிடுமாறு ஆணையிட்டதைக் கேட்டார். அவர் தனியொருவராகவே, கட்டடத்திற்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினார். இவ்வனைத்தையும் அவர் தலையில் சுமந்து கொண்டு செல்ல வேண்டி வந்தது. அவர் நல்ல நகைச்சுவையுடன் அவர் உடலை 'சகோதரக் கழுதை' என்று கூறுவார். உலகியலிலிருந்து அவர் தன்னை ஒதுக்கிப்

---

1. பைபிள்—Acts, *17:28.*

2. பைபிள்—கலாத்தியர், *2:20.*

பிரித்துக் கொண்டது மிகவும் முழுமையானதாக இருந்தது. அது அவருக்கு மிகப்பெரிய அக விடுதலையை அளித்தது. மற்றும் அவர் எப்பொழுதும் பெரிய அளவில் மகிழ்ச்சி நிரம்பியவராக இருந்தார். இந்த அக ஆன்மீக இன்பத்தைக் கட்டுப்படுத்த இயலாமல் அவர் பாடுவார் மற்றும் ஆடுவார். அந்தப் பாடல்கள் பிற்காலத்தில் புகழ்பெற்றன.

அவருடைய ஆன்மீக நோக்கு அவரைப் பறவைகள், விலங்குகள், செடிகள் மற்றும் உயிரற்ற பொருட்களிடத்திலும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும்படிச் செய்தது. அவர் அவற்றுடன் 'சகோதரர் சூரியன்', 'சகோதரி சந்திரன்', 'சகோதரர் ஓநாய்' என்று பேசுவது வழக்கம். ஒருநாள் அவர் ஒரு விறகு வெட்டி, ஒரு மரத்தை வெட்டிக் கொண்டிருப்பதைக் கண்டார். பிரான்ஸிஸ் அவனிடம், 'சகோதரனே, முழு மரத்தையும் வெட்டி விடாதே. ஆனால், அதற்கு வளர்வதற்கு ஒரு வாய்ப்பை அளிப்பாய்' என்று கூறினார். மற்றும் உழைப்பிற்கு ஊதியமளிக்கும் வழியில் அவர் பிச்சை ஏற்றுப் பெற்ற உணவிலிருந்து சிறிதளவு உணவை அவனுக்கு அளித்தார். அவர், எழுதிய சொற்களின் மீது பெருமதிப்பு வைத்திருந்தார். அவர் எங்கேயாவது வழியில் தோலில் எழுதப்பட்டிருந்த கையெழுத்து ஏட்டைக் கண்டால் (parchment) மற்றவர்கள் அதை மிதிக்காதபடி அதை மிகவும் கவனத்துடன் ஓரமாக வைப்பார். யாராவது அவரிடம், அவர் அவ்விதம் காப்பாற்றிய கையெழுத்து ஏடானது, புறசமயத்தைச் சார்ந்தவர்கள் எழுதியதாக இருக்கக் கூடும் என்று கூறினால், பிரான்ஸிஸ், 'எல்லாச் சொற்களுமே கடவுளின் வாயிலிருந்தே வருகின்றன' என்று கூறுவார்.

அவர் சிறந்த 'Franciscan Order' என்னும் துறவிகளின் அமைப்பை ஏற்படுத்தினார். அவர்கள் மிகவும் ஏழ்மையான வாழ்க்கையை வாழ்ந்தனர். இது ஒருவருக்கு இந்தியாவில் சஞ்சரிக்கும் துறவிகளை நினைவுபடுத்துவதாக இருக்கும். அவருக்கு நேர்த்தியான உடல் வனப்பு இல்லாமல் இருப்பினும் (அவர் அவரைக் கறுப்புப் பெட்டைக் கோழி என்று அழைத்துக் கொள்வார்) மனிதர்களின் மனங்களில்

மாறுதல்களை ஏற்படுத்தும் ஆற்றல் இருந்தது. நூற்றுக்கணக் கானவர்கள் அவரைப் பின்பற்றினார்கள். அவருடைய வாழ்க்கை நிறைவடையும் சமயத்தில் அவர் குருடானார். மற்றும் படுத்தபடுக்கையானார். ஆனால் அவர் அவருடைய வேதனைகளை எப்பொழுதும்போல மனநிறைவுடன் பொறுத்துக் கொண்டார். அவருக்கு மரணபயம் இருக்க வில்லை. மற்றும் அவர் மரணத்தை 'சகோதரி மரணம்' என்று வரவேற்றார். அவர் வாழ்க்கையானது முழுமையாக தெய்வப் பணிக்காக நேர்ந்து கொண்டதாக இருந்தது. மற்றும் பிரான்ஸிஸ் அவரைக் கடவுளின் பணிவுமிகுந்த கருவி யாகவே எண்ணிக் கொண்டு இருந்தார். கீழே கொடுக்கப் பட்டுள்ள மிகவும் புகழ் பெற்ற அவருடைய பிரார்த்தனைகள் அவருடைய முழுமையான தியாகத்தைக் காட்டவல்லதாக உள்ளன.

'இறைவனே, என்னை உன்
அமைதியின் கருவியாகச் செய்வாய்!
எங்கு பகைமை உள்ளதோ, அங்கு
என்னை அன்பை விதைக்கச் செய்வாய்!
எங்கு தீங்கு உள்ளதோ, அங்கு
என்னை மன்னிப்பை விதைக்கச் செய்வாய்!
எங்கு சந்தேகம் உள்ளதோ! அங்கு
என்னை நம்பிக்கையை விதைக்கச் செய்வாய்!
எங்கு வருத்தம் உள்ளதோ, அங்கு
என்னை மகிழ்ச்சியை விதைக்கச் செய்வாய்!
தேற்றுவதற்கு, தேற்றப்பட வேண்டியோர் மிகுதியாக,
புரிந்து கொள்வதற்கு, புரிந்து கொள்ளாதவை மிகுதியாக,
அன்பு புரிவதற்கு அன்பு புரியப்பட வேண்டியோர் மிகுதியாக,
என்று நான் கேட்க வேண்டாமென்று,
ஓ தெய்வீகக் குருவே! அருள் புரிவாய்.
ஏனெனில், கொடுப்பதில்தான் நாம் பெறுகிறோம்.
மன்னிப்பதில்தான் நாம் மன்னிக்கப்படுகிறோம்.
இறப்பதில்தான் நாம் நிலைத்த
வாழ்விற்காகப் பிறக்கிறோம்.

புனிதமகான் தாமஸ் அக்வினாஸ் (St. Thomas Aquinas) மற்றொரு சிறந்த ஞானியாவார். அவருக்குக் கத்தோலிக்க கிறிஸ்தவ வழிபாட்டின்மீது மிகுதியான தாக்கத்தை ஏற் படுத்தும் ஆற்றல் இருந்தது. அவர் உயர்குடியைச் சார்ந்த சிறந்த புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் அவ ருக்கு அவருடைய உறவினர்களைப் போல அல்லாமல், தூய்மைப்பாட்டிலும் ஆன்மீக வாழ்வின் மீதும் உணர்ச்சி கனிந்த அன்பு இருந்தது. அவருக்குப் பதினேழு வயது ஆன பொழுது, சீற்றம் கொண்ட அவரது சகோதரர்கள் அவரை ஒரு தனியான அறையில் சிறை வைத்தனர். மற்றும் பல வழிகளில் மருளடையச் செய்ய முயற்சி செய்தனர். அவர் மருட்சிகளை யெல்லாம் விஞ்சி மேம்பட்டதுடன் மட்டுமின்றி, தன் னுடைய நேரத்தை ஆழ்ந்த பிரார்த்தனை செய்வதிலும், படிப்பதிலும் செலவிட்டார். இறுதியாக அவர் விடுவிக்கப் பட்டார். பிறகு செயின்ட் டாமினிக் என்பவரின் துறவியர் குழுவில் (Dominicans) சேர்ந்தார். அவர் விரைவில் அக் காலத்திய தலைசிறந்த இறைமை இயல் வல்லுனர் ஆனார். அவருடைய புத்தகமான Summa Theologica என்பது கத்தோலிக்க இறைமை இயலின் மிகச் சிறந்த தகுதிவாய்ந்த நூலாக உள்ளது. அவர் அந்த நூலை முடிக்கும் சமயத்தில் அவருக்கு ஒரு அற்புதமான ஆன்மீக அனுபவம் ஏற்பட்டது. அதனால் எழுதுவதற்கு மறுத்துவிட்டார். அவர் தன்னுடைய தலைசிறந்த படைப்பை முடிக்காமலேயே விட்டுவிட்டார். அதைப்பற்றி அவரிடம் கேள்வி கேட்கப்பட்ட பொழுது அவர், 'அத்தகைய மறைநிலை மெய்ம்மைகள் எனக்கு அருளப்பட்டுள்ளன. நான் இதுவரை எழுதியுள்ள அனைத்தும் மதிப்பற்றனவாக தோன்றுகின்றன. வைக்கோலைப் போலப் பயனற்றதாக உள்ளது' என்று கூறினார்.

உங்களில் சிலர் 'The Practice of the Presence of God' என்னும் சிறிய புத்தகத்தைப் படித்து இருக்கக்கூடும். அது சகோதரர் லாரன்ஸ் *(1611-1691)* அவர்களின் உரையாடல் களையும், கடிதங்களையும் உட்கொண்டது ஆகும். அவர் ஏழைப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர் ஆவார். அவருக்குப்

பதினெட்டு வயது ஆன பொழுது குளிர்காலத்தில், இலைகள் எல்லாம் உதிர்ந்து இருந்த ஒரு மரத்தைப் பார்த்தபொழுது அவர் ஒரு மாற்றத்திற்கு ஆட்பட்டார் அவர். சிறிதுகாலத் திற்குப்பிறகு மீண்டும் அந்த மரத்தில் புதிய இலைகளையும், மற்றும் மலர்களையும் தோற்றுவிக்கக் கூடிய வாழ்க்கையின் ஆழ்ந்த புதிரையும் ஆற்றலையும் குறித்துச் சிந்திக்கத் தொடங் கினார். அந்த எண்ணம் அவரை உலகியல் வாழ்விலிருந்து விடுவித்து வாழ்க்கையின் எல்லா உணர்வுகளின் ஆதாரமாக வும், உள்ள கடவுளை நாட வைத்தது. அவர் வளர்ந்த பிறகு, சிறிது காலத்திற்குப் காலாட்படைத்துறையிலும் (Army) மற்றும் உயர்குடிமகனின் தொண்டிலும் மற்றும் இறுதியாக பாரீஸிலுள்ள, துறவியர் மடத்தில் (Carmelite) சமையல் செய்யும் பணியிலும் பணிபுரிந்தார். அவர் தன் ஆன்மாவைக் கடவுளில் பொதித்து வைத்துப் பணியாற்றினார். அவர் சமை யல் அறையில் சாதாரணமான கடமைகளில் ஈடுபட்டிருந்த பொழுதே, பெரிய அளவில் ஆன்மஞானத்தை அடைந்தார். அவர் மிக உயர்ந்த படித்தரத்தைச் சார்ந்த ஆன்ம ஞானத்தை அடைந்தார். சமூகத்தில் அவருக்கு தாழ்ந்த நிலை இருந்த பொழுதிலும் அவருடைய புனிதத்தன்மைக்காக அவர் பல ராலும் அறியப்பட்டவர் ஆனார். உயர்குடிமக்களும் மற்றும் தேவாலயத்தில் உயர் பதவியிலிருந்தவர்களும் அவருடைய அறிவுரையை நாடினர். அவருடைய மனநிலையைக் குறித்து அவர், ‘நான் பணிபுரியும் நேரம், நான் பிரார்த்தனை செய்யும் நேரத்திலிருந்து வேறுபட்டது அல்ல. மற்றும் என்னுடைய சமையலறையின் இரைச்சல் மற்றும் உரத்த ஒலிகளுடன் பல மனிதர்கள் ஒரே நேரத்தில் என்னைப் பல்வேறு காரணங் களுக்காக அழைத்த பொழுது நான், மண்டியிட்டுக் கொண்டு தெய்வீகமான புனிதச் சடங்கில் இருப்பது போன்ற, மிகுதி யான அளவில் அமைதியை உடையவனாக இருந்தேன்.[1]

கிறிஸ்தவ சமயத்தில் புனிதமகான் இக்னேஷியஸ் லயோலா (St. Ignatius Loyola) (1491-1556), புனிதமகான் Teresa

1. சகோதரர் லாரென்ஸ், The Practice of the Presence of God (London, The Epworth Press, 1957) பக்கம் 23.

of Avila (1515-1582), புனிதமகான் St. John of the cross (1542-1591) போன்ற மற்ற புனிதமகான்களும் இருக்கின்றனர். தேவாலய வாழ்க்கையின் குறுகிய சுவர்களுக்குள் இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது அக விடுதலையை அவர்கள் அனைவரும் உணர்ந்ததுதான் இந்த புனிதமான மனிதர்களின் தனிச் சிறப்பு ஆகும். தேவாலயத்தின், தனிப் பட்ட சமயக் குழுவின் கருத்துக்களில் தங்கள் ஆன்மாக்களைச் சுருக்கிக் கொள்ளாமல் இருந்தது தனிச் சிறப்பு உடையது ஆகும். வாழ்க்கையானது ஞானிகளுக்கு அபூர்வமாகவே எளிதாக இருந்தது. முக்கியமாக வரலாற்றின் இடைக்காலத் தில் ஞானிகள் அவர்கள் சாத்தானின் கருவி என்று முத்திரை யிடப்பட்டு உயிருடன் எரிக்கப்படும் தண்டனையின் அபாயத் திற்கு ஆட்பட்டனர். செயின்ட் ஜான் ஆப் தி கிராஸ் ஒருமுறை அவருடைய சகோதர துறவிகளால் எட்டு மாதங்களுக்கு ஒரு குறுகிய இருட்டு அறையில் சிறைப்படுத்தப்பட்டார். குப்பை அழுக்குகளால் சூழப்பட்டிருந்த அந்த நிலையிலும் அவர் அவருடைய நேரத்தைத் தொடர்ந்து பரவச நிலையிலேயே செலவிட்டார். அவருடைய புகழ்பெற்ற 'மனிதன் கடவுளுக் காகப் படைக்கப்பட்டு இருக்கிறான். மற்றும் தன்னுடைய தனித்தன்மையையும் கடவுளிடமிருந்து வேறுபட்ட தன்மையையும் அகற்றிவிடுவதற்கு ஆணையிடப்பட்டுள் ளான்' என்று கூற்றானது பொதுவாக கிறிஸ்தவ ஞானிகளின் கருத்தின் குறியீடாக உள்ளது.

ஸுபி ஞானிகள்

ஒரு இஸ்லாமிய ஞானி, பேக்ட்ரியாவில் (Bactria) இருந்த அரசர் ஆடமிடம் (Adam) வந்து, 'நான் வெளி நாட்டைச் சேர்ந்தவன். உங்களுடைய வழிப்போக்கர் தங்கும் மனையில் (rest-home) தங்க விரும்புகிறேன்' என்று கூறினார். அதற்கு அரசர், அவருடைய அரண்மனை வழிப் போக்கர் தங்கும் மனை என்று அழைக்கப்படக் கூடாது என்று ஆட்சேபித்தார். 'நீங்கள் இங்கு வாழ்வதற்கு முன்பு, இது யாருக்கு உரியதாக இருந்தது?' 'என் தந்தைக்கும், அதற்கு

முன்பு அவருடைய தந்தைக்கும் உரியதாக இருந்தது.' 'பிறகு நீ இருக்கும் இடத்தை, மனிதர்கள் அவர்கள் இறப்பதற்கு முன்பு சிறிது காலத்திற்கு வாழும் தங்குமிடம் என்பதைக் காட்டிலும் அதிகமாக வேறு எப்படிக் கருத இயலும்?' அதன் பிறகு அரசன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினான். அதன்பிறகு காட்டின் ஆழமான பகுதியில் வேட்டையாடச் சென்ற பொழுது அரசனுக்கு 'விழிப்படைவாய், விழிப்படைவாய். இறப்பதற்கு முன்பு நீ விழிப்படைவாய்!' என்று குரல் கேட்டது. அதன் பயனாக அரசன் உலகை முற்றிலும் துறந்து துறவியானார். அவர் கடுமையான ஆன்மீக நெறிமுறை களை மேற்கொண்டார். அவர் தெய்வீக விழிப்புணர்வு நிலையை அடைந்தார். மற்றும் அவர் இதயமானது அன்பால் நிறைந்தது. ஆன்ம ஞானம் அவருக்கு முக்தியை அளித்தது.

பொதுவாகக் கூறினால் இஸ்லாமிய சமயம் துறவறத்தை யும் அகநிலை உணர்வையும் ஏற்பது இல்லை. இருப்பினும் அது வரலாற்றின் இடைக்காலத்தில் பல சிறந்த புனிதமகான் களைத் தோற்றுவித்துள்ளது. அவர்களில் பெரும்பான்மை யோர் ஞானிகள் ஆவார்கள். இஸ்லாமிய ஞானிகள் ஸூபிகள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களுள் மிகவும் முற் பட்ட காலத்தவர் ஒரு பெண் ஆவார். அவர் 'ராபியா' (Rabia of Basra) (717-801) என்று அழைக்கப்படுகிறார். சிறுவய திலேயே அனாதையான அவர், ஒரு தீயமனிதனால் கடத்திச் செல்லப்பட்டு ஒரு அடிமைப் பெண்ணாக விற்கப்பட்டார். அவளுடைய புதிய எஜமானனும் அதேபோல கொடுமைக் காரனாக இருந்தான். ஒருநாள் அவன் இந்த ஏழைப் பெண்ணைச் சுற்றி பொதுநிலையை மீறிய ஒரு ஒளியைக் கண்டு பயந்து, அவளை விடுதலை செய்தான். அவள் சிறிது காலத்தை ஒரு பாலைவனத்தில் தனிமையாகக் கழித்தாள். அதன் பிறகு பாஸ்ராவில் (ஈராக்கில் உள்ளது) ஒரு துறவி யைப்போல வாழ்ந்தாள். அவளுடைய ஆன்மீக அனு பவங்கள் அவளை இவ்வுலகத்தின் இருமைகளுக்கு அப் பாற்பட்ட நிலையில் வைத்திருந்தது. அவள் சாத்தானை வெறுக்கிறாளா என்று அவளிடம் கேட்கப்பட்டபொழுது

அவள், 'இல்லை. நான் கடவுளின் மீது கொண்டிருக்கும் அன்பானது என் இதயத்தில் நான் யாரையும் வெறுப்பதற்கு இடம் அளிப்பதில்லை' என்று கூறினாள்.

'ஓ இறைவனே, நரகத்திற்குப் பயந்து கொண்டு உன்னை நான் வழிபட்டால் என்னை நரகத்திலேயே எரிப்பாய். சொர்க்கம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் நான் உன்னை வழிபட்டால் என்னை அங்கு சேர்த்துக் கொள் ளாமல் ஒதுக்கி வைப்பாய். நான் உன்னை உனக்காகவே வழி பட்டால், எனக்கு உன் நிலைத்த அழகைக் கொடுக்க மறுக் காமல் இருப்பாய்' என்பது அவருடைய மிகவும் புகழ் பெற்ற பிரார்த்தனை ஆகும்.

சூபி ஞானிகளின் மிகச் சிறந்தவர் மன்ஸுர் அல்-ஹல்லாஜ் (Mansur AL-HALLAJ) (858-922) ஆவார். ஹல்லாஜ் என்றும் எளிமையுடன் அழைக்கப்பட்டார். அவர் பர்ஷியாவின் தென் பகுதியில் பிறந்தார். அவர் சிறுவனாக இருந்தபொழுதே அவரிடம் அகநிலை உணர்வு சார்ந்த இயல்பு இருந்தது. மற்றும் பல சூபி ஞானிகளிடமிருந்து அவர் அறிவுரைகளைப் பெற விரும்பினார். அவர் இளைஞ னாக இருந்தபொழுது, பாக்தாத்திற்குச் சென்று, அக்காலத் தின் மிகவும் புகழ்பெற்று விளங்கிய Junayd என்னும் குருவிடம் சீடராகச் சேர்ந்தார். சில ஆண்டுகள் மெக்காவில் தனிமையாகக் கழித்த பிறகு, கடல் வழியாக இந்தியாவிற்குப் பயணத்தை மேற்கொண்டார். அந்தச் சமயத்தில் இந்தியா முகம்மதியர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருக்கவில்லை. ஹல்லாஜ்தான் இந்தியாவிற்கு முதலாக வருகை தந்த சூபி ஞானிகளுள் ஒருவராவார். அவர் அங்கு ஹிந்து சமய ஞானி களிடம் நீண்ட விவாதங்களை மேற்கொண்டிருக்கக் கூடும். அவர் பாக்தாத்திற்குத் திரும்பிச் சென்றவுடன் போதிக்கத் தொடங்கினார். அவருடைய கோட்பாட்டில் மிகவும் புகழ் பெற்ற மற்றும் அடிப்படையாக இருந்தது. 'நான்தான் உண்மை' என்பது ஆகும். அது வேதாந்தக் கருத்தான 'நான் தான் பிரம்மன்' என்பதுடன் மிகவும் ஒத்துக் காணப்படுகிறது. சீற்றம் கொண்ட இறைமைஇயல் வல்லுனர்கள் அவரைக்

கைது செய்து, நீண்ட நாளைய வழக்கு விசாரணைக்குப் பிறகு அவரைச் சித்திரவதை செய்து மிகவும் காட்டு மிராண்டித் தனமாகத் தூக்கிலிட்டனர். ஆனால் அவருடைய ஆன்மாவின் தெய்வத்தன்மை குறித்த கருத்துக்களும் பரம்பொருளுடன் இரண்டறக் கலத்தல் என்பது நடக்கக் கூடியதுதான் போன்ற கருத்தும் பல நூற்றாண்டுகளுக்கு இஸ்லாமிய இறைநிலை இணைவுப்பான்மையைக் கவர்ந்தது.

மற்றொரு சிறந்த இஸ்லாமிய ஞானியும், கவிஞரும் ஜலாலுதின் ரூமி (Jalalud-Din-Rumy) *(1207-1273)* ஆவார். அவர் பர்ஷியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பால்க் (Balk) என்னும் ஊரில் பிறந்தார். அவர் சிறுவனாக இருந்தபொழுது அவருடைய தந்தை நாட்டை ஆளும் அரசனின் வெறுப்பிற்கு உள்ளானார். அவர் குடும்பத்துடன் அவர் சொந்த ஊரைவிட்டு வெளியேற வேண்டி வந்தது. நீண்ட காலம் அலைந்த பிறகு அவர் குடும்பம் துருக்கிஸ்தானத்தில் உள்ள Quoniya என்னுமிடத்தில் தங்கினார். ஜலால் அரேபிய பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார். மற்றும் மிகச் சிறந்த அறிஞராகப் புகழ்பெற்றார். ஆனால் தேசசஞ்சாரம் செய்துகொண்டிருந்த ஒரு கடுநோன்புடைய இஸ்லாமியருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அது அவருடைய வாழ்க்கையில் திடீரென்று மாற்றத்தை ஏற்படுத்தியது. அப்பொழுதிலிருந்து அவர் ஆழ்ந்து சிந்திப்பதில் நீண்ட நேரத்தைச் செலவிட்டார். அவருடைய அன்பிற்குரிய குருவின் ஞாபகார்த்தமாக அவர் புதிய சமய அமைப்பை நிறுவினார். அதற்கு மௌலவிகள் என்பது பெயராகும். அவர்கள் ஆன்மீகப் பரவசநிலையை ஏற்படுத்த செய்வதற்காக ஒரு வகையான சுழன்று ஆடும் நடனத்தை மேற்கொள்வார்கள். அவர் மத்னவி (Mathnavi) என்னும் நூலையும் உட்கொண்டு பல நூல்களை எழுதியுள்ளார். மத்னவி என்பது எல்லாக் காலத்திற்கும் மிகச் சிறந்த ஆன்மீக அகநிலை உணர்வு சார்ந்த கவிதைகளாகக் கருதப்படுகிறது.

ஜலாலுதின் ரூமி, கடவுளை மட்டுமே ஒரே மெய்ப் பொருளாகக் கருதினார். புலன்களால் உணரத்தக்க இந்த உலகத்தைக் கடவுளின் நிழலாகக் கருதினார். அவர்

ஆன்மாவின் பிறப்பிற்கு முற்பட்ட உளதாம் தன்மையை நம்பினார். ஆன்மா இறுதியாகத் தன்னைக் கடவுளுடன் இணைத்துக் கொள்வதற்கு முன்பு, கீழ்நிலையிலிருந்து மனித உடலுடன் கூடிய வாழ்வை அடையும் வரை, தொடர்ச்சியாக கனிப் பொருள், காய்கறி, விலங்கு, மனிதன், தேவதூதர் என்று பல நிலைகளை அடைகிறது என்பது அவருடைய கருத்து ஆகும். ஒரு மனிதன் தான் நேசிக்கும் பெண்ணின் வீட்டுக் கதவைத் தட்டும் தொடர் உருவகம் மிகவும் புகழ் பெற்றது ஆகும். உள்ளிருந்த குரல் 'யார் அங்கே' என்று கேட்கிறது. காதலன், 'நான்தான்' என்று கூறுகிறான். கதவு திறக்கப்படவில்லை. அதற்குப் பிறகு அவன் மீண்டும் வந்து தட்டுகிறான். வழக்கமாகக் கேட்கப்படும் கேள்விக்கு அவன், 'அது நீயே' என்று கூறுகிறான். கதவு திறக்கப்படுகிறது, அகங் கார உணர்வு இருக்கும் வரையிலும் ஆன்மாவிற்கும் கடவு ளுக்கும் முழுமையான இணைவு ஏற்பட இயலாது என்பது இந்தத் தொடர் உருவகத்தின் பொருளாகும். அவருடைய பல சீடர்களின் மூலமும் அவருடைய படைப்புகளின் மூலமும் இஸ்லாமிய மறைமெய்ஞ்ஞானக் கோட்பாட்டின் வளர்ச்சி பெரிய அளவில் பயன் அடைந்துள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடர்கள்

நாம் இப்பொழுது ஸ்ரீராமகிருஷ்ணருடைய மிகச் சிறந்த சீடர்களிடம் வருவோம். அவர்கள், அவர்களாகவே ஒரு பிரிவாக உருவாகிறார்கள். அவர்களுடைய திருவடிகளின் அருகில் அமரும் சிறப்பு உரிமையைப் பெற்றிருந்த நாங்கள் அவர்களிடம், தனித்த தன்மையுடன் கூடிய பண்டைக் காலத்தில் ஆன்மீகம் மற்றும் சமூக விழிப்புணர்வின் ஒருங்கிணைந்த நிலையையும், கிழக்கு மற்றும் மேற்கின் சிறப்புக்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த நிலையையும், கடவுள் மீது கொண்ட தீவிரமான அன்பையும், மனிதன் மீது கொண்ட தீவிரமான அன்பையும் கண்டுகொண்டோம். மனிதனிடம் அவர்கள் கொண்டிருந்த அன்பானது, கடவுள் மீது அவர்கள் கொண்ட அன்பின் வெளிப்படுத்தலாக

உள்ளது. அவர்கள் எல்லா ஆண்களிடமும், பெண்களிடமும் கடவுளைக் கண்டனர்.

சுவாமி விவேகானந்தர் *(1863-1902)*, ஸ்ரீராமகிருஷ்ண ருடைய மிகச் சிறந்த சீடராவார். குருதேவர் சுவாமி விவே கானந்தரை, நித்யசித்தர்களின் குழுவில் படித்தரப்படுத்தி யுள்ளார். மனிதகுலத்தின் நன்மைக்காகவே அவர்கள் இவ் வுலகத்தில் தோன்றுகின்றனர். அவருடைய குழந்தைப் பருவத்திலேயே அவர் எதிர்காலத்தில் மேன்மை அடைவார் என்னும் அடையாளங்களை வெளிப்படுத்தினார். வழக்கத் தில் இல்லாத அறிவுத்திறமை, தைரியம், துணிவு மற்றும் ஒருமுகப்பட்ட தன்மைகளை வெளிப்படுத்தினார். அவர் கல்லூரிக் கல்வியின் தாக்கத்தால், வளர் இளமைப் பருவத் தில் சிறிது காலத்திற்கு உலகாயதவாதியாக இருந்தார். ஆனால் அவருடைய பதினெட்டாம் வயதில் ஸ்ரீராமகிருஷ்ண ருடன் ஏற்பட்ட தொடர்பானது, அவருடைய வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. குருதேவரின் வழிகாட்டுதலில் அவர் தீவிரமான சாதனையை மேற்கொண் டார். மற்றும் 23-ஆம் வயதில், மிகவும் உயர்ந்த ஆன்மீக அனுபவமான நிர்விகல்ப ஸமாதி நிலையில் இருக்கும் அருள் அவருக்கு வாய்த்தது.

குருதேவர் இவ்வுலகை விட்டு மறைந்தவுடன் அவ ருடைய கட்டளையின்படி, ஸ்ரீராமகிருஷ்ணருடைய இளைய சீடர்களை ஒருங்கிணைத்து பொதுப்பணிகளை மேற்கொள் ளும் துறவிகள் சார்ந்த கூட்டமைப்பாக உருவாக்கினார். அதன்பிறகு, அமெரிக்காவிற்கும், இங்கிலாந்திற்கும் மற்றும் உலகம் முழுவதற்கும் கடல்தாண்டிய பயணத்தை மேற் கொண்டார். அவர் அமெரிக்க சமுதாயத்தினரின் இடையில் அவருடைய வேதாந்த போதனையின்மூலம் ஒரு குண்டைப் போல திடீரென்று தோன்றினார். நான்கு ஆண்டுகள் காலத் திற்குப் போதனை செய்யும் செயலை மேற்கொண்ட பிறகு அவர் அவருடைய தாய் நாட்டிற்குத் திரும்பினார். அவருக்கு அவருடைய தாய் நாடு ஒரு வீரனுக்குரிய வரவேற்பை அளித்தது. அவர் கொழும்புவிலிருந்து காஷ்மீர்

வரையிலுமுள்ள பல இடங்களில் சொற்பொழிவுகளை ஆற்றினார். உறங்கிக் கொண்டிருக்கும் நாட்டை எழுப்பி, அதனுடைய பழமையான பண்பாட்டின் மேன்மைகளை மற்றும் ஏழ்மை மற்றும் நவீன இந்தியாவின் பொதுமக்களின் பிற்பட்ட தன்மையைச் சுட்டிக்காட்டினார். அவருடைய உயர்ந்த இதயமானது, ஏழைகள் மற்றும் அறியாமை நிறைந்தவர்களின் துயரங்களைக் கண்டு இரத்தம் சிந்தியது. இந்தியாவில் அவர் சமூக நலத் தொண்டை மிகவும் வலியுறுத்தினார். மற்றும் இராமகிருஷ்ண மிஷனைத் தோற்றுவித்தார். சமூக நலத் தொண்டு நோக்கத்தைக் கருத்தில் கொண்டு தோற்றுவித்தார். மனிதகுலத்தின்மீது அவருக்கு இருந்த அளப்பரிய அன்பு மற்றும் பரிவானது,

'நான் மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பேனாக, ஆயிரக் கணக்கான துயரங்களை அனுபவிப்பேனாக, உண்மையில் உள்ளதான ஒரே தெய்வத்தை, நான் நம்பிக்கை கொண்டுள்ள ஒரே தெய்வத்தை, அதாவது எல்லா உயிர்களின் தொகுப்பான அந்த தெய்வத்தை, அனைத்திற்கும் மேலாக, தீயவர்களான என் தெய்வம், துயரப்படுகின்றவர்களான என் தெய்வம். ஏழையரான என் தெய்வம் என்று நான் சிறப்பாகப் போற்றுகின்ற தெய்வத்தை வழிபடுவதற்காகப் பிறப்பேனாக' என்று அவரைச் சாற்றும்படிச் செய்தது.[1]

நாங்கள் இளைஞர்களாக இருந்த பொழுது கல்லூரிப் படிப்பை முடித்தவுடனேயே, இராமகிருஷ்ண அமைப்பில் சேர்ந்து விட்டோம். நாங்கள் சுவாமி விவேகானந்தரை ஆர்வத்துடன் பின்பற்றுபவர்களாக இருந்தோம். எப்படியிருப்பினும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய வேறு சில நேரடிச் சீடர்கள் அப்பொழுது உயிருடன் இருந்தவர்கள் எங்களுக்கு 'இப்பொழுது நீங்கள் சுவாமிஜியை மிகவும் வியந்து போற்றுகிறீர்கள். அது மிகவும் நல்லது. ஆனால் நீங்களே ஆன்மீக வாழ்வில் வளர்ச்சி அடையும் பொழுது, நீங்கள் மேலும் அவரைப் புரிந்து கொள்வீர்கள். மேலும் பாராட்டுவீர்கள்' என்று கூறினர். அது

1. *சுவாமி விவேகானந்தரின் எழுந்திரு! விழித்திரு! 11.66*

எங்கள் விஷயத்தில் உண்மையாயிற்று. முதன்மையான, துணிவுடன் கூடிய ஆன்மீக இயல்புகளைப் பெற்றவர் அவர். மற்றும் மனிதகுலத்தின் மீது அவருக்கு இருந்த பரிவு உயர்ந்த தரத்தைச் சார்ந்தது ஆகும். அது எல்லா ஆண்கள் மற்றும் பெண்களுடன் உண்மையான ஆன்மீகப் பண்பு ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. அவர் எல்லா உயிரினங்களிலும் மறைந்திருந்த ஆன்மாவைக் கண்டார். மற்றும் அவருக்கு மனிதருக்குத் தொண்டு செய்வது என்பது இறைவனுக்குத் தொண்டாற்றுவது ஆகும். இதுதான் மிக உயர்ந்த முறையான வழிபாடு ஆகும் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். மேன்மையான சுவாமிஜி, அவருடைய நாற்பதாவது பிறந்த நாளைக் காண்பதற்கு உயிருடன் இருக்க வில்லை. அவருடைய வாழ்க்கையும், போதனைகளும் உலகம் முழுவதிலும் உள்ள இலட்சக் கணக்கான மனிதர்களின் விதிகளை வடிவமைக்கவல்ல சிறந்த சக்தியாக உள்ளன.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய மற்றொரு சிறந்த சீடர் சுவாமி பிரம்மானந்தர் *(1863-1922)* ஆவார். அவர் குருதேவரால் அவருடைய ஆன்மீக மகன் என்று கருதப்பட்டவர் ஆவார். குருதேவருடன், ஆறு ஆண்டுகளுக்கு மிக நெருக்கமாகப் பழகிய பிறகு, சுவாமி பிரம்மானந்தர் வட இந்தியாவின் பல பகுதிகளில் துறவியாகப் பல ஆண்டுகளைக் கழித்தார். அவர் அப்பொழுது தீவிரமான பழக்க வழக்கங்களையும் ஆன்மீகப் பயிற்சிகளையும் மேற்கொண்டு இருந்தார். சுவாமி விவே கானந்தர் அவரை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மற்றும் அமைப் பின் முதல் தலைவராக நியமித்தார். சுவாமி பிரம்மானந்தர் ஞானம், பக்தி, கர்மம் என்னும் மூன்றிலும் சமநிலை உடைய வராகத் திகழ்ந்தார். அவர் பெரும்பாலான நேரங்களில் உயர்ந்த ஆன்மீக விழிப்பு உணர்வு நிலையில் தோய்ந்தவராக இருந்தார். ஆனால் அவர் இயல்பான நிலைக்குத் திரும்பிய வுடன் அவர் செய்த எல்லாவற்றிலும் தளர்வற்ற ஊக்க முடையவராகத் திகழ்ந்தார். அவருக்குப் பெரிய அளவில் மன ஆற்றல்களும் இருந்தன. மற்றவர்களின் மனங்கள் எவ்விதம் செயல்படுகின்றன என்பதை அவரால் கண்டுகொள்ள

இயலும். அவர் இன்ப ஊற்றாக இருந்தார். அவருடைய திறமையான தலைமைப் பொறுப்பில், மிஷன் மிகவும் விரிவாக்கப்பட்டது. மற்றும் அதிக அளவில், படித்த ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட இளைஞர்களான சாதகர்கள் அமைப்பில் சேர்ந்தனர். அவர் பொது இடங்களில் மிகவும் அரிதாகத்தான் சொற்பொழிவாற்றுவார். மற்றும் மற்றவர்களுக்கு சம்பிரதாயமாக ஆன்மீக அறிவுரைகளை வழங்குவதில் மிகவும் கவனமாக இருப்பார். அவர் ஆன்மீக ஆற்றலின் மாபெரும் களஞ்சியமாக விளங்கினார். அவர் அதை அவருடைய சீடர்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் மற்றும் மற்றவர்களின் நலனுக்காகவும் மட்டுமே பயன்படுத்தினார். அவருடன் யார் தொடர்பு கொண்டாலும் அவர்கள் பேரின்பத்தை உணர்ந்தனர்.[1]

சுவாமி பிரேமானந்தர் (1861-1918) ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்றொரு சிறந்த சீடராவார். அவரைக் குறித்து ஸ்ரீராமகிருஷ்ணர் அவரை மிக மிகத் தூய்மையானவர் என்று கூறுவார். கல்கத்தாவில் அருகிலுள்ள பேலூரில் இராமகிருஷ்ண துறவியர் மடத்தின் தாய் நிறுவனம் நிறுவப்பட்ட பொழுது அவர் அதனுடைய மேலாளராக (Manager) இருந்தார். ஆனால் அவர் மிகவும் எளிமையான கண்டிப்பு நிறைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். அவருடைய ஒளிவீசும் தனித்தன்மையும் மற்றும் இனிமையான மனநிலையும் பல இளைஞர்களை ஈர்த்தன. அவர்களில் பலர் துறவறத்தை மேற்கொண்டனர். நெறிதவறியிருந்த சில இளைஞர்களின் வாழ்க்கைகளை அவருடைய அன்பு மாற்றியது. அவர் இவ்வுலகத்தை விட்டு மறைவதற்கு முன்பு, கிழக்கு வங்காளத்தில் சொற்பொழிவாற்றும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அவருடைய சொல்வன்மையின்

---

1. சுவாமி யதீஷ்வரானந்தர் 'சுவாமி பிரம்மானந்தர்' என்னும் தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையை அக்டோபர், 1941-ஆம் ஆண்டு வெளிவந்த வேதாந்த கேசரியில் எழுதியுள்ளார். சுவாமி பிரபவானந்தர் எழுதிய The Eternal Companion (சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம், 15-வது பதிப்பு, 2007) நூலையும் பார்க்கவும்.

ஆற்றலாலும். அவருடைய தெய்வீகமான தூய்மைப்பாட்டின் தனித்தன்மையாலும் எழுச்சியை ஏற்படுத்தினார்.

சுவாமி சாரதானந்தர் *(1865-1927)* ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்றொரு சீடராவார். அவர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் பொதுச் செயல்பொறுப்பாளராக (General Secretary) முக்கியமான பங்கை வகித்தார். குருதேவர் இவ்வுலகை விட்டு மறைந்த பிறகு அவர் இளம் பருவத்திலேயே உலகைத் துறந்து பரநாகோரிலுள்ள இராமகிருஷ்ண துறவிகளின் மடத்தில் சேர்ந்தார். சுவாமி விவேகானந்தர் முதலில் அவரை அமெரிக்காவிற்குப் போதிப்பதற்காக அனுப்பி வைத்தார். ஆனால் அவரை விரைவிலேயே திரும்ப அழைத்தார். மிஷனின் பளுவான நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளச் செய்தார். அவர் அதை குறிப்பிட்டுச் சொல்லும் படியான திறமையுடன் நிர்வகித்தார். ஸ்ரீராமகிருஷ்ணரின் தெய்வீகத் துணையான ஸ்ரீசாரதா தேவியின் வீட்டு நிர்வாகத் திலும் அவருக்குத் தொண்டு ஆற்றியதிலும் அவர் செயல்பாடு அதே அளவிற்குச் சிறப்பானதாக இருந்தது. இவ்வளவு கடமைகளுக்கு இடையிலும், சுவாமி சாரதானந்தர் என்றும் நிலைத்து நிற்கும்வகையில் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாற்றை வங்காள மொழியில் எழுதுவதற்கான நேரத்தை யும் தேடிக் கொண்டார். அதனுடைய ஆங்கில மொழி பெயர்ப்பு 'Sri Ramakrishna The Great Master' என்று அழைக்கப்படுகிறது. அவருடைய அமைதியான மென்மை யான, பொறுமையான தன்மையும் அனைவர் மீதும் அவர் கொண்டிருந்த மேன்மையான அன்பும் சிறப்புடையனவாகத் திகழ்ந்தன. எப்பொழுதாவது ஒரு பக்தருக்கோ அல்லது துறவிக்கோ உடல் நலக்குறைவு ஏற்பட்டால் சுவாமி கண்டிப் பாக அவரைச் சந்தித்து பணிவிடை செய்வதில் கைகொடுப் பார். அவர் ஸ்ரீராமகிருஷ்ண மிஷனை, அதனுடைய தொடக்கக் கால ஆண்டுகளில் மிகவும் சிக்கலான மற்றும் நெருக்கடியான சமயங்களில் பாதுகாப்புடன் வழிகாட்டினார்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய மற்ற சிறந்த சீடர்களான சுவாமி சிவானந்தர், சுவாமி துரியானந்தர், சுவாமி

இராமகிருஷ்ணானந்தர், சுவாமி அத்புதானந்தர் போன்ற ஆன்மஞானமடைந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கைகளை உடனொத்த மனிதர்களின் நலனிற்காக அர்ப்பித்துக் கொண்டனர்.[1] இந்தச் சிறந்த மனிதர்கள் தங்களை, மற்ற அனைவரின் நலனை மேம்படுத்துவதற்காக அடக்கத்துடனும், சுறுசுறுப்புடனும் ஈடுபடுத்திக் கொண்டனர். அவர்கள், தூய்மைப்பாடு, பரிவு மற்றும் பக்தி, நம்பிக்கைகளின் உருவங்களாகத் திகழ்ந்தனர். மற்றும் அவர்களின் எதிரில் மனிதர்கள் நெறிமுறை, ஆன்மீக விழிப்புணர்வு மட்டத்தில் மேம்பட்டதை உணர்ந்தனர். அவர்கள் எல்லா பிணைப்புக்களிலிருந்தும் விடுபட்டு, மற்றவர்களுக்கு விடுதலை அளிக்க முயற்சித்தனர். அவர்கள் அவர்களுடைய ஆன்மீக அதிர்வலைகள் மற்றும் பிரார்த்தனைகளால் சிந்தனை உலகத்தை உரமூட்டினர். அவர்களுடைய ஆன்மீக ஓட்டத்துடன் யார் தொடர்பு கொண்டாலும், மேம்பட்ட விழிப்பு உணர்வு நிலையின் மட்டத்திற்கு உயர்வார்கள். மற்றும் புனிதமான வாழ்க்கையை மேற்கொள்ளுவதற்கான அகத்தூண்டுதலை அடைவார்கள் என்பது உறுதியாகும். இவ்விதத்தில் மனிதகுலத்தை உயர்த்தியவர்களுக்கு நாம் நம்முடைய வணக்கத்தை அர்ப்பிப்போம்.

1. ஸ்ரீராமகிருஷ்ணருடைய நேரடி சீடர்களின் வாழ்க்கை மற்றும் உபதேசங்களை விரிவாக அறிந்துகொள்வதற்கு சுவாமி கம்பீரானந்தரின் The Apostles of Ramakrishna *(கல்கத்தா அத்வைத ஆசிரமம், 1972)* நூலைப் பார்க்கவும்.

34

கால மணலின் அடிச்சுவடுகள்

இந்தியாவும், ஹிந்து சமயமும்

உள்ளார்ந்து சிந்திக்கும் இயல்புடைய ராம்ஸே மேக்டொனால்டு (Ramsay Macdonald) என்னும் ஆங்கிலேயர் 'இந்தியாவும் ஹிந்து சமயமும், உறுப்பமைதியைச் சார்ந்த உடலும், உயிரும்போலத் தொடர்புடையவை' என்னும் தனிச்சிறப்பு வாய்ந்த கருத்தினைக் கூறியுள்ளார். இந்தியா என்பது உடல் ஆகும். மற்றும் ஹிந்து சமயம் அல்லது மிகவும் சரியான சொல்லைப் பயன்படுத்த வேண்டுமாயின் ஸனாதன தர்மம் உயிர் ஆகும். பல நூற்றாண்டுகள் அன்னியப் படை யெடுப்பு மற்றும் அரசியல் சார்ந்த கூறுபாடுகளுக்கிடையில், எப்பொழுதும் ஹிந்துப் பண்பாட்டில் ஒரு ஒற்றுமை இருந்தது. மற்றும் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குப் புனித யாத்திரையைத் தங்குதடையில்லாமல் மேற்கொண்டிருந்தனர். ஹிந்து சமயப் பண்பாடானது அழிக்க இயலாமல் விளங்குவதுடன், இயக்க ஆற்றல் உடைய தாகவும் விளங்குகிறது. வரலாற்றின் மிக நீண்ட ஓட்டத்தில் அது பல வகையான மாறுதல்களுக்கு ஆட்பட்டது. இங்கு மீண்டும் உயிர் உடல் ஒப்புமையானது தகுதியுடையதாக உள்ளது. ஹிந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களான ஆன்மா-பிரம்மன் கோட்பாடுகள், கடவுளை உணர்தலே வாழ்வின் குறிக்கோள், கர்மவினைக் கோட்பாடு, பரிணாம சுழற்சியின் கருத்து மற்றும் இந்தப் பேரண்டத்தின் உட் சுருள்வு போன்றவை ஹிந்து சமயத்தின் உயிர் ஆகும். மற்றும் இந்தக் கோட்பாடுகளை வாழ்க்கையில் நடைமுறையில் செயற்படுத்துவது அதன் உடலை வடிவமைக்கிறது. உயிரானது எவ்வித மாறுதலையும் அடையாமல் அப்படியே

உள்ளது. ஆனால் வெளிப்புற உடலானது, காலத்திற்குக் காலம் மாறுபட்டுக் கொண்டே இருந்தது.

ஹிந்து சமயத்தில் முதலில் ஏற்பட்ட பெரிய புரட்சிகரமான மாற்றம் சங்கராச்சாரியரால் தொடங்கி வைக்கப் பட்டது. அவர் தத்துவ பண்டிதத்துறையான அத்வைத தத்துவத்தை ஒரு உறுதியான அடித்தளத்தில் நிலைநிறுத்தினார். சங்கரரை, இராமனுஜாசாரியரும் மத்வாச்சாரியரும் பின் தொடர்ந்தனர். இந்த மூன்று சிறந்த ஆச்சாரியர்களும் தென்னிந்தியாவின் மூன்று வேறு வேறான இடங்களில் தோன்றினர். அவர்கள் ஹிந்து சமயத்தின் மூன்று வேறுபட்ட மரபுகளைப் புத்துயிரளித்து மீண்டும் நிலை நிறுத்தினர். அவை முறையே அத்வைதம், விசிஷ்ட அத்வைதம் மற்றும் த்வைதமாகும். அவர்கள் ஹிந்து சமயத்தின் பண்டைக் காலத்திய கோட்பாடுகளை, முறைப்படுத்தப்பட்ட ஒழுங்கான வகையில் மீண்டும் எடுத்துரைத்து அவற்றிற்கு முழு நலம் வாய்ந்த தத்துவம் சார்ந்த அடித்தளத்தை அளித்தனர். அவர்கள் இந்தியா முழுவதிலும் பயணம் செய்தனர். பெரும்பாலும் உயர்ந்த ஜாதியைச் சார்ந்த மக்களை ஒருங்கிணைத்து, சமயம் சார்ந்த குழுக்களாகச் செய்து, அவர்களின் மூலம் ஹிந்து சமயத்திற்குப் புதிய உயிர்த்துடிப்பைப் பாய்ச்சினர்.

இந்த தத்துவ வகைமுறைகளில் உட்கொண்டிருந்த கருத்துக்களின் சக்தியானது எப்படித் திரளான பொது மக்களைச் சென்று அடைந்தது? புனித மகான்களின் மூலம் சென்றடைந்தது. இந்தியாவில் நீண்ட நெடுங்காலமாகவே, அது இப்பொழுதும் செய்து கொண்டிருப்பதைப் போல, மக்களின் மத்தியில் ஜாதி வேறுபாடுகள் போன்ற எதையும் பொருட்படுத்தாமல் சமயத்தை எல்லா இடங்களிலும் பரப்பிய நூற்றுக் கணக்கான ஞானிகள், புனிதமகான்கள் இயங்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் சமூகத்தில் பல திறப் பட்ட படித்தரங்களிலிருந்து வந்தவர்கள் ஆவார்கள். அவர்களில் பெரும்பாலானோர் இல்லறத்தை மேற்கொண்டு இருந்தனர். ஆனால், ஆச்சாரியார்கள் செய்ததைப்போல வடமொழியைப் பேசிக் கொண்டு, வட மொழியில்

போதிக்கவில்லை. ஆனால் குறிப்பிட்ட இடத்திற்கு உரிய பேச்சு வழக்கிலேயே போதித்தனர். இத்தகைய புனிதமகான்களில் பெரும்பான்மையோர் சிறந்த கவிஞர்களாகவும் திகழ்ந்தனர். அவர்களுடைய உணர்வைத் தட்டி எழுப்பும் பாடல்கள் இப்பொழுதும் இந்தியாவின் ஒதுக்குப்புறமாக உள்ள கிராமங்களில் பாடப்படுகின்றன. அவர்கள், கடவுள் மீது கொள்ளும் அன்புதான், முக்தியை அடைவதற்கான முதன்மையான வழிமுறையாகும் என்று அறிவுறுத்தினர். அவர்களில் மிகச் சிறந்த சிலர் பெண்கள் ஆவார்கள்.

தென்னிந்தியாவின் ஆழ்வார்கள்

புத்தரின் காலத்திற்குப் பிறகு தோன்றிய பிரிவினருள் காலத்தால் முற்பட்டவர்கள், ஆழ்வார்கள் என்று கூறப்படும் தமிழ்நாட்டின் புனிதமகான்களின் பிரிவினர் ஆவார்கள். அவர்கள் அனைவரும் விஷ்ணுவை வழிபடுவோர் ஆவார்கள். இந்த கடவுள் வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாகவதர்கள் என்று கூறப்படும் விஷ்ணுவின் வழிபாட்டு முறையைப் பின்பற்றிய தனிப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் கி.மு. 500-ன் தொடக்கத்திலேயே இருந்தனர். அவர்கள் கிருஷ்ணரை விஷ்ணுவின் அவதாரமாக வழிபட்டனர். பண்டைக் காலத்திய ஹிந்து அரசர்களில் சிலர் முக்கியமாகக் குப்தர்கள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள். தென்னிந்தியாவின் பல்லவ அரசர்களும் அவ்விதமே இருந்தனர். ஆழ்வார்களின் வாழ்க்கையைக் குறித்த செய்திகள் மரபுவழிக் கதைகளில் மறைக்கப்பட்டுள்ளன. மற்றும் அவர்களுடைய காலத்தைச் சரியாக அறுதி செய்யவும் இயலாத நிலை உள்ளது. நவீன அறிஞர்கள், ஆழ்வார்கள் 7-ஆம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தழைத்து ஓங்கியிருந்தனர் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் சிறந்த ஞானிகள் மற்றும் அவர்களுடைய அனுபவங்களைக் கவிதைகளில் பதிவு செய்துள்ளனர் என்பதுதான் முக்கியமானது ஆகும்.

ஆழ்வார்கள் மொத்தமாகப் பன்னிரெண்டு பேர்கள் இருந்தனர். அவர்களுள் தொடக்க காலத்தில் இருந்த நான்கு ஆழ்வார்கள் சமகாலத்தவராக இருந்திருக்கக் கூடும். பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார் மற்றும் பேய் ஆழ்வார் என்று குறிப்பிடப்படும் முதல் மூன்று ஆழ்வார்களைக் குறித்து, கவனத்தை ஈர்க்கும் வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு ஒன்று உள்ளது. புயல் அடித்துக் கொண்டிருந்த பொழுது ஒருநாள் இந்த மூன்று சஞ்சாரம் செய்யும் புனிதமகான்களும் ஒரு சிறிய குடிசையில் தங்கினர். அங்கு மூன்று பேர்களும் நிற்பதற்கு மட்டுமே இடம் இருந்தது. விரைவில் அவர்கள் மூன்று பேரும் அவர்களுக்கிடையில் நான்காவதாக ஒரு மனிதனின் இருப்பை உணர்ந்தனர். ஆனால் அவர்களுக்குத் தென்படவில்லை. அது கடவுளைத் தவிர வேறு யாருமில்லை என்பதை அவர்கள் அறிந்து கொண்டனர். மற்றும் ஒவ்வொரு ஆழ்வாரும் தங்கள் தங்கள் அனுபவத்தை அவர்கள் உணர்ந்து கொண்ட வகையில் திடீரென்று ஒரு பாடல் வழியாகத் தங்கள் அனுபவத்தை விவரித்தனர். பொய்கை ஆழ்வாருடைய அனுபவம் மேம்பட்ட பரஞான அனுபவம் என்றும், பூதத்தாழ்வாரின் அனுபவம் மேம்பட்ட பராபக்தியின் அனுபவம் என்றும் பேயாழ்வாரின் அனுபவம் புலனுணர்விற்கு அப்பாற்பட்ட பரமஞான அனுபவம் என்றும் கூறப்படுகிறது. புனிதமகான்கள் சந்தித்தால் அவர்கள் கடவுளைப் பற்றி மட்டுமே பேசுகின்றனர். மற்றும் கடவுளின் மேன்மைகளையே பாடுகின்றனர். அப்படியிருக்கும்பொழுது உலகியலில் நாட்டம் கொண்ட மனிதர்கள் சந்தித்தால் உலகியல் விஷயங்களைக் குறித்தே பேசுகின்றனர். மற்றும் அவைகளைக் குறித்து விவாதித்து சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

நவீன காலத்தவர்களாகிய நாம் கவிதையைக் குறித்த நம்முடைய உணர்வுத்திறனை இழந்து கொண்டு இருக்கிறோம். நம்முடைய புனிதமகான்கள் மற்றும் முனிவர்களின் இதயங்களில் நிறைந்திருந்த மிக உயர்ந்த உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் திறமையை இழந்துகொண்டு வருகிறோம். அவர்கள் அனைவருடனும் அவர்களுடைய தெய்வீக

அன்பையும் பேரின்பத்தையும் பகிர்ந்துகொள்வதற்கு விரும்பினர். இந்த உணர்வுகள் இல்லையெனின் மனிதன் பயனற்றவன் ஆவான். தலையும், இதயமும் வெறுமையாக இருக்கும் பொழுது, நம்மிடம் என்ன எஞ்சி இருக்கும்? இதயமானது தெய்வீக அன்பால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். தலையானது தெய்வீகமான கருத்துக்களால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். மற்றும் இவை மீண்டும் நம்முடைய வாழ்க்கையின் புனிதமான செயல்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதுதான் ஆன்மீகத்தின் மையமான ஆய்வுப்பொருள் ஆகும். இந்த விஷயத்தை நாம் ஒரு பொழுதும் மறக்கக் கூடாது.

ஆழ்வார்கள் மிகவும் அதிகமாக விரும்பப்படுபவரைவிட அதிகமாக விரும்பப்படுபவர் என்னும் இடத்தைப் பரம்பொருளுக்கு அளித்திருந்தனர். அதனால்தான் நாம் அவர்களிடம் அத்தகைய பரவச நிலையான, தன்னை மறந்த நிலையின் அன்பைக் காண்கிறோம். ஸ்ரீவைஷ்ணவத்தைச் சார்ந்த இந்த புனிதமகான்கள் பரம்பொருளை பல்வேறு வகைப்பட்ட பாவங்களுடன் அணுகினர். அவர்களில் மிகமிகச் சிறந்தவர் நம்மாழ்வார் ஆவார். அவர் சடகோபன் என்றும் அல்லது சடாரி என்றும் அழைக்கப்படுகிறார். அவர் ஒப்புமை அளவில் தாழ்ந்த வேளாள ஜாதியைச் சேர்ந்தவராவார். அவர் நான்கு நூல்களை இயற்றியுள்ளார். அவை நான்கு தமிழ் வேதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானது திருவாய் மொழியாகும். இந்த பாசுரத்தில் இவர் கடவுளை, எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந்துள்ள புனிதமான முழுமுதற் தத்துவமாகக் கூறியுள்ளார். மற்றும் பக்தர்களுக்காக மிகவும் அழகான மனித வடிவத்தை மேற்கொள்வதாகவும் கூறியுள்ளார்.

மற்றொரு சிறந்த கவிஞர் மற்றும் புனிதமகானாக திருமங்கை ஆழ்வார் விளங்குகிறார். அவர் கள்ளர் குல மரபைச் சேர்ந்தவர். அவர் புனிதமகானாக ஆவதற்கு முன்பு சில ஆண்டுகளுக்கு வழிப்பறிக் கொள்ளையை மேற்கொண்டிருந்தார். திருப்பாணாழ்வார் மற்றொரு புகழ்பெற்ற

புனிதமகான் ஆவார். அவர் தீண்டத்தகாதவர்கள் என்று கூறப் படும் குடும்பத்தில் பிறந்தவர். அவர் கடவுளான விஷ்ணு வின் புகழைப் பாடிக்கொண்டே உடல் உணர்வை இழப்பார். பிறகு ஆனந்த பரவச நிலையை அடைவார். ஒருநாள் அவர் காவேரிக்கரையிலுள்ள புகழ்பெற்ற ஸ்ரீரங்கநாதரின் கோயி லிற்கு முன்பாக அமர்ந்து கொண்டிருந்த பொழுது, அந்த கோயிலின் தலைமை அர்ச்சகர், கடவுளின் புனிதமான திரு மஞ்சனத்திற்காக நீருடன் அந்த வழியாக வந்தார். தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவனின் அருகில் சென்றால், அது புனிதநீரை மாசுபடுத்தி விடும் என்று அஞ்சி, அவர் திருப்பாணரை நோக்கிக் கத்தினார். கடைசியாக அவர் திருப்பாண் ஆழ்வார் மீது ஒரு கல்லை விட்டெறிந்தார். காயம் பட்டதால் ஏற்பட்ட வலியால் அவர் சுய உணர்வைப் பெற்றார். திருப்பாணாழ் வார் ஓடிவிட்டார். எப்படியிருப்பினும் அர்ச்சகர் கோயி லிற்குள் நுழைந்த பொழுது அவர் கோயிலின் கதவுகள் மூடி இருப்பதைக் கண்டார். ஒரு தெய்வீகக் குரல் அவருடைய முரட்டுத்தனமான செயலுக்குக் கண்டனம் தெரிவித்தது. அந்த அர்ச்சகரைக் காயம்பட்ட தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த பக்தனை முதுகில் தூக்கிக் கொண்டு வருமாறு கட்டளையிட்டது. அந்த அர்ச்சகர் வெளியே ஓடிச் சென்று பயந்து போயிருந்த திருப் பாணாழ்வாரைப் பலவந்தமாகத் தன்னுடைய தோள்களின் மீது தூக்கிக்கொண்டு கோயிலிற்குள் வந்தார். மரபுவழிக் கதை கோயிலின் கதவுகள் திறக்கப்பட்டு அந்தப் புனிதமான கடவுளின் திருவுருவத்துடன் இரண்டறக் கலந்ததாகக் கூறுகிறது.

குலசேகர ஆழ்வார் மற்றொரு முக்கியமான ஆழ்வார் ஆவார். அவர் கேரளாவின் தென் பகுதியின் அரசராக இருந் தார். கடவுளின் மீது உள்ள அன்பால் ஆட்கொள்ளப்பட்டு, அவருடைய வாழ்க்கையின் எஞ்சிய பகுதியை கடவுளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைக்கு மட்டுமே ஒதுக்கி, தன் ராஜ்ஜியத் தைத் துறந்தார். மற்றும் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதரின் கோயில் உள்ள பகுதியிலேயே தன் நாட்களைக் கழித்தார். அவருடைய பணிவானது மிகவும் மேம்பட்டதாக இருந்தது.

அவர் கோயிலின் படிகளின்மீது படுத்துக்கொள்வார். எனவே பக்தர்களின் பாதங்களிலுள்ள புழுதியானது அவர் உடலின் மீது விழும் என்று கூறப்படுகிறது. அவர் தமிழ் மற்றும் வட மொழி என்னும் இரு மொழிகளிலும் பாசுரங்களை இயற்றி யுள்ளார். அவருடைய ஒரு பாசுரத்தில் அவர்,

'தீதில் நன்னெறி நிற்க அல்லாது செய்
நீதியா ரோடும் கூடுவதில்லையான்
ஆதி ஆயன் அரங்கன் அந்தாமரை
பேதைமா மணவாளன்றன் பித்தனே'

(அழகிய மணவாளன் விஷயம் —3வது பத்து-5வது பாடல்)

என்று கூறியுள்ளார்.

அதுதான் பரம்பொருளுடன் இரண்டறக் கலக்க வேண் டும் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பக்தனின் இதயமாகும். முகுந்தமாலை என்பது அவருடைய வடமொழிப் படைப்பு ஆகும். அது இந்தியாவில் பலராலும் அறியப்பட்ட பக்திப் பாடல்களில் ஒன்றாக விளங்குகிறது. அதில் குலசேகரர் முழுமையான சரணாகதியைப் பற்றிக் கூறுகிறார்.

'இறைவனே, மதிப்பிற்குரியன என்று கூறப்படும் செயல் களின் மீது எனக்கு நாட்டம் இல்லை; செல்வத்தின் மீதும் இல்லை. விரும்பும் பொருட்களின் இன்பங்களின் மீது நாட்டமில்லை. என்னுடைய முந்தைய கர்மங்களுக்கு ஏற்ப எது கட்டாயமான விளைவோ அது என் பங்கிற்கு வரட்டும். ஆனால் இந்த அளவிற்கு என்னுள் வளர்ந்துள்ள விருப்பம் என்ன எனின், எனக்கு உன்னுடைய தாமரைப் பாதங்களுக் கான அசைக்க இயலாத அன்பை இந்தப் பிறவியில் அளிக்க வேண்டும். இனி வரும் பிறவிகளிலும் அளிக்கப்பட வேண்டும்.'[1]

---

1. நாஸ்தா தர்மே ந வஸுநிசயே நைவ காமோபபோகே
யத்யத்பவ்யம் பவது பகவன் பூர்வகர்மானுரூபம் ।
ஏதத் ப்ரார்த்யம் மம பஹுமதம் ஜன்மஜன்மாந்தரேபி
த்வத் பாதாம்போருஹயுககதா நிச்சலா பக்திரஸ்து ॥
—முகுந்தமாலா, 7.

'இறைவனே, உன் விருப்பப்படி என்னைச் சொர்க்கத்திலோ அல்லது பூமியிலோ அல்லது நரகத்திலோ இடுவாய். என் மரணத்திலும் நான் உன் புனித தாமரைப் பாதங்களைப் பற்றித்தான் நினைப்பேன். அவை, சரத்கால தாமரை மலர்களின் அழகை விஞ்சியுள்ளன.[1]

உண்மையான பக்தன் பிறப்பிலிருந்து விடுதலையை நாடுவது இல்லை. பக்தனுக்கு உலகத்தின் பிணைப்புக்களிலிருந்து விடுபடுவது, அதன் அளவிலேயே வேண்டிக் கொள்ளப்பட வேண்டிய ஒரு குறிக்கோள் அன்று. கடவுளின் மீது உள்ள அன்புதான், அடையப்பட வேண்டிய மிகச் சிறந்த குறி, இலக்கு ஆகும். கடவுள் கணக்கற்ற வடிவங்களிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறார். எல்லா சிறந்த புனித மகான்களின் மிகப் பெரிய குறிக்கோளாக அது உள்ளது. ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட அனைவரின் இதயங்களிலும்கூட அதுவும் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

பிறப்பால் பிராம்மணர்களாக இருந்த இரண்டு அல்லது மூன்று ஆழ்வார்களில் பெரியாழ்வார் அல்லது விஷ்ணுசித்தர் மிகவும் புகழ்பெற்றவர் ஆவார். அவர் கடவுளுக்காகப் பூமாலைகள் கட்டுவதில் தன்னுடைய நாட்களைச் செலவிட்டார். அவருடைய புகழ்பெற்ற பாசுரமான திருப்பல்லாண்டு, தினமும் தென்னிந்தியாவில் முக்கியமான பல வைஷ்ணவக் கோயில்களில் பாடப்படுகிறது. அந்த தனித்தன்மை மிகுந்த பாசுரத்தில், ஆனந்த பரவசமான அன்பால் தோற்றம் கொண்ட அந்தப் பாசுரத்தில் பக்தன், கடவுளை பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறான். அவனுக்கு வாழ்த்துக்களைப் பெறுவதற்கு மறந்து விடுகிறான்.

அவருடைய திருமகள்தான் ஆண்டாள் அல்லது கோதையாவார். அவர் இந்தியாவின் மிகச் சிறந்த பெண்

1. திவி வா புவி வா மமாஸ்து வாஸோ நரகே வா நரகாந்தக ப்ரகாமம் ।
அவதீரித சாரதாரவிந்தௌ சரணௌ தே மரணேபி சிந்தயாமி ॥
—முகுந்தமாலா, 8.

அருளாளர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். ஆண்டாளின் குழந்தைப் பருவத்திலிருந்து, அவருக்குக் கிருஷ்ணரைத் தவிர வேறு எந்த எண்ணமும் இருக்கவில்லை. ஒருநாள் ஆண் டாளின் தந்தை, அவர் கடவுளுக்காகக் கட்டியிருந்த பூமாலை களை ஆண்டாள் அணிந்து கொண்டதைக் கண்டு பிடித்து, ஆண்டாளைக் கோபித்துக் கொண்டார். ஆனால் கடவுளுக்கு அவள் அணிந்துகொண்ட மாலைகளின் மீதுதான் விருப்பம் என்று ஒரு தெய்வீகக் குரல் கேட்டது. ஆண்டாள் தன்னைக் கடவுளின் மணப்பெண்ணாகக் கண்டார். அந்த ஊரிலுள்ள ஒரு வைஷ்ணவக் கோயிலைச் சேர்ந்த அர்ச்சகருக்குக் கடவுள் ஆண்டாளை ஒரு பல்லக்கில் அழைத்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டதாக கர்ண பரம்பரைச் செய்தி கூறுகிறது. அடுத்த நாள் காலையில் ஆண்டாள் ஒரு மணப்பெண்ணைப் போல அலங்கரிக்கப்பட்டு ஒரு பல்லக்கில் பலருடன், திருமண ஊர்வலமாகச் சென்றார். ஆண்டாள், உள்ளிருந்த கோயிலிற்குள் நுழைந்த பொழுது, கடவுள் அவரை ஏற்றுக்கொள்ள ஆண்டாள் கடவுளின் தெய்வீகத் திருமேனி யிலே இரண்டறக் கலந்தார். அதன்பின் ஆண்டாளின் பிறந்த ஊரான ஸ்ரீவில்லிபுத்தூரில், ஒரு சிறப்பான கோயில் உருவாக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக இன்று வரையிலும் ஒரு கோயில் விழா நடத்தப்படுகிறது.

ஆண்டாள் இயல்பான திறமையுடைய ஒரு கவிஞர் ஆவார். அவருடைய திருப்பாவை, மார்கழி மாதத்தில் தென்னிந்தியா முழுவதிலும் பாடப்படுகிறது. திருப்பாவை யின் ஒரு பாடலில், ஆண்டாள், கடவுளைத் தியானிப்ப தாலும் கடவுளுடைய மேன்மையில் கருத்தூன்றி மூழ்கி இருப்பதாலும் எல்லாத் தீமைகளும் எப்படி அழிக்கின்றன என்பதை விவரித்து உள்ளார்.

'மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளைக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்

தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது,
வாயினால்பபடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.'

(திருப்பாவை, 5)

ஆண்டாள், இந்தியாவில், நாயகி பாவம் சார்ந்த இறை நிலை இணைவுப் பான்மைக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார். பக்தை, தன்னை மணப்பெண்ணாகவும் கடவுளை மணமகனாகவும் பாவித்துக் கொள்கிறாள். தூய்மையடைந்த ஆன்மாவானது, எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவாக விளங்கும் கடவுளுடன் இருக்க விரும்புகிறது. ஆண்டாள், தன் மனத்திற்கு உகந்த கடவுளிடம் தொடர்ந்து இடையீடற்று தங்கியிருந்து தன்னுடைய கற்பனை ஆற்றலை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார். நம்முடைய மனத்தின் ஆற்றல்களை எப்படி மேம்படுத்திக் கொள்வது என்பதற்கான உதாரணமாக அது உள்ளது. பொதுவாக அத்தகைய ஆற்றல்கள், மனநிலை திரிந்த நிலையில், எல்லா வகையான விஷயங்களையும் கற்பித்துக் கொள்வதில் செலவிடப்படுகின்றன. மிகவும் உள்ளத்தைத் தொடும் வகையில் ஆண்டாள் ஸ்ரீகிருஷ்ணனின் லீலையை விவரித்துள்ளார்.

'ஒருத்தி மகனாய்ப் பிறந்தோ ரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்'

(திருப்பாவை 25)

ஆழ்வார்களால் எழுதப்பட்டுள்ள, கிடைத்திருக்கும் எல்லாப் பாசுரங்களும், நாதமுனிகள் எனப்படும் மிகச்சிறந்த வைஷ்ணவ ஆச்சாரியரால் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

என்னும் பெயரில் நிலைத்து நிற்கத்தக்க வகையில் தொகுக்கப் பட்டுள்ளது. இந்த நூலானது தென்னிந்தியாவில் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களால் மிகவும் புனிதமானதாகக் கருதப்படு கிறது. அவர்கள் அதை அனுபவ வேதாந்தம் என்று அழைக் கின்றனர். நேரடியான அனுபவ வேதாந்தம் என்பது பொருள் ஆகும். உண்மையாகவே அது அப்படித்தான் உள்ளது. நாத முனிகளைப் பின் தொடர்ந்து யமுனாச்சாரியர் வந்தார். அவருக்குப் பிறகு ஸ்ரீராமானுஜாச்சாரியர் வந்தார். அவர் தென்னிந்தியாவில் பக்தி இயக்கத்திற்குப் புத்துயிரளித்த மிகச் சிறந்த மனிதர் ஆவார். அவர் கி.பி.1017-ஆம் ஆண்டில் சமயப்பற்றுடைய ஒரு அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். இராமானுஜர் முதலில் யாதவபிரகாசர் என்னும் அத்வைத அறிஞரிடம் வேதங்களைக் கற்றார். பக்தி நிறைந்த அவ ருடைய மனத்தால் எப்படியிருப்பினும் அத்வைத கோட் பாட்டை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அவர் அவருடைய சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தினார். அதில் அவர் பக்தியையும் ஞானத்தையும் ஒருங்கிணைப்பதற்கு முயற்சி செய்துள்ளார். அவர் பிரம்ம சூத்திரம் மற்றும் பகவத்கீதைக்கு விளக்கவுரைகளை எழுதியுள்ளார். அவருடைய கோட்பாடு, விசிஷ்ட அத்வைதம் என்று அழைக்கப்படுகிறது. அது கடவுள், ஆன்மாக்கள் மற்றும் இந்தப் பேரண்டம் என்னும் மூன்றும் ஒன்று சேர்ந்து ஒரு மெய்ப்பொருளை வடிவமைக் கின்றன. கடவுள் ஒப்புயர்வற்ற பரம் பொருள் ஆவார். அவர் எல்லா இடங்களிலும் ஊடுருவி உள்ளார். எல்லாவற்றையும் கடந்தவர். இந்தப் பேரண்டம் அவரிடமிருந்து தோன்றுகிறது மற்றும் அவரிடமே ஒடுங்குகிறது. காலவட்டங்களில் இவ் விதம் நிகழ்கிறது. ஒவ்வொரு காலவட்டமும் பல இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு நீடிக்கிறது. எல்லா ஆன்மாக்களும் இதுபோன்றே முழுமையாக அவனையே சார்ந்து உள்ளன. ஆன்மீகப் பாதையில் முதலில் ஆன்மஞானம் அடைதல் இடம் பெறுகிறது. அதற்குப்பிறகு கடவுளை உணர்வது வருகிறது. கடவுளை உணர்வது என்பது, கடவுளின் அருளால் மட்டுமே இயலும் என்பது ஸ்ரீராமானுஜரின் கருத்து ஆகும்.

இவ்விதத்தில் அவர் பக்திக்கு ஒரு ஆன்மீக நெறிமுறையாக ஒப்புயர்வற்ற முக்கியத்துவத்தை அளித்துள்ளார்.

பக்தியின் தனி முதன்மையையும், விஷ்ணு சார்ந்த சமயக் கோட்பாட்டையும் நிலைநிறுத்தியதுடன் மட்டுமின்றி ஸ்ரீராமானுஜர் தன்னைப் பின்பற்றுபவர்களை ஒரு தனிப் பட்ட சமயக் கூட்டுக் குழுவாகவும் ஒருங்கிணைத்தார். வட மொழி மற்றும் தமிழ் மொழியிலுள்ள திருமறை நூல்களைப் பயில்வதற்கு ஆராய்வதற்கு ஊக்கமளித்தார். அத்துடன் அந்தணர் அல்லாதவர்களினிடையிலும் சமயத்தைப் பரப்பு வதற்கு முயற்சி செய்தார். அவர் ஒரு தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவரைத் தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டதும் மற்றும் புனிதமான நாராயண மந்திரத்தைத் திரளான மக் களுக்குத் தெரிவித்ததும் அவருடைய பெருந்தன்மை மிகுந்த மனத்தைக் காட்டுகின்றன. அவருடைய குருவான கோஷ்டி பூர்ணர், அதை யாருக்கும் வெளிப்படுத்துதல் கூடாது என்று அறிவுறுத்திய பிறகு அந்த மந்திரதீட்சையை அளித்தார். ஒருவருடைய குருவிற்குக் கீழ்ப்படியவில்லை எனின், அதற்குத் தண்டனையாக நரகத்திற்குச் செல்ல வேண்டும். ஆனால் ஸ்ரீராமானுஜர் கோயிலின் கோபுரத்தின் மீது ஏறி நின்று கொண்டு அங்கு திரளாகக் கூடியிருந்த மக்களுக்கு அந்த மந்திரத்தை அனைவரும் அறியும்படியாக வெளிப் படுத்தினார். அவருடைய குருவால், அவர் நடந்து கொண்ட முறையின் நேர்மையைக் குறித்து விசாரிக்கப்பட்ட பொழுது, ஸ்ரீஇராமானுஜர், அவர் நரகத்திற்குச் செல்வதால் பல மனிதர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள் எனின் அவர் அதையே அவ ருடைய சொந்த முக்தியாக விரும்பித் தேர்ந்தெடுப்பதாகக் கூறினார்.

ஸ்ரீராமானுஜர் தன்னுடைய கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்பதற்காக இந்தியாவில் பரவலாக யாத்திரையை மேற்கொண்டார். பக்தியைத் தத்துவம் சார்ந்த அடித்தளத்தில் சரியாகப் பொருத்திய சிறந்த முதல் ஆச்சாரிய ராக அவர் விளங்குகிறார். யமுனாச்சாரியர் புனிதமகான்கள் ஆழ்வார்களின் படைப்புக்களுக்கு வேதாந்தத்தில் இடம்

அளித்ததன்மூலம் பக்தியை ஊக்கப்படுத்தியதில் பெரும் தொண்டினை ஆற்றி உள்ளார். மற்றும் அவர் விசிஷ்ட அத்வைதத்தின் அடித்தளத்தை அமைத்தார். ஆனால் ஸ்ரீராமானுஜர்தான் தத்துவம் சார்ந்த ஓங்கிய பெரும் செயல் கட்டமைவைக் காட்டினார். அது அப்பொழுதிலிருந்து அடுத்து வந்த ஹிந்து சமயம் சார்ந்த எல்லா இயக்கங்களுக்கும் நல்ல செயல் விளைவுகளை ஏற்படுத்தியது. வட இந்தியா வில் பக்தி இயக்கத்தின் மூலமானது ஸ்ரீராமானுஜரின் செயல்விளைவினாலேயே கண்டறியத் தக்கதாக உள்ளது.

தென்னிந்தியாவின் சைவ சமயத்தின் புனித மகான்கள் (நாயன்மார்கள்)

தென்னிந்தியாவில் சிவ வழிபாடு, இந்தியாவின் வடக்குப் பகுதியிலிருந்த திருமூலர் என்று அழைக்கப்படும் புனிதமகானால் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது ஒரு மரபுவழிச் செய்தியின் கருத்தாக உள்ளது. இது உண்மையாக இருப்பினும், இல்லை எனினும், இந்தியா முழுவதிலுமே சிவ வழிபாடு என்பது தொல்பழமை மிகுந்ததாக விளங்கு கிறது. தென்னிந்தியாவில் அது நாயன்மார்கள் என்று கூறப் படும் 63 புனிதமகான்களுடன் தொடர்பு கொண்டதாக விளங்குகிறது. தமிழ் நாட்டிலுள்ள எல்லா முக்கியமான சிவன் கோயில்களிலும் அவர்களுடைய திருவுருவச் சிலைகள் உள்ளன. வைஷ்ணவ ஆழ்வார்களைப் போன்றே சைவத்தின் புனித மகான்களும் எல்லா ஜாதிகளையும் சேர்ந்த வர்களாக இருந்தனர். அவர்களில் அந்தணர்கள், அரசர்கள், குயவர்கள், வணிகர்கள், உழவர்கள், வேடர்கள், இடை யர்கள், செம்படவர்கள் என்று இந்த எல்லா இனத்தவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரின் காலத்தை உறுதி செய்வது கஷ்டமான செயலாகும். அவர்களில் நான்கு மிக முக்கிய மான சிறந்த ஆச்சாரியர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தர மூர்த்தி மற்றும்

மாணிக்கவாசகர் என்பவர்கள் ஆவார்கள். முதல் மூவரின் பாடல்கள் எல்லாம் சேர்ந்து தேவாரம் என்றும் மாணிக்க வாசகரின் பாடல்கள் திருவாசகம் என்றும் அழைக்கப்படு கின்றன. இவை தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கியமான கோயில்களிலும் பாடப்படுகின்றன. இந்த நான்கு புனித மகான்களும் கடவுளைக் குறித்த நான்கு வேறுபட்ட மனப் பான்மைகளைக் குறிப்பிடுகின்றனர். அப்பர் தாசமார்க்கத் தையும் திருஞான சம்பந்தர் சத்-புத்திர மார்க்கத்தையும் சுந்தர மூர்த்தி ஸஹ மார்க்கத்தையும் மாணிக்க வாசகர் ஸத் மார்க்கத் தையும் பின்பற்றினர். அதாவது ஞான வழி ஆகும்.

இந்தச் சிறந்த புனிதமகான்களின் வாழ்க்கைகள் அற் புதங்கள் நிறைந்ததாக விளங்குகின்றன. அப்பர் ஒப்புமை யளவில் தாழ்ந்த வேளாள ஜாதியில் பிறந்தார்.

தொடக்கக் காலத்தில் அவர் சமண சமயத்தை ஏற்றுக் கொண்டு இருந்தார். ஆனால் அவருடைய மூத்த சகோதரியின் செல்வாக்கால், மீண்டும் சைவசமயத்திற்கு மாறினார். அவர் தன் வாழ்க்கையை, ஒர் இடத்திலிருந்து மற்றொரு இடத் திற்குச் சென்று கொண்டு, பரம்பொருளான சிவனின் புகழ், மேன்மைகளைப் பாடிக் கொண்டு, கோயிலிற்கு முன்பு உள்ள இடங்களில் புல், களைச் செடிகள் போன்றவற்றை அகற்றுதல் போன்ற பணிவு மிகுந்த செயல்களைச் செய்து கொண்டு கழித்தார். அவருடைய பாடல்கள் ஒரு உயர்ந்த படிநிலையைச் சார்ந்த மனத்தை வெளிப்படுத்துகின்றன. அவருடைய ஒரு பாடலில் அவர்,

'விறகில் தீயினன் பாலிற் படு நெய்போல
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே

என்று பாடியுள்ளார். மற்றொரு பாடலில்

'ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்து (உ)கந் தான் மனத்துள் இருக்க

என்றான் இமையவர்க்(கு) அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடியோங்களுக்கே'
—திருநாவுக்கரசர் தேவாரம், 4.94.1.

என்று கூறியுள்ளார்.

'அப்பர்' என்னும் சொல்லிற்குத் தந்தை என்பது பொருளாகும். மற்றொரு புனிதமகானான திருஞான சம்பந்தர் அவரை அப்படி அழைத்ததால் அவர் அப்பெயரைப் பெற்றார். மிகவும் இளையவரான இந்தப் புனிதமகான் ஓர் அந்தணக் குடும்பத்திலிருந்து வந்தவர். சம்பந்தர் சிறு குழந்தையாக இருந்தபொழுது, பெண் கடவுளான பார்வதியே பூமிக்கு வந்து, ஒரு தாயாகப் பாலூட்டியதாகக் கூறப்படுகிறது. அதன் பிறகு அவர் குழந்தை மேதையாக மற்றும் புனித மகானாகவும் மலர்ந்தார். அவர் பதினாறாவது வயதில் சிவபதம் அடைந்தார்.

சுந்தர மூர்த்தி நாயனார் மூன்றாவது புனிதமகான் ஆவார். அவர் அந்தணர் பெற்றோருக்குப் பிறந்தவர் ஆவார். அவருடைய திருமணத்திற்கான நேரம் குறிக்கப்பட்டிருந்த பொழுது, பரம்பொருளான சிவனே ஒரு முதியவரின் வேடத்தில் வந்து, சுந்தரரைத் தன்னுடைய அடிமையாக உரிமையைக் கோரினார். அதன் பிறகு அவர் தென்னிந்தியா முழுவதும் சிவனின் புகழைப் பாடிக்கொண்டு யாத்திரை சென்றார். அவர்கூட இளமையிலேயே சிவபதம் அடைந்ததாகக் கூறப்படுகிறது.

நான்காவது புனிதமகான் மாணிக்கவாசகர் ஆவார். அவரும் அந்தணர் என்று கூறப்படுகிறது. இளம் வயதிலேயே பாண்டிய மன்னனின் முதலமைச்சர் ஆனார். ஒருமுறை குதிரைகள் வாங்கும் பணியின் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் போகும் வழியில் அவருக்கு சிவன் அவருடைய குருவாகக் காட்சியளித்தார். மற்றும் சிவனுடைய கட்டளையின்படி, குதிரைகள் வாங்குவதற்காகக் கொடுக்கப்பட்டிருந்த பணமானது சிவன் கோயிலைக் கட்டுவதற்குச் செலவழிக்கப்பட்டது. தன்னுடைய முதலமைச்சர் சார்ந்த

கடமைகள் அனைத்தையும் மறந்து அவர் கடவுளுக்குத் தொண்டாற்றிக் கொண்டு அங்கேயே வாழ்ந்தார். அவருடைய பாடல்களைக் கொண்ட நூலானது திருவாசகம் என்று அழைக்கப்படுகிறது. மற்றும் தென்னிந்தியாவில் பரவலாக அனைவராலும் அறியப்பட்ட பக்திப் பாடல்களாகவும் விளங்குகிறது. மிகச் சிறந்த இலக்கியம் என்னும் தகுதி, மதிப்பைப் பெற்றுள்ளது. தமிழில், 'திருவாசகத்திற்கு உருகார், ஓர் வாசகத்திற்கும் உருகார்' என்னும் கூற்று உள்ளது. அவர் சமரசத்திற்கு இடம் தராத ஒரு கடவுட் கோட்பாட்டை யும் மற்றும் கடவுள் மீது கொள்ளும் அன்பையும் கடவுளை அடைவதற்கான வழிமுறைகளாகக் கூறியுள்ளார். ஆனால் கடவுள்மீது அவருக்கு இருந்த அன்பானது, ஞானத்துடன் பக்குவமான முறையில் இணைந்திருந்தது. அவருடைய திருவாசகத்தில் அவர்,

'ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்'

(திருவாசகம் - சிவபுராணம், 41,42,43.)

என்று கூறியுள்ளார்.

'நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்துடையாய் விண்ணோர்களேத்த'

(திருவாசகம்-சிவபுராணம் 44, 45, 46, 47, 48, 49)

என்றும் கூறியுள்ளார்.

இந்த சிறந்த நூல் முழுவதும், படைப்பின் புதிர், கடவுளின் உண்மையான இயல்பு மற்றும் ஆன்மா கடவுளை உணர்தல் போன்றவற்றைக் குறித்த ஆழமான உள்நோக்கு களால் நிரம்பியுள்ளது. ஆனால் அனைத்தும் தீவிரமான

அன்புடன் தொடர்புபடுத்திப்பட்டுள்ளன. கீழே தொடர்ந்து வரும் வரிகளைப் போன்றவை புத்தகம் முழுவதிலும் காணப்படுகிறது.

‘ஆர்மின் ஆர்மின் நாள் மலர்ப் பிணையலில்
தாள் தளை இடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்று முற்று ஒளித்தும்
தன்நேர் இல்லோன் தானே ஆனதன்மை
என்நேர் அனையார் கேட்கவந்து இயம்பி
அறைகூவி ஆட்கொண்டு அருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்’

—திருவாசகம் - திரு அண்டப்பகுதி, 142-149

திருவாசகம், ஆன்மாவானது கடவுளுடன் இரண்டறக் கலப்பதற்கு முன்பு கடந்து செல்லும் பல்வேறு நிலைகளைக் குறித்தும் விவரிக்கிறது. இந்தச் சிறந்த புனிதமகான் தனது 32-ஆம் வயதில் சிவபதம் அடைந்ததாகக் கூறப்படுகிறது.

மற்ற புனித மகான்களில் வேடனான கண்ணப்பரும் நந்தனாரும் தீண்டத் தகாதவர்கள் என்று கூறப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்கள் மிக மிகப் புகழ்பெற்றவர்கள் ஆவார்கள். மூன்று பெண் அருளாளர்கள் இருந்துள்ளனர். அவர்களுள் காரைக்கால் அம்மையார் மிகவும் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் இளவயதில் மிகவும் அழகுடையவ ராகத் திகழ்ந்தார். மற்றும் ஒரு செல்வந்தனான வணிகனுக்குத் திருமணம் செய்து தரப்பட்டிருந்தார். விரைவிலேயே இளமை நலம் வாய்ந்த கணவன் அவள் அருளாளர் என்றும் மற்றும் வியக்கத்தக்க அளவில் தூய்மைப்பாட்டையும், பக்தியையும் இயல்பாகப் பெற்றிருந்தார் என்பதையும் உணர்ந்து கொண்டான். அவளுடன் இல்லற வாழ்வை மேற் கொள்வதற்கு அவன் விரும்பவில்லை. அவன் ரகசியமாக அந்த இடத்தை விட்டு அகன்று தூரத்திலிருந்த ஒரு நாட்டில் குடியேறி வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டான். காரைக்கால் அம்மையார் இதைக் குறித்துக் கேள்விப்

பட்டதும், தன் கணவரைக் காண்பதற்குச் சென்றார். ஆனால் அவருடைய கணவரும், புது மனைவியும் அவர் பாதங்களை நமஸ்கரித்து, உறவினர்களிடம் அவரை ஒரு தெய்வீகம் நிறைந்த பெண்மணியாகக் கருதுவதாகத் தெரிவித்தனர். அருளாளரான காரைக்கால் அம்மையார் தன்னுடைய திரு மண வாழ்வு முடிவிற்கு வந்துவிட்டது என்பதை உணர்ந்து, சிவபெருமானைத் தன் தெய்வீக அழகை அகற்றுமாறு பிரார்த்தித்துக் கொண்டார். உடனடியாக அவர் அருவருப் பான தோற்றம் கொண்ட வயது முதிர்ந்த பெண்ணாக மாறி னார். வேறு யாரைக் காட்டிலும் பெண்களால் இந்தத் தியாகத் தின் மேன்மையைச் சிறப்பை உணர இயலும்! அவர் தன் னுடைய எஞ்சிய வாழ்நாளைத் திருவாலங்காடு எனப்படும் ஊரில் கழித்தார். உடல் உணர்விலிருந்து முற்றிலும் விடு பட்டு சிவனின் மிகச் சிறந்த சிவ தாண்டவத்தை எப்பொழுதும் கண்டுகொண்டிருந்தார். கடவுளே அவரைத் தன்னுடைய அன்னையாக அழைத்ததாக கூறப்படுகிறது. இறுதி இலட்சி யத்தை அடைந்த பிறகு அவர் தன்னுடைய ஒரு பாடலில்,

'நாம் மரணத்தை வென்று நரகத்தைத் தவிர்த்து விட் டோம். நாம் நல்ல மற்றும் தீய வினைகளின் பிணைப்புக் களை வேரோடு கல்லி எறிந்துவிட்டோம். நாம் நம்மைப் பரம்பொருளின் புனிதமான திருவடிகளில் இணைத்துக் கொண்டதால், இவ்வனைத்தையும் அடையப் பெற்றுள் ளோம். சிவன் தன்னுடைய நெற்றிக் கண்ணிலிருந்த நெருப்பி னால் திரிபுரத்தின் அசுரர்களின் பெரும்படையை எரித்துச் சாம்பல் ஆக்கினார்.'

என்று கூறியுள்ளார்.

மரபு சார்ந்த இந்த **63** புராதனமான புனித மகான்களைத் தவிர பிற்காலத்தில் தோன்றிய புனித மகான்களும் உள்ளனர். பட்டினத்தார் அவர்களுள் ஒருவர் ஆவார். அவர் 10-ஆம் நூற்றாண்டிற்கு சிறிது முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். அவர் ஒரு வணிகர், செல்வந்தர். கடல் வாணிகத் தைப் பெரிய அளவில் செய்து வந்தார். ஒருநாள் அவர்,

புயலால் அலைக்கழிக்கப்பட்ட அவருடைய ஒரு கப்பல், வாணிகச் சரக்குடன் துறைமுகத்திற்குப் பத்திரமாக வந்திருப்பதாக அறிந்தார். அவர் மிகவும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் துறைமுகத்திற்குச் சென்றார். அவர் வீட்டில் இல்லாத பொழுது, ஒரு புனிதமான இரவலர் பிக்ஷைக்காக அவர் வீட்டிற்கு வந்தார். அந்த வீட்டின் எஜமானி, அவள் கணவர் திரும்பி வரும் வரைக்கும் அவரைக் காத்திருக்கும்படிக் கூறினார். ஆனால் அவர் அதற்குப் பதிலாக ஒரு சிறிய பொட்டலத்தை அங்கே வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். பட்டினத்தார் வீடு திரும்பியதும் அவர் மனைவி அவரிடம் அந்த பொட்டலத்தைக் கொடுத்தார். அதைத் திறந்ததும் அதனுள், உடைந்த, காது இல்லாத ஊசியைக் கண்டார். அவருடைய மரணத்திற்குப் பிறகு, அந்தக் காதற்ற உடைந்த ஊசியைப் போன்ற பயனற்ற பொருள் கூட அவருடன் செல்லாது என்னும் உண்மை திடீரென்று அவர் மனத்தில் நொடிப்பொழுது தோன்றி மறைந்தது. அவர் உடனடியாகத் தன்னுடைய செல்வத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்து அளித்துவிட்டு, உலகைத் துறந்து அப்பொழுதிலிருந்து இரவலர் வாழ்க்கையை மேற்கொண்டார். முன்பு அரசனாக இருந்த ஒருவன், பட்டினத்தாரின் சீடனாக அவருடன் சேர்ந்து கொண்டான். இருவரும் பல ஆண்டுகளுக்குப் பாடல்களைப் பாடிக் கொண்டே ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சஞ்சரித்துக் கொண்டு இருந்தனர்.

ஒரு குழந்தையைப் போன்ற இயல்பைப் பெற்றவராக அவர் இடைச்சிறுவர்களுடன் விளையாடுவார். ஒருநாள் அந்த குறும்புக்காரச் சிறுவர்கள், ஒரு குழியைத் தோண்டினர். அதில் அவரை நிறுத்தி வைத்தனர். மற்றும் அந்தக் குழியை அவருடைய முகவாய்க்கட்டை வரையிலும் தோண்டிய மண்ணால் மூடினர். எல்லாமே வேடிக்கையாக, விளையாட்டாகவே நடைபெற்றன. ஆனால் திடீரென்று பெருமழை கொட்டியது. சிறுவர்கள் இந்த முதியவரைப் பற்றி மறந்து விட்டு அப்படியே ஓடிவிட்டனர். இரவு முழுவதும் குளிர் காற்றிலும் மழையிலும் திறந்த வெளியில் இருந்த அவர்

இறந்துவிட்டார். பட்டினத்தாரின் கவிதைகள், புலனின்பங்களின் நிலையற்ற தன்மையைக் குறித்தும், அழியும் தன்மையைக் குறித்தும், கடவுட்பற்றுடன் கூடிய வாழ்வை வாழ வேண்டும் என்னும் விழிப்புணர்வின் அவசியத்தைப் பற்றியும் விவரிக்கின்றன. அவருடைய ஒழுக்க நெறிமுறைகள் குறித்த திட்ப, நுட்ப உரைகள், தமிழ்நாடு முழுவதிலும் பழமொழிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கோள் உரைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

சைவ, புனித மகான்களின் வழிமரபு இந்தக் காலக் கட்டம் வரையிலும் பிளவு படாமல் நிலைநிறுத்தப்பட்டு இருந்தது. நாம் நம்முடைய இந்த ஏழ்மை நிறைந்த நாட்டிலே, இந்தச் சிறப்பு உரிமை நலனைத் துய்த்து மகிழ்கிறோம். ஆனால் ஆன்மீக மரபில் செல்வந்தர்களாக இருக்கிறோம். 18-ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இருந்த மிகச் சிறந்த சைவ புனித மகான்களுள் ஒருவரான மிகவும் பரவலாக அனைவராலும் அறியப்பட்டிருந்த தாயுமானவர் வாழ்ந்தார். அவர் இளைஞனாக இருந்த பொழுது, ஒரு அரசனின் அரண்மனையில் மேலாளராக இருந்தார். மற்றும் தமிழ் வடமொழி என்னும் இரு மொழிகளின் பக்தி மற்றும் தத்துவம் சார்ந்த இலக்கியங்களில் பெரும் புலமை பெற்றிருந்தார். மௌனத்தை அனுஷ்டித்துக் கொண்டிருந்த ஒரு முனிவரை அவர் சந்தித்தார். மற்றும் அவர் மீது பெருமளவில் ஈர்ப்பு ஏற்பட்டது. விதவையான இராணி தன்னையும், தன் இராஜ்ஜியத்தையும் அந்த இளைஞனுக்கு மனமாரக் கொடுக்க முன்வந்ததாகவும், ஆனால் அந்த இளைஞன் அவற்றை வெறுத்து ஒதுக்கி, அரண்மனையை விட்டு அகன்றதாகவும் கூறப்படுகிறது. அதன்பிறகு அவர் மற்றொரு இடத்திற்குச் சென்று சமய வாழ்வில் நம்பிக்கையுடைய ஒரு பெண்ணை மணந்து கொண்டு, ஒழுக்க நெறியுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். அவருடைய ஒரே குழந்தை வளர்ந்த பிறகு, மௌனகுரு மீண்டும் திடீரென்று அவர் முன்பு தோன்றி, அவருக்கு இது உலகைத் துறப்பதற்கு ஏற்ற நேரம் என்று நினைவுபடுத்தினார். தாயுமானவர் அவருடைய

எஞ்சியிருந்த வாழ்நாளை, நாடு முழுவதும் சஞ்சரித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் கழித்தார். அவருடைய கவிதைகளில் அவர் வேதாந்தத்தையும், தென்னிந்தியாவின் சைவ புனிதமகான்களின் சைவ சித்தாந்தத்தையும் ஒருங் கிணைப்பதற்கு முயற்சி செய்து உள்ளார்.

கடவுள், ஆன்மா மற்றும் இயற்கை என்னும் இந்த மூன்றும் மூலாதாரமான இனவகைக் கூறுகள் என்பது தாயுமானவரின் கருத்து ஆகும். சூரியன் உயிர்ப்புடன் கூடிய உலகத்திற்கு ஊக்கமூட்டுவதைப் போல கடவுளானவர் எல்லா ஆன்மாக்களுக்கும் இயற்கைக்கும் ஆதாரமாக இருந்து கொண்டு உணர்ச்சியூட்டுகிறார். அவர் அவருடைய 'ஆனந்தக் களிப்பு' என்னும் பாடலில் இறுதியாக ஏற்படும் ஞான அனுபவத்தை விவரித்து, பக்தியும் ஞானமும் மிக உயர்ந்த அனுபவத்தில் எப்படி ஒன்றுபட்டு நின்றுள்ளது என்பதைக் காட்டியுள்ளார். தாயுமானவர் மிக உயர்ந்த வகைமுறையைச் சேர்ந்த மிகச் சிறந்த கவிஞர் மற்றும் ஞானியாவார்.

சைவசமயத்தைச் சார்ந்த புனிதமகான்களின் போதனைகள், பதிமூன்றாம் நூற்றாண்டில் மெய்கண்டார் என்னும் பெயருடைய முனிவரால் 12 சூத்திரங்களின் வடி வத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. சிவஞானபோதம் என்னும் அவருடைய நூலிற்கு, அவரது சீடரான அருள்நந்தியால் விளக்கவுரை எழுதப்பட்டுள்ளது. இந்தத் தத்துவமானது பல கூறுகளில் ஸ்ரீராமானுஜரின் விசிஷ்ட அத்வைதத்தை ஒத்துள்ளது.

நாம் இதுவரையிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த புனிதமகான்களைப்பற்றி மட்டுமே பேசியிருக்கிறோம். தென்னிந்தியாவைச் சேர்ந்த மற்ற பகுதிகளும் மிகச் சிறந்த பல புனிதமகான்களைத் தோற்றுவித்துள்ளன. நான் இவர் களில் கர்நாடகத்தைச் சேர்ந்த இருவரைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். ஒருவர் புரந்தரதாசர் என்னும் பெயரைக் கொண்ட வைஷ்ணவ மரபைச் சார்ந்த புனிதமகான் ஆவார். அவர் உலகம் முழுவதிலும் கர்நாடக இசையின் தந்தை

அல்லது தென்னிந்திய இசை அமைப்பு முறையின் தந்தை என்று அடையாளம் கண்டு உணரப்பட்டுள்ளார். தொடக்க காலத்தில் செல்வந்தராக இருந்தவர் மற்றும் அவருடைய கஞ்சத்தன்மைக்குப் பெயர் பெற்றவராகவும் இருந்தார். அதன் பிறகு அவர் தன்னுடைய செல்வம் அனைத்தையும் துறந்து, விட்டலனின் பணிவு மிகுந்த பக்தனாக வாழ்ந்தார். விட்டலன், மஹாராஷ்டிரத்தில் பண்டரீபுரத்திலுள்ள புகழ்பெற்ற கடவுள் ஆவார். அவருடைய மகிழ்ச்சியைத் தரவல்ல பாடல்கள் ஆயிரக்கணக்கானவை பரவலாகத் தெரிந்தவையாகும். தென்னிந்தியா முழுவதும் அவை கேட்கப்படுகின்றன.

மற்றொரு புனிதமகான் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த சமூக சீர்திருத்தவாதியான, சிறந்த சிவபக்தரான பசவேசுவரர் ஆவார். அவர் பிறப்பால் அந்தணர். மற்றும் ஓர் அரசனின் அமைச்சராக இருந்தார் என்று கூறப்படுகிறது. அவருடைய வசனங்கள், கடவுளின் முன்பு எல்லா மனிதர்களும் சமம், தூய்மைப்பாட்டுடன் இருக்க வேண்டும் மற்றும் சிவனிடம் பக்தி கொள்ள வேண்டும் என்று கூறுகின்றன. அவர் வீர சைவ தத்துவம் மற்றும் சமய உட்பிரிவைத் தோற்றுவித்தவர் என்று கருதப்படுகிறார். அது தொடக்கத்தில் ஜாதி மற்றும் சமுதாயத்தில் உள்ள அநீதிக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட இயக்கமாக விளங்கியது. இந்த முழுமையான பேரண்டமானது, இந்த அமைப்பு முறையில் சிவனின் லீலையாகப் பார்க்கப்படுகிறது. இந்த சமய உட்பிரிவின் ஒரு மிகச் சிறந்த பெண் அருளாளராக மஹாதேவி அக்கா விளங்குகிறார். ஒரு இராஜகுமாரனை மணம் செய்து கொண்டிருந்தாலும், அவர் உலகைத் துறந்து தன்னுடைய காலத்தை, ஸ்ரீசைலத்திலுள்ள வனப்பகுதியில் உள்ள மலையின் உச்சியில் கழித்தார். அவருடைய வசனங்கள் கர்நாடகம் முழுவதும் புகழ்பெற்று விளங்குகின்றன. மற்றும் அவை, அவருக்கு சிவனின் மீது இருந்த தீவிரமான அன்பை வெளிப்படுத்துகின்றன. அவர் சிவனை சன்ன மல்லிகார்ஜுனன் என்று அழைத்தார். அவர் ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் அடைந்த பொழுது, எல்லா இடங்களிலும் ஊடுருவி

நிறைந்துள்ள சிவனின் இருப்பை ஒவ்வொருவரிடமும் உணர்ந்தார். அவர் அவருடைய ஒரு வசனத்தில்,

'வனமெலாம் நீயே, வனத்திலுள்ள தெய்வீக மரங்களும் நீயே
மரத்திலாடும் காண்டாமிருகமும் நீயே
சன்ன மல்லிகார்ச்சுனனே, எங்கும் நிறைந்த நீ
எனக்கு ஏன் முகத்தைக் காட்டவில்லை?"[1]

என்று கூறியுள்ளார்

மிக உயர்ந்த ஆன்மீக அனுபவத்தைப்பற்றி அவர் கீழே வருமாறு விவரித்துள்ளார்.

'இலிங்கமன்று, இலிங்கமுக்தியுமன்று,
இணைதலன்று சமரசமன்று,
நிகழ்ந்ததன்று, நிகழாததன்று
நீயன்று, நானன்று
சன்னமல்லிகார்ச்சுனனுடன் இணைந்தபின்
ஏதும் கூற இயலுமோ?'[2]

என்று கூறியுள்ளார்.

மஹாராஷ்டிரத்தின் புனித மகான்கள்

மஹாராஷ்டிரத்தின் புனிதமகான்கள் இரண்டு வகை அல்லது மரபுகளைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். முதல் வகையினர் மென்மையான பக்தர்கள் ஆவார்கள். அது சிறந்த புனிதமகான்களான ஞானேஸ்வரர், நாமதேவர், ஏகநாதர் மற்றும் துகாராமை உள்ளடக்கிக் கொண்டது ஆகும். இரண்டாவது வகையினர் வீரம் நிறைந்த பக்தர்கள் அது சமர்த்த ராமதாஸ் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களை உள்ளடக்கிக் கொண்டது ஆகும். முதல் வகையானது மஹாராஷ்டிரத்தில் பண்டரீபுரத்திலுள்ள முதன்மை தெய்வமான விட்டலரின் சமயப்பிரிவை அடிப்படையாகக் கொண்டது

1. Women Saints of East and West (Ramakrishna Vedanta Centre of London, 1955) பக்கம் *39*.

2. மேற்கண்ட நூல், பக்கம் *40*.

ஆகும். இந்தப் புனித மகான்களில் முதன்மையானவராகவும் மற்றும் மிகச் சிறந்தவராகவும் ஞானேஸ்வர் (அல்லது ஞான்தேவ்) விளங்குகிறார். அவர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஆவார். அவருக்கும் அவருடைய சகோதரருமான நிவ்ருத்திநாத் அவர்களுக்கும் நாத யோகிகளின் வழியில் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனால் ஞானேஸ்வர் அவருடைய படைப்புகளில் நாத மரபை வேதாந்தத்துடன் இணைத்துள்ளார். மற்றும் மஹாராஷ்டிரத்தில் இந்தக் கூட்டிணைப்பு அணுகுமுறைதான் மிகவும் பரவலாக அனைவராலும் அறியப்பட்டதாக இருந்தது.

ஞானேஸ்வரர் அவருடைய பெற்றோரின் இரண்டாவது மகனாவார். விட்டல் பன்ட் மற்றும் ரகுமாபாய் அவருடைய பெற்றோர் ஆவர். ஞானேஸ்வரரின் தந்தை தன்னுடைய திருமணத்திற்குப் பிறகு உலகத்தைத் துறந்து ராமானந்தர் என்னும் சிறந்த முனிவரிடமிருந்து சன்னியாசம் பெற்றுக் கொண்டார். ராமானந்தர் வடஇந்தியாவில் பக்தி இயக்கத்தின் மூலத் தோற்றுவாயாக விளங்கினார். விட்டல் பன்ட் திருமணமானவர் என்பதை அறியாமல் ராமானந்தர் அவரைப் புனிதமான ஸன்யாஸ மரபொழுங்கில் சேர்த்துக் கொண்டார். ஆனால் அவருக்கு அதற்குப் பிறகு உண்மை தெரியவந்த பொழுது, அவர் தன்னுடைய சீடரிடம் வீட்டிற்குத் திரும்பிச் சென்று இல்லற வாழ்வை மேற்கொள்ளுமாறு கூறினார். விட்டல்பன்ட் அவருடைய குருவிற்குக் கீழ்ப்படிந்து நடந்து கொண்டார். உரிய காலத்தில் அவருக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் பிறந்தனர். ஆனால் சன்னியாஸ சங்கற்பத்தைத் தகர்ப்பது, அந்த வட்டாரத்திலிருந்த அந்தணர்களால் பாவமாகக் கருதப்பட்டது. எனவே அவர்கள் அவருடைய குடும்பத்தை விலக்கி வைத்தனர். விட்டல்பன்ட்டும் அவருடைய மனைவியும் நிவ்ருத்திநாதன், ஞானதேவன், ஸொபான் மற்றும் முக்தாபாய் என்னும் குழந்தைகளை அனாதைகள் ஆக்கிவிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் குழந்தைகள் அவர்களுடைய தூய்மையான வாழ்க்கைகளால் அந்த அந்தணர்களை மிகவும் ஈர்த்தனர்.

அவர்கள் மீண்டும் அவர்களுடைய ஜாதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மூத்த சகோதரனான நிவ்ருத்திநாதன் கஹினிநாத் (சிறந்த யோகியான கோரக்ஷாநாத்தின் சீடர்) என்பவரிடமிருந்து தீட்சை பெற்றுக்கொண்டதாக கர்ண பரம்பரைச் செய்தி கூறுகிறது. மற்றும் அவர் தன்முறையில் ஞானதேவனுக்கு தீட்சை அளித்தார். இவ்விதம் இவர்கள் மூலம் நாத மரபுக் கோட்பாடு மஹாராஷ்டிர இறைநிலை இணைவுப்பான்மைக் குள் நுழைந்தது. சகோதரர்களும், சகோதரியும் இந்தியா முழுவதிலும் கடவுளின் புகழைப் பாடிக் கொண்டு யாத்திரை செய்தனர். ஞானதேவர் மிகவும் இளமையான வயதிலேயே, இருபத்தி இரண்டாம் வயதிலேயே காலமானார். அதற்குள் அவர் ஞானேஸ்வரியை இயற்றி இருந்தார். உலகத்திலுள்ள தலைசிறந்த ஆன்மீகம் சார்ந்த படைப்பாக அது கருதப்படு கிறது. அம்ருதானுபவம் மற்றும் பல அபங்கங்களையும் மராத்தி மொழியில் இயற்றியுள்ளார். ஞானேஸ்வரியானது பகவத்கீதையின் விளக்கவுரையாகக் கருதப்பட்டாலும் அது உண்மையில் அவருடைய கூட்டிணைவுத் தத்துவத்தையும் சொந்த ஆன்மீக அனுபவங்களையும் விரிவாக எடுத்து உரைக்கிறது. அது கர்மம், யோகம், பக்தி மற்றும் ஞானம் என்னும் நான்கு சிறந்த சமயப் பாதைகளின் சங்கமமாக விளங்குகிறது. ஞானதேவர் உச்ச அளவான அத்வைதியின் கருத்தை எடுத்துக் கொள்ளவில்லை. கடவுளானவர் நிலை பெற்ற தன்மையில் படைப்பு முழுவதிலும் பரவி உள்ளார். மற்றும் எல்லாவற்றையும் கடந்தும் இருக்கிறார் என்பது ஞானதேவரின் கருத்து ஆகும். அவர், சமுத்திரம் மற்றும் அலைகளை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளார். கடவுள்தான் சமுத்திரம் ஆவார். ஆன்மாக்களும் இந்த பிரம்மாண்டமும் அலைகள் மற்றும் நீர்க்குமிழிகள் ஆகும். அவருடைய எல்லாப் படைப்புக்களும் இந்த முறையில் எடுத்துக் காட்டுகள் நிறைந்ததாக விளங்குகின்றன. சிறந்த கவிதை நயத்தைக் கொண்டுள்ளன. அழகான, நேர்த்தியான சொல் அமைப்பைக் கொண்டுள்ளன. எல்லா இருமையையும்

கடந்துள்ள மிக உயர்ந்த உண்மையைப் பற்றி அவர், 'அது, எந்த வடிவத்தையும் இன்னும் புனைத்து கொள்ளாத அழகைப்போல உள்ளது. அல்லது நல்லொழுக்கத்துடன் கூடிய புனிதமான செயல், அது செய்யப்படுவதற்கு முன்பு இருப்பதைப்போல உள்ளது. அது எல்லாப் பொதுத் தன்மை யையும் கடந்த நிலையில் உள்ளது. அதனுடைய நிலையில் மௌனமே மிகச் சிறந்த மொழியாகும்' என்று கூறியுள்ளார். ஞானதேவரின் சகோதரியான முக்தாபாயும் ஆன்மீகம் சார்ந்த கவிதை நயத்துடன்கூடிய சிறப்பான பல அபங்கங்களை விட்டுச் சென்றுள்ளார்.

நாமதேவர், அதே மரபைச் சேர்ந்த மற்றும் சிறந்த புனித மகான் ஆவார். அவர் ஞானேஸ்வரருடன் சமகாலத்தில் இருந்தவராவார். உண்மையாக அந்த சமயத்தில் மஹாராஷ்டி ரத்தில், பல சிறந்த புனித மகான்கள் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் விட்டலனின் பக்தர்கள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து மகிழ்ச்சி நிறைந்த ஆன்மீகக் குழுவாக இருந்தனர். தெருக்களில் பலதடவைகள், பாடிக் கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். நாமதேவர் ஒரு தையல் காரரின் குடும்பத்தில் பிறந்தவர் ஆவார். அவர் இளைஞனாக இருந்தபொழுது வழிப்பறியை மேற்கொண்டு ஒருமுறை சில படைவீரர்களைக் கொன்றதாகக் கூறப்படுகிறது. அதற்குப் பிறகு, அவனால் கொல்லப்பட்ட ஒருவரின் துயரம் கொண் டிருந்த மனைவியையும் இளங்குழந்தையையும் பார்த்த பொழுது அவன் இதயம் அவன் செய்த செயலிற்காக வருந் தியது. அவர் திடீரென்று ஒரு மாற்றத்திற்கு ஆட்பட்டார். அவர் தன்னுடைய பெரும்பான்மையான நேரத்தை விட்டல னின் கோயிலில் கடவுளின் புகழைப் பாடிக் கொண்டிருப் பதில் செலவிட்டார். எப்படியிருப்பினும் அவருடைய வேக மான ஆன்மீக வளர்ச்சி அவரைச் சிறிது தற்பெருமைப்பட வைத்தது. பிறகு ஒருநாள் ஞானதேவர் அவருடைய சகோதரர் களுடனும் சகோதரி முக்தாபாயுடனும் கோயிலிற்கு வந்தார். இளம்பெண்ணான முக்தாபாய் நாமதேவரிடம் தற்பெருமைக் கூறு இருப்பதைக் கண்டுணர்ந்து, கோரா என்னும் மற்றொரு

புனிதமகானிடம் (குயவர் இனத்தைச் சார்ந்தவர்) அங்குக் குழுமியிருந்த எல்லா புனிதமான மனிதர்களையும் சோதித்துப் பார்க்கும்படிக் கூறினாள். கோரா ஒரு கோலை எடுத்துக் கொண்டு அவர்களுடைய தலையை ஒவ்வொருவராகத் தட்டினார். அவர் நாமதேவரின் அருகில் வந்த பொழுது 'பானை' சுடப்படாமல் உள்ளது என்று கூறினார். அந்தக் குழுவில் அவர் ஒருவர் மட்டுமே அப்படி இருந்தார். அவமதிக்கப்பட்ட நாமதேவர் விசோபா கேசரா என்பவரிடம் செல்லுமாறு கட்டளையிடப் பட்டார். விசோபா கேசரா ஞானதேவரின் சீடர் ஆவார். விசோபாவிடமிருந்து தீக்ஷை பெற்றுக்கொண்ட பிறகு அவருக்குத் தீவிரமான ஆன்மீகப் போராட்டங்களைக் கடக்க வேண்டி இருந்தது. கடவுளை உணரவில்லை என்னும் அவருடைய துயரம் அவருடைய பல அபங்கங்களில் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. ஒரு இடத்தில் நாமேதேவர், 'ஒரு வண்டின் இதயம், ஒரு மலரின் நறுமணத்தில் நிலைத்து இருப்பதைப் போல் அல்லது ஒரு ஈயானது தேனை நாடி அடைவதுபோல என் மனம் இறைவனைப்பற்றிக் கொண்டுள்ளது' என்று கூறியுள்ளார். மற்றொரு இடத்தில் அவர்,

'ஆதரவற்றவன், ஆதரவற்றவன் என நான் கூறப்படுகிறேன்
ஆனால் நீ ஆதரவாளன் என அழைக்கப்படுகிறாய்
வீழ்த்தப்பட்டவன், வீழ்த்தப்பட்டவன் என் நான் கூறப்படுகிறேன்
ஆனால் நீ வீழ்த்தப்பட்டவரின் துன்பம் துடைப்பவன்
எனக் கூறப்படுகிறாய்
நீ எனக்குச் செவிசாய்க்க வில்லை எனின், உனக்கு அது
வெட்கத்தை ஏற்படுத்தும் செயலாக இருக்காதா என்று
நாமதேவன் கூறுகிறான்.

மஹாராஷ்டிரத்தின் மற்ற புனிதமகான்களைப் போலவே நாமதேவரும் கடவுளின் திருநாம பாராயணத்திற்கு மிகுந்த முக்கியத்துவத்தை அளித்துள்ளார். 'கடவுள் மறைந்து இருக்கக் கூடும், ஆனால் அவரால் அவருடைய பெயரை மறைக்க இயலாது. நாம் ஒருமுறை அவருடைய திருநாமத்தை உச்சரித்துவிட்டால் நம்மிடமிருந்து அவரால்

தப்ப இயலாது' என்று நாமதேவர் கூறி உள்ளார். தீவிரமான பக்தியாலும் மற்றும் கடவுளின் நாம பாராயணத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்ததாலும் நாமதேவரால் ஆன்மஞானத்தின் மிக உயர்ந்த நிலையை அடைய முடிந்தது. அவருடைய இஷ்ட தெய்வமான விட்டலனிடம் தீவிரமான பக்தியைக் கொண்டிருந்தாலும், படைப்புப் பொருட்கள் அனைத்திலும் அவர் பரம்பொருளின் உள்ளுறை இயல்பை உணர்ந்தார். ஒரு நாள் ஒரு நாய் ஒரு உலர்ந்த ரொட்டித் துண்டுடன் ஓடியது. நாமதேவர் தன் கையில் நெய்நிறைந்த மட்கலத்துடன் அதன் பின்னால் ஓடிச் சென்று 'ஓ, கடவுளே, காத்திருப்பீர், ரொட்டிக்கு நெய் தடவித்தருகிறேன்' என்று கூறியதாக ஒரு கதை உள்ளது.

நாமதேவரிடம் ஜானாபாய் என்னும் பெயரைக் கொண்ட பணிப்பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அவருடைய சீடராக இருந்தாள். மற்றும் அவருக்கு மிகவும் பக்தியுடன் தொண்டு செய்தாள். அவளும் ஒரு திறமையான கவிஞராக விளங்கினாள். அவளுடைய எளிமையான அபங்கங்கள் மஹாராஷ்டிரத்தில் இன்றும் பரவலாக அனைவராலும் அறியப்பட்டவையாக உள்ளன. ஜானாபாய் அதிகாலையிலேயே எழுந்துவிடுவாள். மற்றும் அவளுடைய குடிசையில் சோளமாவு அரைப்பாள். எல்லா நேரங்களிலும் கடவுளின் புகழைப் பாடிக்கொண்டே இருப்பாள். ஒருநாள் நாமதேவரின் தாய், ஜானாபாய் யாரோ ஒருவரிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு எட்டிப்பார்த்தார். அவர் மற்றொரு பெண்ணைக் கண்டார். யார் என்று கேட்டதற்கு ஜானாபாய் அது விட்டலாபாய், கடவுள் விட்டலன் பெண் உருக் கொண்டு வந்துள்ளார் என்று கூறினாள். கடவுளால் ஆண் வடிவத்தை புனைந்து கொள்ள இயலும் என்றால், அவரால் பெண் வடிவத்தைப் புனைந்து கொண்டு வர இயலாதா? ஜானாபாய் அவளுடைய ஒரு அபங்கத்தில் அவள் அவளுடைய கர்மத்தை (வினைகளை) அமைதி என்னும் மாவு அரைக்கும் யந்திரத்தில் நம்பிக்கை என்னும் அதனுடைய பிடியுடன் அரைத்துக் கொண்டிருப்பதாகக் கூறி உள்ளாள்.

எத்தகைய பொருத்தமான கற்பனை! மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த பெண் அருளாளர்களின் வரிசையில் ஜானாபாய் முக்தாபாய்க்கு அடுத்து வருகிறாள்.

பதினாறாம் நூற்றாண்டில், மற்றொரு புனித மகான்களின் குழு மஹாராஷ்டிரத்தில் தோன்றினர். அவர்களில் மிகவும் புகழ்பெற்றவர் ஏகநாதர் ஆவார். பைத்தன் என்னும் ஊரில் சமயப் பற்றுடைய அந்தணர் குடும்பத்தில் பிறந்தவர் ஆவார். ஏகநாதர் குழந்தைப் பருவத்திலிருந்தே கடவுளிடம் ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். அவருக்குப் பன்னிரெண்டு வயதான பொழுது அவர் குருவான புகழ்பெற்ற ஜனார்தன ஸ்வாமிகளைச் சந்தித்தார். அவர் அவருடைய குருவிற்குத் தொண்டு செய்து கொண்டு அவரிடம் பயின்றார். திருமணப் பருவத்தை அடைந்ததும், கடவுள் பக்தி நிறைந்த பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவர் முழு நிறைநலம் வாய்ந்த இல்லற வாழ்வை மேற்கொண்டார். வாழ்க்கையில் அவருடைய கடமைகள், அவருடைய ஆன்மீக வாழ்விற்கு ஒருபொழுதும் தடையாக இருக்கவில்லை. அவர் தன் வாழ்வைத் தியானம் செய்வதிலும், வேதங்களைக் கற்பதிலும் போதிப்பதிலும், பக்திப்பாடல்களைப் பாடுவதிலும் சமய வாழ்க்கையை மேற்கொண்டவர்களுக்குத் தொண்டாற்றுவதிலும் உதவி தேவைப்பட்டவர்களுக்கு உதவியைச் செய்வதிலுமாகச் செலவிட்டார். அவர் வாழ்வுடன் தொடர்புடைய பல கதைகள் அவருடைய அகிம்சை மற்றும் பொறுமையுடன் கூடிய மனநிலையை வெளிப்படுத்துவதாக உள்ளன. ஒருநாள் அவர் ஒரு நதியில் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்த பொழுது ஒரு முகம்மதியர் அவர் உடல் மீது துப்பினார். ஏகநாதர் அமைதியாக திரும்பச் சென்று மீண்டும் குளித்தார். முகம்மதியர் மீண்டும் அவர் உடல் மீது துப்பினார். மீண்டும் ஏகநாதர் கோபமாக ஒரு சொல்லையும் கூறாமல் மீண்டும் திரும்பச் சென்று குளித்தார். இவ்விதம் துப்புவதும், குளிப்பதும் 108 தடவைகள் நடந்தன. அந்தக் கயவன் தான் செய்த செயலிற்கு வருந்தி, ஏகநாதரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கோரினார்.

ஏகநாதர் முதன் முறையாக ஞானேஸ்வரியின் ஏற்கத்தக்க பதிப்பை வெளியிட்டார். மற்றும் அவருடைய படைப்புக் களில் பாகவதத்தின் 11-ஆம் அத்தியாயத்திற்கு அவர் எழுதிய விளக்கவுரையும், ருக்மணியின் கல்யாணம் என்னும் பெய ருடைய நீண்ட கவிதையும் மிகவும் புகழ்பெற்றவையாகும். ஆனால் அவருடைய அபங்கங்கள்தான் முக்கியமாகப் பெருந் திரளான மக்களால் அறியப்பட்டிருந்தன. அவர் அபங்கங் களில் அவருக்குக் கடவுளின்மீது இருந்த தீவிரமான பக்தியை யும், ஒழுக்க நெறிமுறையின் உயர்வையும் வெளிப்படுத்தி உள்ளார். 'நாம் இந்த உலகத்தில் வெறும் யாத்திரிகரைப் போல அவர்கள் மாலை வேளையில் ஏதாவது ஒரு புகலிடத் திற்கு வந்து, அடுத்த நாள் காலையில் சென்று விடுவதைப் போல வாழ வேண்டும். குழந்தைகள் விளையாடும் பொழுது வீடுகளைக் கட்டிப் பிறகு அதை எறிந்து விடுவதைப்போல நாம் இந்த வாழ்க்கையுடன் செயல் தொடர்பு கொள்ள வேண்டும்' ஆன்மீகப் பயிற்சியைப்பற்றி அவர் 'பக்தி என்பது வேர் ஆகும். உணர்ச்சிகளுக்கு ஆட்படாத அமைதியான நிலை மலர் ஆகும். மற்றும் ஞானம் அடைவது பழம் ஆகும்' என்று அவர் கூறியுள்ளார். அவருடைய வேறுசில அபங்கங் களில் அவர் அவருடைய ஆன்மீக அனுபவங்களைப் பற்றிக் கூறியுள்ளார். அவை மிகவும் மேம்பட்ட வகையைச் சார்ந்த வையாகும். அவர் ஒரு இடத்தில் 'ஆன்மீக அனுபவத்தின் விடியலில், முழு உலகமும் சுடரொளியால் போர்த்தப்பட் டிருப்பதைக் கண்டேன்' என்று கூறியுள்ளார். அவருடைய பலராலும் அறியப்பட்டுள்ள ஒரு பாடலில் அவர் அகத் திலும், புறத்திலும், உறக்கத்திலும், விழிப்பிலும் மற்றும் எந்தப் பக்கத்தில் அவர் பார்த்தாலும் ஸ்ரீராமனையே கண்ட தாகக் கூறியுள்ளார். வேறு சில அபங்கங்கள் அவர் கடவுளுடன் இரண்டறக் கலந்ததை விவரிக்கின்றன. ஏகநாதர், வேதாந்தத் தின் மிக உயர்ந்த போதனைகளை மஹாராஷ்டிரத்தின் ஜனத்திரளுக்கிடையில் பரவலாக அறியும்படிச் செய்தார்.

மஹாராஷ்டிரத்தில் 17-ஆம் நூற்றாண்டில் துகாராம் எனப்படும் மற்றொரு சிறந்த புனிதமகான் தோன்றினார்.

அவர் மஹாராஷ்டிரத்தின் புனிதமகான்களுக்கிடையில் மிகவும் புகழ் பெற்று விளங்கியவர் ஆவார். ஹரிகதை என்னும் இசைச் சொற்பொழிவின் வடிவத்திற்கு அவருடைய வாழ்க்கையானது விருப்பத்திற்கு உரிய தலைப்பாக விளங்கு கிறது. ஒருவேளை அவருடைய ஓயாமல் நச்சரிக்கும் இயல் புடைய மனைவியால் தோற்றுவிக்கப்பட்ட குடும்பம் சார்ந்த சச்சரவுக் காட்சிகள், சமயம், ஆன்மீகத்தில் விருப்பம் கொண்ட இல்லற வாழ்வை மேற்கொண்டவரின் வாழ்க்கை யானது பெரிய குறியிலக்கை ஏற்படுத்தி இருக்கக் கூடும். அவர் 1608-ஆம் ஆண்டில், பூனாவிலிருந்து 18 கல் தொலை விலுள்ள தேஹு என்னும் கிராமத்தில் சமயப்பற்று மிகுந்த விவசாயிகளின் குடும்பத்தில் பிறந்தார். துகாராம் இளைஞ னாக இருந்த பொழுது நாட்டின் அந்தப் பகுதியில் பெரிய பஞ்சம் மேலோங்கியிருந்தது. துகாராம் தன்னுடைய கால் நடைகளையும், நிலத்தையும், இரு மனைவியருள் ஒரு மனைவியையும், ஒரு மகனையும் இழந்தார். எஞ்சியிருந்த மனைவி ஒரு அடங்காப்பிடாரியாக இருந்தாள். அவரைத் தொடர்ந்து நச்சரித்து அவர் வாழ்க்கையை துயரம் மிகுந்ததாக ஆக்கினாள். இத்தகைய எல்லா வெறுப்பூட்டும் அனுபவங் களும் அவருடைய மனத்தைக் கடவுளின் பக்கமாகத் திருப் பியது. அவர் ஞானேஸ்வர், நாமதேவர் மற்றும் ஏகநாதர் போன்றவர்களின் படைப்புக்களைப் படிக்கத் தொடங்கினார். மற்றும் தன்னுடைய ஒய்வு நேரத்தை தனிமையில் ஆழ்ந்து சிந்திப்பதில் செலவிட்டார். அவருக்குக் கனவில் ‘பாபாஜி’ என்று கூறப்படும் ஒரு புனிதமகானால் தீட்சை அளிக்கப் பட்டது. அவர் தன்னுடைய ஒரு அபங்கத்தில் அவரைப் ‘பாண்டுரங்கனின் கப்பல்’ என்று குறிப்பிடுகிறார். அந்தக் கப்பலானது மனிதர்களை உலக வாழ்க்கை என்னும் சமுத்திரத்தின் கரையைக் கடக்கச் செய்யும்.

தனிமையில் சிறிது காலத்திற்குச் சாதனை செய்த பிறகு, துகாராம் ஒரு கவிஞராக, ஒரு போதகராக வெளிப்பட்டார். இது அந்த வட்டாரத்திலிருந்த அந்தணர்களிடம் பொறா மையை ஏற்படுத்தியது. மற்றும் அவர்கள் துகாராமைப் பல

வழிகளில் வாட்டித் துன்பப்படுத்தினர். ஆனால் இறுதியில் கடவுளின் மீது அவருக்கு இருந்த தீவிரமான அன்பும் மற்றும் குற்றமற்ற வாழ்வும் அவர்களை அவரின் பக்கத்திற்குச் சாயும் படி செய்தன. அவருடைய அபங்கங்கள், அவர் முழுமை யான ஞானம் அடைவதற்காக, அவர் கடந்து செல்ல வேண் டியிருந்த அவருடைய பெரும் அகப் போராட்டங்களை வெளிப்படுத்துகின்றன. அவை கடவுள் மீது அவருக்கு இருந்த தீவிரமான ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றன.

ஒரு உண்மையான சாதகனின் வாழ்க்கையானது எப் பொழுதுமே துன்ப உணர்வு மற்றும் நிறைவற்ற தன்மை யுடனேயே தொடங்குகிறது. மற்றும் இது அவனைக் கடவுளின் பக்கம் திருப்புகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அவன் சில மாதங்களுக்கோ அல்லது சில வருடங் களுக்கோ முயற்சி செய்து போராடிய பிறகு, கடவுள் அவருடைய இருப்பை அவனுக்கு உணர்த்துகிறார். மற்றும் அவனுக்கு ஓரளவிற்கு இன்பத்தை அளித்து விட்டு மறைந்து விடுகிறார். ஆன்மா கடவுளை விட்டுப் பிரிந்திருக்கும் இந்தப் பிரிவு நிலையானது தீவிரமான துன்பங்களை ஏற்படுத்து கிறது. உலகியல் முறையில் மட்டுமின்றி, உயர்ந்த நிலை யிலும் ஏற்படுகிறது. கிறிஸ்தவ ஞானிகள் இதனை, 'ஆன்மா வின் இருள் நிறைந்த இரவு' என்று அழைக்கின்றனர். ஹிந்து சமய ஞானிகள் இதை விரஹம் என்று அழைக்கின்றனர். அது, ஒரு மேகம் ஆன்மாவின் மீது விழுந்து இருப்பதைப் போன்றும் மற்றும் அந்த சாதகன் பல வகையான மருட்சி களால் தாக்கப்படுவதைப் போன்றும் நுட்பமான ஒரு வகை யைச் சேர்ந்ததாக உள்ளது. துகாராம் இந்த நிலையை அவ ருடைய ஒரு அபங்கத்தில் விவரித்து உள்ளார்.

'சரியானது எது என்று நான் எப்படி அறிவேன்?
அத்தனை ஆதரவற்று இருக்கிறேன் நான்
ஏனெனில், நீ உன் முகத்தை என்னிடமிருந்து மறைக்கிறாய்.
ஓ மிகவும் உயர்ந்தவனே!
நான் மீண்டும் மீண்டும் அழைக்கிறேன்.
உன்னுடைய உயர்ந்த வாயிலிலே

யாரும் என்னைக் கேட்கவில்லை வீடு
வெறுமையாக உள்ளது மற்றும் தனிமையில்.....[1]

அவர் கடவுளிடம் ஒரு யாசகனாக, யாசிப்பதற்குச் செல்கிறார். எவற்றை யாசிப்பதற்கு? தெய்வீக அன்பு யாசகங்களைக் கேட்கின்றார்.

'உன் வாயிலில் ஒரு யாசகன்
கெஞ்சுகிறேன் நான் நின்றுகொண்டு
அளிப்பாய் எனக்கொரு பிச்சை கடவுளே
அன்பை இடுவாய் உன் அன்புக் கரத்தாலே
வெற்றுச் செயலிலிருந்து என்னை விட்டுவிடு
வருவதற்கு மற்றும் இல்லாமைக்கு வருவதற்கு
தகுதியற்ற, விலைக்கு வாங்கப்படாத
ஒரு பரிசுக்காக ஏங்கும் ஏழை துக்கா[2]

கடவுளிடமிருந்து பிரிந்துள்ள தீவிரமான வேதனையானது இங்குள்ள அவருடைய மிகவும் புகழ்பெற்ற அபங்கத்தில் மிகுந்த துயரத்துடன் விவரிக்கப்பட்டு உள்ளது.

'வேதனையில் முச்சுத்திணறி', பதைபதைத்துக்
கரையிலே இரங்கத்தக்க மீன் உள்ளது.
அல்லது ஒரு மனிதன் ஆவலான கண்களுடன்
மறைந்துள்ள தங்கத்தை வறிதே நாடுவதைப்போல
என் இதயம் துன்பமுற்று அழுகிறது
உன்னிடம் மீண்டும் வருவதற்கு

தொலைந்த குழந்தையின் ஓலத்தின்
வேதனையை நீ அறிவாய் இறைவனே
அவன் தாயின் முகத்தைக்காண ஏங்குகிறான்
(எத்தனை முறை நான் கூறியதையே கூறுகிறேன்)

---

1. Nicol Macnicol, Psalms of Maratha Saint, The Heritage of India Series (Calcutta, Association Press) என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது *(பக்கம் 56).*

2. மேற்கண்ட நூல், பக்கம் 57

ஓ, உன் திருவடிகளில் இருண்ட
உலகின் புதிர் அவிழ்கிறது.

அலைக்கழிக்கும் இந்த எண்ணத் தீ
என் மாரின் மீது அரிக்கிறது.
நான் ஏன் இவ்விதமாக மறக்கப்பட்டேன்?
(ஓ, உன் செயற்பாங்கை யாரறிவார்?)
இல்லை, இறைவனே, நீ மிகுதியாக
என் மகிழ்வற்ற நிலையைக் காண்கிறாய்
அருள்வாய் என துகா கூறுகிறான்.[1]

துகாராம் இனிப்பைச் சுவைக்க விரும்பினார். ஆனால் 'இனிப்பாக ஆவதற்கு' விரும்பவில்லை. அவர் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் பேரின்பத்தைத் துய்க்க விரும்பினார். ஆனால் கடவுளுடன் இரண்டறக் கலப்பதை விரும்பவில்லை. எனவே அவர், 'அத்வைதம் என்னை உட்கொள்ளவில்லை' என்று கூறியுள்ளார்.[2] அகத்தூய்மை மற்றும் முழுமையாகக் கடவுளுக்குச் சரணாகதியடைந்த நிலை என்னும் இவை துகாராமிற்குக் கடவுளின் திருக் காட்சியை அருளும்படிச் செய்தன. அதாவது கடவுளின் பேரின்ப மயமான இருப்பை உணரும்படிச் செய்தன. பாண்டுரங்கக் கடவுள் அவருடைய அகக் காட்சியில் துகாராமிற்குக் காட்சி அளித்திருக்க வேண்டும். ஏனெனில் அவர், 'இப்பொழுது என் கண்கள், எண்ணங்களால் போர்த்தப்பட்டு நிற்கும் அவனைக் காண்கின்றன' என்று கூறியுள்ளார்.[3] துகாராம் அவரிடம் எப்பொழுதும் இடையீடற்று கடவுளின் இருப்பை உணர்ந்திருக்க வேண்டும். கீழ்க்கண்ட அபங்கத்தில் அவர் அதைக் குறித்துக் கூறுகிறார்.

இப்பொழுது பாண்டுரங்கா என் பங்கிற்கு நான் தேர்ந்து
எடுத்துள்ளேன்.
வேறில்லை, வேறில்லை, கடவுளுக்காக இருப்பதே

---

1. மேற்கண்ட நூல், பக்கம் 63
2. மேற்கண்ட நூல், பக்கம் 68
3. மேற்கண்ட நூல், பக்கம் 70

என் எல்லா எண்ணங்களில் அவர் இருக்கிறார்
என் இதயத்தில் குடிகொண்டுள்ளார்
உறக்கத்திலும், விழிப்பிலும் அவரே உள்ளார்.[1]
என்கைப்பற்றி நீ வழி காட்டுவாய்
எங்கும் என் உற்ற நண்பனே
நான் உன்னையே நம்பி செல்கிறேன்.
என் சுமையை நீ தாங்குகிறாய்.....
அதனால் ஒரு மகிழ்ச்சியான குழந்தையனைய நான்
ஆடுகிறேன்.

உன் அன்பான உலகிலே, ஓ, இறைவனே!
மற்றும் பாரெல்லாம் நான் துகா கூறுகிறேன்
உன் அருள் தொலைவில் பரவியுள்ளது.[2]

அவர் இப்பொழுது நம்பிக்கையுடன், நேரடியாக உணர்ந்ததால் தோன்றிய மெய்ப்பிப்பினால் கூற இயலும்.

'கடவுள் நம்மவர், ஆம், நம்மவர் ஆவார்
இருக்கும் எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவாக

கடவுள் ஐயமின்றி அருகிலுள்ளார்
அனைவருக்கு அருகிலும், அகத்திலும் புறத்திலுமுள்ளார்

கடவுள் அருள்பவர், இன்னும் அருள்பவர்,
ஒவ்வொரு விருப்பத்தையும் அவர் நிறைவு செய்பவர்

கடவுள் காப்பவர், தன்னைச் சார்ந்தோரைக் காப்பவர்
சச்சரவையும், மரணத்தையும் வீழ்த்துபவர்

கடவுள் அன்பானவர், ஆ, உண்மையாக அன்பானவர்
துகா, கடவுள் காப்பாற்றி வழி நடத்துவார்.[3]

மற்றொரு அபங்கத்தில் துகாராம், கடவுளின் அனைத்தையும் கடந்துள்ள தன்மையைப் பற்றிக் கூறுகிறார். அதைப் பக்தியின் மூலமே கிரகித்துக் கொள்ள இயலும்.

---

1. மேற்கண்ட நூல், பக்கம் 70
2. மேற்கண்ட நூல், பக்கம் 71
3. மேற்கண்ட நூல், பக்கம் 73

உன் இயல்பு மனிதனின் வாக்கு மற்றும்
எண்ணத்தின் பிடிப்பிற்கு அப்பாற்பட்டது.
அதனால் அன்பை நான் அளவு கோலாகச் செய்துள்ளேன்.
எதனால் நான் கற்பிக்கப்படுவேன்?

இவ்விதம் அன்பின் அளவுகோலால்
நான் பரம்பொருளை அளந்தேன்.
மெய்யாகவே அவரை அளப்பதற்கு
வேறு எந்தத் தகுதியான வழியில்லை[1]

கடவுளின் மீது உள்ள தீவிரமான அன்பால், துகாராம் புலன்கள் மற்றும் மனத்தின் பிடிகளிலிருந்து விடு பட்டார். அதனால் அவர் ஒரு வெற்றியின் தொனியில் கூறுகிறார்.

அன்பின் முரசை நாம் தட்டுகிறோம் - அதன் ஒலி
இந்தப் பாவம் நிறைந்த காலத்திற்குப்
பயத்தைத் தோற்றுவிக்கிறது.
வணக்கம், துகா கூறுகிறான். மகிழ்வுடன்
நம் வெற்றியை நாம் வெல்லும் வெற்றியை.[2]

ஒருவருடைய உணர்ச்சிகளை வெல்வதுதான் உண்மை யான வெற்றியாகும். தன்னையே வெற்றி கொள்வது என்பது பொருளாகும். உபநிஷதங்கள் இதைக் குறித்து ஸ்வராட் என்று கூறுகின்றன. தற்கட்டுப்பாட்டு ஆட்சி (Self-Sovereignty) தன்னை உணர்வதால் தோன்றும் உண்மையான விடுதலையாகும். முரண்படு மெய்ம்மை (Paradox) ஆகும். நாம் நம்மை இழப்பதன்மூலம், நம்முடைய அகங்காரத்தை இழப்பதன் மூலம் உண்மையான விடுதலையை வெற்றி கொள்கிறோம். நாம் நம் அகங்காரத்தை இழந்து, கடவுளைப் பெறுகிறோம் என்று துகாராம் கூறுகிறார்.

இப்பொழுது என்னிடமுள்ள அகங்காரம் அகன்றுவிட்டது
மற்றும் நீ அதன் இடத்தில் அரியணை ஏறியுள்ளாய்

---

1. மேற்கண்ட நூல், பக்கம் 73
2. மேற்கண்ட நூல், பக்கம் 85

ஆம் இந்த நான், துகா உறுதி செய்கிறான்
இனி 'நான்' அல்லது 'எனது' இல்லை[1]

மற்றொரு அழகான அபங்கத்தில் அவர்,

'என் கண்களின் முன்பு என் மடிந்த அகங்காரம் கிடக்கிறது
ஓ, ஒப்பிடப்பட இயலாத பேரின்பம்!
உலகங்களை மகிழ்ச்சி நிறைக்கிறது,
மற்றும் நான் களி மகிழ்வு எய்தியுள்ளேன்

அங்குள்ளது எல்லாவற்றின் ஆன்மா
என் தன்னல மிக்க பிணைப்புக்கள்
தளர்த்தப்பட்டு,மற்றும் தற்சமயம்
நான் எட்டுகிறேன் தொலைவை மற்றும் விடுபட்டு
பிறப்பு மற்றும் இறப்பு என்னும் கறை அகன்றது
அற்பமான நான் என்னும் உணர்வும்

நாராயணனின் அருள் எனக்கு இவ்விடத்தைக் கொடுத்தது
எங்கு, நான் நம்பிக்கையில் வாழ்கிறேன்
இப்பொழுது துகா கூறுகிறான், என் பணியைநான் செய்து விட்டேன்
மற்றும் செய்தியைப் பாரெங்கும் பரப்பு.[2]

இந்த அழகான ஆன்மீக வாழக்கையை எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக்கொள்வோம். மற்றும் நம் மனத்தில் ஆழமாகப் பதித்துக் கொள்வோம். ஆன்மீகப் பயிற்சிகளி லேயே மிகவும் சிறந்தது நம்மை முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பிப்பது, சரணாகதி அடைவது ஆகும். சரணாகதி அடைதல் மற்றும் தன்னை ஒப்படைப்பதன் இரகசியத்தை நாம் மஹாராஷ்டிர புனித மகான்களிடமிருந்து கற்றுக்கொள் வோம். உண்மையாக அதுதான் எல்லா சிறந்த புனிதமகான் களின் நிலைத்த போதனையாகும்.

வட இந்தியாவின் புனித மகான்கள்

13-ஆம் நூற்றாண்டில், வட இந்தியாவில் பக்தி இயக்கத்தை முதலில் தொடங்கிய சிறந்த புனிதமகான்

---

1. மேற்கண்ட நூல், பக்கம் 79
2. மேற்கண்ட நூல், பக்கம் 79-80

ராமானந்தர் ஆவார். இஸ்லாமியர் இந்தியாவை அரசியல் அளவில் கீழ்ப்படுத்தியதற்கு எதிர்ப்பாக இது தொடங்கப் பட்டது. அவர் அலகாபாத்தில் பிறந்தார். ஆனால் அவ ருடைய மூதாதையர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்த வர்கள் ஆவார்கள். அவர் குழந்தை மேதையாக இருந்தார். மிகவும் சிறு வயதிலேயே வேதங்களில் தேர்ச்சி பெற்றிருந் தார். அவர் ஸ்ரீவைஷ்ணவ முறையைச் சார்ந்த துறவிகளின் மரபில் சேர்ந்தார். அந்த மரபின் பலராலும் அறியப்பட்டிருந்த ஸ்ரீராகவானந்தர் என்பவரின் சீடரானார். அவர் புனித யாத்திரை ஒன்றை மேற்கொண்டார். அது அவரைத் தமிழ் நாடு முழுவதற்கும் அழைத்துச் சென்றது. அவர் திரும்பி வந்ததும், ராகவானந்தரைச் சேர்ந்த வைஷ்ணவ துறவிகள் அவர் தன் பயணங்களில் துறவிகளின் முறையிலுள்ள கண்டிப் பான கோட்பாடுகளை, முக்கியமாக உணவு சார்ந்தனவற்றில் கடைப்பிடித்திருக்க மாட்டார் என்று எண்ணி, அவரைத் தங்கள் திருச்சபையில் சேர்த்துக் கொள்ள மறுத்தனர். இது ராமானந்தருக்கு திடுக்கிடச் செய்யும்படியான அதிர்ச்சியை அளித்தது. அவர் அப்பொழுதிலிருந்து தற்சார்பான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தார். மற்றும் ஜாதி போன்றவற்றில், தன்னுடைய கருத்துக்களில், முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தார். உண்மையில், அவர் கூறியதாகக் கருதப் படும் மிகவும் புகழ்பெற்ற வாசகமானது, 'ஒருவரும் ஒரு மனிதனின் ஜாதியைக் குறித்துக் கேட்காமல் இருக்க வேண்டும். அல்லது அவன் யாருடன் உணவு அருந்துகிறான் என்றும் கேட்கக் கூடாது. ஒரு மனிதன் ஹரிக்குத் தன்னை அர்ப்பித்துக் கொண்டால், அவன் ஹரிக்கு உரியவன் ஆகி விடுகிறான்' என்பதாக உள்ளது.[1]

அவர் காசியில், கங்கை நதிக்கரையில் ஒரு குடிசையில் வாழ்ந்தார். மற்றும் தீவிரமான பழக்க வழக்கங்களையும்

1. ஜாதி பாங்தி பூச்சை நஹி கோயி ।
ஹரிகோ பஜே ஸோ ஹரிகா ஹோயி ॥

—Ramanand to Ram Tirtha (Madras, G.A. Natesan and Co., 2nd edn.) என்னும் நூலில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ளது (பக்கம் 3).

தியானத்தையும் மேற்கொண்டார். அவர் ஒரு நாளைக்கு நான்கு முறைகள் குடிசையிலிருந்து வெளியே வந்து ஒரு சங்கை ஊதுவார். வட இந்தியாவில் ஹிந்து சமயம் சார்ந்த பண்பாட்டிற்கு அப்பொழுது இஸ்லாமிய ஆதிக்கத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது ஸ்ரீராமா னந்தரின் ஏழுச்சியூட்டும் தெளிவான அழைப்பு ஒரு புதிய நம்பிக்கைச் செய்தியாக வந்தது. எல்லா இடங்களிலிருந்தும் அவருக்குச் சீடர்கள் வரத் தொடங்கினர். அவர்களில் இந்துக் களும், இஸ்லாமியர்களும் அடங்கினர். அவர்களுள் சிறந்த புனிதமகான்களான கபீர், ரவிதாஸ் தானா மற்றும் பல பெண் களும் இருந்தனர். ராமானந்தர் ராமனைப் பரம் பொருளுடன் அடையாளம் கண்டு கொண்டு மற்றும் மனிதகுலம் முழுமை யையும் ஒரு குடும்பமாகக் கண்டார். அவர் ஜாதி மற்றும் சமயம் சார்ந்த வேறுபாடுகளை விட்டொழித்தார். மற்றும் அதற்குப் பிறகு வந்த நூற்றாண்டுகளில் ஹிந்து மற்றும் இஸ்லாமிய கடவுள் பற்றுக்களின் ஒரு தனிச்சிறப்பான இணைப்பிற்கு வழிவகுத்தார். அவர் மிகவும் உள்ளூரத்துடன் போதித்தார். ஆனால் அவருடைய சில கவிதைகளும் மற்ற இலக்கியப் படைப்புக்களும் மட்டுமே எஞ்சியுள்ளன. சீக்கியர்களின் கிரந்தஸாஹிப்பில் அவருடைய ஒரே ஒரு கவிதை பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றும் அது அவருடைய தொலைநோக்கின் பரப்பை வெளிப்படுத்துகிறது.

'நான் எங்கு செல்வது? இசையும், கொண்டாட்டமும் என் சொந்த வீட்டிலேயே இருந்தன. என் இதயம் அசை வதற்கு விரும்பவில்லை. என் மனம் அதன் இறக்கைகளை மடித்துக் கொண்டு அமைதியாக இருந்தது. ஒருநாள் என் இதயமானது நிரம்பி வழியுமளவிற்கு நிறைந்திருந்தது. சந்தனம் மற்றும் மற்ற நறுமணப் பொருட்களுடன் சென்று, பிரம்மனை வழிபட வேண்டும் என்னும் விருப்பம் எனக்கு ஏற்பட்டது. ஆனால் குரு எனக்கு, பிரம்மன் என் சொந்த இதயத்திலேயே இருப்பதாக வெளிப்படுத்தினார். நான் எங்கு சென்றாலும் தண்ணீர் மற்றும் கற்களையே (பூஜை செய்யப் பட்டவை) காண்கிறேன். ஆனால் நீதான் அவைகள்

அனைத்தையும் உன் இருப்பால் நிறைத்துள்ளாய். அவர்கள் அனைவரும் உன்னை பயனில்லாமல் வேதங்களில் நாடு கிறார்கள். இங்கு நீ காணப்பட மாட்டாய் என்றால் நாங்கள் அங்கு சென்றே உன்னைக் காண வேண்டும். என்னுடைய சொந்த உண்மையான குருவான நீ என்னுடைய எல்லாத் தோல்விகளுக்கும் மருட்சிகளுக்கும் ஒரு முடிவை ஏற்படுத்தி உள்ளாய். நீ அருள் பெற்றவன்! ராமானந்தர், குரு, பிரம்மனில் தன்னை இழந்துள்ளார். குருவின் சொல்தான், இலட்சக் ணக்கான கர்ம பிணைப்புக்களை அழிக்கிறது'.[1]

இராமானந்தர் கி.பி.1299-ல் பிறந்து, கி.பி.1410-ஆம் ஆண்டில் இறந்தார் என்பது டாக்டர் க்ரியர்சன் (Dr.Grierson) அவர்களின் கருத்து ஆகும். அவர் 111 ஆண்டுகள் வாழ்ந்ததாக இது தெரிவிக்கிறது. வட இந்தியாவில் ஹிந்து சமயத்திற்குப் புத்துயிர் அளித்த மூலத் தோற்றமாக இராமானந்தர் இருப் பினும் அவருடைய போதனையான எளிமையான பக்தியும், சமூகத்தில் அனைவரும் சமம் என்னும் கருத்தும், முக்கிய மாக வடஇந்தியாவில் கபீர் அவர்களின் பாடல்கள்மூலமே பரவின. கபீர் அவர்கள் பிறந்த ஆண்டைக் குறித்து ஐயப்பாடு உள்ளது. எப்படி இருப்பினும் 15-ஆம் நூற்றாண்டில் ஹிந்துக் களும், இஸ்லாமியர்களும் ஒருவரோடொருவரின் சமய நம்பிக்கைகளுக்கும் மற்றும் பழக்கவழக்கங்களுக்கும் தங் களைப் பொருத்திக் கொள்வதற்கு முயற்சி செய்து கொண் டிருந்த பொழுது அவருடைய செல்வாக்கு ஆதிக்கம் செலுத் தியது. அவர் காசியில் நெசவாளர்களாக இருந்த பெற்றோரின் சொந்தக் குழந்தையோ அல்லது வளர்ப்பு மகனோ ஆவார். ஏழைகளான இந்த நெசவாளர்கள் முதலில் ஹிந்துக்களாக இருந்தனர், ஹிந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் என்னும் இருவரின் கண்களுக்குத் தாழ்ந்த சமூதாய அந்தஸ்தில் இருந் தனர். எனவே இயல்பாகவே அவர்கள் சமயத் தொடர்பான மரபுகள் மற்றும் விதிமுறைப் பயிற்சிகளின் சுமையிலிருந்து

---

1. Cultural Heritage of India, தொகுதி *4* (Calcutta, The Ramakrishna Mission Institute of Culture, 1969) என்னும் நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது *(பக்கம் 379).*

விடுபட்டு இருந்தனர். கபீர் இத்தகைய மரபொழுங்கு சாராத சமூகத்தில் வளர்ந்தார். அதன் விளைவு அவருடைய எல்லாக் கவிதைகளிலும் வெளிப்படுகிறது. அவருக்குத் தத்துவம் சார்ந்த முறையான பயிற்சியோ அல்லது படிப்போ இருக்க வில்லை. அவருக்குத் திருமணம் ஆகி ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தனர். அவருடைய குடும்ப வாழ்வானது, துகாராமுடைய குடும்ப வாழ்க்கைப்போல மகிழ்ச்சியற்றதாக இருந்தது என்று கூறப்படுகிறது. அவர் நெசவு செய்வதை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருந்தார் அவர் நெசவுத்தறி யில் செயலாற்றிக்கொண்டே கவிதைகளை இயற்றினார்.

நீண்ட காலத்திற்கு அவர் குரு இல்லாமல் இருந்தார். அவர் இராமானந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு இருந்தார். ஆனால் அந்தச் சிறந்த புனிதமகான் அவரைச் சீடனாக ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று பயந்தார். எனவே அவருக்கு ஒரு திட்டம் தோன்றியது. அவருக்கு இராமானந்தர் ஒவ் வொரு நாளும் அதிகாலையில் கங்கையில் குளிக்கச் செல் வார் என்பது தெரியும். ஒருநாள் அவர் அங்கு சென்று, நதிக்கு அழைத்துச் செல்லும் ஒரு படிக்கட்டில் படுத்துக் கொண்டு விட்டார். அந்த புனிதமகான் அங்கு வந்த பொழுது, இருட் டில் இருந்த மனிதனை அவர் கவனிக்கவில்லை மற்றும் அவருடைய பாதம் கபீரின் உடலைத் தொட்டது. இராமா னந்தர் பின்னடைந்து, 'ராம், ராம்' என்று குரல் எழுப்பினார். உடனே கபீர் எழுந்து நின்று இரு கரங்களையும் கூப்பிக் கொண்டு புனிதமகானை நோக்கி, 'குருவே, நீங்கள் எனக்கு மந்திரத்தை அளித்து உள்ளீர்கள், அதன்படி, நான் நெசவுத் தொழிலைச் செய்யும் ஏழையான இஸ்லாமியனாக இருப் பினும் என்னை நீங்கள் உங்கள் சீடனாக ஆக்கிக் கொண்டு விட்டீர்கள்' என்று கூறினார். அந்த மனிதனின் பக்தி மற்றும் பணிவினால் மிகவும் நெகிழ்ந்தார். அவரை அவருடைய சீடனாக ஏற்றுக்கொண்டார். மற்றும் அவருக்கு ஆன்மீக வாழ்க்கையின் மறைபொருட்களை வெளிப்படுத்தினார்.

அப்பொழுதிலிருந்து கபீர் கடவுளிடம் மதிமயங்கிய வாழ்வை மேற்கொண்டார். வாழ்க்கையின் பொதுவான

கடமைகள் அவரை, இடையீடற்றுக் கடவுளின் புகழைப் பாடுவதிலிருந்து மற்றும் நினைப்பதிலிருந்தும் தடுக்க வில்லை. அவர் கடவுளின் தரிசனத்திற்காக, மற்ற எல்லா சிறந்த ஞானிகளும் அனுபவித்ததைப் போன்ற வேதனை யைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. இறுதியில் அவர் ஞானமடைந்தார். அவரைப் பெருந்திரளாகப் பின்பற்றியவர் களில் ஹிந்துக்களும் மற்றும் இஸ்லாமியர்களும் இருந்தனர். மரபொழுங்கைச் சாராத அவருடைய வழிகளும், அவர் கடவுளைப்பற்றி அனைவருக்கும் ஒரே விதமாகப் போதித்த தன்மையும், புரோகிதர்கள் மற்றும் முல்லாக்களின் மேலீ டான தன்மை மற்றும் சமய உணர்வுடைமைகளின் நடுநிலை மதிப்பீடுகள் போன்றவை மரபுவழுவாத ஹிந்துக்களையும், இஸ்லாமியர்களையும் சீற்றம் கொள்ளச் செய்தது. அவர் துன்புறுத்தப்பட்டு காசியிலிருந்து விரட்டப்பட்டார். அவ ருடைய எஞ்சிய வாழ்நாளானது அவர் அவரைப் பின்பற்று பவர்களுடன் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு யாத்திரை செல்லுவதில் கழிக்கப்பட்டது. அவர் முதிய வயதுவரை வாழ்ந்தார். அவர் இறந்த பிறகு, அவரைப் பின் பற்றிய, ஹிந்து மற்றும் இஸ்லாமியர்கள் அவருடைய உடலை எப்படி அடக்கம் செய்வது என்பதைக் குறித்து சண்டையிட்டுக் கொண்டதாகவும் ஆனால் அவர்கள் சவப் போர்வையை எடுத்தபொழுது கீழே மலர்க் குவியல்களை மட்டுமே கண்டதாக மரபுக் கதை கூறுகிறது.

கபீருடைய பாடல்கள் அவைகளிடம் நன்னெறிப் படுத்தும் வல்லமை வாய்ந்த சிறப்புத் தன்மையைக் கொண் டுள்ளன. அவர் எளிமையான வாழ்க்கை, உடல் உழைப்பு, மனிதர்கள் அனைவரும் சமம் என்னும் கருத்து போன்ற வற்றை வலியுறுத்தினார். அவர் மதவெறியை சந்தேகத்திற்கு இடமில்லாமல் கண்டித்தார். அவர் அவருடைய குருவான இராமானந்தரைப் போன்றே, கடவுள் திருநாமபாராயணம் செய்வதை மிகுதியாக வற்புறுத்தி உள்ளார். அவர் அதைக் கடவுளுடனேயே அடையாளம் கண்டுகொண்டார். கடவுள் எல்லா இடங்களிலும் நீக்கமற ஊடுருவி நிறைந்து உள்ள பரம்

பொருள் ஆவார். அவர் எல்லா உயிரினங்களிலும் நிலை பெற்று உள்ளார். மற்றும் அவர் எல்லா வடிவங்களையும் கடந்தவர். அதே சமயத்தில் கடவுள் ஆன்மாவின் அன்பிற்கு உரியவர். மற்றும் தூய்மையான அன்பின் மூலமே அவரை உணர இயலும் என்பது கடவுளைக் குறித்த, கபீர் அவர்களின் கருத்து ஆகும். அவர் சடங்குகளும், தத்துவக் கோட்பாடு களும் பயனற்றவை என்று கருதினார். அவருக்கு ராம் மற்றும் ரஹீம் என்பவை ஒரே பரம்பொருளைக் குறித்தன. அவர் கோயில்களில் கண்மூடித்தனமாகச் செய்யப்படும் உருவ வழிபாட்டையும் மற்றும் மசூதிகளில் மேலெழுந்த வாரியாக மேற்கொள்ளப்படும் பக்திமுறையையும் கண்டித் தார். இதயத்தின் ஆழத்தில் கடவுளைக் கண்டு கொள்வதைத் தான் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். அவர் அவருடைய ஒரு பாடலில்,

'கடவுள் மசூதியில் மட்டுமே இருந்தால்,
நாட்டின் மற்ற இடங்கள் யாருக்குச் சொந்தம்?
ஹிந்துக்கள் என்போர், கடவுள் சிலையில்
இருப்பதாகக் கூறுகின்றனர். இவ்விரு
தனிப்பிரிவுகளிலும் நான் உண்மையைக் காணவில்லை.
ஓ இறைவனே, அது அல்லாவோ அல்லது
இராமோ, நான் உன் பெயராலேயே வாழ்கிறேன்.
ஓ இறைவனே, என்மீது கருணை காட்டுவீர்
ஹரி தெற்கிலுள்ளான். அல்லா மேற்கில் இருக்கிறான்.
உன் இதயத்தில் தேடுவாய். இதயத்தின் ஆழத்தில் தேடுவாய்
அங்கு அவருடைய இருக்கையும் மற்றும்
உறைவிடமும் உள்ளது.[1]

கபீர், கடவுளை இடைவிடாமல் தொடர்ந்து நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை மிகவும் வற்புறுத்தி உள்ளார். கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையில் அவ ருடைய சாதனை மற்றும் கடவுளை உணர்ந்ததைக் குறித்து நமக்கு ஒரு கருத்து ஏற்படுகிறது.

---

1. Ramanand to Ram Tirtha, *பக்கம் 18 (மேற்கோளாக உள்ளது).*

ஓ சாது! இந்த எளிமையான இணைவே சிறந்தது.
நான் என் இறைவனைச் சந்தித்த நாள்முதல் எங்களுடைய
அன்பு வாழ்விற்கு முடிவில்லாமல் இருந்தது.
நான் என் கண்களை மூடுவதில்லை, என் காதுகளை மூடுவதில்லை.
நான் என் உடலை ஒறுத்து அடக்குவதில்லை.
நான் என் கண்களைத் திறந்து, புன்சிரிப்புடன் இறைவனின்
அழகை எல்லா இடங்களிலும் காண்கிறேன்.
நான் அவன் திருநாமத்தை உச்சரிக்கிறேன். மற்றும் நான்
எதைக் கண்டாலும் அவரை எனக்கு நினைவூட்டுகிறது.
நான் எதைச் செய்தாலும் அது அவருடைய வழிபாடு ஆகிறது.
உதிப்பதும், மறைவதும் எனக்கு ஒன்றுதான் முரண்பாடுகள்
அனைத்தும் தெளிவாகிவிட்டன. நான் எங்கு சென்றாலும்
அவரைச் சுற்றியே வருகிறேன். என் சாதனையனைத்தும்
அவருக்குச் செய்யும் தொண்டு ஆகும்.
நான் படுத்திருக்கும் பொழுது, அவருடைய திருவடிகளில்
பணிகிறேன்.
அவரே எனக்குப் போற்றத்தக்க ஒருவர், எனக்கு வேறு யாருமில்லை.
என் நாக்கு தூய்மையற்ற சொற்களை விட்டுவிட்டது. அது
அவருடைய
புகழை பகலிலும், இரவிலும் பாடுகிறது.
நான் எழுந்தாலும் அமர்ந்தாலும், என்னால் அவர் பெயரை மறக்க
இயலாது. ஏனெனில் அவருடைய இசையின் இலயம் என் செவிகளில்
ஒலித்துக்கொண்டிருக்கிறது.
'என் மனம் தான்தோன்றித் தனமாக உள்ளது. மற்றும் என்
ஆன்மாவில்
எது மறைந்துள்ளது என்பதை வெளிப்படுத்துவேன். நான் அந்த
ஒரு மேன்மையான பேரின்பத்தில் மூழ்கியுள்ளேன். அது
எல்லா இன்ப துன்பங்களையும் கடந்தது ஆகும்.[1]

கபீருடைய பாடல்கள் பெருந்திரளான மக்களிடம் பரவின. மற்றும் அவர்களை, அப்பாடல்கள் உண்மையான ஆன்மீக வாழ்வின் இன்றியமையாத கூறுகளைக் கிரகித்துக்

1. மேற்கண்ட நூல், பக்கம் 26-27.

கொள்ளும்படிச் செய்தன. அவருடைய எளிமையான, கடவுள்மீது மிகவும் பற்று கொண்ட வாழ்க்கையானது ஆயிரக் கணக்கான மக்களுக்குப் பின்பற்றத்தக்க குறிக்கோளாக அமைந்தது. அவரிடம் ஹிந்துக்களும், இஸ்லாமியர்களும் ஒரு பொதுவான ஒத்த தன்மையைக் கண்டனர். அவருடைய பாடல்கள் வட இந்தியா முழுவதிலும் இருந்த மக்களின் சமூகக் கண்ணோட்டத்திலும் மற்றும் சமயம் சார்ந்த நம்பிக்கைகளிலும் மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற் படுத்தின. அந்த தாக்கமானது எவ்வளவு ஆழமானது, எவ் வளவு பரந்துபட்டது என்பதைத் தென்னிந்தியாவிற்குச் சென்று அங்கு வேறுபட்ட ஒரு பண்பாட்டுப் பாங்கையும் சமூகப் போக்கையும் கண்டு கொண்டால்தான் புரிந்து கொள்ள இயலும்.

இராமானந்தரின் மற்றொரு சிறந்த சீடரும் கபீர் அவர் களுடைய சமகாலத்திலிருந்த மூத்தவரும் இரவிதாஸ் (அல்லது ராய்தாஸ்) என்பவராவார். அவர் காசியிலிருந்த, செருப்புச் செப்பனிடும் தொழிலை மேற்கொண்ட புனித மகான் ஆவார். அவரும் கபீரைப் போன்றே இல்லற வாழ்வை மேற்கொண்டவர். மற்றும் உடலுழைப்பால் செருப்புக்களை செப்பனிடும் தொழிலை மேற்கொண்டு பிழைப்பை நடத்தி வந்தார். ஹிந்து சமூகத்தில் அது மிகவும் தாழ்ந்த வாழ்க்கைத் தொழிலாகக் கருதப்படுகிறது. கபீர் அவர்களுடைய இல்லற வாழ்வைப் போன்று இல்லாமல் இவரது இல்லற வாழ்வு அமைதியுடன் இருந்தது. மற்றும் அவருடைய பாடல்கள் எத்தகைய கடுப்பான குற்றங்குறை களையும் வெளிப்படுத்தவில்லை. அவருடைய பாடல்கள் எப்பொழுதும் கடவுளின் அன்பிலேயே தோய்ந்திருந்த ஒரு உயர்ந்த பண்பட்ட உள்ளத்தை வெளிப்படுத்துகின்றன. அவர் ஒரு ஏழை செருப்புத் தைப்பவராக இருந்தாலும் அவருடைய புனித தன்மையின் மதிப்பும், நற்பெயரும் எல்லா இடங் களிலும் பரவின. மற்றும் அவரைப் பெருந்திரளாக மக்கள் பின்பற்றினர். அவருடைய வாழ்க்கையும், போதனைகளும், வட இந்தியாவில் முக்கியமாக ஏழைகள் மற்றும் தாழ்ந்த

ஜாதியினர் என்று கருதப்பட்டவர்களான இலட்சக்கணக்கான மனிதர்களுக்கு அகத் தூண்டுதலை அளிக்கும் மூல ஆதாரமாக விளங்கின. அவரைப் பின்பற்றியவர்கள் வட இந்தியாவில் ராய்தாசிகள் எனப்படும் தனித்த வைஷ்ணவ சமயப்பிரிவை வடிவமைத்தனர். எண்ணிக்கையில், இராமானந்தரைப் பின்பற்றியவர்கள் மற்றும் கபீரைப் பின்பற்றியவர்களில் அடுத்த நிலையில் இருந்தனர்.

இராமானந்தர் மற்றும் கபீர் அவர்களைப் போன்றே சமயம் சார்ந்த மனப்போக்கைக் கொண்டிருந்த வட இந்தியா வைச் சேர்ந்த அடுத்த சிறந்த புனிதமகான் நானக் *(1469-1538)* ஆவார். அவர் சீக்கிய சமயத்தை ஏற்படுத்தியவர் ஆவார். அவர் பஞ்சாபிலுள்ள லாஹுருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத் தில் ஒரு க்ஷத்திரியக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தந்தை கிராமத்தில் கணக்குப் பிள்ளையாக இருந்தார். மற்றும் விவசாயியாகவும் இருந்தார். சிறுவனாக இருந்தபொழுது பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் ஹிந்தி மொழியிலும், அவருடைய சொந்தக் கிளை மொழியிலும் மற்றும் பர்ஷியன் மொழியிலும் நல்ல தேர்ச்சியை அடைந்தார். அவர் குழந்தைப் பருவத்திலிருந்தே நல்ல ஆழ்ந்த சமயம் சார்ந்த மனப் போக்கை வெளிப்படுத்தினார். மற்றும் தியானப் பயிற்சியை மேற்கொண்டார். அவருடைய மற்ற உலகியல் போக்கு களைக் கவனித்த அவர் தந்தை, அவரைத் தன்னுடைய நிலத் தில் பயிர் செய்வதைப் பார்த்துக் கொள்ளும்படிச் செய்தார். மற்றும் வியாபாரத்தையும் சிறிய அளவில் கவனிக்கச் செய் தார். ஆனால் நானக்கின் முழு இதயமும் ஆன்மீக விஷயங் களையே நாடியது. அவருடைய தந்தையின் அறிவுரைகளை யும் மீறி, அவர் அதிகநேரத்தை ஆழ்ந்து சிந்திப்பதற்கே ஒதுக்கி வைக்கத் தொடங்கினார்.

அவருக்குத் திருமணப் பருவம் வந்ததும் திருமணம் நடந்தது. மற்றும் அவருக்கு இரு குழந்தைகள் இருந்தனர். ஆனால் குடும்பம் சார்ந்த கடமைகளில் சிறிதளவே கவனம் செலுத்தினார். மற்றும் அவரது நேரத்தைக் காடுகளிலும் தனியான இடங்களிலும் செலவிட்டார். அவருடைய

உறவினர்கள் அவருக்கு அந்த மாவட்டத்தின், இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த ஆளுனராக இருந்தவரின் கீழ் ஒரு வேலையை வாங்கிக் கொடுத்தனர். அவருடைய இணை பிரியாத இஸ்லாமிய நண்பரான மர்தானா (Mardana) அங்கு அவருக்குத் தொண்டு செய்யும் பொருட்டு அவருடன் சேர்ந்து கொண்டார். இவ்விருவரும் வேறு சிலருடன், அவர் களுடைய ஓய்வு நேரத்தைப் பஜனைகள் செய்வதில் செல விட்டனர். இறுதியில், நானக் உலகைத் துறந்தார். தன் செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்து அளித்து விட்டு மர்தானாவுடன் வடஇந்தியா முழுவதும் சஞ்சாரம் செய்தார். அவர் தனிமையில் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு புனிதமான மனிதர்களைச் சந்தித்துக் கொண்டு இருந்தார். அவரிடம் கபீருடைய கவிதைகளும் தென்னிந்தியாவின் சமயம் சார்ந்த புதிய எழுச்சியும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி யிருக்க வேண்டும். நானக் மெக்காவிற்குக் கூடச் சென்று, அங்கிருந்த அரேபிய நாடுகளைச் சார்ந்த இஸ்லாமிய இறைமை இயல் வல்லுனர்களுடன் விவாதம் செய்ததாகவும் கூறப்படுகிது. நீண்ட 12 ஆண்டுக்கால இடைவெளிக்குப் பிறகு அவர் பஞ்சாபிற்குத் திரும்பினார். அப்பொழுதுதான் சிறந்த மொகலாய வெற்றியாளரான பாபர் இந்தியாவின் மீது படை எடுத்து வந்திருந்தார். நானக் பேரரசரைக் கைதிகளை அன்புடன் நடத்தச் செய்வதில் மிக நல்ல செயல்விளைவை ஏற்படுத்தினார் என்று வழிவழிச் செய்தி கூறுகிறது.

நானக், தன் வாழ்க்கையின் இறுதியில் துறவறத்தின் பிடியைத் துறந்துவிட்டுத் தன் குடும்பத்துடன் வாழ்ந்தார். அவருடைய புனிதத்தன்மையின் புகழ் அக்கம் பக்கத்தில் பரவியது. மக்கள் அவரைக் காண்பதற்கும் மற்றும் அவர் கூட்டுப் பிரார்த்தனையில் பங்கு பெறவும் கூட்டம் கூட்ட மாக வந்தனர். அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகள், ஏழைகளின் தொண்டுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. கபீரைப் போன்றே நானக் அவர்களும் மனிதப் பண்பு ஏற்றப் படாத ஆனால் இஷ்ட தெய்வ நம்பிக்கையைப் போதித்தார். அவர் அந்த தெய்வத்தை ஹரி என்று அழைத்தார். மீண்டும்

அவரைப் போன்றே நானக் அவர்கள் திருமறை நூல்களின் ஞானத்தை விட மனத் தூய்மைக்கே அதிக முக்கியத்துவத்தை அளித்தார். இருவருமே ஜாதிக் கட்டுப்பாடுகளைக் கண்டித் தனர். மற்றும் மக்களை எளிமையான வாழ்வை மேற்கொள் ளும்படி வற்புறுத்தினர். நானக் கடவுளின் நாம பாராயணத் திற்கு மிகப் பெரிய அளவில் முக்கியத்துவத்தை அளித்தார். அவருடைய முதுமைப் பருவத்தில் அவர் ஒரு நீண்ட கவிதையை எழுதினார். அதற்கு ஜாப்ஜி (JAPJI) என்பது பெயராகும். சமய ஆர்வம் கொண்ட ஒவ்வொரு சீக்கியரும் அதைக் காலை நேரத்தில் பாடுகின்றனர். அதிலிருந்து சில வரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

'அவருடைய ஒரு உண்மையான பெயர் ஓம்
அவர் படைப்பவர், நீக்கமற எங்குமிருப்பவர்
வெறுப்பும், பகையும் சிறிதுமற்றவர், பிறப்பற்றவர்
இறப்பற்ற - தன்னிருப்பை உடைய இறைவன்....

இறைவன் உண்மையானவர், அவர் பெயர் உண்மையானது,
முடிவற்ற அன்புடன் கூறப்பட்டால்
தொடர்ந்து மனிதர்கள் அவனிடமிருந்து கேட்கின்றனர்
மற்றும் அவர் கரங்களிலிருந்து உயர்ந்த பரிசைப் பெறுகின்றனர்.

பதிலுக்கு நாம் என்ன அளிக்கிறோம்?
நாம் அவர் முன்பு நிற்க வேண்டுமாயின்
நாம் நம் உதடுகளினால் என்ன கூற வேண்டும்?
எதைக்கேட்டு அவர் நம்மையெல்லாம் விரும்புவார்?

ஓ நானக், அவருடைய சொந்த தெய்வீக
அருளால் மட்டுமே அவர் உணரப்படுகிறார்.
மற்றப்பாதைகள், வழிவகைகளைக் குறித்து பெருமிதம் கொள்வோர்
பயனற்ற குதலைப் பேச்சினர், பொய்யானவர்கள்.'[1]

நானக் அவர்களுடைய வேறு ஒரு அழகான பாடல் உள்ளது. அதை சுவாமி விவேகானந்தர், அவருடைய குரு தேவரான ஸ்ரீராமகிருஷ்ணர் முன்பு பாடுவது வழக்கம்

1. மேற்கண்ட நூல், பக்கம் 48-51.

நானக் அவர்கள், பூரியிலுள்ள ஜகன்னாதர் கோயிலில் தீபாராதனையைக் காண வேண்டும் என்று கோயிலிற்குள் நுழைந்த பொழுது, அர்ச்சகர் அதைச் செய்வதற்கு அவரை விடவில்லை. எனவே அவர் கோயிலிற்கு வெளியில் அமர்ந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலை இயற்றினார்.

'வானமெனும் தட்டினிலே பேரொளியை வீசுகிறார்
சூரிய, சந்திர விளக்குகள்
வானதிலே வைரங்கள் போலொளிரும் விண்மீன்கள்
வான்புகழும் அற்புதமாய் உன் திருவுருவை அலங்கரிக்கும்.

தேனமுதத் தென்றலதாம் மலயமாருதமதுவும்
திவ்ய மணப் புகையாகி மென்மை மிக வீசிடுதே!
வானமதில் அங்குமிங்கும் அலைபாயும் இன்காற்றோ
மனங்குளிரும் சாமரமாய் உன் முகத்தில் வீசிடுதே!

தீனர்களாம் பக்தர்களின் நெய்தீப ஒளியதுபோல
சீர்சிறக்கும் புதுமணஞ்சேர் மலர்ச்சோலை மின்னிடுதே
பிறப்பிறப்பாம் சுழற்சியதை அழித்துவிடும் அருட்சுடரே
பெருவியப்பாம் இயற்கையதன் இத்தகைய நற்பூஜை

சிறப்பாக வெளியிலெழும் புனிதமாம் ஓங்காரம்
சிந்திடுமே மிருதங்க ஒலியதனைச் சீருடனே!
மறக்கவொண்ணா ஹரியவனின் பாதமெனும் தாமரையின்
மதுசுவைக்க இரவுபகல் என்மனமும் ஏங்கிடுதே!

இறைவனே! உன் கருணை மழையதனை வேட்கைமிக்க நானக்காம்
என்மீதே பொழிந்தென்னை ஆட்கொள்வாய், அருளமுதே!
கறையில்லா உன் புனிதத் திருநாமம் நானக்கின்
காலம்வெல் உறைவிடமாய்க் காக்கட்டும் அவன்தனையே.[1]

நானக், மிகச் சிறந்த ஹிந்து மகானாக வாழ்ந்தார். மற்றும் மறைந்தார். ஆனால் அவர் மரணத்திற்குப் பிறகு, அவரைப் பின் பற்றியவர்கள் சீக்கிய குருமார்களின் தலைமையில், தங்களை ஹிந்துக்களின் சமயக் குழுவிலிருந்து பிரித்துக் கொண்டு, சீக்கியமதம் என்னும் புதிய சமயத்தைத் தோற்றுவித்தனர்.

1. *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், 1.253.*

இன்றைக்கும்கூட நானக் அவர்களின் செயல் விளைவானது பஞ்சாப் மற்றும் இந்தியாவின் எல்லையைச் சார்ந்த பகுதிகளில் ஒரு உயிர்ப்பூட்டும் சக்தியாக விளங்கிக் கொண்டுள்ளது.

நாம் இப்பொழுது 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகச் சிறந்த புனிதமகானான துளசிதாசரிடம் வருவோம். அவருடைய படைப்பான ராமசரிதமானஸ் வட மற்றும் மத்திய இந்தியாவில் பரவலாகப் பலரால் அறியப்பட்டதாகவும் நல்ல விளைபயனை ஏற்படுத்தியுள்ளதாகவும் திகழ்கிறது. நாட்டின் இந்தப் பகுதியில், இந்தச் சிறந்த படைப்பின் ஒரு பிரதியைப் பாதுகாக்காத ஒரு வீடு கூட இல்லை. கடந்த 300 ஆண்டுகளாக இந்த நூல் இந்தியாவின் லட்சோபலட்ச மனிதர்களின் ஒழுக்கநெறிமுறை மற்றும் ஆன்மீக வாழ்க்கைகளை வடிவமைத்துள்ளது. வட இந்தியா முழுவதிலும், கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அல்லது ஸாதுக்களால் விளக்கப்பட்டு திரள் திரளாக மனிதர்கள், தன்னை மறந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டு இருப்பதை சாதாரணமாகக் காண இயலும்.

துளசிதாசர் கி.பி.1532-ல் உத்தரபிரதேசத்தில் உள்ள ஒரு ஒதுக்குப்புறமான கிராமத்தில் ஒரு அந்தணர் குடும்பத்தில் பிறந்தார். இவர் பிறந்த உடனேயே 'ராமா' என்னும் சொல்லைக் கூறியதாகக் கூறப்படுகிறது. இதை ஒரு கெட்ட சகுனமாக அந்த அறியாமை நிறைந்த பெற்றோர் கருதி அக்குழந்தையைக் கைவிட்டுவிட்டனர். அக்குழந்தையை கடவுளின் கட்டளையின் பேரில் நரஹரிதாஸ் என்னும் பெயருடைய புனித மகான் எடுத்துக் கொண்டார். சில காலத்திற்குப் பிறகு துளசி அவருடைய குரு மற்றும் அவருடைய வளர்ப்புத் தந்தைக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துள்ளார்.

என் குருவின் தாமரைத் திருவடிகளை நான் வணங்குகிறேன்.
கருணைப் பெருங்கடல் மற்றும் ஹரி (கடவுள்)
மனித வடிவில் உள்ளவர்.
அவருடைய சொற்கள் சூரிய கிரணங்களைப் போல
தடுக்க இயலாத மருட்சியின் அடர்ந்த இருளை அகற்றிவிடும்

அவர் வேறு ஒரு சாதுவிடம் (சேஷ சனாதன) 15 ஆண்டுகளுக்குப் பயின்றார். வேதங்கள் மற்றும் வேதாந்தத்தில் தேர்ச்சி அடைந்தார்.

துளசிதாசர் இரத்தினாவளியை மணந்து கொண்டார். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவர் தன் மனைவி மீது மிகவும் ஆசை கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் வீடு திரும்பியவுடன், அவர் மனைவி அவருடைய தந்தையின் வீட்டிற்குச் சென்றிருப்பதை அறிந்துகொண்டார். அவளுக்காக வாட்டமுற்று, அவர் அவருடைய மாமனாரின் வீட்டிற்கு அழைக்கப்படாமலே அவளைப் பின் தொடர்ந்து சென்றார். அங்கு அவளை அவர் சந்தித்த பொழுது, அவருடைய ஒவ்வாத பற்றால் நச்சரிக்கப்பட்டு, 'எலும்புகளாலும், சதையாலும் உருவாக்கப்பட்டுள்ள என்னுடைய இந்த உடலின் மீது உள்ள உங்கள் பற்று மிகுதியாக உள்ளது. நீ அந்த அன்பின் பாதியளவை ராமனுக்கு அர்ப்பித்து இருந்தால் நீங்கள் உலகியல் சார்ந்த தொல்லைகளிலிருந்து விடுபட்டு முக்தி அடைந்திருப்பீர்கள்' என்று கூறினாள். இந்தக் கூர்மையான மதிநுட்பம் வாய்ந்த சொற்கள் துளசிதாசருக்கு ஒரு புதிய வெளிச்சத்தை ஏற்படுத்தியது. அது அவருக்கு உலகத்தின் நிலையற்ற தன்மை மற்றும் உலகியல் தொடர்புகள் குறித்த நிலையற்ற தன்மையைக் குறித்த விழிப்புணர்வையும் மற்றும் பரம்பொருள் ஸ்ரீராமனாக வெளிப்பட்டுள்ள உண்மையைக் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. அதன் விளைவாக அவர் உலகைத் துறந்தார். அவர் இராமேஸ்வரம், துவாரகை, பூரி மற்றும் பத்ரிகாஸ்ரமம் என்னும் நான்கு புனிதத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரையை மேற் கொண்ட பிறகு காசியில் நிலை கொண்டார்.

அவர் அவ்வப்பொழுது சிறிய அளவில் வேறு சில புனித யாத்திரைகளை மேற்கொண்டார். ஆனால் எப்பொழுதும் காசிக்குத் திரும்ப வந்துவிடுவார். காசியில், அவரது முழு ஆன்மாவும் ஸ்ரீராமன்பால் ஈர்க்கப்பட்டிருந்தது. மற்றும் அவரது தரிசனத்திற்காக ஏங்கியது. மிகச் சிறந்த இராம பக்தரான ஹனுமானின் அருளால் அவர் பல முறைகள், அவர்

இதயத்தின் அன்பிற்கு உரியவரான ஸ்ரீராமனின் தரிசனத்தைப் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. ஒருமுறை ஸ்ரீராமர் அவருக்கு ஒரு குதிரையின் மீது அமர்ந்துள்ள இராஜகுமாரனாகக் காட்சியளித்தார். அந்த அருள்மயமான தரிசனத்திற்குப் பிறகு, அவர் வெளியுலகைப் பற்றிய எல்லா உணர்வையும் இழந்து, ஆனந்த பரவச நிலையில் மூன்று நாட்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. மற்றொருமுறை அவர் இராஜகுமாரனின் இனிய அழகிய வடிவத்தை சரயு நதிக்கரையில் அவர் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டு இருக்கும்படியாகக் கண்டார்.

பிருந்தாவனத்தில் குருட்டுப்பிடிவாதமுள்ள ஒரு கிருஷ்ண பக்தர், துளசிதாஸ் ராமபக்தர் என்று அறிந்து கொண்டு அவரிடம், 'கிருஷ்ண அவதாரம்தான் மிகச் சிறந்தது. இராமர் பாதி அவதாரம் மட்டும்தான்' என்று கூறினார். இதைக் கேட்ட துளசிதாசர் ஒப்பற்ற முறையில், 'என் ஆன்மாவானது தசரதனின் மகனிடம் மட்டுமே நிறை அன்பைக் கொண்டுள்ளது. நான் அவருடைய உவமிக்க இயலாத அழகை மட்டும் போற்றிக் கொண்டு இருக்கிறேன். நீ இப்பொழுது ஸ்ரீராமனின் தெய்வத் தன்மையைக் குறித்துக் கூறுகிறாய். இப்பொழுது என் அன்பானது இருபது மடங்கு அதிகரித்துள்ளது' என்று கூறினார்.

கடவுள் துளசிதாசரை இராமபக்தியைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக்கினார். உரிய காலத்தில் அவர், தசரத மஹாராஜனின் திருமகனாக அவதரித்துள்ள இராமர் கடவுளைத் தவிர வேறு யாருமில்லை என்பதை உணர்ந்து கொண்டார். அவருடைய தெய்வீக உணர்வுகள் (கடவுளை உணர்ந்ததால் ஏற்பட்ட உணர்வுகள்) அவரை அன்பாலும் மற்றும் உடனிருப்பவர்களின்மீது இருக்கும் பரிவாலும் நிரப்பியது. அவர் பெற்ற எல்லா அருளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினார். நாம் இதற்கான ஆதாரத்தை, அவருடைய வாழ்வுடன் தொடர்புடைய சில நிகழ்ச்சிகளின் மூலம் மட்டுமின்றி அவருடைய நிலைபெற்ற படைப்பான இராமசரிதமானஸையும் உள்ளிட்ட படைப்புகளில் முக்கியமாகக் காண்கிறோம். அவரது இரண்டாவது சிறந்த படைப்பான வினயபத்ரிகாவின் ஆக்க அமைவிற்கு

வழிகாட்டிய உண்மையான சூழ்நிலைகள் தெய்வீக அன்பால் பொங்கித் ததும்பிய அவருடைய சிறந்த இதயத்தை வெளிப் படுத்துவதாக உள்ளது.

ஒருமுறை ஒரு கொலைகாரன் காசிக்குப் புனித யாத்திரை மேற்கொண்டு, 'ஸ்ரீராமன் மீது உள்ள அன்பால் கொலை காரனான எனக்குப் பிச்சை அளியுங்கள்' என்று அழுதான். தான் விரும்பும் ஸ்ரீராமனின் பெயரைக் கேட்ட துளசிதாசர் அந்த மனிதனை அவர் வீட்டிற்கு அழைத்து, அவனுக்குப் பிரசாதத்தை உணவாக அளித்து, அவன் தூய்மையானவன் என்று அறிவித்தார். அந்த இடத்தைச் சேர்ந்த மரபு வழுவாத அந்தணர்கள், அந்த கொலைகாரனின் பாவம் எப்படி அகலும் என்று துளசிதாசரிடம் கேள்வி எழுப்பினர். 'உங்களுடைய சொந்த திருமறை நூல்களைப் படியுங்கள். தெய்வீக நாமத் தின் ஆற்றலைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்' என்று கூறினார். ஆனால் அந்தணர்கள் திருப்தி அடையவில்லை. அவர்கள் மேலும் ஒரு விளக்கச் சான்றைக் கேட்டனர். விசுவ நாதர் கோயிலிலுள்ள புனிதமான எருது அந்தக் கொலை காரனின் கைகளிலிருந்து உணவை உண்டால், அவர்கள் துளசிதாசரின் சொற்களை ஏற்றுக் கொள்வதாக ஒத்துக் கொண்டனர். அந்த மனிதன் கோயிலிற்கு அழைத்துச் செல்லப்பட்டான். அந்த எருது அவன் கைகளிலிருந்த உணவை உண்டது. துளசிதாசர் உண்மையாகவே, உள்ளார்ந்து செய்த செயலிற்காக ஒரு பக்தன் வருந்தினால் அது கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று கூறினார். எப்படியிருப்பினும் ஒரு புதிய சிக்கல் எழுந்தது. தீமையின் உருவமான காளி, துளசிதாசரை விழுங்கிவிடுவதாக அச்சுறுத்தியது. துளசிதாசர் ஹனுமானை வேண்டிக் கொண்டார். ஹனுமான் அவர் கனவில் தோன்றி பரம்பொருளான ஸ்ரீராமனுக்கு தீமையின் பரிகாரத்திற்கு ஒரு மனுவைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத் தினார். அதுதான் வினயபத்ரிகாவின் தோற்றுவாய் ஆகும்.

அவருக்கு முன்பு இருந்த இராமானந்தரின் அடிச்சுவடு களைப் பின்பற்றி, பெருந்திரளான மக்கள் பயனடைவதற் காக, அவர் அவருடைய படைப்புக்களை ஹிந்தி மொழியில்

எழுதினார். இது அவரை வடமொழி வல்லுனர்களின் கண்டனத்திற்கு ஆளாக்கியது. ஒருநாள் அவருடைய வட மொழி அறிவால் செருக்கடைந்திருந்த ஒரு அறிஞர் துளசிதாச ரிடம் வந்து, ‘ஐயா, நீங்கள் வடமொழிப் புலமை உள்ளவர். பிறகு நீங்கள் ஏன் காப்பியக் கவிதையை தாழ்ந்த மொழியில் இயற்றுகிறீர்கள்?’ என்று கேட்டார். அதற்கு துளசிதாசர், ‘வட்டாரப் பேச்சு மொழியான என் மொழி குறையுடையது. ஆனால் அது உங்கள் வடமொழியை விரும்பும் அறிஞர்களின் நாயகியரின் வர்ணனையைவிடச் சிறந்ததாகும்’ என்று கூறினார். அந்த அறிஞர் தெளிவுபடுத்தும்படிக் கேட்டார். அதற்குத் துளசிதாசர், ‘பொன்மணிகளால் அலங்கரிக்கப் பட்டுள்ள பாத்திரம் நிறைய விஷமும், மற்றொரு மட் பாண்டம் நிறைய அமிர்தமும் இருந்தால், நீ எதை ஏற்பாய் மற்றும் எதை நீ மறுப்பாய்?’ என்று கேட்டார்.

அவருடைய புகழ்பெற்ற இராமாயணத்தின் முன்னுரை யில் அவர், அவர் ஏன் ஹிந்தி மொழியைத் தேர்ந்து எடுத்தார் என்று மெய்ப்பித்துள்ளார். ‘நான் ஒரு விஷயத்தை உறுதியாக நம்புகிறேன். நல்லவர்கள் என்னைப்பற்றி அறிந்தால் மனம் மகிழ்ந்து நிறைவடைவார்கள். முட்டாள்கள் சிரிக்கக் கூடும்— என்னுடைய தாய் மொழியும் மற்றும் என்னுடைய சொல் நயமும், அவர்களுக்கு நகைப்பிற்கு உரிய பொருட் களாக இருந்தால், அவர்கள் சிரிக்கட்டும், அது என்னுடைய தவறு அல்ல. ஆனால் கடவுள் மீது கொள்ளும் உண்மையான பக்தியை உணரும் திறன் அவர்களுக்கு இல்லையெனின், இக்கதையானது சுவையற்றதாகத் தோன்றும். ஆனால் உண்மையான, ஆன்மீக உணர்வுடன் கடவுளை வழிபடு பவர்களுக்கு இரகுவீரனின் கதையானது தேனைப்போல இனிக்கும்’ என்று கூறியுள்ளார்.

ஒருமுறை சில திருடர்கள் துளசிதாசரின் வீட்டை உடைத்துக் கொண்டு வந்தனர். அங்கு ஒரு காவலன் கருநிற முடைய ஒரு இளைஞனின் உருவத்தில் கைகளில் வில், அம்பு களுடன் இருந்ததைக் கண்டனர். திருடர்கள் எங்கு சென்றா லும் அந்தக் காவலன் அவர்கள் பக்கம் திரும்பி அவர்களைத்

தண்டிப்பதாக அச்சுறுத்தினான். அவர்கள் திகிலடைந்தனர். அந்தத் திருடர்களுக்கு அதைவிட அதிகமாக ஏதாவது தோன்றி இருக்க வேண்டும். பொழுது விடிந்ததும் அவர்கள் துளசி தாசரிடம், 'ஐயா, கருநிறமுடைய உங்களுடைய இந்தப் பையன் யார்' என்று கேட்டனர். இதைக் கேட்டதும் துளசி தாசர் மிகவும் நெகிழ்ந்தார். அவர் கடவுளே காவலனாக வந்தார் என்பதை உணர்ந்து கொண்டார். அவர் தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் அந்தத் திருடர்களுக்குக் கொடுத் தார். இப்பொழுது அந்தத் திருடர்களே, ஸ்ரீராமனுடைய தரிசனத்தைப் பெற்றதால் மற்றும் துளசிதாசரின் காந்தம் போல் ஈர்க்கும் ஸ்பரிசத்தையும் உணர்ந்ததால், அவர்கள் ஆன்மீகச் சார்பு உடையவர்களாக ஆயினர். அவர்கள் புனித மகானிடமிருந்து போதனைகளைப் பெற்று, தூய்மையான வாழ்வை மேற்கொண்டனர். கடவுளுக்குத் தங்களை அர்ப்பித்துக் கொண்டனர்.

ஒருமுறை துளசிதாசர் ஒருவருடைய வீட்டில் தங்கியிருந் தார். அவர் தன் உணவைச் சமைத்துக் கொண்டு இருந்த பொழுது, அந்த வீட்டின் எஜமானி, அவரிடம் சில நறுமணச் சரக்குகளைக் கொடுத்தார். அதற்கு அவர் அவருடைய பையில் அந்தப் பொருட்கள் இருப்பதாகக் கூறினார். அதற்குப் பிறகு அவர் வேறுசில பொருட்களைக் கொடுக்க, அவர் அதற்கு அந்தப் பொருட்களும் தன்னிடம் இருப்பதாகக் கூறினார். இதைக் கேட்டுவிட்டு அந்தப் பெண்மணி, 'ஐயா, உங்களுடைய பையில் நீங்கள் பல பொருட்களை வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதில் உங்களுடைய பக்தியுடைய மனைவிக்கு மட்டும் இடமில்லை' என்று கூறினார். அந்தப் பெண்மணி யார்? அந்தப் பெண்மணி அவருடைய மனைவி யைத் தவிர வேறு யாருமில்லை. அவருடைய சொற்கள்தான் துளசிதாசருடைய வாழ்க்கைப் போக்கையே மாற்றிய மைத்தது. அவர் மனைவி அவரை அடையாளம் கண்டு கொண்டார். ஆனால் அவரால் அடையாளம் கண்டுகொள்ள இயலவில்லை. மற்றும் அந்தப் பெண்மணியை பழக்கமற்ற புதியவராகக் கருதினார்.

வேறு பல நிகழ்ச்சிகள், கடவுளை உணர்வதே அவருடைய வாழ்க்கையின் தனிப்பட்ட குறிக்கோள் என்பதையும் மற்ற அனைவரும் தங்கள் உடல், மனம் மற்றும் ஆன்மாவால் அதற்கே முயற்சி செய்ய வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகின்றன.

பேரரசர் ஜஹாங்கீர், துளசிதாசரின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறது. ஒரு நாள் அவர் துளசிதாசருக்கு மிகுதியான செல்வத்தை அளிப்பதாகக் கூறினார். அதற்கு துளசிதாசர் 'கடவுள் மீது பக்தியைச் செலுத்த விரும்பும் ஒருவன் ஒருபொழுதும் திரண்ட செல்வத்தை நாடுதல் கூடாது. பணத்தைப்பற்றி நினைப்பதும் மற்றும் அதனுடன் உள்ள கவலைகளும் மனத்தை மாசு படுத்திவிடும். மற்றும் கடவுள்மீது தியானத்தை மேற்கொள்வதற்குத் தகுதியற்றதாகச் செய்துவிடும்' என்று கூறினார்.

மற்றொரு சந்தர்ப்பத்தின் பொழுது, ஜஹாங்கீர், 'சுவாமிஜி, எங்களுடைய அமைச்சரான பீர்பல் மிகவும் மதிநுட்பமுடையவர்' என்று குறிப்பிட்டார். அதற்கு துளசிதாசர், 'அது இருக்கலாம். ஆனால் இந்த மதிப்பு வாய்ந்த, நிலையற்ற உடலைக் கொடையாகப் பெற்றுள்ள அவர், கடவுளை உணரத் தலைப்படவில்லை என்றால் அவரை விட அறிவிலி வேறு யாருமில்லை. அவரைப் போல திருப்பி பதிலளிப்பதில் வெற்றி காண்பது ஞானத்தின் அறிகுறி இல்லை. ஞானமானது, கடவுட் தன்மையை உணர்வதில் அமைந்துள்ளது' என்று கூறினார்.

மஹாராஜா மான்சில், அவர் சகோதரர் மற்றும் வேறு சில இளவரசர்களும் துளசிதாசரைப் பார்க்க வருவது வழக்கம். அவரை மிகச் சிறப்புடன் கௌரவிப்பார்கள். ஒருமுறை துளசிதாசரை ஒருவர், அந்த சமயத்தில் 'ஏன் அத்தகைய பெரிய மனிதர்கள் அவரைக் காண வருகிறார்கள். அதற்கு முன்பு ஏன் ஒருவரும் அவ்விதம் வரவில்லை?' என்று கேட்டார். 'ஒரு காலத்தில் நான் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது பிச்சையாக ஒரு விரிசலடைந்த சோழி கூடக் கிடைக்காமல் இருந்தேன். அப்பொழுது என்னை ஒருவரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் ஏழைகளை

ஆதரிக்கும் ஸ்ரீராமன் மிகுந்த மதிப்பு உள்ளவனாக ஆக்கிவிட்டார். முன்பெல்லாம் நான் பிச்சைக்காக வீடு வீடாகச் செல்வேன். ஆனால் இப்பொழுது பேரரசர்களும் என் திரு வடிகளை வணங்குகின்றனர். அப்பொழுது ராமர் இல்லாமல் இருந்த காலம் இப்பொழுது ஸ்ரீராமர் எனக்கு உதவி செய்கிறார்' என்று கூறினார்.[1]

வினயபத்ரிகாவில் துளசிதாசர், அவர், மாயையின் உறக்கத்திலிருந்து விழிப்படைந்ததைப் பற்றிக் கூறுகிறார். மற்றும் ஆன்மீக வாழ்வு வாழ வேண்டும் என்னும் தன்னுடைய உறுதியையும் வெளிப்படுத்தி உள்ளார்.

'இதுவரையில் நான் வீணான நாட்டங்களில் வாழ்க்கையை
வீணடித்து மிகுதியாக இழந்து உள்ளேன்
இறைவனான இராமனின் அருள் என்னை உறக்கத்திலிருந்து எழுப்பியது
இப்பொழுது எழுந்துள்ளேன். நான் என்னை மாயைக்கு இரையாவதற்கு அனுமதிக்க மாட்டேன்
நான் கடவுளின் திருநாமத்தின் அருளைப் பெற்றுள்ளேன்
நான் அதை விரைந்து என் மார்பில் பிடித்துக் கொள்வேன்
மற்றும் என்னிடமிருந்து ஒரு நொடிக்குக்கூட அகல்வதற்கு விடமாட்டேன்
கடவுளின் அழகிய வடிவத்தை நான் என் மனத்தில் போற்றுவேன்
நீண்ட காலம் இவ்வுலகம் என்னை ஏளனம் செய்தது. புலன்களுக்கு என்னை அடிமையாக்கியது. இப்பொழுது இதற்குமேல் எனக்கது வேண்டாம்
நான் இப்பொழுது என் இறைவனின் தாமரைப் பாதங்களில்
வண்டாக இருக்கிறேன். மற்றும் என் மனத்தை அந்த
அமுதத்தைச் சுவைப்பதிலிருந்து விலக, ஒரு நொடியும் அனுமதிக்க மாட்டேன்'

மற்றொரு குறிப்பிடத்தக்க பிரார்த்தனையில் அவர், கடவுளின் திருநாமத்தின் மீது இருந்த அவருடைய உயர்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி உள்ளார்.

---

1. சில நிகழ்ச்சிகளும், பாடல்களும் பங்கி பிஹாரி அவர்களின் The Minstrels of God (பம்பாய், பாரதீய வித்யா பவன்) என்னும் நூலிலிருந்து தரப்பட்டுள்ளது.

'ஓ இறைவனே, யார் வேண்டுமானாலும்
எந்த சாதனையையும் ஏற்றுக் கொள்ளட்டும்
அந்த நாட்டத்தைப் பின்பற்ற அவருக்குச் சுதந்திரம் உள்ளது
ஆனால் உன் திருநாமமே எனக்குக் கர்மம், உபாசனை,
ஞானம் என்னும் எல்லா வரங்களையும் அளிக்கிறது
வேதங்களில் ஆன்ம விடுதலைக்காகக் குறிப்பிடும் பல்வேறு வழிகளும் நல்லவையே
ஆனால், நான் ஒரு புகலிடத்தையே நாடுகிறேன். அது உன் திருநாமம், அதைத் தவிர நான் வேறு எதையும் நாடவில்லை
நான் உன் திருநாமத்தின் இனிமையைச் சுவைத்துள்ளேன்.
அது இங்கும், வரவுள்ள உலகத்திலும் என் விருப்பங்களை ஈடேற்றவல்லதாகும்
ஒரு மனிதன் தன் பாசத்தை மற்றும் நம்பிக்கையை
எங்கு வேண்டுமாயின் இணைத்துக் கொள்ளலாம்
ஆனால் நான் இராமா என்னும் நாமத்துடன் என் தொடர்பை அடையாளம் கண்டு கொள்கிறேன். அது என் தாய் மற்றும் தந்தை
நான் சங்கரரின் மீது ஆணையிட்டு, அதை மறைக்காமல் உண்மையைக் கூறுகிறேன்
துளசிதாசருக்கு இயல்பாக சேர்ந்துள்ள நல்லவை அனைத்தும் உன் திருநாம பாராயணத்தாலேயே ஆனதாக துளசிதாசர் காண்கிறார்.

துளசிதாசர் பிரார்த்தனை செய்யும்பொழுது தூய்மையான பக்தியைக் குறித்து விவரிக்கிறார்.

'ஓ இறைவனே, என் அழுகையைக் கேட்பதற்கு
உன்னைத் தவிர வேறு யார் உளர்?
என்னுடைய விண்ணப்பம் தனிப்போக்குடையது. ஏழை மனிதனான நான்
அரசனாக வருவதற்கு விரும்புகிறேன்.
நீண்ட காலமாக நான் நரக வேதனையை அனுபவித்துள்ளேன் மற்றும்
பல கீழான பிறவிகளை எடுத்துள்ளேன். ஆனால் நான் செல்வத்தை விரும்பவில்லை. முக்தியையும் விரும்பவில்லை
உன்னால் இவற்றை அளிக்க இயலும் என்பதை நான் அறிவேன்

ஒவ்வொரு பிறவியிலும், நீ விளையாடும் ஒரு பொம்மையாகவோ, அல்லது உன் பாதங்களைத் தொடும் ஒரு கல்லாகவோ ஆவதற்கு விரும்புகிறேன்.

நாம் இப்பொழுது துளசிதாசரின் புகழ்பெற்ற இராமசரித மானஸ் என்னும் நூலிற்கு வருவோம். அது வால்மீகியின் சிறந்த படைப்பை அடிப்படையாகக் கொண்டிருப்பினும், அது அப்படியே ஒரு மொழிபெயர்ப்பாக இல்லை. அது அத்யாத்ம ராமாயணத்துடன் அதிகமாக ஒத்துள்ளது. அது அதனுடைய போக்கில் மேம்பட்ட பக்தியைச் சார்ந்ததாக விளங்குகிறது. ராமசரிதமானஸத்தில் பரம்பொருளான சிவனே தன் மனைவியான பார்வதிக்கு ஸ்ரீராமனின் கதையை விவரிப்ப தாக உள்ளது. கைலாச மலைப்பகுதியில் மானஸஸரோவரம் என்னும் பெரிய ஏரி அமைந்துள்ளது. அது சிவனுடைய இருப் பிடமாகும். இராமசரிதம்— இராமனின் கதையானது, சிவ னுடைய மனத்தில் உருவான ஒரு ஏரியாகும். ஏரியானது முதலில், பார்வதி, இராமனுடைய உண்மையான இயல்பைக் குறித்த கேள்வியைக் கேட்கும் வரையிலும் மறைந்து இருந்தது. அந்தக் கேள்விதான் மனித குலத்தின் நன்மைக்காக அதைப் பாயச் செய்தது. துளசிதாசர், அவர் எழுதிய இராமாய ணத்தில், இராமனுடைய கதையைத் தவிர உபநிஷதங்களின் முக்கியமான பகுதிகள், பகவத் கீதை, பாகவதம் மற்றும் வேறு திருமறை நூல்களின் பகுதிகளையும் உள்ளடக்கியுள் ளார். அதன்மூலம் வடமொழியில் ஆழமாகப் புதைந்துள்ள பல சிறந்த உண்மைகளை ஹிந்திமொழியை அறிந்துள்ள மக்களுக்கும் பாமரமக்களுக்கும் மற்றும் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கிடைக்கச் செய்துள்ளார். அவர் வால் மீகியின் திரு அவதாரமாகக் கருதப்படுகிறார். துளசிதாசர் பல இடங்களில், உண்மையான பக்தியின் ஆழத்திலும் மற்றும் மனிதாபிமானத்திலும் வால்மீகியை விஞ்சி நிற்கிறார்.

இராமசரிதமானஸ், சிவன்-மற்றும் பார்வதி என்னும் இருவருக்கும் இடையில் நடைபெறும் உரையாடலில் தொடங்குகிறது. பார்வதி,

'ஓ இறைவனே, உண்மையே அறிந்த முனிவர்கள்,
இராமனே கடவுள், தோற்றமற்றவன் என்று கூறுகின்றனர்
அயோத்தி அரசனான தசரதனின் மகனான அதே இராமனா?
அல்லது தோற்றம் கொள்ளாத, வரையறையற்ற
பகுக்க இயலாதவனா?
அவன் அரசனின் மகன் எனின் அவன் எப்படிக் கடவுளாக
இயலும்?'

என்று கேட்டார்

அதற்குச் சிவன்,

'வரையறையுடைய, வரையறையற்ற பிரம்மனுக்கிடையில்
எத்தகைய வேறுபாடும் இல்லை
விவரிக்க இயலாது, வடிவமற்று, மறைந்துள்ளவனே
பக்தர்கள் மீது உள்ள அன்பால் வடிவம் கொள்கிறான்

என்று கூறினார்.

துளசிதாசர், இராமனின் வடிவத்தை மேற்கொண்ட பரம்பொருளானது எல்லா இடங்களிலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது என்று கூறியுள்ளார். பால காண்டத்தில் அவர்,

'உலகிலுள்ள உணர்வுள்ள, உணர்வற்ற இருப்புகள் அனைத்தும்
இராமனால் நிரம்பியுள்ளார்கள் என்று அறிந்து
கூப்பிய கரங்களுடன் நான் அனைவரின் திருவடிகளையும்
வணங்குகிறேன்'

என்று கூறியுள்ளார்.

துளசிதாசர்,

'ஜீவன் கடவுளின் ஒரு பகுதி மற்றும் அது அழிவற்றது;
அது இயல்பாக விழிப்புடையது, தூய்மையானது,
பேரின்பமானது,
அது மாயையின் கட்டுப்பாட்டில் விழுந்துள்ளது,
மற்றும் அது ஒருகிளி அல்லது குரங்கைப்போல நிலத்தில்
பிணைந்துள்ளது,
செருக்குற்ற ஜீவன் மாயையின் கட்டுப்பாட்டிலுள்ளது

மற்றும் எல்லா இயல்புகளின் கொள்கலனான மாயை
கடவுளால் கட்டுப்படுத்தப்படுகிறது'

என்று சாற்றியுள்ளார்.

ஜீவன் எந்தப் பாதையைப் பின்பற்ற வேண்டும்? ஒரு உண்மையான பக்தனைப்போல துளசிதாசர் பக்தியையே விரும்பித் தேர்ந்தெடுத்துள்ளார்.

'ஞானமார்க்கம் என்பது கத்தியின் கூர் நுனியைப் போன்றது
ஒருவர் கண்ணிமைக்கும் நேரத்தில் இந்த மார்க்கத்திலிருந்து விழக்கூடும்
ஆனால் பிறப்பு மற்றும் இறப்பு என்னும் சுழற்சியின் வேரான அறியாமை
அதிக முயற்சியின்றி பக்தியினால் அழிக்கப்படுகிறது.'

கடவுளின் திருநாமத்தைப் பாராயணம் செய்வதுதான் முதன்மையான ஆன்மீகப் பயிற்சியாகும் என்பது துளசிதாசரின் கருத்து ஆகும். 'கடவுளின் திருநாமமான இராமன் என்பது இந்த இரும்பு யுகத்தில் பக்தர்களின் விருப்பங்களையும் நாட்டங்களையும் நிறைவு செய்கிறது. அது மிகவும் கொடிய தீங்கையும் அழிக்கிது. மற்றும் விஷத்தை அமுதமாக்குகிறது.'

அவர், 'பிரம்மா, விஷ்ணு, மற்றும் சிவனைப்போல உள்ள மற்றும் வேதங்களின் ஆன்மாவை இணையற்ற ஸ்ரீராமனின் திருநாமத்தை வணங்குகிறேன்' என்று கூறியுள்ளார்.

பக்தி மார்க்கத்தின் இறுதிப் படியானது ஆன்மாவானது தன்னைப் பரம்பொருளுக்கு எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவிற்கு அர்ப்பிப்பது ஆகும். சாதாரண மனிதர்களாகிய நாம் அகங்காரத்தை நம் எண்ணங்களின், செயல்களின், வாழ்க்கையின் மையமாகக் கொண்டுள்ளோம். ஆனால் பக்தனோ கடவுளை மையமாகக் கொண்டுள்ளான். அவன் தன்னை, உடலை, மனத்தை மற்றும் ஆன்மாவைக் கடவுளுக்கு அர்ப்பிக்கிறான். அகங்காரம் அகன்று விடுவதால் கடவுள் தன்னை வெளிப்படுத்தி மற்றும் பக்தனை, கடவுளிடம் அவனுக்கு உள்ள நிலைத்த தொடர்பை உணரச் செய்கிறார். ஒரு

பக்தனாக, அவன் கடவுளின் பணிவு நிறைந்த தொண்டன் ஆவான். ஒரு ஆன்மாவாக அவன் பரம்பொருளின் நிலைத்த ஒரு பகுதியாவான். துளசிதாசருக்கும் இதேதான் நடை பெற்றது. தசரதனின் மகனான ஸ்ரீராமன், எல்லோரிடமும் உள்ள ஆன்மாவைத் தவிர வேறு யாருமில்லை என்பதை அவர் உணர்ந்தார்.

இராமானந்தர், கபீர் அல்லது நானக் போன்ற சிறந்த சமயக் தலைவர்களைப் போன்று துளசிதாசர் ஒரு புதிய சமயமரபைத் தோற்றுவிக்கவில்லை. ஸ்ரீராமனின் தனித்த இயல்பை உயர்ந்த இலட்சியமாக உந்துவிப்பது, இந்துக் களில் ஒரு புதிய நம்பிக்கையையும் மற்றும் எதிலும் நல்ல வற்றையே காணும் தன்மையைப் புகட்டியது. மற்றும் இஸ்லாமியர்களின் அடுத்தடுத்த படையெடுப்புக்களால், கணக்கற்ற ஜாதிகளாகப் பிளவுபட்டு வலிவிழந்த ஒரு நாட்டின் உணர்ச்சி பூர்வமான ஒருங்கிணைப்பை அடையச் செய்ததும்தான் அவருடைய மிகச் சிறந்த சாதனைகளாகும்.

வட இந்தியாவில் இடைக்காலத்தில் பக்தி இயக்கத்தில் இரண்டு போக்குகள் இருந்தன. ஒரு போக்கு இராமனை வழிபடுவதை மையமாகக் கொண்டிருந்தது. மற்றொரு போக்கு கிருஷ்ணனை வழிபடும் மரபை மையமாகக் கொண் டிருந்தது. நாம் இதுவரை விவாதித்து வந்த புனித மகான்கள் முதல் குழுவைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கிருஷ்ண வழிபாட்டுடன் தொடர்புடைய இயக்கமானது 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிம்பார்கா என்னும் பெயரையுடைய வைஷ்ணவ தத்துவ ஞானியால் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அது 15-ஆம் நூற்றாண்டில் வல்லபாச்சாரியரின் (கி.பி.1479-1531) வருகையால்தான் வலிமையையும் செல்வாக்கையும் பெற்றது. வல்லபர் கிருஷ்ணனைப் பரம் பொருளுடன் அடையாளம் கண்டு கொண்டார். அவருடைய கோட்பாடு 'சுத்த அத்வைதம்' என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அதில் ஆன்மாக்களும் மற்றும் பரம்பொருளும் ஒத்த தன்மையை உடையவை. எல்லாக் கூறுகளிலும் ஒப் பானவை. இரண்டுமே சச்சிதானந்த இயல்பை உடையவை.

ஜீவனில் ஆனந்தத் தன்மை வெளிப்படாமல் இருக்கிறது. பரம்பொருளில் அது முழுவதும் வெளிப்படுகிறது என்பது தான் இந்த இரு இருப்பிற்கும் இடையிலுள்ள வேறுபாடு ஆகும். வல்லபரின் கிருஷ்ணரை மையமாகக் கொண்ட சமய மானது அவரது மரணத்திற்குப் பிறகு, இந்தியாவின் மேற்குப் பகுதிகளில் சமூகத்தின் எல்லா வகுப்புப் படி நிலைகளிலும் வேகமாகப் பரவியது. முக்கியமாக வணிகர்கள் மற்றும் விவசாயிகளிடம் பரவியது. தற்காலத்தில் அது குஜராத் மற்றும் ராஜஸ்தானில் ஆதிக்கம் செலுத்தும் சமய உணர்வாக, பக்தியாக உள்ளது.

கிருஷ்ண வழிபாட்டு மரபை பாமரர்களுக்கு உரிய தாக்கிய மற்றும் ஏறத்தாழ துளசிதாசரின் சமகாலத்தவராகிய இரு புனித மகான்கள் ஸுர்தாஸ் *(1479-1584)* மற்றும் மீராபாய் *(1547-1614)* ஆவார்கள். இந்த இருவருள் ஸுர்தாஸ், வல்லபாச்சாரியரின் சீடர் என்று கருதப்படுகிறார். அவர் பிறவிக் குருடராக இருந்தார். மற்றும் உறவினர்களால் கொடுமைப்படுத்தப்பட்டார். அவர் ஒரு கிராமத்தில் தனியாக வாழத் தொடங்கினார். அவர் அவருக்கு இயல்பாக அமைந்த உள்ளுணர்வின் ஆற்றலால் மக்களுக்கு அவர்களுடைய எதிர் காலத்தைக் குறித்துக் குறிகூறி சம்பாதித்து தன் பிழைப்பை நடத்தி வந்தார். அவர் வடமொழியைப் பயில்வதை எப் படியோ ஒப்பேற்றிக் கொண்டார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் மதுராவிற்கு அருகிலுள்ள கிருஷ்ணரின் ஊரான வ்ரஜாவிற்குக் குடி பெயர்ந்தார். மற்றும் எஞ்சிய வாழ்நாளை அங்கேயே கழித்தார். அவர் முழுமையான துறவறத்தை மேற்கொண்டிருந்தார். மற்றும் அவருடைய நேரம் எல்லாம் கிருஷ்ணனை வழிபடுவதிலும் அவர் புகழைப் பாடுவதிலும் செலவிடப்பட்டது. ஆன்மாவை வசப்படுத்தும் அவருடைய சுமார் எட்டாயிரம் பாடல்களின் தொகுப்பானது ஸுர்ஸாகர் என்று அழைக்கப்படுகிறது. மற்றும் கடவுள்மீது அவருடைய ஆன்மா கொண்ட வேட்கை, அவருடைய அகப் போராட்டங் கள் மற்றும் அவருடைய உள்ளார்ந்த அறிவு நிலைகடந்த அனு பவங்களை அவை வெளிப்படுத்துகின்றன. மகிழ்ச்சியூட்ட

வல்ல இப்பாடல்கள் வட இந்தியா முழுவதிலும் பாடப்படு கின்றன. மற்றும் கிருஷ்ணனை வழிபடுபவர்களுக்கு இப் பாடல்கள் நிலைத்த அகத்தூண்டுதலின் ஆதாரமாக உள்ளது.

மற்றொரு அருளாளரான மீராபாய் இந்தியாவிலுள்ள பெண் அருளாளர்களில் மிகவும் புகழ்பெற்றவராக விளங்கு கிறார். மற்றும் உலகத்திலுள்ள ஞானிகளின் தரவரிசையில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளார் என்றும் கூறலாம். காலங்காலமாக இந்தியாவில் சாதாரணமாகப் பெண்களின் இடம் தனித்ததாக, புனிதமானதாக வீட்டிலேயே இருந்து வந்திருக்கிறது. மிகப் பெரும்பாலான இந்தியப் பெண்மணி களின் இலட்சியங்களாக சீதையும், சாவித்திரியும் இருந்திருக் கின்றனர். இந்தக் காவியப் பாத்திரங்கள்— தியாகம், பொறுமை மற்றும் தங்களுடைய கணவன்மார்களின்பால் ஒருமுகப்படுத்தப்பட்ட பக்தியுடன் கூடிய நல்லியல்புகளின் உருவங்களாகத் திகழ்கின்றனர். இந்தப் பதிவிரதை இலட்சியம், அன்னையின் இலட்சியத்துடன் கலந்து மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. சகோதரி நிவேதிதை சுட்டிக்காட்டி இருப்பதைப்போல ஹிந்துப் பெண்மணி தாயாக, தன் னுடைய கணவரின் சீமாட்டியாக மற்றும் அரசியாக மட்டு மில்லாமல், தன் குழந்தைகளின் வழிபாட்டில் பெண் கடவு ளாகவும் அரியணையில் அமர்த்தப்பட்டு இருக்கிறாள். ஆனால் இந்த சராசரிப் பெண்மணிகளின் வரிசையிலிருந்து முற்றிலும் மாறான, கவனிக்கத்தக்க பண்புள்ளவர்கள் சிலர் இருந்திருக்கின்றனர். இவர்கள் குடும்ப வாழ்க்கையின் கடமைகளால் தங்களைச் சுமைப்படுத்திக் கொள்ளாமல், ஆன்மீகப் பயிற்சிக்கும் மற்றும் கடவுள் வழிபாட்டிற்கும் முழுமையாக அர்ப்பித்துக் கொண்டனர். அவர்களில் சிலர் வருங்கால சந்ததியினருக்குப் பொக்கிஷமாகத் தங்களுடைய ஆன்மீகப் போராட்டங்கள் மற்றும் அனுபவங்களையும் பற்றிய அற்புதமான இறைவனின் துதிப்பாடல்கள் மற்றும் பாடல்களையும் விட்டுச் சென்று உள்ளனர்.

நாம் ஏற்கனவே சில பெண் அருளாளர்களான ஆண்டாள் மற்றும் மஹாதேவி அக்கா போன்றோரின் வாழ்க்கைகளைக்

குறித்து விவாதித்து உள்ளோம். நாம் இந்த எல்லா பக்தை களிடத்திலும் ஒரு முக்கியமான பொதுவான விஷயத்தைக் காண்கிறோம். அவர்கள் ஆன்மாவை நிலைபெற்ற மண மகளாகவும், கடவுளை நிலைத்த மணமகனாகவும் கண்டனர். ஆனால் நாம் இந்த தொடர்புக்கும் உடலிற்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். மஹாதேவி அக்கா மற்றும் மீராவின் வாழ்க்கைகளின் இடையில் பெரிய ஒற்றுமை காணப்படு கிறது. முதலில் கூறப்பட்டுள்ளவர் (மஹாதேவி அக்கா) ஓடையின் நீரோட்டத்தைப் போன்றவர் என்றால் பிறகு கூறப் பட்டவர் (மீராபாய்) நதியின் வெள்ளத்தைப் போன்றவர் ஆவார். நாம் மிகச் சிறந்த பெண் அருளாளர்களின் வாழ்க்கை களிலிருந்து கற்றுக் கொள்ளும் பெரிய படிப்பினையானது, அவர்கள் அனைவரும், உச்ச அளவான துறவற வாழ்க்கையை வாழ்வதிலும் மற்றும் கடவுளை உணர்வதிலும் பெண் களுடைய உரிமை மற்றும் திறமையை நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டியிருப்பதும் ஆகும்.

மீராபாயின் வாழ்க்கையைச் சுற்றிலும் பெரும்பாலான புனிதமகான்களின் நிலைமையைப் போன்றே பல வழிவழிக் கதைகள் திரட்டப்பட்டுள்ளன. அவர் ராதோட் (Rathod) இனத்தைச் சேர்ந்த ராஜபுதனத்து இளவரசி என்பது உறுதி யாகும். மீராபாய் அவருடைய குழந்தைப் பருவத்திலிருந்தே ஸ்ரீகிருஷ்ணருடைய கிரிதர கோபாலன் என்னும் வடிவத்தின் மீது மிகுந்த ஆர்வப்பற்றுக் கொண்டிருந்தார். அவருக்கு வயது வந்ததும் அவர் சித்தூரின் ராணா சங்காவின் தலைமகனான இளவரசர் போஜராஜனுக்குத் திருமணம் செய்து தரப்பட்டார். ஆனால் திருமணம் நடந்த குறுகிய காலத்திற்குள்ளேயே கணவரும், அதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு மாமனாரும் மரணமடைந்தனர். அவர் கணவருடைய ஒரு சகோதரர் அரசரானார். உண்மையான ஆன்மீகம் சார்ந்த கணவனான ஸ்ரீகிருஷ்ணரைத் திருமணம் செய்துகொண்டிருந்ததால், மண் ணுலகம் சார்ந்த அவருடைய கணவர் இறந்த பிறகு சதி என் னும் செயலிற்கு உடன்பட மறுத்துவிட்டார். இளமை நலம்

வாய்ந்த அரசிளங்குமரியான மீரா அவருடைய நேரத்தைப் பிரார்த்தனையிலும் அவருடைய சொந்தமான வழிபாட்டு இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த கிருஷ்ணனின் திருவுருவச் சிலையின் முன்பாக பாடுவதிலும், ஆடுவதிலும் செலவிட்டார். இது பக்தர்களையும் புனிதமான மனிதர்களையும் ஈர்த்தது. மற்றும் மீரா அவர்களுடன் சேர்ந்து இருந்ததில் மகிழ்ச்சி அடைந்தார். எப்படியிருப்பினும் ஐயத்திற்கு இடமின்றி இது அரச குடும்பத்தினருக்கு அவக்கேடாக இருந்தது. இராணா பல வகைகளில் மீராவை வாட்டி, அறிவுறுத்தி இணங்க வைப்பதற்கு முயற்சி செய்தார். அதனால் மீரா அவருடைய ஆன்மீக 'பைத்திய நிலையை' விட்டுவிடுவார் என்று எண்ணினார்.

இறுதியாக துன்பங்களைத் தாங்க இயலாமல் மீரா சித்தூரிலிருந்து அவருடைய தந்தையின் வீட்டிற்குச் சென்றார். அங்கிருந்து அவர் தன்னுடைய புனித யாத்திரையைத் தொடங்கினார். பிருந்தாவனத்திற்குச் சென்றுவிட்டு, மதுரா போன்ற மற்ற இடங்களுக்கும் சென்றார். அங்கு அவர் பல புகழ்பெற்ற புனிதமகான்களைச் சந்தித்தார். இறுதியாக துவாரகையில் நிலைத்துத் தங்கினார். இறுதியாக மீரா துவாரகையில் இருந்த ராஞ்சோட் (Ranchod) என்னுமிடத்திலிருந்த கோயிலிலிருந்த கிருஷ்ண விக்கிரகத்துடன் ஐக்கியம் அடைந்ததாகக் கூறப்படுகிறது.

கடவுள் மீராவை, பக்தியின் செய்தியைப் பரப்புவதற்கு ஒரு கருவியாகச் செய்தார். மீரா அறிவுறுத்திய பக்தியானது மிகவும் உயர்ந்த வகையைச் சேர்ந்தது ஆகும். அது தெய்வீகமான துறவறம், பரம்பொருளிடம் கொண்டுள்ள கரையற்ற அன்பு மற்றும் முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பிப்பதை உட்கொண்டிருக்கிறது. இந்த சிறந்த மரபுரிமைச் செல்வத்தைத்தான் மீரா தன் பின்னால் விட்டுச் சென்றுள்ளார். மிகச்சில, அபூர்வமான மனிதர்கள் மட்டுமே மீராவின் எடுத்துக்காட்டைப் பின்பற்ற இயலும். மீராவின் சொந்த சாதனைக்குப் பிறகு அவர், 'கண்ணீர், அன்பு என்னும் கொடியை ஊட்டி வளர்க்கிறது. அதன்மீது அது மலரும்

பொழுது கடவுள் வண்டாக விளையாட வருகிறார்' என்று கூறியுள்ளார். மீரா, 'நான் இறைவனின் திருநாமத்தைக் கூறுவதின் மற்றும் சாத்திரங்களின் சாரத்தைப் பின்பற்று வதின் இரகசியத்தைக் கண்டு பிடித்தேன்.' நான் என்னுடைய கிரிதரனை பிரார்த்தனைகள் மற்றும் கண்ணீரின் மூலமே அடைந்தேன்' என்று கூறியுள்ளார். மீராவின் முழுவாழ்க்கை யும் வெள்ளப் பெருக்கெடுத்த அன்பு என்னும் நதியானது பரம்பொருள் என்னும் சமுத்திரத்தை நோக்கி விரைந்து ஓடுவதைப்போல இருந்தது.

முழுமையாக அர்ப்பித்துக் கொள்வதுதான் ஆன்மீக வாழ்க்கையின் உச்ச நிலையாகும். மற்றும் இதனை ஆன்மீக வாழ்வில் பெரிய அளவில் முன்னேறி இருப்பவர்களால் மட்டுமே மேற்கொள்ள இயலும். தொடக்க நிலையில் இருப் பவர்களுக்கு மீராவின் அறிவுரை என்ன? மீரா அவருடைய சில பாடல்களில் பல உதவத்தக்க யோசனைகளைக் கூறியுள் ளார். 'ஸாதன் கர்னா சாஹிரே மன்வா பஜன் கர்னா சாஹி' என்று தொடங்கும் பாடல் பலராலும் நன்கு அறியப்பட்ட தாகும். 'ஓ என் மனமே, நீ ஆன்மீகப் பயிற்சியை மேற் கொள்ள வேண்டும் மற்றும் வழிபட வேண்டும்.' இதுதான் ஆன்மீக வாழ்வின் மையக் கருத்தாகும். அன்பு செலுத்துவதற் கும் மற்றும் கடவுளுக்காக வாழ்வதற்கும் உரிய முறைகள் சடங்குகள், என்னும் எல்லாம் இரண்டாம் பட்சமானதாகும்.

இந்த மிகச் சிறந்த கவிஞர் மற்றும் அருளாளர் கேலி செய்யும் பாங்கில் கேட்கிறார்.

'தினமும் நீராடுவதால் ஒருவர் ஹரியை அடையலாம் எனின்
அப்பொழுது நீர் வாழ் உயிரினங்களின் நிலை என்ன?
பழங்களையும், வேர்களையும் உண்பதால் ஒருவர் ஹரியை அடையலாம் எனின்
அப்பொழுது வௌவால்கள் மற்றும் குரங்குகளின் நிலை என்ன?
ஒருவர் துளசிச் செடியை வழிபடுவதால் ஹரியை அடையலாம் எனின்
அப்பொழுது நான் துளசி சோலையை வழிபடுவேன்.

ஒருவர் கற்களை வழிபடுவதால் ஹரியை அடையலாம் எனின்
அப்பொழுது நான் மலையை வழி படுவேன்
பால் அருந்துவதால் ஒருவர் ஹரியை அடையலாம் எனின்
அப்பொழுது கன்றுக்குட்டிகளின் நிலை என்ன?

பிறகு, ஒருவர் ஹரியை எப்படி அடையலாம்?

மீரா, பினா ப்ரேம் ஸே நஹி மிலே நந்தலாலா

'தூய்மையான அன்பு இல்லாமல், நந்தனின் அன்பிற்கு உரிய மகனை அடைய இயலாது' என்று கூறியுள்ளார். நாம் எப்பொழுதும் மிகச் சிறந்த அருளாளரான மீராவின் இந்த அறிவுரையை நினைவில் கொள்வோம். நாம் ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். நாம் கடவுளின் மேன்மைகளையும் பாட வேண்டும். மற்றும் இந்த அனைத்தும் தீவிரமான அன்பு மற்றும் பக்தியுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இடைக்காலத்தில் வடஇந்தியா, நாம் மேலே குறிப்பிட்டுள்ள புனித மகான்களைத் தவிர வேறு பல புனித மகான்களையும் தோற்றுவித்துள்ளது. அவர்களுள் சிலர் சூபிகள் என்று அழைக்கப்பட்ட இஸ்லாமிய புனித மகான்கள் ஆவார்கள். இந்தியாவைச் சேர்ந்த சூபி புனிதமகான்களில் சிந்துவைச் சேர்ந்த ஷா லத்தீப் (Shah Latif), தாரா சுக்கோ (Dara Shukoh) (இவர் பேரரசர் ஷாஜஹானின் தலைமகன் ஆவார்) மற்றும் டெல்லியைச் சேர்ந்த யாரீ ஸாஹேப் (Yari Saheb) என்பவர்கள் மிகவும் புகழ் பெற்றவர்கள் ஆவார்கள். அந்தக்காலக் கட்டத்தில் பல ஹிந்துக்கள் இஸ்லாமியர்களை அவர்களுடைய குருவாக ஏற்றுக் கொண்டனர். மற்றும் பல இஸ்லாமிய புனித மகான்களுக்கு ஹிந்து குருமார்கள் இருந்தனர். சூபிக்கோட்பாடுகளும், ஹிந்துக்களின் யோகமும் ஒருங்கு இணைந்ததன் விளைவாக வட இந்தியாவில் பல கிளைப்பிரிவுகள் தோன்றின. அவை ஜாதி அமைப்பு முறையையும் விக்கிரக வழிபாட்டையும் கண்டித்தன. திருமறை நூல்களைப் படிப்பதை விட மனத் தூய்மைக்கும் சாதனைக்கும் அதிக அளவில் முக்கியத்துவம் அளித்தனர். அவர்கள் அனைவரும், கடவுள் மீது கொள்ளும்

அன்பையும், ஒருவருடைய குருவை மதிக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தினர்.

வங்காளத்தின் புனித மகான்கள்

இடைக்காலத்தில் வங்காளத்தில் இருந்த மிகச் சிறந்த புனிதமகான் ஸ்ரீசைதன்யர் *(1485-1533)* ஆவார். அவர், அவரைப் பின்பற்றுபவர்களால் இராதாகிருஷ்ணனின் அவதாரம் என்று கருதப்பட்டார். *33*-ஆம் அத்தியாயத்தில் ஏற்கனவே அவர் வாழ்க்கையின் சுருக்கமாதிரி கொடுக்கப்பட்டுள்ளது. ஜாதியைக் குறித்து அவருடைய பரந்த மனப்பான்மையும், பலரும் சேர்ந்து பஜனைகளைப் பாடும் முறையை அவர் அறிமுகப்படுத்தியதும், அவருடைய பெயருடன் தொடர்புடைய அவருடைய இயக்கத்தை பாமரர்களிடையே மிகவும் பரவலாகப் பரவச் செய்தது. சைதன்யர் அவருடைய கடைசி *18* ஆண்டுக்கால வாழ்க்கையை வங்காளத்திற்கு வெளியில், பூரியில் கழித்தாலும் அவரைப் பின்பற்றிய மற்றும் நம்பிக்கைக்குரிய அவர் அமைப்பைச் சேர்ந்தவர்களான நித்யானந்தர் மற்றும் அத்வைத கோஸ்வாமி போன்றவர்கள் அவருடைய பணியை வங்காளத்தில் பெரும் உற்சாகத்துடனும், சுறுசுறுப்புடனும் மேற்கொண்டனர். சைதன்யர் ரூப கோஸ்வாமி மற்றும் சனாதன கோஸ்வாமி என்னும் இரு வட மொழி அறிஞர்கள் மீது அவருடைய வாழ்வு முறை நல்ல விளைபயனை ஏற்படுத்தியது. இந்த இரு சகோதரர்களும் பிருந்தாவனில் அவர்களுடைய உடன் பிறந்தவரின் மகனான ஜீவகோஸ்வாமியுடன் நிலைகொண்டனர். மற்றும் வடமொழியில்பல நூல்களை எழுதினர். அதன்மூலம் சைதன்யருடைய பக்தியின் கருத்தை, ஒரு கோட்பாட்டின் அடிப்படைத் தகுதியில் அமைந்தனர். இத்தகைய புனித மகான்களின் முயற்சிகளின் காரணத்தாலும் மற்றும் அவர்களின் சீடர்களாலும் பிருந்தாவனம் வங்காளத்தின் வைஷ்ணவ சமயத்தின் முதன்மையான மையமாயிற்று.

வட இந்தியாவில் ஆன்மீக வாழ்க்கையின் வளர்ச்சியை நாம் ஆராயும் பொழுது, வங்காளமானது ஒரு வகையில்

தனித்தன்மையுடன் விளங்கியதைக் காண்கிறோம். அந்த தனித்தன்மையானது அங்கு சக்தி வழிபாடு பரவியிருந்தது ஆகும். வங்காளமானது வட இந்தியாவின் மற்ற பகுதி களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பினும் இந்தப் பகுதியில்தான் சக்தி வழிபாடானது சமயம் சார்ந்த வாழ்க்கை யின் மேம்பட்ட முறையாக இருந்தது. கடவுளை அன்னை யாக வழிபடுவது, ஐயத்திற்கு இடமின்றி இந்தியா முழு வதிலும் பரவலாக இருந்தது. மற்றும் அதன் வரலாறு மிகத் தொன்மையான காலத்திலிருந்து தொடங்குகிறது. ஆனால் சக்தி சமய மரபானது, இந்தியாவில் சில இடங்களில் மட் டுமே மக்களின் சமயம் சார்ந்த வாழ்வில் ஆதிக்கம் செலுத்தி ஆழமாக வேரூன்றியது வட கோடியான காஷ்மீர், தென்கோடி யான கேரளம், கிழக்குக் கோடியான வங்காளமும், அஸ்ஸா மும் ஆகும். சக்தி வழிபாட்டின் முக்கியமான திருமறை நூல்கள் தந்திர சாத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பலராலும் நன்கு அறியப்பட்ட தந்திர சாத்திரங்களை மற்றும் அவற்றின் விளக்கவுரைகளை இயற்றியவர்களும் வங்காளத் தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். மற்றும் இத்தகைய அறிஞர் கள் மற்றும் கைதேர்ந்தவர்களின் முயற்சிகளாலும் தந்திர சாதனை எனப்படும் தனிமுறையான ஆன்மீக நெறிமுறை யானது வங்காளத்தில் மக்களிடையே பரவியிருந்தது. இதற் கிடையில் துர்கை மற்றும் காளியின் வழிபாட்டைப் பலரும் அறியும்படிச் செய்ததுடனன்றி, அதற்கு ஒரு உயர்ந்த ஆன்மீகத் திருப்பத்தை ஏற்படுத்திய பல புனித மகான்கள் தோன்றினர். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தகைய மிகச் சிறந்த இரு புனித மகான்கள் இராமபிரசாத் மற்றும் கமல காந்தன் ஆவார்கள். அவர்களுடைய பாடல்கள் ஸ்ரீராமகிருஷ்ண ருக்கு மிகச் சிறந்த அகத்தூண்டுதலின் ஆதாரமாக விளங்கின. இராமபிரசாத் 1723 ஆம் ஆண்டின், கல்கத்தாவிற்கு முப்பது மைல்கள் வடக்கில் உள்ள கங்கை நதிக்கரையிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார். அவர் வைத்தியர் ஜாதியைச் சேர்ந்தவர். மற்றும் அவர் தந்தை சிறந்த மருத்துவராக விளங்கினார். பள்ளியில் படிக்கும்பொழுது அவர் வடமொழி, பர்ஷியன் மொழி மற்றும் ஹிந்தி மொழிகளில் நல்ல தேர்ச்சி

அடைந்தார். அவருக்கு 22 வயதில் திருமணம் நடைபெற்றது. அவருக்கு நான்கு குழந்தைகள் இருந்தன. அவர் தந்திர சாத்திரத்தில் வல்லவரான ஆகமவாகீசரிடம் தீட்சை பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. மற்றும் தன் நேரத்தைத் தியானம் செய்வதிலேயே செலவிடத் தொடங்கினார். ஆனால் அவர் தந்தை இறந்ததும், அவருக்கு குடும்பச் சுமையை ஏற்க வேண்டி வந்தது. எனவே அவர் கல்கத்தாவிற்குச் சென்று, துர்காசரண் மித்ரா என்னும் செல்வந்தரின் கணக்கராகச் சேர்ந்தார். ஆனால் இராம்பிரசாத்தின் மனம் தெய்வீக அன்னையைக் குறித்த எண்ணங்களில் முழுவதுமாக ஈடுபட்டு இருந்ததால் கணக்கு வழக்குகளில் கவனம் செலுத்த இயலவில்லை. காளியைக் குறித்த கவிதைகள் அவர் மனத்தில் உருப்பெற்ற பொழுது, கணக்குப் புத்தகங்களின் தாள்களில் அவற்றை எழுதினார். இந்த விஷயம் இறுதியாக எஜமானரின் செவிகளுக்கு எட்டியது அவர் கணக்குப் புத்தகங்களைச் சோதித்தார். ஆனால் கோபம் கொள்வதற்குப் பதிலாக அவர் அந்தக் கவிதைகளால் மிகவும் நெகிழ்ந்தார். தவறு புரிந்த கணக்கரிடம் அவர் அச்சமயம் முதல் கணக்கருக்கு ஒவ்வொரு மாதமும் 30 ரூபாய்களை அவர் குடும்பத்தை ஆதரிப்பதற்கு உதவித்தொகையாக அளிப்பதாகவும் மற்றும் எத்தகைய கவலையும் இன்றி அவர் வீட்டிற்குச் சென்று அவருடைய சாதனையைத் தொடரலாம் என்றும் கூறினார்.

இராம்பிரசாத் அவருடைய கிராமத்திற்குத் திரும்பிச் சென்றார். காளியின் வழிபாட்டில் முழு ஊக்கத்துடன் ஈடுபட்டார். மற்றும் காளியின் மீது தீவிரமாகத் தியானம் செய்யத் தொடங்கினார். அவர் சாதனையில் ஈடுபட்டு இருந்த பொழுது அவருள்ளே கவிதைகள் தானாகவே வெளிப்பட்டன. மற்றும் இவை, அந்த சமயத்தில் அவர் அனுபவித்த பெரிய ஆன்மீகப் போராட்டங்களைப் பதிவு செய்து உள்ளன. அவருக்கு அன்னை காளியின் அற்புதமான தரிசனங்கள் ஏற்பட்டன. மற்றும் அவர் வாழ்க்கையின் பிற்பகுதியில் மேம்பட்ட ஆன்மீக விழிப்புணர்வு நிலையிலேயே மூழ்கி இருந்தார். அவர் 1803-ஆம் ஆண்டில் தீபாவளியன்று

இவ்வுலகை விட்டு மறைந்தார். காளியின் திருவுருவச்சிலை யானது வழக்கமான மரபுடன் தண்ணீரில் அமிழத்தக்க சமயத் தில் இராம்பிரசாத் நதிக்குள் சென்றார். தன் அன்னையின் புகழைப் பாடிக் கொண்டே உடலைத் துறந்தார்.

இராம்பிரசாத்தின் கவிதைகள் வங்கமொழி பேசப்படும் இடங்களிலெல்லாம் பாடப்படுகின்றன. அவைகளின் எளிமையும் மற்றும் தீவிரமான ஆன்மீக உணர்ச்சி வேகமும் அவற்றைக் கடந்த இருநூறு ஆண்டுகளில் அனைவராலும் அறியப்பட்டவையாக ஆக்கியுள்ளன. இந்த கவிதைகள் அவருடைய சொந்த ஆன்மீகப் போராட்டங்கள் மற்றும் உள்ளார்ந்த அனுபவங்களைப் பதிவு செய்து இருப்பதால், ஆன்மீகத்தில் ஈடுபாடு உடைய சாதகர்களுக்கு மிகச் சிறந்த அகத் தூண்டுதலின் ஆதாரமாக உள்ளன.

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் ஆன்மீக மேம்பாடு உடைய சிறந்த புனிதமகான்களைத் தோற்றுவித்து உள்ளது. அவர்களுடைய வாழ்க்கைகள் போதனைகள் மற்றும் பாடல் களின் மூலமும் மற்றும் அடுத்தடுத்து அவர்களுடைய ஒழுங்கமைதியுடைய பின்பற்றுவோராலும் இத்தகைய சிறந்த புனிதமகான்கள் ஹிந்து சமயத்தை மாறும் காலத்திற்கு ஏற்பப் பொருத்திக் கொள்ளத்தக்க ஒரு உயிருள்ள சமயமாகச் செய்தனர்.

எப்பொழுதாவது, எங்காவது நாடு, நாத்திகத்தின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டும் எனின் அல்லது வெளி நாட்டு எதிர்த்தாக்குதலை எதிர்கொள்ள வேண்டும் எனின், புனித மகான்கள் தோன்றி, ஹிந்துக்களின் இனத்திற்குப் புதிய திருப்பங்களையும் ஆன்மீக சக்திகளையும் அளித்தனர். இவ் விதத்தில் ஹிந்து ஆன்மீகத் தன்மையானது பல பிரிவுகள், கோட்பாடுகள், நடைமுறைகளைக் கொண்ட பல கிளை களாக இருப்பினும் ஊக்கம் மிகுந்த ஆற்றலாகவே திகழ்ந்து வருகிறது. மற்றும் இத்தகைய எல்லா வேற்றுமையின் பின்னணியில் எப்பொழுதும் ஹிந்துப் பண்பாட்டின் அடிப் படையான ஒரு தொடர்பு ஊடாடிக் கொண்டிருக்கிறது.

அதனுடைய முக்கியமான தனிச் சிறப்புப் பண்புகளாவன; துன்பத்திலிருந்தும், அறியாமையிலிருந்தும் விடுபட வேண்டும் என்னும் மனிதனின் வேட்கை மற்றும் துறவு மற்றும் பொறுமை போன்ற மனப்பாங்குகளும் ஆகும். துன்பத்திலிருந்து முழுமையான விடுதலையை, கடவுளை நேரடியாக உணர்வதால் மட்டுமே அடைய இயலும். கடவுளைப் பல்வேறு விதமான வழிகளின் மூலம் அடையலாம். வரையற்ற, பல்வகைப்பட்ட கடவுள் அனுபவங்கள் உள்ளன. மற்றும் இதனை அடைவதுதான் வாழ்க்கையின் இலட்சியமாகும் என்பதுதான் ஹிந்து சமயத்தின் மையமான அறிவுரை ஆகும். நாம் மற்ற சமயங்களைச் சேர்ந்த புனித மகான்களின் வாழ்க்கைகளை ஆராயும் பொழுது, அதே முடிவிற்கு வருகிறோம். உண்மையாகவே, எல்லா சமயங்களைச் சேர்ந்த புனிதமகான்களும் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் பல மொழிகளின் மூலம் கூறினாலும் ஒரே உண்மையைக் குறித்துப் பேசினர். அவர்களுடைய ஆன்மீக அனுபவங்களை அவர்கள் தெரிவிக்கும் பலன்படுத்தும் கருத்து வெளியிடும் முறைகளை நாம் புரிந்து கொள்ளத் தவறும் பொழுதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாம் ஆன்மீகத்தை வெளிப்படுத்தும் இத்தகைய குறியீடுகளைப் (சங்கேதமான தெரிவிப்புக்கள்) புரிந்து கொண்டால், நாம் எல்லாச் சிறந்த புனித மகான்களும், எல்லா ஆன்மாக்களின் ஆன்மாவாக விளங்கும், எல்லாப் பேரின்பங்களின், விழிப்புணர்வுகளின் ஆதாரமாக விளங்கும் ஒரே பரம்பொருளைப் பற்றியே கூறுகின்றனர் என்பதை உணர்வோம். காலத்தின் மணல்மீது உள்ள இந்தச் சிறந்த மனிதர்கள் விட்டுச் சென்றுள்ள அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஒப்புயர்வற்ற பேரின்பத்தையும் ஞானத்தையும் விடுதலையையும் அடைவதுதான் நம்முடைய பொறுப்பு மிகுந்த கடமைப்பணியாகும்.

பகுதி 4

ஆன்மீகத் துளிகள்

35
ஆன்மீகத் துளிகள்

இயற்காட்சிகள் நிறைந்த இவ்வுலகத்தில் பரிபூரண மான நிறுவனங்கள் என்று எதுவும் இல்லை. ஏனெனில் பரிபூரணமான தனிமனிதர்களும் இல்லை. நாம் இருப்பன வற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். வலிமை யுடைய, மற்றும் பலவீனமான பண்புக் கூறுகள் என்னும் இரண்டும் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. நாம் குறைகளைவிட நிறைகள் நிறைந்த நிறுவனத்தை மற்றும் நம்மை சீர்படுத்திக் கொள்வதற்கு உதவத்தக்க நிறுவனத்தைத் தேர்ந்து எடுக்க வேண்டும்.

எல்லா உதவிகளைவிடத் தன்னுதவியே சிறந்தது ஆகும். ஆனால் அது தன்முனைப்புள்ளதாக இருத்தல் கூடாது. சுவாமி பிரம்மானந்தர் அவர்கள், 'உங்கள் மனமே உங்களுடைய குருவாக இருக்கட்டும்' என்று எங்களுக்குக் கூறுவார். அதாவது நம்முள்ளே குடிகொண்டுள்ள எல்லா குருமார்களுக்கும் குருவிடம் தொடர்பு கொள்ளத்தக்க வகையில் தூய்மை நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். இந்தச் சிறந்த அறிவுரையைத்தான் என்னால் உங்களுக்குக் கூற இயலும். நீ எதற்கும் பயனற்றவன் என்று எண்ணி உன்னை பலவீனப்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டும். வெளிப்புறத்தில் எந்த உதவியையும் அதிகமாகச் சார்ந்து இல்லாமல் உன்னுள்ளே உள்ள குருவிடம் ஒளியை அளிக்க வேண்டும் என்றும், வழிநடத்த வேண்டும் என்றும் ஆர்வத்துடன் பிரார்த்தித்து கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து நீயும் மகிழ்ச்சியுடன் இருப்பதற்குக் கற்றுக்கொள்வாய்.

நம் அனைவருக்குமே நம்முடைய பலவீனத்தன்மைகளும் மற்றும் வல்லமைத் தன்மைகளும் உள்ளன. இரண்டையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால் நல்லவை தீயனவற்றை விட அளவில் கூடியிருப்பதைக் காண வியலும். எப்படி இருப்பினும் கேடுகள் படிப்படியாகத்தான் அகற்றப்பட வேண்டும்.

உன்னிடமுள்ள பலவீனங்களைக் கண்டு நீ சோர்வு கொள்ளும் பொழுது, பின்னோக்கிச் சென்று கடந்த சில ஆண்டுகளில் நிகழ்ந்துள்ளவை, உன்னிடம் எத்தகைய பெரிய மாறுதலை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கவனித்துக் காண்பாய். இது உன்னை நம்பிக்கைகளால் நிறைக்க வேண்டும். மற்றும் உன்னை மீண்டும், மீண்டும், மீண்டும் முயற்சி செய்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். உன் பின்னணியில் தெய்வ சக்தி உள்ளது என்பதை அறிந்துகொண்டு, உன்னுடைய உள்ளார்ந்த முயற்சி மற்றும் பிரார்த்தனையின் மூலம் இந்த சக்தியை அணுகுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். உரிய காலத்தில் இப்பொழுது கனவு கண்டு கொண்டிருப்பதை விட அதிகமான அளவில் ஆன்மீகம் சார்ந்த மாறுபாட்டை அடைந்திருப்பதை நீயே கண்டு கொள்வாய்.

நம்முடைய இலட்சியமானது மிகவும் உயர்ந்தது. நாம் அதை நோக்கி எந்த அளவிற்கு முன்னேறிச் செல்கிறோமோ, அந்த அளவிற்கு அதை அடைவதற்கு இன்னும் அதிக அளவு உள்ளது என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். இது மிகவும் சிறந்ததாகும். ஏனெனில் இது நம்மைச் செயல்பட வைக்கிறது. மற்றும் நாம் பிரார்த்தனையையும், தியானத்தையும் தொடர்ந்து செய்வதால், இது நம்மைத் தெய்வீகப் பேரின்பத்தை சிறிதளவு சுவைக்கச் செய்கிறது.

★ ★ ★

நாம் உண்மையை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும். அதை அடைவதற்குப் பல அணுகுமுறைகள் உள்ளன. ஆன்மாவானது ஐயத்திற்கு இடமின்றி ஒரு பரிணாம

வளர்ச்சியை மேற்கொண்டு உள்ளது. சில வேளைகளில் அது முன்னே செல்கிறது. சில நேரங்களில் பின்னடைகிறது. ஆனால் நிகர ஆதாயப் பயன் என்பது முன்னோக்கிய வளர்ச்சி யாக இருத்தல் வேண்டும். நம்முடைய இயக்கத்தில் ஒரு முழுங்குமுறை இருக்க வேண்டும். நம்முடைய கருத்துக்கள் தெளிவானதாகவும் முறைப்படுத்தபட்டதாகவும் இருக்க வேண்டும். முதலில் அவை குழந்தைத்தனமாக இருக்கலாம். ஆனால் அவை தெளிவற்றதாகவும், திட்பமற்றதாகவும் இருத்தல் கூடாது. கடவுளைக் குறித்த நம்முடைய கருத் தானது, நாம் முன்னேறும் பொழுது மேலும் மேலும் வளர்ச்சி அடைய வேண்டும்.

நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதைக் கண்டு கொள்வது முதல் அடியாகும். கடவுளிடமும், ஆன்மாவிட மும் மற்றும் இந்தப் பேரண்டத்துடனும் உனக்கு உள்ள தொடர்பை அறிந்துகொள்ள வேண்டும். நாம் எந்த இடத்தில் இருக்கிறோமோ அங்கு இருந்து கொண்டே நம் வாழ்க்கை யின் கடமைகளைச் செய்யத் தொடங்குவோம். கடமையைக் குறித்த நம்முடைய கருத்தானது நாம் படி வளர்ச்சி அடை வதற்குத் தக்கபடி வளர்ச்சியை அடையும். ஆனால் தூய்மைப் பாடும் கடவுள் மீது உள்ள பக்தியும் அடித்தளமாக இருக் கின்றன. நாம் எப்படி இருக்கிறோம் என்பதைக் குறித்த மேம் பட்ட கருத்தைக் கொண்டிருக்க வேண்டும். அதன் பிறகு நம் மிடம் எப்படி ஒரு மாறுதலை ஏற்படுத்திக் கொள்ள வேண் டும் என்பதைப் பற்றி நினைக்க வேண்டும். மாறுதல்கள் மிக அபூர்வமாகத்தான் ஒரே சீராக இருக்கின்றன. நமக்கு ஏற்ற இறக்கங்கள் இருக்கின்றன. நாம் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். நாம் இன்னும் சிறப்பாக வளர வேண்டும். நாம் கீழே இழுக்கப்பட்டால் மீண்டும் மேல் நோக்கி முன்னேற வேண்டும். நமக்கு நம்முடைய மன நிலைகள் உள்ளன. ஆனால் நமக்கு ஆதிக்கம் செலுத்தவல்ல ஒரு மனநிலை இருக்க வேண்டும். அது அமைதி நிறைந்த ஆன்மீக மனநிலையாகும். நாம் கோபம் கொண்டோம் எனின், முழுமனத்திலும் கோபம் கொள்ளாமல் இருக்க

வேண்டும். நம் மனத்தின் ஒரு பகுதியையாவது குறைந்த அளவில் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும். எப்படி பாதிக்கப்படாமல் இருப்பது என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும். உன்னுடைய மனத்தின் சமநிலையை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். உண்மையான சமயத்தால் இதை ஏற்படுத்த இயலுமா?

ஒவ்வொருவரிடத்திலும் ஏதோ ஒரு உயர்ந்த நிலைக்காக அமைதியற்ற தன்மை உள்ளது. அதே 'ஆன்மாவின் பசி' யாகும். 'ஆன்மாவின் பசி'யின் மெய்ம்மை, கீழே ஆழமாக உள்ளது. தற்காலிகமாக நாம் அதை மறக்கலாம். ஆனால், அந்த ஆன்மாவின் ஏக்கம் மீண்டும் வருகிறது.

★ ★ ★

1. நான் உடல், 2. நான் மனம் மற்றும் 3. என்னுடைய சொந்த எண்ணங்களின் சாட்சியாக உள்ள 'நான் ஆன்மா' என்று நம்மைக் குறித்த மூன்று மனப்பான்மைகள் இருக்கக் கூடும். 'நான் இருக்கிறேன்' என்னும் தன் னுணர்வு நிலை முதல் பண்புக்கூறு ஆகும். இதை நீ எவ் விதம் பொருள் கொள்கிறாய் என்பதை முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

மனமானது, நம்முடைய உண்மையான தன்மையின் கருவியாக உள்ளது. நான் பார்க்கிறேன். ஆனால் சரியாக எப்படிப் பார்ப்பது என்பதை அறிந்து கொள்வது முக்கிய மானதாகும். நாம் பல தடவைகள் வண்ணம் தீட்டப்பட்ட கண்ணாடியின்மூலம் தவறான முறையில் காண்கிறோம். மறைந்திருக்கும் பதிவுகள் மனத்தைக் கறைப்படுத்துகின்றன. மனத்தை அதிகமாகக் கறைப்படுத்தாமலிருக்க வேண்டும். இருப்பனவற்றை இருப்பவை போன்றே காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

★ ★ ★

கடவுளிடம் நமக்கு உள்ள தொடர்பு என்ன? நமது அக்கறை இங்கு என்ன என்றால் நம்முள் இருக்கும் கடவுளே ஆகும். அவர் நம் அனைவரையும் இணைக்கும் இழை ஆவார். நாம் பல சமயங்களில் இதை மறந்து மிகவும் அதிகமாக தன்னுணர்வு நிலையை அடைகிறோம். நாம் பொதுவான தன்மையை மறந்துவிட்ட சமுத்திரத்தில் உள்ள குமிழிகளைப் போன்றவர்கள் ஆவோம். கடவுளுக்கும், நமக்கும் இடையில் தொடர்பை அறிந்துகொள்ளச் செய்வது நடைமுறைச் சமயம் ஆகும்.

அல்லது உன்னை ஒரு வட்டத்தின் புள்ளியாகக் கற்பனை செய்துகொள்ள வேண்டும். எங்கு வட்டம் இல்லாமல் இருக்கிறதோ அங்கு எந்த ஒரு புள்ளியும் இல்லை. நாம் இந்த வட்டத்தினால் ஒருவரோடு ஒருவர் இணைக்கப்பட்டிருக்கிறோம். நேரடியாக இணைக்கப்படவில்லை. அனைவரையும் சமமாகக் காண வேண்டும் என்பது இதன் கருத்து ஆகும். தனிப்பட்ட வாழ்க்கையை மேம்பட்ட வாழ்க்கையாகப் படி மாற்றம் செய்ய வேண்டும். ஆனால் ஈகையானது வீட்டிலே தொடங்கப்பட வேண்டும். முதலில் உன்னிடம் குடிகொண்டுள்ள கடவுளிடம் சரியான முறையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இயலுலக அண்டத்தின் மெய்ம்மையுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பானது மனிதர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பைப் போல ஒரு பொழுதும் எந்த மாற்றத்தையும் அடைவது இல்லை. மரணம் என்றால் அழிவு அல்ல. அது நம் இருப்பிடத்தை மாற்றிக்கொள்ளுதல் அல்லது இடம் பெயர்வது என்று பொருள்படுகிறது. ஆன்மா என்பது ஒருபொழுதும் மாறாத இயல்பைப் பெற்றிருப்பது ஆகும்.

★ ★ ★

நன்மையும் உள்ளது மற்றும் தீமையும் உள்ளது. மற்றும் சிலநேரங்களில் நன்மையுமற்ற, தீமையுமற்ற உண்மையான மெய்ப்பொருளின் கண நேரத் தோற்றத்தை உணர்கிறோம்.

நன்மையானது ஆன்மீக வாழ்விற்கு உதவிபுரியும் தீமை யானது அதற்குத் தீங்கினை அளிக்கும். நம்மிடம் நல்ல மட்டும் கெட்ட கூறுகள் உள்ளன. கெட்ட கூறுகளை அகற்றி விட்டு நல்ல கூறுகளை எடுத்துக் கொண்டு அதன் பிறகு நல்ல கூறுகள், கெட்ட கூறுகள் என்னும் இவ்விரண்டிற்கும் அப் பால் செல்ல வேண்டும். நாம் குறைந்த அளவில் இந்த பின் பற்றத்தக்க குறிக்கோளையாவது அணுகி, நாம் முழுமை அடைவதற்குரிய வழியை நோக்கிச் செயலாற்ற வேண்டும்.

உன்னைத் தளைப்படுத்திக் கொள்ளாமல் இருப்பாய். நிலைகுலையாமல் இருப்பாய். புலன்களால் உணரத்தக்க இந்த இயலுலகக் காட்சிகளின் பின்னணியில் பரம் பொருளைக் காண்பதற்கு முயற்சி செய்வாய். நாம் அன் புடையவர்களாக இருக்க வேண்டும். ஆனால் குருடர்களாக இருத்தல் கூடாது. அளவற்ற பரிவு கொண்டவர்களாக இருக்க வேண்டும். வலியும், வேதனையும் ஒரு வகையான கல்விப் பயிற்சி ஆகும். அவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். வேதனையின் வாயிலாகக் கூட கடவுள் பக்கமாகத் திரும்ப லாம். மற்றும் உண்மையின் மீது உள்ள வேட்கையானது நம்மைக் கடவுளின் பக்கமாகத் திரும்புகிறது.

நாம் நம்முடன் ஒரே சுருதியில் சேர்ந்து இருக்க வேண் டும். நாம் இசைவுடைய தன்மையுடன் இல்லை எனின், மற்றவர்களைக் குத்துகிறோம் (துன்பத்தை ஏற்படுத்து கிறோம்). உடல் மற்றும் மனத்துடன் இசைவுடைமையுடன் இருக்க வேண்டும். நம் உணர்வுகளை மேம்படுத்திக் கொள் வது அவசியமானதாகும். அவை அடக்கப்பட்டால் மீண்டும் மீண்டும் வெளிப்படத் தொடங்கும். அடக்குவதோ அல்லது ஒடுக்குவதோ போதுமானது அல்ல.

நண்பர்களிடம் ஓரளவிற்கு ஒத்த அதிர்வலைகள் உள்ளன. கோபப்படும் மனிதர்களிடம் பரிவு கொள்வாய். ஒரு உயர்ந்த மட்டத்திலிருந்து கொண்டு பரிவு கொள்ள வேண்டும். சில நேரங்கள் உள்ளன அப்பொழுது நீ ஓரள விற்குத் தற்கட்டுப்பாட்டுடன் மற்றவர்களுடன் ஒத்துப்

போகாமலிருப்பதற்கும் அல்லது மற்றவர்களைக் கோபித்துக் கொள்வதற்கும் அனுமதிக்கப்படுகிறாய். அது அப்பொழுது சண்டை சச்சரவுகளுக்கோ அல்லது தப்பு எண்ணம் ஏற்படு வதற்கோ வழிவகுக்காது. நமக்கு அகம் சார்ந்த இசை வுடைமை இருப்பின், நாம் மற்றவர்களுக்கும் இசைவுடை மையைத் தோற்றுவிக்கிறோம். நாம் அமைதியற்றவர்களாக இருந்தால் நமக்கு அகம், புறம் சார்ந்த தொல்லைகள் ஏற்படும்.

நமக்கு முதலில் நம்மை நோக்கிய ஒரு ஆன்மீகப் போக்கு இருக்க வேண்டும். அதன்பிறகுதான் நம்மால் நமக்கும், பரம்பொருளுக்கும் இடையிலும் மற்றும் மற்றவர் களுடனும் ஒரு முறையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இயலும்.

⋆ ⋆ ⋆

முதலில் நாம் அறிவுப்பூர்வமாக நம்ப வேண்டும். அதன் பிறகு நாம் மெய்ம்மையில் கொண்டுள்ள பற்றுறுதியானது சோதனைக்கு ஆட்படுத்தப்பட வேண்டும். நம் செயல் களிலும் மற்றும் எண்ணங்களிலும் உள்ள நம்பிக்கையும் சோதனைக்கு ஆட்படுத்தப்பட வேண்டும். நாம் அதற்குத் தகுந்தாற்போல் வாழ வேண்டும். சமயத்தைக் குறித்து அதிகமாகப் பேசப்படுகிறது. நாம் குறைவாகப் பேசினால் அது நல்லதாகும். நாம் செயல்பட வேண்டும். இலட்சியத் திற்கு ஏற்றாற்போல் நாம் நடைமுறையில் வாழ வேண்டும். வெகு சிலரால் மட்டுமே உண்மையான சமயத்தைப் புரிந்துகொள்ள இயலும். மிக அதிகமான அளவில் கோட் பாடுகள் உள்ளன. நடைமுறைப்படுத்துவது அவசிய மானதாகும்.

உண்மை ஒன்றுதான். ஆனால் அதன் அணுகுமுறைகள் பல உள்ளன. நாம் கீழான உண்மைகளிலிருந்து மேலான உண்மைகளை நோக்கிக் காலடி எடுத்து வைக்கிறோம். நாம் கடவுளின் கண நேரத் தோற்றங்களைப் பெற வேண்டும். நாம்

பின்பற்றத்தக்க நிலைகள் உள்ளன. கருத்துக்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டு வாழ்க்கையில் செயல்படுத்தப்பட வேண்டும். இலட்சியத்தைத் தாழ்ந்த நிலைக்கு இறக்குதல் கூடாது. அதனுடைய நிலைக்கு நாம் உயர வேண்டும். நாம் அதை நிலையாக, ஒவ்வொரு அடியாக அணுக வேண்டும். மேலும் மேலும் சிறந்த, மேலும் மேலும் தெளிவான கருத்துக்களையும் எண்ணங்களையும் பெற வேண்டும். பருப்பொருள் இயல்பிலிருந்து நுண்ணியல்பிற்கும், அதன்பிறகு காரண-காரிய இயல்பை நோக்கியும் செல்ல வேண்டும்.

★ ★ ★

நம்மிடம் உள்ள இறைவனை உணர்வது முதல் அடியாகும். அதன்பிறகு நாம் கடவுளை மற்றவர்களிடமும் உணர்கிறோம். அதன் பிறகு ஒரு புதிய மனப்பாங்கும் ஒரு புதிய பரிவும் ஏற்படுகிறது. நம் இயற்கை உளச்சார்புகள் நல்ல பயிற்சியைப் பெற்ற பிறகு, மன உறுதியானது மிகவும் வலிமையடைகிறது. உணர்வு, விருப்பம் மற்றும் அறிவு என்னும் இவை சமநிலைப்படுத்தப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம், கடமைகளைச் சரிவரச் செய்தல் மற்றும் தற்கட்டுப்பாட்டின் மூலம் மேம்படுத்தப்பட வேண்டும். ஆன்மீக வாழ்விற்கு மிகப் பெரிய ஆற்றல் தேவையானதாகும்.

மனிதர்களில் பல வகையினர் உள்ளனர். கடவுளுடன் ஆன்மாவிற்கு உள்ள தொடர்பை உணர்வதிலும் அவைகள் இரண்டும் இரண்டறக் கலப்பதில் நிறைவடைதல் என்னும் இலட்சியமும் அனைவருக்கும் ஒரே தன்மையுடன் விளங்குகிறது.

பரம்பொருளை அடைவதற்கு, தன்னலமற்ற செயல்பாடு அதனை நோக்கி வைக்கும் ஒரு அடியாகும். நம்பிக்கை அதனுடன் சேர்க்கப்பட்டால் அது எளிமையானதாகிவிடும். உன்னதமான கருத்துப் போக்குகளுக்கு மிகப் பெரிய ஆன்மீகத் தகுதி உள்ளது. அவை நம்மைக் கடவுளுக்கு அருகில்

அழைத்துச் செல்கின்றன. சிலரிடம் பக்தியானது முதன்மை யான ஆதிக்கம் செலுத்துகின்ற ஆக்கக் கூறாக இருக்கும். ஆனால் உணர்வுடன் பாகுபடுத்தி ஆராயும் இயல்பும் சரியான செயல்பாடுகளும் இருக்க வேண்டும். வேறுபட்ட வினைத் திறங்களை ஒருதரப்படுத்த வேண்டும். வினைத்திறங்களுக்கு மேலாக உயர்ந்து, உண்மையை உணர வேண்டும். ஆன்மா உனக்கு அகத் தூண்டுதலை அளித்து உண்மை வழி நடத்தட்டும்.

நாம் வாழும் பொழுதே விடுதலை அடைவதுதான் நம்முடைய குறிக்கோள் ஆகும். நாம் இறப்பதற்கு முன் விடுதலை அடைவதுதான் நம்முடைய குறிக்கோள் ஆகும். மனிதப் பிறவியானது ஒரு அரிய உரிமைப் பேறு. எனவே நாம் இந்தப் பிறவியிலேயே விடுதலையை அடைவதற்கு நம்மால் இயன்ற அளவிற்கு முயற்சிக்க வேண்டும். இறப் பதற்கு முன் கடவுளை உணர்வதற்கு நாட்டம் கொள்ள வேண்டும். முயற்சி செய்து, இலட்சியத்தை நோக்கி முன் னேற வேண்டும். நமக்கு நம் அகங்காரம் இருக்கும்வரை யிலும் பொறுப்பும் நம்முடையதாகும். நாம் செயல்பட்டு முழுமைக்கு அருகில் செல்ல வேண்டும்.

★ ★ ★

உள்ளுணர்வு என்பது உண்மையை நேரடியாக உணர்வது ஆகும். தூய்மைப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் இதயத்தின் மூலம், தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இயல்பான உளச்சார்பு ஆகும். பக்தியானது எப்பொழுதும் அறி வாற்றலால் பக்குவப்படுத்தப்பட வேண்டும். மற்றும் உணர்வானது எப்பொழுதும் அறிவாற்றலால் வழி நடத்திச் செல்லப்பட வேண்டும். உணர்வும் அறிவாற்றலும் ஒருதரப்படுத்தப்பட வேண்டும். மற்றும் நம்மை நாம் ஒரு பொழுதும் நம்முடைய உணர்வுகள் அல்லது வெறும் ஆய்வறிவுக் கோட்பாடுகளால் அடித்துச் செல்லப்படுவதற்கு அனுமதித்தல் கூடாது.

உள்ளுணர்வு எனப்படும் இந்த மேம்பட்ட உளச்சார் பானது நம்மை நேரடியான தரினத்திற்கு, உண்மையை நேரடி யாக உணர்வதற்கு வழிகாட்டுகிறது. ஆனால் முதலில் உள் ளுணர்வு ஆற்றலானது வளர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த உளச்சார்பானது ஏற்கனவே நம்மிடம் உள்ளது. ஆனால் அது மனத்தின் தூய்மைக் கேடுகளால் மறைக்கப்பட்டுள்ளது. உண்மையை உணர்வதன் பொருட்டு மனத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும். அவ்விதம் செய்தால் உண்மையின் சில கணநேரத் தோற்றங்களையாவது நம்மால் பெற இயலும். தெளிவற்ற உள்ளுணர்வானது தெளிவான மற்றும் உறுதி யுடன் கூடிய உள்ளுணர்வாக முதிர்ச்சி அடைய வேண்டும். ஒவ்வொரு ஆன்மாவும் இயல்திறமுறையில் தெய்வீகத் தன்மை உடையது ஆகும். நாம் எப்பொழுதும் நம்முடைய ஆன்மீக மரபு உரிமையை நினைவில் கொள்ள வேண்டும்.

★ ★ ★

நாம் நம்மை நம்முடைய உணர்வுகளால் அடித்துச் செல்லப்படுவதற்கு அனுமதித்தல் கூடாது. அது மிகவும் ஆபத்தானது ஆகும். தெளிவான வரையறையுடன் கூடிய சிந்தனை அவசியமானதாகும். உன்னுடைய மனநிலை களைக் கட்டுப்படுத்த வேண்டும். தொடக்கத்தில் வெளிப் புறத்திலுள்ள நல்ல தூண்டுதல்கள் தேவையானதாக இருக்க லாம். ஆனால் நம் உள்ளே உள்ள உன்னதமான தூண்டுதல்கள் மிகவும் முக்கியமானதாகும். உன்னிடமுள்ள பேரொளியைக் காண்பதற்கு தீவிரமாக ஆர்வம் கொள்வாய். அது உன்னிடம் உள்ளது. நீ அந்த உள்ளொளியை வெளிப்படுத்த வேண்டும்.

நம்முடைய அகம் சார்ந்த, புறம் சார்ந்த வாழ்க்கையில் ஒரு சமநிலை இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் ஒரு தொண்டாகவும் மற்றும் தூய்மைப்பாட்டுடன் கூடிய செயலானதாகவும் இருக்க வேண்டும்.

சிந்தனை ஓட்டத்தில், விழிப்புணர்வுடன் கூடிய மற்றும் அரை உணர்வுத் தளம் சார்ந்த சிந்தனை என்று இரு (எண்ண)

ஓட்டங்கள் உள்ளன. நீ செயல்படும் பொழுது, விழிப்புணர் வுடன் கூடிய எண்ண ஓட்டத்தைச் செயலை நோக்கியும், மற்றும் அரைஉணர்வுத்தளம் சார்ந்த எண்ண ஓட்டத்தை இறைவனை நோக்கியும் திருப்பவேண்டும். நீ ஓய்வாக இருக்கும்பொழுது இரண்டையுமே கடவுளின் பக்கமாகத் திருப்ப வேண்டும்.

★ ★ ★

நம்முடைய மனம்-உடல் சார்ந்த ஆற்றல்கள் கட்டுப் படுத்தப்பட்டு சேமிக்கப்பட வேண்டும். இப்பொழுது ஆற்ற லானது வீணாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆற்றலை வீணடிக்கக் கூடாது. உடல் மற்றும் மனத்தின் ஆற்றலானது அதிகப்படுத்தப்படலாம்.

புதிய வழிகள் ஏற்படுத்தப்படலாம். அது ஆற்றலின் பெருக்கை அதிகப்படுத்தும். பயனற்ற செயல், பயனற்ற பேச்சு, வம்பு பேசுதல் மற்றும் பயனற்ற சிந்தனை போன் றவை, களைச்செடிகளைப் போன்றவையாகும். அவற்றை அப்புறப்படுத்தி விட வேண்டும். அதன் பிறகு பயனுடைய செயலைச் செய்வதற்கு நேரம் இருக்கும்.

ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளும் பொழுது உடல் சார்ந்த அமைதியற்ற தன்மை இருத்தல் கூடாது. மனம் சார்ந்த அமைதியற்ற தன்மை இருத்தல் கூடாது. பயிற்சியினால் ஒருமுனைப்பாடு பெருக்கமடைந்துள்ளது. ஒருமுனைப் பாட்டினால் ஆற்றலின் வழிகள் சிக்கலற்று விளங்குகின்றன.

நாம் இயலுலக அண்டத்தின் ஆற்றலுடன் தொடர்பு கொள்ள வேண்டும். இங்கு வேண்டியது என்ன என்றால் எப்படி இன்னும் நல்லதான மற்றும் தடைகள் குறைவான வழிகளாக ஆகலாம் என்பதுதான் ஆகும். அதாவது இயலுலக அண்டத்தின் ஆற்றலை எப்படி அதிகமாகப் பெறுவது என்ப தாகும். கீழான மனம் சார்ந்த ஆற்றல் மற்றும் மேம்பட்ட மனம் சார்ந்த ஆற்றல் அல்லது ஆன்மீக ஆற்றல் என்பது உள்ளது. பொதுவான நம்முடைய சிந்தனையானது கீழான

மனம் சார்ந்த ஆற்றலின் உதவியுடன் நடைபெறுகிறது. பயிற்சிகள் இல்லாமல் இருப்பதால் நம்முடைய மேம்பட்ட செயல்திறங்கள் பலவீனமடைந்துள்ளன. எனவே ஆன்மீக ஆற்றலை நம்மால் பெற இயலுவதில்லை.

★ ★ ★

காலை நேரமே வழிபாட்டிற்கும், ஆன்மீகப் பயிற்சி களுக்கும் தியானத்திற்கும் உகந்த சிறப்பான நேரமாகும். மனத்தை எதிர்மறையாகக் கட்டுப்படுத்த வேண்டாம். நல்ல எண்ணங்களைக் கொண்டு, அதன் மூலம் நேரடியாகச் செய்ய வேண்டும். எப்பொழுதுமே முதன்மையான எண்ணத்தைக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.

உடனடியான குறிக்கோள் என்ன? பரம்பொருளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது ஆகும். நாம் எதை உண்மை என்று அழைக்கிறோமோ, அது நம் முழுமையான இருப்பையும் ஈர்க்கிறது. எனவே, மெய்ப்பொருள் என்றால் என்ன என்பதைக் குறித்த தெளிவான கருத்தைக் கொண் டிருப்பது நமக்கு மிகவும் அவசியமானதாகிறது. குறிக் கோளும், வழியும் உண்மையானதாக இருத்தல் வேண்டும். நம்முடைய கற்பனைகளும்கூட மெய்ப் பொருளைக் குறித்ததாகவே இருக்க வேண்டும்.

அரை உணர்வுத்தளம் சார்ந்த சிந்தனையைக் கட்டுப் படுத்திக் குறைக்க வேண்டும். நமக்கு எண்ணங்களைக் குறித்த விதிமுறைகள் தெரிய வேண்டும். மற்றும் விழிப் புணர்வுடன் எண்ண வேண்டும் மற்றும் செயல்பட வேண்டும்.

பகுத்தறிவு அவசியமானதாகும். அதன்மூலம் நாம் அதனைக் கடந்து அதன் எல்லைக்கு அப்பால் உள்ள மெய்ம்மையிடம் செல்ல வேண்டும்.

பயிற்சியின்மூலம் ஒருமுனைப்பாட்டை அடையலாம். தியானத்திற்குப் பிறகு, அந்த மனநிலையின் ஒரு சிறிதள

வாவது தொடரப்பட வேண்டும். அகக் கோயிலில் எப்பொழுதுமே ஒரு சிறிய ஒளியானது ஒளிர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

★ ★ ★

முதலில் கடவுளை ஏசுநாதர், புத்தர் போன்றவர்களிடம் காண வேண்டும். அதன் பிறகு கடவுளைப் புனித மகான்களிடம் காண வேண்டும். புனிதத்தன்மை அற்றவர்களிடமும் கடவுளைக் கண்டு வணங்க வேண்டும். ஆனால் எப்பொழுதும் தொலைவிலிருந்தே செய்ய வேண்டும். நாம் மிகவும் பலவீனமானவர்களாக இருப்பதால், நாம் அவர்களுடன் பழகினால் அதனால் பாதிக்கப்படக்கூடும். நாம் எச்சரிக்கையாக இருப்போம். நாம் ஒரு இசைவுப் பொருத்தமான உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். மற்றும் நம்முடைய சொந்த வலிமையை உணர வேண்டும்.

எப்பொழுதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதனால் நீ கேடுகளால் பாதிக்கப்படாமல் இருப்பாய். நாம் தற்காலிகமாக ஓடிவிடலாம். அது பலவீனமா? நாம் மிக மோசமான சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக உறுதியான சில கூட்டுத் தொகுதிகளை வடிவமைத்துக் கொள்ளலாம்.

மனமானது ஒரு காற்றழுத்தமானியைப் (Barometer) போன்றதாகும். நீ கீழே இழுக்கப்படுவதாக உணர்ந்தால் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையானது பல நேரங்களில் ஒரு சமரச இணக்கம் நிறைந்ததாக உள்ளது. ஆனால், நம்மால் எதுவும் செய்ய இயலாது. நமக்கு நம்மீது முழுமையான கட்டுப்பாடு இருப்பின், நாம் சிக்கல்களைத் தவிர்க்கலாம். பல நேரங்களில், நாம் ஒரு பெரிய தீமையை வெல்வதற்கு, ஒரு குறைந்த அளவான தீமையைப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொன்றையும் அதன் சொந்த தகுதியாலேயே மதிப்பிட வேண்டும்.

ஆன்மீகப் பயிற்சி என்பது மனத்தில் சறுக்கிச் செல் வதைப் போன்றதாகும். கர்வம் விழுந்துவிடும். நீ மிகவும் சிறந்தவன் என்றோ, அல்லது மிகவும் பாதுகாப்புடன் இருக்கிறாய் என்றோ நினைக்கக் கூடாது.

உலகியலுடன் தொடர்பு கொண்டனவற்றுடன் செயல் தொடர்பு கொள்ளும் பொழுது, உன்னுடைய உள்சார்ந்த விழிப் புடன் கூடிய எச்சரிக்கையை இழந்துவிடக் கூடாது. மனிதர் களிடம் தொடர்பு கொள்ளும் ஒரு வழி உள்ளது. தீய மனம் கொண்ட தூய்மையற்ற மனிதர்களுடன் தொடர்பு கொள்ளும் பொழுது எப்பொழுதுமே அகம்சார்ந்த ஒரு தடைவேலி என்னும் பாதுகாப்பு கவசத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.

பரம்பொருளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள் வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மற்றும் பரம் பொருள் மூலம் அனைவரிடமும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். புள்ளி வட்டத்துடன் உள்ள தன் ஒற்றுமையை அடையட்டும். மற்றும் அதற்குப் பிறகே மற்ற புள்ளிகளுடன் ஒற்றுமையை அடையட்டும். வட்டமானது ஒவ்வொரு புள்ளியிலும் இருப்பதைப் போன்று பரம்பொருள் எல்லோரிடமும் நிலைபேறான தன்மையுடன் இருக்கிறார். முழுமையிலிருந்து எல்லாப் பகுதிகளுடனும் தொடர்பு கொள்கிறார்.

★ ★ ★

பெரும்பாலான மனிதர்கள், கடவுளைக் குறித்த அவர் களுடைய கடமையைப் புறக்கணிக்கின்றனர். பெரும் பாலான மனிதர்கள் பயனுள்ள நல்ல செடிகளுக்குப் பதிலாக களைச் செடிகளையே பயிரிடுகின்றனர். நாம் ஆன்மீகம் சார்ந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் எனின். நம்முடைய வழிமுறைகளை முற்றிலுமாக மாற்றிக் கொள்ள வேண்டும். புனிதமான, உன்னதமான எண்ணங்களை மேற் கொண்டு, எப்பொழுதும் பரம்பொருளுடன் ஒரே சுருதியில் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

நாம் ஆன்மீக மனநிலையை நமக்கு இயல்பானதாக ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். மனத்தின் ஒரு பகுதியாவது எப்பொழுதும் அந்த உயர்ந்த மனநிலையுடன் இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒரு மையமான எண்ணம் இருக்க வேண்டும். அது கடவுளுடன் உனக்கு உள்ள தொடர்பைக் குறித்த எண்ணமாக இருக்கலாம். அல்லது கடவுளிடம் ஆன்மாவிற்கு உள்ள ஏக்கமாக இருக்கலாம். அல்லது நீ நடப்பதைப் பார்த்துக்கொண்டுள்ள ஆன்மா என்ற எண்ணமாக இருக்கக் கூடும் என்னும் எண்ணமாகவும் இருக்க லாம். அல்லது எப்பொழுதுமே ஒரு புனிதமான பெயரைத் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்க வேண்டும். அந்த ஒலியானது அதற்கு ஏற்புடைய புனித எண்ணத்தை அழைக்கும்.

★ ★ ★

கடவுளுக்கும் நமக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற் படுத்துவதுதான் நம்முடைய பணியாகும். இதற்கு உள்முக நோக்கு தேவையானதாகும். ஆன்மீகப் பயிற்சியானது அகக் காட்சியை இதழ் விரியச் செய்கிறது. நாம் நம்முடைய விழிப் புணர்வு மையத்தை அறிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மேம்பட்ட விழிப்புணர்வு மையமும், கடவுளுடைய ஒரு தன்மையுடன் நம்மைத் தொடர்பு கொள்ளச் செய்கிறது. மற்றும் இது இறுதியாக தனிப்பட்ட ஆன்மாவும், வான் பேருயிரும் இரண்டறக் கலப்பதற்கு வழி காட்டுகிறது. கடவுளை உணர்ந்துள்ள ஒரு மனிதன் கடவுளின் மிக உயர்ந்த வெளிப்பாடு ஆவான்.

நாம் அடிப்படையில், நடைமுறை சார்ந்த சமயத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருக்க வேண்டும். சமயமானது, கோட்பாடுகளை மட்டுமே சார்ந்து மனிதனின் ஆன்மீகம் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு அளிக்காமல் இருந்தால் தன் னுடைய உயிரை இழந்து விடுகிறது. நமக்கு அது ஆன்மீக விஞ்ஞானத்தை, ஆன்மீக உலகத்தைச் சார்ந்த விதிமுறை களைப் போதிக்க வேண்டும். பிண்டத்தின் இயல்பை

உணர்ந்து கொண்டால், அதன்பிறகு நீ அண்டத்தின் (பேரளவினதாகிய முழுமை) இயல்பைப் பற்றி உணர்ந்து கொள்வாய். நாம் நம்முள்ளேயே கடவுளைக் கண்டு கொள்கிறோம்.

பலவற்றில், ஒருமையை, முழுமையைக் காண்பதுதான் மையக் கருத்து ஆகும். நீர்க்குமிழிகளில் சமுத்திரத்தை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். நீர்க்குமிழிக்கு அதனுடைய நீர்க்குமிழி இயல்பானது தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் உடைபட்டு, சமுத்திரத்துடன் கலக்கிறது.

சில நீர்க்குமிழிகள், நேரடியாக சமுத்திரத்துடன் ஒரே சுருதியில் இருப்பதற்கு விரும்புகின்றன. மலை உயரத்திற்கு அலைகள் எழும்பினாலும் அவை அதைப் பொருட்படுத்துவது இல்லை. அதைப் போன்றே சிலர் பரம்பொருளுடன் இரண்டறக் கலக்க விரும்புகின்றனர். மற்றும் ஏசுநாதர், புத்தர் போன்ற மிகச் சிறந்த ஆச்சாரியர்களையும் வணங்க வேண்டும் என்று அக்கறை கொள்வதில்லை. ஆனால் பெரும்பான்மையான மனிதர்களுக்கு இத்தகைய முதன்மையானவர்களின் போதனைகள் பரம்பொருளை அடைவதற்குத் தேவைப் படுகின்றன.

★ ★ ★

ஆன்மீகப் பயிற்சிகளைத் தொடங்குவதற்கு முன்பு முக்கியமாக மேற்கொள்ளத் தக்கவை:— கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கை, உணவுமுறை, உடல்பயிற்சி இலயத்துடன் கூடிய மூச்சுப் பயிற்சி என்பனவாகும். உணவைப் பொறுத்தவரையில், உன்னால் செரிக்கக்கூடியவற்றை மட்டும் உண்ண வேண்டும். ஒவ்வொரு சாதகனும் அவனுக்கு எது நன்மையைச் செய்யும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். உடல்பயிற்சி மிகவும் அவசியமானது ஆகும். உன் வயிறு மற்றும் மூளையைக் குறித்து அக்கறை கொள்ள வேண்டும். மனம் மற்றும் உடல் சார்ந்த நெறிமுறைகள் மிகவும் முக்கியமானவை ஆகும். படிநிலைகளை

விழிப்புணர்வுடன் அறிவுபூர்வமாகப் பின்பற்ற வேண்டும். இயந்திர கதியில் பின்பற்றக் கூடாது. சரியான மனநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நீ எப்படி மூச்சு விடுகிறாய் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இது, இதிலேயே சிறிதளவு ஒருமுனைப்பாடாக விளங்குகிறது. மூச்சு கட்டுப் படுத்தப்பட்டால் மனது அதனிடமே திரும்பி விடுகிறது.

★ ★ ★

நாம் நம்முள்ளேயே ஒரு நிலைத்த விழிப்புஉணர்வு மையத்தைக் கண்டு கொள்ள வேண்டும். இது ஒரு முக்கிய மான விஷயம் ஆகும். கிழக்கில் சில குறியீடுகள் உள்ளன. அவற்றை மேற்கு நாட்டைச் சேர்ந்தவர்களால் பெரும்பாலும் புரிந்துகொள்வதற்கு இயல்வது இல்லை. ஏழு விழிப்புணர்வு மையங்கள் உள்ளன. உனக்குப் பசி எடுத்தால் நீ உன் வயிற்றை உணர்கிறாய். உனக்கு உணர்ச்சிகள் இருக்கும் பொழுது நீ இதயத்தை உணர்கிறாய். எப்பொழுதும் உன் இதயத்தின் கீழே போகாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அறிவு மையமான நெற்றி வரையிலும் உயர் வதற்கு முயற்சி செய்ய வேண்டும். உணர்ச்சி வசப்படு பவர்கள் அவர்களுடைய விழிப்புணர்வு மையமாக தலை யைக் கொள்வது நல்லதாகும். மிகுந்த அறிவாற்றல் உடைய வர்கள் இதயத்தை விழிப்புணர்வு மையமாகக் கொள்ள வேண்டும். இந்த மையங்கள் அனைத்தும் உறுப்பியல்பைச் சார்ந்தது என்பதை விட, உள்ளம் சார்ந்ததாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

முதுகுத்தண்டை அதனுடைய நரம்பு மையத்துடன் ஒருப்படிக்கட்டைப் போலக் கற்பனை செய்து கொள்ள வேண்டும். பல்வேறு வகையான எண்ண மட்டங்கள் பல் வேறு குடியிருப்புக்கள் (Flats) ஆகும். நரம்பு ஓட்டமானது மேலும் கீழுமாகப் பாய்ந்து கொண்டுள்ளது. முதலில் உன் விழிப்புணர்வு மையத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அங்கு வரையற்ற அம்பரத்தை (Space) உணர

வேண்டும். உன்னுடைய விழிப்புணர்வின் முனையானது அதனுடைய மையத்தில் உள்ளது. சிலசமயங்களில் கீழ் நோக்கிய இழுப்பு இருந்தால், நீ கீழே உள்ள மையங்களுக்குச் செல்வாய். அதைக் கட்டுப்படுத்தும் யுக்திகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். கட்டுப்படுத்தும் முனையும் நம்மிடம் உள்ளது. ஈர்ப்பு மையமும் நம்மிடம் உள்ளது.

பரம்பொருளை ஒளியின் வடிவத்தில் கற்பனை செய்ய வேண்டும். ஆனால் பருப்பொருள் சார்ந்த ஒளியின் அர்த்தத் தில் இல்லை. விழிப்புணர்வு மையத்தை சுடரும் ஒளியுடன் திகழ்வதாக உணர வேண்டும். ஒருவர் குறியீடுகளின் உதவி யையும் எடுத்துக் கொள்ளலாம். சில கற்பனைகள் ஓரளவிற்கு அனுமதிக்கப்பட வேண்டும். குறியீடாக அமைந்த உருவ அமைப்புக்கள் நம்மை உயரச் செய்து உண்மையின் அருகில் அழைத்துச் செல்கின்றன. ஒளிர்ந்து கொண்டிருக்கும் தெய்வ வடிவத்தை, உன் விழிப்புணர்வு மையத்தில் அமர்ந்து இருப் பதைப்போல கற்பனை செய்ய வேண்டும். அல்லது தெய் வீகச் சூழ்நிலையில் பறந்து கொண்டிருக்கும் ஒரு பறவையாக உன்னைக் கற்பனை செய்து கொள்ளலாம். இது உனக்கு எல்லையற்ற பரப்பைக் குறித்த உணர்வை ஏற்படுத்தும். அல்லது சமுத்திரத்தையும் மற்றும் நீர்க்குமிழிகளையும் மற்றும் அவை இரண்டறக் கலப்பதையும் கற்பனை செய்ய லாம். நீர்க்குமிழிக்குச் சமுத்திரத்துடன் அதனுடைய ஒற்று மையை உணர்வதுதான் பணியாகும். நீர்க்குமிழி குத்தப்பட லாம். அதன்பிறகு அது சமுத்திரத்துடன் ஒன்றாகிவிடுகிறது.

ஜபம் அல்லது ஏதாவது புனித மந்திரத்தை இடை விடாமல் கூறி, அதனுடைய பொருளில் இலயித்து இருப்பது மிகவும் பயனளிக்கத்தக்க ஆன்மீகப் பயிற்சிகளில் ஒன்றாக விளங்குகிறது. அது தியானமாக விரிவடைகிறது. அதாவது எத்தகைய இடையீடுமின்றி அதே எண்ண ஓட்டத்தை நிலைநிறுத்திக் கொள்வது ஆகும். இது தெய்வத்துடன் கலப்பதில் மற்றும் இறுதியில் ஞானத்திலும் மற்றும் ஆன்மாவும், கடவுளும் உண்மையாக இணைவதிலும் முடிகிறது.

சாதகன் உடல், மற்றும் மனத்தில் இசைவுடைமை யையும் இலயத்தையும் அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பலவகைப்பட்ட மனிதர்களுக்குப் பல வகை யான விதிமுறைகள் பொருந்துகின்றன. ஆனால் அனைவரும் உடல் மற்றும் மனத்திற்கிடையில் இசைவுடைமையை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

★ ★ ★

நாம் கடவுளுடன் ஒரு உறுதியான தொடர்பை ஏற் படுத்திக் கொள்ள வேண்டும். அவரைத் தந்தையாக கடவு ளாக, தாயாக குழந்தையாக அல்லது அன்பிற்கு உரியவராக காணலாம். மற்றும் நம் ஆன்மாக்களின் ஆன்மாவாகவும் காணலாம். நம்முடைய உண்மையான ஆன்மாவானது, உடல் மற்றும் மனத்திலிருந்து வேறுபட்ட ஆன்மீக உளதாம் தன்மை உடையது ஆகும். நாம் எப்பொழுதும் ஆன்மாவை ஒட்டியே நினைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

தியானத்திற்கு முன்பு, உன்னைக் கடவுளின் ஒரு பகுதி என்றோ அல்லது கடவுளின் குழந்தை என்றோ எண்ணு வதற்கு முயற்சி செய்ய வேண்டும். 'நான் ஆன்மீகம் சார்ந்த உளதாம் தன்மை உடையவன்' என்று கருத வேண்டும். உன்னுடைய விருப்பத்தைக் கடவுளுடைய விருப்பத்துடன் பொருத்த வேண்டும். நாம் நம்முடைய இன்றியமையாத தெய்வீகத் தன்மையில் பால்வேறுபாட்டுத் தன்மையைக் கடந்தவர்கள் ஆவோம். நாம் உலகம் சார்ந்த எத்தகைய தொடர்பும் அற்றவர்கள். அவை எப்பொழுதும் உடலுடன் தொடர்பு உடையவை ஆகும். நாம் கடவுளைச் சார்ந்தவர் களே ஆவோம். கடவுள் ஒரு வட்டம் மற்றும் நாம் அனை வரும் புள்ளிகளைப் போன்றவர்கள் ஆவோம்.

கடவுள் மீது உள்ள நம்முடைய அன்பானது எதிர்மறையானதாக இருத்தல் கூடாது. நேரானதாக இருக்க வேண்டும். மற்றும் படைக்கும் தன்மை உடையதாக இருக்க வேண்டும். நாம் கடவுளை வழிபடுவோம். கடவுளுக்குத் தொண்டாற்றுவோம். தெய்வீக வடிவங்களில் மட்டுமின்றி,

கடவுளை வெளிப்படுத்தும் எல்லா வடிவங்களையும் வழிபடுவோம்.

நாம் நம்மைக் கடவுளின் குழந்தைகள் என்று கருதும் பொழுது அது முதலில் ஒரு கற்பனையாக இருப்பினும், பிறகு அது உண்மையான அனுபவமாகிறது. நம்முடைய ஆன்மீக வாழ்வின் தொடக்கத்தில், நாம் ஒரு முழுமையின் பகுதிகள் என்னும் கருத்தானது ஒரு கற்பனையாகவே உள்ளது. அது ஆன்மீகப் பயிற்சி மற்றும் அனுபவத்தால் உணரப்பட வேண்டும்.

நாம் ஆன்மீக வாழ்க்கையைக் குறித்த கூட்டிணைப்பு முறையைச் சார்ந்த கருத்தைக் கொள்ள வேண்டும். ஆன்மாவை உணர்வதற்குப் பல வழிகள் உள்ளன. தியானம் ஒரு வழியாகும். பிரார்த்தனை மற்றொரு வழியாகும். தன்னலம் அற்ற தொண்டு மற்றும் ஒரு வழியாகும். அதைப் போன்றே படைக்கும் கடவுள் ஒரு தன்மை உடையவர். காக்கும் மற்றும் அழிக்கும் கடவுள் வேறு தன்மை உடைய வராவார்கள்.

சிலர், ஒரு பொருண்மைவாதத்தை நோக்கி, இயல்பான சார்புடையவர்களாகப் பிறந்துள்ளனர். அவர்கள் நீர்க் குமிழிகளாக இருப்பதற்கு விரும்புவதில்லை. ஆனால் சமுத்திரத்துடன் ஒன்றாகக் கலந்து விட விரும்புகின்றனர். சாதகன் இந்தத் தன்மைகளில் ஏதாவது ஒன்றை உண்மையாக, உள்ளார்ந்து அணுகினால் அவன் கடவுளுடைய அருளால், கடவுளின் எல்லாத் தன்மைகளினாலும் கடவுளை அடை கிறான். கடவுள் நம்முடன் நேரடியாகப் பேசட்டும். நேரடி யான ஞானமானது கோட்பாட்டைச் சார்ந்த ஞானத்தை விடச் சிறந்தது ஆகும்.

★ ★ ★

நம்முடைய முயற்சியால் தெய்வீக அருள் அதை வெளிப்படுத்திக் கொள்கிறது. முயற்சியால் நாம் கடவுளை அடைகிறோம். நாம் கடவுளை அடையும்பொழுது நமக்கு

மிக உயர்ந்த ஞானமும், அமைதியும் கிடைக்கிறது. 'என்னிடம் வா. நான் உனக்கு ஒளியையும், பேரின்பத்தையும் அளிக்கிறேன்' என்று கடவுள் அழைக்கிறார். நாம் இந்த தெய்வீக அழைப்பிற்குப் பதில் அளிப்போம்.

பக்தர்களில் இரு வகையினர் உள்ளனர்.

1. குரங்குக் குட்டி வகை.
2. பூனைக் குட்டி வகை.

முதல் வகையானது தாயைப் பற்றிக் கொள்கிறது. இரண்டாம் வகையானது எல்லாவற்றையும் கடவுளிடம் (தாயிடம்) விட்டு விடுகிறது. பக்தனுக்குத் தேவையான அனைத்தையும் அது செய்கிறது. சிலர் முயற்சி செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றனர். சிலர் தன்னை அர்ப்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றனர். கடவுளின் முன்பு மண்டியிட விரும்பாத வேறு சிலரும் உள்ளனர். அவர்கள் எல்லா வரையறைகளையும் கடந்து, கடவுளுடன் ஒன்றுபட விரும்புகின்றனர்.

பக்தன், 'நான் உன்னுடையவன்' என்று நினைக்கிறான். தத்துவ ஞானி 'நான் நீயே' என்று நினைக்கிறான். இருவருமே கடவுளுக்காகத் தீவிரமாக ஏங்குகின்றனர். பரம்பொருளுக்காக உள்ளார்ந்த வேட்கையுடன் உள்ளனர். இருவகையைச் சார்ந்தவர்களையும் ஒப்பிட்டுக் காணலாம். முதல் வகையில் பக்தன், 'நான் ஒன்றுமற்றவன். நீயே அனைத்துமாக உள்ளாய்' என்று கூறுகிறான். தத்துவ ஞானியானவன், 'நான் உன்னிலிருந்து வேறுபட்டவன் இல்லை' என்று கூறுகிறான். அவன் தன்னுடைய தனிப்பட்ட இருப்பைத்தான் மறுக்கிறான். மற்றும் தன்னைப் பரம்பொருளுடன் ஒன்று பட்டவனாகக் கருதுகிறான். இவனிடம் அகங்காரமானது மறைந்துவிடுகிறது. கீழான மட்டங்களில் இந்த இரு வகையைச் சார்ந்தவர்களும் ஓரளவிற்குப் பரவலாக வேறுபட்டாலும் உயர்ந்த மட்டத்தில் வேறுபாடு மிகச் சிறிதளவே உள்ளது.

நாம் சிறந்த முறையில் முயற்சி செய்வோம். மற்றதைக் கடவுள் செய்வார். நாம் நம்முடைய தவறுகளின் மூலம்கூட

பயனடைவோம். தவறுகள் நம்மை மதிநுட்பம் உடையவர்களாகச் செய்தால், அவை போற்றுவதற்கு உரியவை ஆகட்டும். மனமார்ந்த நிலையானது நல்ல பயனை ஏற்படுத்தும். கடவுள் நம்முடைய மனமார்ந்த தன்மையைக் காண்கிறார்.

★ ★ ★

ஆன்மீக விஷயங்களில், உலகளாவிய 'தேவையும் கிடைப்பும்' (demand and Supply) என்னும் விதிமுறையும் உள்ளது. கடவுள் நமக்குத் தேவையானவற்றை அளிக்கிறார். நாம் விரும்புவனவற்றை அளிப்பதில்லை. நாம் கடவுளைக் குறித்து அக்கறை கொள்ளாமல் இருப்பினும், கடவுள் நம்மைக் கைவிடுவது இல்லை. அவர் நம்மிடம் அவரை வெளிப்படுத்திக் கொள்ளும் ஒரு வாய்ப்பிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். அதுதான் கடவுளின் அருள் ஆகும்.

நீ உண்மையுடன் இருப்பாய். மற்றும் உன் முயற்சியின் பயன்கள் அனைத்தையும் கடவுளிடம் விட்டுவிட வேண்டும். ஒரு எழுச்சியுற்ற கணத்தில் நாம் கடவுளுடன் தொடர்பு கொண்டால் எல்லாமே கண்டுகொள்ளப்படுகிறது. நாம் கடவுளைத் தியானம், ஒழுக்க நெறிமுறைப் பண்பாடு, மற்றும் தன்னலமற்ற தொண்டு போன்றவற்றால் உணர்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதை ஒரு கடமையின் முறையில் செய்ய வேண்டும். எப்பொழுதும் சில புனிதமான நூல்களைப் படித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்விதம் படிப்பதை நாள்தோறும் நம்முடைய ஆன்மீகப் பயிற்சியின் பகுதியாகக் காண வேண்டும். அவை இல்லாமல் ஆன்மீகப் பயிற்சியானது நிறைவடையாது. வாழ்க்கையின் கடமைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அவற்றைத் தட்டிக் கழிக்கக் கூடாது. அவை நம் ஆன்மீகப் பயிற்சியின் பகுதியாக அமைகின்றன. அவை ஒரு வகையான ஆன்மீக ஒழுங்குமுறையாகவும் விளங்குகின்றன. செயலின் ஒவ்வொரு உருவமும் தொண்டு முறையாகச் செய்யப்பட வேண்டும். அப்பொழுது

செயல்பாடு வழிபாடு ஆகிறது. 'ஓ கடவுளே, நான் எதைச் செய்தாலும், அது உனக்கு என்னுடைய வழிபாடாக உள்ளது' என்று கூறுவாய்.

★ ★ ★

உன்னுடைய ஆன்மீகப் பயிற்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்குவதற்கு முயற்சி செய்வாய். பயனற்ற பேச்சுக்களுக்கும் பயனற்ற சிந்தனை மற்றும் மனத்தின் அமைதியற்ற தன்மைக்கும் குறைந்த நேரத்தை ஒதுக்குவாய். அதன்பிறகு உன்னால் உன் தியானத்தைச் சிறப்பாக மிகப் பெரும் தீவிரத்துடன் செய்ய இயலும். மற்றும் நீ உன் செயல்களையும் சமநிலையுடன் செய்வாய்.

சிலர் வேலையில் அதிக அளவில் கவனம் செலுத்து கின்றனர். சிலர் ஆன்மீகப் பயிற்சிக்குத் தங்களை முழுமை யாக அர்ப்பித்துக் கொள்கின்றனர். ஆனால் வெற்றியை அடைவது இல்லை. செயல்பாடும் வழிபாடும் கைகோத்துக் கொண்டு இருக்க வேண்டும். கடமையைத் தட்டிக் கழிக்கக் கூடாது. அக மற்றும் புற வாழ்வானது சம நிலையுடன் இருக்க வேண்டும். உன்னுடைய செயலை வழிபாடாகப் படி மாற்றம் செய்ய வேண்டும். கடவுளுக்கு எல்லாச் செயல் களையும் அர்ப்பிப்பாய்.

வாழ்க்கையில் தக்கவாறு பொருத்தமாக இருப்பது என்பது அவசியமானதாகும். நாம் அனைவரும் ஆன்மீக இயல்புடையவர்கள் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். உடலில் உள்ள ஆன்மீக உளதாம் தன்மை கொண்டவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதன்மையான கருத்து என்ன எனின், உடல் ஒரு கருவியாகும். ஒரு கோயிலாகும். புனித இடமாகும். நாம் நம்முடைய உடலை இன்னும் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அது, கடவுள் வாழும் வீடு என்று காணப்பட வேண்டும். ஒழுக்க நெறிமுறைகளில் முன்னேறுவதற்கு இரு வழிகள் உள்ளன.

1. ஒழுக்க நெறிசார்ந்த விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

2. மனப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு விதிகளைப் பின்பற்றுவதற்குச் சுலபமாக இருக்கும். உன்னுடைய கடமையை இன்னும் மேம்பட்ட மனத்தெளிவுடன் செய்வாய்.

நாம் இந்த உலகத்திலிருந்து தற்காலிகமாக ஒதுங்கிக் கொள்ளலாம். இதுவும் ஓரளவிற்குத் தன்னலத்துடன் கூடியதாக இருப்பினும், பிறகு மீண்டும் வந்து மற்றவர்களை ஒரு உயர்ந்த மனநிலையுடன் சந்திக்கலாம். நீ மற்றவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று எதையாவது சேமித்துக் கொள்ளவில்லை எனின் உன்னால் இயலாது.

★ ★ ★

ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், தியானத்துடன் தொடர்புடைய, திருமறை நூலைச் சார்ந்த பகுதியைப் படிப்பது தேவையானதாகும். இது மற்ற பயிற்சிகளைப் போன்றே முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அதைப் போன்றே ஆன்மீகப் பயிற்சியையும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். ஒரு பொழுதும் அதை ஒதுக்கக் கூடாது. இது நம்முடைய மனஉறுதியின் வளர்ச்சியையும் குறிக்கிறது. விழிப்புணர்வுடன், நம் மனத்தின் செயல்பாங்குகளைக் கட்டுப்படுத்துவதுதான் இவ்வனைத்தின் நோக்கமாக உள்ளது.

விழிப்புணர்வுடன் கூடிய வாழ்க்கையானது நலம் மிகுந்த வாழ்க்கையாகும். நம்மில் பலரும் பாதி விழிப்புணர்வுடனும் பாதி கனவு கண்டுகொண்டும் இருக்கிறோம். தன்னுணர்வற்ற மூளையின் இயக்கமானது தெளிவான, வரையறுக்கப்பட்ட சிந்தனையாக ஆக வேண்டும். அப்பொழுதுதான், வாழ்க்கை வாழ்வதற்குத் தகுதியுடையது ஆகும். உன் உடல் சார்ந்த உணர்வைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

மனம் சார்ந்த புத்துணர்வுடன் இருக்க வேண்டும். எப்பொழுதும் இளைஞனின் மனத்தைப் பெற்றிருக்க வேண்டும். மீண்டும் ஒரு குழந்தையாக வேண்டும். இரண்டாம் முறையாகப் பிறக்க வேண்டும். மனம் சார்ந்த புத்துணர்வுடன் இருப்பது தவிர்க்க இயலாததாகும். அதை விழிப்புணர்வுடன் வளர்த்துக் கொள்ள வேண்டும். கடவுளுடன் ஒரே சுருதியில் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். வாழ்க்கை என்னும் நீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. கால்வாய்களைத் திறந்து வையுங்கள். ஜன்னல்களைத் திறந்து வையுங்கள். கெட்ட காற்று வெளியேறட்டும்! எப்பொழுதும் உள்ளுக்குள்ளே புத்துணர்ச்சி இருக்கட்டும்.

★ ★ ★

வேதாந்தம் எல்லா ஆன்மாக்களின் உள்ளார்ந்த தெய்வத் தன்மையை நம்புகிறது. அது மனிதர்களின் தர அளவுப் பாட்டை நம்புவது இல்லை. ஒவ்வொரு ஆன்மாவிற்கும் அதனுடைய உள்ளார்ந்த இயல்பான தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதற்கு சுதந்திரம் இருக்க வேண்டும். உன்னுடைய சொந்த கருத்துக்களைக் காத்துப் பேண வேண்டும். மற்றும் மற்ற சமயங்களின் கருத்துக்களை ஒன்று படுத்தி இணைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்துக்களாகிய நாம் இதயம் மாறுபடுவதையும் மனத்தூய்மை அடைவதையும் நம்புகிறோம். ஆனால் கடவுளுடன் இரண்டறக் கலக்கும் வரையிலும் நாம் ஒரு பொழுதும் நிறைவு அடைவதில்லை. அதுதான் நம்முடைய திருமுறைக் கோட்பாடு ஆகும். நீ அதை அப்படியும் அழைக்கலாம். நம்முடைய திருமுறைக் கோட்பாடு கடவுளின் திருமுறைக் கோட்பாடு ஆகும்.

ஆன்மாவிற்கும், கடவுளுக்கும் இடையிலுள்ள தொடர்பே உண்மையான சமயம் ஆகும். சமயம் மற்றும் தத்துவம் என்னும் இரண்டுமே ஆன்மீக வாழ்க்கைக்குத் தேவையானது ஆகும். சமயமானது ஊகக் கோட்டைகளை மேல்நிலைப் படுத்துகிறது. தத்துவமானது சமயம் சார்ந்த,

மனப்பாங்கை விரிவடையச் செய்கிறது. கோட்பாடும், செயல்முறையும் கைகோத்துக் கொண்டிருக்க வேண்டும். உண்மையான அமைதியை அடைவதற்காக நாம் சமயம் மற்றும் தத்துவம், நம்பிக்கை மற்றும் பகுத்தறிவு, நம் மனப் பான்மை மற்றும் தொலை நோக்கின் தீவிரத்தன்மை மற்றும் பரந்துபட்ட தன்மை என்னும் இவற்றை ஒருங்கிணைக்க வேண்டும். நாம் சமுத்திரத்தைப்போல ஆழம் உடையவராக வும் ஆகாயத்தைப்போல் உயர்ந்தும் இருக்க வேண்டும். கண்டிப்புடன் கூடிய ஒழுக்க நெறிவிதிமுறைகள், கடமை களைச் சோர்வில்லாமல் செய்வது மற்றும் ஆர்வம் மிகுந்த ஆன்மீகப் பண்பாடு என்பவைதான் நம்முள்ளே குடிகொண் டுள்ள ஒப்புயர்வற்ற பரம்பொருளை, கடவுளை உணர்வதற் கான வழிமுறைகள் ஆகும். உன்னுடைய சமயக் கொள்கையை உன்னிடமே வைத்துக்கொள்ள வேண்டும்! மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டக்கூடாது! உன் சமயக் கொள்கையை விஞ்சி மேம்பட வேண்டும்! கடவுள் கிறிஸ்தவருமல்லர், ஹிந்துவுமல்லர் அல்லது புத்த சமயத்தைப் பின்பற்றுபவரும் அல்லர்.

ஸ்ரீராமகிருஷ்ணர், 'நீ உன்னை அறிந்து கொள், பிறகு கடவுளைத் தெரிந்து கொள்வாய்' என்று கூறியுள்ளார். அனை வரும் அதே நீரைத்தான் இழுக்கின்றனர், வாழ்க்கை என்னும் நீரை. கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார். எல்லா இடங்களிலும் கடவுளைக் காண வேண்டும். கடவுள் பல் வேறு வடிவங்களுடன் காணப்படுகிறார். இவ்வனைத்தும் அவர் ஆவார். இதற்கு மேலும் அவர் ஆவார். இறுதியில் அவர் தன்னை இருப்பது போன்றே வெளிப்படுத்து கிறார். கடவுளின் எந்தத் தன்மையை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்வாய். எந்தத் தன்மையை வேண்டுமாயினும் பின்பற்றுவாய். ஆனால் ஒவ்வொரு தெய்வீக வடிவமும் பொதுவான புள்ளி அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் பொதுவான புள்ளிகள் அற்ற தன்மையை விஞ்சி மேம்பட வேண்டும். எல்லா இடங்களிலும் ஊடுருவி நிறைந்துள்ள வரையறையற்ற பரம்பொருளை, வட்டத்தைக்

கண்டு பிடிக்க வேண்டும். வளர்ச்சிக்கான விதிமுறை உள்ளது. அதைப் பின்பற்ற வேண்டும்.

★ ★ ★

கடவுளை அடைவதற்கான பல வழிகள் உள்ளன. வழியைப் பின்பற்ற வேண்டும். அதன் பிறகு சமயக் கோட்பாட்டை விஞ்சி மேம்பட வேண்டும். அதன் பிறகு கடவுள் கோட்பாட்டை எடுத்துக் கொள்ள வேண்டும். நம் வாழ்வானது விரிவடைய வேண்டும். அனைவருக்கும் தொண்டாற்ற வேண்டும். தன்னலத்துடன் இருத்தல் கூடாது. மனம் விரிவடைவதுதான் ஆன்ம வளர்ச்சிக்கான மெய்ப்பிப்பு ஆகும், சோதனையாகும். மற்றவர்களைக் குறித்த நம் மனப்பான்மையானது, உதவும் தன்மை உள்ளதாக, இரக்கம் காட்டும் தன்மை உள்ளதாக இல்லாமல் வழிபடும் தன்மை உடையதாக இருக்க வேண்டும். நீ மற்றவர்களுக்கு உதவுவது, கடவுளுக்குச் செய்யப்படும் தொண்டாகக் காணப்பட வேண்டும். மனிதனிடம் உள்ள கடவுளுக்குத் தொண்டு செய்வாய். ஒவ்வொருவரிடமும் உள்ள கடவுளுக்குத் தொண்டு செய்வாய்.

நாம் கடைப் பிடிக்கும் பொன்மொழியானது இவ்விதம் இருக்க வேண்டும். நாம் மற்றவர்களிடம் உள்ள கடவுளுக்குத் தொண்டு செய்வதற்காக முதலில் நாமே தெய்வீகமானவர்களாக இருப்போம். நாம் இதை விழிப்புணர்வுடனும், முறையாகவும், ஒழுங்காகவும் செய்ய வேண்டும். செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொண்டால் அது திருப்படையல் ஆகிறது. ‘எழுமின், விழிமின், குறிசாரும் வரை நில்லாது செல்மின்’. நாம் அதிக அளவிற்கு முன்னேற முன்னேற அதிகமான மகிழ்ச்சியையும் அமைதியையும் மற்றும் பேரின்பத்தையும் கண்டு கொள்கிறோம்.

நாம் நம்முடைய உண்மையான இயல்பைத் தேடுவதில், கடவுளிடம் வருகிறோம். அப்பொழுது அகங்காரம் கடவுளுடன் இணைந்து விடுகிறது. அகங்காரமானது ஆன்மீக

மயமாக்கப்பட்டவுடன் நாம் விடுதலை அடைகிறோம். அப்பொழுது உடைமையாகப் பெற்றிருத்தல் என்னும் கருத்திற்குப் பதிலாக நாம், 'பொறுப்பாண்மை (trusteeship) என்னும் கருத்தைக் கொள்ள வேண்டும். கடவுளின் மூலம் வரும் ஒவ்வொரு இணைப்பும் நமக்கு வலிமையை அளிக்கின்றது. நாம் மனிதர்களுடன் மற்றும் பொருட்களுடனும் நேரடியான தொடர்பு கொள்ள விரும்பும் பொழுது, சிக்கல் ஏற்படுகிறது. எல்லோரையும், எல்லாவற்றையும் கடவுளில், மற்றும் கடவுள் வழியாகக் காண வேண்டும். அல்லது நாம் அனைவரும் கடவுளின் தொண்டர்கள் அல்லது கடவுளின் குழந்தைகள் என்று எண்ணுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

★ ★ ★

மற்றவர்களுடன் செயல் தொடர்பு கொள்ளும்பொழுது, தேவையான தகவுப்பொருத்த உணர்வைக் கண்டு கொள்வது கஷ்டமானதாகும். நீ உறுதியுடன் இருக்க வேண்டும். அதனால் மற்றவர்கள் உன்னைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பார்கள். தொட்டால் சிணுங்கியாக கூச்சம் உடையவனாக, அஞ்சி நடுங்குபவனாக இருத்தல் கூடாது. ஒவ்வொரு சாதகனிடமும் சரியான தொலை நோக்கு வளர வேண்டும். வருவனவற்றை இயன்ற அளவிற்கு அமைதியாக எடுத்துக் கொள்ள வேண்டும். வருவனவற்றை அவை உள்ளபடியே காண்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அமைதியை அடையும் பொருட்டு உன்னைத் தக்கவாறு பொருத்திக் கொள்ள வேண்டும். மற்றும் நாம் பலதரப்பட்ட மனிதர்களுடன் செயல் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் பெரும்பாலும் மற்றவர்களைத் துன்புறுத்துகிறோம். சில மனிதர்கள் நல்ல, அமைதியான, தெளிவமைதியுடன் கூடிய அதிர்வலைகளை வெளிப்படுத்துவார்கள். வேறு சிலர் கெட்ட அதிர்வலைகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்துவார்கள். உனக்கு உண்மையாக இருப்பதற்கு முயற்சி செய்வாய். மற்றும் கடவுளுக்கும்

உண்மையாக இருப்பதற்கு முயற்சி செய்வாய். அதன்பிறகு மற்றவர்களிடம் உண்மையாக இருப்பது சுலபமானதாகி விடுகிறது. கடவுளை மட்டும் ஒரே மெய்ப்பொருளாகக் காண்பாய். மற்ற அனைவரையும் அவர்களுடைய வாழ்க்கைக்குக் கடவுளைச் சார்ந்து இருப்பவர்களாகக் காண்பதற்குக் கற்றுக்கொள்வாய்.

நீ ஒவ்வொரு சூழ்நிலையிலும் கட்டாயமாகச் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். ஆனால் காற்று திசை காட்டிகளைப் போல இருத்தல் கூடாது. உன்னுடைய மன நிலைகளையும், மனப்பான்மைகளையும் மாற்றிக் கொண்டே இருத்தல் கூடாது. நீ உன்னைக் குழப்பம் அடைவதற்கு அனுமதித்தல் கூடாது. உன்னுடைய இலட்சியங்களால் உன் வாழ்க்கையானது கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். சில நேரங்களில் நாம் மற்றவர்களை மிகவும் அதிகமாக அவர்களின் துணையை நாட முயற்சி செய்கிறோம். நாம் அவர்களுக்கு மிகவும் மரியாதை அளிக்கிறோம். ஆனால் மனிதர்கள் நிலையற்ற ஆதரவாளர்களாக உள்ளனர். சில மனிதர்களுக்கு அவர்களுடைய ஈர்ப்பு மையமானது உள்புறத்தில் இருப்பதற்குப் பதிலாக வெளிப்புறத்திலுள்ளது. உன்னுடைய ஈர்ப்பு மையத்தை உன்னுள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும். உன் ஆன்மாவானது, உன் ஆளுமையின் மையமாக ஆக்கப்பட வேண்டும். ஆனால் அப்பொழுது ஒரு ஆபத்து உள்ளது. நாம் தன்னலம் கருதுபவர்களாக, தன் முனைப்பு நிறைந்தவர்களாக ஆகிறோம். எனவே நாம் ஆன்மாவானது கடவுளின் ஒரு பகுதியாகும், நம்மிடம் உள்ள மையமானது பரந்தகன்ற வெளியின் மையம் என்று நினைக்க வேண்டும். கடவுளிடம் தொடர்பு கொள்ளப்பட வேண்டிய புள்ளி நம்மிடம் உள்ளது. உன்னுடைய விழிப்புணர்வு மையத்தைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அதைச் சுற்றிப் பரந்துள்ள வரையற்ற விழிப்புணர்வு மையத்தை மறத்தல் கூடாது. சிலர் முதலில் தன்முனைப்பு உள்ளவர்களாக இருப்பார்கள். அதன்பிறகு இயலுலக அண்ட மையம் சார்ந்தவர்களாக ஆவார்கள். ஆன்மீகப் பயிற்சிகளைத்

தொடங்கும் பொழுது சில சாதகர்கள் சிறிது காலத்திற்குத் தன்முனைப்பு நிறைந்தவர்களாக இருப்பார்கள். அதன்பிறகு அவர்கள் அதைச் சமப்படுத்துவதற்கு சில தன்னலமற்ற தொண்டைச் செய்ய வேண்டும். தியானமும், பிரார்த்தனையும் சரியாகச் செய்யப்பட்டால் அது நாம் தன்முனைப்பு நிறைந்தவர்களாகவும், தன்னலம் நிறைந்தவர்களாகவும் ஆவதற்கு எதிராக உதவி செய்கிறது. மற்றும் நம்முடைய அற்பத்தன்மையிலிருந்து உயர்வதற்கும் உதவுகிறது. நாம் மற்றவர்களின் செலவில் வளர்வதற்கு ஒருபொழுதும் முயற்சி செய்யக் கூடாது.

★ ★ ★

தெளிவற்ற நிலையிலிருந்தும், இருளிலிருந்தும் நாம் ஒளியை அடைகிறோம். நாம் முன்னேறும் பொழுது இறுதியாக ஒளியை அடையும் வரை மேலும் மேலும் குறைந்த இருள்தான் இருக்கும். மிகச் சிறந்த புனிதமகான்களும், ஞானிகளும்கூட, இருள் நிறைந்த, தெளிவற்ற காலகட்டத்தை அனுபவித்து உள்ளனர். அத்தகைய காலகட்டங்களில் உயர்ந்த எண்ணங்கள் நமக்கு உறுதுணையாக இருக்கும்.

நாம் மற்றவர்ளைக் காண்கிறோம். ஆனால் நாம் நம்மைக் காண்பதில்லை. இதுதான் நம்முடைய சிக்கலாகும். நம்முடைய சொந்த எண்ணங்களின் சாட்சிகளாக நாம் விளங்குகிறோம் என்று வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த சாட்சியாக உள்ள மனப்பான்மையானது மேலும் மேலும் வளர்க்கப்பட்டு, உறுதிபடுத்தப்பட வேண்டும். நாம் நம்மை வேறு ஒருவராக எண்ணி பகுத்து ஆராய வேண்டும். பல நேரங்களில் சாட்சியானது உறங்கிக் கொண்டிருக்கிறது. சாட்சியை எழுப்புவாய். உன்னிடம் ஒரு கெட்ட எண்ணம் தோன்றினால் அதைக் கண்டுபிடித்துவிட வேண்டும். எண்ணங்கள் பொதுவாக நம் இருப்பின் ஆழத்திலிருந்து தோன்றுகின்றன. ஆனால் அவை சில வெளிப்புறத் தூண்டுதல்களினாலும் ஏற்படலாம். நாம் நம் புலன்களின் மூலம் எடுத்துக்கொள்ளும் உணவானது தூய்மையானவையாக

இருத்தல் வேண்டும். எனவே எப்பொழுதும் உன்னைக் கண்காணித்துக் கொண்டு இருப்பாய்.

நாம் எந்தக் கணத்திலும், நம்முடைய தனிப்பட்ட விருப்பத்திற்குரிய கருத்துக்களை அவை உண்மையானவை அல்ல என்று அறிந்துகொண்டதும் அவற்றை விட்டு விடுவதற்கு முழுமையாக ஆயத்தமாக இருக்க வேண்டும். நாம் வளர்ச்சி அடைய வேண்டுமெனின், நம்முடைய முழுமையான மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் இறப்பதற்கு முன்பு, ஆன்மீகத்தில் உருப்படியாக எதையாவது சாதித்து இருக்க வேண்டும்.

ஆன்ம விடுதலைக்காக ஒரு பெரிய விலையைக் கொடுப்பதற்கு யார் தயாராக உள்ளனர்? நமக்கு வழிமுறைகளும், ஆன்மீக யுக்திகளும் தெரியும். மற்றும் மிகச் சிறந்தவர்கள் நமக்கு உதவுவதற்கு ஆயத்தமாக உள்ளனர். ஆனால் நாம் மிகவும் தவறான போக்கை உடையவர்களாக விளங்குகிறோம். நம் முயற்சிகளைத் தள்ளிப்போடுகிறோம். சில மேன்மையான கருத்துக்களிலிருந்து அறிவுபூர்வமான மகிழ்ச்சியை தொடர்ந்து அடைந்துகொண்டு இருக்கிறோம். நாமாக உண்மையை உணர வேண்டும் என்று கவலைப் படாமல் இருக்கிறோம். நாம் துன்பம் தரத்தக்க, வெறுக்கத் தக்க, கீழ்த்தரமான காதல், பேராசை மற்றும் தன் மனநிறைவிற்கான அற்பமான கனவுகளைக் குறித்துக் கனவு கண்டு கொண்டே, அவை நம் பிடியிலிருந்து பிய்ந்து அழியும் வரையிலும் அவற்றைப் பற்றிக் கொண்டு இருக்கிறோம்.

பல ஆண்டுகள் ஆன பிறகு, நாம் நம்மை கேட்டுக் கொள்கிறோம். 'நான் என்ன சாதித்து உள்ளேன்? இந்த வாழ்க்கையிலிருந்து நான் எதைப் பெற்றுள்ளேன்? நம்முடைய ஆன்மீக வாழ்க்கையிலிருந்து திரள் வளர்ச்சியான ஏதோ ஒன்றைப் பெறக் கூடிய வகையில் நாம் அனைவரும் வாழ வேண்டும். நாம் நமக்குள்ளேயே தெய்வீக ஒளியின் சில கணநேரத் தோற்றங்களையாவது காண வேண்டும். ஆன்மீக நெறிமுறைகளை உண்மையாகவும், முறையாகவும்

மேற்கொண்டு தூய்மையான வாழ்க்கையை வாழும், தீவிரமாகக் கடவுளைப் பிரார்த்தனை செய்யும் யாருமே ஏமாற்றமடைய மாட்டார்கள். இவ்வுலகம்தான் பயிற்சிக் கான நிலைக்களன் ஆகும். மற்றும் நமக்குக் கொடுக்கப் பட்டுள்ள இந்தக் குறுதிய காலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ ★ ★

உலகியல் நாட்டமுடையவர்களும் மற்றும் தங்க ளுடைய தனிப்பட்ட பற்றுக்களைப் பற்றிக் கொண்டு இருப்ப வர்களும் மட்டுமே மரணத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். ஆன்மீக நாட்டம் கொண்டவர்கள் எதையும் இழப்பதில்லை. அவர்களுக்கு மரணம் என்பது புலன்களால் உணரத்தக்க வாழ்வின் மட்டத்திலிருந்து சூட்சுமமான ஒரு மட்டத்திற்குச் செல்வது ஆகும். உடல் மட்டும்தான் அழிகிறது. ஆன்மா ஒருபொழுதும் அழிவதில்லை. நாம் இந்த வாழ்க்கை என் னும் போரில் வீழ்ந்தாலும் புதிது புதிதான வாழ்க்கைகளின் மூலம் நாம் புதுப்பிக்கப்பட்ட உயிர்த்துடிப்புடன் செயலாற்ற லாம். படிப்படியாக, கட்டங்கட்டமாக, வாழ்க்கையின் இறுதி இலட்சியத்தை அடையும் வரையிலும், நாம் முன்னேறுவோம்.

நம்முடைய முழு வாழ்வு, நம் உடல் மற்றும் மனம் எதைச் சார்ந்து உள்ளது? விழிப்புணர்வைச் சார்ந்து உள்ளது, எந்த ஆண் வடிவத்தையோ அல்லது பெண் வடிவத்தையோ அல்லது குழந்தை வடிவத்தையோ அல்ல. ஆன்மா உடலை விட்டு வெளியேறும் அந்தக் கணத்தில் உடலானது உயிரற்ற தாகிவிடுகிறது. அதனுடைய எல்லா அழகும் மறைந்து விடுகிறது. உயிரற்ற உடலால் அது ஒரு சமயத்தில் மிகுந்த அழகுடையதாக இருந்திருப்பினும்கூட ஒருவரும் ஈர்க்கப் படுவதில்லை. ஆண் வடிவத்திலோ அல்லது பெண் வடி வத்திலோ நம்மை உண்மையாக ஈர்ப்பது விழிப்புணர் வாகும். அதைத் தவறுதலாக நாம் குறிப்பிட்ட உடலுடன்

அடையாளம் கண்டு கொள்கிறோம். நீ வாழ்க்கையை மிகுதியாக விரும்பினால் வாழ்க்கை எதைச் சார்ந்து இருக்கிறதோ, அதை ஏன் காணக் கூடாது? நாம் ஆன்மாவை, மேலும் அதிகமாக விரும்புவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் அது இருப்பதால்தான், உடலிலும், மனத்திலும் உயிராற்றல் உள்ளது. ஆனால் மனிதர்களுக்கு, பற்பல ஆண்டுகளோ அல்லது பல வாழ்க்கைகளோ, அவர்களுடைய தவறைக் கண்டுகொள்வதற்கும் மற்றும் உண்மையை உணர்வதற்கும் ஆகக் கூடும்.

★ ★ ★

நாம் நம்மைச் சுற்றிலும் ஒரு உறுதியான எண்ணச் சுவரை கட்டிக் கொள்ளலாம். குண்டு துளைத்துச் செல்ல இயலாத தடைகாப்பு ஏற்பாட்டையும் நம்மைச் சுற்றி இருக்கும் மனிதர்களின் செயல் விளைவுகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதற்கு அமைத்துக் கொள்ளலாம். நம்முடைய அக வாழ்க்கையானது தூய்மையானதாகவும், உறுதியுடையதாகவும் இருந்தால் நமக்கு ஒரு உறுதியான சுவர் அமைகிறது. ஆனால் இது மற்றவர்களின் வெறுப்பை யும் மற்றும் சமூகத்தின் பொருத்தக் கேட்டையும் குறிக்க வில்லை. ஆன்மீக வாழ்விலுள்ள ஒரு சிறந்த விஷயம் இசைவுப் பொருத்த உணர்வும், பொருத்திக் கொள்ளும் இயல்பும் ஆகும். நீ எங்கு இருப்பினும் உன்னைச் சிறந்த முறையில், பண்பு, கொள்கைப் பிணக்கை ஏற்படுத்தாமலும், தவறாகப் புரிந்து கொள்ளாமலும் பொருத்திக் கொள்ள வேண்டும். உன்னைச் சுற்றிலும் ஒரு நல்ல சூழலை ஏற்படுத்த வேண்டும். அதை அனைவரும் உணர வேண்டும். ஒரு பக்தனிடம் எல்லாமே நயம், பரிவு, மேன்மை நிறைந்ததாக இருக்க வேண்டும்.

உன்னுடைய சுற்றுப்புறத்திலிருந்து உன்னைப் பிரித்துக் கொள்ள வேண்டும். உன்னைச் சுற்றி ஒரு வேலி அமைத்துக் கொள்ளவில்லை எனின் உன்னால் வளர இயலாது.

எப்பொழுதுமே அழிவைத்தரவல்ல சூறாவளிகளும் புயல் களும் உள்ளன. மற்றும் ஆடுகளும் வந்து ஆன்மீகம் என்னும் இளஞ் செடியைத் தின்று விடுகின்றன.

தொடக்கத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் மிகுதியான முன்னெச்சரிக்கை நடவடிக்கையானது உன் வாழ்க்கையை ஒரு கண்ணாடிக் கூண்டிற்குள் வாழும் வாழ்க்கையைப் போலச் செய்து விடுகிறது. உனக்கு இந்தக் கருத்தானது பிடிக் காமல் இருக்கலாம். ஏனெனில் உனக்கு உன்னுடைய சொந்த ஆன்மீக நோக்கமே புரிவதில்லை. ஆனால் இந்தக் கண் ணாடிக் கூண்டில் வாழும் வாழ்க்கையானது ஆன்மீக வாழ்க்கையில் உண்மையாகவே முன்னேற விரும்பும் அனை வருக்கும் அவசியமானதாகும். எப்படி இருப்பினும் இது ஒரு தற்காலிகமான நிலைதான்.

★ ★ ★

ஆன்மீக வாழ்வில் பல வளர்ச்சிப் படிகள் உள்ளன. மற்றும் தொடர்ச்சியான பல்வேறு வகைப்பட்ட அனுபவங் களும் உள்ளன. அது அழகும், துணிவும், வீரமும் நிறைந்த உண்மையான வாழ்வு ஆகும். மற்றும் இவற்றை யார் ஒருவர் விரும்பினாலும் அவர் அதை பின்னடையாமல், வாழ்வு அல்லது மரணத்தைக் குறித்துக் கவலைப்படாமல் பின்பற்ற வேண்டும். நீங்கள் ஆன்மீகப் பாதையை மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு தடுமாற்றம் இன்றி பின்பற்றினால், உங்கள் அனைவருக்கும் மிகுதியான அமைதியும் பேரின்பமும் வரவிருக்கும் நிலையுள்ளது.

'ஆனால் கடவுள் நமக்கு இத்தகைய எல்லா ஆசை களையும் கொடுத்துள்ளார்!' உண்மை. முற்றிலும் உண்மை. ஆனால் கடவுள் நமக்கு தன்னாண்மைத் திறத்திற்கான (Self-Mastery) ஆசையையும் அளித்துள்ளார். நம் விஷயத்தில் மணலும், சர்க்கரையும் கலந்துள்ளன.

ஏன் குறை கூற வேண்டும்? நாம் தடை விதிக்கப் பட்டுள்ள மரத்தின் பழங்களை உண்கிறோம். மற்றும்

உள்ளுணர்வுத் திறனின் இயல்பான வலிமையை இழக்கிறோம். அது தன்னைக் குழந்தைப் பருவத்திலேயே வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது. அதனால்தான் நாம் நம்முடைய தற்போதைய அறியாமை நிலையிலிருக்கிறோம். அது அதிக அளவில் சூழ்நிலையின் தவறு இல்லை. நாமே நம்முடைய வழிகளை உண்மையாக மாற்றிக் கொள்ளாத வரையிலும், உலகத்திலுள்ள தீமையைக் குறித்துக் குறை கூறுவது சிறு பிள்ளைத்தனமானது ஆகும். 'ஓ இந்த உலகம் எவ்வளவு கொடுமை நிறைந்ததாக உள்ளது! மனிதர்கள் எவ்வளவு கெட்டவர்களாக உள்ளனர். இது எத்தகைய குற்ற இயல்புள்ளது!' உண்மைதான், உலகம் கெட்டதுதான். ஆனால் அதைக் குறித்து நீ என்ன செய்ய இயலும்? சரியாகக் கூறப் போனால் நீ உன்னுடைய சொந்த வாழ்க்கையை மாற்றிக் கொண்டு, இந்த உலகத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பவனாக ஆகிறாயா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு விஷயம் உண்மையாகும். வெறுப்பையும், பகைமையையும் இதயத்தில் மேற்கொண்டுள்ள ஒருவராலும் கடவுளின் ஒளியைக் காண இயலாது.

* * *

நம்முடைய கர்மாவானது தீர்க்கப்பட வேண்டும். அதாவது இது நமக்கு வேதனையையும், துன்பத்தையும் தரத்தக்கது என்பது பொருளாகும். ஆனால் உண்மையில் சாதகன் இவை அவனுக்கு ஏற்பட்டுள்ளதைக் குறித்து மகிழ்ச்சி அடைவான். அவனுடைய கெட்ட கர்மாக்கள் அதிக அளவில் அழிக்கப்படுகின்றன என்பது இதன் பொருளாகும்.

கடவுளின் உண்மையான குழந்தைகளாக இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். என்ன ஆனாலும் கவலைப்பட வேண்டியது இல்லை. உன்னிடத்திலும் கடவுளின் மீதும் தடுமாற்றமில்லாத நம்பிக்கையை அளிக்கும்படி கடவுளை வேண்டிக் கொள்ள வேண்டும். நீ முழுவதும் ஈடுபட்டு ஆழ்ந்துள்ள பொருளாகக் கடவுளைக் கொள்ள வேண்டும்.

அதன் பிறகு வேறு எதை பற்றியும் கவலைப்படத் தேவை யில்லை. அதன்பிறகு நீ எங்கு இருந்தாலும் பாதுகாப்புடன் இருப்பாய். தூய்மையுடன் இருப்பாய். மற்றும் கடவுளிடம் உறுதியான நிலைத்த ஒருமுகப்படுத்தப்பட்ட பக்தியை மேற்கொள்வாய்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய போதனைகளின் பெருமையும் மேன்மையும் என்ன என்றால் பரம்பொருளைப் படிப்படி யாக எப்படி உணர்வது என்பதை அவர் நமக்குக் காட்டிக் கொடுத்துள்ள முறையாகும். அவர் பல வகையான சாதனை களை எப்படி மேற்கொள்வது என்பதை நமக்குக் காட்டிக் கொடுத்துள்ளார். ஆனால் அவரைப் பின்பற்ற யார் விரும்பு கிறார்கள்? அவருடைய அறிவுரைக்கு ஏற்ப யார் வாழவும், செயல்படவும் விரும்புகிறார்கள். யார் ஒருவனுடைய சிறு பிள்ளைத்தனமான விருப்பு வெறுப்புக்கள் மற்றவர்களைத் தனிப்பட்ட முறையில் பற்றிக் கொள்வது போன்றவற்றைத் துறப்பதற்கு விருப்பப்படுகிறார்கள்? எத்தனை மனிதர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களுடைய ஆன்மீகப் பயிற்சிகளை ஜபத்தை, தியானத்தைத் தீவிரமாகவும், விடாமுயற்சியுடனும் ஒரே சீராகவும் செய்கின்றனர்? பெரும்பாலான மனிதர்கள் இவ்வனைத்தையும் செய்வதற்கு விரும்புவதில்லை. ஆனால் அவர்கள் வந்து 'என்னுடைய எல்லா முயற்சிகளும் இருந்தும் கூட நான் எதையுமே அடையவில்லையே!' என்று குறை கூறுவார்கள்.

நாம் எழுந்திருந்து செயலாற்றுவோம். நாம் நம்முடைய இந்தக் கருவியானது மிகவும் பலவீனமடைந்து சிதைந்து போவதற்குள் நம்மால் இயன்ற அளவு உச்சநிலையில் முயற்சி செய்வோம். உள்ளார்ந்து உண்மையை நாடி ஒரு முனைப்பாட்டுடன் அதனுடைய கட்டளைகளைப் பின் பற்றும் அனைவருக்கும் எல்லையற்ற பேரின்பம் வர விருக்கிறது.

நம்முடைய எல்லா புலன் உறுப்புக்கள் மற்றும் செயல் உறுப்புக்களின் பின்னால் ஒரு சூட்சுமமான ஆற்றல் உள்ளது.

இந்த ஆற்றலானது சூட்சும உடலில் இயங்கிக் கொண்டிருக் கிறது. சூட்சும உடலின் பின்னணியில் காரண உடல் உள்ளது. அது பேரின்பத்தின் கோசம் என்றும் அழைக்கப்படுகிறது. உன் மனம் தூய்மை அடைந்தால் உன்னுள்ளே சூட்சுமமான ஆற்றல்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்து கொள்ள இயலும். மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த மனோ தத்துவ நிபுணர்கள் மனத்தின் முழுமொத்தமான தன்மை களையும், அதனுடைய உடல்சார்ந்த வெளிப்பாடுகளையும் மட்டுமே காண்கின்றனர். அவர்களுக்கு மனத்தில் மற்றும் மனது வழியாகச் செயலாற்றிக் கொண்டுள்ள சூட்சும ஆற்றல்களைப் பற்றி எவ்விதமான கருத்தும் கிடையாது. என்னால் எல்லா வேறுபட்ட கோசங்களையும் முற்றிலும் தெளிவாக உணரவியலும்.

ஆன்மீகக் காட்சி ஆற்றலின் ஒரு புதிய கருவி, ஒரு புதிய ஆன்மீக உடலானது ஒரு விதத்தில், ஒருவர் ஆன்மீகப் பயிற்சியை மேற்கொள்ளும் சமயத்தில் உருவாகிறது. மற்றும் அதன்மூலம் ஒருவர் மிக உயர்ந்த மெய்ப்பொருளுடன் தொடர்பு கொள்கிறார். ஆன்மீக தரிசனம் பெறுவதற்குத் தகுதியான ஒரு புதிய மனமும், ஒரு புதிய உடலும் முதலில் உருப்பெற வேண்டும். இதுதான் சாதனையின் நோக்கம் மற்றும் பொருள் ஆகும்.

இதற்கு, மிகவும் மேம்பட்ட மனம் மற்றும் உடல் தூய்மை அவசியமானதாகிறது. தூய்மையடைந்துள்ள மன மானது, இஷ்ட தெய்வத்தை உணர்வதற்குரிய மற்றும் கடவுளின் பல்வேறு வகையான வடிவங்களை உணர்வ தற்கும் ஒரு கருவியாகிறது. ஆனால் நிர்குண பிரம்மத்தை உணர்வதற்கு ஒருவர், தூய்மையான மனம் மற்றும் உடலை யும் கடந்து செல்ல வேண்டும்.

★ ★ ★

நம் உண்மையான ஆன்மாவானது, ஒரு விதத்தில் பல மேலுறைகளை அணிந்துள்ளது. அந்த மேலுறைகள் நாம்தான்

என்று நாம் நினைத்துக் கொண்டே இருப்பதுதான் நம்மிட முள்ள சிக்கலாகும்!

நீ தியானத்திற்கு அமரும் பொழுது இத்தகைய எல்லா மேலுறைகளிலிருந்து உன்னை நீக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். வரையறையற்ற தெய்வீகப் பேரொளியை, உன்னுடைய விழிப்புணர்வு மையத்தில் நிறைந்துள்ள, மேலே உள்ள, கீழே உள்ள உன்னுடைய எல்லா மையங்களிலும் நிறைந்துள்ள இந்தப் பேரண்டம் முழுவதிலும் நிறைந்துள்ள பேரொளியைப் பற்றி நினைக்க வேண்டும். அந்த வரையறை யற்ற பேரொளியில் பரு உடல், நுண் உடல் மற்றும் காரண உடல்களை இரண்டறக் கலக்கச் செய்ய வேண்டும். இந்த வகையில் உடல் மறக்கப்பட்டு விடுகிறது. பொறியான நீயே எஞ்சியுள்ளாய். இறுதியாக இந்தப் பொறிகூட அந்த வரை யற்ற பேரொளியில் இரண்டறக் கலந்து விட வேண்டும். உன்னால் அந்த நிலையில் இருக்க இயலுமாயின் அதுதான் உண்மையான வேதாந்தம் சார்ந்த தியானமாக இருக்கும்.

பேரொளி என்றால், இயற்பொருள் சார்ந்த ஒளி அல்ல. ஆனால் நீ அந்தக் கருத்தையே வைத்துக் கொள்ள வேண்டும். உன் மனம் முற்றிலும் வெறுமையை அடைந்துவிடும். அது தொடக்க நிலையில் இருப்பவனுக்கு மிகவும் ஆபத்தானது ஆகும்.

மேலே கூறப்பட்டுள்ள தியான முறையை வலுவூட்டு வதற்கு ஜபத்தை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். ஒரு விதத்தில் ஒரு ஒளிரும் உடலை, ஒரு புனிதமான பொறியை அந்த வரையறையற்ற பேரொளியிலிருந்து தோற்றுவித்து அதை அந்தப் பேரொளியிலேயே திரும்பக் கரையச் செய்து விட வேண்டும். நீ விரும்பினால், உன்னுடைய இஷ்ட தெய்வ வடிவமானது அந்த வரையறையற்ற பேரொளிப் பெருங்கடலிலிருந்து தோன்றுவதையும் அதனுள்ளே திரும்பக் கலந்துவிடுவதையும் கற்பனை செய்து கொள்ள லாம். இதை, நீ நாள்தோறும் செய்யும் தியானப் பயிற்சியின் ஒரு முக்கியமான பகுதியாகக் கொள்ள வேண்டும். சிறிது

பயிற்சி செய்த பிறகு, இவ்வனைத்தும் இரு நிமிடங் களிலேயே நடைபெற்று விடுவதை நீ அறிந்துகொள்வாய். அதற்கு மேல் ஆகாது.

ஒவ்வொரு நாளும் ஜபத்தை மேற்கொள்வதற்கு முன்பு, இந்த செயல்முறையானது உன் மனத்தில் நடைபெறுமாறு செய்ய வேண்டும். உன் மனத்தில் ஏதாவது எண்ணமோ அல்லது வடிவமோ தோன்றினால் அதை வரையறையற்ற பேரொளியில் கரைந்து விடுவாய் உன்னுள்ளே தோன்றும் எல்லா வடிவங்களுக்கும், கருத்துக்களுக்கும், நல்லன வற்றிற்கும், அல்லனவற்றிற்கும் ‘சமுத்திரத்தில் கலந்து அமைதியுடன் இருங்கள். அல்லது என்னுடன் தியானம் செய்யுங்கள். ஆனால் இனியும் என்னைத் தொந்தரவு செய் யாதீர்கள்’ என்று கூற வேண்டும். சில நேரங்களில் நாம் நமது எண்ணங்களில் மற்றவர்களுடன் சண்டையிடுவோம். அவர் களுக்குக் கூறுங்கள். ‘இரண்டறக் கலந்துவிடுங்கள். உங் களுடைய உண்மையான இயல்பை உணருங்கள்.’

⋆ ⋆ ⋆

நம்முடைய தனிமனிதத் தன்மையானது சிக்கல்கள் நிறைந்தது ஆகும். நாம் ஒருபொழுதும் முன்னேறாமல் சுற்றிச் சுற்றி வந்துகொண்டு அதிகமான நேரத்தை வீணடிக்கிறோம். ஒரு பெரிய நீர்ச்சுழி, ஒரு நாளில் சுற்றிச்சுற்றி வருவதில் வீணாகும் சக்தியானது, அதை உலகத்தையே வலம் வரச் செய்துவிடும். அதைப் போன்றே, நாம் சுற்றிச்சுற்றி வருவ திலும், விழிப்புணர்வை அடைய மறுப்பதிலும் வீணடிக்கும் சக்தியானது நம்மை நம்முடைய ஆன்மீக முன்னேற்றத்தில் வெகு தொலைவிற்குக் கொண்டு செல்லும்.

புனிதமான ஆன்மீக ஓட்டம் மிகவும் வலிமையுடையது ஆகும். ஆனால் அந்த நீர்ச்சுழி அங்கு இருக்கும் வரையிலும் அது எதையும் செய்யாது. நீ ஒரு நதியைக் கவனித் தால் உன்னால் அதைக் காணவியலும். அங்கு நீரோட்டம் மற்றும் நீர்ச்சுழி என்னும் இரண்டும் உள்ளன. ஆனால்

நீரோட்டமானது எத்தனை வலிமையுடையதாக இருப்பினும், நீர் மட்டத்திற்குக் கீழே உள்ள தடங்கல்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள நீர்ச்சுழியை அதனால் அழிக்க இயலாது. நம்முடைய சிக்கல்கள் தடங்கல்களாகச் செயல்பட்டு நீர்ச்சுழிகளை ஏற்படுத்துகின்றன. அது நம்முடைய எல்லா ஆற்றலையும் வீணடித்து விடுகிறது.

நம்முடைய சிக்கல்கள், நாம் காணும் அனைத்தையும் அல்லது உணர்வனவற்றை பாதித்து விடுகின்றன. நம்முள்ளே உள்ள சிக்கல்களின் வகைகளினாலேயே அனைத்தும் மதிப்பிடப்படுகின்றன. நாம் உலகியலில் அதிகமாக நாட்டம் கொண்டால், அதாவது நம் விருப்பங்களையும் காமங்களையும் நாம் அதிகமாக வெளிப்படுத்தினால் நாம் அதிகமான அளவில் சிக்கல்களை உருவாக்கிக் கொள்கிறோம். மற்றும் இருக்கும் சிக்கல்கள் வலிமையடைகின்றன.

நாம் ஒரு தீர்மானமான போக்கில் சிந்திப்பதன் விளைவாக, சில மனம் சார்ந்த மற்றும் உடல் சார்ந்த பழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிக்கிறோம். அந்த வகையில் செய்து கொள்ளப்பட்டுள்ள தீங்கானது சரியாக்கப்பட வேண்டும். இதை எப்படிச் செய்ய வேண்டும்? தீவிரமான எண்ண எதிர் நீரோட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இது செய்யப்பட்டால், நம்முடைய எதிர்விளைவுகள் படிப்படியாக மாற்றம் அடையும் மற்றும் நம்முடைய முழு வாழ்வும் ஒரு மாற்றத்திற்கு ஆட்படும்.

★ ★ ★

ஒருமுனைப்படுத்தப்பட்ட, முழு விழிப்புணர்வுடன் கூடிய, உள்ளார்ந்து, உண்மையாகக் கூறப்பட்ட ஒரு மந்திரமானது, வேறு நாட்டத்துடன் (கவனக்குறைவாகக்) கூறப்பட்ட நூறு முறை கூறியதற்குச் சமமாகும். ஆயிரம் முறை கூறியிருந்தால், ஒரே ஒரு முறை மட்டுமே முறையாகக் கூறப்பட்டதாக இருக்கும். அதனால்தான் கடவுளின் திருநாமத்தைப் பல முறைகள் கூற வேண்டும் என்று உனக்குக் கூறப்பட்டுள்ளது.

மனிதர்கள் தங்களுடைய நரம்புகளின் ஆற்றலைத் தேநீர், காப்பி போன்றவற்றின் உதவியுடன் தூண்டிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். நம்பத்தக்க முறையில் தானே இயங்குவது (Self-starter) எப்பொழுதுமே சிறந்ததாகும். பெரும்பாலான மனிதர்கள் இயக்கப்படுவதற்கு விரும்புகின்றனர். அவர்கள் முறையின்றி, ஒழுங்கின்றி உள்ள மோட்டார் கார்களைப் போல ஆகியுள்ளனர்!

நம்மில் பலரும் நம்முடைய விழிப்புணர்வைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறோம். நம்முடைய விழிப்புணர்வு என்று கூறப்படுவது பெரும்பாலும் செறிவற்ற, தெளிவற்ற, தன்னுணர்வற்ற வகையைச் சேர்ந்தது ஆகும். நம் விழிப்புணர்வெல்லாம் நம் புலன்களின் மூலம் சிதற அடிக்கப்படுகின்றன. இவ்விதம் சிதற அடிப்பதை நிறுத்த வேண்டும். அதை ஒரு புள்ளியில் குவிமையப்படுத்த வேண்டும். அந்தப் புள்ளியிலிருந்து வட்டத்திற்குள் அனுப்ப வேண்டும்.

விழிப்புணர்வு நிலைதான் இலட்சியமாகும். அது தன்னிலையிலேயே ஒரு முடிவு ஆகும். தற்பொழுது நம்மிடமுள்ள விழிப்புணர்வு நிலையின் பரப்பு எல்லையானது மிகவும் குறுகியது ஆகும். அதற்குச் செறிவும் இல்லை. அது ஒரு தாளைப் போன்று உள்ளது. நாம் நம்முடைய விழிப்புணர்வை மிகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் முதலில் உண்மையாகவே விழிப்புணர்வை அடைய வேண்டும். அதன்பிறகுதான் மேம்பட்ட விழிப்புணர்வானது நம்முடைய அன்றாட வாழ்வு நிலை மட்டத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். நமக்கு அதில் குறைந்த அளவையாவது எல்லா நேரங்களிலும் நிலைநிறுத்திக் கொள்ள இயல வேண்டும். நாம் ஒரு தீர்மானிக்கப்பட்ட விழிப்புணர்வு மட்டத்தை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். அந்த மட்டத்திற்குக் கீழே மனம் இறங்குவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

★ ★ ★

குண்டலினி சக்தியை எழுச்சியடையச் செய்யும் பொழுது அது நம்முடைய பழைய தூய்மையற்ற தன்மையை பழைய ஸம்ஸ்காரங்களுடன் எரித்து விடுகிறது. தீவினைப் பயன்கள் அந்தத் தீயில் எரிந்து விடுகின்றன. ஒரு விதத்தில் ஒரு புதிய ஒளிரும் தனித்தன்மையானது தோற்றுவிக்கப் படுகிறது. குண்டலினி சக்தியைப் பயனளிக்கத்தக்க பிராணா யாமப் பயிற்சியின் மூலம் விரைவில் எழுச்சி அடையச் செய்ய இயலும். ஆனால், தொடக்க நிலையிலிருக்கும் சாதகர் களுக்கு இது ஆபத்தானது ஆகும். உயர்ந்த மனத் தூய்மையை அடைவதற்கு முன்பு, முக்கியமாக தற்கட்டுப்பாடு தூய்மையை அடைவதற்கு முன்பு, குண்டலினி சக்தியை எழுப்புவதற்கு முயற்சி செய்தல் கூடாது. இல்லையெனின் எழுச்சியடைந்துள்ள 'தீ'யானது தொல்லையை ஏற்படுத்தும்.

யார் ஒருவர், உடலிலுள்ள பாலியல் நரம்பு மண்ட லத்தைச் செயல்படுத்தும் மூளையிலுள்ள மையங்களைத் தொடர்ந்து, கிளர்ச்சியடையச் செய்கிறானோ, அவனால் ஒரு பொழுதும் ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ள எண்ண இயலாது. அவனுடைய விஷயத்தில் ஆன்மீக வாழ்க்கை ஒரு மோசடியாகவும் மற்றும் போலியானதாகவும் ஆகிவிடுகிறது. நவீன வாழ்க்கையில் பாலியல் சார்ந்த விருப்பங்களைக் கிளர்ச்சி அடையச் செய்யும் செயலாற்றல்கள் வெகுவாக உள்ளன. இவை, திரைப்படம், இலக்கியம், நடனம், பொழுதுபோக்கு அம்சங்கள், உரையாடல்கள், போதை மருந்துகள், மது போன்றவையாகும். ஒருவன் இவைகளில் எல்லாம் மறைந்துள்ள ஆபத்தை உணரும்வரையில், அவ னால் ஒரு உண்மையான ஆன்மீக வாழ்க்கையை மேற் கொள்ள இயலாது. அவன் தன்னை, ஏசுநாதர், புத்தர் அல்லது ஸ்ரீராமகிருஷ்ணரைப் பின்பற்றும் ஒருவன் என்று கூறிக் கொள்ள இயலாது.

ஆன்மீகப் பாதையில், உடல்சார்ந்த இடர்ப்பாடுகளை விட மனம் சார்ந்தவையே அதிகமாக உள்ளன. ஜபம், அல்லது இறைவனின் திருநாம பாராயணத்தை அதனுடைய பொருளை நினைத்துக் கொண்டே செய்வது எந்த

இலட்சியத்திற்காக அது உள்ளதோ அதை அடைய படிப் படியாக தடைகளை அகற்றி மனத்தை உள்முகமாகத் திருப்பி தியானம் செய்வதற்குத் தகுதியுடையதாகச் செய்கிறது.

★ ★ ★

ஆன்மீக உலகின் குழந்தைகளாக நாம் ஓரளவிற்கு உருவ வழிபாடு செய்பவர்கள் ஆவோம். நாம் ஒரு தெய்வ வடி வத்தை வழிபடுவதை நம்மால் தவிர்க்க இயலாது. வடி வங்களை உண்மை என்று கருதும் இந்தக் கட்டத்தின் வழி யாக நாம் கடக்கத்தான் வேண்டும். ஆனால் அதை விஞ்சி மேம்பட வேண்டும். நம்முடைய சொந்த வடிவங்கள் நமக்கு உண்மையாக இருக்கும் பொழுது, புனிதமான வடிவங்களும் நமக்கு உண்மையாக உள்ளன. ஆனால் நாம் இந்த இரண்டை யுமே விஞ்சி மேம்பட்டு, எல்லா வடிவங்களின் பின்னணி யில் உள்ள பரம்பொருளைக் காண முயற்சி செய்ய வேண் டும். நாம் எல்லா நீர்க்குமிழிகள் மற்றும் அலைகளின் பின்னணியில் அதே சமுத்திரத்தைக் காண முயற்சி செய்ய வேண்டும். பலவற்றில் ஒன்றைக் காண ஒருமையைக் காண முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய ஆன்மீக வாழ்க்கை யின் தொடக்கத்தில், நாம் புனிதமான வடிவங்களின் மீது தியானம் செய்யலாம். ஆனால் நாம் வடிவமற்றதன் அருகில் செல்ல வேண்டும். தனித்த வடிவத்தின் பின்னணியிலுள்ள அடிப்படையான மெய்ம்மையின் அருகில் செல்ல வேண்டும்.

★ ★ ★

நன்மை மற்றும் தீமை நமக்கு சமமான அளவில் உண்மையானதாகும். நாம் நல்லது எதுவோ அதைச் செய்ய முயற்சி செய்ய வேண்டும். தீயது எதுவோ, அதைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவர், ஒப்பிட்டுப் பார்க்கும் நன்மை மற்றும் தீமை என்னும் இரண்டிற்கும் மேம்பட்டவர் ஆவார். அப்படிச் செய்யும்பொழுது நாம்

நன்மை தீமையைவிட அதிகமாகக் கடவுளைப்பற்றி எண்ண வேண்டும். ஒரு பகுதியில் அடர்த்தியாகவும் மற்றொரு பகுதியில் அடர்த்தியற்றும் உள்ள ஒரு மேகத்தைக் கற்பனை செய்து கொள்வாய். அடர்த்தியாக உள்ள மேகம் ஒளியை மறைக்கிறது. மற்றது அதனைப் பிரதிபலிக்கிறது. சூரிய னானது, இருள் மற்றும் பிரதிபலிக்கப்பட்டுள்ள ஒளி என்னும் இரண்டிற்கும் அப்பாற்பட்டுள்ளது. அதைப் போன்றே கடவுளானவர் தீயவனிடமும் உள்ளார். நல்லவனிடமும் உள்ளார். மற்றும் அவ்விருவரையும் கடந்தவராகவும் உள் ளார். தீயவனிடத்தில் தெய்வீக ஒளியானது மறைந்துள்ளது. நல்லவனிடம் அது வெளிப்பட்டுள்ளது. சூரியனிடமிருந்து தொலைவிலுள்ள மேகத்தின் பக்கத்திலிருந்து ஒளி தென் படும் அல்லது தென்படாது. ஆனால் சூரியனின் நோக்கு நிலையிலிருந்து அந்த அனைத்துமே ஒளிதான். அது பிரதி பலிக்கப்பட்டுள்ள ஒளி மற்றும் இருள் என்னும் இரண்டை யும் கடந்து நிற்கிறது.

உண்மையான பக்தன், எல்லாவற்றிலும் கடவுளின் விருப்பத்தைக் காண்கிறான். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டிருந்தபொழுது அவருடைய சீடர்கள் அவர் குணமடைய வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டபொழுது அவர், ‘குணமடைய வேண்டும் என்று எப்படி என்னால் பிரார்த்திக்க இயலும்? என் விருப்பமானது, கடவுளின் விருப்பத்துடன் கலந்து உள்ளது. எனக்கு என் சொந்த விருப்பம் என்று எதுவும் இல்லை’ என்று கூறினார். அவர் அவருடைய அகக் காட்சியில் அவர் எல்லா வாய்களின் மூலமாகவும் சாப்பிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டார். அவர், அவருடைய உடலானது மற்றவர்களின் பாவங் களினால் துன்புற்றுக்கொண்டு இருந்ததையும் கண்டார். மற்றவர்களுக்காக துன்பத்தை ஏற்றுப் பிராயச்சித்தம் செய்யும் எண்ணம் ஏசுநாதரிடம் இருந்தது, மற்றும் ஸ்ரீராம கிருஷ்ணரிடமும் இருந்தது.

★ ★ ★

நாம் தியானத்திற்கு அமர்ந்திருக்கும்பொழுது அனைத்தும் இருண்டு காணப்படுகின்றன. எதிர்ப்பு உள்ளது. நம்முடைய மனம் எதிர்க் கிளர்ச்சி செய்து அறவே விலகிச் செல்ல விரும்புகிறது. நமக்கு சிறிதளவு ஒளி தேவைப்படுகிறது. ஆனால் நாம் இருளைத்தவிர வேறு எதையும் காண்பது இல்லை. தொடக்கத்தில் இந்த நிலை உள்ளது. நாம் நம் பயிற்சியைச் சீராகவும் ஒழுங்காகவும் மேற்கொண்டால் மேலும் மேலும் ஒளி வரும். அதிக அளவில் மூளைக்குப் பயிற்சி தேவையானதாக உள்ளது. ஆனால் இந்த எல்லா முயற்சிகளும் கீழ்மட்டத்தில் சில காலத்திற்கு மட்டுமே இருக்கும். எல்லாமே இருளாகத் தென்படும்பொழுது, நம் ஒழுங்கு விதிமுறையானது உயரிய சீரியதன்மையுடனும், விடாப்பிடியுடனும் இருக்க வேண்டும். அதன் பிறகு ஒளி வரும். இருண்ட காலகட்டத்தில், ஆன்மீகப் பயிற்சிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பிரார்த்தனை, ஜபம், தியானம் போன்றவற்றை, அவை சிறிதளவு இயந்திரகதியில் நடைபெற்றாலும் செய்து கொண்டே இருக்க வேண்டும். பொதுவாக, கஷ்டங்கள் தோன்றும் பொழுது மனிதர்கள் அவர்களுடைய ஆன்மீகப் பயிற்சிகளை விட்டுவிடும் போக்கினை மேற்கொள்வார்கள். ஆனால் அவர்கள் அதற்கு எதிரானதைச் செய்ய வேண்டும். அதாவது, ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம், பயனற்ற செயல்கள் மற்றும் ஊக்கமற்ற தன்மை இவைகளின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு உள்ளோம். இரண்டுமே சமமான அளவில் தீங்கிழைப்பனவாகும். மற்றும் நம் முன்னேற்றத்தைத் தடுப்பவையாகும். நாம் மிக அபூர்வமாகவே அமைதியுடனோ அல்லது சமநிலையுடனோ இருக்கிறோம். பொதுவாக நாம் உறங்கிக் கொண்டோ அல்லது இலக்கு இல்லாதவர்களாகவோ இருக்கிறோம். அல்லது அதிகமாக செயல்களை மேற்கொள்கிறோம். அது நம்முடைய அமைதியற்ற தன்மையை அதிகப்படுத்தி விடுகிறது. உன்னுள்ளே சத்துவத்தன்மையுடன் கூடிய லயத்தைப் பெற்று இருப்பதற்கு முயற்சி செய்வாய். அதன்பிறகு உனக்கு

உயர்ந்த மனநிலை வாய்க்கப்பெறும். சில நேரங்களில் நாம் எத்தகைய முயற்சியுமின்றி சமநிலையுடன் ஓசையொழுக் குடன் அமைதியுடன் இருப்பதை காண்கிறோம். எல்லாமே நமக்கு வியக்கத்தக்க வகையில் சிக்கலற்று இருக்கும். ஆனால் ஒரு கணத்திற்குப் பிறகு நம்முடைய மனநிலை முற்றிலும் மாறிவிடுகிறது. உயர்ந்த நிலையானது ஒரே சீராக வைக்கப் பட வேண்டும். விருப்பத்துடன் கூடிய முயற்சியுடன் நம் முடைய விழிப்புணர்வு மையத்தை எழுச்சி அடையச் செய் வதன்மூலம், உயர்ந்த மனநிலையை விழிப்புணர்வுடனேயே பெறும்படி இருத்தல் வேண்டும். ஒருவேளை நமக்கு அது கிட்டினாலும், அதை எப்படி வைத்துக்கொள்வது என்பது இப்பொழுது நமக்குத் தெரியாது. அது வருகிறது மற்றும் சென்று விடுகிறது. ஆனால் நம்மால் அதைக் கட்டுப்படுத்து வதற்கு இயல்வதில்லை. இத்தகைய நடவடிக்கை நிலைகள் மாற வேண்டும். எந்த நேரத்திலும் ஆன்மீக மனநிலையை எப்படிப் பண்படுத்த வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

★ ★ ★

உன் இதயத்தைப் பயன்களின் மீது (விளைவுகளின்) வைத்தல் கூடாது. பகவத் கீதை 'உனக்கு செயலாற்றுவதற்கு மட்டுமே உரிமை உள்ளது. உன்னுடைய செயல்களின் பயன் களில் இல்லை' என்று கூறுகிறது. நீ நாள்தோறும் உன் னுடைய பயிற்சிகளைச் சீராகவும், ஒழுங்காகவும் செய்து கொண்டும், படித்துக்கொண்டும், தேவையான முறைமை களை நிறைவேற்றிக் கொண்டும் இருந்தால், இறுதியில் பயன்கள் தானாகவே அடையப்படும். ஆனால் உன்னுடைய பயிற்சிகளில் ஒருபொழுதும் இடைவெளி இருத்தல் கூடாது. ஏனெனில் ஒரு உறுதியான பழக்கம் உருவாக்கப்பட வேண் டும். மற்றும் பெரும்பாலான மனிதர்களுக்கு, அவர்களுடைய தொடர்ச்சியில் இடையீடு இருப்பின், அவர்களுக்கு மீண்டும் அவர்களுடைய பயிற்சியையும், வாசித்தலையும் மேற்கொள் வது மிகவும் கஷ்டமானதாகி விடுகிறது. அவற்றை

ஒருபொழுதும் தற்செயலாகவோ மேம்போக்கான முறை யிலோ மேற்கொள்ளுதல் கூடாது.

ஆன்மீக வாழ்க்கையில் தன்னை முழுவதுமாக அர்ப் பித்துக் கொள்வது மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறது. ஆனால் உண்மையான அர்ப்பித்துக் கொள்வது என்பது சுலப மான செயல் ஆகுமா? நாம் நம்முடைய அற்பமான தன்மை யிலிருந்து உயர்ந்து, நம்மிடம் உள்ள பரம்பொருளுடன் ஒரே சுருதியில் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஆன்மீக வாழ்க்கையிலும் கூட இயலுலக அண்டத்திற்கு உரிய இயக்கங்கள் உள்ளன. நமக்கும் மேலான ஒரு ஆற்றல் ஆன்மஞானம் அடைந்தவர்களை ஒருவருக்கொருவர் கண்டு கொள்ளச் செய்கிறது. ஆன்மீக உலகத்திலும் தேவையும், கிடைப்பும் என்னும் விதிமுறை உள்ளது. எப்பொழுதுமே ஏற்றமோ, இறக்கமோதான் உள்ளன. பலவகைப்பட்ட எண்ண மட்டங்கள் உள்ளன. உயர்ந்தவையும் உள்ளன. தாழ்ந்தவையும் உள்ளன. கடவுளின் அருள்தான் நம்மை உயர்ந்த ஆன்மீக ஓட்டத்துடன் தொடர்பு கொள்ளச் செய் கிறது. அந்த தண்ணீரில் நீ குதித்துவிட வேண்டும். நீ முன்னேறுவாய். முயற்சி செய்ய வேண்டும். அதன்பிறகு வியக்கத்தக்க முறையில் முன்னேறுவாய். நான் என்னை அந்த வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுவதற்கு அனுமதித்தால் அது நல்லது ஆகும். ஆனால் அதே நேரத்தில் நானாகவே அதில் நீந்திச் சென்றால் நான் மிகவும் விரைவாக முன்னேறுவேன்.

காலை நேரத்தை உனக்கு உரியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஆன்மீகப் பயிற்சியானது உன் திறமையை அதிகரிக்கச் செய்கிறது. மற்றும் வேலைக்கும் உறுதுணையாக உள்ளது. அகச்சமநிலையை விருப்ப முயற்சியுடன் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். செயலாற்றுவதற்கான திறமை ஒருமுனைப்பாட்டின் மூலம் வளர்கிறது.

நாம் மற்றவர்களுக்குத் தொண்டு ஆற்ற வேண்டும் என்றால், நாம் நாமாகவே பயிற்சியை மேற்கொள்ள

வேண்டும். நாம் நாமே நம்மிடத்தில் இந்த தெய்வத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்களிடம் அதை தோன்றச் செய்யும் முன்பு இதைச் செய்ய வேண்டும். நாம் எந்த அளவிற்கு நமக்கு உதவி செய்து கொள்கிறோமோ, அந்த அளவிற்கு மற்றவர்களுக்கு உதவி செய்ய இயலும். உன்னால் நீந்த இயலுமா? மற்றவர்களை மூழ்குவதிலிருந்து காப்பாற்ற வேண்டுமாயின் உனக்கு எப்படி நீந்துவது என்பது தெரிந்திருக்க வேண்டும். இல்லையெனின் மற்றவர்களுடன் நீயும் மூழ்கி விடுவாய். ஐயத்திற்கு இடமின்றி, நிலத்தில் நீந்தக் கற்றுக் கொள்வதற்கு இயலாது!

★ ★ ★

ஆன்மீக சக்தியானது எல்லா மனிதர்களிடமும் மறைந் திருக்கிறது. மனிதப் பிறவியானது, கிடைத்தற்கு அரிய சிறப்பு உரிமையாகும். ஏனென்றால் மனிதனால் மட்டுமே விழிப் புணர்வுடன் கூடிய கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்வை வாழ இயலும். மனிதர்களிடம் இயல்புணர்வும், அறிவாற்றலும் உள்ளன. விலங்குகளிடம் பொதுவாக இயல்புணர்ச்சியானது நிச்சயமாக உள்ளது. ஆனால் இது மனிதனின் அறிவுசார்ந்த விஷயத்தில் உண்மையல்ல. விலங்குகள் எத்தகைய மிகப் பெரிய கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கையை மேற்கொள் கின்றன! மனிதனும், விலங்குகளும், பகுக்கவியலாத ஒரு அடிப்படை மெய்ம்மையின் வேறுபட்ட வெளிப்பாடுகள் ஆவார்கள்.

நம்முடைய ஆன்மீக ஆற்றல்கள் செயலிழந்த நிலையில் உள்ளன. அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். அவை நம்முடைய் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சிக்காகப் பயன் படுத்திக் கொள்ளப்பட வேண்டும். இது உண்மையை உணர் வதற்கான வழியாகும்.

உள்ளிருந்து செய்தியைப் பெறுவதற்கு முயற்சி செய் வாய். உன்னிடம் உள்ள கடவுளுடன் ஒரே சுருதியில் இருப் பதற்கு முயற்சி செய்வாய். அதன் பிறகு நீ மற்றவர்களுடனும்

ஒரே சுருதியுடன் இருப்பாய். முதலில் அகம்சார்ந்த இசைவுடைமை ஏற்படுகிறது. அதன் பிறகு புறம் சார்ந்த இசைவுடைமை ஏற்படுகிறது. முதலில் அகம் சார்ந்த முரண்பாடு ஏற்படுகிறது. அதன்பிறகு புறம் சார்ந்த முரண்பாடு ஏற்படுகிறது. அகம் சார்ந்த இசைவுடைமையானது விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அதன் மூலம் நாம் ஒரே சீரான மனநிலையைப் பெறுகிறோம். மற்றும் இரங்கத்தக்க காற்றுத் திசைகாட்டியின் தன்மை மறைகிறது.

நம் உள்முக நோக்கினை மிகுதிப்படுத்தவல்ல அந்த ஆற்றல்களை மட்டுமே நாம் பெற்றிருப்போம். நாம், மற்றவர்களின் முகங்களை நம் முகத்தைவிட நன்றாக இருப்பதாகக் காண்கிறோம். உபநிஷதம், 'மனிதனுடைய புலன்கள், வெளிப்புறத்தைக் காணும் வகையில் உருவாக்கப்பட்டு இருக்கிறான்' என்று கூறுகிறது. நம்முடைய மனம், அக நோக்குடையதாக இருக்கட்டும். உன்னுடைய இலட்சியத்தை மறக்கக் கூடாது. மனத்தின் ஆற்றல்களை வளர்த்துக் கொண்டுள்ள அல்லது பெற்றுள்ள மனிதர்கள் உள்ளனர். ஆனால் அவர்கள் அவர்களை, மற்றவர்களின் செயல்களிலேயே முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்களே தவிர, தங்கள் சொந்த செயல்களில் ஈடுபடுத்திக் கொள்வது இல்லை. சமய சமரசம் உள்ள புத்துலகச் சமயநெறியிலும் (Theosophy) மற்றும் மனித இயல்பு பற்றிய அறிவைக் குறித்த கோட்பாட்டிலும் (Anthroposophy) அதிகமாக புற உலகம் சார்ந்த போக்கு உள்ளது. நம்மை உணர்வதும், நம்மிடம் உள்ள பரம்பொருளை உணர்வதும் அனைவரிடமும் உள்ள பரம்பொருளை உணர்வதும்தான் உண்மையான ஆன்மீகப் பாங்கு ஆகும். மற்றும் மன ஆற்றல்களைப் பெறுவது அல்ல. பலரும் அவர்களுடைய மனத்தின் ஆற்றல்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். நம்முடைய ஆற்றல் எல்லைக்கு உட்பட்டது ஆகும். மற்றும் அதை வீணடிப்பதற்குப் பல வழிகள் உள்ளன. நாம் நம்மிடம் உள்ள ஆற்றலை, நம்மிடம் உள்ள இறைவனின் பக்கமாகத் திருப்புவோம்.

முதலில், நடைமுறையைச் சார்ந்த ஒரு குறிக்கோளை எடுத்துக்கொள்ள வேண்டும். இறுதியான இலட்சியத்தைக் கண்ணோட்டத்திலிருந்து அகற்றாமல் இருக்க வேண்டும். முறையான வாசிப்பு, தெளிவான சிந்தனை, வாழ்க்கையின் சிக்கல்களைக் குறித்த ஆழ்ந்த சிந்தனை, தொண்டு, தியானம் மற்றும் ஆன்மீகப் பயிற்சி போன்றவை, மிக உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு உறுதுணையாக உள்ளன.

ஆன்மீக வாழ்க்கை என்பது ஒரு நீரோட்டமாகும். இந்த நீரோட்டமானது, தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்க வேண்டும். அது தேங்கி நிற்பதற்கு அனுமதித்தல் கூடாது. நாம் அது தேங்கி நிற்பதற்கு அனுமதிக்கும் அந்தக் கணத்தில் நம்முடைய ஆன்மீக பரிணாம வளர்ச்சியானது ஒரு முடிவிற்கு வந்து விடுகிறது. இந்தத் தேக்க நிலையானது, உடல் சார்ந்த, அறிவு சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த தேக்கநிலை, ஆன்மீகத்தில் நாட்டம் கொண்ட சாதகர்களின் விஷயத்தில் மிகவும் ஆபத்தானதாகிவிடும். எப்படியாயினும் அதைத் தவிர்க்க வேண்டும்.

தியானம் ஏன் அவசியமானதாகிறது? நம் ஆன்மாவிற்கு உணவளிப்பதற்கும், நம் வரையறைக்கு உட்பட்ட வாழ் விலிருந்து விடுபடுவதற்கும், நம்முடைய வரையறைக்கு உட்பட்ட விழிப்புணர்வு நிலையிலிருந்து விடுபடுவதற்கும், நம்மை ஒவ்வொரு பக்கத்திலும் சூழ்ந்துள்ள இருள் மற்றும் அறியாமையிலிருந்து விடுவிப்பதற்கும் அவசியமான தாகிறது. மற்றும், வரையறைக்கு உட்பட்ட தன்மைதான் நம்முடைய எல்லாத் துன்பங்களுக்கும் உண்மையான காரண மாக உள்ளது!

பொதுவாக நம்முடைய வாழ்க்கை தன்முனைப்பு நிறைந்ததாக உள்ளது. மற்றும் இந்த தன்னலம் மிகுந்த வாழ்க்கையின் காலக்கிரமத்தில் ஆன்மாவானது ஒருநாள் எல்லாவற்றிலும் சோர்வடைகிறது. அது தன்மீதே சோர்வு கொள்கிறது. அப்பொழுது ஒரு பரந்த வாழ்விற்கு ஒரு புதிய ஆர்வம் ஏற்படுகிறது. பெயர் வடிவம் என்னும் எல்லா

வரையறைகளுக்கும் அப்பாற்பட்ட நம்முடைய எல்லா அற்பமான பிணைப்புக்களுக்கும் அப்பாற்பட்ட, பேரின்பத்தையும், அமைதியையும் கண்டுகொள்ளும் ஆர்வம் ஏற்படுகிறது. அப்பொழுதுதான் நம்முடைய ஆன்மீக வாழ்வானது தொடங்குகிறது. அப்பொழுதுதான் நம்மிடம் ஒரு புதிய சமய உணர்வும் தோன்றுகிறது.

★ ★ ★

நாம் 'தியானம்' என்னும் சொல்லை இணக்கநயப்பண்பினால் (courtesy) பயன்படுத்துகிறோம். நாம் தற்பொழுது மேற்கொண்டுள்ள தியானம், தியானமே இல்லை. நாம் ஒருமுகப்படுத்துவதற்குத்தான் முயற்சி செய்கிறோம். நம் அனைவருக்கும் ஒருமுகப்படுத்தும் திறமை உள்ளது. ஆனால் நாம் அற்பமான பொருள்களின் மீது, உலகியல் தொடர்பான பொருட்களின் மீது ஒருமுகப்படுத்துகிறோம். நாம் ஏன் அதை பரந்த உயர்ந்த பொருட்களின் மீது பயன்படுத்தக் கூடாது? நாம் ஏன் அதை நம் விடுதலையைப் பெறுவதற்காகப் பயன்படுத்தக் கூடாது?

தொடக்கத்தில் நம்மால் சிறிது நேரத்திற்கு மட்டுமே தியானம் செய்ய இயலும். முதலில் உன்னுடைய உணர்வுகளையும் ஆசைகளையும், விருப்பங்களையும் மேம்படுத்தாமல் ஒருமுகப்படுத்துதல் கூடாது. வெறும் ஒருமுனைப்பாடானது மிகவும் ஆபத்தானதாகிவிடும். சில மனிதர்களுக்கு தொடக்கத்தில் இவ்வனைத்தும் பெரிய அடிமைத்தனமாகத் தென்படும். நீ உன்னுடைய மனத்தை ஜபம் அல்லது தியானம் அல்லது பாகுபடுத்தி அறிதல் அல்லது இவ்வனைத்தையும் இணைத்தோ கட்டுப்படுத்தலாம். உண்மையான ஆர்வம் இருக்கிறது எனின், நாம் மிகவும் கடுமையாக முயற்சி செய்ய வேண்டும். இல்லை எனின், ஆன்மா, நிறைவை அடையாது. நாம் விரும்பாமல் இருந்தாலும், நாள்தோறும் ஒழுங்காகக் கடைப்பிடிப்பதைக் கடந்து செல்லத்தான் வேண்டும்.

★ ★ ★

நம் மனமானது, புத்துணர்வுடன், உயிர்துடிப்புடன், ஊக்கம் மிகுந்ததாக இருக்க வேண்டும். மனம் சார்ந்த புத்துணர்வை பெற்றிருப்பது மிகவும் அவசியமானதாகும். அகம் சார்ந்த புத்துணர்வு மிகவும் அவசியமானதாகும். ஆன்மாவானது இளமையுடனோ அல்லது முதுமையுடனோ இல்லை. நமக்கு ஆன்மாவிடமிருந்து எப்படி ஆற்றலைப் பெறுவது என்பது தெரிந்தால், உடல்கூட மீண்டும் இளமையை அடையும்.

தீவிரமான தியானத்திற்குப் பிறகு, விசைப்பாய்ச்சலுடன் கூடிய ஆற்றல் வருகிறது. மற்றும் சிலருக்கு இதை எப்படித் திருப்புவது என்பது தெரிவதில்லை. நாம் ஒரு உயர்ந்த வழியைக் கண்டு கொள்ள வேண்டும். அதன்பிறகு நம்முடைய மனமானது அமைதியற்ற தன்மையிலிருந்து நீங்கி அமைதியைப் பெறுகிறது. சில நேரங்களில் நாம் கேள்வி கேட்கும் மனநிலையுடன் இருப்போம். ஒரு உயர்ந்த மன நிலையில், நாமே இந்த கேள்விகளுக்குரிய விடைகளை அளிக்கவியலும். நம்முடைய மனமானது, இயலுலக அண்ட மனத்தின் ஒரு பகுதியாகும். நம்மிடம் எண்ணமானது நினைவாற்றலாக இல்லையெனின் நம்மால் அதை ஒருபொழுதும் புரிந்து கொள்ள இயலாது, அத்தகைய பரந்துபட்ட அளவில் உள்ள எண்ணம், நினைவு ஆற்றலானது தொண்டிற்காகப் பயன் படுத்தப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக உனக்கு ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்றால் உடனடியாக எண்ணமட்டத்திற்குத் தீவிரமாக, விழிப்புணர்வுடன் உயர வேண்டும். எண்ணங்கள் பாய்வதை உன்னால் காண இயலும். எதை எடுத்துக் கொள்ள வேண்டும், எதை மறுக்க வேண்டும் என்னும் கேள்வி அடுத்து வருகிறது.

சில நேரங்களில் மூளையானது சோர்ந்து இருக்கும் சரியான மனநிலையை எப்படி ஏற்படுத்திக் கொள்வது மற்றும் எண்ண மட்டத்துடன் எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய சிறிய மனமானது, பரந்து அகன்ற மனத்தின் ஒரு பகுதியாகும். ஆன்மீக வாழ்வின் சூழ்நிலைகள் உடல்

சார்ந்தனவும், மனம் சார்ந்தனவும் ஆகும். எனவே உடலைப் பண்படுத்துவதும், நரம்பு ஓட்டத்தின் கட்டுப்பாடும், அதன் பிறகு எண்ண ஓட்டத்தின் கட்டுப்பாடும் அவசியமானது ஆகும். சில நேரங்களில் நம்மால் நம்முடைய சாதாரணமான சாத்தியத்தன்மையிலிருந்து கூட உயர இயலும் பெரும் பாலும் நம்முடைய உடல் சார்ந்த வரையறைகளிலிருந்து நம்மால் உயர இயலும்.

★ ★ ★

சிக்கல் என்ன என்றால் நமது மனம் வெகுவாக வெளிப் புறமாகச் செல்வதுதான் ஆகும். நாம் மிகவும் தன்னலத்துடன் உள்ளோம் மற்றும் வெகுவாக ஊன்றி உள்ளோம். எனவே நாம் பிறருக்கு உடல் சார்ந்த மற்றும் மனம் சார்ந்த தொண்டினைச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் நாம் ஏதாவது ஒரு வகையில், மற்றவர்களுக்காக எதையாவது தியாகம் செய்ய வேண்டும். ஒரு தாயுடைய தியாகத்தைப் பாருங்கள்! மற்றவர்களுக்காக எந்த தியாகத்தையும் செய் யாமல், தன்னலத்துடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு எவருமே அனுமதிக்கப் படுவது கூடாது. எந்த உருவத்தில் இருப்பினும் அனுமதிக்கப்படக் கூடாது. வாழ்க்கையே ஒரு தியாகம்தான் மற்றும் அதனுடைய நிறைவையும் அது தியாகத்தில்தான் கண்டு கொள்வதற்கு இயலும். ஆன்மீக வாழ்க்கையில், முழுக்க முழுக்கத் தன்னலம் நிறைந்தவர் களுக்கு இடமில்லை.

★ ★ ★

நாம் ஒருபொழுதும் மாய மகிழ்ச்சியுடன் வாழக் கூடாது. நம்முடைய இலட்சியம் பொருட்களை அவற்றின் மதிப் பிற்கு ஏற்றாற்போல் ஏற்றுக்கொள்வது ஆகும். மற்றும் நாம் ஒரு மகிழ்ச்சியூட்டும் பொய்யைவிட, ஒரு கசப்பான உண்மையை அதிகமாக மதிக்க முயற்சி செய்ய வேண்டும். வர வுள்ள எல்லாக் காலத்திற்கும் நம்மால் உண்மையைக் கண்டு

கொள்ளாமல் இருக்கவியலாது. என்றாவது ஒருநாள், முன்போ அல்லது பின்போ நாம் மயக்கத்திலிருந்து விடுபட்டுத்தான் ஆக வேண்டும். அது அவ்விதம் ஆகும் என்றால், நாம் ஏன் இப்பொழுதே உண்மையைச் சந்திப்பதற்கு தயாராக இருக்கக் கூடாது? நம் அதிகமான தன்னலம், புலன்களை அதிகமாகப் பற்றிக் கொள்ளும் நம் தன்மை, நம்முடைய எல்லா சிறிய பிணைப்புக்கள் மற்றும் எழுச்சிகள், நம்மை எல்லாத் தீமை களையும் ஒரு அழகான வெளிப்பூச்சால் மறைக்கச் செய் கின்றன. மற்றும் அவையெல்லாம் அழகானவை என்று நினைக்கச் செய்கின்றன. புலன் வாழ்வின் மீது நமக்குள்ள பற்றுதலினால்தான் நாம் இருளை ஒளியாகக் காண்கிறோம். அறியாமையை அறிவு என்று காண்கிறோம். இதனால்தான் நாம் உண்மையற்றதை உண்மை என்றும், நிலையற்றதை நிலைத்தது என்றும் எடுத்துக்கொள்கிறோம். நாம் அமரத் தன்மையை மரணத்திலும், துன்பத்தில் இன்பத்தையும், ஆன்மாவைப் பருப்பொருளிலும், வரையறையற்றதை வரை யறைக்கு உட்பட்டதிலும் நாடுகிறோம். நாம் நம்முடைய தாகத்தைத் தணித்துக் கொள்வதற்கு கானல் நீரை நோக்கி ஓடுகிறோம். நாம் நெருப்பையும், ஒளியையும் பெறுவதற்குச் சதுப்பு நில ஒளியின் பின்னால் விரைகிறோம் (Will ‘o’-the-Wisp). நாம் ஏமாற்றம் அடைவதில் வியப்பு எதுவும் இல்லை!

நம் உலகமானது, எதிர்ப்பண்புகள் நிறைந்த உலகம் ஆகும். அதில் நன்மை-தீமை, உடல் நலம்-பிணி, ஒளி-இருள், இன்ப-துன்பம், வெம்மை-தண்மை, வாழ்வு-மரணம் என்னும் அனைத்துமே உணரப்படும் உண்மைகள் ஆகும். இத்தகைய இருமை திரள் குழுமமானது (throngs) நம்மை ஒரேயடியாகப் பாதிக்கிறது. உடல் நலக்குறைவு இல்லை என்று வீணாக எண்ணுவதால் நாம் ஆரோக்கியத்தைப் பெறுவதில்லை. இருள் இல்லை என்று எண்ணுவதால் எனக்கு ஒளி கிடைப்பதில்லை. மரணம் இல்லை என்று எண்ணுவதால் என்னால் மரணத்தைத் தவிர்க்க இயலாது. தீமை இல்லை என்று எண்ணுவதால் என்னால் அதை இல்லாமல் இருக்கச் செய்யவியலாது.

அவன் ஆரோக்கியமாக இருக்கிறான் என்று வீணாக நினைப்பதால், நோயுற்றுள்ள ஒருவன் ஆரோக்கியத்தைப் பெறுவதில்லை. கருமை நிறமுடைய ஒரு மனிதன் அவன் நல்ல நிறமுடன் இருப்பதாக நினைப்பதால் அவன் அவ்விதம் ஆவது இல்லை. அழகற்ற ஒருவன் அவன் அழகுடையவன் என்று நினைப்பதால் அவன் அழகைப் பெறுவது இல்லை. துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவன் அவன் மகிழ்ச்சி யாக இருப்பதாக நினைப்பதால் தன்னுடைய நிலையை மாற்றிக் கொள்ள இயலாமல் உள்ளான். ஒரு ஏழை மனிதன், அவன் செல்வந்தன் என்று நினைப்பது அவனுடைய நிலையை மேம்பாடு அடையச் செய்வது இல்லை.

நம்மிடம் இல்லாமல் இருப்பதை, இருப்பதாக எண்ணு வது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது ஆகும். இந்த வகை யைச் சார்ந்த மருட்சியானது சிலகாலத்திற்கு மனத்திற்கு உகந்ததாக இருக்கக் கூடும். ஆனால் அது இறுதியில் நமக்கு சொல்லவியலாத துன்பத்தை ஏற்படுத்தி விடும். எதிர் மாறானவை பிரிக்க இயலாதவை ஆகும். ஒளியும் இருளும், இன்பமும் துன்பமும், வெம்மையும் தண்மையும், உடல்நல மும், பிணியும் என்னும் இவை எப்பொதும் சேர்ந்தே இருக்கும்.

நமக்கு ஒளி என்னும் எண்ணம் இருக்கும் வரையிலும், இருளைக் குறித்த எண்ணமும் இருக்கிறது. மற்றும் இன்ப-துன்பம், அழகு-அழகற்றதன்மை, செல்வம்-வறுமை, வாழ்வு-மரணம் மற்றும் எல்லா எதிர்மாறானவைகளைப் பொறுத்தவரையிலும் அது உண்மையானதாக உள்ளது. மற்றும் இத்தகைய எதிர் மாறானவை, நம்மைப் பல வகை களில் பாதிக்கின்றன. அவைகளில் எந்த ஒன்றாலும் பாதிக்கப் படாமல் இருப்பதுதான் நாம் விரும்புவது ஆகும்.

எதிர்மாறானவைகளாக உள்ள ஒரு ஜோடியின் ஒன்றை நாடாமல் அந்த இரண்டிற்கும் மேலாக நாம் உயர வேண்டும். அந்த இரண்டாலும் நாம் தீண்டப்படாமல் இருக்க வேண்டும். ஒரு உயர்ந்த மட்டத்தைச் சார்ந்த விழிப்புணர்வு

நிலைக்கு உயர்வதால், கடவுளின் மட்டத்திற்கு உயர்வதால் நாம் எதிர்மாறானவைகளிடம் நடுநிலையுடன் இருக்கலாம். அப்பொழுது நாம் வாழ்க்கையையும் பற்றிக் கொள்ள மாட்டோம். மற்றும் மரணத்தைக் கண்டு அஞ்சவும் மாட்டோம்.

இங்குக் கவனிக்கத்தக்க ஒரு விஷயம் உள்ளது. நாம் எதிர்மாறாக உள்ள ஜோடியில் ஒன்றை ஏற்றுக்கொள்ளும் வரையிலும், நாம் மற்றதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். துன்பத்தை ஏற்றுக்கொள்ளாமல், நம்மால் இன்பத்தை ஏற்றுக்கொள்ள இயலாது. மரணத்தை ஏற்றுக்கொள்ளாமல் நம்மால் வாழ்வை ஏற்றுக்கொள்ள இயலாது. நோயை ஏற்றுக் கொள்ளாமல் நம்மால் ஆரோக்கியத்தை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆனால் அவ்வனைத்தையும் கடந்து சென்று, அவை எதுவுமே இல்லாத ஒரு மட்டத்தை நம்மால் அடைய இயலும். ஆன்மீக வாழ்வில் இதுதான் உண்மையான பணி யாகும். இதை உணராமல் இலட்சியத்தை அடையவியலாது. ஆன்மீக சாதகர்கள் என்னும் போர்வையில் இன்பத்தை நாடு பவர்களாக இருக்காதீர்கள்.

சில நேரங்களில் நாம் பயிற்சியை மேற்கொண்டிருக்கும் பொழுது, அமைதி குலைந்துள்ள நிலையை உணர்வோம். அப்பொழுது நாம் கடவுளை அடைய முயற்சி செய்து, நம்மை சுதாரித்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நீர்க்குமிழிகளைப்போல சமுத்திரத்துடன் (கடவுளுடன்) நமக்கு எப்பொழுதும் தொடர்ந்த பொருத்திக்கொள்ளும் தன்மை வேண்டும். ஏனெனில் நாம் அதிலிருந்து வந்துள்ளோம்.

மாறாத தன்மை உடையதைக் கண்டு கொள்வது நம் வாழ்க்கையின் பணியாகும். இத்தகைய எல்லா மாறுபாடு களுக்கிடையில் நாம் ஒரே சீராக உள்ள அகவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். நீர்க்குமிழியானது, அதற்கு சமுத் திரத்துடன் உள்ள தொடர்பைக் கண்டு கொள்ள வேண்டும். இது வேற்றுமைக்கு நடுவில் ஒற்றுமையை, உணர் வற்றதில் உண்மையான உணர்வையும், பருப்பொருளில்

ஆன்மாவையும் தேடுவது ஆகும். நாம் நம்மிடமும் மற்றும் வெளியிலும் ஒரு சமநிலையைக் கண்டு கொள்ள வேண்டும். என் தலை சுற்றினால் முழு உலகமும் சுற்றுவதைப் போலத் தோன்றுகிறது. என்னிடம் அமைதி இருந்து, வெளியில் முரண்பாடு இருக்குமாயின், என்னுடைய அமைதி பாதிக்கப் படுவதில்லை. மற்றும் என்னால் வெளியிலும் ஓரளவிற்கு அமைதியை ஏற்படுத்த இயலும், இதற்கு நாம் தன்முனைப்பு நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது பொருள் இல்லை. 'யாராவது துன்புற்றால், எனக்கு என்ன ஆயிற்று?' என்று எண்ணுதல் கூடாது. நாம் எப்பொழுதும் பரிவுகாட்டு வோம். ஏதாவது தொண்டைச் செய்வோம். நம்மால் எப் பொழுதும் ஏதாவது செய்ய இயலும். மற்றவர்களின் நன்மைக்காக நமக்கு முடிந்த சிறிய அளவில் ஏதாவது உதவ இயலும். இதை நம்முடைய வரம்பிற்கு உட்பட்ட செல் வத்தை வைத்துக்கூட நம்மால் செய்ய இயலும். ஆனால் நாம் நம்முடைய அகச் சமநிலையை இழந்து விடக்கூடாது.

ஒரு உயர்ந்த மட்டத்தில், நம்முடைய அக வாழ்க்கை மற்றும் புறவாழ்க்கைக்கு நடுவில் ஆன்மீகம் சார்ந்த ஒரு பொருத்திக் கொள்ளும் தன்மை இருக்க வேண்டும். இஷ்ட தெய்வத்திற்கும், பரம்பொருளிற்கும் இடையில் ஒரு தொடர்பைக் கண்டு கொள்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மற்றும் இந்தத் தொடர்பை நாம் நம்மிடம் கண்டு கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பது தெரியாமல் இருப்பதுதான் நம்முடைய சிக்கல் ஆகும். சரியான மன நிலையுடன் செய்யப்பட்ட சரியான செயலானது நம்மை அறிவுபூர்வமாக, உடல் சார்ந்து மற்றும் ஆன்மீகம் சார்ந்து சீரமைக்கிறது. பக்தர்கள், பரம்பொருளின் கருவிகளாகக் கடவுளுக்குத் தொண்டாற்றுகின்றனர். உன் செயல்பாடு அதிலேயே முடிவடைந்து விடுவதற்கு ஒருபொழுதும் அனுமதித்தல் கூடாது. தெய்வீகப் பணியின் வளர்ச்சிக்கே நீ செயலாற்ற வேண்டும். இதுதான் உண்மையான கடவுள் வழிபாடு ஆகும். நாம் கடவுளுடன் ஒரே சுருதியில்

இருப்பதால் நாம் ஒரு புதிய ஆக்கக்கூறைப் புகுத்துகிறோம். அது நம்முடைய செயலைத் தெய்வீகமாக்குகிறது. மற்றும் அதன்மூலம் அகவிடுதலையையும், மேம்பட்ட நிலையை யும் அடைகிறது. தெய்வீக ஆற்றலானது அதன் பிறகு நமக்கு உதவுகிறது. மற்றும் நம்மைக் காப்பாற்றுகிறது. அதன்பிறகு நாம் வாழ்க்கையின் சிக்கல்களை தைரியமாக எதிர்கொண்டு, மற்றும் அவற்றை விஞ்சி மேம்படலாம்.

★ ★ ★

விழிப்பு நிலையில் நம்மால், எப்பொழுதும் தூய்மை யான எண்ணங்களையே எண்ண இயலும் எனின், சிறிது காலத்திற்குப் பிறகு அவை கனவு நிலையிலும் வெளிப்படும். விழிப்பு நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும். கனவுகளைக் குறித்து அதிகமாகக் கவலைப்படத் தேவையில்லை. ஆன்மா வின் ஆற்றல் செயல்படுமுறைமையை உயர்ந்த மட்டங்களில் வெளிப்படுத்த வேண்டும். நம்மால் நம்மை முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பித்துக் கொள்ள இயலுமாயின், நாம் கடவுளின் ஆற்றலின் ஆதரவின் அடியில் வருகிறோம். தெய்வீக ஆற்றலானது அதன் பிறகு நம்மைப் பாதுகாக்கிறது. மற்றும் நம்மை வழிநடத்தி செல்கிறது.

ஆழ்ந்த உறக்கத்தின் பொழுது நாம் அகல் விரிவான விழிப்புணர்வுடன் தொடர்பு கொள்கிறோம். அதாவது இயலுலக அண்டப் பேருயிருடன் தொடர்பு கொள்கிறோம். நம்முடைய ஆன்மா அப்பொழுது பரந்த இயலுலக அண்ட ஆற்றல்களுடன் ஒரே சுருதியில் இருக்கிறது. மற்றும் இது நம்மை புத்துணர்வு அடையச் செய்கிறது. அகம் சார்ந்த சோம்பல்தன்மை அகல்கிறது. ஆற்றல் நம்மிடம் பாய்கிறது. உடலளவிலும் மனத்தளவிலும் நாம் புத்துணர்வை உணர்கிறோம். இந்தத் தொடர்பை நாம் பெறும் வரையிலும் காலம் ஒரு பொருட்டு இல்லை. ஆனால் நம்மால் நம்முடைய இருப்பின் உண்மையான ஆழங்களுக்குச் செல்ல இயல வேண்டும்.

அவ்வப்பொழுது, நம்மை நாமே பகுத்து ஆராய்ந்து அறிந்து கொள்வதற்கான பணி ஓய்வு அவசியமானதாகும். நம்மிடம் என்ன உள்ளன என்பதைக் காண்பதற்கு, அதாவது நல்ல தன்மைகள் மற்றும் பலகீனமான தன்மைகளை இவ் விதமாக அறிந்துகொள்ளலாம். ஆன்மீக வாழ்வில் அகமுக ஆராய்வுகள் மிகப் பெரிய பங்கை வகிக்கின்றன. பயிற்சியால் இது பழக்கமாகிறது. மற்றும் நம்முடைய செயலுடன் கூடச் செல்கிறது. வாழ்க்கையின் சிறிய விஷயங்களுக்காக நாம் நம் மனத்தைச் செயலற்று இருப்பதற்கு அனுமதித்தால் நம் முடைய ஆன்மீகக் கடமைகள் பாதிக்கப்படும். அதன்பிறகு நம்முடைய தியானத்தில் ஒருமுனைப்பாடு இருக்காது. ஸ்ரீராமகிருஷ்ணர், 'உப்பின் கணக்கை யாரால் முறையாக வைத்திருக்க இயலுமோ, அவனால் கற்கண்டின் கணக்கை யும் சரியாக வைத்திருக்க வியலும்' என்று கூறுவார். உன் னுடைய கடமைகளைத் தற்செயலாகச் செய்யும் முறையில் செய்தல் கூடாது. நாம் முறையாகத் தியானம் செய்தால், நம்மால் முறையாகச் செயலாற்ற இயலும். செயலும், தியானமும் ஒன்றுடனொன்று தொடர்புடையவை ஆகும். வாழ்க்கையில் அனைத்தையுமே முடிந்த அளவிற்கு அக்கறையுடன் செய்ய வேண்டும். நமக்கு எதுவுமே மிகவும் தாழ்ந்ததும் இல்லை, எதுவுமே மிகவும் உயர்ந்ததும் இல்லை. நாம் ஏதாவது ஒரு நல்ல காரணத்திற்காக உண்மையாகச் செயலாற்றினால் நாம் மேம்பட்டவர்களாக உணர்கிறோம். மிகுந்த அமைதியையும், மகிழ்ச்சியையும் அடைகிறோம். சில நேரங்களில் நாம் ஆன்மீக வாழ்க்கையில், தியானத் தினால் முன்னேறுவதைவிட அதிகமாக தொண்டின் மூலம் முன்னேறுகிறோம். நாம் செய்யும் செயலில் விருப்பமற்று இருந்தால், தியானத்திலும் விருப்பமற்றவர்களாகவே இருப்போம்.

★ ★ ★

தியானம் செய்வதற்கு அதிகாலை நேரம் உகந்தது ஆகும். மாலை நேரத்தில் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

பிரார்த்தனை செய்யும் பாங்குடைய மனநிலையுடன் உறங்கச் செல்ல வேண்டும். தெளிவான மனத்துடன் தியானம் செய்ய வேண்டும். ஆறுமணி நேர உறக்கம் போதுமானதாகும். நாள்தோறும் குறைந்த பட்சம் இரண்டு மணிநேரமாவது வாசிக்க வேண்டும். மற்றும் ஆராய்ந்து காணவேண்டும். உன்னுடைய குருவின் போதனைகளைக் கடமையுணர்வுடன் பின்பற்ற வேண்டும்.

சில நேரங்களில் நாம் வேதனையால் துன்புற்றுக் கொண் டிருக்கும்பொழுது, சுறுசுறுப்புடன் செயலாற்றுவதற்குப் பதிலாக, அவைகளைக் குறித்து ஏங்குவதில் நாட்டம் கொள் வோம். அந்த நேரத்தில்தான் நாம் அதிக அளவில் தற்கட்டுப் பாட்டைக் கைக் கொள்ள வேண்டும். சுவாமி விவேகானந்தர், 'நமக்கு அழுவதற்கு நேரமில்லை' என்று கூறுவார். நாம் செய லாற்ற வேண்டும். அதுதான் உண்மையான பெரும் செயல் வீரமாகும்.

தொல்லைகளைக் குறித்து எண்ணி ஏங்கக் கூடாது. அது விஷயங்களை மேலும் மோசமானதாக்கி விடும். அமைதி யாகத் தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்கு முயற்சிக்க வேண்டும். சமநிலையுடைய முறையில் முயற்சி செய்ய வேண்டும். உன்னுடைய அமைதியற்ற தன்மையை விஞ்சி மேம்பட வேண்டும். உன்னால் கட்டுப்படுத்த இயலும் அளவிற்கு அதைக் கட்டுப்படுத்த வேண்டும். உடல் சார்ந்த பிணிகள், மனத்தின் அமைதியற்ற தன்மை, மந்தத்தன்மை, என்னும் அனைத்தும் தடைகள் ஆகும். நாம் அத்தகைய நிலைகளில் இருக்கும்பொழுதுகூட நாம் நம்முடைய ஆன்மீகப் பயிற்சிகளை நிறுத்துதல் கூடாது.

உலகத்தைவிட அதிகமாகக் கடவுளைப் பற்றிக் கொள்ள வேண்டும். மற்றும் உனக்கு வலிமை கிடைக்கும். அதுதான் பெரும்பாலாக உள்ள நடைமுறை வழியாகும். நமக்குச் சமநிலையும் அகம் சார்ந்த இசைவுடைமையும் வேண்டும். நமக்கு நம்மைக் குறித்தும் மற்றும் இவ்வுலகத்தைக் குறித்தும் ஒரு மாறுபட்ட மனப்பான்மை தேவைப்படுகிறது. சரியான

மனப்பான்மையை வைத்துக்கொள். மற்றும் துன்பங்கள் மற்றும் மரணத்திற்கு அப்பாற்பட்டு உயர்ந்த நிலையை அடைவாய். சில நாட்களுக்குப் பிறகு, சூரியன், மீண்டும் சுடர்வீசும் என்று நாம் நம்புகிறோம். இந்தத் தவறான நம்பிக்கையானது நம்முடைய பலவீனத்திற்கு ஒரு சலுகை யாகி விடுகிறது. வாழ்க்கையின் துன்பங்கள் உண்மை யிலேயே நமக்கு உதவுகின்றன. தோல்வியை வெற்றியாக மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் உலகத்தைப் பற்றிக் கொண்டால், அதற்கு மேல் நம்மால் உயரவியலாது. ஒரு பக்தனிடத்தில், வீரனுக்குரிய ஆர்வம் இருக்க வேண் டும். இந்த வலிமையுடன் அன்பும், பரிவும் இருக்க வேண் டும். முரட்டுத்தன்மையும், கொடிய இயல்பும் எப்பொழுதுமே பலவீனத்தின் அடையாளமாக உள்ளது. உண்மையான வலிமையைப் பெற்றவர்கள் அன்புடனும், பரிவு நிறைந்தும் இருப்பார்கள். கடவுளை நம்ப வேண்டும். அவருடன் ஒரே சுருதியில் இருக்க வேண்டும். அதே நேரத்தில், வாழ்க்கை யின் உண்மைகளையும் எதிர்கொள்ள வேண்டும். பாதிக்கப் படாமல் எப்படி இருக்க வேண்டும் என்று கற்றுக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையைக் குறித்த தவறான கருத்தால்தான் சோர்வு ஏற்படுகிறது. நாம் தொடர்ந்து வரும் போராட்டங் களைச் சந்திப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். அவைகளின் இடையில் வளர வேண்டும் மற்றும் இறுதி யில் அவைகளுக்கும் மேல் வளர வேண்டும். இந்த வழி யில் நாம் மிகுதியாக வளர வேண்டும். முதலில் நமக்குச் சரியான மனப்பான்மை இருக்க வேண்டும். அதன்பிறகு நாம் அதை நடைமுறைப்படுத்த வேண்டும். நம்முடைய முழுமை யான இருப்பின் ஒரு பகுதியாகவும் செய்ய வேண்டும். உன்னுடைய தொல்லைகளை மீறி வளர வேண்டும். தொல்லைகள், நம்மைக் கடவுளைக் குறித்து நினைக்க வைக்குமானால் அவை நன்மை அளிப்பவை ஆகும். தொல்லைகளை எதிர்கொண்டு மற்றும் அவற்றை மீறி உயர வேண்டும்.

உங்களால் உங்களை ஒரு எண்ணத்திலிருந்து விடுவித்துக் கொள்ள இயலவில்லை எனின், அதற்கு எதிரான மேம்பட்ட கருத்தை அல்லது எண்ணத்தைப் பெற வேண்டும். அந்த எண்ணத்தையே தீவிரமாக எண்ண வேண்டும். ஒரு உயர்ந்த எண்ணத்தால், கீழான எண்ணத்தை வீசி விட வேண்டும். இதுதான் மேம்படுவதின் சரியான முறையாகும்.

உண்மையானது பெரும்பாலும் ஒரு அதிர்ச்சியாகவே வருகிறது. அந்த அதிர்ச்சிக்குப் பிறகு நாம் இலேசாகி விடுகிறோம். மற்றும் அதன் பிறகு கடவுளைப்பற்றிக் கொள்கிறோம். தீமையானது சில நேரங்களில் மாறுவேடத்தில் வரும் நன்மை ஆகும். கடவுள் மீது கொள்ளும் அன்பானது நம்மைப் பற்றற்றவர்கள் ஆக்குகிறது. அது நம்மைச் சோம்பல் உடையவர்களாகச் செய்வதில்லை. கடவுளை விரும்புபவன், ஒரு அடிமையாகச் செயலாற்ற மாட்டான். ஆனால் ஒரு எஜமானனாகச் செயலாற்றுவான்.

பெரும்பாலும், தோல்விக்குப் பிறகு நீ சோர்வு அடைகிறாய். வெற்றி மற்றும் தோல்வியைச் சார்ந்து இருப்பதைவிட அதிகமாகக் கடவுளைச் சார்ந்து இருப்பதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். எந்த ஒரு செயலிலும் நாம் வெற்றி அடையாவிட்டாலும், நாம் நம் தகுதிக்கு ஏற்ப உண்மையிலேயே முயற்சி செய்திருந்தால், நாம் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியை முன்னேற்றம் அடையச் செய்துள்ளோம். நாம் கடவுளுக்கு இன்னும் அருகில் வந்துள்ளோம். அது ஆன்மீக மட்டத்தில் ஒரு வெற்றியாகும். அது நம்முடைய உலகியல் சார்ந்த தோல்விகளைச் சரிகட்டுவதற்கும் மேலானது ஆகும். ஆனால், தொடக்கத்தில் நிலைத்த மன உறுதியும் மற்றும் திறனும் வெகுவாகத் தேவைப்படுகின்றன.

நம்முடைய வாழ்க்கையின் நிலைத்த ஊற்றுக்கள் தொடர்ந்து பாய்ந்து கொண்டுள்ளன. நாம் அவற்றுடன் தொடர்பு கொள்ள வேண்டும். எப்பொழுதாவது ஆன்மீக நாட்டம் கொண்ட சாதகன், தேக்க நிலையையோ அல்லது சலிப்பையே உணர்ந்தால், அவன் தன்னுடைய சொந்த

அற்பத்தன்மையை மறந்து இயலுலக அண்ட ஆன்மாவுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டும். நீ மிகவும் வருத்த மாக இருக்கும்பொழுது அழக் கூடாது. கடவுளுக்காக ஏங்கு வாய். கடவுளைக் காணவில்லையே என்னும் நிறை வற்ற தன்மையானது நம்மைக் கடவுளின் அருகில் அழைத்துச் செல்கிறது.

★ ★ ★

ஐரோப்பாவில் மிகப் பெரிய தேவாலயங்களையும் மாவட்ட தலைமை கிறிஸ்தவ கோயில்களையும் காணும் பொழுது நான் என்னைக் கேட்கிறேன். இந்த நாட்டின் ஆன்மீக இயல்பிற்கு என்ன ஆயிற்று? ஒரு சமயத்தில் ஐரோப்பாவில் துறவிகளும், பெண் துறவிகளும் நிறைந்து இருந்தனர். அது சிறந்த சமயம் சார்ந்த இயக்கங்களையும் துறவிகளுக்குரிய அமைப்புக் குழுக்களையும், மிகச் சிறந்த புனிதமகான்களையும் தோற்றுவித்துள்ளது. இத்தனைக் காலமாகச் சேமிக்கப்பட்ட ஆன்மீகத் தன்மைக்கு என்ன ஆயிற்று? அந்த அனைத்தும் செங்கல்லாகவும் சாயமாகவும் மாற்றப்பட்டுவிட்டன. விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், கலை மற்றும் அரசியல் போன்றவற்றின் கண் கவர்ந்து ஈர்க்கும் சாதனைகள் ஐரோப்பாவின் ஆன்மீக சேமிப்புக்களிலிருந்து மிகுதியாக எடுக்கப்பட்டு உள்ளன. கடந்த 200 அல்லது 300 ஆண்டுகளாக ஆன்மீக வாழ்க்கை யானது புறக்கணிக்கப்பட்டுள்ளது. உலகியல் சார்ந்த வாழ்க்கை, உடல் சார்ந்த இன்பம் போன்றவற்றிற்கு மனிதர்கள் தலையாய கவனம் செலுத்துகின்றனர். மூலமுத லான ஆன்மீகச் செல்வத்திற்கு அதிகமாக எதுவும் பங்களிக்கப்படவில்லை. அதன் விளைவாக ஐரோப்பா வானது முழுமையாக ஆன்மீகச் சூழலை இழந்துவிட்டது. ஆன்மீக ஆற்றலின் இடத்தில் மற்ற ஆற்றல்கள் உள்ளன. தற்போதைய இந்த அழிவு (இரண்டாம் உலகப் போர்) இதன் விளைவே ஆகும்.

இந்தியா அதனுடைய ஆன்மீகத் தன்மையைப் புறக் கணித்தால் அதே விதி அதையும் பின் சென்று எட்டக்கூடும். முழுமையான ஒழுக்க நெறிமுறையுடன் கூடிய வாழ்க்கை மற்றும் தீவிரமான ஆன்மீகப் பயிற்சியாலும், நாட்டின் சிறந்த ஆன்மீக மூலபலமானது தொடர்ந்து நிரப்பட வேண்டும். கணக்கற்ற ரிஷிகளின், முனிவர்களின், புனிதமகான்களின் மரபுரிமையின் ஆற்றலானது வீணாகச் சிதறக் கூடாது. ஒவ்வொரு மனிதனும் பொதுவான ஆன்மீகச் சூழலிற்கு ஏதாவது பங்களிக்க வேண்டும். இதுதான் சிந்திக்கும் திறனுடைய இந்தியர்களின் கடமையாகும்.

அட்டவணை -1


இந்நூலில் இடம் பெற்றுள்ள கதைகள், வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகள், மனநிலைத் தொடர்பான நிகழ்வுகளின் அட்டவணை

அட்டவணை -2

இந்த நூலில் எடுத்தாளப்பட்டுள்ள வடமொழிச் சுலோகங்களின் அட்டவணை

அட்டவணை -3

பொதுவான சொல் மற்றும் பொருள் தொடர்பான அட்டவணை



9 788178 234847

புத்தகங்கள் இணையதளம் மூலம் ஆர்டர் செய்ய
www.sriramakrishnamath.org
ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்
சென்னை - 4. email : srkmath@vsnl.com

Dhyanamum Anmiga Vazhvum (Tamil) Rs. 300.00

ISBN : 978-81-7823-484-7